இருபத்தொன்றாவது கருத்தரங்கு

ஆய்வுக் கோவை

தொகுதி 3

பதிப்பர்

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி

டாக்டர் செ. வை. சண்முகம்

டாக்டர் சு. சக்திவேல்

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்
அண்ணாமலைநகர்
1989

இருபத்தொன்றாவது கருத்தரங்கு

ஆய்வுக் கோவை

தொகுதி 3

பதிப்பர்

டாக்டர் ச. அகத்தியலிங்கம்
டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி
டாக்டர் செ. வை. சண்முகம்
டாக்டர் சு. சக்திவேல்

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்
அண்ணாமலைநகர்
1989

பதிப்பு: ஜூன், 1989

விலை :

முதல் தொகுதி	ரூ	125/-
இரண்டாம் தொகுதி	ரூ	30/-
மூன்றாம் தொகுதி	ரூ	105/-
நான்காம் தொகுதி	ரூ	25/-

கிடைக்குமிடங்கள்:

1) **பாரி நிலையம்**
59, பிராட்வே
சென்னை - 600 001

2) **மீனாட்சி புத்தக நிலையம்**
60, மேல கோபுரத் தெரு,
மதுரை – 625 001

3) **செயலாளர்**
இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்,
மொழியியல் துறை,
அண்ணாமலைநகர் - 608 002

அச்சிட்டோர்:

ஸ்ரீ மூகாம்பிகை பிரிண்டர்ஸ்
சிதம்பரம்-608 001



முதறிஞர், செம்மல்

டாக்டர் வ. சுப. மாணிக்கம்

(1917-1989)

தலைவர், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் (1981—1989)

அவர்கட்கு

காணிக்கை

முன்னுரை

தில்லை என எல்லையிலாப் புகழ்பெற்ற சிதம்பரத்திற்கே அணியாகத் திகழ்வது அண்ணாமலைப் பல்கலைக்கழகம். இப் பல்கலைக்கழகம் 'தமிழ் வளர்க்கும் பல்கலைக்கழகம்' என்று அடைபெற்று வழங்குவதிலிருந்து அதற்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு இனிது விளங்கும்.

இப்பல்கலைக்கழகம் பெருங்கொடை வள்ளல் அமரர் அண்ணாமலை அரசரால் நிறுவப்பட்டுப் பின்னர் டாக்டர் எம்.ஏ. முத்தையா செட்டியார் அவர்களாலும் இன்று டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்களாலும் பேணிப் பாதுகாக்கப் பட்டு வருகின்றது.

இந்தப் பல்கலைக் கழகத்துக்குப் பெருமை சேர்க்கும் வகையில் இங்கு பணியாற்றிய பெரும் தமிழ்ப்பேராசிரியர்கள் பலர் பலவகையாலும் தமிழுக்குப் பெருந்தொண்டு புரிந் துள்ளார்கள். எனவே இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் 21-ஆவது கருத்தரங்க மாநாடு இங்கு நடை பெறுவது மிகவும் பொருத்தமே. இம்மன்றத்தின் மூன்றாவது மாநாடு நடைபெற்றதும் ஆய்வுக்கோவை முதன்முதலாக நூல் வடிவில் அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டதும் ஆகிய பெருமை களும் உடையது. இரண்டாவது முறையாக 1989-ஆம் ஆண்டு சூன் திங்கள் 2,3 ஆகிய இருதினங்களில் சிறப்பான முறையில் இங்கு நடைபெறவுள்ளது இக்கருத்தரங்கில் படிப்பதற்காகப்

பேராளர்கள் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பே இவ்வாய்வுக் கோவையாகும்.

இவ்வாண்டும் இவ்வாய்வுக்கோவை நான்கு தொகுதிகளாக வெளிவந்துள்ளது. முதல் தொகுதியில் இலக்கியம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும், இரண்டாம் தொகுதியில் இலக்கணம், மொழியியல் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும், மூன்றாம் தொகுதியில் நாட்டுபுறவியல், வரலாறு, தொல்லியல், மானிடவியல், அறிவியல் பற்றிய ஆய்வுக்கட்டுரைகளும் நான்காம் தொகுதியில் படைப்பிலக்கியங்களும் இடம் பெற்றுள்ளன.

இவ்வாய்வுக் கோவையில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளும் படைப்பிலக்கியங்களாகிய பாடல்களும், சிறுகதை நாடகங்களும் வளர்தமிழின் பல்வேறு கூறுகளைக் காட்டுவனவாகவும் தமிழியலோடு இணைந்த பல்துறை ஆய்வினைக் காட்டுவனவாகவும் அமைந்துள்ளன. அனைத்துத் துறைகளைப் பற்றியும் அறிஞர் பெருமக்களாலும் ஆய்வாளர்களாலும் எழுதப்பெற்ற ஆய்வுக் கட்டுரைகள் இவ்வாய்வுக் கோவைத் தொகுதிகளை அலங்கரிக்கின்றன. தமிழியல் ஆய்வுப் போக்கினை வெளிப்படுத்தும் வகையில் நூற்றுக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஒவ்வொரு ஆண்டு ஆய்வுக்கோவையிலும் இடம்பெற்று வருவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

இவ்வாய்வுக்கோவையினைச் சிறப்பான முறையில் உருவாக்கும் முயற்சியில் உறுதுணையாக இருந்தோர் பலர். அவர்களில் அச்சுப்பிழை திருத்தியுதவிய புலவர். இரா. கணபதி அவர்கள் குறிப்பிடத்தக்கவர். ஆய்வுக்கோவையின் இரண்டாம் தொகுதியினைத் திருத்தும் பணியில் ஈடுபட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறை ஆய்வாளர் திரு

ம. சிவசண்முகம் குறிப்பிடத்தகுந்தவர். மூன்றாம் தொகுதி அச்சுப்பிழை திருத்தத்தையும் பிறபணிகளையும் செவ்வனே செய்த மொழியியல் துறை ஆய்வாளர் திரு ஆ. கோ. நடராசன், பாராட்டுக்குரியவர். இவ்வாய்வுக்கோவையின் மூன்றாம் தொகுதியைக் குறித்தக் காலத்தில் சிறப்பான முறையில் அச்சேற்றித் தந்துள்ள பெருமை சிதம்பரம் ஸ்ரீ மூகாம்பிகை அச்சகத்தாரைச் சாரும். இவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியை உரித்தாக்குவதில் பெருமகிழ் வெய்துகிறோம்.

அண்ணாமலைநகர்
20—5—89

ச. அகத்தியலிங்கம்
தா. ஏ. ஞானமூர்த்தி
செ. வை. சண்முகம்
சு. சக்திவேல்

பொருளடக்கம்

Bharathidasan's Journal : A Bird Eye-View

M. Annadurai
Erode Arts college

Introduction:

Tamil has a rich literary heritage; the output of poetic prose and dramatic literature in the 19th and 20th centuries has been remarkable both in quantity and quantity. This is equally true of Tamil Journals.

Bharathidasan's Journals:

Bharathidasan was born in Pondicherry at 10.30 P.M on Wednesday 29 4.1891. He was a Tamil teacher in the service of the French India Government. Bharathidasan did a lot of spade work in the field of writing. He propagated rovolutionary ideas and the use of chaste style. He was a poet, dramatist orator, polititcian, rationalist, a cine lyric composer, story writer and a Journalist. Such was the wide range of his intellect. He published a number of Tamil Literary Journals, Socio-Cum-political Journals such as Puduvai Murasu (Weekly), Sri subramania Bharathi kavithamandalam (Monthly), Mullai (Monthly), Kouil (Monthly), Kouil Daily) Kouil (Weekly), Kouil (Fortnightly).

The Significance of Bharathidasan's Journals in modern Literature

Bharathidasan published a number of famous works which were collections of publications in his own Journals as

well as other Journals, works like Bharathidasan Kavithaikal Vol. I, II, III, & IV. Panmanithiral, etc , His works in the above Journals reveal his talent, the customs and social life of the people of Tamil Nadu, the culture of the Ancient Tamils, Indo-French culture, Indo-Aryan culture, Literary themes, Love of Tamil, political approaches, Tamil Music etc. His works reveal the modern ideas and thoughts to the people of our nation and to the people of Tamil Nadu.

Aims of his Journals

Pavender Bharathidasan had always expressed his ideology as aims of his Journals and worked for the said principles. The primary aims of Puduvai Murasu, SriSubramania Bharathi Kavitha mandalam, Kouil (Monthly, Daily, Weekly, & Fortnightly) were summerised as hereunder:

A) Puduvai Murasu

1. To spread the golden message-LIBERTY-EQUALITY-FRATERNITY among the Indian people.
2. To spread the idea of Rational Movement.

B) Sri Subramania Bharathi Kavithamandalam:

It was published in the memory of Poet Bharathiar and it was the first and foremost poetical form. Journal in Tamil Nadu.

The aims and objectives of it as can be seen hereunder:-

1. One can write about any precept or tenet but should use the medium of poetry.
2, Sri Subramania Bharathiar wrote poetry which was fresh and simple and interesting so that all must be able to understand such a poetry and his poetry should inspire many poets to bring forth their creations which will ultimately enrich the lives of Tamil.

3. Poets should write in praise of the Beauty of Nature, the glory of Tamil. Drama, Songs for, students, for Nationalism, for reformation, for women's liberty, for women's uplift, about the torture and sufferings of women, to translate poems from other Languages into Tamil.

C) Kouil (Monthly)

Kouil (Monthly) was started in 1946 and published from Kouil Nilayam, Triplicane, Madras. It was withheld due to the dispute between Bharathidasan and T.N. Raman. But the aims and objectives of this Journal were supreme. We summerize the aims and objectives as follows:

1. Dravida Nadu should be ruled by Tamilians.
2. It should work for the Independence of Dravida Nadu.
3. It should make the spirit of Tamil, Food habits, dressing and the way of living.
4. It should work for the compulsory education for all.

D) Kouil (Daily)

Kouil (Daily) was published from 95, Perumal Koil, Pondicherry and it advocated the idea of formation of Dravida Nadu and separation of French India. It reflected the thoughts and feelings of the people of French India.

1. A separate Free Dravida Nadu must be formed.
2. French India should not immediately merge with the Indian Union.
3. French India should be independent. After refusing to join the Indian Union, it should go ahead overcoming obstacles and working for complete independence.

E) Kouil (weekly)

Kouil publication was in poetic and prose forms. It was published from his own press. Bharathdiasan's depth of knowledge, research attitude and critical studies etc , are revealed in the Kouil Journals. Thirukkural Urai, Vandavar Mozhia? Senthamil Selvama? etc., were published by him in the kouil Journals.

Bharathidasan's editorials stimulated people's emotions about Tamil,Tamilians,Tamil Nadu and Dravida Nadu. This Journal help us to understand and assess his personality and achievements.

The aims and objectives of this Journal are as follows:

1. To enlighten the idea of no caste in Tamil.
2. To publish the political thoughts.
3. To spread Humanism

F) Kouil (Fortnightly)

This journal had innovative features as can be seen from its aims and objectives:

1. Will not deal with politics.
2. Will not deal with Caste.
3. Will not deal with Religion.
4. To form unity among Tamil Poets.
5. To compile poetic composition of Tamil and translate it into English to spread it all over the world.
6. To publish the Young Writer's and Poet's creative works with their life history, photos,etc.,

Achievements of Bharathidasan Journals:

The aims noted in his Journals were more or less achieved in his life time as well as after his demise. The range of his Journals is indeed all embracing. Bharathidasan had dealt with all aspects of Language and life. His Jornals highlight the importance of Tamil Language, Tamilians and Tamil Nadu.

We may reproduce the following poem for his love towards Tamil Nadu.

சாதி ஒழிய வேண்டும் என்பதும்
தமிழக விடுதலை வேண்டும் என்பதும்
குள்ளக் கருத்தா ? வெள்ளம் போன்ற
தமிழர் நலத்துக்குத் தக்கன அன்றோ ?
ஒழியாச் சாதி ஒழிய வேண்டும்.
தமிழகம் அடிமை தவிர்தல் வேண்டும்.
என்றும் இக் கொள்கை எல்லாத் தமிழரின்
கொள்கை அன்றோ ? இந்தக் கொள்கை
வெல்லு மாயின் எல்லாத் தமிழர்க்கும்
அல்லல் தீரும் இழிவும் அகலும்
அறிவு பெருகும் மடமை அகலும்
என்பதில் இம்மியும் பொய்ம்மை உண்டோ ?
தமிழ்ப்பெரு மக்களே சற்றே எண்ணுமின்

Pavendar Bharathidasan's Love of Tamil is supreme. No other poet has glorified the language as much as he has done. Like the Prince Charming, he has awakened the Tamil language from its slumber, given it a new life, sung of its perenniel Charm and beauty. He has excelled in his prasie of Tamil language so much so that Tamil can truly he proud

of him. The following poem is a typical example of his love of Tamil :

இனிமைத் தமிழ்மொழி எமது எமக்
கின்டாந் தரும்படி வாய்ந்தநல் அமுது
கனியைப் பிழிந்திட்ட சாறு-எங்களை
கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு
தனிமைச் சுவையுள்ள சொல்லை-எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை
நனியுண்டு நனியுண்டு காதல்-தமிழ்
நாட்டினர் யாவருக்குமே தமிழ் மீதிலே.

Ind'an Nationalism:

At the beginning and end of Bharathidasan's poetic life, he was one of the greatest National Leaders and enlighted patrotism among the people of india- He wrote many songs for national integration, National idependence, etc., He published his songs in Desa Sevagan, Swarajya, Duplex, Thai Nadu in the early 20th century. He was much against the Chinese attack on the Indian border. With the help of his poems and dramas, he appleated to the spirit of patriotism in the people of Tamil Nadu against the Chinese aggression. To quote :

Conclusion:

To put it in a nutshell' the achievement of his works in his Tamil Journals, has left a permanent mark which the passage of time came never erase and which will serve as a Beacon light for ever.

தட்டாங்கல்

வீ. அய்யனார்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

பண்டைக்காலம் முதல் இன்றுவரைக் கிராமப் பெண்களால் விளையாடப்பட்டு வருகின்ற தட்டாங்கல் வியைாட்டு, வழக்கிழக்காமல், விளையாடப்படுகின்ற பெண்கள் விளையாட்டுக்களுள் சிறப்புடையதாகும். காலங்காலமாக விளையாடப்பட்டு வருகின்ற தட்டாங்கல் விளையாட்டு; சிறு-சிறு கற்களைத் தரையில் தூவிவிட்டு, ஒரு கல்லை உயரத்தில் போட்டு, தரையிலுள்ள கற்களை வாரிக்கொண்டு, உயரத்தில் போட்ட, கல்லைப் பிடித்து விளையாடுவதாகும். அவ்விளையாட்டைத் தட்டாங்கல் எனவும், சொட்டாங்கல் எனவும், போட்டிக் கல் எனவும் குறிப்பிடுவர். தட்டா + கல் > தட்டாங்கல், கையில் தட்டாமல், உரசாமல், படாமல், சிதறாமல், தடுக்காமல், வருகின்ற கற்களைத் தவிர, பிற கற்களைத் தொடாமல் விளையாடுகின்ற விளையாட்டாகும். கற்க்ளை வாருகின்றபொழுது கையோ-கல்லோ, சிதறிக்கிடக்கின்ற கற்களின் மீது தட்டாமல் விளையாடுவதால், இவ்விளையாட்டுத் தட்டாங்கல் எனப்பட்டது. கைக்கல், தனிக்கல் அல்லது ஒற்றைக்கல், இரட்டைக்கல், அச்சுச்கல், பழக்கல், பிச்சைக்கல் என்பன தட்டாங்கல் விளையாட்டின் உட்கூறுகளாகும். இருவர் தனித்தனியாகவும், நால்வர், இருவர்-இருவராக இணைந்தும் விளையாடுவது, தட்டாங்கல் விளையாட்டின் பொதுமைத் தன்மையாகும்.

கைக்கல்—ஆட்சிக்கல்:

ஃகைக்கல் அல்லது ஆட்சிக்கல் என்பது, பிற கற்களை வாரியெடுப்பதற்குப் பயன்படுகின்ற முதற் கல்லாகும். அக்கல், விளையாட்டின் துவக்கத்தில், விளையாட்டுக் கற்களைத் தூவு

கின்றபொழுது, அதிலிருந்து பிடிக்கப்படுவதால், அக்கல்லைக் கைக்கல் அல்லது ஆட்சிக் கல் என்பர். அக்கல் நிரந்தரமானதல்ல. அடிக்கடி மாற்றிக் கொள்ளக் கூடியதாகும். வாரப்பட்ட கற்களில் ஏதேனும் ஒன்றை எடுத்துக் கொள்ளலாம். கைக் கல்லைக் கழித்து விட்டுத்தான், பிற கற்களைக் கணக்கிடுவர். வாரியெடுக்கப்படுகின்ற கற்களில், ஒரு கல்லைப் பிடிக்கின்றபொழுது, அக்கல் சரியில்லையென்றால், குறிப்பிட்ட கல்லைக் குறிப்பிட்ட இடத்திலிருந்து எடுத்துக் கொண்டு, பிடித்த கல்லை அவ்விடத்தில் வைத்து விடலாம். விளையாடுபவர், ஆட்டம் இழக்க நேரிடும் பொழுது, வாரிய கற்களுடன் கைக்கல்லையும், விளையாட்டினுள் போட்டுவிட வேண்டும். கற்களை வாரியெடுப்பதற்குப பயன்படுகின்ற கல்லுக்குக் கைக்கல் அல்லது ஆட்சிக்கல் என்பது பெயராகும்.

தனிக்கல் மற்றும் இரட்டைக்கல்:

விளையாட்டில் போடப்பட்டுள்ள கற்களை, அச்சுக் கல்லாகவோ, பழக்கல்லாகவோ வாரியெடுத்தபின், அச்சுக் கல்லிலும், பழக் கல்லிலும் பொருந்தாது அமைகின்ற இறுதிக் கற்களை, தனிக்கல் மற்றும் இரட்டைக்கல் எனக் குறிப்பிடுவர். தனிக்கல்லென்றால் தனியாகவும், இரட்டைக்கல்லென்றால் இணைத்தும் வாரியெடுக்க வேண்டும். இறுதிக் கல், தனிக்கல் அல்லது ஒற்றைக் கல்லாக இருந்தால், வாரியவுடன் பிச்சைக்கல் இடுவது வழக்கம், இரட்டைக் கல்லாக இருந்தால், இரண்டையும் இணைதது வாரி, ஒன்றை வைத்துக் கொண்டு, மற்றொன்றை மறுபடியும் களத்தில் போட்டு, மீண்டும் வாரியெடுக்க வேண்டும். விளையாட்டில், இறுதியாக அமைகின்ற கற்களைத் தனிக்கல்லென்றும், இரட்டைக் கல்லென்றும் குறிப்பிடுவது. தட்டாங்கல் விளையாட்டில் காணப்படுகின்ற அமைப்பாகும்.

அச்சுக்கல் அல்லது காய்க்கல்:-

அச்சுக்கல் என்பது மூன்று கற்களின் (1 + 1 + 1) கூட்டு நிலையாகும். இதைக் காய்க்கல் என்றும் கூறுவர். விளையாட்டுக் கற்களைச் சிதறியவுடன், முதன் முதலாக அச்சுக்

கல்லை வாரிய பிறகுதான், பிற கற்குழுக்களை வாரியெடுக்க வேண்டும். மூன்று கற்கள் அடங்கிய அச்சுக் கல்லில், ஒரு கல்தான் வாரியவர்களுக்குச் சொந்தமாகும். மற்ற இரண்டு கற்களும் விளையாட்டுக் களத்தில் சேர்க்கப்பட்டு, மறுபடியும் விளையாடுவதற்குரியவையாகும். விளையாட்டுக் களத்தி லுள்ள கற்கள் முழுவதையும் அச்சுக் கல்லாகவே வாரி யெடுக்கலாம். தட்டாங்கல் விளையாட்டில் அச்சுக்கல் முதல் நிலைக் குழுவாகும்.

பழக்கல்:-

பழக்கல் என்பது நான்கு, ஐந்து, ஆறு மற்றும் எட்டுக் கற்கள் அடங்கிய தொகுதியாகும்.

1. நான்கு கற்கள் அடங்கிய பழக்கல் (4)
2. ஐந்து கற்கள் அடங்கிய பழக்கல் (5)
3. ஆறு கற்கள் அடங்கிய பழக்கல் (6)
4. எட்டுக் கற்கல் அடங்கிய பழக்கல் (8)

எனப் பழக்கற்குழுவை வகைப்படுத்துவர். பழக்கற்களைப் பகிர்வதிலலை. வாரியவர்கள், முழுவதையும் வைத்துக் கொள்ளலாம்.

பிச்சைக்கல் :-

விளையாட்டின் இறுதியில், இறுதியான கற்களை வாரி யெடுத்து ஆட்டத்தை முடிப்பவர் ; மற்றவர்களுக்கு இனாமாகக் கொடுக்கப்படுகின்ற கல்லிற்குப் பிச்சைக்கல் எனப் பெயர். இறுதிக் கல்லை எடுப்பவர் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும். அதைப் பிச்சைக்கல் என்பது தட்டாங்கல் விளையாட்டின் வழக்கம். தோற்றவர்களாக இருந்தாலும் பிச்சைக் கல் கொடுக்க வேண்டும். ஏராளமான கற்களை வாரி, வெற்றி பெற்றவர்களாக இருந்தாலும் பிச்சைக்கல்லை ஏற்றுக் கொள்ள வேண்டும் இது விளையாட்டின் விதிமுறைகளுள் அடங்கியதாகும்.

விளையாட்டின் துவக்க நிலை :

இருவர் எதிர்த்தாடுவதாக இருந்தாலும், நால்வர், இரு அணியாக இணைந்தாடுவதாக இருந்தாலும், விளையாட்டின் துவக்கத்தை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1. பச்சை மரம் பார்த்தல்
2. வயதைக் கணித்தல்
3. பூவா - தலையா போடுதல்
4. மகப்பேற்றைக் கணித்தல்

போன்ற கணிப்பின் மூலம் ஆட்டத்தைத் துவக்கும் உரிமை பெறுகின்றனர். பச்சை மரம் அல்லது பச்சை பார்த்தல் என்பது, முதலில் யார் பச்சை மரத்தைப் பார்க்கின்றாரோ, அவர் முதலில் ஆட்டத்தைத் துவக்குவர். விளையாடுகின்றவர்களில் அதிக வயதுடையவரும், ஆண் குழந்தை பெற்றவரும், ஆட்டத்தைத் துவக்குவதில் சிறப்புரிமை பெறுகின்றனர் விளையாடுபவர்கள் அனைவரும் சம வயதுடையவர்களாகவோ அல்லது சமநிலையுடையவர்களாகவோ இருந்தால். பூவா—தலையா போட்டு. அதன் மூலம் ஆட்டத்தைத் துவக்குவதற்கு உரிமை பெறுகின்றனர்.

விளையாடும் பெண்கள்:

பதினைந்து வயது முதல் நாற்பது வயதுவரையுள்ள மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகியோர் தட்டாங்கல் விளையாட்டிற்குத் தகுதியுடையவர்களாகின்றனர். இவ்வயதினர் விளையாடுவதைத் தட்டாங்கல் எனவும், பேதை, பெதும்பை வயதினர் விளையாடுவதைச் சொட்டாங்கல் எனவும் குறிப்பிடுவர். பெண்களின் பணிக்கால ஒய்வு நேரங்களும், விழாக்காலம் மற்றும் புப்புக்காலங்களும் தட்டாங்கல் விளையாட்டின் விளையாட்டுக் காலங்களாகும். இருவர் மற்றும் நால்வர் விளையாட, மற்ற பெண்கள் கூடிநின்று வேடிக்கை பார்ப்பதும், விளையாடும் பெண்களைக் கிண்டல் மற்றும் கேலிகள் பேசிச் சிரித்து மகிழ்வதுமாகப் பொழுதுபோக்குகின்ற தன்மை தட்டாங்கல் விளையாட்டின் சிறப்பு நிலையாகும்.

விளையாட்டின் விதிமுறைகள் :

தட்டாங்கல் விளையாட்டு எளிமையான, எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய விதிமுறைகளைக் கொண்டதாகும். எழுதப் பட்ட சட்டதிட்டங்களோ அல்லது நிரந்தரமான விதிமுறை விளக்கங்களோ இல்லை. இவ்விளையாட்டின் விதிமுறைகள் இடத்திற்கு இடம் வேறுபட்டும்-மாறுபட்டும் அமையலாம். தட்டாங்கல் விளையாட்டின் விதிமுறைகளை அடியிற் கண்ட வாறு வரிசைப்படுத்தலாம்.

1 விளையாட்டில் பங்கு பெறுபவர்கள் ஒவ்வொருவரும் முறையே ஐந்து அச்சுக் கற்களை ($5 \times 3 = 15$) (பதினைந்து) முதலீடாக விளையாட்டுக் களத்தினுள் போடவேண்டும்.

2. முதலில் அச்சுக்கல்லை வாரியெடுத்த பிறகுதான், பிற இணை மற்றும் பழக்கற்களை வாரியெடுக்க வேண்டும்.

3. கற்களை வாருகின்றபொழுது, களத்திலுள்ள பிற கற்களில் கையோ மற்றும் கல்லோ படுதலோ அல்லது தட்டுதலோ அல்லது அலுக்குதலோ கூடாது.

4. விளையாட்டுக் களத்தில் கற்களைச் சிதறுகின்றபொழுது அச்சுக் கல்லாகவோ, பழக்கல்லாகவோ கூட்டிச் சிதறு தல் கூடாது.

5. களத்தில் கற்களைச் சிதறுகையில், கைக்கல்லைத்தேர்வு செயது, அக்கல் தரையில் விழும்முன் பிடிக்க வேண்டும்.

6. கற்களை ஒழித்து வைத்தல் கூடாது.

7. கற்களைச் சிதறுகையில், கற்கள் இயற்கையாகவே தரையில் பரவி விழ வேண்டும்.

8. விளையாடுகின்ற பெண்கள் இருவரெனில், எதிர்நிலை யில் அமர்ந்தும், நால்வரெனில் எதிர்நிலையில் இணைந் தமர்ந்தும் விளையாடுதல் வேண்டும்.

9. கற்களைச் சிதறும்பொழுது, ஒரு குறிப்பிட்ட உயரத் திற்குமேல் தூக்கிச் சிதற வேண்டும்.

10. அச்சுக் கல்லும், பழக்கலலும் களத்தில் இல்லாத போது

தான் தனிக்கல்லையோ மற்றும் இரட்டைக் கல்லையோ திரியெடுக்க வேண்டுமெ. போன்ற விதிமுறைகளைக் கையாள்வதில் கவனமாக இருக்கின்றேன் அவை மீறப் படுகின்ற சமயங்களில், ஆட்டம் முடிவடைய நேரலாப்.

விளையாட்டிள் முடிவுகள்:

ஒருவரை — ஒருவர் எதிர்த்து விளையாடுவதிலும் இருவர்—இருவராக இணைந்து விளையாடுவதிலும் வெற்றி முக்கியமானதாகக் கணிக்கப்படுகிறது. வெற்றிபெற வேண்டும், மைத்துனி அல்லது முறைமைப்பெண்கள்த் தோற்கடிக்க வேண்டும் என்பது ஒருமுனைப்பாடாகக் காணப்படுகிறது. வளையல், சடைத்துணி, வன்பண்டங்கள் மற்றும் சிறு சிறு பொருட்களை ப்பந்தயமாக வைத்து விளையாடுவதுமுண்டு. நாத்தனாளாகச் சம்மதிக்க வேண்டுதலும், தட்டாங்கல் விளை யாட்டின் தனிச்சிறப்பு நிலைகளாகின்றன. இவைதவிர,

1. தலையில் குட்டுதல்
2. கையில் குத்துதல்
3. கல் வாங்குதல்
4. முகத்தில் புள்ளிகளிடல்
5. இடத்தை விட்டு எழுந்து உட்காருதல்
6. சிறிது தூரம் ஓடுதல்
7. எதிர்காலக் கணவன் பெயரைச் சொல்லுதல்
8. பாட்டுப் பாடுதல்

போன்றவை, தட்டாங்கல் விளையாட்டில் தோற்றவர்கள் அடை கின்ற தண்டனைகளாகும். இவை, வயதிற்கேற்றவாறும். உறவு முறைக்கேற்றவாறும், அந்தஸ்திற்கேற்றவாறும் நெகிழ்ச்சித் தன்மையடைவதுமுண்டு. சில சமயங்களில் கடினமாவதும் உண்டு. விளையாடுகின்ற பெண்களின் மனநிலையும், விளை யாட்டுத் திறமையும் விளையாட்டின் முடிவுகளை உறுதிப் படுத்துகின்றன.

கல்வெட்டில் நம்பிக்கைகள்

ஆர். ஆம்பிகா
புதுவைப் பல்கலைக்கழகம்

பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் மூலம். அக்காலத்தில் நிகழ்ந்த தானங்களையும் வகைகளையும் அவற்றால் கோயிலில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் அறிய உதவுகிறது.

அக்காலத்தில் கோயில்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது, அவற்றிற்கு வழங்கிய தானங்கள் பல வகையில் உள்ளன.

1. ஊர்கள்
2. நிலங்கள் (நஞ்சை புஞ்சை)
3. பொன் (ஆபரணங்கள்)
4. பணம்
5. ஆடுமாடுகள்
6. விளக்குகள்
7. பணிபுரிவதற்கு ஆட்கள் (தேவகன்பிகள்)

இந்தத் தானப்பொருள்களைக் கொண்டு கோயிலில் நடை பெற்ற நிகழ்ச்சிகள்,

1. கோயில் திருப்பணி
2. நாள் வழிபாடுகள்
3. சிறப்பு வழிபாடுகள்
4. விழாக்கள்
5. அன்னதானம் வழங்குதல்

போன்ற இன்னும் பல நிகழ்ச்சிகள் நடைமுறையில் இருந்ததற்கு சான்றுள. இந்த தானப்பொருள்களால் நடை பெற்ற நிகழ்ச்சிகளைக் கொண்டு அக்காலத்திய சமுதாய பின் புலத்தை அறியலாம். இந்தத் தானங்கள் எல்லாம் சமயம் சார்ந்த நம்பிக்கைகள் மக்களிடம் காணப்பட்டதாக ஊகிக்க முடிகிறது

நம்பிக்கை தனிமனிதனிடம் ஏற்பட்ட சில பழக்கங்கள் படிப்படியாக சமுதாயத்திடையே பொதுவாக அனைவரும் பின் பற்றும் பொழுது அது மதநம்பிக்கையாக மாறுகிறது அக்காலத் தில் தானம் செய்தது நம்பிக்கையின் அடிப்படையில் நடை பெற்றுள்ளது.

தாம் செய்யும் பாவ புண்ணியங்களின் பேரில் நன்மை' தீமைகள் ஏற்படும் என்று நம்பினர். அவற்றை போக்கிக் கொள்வதற்கு கோயிலுக்கு தானம் செய்துள்ளனர். ''மாதா, பிதாவுக்கு புண்ணியம் உண்டாகும் பொருட்டு தங்கள் குலம் தழைக்கவும் தங்கள் மக்கள் உடல் நலத்துடன் விளங்கவும தாங்கள் செய்த பாவங்களுக்குப் பரிகாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையாலும் இறைவனுக்கு தானங்கள் செய்துள்ளனர். என கல்வெட்டுக்கள் நிறுவுகிறது.

இதனை அச்சுதராயர் காலத்தில் செவப்ப நாயக்கர், வைய்யப்ப நாயக்கர் ஆகியோர்கள் மாதா, பிதாக்களுக்கு புண்ணியம் உண்டாகும் பொருட்டு இவ்வூர் கோயிலுக்கு செண்பகம் போன்ற மலர்கள் உள்ள நந்தவனம் ஒன்றைத் தானமாக கொடுத்த செய்தியினை அறியலாம்.

தன் பெற்றோர்கள் இறந்து விட்டால் அவர்கள் இறை வனுடைய திருவடியை அடைவதற்கும் தானங்கள் செய்தல் போன்ற நம்பிக்கைகளும் இருந்திருக்கின்றன.

''விசுவநாயக்கர் திருவடிக்கு இவருடைய புதல்வர்களான பெரிய இராமப்ப நாயக்கரும். சிறிய இராமப்ப நாயக்கரும் தங்கள் மாதாபிதா திருவடி சேர்வதற்காக வைண்வ ஆலையங்

களுக்கு நஞ்சை புஞ்சை நிலங்களையும். நந்தவனத்தையும், அளித்து ஒவ்வொரு நினைவு நாள் அன்று அதன் மூலம் வரும் வருமானத்தைக்கொண்டு வைணவ ஆலயங்களில் அன்னதானம் அளிக்க நிலம் கொடுத்திருக்கிறார்கள என அக்கல்வெட்டு சுட்டுகிறது''

கல் வெட்டுகளின் மூலம் தானம் செய்யாமல் இருந்தால் பாவங்கள் வரும் என்ற நம்பிக்கை இருந்ததால். அக்காலத்தில் மக்கள் தங்களால் முடிந்த அளவு தானங்களைச் செய்திருக்கின்றனர் என ஊகிக்க முடிகிறது சாபத்திற்கு பயந்தும் தவறுகள் செய்யாமலும் வந்திருக்கின்றனர். ஆனால் அப்படி குற்றம் செய்தவர்களுக்கு கடுமையான தண்டனைகளைக் கொடுத்திருக்கின்றனர் தவறுகளுக்காக கோயிலுக்கு நிவந்தம் அளித்தால் பாவத்திலிருந்து விடுபடலாம் என்ற நம்பிக்கை இருந்ததால் தவறு செய்தவர்களிடமிருந்து உடமைகளை பறிமுதல் செய்வது மட்டுமல்லாமல், அவர்களையும் வெளியேற்றி இருக்கின்றனர்.

அக்காலத்தில் தன்னால் முடியாத தீர்ப்புகளுக்கு மூட நம்பிக்கையின் அடிப்படையில் தண்டனை வழங்கியுள்ளனர் என கல்வெட்டு சுட்டிக்காட்டுகிறது

'குற்ற விசாரணையின் போது பழுக்கக் காய்ச்சிய கொழு ஒன்றை உருவச் செய்து கண்டு பிடிக்கும் முறையை மக்கள் கையாண்டு வந்துள்ளனர்,,'

''உற்ற போதன்றி நீவிர் ஒருவன் என்னுரை மாட்டீர்' என்றார் தொண்டரடிப் பொடி ஆழ்வார். துன்பம் உண்டாகும் போதுதான் இறைவனை நினைப்பது மக்களது இயல்பு. அக்காலத்தில் படையெடுப்புகளாலும் போர்களாலும் இடைவிடாது துன்பமும் தொல்லையும் ஏற்பட்டுக் கொண்டிருந்த நிலையில் மக்கள் இறைப்பற்று மிக்கவர்களாக வாழ்ந்து வந்திருக்கின்றனர். கோயில் பணத்தை கோயிலுக்கு ஆகும் செலவுக்கு பயன்படுத்தாமல் தன் சொந்த செலவுக்கு பயன்படுத்தினால் பாவம் உண்டாகும் என்ற நம்பிக்கையால் அக்காலத்தில் கோயில்

பணத்தை யாரும் கைபாடவில்லை. என அறிய முடிகிறது. "பூதப் பாண்டீச்சுரமுடைய நயினார்க்குத் திருப்பள்ளி எழுச்சிக்கும் அபிஷேகத்திற்கும் அமுதுக்கும் நிவேதனத்திற்கு மாக நாஞ்சில் நாட்டு மருங்கூரான் பத்மனாப நல்லூரில் சுரனை வென்ற ஆசிச்சன் வழிபாடாக மாதம் ஒன்றுக்கு எண்ணெய், நெய், தேங்காய் கதலிப்பழம் முதலிய செலவுக்கு பணம் 300 அளிக்கப்பட்டதாக அறிய முடிகிறது இந்த பணத்தை கையாண்டுவிட்டால் கங்கை கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷத்திற்கு போகக் கடவார்கள்"

விளக்கு எரிப்பதை புனித தொழிலாக கொண்டிருந்தனர். அதற்காக நிலங்களையும் ஆடுமாடுகளையும் தானமாக கொடுத்துள்ளனர்.

"பூதப்பாண்டீசுரமுடைய நயினார் சீகாரியம் செய்பவர் களிடத்தில் அய்யப்பன் பரியேலும் பெருமாள் என்பவர் இறைவனுக்கு ஐந்து திரியுள்ள திருக்குத்து விளக்கு 25 அளித்து அவற்றை எரிப்பதற்கு எண்ணைக்காக நிலமும் அளித்ததைக் கல்வெட்டு கூறுகிறது". விளக்கு எரிப்பது தங்கள் குடும்பம் செல்வ செழிப்போடு விளங்க வேண்டும் என்ற எண்ணத்திலும் அக்கோயில் எப்படி ஒளிமயமாக விளங்குவதுபோல தாங்களும் ஒளிமயமாக பிரகாசிக்க வேண்டும் என்ற நம்பிக்கையிலும், அக்காலத்தில் கோயிலில் விளக்கு எரித்து இருக்கலாம் என ஊகிக்க முடிகிறது.

ஏழைகளுக்கு உணவு அளித்தால் புனித தளங்களுக்கு சென்று வந்ததற்கு ஒப்பாகும் என்ற நம்பிக்கை இருந்ததாக பின் வரும் கல்வெட்டின் மூலம் அறியலாம்.

"ஸ்ரீ பாரங்குசதாதர் என்பவர் புதூரிலுள்ள மடத்தி லிருந்து கொண்டு துவாதசி நாள் தோறும் 12 பேர்களுக்கு உணவு படைக்கப்பணிக்கப்பட்ட கொடையைக் குறிக்கிறது, இதற்கு அகிதம் பண்ணினால் காராம் பசுவைக் கொன்ற தோஷத்திற்கு போகக் கடவார்கள், இதை பரிபாலம் செய்த நடத்துவர் அசுவமேதயாகம் நடத்தினால் ஏற்படும்

நன்மைக்கு ஒப்பாகும்'; என்றநம்பிக்கையும் அக்கால மக்களிடத்தில் நிலவியது.

தொகுப்புரை;

1. தானம் செய்தால் பாவ-புண்ணியங்கள் ஏற்படும்
2. குற்றம் செய்தால் தண்டனைகிடைக்கும்.
3 தானம் செய்யாமல் இருந்தால், பாவம் ஏற்படும்.
4. மடங்களுக்கு தானம் வழங்கினால் அசுவ மேதயாகம் நடத்தினால் ஏற்படும் புண்ணியத்திற்கு ஒப்பாகும்.
5. மனுதர்மக் கொள்கைகள் காக்கப்பட்டுள்ளன.

படுகளம்

கா. அரங்கசாமி

அரசு கலைக் கல்லூரி
உடுமலைப்பேட்டை.

1. முன்னுரை :

கொங்கு நாட்டுப் புறப் பகுதிகளில் 'அண்ணன்மார் கதை', உடுக்கையடிப் பாடலாக மிகுதியும் பாடப் பெற்று வருவதை நாம் அறிவோம். ஆனால் இக்கதைப் பாடலே ஒரு நம்பிக்கைக்கு ஆணி வேராகவும், அண்ணன்மார்சாமிகளின் தெய்வீக நிலைக்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் விளங்குவதற்கு உரிய நிகழ்ச்சியாகப் 'படுகளம்' இடம் பெறுகின்றது. அது பற்றிய ஆய்வாக இக்கட்டுரை அமைகின்றது.

படுகளம் - விளக்கம் ;

'படுகளம்' என்ற சொல் போர்க்களத்தைக் குறிக்கின்றது. வினைத்தொகையாக நிற்கும் இச்சொல் அண்ணன்மார் கதையைப் பொறுத்த வரையில் வீழ்ச்சிக் களத்தைக் குறிப்பதாகவே விளங்குகின்றது. கதையமைப்பில் தாமரை நாச்சியார் பெற்ற வரத்தின் விதிப்படியும் - மாயவரின் சூழ்ச்சிப் படியும் படுகளம் அண்ணன்மர்ரின் பலிக்களமாகவே அமைகின்றது. எனவே கதை அமைப்பில் படுகளம் உணர்ச்சிக் களத்தின் உச்சமாகவும்— உயிர்நாடியாகவும் விளங்கி, இக்கதை இன்றும் வழங்கி வருவதற்குரிய அடிப்படைக் காரணமாகவும் இருக்கின்றது. நாட்டார் வழக்காற்றில் படுகளம் என்ற இச்சொல் 'படியாளம்' எனப்படுகின்றது.

3. அண்ணன்மார் கதை :

கொங்குவேளாளரின் இன ஒற்றுமையயற்ற பண்புக்கு மூல காரணமாக விளங்குகின்ற பங்காளிப பகைமைக்கும், ஆடவரின்

வீர உணர்வுக்கும், மகளிரின் கற்புடைமைக்கும் எடுத்துக் காட்டாக விளங்குவது அண்ணன்மார் கதை இக்கதையின்படி குன்றுடையான் தாமரைநாச்சி என்ற தம்பதியர்க்கு தவத்தால் பொன்னர் சங்கர் என்ற இரு ஆண் மக்கள் குறைந்த வாழ் நாளும் நிறைந்த ஆற்றலும் உடையவர்களாகப் பிறக்கின்றனர். அவர்களை அடுத்து அருக்காணி என்ற தங்கையும் பிறக்கின்றாள். இவர்களுக்கு உற்ற வயது வரும்பொழுது தலையூர்க் காளி எனும் வேட்டுவத் தலைவனுடன் பகை ஏற்படுகின்றது. பகை காரணமாகப் போர் மேற் சென்ற அண்ணன்மார் பகைவரை அழித்ததுடன் தமது உடலில் ஏற்பட்ட 'விண்ணத்திற்' காக வாள்மேற் பாய்ந்து வீர மரணம் எய்துகின்றனர் இதுவே கதையில் இடம் பெறும் படுகளம்.

இங்ஙனம் இறந்துபட்ட அண்ணன்மாரைத் தேடிப்படு களம் நோக்கிப் புலம்பி வந்த தங்கை அருக்காணித் தங்கம் அவர்களின் வீரமரணங்கண்டு கதறுகின்றாள். அவளின் துயரமும், ஒருமையும், தெய்வங்களின் அருளும் அண்ணன்மார் உயிர்த்தெழக் காரணமாகின்றன. உயிர்த்தெழுந்த அவர்கள் தங்கையைத் தேற்றி கன்னித்தெய்வங்களுள் ஒருத்தியாக அவளை நிறுத்தித் தெய்வாம்சம் பெறுகின்றனர். இது அண்ணன்மார் கதையின் மிகச் சுருங்கிய வடிவம்.

4. வழிபாடும் — படுகளமும்

இன்றைய நிலையில் கொங்கு நாட்டின் பல கிராமங்களில் தெய்வ வழிபாடு நடக்கும்போது அண்ணன்மார் கதைப்பாடலை உடுக்கையடிப் பாடலாகப் பல்வேறு சந்தங்களில் உணர்ச்சி ததும்பப்பாடுகின்றனர். அங்ஙனம் பாடி வரும் போதுஅண்ணன் மார் படுகளத்தில உயிர்விடும் காட்சியை விவரிக்கும் போது கேட்கின்ற கூட்டத்திலிருப்போரில் சிலர் அருளேற்றம் பெற்றுத் தம்சுய நினைவின்றி வீழ்ந்து விடுகின்றனர். இங்ஙனம் வீழ் தலைப் "படியாளம் விழுதல்" எனக்கூறுகின்றனர்.

படுகளத்தில் வெட்டுண்டு வீழ்ந்துபடும் வீரர்களைப் போல வே இவர்களும் துள்ளித்துடித்து வீழ்வதால் இதனையும் படி யாளம் அதாவது படுகளம் வீழ்தல் எனக் கூறுகின்றனர். கதை

கூறுவோர் தங்கை அருக்காணி போர்க்களத்தில் அண்ணன் மாரைத் தேடிப் புலம்பித் தெய்அருளால் அவர்களை எழுப்பு கின்ற காட்சியைக் கூறும் பொழுது படுகளம் வீழ்ந்தவர்கள் எழுகின்றனர்

இங்ஙனம் படுகளம் வீழ்ந்து எழுதலைப்பற்றிய ஆய்விற் காகப் பின்னிணைப்பில் கொடுக்கப் பெற்றுள்ள ஊர்கள் கள ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பெற்றன. அவற்றில் திரட்டிய தரவுகளின் அடிப்படையில் கிடைத்தவற்றைப் பின்கண்டவாறு வகைப்படுத்திக் கூறலாம்.

5. படுகளம் இடம் பெறும் கோயில்கள்:

இக்கோயில்கள் பெரும்பாலும் கன்னிமார் கோயில்களாக உள்ளன. பதினான்கு கோயில்களில் பதினோரு கோயில்கள் கன்னிமார் வழிபாடுடையவையாயும் இவற்றுள் நான்கு கோயில் களில் அண்ணன்மார் சுவாமிகள் வழிபாடும், இரு கோயில்களில் வேட்டைக்கார சுவாமி வழிபாடும், ஒரு கோயிலில் கருப்பராயன் வழிபாடும், மற்றொன்றில் முருக வழிபாடும், கலந்து இருந்தன ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்ற பதினான்கு கோயில் களில் நஞ்சியம்பாளையம் என்ற ஊரில் உள்ள காளியாத்தா கோயில் ஒரு குறிப்பிட்ட குடும்பத்தைச் சேர்ந்த பங்காளிகளுக் குரிய குடும்பத் தெய்வக் கோயிலாகும். ஏனையவை அண்ணன் மார் வழிபாட்டோடு தொடர்புடையவை.

6. கொண்டாடும்மக்கள்:

இக்கோயில்களில் முன்னுரிமை பெற்று வழிபாடு செய்கின்ற வர்கள், கொங்கு வேளாளர்கள், கொங்குச் செட்டியார்கள், கொங்கு நாவிதர்கள், குறவர்கள், மண்ணுடையார்கள், மாதாரி கள் எனப் பலவகைப்பட்ட சாதியினராவர். இவர்களில் கொங்கு வேளாளர்கள் மடத்துப்பாளையம் என்ற ஊரில் இடம் பெற் றுள்ள கன்னியாத்தா கோயிலிலும், கொங்குச் செட்டியார்கள் தாயம்பாளையம் என்ற ஊரில் உள்ள கன்னிமார் கோயிலிலும் தாமே உடுக்கையடித்துக் கதை கூறிப் படுகளம் விழவைக் கின்றனர். ஏனைய இடங்களில் பெரும்பாலும் இவர்களைத் தவிர்த்து ஏனைய சாதியினர் கதை கூறுகின்றனர்.

அண்ணன்மார் உடுக்கையடிப்பாடலை மிகுதியும் பாடி வருவோர் நாவிதரும், வண்ணாருமேயாவர். இவர்கள் திருவிழா நடைபெறும் கோயில்களுக்குப் படுகளம் விழ வைக்க அழைக்கப் பெறுகின்றனர். படுகளம் விழவைத்து எழுப்புதலென்பது இக் கோயில் விழாக்களின் மிக முக்கிய நிகழ்ச்சியாகும்.

7. படுகளம் வீழ்தல்

விழா நடைபெறும் இரவில் தெய்வத்திற்கு வேண்டிய படையலுக்குரிய பொங்கலிடுதற்காகக் குடும்பத்தினர் ஏற்பாடு களைச் செய்கின்றனர். அதே சமயம் உடுக்கையடிக்கதையும் ஒருபுறம் தொடங்குகின்றது. பல்வேறு விதமான இறைச்சல் களுக்கிடையே கதை கூறுவோர் கதையின் முற்பகுதியினை விரைவாகக் கூறி வருகின்றனர். பொங்கலிட்டு முடித்த மகளிரும் வந்து சேருகின்றனர். இரவு சுமார் ஒன்பது அல்லது பத்துமணி அளவில் கோயிலில் உடுக்கையடிக்கதை மட்டும் நடைபெறு கின்றது

கதை கூறுவோர் உரிய நேரம் வந்தவுடன் கதையின் சிற்சில பகுதிகளை விட்டுவிட்டுப் போர்க்களப் பகுதியைத் தொடங்கு கின்றனர். சின்ன அண்ணார் சங்கரின் போர் நிகழ்ச்சிகளும் அவரின் வீரமரணமும் மிகவும் உணர்ச்சிகரமாக படுவோரால் கூறப் பெறுகின்றது. போர்க்களப் பகுதியைப் பாடத்தொடங்கிய திலிருந்தே கூட்டத்தில் சிலர்தம் வசமிழந்து மெதுவாக அசைந் தாடத் தொடங்குகின்றனர். ஒரு குறிப்பிட்ட உச்சத்தில் இவர்கள்மிகவும் ஆவேசமான குரல் ஒலியுடன் துள்ளித்துடித்து மல்லாந்து வீழ்ந்து விடுகின்றனர். அவர்களுடைய உடல்கள் விரைத்துப் போகின்றன. அவர்களுக்குச் சுயநினைவு இருப்ப தில்லை அவர்களை இறந்த உடல்களை எடுத்துப் போடுவது போல இரண்டு மூன்றுபேர் பிடித்து எடுத்துச்சென்று வரிசை யாகக் கிடத்துகின்றனர் இச்செயல்களால் பாடல் நிற்பதில்லை. பாடுவோர் தொடர்ந்து வரிசையாகக் கிடத்தப்பெற்ற படுகள வீழ்ச்சியாளர்களைச் சுற்றியபடி பாடிக்கொண்டே இருக் கின்றனர். இந்நிலையில் கதை தொடர்வதில்லை. போர்க்கள நிகழ்ச்சிகளே உணர்ச்சி ததும்ப விவரிக்கப்பெறுகின்றன. நேரம்

செல்லச் செல்ல வீழ்ந்தோரின் வரிசை நீளுகின்றது. எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு கோயிலுக்குக் கோயில் மாறுபடுகின்றது.

படுகளம் வீழ்வோர் உயரமான மதிற்சுவர், மரங்கள் முதலானவற்றிலிருந்தும் ஆவேசமாகப் பாய்ந்து வீழ்கின்றனர் இதனால் அவர்களுக்கு இரத்த காயம் எலும்புமுறிவு முதலானவை ஏற்படுவதில்லை என்பதை இவ்வாய்வாளர் பலரைக் கேட்டு அறிந்தார் மேலும் பாடலைக்கேட்டு வீழ்கின்றவர் விழ, முன்பே வீழ்ந்தவர்களின் உடலங்களும் துடிதுடித்து நடுங்குவதைக் காண முடிந்தது.

படுகளம் வீழ்வதற்கு வீழ்பவர்களின் உணர்ச்சி பூர்வமான-கதையோடு ஒன்றிய மனோநிலையே காரணமென்றும் கூறிவிட முடிவதில்லை. ஏனென்றால் கதை முறையாகவோ, முழுமையாகவோ கூறப்பெறுவதில்லை. மேலும் கோயிலில் தீபாராதனை கட்டித் தீர்த்தமும் திருநீரும் கூட்டத்தை நோக்கி வீசிய பின்பு, திடீரெனப் போர்க்கப் பகுதியைப் பாடத் தொடங்கிய பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குள் முதற் படுகளம் வீழ்வதை ஆய்வாளர் மூன்று இடங்களில் காண முடிந்தது.

ஏதாவது குற்றங்குறைகள் இருந்தால் அந்த ஆண்டு படுகளம் விழாதென்றும், அதன் பிறகு யாராவது ஒருவர் மேல் தெய்வ ஆவேசம் வந்து இன்ன குற்றம் நிகழ்ந்தது எனக் கூறினால் அதைச் சரிசெய்த பின்பே படுகளம் விழும் எனவும் நான்கு இடங்களில் பெரியவர்கள் கூறக்கேட்க முடிந்தது எனவே படுகளம் வீழும் நிகழ்ச்சி அறிவு பூர்வமான சரியான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியதொன்றாகும்.

8. படுகளம் எழுதல்:

ஒரு குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையில் படுகளமாகப் பலர் வீழ்ந்த பின்பு போர்க்களப்பாட்டை நிறுத்துகின்றனர். பெரும்பாலும் படுகளமாக வீழ்ந்தவர்களைப் படுக்க வைக்கும் இட வசதிக்கேற்ப இவ்வெண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகின்றது.

படுகள வீழ்ச்சிக்குப்பிறகு பாடுவோர் சிறிது ஓய்வு எடுத்துக் கொள்பவர்கள் போல மெதுவாகப் பாடுகிறார்கள். அது ஒரு இடைவேளை போல அமைகின்றது. பாடியவர் தேநீர்

அருந்துதல் போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. இவ் விடைவேளை பெரும்பாலும் நடுநிசியைக் கடந்து இடம் பெறுகின்றது.

அடுத்துப் படுகள எழுச்சிக்கான கதைப் பகுதி தொடங்கப் பெறுகின்றது. அண்ணன்மார் போர்க்களத்தில் வீழ்ந்து பட்டதைத் தொடர்ந்து தங்கை அருக்காணித்தங்கம் அவர்களைத் தேடிப் புறப்படும் பகுதி பாடப் பெறுகின்றது. ஆவேசமான போர்க்கள உணர்ச்சியை வெறியோடு பாடியவர்கள் இப்பொழுது துயரமயமான சந்தக்கண்ணிகளை இசைக்கின்றனர். கல்லும் கரைந்துருகும்படிக்கான அழுகைக் குரலில் பாடகர்கள் பாடுவது கேட்பவர் நெஞ்சை நெகிழ்விக்கும்.

அண்ணன்மார் வீழ்ந்த படுகளத்தைத் தேடி அடைவதில் தங்கைக்கேற்படும் இடர்ப்பாடுகள் விவரிக்கப் பெறுகின்றன. அவளின் அவலங்கண்டு உயர்ந்த நிலையிலிருக்கின்ற தெய்வங்களும், தாழ்ந்த நிலையிலிருக்கின்ற மிருகங்களும் இரங்குகின்றன. இங்ஙனம் புலம்பி வருகின்ற தங்கை படுகளத்தை அடைந்து அண்ணன்மாரைக்கண்டு கதறுகின்றாள். பிறகு தேவியின் அருள்கொண்டு அண்ணன்மாரை எழுப்புகின்றாள். இக்கட்டத்தைப் பாடி வரும்போது படுகளமாக வீழ்ந்தவர்கள் ஒவ்வொருவராகத் துடிதுடித்து எழுகின்றனர். வீழும்போது அவர்களிடம் காணப்பட்ட அதே ஆவேசம் எழும்போதும் காணப்பெறுகின்றது. எழுகின்ற ஒருவரைப் பலர் சேர்ந்து இறுகப் பிடித்துக் கொள்ளுகின்றனர். நெற்றிப்பொட்டை அழுத்திப் பிடித்தும் கோயிலின் திருநீறு, தீர்த்தம் முதலானவற்றைத் தெளித்தும் சாந்தப்படுத்துகின்றனர்.

படுகளத்திலிருந்து எழுகின்றவரை இங்ஙனம் மேலும் விழுந்துவிடாமல் பிடித்து நிறுத்திச் சாந்தப்படுத்தாவிடில் அவர்களை மீண்டும் எழுப்புவது சிரமமெனக் கூறப்பெறுகின்றது. ஒரு பன்னிரண்டு பதின்மூன்று வயதுச் சிறுவனைப் பிடித்து நிறுத்த மூன்று நான்கு வளர்ந்த ஆண்கள் தேவைப்படுகின்றனர். அத்தகு ஆவேசநிலை படுகளம் எழும்போதும் காணப் பெறுகின்றது.

தமிழரிடம் வழங்கும் 'திட்டும்' முறைகள்

க. ப. அறவாணன்

புதுவைப் பல்கலைக் கழகம்

திட்டுதல் என்பது சினத்தின் வெளிப்பாடாகமாந்தர்களிடம் அமைந்து உள்ளது. யாரேனும் ஏதேனும் சினம் வந்தால் நாக்கைக் கடிப்பதும், கைமுட்டியைக் காட்டுவதும் வழக்கம். நாக்கைக் கடிப்பதும், முட்டியைக் காட்டுவதும் உணர்ச்சி வெளிப்பாடுகள் மட்டும் அல்ல. உள்ளத்தில் ஏற்படும் கொந் தளிப்பைக் காட்டும் உடல் அறிகுறிகளே அவை. எதிரியைத் தாக்க மனம் விழைகிறது. ஆனால் எதிரி வலுவுடையவனாக இருப்பின் மனம் தயங்குகிறது. இந்தத் தயக்கத்தின் வெளிப் பாடாகச்சிலர், எழும் கோபத்தை அடக்கிக்கொள்கிறார்கள். சிலர் திட்டும் சொற்களாக வெளிப்படுத்துகிறார்கள். வலுக் குறைந்தவர் வலுவுடையோரைத் திட்டுதலைவிட வலுமிகுந்தவர் அல்லது வயதில் கூடியவர் வலுவற்றவரை அல்லது வயதில் குறைந்தவரைத் திட்டுதல் மிகுதியாக உள்ளது. சில சமயம், வலுமிகுந்தவரை எதிர்த்து அடிக்கும் ஆற்றல் இல்லாதபோது இயலாமையின் வெளிப்பாடாகத் திட்டுதல் வெளிப்படுவது உண்டு

திட்டுதலை உறவினரைத் திட்டுதல், உறவு அல்லாதவரைத் திட்டுதல் என்று இரண்டாக வகைப்படுத்தலாம். இவற்றையும் கூட உறவினருள் ஆணையும் பெண்ணையும் திட்டுதல் என இரண்டும் வகையாகவும், அயலாருள் ஆணையும் பெண்ணை யும் திட்டுதல் என்ற இருவகையாகவும் பிரித்துக்கொள்ளலாம்.

மனிதன் ஒரு சமூக விலங்கு. அவன் தன் குடும்பத்தாலும், குலத்தாலும் ஊராலும் கட்டுப்படுத்தப்படுகிறான். அவனுடைய

தேவைகள் ஒவ்வொரு நாளும் வயது போலக் கூடிக்கொண்டே வருகின்றன. அவற்றை அவன் இயல்பாக எளிதாகப் பெறும் போது சிக்கல் ஒன்றும் நேர்வது இல்லை. தேவைகளைப் பெற முயலும்போது அவன் விருப்பம் நிறைவேறாமல் தடைப்பட வாய்ப்பு உண்டு. அத்தடை அவனுக்கு மன முறிவையே (Frustration) உண்டாக்குகிறது. உளவியல் அறிஞர்கள், மன முறிவைத் தன்னைச் (Personal) சார்ந்தவை, சூழ்நிலைகளால் ஏற்படுபவை. முரண்பாட்டால் ஏற்படுபவை என்று வகைப் படுத்துவர். மனமுறிவை வெளிப்படுத்துவது வேறுவேறு வகை யாக அமையும். திட்டுதலும் மனமுறிவின் ஒருவகைப் புலப் பாடே உள் எண்ணம், நோக்கம் நிறைவேறாமல் முறிவுறும் போது மனத்தில் ஏற்படும் செயல்முறையையே ஆக்கிரமிப்பு (Aggression) என்று குறிக்கின்றனர். இவ்ஆக்கிரமிப்பு நேர்முக மாகவும், மறைமுகமாகவும் அமையும். அம்மாவையோ, அப்பாவையோ, அண்ணனையோ அடிக்க முடியாமல் கையில் உள்ள பொருள்களைத் தூக்கி உடைக்கிறது குழந்தை சில சமயம் தானாகவும் சுவரில் முட்டிக்கொள்கிறது. தற்கொலைப் பழக்கம் கூட இந்த ஆக்கிரமிப்பின் தன்னை நோக்கிய விளைவு தான். நேர்முகமாக எதிர்த்துச் செயல்படுதல் ஒரு நிலை; இயலாதபோது பேசித் திட்டித் தீர்ப்பது இன்னொரு முறை. இந்த அடிப்படையில்தான் நம்மிடமும் சினமும் அதன் வெளிப் பாடாகத் திட்டுதலும் நிகழ்கின்றன. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்ளலாம்.

1. அஃறிணையில் இயங்காதவற்றைச் சொல்லித் திட்டுதல்
   எடுத்துக்காட்டு: குத்துக் கல்லு, மரம்.

2. அஃறிணையில் இயங்குகின்றனவற்றைச் சொல்லித் திட்டுதல்.

   எடுத்துக்காட்டு: மாடு, எருமைமாடு, குரங்கு, நாய் முதலாயின.

3. சாதியைச் (கீழ்) சொல்லித் திட்டுவது.
   எடுத்துக்காட்டு: பறையன், பள்ளன், சக்கிலியன், வண்ணான், சூத்திரர்.

4. உடல் அமைப்பைச் சொல்லித் திட்டுவது.
எடுத்துக்காட்டு: முண்டம், தடியன், தடிச்சி.

5. சிறுமைக்குரிய செயல்களைச் சொல்லித் திட்டுவது.
எடுத்துக்காட்டு: பொறுக்கி, சிறுக்கி, நக்கி.

6. ஏழ்மையைச் சொல்லித் திட்டுவது.
எடுத்துக்காட்டு. பிச்சைக்காரப் பையன், கையாலாகாத பயல்,

7. அறிவின்மையைச் சொல்லித் திட்டுவது.
எடுத்துக்காட்டு: முட்டாள், அறிவற்றவன். மூடம் அறிவுகொட்டவன்.

8. பயனின்மையைச் சொல்லித் திட்டுவது.
எடுத்துக்காட்டு: தண்டம், பைசாவுக்குக் கூட பிரயோசனம் இல்லாதவன்.

9. தன்மையை வைத்துத் திட்டுவது.
எடுத்துக்காட்டு: முரடு, முரட்டுப்பையன், முரட்டுச் சிறுக்கி.

10. கணவனை இழந்த நிலையை வைத்துத் திட்டுவது.
எடுத்துக்காட்டு: கம்மனாட்டி (கைம்பெண்டாட்டி)

11. திருடுதலை இழிவாகச் சொல்லித் திட்டுவது.
எடுத்துக்காட்டு: திருட்டுப் பையன், திருட்டுச் சிறுக்கி, களவாணி.

12. வேற்றுமொழிச் சொற்களைக் கொண்டு திட்டுவது.
எடுத்துக்காட்டு: இடியட், நான்சென்ஸ், ஃபூல், பாஸ்டர்டு. படவா (?) முதலாயின.

12. அ. உடல் ஊனத்தைச் சொல்லித் திட்டுவது.
எடுத்துக்காட்டு: செவிட்டுப் பயல், குருட்டுச் சிறுக்கி முதலாயின.

13 சாவை மையமாக வைத்துத்திட்டுவது.
எடுத்துக்காட்டு: பாடையிலே போக, கட்டையிலே போக, கழிச்சலிலே போக, வயத்தாலே போக, காளி

யாத்தாள் கொண்டு போக; மாரியாயி அள்ளிக்கிட்டுப் போக

14 பரத்தமையைச் சொல்லித் திட்டுவது.

எடுத்துக்காட்டு: தேவடியாள், தேவடியாள சிறுக்கி, தேவடியாள் மவன், தேவடியாள் பையன்.

15. ஆண் பெண் பால் உறுப்புகளின் பெயரை வைத்துச் சொல்லித் திட்டுவது.

16. முறையற்ற பால் உறுவுகளைச் சொல்லித் திட்டுவது.

1. தந்தை — மகள்
2. தாய் — மகன்
3 அக்காள் — தம்பி
4 பலர் ÷ — முதலானவை

மேற்கண்டவற்றில் திட்டுகுன்ற சொற்கள்ளயும் முறைகளையும், வைத்துத் தமிழர்தம் சமூகப்போக்கை ஓரளவு உய்த்துணரலாம்.

1. முறையற்ற பால் உறவு இவர்களால் மிகக் கடுமையாகக் கருதப்படுகிறது.

2 பெண்ணின் தேவடியாள் வாழ்வு மிக இழிவாகப் பழிக்கப்படுகிறது. தேவடியாளுடன் கூடிய உறவு அவர்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தை. பெண் குழந்தை, ஆகியோர் மிகத் தாழ்வாக கருதப் பெறுகின்றன,

3, கணவனை இழந்த விதவைக் கோலம் மிகப் பழிப்புக்கு உரியதாகக் கருதப்படுகிறது.

4. இவர்களிடையே சாதி பேதங்களும் சில சாதிகளை இழிவாகக்கருதும் போக்கும் உள்ளன.

5. பொருளாதாரத் தாழ்வை இவர்கள் மிக இழிவாகக் கருதுகின்றனர். ''சோத்துக்கு வக்கு இல்லாதவன்'' என்று ''திட்டுவதும்'' இதனைக் காட்டும்.

6. கீழே கிடந்தவற்றைப் பொறுக்குதல், உணவை நக்கி உண்ணுதல் சிறுசெயல்களைச் செய்தல் ஆகியன இவர்களால் கண்டனத்திற்கு உள்ளாகின்றன.

7. அறிவின்மை தாழ்வாகக் கருதப்படுகிறது. அறிவின்மையைவிடப் பண்பின்மையை இம்மக்கள் மிகப் பெரிதாகக்கண்டிக்கிறார்கள். பண்பாடின்மையில்கூடப் பெரும்பாலானவை ஆண் பெண் பால் உறவை மையமாக வைத்துக் கண்டிக்கப் பெறுகின்றன ஆண் பெண் பால் உறவைப் பற்றிய திட்டும் மொழிகள் மிகக் கடுமையானவையாக திட்டுவோராலும், திட்டப்பெறுவோராலும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன அத்தகு திட்டுகள் நேரும்போது ''என்ன இப்படியா சொன்ன?'' என்று கேட்டு இருவரிடையே சண்டை, மூளுவதைப் பல இடங்களிலும் காணலாம்.

8. எதிரியை நோய் வாய்ப்பட்டுச் சாகச் சொல்லும் மொழிகள், இம்மக்கள் சாவைக் கடுமையான எதிர்ப்பார்ப்பாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக்காட்டுகின்றன, மறுஉலக வாழ்வு பெருநம்பிக்கை இருக்கும் கூட்டத்தில் சாவைப் பற்றிய கவலை குறைவாகவே இருக்கும். இத்திட்டு மொழிகள் சாவைப் பெரிதாகக் காட்டுவதால் இம்மக்கள் இம்மை வாழ்வில் அதிக அக்கறை கொண்டு இருந்தார்கள் என்பதைக் காட்டுகின்றன. மேலும் இச்சொற்களில் பெரும்பாலானவை பெண்களால் திட்டப்பெறுகின்றன என்பதும் கருதத்தக்கது.

மேலே சுட்டப்பெற்ற திட்டுமொழிகளை ஆண் பெண்ணை நோக்கித்திட்டுவன, பெண் ஆணை நோக்கித் திட்டுவன, ஆண் ஆணை நோக்கித் திட்டுவன, பெண் பெண்ணை நோக்கித் திட்டுவன என்று வகைப்படுத்திக் கொண்டு ஆராய்தல் நல்லது. இவ்வகைப்படுத்துதலைக் கூட முடிந்தால் வயது அடிப்படையில் பகுத்துக் கொள்ளுதல் மேலும் சில தெளிவுகளை அளிக்கக்கூடும்

சண்டைபோட வேண்டும் என்ற விருப்பமும், எதிரியைத் தாக்கி அழிக்க வேண்டும் என்ற சீற்றமும், இறக்க வேண்டும்

என்ற ஆசையும் மனிதனுக்கு இயல்பாக இருக்கின்றன என்பது சிங்மன் பிராய்டு அவர்களின் கருத்து. ஆனால் மனிதன் எல்லோரிடமும் சண்டை போட முடியாது எதிரியைப் பகிரங்க மாகத் தாக்கவும் முடியாது; அவன் பைத்தியக்காரத்தனமாக இறக்கவும் முடியாது. ஆனால் இந்த அடிப்படை உணர்வுகள் வேறுவேறு புறவடிவம் கொண்டு வெளிப்படுகின்றன. கத்திச் சண்டை, மற்போர், கிரிக்கெட், ஆக்கி முதலான விளையாட்டுகளை எல்லாம் மனிதன் மிக விரும்புவதற்குக் காரணம் அவன் உள்ளத்தில் உள்ள சண்டைபோடும் உணர்ச்சியும், எதிரியைத் தாக்கி அழிக்க வேண்டும் என்ற உணர்ச்சியும் ஆகும்.

திட்டும் மொழிகளுள் குறிப்பாகப் பால் உறவைச் சார்ந்த கொச்சைச் சொற்களையும் இணைத்துப் பேசும் பழக்கம் மிகுதியாகக் கற்றவர்களைவிடக் கல்லாதவரிடமும், பொருளாதாரம் ஏற்றம் பெற்றவர்களைவிட மிகப் பின்தங்கியவர்களிடமும் இருப்பது கவனிக்கத்தக்கது. இத்தகு இயல்பு உடையோரிடம் மேற்கண்ட சொற்கள் மிகுதியாக இருப்பானேன்? உடல் உறவு வாழ்க்கையில் அவர்களிடையே உள்ள நிறைவின்மையும், நிறைவேறாமையும காரணங்களா என்பது ஆராயத்தக்கது. உள வியல் அறிஞர்கள் இரண்டு செயல்களை வற்புறுத்துகின்றனர்.

1. அடக்குதல் (Repression) : மன்த்தில் எழுகின்ற வேண்டாத எண்ணங்களை, உணர்ச்சிகளை, ஆசைகவள மேல் எழா வண்ணம் அடக்கி வைக்கும் மனமுறையே அடக்குதல் என்பர் பிராய்டு- ஆசைகளை உண்டாக்குகின்ற எண்ணங்களை அடக்கி மேல் மனத்தில் இருந்து அடிமனத்திற்கு அனுப்புதல் இச்செயல் முறையின் செயல்பாடு ஆகும்.

துணை நூல் :

மு. இராசமாணிக்கம் - **உள்ளத்தின்விந்தைகள்**, தொல் காப்பியல் நூலகம், சிதம்பரம், 1964.

சந்திரமோகன் - **சிந்தனையாளர் ப்ராய்டு**, பிரேமா பிரசுரம், சென்னை – 600 024.

குறவஞ்சியில் பழக்க வழக்கங்கள்

ம.சா. அறிவுடைநம்பி
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தஞ்சை மராட்டிய மன்னர்கள் பல கலைகளையும் இலக்கியங்களையும் படைத்திருக்கின்றனர். பழைய மரபுகளைப் போற்றிப் பாதுகாத்ததுடன் பல புதிய மரபுகளை உருவாக்கி யும் போற்றியும் இருந்திருக்கின்றனர். இவர்கள் கி.பி. 1676 முதல் 1855 வரை தஞ்சையில் வாழ்ந்திருக்கின்றனர் தஞ்சை அரண்மனையில் குறவஞ்சி, விலாசம், நொண்டி, கீர்த்தனை போன்ற வகைகளில் பல நாடகங்கள் ஆசிரியர்களால் இயற்றப் பட்டு மேடையில் அரங்கேற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. சில நாகடங்கள் மன்னர் முன்னிலையில் நடிக்கப்பட்டிருக்கின்றன.

தஞ்சை மராட்டிய மன்னர்களின் ஆதரவில் சகசிராசன் குறவஞ்சி, தியாகேசர் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, சரபோசிராசன் குறவஞ்சி ஆகிய நான்கு குறவஞ்சி நாடகங்கள் மலர்ந்திருக்கின்றன இவற்றுள் சரபோசிராசன் குறவஞ்சி நூல் இதுவரை கிடைக்கவில்லை எஞ்சிய மூன்று குறவஞ்கி நூல் களில் இடம்பெற்றுள்ள அக்காலப் பழக்க வழக்கங்களை இக் கட்டுரை ஆய்வு செய்கிறது.

பொதுவாக மூன்று குறவஞ்கி நாடகங்களிலும் வருகின்ற குறத்தி குறி சொல்வதற்கு முன்னர் நாடு, நகர வளங்கள், பல்வேறு தலங்களின் பெருமை, தன் சாதி, தான் குறி சொல்லிப் பெற்ற விவரம் போன்றவைகளைக் கூறுகிறாள். அதேபோன்று தன்னிடம் குறி கேட்கின்றவர்களிடம் பூசை செய்வதற்கு இன்னின்ன பொருள்கள் வேண்டுமென்று கூறி அவற்றைப்

பெறுகின்றாள். அதன்பின்னர்த் தன்குல தெய்வத்தையும் பிற தய்வங்களையும் , வழிபடுகின்றாள். அதன் பின்னரே குறி சொல்லும் பழக்கத்தை உடையவளாகக் குறவஞ்சியில் காட்டப்படுகின்றது

'சகசிராசன் குறவஞ்சி' யில் வருகின்ற குறத்தி, தலைவியிடம் ''பவளத்தால் கால் நிறுத்திப் பரந்த பந்தலிட்டுக் கட்டித் தூய மலர் மாலை தூக்கிக் கமுகும் வாழையும் நட்டுக் கனத்த இளநீர் கட்டி, குமுகுமு வென்ன மணம் குலவி நாற்காதம் வீசத் தரை மெழுகி நல்ல சந்தனத்தில் கோலமிட்டுப் பெருகத் திருமெழுகினால் பிள்ளையார் பிடித்து வைத்து. அருகம் புல்லைத் தலையில் சூட்டி, பிள்ளையாரை வணங்கி, வாசனை கொண்ட மலர்களையும், சந்தனத்தையும் சார்த்தி, நூறு தேங்காய் உடைத்து, மந்திரம் சொல்லிப் பேருடனே தூப தீபம் பெருகக் கொடுத்து, நல்ல தாம்பூலம் நிவேதித்துச் சாலிகை இரண்டு வைத்துப் பூம்பட்டு நூலும் வைத்துப் பொன்னாபரணம் வைத்து மனதில் குறி நினைத்து வணங்கிக் கைகட்டி நின்று குறி கேட்க வேண்டும்'' என்கிறாள்.

'சரபேந்திர பூபாலக் குறவஞ்சி'க் குறத்தி குறி சொல்வதற்கு முன் வழிபடும் முறையைப் பின்வருமாறு கூறுகிறாள்.

சானத்தால் ஒரு முழ அளவிற்குச் சதுரமாக மெழுக வேண்டும்; விளக்கினை ஏற்ற வேண்டும்; விநாயகரை வைக்க வேண்டும்; சந்தனம். பூ, அறுகு ஆகியவற்றை அந்த விநாயகருக்கு அணிவிக்க வேண்டும்; கனி வகைகள், எள், நெற்பொரி, தேங்காய் ஆகியவற்றைப் படைத்து நிவேதனம் செயய வேண்டும்; வெற்றிலை, பாக்கு வைத்து ஒரு பொற்காசையும் வைத்தல் வேண்டும்; பின்னர்த் தூபம் காட்டி மந்திரத்தால் அர்ச்சனை செய்ய வேண்டும். இவ் வழிபாட்டை நடத்தி முடித்த பின்னர்க் குறத்திக்குத் தரவேண்டிய ''சிறு கையளவு கஞ்சி (பசி ஆறுவதற்கு), பிள்ளைக்கு ஒரு கரண்டி எண்ணெய், பிள்ளையார் முன் படைத்த அனைத்துப் பொருள்கள், தினை, மாவு, படி நிறையத் தானியம்'' ஆகியவற்றைக் கொடுத்த பின்னர்தான் குறி சொல்லும் வழக்கமுண்டு.

அக்காலத்திலிருந்த குறச்சாதியினரின் பழக்க வழக்கங்களாகச் சிலவற்றை மூன்று நூல்களும் எடுத்தியம்புகின்றன. 'சகசிராசன் குறவஞ்சி'யில் வருகின்ற குறத்தி மலைக்குறச் சாதியைச் சேர்ந்தவள். இவள் கூற்றாகவும், சிங்கன் கூற்றாகவும் இவர்களின் பழக்க வழக்கங்களை அறிய முடிகின்றன. குறத்தி கூற்றிலிருந்து அறியப்படுவன: ஆமை, அரவம், பூனை, முதலை, நண்டு, உளமன், கூகை, அழுங்கு, ஓங்கு, காகம் முதலியவற்றைத் தின்ன மாட்டார்கள்; ஆனைக் கொம்பால் தினை குத்தி அரிசியை அமுதாக்கித் தேனைக் கலந்து உண்கின்றனர்; வெள்ளி, பொன் முதலியவற்றைப் பரிசமாகவும் கொடுக்க மாட்டார்கள்; அதேநேரத்தில் அவற்றை அணியவும் மாட்டார்கள்; சங்குத் தாலியைக் கட்டுகின்றனர்; சங்கு ஓலை. சங்குப் பாசி, பூனைக் காச்சி, தாவடம் ஆகியவற்றை அணிகின்றனர்; குறத்தி பிள்ளை பெற்றால் குறவன் பெருங்காய மருந்தைக் குடிக்கிறான்; குறத்தி தேடி வந்திடக் குறவன் சாப்பிடுகிறான்; கொழுந்தன்மாருடன் கூடிக் குலவ இசைய மாட்டார்கள்.

சிங்கன் கூற்றிலிருந்து அறியப்படுவன: களரி சுற்றல், முறம் கட்டல், ஓட்டைப்பானை கட்டல், ஓட்டைச்சட்டி கட்டல், காது கட்டல் ஆகியவற்றைச் செய்கின்றனர். ஆமை, ஆந்தை, கொக்கு. மான், பூனை, பறந்து போன பறவை ஆகியவற்றை வேட்டையாடுகின்றனர்.

தியாகேசர் குறவஞ்சியில் வருகின்ற குறத்தி, தங்களின் பழக்க வழக்கங்களைத் தலைவியிடம் பின்வருமாறு கூறுகின்றாள். புவனக்குறவர் பூனை பொசிக்கையால் விடுகின்றனர்; முருகனுக்கு வள்ளியை மணமுடித்துக் கொடுக்கின்றனர்; மங்கிலியத்தைச் சங்கின் மணியில் பதிக்கின்றனர்; முருகன் செம்மலர்ப் பாதந்தனைத் துதிக்கின்றனர்; தோகை வள்ளியின் பெருமைகளைச் சொல்லி மதிக்கின்றனர்; செந்தேன், தினைமாவு ஆகியவற்றை நாளும் உண்டு களித்திருக்கின்றனர்; வில் கொண்டு ஆண் யானை எய்வதற்காகச் செடிகளின் அடியில் ஒளிந்திருக்கின்றனர். முத்துக்களை வாரித் தளர்ந்தவர்கட்கெல்லாம் அளிக்கின்றனர்;

சரபேந்திர பூபாலக் குறவஞ்சியில் குறவர்களின் வாழ்க்கை முறையினைப் பின்வருமாறு கூறுகின்றார் சிவக்கொழுந்து தேசிகர். மான், பன்றி, மரை போன்ற விலங்குகளைப் பிடித்துக் கொல்கின்றனர்; தந்தத்திற்காக யானையைப் பிடித்துக் கொல்கின்றனர்; தையம் வடிக்கின்றனர்; மாமனை மணக்கின்றனர்; கொழுந்தனொடு படுக்கின்றனர்; மாமியைத் தாயென மதிக்கின்றனர்; நீதியைப் போற்றுகின்றனர். மானம் மிக்க சாதியைச் சேர்ந்த இவர்கள் பறவைகளைப் பிடிக்கும் வழக்கம் உடையவர்கள். ஒருவர் மனத்தில் நினைக்கும் குறிகளைச் சொல்வதற்குப் பல தெய்வங்களை வணங்கி வேண்டி, இறுதியில் தம் குல தெய்வம் எக்கலாதேவியை இறைஞ்சிய பின்னரே 'மனக்குறி' சொல்லும் வழக்க முடையவர்களாக இருக்கின்றனர்.

தவிர, இக்குறவஞ்சியில் மகளிர் பந்தாடுதல், திருடர்களைச் சாலைவழி அழைத்துச் செல்லும்பொழுது கையிலும், காலிலும் தொழுக்கட்டை மாட்டிவிடுதல், 'கண் கட்டு வித்தை செய்தல், புரவலர் புலவர்களுக்கு முத்துமாலை, களிறு, சிவிகை, பரி போன்றவற்றைப் பரிசிலாகக் கொடுத்தல் "காமம் அடங்காதிருக்க மருந்து, உலகை நொடிப்பொழுதில் சென்று திரும்பி வருவதற்குக் குளிகை, பெண்களைக் கவரும் வாடைப்பொடி, பேய் பூதங்களை ஏவுதற்கு மந்திரம், காற்றைக் கமண்டலத்தில் அடைத்தல், அக்கினித்தம்பம் சலத்தம்பம் ஆகருடணம் வசியம், மூப்பை உடையோர் இளையோராக மூலிகை, ஒருவர் மனத்தில் எண்ணியதைத் தெரிந்து சொல்லும் வித்தை" ஆகிய இவற்றைப் பயன்படுத்தல் போன்ற பழக்க வழக்கங்களும் ஆங்காங்கே இடம் பெற்றிருக்கின்றன.

தியாகேசர் குறவஞ்சியில் இடம்பெறுகின்ற மகளிர் தங்களுடைய மனக்குறைகள் தீர்வதற்காகக் குறி கேட்கின்றனர். மேலும் இந்நூலில் கூறப்படுகின்ற குறத்தி, பெண்களின் வலக்கை பார்த்துக் குறி சொல்கிறாள்.

சரபேந்திர பூபாலக் குறவஞ்சியில் வருகின்ற குறத்தி தமிழ் மொழியுடன் தெலுங்கு, மராட்டி, கன்னடம், இந்துத்தானி;

ஆங்கிலம் ஆகிய மொழிகளை அறிந்தவளாக வருகின்றாள். பல மொழிகள் பேசுகின்ற மக்கள் தஞ்சையில் குடியிருப்பதையே இந் நிகழ்ச்சி காட்டுகிறது. மேலும் பல மொழி பேசுகின்ற மக்கள் வாழ்கின்ற நாடுகளில் குறத்தி சென்று வந்ததையும் நூலாசிரியர் பலமொழி அறிந்தவராக இருப்பதையும் இப்பகுதிகள் காட்டுகின்றன எனலாம்.

இவ்வாறு தஞ்சை மராட்டிய மன்னர்கள் வளர்த்த குறவஞ்சி நாடகங்களில் பழக்க வழக்கங்கள் சுட்டிக் கூறப்பட்டிருக்கின்றன.

வழக்காற்றில் 'நீர்'

அ. அறிவுநம்பி

புதுவைப் பல்கலைக் கழகம்

'நீரின்றி அமையாது உலகு' என்பது ஆன்றோர் வாக்கு. ஒருகாலத்தில் ஐம்பூதங்களாகக் கருதப்பெற்று வழிபடப் பெற்றவைகளுள் நீரும் ஒன்று.

நிலம், நீர், காற்று, வான், தீ என்ற ஐந்தையும் பெரும்பூதம் எனக் கொண்டு ஐம்பூதங்கள் என அழைத்தமையும் வணங்கப் பெற்றமையும் பழைய செய்திகள்.

ஆயினும் அச்சம் காரணமான வழிபாட்டுப் பொருளில் நீர் மிகுதியும் இடம்பெறவில்லை மழை வேண்டலும். புதுப்புனல் கண்டுழி அதற்கென மகிழ்ந்து புனலாடுதலும் காணப்பெறு சின்றதே அல்லாமல் மழைவழி அழிவுற்றதாக எச்செய்தியும் பண்டைய இலக்கியங்களில் காணப்பெறுமாறில்லை. இரண்டா வதாக இறைமைக்கு அடுத்த நிலையில் ஐம்பெரும்பூதங்களில் நீர் மட்டும் கருதப்பெற்றிருப்பதை வள்ளுவம் சுட்டும். பிற ஒதுக்கப்பெற்றதற்கான காரணங்கள் கண்டறியப்பெற வேண்டி யவை. அழித்தல் மிகுதியும் இன்றி ஆக்கலுக்குப் பயன் தருவது நீரென்பதாலும் இன்றியமையாமை கருதியும் இவ்வைப்பு முறை இடம் பெற்றிருக்க வாய்ப்புண்டு. அதனாலேதான் மழையின்றிப் போகும்போது.. இறையைச் சாந்தி செய்தல் வேண்டும். என்ற மனப்போக்கு சிலப்பதிகாரக்காலத்திலேயிருந்து தமிழரிடையே காணப்பெறுகின்றது. எஞ்சிய நான்கு பெரும்பூதங்களை யொட்டிய இத்தகைய சாந்திசெய்விக்கும் போக்குகள் மிகுதியும் காணப்பெறாமையும் உடன்வைத்து எண்ணத் தகுந்தது.

வழிபாட்டு நிலையில் நீர்:

கல்வி உட்பட ஏனையவற்றிற்கு ஓர் இறையின் பெயர் கூறப்பெற்று வணங்கப்பெறுவதைப் போன்று நீருக்கும் சில தெய்வங்கள் உண்டாயின. ஆயினும் வழிபாட்டைப் பொறுத்த வரை நீரைப்பற்றிய பார்வைகள் இரண்டுவிதங்களாக அமைந் துள்ளன. முதலாவது நீரை தெய்வ அம்சங்களுள் ஒன்று என மட்டும் கருதும் மனநிலை. வருணன், இந்திரன் இவர்களை மழைத்தொடர்பு தெய்வங்களாக்கியவர்கள் தொடக்கத்தில் பெருந்தெய்வங்களை இவ்வாறு நீருடன் இணைக்க முன்வர வில்லை. வருணனைப் பற்றியும் இந்திர விழா பற்றியும் தமிழ இலக்கண இலக்கியங்கள் பேசுகின்றன. ஆயின் மனமகிழ்வு கருதி மட்டுமே இச்சிறு தெய்வங்கள் வணங்கப் பெற்றனவே யன்றி அச்சங்கலந்த வழிபாட்டுநிலை காணப்பெறவில்லை.

இரண்டாவதாகப் பிற்காலத்தில் நாட்டுப்புறமக்களிடையே நீரே தெய்வமாக மதிக்கப்பெறும் நிலை உருவாயிற்று. மழை வேண்டல், சாந்தி செய்தல், விழாக்களில் நீருக்கு முக்கியத்துவம் தருதல் என வழிபாட்டு முறைகள் மாற்றங்கண்டன. இன்றைக்கு இவ்விரண்டு கூறுகளும் தமிழர் வழக்காற்றில் கலந்துள்ளன.

பெருந்தெய்வங்களின் பல 'அம்சங்களில்' நீருக்கும் பங்கு தரப் பெறுவது புராண, இதிகாசக் கதைகளின் காரணமாகவே. நீர் வழிபாட்டில் கங்கை வழிபாடு அல்லது கங்காதேவி வழி பாடு தலையாயது. கங்கை நீரைக் கொணர பகீரதன் தவ மியற்றியதாகவும் அதனால் 'பகீரதப் பிரயத்தனம்' என்ற சொற்றொடர் வழக்கில் உருவானதாகவும் புராணங்கள் புகல் கின்றன. சிவனுடைய தலையிலிருந்து கங்காதேவி நீராக அருள் தருவதாகக் கூறப்பெறும் மற்றொரு செய்தியும் கவனத்திற் குரியது. இதனால் புனிதம் நிறைந்த நீர் 'தீர்த்தம்' என்றானது இந்நீர் நிறைந்துள்ள இடங்களுக்குப் பயணித்தல் 'தீர்த்த யாத்திரை' என்றழைக்கப்பெறுகிறது. இறையினால் சிறப்புற்ற நூல்கள் தலச்சிறப்பு வாய்ந்தவை, இறையின் சிறப்பும, தீர்த்தச் சிறப்பும் பிற சிறப்புகள். இதையே 'தலம், மூர்த்தி, தீர்த்தம்' என்ற சொல்லடுக்கால் உணர்த்துவர்.

உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், இவற்றின் மூலம் நீருக்கு முதன்மைதர விழைந்த மனிதன் அதற்கேற்ப விழா எடுக்கவும் அதற்குத் தத்துவார்த்தமாக விளக்கம் தரவும் முனைந்தான். 'ஆறு, குளம், கடல் முதலிய இடங்களுக்குச் சிவபெருமான் திருவுலாக் கொண்டு எழுந்தருளுவது தீர்த்தவாரி விழாவாகும். இவ்விழாவின் நோக்கம், அங்கேயுள்ள ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் குறிப்பே ஆகும்,'' என விழாவையும் ''அட்ட மூர்த்திகளுள் பகவான் என்னும் திருப்பெயருடைய சிவபெருமானது வல்லமை, நீர்வடிவாக அமைந்து, தன்னை யடைந்து தரிசித்து நீராடும் அடியார்களதது பிறவியாகிய வெப்பத்தை நீக்கித் தன்னிடத்தில் அமிழ்ந்தச் செய்து, தாத்து வாதீதராய் விளங்கும் சிவத்துடன் சேர்க்கும்'' ''(பக் 100 திருக்கோயில்களும் வழிபாட்டு முறைகளும் - செந்துறைமுத்து) என அதன் விளக்கத்தையும் குறிப்பர் ''உடம்பின் அமைப்புப்படி, குடத்தில் தேங்காய் தலையாகவும், தர்ப்பை முடிகள் தலைமயிராகவும், மாவிலைகள் அவயவங்களாகவும், வெள்ளை நூல் நரம்புகளாகவும், கலர் நூல் எலும்புகளாகவும் தசைகளாகவும் நிரப்புகின்ற நன்னீர் ரத்தமாகவும் பாவிக்கின்ற தத்துவப்படி'' சங்காபிடேக விழா எடுப்பதையும் உடன்வைத்து எண்ணல் வேண்டும். இக்காரணங்களால் பெருந் தெய்வக் கோவில்களிலும், புனித நீர்த்தலங்களிலும் நீர் போற்றப்பெறுகிறது. ''திரிவேணிக்கு வேணு (மூங்கில்) தானம் செய்தால் புண்ணியமாம். ஒரு சிறிய முறத்தில் சீப்பு, கண்ணாடி, குங்குமச்சிமிழ், மஞ்சள்பொடி, அரிசி வெற்றிலைபாக்கு, பழம், ரவிக்கைத் துணி, தட்சணை இவற்றை வைத்து மேலே ஒரு சிறிய முறத்தால் மூடி தானம் செய்யும்'' போக்கு வடபுறங்களில் மட்டுமின்றி இராமேசுவரம் போன்ற கடலாடுமிடங்களிலும் நடைமுறையில் இன்று காணப்பெறுகிறது (காசியாத்திரை - பரணீதரன் - ப.18).

இவ்வாறு பெருந்தெய்வத்துடன் தொடர்புபடுத்தப்பெற்ற நிலையில் நீர் மதிக்கப் பெறுவது ஒருபுறம் நிகழ, தமிழகச் சிற்றூர்களில் வேறொரு வழியில் நீரை வணங்கத் தலைப்பட்டனர். மழையின்மையால் வேளாண்மை பாதிக்கும்

என்பதால் மழையே இறையென நம்புவதும் மாரி என்ற பெய ரால் மழைத் தெய்வமாக மாரியம்மனை வணங்குவதும் நடை முறையாயின மழைவளம் குறைகையில் மழைக்குரிய மாரியம் மனைக் குளிர்விகக ஆடவர்கள் கூத்தமைப்பதும், பெண்டிர் கும்மியடித்துப் பொங்கலிட்டு வேண்டுவதும் பலியிடுவதும் இன்றைய நடப்பியல். இப்போக்கு இலங்கையிலும் காணப் பெறுகிறது மாரியம்மனைக் குளிர்விக்கும் அப்பாடல்கள் குளுத்தி பாடல்கள்' (குளிர்ச்சி) என்று இன்றளவும் பாடப் பெறுகின்றன. நீரைத் தெய்வமாகக் கருதும் போக்கு இவர் களுடைய பிற வழிபாட்டு நிலைகளிலும் உணர்த்தப்படும். திரௌபதையம்மன் கோவில்கள் வடமாவட்டங்களில், மிகுதி திரௌபதை இருக்குமிடத்தில் மழையிருத்தல் வேண்டும். இதன் வழி திரௌபதை விராட தேசத்தில் இருந்ததை உணரும் கதை யமைப்பும் கருதத் தகும். கரகம் என்பது நீரைக் கடவுளாகக் கருதிக் கலசத்தில் ஏந்துதலாகும் விரதம் பூண்டவர் மட்டுமே கலசந்தூக்கவியலும் சில கிராமங்களில் கலசத்திலுள்ள நீரே அம்மனாகக் கருதப்பெறுவதும், கலசத்தை அம்மன் முகமாக்கி வரைதலும் உண்டு. கரகஞ் சுமந்துவருதல் அம்மன் வரவாகக் காணப்பெறுவதால் பாதுகாவலர்களாக வேரிருவர் கத்தியுடன் அருகில் வருதலையும் காணமுடியும். இக்கரகம் 'சக்திக்கரகம்' என அழைக்கப் பெறுதலையும் கருவறைவரை இக்கரகம் செல்ல முடியும் என்பதையும் காணுங்கால் இறையாகவே நீர் கருதப் பெற்றமையை உணர முடியும்.

பலரும் கூடிநின்று புனலாடும்போது சில இளம்பெண்கள் பொன்னால் செய்யப்பெற்ற சங்கு, நண்டு, இறால், வலிய வாளைமீன் ஆகியவற்றை வையையாகிய நீரினுள் காணிக்கை யாக்கி இறையைத் தொழுதனர் என்பதை நினைவுகூரும் தெ.பொ.மீ, ஆற்றினைத் தாயாக வழிபடும் பரிபாடலைச் சுட்டுவார்: அப்பாடலின் சிலவரிகளாக

''செங்குந்தமச் செழுஞ்சேறு

பங்கஞ் செயயகில் பல பளிதம்

மறுகு படவறை புரையறை குழலவியின்

அவியமர் அழலென்ன அறைக்குநர்,
நத்தொடு நள்ளி நடையிறவு வயவாளை
வித்திய லையில் விளைக பொலிகென்பார்''

என்ற வரிகள் அமையும் பரிபாடல் சுட்டும் அமபா ஆடல என்பதும் இவண் குறித்தற்குரித்து. பாவை நோன்புடன் மேற் குறித்த வையையாடல் உடன்வைத்து எண்ணத்தகுவது. உதந் நீராடலே மார்கழி நீராட்டாக மாறிற்றென்பது தெ.பொ.மீயின் கருத்தாம்.

நீரே வழிபடுபொருளாயினமையைப் பிறிதொரு சான்றும் காட்டும். காரைக்குடி அருகிலுள்ள காட்டம்மன் கோவிலில் கலயமொன்றில் நீர் நிரப்பப்பெற்று குறிப்பிட்ட நாட்கள் வைக்கப்பெறும். அதில் நீர் வற்றுமாயின் அவ்வாண்டு மழை குறைவு என்றும் நிறைந்தே காணப்படின் அவ்வாண்டு நல்ல மழை பெய்யும் என்னும் கருத்தும் நிலவுகிறது. நீர்த்தெய்வம் அவ்வாண்டிற்குரிய மழைபற்றிய செய்தியை இவ்வழியில் கூறுவதாக மக்கள் நம்புவதை உணர முடிகிறது. இதனை யொட்டிய நம்பிக்கையொன்றும் இவண் சுட்டப்பெற வேண்டியது தேவையாகிறது. ''நடுஜாமத்தில் கிணத்திலிருந்து நீர் இறைக்கக் கூடாது. கங்கை தூங்குவதாகவும் அவளை அந் நேரத்தில் எழுப்புவது பாவம் என்றும் கருதப்படுகிறது'' என்பதே அது.

இவ்வாறு நாட்டுப்புற, நகர்ப்புற மக்களிடையே சிறு தெய்வங்கள், பெருந்தெய்வங்களுடன் நீரானது இணைக்கப் பெற்று போற்றும் மரபு தொடர்ந்து கொண்டுள்ளது. அதே வேளையில் வழிபாட்டு நிலையில் அல்லாமல் சடங்கு நிலைகளில் நீர் பயன்படுத்தப்பெறுகிறது. இவைகளுக்குச் சில நம்பிக்கைகளே அடித்தளமாகும். அதனால் அதற்கேற்றுச் சடங்குச் செயற் பாடுகள் சமூகத்தில் நிகழ்கின்றன.

பெருந்தெய்வக் கோயில்களிலும், சிற்றூர் புறங்களிலும் நீரைக் கொண்டு சில சடங்குகள் நிகழ, அதன் தொடர்ச்சியாய் இல்லங்களிலும் பிறவிடங்களிலும் சடங்குகள் சில நிகழ்வது

இன்றைக்கு வழக்கமாக உள்ளது. நீரைத் தெய்வமாகப் பிரித்து வணங்கும் பார்வையிலிருந்து நீர்வழியில் தெய்வத்தை வணங்கும் நிலை இஃது எனலாம் 'பதினெட்டாம் பெருக்கு' 'தை நீராடல்' போன்றவை நீர்வழி இறைவழிபடல் எனக் கருதுமாறு அமைந் துள்ள குடமுழுக்குப் பெருவிழா என்பது இறைவனின் மாற்றுரு வாகக் கருதப்பெறும் கோபுரகலசத்தை நீராட்டல் ஆகும். இது பெருஞ்சாந்தி என்றும் கூறப்படும்

> "கபாலீச்சரம் அமர்ந்தான் பெருஞ்சாந்தி
> காணாதே போதியோ பூம்பாவாய்"

என்ற திருஞான சம்பந்த சுவாமிகள் திருமொழியிலிருந்து இதனை அறியலாம். கும்பாபிஷேகம் என்பது கும்பத்திலுள்ள நீரினால் அபிஷேகித்தல் என்று பொருள் படும் (ப.66 திருக்கோயில் களும் வழிபாட்டு முறைகளும்-செந்துறைமுத்து). திருவிழா முடிவில் சுவாமிக்கு நடைபெறும் நீராட்டுற்சவமே தீர்த்தவாரி என்பது தமிழ்ப் பேரகராதி புகலும் செய்தி.

இதைப்போன்று சிறு தெய்வங்கள் குடிகொண்ட ஆலயங் களில் 'சலந்திரட்டல்' என்ற பெயரின்கீழ் சடங்கொன்று நிகழ்ந்து வருகிறது. விரதம் கொண்டிருக்கும் குறிப்பிட்ட ஆள் ஏனையோருடன் மேளதாளத்துடன் சென்று நீர்நிலையிலிருந்து கலசமொன்றில் நீர்சேகரித்து வருதலே இச்சடங்கு. இந்த முறை யில் சேகரித்த நீர்மட்டுமே இறையுருமீது அபிஷேகப் பொருளாக ஊற்றப்பெறும். விழாக்கால நடப்பியல் இது. கோவில் வழிபாட்டு முறைகளில் இவ்வாறு நீர்கொண்டு வழி படுஞ் சடங்கு வழிபடும் அனைத்திடங்களிலும் வேறு முறையில் கைபாளப்பெற்றது. இல்லத்தில் நிகழ்வுறும் பூசைகளின் போது நீர்கொண்டு படையல் பொருட்களையும் இறையுருக்களையும் வணங்குதலைக் காணமுடிகிறது. இறையின்மீது மனம் வைத்து செய்யபெரும் தாரைவார்த்தல் ஆரத்தி சுற்றல் போன்றவை கணக்கிலெடுக்கப்பெற வேண்டும். ஆரத்தி என்பதை நீராஞ் சனம் என்று பேரகராதி குறிப்பது குறிக்கத் தகுந்தது.

சிறு தெய்வ வழிபாடு:
தோற்ற வரலாறு

எஸ். ஆரோக்கியநாதன்,
புதுவைப் பல்கலைக் கழகம்.

கிராமப் புறங்களில் சிறுதெய்வ வழிபாடு அதிகமாக வழக்கில் இருந்து வருகிறது. மக்களிடையே நிகழும் பக்தியுணர்வும் நம்பிக்கைகளுமே இதற்கு அடிப்படையாக அமைகின்றன. கிராமங்களில் திரௌபதியம்மன், மாரியம்மன் போன்ற கோவில்கள் முறையாகக் கட்டப்பட்டு மூல விக்கிரகங்கள் நிர்மாணிக்கப்பட்டு தெய்வ வழிபாடு நடைபெறுவதுண்டு. அதுவன்றி சில சமயங்களில் வேப்பத்தம்மாள், புத்தாம்பிகை, தீப்பாய்ந்தம்மன் இருளாயி பேச்சி, முத்தாளம்மன் போன்ற வட்டாரச் சிறு தெய்வங்களின் தோற்றத்தையும் அவற்றின் வழிபாட்டு முறை வளர்ச்சிகளையும் நாம் ஆராய்ந்தால் சிறு தெய்வ தோற்றத்திற்குரிய கோட்பாட்டளவில் அமைந்த பொதுக் கூறுகளை நாம் காண முடியும். நாட்டுப்புறவியல் துறையில் மிக இன்றியமையாதனவாக விளங்கும் இப்பொதுமைக் கூறுகளை ஆராய முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கிராமப் புறங்களில் காணப்படுகிற சிறு தெய்வங்களில் ஆண் தெய்வங்களும் பெண் தெய்வங்களும் உள்ளன. காத்தவராயன், முனியாண்டி. திரௌபதியம்மன், மாரியம்மன் போன்று எல்லாப் பகுதிகளிலும் காணப்படுகின்ற சிறு தெய்வங்கள் சில உண்டு. இவை தவிர வட்டார ரீதியாக அந்தந்த பகுதி மக்களிடையே மட்டும் பெரும் புழக்கத்திலிருக்கிற (இருளாயி, பேச்சி, புத்தாம்பிகை) வட்டாரச் சிறு தெய்வங்களும் உண்டு. வட்டாரச் சிறு தெய்வங்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்து எல்லாப் பகுதிகளுக்கும் பரவுகிற வரலாற்றினை நாம்

அறிவோம். பின்னர் அச்சிறு தெய்வங்கள் காலப்போக்கில் வளர்ந்து பெருந்தெய்வ நிலையை அடைவதும் உண்டு. இந்தப் பரிணாம வளர்ச்சியின் தொடக்க நிலையாகவும் அடிப்படையாகவும் வட்டார சிறு தெய்வத்தின் தோற்றமும் வழிபாட்டு வளர்ச்சியும் அமைந்துள்ளன. இவ் வட்டார சிறு தெய்வத்தின் தோற்றத்திற்கும் படிப்படியாக அது வளர்ந்து நிலைப்புத் தன்மை (Stability) பெறுவதற்கு வரலாறு (Historicity), வழக்காறு (Vitality), வரையறை (Regularity), அமைப்பாக்கம் Officialization) எனும் நான்கு இன்றியமையாக் கூறுகள் தேவைப்படுகின்றன.

வரலாறு:

தெய்வச்சிலை ஒன்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருப்பதாகக் கனவில் தோன்ற, அதனடிப்படையில் சிலையைக் கண்டெடுத்து கோயில் கட்டி நிர்மாணிப்பது ஒருவகை தோற்ற நிலை. சிறு தெய்வங்கள் பெரும்பாலும் கதை வடிவில் அமைகின்றன அதனால் சிலை கண்டுபிடிப்பு நிகழ்ச்சிகள் இவைகளின் தோற்ற வாயில்களாக அமையஇயலாது. மேலும் இவைகளின் உருவங்கள், வழிபாடு தோன்றிய சில காலத்திற்குப் பின்னரே வடிவமைக்கப்படுவதால் "சிலை கண்டுபிடிப்பு" நிகழ்ச்சிகள் அரிதாகவே இடம்பெறுகின்றன. சில சமயங்களில் சிறு தெய்வங்கள் கிராமங்களில் யாருடைய கனவிலாவது தோன்றி தனக்குக் கோயில் எழுப்பி வழிபாடு செய்யச் சொல்கிற நிகழ்ச்சிகளையே நாம் பெரும்பாலும் கேள்விப்படுகிறோம். இத்தகைய கனவுக்குள்ளானவர்கள் பெரும்பாலும் தெய்வாம்சம் பெற்றவர்களாகவும் அருள்வாக்கு கூறுபவர்களாகவும் சமூகத்தின் நன்மதிப்புககுரியவர்களாகவும் அமைந்திருப்பார்கள். சில சமயங்களில் குறிப்பிட்ட சில பொருட்களோ, அல்லது சில இடங்களோ மீவியல் தன்மைகளைப் பெற்றுச் சிறு தெய்வங்களின் தோற்றத்திற்கு வாயில்களாக அமைந்து விடுவதுண்டு. திடீரென்று ஒரு பாறையிலிருந்து திருநீறு வெளிப்படுவதும், நீர் கசிவதும் நிகழலாம். மற்றும் ஏதாவதொரு மரம், செடி, கொடியிலிருந்து அல்லது அதன் அருகிலிருந்து நீர் பால் போன்ற திரவப் பொருட்கள் வழிந்தோடுவதும் அல்லது பூ, திருநீறு

முதலியன வெளிப்படுதலும் போன்ற அதிசய நிகழ்ச்சிகள் நடப்பதுண்டு. மேலும் சிற்சில இடங்களில் ஏதாவதொரு இடத்தில் அல்லது பொருளின் மீது தெய்வ உருவமோ அல்லது சூலம், உடுக்கை போன்ற வடிவங்களோ தென்படுவதுண்டு. இத்தகைய மீவியல் நிகழ்வுகளால் அப்பொருள் அல்லது அவ் விடம் தெய்வாம்சம் பொருந்தியதாகக் கருதப்பட்டு மக்களின் வழிபாட்டிற்கு உரியதாக மாறிவிடுகிறது. புதுச்சேரி முத்தியாலுப் பேட்டைப் பகுதியில் அரச மரத்தின் கிளை ஒன்றில் யானை முக வடிவமொன்று தென்பட்டதால் அம்மரக் கிளையினை ''மூல விக்கிரமாகக்'' கொண்டு விநாயகர் வழிபாடு இன்றும் தொடர்ந்து வருகிறது. இது போன்று புதுவைக் கடலில் மீன் வலையில் சிக்கிய அம்மன் சிலையை செங்கழுநீர் அம்மன் என்று பெயரிட்டு கோவில் கட்டி வழிபாடு நடத்துவதை நாம் காணலாம். இவ்வாறு சிறு தெய்வங்களின் தோற்றம் இயற்கை இகழ்ந்த மீவியல் தொடர்புகளுடன் அமைந்த வரலாற்றுப் பின்னணிகளைக் கொண்டதாக விளங்குகின்றன. புராண இதிகாசத் தொடர்புகள் சில பெறு தெய்வ கோவிலின் தோற்றத் திற்கு வாயிலாக அமைவது போல் அண்மைக்காலத் தோற்றத்தைக் கொண்ட சிறு தெய்வங்களுக்கு மீவியல் தொடர்புகள் அரணாக அமைகிறது என்பதில் ஐயமில்லை.

வழக்காறு:

மீவியல் நிகழ்வுகளுடன் தோற்றம் அடைந்த பின்னர் மக்கள் அவ்விடத்தையோ அல்லது அப்பொருளையோ சுத்தம் செய்து மஞ்சள் குங்குமமிட்டு அதற்கு மஞ்சள் அல்லது சிவப்புத் துணி ஒன்றினைச் சுற்றி விடுவார்கள் சில சமயம் சூலம் முதலியவற்றை முன்னால் சொருகி வைப்பதும் மூங்கில் குச்சி யில் மஞ்சள் துணியைச் சுற்றி நட்டு வைப்பதும் உண்டு. இத் தகைய செயலினால் அப்பொருள்களுக்கு அல்லது அவ்விடத்திற்கு தெய்வாம்சக் கூறுகள் ஏற்படுகிறது. இதற்குப் பின்னர் அது சிறு தெய்வமாக வழிபாட்டிற்குரிய ஒன்றாக அமைந்துவிடுகிறது. பெரும்பாலும் கிராமப் புறங்களில் சக்தியின் வடிவாக அமைகிற பெண் தெய்வங்களே வட்டாரத் தெய்வங்களாக அதிகம் தோன்றுகின்றன என்பதில் ஐயமில்லை. இத்தகைய வட்டாரச்

சிறு தெய்வங்களுக்கு சக்தியின் வீர வடிவாகக் கருதப்படும் திரௌபதியம்மன், மாரியம்மன் உருவ அமைப்பினை அடிப் படையாகக்கொண்டு சிற்சில மாறுதல்களுடன் வடிவமைக்கப் படுகின்றன.

பின்னர் இச்சிறு தெய்வங்களுக்குச் சில சிறப்புச் சக்திகள் இருப்பதாகவும் கூறப்படுவதுண்டு குறிப்பிட்ட இடத்தில் படுத்தால் நோய் நீங்கும் என்பதும், புற்று மண்ணை உடலில் தேய்த்துக் கொண்டால் தோல் வியாதிகள் குணமாகும் என்பதும் இத்தகைய தெய்வச் சக்திகளுக்குச் சான்றுகளாகும். வட்டாரத் தெய்வங்களுக்கான சிறப்புச் சக்திகளைக் கூறிய பின்னர் அத்தெய்வப் பலன்களைப் பெறவேண்டி மக்கள்கூட்டம் வழிபடத் தொடங்குகின்றன.

வரையறை:

சிறு தெய்வ வழிபாடு தொடர்ந்து நடைபெறத் தொடங்கும் கால்க் கட்டத்தில் வழிபாட்டு முறைகளும். சடங்குகளும் அதற் குரிய தனிச் சிறப்புகளுடன் வரையறுக்கப்படுகின்றன கோவிலில் உண்டியல் ஒன்றிருப்பதும், பூசாரிகள் அமைவதும் வழிபாட்டு வேலைகள், வழிபாட்டு முறைகள் இவைகளை நெறிப்படுத்துவ தும் நிர்ணயிக்கப்படுவதும் இந்த வரையறையில் அடங்கும். வட்டாரச் சிறு தெய்வத்திற்கு ஏதாவது ஒரு நாளை வழி பாட்டிற்குரிய சிறப்பு நாளாக வரித்துக்கொள்வார்கள். அப்படிக் குறிப்பிட்ட நாளிலும் ஏதாவதொரு குறிப்பிட்ட நேரமே மிகவும் உகந்ததாகக் கருதப்படும் அருள்வாக்குக் கூறுதல், மந்திரித்தல் போன்ற சிறப்பு அம்சங்கள் இந்த விசேஷ நேரத்தில்தான் மேற்கொள்ளப்படுகின்றன. அது போன்றே சடங்கு, வழிபாட்டு முறைகளிலும் அவற்றிற்கென ஒரு தனித்தன்மையினை ஏற்படுத்திக்கொள்கின்றனர். சில வட்டார சிறு தெய்வங்களுக்கு பெண்கள் வளையல்களை சிறப்புக் காணிக்கையாக வழங்குவதும், இன்னும் சில பகுதி வட்டாரத் தெய்வங்களுக்கு பக்தர்கள் சுருட்டுகளை சிறப்புக் காணிக்கையாக வழங்குவதையும் நாம் அறிவோம். புத்தாம்பிகை கோவிலில் அருள்வாக்குக் கூறுபவர் பாம்புபோல் வளைந்தாடு

வதையும், பராசக்தி கோவிலில் அருள்வாக்குக் கூறுபவர் பெண் போல ஆடுவதையும் வட்டாரக் கூறுகளுக்குரிய சான்றுகளாகக் கருதலாம். சிறு தெய்வவழிபாட்டின் விளைவாக சில அதிசயத் தக்க பயன்கள் ஏற்பட்டதற்கு அவ்வட்டாரங்களில் சில கதைநிகழ்வுகள் கூறப்படுவதுண்டு. அத்துடன் தெய்வ அருளைப் பெற்று தன் வேண்டுதலை நிறைவேற்றாது தவறவிட்டதற்கும் இவ்வட்டார தெய்வங்களை அலட்சியப்படுத்தியதற்கும் நிகழ்ந்த தீவினைகளையும் அப்பகுதி மக்கள் கதைகளாகக் கூறும் வழக்கம் காணப்படும். இது தெய்வ வழிபாட்டு முறைகளை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்கான ஒரு முயற்சி என்பதில் சிறிதும் ஐயமில்லை. வழிபாட்டு முறைகளும் சடங்குகளும் வரையறுக்கப்பட்ட பின்பு அவைகளை தவறாது பின்பற்றப்பட வேண்டும் என்பதற்கும் பின்பற்றப்படாவிட்டால் தீவினைகள் விளையும் என்பதற்கும் சமூகவியல் கதைகளைக் கூறி வழிபாட்டு முறைகள் சடங்குகள் ஆகியவற்றினை காலப்போக்கில் நிலைப்புறச் செய்துவிடுகின்றனர்.

அமைப்பாக்கம் (officialization)

சிறு தெய்வத் தோற்றம் நிகழ்ந்து வழிபாட்டு முறைகள் வரையறுக்கப்பட்ட பின்னர் அவைகள் நிலைப்படைந்து நிற்க; இதற்கு புற அமைப்புகளாக உள்ள கோவில் கட்டுதல், ஆண்டு விழா எடுத்தல் போன்ற செயல்கள் வடிவமைக்கப்படுகின்றன. கோயில் நிர்வாகக் குழு (கோயில் ஆண்டு விழாவுக்கான குழு) போன்ற கோயில் செயல்பாட்டிற்கான அமைப்புகள் உருவாகின்றன. ஆண்டுதோறும் கோயில் விழா கொண்டாடுகிற நாளினைத் தீர்மானிப்பதிலிருந்து கோயில் அர்ச்சகரை நியமிப்பது, கோயில் வரவு செலவு கணக்குகளைச் சரிபார்ப்பது வரை ஊர்ப்பெரியவர்கள் சிலர் முன்னிருந்து சில அமைப்புகளாக செயல்பட்டு வரத் தொடங்குகின்றனர். நிரந்தரமான கட்டிடத்திற்குள் சிறு தெய்வம் நிர்மாணிக்கப்படும் பொழுது சில பெருந் தெய்வக் கோவில்களில் காணும் கூறுகளும் இடம் பெறுவதுண்டு, வட்டாரச் சிறு தெய்வக் கோயில்களில் கொடிக் கம்பம், பக்கவாட்டில் சந்நிதிகள் முதலியன ஏற்படுத்தப்பட்டு

விநாயகர் போன்ற தெய்வங்கள் நிர்மானிக்கப்படுவதும் உண்டு. கோயில் சுற்றுப்புறச் சுவர்களில் கலையம்சத்திற்காக நந்தி உருவம் அமைப்பதும் உண்டு. இவ்வாறு ஓர் அதீத நிகழ்வால் தோன்றி காலப்போக்கில் வளர்ந்து வழிபாட்டு முறைகளையும், சடங்குகளையும் ஏற்று சிறு தெய்வ வழிபாடு நிலைப்படையும் பரிணாம வளர்ச்சியில் வரலாறு, வழக்காறு, வரையறை, அமைப்பாக்கம் எனும் நான்கு பெரும் கூறுகள் இன்றியமை யாததாக இருப்பதை நாம் காணலாம். இந்நான்கு கூறுகளும் ஏறக்குறைய வரலாறு, வழக்காறு, வரையறை, அமைப் பாக்கம் எனும் நிரலில்தான் பெரும்பாலும் சிறு தெய்வத் தோற்றத்தின் பரிணாம வளர்ச்சியில் இடம் பெறுகின்றன. இக்கூறுகள் ஒன்றின் முடிவில் ஒன்றாக தொடர்கிறது. என்பதைவிட ஒன்றின் முதன்மை நிகழ்ந்த பின்னரே மற்றதின் முதன்மை ஆதிக்கம் பெறுகிறது என்று கூறலாம். அதாவது ஒரு கூறின் முடிவடையாத நிலையில் மறு கூறின் துவக்கம் காணப்படுதலும், ஒரு கூறு எங்கு முடிகிறது. மறு கூறு எங்கு தொடங்குகிறது எனப் பிரித்தறியாத நிலையில் வானவில்லின் வண்ணங்கள் போல் இயைந்து வரிசையாக இருப்பது போன்று இக்கூறுகள் நான்கும் நிரலாக அமைந்து சிறு தெய்வத் தோற்றத்தின் பரிணாம வளர்ச்சியில் பங்கேற்கின்றன.

'இலக்கிய மொழிபெயர்ப்பியல்' சில சிக்கல்களும் தீர்வுகளும்

எஸ். ஆவுடையப்பன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

முன்னுரை :

'மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்'[1] என்ற தொல்காப்பியரின் நூற்பா வரியினைக் கண்ணுறும்போது, 'மொழி பெயர்ப்பியல்' என்னும் துறை தமிழிலக்கிய உலகில் பண்டுப் பழமையானது என்பதை அறியலாம் எனினும், இலக்கிய உலகில், மொழிபெயர்ப்புப் பற்றிய கோட்பாடுகள் இன்னும் சரிவர வடிவமைக்கப்படாத தன்மையனவாகவே உள்ளன.. அதிலும், 'இலக்கிய மொழிபெயர்ப்பியல்' பற்றிய கொள்கைகள் இன்னும் உருவாக்கப்படாமலும் வலுவேற்றப்படாமலும் ஊசலாட்ட நிலையில் உள்ளன மனிதருக்கு மனிதர் மாறுபடும் இலக்கிய அனுபவங்களும், இலக்கியம் பற்றிய மாறுபாடான கொள்கைப் பாடுகளுமே இதற்குக் காரணம் எனலாம். இக்கட்டுரை, இலக்கிய மொழிபெயர்ப்பியல் பற்றிய சில சிக்கல்களையும் அதற்கான தீர்வுகளையும் ஒருவாறு தொட்டுக்காட்டுவதாக அமைகிறது.

சிக்கல்கள் :

ஒரு நாட்டின் நாகரிகப் பண்பாட்டு மரபுகளைச் சுமந்து வரும் வாகனமாக இலக்கிய மொழிபெயர்ப்பியல் திகழுகிறது இலக்கிய மொழிபெயர்ப்பியலில் உள்ள சிக்கல்களில்கீழ்க்காணும் ஐந்து சிக்கல்களை ஆராய்ந்துஅவற்றிற்கான தீர்வுகளை இக்கட்டுரை கூற முனைகிறது:

1. இலக்கிய மொழிபெயர்ப்பியல் என்றால் என்ன?

2. இலக்கிய மொழிபெயர்ப்பியலின் நோக்கம் யாது?

3. கடந்தகாலத்தில் உள்ள மூலமொழியின் Source language ஓரிலக்கியத்தைத் தற்கால இலக்குமொழியில் (Target language) மொழிபெயர்க்கும்போது கையாளவேண்டிய மொழிநடை (language Style)

4. ஒருமொழியிலுள்ள கடந்த கால இலக்கியங்களைத் தற்கால மொழிநடையில் எளிமை கருதிப் பெயர்த்துத் தருதல் வரவேற்கக் கூடியதா?

5. மொழிபெயர்ப்பில் மறுதலையாக்கம் (reversibility) என்பது கைகூடும் ஒன்றா?

சிக்கல்களும் தீர்வுகளும் :

1. இலக்கிய மொழிபெயர்ப்பியல் :

இலக்கியம் என்பது என்ன? அதன்நோக்கம் என்பது யாது? எனும் இவ்விரு வினாக்களும் முடிந்தமுடிபான விடைகளுக்காய் இன்னும் காத்துக் கொண்டிருப்பவை ,இதுதான் இலக்கியம் என்றோ, இதுதான் இலக்கியத்தின் நோக்கம் என்றோ முடிந்த முடிபாக, எல்லோருக்கும் ஒப்பமுடியும் கருத்தாக எந்த இலக்கியவாதியாலும் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. இன்னும் முடிவுபெறாச் சிக்கல்களாக இவை தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

எப்படி இலக்கியம் என்பது பிடிபடாத பொருளோ அது போல 'இலக்கிய மொழிபெயர்ப்பு' என்பதும் பிடிபடாத் தன்மையதுதான் நாட்டுப்புறங்களில், படிப்பறிவில்லாதவனுடைய பேச்சிலும் பாட்டிலும் கூட இலக்கியம் உள்ளது. அதே நேரத்தில், இலக்கியம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு எழுதுகிற சில இலக்கியப் புலிகளிடம் அது வெறும் செய்திப் பரிமாற்றம் என்னும் அளவில் சுருங்கியதாய் நிற்கிறது. மருந்துப்புட்டிகளில் ஒட்டப்படும் சீட்டைக் (Label) கூட மேனாடுகளில் 'Literature' என்று கூறுகினறனர். இவ்வகையில்

மாறுபாடுடைய கருத்துப்போக்கினதாக இலக்கியம் பற்றிய விளக்கம் அமையும்போது இலக்கியம் தொடர்பான 'இலக்கிய மொழிபெயர்ப்பியலை' விளக்குவதும் சிக்கலான பிரச்சினை தான். எனினும், கவிதை, நாவல், சிறுகதை, நடைச்சித்திரங்கள் (long narratives), நாடகம், இவை தொடர்பான திறனாய்வு கள் எனப் பலபடியாகப் பெயர்தாங்கி வருபவற்றை இலக்கியம்' என்று ஒரு வசதிக்காகக் கூறலாம். மேற்கூறியவை மொழி பெயர்க்கப்படுமானால், அம்முயற்சியை, அம்முயற்சியில் மேற் கொள்ளப்பெறும் உத்தி முறைகளை 'இலக்கிய மொழிபெயர்ப் பியல்' என்று கூறலாம்.

2. இலக்கிய மொழிபெயர்ப்பின் நோக்கம்:-

இலக்கிய மொழிபெயர்ப்பின் நோக்கம் என வரும் போது அது, 'மொழிபெயர்ப்பு, மொழிபெயர்ப்பாகவே படிக்கப்படுதல் வேண்டும்' (Translation should be read as translation) 'மொழிபெயர்ப்பு, இலக்கியமாக படிக்கப்படுதல் வேண்டும்' (Translation should be read as Literature) என்ற இரு மா பெரும விவாதங்களை உள்ளடக்கியுள்ளதாகத் தோன்றுகிறது. எளிமையாகச் சொல்லவேண்டுமெனில், ஒரு மொழியின் இலக்கியத்தை, அம்மொழி பேசும் மக்களின் நாகரிகப் பண் பாட்டு மரபுகளை மற்றொரு மொழிக்கு அறிமுகப் படுத்துவதே (To introduce) இலக்கிய மொழிபெயர்ப்பின் நோக்கம்' என லாம். ஏனெனில், எந்த ஒரு மொழிபெயர்ப்பும் இலக்குமொழி யின் (Target language) இலக்கியமாகப் படிக்கப்படுவதில்லை; ஒரு மொழிபெயர்ப்பாகவே படிக்கப்படுகிறது இங்கே, மொழி பெயர்ப்பாளன் எல்லாவகையிலும் மூலமொழிக்கு (Source language) உண்மையாக நடந்து கொண்டால் அவனது அளவான சுய செய்நேர்த்தியின் விளைவாக, அந்த மொழி பெயர்ப்பு, இலக்கு மொழியின் இலக்கியத்தின்மேல் ஓர் மறை முகத்தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். எனினும், ஒரு மொழி யினுடைய இலக்கியவளர்ச்சி என்பது அம்மொழியினுடைய மரபிலிருந்தே நடைபெறுகிறது; இவ்வகை மொழிபெயர்ப்புக் களால் கிடைக்கும் தாக்கம் மற்றும் அத்தாக்கத்தால் நடை பெறும் வளர்ச்சி என்பது மிகவும் சிறுபான்மையானதே ஆகும்.

மொழிபெயர்ப்பு என்பது புகைப்படம் போன்றது ; மொழி பெயர்ப்பாளர் 'காமிரா' போன்றவர் ; மொழிபெயர்ப் பாளரின் திறனும், அறிவும் புகைப்படக்காரருக்கு (Cameraman) இணையானவை ஒரு பொருளை எவ்வளவு தெளிவாக - அசலைப் போல - வெளிக்கொணர முடியுமோ அதில்தான் ஒரு நல்ல காமிராவின் தரம் நிருணயம் பெறுகிறது ஒரு மனிதனுக்கு, (அசலில் இல்லாத நிலையில்) மீசை வரைவதோ, தாடிவரைவதோ. 'கோட்டு' வரைவதோ நல்ல புகைப்படக் காரருக்கு அழகானதல்ல. இதைப்போல, ஒரு மொழியின் இலக்கியத்தை மற்றொரு மொழியில் பிரதிபலிக்கும் போது, 'அது இருந்தது போலவே' (as it is) என்பதில் தான் வெற்றி இருக்கிறது. நாம் மூலமொழியின் அசலில் இருந்து இலக்கு மொழியின் தன்மைக்கேற்பக் கூட்டுவதோ, குறைப்பதோ, மாறுபடக் கூறுவதோ நல்ல மொழிபெயர்ப்பாளனின் திறனுக்கு அழகானதல்ல.

எனவே, மொழிபெயர்ப்பில் உள்ள இலக்கியம், மொழி பெயர்ப்பு இலக்கியமாகவே (Literature in translation should be read as Literature in translation) படிக்கப்படுதல் வேண்டும். இதை விடுத்து, மூலத்தில் இல்லாத சில சொல் வழக்குகளையும் தொடர்களையும் (idioms & Phrases) நாம் நம்முடைய மொழி மற்றும் பண்பாட்டிற்கேற்ப அளவுக்கதிகமாகப் பயன்படுத் தினால் மூலமொழியின் ஆன்மாவைத் தொந்திரவு செய்தவர் களாவோம்.

சான்றாக, டி. எஸ். எலியட்டின், 'நான் காபிக் கரண்டி களால் வாழ்க்கையை அளந்து விட்டேன்' (I have measured out my Life with coffee spoons)[2] என்ற பிரபலமான தொடரைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது ஏற்படும் சிக்கலைக் கூறலாம். டி. எஸ். எலியட், இலட்சியமற்ற நிலையில் இன்றைய வாழ்க்கை வீணாக்கப்பட்டுச் சீரழிந்த நிலையினதாக உள்ளது என்பதை விளக்க, மேற்கண்ட தொடரைக் கூறியுள்ளார். கேளிக்கைகள், விருந்துகள், பண்பாட்டுச் சீரழிவுகள் ஆகியன உணவு விடுதி களிலேயே நடைபெறுவது என்பது மேற்கத்தியப் பண்பாட்டில் ஓர் இன்றியமையாக் கூறாகும் இன்றைய மக்கள் தங்கள்

வாழ்க்கையை இலக்கற்ற நோக்கில் வீணாய்க் கழிக்கின்றனர் என்பதை விளக்கக் 'காபி' மேற்கத்தியப் பண்பாட்டின் படிம மாக நிற்கிறது இந்தப் பண்பாட்டைப் புரிந்து கொண்டால் தான் மேற்கண்ட தொடர் உணர்த்தும் செய்தியைப் புரிந்து கொள்ளலாம். நாம் இத்தொடருக்குப், பண்பாட்டளவிலும் இணையுடைய தொடராகத் தமிழ்வழக்கில் இலங்கும், 'வெந்ததைத் தின்னுட்டு விதியேன்னு கெடக்குறேன்' என்ற தொடரை மொழிபெயர்ப்பில் தரலாம். எனினும் **'I have measured out my Life with coffee spoons'** என்ற தொடர் உணர்த்தும் மேற்கத்தியப் பண்பாட்டை, 'வெந்ததைத் தின்னுட்டு விதியேன்னு கெடக்குறேன்' என்ற தமிழ்த் தொடர் உணர்த்தாது. கவிதைப் பொருளின் நோக்கமான 'இலக்கற்ற வாழ்க்கை' என்பதை எலியட்டின் தொடருக்கு இணையாகத் தமிழ்த் தொடரும் உணர்த்துகிறது என்றாலும் பண்பாட்டுணர்த் தலில் மாறுபாடு உண்டாவதை யாரும் எளிதில் உணரலாம் நாம் இங்கே, 'தமிழில் வந்துள்ள எலியட்டின் கவிதை' என்று தான் படிக்கவேண்டுமேயொழிய, 'எலியட் எழுதிய தமிழ்க் கவிதை' என்று பிறழ உணருமளவுக்கு மொழிபெயர்ப்புச் செய்யக்கூடாது

3 மொழிநடை:

கடந்த காலத்தில் உள்ள மூலமொழியின் ஓரிலக்கியத்தைத் தற்கால இலக்குமொழியில் மொழிபெயர்க்கும்போது, கடந்த கால மொழிநடையைப் பின்பற்றுவதா? அல்லது தற்கால மொழி நடையைப் பின்பற்றுவதா? என மொழிநடை பற்றி ஒரு சிக்கல் உள்ளது. இவ்வகை மொழிபெயர்ப்பில், நாம் மூலமொழியி லுள்ள பழைய ஓர் இலக்கியத்தை, அக்கால மூலமக்களின் பண் பாட்டுக் கூறுகளை, நிகழ்கால இலக்குமொழி வாசகர்கட்கு இறக்குமதி செய்கிறோம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இம்முறையில், நாம் மூலமொழியின் காலநடைக்கு இணையான இலக்குமொழியின் மொழிநடையையே மொழிபெயர்ப்பில் பின் பற்ற வேண்டும். ஆனால், நிகழ்கால இலக்குமொழி வாசகனும் புரிந்துகொள்ள வேண்டுமே? அதற்கு, நிகழ்கால மொழிநடையில் ஒரு நீண்ட அல்லது சுருக்கமான விளக்கவுரை எழுதி இணைத்து வெளியிடுவது உத்தமமான செயலாகும்.

4. எளிமைப்படுத்தல் மொழிபெயர்ப்பு :

ஒருமொழியிலுள்ள கடந்தகால இலக்கியங்களைப் புரிதிறன் கருதி, அதே மொழியில் தற்கால மொழிநடையில் பெயாத்துத் தருதல் என்பது ஆங்கில இலக்கிய உலகில் பின்பற்றப் படுகிறது. பழங்கால இலக்கியங்களை அவற்றின் மொழிநடை தற்கால மனிதனுக்குப் புரியாததாகையால் உரையின் துணை யோடுதான் அணுக வேண்டியிருக்கிறது. இவ்வுரையாசிரியர் எனும் இடையீட்டாளரின் துணையின்றி, இலக்கியத்தை நேரடி யாக அணுகவேண்டும் என்பதற்காகத் தற்காலத்தில் வழங்கும் புரிகிறமொழிநடையில் பழைய இலக்கியத்தைப் பெயர்த்து எழுதுகின்றனர். இம்முயற்சி வரவேற்கப்படக் கூடியதன்று, ஏனெனில், காலந்தோறும் எழுத்துக்களின் வரிவடிவம் மாறு பாடுடையதாக வந்திருந்தாலும், எழுத்துகளின் கூட்டமாகிய சொற்கள் உணர்த்தும் சொற்பொருள், அவ்வக்கால மக்களின் பண்பாட்டை உணர்த்தும் அடையாளங்களாக இருந்து வந்து ள்ளன. இவ்வகை, 'எளிமைப்படுத்தல்' எனும் நோக்குடைய பெயர்ப்புக்கள் பழங்கால மக்களின் பழக்கவழக்கங்கள் பண் பாடுகள் ஆகியவற்றைச் சிதைக்கவே செய்கின்றன, எனவே, இவ்வகைப் பெயர்ப்புக்களை வரவேற்பதென்பது மொழிக்குச் செய்யும் துரோகமாகும்.

5. மொழிபெயர்ப்பில் மறுதலையாக்கம் (Reversibility)

நல்ல மொழிபெயர்ப்பை, நாம் மீளவும் மூலமொழியில் பெயர்த்தெழுதினால், அது அப்படியே அசலைப்போல ஆகுமா? என்பது இலக்கியமொழிபெயர்ப்பில் கொள்கை அளவில் விவாதிக்கப்படும் பிரச்சினையாகும்.

குறிப்புக்கள்:

1. தொல், பொருள். 643.
2. T. S, Eliot, 'The love song of J, Alfred Prufrock; Collected Poems (Faber, Memxlix) — p. 12.
3. சி. சு. செல்லப்பா, மாற்று இதயம் — U. 60.

தினமணி சுடர்-ஓர் அறிமுகம்

ஆ. இசக்கியம்மாள்,
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம்.

பரந்து கிடக்கும் உலகத்தின் நிகழ்ச்சிகள் அனைத்தையும் சில பக்கங்களில் சுருக்கித் தந்து நம் அனுபவ அறிவைப் பெருக்கும் திறமுடையன நாளிதழ்கள். இவை பாமரமக்கள் முதல் படித்தறிந்த அறிஞர் வரை அனைவர்தம் வரவேற்பையும் பெற்றுள்ளன. இந்நாளிதழ்கள் ஒரு வாரத்தின் ஆறு நாட்களில் தருகின்ற செய்தி முறைகளிலிருந்து மாறுபட்டு, ஞாயிற்றுக் கிழமை தோறும் மக்களின் கருத்துக்கும், காட்சிக்கும் பயனளிக்கும் வகையில் பல புதிய செய்திகளைத் தரும் முறை களையும் கையாண்டுவரக் காணலாம். வார இறுதியில் வெளியிடப்படும் இவ்வகைச் செய்தித் தொகுப்புக்களை ஞாயிறு மலர் என்றபெயரில் நாளிதழ்கள் வெளியிடுகின்றன.

மக்களுக்கு அறிவூட்டலையும் மகிழ்வூட்டலையும் ஒருங்கே தரும் நோக்கத்துடன் வழக்கமான நாளிதழ்களோடு வெளி வருகின்ற இநத ஞாயிறுமலர்கள் "சப்ளிமென்ட்" என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுகின்றன. "சப்ளிமென்ட்" என்றால் வழக்கமாக வந்து கொண்டிருக்கும் இதழ்களுடன் அதிகமாகக் கொடுக்கப்படும் பகுதி" என்றும் ஒரு பொருளை முழுமை பெறச் செய்வதற்கு ஒன்றைச் சேர்த்தல் என்னும் குறிப்பிட்ட பண்பு அல்லது கருத்து (Character) நாளிதழ்களிலோ, சஞ்சிகை களிலோ சிறப்புப் பகுதியாக அதனோடு இணைத்து வெளியிடப் படுவது என்றும் விளக்கம் தரப்படுகின்றது. இத்தகைய நோக்குடன் வெளிவருகின்ற ஞாயிறுமலர்கள் அந்தந்த நாளிதழ் களுக்குரிய கொள்கைகளுக்கேற்ற கருத்துக்களைத் தாங்கிவரும் இயல்புடையனவாகும். பொதுவாகக் காலப் போக்கிற்கும்

மக்களின் ரசனைக்குமேற்ப ஞாயிறுமலர்களில் இடம்பெறுகின்ற கருத்துக்களும். படககாட்சிகளும் மாறுபடுவதுண்டு. ஆனால் குறிப்பிட்ட சில நாளிதழ்கள் தாம் தோன்றிய காலந்தொட்டு மக்களின் வாழ்வு நலனில் அக்கறையும், சமுதாயப் பொறுப் புணர்வும் கொண்டு பத்திரிகை நெறிபிறழாமல் காலத்தின் தேவையறிந்து கருத்துக்களையும் செய்திகளையும் வெளியிட்டு தனித்துவம் பெற்று விளங்கக் காணலாம்

1 1 ஞாயிறுமலர் அறிமுகம் :

மேலைநாடுகளில் ஆறுநாட்களின் கடுமையான உழைப்புக் குப்பின் வாரத்தின் இறுதி நாளாகிய ஞாயிற்றுக் கிழமையில் ஓய்வாக இருந்து நாட்டு நடப்புக்களையும் உலகச் செய்தி களையும், சுவைபயக்கும் கதை கட்டுரைகள் சிரிப்புக்கொத்துக் களையும் உடைய பத்திரிகையைப் படிக்க விரும்பிய மக்களுக் கென்று வெளிவந்ததுதான் ''சப்ளிமெண்ட்'' அல்லது ''ஞாயிறு மலர்'' என்னும் சிறப்புமலர் பகுதியாகும்.

மேலைநாடுகளில் பெரும் வரவேற்புடன் பெருகி வளர்ந்த ஞாயிறு மலர் வெளியீடு, 1880-ஆம் ஆண்டுதான் முதன் முதலாக இந்தியாவிற்கு அறிமுகமாயிற்று.அதிலும் தமிழில் வெளிவந்த ''சுதேசமித்திரன்'' என்ற பத்திரிக்கையே ''ஞாயிறுமலரை'' முதன் முதலாக வெளியிட்டது என்பதும், அதனையடுத்து 1934-இல் வெளிவந்த தினமணி பத்திரிகை 1940-ஆம் ஆண்டில் ஞாயிறுமலரை வெளியிட்டது என்பதும் அறியத்தக்கது.

1.1 1 தினமணியின் ஞாயிறுமலர் வளர்ச்சி :

1934 ஆம் ஆண்டிலேயே வெளிவந்த தினமணி நாளிதழ், தன் ஞாயிறுமலரை வெளியிட ஆறாண்டு காலம் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. அரசியல் ரீதியிலும், தொழில் ரீதியிலும் ஏற்பட்ட சிக்கல்களே இதற்குக் காரணமென்று அறியப்படுகிறது. அதாவது 1799-இல் அன்றைய தமிழகத்தின் கவர்னராயிருந்த வெல்லெஸ்லிபிரபு ஞாயிறுமலரை நாளிதழ்கள் வெளியிடக் கூடாதென்று தடைவிதித்திருந்தார் ஏனெனில் ஞாயிறுமலர்கள் தரும் நாட்டு நடப்பு, உலக நடப்பு பற்றிய செய்திகளும்,

வெள்ளையர் ஆட்சி பற்றிய விமரிசனங்களும், ஓய்வாக இருந்து படிக்கும் நிலையில் மக்களிடையே சிந்திக்கும் திறனை உருவாக்குவதோடு, வெள்ளையர் ஆட்சியை எதிர்ப்பதற்கான சக்தியும் உருவாகிவிடும் என்ற அச்சத்தினாலேயாகும் எனலாம்.

மேலும் ஞாயிற்றுக்கிழமையில் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் கட்டாயமாக விடுமுறை விடுதல் வேண்டுமென்ற சட்டமொன்று விதிக்கப்பட்டிருந்தமையும் ஞாயிறுமலர் வெளி வருவதற்கு தண்டயாயிருந்ததென்றறியலாம்.

1.1.1.1 சட்டத்தால் ஏற்பட்டிருந்த இத்தடைகளையும் மீறாமல். அதே வேளையில் இரண்டாம் உலகயுத்தம் உச்சக் கட்டத்தை அடைந்து கொண்டிருந்த நிலையில் அன்றாடச் செய்திகளைத் தமிழகத்து மக்கள் அறிந்து கொள்வதற்கு பேராவலுடன் காத்திருந்த விருப்பத்தை நிறைவு செய்யும் முறையிலும் தினமணி நாளிதழ் சனிக்கிழமை மாலையிலேயே தன் ஞாயிறு மலரை வெளியிட்டுச் சாதனை செய்தது என்பர் சி சு செல்லப்பா.

1.1.2 தினமணி ஞாயிறுமலரின் பெயரும், அமைப்பும்:

ஞாயிற்றுக்கிழமை வெளியீடாக வந்த தினமணியின் முதல் ஞாயிறுமலர், செய்தித்தாள் வடிவத்தில் இலக்கியக்கட்டுரைகள், எழுத்தாளர் அறிமுகக் கட்டுரைகள், சிறுகதை, கவிதை, துணுக்குகள், நூல் மதிப்புரை முதலிய உள்ளடக்கங்களுடன் வெளிவந்துள்ளது

1.1.2.1 முதல் ஞாயிறு மலர் வெளிவந்த எட்டு ஆண்டுகளுக்குப்பின் தினமணிக்கதிர் என்ற பெயர்மாற்றம் பெற்று முந்தைய வடிவ உள்ளடக்கங்களோடு புதிதாக "சிறுவர்பகுதி" "மாதர்பகுதி" தொடர்கதை" போன்ற கூறுகளையும் பெற்று வெளிவரலாயிற்று.

1.1.2.2 *1950* ஆம் ஆண்டு முதல் செய்தித்தாள் வடிவத்திலிருந்த தினமணிக்கதிராகிய ஞாயிறுமலர், பிற வாரப்

பத்திரிகைகளைப் போல புத்தகவடிவில் மிகுதியான வண்ணப் படங்களுடன் வெளிவந்தமை அறியப்படுகின்றது.

1 1.2 3 தினமணிக்கதிர் நூல்வடிவம் பெற்ற அதே ஆண்டில். "தினமணிசுடர்" என்ற பெயரில் 'புத்தகமடிப்புடன்' தனிப்பட்ட வடிவமைப்பு, எழுத்து, பக்க எண்களுடன் கூடியதாய் புதியதோர் ஞாயிறுமலரைத் தினமணி நாளிதழ் வெளியிடத் தொடங்கியது. 1950 முதல் இன்றுவரை தினமணிசுடர் என்ற பெயரிலேயே செய்தித்தாளை ஒத்த வ்டிவுடன் வெளிவந்து கொண்டிருக்கிறது என்பதனை அறியலாம்.

1.1.2.4 தற்போது வெளிவருகின்ற தினமணிசுடர் கடந்த ஓராண்டு காலமாக விஞ்ஞான, தொல்பொருள் ஆய்வுத்தொடர்பான கட்டுரைகளைத் தாங்கி சனிக்கிழமை வெளியீடாக வெளிவருவதும் அறியத்தக்கது.

1.1 2.5. 1940 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பலவகையான பெயர்மாற்றங்களையும் வடிவ மாற்றங்களையும் பெற்று வந்துள்ள தினமணிசுடர் தனது உள்ளடக்கப் பான்மையிலும், சில குறிப்பிட்த்தகுந்த மாற்றங்களையும் பெற்று வந்துளளமையை அறிய முடிகிறது. சுதந்திரப் போராட்டக்காலம் முதல் இன்றுவரையுள்ள தமிழக மக்களின் கருத்துத் தேவைக்கும் சுவைக்கும் ஏற்றளவில பல செய்திகளைப் பயனுள்ள வகையில் தந்து, பத்திரிகை உலகில் தனியிடம் பெற்று விளங்குகிறது எனலாம்.

1.1.3. தினமணிசுடர் உள்ளடக்கம்:

முப்பத்தெட்டாண்டு கால வளர்ச்சியினைப் பெற்று வந்துள்ள தினமணிசுடரின் கருத்தமைவினை அல்லது உள்ளடக்கத்தினைத் தேர்ந்தறிவதும் இன்றியமையாததாகும் 'தெரிவித்தல்' 'கற்பிதல்' 'மகிழ்ச்சியூட்டல்' ஆகிய மூன்று நோக்கங்களுடன் தினமணிசுடரின் உள்ளடக்கங்கள் அமைந்திருக்கக் காணலாம். இம்மூன்று வகை நோக்கங்களுடன் உருவாக்கம் பெற்றுள்ள

சுடரின் உள்ளடக்கக் கூறுகளைக் 'கருத்தாழக்கூறு' என்றும், 'பொழுது போக்குக் கூறு' என்றும் இருவகையாகப் பகுத்து' ஆராயலாம்.

1.1.3.1. கருத்தாழக்கூறு என்பது நான்குவகையான கட்டுரை அமைப்புக்களைக் கொண்டு விளங்குகின்றது அவை 'தனிச் சிறப்புக்கட்டுரை' தொடர்சிறப்புக் கட்டுரை' 'தனிக்கடடுரை' 'தொடர்க் கட்டுரை' என்பனவாகும்.

1.1.3.1.1 தனிச்சிறப்புக் கட்டுரைப் பகுதியில் 'மனித ஆர்வநிலைக்கூறு' 'புகழ்பெற்ற மனிதர்களின் செய்திச்சுருக்கம்' 'சுயசரிதை' 'பயணச் சிறப்புக் கூறு' 'அறிவியல் கூறு' 'சமயத் தனி சிறப்புக்கூறு, ஆகியவை சார்ந்த கட்டுரைகள் பெற்று உள்ளன என்லாம் தொடர்சிறப்புக் கட்டுரைப் பகுதியில் மருத்துவம் 'விவசாயம். 'காந்தியும் குறளும், போன்ற கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இப்பகுதியின் கட்டுரைகள் பலவும் தினமணிசுடரின் ஆசிரியக் குழுவினரால் மட்டு மல்லாது. பத்திரிகையோடு நேரடித் தொடர்பில்லாத எழுத் தாளர்களாலும் (Freelance writers) எழுதப்பட்டன என்பதும் அறியத்தக்கது. மேலும் இவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் கோயில், அறிவியல், சமயம் சார்ந்த வரலாறுகளாக அமைந் திருந்தன என்பதும் அறியத்தக்கது.

1.1.3.2 கட்டுரை வகைகள் மட்டுமல்லாது 'கலையரங்கம்' என்ற பகுதியில் 'நாட்டிய' 'நாடக' 'இசை' அரங்கேற்றம் குறித்த செய்திகளும, அவ்வப்போது வெளிவருகின்ற பல்வகை யான நூல்களைப் பற்றிய மதிப்புரைகளும் தினமணிசுடரின் தனித்துவத்தை வெளிப்படுத்துகின்ற கூறுகளாக அமைந் திருந்தன.

அடிக்குறிப்பு

1. Compiled by George obteler, The Little Oxford Dictionary of current English, P. 507

2. Editor Jass Stein, The Random House Dictionary of English Language P. 1429.

   'Something added to complete a thing'
   a part usually of Special character
   issued as an additional feature
   of a newspaper or other periodical'

3. சி.சு. செல்லப்பாவுடன் பேட்டி, சென்னை, 23.1 87.

4. Ibid.

5. Ibid.

6. Ibid.

7. சிவராமகிருஷ்ணனுடன் பேட்டி, தூத்துக்குடி 10.3.85.

8. தினமணி ஆசிரியருடன் பேட்டி, தினமணி அலுவலகம் 15.2.87.

சுயமரியாதை இயக்கத்தில் கி. ஆ. பெ. விசுவநாதம் - ஒரு பார்வை

பு. இராசதுரை,
எஸ். பி. கே கல்லூரி, அருப்புக்கோட்டை.

தமிழக வரலாற்றில் சுயமரியாதை இயக்கத்திற்குத் தனியிடம் உண்டு. பிற்பட்ட பார்ப்பனரல்லாச் சமுதாயம் பல துறைகளிலும் முன்னேறவும், தன்மானம் பெற்றுத் தலை நிமிர்ந்து வாழவும் பெரியார் ஈ. வே இராமசாமியின் சுயமரியாதை இயக்கம் பாடுபட்டு வருகிறது. 1925-ஆம் ஆண்டு ஈ. வே. இராமசாமி என்னும் தனிமனிதரால் தொடங்கப்பட்ட இவ்வியக்கத்திற்குப் பார்ப்பனரல்லாதார் நலனுக்காகப் பாடுபட்டுவந்த நீதிக்கட்சியாளரின் பெருவாரியான ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைத்தன. அவ்வாறு ஈ. வே. இராமசாமிக்கு ஒத்துழைப்பு நல்கிச் சுயமரியாதை இயக்கத்திற்குப் பாடுபட்டவர்களுள் திருச்சி முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ விசுவநாதம் அவர்களும் ஒருவர்.

ஈ. வே. ரா.— விசுவநாதம் இயக்க உறவுத்தொடக்கம்

. ஈ.வே.ராவுடன் கருத்துத்தொடர்பு ஏற்பட்டு அது உறவான வரலாற்றைக் கி.ஆ.பெ விசுவநாதம் குறிப்பிடுகிறார். "காஞ்சிபுரம் காங்கிரசிலிருந்து 1924-இல் ஈ. வே. ரா. வெளியே வந்து காங்கிரசையும் பார்ப்பனரையும் தாக்கிப் பேசினார். அப்போது நான் அங்கிருந்து பேசிப் பயனில்லை. எங்களுடன் நீதிக்கட்சியில் வந்துசேருங்கள் என்று அறிக்கை விட்டேன். இதனைக் கண்ணுற்ற ஈ. வே. ரா. "நீங்கள் என்னுடன் வருவதானால் நாமிருவரும் சேர்ந்து தமிழ்நாடு முழுவதும்

பெரிய அளவில் பிரசாரம் செய்யலாம்' என்றார். ஒப்புக் கொண்டேன். எங்கள் முதல் பேச்சு அருப்புக்கோட்டையில் நடைபெற்றது. கைதட்டலும் ஆரவாரமும் பொதுமக்களிடம் மிகுந்து காணப்பட்டன''[1] என்கிறார் அவர்.

சுயமரியாதை இயக்கத்தின் முதல் செயலாளர் நான்தான் அதை நினைக்கும்போது இன்றும் எனக்கு மகிழ்ச்சி ஏற்படு கிறது''[2] என்று மனம்கிழ்கிறார் கி.ஆ.பெ. விசுவநாதம்.

''சுயமரியாதை இயக்கத்தில் 16 ஆண்டுகள் பொதுச் செயலாளராக இருந்தேன். பெரியாரும் நானும் தமிழகத்தின் பலபகுதிகளிலும் சுயமரியாதை இயக்கத்திற்குத் தனித்துப் பிரச் சாரம் செய்திருக்கிறோம்''[3] என்று அவர் குறிப்பிடுகிறார்.

முதல் மாகாண சுயமரியாதை மாநாடு:

1929 பிப்ரவரி *17, 18* நாட்களில் முதல் மாகாண சுய மரியாதை மாநாடு நடைபெற்றது. பார்ப்பனரல்லாதார் உயர்வு குறித்த பல தீர்மானங்கள் அம்மாநாட்டில் நிறைவேற்றப் பட்டன

கி. ஆ. பெ. வின் தீர்மானம்:

இம்மாநாட்டில் திரு கி. ஆ பெ. விசுவநாதம் உரை யாற்றியதுடன 'நூலாசிரியர்கள், நாடகாசிரியர்கள், நடிகர்கள். நாடகநிலையச் சொந்தக்காரர், சினிமாப்படக் காட்சிக்காரர் முதலியோர் பகுத்தறிவுக்கும், நியாய நேர்மைக்கும் எதிரிடை யாவதும், சுயநமபிக்கையையும் சுயமரியாதையையும் குன்றச் செய்வதும அல்லது தவறானதும் பகுத்தறிவுக்கு மாறானது மான மதக்கொள்கைகளைப் பிரச்சாரம் செய்வதுமான நூல் களையும், கதைகளையும், நாடகங்களையும் எழுதவோ, படிக்கவோ, ஆதரிக்கவோ கூடாதென்றும் இம்மாநாடு தீர் மானிக்கிறது'' என்ற தீர்மானத்தையும் மு.ன்மொழிந்தார்.[4]

சுயமரியாதை பஞ்சாங்கம்:

1928-ஆம் ஆண்டு சுயமரியாதைப் பஞ்சாங்கம் ஒன்றை வெளியிட்டார். அப்பஞ்சாங்கத்தில் பெரியார் ஈ.வே.ரா. படம் மேலே இருக்கும். தமிழ் எழுத்துக்களில் தேதி இருக்கும்.

சடங்குகளை ஒழி

சூத்திரன் என்றால் ஆத்திரங்கொண்டு அடி

சூத்திரன் என்று சொல்லிக்கொள்ளாதே

என்பன போன்ற சுயமரியாதை நெறித்தொடர்கள் ஒவ்வொரு மாத இதழிலும் உண்டு.[5]

பணிகளிற் சில

மாயவரம் கோவில் நுழைவு:

தாழ்த்தப்பட்டவர்கட்கு அவர் ஆற்றிய பணிகள் சிறப் புடையன. இதுபற்றி அவர், ''சுமார் 100 ஆதிதிராவிடர்களை அழைத்துக்கொண்டு மாயவரம் கோவிலுக்குள் சென்றேன். காங்கிரசார் தடிகளுடன் வந்து தடுத்தனர். காவல்துறையினர் தலையிட வேண்டியதாயிற்று'' என்று குறிப்பிடுகிறார்.[6]

திருச்சி மலைக்கோட்டை

"திருச்சி மலைக்கோட்டையில் ஆதி திராவிடர்களை அழைத்துச் சென்றேன். 144 தடை ஆணை பிறப்பிக்கப்பட்டது. அப்போது மாவட்ட ஆட்சியாளர் ''நீங்கள் ஒரு இந்து; நீங்கள் கோவிலுக்குள் செல்லத் தடையில்லை. ஆனால் ஆதிதிரா விடர்களை அழைத்துச் செல்வதற்கே தடை என்றார். நான் தடையை மீறினேன்'' எனக் கூறுகிறார்[7].

சுயமரியாதை இயக்கம் பற்றிய அவர் கருத்து

சேலம் மாவட்டச் சுயமரியாதை மாநாடு 7.11 1937 அன்று நடைபெற்றது. மாநாட்டிற்குத் தலைவராக அமைந்தவர் கி.ஆ. பெ விசுவநாதம் அவர்கள். 'அவர் தம் உரையில் சுயமரியாதை இயக்கம் பற்றிய தம் தெளிவான கருத்தை வெளியிட்டார். அவர் குறிப்பிட்டதாவது:

''இந்நாட்டில் தோன்றி மறைந்ததும், தோன்றியிருப்பதும் இனித்தோன்றுவதுமாகிய எந்த இயக்கத்தாலும் செய்திராத, செய்யமுடியாத சீர்திருத்தச் செயல்களை இந்நாட்டில் சுய மரியாதை இயக்கம் செய்து காட்டிவிட்டது.

எவராலும் நினைக்கவே முடியாத இயக்கத்தைத் தோற்று வித்து, நடத்தி வெற்றியடைந்த பெரியார்-இயக்கத் தலைவர்- ஈ.வே ரா அவர்கட்கு இந்நாடும், இம்மாகாணமும் இத்தேசமு மட்டுமல்ல உலகமே ஒருங்குசேர்ந்து நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது.

முடிந்த முடிபு

இயக்கக் கொள்கைகளின் முடிபு முடிந்த முடிபாகும். அவை எப்பொழுதும் எவராலும் மாற்ற முடியாதவையாகும். எதிர்ப்பு இயக்கக்காரர்களோ நம்மிலிருந்து விலகி எதிர்ப்பிரச்சாரம் செய்யும் நமது தோழர்களோ இந்த நிமிடம் வரையில் நமது இயக்கக் கொள்கைகளில் எதையும் கண்டித்துக் கூறியதோ குறை கூறியதோ கிடையாது. "அத்தகைய சிறப்பு வாய்ந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நாம்" என்று நம்மில் ஒவ்வொரு வரும் பெருமை பாராட்டி வருகிறோம். இத்தகைய பெருமை பிற இயக்கக்காரர்களுக்கு இதுகாறும் நேர்ந்ததுமில்லை; இனி நேரிடப்போவதுமில்லை"[8]. என்பதே அது

பெரியார் பற்றிய அவரது மதிப்பீடு:

"தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளியும், அழகிய பேச்சாளி யும், பெரிய அறிவாளியும், தமிழ் இயக்கத்தின் தந்தையும், பகுத்தறிவு இயக்கத்தின் தலைவருமாகிய ஈரோடு ஈ. வே. இராமசாமிப் பெரியார்...." என்ப் பெரியாரைப் பாராட்டுகிறார் கி.ஆ.பெ. விசுவநாதம்.

இந்தி எதிர்ப்பு இயக்கம்:

1938-ஆம் ஆண்டு சென்னை மாகாணப் பிரதம மந்திரி யாக இருந்த சக்ரவர்த்தி இராசகோபால ஆச்சாரியார் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார். அப்போது பெரியாரின் சுயமரியாதை இயக்கம் இந்தி எதிர்ப்புப் போரைத் தொடங்கியது. அப்போரில் கி. ஆ. பெ. விசுவநாதம் பெரும் பங்கு வகித்தார்.

இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்த அவர் தமிழகமெங்கும் சுற்றி வந்தார். மக்களைக் கிளர்ந்து எழச்செய்தார். 1937-இல்

டிசம்பர் 26ஆம் நாள் திருச்சியில் சென்னை மாகாண 3வது தமிழர் மாநாட்டையும் கூட்டினார்.

இதன்பின் நிகழ்ந்த இந்தி எதிர்ப்புப்போர்களிலும் "ஆகாஷ்வாணி" பெயர் நீக்கப் போராட்டத்திலும் அவர் பெரும் பங்கேற்றார்.

1965 சனவரி 26-ஆம் நாள்:

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் குண்டடிபட்டும் கூவம் நதியில் விழுந்தும் தடியடிபட்டும் 27 பேர் உயிர்நீத்தது இந்த நாளில்தான். இதனை நினைவுகூர்ந்து ஒவ்வோர் ஆங்கில மாதத்தின் 26 ஆம் நாளும் உண்ணாமலும் பேசாமலும் நோன்பிருந்து இறந்தவர்க்கு அஞ்சலி செய்கிறார்.

பாரதிதாசன் பாடல்களில் ஈடுபாடு:

பாரதிதாசன் பாடலை இனிமைக்காக ஒருமுறை, எழிலுக்காக ஒருமுறை, கதைக்காக ஒருமுறை, கவிதைக்காக ஒருமுறை, கருத்துக்காக ஒருமுறை, கற்பனைக்காக ஒருமுறை இப்படிப் பலமுறை படித்ததாகக் குறிப்பிட்டுப் புகழ்ந்து பாடல்களின் நயத்தையும் திறத்தையும் தமிழர்க்கு எடுத்துக்காட்டினார்.

பெற்ற பட்டங்கள்:

நல்ல தொண்டு செய்த இவருக்குத் தமிழகம் முத்தமிழ்க் காவலர், வள்ளுவவேள், கலைமாமணி என்னும் விருதுப்பெயர்கள் அளித்துப் பாராட்டிற்று.

கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் வாழ்க!

குறிப்புகள்

1. கி.ஆ.பெ. விசுவநாதம் பேட்டி, நாள் 6.7.86.
2. கி.ஆ.பெ. விசுவநாதம், "விடுதலை," சென்னை வெளியீர், நாள் 5.2.76, ப.3.
3. கி.ஆ.பெ. விசுவநாதம், திரு இராசதுரைக்கு அளித்த பேட்டி, நாள் 23.6.86.

4. ''திராவிடன்'', சென்னை, விபவ மாசி 9, ப.6.

5. கி ஆ.பெ. விசுவநாதம், திரு இராசதுரைக்கு அளித்த் பேட்டி, நாள் 23 6.86.

6. கி.ஆ பெ. விசுவநாதம் அவர்களின் கடிதக்கோப்பிலிருந்து பெற்றது, அவர் அளித்த பேட்டி 5.7.86

7. மேலது

8. மாநாட்டுத் தலைமைஉரைப் புத்தகம், பக் 1,2.

9. திருச்சி வி.எம். சுவாமி எழுதிய ''வள்ளுவர் திருக்குறளும் ஈ.வே.ரா. வாழ்க்கையும் என்ற நூலுக்கு எழுதிய மதிப் புரையில்

பரத நாட்டிய அடைவு

பா. இராசா,
உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

மனிதன் ஆதியிலிருந்து வளர்ந்து வரும் கலைகளுள் ஒன்று நடனக் கலை. உலகில் நடனமாடாத இடமுமில்லை மக்களும் இல்லை.

தமிழ் நாட்டியங்களான கும்மி, கோலாட்டம், பின்னல் கோலாட்டம், ஒயிலாட்டம், காவடி கரகம், கணியான் கூத்து, புரவியாட்டம், தெருக்கூத்து போன்ற ஆட்டங்களில் சதிராட்டம் செம்மைப்படுத்தப்பட்ட ஆட்டமாகக் கொள்ளப்படுகிறது. இன்றைய பரதநாட்டியம் 1930 ஆம் ஆண்டு வரை சதிராட்ட மென்றே அழைக்கப்பட்டு வந்தது. இந்நடனங்கள் எல்லா வற்றிற்கும் அடிப்படையானது கால் அசைவுகளே. இதனையே அடைவு என்றழைக்கின்றனர். எல்லா நாட்டியங்களிலும் அடைவு இடம் பெற்றாலும் பரத நாட்டியத்தில் அது பெறும் இடத்தை இவ்வாய்வுரை விளக்குகிறது. நாட்டியத்தை கற்பிக்கும் நூல் களான பரதக்கலை கோட்பாடு, ஸ்வபேத பரத நவநீதம். இவற்றுடன் அடைவு ஒப்பிட்டு ஆராயப்படுகிறது.

அடைவு:

இயற்கையாகவே தாளத்தைக் கேட்ட மனிதனின் கைகளும், கால்களும் தன்னிச்சையாய் அசைவதை உணரலாம். இப்படி அசைந்த கைகளை அழகு படுத்தினர். அதுவே இன்று எழிற்கை என்றாயிற்று. கால்களை முறைப்படுத்தி முன்னும், பின்னும், பக்கவாட்டிலும் கால்களை நாட்டியும், குதித்தும் சென்றடைந்து ஆடினர். இதுவே இன்று அடைவு என்றழைக்கப்படுகிறது.

இவ்வாறு தாளத்தைக் கேட்டபொழுது மட்டுமின்றி, ஆதி மனிதன் மிருகங்களை வேட்டையாடியதைத் தன் குழுவினரிடம்

கூற, மொழி பிறக்காதபொழுது நடித்துக் காட்டினான், சைகை மொழி பேசினான் பிறந, அதை மீண்டும் வேட்டையாடும் பொழுது தற்காப்புக்காகச் செய்து பழகினான். அதுவே போர்ப் பயிற்சி முறையாயிற்று. இன்றும் கேரளப் போர்ப் பயிற்சி முறையான களரி பைட்டு'க்கு ஆதாரமான கால் அசைவுகள் போன்ற தேகப் பயிற்சிகளை. 'அடைவு, என்றே அழைக்கின்றனர். இதே 'அடைவு, தமிழகத்து சிலம்பு, ஒயிலாட்டங்களில் பழக்கத்தில் இருக்கிறது.

இச்சொல் தமிழகம். ஆந்திரம், கர்நாடகம், கேரளம் போன்ற பிரதேசங்களில் உள்ள நடனத்துறைகளில் இன்றும் பயன்படுத்தப்படுகின்றது

அடைவு, என்பது நடிகை (அ) நடிகன் தன் கால் அசைவுகளால் ஓரிடத்திலிருந்து ஓரிடத்தை அடைவது, ஆதலால் அடைவு என்பது சரியானது எனலாம்.

பரதக்கலை கோட்பாட்டில் 'அடைவு' என்பதே சரியானது. அடைவு என்றால் 'சேர்க்கை' என்பதுதான் பொருள் என்று கூறப்பட்டுள்ளது. மேலும். அதே நூலில் அடைவு என்னும் தமிழ்ச்சொல்லுக்குக் 'கரணம்' என்று பொருள் தரப்பட்டுள்ளது. 'கரண' மென்பது உடல்நிலை, கால் அசைவு, எழிற்கை ஆகிய மூன்றின் **சேர்க்கை** என்றும் கூறப்பட்டுள்ளது. (1) இங்கு அடைவின் பொருளான **சேர்க்கை**, கரணத்தில் காணப்படுவதை உணரலாம். எல்லா மொழியிலும், சொற்கள் பயன்பாட்டின் காரணமாகத் தேய்வதைத் தடுகக இயலாது. இங்கு 'அடைவு' என்பதே 'அடவு' எனத் தேய்ந்திருக்கலாம். மகாபரத சூடாமணியிலும், ஸ்வபோத பரத நவநீதம் போன்ற நூல்களிலும் 'அடைவு' என்றே குறிபபிடப்பட்டுள்ளன.

அடைவின் எண்ணிக்கை

இன்றைய பரத நாட்டியத்தில் அடிப்படையான அடவுகள், அவற்றின் உட்பிரிவுகள் எல்லாம் அவரவர் கற்பனைக்கும், காலப்பிரமானத்திற்கும் ஏற்ப இணைக்கப்பட்டு வருகின்றமையால் கணக்கிட்டுச் சொல்லுதல் என்பது இயலாததாயிருப்பினும் எல்லோரும் சிறிது அடிப்படை அடைவுகளில் ஒன்றுபட்டும்

வேறுபட்டும் உள்ளனர். பொதுவாக, பரதர் கூறிய 108 கரணத்திற்கும் ஒவ்வொரு அசைவு உள்ளமையால் அவ்வசைவு களை 108 அடவுகளாகக் கூறுவர். இந்த அடவுகளை 10 ஆகத் தொகுத்து அவற்றுள் பல உட்பிரிவாக வகைப்படுத்தி அமைத் துள்ளனர். ஆனால், பரதர் கூறிய கரணத்திற்கான அடவுகள் இன்று பெரும்பாலும் நடைமுறையில் இல்லை.

பரதக்கலை கோட்பாடு — 12
ஸ்வபோத பரத நவநீதம் — 13
மகா பரத சூடாமணி — 10

இதில் ஸ்வபோத பரத நவநீதம் அடைவுகளை, லாஸ்ய அடைவு-5, தாண்டவ அடைவு-5 இரண்டும் கலந்த அடைவு-3 என பிரித்துள்ளது. ஆனால், இன்று லாஸ்யமே மிகுதியாக பரத நாட்டியத்தில் பயன்படுகிறது பெண்களும் தாண்டவ அடைவினை ஆடி வருகின்றனர்; சுவர்ண முகி போன்றவர்கள் இந்த அடவுகளில் ஆடுகின்றனர்.

மகாபரத சூடாமணி உத்தம அடைவு-5, மத்திம அடைவு-5 என்று பிரித்துள்ளது. அதைப்பற்றி விளக்கிக் கூறவில்லையென் றாலும் இன்றைய அடைவுப் பெயருடன் ஒத்திருத்தலை அறிய முடிகிறது மேலும், இன்றைய செய்முறையுடன் ஒத்திருக்கக் கூடும் என்று எண்ணவும் இடமளிக்கிறது

அடைவுகள்

தட்டடைவு, நாட்டடைவு. மெட்டடைவு, மீட்டடைவு, குத்தடைவு, சறுக்கலடைவு மண்டி அடைவு, பாய்தல் அடைவு, தட்டுமுட்டடைவு, 'தித்தித்தெய்' அடைவு என்று பத்தாகத் தொகுத்துள்ளனர்.

1. தட்டடைவு:

அரை மண்டியிலிருந்து வலது காலைத்தூக்கி முன்படத்தைத் தட்டுவது ஆகும். இதே முறையில் இடது காலிலும் செய்தல் தட்டடைவு முன் படத்தைத் தட்டுகின்ற சிறப்பை ஸ்வபோத பரத நவநீதமும் குறிப்பிட்டுள்ளது. ஆனால், பரதக்கலை கோட்பாடு காலின் உள்ளங்கால் முழுமையாகப் பதியும வண்ணம் தட்டுவது 'தட்டடைவு' என்கிறது மேலும், பொது

வாக அடைவுகளைக் கற்கும்போது பாதத்தின் முன்படத்தைத் தட்டுவதே சிறப்பு என்றும் தெரிவிக்கிறது. இந்தத் தட்டடைவு மகாபரத சூடாமணியில் கூறப்பட்டிருப்பினும் விளக்கப்படவில்லை இந்த அடைவு தெருக்கூத்து, ஒயிலாட்டம் சிலம்பாட்டம் ஆகியவற்றிலும் உள்ளது.

2. நட்டடைவு:

அரை மண்டியிலிருந்து வலது காலை பக்க வாட்டில் நீட்டி குதிகால் தரையில் படும்படி நாட்டி பிறகு அதே காலை அரை மண்டி நிலையில் தட்டவேண்டும் இதே அசைவுகளை இடது காலிலும் செய்ய வேண்டும் பரதக்கலை கோட்பாடு இதனை ஒத்துள்ளது.

ஸ்வபோத பரத நவநீதம் கால் நாட்டும் முறையில் குதி காலால் நாட்டாது கால் படத்தின் முடிவான விரல்களின் அடிவாரத்தால் ஊன்ற 'நட்டடைவு' என்று வேறுபடுகிறது மகாபரத சூடாமணியில் இது கூறப்படினும் விளக்கப்பட வில்லை.

3 மெட்டடைவு:

அரை மண்டியிலிருந்து காலைத் தூக்கி கால்விரல்களின் அடிப்புறம் அதாவது மெட்டி அணிகின்ற பிரதேசம் தரையை நன்குப் பதியத் தட்டுவது ஆகும். ஆதலால் தான் இவ்வடைவு இப்பெயர் பெற்றது என ஸ்வபோத பரத நவநீதம் குறிப் பிடுகிறது இதனைப் பரதக் கலைக்கோட்பாடும் ஸ்வபோத பரத நவநீதமும் தனி அடைவாகக் கூறவில்லை. தட்டடைவின் உட்பிரிவாகத் தட்டி மெட்டடைவு, குதித்து மெட்டடைவு எனக் குறிப்பிட்டுள்ளனர்.

4. மீட்டடைவு:

அரை மண்டியிலிருந்து வலது காலை முதலில் அதே இடத்தில் தட்டி பின் வீசி தட்டியப்பின் இடது காலை அவ் வலது காலின் பின்னால் குத்தி வைத்து மீண்டும் வலது காலால் வீசித் தட்டிய இடத்திலேயே தட்டுவது மீட்டடைவு.

இவ்வடைவில் உள்ள வலது காலை முதலில் தட்டுவதை தேய்த்துத் தூக்கித் தள்ளி தட்ட வேண்டும் என்று பரதக் கலை கோட்பாடு கூறுகிறது. இவ்வடைவுப்பெயர் ஸ்வபோத பரத நவநீதத்தில் குறிப்பிடப்படாவிட்டாலும் சொற்கட்டுக்கு அடவு செய்முறையில் விளக்கியுள்ளார்.

5. குத்தடைவு:

அரை மண்டியிலிருந்து இரண்டு பாதங்களின் முன் படமும் பூமியில் இருக்க குதிகால் மட்டும் தூக்கியடித்தல் ஆகும். இதனையே அரை மண்டியில் பாதம் குத்தித் தட்டப்படுவது குத்தடைவு என்று பரதக் கலை கோட்பாடு கூறியுள்ளது. ஆனால் ஸ்வபோத பரத நவநீதம் குதிகாலை மட்டும் பூமியிலூன்றி முன்படத்தை உயர்த்துவது குத்தடைவு என்கிறது.

6. சறுக்கலடைவு:

முழு மண்டியில் அமர்ந்து காலை பக்கத்திலோ அல்லது பின்புறமாகவோ நீட்டுவது ஆகும். பரதக்கலை கோட்பாடும், ஸ்வபோத பரத நவநீதமும் இதனுடன் ஒத்துள்ளது. இதையே அரை மண்டியில் இருந்து செய்வதை ஸ்வபோத பரத நவநீதம் கூறும் 'உதறலடைவு' எனலாம். இவ்வடைவு தெருக்கூத்து, ஒயிலாட்டம், சிலம்பாட்டத்திலுமுள்ளது.

7. மண்டியடைவு:

முழு மண்டியிலிருந்து குதித்துப் பின் காலை இழுத்து மண்டியால் பூமியில் தட்டுவது ஆகும். இதனை பரதக்கலை கோட்பாடும், ஸ்வபோத பரத நவநீதமும் ஒத்துள்ளது. சூடாமணியில் இவ்வடைவு கூறப்படவில்லை. பாமர நடனமான தெருக்கூத்து, ஒயிலாட்டம், போன்றவற்றிலும் போர்ப் பயிற்சி ஆட்டமான சிலம்பாட்டத்திலும் இவ்வடைவு உள்ளது.

8. பாய்தல் அடைவு:

அரை மண்டியிலிருந்து குதிப்பது, பாய்வது இரண்டுமே பாய்தல் அடைவு. இதனைப் பரதக்கலை கோட்பாடும் கூறுகிறது. ஸ்வபோத பரத நவநீதம் பாய்தல் அடைவையே,

தத்தல், தாண்டல், துள்ளல், எகிறல் என நான்காக பிரித்து விளக்கியுள்ளது. இவ்வடைவுகளை 'பொய் அடைவு' என கபில் வாட்ஸ்யாயனன் கூறியுள்ளார். தெருக்கூத்து, ஒயிலாட்டம், சிலம்பாட்டம் போன்றவற்றிலும் இவ்வடைவு இடம் பெற்றுள்ளது.

9. தட்டுமுட்டு அடைவு:

அரை மண்டியிலிருந்து வலது கால் பாதத்தை தட்டி மறு காலின் முன்படத்தைக் குத்தித் தட்டுவது. ஆனால் பரதக் கலை கோட்பாட்டில் ஒரே பாதத்தைத் தட்டியும் பின்பு மெட்டியும் இயங்கச் செய்வது என்கிறது.

ஸ்வபோத பரத நவநீதத்தில் ஒரு காலைச் சமமாகத் தட்டி தட்டிய காலின் குதியை மட்டும் திரும்பத் தட்டிப் பின்னர் மறு கால் பாதத்தை நாட்டிப் பிறகு குதியைத் தட்ட, தட்டு மெட்டடைவாகும் என்கிறது. இன்றைய நிலை இதன் உட் பிரிவாக இருக்கலாம்.

இனி சுற்றலடைவு, கோர்வையடைவு என இரண்டு அடைவு களைப் பரதக் கலை கோட்பாடும், ஸ்வபோத பரத நவநீதமும் கூறுகின்றன இவை இரண்டும் எளிதில் விளங்குவனவாக உள்ளதால் இந்நூல்களும் பத்துவகை அடைவுகளிலேயே எல்லா அடைவுகளையும் உட்பிரிவுகளாக்கி அடக்கியுள்ளன என்பது தெரிகிறது.

வேட்டையாடி களைத்த மனிதன் மாலை வேளையில் மயிலின் ஆடலையும் மானின் துள்ளலையும் கண்டு களித்தான். ஆனால் அந்தக் காட்சி எல்லா காலத்திலும் கிடைக்காத போது அதைத் தானே ஆட முயற்சித்தான். அப்படி ஆடத் தொடங்கி அவனால் வளர்க்கப்பட்ட இந்நடனக் கலையில் கால் அசைவுகள் இன்று பலவாக உள்ளன. தஞ்சைவழி, பந்தணைநல்லூர் வழி, வழுவூரார் வழி இப்படி பல வழிகளில் வளர்ந்து செழித்துள்ளது.

மஞ்சரியில் துணுக்குகள்

சு. இராமன்,

கேரளப் பல்கலைக் கழகம்.

இதழியல் உலகில் இடம் நிரப்பிகளாக (Space fillers) நுழைந்த துணுக்குகள், காலப்போக்கில் தங்களுக்கென்றே தனி இதழ்கள் உருவாகும் அளவிற்குப் பெரு வளர்ச்சி பெற்று விட்டன. பரபரப்பான இன்றைய சமூகத்தில், மக்கள் தங்களுக்குக் கிடைக்கும் குறுகிய நேரத்தில் பலவகையான (Varieties) செய்திகளையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற காலத்தேவையே இதற்குக் காரணம். தகவல்களை சுருங்கிய வடிவில் எளிமையாகவும், அதேவேளையில் முழுமையாகவும் தருகின்ற துணுக்குகள், 1980-81 என்னும் இரண்டாண்டு மஞ்சரி இதழ்களில் (24 இதழ்கள்) அமைந்துள்ளமையைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

மஞ்சரியில் துணுக்குகள்:

மஞ்சரியில் அமைந்த துணுக்குகள் வாழ்வியல் சிந்தனை குறித்தவை, வாழ்க்கை நிகழ்ச்சி பற்றியவை, சமயம்-ஆன்மீகம் சார்ந்தவை, விஞ்ஞானம் குறித்தவை எனவும், இவற்றில் அடங்காதவை பிறதுணுக்குகள் என்றும் மொத்தம் ஐந்து பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. இவை மேலும் பல உட்பிரிவுகளாக பாகுபாடு செய்யப்படுகின்றன. இப்பாகுபாடுகள் வரையறுக்கப்பட்ட கட்டிடச்சுவர் போன்றவையல்ல. ஆலமரத்தின் கிளைகள் போன்று ஒன்றில் ஒன்று மிடைந்து நிற்கும் தன்மை பெற்றவை. கருத்துக்களின் "அழுத்தம்" அடிப்படையிலேயே இவை அமைகின்றன.

துணுக்குகள் அமைப்பு :

குறிப்பிட்ட பக்கத்தில்தான் அமையவேண்டும் என்ற வரையறை இன்றி, முதல் நான்கு பக்கங்கள் தவிர்ந்த ஏனைய பக்கங்களில் படைப்புகளின் இறுதியை அடுத்து அமைகின்றன. உள்ளடக்கத்தின் அடிப்படையில் பொருத்தமான தலைப்புகளைப் பெற்று. இதழின் உடல்பகுதியில் இருந்து வல, இடப் பக்கம் சிறிது உள்வாங்கிய நிலையில் அமைந்துள்ளன துணுக்கின் இறுதியில் அவை பெறப்பட்ட விபரங்கள் கூறப்படுகின்றன. படர்க்கைக் கூற்றிலேயே பெரும்பான்மையான துணுக்குகள் அமைந்தாலும், தன்மைக் கூற்றில் அமையும் துணுக்குகளும் உண்டு. இதழின் உடல்பகுதிக்குப் பயன்படுத்தும் 10 point அளவே துணுக்குகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

துணுக்குகள் அளவுநிலை :

மஞ்சரியில் அமைந்துள்ள மொத்தம் 316 துணுக்குகளில் வாழ்வியல் சிந்தனை குறித்து 121 துணுக்குகளும், வாழ்க்கை நிகழ்ச்சியாக 99 துணுக்குகளும். சமயம் — ஆன்மீகம் சார்ந்தனவாக 12 துணுக்குகளும், விஞ்ஞானம் பற்றியதாக 23 துணுக்குகளும், பிற துணுக்குகளாக 61 துணுக்குகளும் இடம் பெறுகின்றன.

1. வாழ்வியல் சிந்தனைகள்:

மனம் போனபடி வாழும் மனித மனதில் சிந்தனைகளைத் தூண்டி, உயர்ந்த வாழ்விற்குத் தேவையான மனித மதிப்பீடுகளை (Human values) உணர்த்தும் துணுக்குகள் மிக அதிகமாக உள்ளன.

ஆன்றோர் வாக்கு:

வாழ்வைப் பற்றிய தொலைநோக்கு பார்வை கொண்ட பெரியோர்களின் ''மன்னித்தலே மனிதனின் முதற் கடமை. அதை நமக்காக நாம் மட்டுமே செய்ய முடியும்''; ''உலகில் தோன்றிய பெரியோர்கள் அனைவரும் வாழ்வின் பயங்கர எல்லையைஉணர்ந்து எதிர்த்துப் போராடியவர்களே'' என்பன போன்ற சிந்தனைகள் வாயிலாக வாழ்வியல் மதிப்பீடுகள்

பல உணர்த்தப்படுகின்றன. அன்பு, அறிவு, கற்பு, புகழ், ஈகை, செயல்திறன், என்று பல்வேறு மனித மதிப்பீடுகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. இந்திய, தமிழக சிந்தனைகளைவிட பிறநாட்டுப் பெரியோர்களின் எண்ணங்களே அதிக அளவில் இடம் பெற்றுள்ளன.

பழமொழியும் நீதியும் :

முன்னோரின் அனுபவ அறிவுரைகளான பழமொழிகளும் வாழ்வியல் சிந்தனையை உணர்த்தி நிற்கின்றன. "ஆயிரம் மைல் யாத்திரை செய்து புண்ணியம் தேடுவதை விட, வீட்டில் இருந்து கொண்டே ஒரு நன்மை செய்வது மேலானது" என்று நற்செயலின் பயனை விளக்கி நிற்கும் சீனப் பழமொழியைப் போன்று ஜப்பான், பர்மா, ரஷ்யா, அயர்லாந்து நாட்டுப் பழமொழிகளும் இடம்பெற்றுள்ளன. நீதிகளைக் கூறுபனவாக இரண்டு துணுக்குகள் அமைந்துள்ளன.

வாழ்வியல் சிந்தனைகள் "நேரடியாகக் கூறல், கேள்விநிலை, முரணழகு, உவமை, உருவகம்" என்ற முறைகளில் வெளியிடப் படுகின்றன.

2. வாழ்வியல் நிகழ்ச்சிகள்:

பிறரைப்பற்றி அறிய ஆர்வம் காட்டுவது மனித இயல்பு. மற்றவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் சுவையளிப்பதோடு, வாசகர்களுக்குச் சிறந்த படிப்பினையாகவும் அமைகின்றன.

பெரியோர் வாழ்வியல் :

"பெருமக்களின் வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் மக்களை எளிதில் கவர்கின்றன என்பார் கார்ல் வார்ன்" (Modern News Reporting p.11). தற்கால இதழ்கள் பலவும் அரசியல் தலைவர்கள், சினிமாக்கலைஞர்கள் பற்றிய செய்தி களுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஆனால் மஞ்சரி முற்றிலும் மாறுபட்ட நிலையில் சமயத் தலைவர்கள், சிந்தனை யாளர்கள், வரலாற்று மாந்தர்கள் ஆகியோரின வாழ்வில் நிகழ்ந்த சம்பவத்துணுக்குகளை வெளியிட்டு வருகிறது. கவி

தாகூர் தமது மகளின் திருமணத்திற்கு வரதட்சணை கொடுக்க நேரிட்டது, டார்வினின் குழந்தை மனது என்பன போன்ற துணுக்குகள் பெரியோரின் மற்றொரு வாழ்வியல் பகுதியைச் சுட்டி, சுவை அளிக்கின்றன.

வாசகர் வாழ்வியல் :

வாசகர்களுக்கும் இதழ்களுக்கும் இடையேயுள்ள தொடர்பு, இதழ்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இதழ்கள் பலவும் வாசகர் கடிதங்கள் போட்டிகள் போன்றவற்றை வெளியிடுவது வாசகர் இதழ் உறவு வளர்ச்சிக்கே வாசகர்களின் வாழ்வில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சிகளை வாசகர்கள் தன்னோடு பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பினை மஞ்சரி அளித்து வருகின்றது பெயர் ஒற்றுமையால் ஏற்பட்ட குழப்பங்கள், பயண அனுபவங்கள், சிக்கலில் மாட்டிக் கொள்வது, குழந்தைகளின் அன்புள்ளம் போன்ற வாசகர்களின் வாழ்வியல் கூறும் துணுக்குகள் சுவையளித்தலோடு, வாசகர்களின் எழுதும் ஆற்றலையும் தூண்டி விடுகின்றன. இவை தன்மை கூற்று நிலையிலேயே அமைந்துள்ளன.

மக்கள் பழக்க வழக்கம் :

தனி மனிதர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூறுவதோடு, நேவார், ஒரிஸா காட்டு இனம் போன்ற சமூகத்தினரின் வாழ்க்கை நிகழ்ச்சித் துணுக்குகளும் மஞ்சரியில் இடம் பெற்றுள்ளன. தீயின்முன் வீரசபதம் எடுத்தல், சிறுமியரை வில்வ மரத்திற்குத் திருமணம் செய்து வைப்பது போன்ற பழக்க வழக்கங்கள் மக்களின் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் உணர்த்துகின்றன.

3. சமயம் – ஆன்மீகம் :

இந்தியப் பண்பாடு சமயத்தோடு இணைந்தது. மக்கள் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு சமயத்தைச் சார்ந்திருக்க வேண்டிய சமூகச் சூழல், சமயம் பற்றிய நாட்டத்தை இயல்பாகவே உருவாக்குகின்றது. மஞ்சரியில், திருமால், சூரியனின் செருக்கையழித்தது, திருமங்கையாழ்வார் பொன்வட்டில்

எறிதல், தரமணி ஸ்ரீவெங்கடேச பெருமாள் திருக்கல்யாண வைபவம் என்று ஒரு குறிப்பிட்டச் சமயம் சார்ந்தனவாகவே பெரும்பான்மையான துணுக்குகள் அமைகின்றன.

ஆத்ம ஞானத்தை ஊட்டி, ஆனந்த வாழ்விற்கு வழிகாட்டுவனவாக, ''எங்கும் நிறைந்தவன் இறைவன் என்றாலும் உயிரினங்களின் சுத்த அசுத்தங்கள் அவனைப் பற்றுவதில்லை''. ''சரணாகதி தத்துவமே இறைவன்பால் நம்மை அழைத்துச் செல்லும்'' என்பன போன்ற துணுக்குகள் அமைகின்றன. சமய ஆன்மீகத் துணுக்குகளை ஷன்மதங்களின் அடிப்படையிலும்; புராணம், சடங்கு, தத்துவம் என்ற தளத்திலும் ஆராயும் போது வைணவச் சார்புடைய புராணத்துணுக்குகளே அதிகம் உள்ளதைக் காணமுடிகிறது.

4. விஞ்ஞானம் :

ஜனநாயகம் உயிர்த்திருக்கவும் நல்லமுறையில் இயங்கவும் நாட்டுமக்கள் அனைவரும் விஞ்ஞானத்தின் பல்வேறு தளங்களை அறிந்திருப்பது நல்லது என்பார் தி. நு. ரா. (தீபம். பக்.30) இத்தகைய விஞ்ஞான அறிவூட்டும் துணுக்குகள் மஞ்சரியில் இரண்டு நிலைகளில் அமைகின்றன.

கண்டுபிடிப்புகள் :

விஞ்ஞான வளர்ச்சியால் நாள்தோறும் பல நவீன பொருட்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. சாராயத்தில் ஓடும் கார், அதிக பால் தரும் புதிய கலப்பின பசு, மொழி பெயர்க்கும் கருவி என்று பல புதிய கண்டுபிடிப்புகளை வாசகர்களுக்கு அறிமுகம் செய்கின்றது மஞ்சரி.

மருத்துவம்:

''வைத்ய குறிப்புகள்'' என்று தொகுக்கப்பட்ட நிலையிலும், தனித் துணுக்குகளாகவும் மருத்துவத் துணுக்குகள் வெளியிடப்படுகின்றன. நவீன இருதய அறுவை சிகிச்சைமுறை, ஃப்ளு காய்ச்சலுக்குப் புதிய மருந்து, ஆஸ்பிரின் மாத்திரையால் ஏற்படும் பக்க விளைவுகள் என்று மிக நவீன மருத்துவ முறைகள் கூறப்படுகின்றன. மஞ்சரியில் உள்ள விஞ்ஞானத் துணுக்கு

கள் அன்றாட உலகின் அறிவியல் வளர்ச்சியைக் காட்டும் விதத்தில் அமைவது குறிப்பிடத்தக்கது.

5. பிற துணுக்குகள்:

பொதுநிலைப் பாகுபாட்டிற்குள் அடங்காமல் வரும் துணுக்குகள், பிற துணுக்குகள் என்ற பிரிவிற்குள் அடக்கப் படுகின்றன. இவ்வகைத் துணுக்குகள் ''சொல் முறைவகை'' பொருள்வகை என்று மேலும் இரண்டு நிலைகளில் உட்பாகு பாடு செய்யப்படுகின்றன. சொல்லும் முறையில் மூன்று வகைத்துணுக்குகள் அமைகின்றன.

நகைச்சுவைத் துணுக்குகள்;

நகைச்சுவை உணர்வு ஆறறிவு பெற்ற மனிதர்களுக்கே உரியது என்பர். நகைச்சுவை மனிதனின் உடலுக்கும், உள்ளத் திற்கும் மருந்தாக அமைகின்றது என்பது அறிவியல் ஆய்வு முடிபாகும் இத்தகைய நகைச்சுவையைத் தோற்றுவிக்கும் துணுக்குகளைப் பெரும்பான்மையான இதழ்கள் வெளியிட்டு வருகின்றன. மஞ்சரியில் இடம் பெற்றுள்ள நகைச்சுவைத் துணுக்குகள் பேச்சு, படம், சமகால நிகழ்வுகள் என்று அமையாமல் பழைய ருசிகரமான சம்பவங்களின் அடிப்படை யிலேயே அமைந்துள்ளன.

ஆசிரியரை மாணவர் என நினைத்து, தலைமையாசிரியர் அவர் காதைத் திருகியது; பேராசிரியரை பழைய கலைக் களஞ்சியம் என கிண்டல் செய்தல், எடினபரோ கோமகனின் நகைச்சுவையான பதில் போன்ற துணுக்குகள் நகைச்சுவை யளிப்பதோடு, படர்க்கை நிலையிலும் அமைகின்றன. மஞ்சரியில் உள்ள நகைச்சுவைத் துணுக்குகள் ஆபாசக் கலப் பற்றிருப்பது நோக்குதற்குரியது.

முடிபுகள் :

மஞ்சரியில் காணப்படும் துணுக்குகள், குறிக்கோளற்று வாழும் மனிதர்களுக்கு ஆன்மீக சிந்தனையோடு வாழ்வியல் மதிப்பீடுகளையும் சுட்டிக்காட்டி நெறிப்பட்ட நல்வாழ்விற்கு வழிகாட்டி நிற்பனவாகவும்; மனச் சலிப்பை நீக்கிச் சுவை யளிப்பதோடு; பல்துறை அறிவும் பெற்றாக வேண்டிய காலத் தேவையையும் நிறைவேற்றி நிற்கின்றன.

திருவிழாவும் – வழிபாடும் – வாழ்வும்

மு. இராமலிங்கம்
நகரி

முன்னுரை.

வழிபாட்டு நெறிமுறைகள் என்ற இவ்வியலுக்கு கீழ்க் காணும் ஆய்வு மூலங்கள் அடிப்படையாய் அமைகின்றது. இவற்றுடன் இரண்டாவதாகக் குறிப்பிட்டிருப்பது கோயிலில் நடைபெற்ற வழிபாடுகளை ஆய்வாளர் நேரில் கண்டு உற்றுணர்ந்தது. மூன்றாவது ஆதாரம் நூலை அடிப்படையாக வும் மற்றுமுள்ள நான்கும் ஆய்வாளரால் நேரடி அணுகுமுறை யில் சேகரிக்கப் பெற்றவையாகவும் அமைகின்றன.

1. பட்டர்களைப் பேட்டிக் கண்டு அறிந்த உண்மைகள்.
2. உற்றாய்வின் மூலம் உணர்ந்த அனுபவங்கள்.
3. நூல்கள் வாயிலாக அறிந்த செய்திகள்.
4. கர்ண பரம்பரைச் செய்திகள்.
5. கோயிலில் பணிபுரியும் ஊழியர்களைக் கேட்டுணர்ந்த உண்மைகள்
6. உள்ளூர் பக்தர்களின் மூலம் கேட்டறிந்த செய்திகள்

இந்திய நாட்டில் சிறப்புமிக்க 108 வைணவத்திருத்தலங்கள் உள்ளன. அவற்றுள் தென்னாட்டில்தான் தலைசிறந்து விளங்கு கின்ற பெருமாள்- கோயில்கள் பல உள்ளன. தென்னாட்டில் வடபகுதியில் அமைந்திருக்கும் வேங்கடவன் திருக்கோயில்களுள் சிறப்புடன் விளங்குவது "நாராயணவரம்" அருள்மிகு வெங்கடேசுவர திருக்கோயில். இக்கோயிலில் நடைபெறும் வழிபாட்டு நெறிமுறைகளை ஆய்வதாக இவ்வியல் அமைகிறது.

கோயில்களின் வளர்ச்சி:

முற்காலத்தில் கோயில்கள் மரம், செங்கல், சுண்ணாம்பு போன்ற அழியும் பொருள்களால் கட்டப்பட்டிருக்க வேண்டும் காலப் போக்கில் அவை வெயில் மழை போன்ற சக்திகளின் கொடுமையால் அழிந்து பட்டிருக்கும் எனவே கோயில்கள் அழியாமல் இருக்க அழியாத பொருள்கள் குறித்து சிந்தித்து மனிதன் கோயில்களைக் கருங்கற்களால் கட்டியிருப்பான். இவ்வாறு கட்டிய கோயில்களில் சிலைகள் வைத்து வழி படத்துவங்கினர்.

வழிபாடு—விளக்கம்:

"வழிபடு என்ற வேர்ச்சொல்லினின்று பிறந்த வழிபாடு என்னும் சொல்லுக்கு ' வழியிற்செல்லுகை" (Proceeding on the way) பின்பற்றுகை (following) வணக்கம் (Revevence advnac-tion) பூசனை (Ritual worship) ஆகிய பொகுள்களை Tamil Lexicon என்னும் பேரகராதி தருகின்றது."[1]

"கடவுளினையோ, கடவுளர்களையோ, உயிர் உள்ள வற்றையோ. உயிர் இல்லாதவற்றையோ, வழிபாட்டுச் சொற் களாகக் கொண்டு வழிபடுவதை வழிபாடு எனலாம், என்று ஓர் பேரகராதி கூறுகிறது."[2]

"வழிபாடு மனிதனுடைய அச்ச உணர்ச்சியிலிருந்தும் குற்ற உணர்ச்சியிலிருந்தும், உண்டாகியிருப்பதாக சிக்மெண்ட் பிராய் கருதுகிறார்"[3]

"மனிதன் இவ்வுலகத் துன்பத்தினின்று விடுதலை பெற்று நல்வாழ்வு வாழ விரும்புகிறான் அதற்கு உறுதுணையாக ஓர் ஆற்றல் வேண்டுமென விழைகிறான். கடவுள் என்ற ஆற்றலே பிறர்தர முடியாததைத் தனக்கு அளிக்குமெனக்கருதி அவ் வாற்றலை வழிபடுகின்றான். என பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் கூறுகிறார்"[4]

இறைவழிபாடு—தோற்றம்:

"இறைவழிபாட்டின் தோற்றத்தைபற்றி பாஸ்கரத் தொண்டைமான் பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

இறைவழிபாடு மலை முகட்டிலும், கடல் கரையிலும் நதி தீரங்களிலும் ஆரம்பித்திருக்கிறது. பின்னரே கல்லையும் மண்ணையும். மரத்தையும், மிருகத்தையும் வணங்கத் தலைப் பட்டிருக்கிறார்கள். தமிழ் மக்களை இப்படிவணங்கத் தலைப் பட்டவர்களே' தாங்கள் வணங்கிய தெய்வங்களுக்கு உருவங்கள் அமைத்திருக்கிறார்கள். அந்த உருவங்களைச் சுற்றி கோயில்கள் அமைந்திருக்கிறார்கள்.''[5]

''புராண மக்கட் கூட்டத்தினர் கருவளத்தையும், பயிர் வளத்தையும் ஒருங்கே பெருவதற்காகவே மந்திரங்களைக்கை யாண்டனர். அதன் தருக்கரீதியான முடிவாக வழிபாடு தோன்றி யிருக்கலாம், எனக்கூறுகிறார். கைலாசபதி''[6]

இலக்கியத்தில் வழிபாடு

இலக்கியங்களில் வழிபாடு என்ற சொல் பெறும் பொருளினைக் காண்போம். தொல்காப்பியத்தில் வருகின்ற ''வழிபடு தெய்வம்''[7] ''வழிபடுகிழமை''[8] ''வழிபாடு மறுத்தல்''[9] என்ற சொற்றொடர்களுக்கு ''வணக்கம்'' என்ற பொருளே வழங்கப்படுகின்றன, ''வழிபடுவோரை வல்லறிதீயே''எனவரும்.

புறநானூற்று அடியில் வழிபடுவோம் என்பது வணங்குதல் என்ற பொருளிலே ஆளப்படுகிறது[10].

''வழிபடல் சூழ்ந்த தின் அவருடை நாட்டே'' என்ற குறுந் தொகை அடியில் வரும் வழிபடல் என்பதற்குச் செல்லுதல் என்ற பொருளைக் கொள்கிறார் டாக்டர். உ வே சாமிநாத ஐயர்.

சிலப்பதிகாரத்தில் ''வந்தனை செய்வது வழிபடு தலைக் கோல்''[12] ''கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள்''[13] என்ற அடிகள் இடம் பெற்றுள்ளன. அவ்வடிகளில் உள்ள வழிபாடு, வழிபாடு என்ற சொற்களுக்கு வணங்குதல் என்ற பொருளே கூறப்படுகிறது. ''வழிபடு வல்லுதலால்''[14] என்ற நாலடியார் பாடலில் வழிபாடு என்பதற்கு பின்பற்றுதல் என்று பொருள் வழங்கப்படுகிறது. திருக்கோவையாரில் ''மதுறுதலியை வழி படுத்து''[15] என்ற தொடரில் வழிபடுத்து என்பது பயனுமாதல் என்ற பொருளைக் குறிக்கிறது. ''அமரர்கோன் வழிபட்டால்''[16]

எனத் திருவாய் மொழி நூற்றந்தாதியில் வழிபடல் என்ற "சொல்" நேர் செல்லுதல் எனும் பொருளைத் தருகிறது. "காஞ்சிப் புராணத்தில் இருமொழியும் வழிப்படுத்தா"[17] என்ற தொடரில் வழிபடுத்துவர் என்பதற்குச் 'சீர்திருத்தம்' எனும் பொருள் கூறப்படுகிறது.

மேற்கண்டவற்றிலிருந்து வழிபாடு என்பதற்கு கேட்பாடு சீர்திருத்தல், செல்லுதல், பின்பற்றுதல். வணங்குதல் என்ற பொருள்கள் வழங்கப் பட்டுள்ளதை அறிகிறோம். முன்னோர் காட்டிய அல்லது வகுத்த வழியில் செல்லுதலே வழிபாடு என்று கருதப்பட்டு இருக்க வேண்டும். வழிபாடு என்ற சொல்லுக்கு முத்தியாகிய பேரின்ப நிலையை அடைய இறைவனை வழிபட வேண்டும் எனும் பொருளினையும் கொள்ளலாம். இக்கருத்து பிற்காலத்தில் தோன்றி வழிபாடு என்றபொருளில் (வணங்குதல்) நிலை பெற்றிருக்க வேண்டும்.

வழிபாடும் பக்தியும்

ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவன் மீது பக்தி உணர்வு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வழிபாடு சிறப்பாக அமையும் பக்தி என்பது பற்றி அறிஞர் நடராஜன் கூறும் கருத்தாவது.

"பக்தி என்பது கடவுளின் பால் மனிதனுக்கு இருக்கும் அன்பின் அகத்தோற்றம். பூசை அல்லது வழிபாடு என்பது அதன் புறவெளிப்பாடு. கடவுள் தமது பேரருள் காரணமாக இறங்கி வருகிறார். பக்தன் கர்மயோகத்தினாலோ ஞான யோகத்தினாலோ, பக்தியோகத்தினாலோ உயர்ந்து அவரை அடைகிறான். நமது இறையன்பை பூசை அல்லது வழிபாடு வாயிலாக வெளிப்படுத்துவதற்கு நிரம்பவும் எளிதாயிருப்பது அர்ச்சை வடிவம்"[18]

"சிலர் கடவுளுக்கு உருவம் படைத்து வழிபடுகிறார்கள். சிலர் உருவ வழிபாட்டை எதிர்க்கிறார்கள். பெரும்பாலோர் கோயில் அல்லது பெரிய கட்டிடம ஒன்றை அமைத்து வழிபாடு செய்கிறார்கள். உருவ வழிபாட அருவ வழிபாடா எது சிறந்தது என்று போராட வேண்டிய தேவையில்லை. அவரவர்கள மன

ஒருமைப்பாட்டுக்கு எது உதவிபுரிகிறது என்று நம்புகிறார்களோ அதைப்போற்றலாம். அதற்காகப் போராடிப் பிளவுபட்டு நிற்கத் தேவையில்லை. உள்ளத்தில் கடவுள் நெறி பதிவது ஒன்றுதான் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்''[19]

ஆலயமும் - வழிபாடும்

வழிபாட்டில் ஆலயம் முதன்மையான இடத்தை வகிக்கிறது மக்களின் உள்ள நிறைவுக்கு, மனஅமைதிக்கும், கோயில் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது இதன் முக்கியத்துவத்தை ஔவையார் தம் நூலில் பின்வருமாறு கூறுகிறார்.

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று''[20]
''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா''[21]

முடிவுரை:-

மேற் கூறிய கருத்துக்களை நோக்கும்போது இறைவழிபாடு மனித வாழ்வின் மேம்பாட்டிற்கும், மன அமைதிக்கும், நல்வாழ்விற்கும் இன்றியமையாதது என அறிகிறோம். அதனால் மனிதனாகத் தோன்றிய ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வழிபாட்டில் நாட்டம் கொண்டு இருப்பது நல்லது.

அடிக் குறிப்புகள்

1. **Tamil Lexicon P - 35 - 45**
2. **Encyclopedia - Britanica = P = 890**
3. இரா, சீனிவாசன், சக்திவழிபாடு, பக்= 2-3
4. பேராசிரியர். சுந்தரம் பிள்ளை-**Religion and Philosophy —P= 89**
5. தொ மு. பாஸ்கரத் தொண்டைமான். தமிழ்கோயில்கள் தமிழர் பண்பாடு ப. 3
6. க. கைலாசபதி, பண்டைத்தமிழர் வாழ்வும்-வழிபாடும். ப-80
7. தொல்காப்பியம், பொருளதிகாரம். எண், 415
8. மேற்படி எண்—168
9. மேற்படி என்—109

10. புறநானூறு பாடல் 10
11. குறுந்தொகை ப=9
12. சிலப்பதிகாரம் 3:120
13. மேற்படி 9:40
14. நாலடியார் பாடல் 309
15. திருக்கோவையார் எண் 214
16. திருவாய் மொழி, நூற்றந்தாதி பாடல் 29
17. காஞ்சி புராணம் ப = 249
18, அ. நடராசன், இந்துசமயக் கையேடு ப=65
19. மு. வாதராசன், நல்வாழ்வு ப: 16
20. ஔவையார் கொன்றை வேந்தன் ப.1
21. மேற்படி, ப,3
22. மிழலைத்தொண்டன், வாழ்வும், வழிபாடும் ப 30
23. மேற்படி ப 42
24. திரு. வி. கல்யாண சுந்தரனார். வாழ்க்கைவழி ப. 36
25. ஸ்ரீமத் சித்பவானந்தர், கடவுளின் வடிவங்கள் ப. 165
26. இரா. சீனிவாசன், சக்திவழிபாடு ப-37
27. மாருதிதாசன் 'இந்து சமயக் கருத்துக்கள் ப-46
28, மிழலைத் தொண்டன், வாழ்வும், வழிபாடும், ப—75
29. சோமலெ, தமிழ்நாட்டுமக்களின் மரபும், பண்பாடும் ப—138
30. மேற்படி ப 140
31. மிழலைத் தொண்டன், வாழ்வும், வழிபாடும் ப.76
32 மேற்படி ப 80
33. அப்பர் தேவரம் பாடல்
34. சோமலெ, தமிழ்நாட்டு மக்களின் மரபும், பண்பாடும் ப-144

சித்தூர் மாவட்ட விடுகதை களில் காதல்

வ. இராசரத்தினம்

திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி

மக்களின் வாழ்வோடு பொருந்திய இலக்கியமே கால மெனும் கடுவெள்ளத்திற்கு எதிர்க எதிர் நீச்சலிட்டு நெடுங் காலம் வாழ்கின்றது. அத்தகைய இலக்கியங்கள் நம்மிடையே பெருகி, விரிந்து கிடக்கின்றன. இவை பண்படாத நிலங்களாகிய காடுகளிலும் மலைகளிலும் தானே வளர்ந்து மலர்ந்து மணம் வீசும் காட்டுப்பூக்களைப் போன்றவை. இவற்றில் பண்பாட்டு வளர்ச்சிக்கு நாட்டுப் பாடல்களும் அனுபவ முதிர்ச்சிக்குப் பழ மொழிகளும் சான்றாக நிற்பதைப் போல கிராமப்புற மக்களின் சிந்தனைக்கு ஒரு பயிற்சியாகவும், அறிவுக்கு உரைக்கல்லாக வும், சிந்தனையின் தூண்டுகோலாகவும் விளங்குவது விடுகதை களாகும்.

சொல்லாராய்ச்சி:

'விடுப்பது' என்றால் சொல்வது என்பது பொருள். விடுப் பது காரணமாக 'விடுகதை' எனப் பெயர் பெற்றிருக்கலாம். விட்டகதை, விடுகின்றகதை, விடும்கதை என வினைத்தொகை யாக இச்சொல் அமைந்துள்ளது.[1] இலக்கியத்தில் 'புதிர்' என்று வழங்கப்படுகிறது. தொல்காப்பியர் 'பிசி' என்று குறிப்பிடு கின்றார்.

"ஒப்பொடு புணர்ந்த உவமத்தானும்
தோன்றுவது கிளந்த துணிவினானும்
என்றிரு வகைத்தே பிசி வகை நிலையே"[2]

சித்தூர் மாவட்டத்தில் வழங்கும் விடுகதைகளை நோக்கும். போது அவை இலக்கியங்களில் காணப்படும் புதிர் போன்று அல்லாமல் நீண்டக் கதைகளைக் கொண்டு விளங்குகிறது. ஒரு விடுகதையை விடுவிக்க வேண்டுமானால் ஒரு கதை கூறி அதன் மூலமாக தான் விடுவிக்க முடியும். விடுவிக்க கதை கூறுவதால் இது விடுகதை எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

நாட்டுபுற இலக்கியங்களில் காதல்:

நாட்டுபுற இலக்கியங்களில் காதலைப் பற்றியும் கள்ளக் காதலைப் பற்றியுமே அதிகமான பாடல்கள் காணப்படு கின்றன. காதல் என்பது எல்லா மக்களுக்கும் அடிப் படையானது ஆனால் நாட்டுப்புற மக்கள் தங்கள உள்ளத்து உணர்ச்சிகளை மூடி மறைக்காமல் எடுத்துக் கூறுவது அவர் களது வெள்ளை மனதையும் வெகுளித்தன்மையையும் வெளிப்படையாகக் காட்டுகின்றது. இவர்களது காதல் விடு கதைகளில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆய்வதே. இக்கட்டுரையின் நோக்கம். இம்மாவட்டததில் தமிழும் தெலுங்கும் சமமாக பேசப்படுவதால் இரண்டுமொழி விடுகதை களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

காதல் :

நாட்டுப்புற மக்களும் தமக்குவரும் மனைவியர் எல்லா வகையிலும் தங்களுக்குப் பொருத்தமாக இருக்கவேண்டும் என நினைத்துள்ளனர். ஓர் அரசகுமாரன் உலா வருகின்றான். அங்கு எள் காயவைத்து காவலிருக்கும் ஓர் அழகியப் பெண்ணைக் கண்டு காதல் கொள்கின்றான். அவள் அறிவை தெரிந்துக் கொள்ள ஓர் விடுகதையை விடுக்கிறான்.

"எள்ளிலே பிறந்து எள்ளிலே வளர்ந்த
இளவாணி மகளே
எள்ளினும் சிறிய எல என்ன எல"
அப்பெண்ணும் அரசகுமாரனை பார்த்து
பூவிலே பிறந்து பூவிலே வளர்ந்த
புஷ்பராணி மகனே

பூவிலே இரு ஜாதி பூ என்ன பூ என்று கேட்கிறாள். 'எளித்திரி' என்ற ஒருவகை மரத்தில் தான் எள்ளைவிட சிறிய இலையும் இரண்டு வண்ண பூவும் உள்ளது. எனவே அவளின் அறிவை கண்ட அரசகுமாரன் அவளையே திருமணம் செய்து கொள்கிறான்.

தெலுங்கு மொழியிலும் இத்தகைய விடுகதைகள் காணப் படுகின்றன. வசதியான பெண்ணை ஓர் ஏழைவிதவையின் மகன் காதலிக்கின்றான். இருவரும் மிகவும் நெருங்கி பழகு கின்றனர். இதையறிந்த பெண்ணின் பெற்றோர் அவளுக்கு திருமணம் நிச்சயிக்கின்றனர். அவள் எவ்வளவோ தடுத்தும் முடியவில்லை. எனவே காதலனை சமாதானபடுத்திவிட்டு இனி நீவேறு திருமணம் செய்து கொண்டு சந்தோஷமாயிரு என்று கூறி விடைபெற்று செல்கின்றாள். அவளுடைய திருமணநாளும் நெருங்குகின்றது. பிரிவு துயர் தாங்காத அவன்தன் தாயை அழைத்து,

''கல கல முத்யம் காலிஞ்சின முத்யம்
நீ ஏனுகுல வச்சின மோர்தகு
நா ஏனுகுல மோத அந்தல
மேத அந்தின்சி போது ரா
லேத மாவி சிவகா''

என்று தன் காதலியிடம் சொல்லும்படி கேட்கிறான். தாயும் மகனின் துயரை போக்க இதை அவளிடம் கூற அவளும் புறபட்டு வருகின்றாள். பிரிவுதுயரில் இருக்கும் தன் காதலனைக் கண்டு,

''ராஜ ராஜா தெல்லணி செருகுனு
பள்ளனின்சி ஆரசமு ஆரகின்சி
ஆ பிப்பிணி எத்துதிண்டே ஏமி
எனுமு திண்டே ஏமி'' என்று கேட்கின்றாள்.

அதாவது கரும்பை தின்றுவிட்டு எரிந்த சக்கையை மாடு தின்றால் என்ன, எருமாடு தின்றால் என்ன, என் நிலமையும் அதுபோல தான் எனவே கவலையை விடு என்று ஆறுதல் கூறிச் செல்கின்றாள்.

கள்ளக்காதல் :

ஓர் அரசன் தன் மனைவி வேறு ஆடவனை காணக் கூடாதவாறு கட்டுப்பாட்டு அமைத்து காத்து வருகின்றான். அவள் அங்கு பிச்சைக்கு வரும் ஒரு பாம்பாட்டியைக் காதலிக் கின்றாள். பாம்பாட்டி பாம்பை தூது அனுப்புகின்றான். அவர்கள் சந்திப்பு கடுமையாக இருப்பதால் அரசனைக் கொன்று விட்டால் பாம்பாட்டியோடு சந்தோஷமாக வாழலாம் என நினைத்து, இம்முடிவை தன் கள்ளக் காதலனுக்கும் தெரிவிக் கின்றாள். அவனும் சம்மதித்து அரசனைக் கொல்ல பாம்பை அனுப்புகின்றான. அரசன் அந்த பாம்பை கொன்று விட்டு வீட்டிற்கு வந்து அரசியிடம் தெரிவிக்கின்றான். மிகவும் கவலைப்பட்ட அரசி அந்த இறந்த பாம்பைக் கொண்டுவந்து தோலை உரித்து அதை தன் உள்ளாடைக்கு நாடாவாகவும். அதன் எலும்பை சுருக்கி அதை தங்கத்தால் மூடி பூவாகவும் சூடிக்கொண்டு தன் கணவனிடம்

"உரிச்சி உள்ளுகட்டி
உள்ளாடை சில்லாடை கட்டி
சுருக்கி முடித்த பூ என்ன பூ ?"

இதை எனக்கு விடுவிக்க வேண்டும் என்று கேட்கின்றாள்.

ஒருவன் தன் கள்ளக் காதலியை சந்திக்க நேரம் குறித்து வீட்டுக்கு வருகின்றான். மனைவி மாதவிலக்காகியிருந்த காரணத் தால் வீட்டிற்கு வெளியிலேயே இருக்கின்றாள். நிலவும் பகலாக காய்கிறது. இவையெல்லாம் அவனுக்கு இடையூறாக இருக் கின்றன. தன் கள்ளக்காதலியை சந்திக்க முடியாத கோபத்தில் மனைவியை அடிக்கின்றான். அதற்கு மனைவி

"புண்யஸ்ராலு வென்னல பூசிகாயங்க
புண்யஸ்ராலு வாகிட நிலசி உண்டங்க
ஆவுகு ஆபதனி எத்துகு வாதவேசின
காரணம் ஏமி செப்பு ராஜா" என்று கேட்கின்றாள்.

கிராமங்களில் மாடுகளுக்கு வரும் நரம்பு சம்மந்தமான வியாதி களுக்கு கம்பியை காயவைத்து சூடு போடுவது வழக்கம். நீ என்னை அடித்தது பசுவுக்கு உடல்நிலை சரியில்லை என்று எருதுக்கு சூடு போட்டதைப் போலுள்ளது என்று கூறுகின்றாள்.

பகற்குறி:

அரசன் ஓர் அழகான பெண்ணைக் கண்டு காதல் கொள்கின்றான். அவள் யாரென்று விசாரித்த போது அவள் மந்திரியின் மனைவி என்று தெரியவருகிறது உடனே மந்திரியை அழைத்து ஓலை ஒன்றை கொடுத்து பக்கத்து நாட்டு அரசனிடம் சேர்க்குமாறு கூறி அனுப்புகின்றான். அரசனின் சூழ்ச்சியை அறிந்த மந்திரி வீட்டில் வந்து யாருக்கும் தெரியாமல் படுத்துக்கொள்கின்றான். மந்திரி இல்லை என்ற தைரியத்தில் அரசன் மந்திரியின் வீட்டிற்கு வருகின்றான். அரசனைக் கண்ட மந்திரியின் மனைவி,

''சரசரன்னு வந்தவரே
சரசமானவர் வீட்டிலிருக்கிறார்
ஊருக்குப் பின்னாலே பிள்ளையார் கோயில்''

என்று கூறுகின்றாள் அரசன் அங்கு செல்ல அவளும் தண்ணீர் கொண்டுவர செல்பவள் போல சென்று அரசனை சந்திக்கின்றாள்.

இரவுகுறி:

ஒருவன் ஒரு பெண்ணைக் கண்டு நான் உன்னைக் காதலிக்கிறேன் உன்னிடம் தனிமையில் பேச வேண்டும் எப்பொழுது வருவது என்று கேட்கின்றான். அவளும் ஒரு நேரத்தை அவனுக்கு கூறுகின்றாள்.

''வானகுரிசி செருவுநிண்டி
செருவுலோ உண்டே ஐம்பு ஏண்டி

மானு மானு ராசுகுன்னப்புடு ரா'' என்று கூறுகின்றாள். மழை பெயது, ஏரிநிறைந்து, ஏரியிலிருக்கும் கோரை உலர்ந்து, மரமும் மரமும் உராயும் போது வா என்று கூறியதனால் அவன் போய் ஏரி கரையிலே உட்கார்வதும், பெருமூச்சோடு திரும்புவதுமாக இருக்கின்றான். இவன் செயலைக் கண்காணித்த மாடு மேய்ப்பவன் ஒருவன் அவனைக் கண்டு காரணம் கேட்கிறான். அவனும் அந்த விடுகதையை அவனுக்குக்கூறி ஏரி எப்பொழுது நிறையும் என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறுகின்றான். மாடுமேய்ப்பவன் அந்த விடுகதைக்கு விடை கூறு

கின்றாள் மழை பெய்து ஏரி நிறைதல் என்பது அகல் விளக்கிலே எண்ணெய்யிடுவது, கோரை காய்தல் என்பது அகல் விளக்கிலுள்ள எண்ணெய் எல்லாம் தீர்ந்து, திரியும் காய்வது, மரமும் மரமும் உராயும போது என்பது கதவை மூடுவது, எனவே இரவு விளக்கை அணைத்து கதவை மூடும் நேரத்தில் உன்னை வரச்சொல்லி இருக்கின்றாள் என்று கூற அவன் அன்று இரவே அவளிடம் செல்கின்றான்.

முடிவுரை:

கடுமையான வேலைசெய்யும் நாட்டுப்புறமக்கள் வேலை சுமை தெரியாமல் இருக்க அவர்களுடைய பாடல்களிலும், விடு கதைகளிலும் காதல் சுவையை மிகுதியாகக் கலந்து விடு கின்றனர். எனவே இவ்விலக்கியங்களில் காணப்படும் காதல், கள்ளக் காதல் போன்றவை பொழுது போக்குக்காக கலப்பனவே அன்றிஅவர்களின் வாழ்க்கையை பிரதிபலிப்பன அல்ல.

சான்றெண் விளக்கம்:

1. இரா. சுரேந்திரன், நாட்டுப்புற இலக்கியம், நலந்தரு விளக்கம் ப. 153.

2. தொல்காப்பியம், பொருள்திகாரம். நூ.

விடுகதை சொன்னவர்கள்:

1. இரவி, பேரக்கூர்
2. வெங்கடேசன், ஜன்னல்வமிட்ட
3. சந்திரா, பேரக்கூர்
4. ஆனந்தன். கம்மபல்லி.

விகடனின் சிறப்புச் சிறுகதைகள்

நா. இளங்கோவன்
உதகை

முன்னுரை :

சிறுகதை என்ற இலக்கிய உருவம் இன்று மக்களிடையே பரந்து வளர்ந்து செல்வாக்குடன் திகழ வார இதழ்களும் காரணமாகின்றன. 'இது சிறப்பாக பத்திரிகையுகம் வாசகர்கள் தான் பத்திரிகையின் தனிப்பெரும் அதிகாரிகள்'[1] வார இதழ் களுள் ஒன்றான ஆனந்த விகடன் தனது 9-10-88 இதழைச் சிறுகதைக்குச் சிறப்புச் சேர்த்திடும் வண்ணம் 'சிறுகதை ஸ்பெஷல்' ஆக வெளியிட்டுள்ளது. அச்சிறப்பிதழில்இடம்பெறும் பதினொரு கதைகளும் இங்கு ஆய்வுப்பொருளாகின்றன.

மு கருணாநிதியின் 'சரித்திரங்கள் திரும்புகின்றன' மாலனின் 'மாறுதல் வரும்', சாருப்ரபா சுந்தரின் 'உயர் ரக எதிரி', சுபாவின் 'கவிஞனும் கலைஞனும்', பாலகுமாரனின் 'ஸ்திரீலோலன்', கார்த்திகா ராஜ்குமாரின் 'சிறகற்ற பறவைகள்' வேம்பத்தூர் லலிதாவின் 'கோபுரம் கட்டும் குருவிகள்', பி.வி. ஆரின்'பச்சைமண்', கீதாவேணுகோபாலின் 'பட்டத்துயானை', ஜெயந்தனின் 'இன்னும் கனவாக', அனுராதா ரமணனின் 'இணை' ஆகிய பதினொரு கதைகளே அச்சிறப்பிதழை அலங்கரிப்பவை.

ஆய்வு நோக்கம் :

இக்கதைகள் இன்றைய நடைமுறையை எந்த அளவு பிரதி பலிக்கின்றன. இவற்றின் கரு எந்த அளவுக்குச் சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிக்கின்றது, தலைப்பு எந்த

அளவு கதைக்கு வலுவூட்டுகின்றது என்ற வினாக்களுக்கு விடைதேடும் நோக்கத்தைக் கொண்டதே இந்த ஆய்வு.

பகுப்புமுறை :

பின்னணியின் அடிப்படையில் இக்கதைகள் ஐவகையின வாகப் பகுக்கப்படுகின்றன. அதன்பின் அவ்வப் பகுப்பில் அடங்கும் கதைகளுள் விடை தேடல் தொடர்கின்றது. வரலாறு, அரசியல், விஞ்ஞானம், திரைக்கலை, சமூகம் என்ற வரிசையில் ஆய்வு நீள்கின்றது.

வரலாறு :

1795 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் நிகழ்ந்த சில நிகழ்ச்சி களை மையமிட்டுப் பின்னப்பட்டுள்ள மு. கருணாநிதியின் 'சரித்திரங்கள் திரும்புகின்றன' இப்பகுப்பில் அடங்குகின்றது.

திணிக்கப்பட்ட திருமணத்தால் திசைமாறிய பறவை யாகித் தீர்ந்துபோன 'கரோலினா' போல் இன்றும் சிலர் வாழ்க்கை நாசமாவதை நாம் காண்கிறோம். வரலாற்றுக்கதை இன்றைய நடைமுறைக்கு ஒத்துப்போவதுபோல் எழுதப் பட்டிருப்பது ஆசிரியரின் திறமைக்குச் சான்றாகின்றது.

திருமணங்களைத் திணிக்காது காதல்மணங்களை ஆதரிக்கு மாறு மக்களைத் தட்டியெழுப்பும் இக்கதை அரசியல் கணக்குகள் தவறவும் வாய்ப்பு உண்டு என்ற எச்சரிக் கையையும் தருகின்றது.

முடிந்துபோன சரித்திரம் திரும்பிக் கொண்டுதான் இருக்கின்றது என்ற கருத்தைத் தெளிவாக்கும் வண்ணம் கதை பின்னப்பட்டுள்ளதால் 'சரித்திரங்கள் திரும்புகின்றன என்ற தலைப்பு கதைக்கு வலுவூட்டுகின்றது.

அரசியல் :

இப்பகுப்பில் மூன்றுகதைகள் அடங்குகின்றன.

இன்றைய அரசியல் சீரழிவு ஒரு கலாசார நசிவின் தொடர்ச்சியே என்பதை மாலனின் 'மாறுதல்வரும்' எடுத்துக் காட்டுகின்றது விஷச்சாராயத்தை நாடும் மக்கள் கலாசார

நசிவிற்குக் காரணமாவது நடப்பியலைச் சார்கின்றது. கள்ளச் சாராய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியைக் கைது செய்தால் மட்டும் கலாசார நசிவும், அரசியல் சீரழிவும் மறைந்துவிட மாட்டா. கலாசாரத்தை நசிவிலிருந்து மீட்டு எடுப்பதே மக்கள் கடமை என்ற விழிப்புணர்வு செயலாக்கப்பட்டால் நம் அரசியலில் நிச்சயம் மாறுதல் வரும் என்ற நம்பிக்கையூட்டும் இக்கதைக்கு 'மாறுதல் வரும்' என்ற பொருத்தமான தலைப்பு இடப்பட்டிருப்பது குறிக்கத்தக்கது.

அரசியல் தலைவனைக் கைது செய்யும் காவல்துறையைக் காட்டிய மாலனிலிருந்து வேறுபட்டு சாருப்ரபா சுந்தர் அரசியல் காவல்துறையின் கைகளைக் கட்டிப்போடுவதையும், காவல் துறையினர் அரசியலால் ஆதாயம் தேட முற்படுவதையும் 'உயர்ரக எதிரி' என்ற தன்கதையில் வெளிக்கொணர்கிறார். இன்றைய அரசியல் தன்னைச் சார்ந்தவனைக் கொலைக்குற்றத் திலிருந்து தப்பச்செய்து ஒன்றுமறியா ஏழையொருவனைக் குற்றவாளியாக்கித் தண்டிக்கும் அலங்கோலத்தை இக்கதை தெளிவாக்குகின்றது. காவல்துறையினரும், அரசியலாரும் கட்டின்றிக் கொடுமைகள் புரிவதை மட்டும் எடுத்துக்காட்டிய அளவில் நின்றுவிடும் கதை இக்கொடுமையைத் தகர்த்திட மக்களிடையே எத்தகைய விழிப்புணர்வு இருக்கவேண்டும் என்பதைக் காட்டத் தவறுகின்றது. குற்றவாளி, அரசியல் செல் வாக்கு மிக்கவர் என்பதால் நிரபராதி ஆக மாறும் விந்தையைக் கேலியாக்கி 'உயர்ரக எதிரி' என்ற தலைப்பு இடப்படுகின்றது. 'பாத்திரங்களைப் படைக்கும்பொழுது படிப்போர் கற்பனை உள்ளத்தில் அவை உண்மையேபோல் தோற்றும்படி படைத்தல் வேண்டும்.'[2] என்ற கூற்றிற்கிணங்கத் தமிழ்வேந்தனும், இன்ஸ்பெக்டரும் இக்கதையில் படைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிக்கத்தக்கது.

யானை, குழந்தையை முதலமைச்சராக்க அதனைப் பண் பட்ட(?) அரசியலறிவுடைய தமிழகமக்கள் ஏற்றுக்கொள்வ தாகப் பின்னப்பட்டதுதான் சீதாவேணுகோபாலின் 'பட்டத்து யானை'. உள்ளடக்கத்தால் சிறப்புப் பெறாவிட்டாலும் தமிழகத் தின் கேலிக்குரிய அரசியல் நிலைமைக்குக் காரணம் தமிழக

மக்களின் நிலை குலைந்த அரசியல் அறிவே என்பதைப் புலப் படுத்தி, நடப்பியலைச் சற்றுத் தாண்டியபோதும் அரசியல் விழிப்புணர்வைத் தமிழக மக்களிடையே எழுப்பிட இக்கதை உதவுகிறது என்பது மெய்யே. கதைத்தலைப்பு உத்தியாகப் பயன்படுத்தப்படவில்லை.

விஞ்ஞானம் :

கி. பி. 2045 ஆம் ஆண்டில் நிகழவிருக்கும் விஞ்ஞான விந்தையை முன் உணர்த்தும் வேம்பத்தூர் லலிதாவின் 'கோபுரம் கட்டும் குருவிகள்' இப்பகுப்பில் அடங்குகின்றது. சிலிக்கன் சிப்ஸூம் ஃபைபரும் கலந்து உருவாக்கப்படும் 'ரிப்ளிக்கா' மனிதர்களை ஏமாற்றவும், அதே சமயத்தில் அவர் களை வாழவைக்கவும் எவ்வாறு உதவுகிறது என்பதைக் கதை காட்டுகிறது வளர்ந்துவரும் விஞ்ஞானத்தின் வேகத்தைச் சித்திரிக்கும் இக்கதையில் இன்றைய நடப்பியலையோ, விழிப் புணர்ச்சியையோ தேடல் வீணாகின்றது. ஒரு பெரியவரை வாழவைக்கக் காரணமாகும் இரண்டு ரிப்ளிக்கா பொம்மைகளே கோபுரம் கட்டும் குருவிகளாகிக் கதைத் தலைப்பில் மெருகு சேர்க்கின்றன.

திரைக்கலை:

திரைக்கலை தன்னைச்சார்ந்த கலைஞன் ஒருவனின் நட்பு வெளிப்பாட்டிற்கு எவ்வாறு தடைக்கல்லாகின்றது என்பதைக் காட்டி, அதற்குக் காரணம் ரசிகர்களின் கண்ணோட்டமே என்பதையும் சுட்டும் சுபாவின் 'கவிஞனும் கலைஞனும்' இப்பகுப்பில் அலசப்படுகின்றது. ரசிகர்களின் அமோக வெறிகாரணமாகத் திரைக்கலைஞர்கள் இன்று சுதந்திரமாக உலவ முடியாத நிலையை, நண்பனின் இறுதிச் சடங்கில் வெளிப்படையாகக் கலந்து கொள்ள முடியாத 'வருண்குமார்' மூலம் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார் 'பாத்திரங் களின் செயல், சைகை, பேச்சு ஆகியயாவும் அவற்றின் குணாதி சயங்களை வெளிப்படுத்துவனவாக இருக்கவேண்டும்'[3], என்ற உண்மையை நிலைநாட்டுவதுபோல் வருண்குமார் படைக்கப் பட்டு நம்முன் உலா வருகின்றான்.

திரைக்கலைஞனின் உணர்வுகளை உயர்வாகப் பரிணமிக்கச் செய்யும் இக்கதை பல கவிஞர்களும், எழுத்தாளர்களும் திரையுலகில் நுழைந்து அதன் காரணமாகத் தம் தரத்தை இறக்கிக் கொள்ளக்கூடாது என்ற விழிப்புணர்வைத தருகின்றது; ஒரு கவிஞனையும், கலைஞனையும் சுற்றிச்சுழல்வதால் 'கவிஞனும் கலைஞனும்' என்ற தலைப்பைப் பெறுகின்றது.

முடிவுரை:

வியாபார நோக்கில் ஆபாசத்தை எழுத்துக்களாக்கிப் பிழைப்பு நடத்தும் இதழ்களினின்று 'ஆனந்தவிகடன்' வேறுபட்டு நிற்கிறது என்பதற்கு இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கதைகளே சான்றுகளாகின்றன. சமகால வாழ்வை மட்டுமல்லாது எதிர்காலத்தையும், முன் நடந்த வரலாற்றையும் கதையாக்குவதில் கூட இன்றைய எழுத்தாளர்கள் தேர்ந்தவர்கள் என்ற உண்மைக்கு நம்மை இழுத்துச் செல்லவும், கதைகளுக்குத் தலைப்பிடுவதை ஓர் உத்தியாகப் பயன்படுத்துவதில் பெரும்பாலான எழுத்தாளர்கள் வலலவர்கள் என்ற கருத்திற்கு நம்மை உடன்பட வைக்கவும் ஆனந்த விகடனின் 'சிறுகதை ஸ்பெஷல்' உதவுகிறது.

குறிப்புக்கள்:

1. க நா சுப்ரமண்யம் — விமரிசனக்கலை - ப. 102
2. அ. சிதம்பரநாதன் — தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் - ப. 7.
3. ப. கோதண்டராமன் — சிறுகதை - ஒருகலை - ப. 3
4. எம். வேதசகாயகுமார் — தமிழ்ச்சிறுகதை வரலாறு-முதற்பகுதி - ப. 96.
5. மு. வரதராசன் — இலக்கிய மரபு - ப. 130
6. கா சிவத்தம்பி — தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் - ப. 115.

தமிழக தற்காப்புக்கலை

சி. இரா. இளங்கோவன்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

தமிழகத்தில் அழிந்துக் கொண்டிருக்கும் நாட்டுபுறக் கலைகளுள் தற்காப்புக் கலையும் ஒன்று. நாட்டுப் புறப்பாடல், கூத்து, பொம்மலாட்டம், கரக ஆட்டம், கும்மி போன்ற கலைகள் தற்போது ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு உயிரூட்டப்படுகின்றன, என்றாலும் மாறிவரும் சமூக வளர்ச்சியில் அதன் தேவை குறைந்து போனதால் அவைகள் தொல் கலைகள் என்ற நிலைக்கு தள்ளப்படுகின்றன. ஆனால் அவைகள் அளவிற்கு தொன்மையும், அவைகளைவிட சமூக தேவையானதுமான தற்காப்புக்கலை கவனிப்பாரற்று அழிந்துக் கொண்டிருக்கிறது. இக்கலை புறக்கணிக்கப்படுவதற்கு தவறான தத்துவ பின்னணியும், மாற்றுக் கலாச்சார ஊடுருவலும் காரணமாக இருக்கின்றன என்றும் கூறலாம்.

மன்னர்கள் காலத்தில், மற்போர், வாட்போர் முறைகள் தற்காப்புகலையின் அடிப்படையில் பயிற்றுவிக்கப்பட்டன. வரலாற்று நூல்களும், சங்க இலக்கியங்களும், தற்காப்புக் கலைக்கு தக்க சான்றுகளை தருகின்றன. இப்படி தொன்மை சிறப்பும், வரலாற்று பின்னணியும் கொண்ட இக்கலைககு இப்போது நாம் உரிமை கொண்டாட முடியாத நிலைமையிலிருக்கிறோம் என்பது மிகவும் வருத்தத்திற்குரிய செய்தியாகும்.

தென்னிந்தியாவிலிருந்துதான் இத்தற்காப்புக்கலை தோன்றியது என்றும், பிறகு வெளிநாடுகளில் பரவி, இப்போது கராத்தே, ஜூடோ, குங்-பூ, போன்ற பெயர்களில் பரவி வருகின்றன என்ற கருத்தை பல தற்காப்புக்கலை ஆசிரியர்களே கூறுகின்றார்கள்.

புத்தமதத்தை பரப்புவதற்காக வெளிநாடுகளுக்கு சென்ற வர்கள், தென்னிந்தியாவிலிருந்து குறிப்பாக தமிழ்நாடு, அதனை சார்ந்துள்ள பகுதியில் இருந்து இக்கலையினை கற்றுச் சென்றார்கள். அங்கு மக்களிடையே போதனை வாயிலாக மட்டுமல்லாமல், இக்கலையினை கற்றுத் தருவதன் வாயிலாக வும் இம்மதத்தை பரப்பினர். அதனால்தான் புத்தமதம் எங் கெங்கு பரவி, வளர்ந்திருக்கிறதோ, அந்தந்த நாடுகளிலெல்லாம் இக்கலை சிறப்புடன் விளங்குகின்றது என்பதை உணரலாம் குறிப்பாக சீனா, ஜப்பான், சிங்கப்பூர், போன்ற நாடுகள் 'கராத்தே'' கலையில் சிறப்புற்று விளங்குகின்றன. அந்நாடு களில் இக்கலை சிறந்த வகையில், ஒழுங்கு செய்யப்பட்டு, முறைப் படுத்தப்பட்ட வகுப்பு முறை பாடதிட்டத்தோடு பயிற்றுவிக்கப் படுகிறது.

தமிழகத்தில் பலவகை தற்காப்புக் கலைகள் பின்பற்றப் படுகின்றன. அவைகள், குத்து, சிலம்பு, மடுவு, சுருள், கட்டாரி என்பனவாகும். இதில் ஒவ்வொருகலையும் ஒரே ஆசிரியராலோ அல்லது தனித்தனி ஆசிரியராலோ கற்றுத் தரப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள தற்காப்புக் கலைகளும், சீனா, ஜப்பான் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உள்ள 'கராத்தே' கலையும் அடிப்படையிலும் பாட முறையிலும் ஒரே அமைப்பை பெற்றிருக்கின்றன.

தமிழக தற்காப்புக் கலையும் 'கராத்தே கலையும் பொது வான இரண்டு பாடமுறைகளை கொண்டுள்ளது. அவை,

1. அடிமுறைகளும்-நுணுக்கங்களும் (தடுத்தல், தாக்குதல்)
2. கற்பனை தொடர் சண்டை.

முதலாவது பாடமுறை. தமிழகத் தற்காப்புக் கலையில் ''அடி'' அல்லது அடிமுறைகள் என்று பொதுவாக அழைக்கப் படுகிறது. இது கராத்தே கலையில் ''குமுட்டி'' என்றழைக்கப் படுகிறது. இரண்டாவது பாடமுறை, தமிழகத் தற்காப்புக் கலையில் ''வணக்க வரிசை'' அல்லது ''சலா வரிசை'' என்றும் கராத்தேயில் ''கட்டா'' என்றும் அழைக்கப்படுகிறது.

1. அடிமுறைகளும் - குமுட்டியும்

அடிமுறைகள்

இப்பாட திட்டத்தில் முதலாவதாக "அடிமானம்" சொல்லித் தரப்படுகிறது. இதில் காலடிகள் எவ்வாறு வைப்பது என்பதை வரைமுறை திட்டத்தோடு அமைக்கப்பட்டுள்ளது. எப்படி எப்படியெல்லாம் எதிரியின் தாக்குதல் வரக் கூடும், அதனை எவ்வகையில் தடுப்பது. பின் எப்படியெல்லாம் எதிரியினை வீழ்த்துவதற்கு இடமிருக்கிறது என்ற அடிப்படையில் வரைமுறைகளோடு தொகுத்து சுமார் பத்து அல்லது பனிரண்டு பாடங்களாக வரிசைப்படுத்தியுள்ளனர். சிலர் இதற்கு மேலும் தொகுத்து பயிற்சியளிக்கின்றனர். இப்பாடதிட்டம் ஒரு மாதிரி சண்டையாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன.

குமுட்டி

கராத்தேயில் இப்பாடமுறையைப் பல பாட திட்டங்களாக பிரித்து அமைத்துள்ளனர்.

அ. அடிப்படை, தடுத்தல், தாக்குதல் கால் கை நுணுக்கங்கள்,

ஆ. தொடர் அடிமுறை, தடுத்தல், தாக்குதல் நுணுக்கங்கள்,

இ. திட்டமிட்ட, வரையறைகளோடு கூடிய மாதிரி சண்டை முறைகள்.

போன்ற பாடங்களாகவும், சில அணிகள் மேலும் இதில் உட்பிரிவுகளை கொண்டதாகவும் பாடதிட்டத்தை அமைத்துள்ளனர்.

2. வணக்கவரிசையும் - கட்டாவும்

வணக்க வரிசை

இதனை 'சலாவரிசை' என்றே பலர் அழைக்கின்றனர். இதில் "குரு வணக்கம்" "சபை வணக்கம்" போன்ற பிரிவுகள் உண்டு. இது தனித் தனியே செய்யப்படும் தடுத்தல், தாக்குதல்

அடிமுறைகளையும், நுணுக்கங்களையும் உள்ளடக்கிதொடர்ச்சியாக் ஒரு கற்பனை சண்டையாக செய்து காண்பித்து முடிவாக குருவையோ அல்லது சபையில் உள்ளவர்களையோ வணங்குவதாகும். குறைவான அடிமுறைகளையும், எளிமையான நுணுக்கங்களையும் கொண்ட சலாவரிசை முதல், அதிகமான அடிமுறைகளையும், கடினமான நுணுக்கங்களையும் கொண்ட சலாவரிசை வரை பல வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை இடத்தையும், சூழ்நிலையையும் பொறுத்து செய்யப் படுகின்றன.

இவ்வணக்க வரிசைகள் மிகவும் சிறந்த அனுபவமிக்க ஆசிரியர்களால் வடிவயைக்கப்படுகின்றன. பல வணக்க வரிசைகள் இருந்தாலும் அவைகளுக்கு தனித்தனியே பெயர்கள் இடப் படவில்லை. ஆனால் ஒன்று, இரண்டு, மூன்று என்று வரிசைப் படுத்தி அழைக்கின்றனர்.

கட்டா

வணக்க வரிசை (சலாவரிசை) போலவே கராத்தேயில் உள்ள ''கட்டாவும்'' அடிப்படையிலும், வடிவமைப்பிலும் ஒன்றாகவே உள்ளன. வணக்க வரிசைப் போலவே இருப்தி லிருந்து நூறு அடிமுறை நுணுக்கங்களை கொண்டதாக பல கட்டாக்கள் உள்ளன. அனைத்துக் கட்டாக்களும் தனித்தனியே பெயரிடப்பட்டுள்ளன. பெரும்பான்மையான கட்டாக்கள் இதனை வடிவமைத்த ஆசிரியர்களின் பெயரை ஒட்டியே வழங்கப்படுகிறது. ஒருவர் செய்கின்ற சலாவரிசை அல்லது கட்டாவைக் கொண்டு அவரது பயிற்சி திறமை, வேகம் ஆகியவற்றை அறிந்துக் கொள்ளலாம்.

தமிழகத்தில் உள்ள தற்காப்புக் கலைகள் அனைத்தும் குறைந்த காலபாட திட்டத்தை தினசரி வகுப்புகளாக, (மூன்று அல்லது நான்கு மாதங்கள்) கொண்டுள்ளன. ஆனால் கராத்தே கலை நீண்டகால பாடதிட்டமாக (ஒன்றுவிட்டு ஒருநாள் வகுப்புகளாக நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள்) விரிவுபடுத்தி யுள்ளனர்.

தமிழக தற்காப்புக் கலைகளில் முழுபயிற்சி முடிந்ததும், ''அரங்கேற்றம்'' என்ற நிகழ்ச்சி வைத்து பொதுமன்றத்தில் செய்து காட்டச் செய்து தேர்ச்சி பெற்றுவிட்டதை ஆசிரியர் அறிவிக்கிறார். கராத்தே கலையில் பல வகுப்புகள் உள்ளன. ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனியே செய்முறை தேர்வு வைக்கப்பட்டு அதற்குரிய வெள்ளை, ஆரஞ்சி, பச்சை, பழுப்பு, கருப்பு. போன்ற வண்ணப்பட்டைகள் வழங்கப்படுகின்றன. கராத்தே கலைக்கு உலகமுழுவதும் சங்கங்களை அமைத்துள்ளார் கள். மேலும் ஆண்டிற்கு ஒரு முறை போட்டிகள் நடத்தி அதனை கற்கும் மாணவர்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்துகிறார் கள். சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் கராத்தே கலையை அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டாக கொண்டு போட்டி களை நடத்துகின்றன.

பல அனுபவமிக்க ஆசிரியர்களின் சிந்தனை வாயிலாக தோன்றிய இத்தமிழ்க தற்காப்புக் கலை, உடல் வலிமைக்கும் மனஉறுதிக்கும் பயனளிக்க கூடியதாக இருந்தபோதிலும், இது ஒரு விளையாட்டாக அங்கீகரிக்கப் படாமலும், அதற்குரிய மதிப்பும், மரியாதையும் தரப்படாமலும் நலிந்துக்கொண்டிருக் கிறது.

உலகில் உள்ள பல தற்காப்புக் கலைகளுக்கு மூலாதாரமான தமிழக தற்காப்புக் கலை பல உன்னத தற்காப்பு முறைகளை யும் நுணுக்கங்களையும் கொண்டுள்ளது. இதனை இனியும் அங்கீகரித்து, ஆராய்ந்து, தொகுக்கப்படாமல் விட்டால் காலப் போக்கில் இக்கலை அழிந்து போவது திண்ணம்.

'நோய்களும் – முதன்மைக் காரணங்களும்'

க. இளமதி சானகிராமன்
புதுவைப் பல்கலைக்கழகம்

சித்தத்தினைத் தன்வயப்படுத்தி உடல் உள்ளம். உயிர், உலகம் முதலானவற்றின் உண்மைத் தன்மையினை அறிந்தவர்கள் சித்தர்கள். சமுதாய மக்களின் மேம்பாட்டிற்காகத் தம்மால் இயன்ற வகையில் உழைத்தவர்கள். மக்களின்பால் மிகுந்த அன்பு கொண்டவர்கள். அதன் காரணமாகவே நோயுற்றுத் தவித்த மக்களை நோயினின்றும் காக்க மருத்துவ முறைகளைக் கையாண்டு உலகிற்கு அளித்தனர். அம்முறைகளே 'சித்த மருத்துவம்' என்று அழைக்கப் பெறுவதாகும்.

மனிதனை மிகுதியும் வாட்டுவது நோயே. நோயற்று வாழ்பவனே குறைவற்ற செல்வமுடையோனாகக் கருதப் பெற்றான். வள்ளலாரும், 'நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்' என்றே பாடுவர். நோய் வாராதிருக்குமெனில் அதுவே மக்களுக்கு இன்பம் தருவதாகும். ஓயாமல் துன்புறுத்துகின்ற இந்நோய்கள் வருதற்குரிய காரணங்களை தங்களது மதிநுட்பத்தால் கண்டறிந்து அவற்றை விளக்க வேண்டுகின்றனர்.

உடலில் வலிமை குறைந்தாலோ, தேவையான சத்துப் பொருட்கள் இன்மையாலோ, முதுமை காரணமாகவோ நோய்கள் வருவது ஒருபுறமிருக்க. அன்றாட வாழ்க்கையில் நம்மைப் பாதிக்கும் செயற்பாடுகளினாலும் நோய்கள் வருகின்றன. முற்சொன்ன மூன்றுக்கும்கூட இவையே காரணங்களுமாகின்றன என்பதனை நன்குணர்ந்த சித்தர்கள்: மக்களை அன்றாடம்

வாட்டும் காமம், பசி கவலை. செய்வினை முதலானவற்றுடன் பக்திக் குறைவும், அறம் செய்யாமையும் நோய்கள் வருதற்கான முதன்மைக் காரணங்களாகும் என்று மொழிந்தனர். அவர்களின் கூற்றுக்களின் வழி அவற்றை இவண் காண்போம்.

காம உணர்வு

மக்கள் காமவயப்பட்டு, அவ்வுணர்வே பெரிதென வாழ்வதால் நோய்வாய்ப்படுகின்றனர். காம உணர்வை விடுப்பார்களேயானால் நோய்கள் வராமல் தடுக்கலாம் என்பது சித்தர்கள் மக்களுக்குக் கூறும் அறிவுரையாகும். இதனை,

''காமநோயை விட்டுநீர் கருத்துகளே உணர்ந்தபின்''
(சிவவாக்கியர் பா. 19)

என்றும்

தாய்கள் பால் உதிக்கும் இச்சை தவிர வேண்டி நாடினால்
நோய்கள்பட்டு உழல்வதேது நோக்கிப்பாரும் உம்முளே'
(சிவவாக்கியர் பா. 500)

என்றும் சிவவாக்கியர் பாடுவதாலும்,

பட்டினத்தார்
.... காமத்தால்
மாயும் மனிதரை மாயாமல் வைக்க மருந்தில்லையே
(பட்டினத்தார் பொ.து. பா. 14)

என்றும் பாடுவதாலும் அறியலாம்.

காமத்தையே நோயாக உருவகித்துப் பாடுவதும், இந்தக் காமத்தால் வருகின்ற நோய்களுக்கு மருந்தே இல்லையே என்று கழிவிரக்கப்படுவதும் மக்கள் மாட்டு சித்தர்களுக்கிருந்த அன்பினைப் புலப்படுத்துகின்றன.

பசி

சிலர் வறுமை வாய்ப்பட்டு உண்பதற்கு உணவின்றிப் பட்டினி கிடக்கின்றனர். பட்டினி கிடப்பதும் நோய்க்குக் காரணமாகும். வயிற்றுப் பசியே 'இரத்தல்' தொழிலுக்கு

மூலகாரணம். பசிக்காக இறக்கின்றவர்களுக்கு உடன் உண வளித்து விடவேண்டும். நாளைவர் என்று கூறுதல் கூடாது என்பதை,

''ஏழை பனாதிக ளில்லையென் றாலவர்க்
கிருந்தா லன்னங் கொடுக்க வேண்டும்;
நாளை யென்றுசொல்ல லாகா தேயென்று
நான்மறை வேத முழங்குதடி''

(கொங்கணர், வாலைக்கும்மி பா. 86)

என்று கொங்கணர் பாடுவர்.

வயிற்றுக்குச் சோறிட்டால் வருகின்ற நோய்களும், வந்த நோயும் போய்விடும் என்பதை

'உள்ளிருக்கும் வேதியர்க் குற்ற தான மீதிரால்
மெள்ள வந்து நோய னைத்து மீண்டிடும்''

(சிவ.பா. 236)

என்று குறிப்பர் சிவவாக்கியர்

வயிற்றுப்பசியே மக்களை வாட்டும் கொடிய நோய் என்ப தால் பசியிணைப் பிணி என்று கூறிப் பசிப்பிணி போக்குபவனை மருத்துவன் என்றழைத்தனர். பசிப்பிணி மருத்துவன் பண்ணன் எனும் கூற்று இதனை வலியுறுத்தும். பசிப்பிணியைப் 'பாவி' என்று மணிமேகலையும் குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும்.

பக்திக்குறைவு

இறைவனிடத்து உண்மையான பக்தி கொண்டவர்களுக்கு நோய்களே வருவதில்லை. அப்படியே வந்தாலும் முழுப் பலனை அவர்களுக்குத் தருவதில்லை இறைவனிடத்து பக்தி டையவர்கள் இயற்கையாகவே உடலுக்கு ஊறு விளைவிக்கும் இறைச்சி, முட்டை, மது, மாது போன்ற தேவையற்றவற்றை உண்பதில்லை மாறாக நல்லொழுக்க நெறிகளைக் கடைப் பிடித்து வாழ்கின்றனர். அதனால் நோய்கள் வருதற்கு வழி களில்லை. இறைமாட்டு உண்மையான பக்தி கொண்டால் மட்டும் போதும் நோய்கள் வராமல் தடுக்கலாம் எனபதனை,

''மாத்திரைப் போதும்முளே மறித்து தொக்க வல்லிரேல்
சாத்திரப்பை நோய்களேது சத்தி முத்தி சித்தியே'
(சிவ பா.13)

என்னும் பாடல் உணர்த்தும். ஒரு மாத்திரைப் பொழுதேனும் இவனை மனத்தில் நினைப்பவர்களுக்கு நோய்கள் வராது என்று சித்தர்களே கூறுவதால் இறைஉண்மையும் பக்தி செலுத்தினால் பெறுகின்ற நன்மையினையும் இக்கருத்தின் மூலம் வலியுறுத்தப்படுதலை அறியலாம்.

பக்திக்குறைவினாலும் நோய் வருகிறது. உத்தமமான பக்தனுக்கு நோய் வருவதில்லை என்ற காந்தியடிகளின் கூற்றும் இங்கே ஒப்பு நோக்கத்தக்கதாகும்

கவலை

எப்பொழுதும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தாலும் நோய்கள் வரும். மக்கள் கவலைப்பட்டு நோய்களை வரவழைத்துக் கொள்கின்றனர். அழுவதாலோ, நோவதாலோ எந்தப்பயனுமில்லை. எல்லாம் இறைவன் எழுதிய எழுததின்படி முடியும் என்ற எண்ணத்துடன் கவலையின்றி இருக்க வேண்டும் என்று வேண்டுவர் பட்டினத்தார் (பா. 37).

உணவு, செல்வம், பெண் மற்றும் வசதியாக வாழ்வதற்குரிய பல பொருள்கள் வேண்டும் என்ற கவலையும், மற்றும் ஏதாவது ஒரு கவலையில் மக்கள் இன்றைக்கும் ஆழ்ந்திருப்பது இதனை உறுதியாக்கும்,

பாரதியும்,

'கவலைப்படுவதே கடுநரகமம்மா
கவலையற் றிருத்தலே முத்தி-

என்று பாடுவதும் இவண் நோக்கத்தக்கது.

செய்வினை

சிலர், ஒருவர் மீது ஒருவர் பொறாமை கொண்டு ஒருவரை ஒருவர் கெடுக்கவும் நினைக்கின்றனர். ஒருவரது வளமான

வாழ்வு, அத்தகைய வாழ்வு கிடைக்காதவர்க்கு வெறுப்பினைத் தோற்றுவிக்கின்றது. அதனால் வளமானவாழ்வு வாழ்பவரைக் கெடுக்கவேண்டும் என்று நினைத்து அத்தீச் செயலைச் செய்து உயிர்வளர்க்கும் மந்திரவாதியர், பூசாரியர் போன்றோரை அணுதி பில்லிசூனியம் வைத்தல், வசியப்படுத்தல் முதலானவற்றைச் செய்கின்றனர். இவ்வதம் செய்வதாலும் இயற்கைக்கு மாறுபட்ட நிலையில் மக்கள் நோய்வாய்ப்படுகின்றனர் இந்நோய்களை நிக்க மந்திரங்களை உச்சரித்தல், காளி துர்க்கை முதலான தெய்வங்களை வசப்படுத்துதல் போன்ற மருத்துவ முறைகளைச் செய்கின்றனர். இத்தகைய நோய்களுக்கு மருந்திட்டுக் குணப்படுத்துதல் என்பதுஇல்லாது. இறை பக்தியோ இதனைத் தீர்க்கும் என்ற உண்மையை,

> "ஆயுசு கொடுப்பாள் நீரிழிவு முதல்
> அண்டாது மற்ற வியாதி யெல்லாம்
> பேயும் பறந்திடும் பில்லி வினாடியில்
> பத்தினி வாலைப்பெண் பேரைச் சொன்னால்"
>
> (கொங்கணர் வாலைக்கும்மி பா. 105)

என்று கொங்கணர் பாடுவர்.

நோய்கள் வந்தகாலத்துப் பொங்கல் வைத்து ஆடு, கோழி பூனை முதலானவற்றை பலிகொடுத்துப் பிடாரி கோயிலில் பூசை போட்டுத் தங்கள் நோய்கள் தீரவேண்டுமென்று வேண்டினர். இருந்தும் நோய் தீராத நிலையினைக் கண்ட சிவவாக்கியர்.

> "தங்கள் தேகம் நோய்பெறின் தனைப் பிடாரிகோயிலிற்
> பொங்கல் வைத்தும் ஆடுகோழிப்பூசை பலியை இட்டிட
> நங்கச் சொல்லு நலிமிகுந்து நாளுந் தேய்ந்து மூஞ்சூராய்
> உங்கள் குலத்துத் தெய்வமுங்க ளுருக்கு லைப்ப துண்மையே
>
> (சிவவாக்கியர். பா. 512)

என்ற பாடலால் அச்செயல்கள் தேவையில்லை என்பர்.

அறம் செய்யாமை

அறம் செய்யாதவர்களுக்கு இருமல், சோகை, ஈளை, வெப்பு, இடிநாகம், உரோணி, கழலை-எனும் நோய்கள் வருகின்றன என்பதை,

"இருமலும் சோகையும் ஈளையும் வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்
உருமிடி நாக முரோணி கழலை
தருமஞ்செய் வார்பக்கல் தாழகி லாவே"

(திருமந்திரம். பா. 263).

என்ற திருமூலர் வாக்கால் அறியலம்.

சித்தர்களைப் பொறுத்த வரையில் பிறவியும் நோயே. பிறவாதிருகக வேண்டும். பிறந்துவிட்டால் இறப்பைக் கண்டிப் பாகத் தடுக்க வேண்டும். இறவாமல் இருப்பதற்கும் மருந் துண்டு. தில்லை அம்பலவாணன் அடிக்கமலத்தை மறவாமல் இருத்தலே அம்மருந்து என்று பாடுவர். இயமனை வெல்ல ஐந்தெழுத்து மந்திரமும் இறைவனது அருள் நோக்கங்களும் பிறவிப் பணியைப் போக்கும் என்பதை,

'.. திகைப்புண்டு நின்ற பிறவிப்பிணி
நோய்க்குண்டு தேசிகன் தன் அருள் நோக்கங்கள்
நோக்குதற்கே'

(பட்டினத்தார் - பொது பா. 43)

என்ற வரிகளால் பாடுவர் பட்டினத்தார். இப்பிறவியினை ஒழிக்க ஐந்தெழுத்தை (மந்திரத்தை) வணங்குதலே மருந்தாகும் என்று சிவ வாக்கியரும் பாடுவர் (பா. 69).

இவற்றின் வழி, காமம், பசி, கவலை செய்வினை, பக்திக் குறைவு, அறம் செய்யாமை முதலானவற்றால் நோய்கள் வரு கின்றன எனபதும், 'பிறவி'யே நோயாகும் என்பதும், ஐந் தெழுத்து மந்திரமும், இறையருளும் அந்நோயினைத் தீர்க்கும் மருந்துகளாகும் என்பதும் பெறப்படுகினறன

சங்ககாலக் கேரளம்

நீ. சொ. இராஜலெட்சுமி,
கேரளப் பல்கலைக்கழகம்,

கி.பி. முதலாம் நூற்றாண்டு முதல் ஐந்தாம் நூற்றாண்டு வரையுள்ள காலகட்டம் தமிழிலக்கியத்தில் 'சங்ககாலம்' என்ற பெயரில் அறியப்படுகின்றது. பழைமையான வரலாற்றாசிரியர் களான நீலகண்ட சாஸ்திரிகள் ஜெயரத்தினம் ஆகியோர் கருத்துப்படி கி.பி. 500 வரை சங்ககாலம் இருந்தது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். உஜ்ஜயினியில் புதகுப்த விக்கிர மாதித்தன் காளிதாஸ மகாகவியின் தலைமையின் கீழ் இலக்கியச் சங்கம் தோற்றுவித்ததைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் பாண்டிய சேர பல்லவ அரசவைகளிலும், இலங்கையில் அனுராதபுரத் திலும் இலக்கியச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. தமிழ்ச் சங்கத்தைக் குறித்துள்ள செய்திகளை நமக்கு இறையனார் அகப்பொருள் என்ற நூல் தருகின்றது. மூன்று மதுரைத் தமிழ்ச் சங்கங்களின் கால அளவுகள், முக்கியமான சங்கப் புலவர்களின் பெயர்கள் முதலியவற்றை இந்நூல் விரிவாக உரைக்கின்றது.

முச்சங்கங்கள்

வேங்கடம், கன்னியாகுமரி இவற்றிற்கிடைப்பட்ட தமிழ் நாட்டில் முதற்சங்கத்தில் காணப்பட்டவர்கள் 549 பேர் ஆவர். திரிபுரம் எரித்த விரிசடை தேவன். மன்றமரத்தார், அகத்தியர் முரிஞ்சியூர் முடிநாகராயர், நிதியின்கிழவன் முதலியோர், பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை முதலானவை முதற்சங்கத்துப் படைப்புகளாகும். காய்சினவழுதியின் காலம் முதல் கடுங்கோனின் காலம் வரையுள்ள முதற்சங்கக் காலத்தில் 89 பாண்டிய அரசவம்சங்கள் உண்டாயிருந்தன. இவர்களில் ஏழு பேர் தமிழ்ச் சங்க அவைகளில் தலைமை வகித்திருந்தனர். 'அகத்தியம்' தான் முதற் சங்கத்தின் முக்கிய படைப்பு.

அகத்தியர், தொலகாப்பியர், கருங்கோழி மோசி வெள்ளூர் காப்பியன் சிறுபாண்டரங்கன், கீரந்தை முதலிய 59 பேர்கள் இடைச் சங்கத்திலிருந்தனர். 3700 ஆண்டுகள் இடைச்சங்கம் நிலவிலிருந்தது. கலித்தொகை குருகு, வெண்டாளி. வியாழ மாலை, பூதபுராணம் முதலியவை இக்காலத்தில் எழுந்தன வாகும் அகத்தியமும், தொல்காப்பியமும் இடைச்சங்கத்தின் முக்கிய படைப்புகளாகும். 59 பாண்டிய வம்சங்கள் இக் காலத்தில் வாழ்ந்திருந்தன வெண்தேர்ச்செழியன் முதல் முடத் திருமாறன் வரையுள்ள ஐந்துபேர்கள் சங்கக் கூட்டங்களில் தலைமை வகித்துள்ளனர். இடைச்சங்கத்தின் தலைமையிடம் கபாடபுரமாகும்.

சிறுமேதாவி சேந்தன் பூதன். அறிவுரையரனார், பெருங் குன்றூர்கிழார் நல்லந்துவன், மருதனிளநானார், நக்கீரன், சித்தலைச்சாத்தன், உப்பூரிக்குடிக்கிழார், கபிலர், பரணர், கல்லாடன், மாமூலன் முதலிய 449 புலவர்கள் கடைச்சங்கத்தில் இடம் பெற்றிருந்தனர்.

சங்கப் படைப்புகள்

முதற் சங்கப் படைப்புகள் எல்லாம் தொலைந்து விட்டன, கடைச்சங்கப் படைப்புகளாக பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு, ஐம்பெருங்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணி மேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி. வளையாபதி, முதலாயின காணப்பட்டன இவற்றில் குண்டலகேசியும், வளையாபதியும் தற்போது தொலைந்துவிட்டன. மணிமேகலை யும் குண்டலகேசியும் பௌத்தமதக் காப்பியங்கள். சீவகசிந்தா மணியும், வளையாபதியும் சமணமதக் காப்பியங்கள்.

சங்கக் கவிஞர்கள்

இறையனார் அகப்பொருள் வழி மூன்று சங்கங்களிலுமாக 957 புலவர்கள் இருந்ததாக அறிந்துகொள்ள முடிந்தாலும், இன்று கிடைக்கப்பெற்றுள்ள படைப்புகளின் படைப்பாளி களாக 468 புலவர்கள் மடடுமே இருந்ததாகத் தெரிகின்றது. எண்பது ஆண்டுகள் நிலைத்து நின்ற கடைச்சங்கக்காலத்தில்

பாண்டியர்கள் தமிழகத்தில் பிரபலமடைந்தவர்களாக விளங்கியவர். சேரர்கள் தமிழகத்தில் ஆற்றல் மிக்கவர்களாக விளங்கியது இடைச்சங்ககாலத்தில் தான். இக்காலத்தில் சங்கக் கவிஞர்களாகக் சேரநாட்டார் அதிகமாகக் காணப்பட்டனர்,

சங்ககாலக்கேரளம்

சங்ககாலத்தில் கேரளம் தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்து வந்தது. இப்பகுதியில் பேசும்மொழி தமிழாக இருந்ததால் கல்விமொழியும் தமிழாகவே இருந்தது. சங்கஇலக்கியத் தொகுப்பில் புரவலர்களாக அமைகின்ற சேரமன்னர்களே சோழ, பாண்டிய மன்னர்களை விட அதிகமாக உள்ளனர். புலவர்களும் பலர் சேர நாட்டினர். சங்க நூல்களிலே சுமார் 350 பாடல்கள் சேரநாட்டோடு தொடர்புடையன என்பார் பேராசிரியர் மு இராகவய்யங்கார்

இரா. வையவன் அவர்கள் கருத்துப்படி, சங்ககாலத்தில் கேரளம் வேணாடு, குட்டநாடு, குடநாடு. பூமிநாடு, கற்காநாடு என்று ஐந்து பகுதிகளாய் பிரிக்கப்பட்டிருந்தது. சங்ககாலத் தொடக்கத்தில் மூன்று அரசியல் பிரிவினர் கேரளத்தை ஆண்டு வந்தனர். தெற்குப் பகுதிகளை ஆய் மன்னர்களும், வடக்குப் பகுதியை ஏழிமலை வேந்தரும். இவற்றிற்கடைப்பட்ட பகுதியை சேர அரசர்களும் ஆண்டு வந்தனர். புகழ்பெற்ற சங்ககாலப் புலவர்களான பரணர், அழிசி, போன்றோரின் பிறப்பிடமான ஏழிமலையும் சேரர் ஆட்சிக்குள்ளிருந்தது. சேரர்கள் தமிழகத்தில் ஆற்றல் மிக்கவர்களாக இருந்தது இடைச்சங்க காலத்தில் தான். இக்காலத்தில் சங்கக் கவிஞர்களாகக் கேரளமக்கள் அதிகமாகக் காணப்பட்டனர்.

சேரநாட்டுத் தமிழ்ச் சங்கக் கவிகள்

தமிழச் சங்ககாலத்தில், சேரமான் பெருமாள்களின் ஆட்சியின் கீழிருந்த கொங்குமண்டல பகுதிகளிலும். துளுநாட்டிலும் பிறந்தவர்களை கேரளமக்களாகக் கொள்ளலாம் சங்கக் கவிஞர்களின் பெயர்ப்பட்டியலில் இவ்வாறன இருபது கவிஞர்களின் பெயர்கள் நமக்கு கிடைத்துள்ளன இவர்களில் நால்வர்

முதற்சங்க காலத்திலும், பதினொருவர் இடைச்சங்க காலத்திலும், ஐவர் கடைச் சங்ககாலத்திலும் வாழ்ந்திருந்தனர். இவர்களில் சிலர் செந்தமிழில் மட்டுமன்று சமஸ்கிருதத்திலும் நூல்களை வெளியிட்டுள்ளனர்.

முதற்சங்கத்தில் இருந்த கேரளீயர்களான கவிஞர்கள் முரிஞ்சியூர் முடிநாகராயன், முதலாம் பரணர். முதலாம் கபிலர். பெண்கவிஞர்களான காக்கைப் பாடினியார், நச்செள்ளையார் முதலியோர். இடைச்சங்கத்தில் இருந்தவர்கள் முதலாம் குலசேகர பெருமாள், இரண்டாம் பரணர், பொன்முடியார், பிரபாகரன். பாக்கனார், அம்மூவனார், பேயார், ஓதலாந்தையார், காலடிபட்டேரி, குலசேகர பாண்டியனாகிய அமரு, மாத்ரதத்தன் முதலானோர், கடைச்சங்கத்தில் இருந்தவர்கள்- இளங்கோ அடிகள், ஓரம்போகியார், கூடலூர்க்கிழார், சேரமான் ஏழிக்கொம்பன் பெருமாள், தோலன் முதலியோர்.

இவர்களில் 42-ம் சேரமான் பெருமாளாகிய முதலாம் குலசேகரன் சமஸ்கிருதத்தில் எழுதிய 'முகுந்தமாலை' என்னும் நூல் வைணவர்களிடையே பிரபலமான ஒரு வேதநூலாகும். செந்தமிழில் பாலைப் பாடல்கள் பாடிய காரணத்தால் இவருக்கு 'பாலை பாடிய பெருங்கடுங்கோ' என்ற சிறப்புப் பெயர் சங்கநூல்களில் காணப்பட்டது. சங்க காலத்தில் கேரளத்தில் செந்தமிழ் தேசிய மொழியாக விளங்கியது.

நூல்களும் அரசர்களும்

வித்துவான் செ. சதாசிவம் அவர்கள் கருத்துப்படி பல தமிழ் நூல்களைத் தோற்றுவித்தவர்களும் அவை தோன்றக் காரணமாக இருந்தவர்களும்சேர அரசர்களாவர். அவையாவன

1. தொல்காப்பியம்

இன்றுள்ள நூல்களுள் பழைமை வாய்ந்தது. இதன் காலம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டுக்கு முந்தியது என்பர். ஆசிரியர் தொல்காப்பியர்.

'நிலம் தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்முறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரில்தப தெரிந்து'
(தொல் பாயிரம்)

என்று அதங்கோட்டாசான் அவர்களுக்கு குற்றம்தீர உணர்த்திய பின்னர் தான் தொல்காப்பியம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வாசான் சேரநாட்டைச் சேர்ந்தவராயிருக்க வேண்டுமென்பதற்கு ஆதாரங்கள் உள்ளன.

1. அதங்கோடு என்னும் பெயருள்ள ஊரொன்று சேர நாட்டுப் பகுதியில் இன்றும் இருக்கின்றது.

2 கோடு என்று முடியும் இடப்பெயர்கள் திருவிதாங்கூரில்தான் ஏராளமாகக் காணப்படுகின்றன.

3. ஆசான் என்ற பெயரும் இந்நாட்டில் தான் மிகுதியாக வழங்குகின்றது.

ஆகவே இப்பகுதியைச் சார்ந்த முன்னோர் ஒருவர் மறையுணர்வும் அறவுரையும் வாய்ந்தவராய் செந்தமிழ்ப் புலமை சான்றிருந்தனர் என்று கொள்ளலாம்.

2. பதிற்றுப்பத்து

பத்து சேர அரசர்களைப் பற்றிய பத்துப் புலவர்கள் பத்துப் பத்துப் பாடல்களால் பாடிய பாடல்களின் தொகுப்பே பதிற்றுப்பத்து. சேரவேந்தர்களின் தமிழார்வமும். ஆற்றலும், புகழும் இப்பாடல்களால் அறிந்து கொள்ளலாம். இதன் முதல் பத்தும், கடைசிபத்தும் இப்போது கிடைக்கவில்லை. இந்திய ஒருமைப் பாட்டுக் கருத்து. சங்க இலக்கியத்தில் இருந்தமைக்குப் பதிற்றுப்பத்து சான்றாகின்றது.

'ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியொடு ஆயிடை
மன்மீக கூறுநர்' (பதிற்றுப்பத்து. 1)

3. ஐங்குறுநூறு

ஐந்து புலவர்களால் பாடப்பட்ட ஐந்நூறு பாடல்களைக் கொண்டது. கூடலூர்க்கிழார் என்னும் புலவரைக் கொண்டு இப்பாடல்களைத் தொகுப்பித்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் சேர வேந்தனாவான். இந் நூலுள் நெய்தல் திணை பாடியவர் அம்மூவனார் என்னும் சேரமரபினர்.

4. கலித்தொகை

இதன் முதற்கண் இருப்பது பாலைத்திணை, இதைப் பாடியவர் பெருங்கடுங்கோ 'என்னும் சேர அரசர். நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு போன்ற தொகை நூல்களிலும் இவர் பாலைப் பொருள் பற்றிப் பாடியுள்ளார். இக்காரணத் தால் 'பாலை பாடிய பெருங்கடுங்கோ' என்று சிறப்பிக்கப் பெற்றார்.

5. சிலப்பதிகாரம்

சேரன் செங்குட்டுவனின் தம்பி இளங்கோவடிகள் இதன் ஆசிரியர். செங்குட்டுவனின் வரலாற்றையும், சிறந்த நீதிகள் அடங்கிய கோவலன் கண்ணகி வரலாற்றையும் விரித்துரைத்து நிற்கின்றது சிலப்பதிகாரம். இச்செந்தமிழ்ப் பனுவலை உலகுக்கு ஈந்த ஒப்பற்ற குலம் இச் சேரகுலம்.

'பாவடிகள் தேன்வடியப் பாடும் புலமையிளங்
கோவடிகள் போந்த குலம்'

(மலரும் மாலையும்)

இதுவல்லவா.

6. புறப்பொருள் வெண்பா மாலை

இது அகத்தியனார் மாணாக்கர் பன்னிருவராலும் இயற்றப்பட்ட பன்னிரு படலம் என்றதன் வழி நூலாக செய்யப்பட்டது. இதனைப் பாடியவர் சேர பரம்பரையைச் சேர்ந்த ஐயனாரிதனார் என்னும் தமிழ் வேந்தராவார்.

பாரதியும் ஐகூவும்

சா. உதயசூரியன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் உலகப் பார்வை கொண்ட கவிஞர்களுள் முதன்மையிடம் பெறும் தகுதி பாரதிக்கு மட்டுமே உண்டு. தமிழ்த் தேசியத்திலிருந்து சர்வதேசியம் வரை பரந்து பட்ட பார்வை கொண்டவனாக பாரதி காட்சியளிக்கிறான். ஜப்பானியக் கவிதை வரலாற்றில் சிறப்பிடம் பெறும் ஐகூ கவிதை குறித்தும் பாரதி தன் எண்ணத்தை வெளிப்படுத்தி யுள்ளான். அவ்வெண்ணத்தை மதிப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

உலக நோக்கு

செயற்கைக் கொள் மூலம் செய்தி பரவுகின்ற இக்காலம் போலன்றிச் செய்தித் தொடர்பு கருவிகளே கண்டறியப்படாத காலக் கட்டத்தில் - கண்டறியப்பட்ட சில கருவிகளும் இந்தியா விற்குள் நுழையாத சூழ்நிலையில்-வாழ்ந்தவன் பாரதி. அந்தச் சூழலில் பாரதியிடம் காணப்படும் சர்வதேசிய பார்வை வியக்க வைக்கிறது. உலக நடைமுறைகளைக் கூர்ந்து நோக்குகிற போக்கு இவனிடம் தெளிவாக இருந்தது என்பதற்கு இந்தியா ஏட்டில் இவன் எழுதிய கட்டுரைகள் சான்றுகளாய் அமை கின்றன. உருஷியா, சீனா, ஜப்பான், பாரசீகம், துருக்கி, அயர் லாந்து, கிரேக்கம், இங்கிலாந்து, அமெரிக்கா, பெல்ஜியம், ஜெர்மன் என இவன் எழுதிய கட்டுரையிலும் கவிதையிலும் பேசப்பெற்ற நர்டுகளின் பட்டியல் நீண்டு செல்கிறது. உலக நாடுகள் பற்றிய தனித்தனிக் கட்டுரைகள் எழுதியது மட்டு மன்றி உலக நலங் குறித்துப் பொதுவான செய்திகளையும் சில இடங்களில் குறிப்பிட்டுள்ளான். "உலகத்தில் செல்வத்தின்

சம்பந்தமான ஏற்றத்தாழ்ச்சிகள், மற்ற எல்லாக் காரணங்களில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைக் காட்டிலும் மிகக் கோடியன வாக மூண்டிருக்கின்றன'' என உலகம் முழுவதும் சமத்துவ சமுதாயம் மலரப் போர்க்குரல் எழுவதைப் புரிந்து எழுதி யுள்ளான்.

அரசியலும் இலக்கியமும்

உலக நாடுகள் குறித்த பாரதியின் பார்வை இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டது அன்று. அரசியலை அடிப்படை யாகக் கொண்டது. பிற நாடுகளின் விடுதலை எழுச்சியைத் தன் தாய்நாட்டின் விடுதலைக்கு எப்படியெல்லாம் பயன் படுத்தலாம் என்றே பாரதி ஆர்வங்கொண்டுள்ளான். பிற நாட்டு இலக்கியப் போக்குகள் குறித்து ஆங்காங்கே பாரதி இதழ்களிலும் கட்டுரைகளிலும் குறிப்பிட்டிருந்தாலும் பிற நாட்டு அரசியல் பற்றி இவன் குறிப்பிட்டுள்ள செய்திகளை ஒப்பிட்டு நோக்க இலக்கியச் செய்திகள் மிகமிகக் குறைவே. ''பிறநாடுகளின் சுயாதினக் கிளர்ச்சி'' என்ற தலைப்பில் துருக்கி, பாரசீகம் போன்ற நாடுகளின் சுதந்திரப் போர் குறித்து எழுதி அதன் மூலம் இந்திய விடுதலைப் போருக்கு பாரதி எழுச்சியூட்டியுள்ளான்.

தேசிய உணர்வும் இன உணர்வும் பாரதியின் உலகப் பார்வையில் மேலோங்கியிருப்பதை உணரமுடிகிறது. பிஜித் தீவில் கரும்புத் தோட்டத்தில் வாழும் தமிழர்களுக்காகவும் திரான்ஸ்வாலிலும் நேட்டாலிலும் நிறவெறியர்களிடம் வாடும் தமிழர்களுக்காகவும் பாரதி வேதனைப்பட்டத்தை அவன் எழுதுக்களில் காணமுடிகிறது. விடுதலை உணர்வின் உச்சியில் இருந்து கொண்டு வெள்ளையனை வெளியேற்றக்குரல்கொடுத்து வந்த பாரதி பிறநாட்டு இலக்கியங்களில் ஆழ்ந்த பார்வை செலுத்தும் சூழலில் இல்லை. அரசியல் ரீதியாக மேலைநாட்டும் தொடர்பு மிகுந்திருந்த காரணத்தால் பாரதியிடம் மேலை இலக்கியத் தாக்கம் இருந்ததைக் காணமுடிகிறது ஆனால் கீழைநாட்டு இலக்கியம் குறித்து பாரதி எந்த அளவு அறிந் திருந்தான் என்பதைத் தெளிவாக அறியமுடியவில்லை.

பாரதியும் ஜப்பானும்

ஜப்பான் நாட்டைப் பற்றியும் அந்நாட்டவருடைய எண்ணப் போக்குகள் குறித்தும் அறிந்துகொள்ளப் பாரதி ஆர்வங்காட்டியுள்ளான். அக்காலத்தில் ஜப்பானில் வெளிவந்த இதழ்களுள் 'ஜப்பான் க்ரானிகல்' என்ற இதழ் குறிப்பிடத்தக்க புகழ்பெற்றதாகும். அவ்விதழ் இந்தியவிடுதலை குறித்து வெளியிட்ட கருத்தைப் பாரதி தன்னுடைய இந்தியா இதழில் (6-2-1909) வெளியிட்டு அது குறித்த தன் கருத்தையும் எழுதியுள்ளான்

''பாரத ஜனங்கள் ஸ்வராஜ்யத்துக்குத் தகுதி பெற்றவர்களில்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் இங்ஙனம் சொல்பவர்கள் யார்? அதிகாரத்தைத் தமது கையில் வைத்துக் கொண்டு அதை விட்டுக்கொடுக்க மனமில்லாதிருக்கும் ஆங்கிலேய ஜாதியார்'' என்றும் ''இந்தியா ஜீவனோடிருப்பது ஐக்கியத்தைத்தான் பொறுத்திருக்கிறது-துர்பலமான சகோதர ஜாதியாளரைத் தொந்தரவு செய்வதில் சலிப்பில்லாமல் ஐரோப்பியப் பெருநாடுகள் ஒருபுறம் வேலை செய்து கொண்டிருக்கவும் ஆசைமிகுந்து பிரிவுநாடி உழைக்கும் ஜப்பான் மற்றொரு புறம நிற்கவும், இன்னுமொரு பக்கத்தில் சீனா அபிவிருத்தியடைந்து பரவும் நிலை கண்டும் இந்தியா ஒற்றுமை கொண்டே தீரவேண்டும்; வேறு வழியில்லை'' ''என்றும் அவ்விதழின் கருத்துக்களை எடுத்துக்காட்டி ஜப்பானிய பத்திராதிபர் கூறுவது முற்றிலும் நியாயம் என்று எழுதியுள்ளான். ஜப்பான் குறித்துப் பாரதியின் எண்ணத்தை மேற்கண்ட கருத்து ஓரளவு கோடிட்டுக் காட்டுவதாகக் கொள்ளலாம்.

ஐகூ கவிகை

ஜப்பானில் பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றி வளர்ந்து இன்றும் நிலைக்கும் உன்னதக் கவிதை வடிவமாக ஐகூ நிலைத்து நிற்கிறது. மூன்று அடிகளாலும் பதினேழு அசைகளாலும் (5—7—5) ஆக்கப்படுவது ஐகூ கவிதை. இது ஜப்பானியப் பண்பாட்டிலிருந்து முகிழ்ந்த ஓர் இலக்கிய வடிவமாகவே காட்சியளிக்கிறது. ஐகூவை அறிந்து கொள்ளப்

பௌத்தம் மட்டுமன்றி தாவோக்கோட்பாடு, கன்பூசியக் கோட்பாடு, ஜென்மதக் கோட்பாடு போன்றவை குறித்த தத்துவ அறிவு அவசியமாகும். இந்தக் கோட்பாடுகளைப் பாரதி என்ற அளவிற்குப் புரிந்து கொண்டிருந்தான் என்பதற்குப் போதுமான சான்றுகள் இல்லை.

கல்கத்தா மாநகரிலிருந்து வெளிவரும் 'மாடர்ன்ரிவியூ' என்ற இதழில் 'உயோனே நோகுச்சி' என்ற ஜப்பானியப் புலவர் மேலை நாட்டுக் கவிதைகளோடு ஜப்பானியக் கவிதைகளை ஒப்பிட்டு எழுதியிருந்தார். இது குறித்துப் பாரதி, "சுருங்கச் சொல்லி விளக்க வைத்தல் ஜப்பானியக் கவிதையின் விசேஷத் தன்மையென்று நோகுச்சிப்புலவர் சொல்லுவதுடன் ஆங்கிலேயரின் கவிதை இதற்கு நேர்மாறாக நிற்கிறதென்றும் சொல்லுகிறார். நமக்குள்ளே திருக்குறள் இருக்கிறது-கடுகைத் துளைத் தேழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள், கிழக்குத்திசையின் கவிதையிலே இவ்விதமான ரசம் அதிகந்தான் தமிழ்நாட்டில் முற்காலத்தில் இது மிகவும் மதிப்பெய்தி நின்றது. ஆனாலும், ஒரேயடியாகக் கவிதை சுருங்கியே போய்விட்டால் நல்லதன்று'' என்று எழுதியுள்ளான். கீழை நாட்டுக் கவிதைகளோடு பாரதி ஓரளவு தொடர்பு கொண்டிருந்தான் என்பதைக் 'கிழக்குத் திசையின் கவிதையிலே இவ்வி. மான ரசம் அதிகந்தான்'' என்று கூறுவதிலிருந்து அறியலாம்

"தீப்பட்டெரிந்தது
வீழுமலரின்
அமைதியென்னே!"

இதுதான் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட முதல் ஐகூ கவிதை. இதைச் செய்து காட்டியவனும் பாரதிதான். இக்கவிதை ஜப்பானிய ஐகூ கவிஞர் ஹொாகஹி எழுதியது. மலர் தனக்கு வாழுங்காலம் மாறிக் கீழே விழும்போது எத்தனை அமைதியுடன் இருக்கிறதோ, அத்தனை அமைதியுடன் ஞானி தனக்கு வருந்துன்பங்களை நோக்குகின்றான். வீடு தீப்பட்டெரிந்தது. ஆனால் அதுபற்றிக் கவிஞன் மனம் அமைதி இழந்து போகவில்லை என்பதை மேற்கதூட ஐகூ கவிதை விளக்குகிறது என்று

நோகுச்சி 'மாடர்ன் ரிவியூ' வில் விளக்கியிருந்தார். இது குறித்துத்தான் பாரதி கவிதை ஒரேடியாகச் சுருங்கிவிட்டால் நல்லன்று என்று எழுதினான் அதே நேரத்தில் ஐகூவின் ஆழமான கருத்தும் பாரதியைக் கவர்கிறது எனவே அடுத்த வரியில் ''நோகுச்சி சொல்வதிலே அருமையான உண்மையி, லிருக்கிறது'' எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்றும் தன் எணணத்தை வெளிப்படுத்தியுள்ளான்.

திருக்குறளோடு ஐகூவை ஒப்பிட்டதும் அக்கவிதைகளில் அருமையான உண்மையிருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டதும் பாரதி ஐகூவை அங்கீகரித்துள்ளான் என்பதற்குத் தெளிவான அடையாளங்களாகவே உள்ளன மேலை இலக்கியங்களின் தாக்கம் பாரதியிடம் காணப்படுகிறது என்பதற்கு பல ஆய்வுகள் தமிழில் நிகழ்த்தப்பட்டுவிட்டன. கீழை இலக்கியங்களின் தாக்கம் பாரதியிடம் காணப்படுகிறதா என்பதற்கும் இனி ஆய்வுகள் நிகழ்த்தப்பட வேண்டும். அப்போது மேலும பல புதிய உண்மைகள் வெளிப்படலாம்.

Adult Education For Women

S. Umayaparvathi
Annamalai University

"If Education has to be limited to men or to men, it should be given to women, for then it would more surely be passed on the next generation".

Education and emancipation of women in India are of very recent growth. I remember that in my childhood, it was considered a disgrace for a girl to move about alone. But, it is indeed remarkable to see now-a-days that now rapidly education has spread among women, Except in the very remote villages, school and college going girls can numerically be more or less equal to the boys. And as to the academic achievement girls are certainly proving to be more than a match for boys, In other spheres other than education, studies and sports and mountaineering too women have regirted great record of achievement. But in the case of general education, womens system of education is far from satisfactory. Education has certainly made women smarter and independent but how far it has added to their very essence of womanhood, it is left for the men to say.

When I say education for women, I mean and we all mean, that it is education for the young girls. But what about the present generation of wives and mothers. Are they qualified e. ough to be called educated? Certainly not. Speaking roughly we can say that about 10% of the present generation of wives and mothers are educated in our country. And out of these how many are education in the correct sense? yB

correctsense I mean, how many of them are qualified enough to help their children in studies, their behaviour, manners, dress personal habits and so on. And in relation to their husbands how many woman know how to be pleasing companions to listen to their difficulties to manage with the salary however inadequate it may be to be always hospitable to their relatives, friends and visitors. One may say that the above-mentioned qualities are in-born and that they need not be taught. Firmly I say no ; they are not inborn ; and they have to be taught. Many a family has come to taught because of insufficient training in these aspects of life.

What is needed now ? A multidisciplinary approach which is now being implemented through the Adult Education Programme The three re-inforcing components of the Adult Education Programme is to Improve three aspects, literacy, awareness and fuuctionality.

The aim of functionality is improvement of vocational skills for more productive use of time. Then an important aspect of awareners is that the women should become conscious that to a great degree they can shape their own future through the interlinking of learning, rellection and concrete action.

The most important part of the Adult literacy programme should be to make the illiterate women to read and understand simple literature and news paper. The knowledge of writing may be secondary but both will go hand-in-hand.

After the women learners have learnt to read and write well, the subject to be taught should be simple arithmetic including weights, measures and general knowledge (History, Geography and Civic responsibilities) pertaining to the

homeland. A little Psychology will do an immense good. Cleanlines and hygiene are essential needs. Lastbut not the least is the re of the need for family planning. To teach all this to village womenfolk is bound to prove an uphill tsk, but with determination and perseverance it can certainly be accomplished.

No learning under poor condition

All learners who are workers may not find time to learn. All those women who do not have any means of support or self-employment may not have the inclination to learn. In these cases there can be no learning without earning. So vacationalisation of adult literacy must be started. To attract the ma‹s of illiterate people in of 50, a responsible person must start some small scale of cottage industries. They must be able to earn while learning. Earning should be made an integral part of learning.

For example mat weaving can be tried in rural areas where the raw material korai is available in plenty. Similarly coir making, Embroidery work, Tailoring, metal polish of different kinds pottery painting, wood carving can be taught and only the above illustrative and not exhaustive.

Conclusion

Regarding the slogan eradication of female illiteracy by the year 1990 and even by 2000, we are not of he opinion that such a target is totally unrealistic given the present state of our country and the kind of leadership that exists. Realisation of such a slogan requires a high level of political commitment and political will to eradicate poverty, to reduce the widening gap between haves and have-nots, to stop the further marginalisation of the poor and of women. It also

requires a nationwide network of committed workers of all kinds, at different levels and relevant literacy material in different languages. Unfortunately, none of this is available. Moreover, literacy is neither a fele need of poor nor is it a skill which they perceive as the most important one to help them improve their lives. Because of this, such a campaign is not likely to become popular.

Our experiene of national adult education programme which had co-operation of the entire government machinery, a very large-number of voluntary organisations, Universities, Colleges and vast amount of money behind it, do not seem to provide much hope. Inview of all this, why give a slogan which we know is unrealistic, why play another trick on the illiterates, why make them even more sceptical of national campaign? Let us set targets which are attainable.

The Technical Terms of Chemistry in Tamil

C. Umarani
Chidambaram.

We find a lot of differences in the technical terms of chemistry in Tamil which were coined by various authors in various periods. In the initial stage the translation of technical terms of chemistry was in translitaration only e.g.. the term 'oxygen' was written by the Tamil authors as o:x'jan oxygen'. Hence the word oxygen was borrowed by the Tamil authors. In the Past two decades the translation of technical terms of chemistry was not in pure Tamil words but in Sanskrit mixed Tamil forms e.g., the term oxygen translated as Pira:na va:yu 'the gas which is necessory for iving'

Later, the Tamil Nadu Government decided to improve he the Tamil language as medium of instruction for all subjects. Also the Government wanted to insert the Pure Tamil words in the text books of Schools and Colleges for the improvement of Tamil language. So, the authors of the text-book committee did their translation work from English to pure Tamil e.g., the term oxygen is translated as uyịr vaịi 'the gas which is necessary for living'. Thus, we find the three types of translations viz., i) transliteration of the same word ii) coining of sanskritized terms and iii) Coining of Tamilised terms. The present paper deals with the Tamil technical terms in Chemistry that differ from one period to another.

Borrowings

Actually, the chemicals are termed by the scientist who found out the materials. Mostly, the scientists are western people and their language is English. The English language is passed on Latin. Because, the scientists named that chimicals by Latin words. That is why the chemical terms all world languages are borrowed terms. If there are some materials already presence in some language area the people call that things in their own language words. For example, the term 'Salt' is translated as **uppu** in Tamil (The word Sodium cloride' is translated into Tamil as **Cotiyam Kulo:raidu**)

Tamil has borrowed a lot of words from Sanskrit. Later, Some Tamil lovers coined new terms for the borrowed words. But the borrowed terms are commonly used by people. Because the people want to show their higher status.

In Tamil the term **raca:yanam** 'Chemistry' is from Sanskrit. Now it is called as **ve:tiyal** 'Chemistry' This term **ve:tiyal** is a new term coined in past two decades. The term **Kiriya:u:kki** 'catalyst' is a mixed form. The first half **kiriya** is from Sanskrit and the second half is in pure Tamil Now it is called as **vinai u:kki** 'Catalyst'. The term **Co:tanai ca:lai** 'lab' also is mixed in form **co:tanai** 'test' is from Sankrit **ca:lai** 'place' is from Tamil.

Some times the coined terms such as **Ve:tiyal, vinai u:kki** etc., are not understandable by the Tamil people. Because the root form **ve:tu** and **vinai** have different readings. and also which are not used in the same sense in Tamil.

So, the translators must know the subjeet matter and the techniques of coining new term. They must use pure Tamil words which are derived from old forms and use in the same meaning in the present life.

In early days, the translators used Sanskrit terms. more frequently. But at present they began to coin new technical terms in Tamil, which are confusing the students as well as the teachers. Students who are studying through Tamil find it difficult when they study in Colleges in English medium, because the technical terms are not same in Tamil and in English. So if the technical term for a single item is same in both the languages, the students will not find any difficulty in understanding the technical terms.

The authors of the text-book committee are not conscious of the inadequacy of a word-for-word translation, which may not even represent the individual lexical meanings that the context requires. Mostly, the quality of the translation is based on the Competence of the translator in both of the languages (i.e., the source language as well as the target language) and his subject knowledge.

Conclusion

For the development of Tamil language standardization of words is necessary. The same word should be used in all the School classes. Otherwsie, the standardization will not be effective. So, if the text-book committee follows a common dictionary for their translation works we can expect good results.

References

Jumpelt, R.W. 1963 'Methodological approaches to science translation' **Quality in Translation** (Edd.by E. Carry and R.W. Jumpelt) Oxford.

Quine, V. Willard, 1959, 'Meaning and Transtation' on **Translation Harvard University, Press Cambridge**

Text-books for 10th Std. Old and New

பாரதியின் நவதந்திரக் கதைகளும் சில வேடிக்கைக் கதைகளும்

வ. உமாராணி
புதுவைப் பல்கலைககழகம்

முன்னுரை;

பாரதியார் மக்களனைவரும் தன்னை கவிஞர் என்ற ஒரே நிலையில் வைத்து மதிப்பிடும் அளவிற்குத் தன் பாட்டுத் திறத்தால் சமுதாய ஏற்றத் தாழ்வுகளைச்சாடி மக்கள் மனதைக் கவர்ந்தார். ஆனால் பாரதியிடம் பிற திறன்களும் இருந்ததைப் பின்வரும் சான்றுகளால் அறியலாம். பாரதி ஒரு கட்டுரை யாளராகத் திகழ்ந்தார் என்பதற்கு. தத்துவம். மாதர் கலைகள். சமூகம் என்ற தலைப்புகளின் கீழ் அவர் எழுதிய கட்டுரைகள் சான்றுகளாகின்றன. தாகூரின் சிறுகதைகள், பஞ்சவியாசங்கள் முதலியவற்றை மொழிபெயர்த்ததிலிருந்து அவர் மொழி பெயர்ப்பாளர் தகுதியைப் பெறுகிறார். ஞானரதம், சின்ன சங்கரன் கதை, சந்திரிகையின்கதை. ஆறில் ஒரு பங்கு போன்ற எழுத்துக்கள் அவர் நெடுங்கதை ஆசிரியர் என்பதற்குச் சான்று களாகின்றன. நவதந்திரக் கதைகள், சில வேடிக்கைக்கதைகள போன்ற இரண்டும் அவருககுச் சிறுகதை ஆசிரியத்தகுதியை அளிக்கின்றன. பாரதியின் இவ்விரண்டு கதைகளையும் ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஒற்றுமைகள்

1) நவதந்திரக் கதையில் இடம்பெற்றுள்ள தலைப்புகளில் ஏழு தலைப்புகள் 'கதை' என்னும் சொல்லுடன் இணைந்து வந்துள்ளன. [(1) சங்கீதம் படிக்கப் போன கழுதையின் கதை

2) ரோஜாப்பூ என்ற பாம்பின்கதை 3) கந்தர்ப ஸ்வாமிகள் என்ற ஆண்டி கதை 4) தட்டிக் கொண்டான் செட்டிக் கதை 5) காட்டுக் கோயிலின் கதை 6) திண்ணன் என்ற மறவன் கதை 7) பிராமணப்பிள்ளை நாலு சாஸ்திரம் படித்துக் கொண்டு வந்தகதை]

வேடிக்கைக் கதைகளில் ஐந்து தலைப்புகள் கதை என்னும் சொல்லுடன் இணைந்து வந்துள்ளன. [1)அந்தரடிச்சான் சாகிப் கதை 2) கிளிக்கதை 3) வைசாக்கதன் என்ற பண்டாரத்தின் கதை 4) சிறுகதை 5) குழந்தைக் கதை]

2) நவதந்திரக்கதையில் இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன எடுத்துக்காட்டாக ரோஜாப்பூ என்ற பாமபின் கதையில் இடம் பெறும் பாம்பு முனிவரிடம் வரம் பெற்று நினைத்த போது பெண்ணாக உருமாறும் சக்தியைப் பெறுகிறது.

சில வேடிக்கைக் கதையில் 'சும்மா' என்ற கதையில் இயற்கையை இகந்த நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது.

''குள்ளச்சாமி நெடியசாமி ஆகிவிட்டார். நாலே முக்கால் அடி போல் தோன்றிய குள்ளச்சாமியார் ஏழே முக்கால் அடி உயரம் வளர்ந்து விட்டார். ஒரு கண்ணைப் பார்த்தால் சூரியனைப் போல் இருந்தது. மற்றொரு கண்ணைப் பார்த்தால் சந்திரனைப் போல் இருந்தது. முகத்தின் வலப்புறம் பார்த்தால் சிவன் போல் இருந்தது இடப்புறம் பார்த்தால் பார்வதியைப் போலவே இருந்தது, குனிந்தால் பிள்ளையார் போலிருந்தது. நிமிர்ந்து பார்க்கும் போது விஷ்ணுவின் முகத்தைப் போலவே தோன்றியது''.

அ) புல்லாகி பூடாய்ப் புழுவாய், மரமாகிப்
பல்விருக்கமாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய், மனிதராய் பேயாய்க் கணங்களாய்
... ... ,.. ... ...

ஆ) 'மயே மஏ'

இ) ''ஜன்மநா ஜாயதே சூத்ர
கர்மணா ஜாயதே த்வஜ''

ஈ) ''உலகைத் துறந்தீர் உருவைத் துறந்தீர்
மலையைப் பிளந்துவிட வல்லீர் - இலகு புகழ்
ஞானம் தவம் கல்வி நான்குந் துறக்குவீர்
ஆனந்த மயா ஹரி''

உ) ''நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்த்தார் போல்
... ...
காக்கை யுகக்கும் பிணம்''

திருவாசகம், மந்திரங்கள், பழமொழிகள் போன்ற பாடல்கள் நவதந்திரக் கதைகளில் இடம் பெற்றுள்ளன.

அ) ''பிரம்மந்தான் சத்தியம்
மற்ற தெல்லாம் சூன்யம்''

ஆ) ''கடலைப் போலவே கற்றோமென்றே
... ...
கடுமை செய்தாயே''

இ) காற்றடிக்குது கடல் குமுறுது
... ...
தொளைத் தடிக்குது கூடத்திலே''

ஈ) ''திக்குகள் எட்டும் சிதறி-தக
....
தக்கத்தக, தக்கத்தக தித்தோம்''

உ) ''அண்டங் குலுங்குதுதம்பி-தலை
....
தக்கத்தக தக்கத்தக தித்தோம்''

போன்ற பாடல்கள் சில வேடிக்கைக் கதைகளில் இடம் பெற்றுள்ளன.

வேற்றுமைகள்

(1) நவதந்திரக் கதையில் இடம் பெறும் கதைகள் ஒன்றின் தொடர்ச்சியாக ஒன்று வருகின்றன. குழந்தைகளுக்குக் கதை சொல்லத் தொடங்கியதந்தை ''சங்கீதம் படிக்கப் போன கழுதையின் கதை'' என்ற கதையை முதலில் கூறுகிறார் பின்பு இக் கதையில் இடம்பெறும் 2 கதை மாந்தர்கள் [குயில், கழுதை] இரண்டு கதைகளை மாறிமாறிச் சொல்கின்றன.

வேடிக்கைக் கதைகளில் 35 கதைகள் இடம் பெற்றுள்ளன. இவையனைத்தும் தனித்தனிக்கதைகளாக உள்ளன.

(2) நவதந்திரக் கதையில் மூன்று கதைகள் இடம் பெற்று உள்ளன. இம்மூன்று கதைகளுக்கும் நோக்கம் என்ன என்பது கூறப்பட்டுள்ளது. சங்கீதம் படிக்கப்போன கழுதையின் கதையில் ''ஒரு காரியம் தொடங்கும் போது அதன்பயன் இன்னதென்று நிச்சயமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தப் பயன் நமக்கு வேண்டியதுதானா என்று ஆராய்ந்து செய்ய வேண்டும்'' என்று அக்கதையின் நோக்கம் கூறப்பட்டுள்ளது. குயிலின் பாடலைக்கேட்ட கழுதை தானும் பாடவிரும்பி பல துன்பங்களுக்கு உள்ளாகியது. கழுதையின் மூலம் பயனில்லாத செயலைச் செய்பவன் துனபங்களுக்கு உள்ளாவான் என்பது விளக்கப்பட்டுள்ளது.

வேடிக்கைக் கதையில் ஆனைக்கால் உதை, சிறுகதை போன்ற கதைகளில் நோக்கம் கூறப்பட்டுள்ளது.

(3) நவதந்திரக் கதையில் குயில், கழுதை, பாம்பு, சிங்கம், நரி, ஓநாய், எருமை, பருந்து, நாய், மூஞ்சூறு, கரடி போன்ற பிராணிகளே கதை மாந்தர்கள். திண்ணன், மன்னன்மகள், பூவாணிச்சி மகள் போன்ற ஓரிரு மனிதர்களும் கதை மாந்தர்களாகின்றனர். வேடிக்கைக் கதையில் மனிதர்களே கதை மாந்தர்கள் ''காக்காய் பார்லிமெண்ட்'' என்ற ஒரு கதையில் மட்டும் காகம் இடம் பெறுகிறது. பேய்கதையில் பேய்களும் கதை மாந்தர்களாகின்றனர்.

(4) நவதந்திரக் கதை முடிவு பெறாமலேயே உள்ளது. வேடிக்கைக் கதைகள் அனைத்தும முடிவுபெற்றுள்ளது

5) வேடிக்கைக் கதைகளில் காற்று மழை போன்ற இயற்கை நிகழ்ச்சிகள் வருணிக்கப் பட்டுள்ளன. நவதந்திரக் கதையில் இயற்கை பற்றிய வருணனை கிடையாது.

6) வேடிக்கைக் கதையில் இராமாயணம், மகாபாரதம் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. நவதந்திரக்கதைகளில் இது இடம் பெறவில்லை.

வேடிக்கைக்கதையின் சிறப்பு

வேடிக்கைக் கதையில் புதுவை மாநிலத்தைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. 'பிங்கள வருஷம்' என்ற கதையில் சித்தானந்த சுவாமி கோயிலைப் பற்றிய செய்தி இடம் பெறுகிறது. 'மிளகாய்ப் பழச்சாமியார் என்ற கதையில் புதுவை முத்தியால் பேட்டை சுப்பிரமணியக் கோயில் எழுந்த வரலாறு கூறப்பட்டுள்ளது. சிவன் கோயில் பற்றிய செய்தியும் இடம் பெறுகிறது பாரதி காலத்தில் வாழ்ந்த சிலர் கதை மாந்தர்களாக வருகின்றனர். வண்ணான் தொழில், சும்மா, கடற்கரையாண்டி, கத்திச் சண்டை ஆகிய4 கதைகளில் குள்ளச் சாமி பற்றிய குறிப்புகள் உள்ளன. மற்றும் வேணுமுதலி, பிரம்மராய ஐயர். அன்னிபெசண்ட் அம்மையார், கலியுக கடோற் கசன் என்ற பெயர்பெற்ற கோவிந்தராஜலு முதலிய வர்களும் கதை மாந்தர்களாக வருகின்றனர். புதிய கோணங்கி. கடற்கரையாண்டி. செய்கை, சும்மா I, II வண்ணன் தொழில், மிளகாய்ப் பழச்சாமியார் போன்ற கதைகள் கதைக்குரிய இயல்பு களைப் பெறவில்லை பாரதியின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சி களை சித்தரிக்கும் கட்டுரைகளாக அமைந்திருப்பது கவனத்திற் குரியது. 'குதிரைக் கொம்பு என்ற கதையில் ராமனின் குணங் களை ராவணனுக்கும், ராவணனின் குணங்களை ராமனுக்கும் ஏற்றி கூறப்பட்டுள்ளது சூர்ப்ப நகையின் குணங்களும் உயர்ந்த குணங்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. இக் கதைகளில் பாரதியாரின் நிகழ்காலச் சமூக உணர்வுகள் இடம் பெற்று

உள்ளன. 'கிளிக்கதை' என்னும் கதையின் மூலம் மக்களிடம் குடி கொண்டுள்ள அறியாமை, மூட பகதி, போலிச்சாமியார் களின் தன்மைகள, ஆகியவற்றைச் சாடியுள்ளார் 'அந்தரடிச் சான் சாகிப் கதையில்' மூடநம்பிக்கையைக் கேலி செய்துள் ளார்.

நவதந்திரக் கதையின் சிறப்பு

நவதந்திரக் கதையின் 2-ஆம் பகுதியில் பெண்களை ஆடவர்களைவிட அறிவாளியாகச் சித்தரித்துள்ளார். மனைவியை மதிக்காத கணவன் துன்பமடைவான் என்பதை 'உத்தண்டி' என்னும சிங்கப் பாத்திரத்தின் மூலம் விளக்குகிறார். வயதில் மூத்தப் பெண்ணை இளையப் பிள்ளைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற கருத்தையும் கூறியுள்ளார். விலங்குகளைக் கதை மாந்தர்களாக வைத்து மனிதர்களிடமுள்ள பெண்ணடிமை. பெண்ணை மதிக்காத போக்கு, சாதிப்பகுப்பு, மூட நம்பிக்கை, மூடபக்தி போன்ற சமுதாயச் சிக்கல்களை இக் கதையில் படைத்துள்ளது கவனத்திற்குரியது.

முடிவு

நவதந்திரக் கதைகள், வேடிக்கைக் கதைகள் இரண்டுமே சிறுகதைகளாக இருந்தாலும், நவதந்திரக் கதைகளில் விலங்குகளின் மூலம் சமுதாயத்தைப் படம் பிடித்துக்காட்டுகிறார். மனிதர்கள்தான் விலங்குகளைக் கதைமாந்தர்களாக வைத்துக் கதை கூறுவது வழக்கம். ஆனால் நவதந்திரக் கதையில் விலங்குகள் கதைமாந்தர்களாக மனிதரைப் படைத்துக் கூறுவது புதுமையாக உள்ளது. வேடிக்கைக் கதையில் சிலவற்றை காணும் போது பின்வந்தோர் கதைப் பிரிவில் சேர்த்து விட்டனரோ என்று ஐயுற வேண்டியதாக உள்ளது.

குற்றச் செய்திகள்

ச. உஷா

அண்ணா ஆதர்சமகளிர் கல்லூரி, சென்னை

இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியிலிருந்து தகவல் தொடர்பு சாதனங்கள் மக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளில் பங்கு வகிக்கத் தொடங்கின. கல்வி நிறுவனங்களும் கற்றவர் எண்ணிக்கையும் பெருகப்பெருக இப்பங்கு பெரும் பங்காக மாறத்தொடங்கியது. அதிலும் குறிப்பாக நாளிதழ்களும் வார இதழ்களும் பிற செய்தித்தொடர்பான இதழ்களும் மக்களிடையே பெரும் செல்வாக்கோடு உலாவருகின்றன. இவற்றுள் நாளிதழ்களும் ஒருசில குறிப்பிட்ட வார இதழ்களும் (ஜூனியர் விகடன், ஜூனியர் போஸ்ட், தராசு, நக்கீரன், யுகம், கருடன்) குற்றச் செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதைக் காணலாம். எனவே பல்வேறு இதழ்களில் வெளிவரும் குற்றச்செய்திகளின் நிலைகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குற்றச்செய்திகள்

அரசியல் சாசனச்சட்டத்தில் இடம்பெற்றுள்ள சரத்துக் களுக்கு எதிரான நிகழ்ச்சிகளோ, செய்திகளோ, மீறல்களோ குற்றச்செய்திகளாகின்றன. இச்செய்திகளுக்கு அண்மைக்கால நாளிதழ்கள் பெரிதும் முக்கியத்துவம் அளித்து வெளியிடுகின்றன. இந்நிலைக்கு இச்செய்திகள் வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டு வதாகவும், நாளிதழ்களின் விற்பனையை அதிகரிக்க உதவுவ தாகவும் இருப்பதுவே காரணங்களாகலாம். எனினும் சமூகக் கண்ணோட்டத்தில் இச்செய்திகளை வெளியிடுவது பற்றி இருவேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. ஒருசாரார், நாளி தழ்கள் இதுபோன்ற சமூக விரோதச் செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல் கூடாது என்றும், மற்றொரு சாரார்

இவ்வாறான குற்றச்செய்திகளைப் பெரிதும் மககள் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பேற்படுத்தித் தருதல் நலம் என்றும் இச்செய்திகள் பற்றி விமர்சிக்கின்றனர். எனினும் இக்கால இதழ்கள் குற்றச்செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப் பதைத் தங்கள் தலையாய வெளியீட்டு உத்திகளில் ஒன்றாகக் கையாளுகின்றன என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

குற்றச்செய்திகளின் நிலைக்கலன்

குற்றச்செய்திகள் தனிமனிதனைச் சார்ந்தனவாகவோ அல்லது குடும்பம் குழுக்கள் என்ற அளவில் சமுதாயத்தைச் சார்ந்தனவாகவோ இருக்கலாம் இக்குற்றச்செய்திகளை ஆர். இராமச்சந்திர ஐயர் தன்னுடைய நூலில் (Quest for News).

1. தனிமனிதனுக்கு எதிரானவை
2. சொத்துக்கு எதிரானவை
3. பொதுநலனுக்கு எதிரானவை
4. சட்டப்பூர்வமான அதிகாரத்திற்கு எதிரானவை

என்று வகைப்படுத்துகிறார். எனினும் எல்லா நிலைகளிலும் குற்றச்செய்திகள் தனிமனிதனைச் சார்ந்ததாகவோ சமூகத்தைச் சார்ந்ததாகவோ இருக்கக் காணமுடிகிறது. தற்காலச் சமூகச் சூழல் பிரச்சினைகளுக்கு உரியதாக, அமைதியற்றதாக, சமூக விரோதச் செயல்கள் மலிந்ததாக இருப்பதன் காரணமாக மக்களின் ஆர்வ நாட்டமும் இயல்பாகவே இவ்வகைச் செய்தி களைக் கேட்பதிலும் படிப்பதிலுமே அதிகமாக ஈடுபடுவதைக காணமுடிகிறது. இதன் காரணமாகவே இக்கால இதழ்கள் குற்றச்செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன எனலாம்.

குற்றச்செய்திக்களங்கள்

குற்றச்செய்திகள் பல்வேறு பண்புகளை உடையனவாக இருக்கலாம். இச்செய்திகளைச் சேகரிக்கும் செய்தியாளர் (Crime Reporter) இச்செய்திகள் கிடைக்கும் களங்களை நன்கு அறிந்திருப்பார். பெரும்பாலும் குற்றச்செய்திகள்,

1. காவல் நிலையங்கள்
2. நீதிமன்றங்கள்
3. மருத்துவமனைகள்
4. பல்வேறு செய்தி நிறுவனங்கள்

போன்றவற்றில் கிடைக்கின்றன. எனினும் சிலவேளைகளில் இச்செய்தி சேகரிக்கும் செய்தியாளர் நிகழ்ச்சி நடந்த இடங்களுக்குச் சென்று நேரடியாகவும் செய்திகளைச் சேகரிப்பதுண்டு. ஒரு குற்றச்செய்தியின் தொடர்ச்சியான செய்திகளைப் பெரும்பாலும் மேற்கண்ட களங்களே இதழ்களுக்குத் தந்துதவுகின்றன இந்த வகையில் நாள்தோறும் பல்வேறு வகையான குற்றச் செய்திகள் பல்வேறு நாளிதழ்களை அலங்கரிக்கின்றன.

குற்றச்செய்தியாளர் (Crime Reporter)

இதழ்களின் பரிணாமத்திற்கேற்ப ஒவ்வொரு வகைச் செய்திகளுக்கும் ஒரு செய்தியாளர் (Reporter) இருப்பது வழக்கம். சில இதழ்கள் ஒருசில செய்தியாளர்கள் அளவிலேயே எல்லாச் செய்திகளையும் சேகரித்து வெளியிடுவதும் உண்டு. ஆனால் வளர்ச்சி மிகுந்த இதழ்கள் ஒவ்வொரு வகைச் செய்திகளுக்கும் (சினிமா, அரசியல், குற்றம், விளம்பரம்) ஒவ்வொரு செய்தியாளரை நியமித்துள்ளன. குற்றச் செய்திகளைச் சேகரிக்கும் செய்தியாளர் இச்செய்திகள் பற்றிய ஐயமில்லாப் பேரறிவு பெற்றவராக இருத்தல் வேண்டும். மேலும் இச்செய்திகளை வெளியிடுவதால் கையாளும் அனைத்து உத்திகளையும் கவனத்தில் கொண்டவராக இருத்தல் வேண்டும். இச்செய்திகளைக் கையாள்வதில் மிகுந்த எச்சரிக்கை உள்ளவராயும் பின்விளைவுகளை வரையறைப்படுத்தும் திறன் மிகுந்தவராயும் இருத்தல் மிக அவசியம். எல்லாவற்றிற்கும் மேலாக இச்செய்தியாளருக்கு உரிய அடிப்படைத் தேவையான 'சரியான தகவலை' (Accuracy) அவர் தருதல் வேண்டும்.

வெளியீட்டு உத்தி

குற்றச்செய்திகளை வெளியிடுவதில் இதழ்கள் தங்களுக்கே உரிய பண்புகளின் அடிப்படையில் பல்வேறு உத்திகளைச்

(Techniques) கையாளுகின்றன. ஒரே குற்றச்செய்தி பல்வேறு இதழ்களில் வெளியாகின்றபோது அவ்வவ் இதழ்களின் வெளியீட்டு உத்திக்கேற்ப வாசகர்களைக் கவரும் விகிதாச்சாரம் அமைகிறது. பஞ்சாப்பில் நடக்கும் தேச விரோதச் செய்திகளை வெளியிடும் நாளிதழ்கள் பல்வேறு நிலைகளில் தலைப்புச் செய்திகளை அமைக்கலாம் 'பஞ்சாபில் பெரும் கலவரம்' 'பயங்கரவாதிகள் சுட்டுக் குடும்பமே பலி' 'தீவிரவாதிகளைச் சுட உத்தரவு' என்ற வகையிலும், 'கண்டதும் சுட உத்தரவு' என்றும் அச்செய்தியின் தலைப்புக்கள் இடப்படலாம். இம் மூன்று தலைப்புக்களும் ஒரே செய்தி பற்றியனவாக இருந்தாலும் மூன்றாவது தலைப்பான 'கண்டதும் சுட உத்தரவு' என்ற பஞ்சாபில் தீவிரவாதிகளை கண்டதும் சுட உத்தரவு என்ற செய்தியின் சுருககமாக இடப்பட்ட தலைப்பே வாசகர்களின் ஆவலைத் தூண்டி அவ்விதழின் விற்பனையைக் கூட்டும் தலைப்பாக அமையும். இவ்வகையாக இதழ்கள் செய்திகளின் தலைப்புக்களை இடுவதில் வேறுபடுவதைக் காணமுடிகிறது.

குற்றச்செய்திகளும் வாசகர்களும்

தற்கால நாளிதழ்களிலும் வார இதழ்களாகப் பல்வேறு செய்திகளை வெளியிடும் புலன் விசாரணை இதழ்களான (Investicative Journals) ஜுனியர் விகடன், ஜுனியர் போஸ்ட், தராசு, நக்கீரன் போன்ற இதழ்களிலும் அரசியல், சினிமா, குற்றம் என்ற மூன்றுவகைச் செய்திகளே தலைமையிடம் பெறக் காணலாம். "குற்றச்செய்திகளை வெளியிடுவதால் சில பாதக விளைவுகள் ஏற்படுகின்றனவென்றாலும் குற்றச்செய்திகளை வெளியிடுவதைத் தவிர்ப்பதோ, தடுப்பதோ நடைமுறையில் சரியாகாது" என்று டாக்டர் மா பா. குருசாமி குறிப்பிடுவது போல, வாசகர்கள் மத்தியில் இவ்வகையான செய்திகளுக்கு மிகுந்த வரவேற்பிருப்பதால் இதழ்கள் தங்கள் விற்பனையைக் கருத்தில்கொண்டு இச்செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியுள்ளது. மேலும் வரதட்சணைக்கொடுமை, இருதாரமணம், திருமணமோசடி, போன்ற பல்வேறு குற்றச் செய்திகளை வெளியிடுவதின் மூலம் மக்களாகிய வாசகர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த இவ்வகைச் செய்தி

கள் பெரிதும் துணைபுரிகின்றன எனலாம். எல்லாவற்றிற்கும் மேலாகக் கொள்ளைக்காரர்கள், திருடர்கள், ஏமாற்றுவோர், குண்டர்கள் போன்ற பல்வேறு வகைப்பட்ட மனித இனங்களை வாசகர்களின் முன்னே படம்பிடித்துக்காட்டி விழிப்புணர்வை ஏற்படுத்துதற்கும் குற்றச்செய்திகள் துணைபுரிகின்றன.

நாளிதழ்களும் வார இதழ்களும்

குற்றச்செய்திகளை வெளியிடுவதில் நாளிதழ்களும், ஜுனியர் விகடன், ஜுனியர் போஸ்ட், தராசு, நக்கீரன் போன்ற வார இதழ்களும் பல்வேறு அணுகுமுறைகளைக் கையாளு வதைக் காணமுடிகிறது. குற்றங்கள் நடந்தவிதம், சம்மந்தப் பட்டோர், இடம், ஏற்பட்ட விளைவுகள், சந்தேகத்திற்கு உரிய வர்கள், குற்றம் செய்தவர்களாகக் கருதப்படுவோர், பாதிக்கப் பட்டோர் நிலை போன்ற குறிப்பிட்ட குற்றம் பற்றிய செய்தி களை விரிவாக, தொடர்ச்சியாக பல்வேறு நடையில் வெளியிடு வதை மட்டுமே தங்களுடைய நோக்கமாக நாளிதழ்கள் கொண்டிருப்பதைப் பெரும்பாலும் காணமுடிகிறது. ஆனால் புலன்விசாரணை இதழ்களாக (Investicative Journals) வாரந் தோறும் வெளிவரும் ஜுனியர் விகடன், ஜுனியர் போஸ்ட், நக்கீரன், தராசு போன்ற இதழ்களும் குற்றச்செய்திகளுக்கு கதைத்தகுதி கொடுத்து எழுதுவதோடு அச்செய்தியின் முடிவில் அச்செய்தி சேகரித்த செய்தியாளரின் விமர்சனமும் இடம்பெறக் காணமுடிகிறது.

முடிவுரை

தற்கால இதழ்களில் வெளியாகும் குற்றச்செய்திகள் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும் போது கீழ்க்காணும் முடிவுகளைச் சொல்லலாம்.

தற்கால நாளிதழ்கள், வார இதழ்கள் குற்றச்செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதைக் காணமுடிகிறது.

தற்கால இதழ்களில் குற்றச்செய்திகள், வாசகர்களின் ஆர்வத்திற்கேற்பவும், இதழ்களின் விற்பனையைக் கருதியும் அதிகமாக இடம்பெறுகின்றன எனலாம்.

பெரும்பாலும் குற்றச்செய்திகள் சமூகநலன் கருதியே இதழ்களில் வெளியிடப்படுகின்றன.

குற்றச்செய்தியாளர் (Crime Reporter) எல்லாநிலைகளிலும் நல்லறிவு பெற்றவராகவும், செய்திகளின் வன்மைமென்மை தெரிந்து பின்விளைவுகளை நன்கு கணித்தவராகவும் இருத்தல் அவசியமாகிறது.

குற்றச்செய்திகள் பெரும்பாலும் சமூகவிரோத சக்திகளை மக்களுக்கு இனங்காட்டப் பெரிதும் உதவுகின்றன.

குற்றச்செய்திகளை வெளியிடுவதில் நாளிதழ்களும் வார இதழ்களும் வெவ்வேறு அணுகுமுறைகளைக் கையாளுகின்றன.

நாளிதழ்கள் குற்றம் பற்றிய விரிவான செய்தித் தொகுப்பைத் தர, வார இதழ்களான புலன்விசாரணை இதழ்கள் செய்தித் தொகுப்பின் இறுதியில் செய்தியாளரின் விமர்சனத்தையும் வெளியிடுகின்றன.

ஐம்பதுகளில் மிக உயர்ந்த நிலையில் உள்ள குடும்ப சம்மந்தப்பட்ட குற்றச்செய்திகளே இதழ்களின் இன்றியமையாச் செய்திகளாக வரும் நிலை மாறி தற்கால இதழ்களில் அதிலும் குறிப்பாக புலன்விசாரணை இதழ்களில் சாதாரணப் பாமரர் சம்மந்தப்பட்ட குற்றச்செய்திகளும் அதிக முக்கியத்துவம் பெறுவதைக் காணமுடிகிறது.

வார இதழ்களில் குற்றச்செய்தித் தொகுப்பின் இறுதியில் காணப்படும் விமர்சனம் பெரும்பாலும் சமூகத்தின் சிந்தனையைத் தூண்டுவதாகவும் மனிதநேயத்தை வெளிக்காட்டுவதாகவும் அமைவதைக் காணமுடிகிறது.

கடற்பாசிகள்- வளமும் பயனும்

இரா. கண்ணன் மற்றும் லெ கண்ணன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வரும் மக்கள் தொகை, உணவுப் பொருள் உற்பத்தியிலும் ஏனைய பலவகை உற்பத்தி களிலும் பெரும் முன்னேற்றத்தை எதிர்நோக்கியுள்ளது. இவ் வகையில் இயற்கையின் வளங்கள் பெருமதிப்பு வாய்ந்தவை. இவற்றை எல்லா நிலைகளிலும் முழுமையாகப் பயன்படுத்த இன்றைய அறிவியல் அறிஞர்கள் ஆராய்ச்சியினை முடுக்கி விட்டுள்ளனர்.

இயற்கையின் படைப்பில் மிக உன்னதமானதும், அளவில் மிகப்பெரியதானதும் மற்றும் மிகப் பயனுள்ளதாகவும் காணப் படுவது கடலேயாகும். கடலுக்குள் காணப்படும் அளவில்லா உயிர் மற்றும் உயிரற்ற வளங்கட்கு இன்றைய அறிவியல் அறிஞர்கள் பயன் வடிவம் கொடுத்து வருகின்றனர்.

கடல் என்றதும் அதன் அலைகளும், மீன்களுமே கேட் போரின் கவனத்தை ஈர்க்கும் முதன்மைப் பொருட்களாய் உள்ளன. இவை நீங்கலாக, கடற்கரையோரம் ஒதுங்கியும், பாறைகளிலும் மற்றும் வெவ்வேறு பற்றுக்கோட்டுப் பொருட் களின் மீது ஒட்டியும் வளர்கின்ற பல்வேறு வடிவ மற்றும் வண்ண தாவரப் படைப்புக்களே "கடற்பாசிகள்" என்றழைக் கப்படுகின்றன. இவை 'ஆல்காக்கள்' எனும் பூவாத தாவர இனத்தைச் சேர்ந்தவையாகும். இவை கடல் வளத்தின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகின்றன. இப்பாசிகளில் காணப் படும் நிறமிப் பொருட்களை முக்கிய அடிப்படையாகக்

கொண்டு இவற்றை பச்சை, பழுப்பு மற்றும் சிவப்புப் பாசிகள் என வகைப்படுத்தியுள்ளனர். பல நூற்றாண்டுகளாக இப்பாசிகள் ஜப்பானிலும், சீனாவிலும் உணவாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. மேலும் இவை உரமாகவும் தீவனமாகவும், மருந்தாகவும் பயன்படுத்தப்படுகின்றன. உலகின் கடற்பாசி உற்பத்தி வருடத்திற்கு 1721× 10 டன் எனக் கணக்கிடபபட்டுள்ளது (மிச்சாநெக், 19.5) இந்தியாவின் 6100 கி.மீ. கடற்கரை பரப்பும் பெரும் அளவிலான கடற்பாசி வளத்தை தன்னகத்தே கொண்டுள்ளது இந்தியக் கடற்கரையின் ஒரு வருடத்திய பாசி உற்பத்தி 70 000 டன்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியக் கடற்கரையில் அபரிமிதமான பாசி வளர்ச்சி குஜராத் கடற்கரையான வீராவல் மேலும் பம்பாய், ரத்னகிரி, கோவா, கார்வார், கோவளம், விழிஞ்சம் மற்றும் தமிழகத்தில் கன்னியாகுமரி முதல் மண்டபம் வரையிலும், ஆந்திரத்தில் விசாகபட்டினம் மற்றும் புலிகாட் சில்காட் ஏரிகளிலும், லட்சத்தீவு மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளிலும் காணப்படுகிறது.

பொருளாதார நோக்கில் கடற்பாசிகள் இந்தியாவில் எதிர் உயிரிப பொருள் உருவாக்கம், உயிர்ச்சக்தி உற்பத்தி திரவ உர உற்பத்தி மற்றும் மருந்து உற்பத்தி போன்றவற்றிற்கென அதிக கவனம் செலுத்தப்படுகின்றன. மேலும் கடற்பாசிகளிலுள்ள, பல் கரிச் சர்க்கரைகளான அகார் - அகார், அல்ஜின் மற்றும் கூழ்மத்தையொத்த கேராஜீனான் போன்ற வேதிப்பொருட்கள் எளிதில் பிரித்தெடுக்கப்பட்டு பல்வேறு முறைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அகார் அகார்

இது சிவப்பு நிறவகைக் கடற்பாசிகளினின்று பெறப்படும் ஒருவகை மாவுப் பொருள் ஆகும். இதனைத் தரும் கடற்பாசிகள் ‘அகரோபைட்டுகள்’ என்று அழைக்கப்படுகின்றன. **ஜெலிடியெல்லா அகரோசா, ஜெலிடியம் புசில்லம், கிரேசிலேரியா, எடுலிஸ், கி. கிரஸா, கி வெருகோசா, கி. கார்டிகேட்டா** மற்றும் **கி. ஃபோலிஃபெரா** போன்றவை அகார் தயாரிப்பில் பெரும் பங்கு வகிக்கும் தாவரங்களாகும். உணவு மற்றும் மருந்துப்பொருள்

தயாரிப்பிலும், துணி மற்றும் காகிதத் தயாரிப்பிலும், மற்றும் நிறமூட்டும் தொழிலும் அகார் - அகார் அதிக அளவில் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

அல்ஜின்

இது பழுப்பு நிறவகைக் கடற்பாசியினின்று பிரித்தெடுக்கப் படும் ஒருவகைப் பல்கரிச் சர்க்கரைப் பொருளாகும். இதனைத் தரும் கடற்பாசிகள் 'அல்ஜினோபைட்டுகள்' எனப்படுகின்றன. **சர்காஸம், டர்பினேரியா, டிக்டியோட்டா, பெடைனா, சிஸ்டோசீரா, ஹார்மோஃபைசா, கால்போமீனியா, ஸ்பேத்தொகிளாசம்** மற்றும் **ஸ்டோர்க்கியோஸ்பெர்மம்** போன்றவற்றின் சிற்றினங்கள் அல்ஜின் தயாரிப்பில் பெரும்பங்கு வகிக்கின்றன. ஐஸ்கிரீம் உற்பத்தி முதல் பால்பொடி, மருந்து, பற்பசை, துணி மற்றும் காகித உற்பத்தி வரை அதிக அளவில் அல்ஜின் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

கேராஜீனான்

கேராஜீனான் என்னும் ஒருவகை கூழ்மப் பொருள் **ஹிப்னியா மியூசிபார்மிஸ், ஜிகார்டினா** அசிகுலாரிஸ் மற்றும் **ஸ்பைரீடியா, கிராடிலூ பியா** போன்றவற்றின் சிற்றினங்களி லிருந்து பெறப்படுகிறது. தென்னிந்தியாவில் டெல்லிச்சேரிப் பகுதியில் வாழும் மீனவர்கள் **கிராடிலூபியா**விலிருந்து பெறப் படும் இந்த வேதிப்பொருளை, மீன்பிடி வலைகளை உறுதியாக் கவும், பாதுகாக்கவும் பயன்படுத்துகிறார்கள் (திவி, 1982).

கடற்பாசி உணவு

கடற்பாசியில் 16-30 விழுக்காடு புரதம் (உலர் எடையில்) நிறைந்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. (விஸ்வேஸ்வர ராவ், 1964). தானியங்கள், முட்டை மற்றும் மீன் போன்ற வற்றிலுள்ள புரதத்தைக் காட்டிலும் கடற்பாசிப் புரதம் சற்றே கூடுதலான அளவில் உள்ளது. புரதத் தயாரிப்பில் **அல்வா, பொர்பைரா** மற்றும் **அக்காந்தோபோரா** போன்றவை பெரும்பங்கு வகிக்கின்றன.

கடற்பாசிகளில் உயிர்ச்சத்துக்கள நிறைந்து காணப்படு கின்றன சிலவகைக் கடற்பாசிகள் மனித ஈரலில் உள்ள 'பி12' உயிர்ச்சத்தைக் கொண்டுள்ளன. சர்காஸம் மற்றும் பொர்பைரா வகைப் பாசிகளினின்று பெறப்படும் 'சி' உயிர்ச்சத்து ஆரஞ்சு. எலுமிச்சை, போன்றவற்றில் உள்ளதைக்காட்டிலும் அதிக அளவினையுடையது (திவி, 1982).

கடற்பாசிகளில் தாதுப்பொருட்கள் 35 விழுக்காடு (உலர் எடையில்) உள்ளன. இத்தாதுப்பொருட்கள், மனித உணவில் முக்கியத்துவம் பெற்றுள்ள கால்சியம், சல்ஃபர், பாஸ்பரஸ், அயோடின், இரும்பு மற்றும் மாங்கனீசு போன்றவற்றை உள்ளடக்கியவை நம் அன்றாட உணவில் பொட்டாசியத் தேவை 5 கிராம் ஆகும். இந்தப் பொட்டாசியம் பழுப்பு நிறக் கடற்பாசிகளில் நிறைந்து காணப்படுகிறது பச்சை மற்றும் சிவப்புநிறக் கடற்பாசிகளில் சல்ஃபர் தாது நிறைந்துள்ளது.

கடற்பாசி கொண்டு பல்வேறுவகை உணவு தயாரிக்கும் முறைகளை சென்னுபோட்லா மற்றும் குழுவினர் (1987) வெளியிட்டுள்ளனர். இந்தியக் கடலோரங்களில் கிடைக்கும் பாசிகளான அல்வா, எண்டிரோமார்ஃபா, கீட்டோமார்ஃபா காலர்ப்பா, கோடியம், ஹைட்ரோக்ளாத்ரஸ், சர்காஸம், பொர்பைரா கிரேசிலேரியா ஹிப்னியா, அக்காந்தோபோஃரா மற்றும் லாரன்சியா போன்றவை உண்ணத் தக்கவை யாகும். தமிழகக் கடலோரங் களில் வசிக்கும் மக்கள் கிரேசிலேரியா எடுலிஸைக் கொண்டு கஞ்சி தயாரிக்கும் செய்தி ஒன்றே இந்தியாவில் கடற்பாசி உணவாகப் பயன் படுத்தப்படுவதற்குச் சான்றாகும் (சைலாஸ் குழுவினர், 1986).

கடற்பாசி தீவனம்

கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் தீவனமாகப் பயன் படுத்த கடற்பாசிகள் உகந்தவை.. கிரேசிலேரியா கார்டிகோட்ட கி. ஃபோலிஃபெரா மற்றும் சர்காஸம் சிற்றினம் போன்றவை தீவனத்திற்கென பரிந்துரைக்கப்பட்டுள்ளன. நம் நாட்டில் தேவ் குழுவினரும (1979) மற்றும் சதுர்வேதி குழுவினரும்

(1979). கடற்பாசியைத் தீவனமாகப் பயன்படுத்துதல் குறித்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

கடற்பாசி உரம்

உலகெங்கும் உள்ள கடலோரப் பகுதிகளில், உரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவில், குறிப்பாக கடலோரத் தமிழகத்திலும் மற்றும் கேரளத்திலும் கடற் பாசிகள் தென்னை சாகுபடியில் உரமாகப் பயன்படுத்தப் படுகின்றன. பொட்டாஷ் நீரில் எளிதில் கரையும் தன்மையுடையதால் கடற்பாசியினை உரமாகப் பயன்படுத்தும் போது அதிலுள்ள பொட்டாஷ் வளர்ப்புத் தாவரங்களில் பொட்டாஷ் பற்றாக்குறையைத் தீர்க்கிறது. மேலும் கடற் பாசிகளிலுள்ள மாவுப் பொருட்களும், அங்ககப்பொருட்களும, மண்ணின் தன்மையை மாற்றியமைப்பதோடு ஈரத்தைத் தக்க வைக்கும் தன்மையையும் அதிகரிக்கின்றன.

கடற்பாசி மருந்து

கடற்பாசிகளின் மருத்துவப்பயன் கி மு. 3000-ம் ஆண்டி லிருந்தே அறியப்பட்டுள்ளது. மேலும், கடற்பாசிகள் சித்த மருத்துவ மூலிகைக குணங்களையும் ஓமியோபதி மருத்துவ வீரியத்தையும் பெற்றுள்ளது தெளிவு. சீனாவிலும். ஜப்பானி லும் முன் கழுத்துக்கழலை நோய் மற்றும் இதர சுரப்பிகள் தொடர்பான நோய்கட்கும் கடற்பாசிகளை மருந்தாகப் பயன் படுத்தியுள்ளனர். ரோமானியர்கள் காயங்களை ஆற்ற இவற்றைப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

கொன்ட்ரஸ் கிரிஸ்பஸ் மற்றும் **கிரேசிலேரியா. ஜெலிடியம் டிரோக்ளாடியா** வின் சிற்றினங்களான சிவப்புநிறக் கடற்பாசிகள் பலவிதமான வயிற்றுக் கோளாறுகளுக்கும் மருந்தாகின்றன. அயோடின் அதிகமுள்ள **அஸ்பராகாப்ஸிஸ் டாக்ஸிஃபாமிஸ், சார் கோனிமா** சிற்றினம் போன்றவை முன்கழுத்துக்கழலை நோயைக் குணப்படுத்த உதவுகின்றன. (உமாமகேஸ்வரராவ், 1970) நுண் ணுயிர் எதிர்ப்புத்திறன் (குறிப்பாக பாக்டீரியாக்களுக்கு எதி

ரான) கடற்பாசிகளில் உள்ளதாகப் பலராலும் கண்டறியப் பட்டுள்ளது. (பிராட் குழுவினர், 1951; ஸ்ரீனிவாசராவ் குழு வினர் 1979; நாக்வி குழுவினர், 1981; பிளண்டன், குழுவினர், 1981; பத்மகுமார் 1988)

கடற்பாசி விற்பனை — ஒருசிறுதொழில்

கடற்பாசிகள் நிறைந்துள்ள கடற்பகுதிகளில் வாழும் மக்கள் குறிப்பாக பெண்கள் மீன்பிடி தொழில் தவிர பொருளா தார முக்கியத்துவம் பெற்ற பாசிகளைச் சேகரித்து விற்பனை செய்வதையும் ஒரு சிறு தொழிலாகக் கொண்டுள்ளனர். தமிழ் நாட்டில், சென்னையிலிருந்து சில நூறு மைல்கள் தொலைவி லுள்ள சின்னப்பள்ளம் கடற்கரை கிராமத்தில் பெண்கள் கடற் பாசி எடுக்கும் தொழிலை மேற்கொண்டுள்ளனர். மாதத்தில் 10 அல்லது 15 நாட்கள் இப்பாசிகளைச் ேசகரிக்கின்றனர். சாதாரணமாக ஒரு பெண் நாளில் 10 கிலோவுக்கும் கூடுதலான கடற்பாசியினைச் சேகரித்து ஒரு கிலோ அளவினை ரூ. 1-50 முதல 200 வரையிலும் விற்பனை செய்கிறார். (மது. 1987)

இவ்வாறு கடற்பாசிகள் கடல்வளத்தில் தமக்கென ஒரு முக்கிய இடத்தைப் பெற்று நமக்கு அறிவுறுத்நுவது என்ன வெனில், இவ்வளம் மக்களின் அறியாமையால் அழிக்கப்படா மலும், சுற்றுப்புறச்சூழல் தூய்மைக் கேட்டால் பாதிக்கப்படா மலும், பாதுகாக்கப்பட்டு மனிதர்கட்குத் தொடர்ந்து கிடைக்க வழிவகைகளைச் செய்ய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டு மென்பதேயாகும்.

மேற்கோள் நூல்கள்

1. Bluuden, C, Barwell, C.J., Figden, K.J. and Jewers, K. 1881. A survey of some British Marine Algae for anti-influenza virus activity. Bot. Mar, 14(5): 267-272.

மதுரை பெயர்க் காரணமும் சிறப்பும்

பொ. கணபதி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

ஒரு மனிதன் தன் சிறப்புத் தன்மைகளினால் பல பெயர்களைப் பெறுவதுபோல், பாண்டியரின் தலைநகராகத் திகழ்ந்த மதுரையும் அதன் பல சிறப்புக்களின் காரணமாகக் கூடல், ஆலவாய், நான்மாடக்கூடல் கடம்பவனம், கன்னிபுரீசம் என்று பல பெயர்களைத் தாங்கி நிற்பதைத் தமிழ் இலக்கியங்கள் காட்டுகின்றன. எனினும் மதுரை என்ற பெயரே இன்றளவும் வழக்கில் இருந்து வருகின்றது. இம்மதுரை என்ற பெயர்க் காரணம் இந்நகருக்கு எப்படி வந்திருக்கலாம் என்பது குறித்து இலக்கியங்களிலும், அறிஞர்கள் மத்தியிலும் சில கருத்துக்கள் நிலவுகின்றன. அக்கருத்துக்கள் யாவை என்பதையும், அவை இம்மதுரை மாநகரின் பெருமையைப் பறைசாற்றுகின்றன என்பதையும் ஆராய்வது இககட்டுரையின் நோக்கமாகும். அதன்படி முதற்கண் மதுரை பெயர்க்காரணம் குறித்து இலக்கியங்கள், அறிஞர்கள் தரும் கருத்துக்களையும், அடுத்து அவை மதுரையின் சிறப்புக்களைப் புலப்படுத்துவதையும் காணலாம்.

மதுரை-பெயர்க்காரணம் குறித்து இலக்கியங்கள் தரும் செய்திகள்

மதுரை பெயர்க்காரணம் குறித்த முயற்சிகள் சங்க இலக்கியத்திலோ அதன்பின் வந்த காப்பியங்களிலோ மேற்கொள்ளப்படவில்லை. முதன் முதலில் புராணங்கள்தான் இம் முயற்சியில் ஈடுபடுகின்றன. புராணங்களில் மதுரையோடு தொடர்புடைய பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடற்

புராணம், பரஞ்சோதியார் திருவிலையாடற் புராணம் இரண்டும் இவ்வகை முயற்சியில் இறங்கியவை.

பெரும்பற்றப்புலியூர் நம்பி தமது திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்தில், ஒரு சமயம் பாண்டியன் சிவ பக்தியில் தோய்ந்திருந்தமையைக் கண்ட சமணர்கள் பொறாமை யின் காரணமாக பெரிய வேள்வி செய்து அவ்வேள்வியினின்று ஒரு கொடிய நாகத்தை உருவாக்கி பாண்டியனோடு மதுரையை யும் விழுங்குமாறு ஏவினர். அந்நாகத்தின் கொடிய விஷத்தின் வெம்மையைப் பொறாத மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி இறைவன் அவ்வெம்மையை மதுரமாக்கிய தன்மையால் இந்நகர் 'மதுரை மாநகரி' எனப் பெயர் பெற்றது என்று கூறுவதை,

''... ... ...
திருவம ரருள்சேர் சொக்கன் றேவர்க டேவன் வெய்ய
வரவுமி ழால வாற்றை மதுரமாக் குதலாங்கு
வார்புகழ் பதிக்கு நாம மதுரைமா நகரி யென்றே
பிரிவுற வன்று முன்னர்ப் பரந்தது பாரின் மீது''
(பெரும், திருவிளை. 36; மதுரை.15).

எனவரும் பகுதியால் அறியலாம்.

பரஞ்சோதியார் தமது திருவிளையாடற்புராணத்தில், குலசேகரப் பாண்டியன் இறைவனின் வேண்டுகோளுக்கிணங்க கடம்பவனத்தைத் திருத்தி நகரமைத்தப்பிறகு அதனைத் தூய்மை செய்யுமாறு சோமசுந்தரக் கடவுளிடம் வேண்டி நிற்ப, இறைவன் தம் சடையிலுள்ள பிறையினின்றும் புத்தமுதத்தைத் தெளித்து நகரைத் தூய்மையாக்கினார். அவ்வமுதம் மதுரம் (இனிமை) வாய்ந்ததாக இருந்தமையின் இந்நகரம் 'மதுரா' என்னும் பெயர் பெறலாயிற்று என்று,

''மணிமலர்த் தாரோன் மாளிகைதனக்குஅம்
ம்மாநகர் வடகுண பாற்கண்டு
அணிநகர் சாந்தி செய்வது குறித்தான்
அண்ணலார் அறிந்துஇது செய்வார்

பொன்மயமான சடைமதிக் கலையின்
புத்தமுது உகுத்தனர் ... ...
... ... அது மதுர
நன்மயம் ஆனதன்மையால் மதுரா
நகரென உரைத்தனர் நாமம்''
(பரஞ். திருவிளை திருநகர். பாடல் எண் 512-513)

எனவரும் பகுதியில் விளக்குகிறார். இவ்விரு புராணங்களிலும் மதுரை பெயர்க்காரணம் குறித்து ஒரே மாதிரியான தெளிவான சரியான முடிவு காணப்படவில்லை. மேலும் இவை இரண்டும் மதுரையைச் சிவபெருமானோடு இணைத்துப் பேசும் பாங்கு இவர்களது சைவசமய ஈடுபாட்டையே காட்டுகிறது.

மதுரை பெயர்க்காரணம் குறித்து அறிஞர்கள் தரும் கருத்துக்கள்

மதுரை பெயர்க்காரணம் குறித்து ஆராய்ச்சி அறிஞர்களிடையேயும் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

காவல் தெய்வத்தின் பெயரால் அமைந்தது எனல்

பாண்டிய மன்னர்கள் கொற்றவையைத் தங்கள் காவல் தெய்வமாகக் கொண்டிருந்தனர். இக்கொற்றவைக்குத் துர்க்கை என்றும் பெயர் உண்டு. தமிழ் நிகண்டுகளில் குபேரனின் மகளாகிய துர்க்காதேவியைக் குறிக்க 'மதிரா' என்ற பெயர் கையாளப்பட்டுள்ளது. சிலம்பிலும் மதுரையின் காவல் தெய்வத்தின் பெயர் 'மதிராபதி' எனக் குறிக்கப்பட்டுள்ளது. எனவே காவல் தெய்வத்தின் பெயராலேயே இந்நகர் 'மதுராபதி' என அழைக்கப்பட்டிருக்கலாம்[1] என்பார் கே.ஆர்.சீனிவாசன்.

ஓரிடத்தின் நினைவாக அமைந்தது எனல்

மதுரையைச் சுற்றிலும் கிடைத்துள்ள கல்வெட்டுக்களை ஆதாரமாக் கொண்டு ''வேற்றுமைப்பகுதியினின்று ஓரிடத்திற்கு வருபவர்கள் அவ்விடத்திற்குத் தம் ஊரின் பெயரை வைப்பது இயல்பு அவ்வகையில் சங்க . காலத்தில் வடநாட்டினின்று மதுரை வந்த சைனர்கள் இந்நகருக்கு வடக்கே உள்ள மதுரை என்ற தம் ஊரின் பெயரை நினைவு

கூறும் பொருட்டு இந்நகரையும் 'மதுரை' என அழைத்திருக் காலம் என்று க ப.அறவாணன் தமது சைனர் கல்வெட்டுக்கள் என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

மருதையும் மதுரையும்

மதுரையை 'மருதை' என அழைக்கும் வழக்கம் இன்றைய நாட்டுப்புற வழக்கில் காணப்படுகிறது. அதனைக் கருத்தில் கொண்டு 'மதுரை' என்பது இந்நகரின் இயற்பெயரோ அல்ல. இந்நகருக்கு முதலில் 'மருதை' என்பதே இயற்பெயராக இருந்திருக்க வேண்டும். அதனின்றே 'மதுரை' என்ற சொல்லாட்சி நாளடைவில் வழங்கியிருக்க வேண்டும் என்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர். அதன்படி அவர்கள் மருதையையும் மதுரையையும் இணைக்கும் வகையில் தங்கள் கருத்துக்களை நிலத்தின் அடிப்படையிலும், தாவரத்தின் அடிப்படையிலும் விளக்கமுற்படுகின்றனர்.

நில அடிப்படையால் அமைந்தது எனல்

சங்க காலத்தில் தமிழர்கள் நிலத்தை ஐவகையாகப்பாகுபாடு செய்தனர். அவற்றுள் மருதம் என்பது வயலும் வயல் சார்ந்த பகுதியுமாகும் எனவே வயலும் வயல்சார்ந்த பகுதியையும் கொண்டிருந்த நிலப்பகுதி முதலில் 'மருதை' என அழைக்கப்பட்டுப் பின்னர் 'மதுரையாகியிருக்கலாம் என்பார் சாம்பசிவனார்.

தாவரங்களின் அடிப்படையில் அமைந்தது எனல்

'மருதமரமே மதுரைக்கு அடிப்படை' என்பார் ச. வே. சுப்பிரமணியன். ஆளவந்தாரும் இக்கருத்தையே கொண்டு, "பேச்சு வழக்கில் இன்று காணும் மருதை என்ற பெயரே மதுரை என மருவி வழங்கி இருக்க வேண்டும். அதாவது பண்டைக்காலத்தில் மரத்தால் ஊர்ப்பெயர்கள் அமையும் முறையையொட்டி, மருதமரங்கள் நிறைந்த மருதநிலத்தின் அடிப்படையில் மருதை என்ற பெயர் தோன்றி, நாளடையில் மதுரை என மாறி வழங்கியதாகக் கருத வேண்டும்" என்பார்.

மதுரையில் உள்ள வையையைச் சார்ந்திருந்தது திருமருத முன்றுறை, மருதமரங்கள் நிறைந்திருந்த இத்துறையை 'மருதோங்கு முன்றுறை' எனப்பரிபாடல் கூறும். எனவே இவ்வறிஞர்கள் தம் கருத்துப்படி மருதமரங்கள் ஓங்கியிருந்த துறை திருமருதமுன்றுறை எனப்பட்டது போல் மருதமரங்கள் நிறைந்திருந்த நகரும் மருதை என்றே முதலில் வழங்கியிருக்கவேண்டும் அதன் பின்னரே அது மதுரை என மருவி இருக்கலாம்.

இவைதவிர மதுரை நகரின் காவல் தெய்வமாக 'மதுராபதி' இருந்தமையையும், சைனர்கள் வடக்கிலிருந்து வந்து மதுரையில் தங்கியிருந்தமையையும் கொண்டு இந்நகருக்கு இப்பெயர் வந்தது எனக் கூறுவது ஆய்விற்குரியது.

மதுரையின் பெயர்க்காரணம் உணர்த்தும் சிறப்புக்கள்

மதுரையின் பெயர்க்காரணம் குறித்து இங்ஙனம் இலக்கியம் தரும் செய்திகளோடு. அறிஞர்களிடையேயும் கருத்து வேறுபாடுகள் காணப்படினும் அவை அனைத்தும் மதுரையின் ஏதாவதொரு சிறப்பினை அடிப்படையாகக் கொண்டே விளங்குவதை யாரும் மறுக்க முடியாது. அவ்வகையில் மேற்கிடைத்துள்ள செய்திகளினின்று மதுரையின் சிறப்புககளாக கீழ்வரும் முடிபினைப் பெறலாம்.

1. வரகுணப்பாண்டியன் கபாடபுரம் அழிந்தப்பின் மணலூர் வந்து தங்கியிருந்தது; அதன்பின் மதுரை மாநகரை அமைத்தது குறித்துக் கூறும் பரஞ்சோதியார் கருத்து இறையனார் களவியல் உரைதரும் மதுரை தோற்றம் பற்றிய செய்திக்கு அரண் சேர்க்கிறது.

2. மதுரையை மருத வயலும், மருத மரங்களும் சூழ திருமருத முன்றுறை அழகு செய்தமை.

3. சோமசுந்தரப் பெருமான் நகருக்கு அருள் செய்தமை; மதுராபதி காவல் தெய்வமாக விளங்கியமை.

4 வடக்கிலிருந்து சமணர்கள் மிகுதியாக மதுரை வந்திருந்தமை; மதுரை சைவ சமணப் போராட்த் திற்நக் களனாக விளங்கியமை, என்பவை அவை.

இம்மதுரை என்ற பெயர் தவிர இந்நகருக்கு வழங்கும் பிற பெயர்கள் குறித்தும் இலக்கியங்கள், அறிஞர்கள் தரும் கருத்துக்களைப் பார்ப்போமேயானால் அவை உலக அரங்கில் மதுரை மாநகருக்கு உள்ள மதிப்பை இன்னும் உயர்த்த வாய்ப்பாக அமையலாம்.

அடிக்குறிப்புகள்

1. Studies in Indian Place Names, 'Madurai-The Name of the Place', K.R. Srinivasan, pp. 59-60
2. சைனர் கல்வெட்டுக்கள், க.ப. அறவாணன், ப. 126.
3. மாநகர் மதுரை, சாம்பசிவனார், ப. 16.
4. இலக்கியத்தில் இடப்பெயர்கள், ச.வே. சுப்பிரமணியன், ப. 85
5. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், ஆர். ஆளவந்தார், ப. 199.

கோலாட்ட வகைகளில் கழியலாட்டத்தின் பங்கு !

கு. கதிரேசன்
சென்னைப் பல்கலைக்கழகம்

மனிதனின் உணர்ச்சி வெளிப்பாடே நாட்டுப்புறக்கலைகள் அவை தான் தோன்றி வளர்ந்த சமுதாயத்தைப் பிரதிபலித்துக் காட்டுகின்ற கண்ணாடியாகத் திகழ்கின்றன. மனிதன், தன் இன்பத் தூண்டுதலால் பல விழாக்களை ஆடிப்பாடிக் கொண்டாடுகிறான். அந்த ஆட்டமும் பாட்டும் அவன் உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடாகத்தானிருக்க முடியுமே தவிர வேறாக இருக்க முடியாது. இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் பொழுது, மனிதனின் மனஉணர்வு, தான் சார்ந்திருக்கின்ற சமுதாயத்தை மையமாக வைத்தே பல்வேறு நாட்டுப்புறக் கலைகளாக வடிவெடுக்கின்றன. அதனால், அக் கலைகள் அந்தச் சமுதாயத்தின் பண்பாடு, நாகரீகம் கலைச் சிறப்பு, வரலாற்றுச் சிறப்பு மக்களின் வாழ்க்கை முறை, பழக்கவழக்கம் போன்றபல்வேறு வகையான தன்மைகளை உணர்த்த வல்லதாய் அமைந்துள்ளன.

பரதநாட்டியம் போன்ற செவ்வியல் ஆட்டங்கள் நாட்டுப் புற நடனங்களிலிருந்தே உருவானது என்பதைப் பத்மா சுப்பிர மணியம் போன்ற செவ்வியல் நடன வல்லுநர்கள் உறுதி செய் திருக்கின்றனர். இது நாட்டுப்புற நடனங்களின் முக்கியத்து வத்தை உணர்த்த வல்லதாய் அமைகிறது. இந்த நாட்டுப்புற நடனங்கள் அனைத்தும் பெரும்பாலும் குழு நடனங்களாகவே அமைகின்றன. கேரளத்தில் இது 'கூடியாட்டம்' என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. இந்நடனங்களை வகைப்படுத்த

முனைந்த அறிஞர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையில் வகைப்படுத்திச் செல்கின்றனர் ஆயின், பொதுவான ஒரு நோக்கில் வகைப்படுத்தினால்.

1) ஆண்கள் ஆடும் ஆட்டங்கள்

2) பெண்கள் ஆடும் ஆட்டங்கள்

3) ஆண்களும் பெண்களும் கலந்து ஆடும் ஆட்டங்கள் என்னும் மூன்று வகைகளைக் கூறலாம்.

அழகுக் கலைகளில் ஒன்றான இவ்வாடற்கலையின் மூலம், மக்களின் சிந்தனைவளர்ச்சி, சமூக மாற்றங்கள், கலைவெளிப் பாட்டுத்திறன் ஆகியவற்றை அறியமுடியும் என்பது கண்கூடு. இத்தகைய நாட்டுப்புற ஆடற்கலைகளில் ஒன்றுதான் 'கோலாட்டம் ஆகும். செவ்வாய்ச்சியர் கோலாட்டம்' என்று காஞ்சிப்புராணம் கூறுவது இதற்குச் சரியான இலக்கியச் சான்றாக அமைகிறது.

'கோல்' கொண்டு ஆடும் ஆட்டமாதலால் இப்பெயர் பெற்றது. 'கோல்+ஆட்டம்=கோலாட்டம்' என்ற பெயர் காரணப்பெயராகவே அமைகிறது. இக்கருத்தை சு. சண்முக சுந்தரம் தனது 'தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள்' என்ற நூலில் வலியுறுத்துகிறார். இக்கோலாட்டத்தின் தனிச்சிறப்பு, பெரும் பாலான ஆட்டங்கள் ஆண்களோ பெண்களோ ஆண்களும் பெண்களும் சேர்ந்தோ ஆடப்படும் ஆட்டமாகத்திகழ, இந்தக் கோலாட்டம் மட்டும், 'ஆண்கள் ஆடும் கோலாட்டம், பெண் கள் ஆடும் கோலாட்டம் ஆண்களும் பெண்களும் கலந்து ஆடும் கோலாட்டம்' என்னும் மூன்று நிலைகளையும் கொண்டதாக அமைந்திருக்கிறது.

தமிழகத்தில் மட்டுமின்றிக் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் போன்ற பிற தென்னிந்திய மாநிலங்களிலும் இவ்வாட்டம் காணப்படுகின்றன. கேரளத்தில் இவ்வாட்டம், 'கோல்களி, கம்படிகளி' என்ற பெயர்களால் அழைக்கப்படுவது குறிப்பிடத் தக்கது. கை கொட்டிக் களிக்கும் கும்மி ஆட்டத்தைக் - 'கை கொட்டிக் களியல்' என்பது போலக் 'கோல்' கொட்டிக்

களிக்கும் ஆட்டமான கோலாட்டத்தைக் 'கோல் கொட்டிக் களியல்' என்று குறிப்பிடுவதுண்டு.

தமிழகத்தில் இக்கோலாட்டம் இடத்திற்கேற்பவும், ஆட்டக் கலைஞர்களின் சமுதாய அமைப்பிற்கேற்பவும் ஆட்டத்தின் தன்மைக்கேற்பதும் பல வகைகளாக அமைந்து தனககே உரிய சிறுசிறு மாறுபாடுகளைக் கொண்டு திகழ்கின்றன. இதில் கழியல், பின்னல் கோலாட்டம், அயிலந்தரை வைந்தானை, பொடிகழியாட்டம் போன்றப் பலவகைகள் இருப்பதை அறிய முடிகிறது. இன்னும் பல கோலாட்ட வகைகள் அறியப்படாத நிலையில் ஒரே தன்மையைக் கொண்டு திகழ்வதால் 'கோலாட்டம்' எனனும் ஒரே வகையில் அடக்கிவிடலாம்.

'குழுத்தலைவர் ஒருவரின் பாடல், இசைக்கு ஏற்பக் கைகளில் உள்ள கோல்கள்ளச் கொண்டு கொட்டி ஆடும் ஒரு பொழுது போக்கு நடனமே இந்தக் கோலாட்டமாகும்', என்ற முடிவுக்கு வரலாம். இக் கோலாட்டம் விரிவாக ஆராயப்படவேண்டிய ஒன்று. அதன் முதல் கட்டமாகக் கோலாட்ட வகைகளுள் ஒன்றான 'கழியலாட்டம்' பற்றி அறிமுகம் செய்வதே இச் கட்டுரையின் நோக்கமாகும்.

இக் கழியலாட்டம், ஆண்கள் மட்டுமே ஆடும் குழு நடனம் 'அண்ணாவி' என்று அழைக்கப்படும் குழுத்தலைவர் பாடல் களைப் பாட, பயிற்சி பெற்ற எட்டு ஆண்கள் தங்கள் கை களில் ஒன்றரை அடி நீளமும் ஒரு அங்குலம் சுற்றளவுப் பரு மனும் கொண்ட குச்சிகளை வைத்துத் தனக்குத்தானேயும், எதிர் நிற்பவரிடமும் கொட்டி வட்டமாகச் சுழன்று ஆடுவர். ஆட்டக் கலைஞர்கள் எட்டு பேருக்குக் குறைவாகவோ அதிக மாகவோ இருத்தல் கூடாது. குழுத்தலைவர், பாடல்களைப் பாடுவதோடு கலைஞர்களை நெறிப்படுத்தவும் செய்கிறார். ஆனால் ஆட்டக்கலைஞர்களுடன் சேர்ந்து ஆடுவதில்லை.

''வாருங்கள் எங்கள் ஈசனே
கோலாட்டம் செய்ய

வாருங்கள் இவ்வேளையில் !
எட்டுச் சிறுவர் கூடி
இங்கீதமாகப் பாடி"

என்னும் கோலாட்டப் பாடல் வரிகள் ஆட்டக் கலைஞர்களின் எண்ணிக்கையை உணர்த்தும்.

இவர்கள் தவிர இசைக்கருவி வாசிப்பவர்கள், பக்கப் பாட்டுப் (பின்பாட்டு) பாடுபவர்கள் தேவைக்குத் தகுந்தவாறு நியமிக்கப்படுவர். தவில், மிருதங்கம், மத்தளம், டோலக், ஜாலர் போன்றவற்றில் ஒன்றோ இரண்டோ இசைக்கருவி களாகப் பயன்படுத்தப் படுகின்றன. இது தவிர கலைஞர்கள் அனைவரும் காலில் அணிந்திருக்கும் 'கெச்சம்' எனப்படும் சலங்கை ஒலியும், கையில் வைத்து அடிக்கும் கம்பின் ஒலியும் ஆட்டத்திற்கேற்ற இசையாகின்றன.

இவ்வாட்டம் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங் களில் காணப்படுகிறது இப்பகுதியில் அதிகமாக வசிக்கும் சமூகத்தவர்களான நாடார், மீனவர் ஆதிதிராவிடர், யாதவர் போன்ற சமூகத்தவர்களால் ஆடப்படுகிறது. பிற்படுத்தப் பட்டவர்களாகக் கருதப்படும் ஆதிதிராவிடர்கள், மேல் வகுப் பினர் ஏற்பாடு செய்யும் விழாக்களில் பணத்திற்காகவும், பொருளுக்காகவும், மது, உணவு வகைகளுக்காகவும் ஆடுவ துண்டு. சமய அடிப்படையில் பார்த்தால் இந்துக்கள், இசுலாமி யர், கிறித்தவர் என்ற மூன்று சமயத்தவர்களாலும் ஆடப்படு கின்றது.

இவ்வாட்டத்தின்போது, வணக்கப்பாடல்கள், சமயம் பற்றிய பாடல்கள், சமுதாயத்தைப் பிரதிபலித்துக் காட்டும் தெம்மாங்குப் பாடல்கள், புராணப் பாடல்கள், தேசியப் பாடல்கள், தொழிற்பாடல்கள், கும்மிப் பாடல்கள், மாரடிப் பாடல்கள், வாழ்த்துப் பாடல்கள், சிற்றிலக்கியப்பாடல்கள், பஜனைப் பாடல்கள், இராமாயணம், மகாபாரதம் போன்ற கதைப்பாடல்கள், திரையிசைப் பாடல்கள் ஆகிய பலவகையான பாடல்கள் அண்ணாவியால் பாடப்படுகின்றன. இப்பாடல்கள்

அனைத்தும் அண்ணாவிக்கு மனப்பாட நிலையில் இருக்கின்றன. இவற்றைச் சமயம், மொழி, இனம், இடம், கலைஞர்கள், பார்வையாளர்கள் போன்றவற்றிற்கேற்ப அவ்வப்போது மாற்றி அமைத்துப் பாடும் திறமை பெற்றவர்களாக அண்ணாவிகள் திகழ்கின்றனர். சான்றாக,

> "கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்-எங்கள்
> குரு ஏசு நாதர் பாதம் கும்பிடுகிறேன்"

என்று கிறித்தவர்கள் பாடினால் இந்துக்கள் அதையே சற்று மாற்றி 'ஈசன்' என்றும், இசுலாமியர்கள் 'அல்லா' என்றும் அமைத்துப்பாடுவதைக் காண முடிகிறது. ஆட்டக் கலைஞர்கள் சாதி, இனம், மதம், மொழி என்று வேறுபாடு கொள்ளாமல் ஆட்டம் நிகழ்த்துகின்றனர். இது அவர்களது சமுதாய ஒருமைப் பாட்டை அறிய ஆதாரமாகத் திகழ்கிறது.

எக் காலத்திலும், எந்நேரத்திலும், கோவில் விழாக்கள். பண்டிகை நாட்கள், திருமணம், பூப்பு நன்னீராட்டு, புது மனைப் புகுவிழா, முதியவர்களின் இறப்பு நிகழ்ச்சி, வரவேற்பு விழாக்கள், ஊர்வலங்கள் போன்ற பல்வேறு சூழல்களில் இவ் வாட்டம் நடத்தப்படுகிறது.

சிறுவர்கள் முதல் முதியவர்கள்வரை ஆட்டம்தெரிந்த அனைவராலும் இவ்வாட்டம் ஆடப்படுகிறது. உடலில் வலு வுள்ளவரை இதனை ஆடலாம். வயதுவரம்பு ஏதுமில்லை. வேட்டியைத் 'தார்' பாய்த்துக் கொண்டு தலையில். முண்டாசு கட்டி ஆடுவர். தவிரச் சிறப்பான ஒப்பனை எதுவும் செய்து கொள்வதில்லை. இயல்பான உடைகளுடனும் ஆடுவ துண்டு 'கழி'களில் வர்ணம் தீட்டிக் கொள்ளும் வழக்கமும் உள்ளது. அதன் இருநுனிகளிலும் பித்தளைப் பூண் மாட்டிச் சிறுமணிகள் கோர்த்து அழகுபடுத்தும் வழக்கத்தையும் காண முடிகிறது. தலையில் வண்ணத் துணியைக் கட்டிக்கொள்வர். அனைவரும் ஒன்றுபோல் அரைக்கால் சட்டையும் மேல்சட்டை யும் சீருடையாகக் கொண்டு ஆடுவதுமுண்டு, இந்தச் சீருடை கள் கலைஞர்களின் அரசியல், சமூக, சமய ஈடுபாட்டிற்கேற்பப் பல வண்ணங்களில் அமைகின்றன.

'அண்ணாவி' எனப்படும் குழுவின் தலைவர், ஆட்டக் கலைஞர்கள் மத்தியிலும், பார்வையாளர்கள் மத்தியிலும் நன்கு மதிக்கப்படுகிறார். இம்மரியாதையை அண்ணாவியும் எதிர்பார்க்கிறார் கலைஞர்களுக்கு மாதக்கணக்கில், தினமும் இரவு நேரத்தில் ஊரின் ஒதுக்குப் புறத்தில் கடுமையான பயிற்சி கொடுக்கப் படுகிறது. கலைஞர்கள் ஒவ்வொருவரும் அண்ணாவிக்குக் குருதட்சணை கொடுத்து ஆட்டத்தைக் கற்கினறனர். ஒவ்வொரு முறை ஆடும் பொழுதும் அண்ணாவி யிடம் வணங்கிக் கம்புகளைப் பெற்றபின்பே ஆடுகளத்தில் இறங்குகின்றனர். இப்பண்பு ஆசிரியர் - மாணவர் உறவு நிலைக்குச் சான்றாக அமைகிறது.

திட்டமிட்ட 'ஆடுகளம்' இதற்குத் தேவையில்லை ஆட்டக் கலைஞர்கள் சுற்றிவந்து ஆடுவதற்கு வசதியாக உள்ள இடம் எதுவும் ஆடுகளமாக அமைகிறது. ஆடும்பொழுது ஆட்டக் லைஞர்கள் அண்ணாவியைச் சுற்றியோ கடவுள் விக்கிரகங்கள், குத்துவிளக்கு போன்றவற்றைச் சுற்றியோ இறப்பு வீடாக இருந்தால் சவப்பெட்டியைச் சுற்றியோ குதித்தும், குனிந்தும் வளைந்தும், நெளிந்தும். கால்களை மடக்கியும், நீட்டியும் தன்னைத்தானே சுற்றியும், பிறரைச் சுற்றியும் கம்படித்துப் பாடி ஆடுகின்றனர். ஒளிக்காக முன்பு தீப்பந்தங்களையும், குத்துவிளக்குகளையும் எண்ணெய் விளக்குகளையும் பயன் படுத்தி, உரத்த குரலில் பாடிய கலைஞர்கள் தற்பொழுது ஒளிக்காக மின்விளக்குகளையும், அதிக ஒலிக்காக 'ஒலி வாங்கி' **(MIC)** என்னும் கருவியையும் பயன்படுத்துகின்றனர். இவை காலத்திற்கேற்பப் பெற்ற மாற்றங்களாகும்.

அடிக்குறிப்புகள்

1) சா. வளவன் — 'நாட்டுப்புறவியல் கட்டுரைகள்' ப. 135

2) சு. சண்முகசுந்தரம் - 'தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள்' ப. 249

குமரகுருபரரும் சைவ சித்தாந்தமும்

சோ. ந. கந்தசாமி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் குமரகுருபரருக்குச் சிறப்பான இடம் உண்டு. கி.பி. 17ம் நூற்றாண்டில் ஸ்ரீவைகுண்டத்திற்கு அருகில் சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர் குமரகுருபரர். இளமையில் முருகன் அருளைப் பெற்றவர். இருமொழிப் பெரும் புலமை படைத்த இப்பெரியார் சிற்றிலக்கியங்கள் பலவற்றைச் சிறப்பாகப் பாடியவர். கற்பனைக் களஞ்சியம், சந்தக் கவிஞர், கலைஞானம் மிக்கவர், நீதிநூல் ஆசிரியர். யாப்பியலறிஞர். தில்லை நடராசரைப் பொருளாகக் கொண்டு பாக்கள் பாவினங் களுக்கு உதாரணச் செய்யுள்கள் புனைந்து யாப்பிலக்கண வரலாற்றில் புதுமை கண்டவர். சிறந்த சைவ சித்தாந்தி. அனைத்திற்கும் மேலாகத் தவஞானச் செல்வராய் விளங்கியவர். வடநாட்டிற்குச் சென்று காசிமா நகரில் திருவருளாலும், தவ வலிமையாலும் இசுலாமிய மன்னனை ஈர்த்துப் பிணித்துப் பெருநிலம் பெற்று மடம் அமைத்துச் சைவமும் தமிழும் தழைத் தோங்கப் பாடுபட்ட தனிப்பெரும் சான்றோர். இமயவரம்பன், இராசராசன் முதலியோர் படைபலத்தால் பெற்ற வடநாட்டு வெற்றியை விட, ஆன்மீக பலத்தால் குமரகுருபரர் பெற்ற வெற்றி போற்றுதற்குரியது. ஆதிசங்கரருக்குப் பின்னர் வட நாட்டில் கொடி நாட்டிய சிறப்புக்குரியவர் குமரகுருபரர்.

குமரகுருபரரின் பிரபந்தங்களில் சைவ சித்தாந்தச் சிந்தனை கள் மிகுதியாகக் காணப்பெறும் பனுவல் கந்தர் கலிவெண்பா ஆகும். இந்நூல் சைவர்களின் நித்திய பாராயண நூலாக

விளங்குவது. மந்திர ஆற்றல் மிக்கது. இந்நூலின் முற்பகுதி முழுவதும் சைவ சித்தாந்தத்தின் சாரமாகவும் பிற்பகுதி கந்த புராணச் சுருக்கமாகவும் அமைந்திருத்தல் அறியத்தக்கது. தருமை ஆதீனத்தில் நான்காவது பட்டத்தில் வீற்றிருந்த மாசிலாமணி தேசிகர் இவருக்கு வாய்த்த குரு ஆவார். இவரைப் பொருளாகக்கொண்டு முனிவர் இயற்றிய பண்டார மும்மணிக் கோவை என்ற நூலும் சித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றை விளக்குவது. ஏனைய பிரபந்தங்களிலும் இத்தகைய கருத்துக்கள் ஆங்காங்கே தூவப் பெற்றுள்ளன. இக்கட்டுரையில் சைவ நெறிக்குரிய அடிப்படையான மெய்ப்பொருள் சிந்தனைகள் குமரகுருபரரின் பாக்களில் எவ்வாறு புலப்படுத்தப் பெற்றுள்ளன எனபதை ஒரு சிறிது ஆராய்ந்து காண்போம்.

சைவசித்தாந்தத்தின் உயர்வு

சிவபரம்பொருளை முழுமுதற் கடவுளாகப் போற்றும் மெய்ப்பொருள் நெறி சைவசித்தாந்தம் ஆகும். பிறிவிச் சைவ ராகிய முனிவர் மக்களை நெறிப்படுத்தும் பாங்கு சித்தாந்தச் சிந்தனைகளை விளக்கும் தத்துவக் கோட்பாட்டினைத்

"திவ்வியம் பழுத்த சைவ சித்தாந்தம்" (9.5.23) என்று போற்றுகிறார். மேலும்,

"ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே" (9.11.23 - 35)

என்று பாராட்டுதல் எண்ணி இன்புறத்தக்கது. ஏனைய சமயங் கள் அனைத்திற்கும் முடிமணியாகத் திகழ்வது சைவமாகும். ஆன்மீகப் பயணத்தில் (**Spirttual Journey**) மற்ற தத்துவங்கள் யாவும் பேருந்து நிறுத்தங்கள் (**Bus Stops**) போல்வன. ஆயின், சைவ சித்தாந்தம் பேருந்து போய் நிற்கும் இறுதி இடம் (**Terminus**) போன்றது. ஏனைய தத்துவங்களையும் ஒதுக்காது படிநிலையாகக் கொண்டு சித்தாந்தம் ஓங்கி நிற்கிறது. காட்சிப் பொருள், கருத்துப்பொருள், உணர்வுப் பொருள் ஆகிய அனைத் தையும் இறை, (பதி), உயிர் (பசு), தளை (பாசம்) என்ற

மூவகைப் பொருட் பாகுபாட்டிற்குள் அடக்கிச் சைவ சித்தாந்தம் விளக்குதல் அறியத்தக்கது. இம்முப்பொருளை உள்ளவாறு அறியும் பேறு பெறறோர் பிறவி நீங்கிப் பேரின்பம் பெறுவர்.

முப்பொருள் இயல்பு

அடிகளார் தெளிவுறுத்தும் அடிப்படையான சித்தாந்தக் கருத்துக்களை இங்குத் தொகுத்து நோக்குவோம்

இறை

இறை, உயிர், தளை என்பன மூன்றுமே ஒருவரால் படைக்கப் படாதவை. அனாதிகாலம் தொட்டு இருப்பன எனின், இக்காரணம்பற்றி இம்மூன்றும் இணையானவை என்று எண்ணி விடுதல் கூடாது. மூன்றுமே சத்துப் பொருள்கள். இறை, உயிராகிய இரண்டும் சத்துப்பொருள் ஆவதோடு சித்துப்பொருளாகவும் இருப்பவை. ஆயின், இறை ஒன்றே ஆனந்தப் பொருளாகவும் அமைவது. இப்பொருள்களின் இருப்பினை நிலைநாட்டுதல் மெய்கண்ட சாத்திரத்தின் பணி ஆகும். பக்தி இலக்கியம் பாடவந்த குமரகுருபரர் இப்பொருள்களின் இயல்புகள் மட்டுமே விளக்கும் வகையில் பாத் தொடுத்துள்ளார். இறைவன் தோற்றம், இருப்பு, மறைவு ஆகிய மூன்றும் இல்லாதவன் (ஆதி, நடு, அந்தம் கடந்தவன்). நித்தியானந்த போதன் (சச்சிதானந்தன்). இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கியவன். ஒளிமயமானவன். பெயர் (குறி), உருவம் (கோலம்) குணம் (முக்குணம்) அற்றவன். எங்கும் செறிந்தவன். நீக்கமற நின்றவன். மனம் முதலிய காரணங்களுக்கு எட்டாத முற்றறிவினன். இங்ஙனம் இறைவனின் சிறப்பியல்புகளை (சொரூப இலக்கணம்) அடிகளார் கந்தர் கலி வெண்பாவில் குறித்துள்ளார். இந்நிலையில் இறைவன் பரமசிவம் எனப் பரவப்பெறுவான். இருப்பு நிலையிலுள்ள சிவன் உயிர்களிடத்தில் கொண்ட கருணை காரணமாக அவற்றை உய்விக்க வேண்டி அருள் உருவம் கொள்கிறான். இந்நிலையில் சக்தி என்று பெயர் பெறுகிறான். இருப்பு நிலை சிவம். இயக்கநிலை சக்தி. இச்சை, ஞானம், கிரியை என்பன இறைவனின் சக்திகள். இவையே அவனுக்குரிய திரிகரணமாகக் கூறப்பெறும். உருவம்,

அருவுருவம், அருவம் ஆகிய மூவகைத் திருமேனிகளைத் தாங்குகிறான். அருளே அவன் உருவம் என்பதைக் 'கருணை திருவுருவாய்' என்ற பகுதியில் அடிகள் சுட்டுகிறார். எல்லாப் பொருளையும் கடந்து நிற்கும் இறைவன் யாவற்றிலும் கலந்தும் விளங்குகிறான். இதனை,

"... ... ... எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே"

என்று போற்றுகிறார். இறைவன் ஆற்றும் ஐவகைத் தொழில்களையும் குறித்துள்ளார். படைப்பு, காப்பு, அழிப்பு என்பன மூன்றும் உடலுடன் தொடர்புடையவை என்பதும் மறைப்பு அருளல் என்பன இரண்டும் உயிருடன் தொடர்புடையவை என்பதும் அறிதற்குரியன. குமரகுருபரர்,

"... ... ... ஐந்தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே"

"ஆவிப் புலனுக் கறிவளிப்ப ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எங்கோவே"

என்று போற்றுதல் எண்ணத்தக்கது.

உயிர்

உயிர்கள் எண்ணற்றவை. 84 இலட்சம் யோனிபேதம் கொண்டவை. நால்வகைத் தோற்றமும் எழுவகைப் பிறப்பும் உடையவை. ஆணவமாகிய ஒரு மலம் உடையவை. விஞ்ஞானகலர் என்னும் ஆணவமும் கன்மமும் உடையவை. பிரளயாகலர் என்றும் இவற்றுடன் மாயாமலமும் உடையவை. சகலர் என்றும் சுட்டப்பெறுவர் (1.30-33). கேவலம், சகலம், சுத்தம் என்ற மூவகை அவத்தை குறித்தும் முனிவர் மொழிந்துள்ளார். தனுகரண புவன போகங்களைப் பெறுவதற்கு முற்பட்ட இருள் நிலை கேவலம் எனப்படும். உடம்போடு கூடிய நிலை சகலம் எனப்படும். வினை நீங்கிய நிலையில் பேரின்பத்தைத் துய்த்தற்குரிய நிலை சுத்தம் எனப்படும். மும்மலத்தார்க்குக் குரு வடிவில் தோன்றியும். இரு மலத்தார்கக்கு இடபாரூடராகக் காட்சி தந்தும் ஒரு மலத்தார்க்கு உள் நின்று உணர்த்தியும் இறைவன் பேரின்பம் வழங்குவான் (1.29-33).

சிவனும் சீவனும் சத்து, சித்துப்பொருள்கள். இவ்விரண்டிற்கும் உள்ள பல ஒற்றுமைகளை அடிகளார் அழகாகச் சுட்டுகிறார். ஆயினும் முற்றறிவும் முழுமையும் சிவனுக்கும், சிற்றறிவும் சிறுதொழிலும் சீவனுக்கும் உரியன (9.8.1-25).

முக்தி நிலையிலும் சீவன் ஒருவனே பரம்பொருள். ஆன்மா அப்பொருளை அனுபவிக்கும் அடிமை. குருவருளினால் திருவருள் வாய்க்க வேண்டும் என்ற உண்மையைப் பண்டார மும்மணிக்கோவையில் உணர்த்தியுள்ளார். சீவகரணம் சிவ காரணமாகிறது (9.24-33). சீவன் சிவனாகிறது (9.24). உயர் பொருளை உறுதற்கு உயிரும் உயர்நிலை பெறுதல் வேண்டும் என்பது உணர்தற்குரியது. 'சிவமாக்கி எனை ஆண்ட' என்பது மாணிக்கவாசகர் அனுபவம்,

தளை

தளை, கட்டு, பாசம் என்பன ஒரு பொருளன. இது மூவகைப்படும் : 1 ஆணவம். 2. கன்மம், 3. மாயை. ஆணவம் இருள்மயமானது. ''ஆணவமான படலம்'', ''விடுத்தகலாப் பாச இருள்'' என்று சுட்டுகிறார். நல்வினை, தீவினை எனக் கன்மம் இருவகைப்படும். இவ்வினைக்கீடாகத்தான் உயிர்க்கு நுகர்ச்சி அமைகிறது (1.61-21). மாயை மூவகைப்படும். மூவகை ஆன்மாக்களுக்குரிய நுகர்ச்சிப் பொருள்களை வழங்குதற் பொருட்டுச் சைவ சித்தாந்தம் மாயையை மூன்றாகப் பகுத்தது. இவற்றை, ''விந்து மோகினி, மான்'' (1.13) என்று குமர குருபரர் குறித்துள்ளார். இவை முறையே சுத்த மாயை‘ அசுத்த மாயை, பிரகிருதி மாயை ஆகியவற்றைக் குறிக்கும்.

இம்மூன்றுடன் மாயேயம், திரோதாயி என்பனவற்றையும் சேர்த்து ஐவகை மலங்களையும் ஓரிடத்தில் குறித்துள்ளார் (1.70).

சாதனமும் வீடு பேறும்

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நெறிகளையும் அவற்றுக்குரிய முக்தி நிலைகளையும் கந்தர் கலி

வெண்பாவில் அடிகள் அழகாக விளக்கியுள்ளார் (1.19-29). சிவ சாதனங்களாகிய உருத்திராக்கம் (1.55.565), திருநீறு (1.38,14,136), திருவைந்தெழுத்து (1.68-9, 630) ஆகிய மூன்றையும் முனிவர் குறித்துள்ளார். சீவன்முத்தராயினும், ஆலயம் தொழுதலும் அடியாரைத் தொழுதலும் வேண்டும் என்பதைப் பல இடங்களில் சுட்டுகிறார்..

இங்ஙனம் சித்தாந்த நெறியில் ஒழுகி வருவோர் பெறும் பேற்றினை,

> 'இறவா நிலைமைபெற் றின்பமார்ந் திருக்கும்
> பிறவா நன்னெறி'' (9 5.22-56)

என்ற குமரகுருபரர் தெளிவுறுத்துகின்றார். இதுவே சைவர் களின் இறுதிக் குறிக்கோளாகும்.

முடிவுரை

சிறந்த இலக்கியப் படைப்பாளராகவும், கவிஞராகவும், யாப்பியல் மேதையாகவும், அருளாளராகவும் விளங்கிய குமர குருபரர் சைவ சித்தாந்தச் செந்நெறியினை மக்கள் அறிந்து, உணர்ந்து, கடைப்பிடித்து ஈடேற வேண்டும் என்ற எண்ணத்தில் தம் பிரபந்தங்களில் தேவையான அளவு சித்தாந்தச் சிந்தனைகளை வழங்கியுள்ளார் என்பது தெளிவு. இறைவனையும் சக்தியையும் விநாயகர், முருகன் ஆகிய கடவுளரையும் அவர் பாடியிருப்பினும், ஒரு பரம்பொருளின் பல்வேறு வடிவங்களாகவே எண்ணிப் போற்றியுள்ளார் என்பது நுணுகி நோக்குவோர்க்குப் புலனாகும்.

Sociological Evolutionary Doctrines of Ancient Tamil Society

T. Kamali
Mother Teresa Womens'
University, Kodaikanal

Human society passes through various evolutionary stages, each with its own well defined organizational system. Each succ-ssive stage comes into existence as a result of conflict with the one preceding it. Change from one stage to another is due to modification in the primary economic forces, namely the methods of production and distribution.

No man lives in isolation. Aristotle remarked, "Man is fundamentally a social animal" only God or beast is fit to live alone. Loneliness is abominable. Normally every human being lives in association with his fellow beings for the purpose of survival. Human life is to a great extent a group life. He not only lives in groups but also creates new groups. The term group refers to diverse collection of members in family, crowd, social, class, sex, age, religious and occupational groups.

Society is the lnrgest social grouping having permanence through generations of people who adhere to a common culture tradition and value system who have a status system and a division of social functions who have modes of control over their social conduct and who are concious of being a unique society distinct from all others.

Sangam Literature

The Principal works of the Sangam academy of the most learned men of the Tamil land have come down to us in the shape of anthologies of poems. The two compilations are Ettuttogai (Eight anthologies) and Pattuppattu (Ten idylls).

Sangam works provide us with valuable information regarding social life of the Tamils.

Sir Charles Firth, the social Historian observed that, 'History seems to be the record of the life of societies of man, of the changes which those societies have gone through, of the ideas which have determined the actions to those Societies and of the material conditions which have helped or hindered their development.

2. Five Major regions of Tamil Nadu :

The Anthologies covers varieties of distinctive poems mostly relating to man's social behaviour, analogous to five major regions of Tamil Nadu, these poems describe five types of tracts with their distinctive features. These are :

2.1 : Kurinchi (Mountainous Region)
2.2 : Mullai (Forest Region)
2.3 : Marutam (Agricultural Region)
2.4 : Neytal (Coastal Region)
2.5 : and pa:lai (and Desert Region)

References are available regarding the five fold Geographical regions of Tamil Nadu. Which denote the developing trend of people's social life. The following lines of Swami Vipulananda are to be noted.

'The poetry early poets bequeathed to posterity is not a mere dream women out of an idle fancy, but it is the record of human struggles and achievements. What this ancient racy felt throughout the long centuries of its existence, lies indelibla recorded in the pages of its literature.'

3. Social Evolution :

Social Evolution is the process whereby all that is implict is made manifest successively or closely.

Evolution side gives the following stages in technological development.

A. Stone Age

B. Bronze Age

C. and Iron Age

Every society passes through the following economic developmental stages

A. Hunting Stage

B. Pastoral Stage

C. Agricultural Stage

D. and Industrial Stage

One can trace the various economic developmental stages from Sangam literature.

3.1 : Marutha Makkal — Agricultural tribes

3.2 : Kurinchi Makkal — Semi Agricultural tribes

3.3 : Mullai Makkal — Pastoral tribes

3.4 : Neytal Makkal — Fishing tribes

3.5 : Pa:lai Makkal — Hunting tribes

3.1. The Maruta-Makkal or Agricultural tribes

The Maruta - Makkal consisted of ulavar (plough men) who inhabited fertile and well watered spots.

Maruta - nilam, so called from the Maruta trees which flourish in the vicinity of water.

The chiefs of the agricultural tribes in ancient times were called a ran (lord of the village) or Kilavan (elder owner). They were considered as the advanced group in that social set up due to their regular income from lands and well settled life in society.

3.2. The Kurinchi-Makkal or Semi Agricultural tribes

The Kurinchi Makkal lived in hilly districts called kurinchi. They were known by the name Kuravar.

Kurinchi, is a name derived from the Kuruch trees which abound in rugged hilly districts.

The tracts of land which Kuravar inhabited abounded in forests in which roamed ferocious tigers, bears and wild elephants and which were thronged with swarms of peacocks and parrots.

They fed upon bamboo rice and millet which alone their barren tracts were capable of yielding as well as honey which they collected from the forest, and they drunk the pure waters of the mountain streams.

3.3. The Mullai-Makkal or Pastoral tribes :

They inhibited jungle tracts of land.. The Men were called Ayar and idaiyar. Their land was the abode of stags, hares and wild fowls on which they fed. as well as on the produce

of their cattle and grains which they obtained by exchange. Pastoral is considered as the advanced development of hunting stage is those times.

3.4. The Neytal makkal or Fishing tribes :

They lived along the Sea coast in small fishing villages called pattanam or pakkam. Their occupation consisted in fishing. Fish-curing and Salt making and fish entered largely into their consumption. They were called Parathar (பரதர்) and Nulaiyar (நுளையர்).

3.5. The Palai Makkal or Nomades :

They inhabited desert tracts and forests having eagles, doves as neighbours and lived on hunting and plundering the adjoining countries. They, were called ferocious Vedar and they chased tigers with the help of a species of wild dog. Which they trained for that purpose, the people were called Maravar (மறவர்) and Eyinar (எயினர்).

Hunting profession is considered as the Age old profession practised by primitive society.

Conclusion :

Ploughing is given a pride of place. Since Cultivation remains to be the backbone of Tamil Nadu, the glorification of ploughing holds good for ever. To conclude, It is enough if we consider that in Sangam literature, there are ample and adequate ideas to denote the sociological Evolutionary Doctrines of our ancient Society.

Opening of the Portals

K.C. Kamaliah
Madras

[Karunakara Tondaman, Genaerassimo of the Chola Army defeated the Kalinga Army. The tidings of victory are communicated to the spouses of the warriors at home by their maids].

Emerging from the sea nectar-like,
Oh You maidens ! Your youthful breast
Is gambling dice. The slender waist
Resembles the kettle drum in size.
Stretch upto your ears your lusty eyes.
Fling open your doors nice. (1)

Bulging while the young breasts grow -
Even the venerables are swept off their feet -
Seeing the plight of the waist
Unable to bear their weight.
Open the portals straight. (2)

As a peacock, aye a peacock, from slumber waking,
With your curly hair swinging, swinging,
To the tune of anklets tinkling, tinkling,
Oh you maidens of rhythmic speech !
Open the portals please, we beseech. (3)

In the sweet dream you had,
With the munificent lord who visited,
You sulked foregoing union,
And now you quarrel with your heart for lapse.
Open your lofty door at once. (4)

'Let go, let go our garment'
Prattle you in feigned anger,
Not moving away from him,
Implying thereby, 'Clutch it'.
Oh you feminine beauty of swan's gait !
Graceful thou art, Open the portals please. (5)

Anger you feigned, but retracted smiling.
'A welcome gift is this smile'
Thinks the husband awhile.
Blooming coral lips approaching nigh
Of the reddish juicy mouth,
Drop down pearls - tears of joy.
Open anon, open anon the portals. (6)

'Asleep she is really,' thought the youth.
Massaging her, 'Panacea 'tis to pacify with,'
Said he. Oh you maiden donning pretended sleep
with eyes sharp as steel,
Fling open your door forthwith. (7)

With the necklace of pearls,
Dangling over your piercing breasts,
Also you are the proud possessor

Of a garland of prints on the chest
From the crimson mouth of elegance.
Fling open your doors at once. (8)

Overjoyed your minds gets perturbed,
The garment alas gets detached.
Your crimson mouth of coral
Loses its reddish tinge.
With the corners of eyes reddening,
Deprived of the armour of modesty,
Such of you in blissful union,
Open the portals please. (9)

In spite of amorous union and
In spite of treating it as real,
You still persist in telling
That it was the usual old dream.
Maids laugh at your tomfoolery.
Realisatiom came to you therby.
Open your portals nearby. (10)

Drowsy you were in amorous union
Unaware of the garment slipped.
But then you clothed as apparel soon
The rays of the silvery moon:
Oh you maidens lovely!
Open your golden portals comely. (11)

Avenging your husband's lapse,
You let his passion collapse.

False it was you choicest maiden!
Your pretended sleep till dawn.
Open the artistic doors of gold. (12)

Your eyes ransack the path
Which your husbands frequent;
Bent down with disappointment
Your mind and feet are out in front
Awaiting their arrival every moment
Oh you pensive maidens, open the portals. (13)

Your unsteady twin breasts shaking
To the slender waist spell disaster.
"Avoid, prithee, avoid walking",
Screams the anklet seeking shelter.
Oh you maidens of gait merry,
Fling open your doors, please hurry. (14)

You damsels twist and war
Fragrant red blooms on your hair,
Thrust within the life so dear
Of young apprentice lovers out of gear.
Oh ye maidens with tresses fair!
Open the golden portals rare. (15)

The wounds inflicted by the eyes called spear,
On the chests of the spouses you revere,
Foment ye girls with your heavy balmy breasts.
Administer your juicy medicine of mouth.
Open the massive doors of gold. (16)

As you get drunk maidens fair,
The beverage of lips,
Intoxicating as liquor,
Honey'd word is in jitters,
Lustrous eyes are crimson,
White turn lips,
Equipoise slips.
Throw open the doors. (17)

Maidens of mature intellect!
The dishevell'd hair a hand above,
Trying to thrust in wanders,
The hand below meanders
Struggling with the fluttering robe.
Even while slumbering in comfort,
Your radiant faces bloom bright.
Throw open your portals straight. (18)

"I' m sure of may husband's coming",
You mused and opened the door.
"He may not come at all",
You bemoaned and banged it.
A night long vigil you kept,
Opening and shutting the door prompt,
Times without number till dawn.
The result was: the hinges did yawn.
Pray open the doors of such renown. (19)

Oh you damsels in blissful union!
With your jewellery intact,

Apparel in hopeless confusion!
The monarch of martial exploit
Is secure at Kanchi in position
With Kalingam in dissolution.
May we sing the war ballad in unison.
Open the portals and join the session. (20)

Oh you maidens from Karnataka!
Who prattle in a tongue sweet,
Interspersed with a little Vadugu
And a little Tamil, make haste.
Open the portals anon. (21)

From amidst the stem
Around the navel single
Oh you possessor of eve's lotus buds double,
Fling open your portals of gold. (22)

Oh you maidens!
Who were taken away as tribute,
To the monarch of the country
Lashed by the waves of a perennial river,
From the mountainous part and Tulu,
Open ye the doors. (23)

Unaware of the dawn when in amorous union,
Oh you maidens in slumber
On the chests of your husbands as couch,
Open your portals of gold, we beseech. (24)

சேதுபதி மன்னர்கள் (வரலாற்று ஆய்வு)

எஸ். எம். கமால்,
இராமநாதபுரம்.

பாண்டிய நாட்டின் கிழக்கு, தென்கிழக்குப் பகுதி மறவர் சீமை என வழங்கப்பட்டது. இந்த சீமையின் ஆட்சியாளர்களாக கடந்த நூற்றாண்டின் துவக்கம் வரை தொடர்ந்தவர்கள் சேதுபதிகள் அல்லது சேது மன்னர்கள் என அழைக்கப்பட்டு வந்தனர். இலக்கிய வழக்காக அவர்களது நாடு சேதுநாடு என வழங்கப்பட்டது. இனிய தமிழ்ப்புலவர்கள் இந்த மரபினரை,

> "மிக்கபுகழ் சேர்க்கும் சிலைராமன் சேதுகண்ட நாள் முதலால்
> காக்கும் தனுக்கோடிக் காவலன்.................."

எனப்போற்றியுள்ளனர். சேது எனப்படும் திருவணையைக் காக்கும் காவலராக இராம காதையுடன் இணைத்துப் பாடியுள்ளனர். சேதுபதிகளாக விளங்கிய இந்த மறவர்குல மன்னர்கள், தெய்வப்பணியுடன், தண்ணளியிலும் சிறந்து மூவாத் தமிழின் வளர்ச்சியில் முனைந்து நின்றதை பெரும்புலவர் ஒருவர்,

> 'சேட்கும் வழங்கும் புகழ்ச்சேதுக்காவலன் செந்தமிழ்க்கு
> நாட்கும் வழங்கும் பெருங்கொடையான்"

என முழங்கியுள்ளார்.

கடந்து சென்ற மூன்று நூற்றாண்டுகளில், இந்த மன்னர்களைப்பற்றிய புகழ்ச்சிகள், ஏராளமான தனிப்பாடல்களாகவும் சிற்றிலக்கியங்களாகவும் படைக்கப்பட்டுள்ளன. அவர்களது

இறைப்பணிக்கும், தாளாத தமிழ்த் தொண்டிற்கும் தன்னேரி லாதகொடைத் திறனுக்கும் அவைகள் கட்டியங்கூறி நிற்கின்றன ஆனால் சேதுபதிகளைப் பற்றிய தொன்மை வரலாற்றினைத் துலக்குவதற்கு அவை துணையாக இல்லை. பாலையும் நெய் தலுமாகப் பரந்து விரிந்துள்ள கிழக்கு கடற்கரையின் பழங்குடி யினர் ஆன ''வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்'' என்பது ஆய்வாளர் சிலரது முடிவு. இராம காதையின் இறுதிக் களமாகிய சேதுவைத் தரிசிப்பதற்கு, ஆண்டு முழுவதும் தலயாத்திரையாக வருகின்ற அனைத்து மக்களது ஆறலைக் கள்ளர் பயம் நீக்கி, வேண்டுவன இயற்றி, விழைந்து உதவும் ஆற்றல் சால் அரசியலமைப்பு கடற்கரைப் பகுதியில் நூற்றாண்டு பலவாக இயங்கி வந்து இருக்க வேண்டும் என்றும், அந்த அரசியலார் வழி வந்தவர் சேதுமன்னர் என வரலாற்று ஆசிரியர் நெல்சன் முடிவு தெரிவித்துள்ளார். மற்றும், பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டிய நாட்டிற்குள் ராஜராஜ சோழனது மறப்படைகளை வழிநடத்தி வந்த சோழமறவ சாமந்தர் இவர்கள் என்றும் சோழப் பேரரசையடுத்து பிற்காலப் பாண்டியரும் வலிவும், பொலிவும் இழந்த பொழுது மாவலி வாணா தரையர்களைப் போன்று வீறுகொண்டு தன்னாட் சியாளராக மாறியவர்கள் என்ற மாற்றுத் கருத்தும் நிலவி வருகிறது.

இதனை வலியுறுத்தும் வகையில், இந்த மரபினரது மூதாதையர் கானாட்டின் திருமயம் கோட்டையை பன்னிரண் டாம் நூற்றாண்டில் அமைத்ததற்கான இரண்டு செப்பேட்டுச் சான்றுகளை புதுக்கோட்டை தன்னரசு ஆவனம் ஒன்று புலப் படுத்துகிறது. அந்த ஆவணத்தின்படி திருமயம் மலைக் கோட்டையின் கீழ்பகுதி கிபி. 1120- ல் விஜய ரகுநாத வயிரிய முத்துராமலிங்க சேதுபதி என்பவராலும் குன்றின் மேல்பகுதி கி.பி.1195-ல் முத்துராமலிங்க் சேதுபதி என்பவராலும் அமைக்கப்பட்டன. இந்த ஆவணச்செய்திகளை, அந்த மன்னரது தொன்மை ஆய்வுக்கு தொடர்புடையதாக எடுத்துக்கொண்டால் அவர்கள் தொடக்கத்தில் பாண்டியநாட்டின் கோனாட்டில் குடியிருந்து நிலைத்து, பின்னர் இன்னும் தெற்கே கிழக்கு கடற்கரை பகுதிக்கு குடிபெயர்ந்தவர் என்பது உறுதிப்படுத்தப்

படுகிறது. ராஜேந்திர மங்கல நாட்டு மறவர் ஐநூறுவரை, தங்களது பாதுகாப்பிற்காக புதுக்கோட்டைப்பகுதி கார்ராளர். அவர்கள் பகுதியில் குடியமர்த்தினர் என்பதை புதுக்கோட்டை சீமைவரலாறு தெரிவிக்கிறது கி.பி. 1478-ல் வரையப்பெற்ற குழிபிறை செப்பேடு அந்த மறவரை ''சேதுகாவலப்புறையர்'' எனக் குறிப்பிடுவதால், அவர்களுக்கும் சேதுநாட்டிற்கும் உள்ள தொடர்பு தெரியவருகிறது.

புதுக்கோட்டை தன்னாட்சிப் பகுதியாக இருந்த பொன்னமராவதி, திருமயம், தஞ்சாவூர், மேலப்புதுவயல் சாஸ்தா கோயில் காட்டுபாவா பள்ளிவாசல் ஆகிய ஊர்களுடனான சேதுமன்னரது வரலாற்றுத் தொடர்புகளை, புதுக்கோட்டை சீமை செப்பேடு, கல்வெட்டு. வரலாறு ஆகியவைகள் வலியுறுத்துகின்றன. மெக்கன்சி வரலாற்று ஏட்டுத் தொகுப்பு வல்லமை மிக்க மறவர்கள் பாண்டியரை நீக்கி மதுரையை தங்களது கோநகராகச் சிறிது காலம் வைத்து இருந்ததையும் பின்னர், மறவர் சீமையை ஆனை குந்தி வடுகர்கள் ஆக்கிரமித்த விபரத்தையும் தருகின்றன.

பதினான்காவது நூற்றாண்டில் பாண்டிய நாடு மதுரை சுல்தான்கள் கட்டுப்பாட்டில் இருந்ததில், தஞ்சை நெல்லைப் பகுதிகளில் வலிமை குன்றி இருந்த பாண்டிய மன்னர்களைப் போல, சேதுபதிகளைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளும் இல்லை. இராமேஸ்வரம் திருக்கோயில் அமைப்பு முறைகளை ஆராய்ந்த டாக்டர் பெர்கசைன், கோயிலின் கர்ப்பக்கிரகம் 15ஆம் நூற்றாண்டில் உடையான் சேதுபதியால் அமைக்கப் பட்டது என்ற கருத்தை தெரிவித்துள்ளார்; இவரது ஆய்வுக்கு ஆதாரமாக கி.பி, 1414-ஐச் சேர்ந்த உடையான் சேதுபதியின்கல்வெட்டும் அங்கு உள்ளன இதே காலவரையில் படைக்கப்பட்ட ''கயிலாயமாலை'', யாழ்ப்பான நல்லூர் திருக்கோயிலுக்கு சேதுபதி மன்னரது முயற்சியால் ராமேஸ்வரத்து அந்தணர் ஒருவர் அர்ச்சகராக நியமனம் செய்யப்பட்ட செய்தியை தெரிவிக்கின்றது. தொடர்ந்து. பதினாறாவது நூற்றாண்டில் இராமேசுவரம் திருக்கோயிலின் சிறப்பில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட சேதுமன்னர்கள்

அந்தக் கோயிலின் அன்றாட நடைமுறைகளை பராமரிப்பதற்கு பல ஊர்களை தானமாக வழங்கி உதவினர். இந்த உண்மையினை அவர்களது கி பி. 1500, கி.பி.1587ம் ஆண்டு கல்வெட்டுக்கள் கூறுகின்றன. மேலும் மதுரை, இராமேசுவரம், சேதுப் பாதையில் வேதாளை சிராமம் அருகில் அக்ழிவெட்டி ஆக்கிரமிப்பு செய்தும், சேதுயாத்திரையில் பயணிகளைத் துன்புறுத்தி தலைவரி வசூலித்தும் வந்த போர்த்துகீசிய பரங்கி அணியை மதுரைநாயக்க-மன்னரது உதவியுடன் கி.பி 1546-ல் அழித்து ஒழித்த செய்தியும் வரலாற்றில் பதிவு, செய்யப்பட்டுள்ளது இதே நூற்றாண்டின் இறுதியில், எட்டையாபுரம் பாளையக்காரரான எச்சிலப்ப எட்டையப்ப நாயக்கர், நம்பிபுரம் என்ற இடத்தில் நிகழ்ந்த எல்லைச் சண்டையில் அப்பொழுது இருந்த சேதுபதிமன்னரை தோல்வியுற்று பெருநாழிக்கு பின்னடையுமாறு செய்ததாக எட்டையபுரம் வரலாறு கூறுகின்றது.

இதே நூற்றாண்டின் துவக்கத்தில், மன்னர் வளைகுடாப் பகுதியில் நுழைந்த போர்ச்சுக்கல் பரங்கிகள் கடற்பரப்பில் மட்டுமல்லாமல் மதுரை நாயக்கருக்கு சொந்தமான தரைப் பகுதியிலும் ஆக்ரமிப்பு செய்து அடாவடியாக தங்களது நாட்டு அரசியல், நிர்வாக அமைப்புகளை நிறுவத்தொடங்கினர். அவர்களுடன் பொருதிப்போராடுவதற்கு ஏற்ற மறவர்படை, மதுரை நாயக்கரிடம் அப்பொழுது இல்லை. அந்நிய ஆதிபத்திய சக்தியை தடுத்து நிறுத்தும் வலிமை மிக்க வல்லவர் அவருக்கு தேவை. ஆதலால் மதுரை மன்னர் முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர், மறவர் சீமையின் தன்னரசாக இருந்த உடையான் சடைக்கத் தேவரை அந்தப் பணிக்கு முற்றிலும் தகுதியானவர் எனத் தேர்வு செய்தார். மதுரைக்கு வரவழைத்து பாண்டிய மண்டலத்தின் எழுபத்து இரண்டு பாளையக்காரர்களுக்கும் அவரை-தளவாயாக-சேதுபதி மன்னரை அங்கீகரித்தார் முந்தய வரலாற்றுக் குறிப்புகளில் விடுபட்டுள்ள அந்த அரசு வழியினரை மதுரை நாயக்க மன்னரது வரலாற்றுடன் இணைத்ததின் காரணமாக, பதினேழாம் நூற்றாண்டில் இருந்து மதுரை நாயக்க மன்னர்கள் ஆட்சி நீடித்த கி.பி. 1736 வரை, சேதுபதிகளது வரலாறு நமக்கு முழுமையாகக் கிடைக்கிறது. அதன்

பின்னரும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியார் மறவர் சீமையின் ஆட்சி உரிமையைப் 'பறித்த (கி.பி. 1795) வரையிலும் தொடர்ந்து கிடைத்துள்ளது.

இந்த மன்னர்களது முன்னூறு ஆண்டு ஆட்சியில் தமிழ் தழைத்தது. இறையுணர்வு வளர்ந்தது. மூவேந்தருமற்று பாவேந்தர் இலவம்பஞ்சாய் பறந்த நிலையில், சேதுவேந்தர்கள் செந்தமிழ்ப்புலவரை ஆதரித்து அணியும் மணியும் நல்கி அனுப்பிவைத்தனர். பொன்னும் பொருளும் வழங்கிப் புரந் தனர். தமிழ்ப் புலவர்களும் வடமொழி வித்தகர்களும் பலநூறு கிராமங்களை இந்த மன்னர்களிடமிருந்த அகரங்களாக, மங்கலங்களாக பெற்று மகிழ்ந்தனர். இதனால் அமிர்த கவிராயர்,

> ''பாவுக்கிசையும பெயரே மணந்து மெப்பாவலர்தம்
> நாவுக்கிசையும் பெரும்புகழார்'' என வாழ்த்தினார்.

இன்னும் இராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை, தஞ்சை, ஆகிய மாவட்டங்களில் உள்ள ஆலயங்களும், ஆதினங்களும், திருமடங்கலும், பள்ளிவாசல்களும், தேவாலயங்களும், அன்ன சத்திரங்களும் மக்களுக்கு தொடர்ந்து பயன்பட இந்த மன்னர் களது தண்ணளியும் தாளாண்மையும் உதவின. அன்றாட வழி பாடுகள், பூசனைகள், விழாக்கள், கட்டளைகள், நந்தா விளக்குகள், நிவ்விதங்கள், என பலதிறப்பட்ட சமய சமுதாயப் பணிகள் சிறப்பாக இன்றும் தொடருவதற்கு அவர்கள் உடலாக வழங்கிய விளைநிலங்களும், ஊர்களும் உதவி வருகின்றன.

இன்னும், தொண்டால் உயர்ந்த தலைவர்களையும், திறனால் சிறந்த குடிகளையும், உயர்த்தி வாழ்த்தி பொன்னும், பொருளும் வழங்கி போற்றினர். வைத்தியம், புரோகிதம், பஞ்சாங்கம், அடைப்பம், சீவிதம், கோயில் கணக்கு. அம்பலம், திசைகாவல், நட்டுவம், வாத்தியம் ஆகிய துறைகளில் தனித்து, ஒளிர்ந்த அந்தப் பெருமக்கள் பெற்ற ஓலைப்பட்டயங்களும் செப்பேடுகளும் அந்தச் சாதனைகளுக்கு சான்றாக உள்ளன.

இவையெல்லாவற்றையும்விட சிறப்பான செய்கை சேது வேந்தர்களது சமயப்பொறை. இந்துச் சமயத்தின் ஒருபிரிவான சைவ நெறியில் நிலைத்து நின்ற அவர்கள், இன்னொரு பிரிவான வைணவத்திற்கும், ஏன், இந்து சமயத்தில் இருந்து பிரிந்து போன சமண நெறிகளுக்கும்கூட வாழ்வளித்தார்கள். அவர்களது குடிகளான சிறுபான்மையினரான இசுலாமிய, கிறித்தவ மக்களது இறைக்கொள்கைகளையும் மதித்துப் போற்றும் மாண்புடையவர்களாக இருந்தனர். ஆட்சியாளர் என்ற நிலையில் குடிமக்களது சமய ஒழுக்கலாறுகளுக்கு ஒவ்வாத நடப்பு எதனையும் அவர்கள் மேற்கொண்டதில்லை. மாறாக சிறுபான்மை மக்களிடம் அன்பும் அனுதாபமுங் கொண்டு ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கு உகந்தவர்களாக ஆதரவு தந்து உதவினர்.

''எந்த உயிரும் எமது உயிரென்று எண்னி எண்ணி
சிந்தை தெளியவருள் செய்வாய் நிராமயமே!''

என்று பாடிய ஞானி குணங்குடி யாரது பிறப்பிடத்தையும்

''எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறு ஒன்றும் அறியேன் பராபரமே!''

என்று பாடிய தாயுமான அடிகளது புகழுடம்பை தாங்கியுள்ள புண்ய பூமியையும் தங்களது ஆட்சிக் கோட்டிற்குள் அமைத் தவர்களாக அதிபதிகளாக ஆட்சிசெய்த இந்த மன்னர்கள் அந்தப்பெரும் சித்தர்களை அடியொட்டி வாழ்ந்ததில் வியப் பில்லைதான்? அந்தச்சிறந்த ஆட்சியாளர்களது ஆட்சியும் மாட்சியும் அரசியல் இலக்கணத்திற்குச் சிறந்த அளவுகோலாக வரலாற்றில் அமைந்து விளங்குகிறது.

ஆலாத்திப் பாடல்களின் தனித்தன்மைகள்

நீ.வ. கருப்புச்சாமி
பெரியார் மாவட்டம்

அறிமுகம்

மனித வாழ்வில் திருமணம் என்பது மிக இன்றியமையாத நிகழ்ச்சியாகக் கொள்ளப்படுகிறது. ஒரு குடும்பத்தில் நிகழும் பிற சடங்குகளை விட திருமணச் சடங்கு சிறப்பாக எண்ணப் பட்டு நடத்தப் பெறுகிறது. இந்நிகழ்ச்சியின் போது மக்கள் ஆர்வத்துடனும் அன்புடனும் கூர்ந்தும் கவனித்தும் கேட்டும் பாடல் ஆலாத்திப் பாடலாகும். இங்கு ஆலாத்தி சொல் விளக்கம், ஆலாத்தி எடுக்கும்முறை எடுப்போர், எடுப்பதன் நோக்கம், பாடலின் அமைப்பு, ஆலாத்திப்பாடல் காட்டும் செய்திகள், கற்பனை, பாடலின் முடிவு முதலானவை விளக்கப்படுகின்றன.

'ஆலாத்தி' சொல் விளக்கம்

ஆலாத்தி என்பது ''மஞ்சள் நீர் அல்லது விளக்குப் போன்ற பொருளை மணமக்கள் முன் அல்லது விக்கிரகத்துக்கு முன் சுற்றுதல்'' 1) என லிப்கோ அகராதி விளக்குகிறது. மேலும் ஆலாத்தி என்பது ''ஆரத்தி என்ற பொருளில் வரும்'' 2) என கழகத் தமிழ் அகராதி குறிக்கின்றது.

'ஆலாத்தி' பொருள் விளக்கம்

திருமணச் சடங்கின்போது சுமங்கலிப் பெண்கள் இருவரோ மூவரோ சேர்ந்து மணமக்களை முன்னிலைப்படுத்திப் பாடும் பாட்டாகும். இது சடங்குப் பாட்டு வகையுள் அடங்கும். ஆலாத்தியின் பிறப்பிடம் திருமணச் சடங்கு. 'பெண்களின் தனி

உடைமை ஆலாத்தி. ஆலாத்தி எடுக்கும் வழக்கம் ஒரு நாட்டுப் புற மரபாகும். (Folk Tradition) இன்று நகரங்களிலும் (City) பெருவழக்கில் பரவி வருகிறது.

ஆலாத்தி எடுக்கும் முறை

ஒரு சிறிய தட்டில், வெற்றிலையைக் கிள்ளிப்போட்டு, மஞ்சள், சுண்ணாம்பு முதலான மங்கலப் பொருட்களைத் தண்ணீரில் கலந்து, சுமங்கலிப் பெண்கள் தட்டில் உள்ள அந்த நீர் கீழே சிந்தாதவாறு மணமக்களுக்கு எதிராக நின்று கொண்டு ஒன்பது முறை சுற்றுகிறார்கள். அப்போது ஆலாத்திப் பாடல் பாடப்படுகிறது. ஆலாத்திப்பாடல் முடிந்த பிறகு தட்டில் உள்ள சிவந்த நீரினைத் தொட்டு மணமக்களின் நெற்றியில் பொட்டு வைப்பார்கள். பின்னர், தட்டில் உள்ள நீரைக் கீழே ஊற்றி விடுவார்கள். அப்போது மணமக்கள் அந்த நீரைத் தாண்டி வீட்டுக்குள் வருவார்கள். குறிப்பாக, ஆலாத்தி எடுத்தல் இல்லத்தின் நுழைவாயிலிலேயே நடைபெறும்.

இருமுறை ஆலாத்தி எடுத்தல்

திருமணத்தின்போது ஆலாத்தி இருமுறை எடுக்கப்படும். அ) மணமகன் அழைப்பின்போதும், ஆ) திருமணமான பிறகு மணமக்களையும் வாழ்த்துவார்கள். பெரும்பாலும் ஆலாத்தி எடுக்காமல் மணமக்களை வீட்டிற்கு அழைத்துச் செல்வது கிடையாது. சில திருமணங்களில் இவ்வழக்கம் பின்பற்றப்படுவதில்லை.

ஆலாத்தி எடுப்போர்கள்

மணமகன் வீட்டில் ஆலாத்தி எடுக்கும்பொழுது மணமகனின் மாமன் முறையினரும், மணமகள் வீட்டில் ஆலாத்தி எடுக்கும்பொழுது மணமகளின் மாமன் முறையினரும் ஆலாத்தி எடுக்கும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது.

ஆலாத்தி எடுப்பதன் நோக்கம்

ஆலாத்தி எடுப்பதற்கு பல்வேறு காரணங்கள் சொல்லப் படுகின்றன. எனினும், குறிப்பாக ஆய்ந்த பொழுது சில

கருத்துக்கள் தெளிவாகுகின்றன. மணமக்களுக்குக் 'கண்ணேறு, ஏற்படாமல் இருப்பதற்காக ஆலாத்தி எடுக்கப்படுவதாக நாட்டுப்புற மக்கள் கூறுகின்றனர்.

ஆலாத்திப் பாடல்களின் அமைப்பு

ஆலாத்திப் பாடல் மணமக்களை வாழ்த்திப்பாடும் மங்கல வாழ்த்துப் பாடலாகும். இருப்பினும் பாடலின் தொடக்கத்தில் இறைவன் இறைவியை வாழ்த்திப் பாடுவதை மரபாகக் கொண்டிருக்கிறது.

''பழனிமலை முருகருக்கும் ஆலாத்தி
தேனால் ஆலாத்தி
ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கும் ஆலாத்தி
ஆலாத்தி ஆலாத்தி அல்லாவருக்கும் ஆலாத்தி
மலைமேல் இருக்கும் அந்த மாயவருக்கும்

என்ற ஆலாத்திப் பாட்டு பழனி முருகனையும், கிருஷ்ணனை யும் வாழ்த்தித் தொடங்குவதைக் காணலாம். இம்முறை யானது, மணமக்களுக்கு எந்தவிதமான தீங்கும் ஏற்படா வண்ணம் இறைவனிடம் வேண்டுவதைக் காட்டுகிறது. ஆலாத்தி பாடலில் குறிப்பிட்ட சொற்கள் திரும்பத்திரும்ப வரும். குறிப்பிட்ட ஒரே வரியின் அடிகள் தொடந்தாற்போல் வரும் அமைப்பு ஆலர்த்திப் பாடல்களில் உண்டு. நாட்டுப்புறப் பாடல்களின் சாயலை காணலாம்.

ஆலாத்திப் பாடல் காட்டும் செய்திகள்

பொதுவாக ஆலாத்திப் பாடல்கள் திருமண நிகழ்ச்சிகளான பந்தல் அலங்காரம், பெண் வீட்டார் செய்யும் சீர்சிறப்பு, ஆண் வீட்டாரின் பெருமை, மணப் பெண்ணின் அழகு, மண மகளின் அழகு போன்றவை ஆலாத்திப் பாடல்களின் வழி காண முடிகிறது. புராணத் தொடர்பான செய்திகள், இராமன், சீதை, முருகன், வள்ளி, போன்ற திருமணச் செய்திகள் ஆலாத்திப் பாடல் வழி உணரமுடிகிறது. ஆலாத்திப் பாடல் களில் மிகைப்படுத்தப்பட்ட வருணனைகள் இடம் பெற்றிருப் பதைக் காணமுடிகிறது. இதுவே இதன் தனிச் சிறப்பு எனலாம்.

"மடத்துக்கு மடம் மணிவிளக்கே நின்றெரிய
மணவறைக்கு முன்பாக சரவிளக்கே நின்றெரிய
சரவிளக்கே நின்றெரிய
கொட்டுங்கள் மேலும் கோகிலார் திருப்பூட்ட"

என வரும் ஆலாத்திப் பாடல் பந்தல் அலங்காரத்தை வருணிக்கின்றதைக் காணமுடிகிறது.

ஆலாத்திப் பாடல்களின் முடிவு

வாழ்வைத் தொடங்கும் தம்பதிகளுக்கு வாழ்த்தும் பாடலாக, வாழ்த்துப் பாடலாக அமைவது ஆலாத்திப்பாடல். புது அத்தியாயத்தை தொடங்கும் நிலையில் இறைவனை வேண்டி இன்பம் பலகோடி நாடி, பல்லாண்டு வாழ வாழ்த்து நிலையில் ஆலாத்திப்பாடல் அமைகிறது. மங்கலத்தில் தொடங்கி மங்கலத்தில் முடியும் நிலையைக் காணமுடிகிறது.

"ஜெயமங்கலம் நித்திய சுப மங்கலம்
காமாட்சி அம்மன் போல
கனத்த நாள் வாழ வேண்டும்
ஜெயமங்கலம் நித்திய சுபமங்கலம்"

என்வரும்

ஆலாத்திப் பாடலின் முடிவுனவ நோக்கும் போது, ஆலாத்திப் பாடலின் முடிவு இறைவன்-இறைவி போலத் திருமணத் தம்பதிகள்-பல்லாண்டுகள் இன்பம் பெற்று வாழ வேண்டும் என்பதை உணர முடிகிறது.

குறிப்புகள்

1. லிப்கோ - தமிழ் - தமிழ் - ஆங்கில அக்ராதி, ப.77
2. கழக தமிழ் அகராதி, ப.85
3. கட்டுரையில் தரப்பட்ட ஆலாத்திப்பாடல் எமது எம்ஃபில் ஆய்வின் போது கள ஆய்வில் சேகரித்தது

சட்டமன்றச் செய்திகளும் நிருபர்களும்

சோ. கலைவாணி
ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.

அண்டை வீட்டு செய்திமுதல் அண்டார்டிகா செய்திவரை அனைத்தையும் கேட்டறிவதில் மக்களுக்கு ஆர்வமிருப்பது இயல்பு. சில செய்திகளை மக்கள் தாமே விரும்பி அறிய முயலு கின்றனர். சில அவர்களைத் தாமே வந்தடைகின்றன. இவற்றுள் காற்றுவாக்கில் வந்தடைகின்ற புரளிகளும் கூட சில வேளை செய்திகளாகிவிடும். இவ்வகைப்பட்டசெய்திகளில் உண்மை யானதும், உறுதி செய்யப்பட்டதும், தெளிவானதும் மக்களின் நலம் கருதியும் வெளிவருகின்ற செய்திதான் மக்கள் வாழ்வுக்கும், நாட்டின் உயர்வுக்கும் உறுதுணைபுரிவதாகும். இத்தகைய பெரும் பணியை ஆற்றும் பொறுப்புடைய பலதிறப்பட்ட செய்திகளைத் தாங்கிவரும் பத்திரிகைகள், நாளிதழ், வார இதழ், திங்களிதழ், பருவ இதழென்று பல்கிப் பெருகியுள்ள இக்கால கட்டத்தில், நாட்டின் நிலவரங்களை, மக்களின் வாழ்க்கைப் போக்குகளை மக்களின் மனதில் பதியுமாறு எடுத்துரைக்கின்ற பத்திரிகைகள் அரசியல், அரசு தொடர்பான செய்திகளை வெளியிடுவதில் பெருமளவு அக்கறை காட்டி வருகின்றன.

1.1. தங்களுக்குத் தொடர்பில்லாத, தம்மைப் பாதிக்காத செய்திகளுக்கே மக்கள் முக்கியத்துவம் தரும்போது, தங்களை ஆளுகின்ற சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களைக், குறித்தும், அவர்களால் உருவாக்கப்படுகின்ற சட்டங்கள், முன்னேற்ற நோக்குகள் குறித்தும் மக்கள் அக்கறை காட்டுவதில் வியப்பில்லை. இது பொறுப்புள்ள ஒவ்வொரு குடிமகனும் கொள்ளவேண்டிய அக்கறையுமாகும்.

1.1.1. தங்களின் நலம் கருதி சட்டங்கள் இயற்றுகின்ற உரிமையை, தங்களின் ஒட்டுரிமையால் அளித்த மக்கள், தம்மை ஆளுகின்ற அரசு பற்றியும், அதன் செயல்முறைகள் குறித்தும் நேரடியாகச் சென்று அறிவதென்பது இயலாது. எனவே நான்கு சுவர்களுக்கிடையில் உருவாக்கப்படுகின்ற சட்டதிட்ட நடவடிக்கைகளும், நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற முடிவுகளும் எந்தமுறையில், எதற்காக, எவரால் எந்த சூழலில் அமைக்கப் படுகின்றன என்பதை மக்களுக்குத் தெளிவாகு உணர்த்தும் திறமுடையனவாக செய்திப்பத்திரிகைகள் செயல்படுகின்றன என்பது அறியத்தக்கது.

1.1.2. ஆளுவோர் கூடும் இடங்களான சட்டமன்ற, நாடாளு மன்றங்களின் நிகழ்ச்சிகளையும், அங்கு மேற்கொள்ளப்படுகின்ற முடிவுகளையும் பத்திரிகைச் செய்திகளாக்கி, அவற்றை மக்களை அடையச்செய்கின்ற பொறுப்புள்ளவர்கள் நிருபர்களாவர். உண்மையும், அல்லாதுமாகிய அனைத்துச் சூழலிலிருந்தும், மனிதர்களிடமிருந்தும், கிடைக்கக்கூடிய செய்திகளைத் தம் அறிவுத் திறனால் அளந்தறிந்து, கிடைத்த செய்திகளின் உண்மைத் தன்மைகளைத் தேர்ந்து தருபவரே பத்திரிகை நிருபராவர் இத்தகையபெரும் பொறுப்புக்குரிய நிருபர்களின் வழியாகத்தான் நாட்டு நிலைகளை ஆள்பவர்களின் போக்கு களை அறிய முடிகின்றது என்றளவில், இந்நிருபர்கள் எத்தகைய அடிப்படைத் தகுதிப்பாடுகளுக்குரியவர்களாயிருத்தல் வேண்டும் என்பது அறியப்படவேண்டிய ஒன்றாகும்

1.2 நிருபரின் தகுதிகள்: பாராளுமன்ற, சட்டமன்றங்களில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைப் பயனுறவும், சுவைப்படவும் செய்திகளாக அமைத்துத் தரும் பொறுப்பும் திறனுமுடைய நிருபர்கள். இவர்கள் கல்வியறிவில் தேர்ந்தவராயிருத்தலோடு, பாராளுமன்ற சட்டமன்றங்களின் படிப்படியான வளர்ச்சியின் வரலாற்றையும் இம்மன்றங்களின் விதிமுறைகள், அவற்றின் எழுதாச்சட்டங்கள் ஆகியவற்றையும் ஆகியோர் பற்றிய மதிப் பீடுகளையும், மக்களையும் நாட்டையும் நிர்வாகம் செய்கின்ற அரசாங்கததின் ஆட்சித்திறன்களையும் அளந்தறிகின்ற அறிவு

நுட்பமும், அனுபவத்திறனும் கொண்டவராயுமிருத்தல் இன்றியமையாதத் தகுதிகளாகும்.

1.2.1. குறிப்பிட்ட தகுதிப்பாடுகளையுடைய நிருபருக்கு, அனைத்துத்தரத்து மக்களையும் புரிந்து செயல்படுகின்ற பொறுமையும், சகிப்புத்தன்மையும் தேவைப்படுவதோடு அவரவர் இயல்பறிந்து உரையாடவும், நெருக்கடியான சூழல்களைச் சமாளிக்கவும் அறிந்திருக்கவேண்டும் என்பதும் அறியத்தக்கதாகும்

தன் நாட்டின் நிலவரங்களையும், ஆளுவோர் தம் இயல்புகளையும். நாட்டு மக்களையும் அவரவர் இயல்புகளுக்கேற்ப அறிந்திருப்பதோடு, உலகத்தின் அன்றாட நடப்புகளையும் அறிந்து செய்தி சேகரிக்கின்ற ஆர்வமும், துடிப்பும் சுறுசுறுப்பும் ஒரு சட்டமன்ற நிருபருக்கு மிக இன்றியமையாது தேவைப்படும் பண்பாகும்.

கையில் கிடைக்கும் நெகிழ்வான களிமண்ணை, கண்ணையும் கருத்தையும் கவருகின்ற கலைத்திறமிக்க பதுமையாக்கிவிடுவான் பொம்மைக் கலைஞன், இக்கலைஞனின் கற்பனையும் கலைவண்ணமும் உண்மையை அப்படியே உருவாக்கிச் சுவைக்க வைக்கின்ற கலைத்திறத்தையொத்து, பலதரப்பட்ட சூழலிலிருந்தும், மக்களிடமிருந்தும், உண்மையும், அல்லாததுமான செய்திகளைப் பெறுகின்ற நிருபரும் அவற்றைப் பொருத்தமும் உண்மையும் ஏற்புமுடைய பாங்கில் ஒழுங்கு பட்டதொரு செய்தியாய் உருவாக்கித் தரும் முறையில் தன் ஆற்றலை வெளிப்படுத்த வேண்டுமென்பதும் பெருந்தகுதியாகக் கொள்ளப்படுகின்றது.

பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் இடம்பெறக்கூடிய பிரச்சனைகளைப் பற்றித் தெரிந்துகொள்வதோடு, கேள்வி நேரங்களில் மன்ற உறுப்பினர் தம் வாய்மொழி மூலமாகவும், எழுத்து மூலமாகவும் அறியப்படுகின்ற செய்திகளில் தேவையானவற்றைத் தேர்ந்துகொண்டு அவற்றைப் பத்திரிகைச் செய்திகளாக்க வேண்டும்.

இருமன்றத்தோரோடும் நெருங்கிய தொடர்புகொண்டு, செய்திகளைச் சேகரிக்கும்போது. செய்தியின் மதிப்புணர்ந்து, அவற்றைப் பொறுமையுடன் அறிந்து கொள்ளும் திறமையும் நிருபருக்குத் தேவைப்படுகின்றது.

1.2.1.1 சமுதாய மேம்பாட்டுப்பணியில் பெரிதும் பங்கு வகிக்கின்ற இரு மனறங்களின் செய்திகளை பெற்றுக்கொள்ளு கின்ற முறையில் நிருபர்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத் தலாம்:

1. சட்டமன்ற நிருபர்கள்(**Gallery Men**)
2. சட்டமன்றத் தாழ்வார நிருபர்கள் (**Loffy Correspondent**)
3. சட்டமன்ற வருணணையாளர்கள் (**sketch writer**)

இம்மூன்று வகைப்பட்ட நிருபரும் குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டுமே செல்ல வேண்டியவர்களென்ற கட்டாயமேதுமில்லை ஒரே நிருபரே மூன்றிடங்களிலும் சென்று செய்தி சேகரிக்கின்ற நிலையும் ஏற்படுவதுண்டு. இந்நிலை பொதுவாகத் தனிப்பட்ட நபர்களால் நடத்தப்படுகின்ற பத்திரிகைகளில் பணியாற்றுகின்ற நிருபர்களுக்கே வாய்க்கும். ஆனால் விற்பனையில், சிறப்பிடம் பெற்றுள்ள பத்திரிகைகளுக்குச் செய்தி சேகரித்துத் தரும் நிருபர்களும்மிகுதியாக அமர்த்தப்பட்டிருப்பர் அவர்கள் குறிப் பிட்ட மூன்று இடங்களுக்கும் பிரிந்து சென்று செய்திகளைச் சேகரிப்பர். மேலும் ஒவ்வொரு நாள் காலையிலும் குறிப்பிட்ட பத்திரிகை நிருபர்களின் குழுகூடி, அவரவர் சென்று செய்தி சேகரிக்கவேண்டிய இடங்களையும், நேரங்களையும் முடிவு செயபும். பெரும்பாலும் சட்ட, பாராளுமன்றங்களுக்கு உள்ளே சென்று செய்திகளைத் திரட்டுகின்ற வாய்ப்பு, வயதிலும், பத்திரிகைத்துறை அனுபவத்திலும் முதன்மைபெற்றவர்களுக்கே தரப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

அனுபவத்தில் தேர்ந்தவர்கள் மட்டுமே சட்டமன்றங் களுக்குச் செல்லுகின்ற வாய்ப்பைப் பெறுவதற்குக் குறிப்பிட்ட இன்னும் சில காரணங்களும் சொல்லப்படுவதுண்டு அதாவது, சட்டமன்றத்திற்குள்ளே செல்லுகின்ற நிருபர் ஏனைய நிருபர்

களைவிட மிகக் கவனமாகச் செயல்படவேண்டியவராவர். ஏனெனில் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்ட செய்திகளைத் தவறான முறையில் பத்திரிகைகளில் வெளிவந்துவிட்டால், குறிப்பிட்ட பத்திரிகை பெரும் பாதிப்பிற்குள்ளாவதோடு, தவறான செய்திக்குக் காரணமான நிருபரும் உரிமைப் பிரச்சனைக்குரியவராக்கப்பட்டுப் பெருந்தண்டனை பெறு வதற்கும் வாய்ப்புள்ளது.

மேலும், சட்டமன்ற உறுப்பினருக்கிடையே நிகழுகின்ற காரசாரமான விவாதங்களில் தரக்குறைவான பேச்சுக்களும், தேவையற்ற கருத்துக்களும்கூட இடம் பெற்றுவிடலாம். இவற்றையெல்லாம் அப்படியே வெளியிட நிருபர்களுக்கு உரிமையில்லை. விலக்கப்பட்டவையென்று, சபை ஒதுக்கி வைத்த செய்திகளை வெளியிடவோ, சட்டமன்றங்களின் முன் அனுமதியின்றி அதன் நிகழ்ச்சிகளைப் புகைப்படம் எடுக்கவோ, நீதிமன்ற, சட்டமன்றங்களின் இரகசியவிசாரணைச் செய்தி களை வெளியிடவோ, பத்திரிகை நிருபருக்கு அனுமதியில்லை யென்பது அறியத்தக்கது. இத்தகைய காரணங்களால் அனுபவம் வாய்ந்த நிருபர்கள் மட்டுமே சட்டமன்றங்களுக்கு உள்ளே சென்று செய்தி சேகரிக்கும் வாய்ப்பைப் பெறுகின்றனரென்று அறியப்படுகின்றது

1.2.1.1.1 சட்டமன்ற நிருபர்கள் என்று வகைப்படுத்தப் படுகின்ற நிருபர்கள், பத்திரிகையாளர்களுக்கென்று ஒதுககப் பட்டிருக்கும் 'காலரி' **(Arers Gallery)** என்ற பகுதியில் அமர் வதற்கு அனுமதி பெற்றவர்களாவர். இவர்களிடம், எழுத்து வடிவிலமைந்த அன்றைய சட்டமன்றத்தின் கேள்வி பதில்கள், அச்சிடப்பட்ட அறிக்கைகள், பட்ஜெட் நகல்கள், கவர்னர் அல்லது ஜனாதிபதி ஆகியோர்க்கென்று தயார் செய்யப்பட்ட உரைகள் முதலியன அளிக்கப்படும். இவைதவிர, சட்டமன்றம் கூடுகின்ற நாட்களில் சபையின் உறுப்பினர்கள் கூறுகின்ற செய்திகளையும், அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளையும் மிகுந்த கவனத்துடன் குறித்துக் கொள்வர்.

1.2.1.1.2 சட்டமன்றத் தாழ்வார நிருபர்கள் என்று சொல்லப்படும் பிரிவினர், சட்டமன்ற உறுப்பினர்கள் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கக்கூடிய 'லாபி' என்னும் தாழ்வாரப் பகுதியிலிருந்து உறுப்பினர்களின் உரையாடல்கள் வழி அறியக் கூடிய செய்திகளைச் சேகரிப்பர். நாட்டுநடப்புநிலை தொடர் பாகவும், அரசியல் தொடர்பாகவும் அமைந்த சில இரகசிய செய்திகள், குறிப்பிட்ட அரசியல் கட்சியின் எதிர்காலம் குறித்த சில கணிப்புகள், கட்சிகளுக்கிடையே திடீரென்று தோன்றும் கூட்டுநிலை அல்லது கருத்து வேறுபாடுகள், அரசாங்கத்தின் அடுத்த நடவடிக்கைகள், புதிய முயற்சிகள் தொடர்பான, கருத்துப்பரிமாறல்கள் முதலானவை இத்தாழ்வாரப்பகுதி நிருபர் களால் சேகரிக்கப்படும் செய்திகளாகும். பெரும்பாலும் இத் தாழ்வாரப் பகுதியில் பேசப்படும் செய்திகள் அரசியல் தொடர் பானவையாகவே இருப்பதால், இப்பகுதிகளில் செய்தி சேகரிக் கும் நிருபர்கள் அரசியல் நிருபர்கள் என்று குறிக்கப்படுவதோடு, இவர்கள் அரசியல் வட்டாரத்தில் மிகுந்த செல்வாக்குடைய வராகவும், விளங்குகின்றார்ரென்பது அறியத்தக்கது. நாட்டு மக்களின் எண்ணங்களை அளந்தறியும் முறையில், இத்தாழ்வார நிருபர்களையே அரசியல்வாதிகளும் அணுகியிருந்து செய்தி களைத் தெரிந்து கொள்ளுவர் என்பதும் அறியப்படுகின்றது.

1.2 1.2 சட்டப்பேரவை நடவடிக்கைகளிலிருந்து நிருபருக்கு பலவகையான செய்திகள் கிடைப்பதற்கு வாய்ப்புள்ள தெனலாம். அவர்கள் செய்திகளைச் சேகரிப்பதற்கான சூழல்கள் கீழ்க்கண்ட நிலைகளில் அமையக்காணலாம்.

1) கேள்வி நேரம் (Question Hour)
2) ஜீரோ நேரம் (Zero Hour)
3) பலவேறுவகைத் தீர்மானங்கள் (Miscellaneous Motion)
4) விவாதம் (Debate)
5) பதில் (Reply)

என்று ஐந்து நிலைகளாகச் சட்டமன்ற பேரவை நடவடிக்கை கள் அமையும்.

தமிழர்களின் வழிபாட்டு முறைகள்

இரா. கலைமணி
புதுவைப் பல்கலைக் கழகம்.

வழிபாட்டின் தோற்றம்

ஒருவர்க்கு மற்றொருவரிடம் உள்ள மதிப்பினை வெளியிடும் முறைகளுள் உயர்வானநிலை வழிபடுதலாகும். வழிபடுதல், வணங்குதல் எனப் பொருள் படுகிறது. உயர்ந்தோரை அவரினும் தாழ்ந்தோர் வணங்குதல் முறையாகும். இயற்கை வழிபாட்டில் தொடங்கி, இறை வழிபாடு வரை இன்றைய சமூகத்தில் வழிபாடுகள் பல்வேறு வகைகளிலும், பல்வேறு முறைகளிலும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. பண்டைத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனர். இயற்கையினை வழிபட்டு வணங்கினர். தொல்காப்பியத்தில் வழிபடு தெய்வம் (நூற்பா 415) வழிபாடு மறுத்தல் (நூற்பா 109) போன்ற சொற்கள் காணப்படுவதில் இருந்தும், நடுகல் வழிபாடு நம்மிடையே இருந்து வந்தமையாலும், வழிபாடு தொன்று தொட்டு இருந்து வருகிற ஒரு பழக்கமாகும் என்பது புலனா

கிறது. தமிழர்கள் இயற்கையை, விலங்குகளை, மரஞ்செடி கொடிகளை வழிபடுகிறார்கள். குடும்பத்தில் இறந்த முன்னோர்களையும் வழிபடுகிறார்கள். ஒன்றிற்கோ அல்லது ஒருவர்க்கோ சில அதீத சக்தி இருப்பதாக அறியப்படும் போது அது வழிபாட்டிற்குரியதாக மாறுகிறது. மனிதன் தன் தேவைகளை, ஆசைகளை இந்த அதீத சக்தியின் ஆற்றலால் பெற்றிட இயலும் என நம்புகிறான். இது வழிபாட்டின் தோற்ற வாயில்களின் ஒரு காரணமாக அமைகிறது. ஒரு மரத்தின் கிளைகள் லிங்க வடிவில் இருப்பதால் அம்மரம் வழிபாட்டிற்குரியதாக

மாறுகிறது. ஒருவர் வெறும் கையில் இருந்து விபூதி போன்ற பொருட்களை வரவழைத்துக் காட்டுவதாலும், அருள் வாக்குக் கூறுகின்ற அதீத சக்தி பெற்றிருப்பதாலும் காலப் போக்கில் அவர் வழிபாட்டிற்குரியவராக மாறி விடுகிறார்.

வழிபாடு பல்வகைப்படும். ஒருவர் தனியே அமர்ந்து "சிவனே" என வேண்டுவது தனிமனித வழிபாடு. தன் குடும்பத்தாரோடு வேண்டுவதும் தன் பங்காளிகளுடன் சேர்ந்து செய்யும் குலதெய்வ வழிபாடும், தன் சமூகத்தாரோடு (சாதி) சேர்ந்து வழிபடும் கோயில் வழிபாடும், தன் ஊராருடன் இணைந்து மேற்கொள்ளும் வழிபாடும் வழிபாட்டின் பல்வேறு வகைகளாகும்.

ஒவ்வொரு சமயமும் தத்தம் தெய்வத்தைக் குறிப்பிட வெவ் வேறு சொற்களையே பயன்படுத்துகின்றன. பெரும்பாலும் இந்துக்கள் இறைவன் என்றும், கிருத்துவர்கள் கர்த்தர் என்றும், முஸ்லீம்கள் ஆண்டவர் என்றும் குறிப்பிடுகின்றனர். விழாக் களை இந்துக்கள் திருவிழா, திருநாள் எனவும், முஸ்லீம்கள் பெருநாள் எனவும் குறிப்பிடுகின்றனர். வழிபாட்டிற்கு எல்லா நாளும் உகந்ததாயினும் ஞாயிற்றுக் கிழமை கிருத்துவர்களுக் கும், வெள்ளிக்கிழமை முஸ்லீம்களுக்கும், செவ்வாயும் வெள்ளி யும் இந்துக்களுக்கும் சிறப்பான வழிபாட்டு நாட்களாகும். இந்துக்களின் வழிபாடு பூஜை எனவும், முஸ்லீமகளின் வழிபாடு தொழுகை எனவும், குறிப்பிடப்படுகிறது. வணக்கம் என்று இந்துக்கள் கூறும்போது, பெரும்பாலும் கிருத்துவர்கள் தோத் திரம் எனவும், முஸ்லீம்கள் 'சலாம்' என்றும் கூறுகிறார்கள். இவ்வாறு சமயவழி வேறுபாடுகளை மக்கள் மொழிவழி காட்டும் பாங்கினை நாம் உணரலாம்.

இந்துமத வழிபாடு

வழிபாடு மதத்திற்கு மதம், இனத்திற்கு இனம் மாறுபடு கிறது. இந்து மதத்தில், பெண்களுக்குக் காலைப்பொழுதே வழிபாட்டிற்குரிய சிறப்பானப் பொழுதாகும். ஆடவர்கள் காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் வழிபாடு செய் கிறார்கள். அகத்தூய்மைகக்குக் காரணமான வழிபாட்டை,

ஒவ்வொருவரும் குளித்து புறத்தூய்மை அடைந்த பின்பே பெரும்பாலும் மேற்கொள்கின்றனர். இந்து மதத்தில் வழி பாட்டின் போது விளக்கேற்றலும், கற்பூர தீப ஆராதனையும் இடம் பெறுகிறது இறைவனை பக்தர்கள் நின்ற நிலையில் வணங்குகின்றனர் விழுந்து கும்பிடும் முறை இந்துக்களிடம் காணப்படுகிறது. இந்துக் கோயில்களில் காலணிகளுடன் உள்ளே செல்லுதல் கூடாது. இந்துக்கள் ஊதுவத்தி ஏற்று வதை வழிபாட்டில் ஒரு மரபாகக் கொண்டிருக்கிறார்கள்.

தெய்வத்திற்குச் செய்யப்படும் ஆராதனைகள் ஆண்டவன் மேல் பக்தர்கள் கொண்ட அன்பின் காரணமாக எழுந்த புறச் செயல்களாகும் தூய நீரால் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் தெய்வத்திற்குத் திருமுழுக்கு செய்விக்கப்படுகிறது. பால், தயிர். நெய், பஞ்சாமிர்தம் முதலியவைகளைச் சொரிந்தும் அபிஷேகம் செய்வது இந்துக்களின் வழக்கம்.

சிறு தெய்வ வழிபாட்டின் போது தெய்வச்சிலைகள் மண்ணால் அமைந்திருப்பதால் சிலைக்கு அபிஷேகம் பெரும் பாலும் நடப்பதில்லை சிறுதெய்வ வழிபாட்டின் போது தெய்வத் திற்கான காணிக்கைப் பொருளும் வித்தியாசமாக உள்ளது. சில சிறு தெய்வ வழிபாட்டில் புகையிலை, சுருட்டு, கள், கருவாடு முதலியவற்றைக் கூட காணிக்கையாக வழங்குகிறார் கள். ஆடு, கோழி போன்ற வற்றை பலியிடும் வழக்கமும் உண்டு. பெருந்தெய்வ வழிபாட்டில் இதனை நாம் காணமுடியாது. காலப்போக்கில், குறிப்பிட்ட ஒரு சிறு தெய்வத்திற்கு வழிபாடு அதிகமாகி கோயில்கள் எழுப்பப்படும் போது, சிறு தெய்வ வழிபாட்டிற்குப் படைக்கப்படும் உணவு முறைகள் மாறி யமைந்து பெருந்தெய்வ வழிபாட்டு முறையினைப் பின்பற்றத் தொடங்கலாம்.

ஒவ்வொரு கிராமத்திலும், சிறுதெய்வ வழிபாடு நடத்தப் படுவதைப் போன்று, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு தெய்வத்தை அக்கிராமத்திற்கே உரிய தெய்வமாக வழிபடுவதும் உண்டு. இதனை கிராம தேவதை வழிபாடு என்பர்.

கிருஸ்துவ முஸ்லீம் சமயம்

கிருஸ்துவர்கள் வாரத்தில் ஒரு நாளாவது, குறைந்தது ஞாயிற்றுக் கிழமையாவது கோயிலுக்குச் செல்ல வேண்டும். முஸ்லீம்கள் ஒரு நாளைக்கு ஐந்து முறை பள்ளி வாசலில் தொழுகை செய்கின்றனர். பெண்கள் அங்குச் செல்வது பெரு வழக்கில் இல்லை. முஸ்லீம்கள் தொழுகைக்குப் போகுமுன் கை கால்களை அலம்பிக் கொண்டால் போதும். கிருத்துவக் கோயில் களில் காலணிகளுடன் செல்லுதல் இயலும் கிருஸ்துவர்கள் மண்டியிட்டு வணங்குதலும், முஸ்லீம்கள் மண்டியிட்டு விழுந்து வணங்குதலுமாகிய வழிபாட்டு முறையினை மேற்கொள் கின்றனர். வழிபாட்டின் போது கிருஸ்துவர்கள் மெழுகுவர்த்தி ஏற்றும் முறையினைப் பின்பற்றுகின்றனர். முஸ்லீம்கள் தொழுகையைத் தொடங்குவதற்கு முன் சாம்பிராணிப்புகைப் போடுகிறார்கள்.

இனத்திற்கேற்ற வேறுபாடு

பெரியபுராணத்தில் கண்ணப்ப நாயனார் செய்த வழிபாடு விளக்கப்படுகிறது இவருடைய வழிபாடு ஏனைய நாயன்மார் களின் வழிபாட்டில் இருந்து வேறுபட்டது. இவர் காளத்தி நாதர் மீது தீராதபக்தி கொண்டு, பன்றிக்கறியினை சுட்டு, சுவைபார்த்து, பின்னர் இறைவனுக்குப் படைக்கின்றார். சிறு தொண்ட நாயனார் பிள்ளைக்கறியை சிவனடியாக வந்த சிவ பெருமானுக்குப் படைத்தார். சிவகோசரியார் சிவாகமங்களில் சொல்லப்பட்ட விதிப்படி திருப்பணி செய்கிறார்.

பக்தி நிலையில் பாரதி கண்ணனை தோழனாகவும், தாயா கவும், தந்தையாகவும், சேவகனாகவும், அரசனாகவும், சீடனா கவும், குருவாகவும், குழந்தையாகவும், காதலனாகவும், காதலி யாகவும், ஆண்டவனாகவும் உருவகித்துப் பாடுகின்றார்.

ஆடவர் வழிபாடு

பொதுவாக, ஆண்களின் வழிபாட்டு முறையானது தற்சார்பு மிக்கதாக உள்ளது. பெரும்பாலும் அவர்களுடைய வாழ்க்கை வசதி மேம்பாட்டுக்காகவே வழிபாடு நடத்தப்படுகிறது.

நோன்பிருத்தல், விரதம் முதலியன பெரும்பாலும் ஆண்களிடம் காணப்படவில்லை. உடலை வருத்தும் வழிபாடான அலகு குத்திக் கொள்ளுதல், செடல் குத்துதல் போன்ற வழிபாட்டு முறையினைப் பெரும்பாலும் ஆண்களே மேற்கொள்கின்றனர்.

பெண்கள் வழிபரடு

பெண்கள் வழிபாடு செய்யும்போது, விரதம் இருத்தல், பாவை நோன்பு, வரலஷ்மி பூசை, நோன்பு நோற்றல், அரச மர வழிபாடு, பொங்கலிடுதல் போன்றவற்றை மேற் கொள் கின்றனர்.

குடும்ப மேம்பாட்டுக்காக விரதம் இருப்பதையும், நல்ல கணவனை அடைதற் பொருட்டு பாவை நோன்பு நோற்றலை யும், தாலி பாக்கியம் நிலைக்க வேண்டி வரலஷ்மி நோன்பை யும், குழந்தைப் பேற்றுக்காக அரசமர வழிபாட்டையும் மேற் கொள்கின்றனர். இவ்வாறாக, பெண்களின் வழிபாட்டுமுறை அவர்களுடைய கணவன், குழந்தை, குடும்பம் ஆகியவற்றின் நன்மைக்காகவே மேற்கொள்ளப்படுவது புலனாகும்.

பெண்கள் வழிபாட்டில் வேற்றுமை

மணமான பெண்ணுக்கும், மணமாகாத பெண்ணுக்கும் இடையிலே வழிபாட்டு நிலையில் வேறுபாடுகள் காணப்படு கின்றன. பக்திப் பரவசத்தில் தன்னை அர்ப்பணிக்கும்போது, பக்தியானது காதலாக மாறுகிறது. இதற்கு ஆண்டாளையும் மீராவையும் சான்றாகக் கூறலாம். ஆண்டாளின் பாடல்கள் அவர் கண்ணன்மீது கொண்ட காதலையும், அவரையே அடைய வேண்டும் என்று எண்ணிய வேட்கையையும் புலப்படுத்தும்.

இத்தகைய 'பக்தி நிலையை' காரைக்கால் அம்மையார் பாடல்களில் காணமுடியவில்லை. இவர் மணமான பெண் என்பதை இதற்குக் காரணமாகக் கூறலாம். இவர்பாடல்கள் அனைத்தும் ஆடவர் பாடல்கள் போன்றே தாச நிலையில் இறைவன்புகழ் பாடுவதாக அமைந்துள்ளது.

விரதம் இருக்கும் முறை பற்றி காரைக்கால் அம்மையாரின் பாடல்களில் அதிகமாக ஏதும் புலனாகவில்லை. ஆனால், வரலாற்றின் வாயிலாக அடியவர்க்குச் செய்யும் தொண்டே ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதி, தொண்டு மார்க்க பக்தி நெறியில் நின்று தினமும் சைவர்களுக்கு அன்ன மளித்து அதன் வாயிலாக இறைவனுக்குத் தொண்டு செய்தமை புலனாகிறது.

ஆண்டாள் கண்ணனோடு ஏழேழ் பிறவிக்கும் உறவுடையோ ளாய் இருக்க விரும்பி வழிபடுவது போலவே காரைக்கால் அம்மையாரும் ''அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம்'' என்று வழிபடுகிறார்.

''காண்பார்க்கும் காணலாம் தன்மையனே'' என்று தொடங்கும் அற்புதத் திருவந்தாதி 17வது பாடலின் மூலம் இறைவன் ஞான நெறியில் நின்று காண்பவர்க்கும், சரியை, கிரியை, நெறிகளில் நின்று கை கூப்பித்தொழுபவர்க்கும், அன்பினால் யோக நெறியில் நின்று காண்பவர்க்கும், உள்ளத் தின் உள்ளே பேரொளிப் பிழம்பாகக் காட்சி தருவான் என்று இறையருள் பெறவழி காட்டுகின்றார்.

இறைவனை வணங்குதலும், அவன் திருவடிகளை மலர் களால் அர்ச்சித்தலும, அவ்வாறு அர்ச்சிக்கும் அடியாரைத் துதித்தலும் வழிபாடாகக் கருதுகிறார் சிவனடியாருடைய அடையாளத்தைக் கண்டு அந்த அடியார்களைப் பரமேசுரன் என்றே எண்ணி வழிபடுக என்கிறது சிவஞான போதம். இக்கொள்கையோடு காரைக்கால் அம்மையாரும் சிவனடி யாரை வழிபடுகின்றார், பாமாலையோடு பூமாலை சூட்டு தலையும் வழிபாடே என்கிறார்.

பழமொழியில் மருத்துவம்

கஸ்தூரி தயாநிதி
எஸ். எஃப். ஆர் மகளிர் கல்லூரி, சிவகாசி.

நாட்டுப்புற வாய்மொழி இலக்கிய வகைகளுள் ஒன்று பழமொழி எனப்படும் முதுமொழி. முதுமொழியின் இலக்கணத்தைத் தொல்காப்பியர்,

'நுண்மையும் சுருக்கம் ஒளியும் உடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி யென்ப'

(பொருள். 170)

என்று இயம்புகிறார். நுண்மை, சுருக்கம், விளக்கம், மென்மை என்னும் பண்புகளை வெளிப்படுத்திக் கருதிய பொருளைக் காரணத்துடன் தருவது பழமொழியாம். சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதோடு பொருளை மறைமுகமாகச் சுட்டுவதும் இதன் பண்பாகும். இத்தகைய பழமொழிகள் மக்களின் சிந்திக்கும் திறனையும் ஆர்வத்தையும் வளர்க்க வல்லன. மக்களின் பண்பாட்டுக்கூறுகள், கொள்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றினை வெளிப்படுத்தும் காலக்கண்ணாடியான எழுத்திலக்கியங்களுக்கு இணையாக வாய்மொழி இலக்கியமான பழமொழி திகழ்கிறது. சமயம், தத்துவம், மருத்துவம் முதலான உயர்ந்த கருத்துக்கள் முதல் மிக எளிய கருத்துக்கள் வரை இதன் பொருளாக அமைகின்றன. மருத்துவம் பற்றிய பழமொழிகள் இவண் ஆய்விற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பழமொழிகளின் தொகுப்பாக விளங்கும் கழக வெளியீடான, 'கழகப் பழமொழி அகர வரிசை' என்னும் நூலில்

நூற்றுக்கும் மேற்பட்ட பழமொழிகள் இடம் பெற்றுள்ளன. இவை இன்றும் மக்களிடையே செல்வாக்குடன் பயன்பட்டு வருகின்றன. இவற்றுள் மருத்துவத் தொடர்புடைய பழமொழிகள் நோயற்ற வாழ்வும் மருத்துவமும், மருத்துவர் மாண்பு, நோய்க் குறிப்புக்கள், மருத்துவக் குறிப்புக்கள், பத்தியக் குறிப்புக்கள் என்று பகுக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளன.

நோயற்ற வாழ்வும் மருத்துவமும்

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' எனும் பழமொழி யாவரும் அறிந்தவொன்று. நோயில்லாமல் வாழ்வதே பெருஞ்செல்வம் என்று கூறும்போது நோயினால் ஏற்படும் துன்பத்தையும் நோயுற்றோர் பொருளை இழக்க வேண்டிவரும் என்ற உண்மையையும் உணர்த்துகிறது. 'சுகத்தைக் கொடுத்தேனும் சுகத்தை வாங்கு' என்னும் பழமொழியும் இக் கருத்தையே வலியுறுத்துகிறது.

இவ்வாறு நோயற்று வாழத் தூக்கம் இன்றியமையாதது என்பதனைத்,

'தூங்காதவனுக்குச் சுகமில்லை' என்ற பழமொழியால் அறியலாம் தூங்கிக் கொண்டிருப்பது ஒன்றே சுகமான வழி யென்பது இதன் பொருளல்ல. நோயுற்ற காலத்தில் நோயாளிக்குத் தூக்கம் வருவதில்லை. நோய் நீங்கியதும் தூக்கம் இயல்பாக வரும் இக்கருத்தையே அப்பழமொழி உணர்த்துகிறது.

ஒருவரின் நோய் அவனது முன்னோரின் நலத்தையும் (Heriditory) பொருத்ததாக இருக்கலாம் என்பதை,

''மாதாவுக்குச் சுகம் இருந்தால் கர்ப்பத்துக்குச் சுகம்''

என்னும் பழமொழி அறிவிக்கிறது.

மருத்துவர் மாண்பு

'நோய் தீர்க்கும் திறன் பெற்றாரை மருத்துவர் என அழைக்கின்றோம். இம் மருத்துவர் இயற்கையிலேயே படைக்கப் படுபவர் அல்லர். அவர்கள் மருத்துவராக உருவாகுவதை,

'பழம் புண்ணாளி பாதி வைத்தியன்'

'ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன்'

'ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்'

என்னும் பழமொழிகள் கொண்டு உணரலாம். இவ்வாறெல்லாம் சிறுநடை பயின்று வளர்ந்த மருத்துவரிடம் மக்கள் கொண்டுள்ள மரியாதையையும் நம்பிக்கையையும் பின்வரும் பழமொழிகள் வெளிப்படுத்துகின்றன.

'வைத்தியன் கொடுத்தால் மருந்து, இல்லாவிட்டால் மண்

'வைத்தியர் பெரிதோ மருந்து பெரிதோ'

'வைத்தியர் பாராத நோய் தீருமா?"

நோய்க் குறிப்புக்கள்

பழமொழிகள் சிலவற்றுள் நோய்களின் பெயர்களும் அவற்றின் குறிகுணங்களும், நோயின் தீரும் தீராக் குறிகளும் (Prognosis) கூறப்பட்டுள்ளன.

"வீக்கமோ தூக்கமோ"

என்னும் பழமொழியில் வீக்கம் என்பது உடல்வீக்கத்தைக் குறிக்கிறது. இத்தகைய வீக்கம் விடக்குறி என்பதும், இதன் முடிவு பெருந்தூக்கம் (மரணம்) என்பதும் இதனால் அறிய முடிகின்றது. 'விக்கலுக்கு விடம் அதிகம்' என்னும் பழமொழியும் இக்கருத்துடையதே.

'காய்ச்சலும் கழிச்சலும் சேர்ந்து விட்டால் நம்பக்கூடாது' என்னும் பழமொழி ஒருவனுக்குக் காய்ச்சலுடன் தன்னையறியாமல் கழிச்சல் என்னும் பேதியும் ஏற்பட்டால் அவன உயிரை நம்பவேண்டியதில்லை என்று தெரிவிக்கிறது.

'பிளவை' எனப்படும் நோய் மிகக் கொடியது. இந்நோய் பெரும்பாலும் நீரிழிவு என்னும் மேகநோயைத் (Diabetes) துணைக் கொண்டு வரும். சாதாரணமாக நீரிழிவு நோய் உள்ளவர்களுக்குச் சிறுபுண் ஏற்பட்டாலும் எளிதில் ஆறாது.

பிளவை நோய் வந்தால் கேட்கவே வேண்டாம். இத்தகைய நோயாளிக்கு அறுவைச் சிகிச்சை மூலமாகப் பிளவையை அகற்றினால் புண்ணை ஆற்றுவது எளிதல்ல. எனவே அக்காலத்தில் பிளவைக் கட்டியில் உள்ள சீழை உறிஞ்ச அட்டைகளைப் (Leeches) பயன்படுத்தினர். இக்கருத்துக்கள் யாவற்றையும்,

'கொசுகிலே பிளவை, அதிலே நீரிழிவு அறுக்கிறது எங்கே
அட்டை விடுகிறது எங்கே'

என்னும் பழமொழி உணர்த்துகிறது.

'தலை மயக்கம் சர்வ மயக்கம்'

என்பது ஒரு பழமொழி. இதில் தலைமயக்கம் என்பது 'கோமா' (Coma) என்னும் மயக்க நிலையாகும். இந்நிலையைத் தான் அப்பழமொழி குறிக்கிறது. இம்மயக்கம் ஏற்பட்டு விட்டால் நோயாளி பிழைப்பதரிது.

மருத்துவக் குறிப்புக்கள் அல்லது மருந்துகள்

பல பழமொழிகள் மருத்துவக் குறிப்புக்களைக் கொண்டுள்ளன. மூலிகைகள். பாடாணங்கள் பற்றியன இவற்றுள் அடங்கும்.

'வேலம்பட்டை மேகத்தை நீக்கும் ஆலம்பட்டை பித்தத்தை அடிக்கும்'

'வில்வம்பழம் தின்பார் பித்தம் போக, பனம்பழம் தின்பார் பசிபோக''

'விடத்தைக் குடித்தவன் மிளகுநீர் குடிக்க வேண்டும்'

என்பன அவற்றுள் சில.

ஒருவனது உடல் அதிகப்பருமனாக இருந்தால் குறைக்கவும், இளைத்துப் போயிருந்தால் பருக்கச் செய்யவும்,

'கொழுத்தவனுக்குக் கொள்ளும் இளைத்தவனுக்கு எள்ளும்'

என்னும் பழமொழி வழி கூறுகிறது.

'கீறி ஆற்றினால் புண் ஆறும்'

'மூடி வைத்த புண் ஆறாது'

என்னும் பழமொழிகள் புண் ஆற்றும் முறைகளைக் கூறுகின்றன.

'சுக்குக் கண்ட இடத்திலே முக்கிப் பிள்ளை பெறுவாள்' என்னும் பழமொழியால் சுக்கு பிரசவ வலியைத் தூண்டும் மருந்துப் பொருள் என்று அறிகிறோம்.

இன்னும் சில பழமொழிகளில் உலோகங்கள் காரசாரங் களின் பெயர்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

'வங்கம் இறுகினால் மகாராசனாகலாம்'

என்பதில் வங்கம் என்பது கருவங்கம் வெளவங்கம் அதாவது காரீயம், வெள்ளீயம் ஆகியவற்றைக் குறிக்கும் பண்டைத் தமிழர் வங்கத்தைக் கட்டுக்களாகச் செய்து மருத்துவத்தில் பயன்படுத்தினர். 'கட்டு' 'கட்டுதல்' என்பன 'கெட்டிப்படுதல்' அல்லது 'இறுக்கமாதல்' எனப் பொருள்படும். எனவே இறுக்கப் பட்ட வங்கத்தைப் பயன்படுத்தினால் 'மகாராசன் போல் வாழலாம்' என்பது அப்பழமொழியின் பொருளாகும். 'மகாராசனாகலாம்' எனப்படுவது மருந்தின் சிறப்பைக் குறிப் பிட்டுக் கூறப்பட்டுள்ளது எனலாம்.

இதே வங்கத்தைக் கொண்டு,

'வங்கம் முடிந்தால் தங்கம், வங்கம் கெட்டால் பங்கம்', என்றொரு பழமொழியும் உள்ளது வங்கம் என்னும் ஈயத்தைப் பயன்படுத்திப் பற்பம், செந்தூரம், கட்டுக்கள் என்று பலவற்றைச் செய்வார்கள். இந்த வங்கத்தை நன்முறையில் சுத்தம் செய்து அதிலுள்ள களிம்புச் சத்தை அகற்றி மருந்து களில் முறையாகப் பயன்படுத்த வேண்டும். சரியாகச் செய்து பயன்படுத்தினால் அது தங்கத்திற்கு நிகராகும். முறைதவறிப் பயன்படுத்தினால் அது பங்கத்தை விளைவிக்கும் என்பது பொருளாம்.

'பொன்னாங்கண்ணிக்குப் புளியிட்டு ஆக்கினால்
உண்ணாப் பெண்ணும் ஒரு உழக்கு உண்ணும்'

என்னும் பழமொழியால் பொன்னாங்கண்ணி என்னும் கீரையைப் புளி சேர்த்துச் சமைத்துக் கொடுத்தால் நல்லபசி உண்டாகி உணவை அதிகம் சாப்பிட முடியும் என்று அறிய முடிகிறது.

பத்தியக் குறிப்புக்கள்

சில பழமொழிகள் மருத்துவ நெறியில் மேற்கொள்ளப்படும் பத்தியம் என்னும் உணவுக் கட்டுப்பாட்டையும் வெளிப்படுத்துகின்றன.

'போன சுரத்தைப் புளியிட்டு அழைத்தானாம்'

என்பது ஒரு பழமொழி. அதாவது காய்ச்சல் நோய் நீங்கிய நிலையில் ஒருவன் புளி சேர்ந்த உணவை உண்டால் காய்ச்சல் உடனே அழைத்தது போல் மீண்டும் வரும் என்பது இதன் கருத்து. எனவே காய்ச்சலுக்கு மருந்து சாப்பிடும் போது புளியை விலக்க வேண்டும் என்று அறிகிறோம்.

''நமக்காகாதது நஞ்சோடொக்கும்''

என்பது மற்றொரு பழமொழி. நம் உடலுக்கு ஒவ்வாத பொருள் நமது உடலைப் பொருத்தவரை நஞ்சுக்குச் சமம் என்பது இதன் கருத்து. இங்கு ஒவ்வாத பொருள் (Allergic materials) என்பது நாம் உட்கொண்டபோது அல்லது நுகர்ந்த போது அல்லது அதனுடன் ஏதேனும் ஒரு வகையில் தொடர்பு கொண்டபோது எதிர்விளைவுகளை உடலில் ஏற்படச் செய்வதாகும்.

''பாலுமாம் மருந்துமாம்''

என்னும் பழமொழி, பால் நல் உணவாக அமைவதுடன் மருந்தாகவும் விளங்குகிறது என்கிறது.

தொடர்பியலின் செயற்பாங்கு

வெ. கிருட்டிணசாமி

அருளானந்தர் கல்லூரி, கருமாத்தூர்.

முன்னுரை

12-10-1492-இல் கிறிஸ்டபர் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார், அதை ஸ்பெயின் நாட்டு அரசர் 5 மாதங்கள் கழித்து அறிந்தார். 14-4-1865-இல் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆப்ரகாம்லிங்கன் கொலை செய்யப்பட்டார். அதை ஐரோப்பாக் கண்டம் பன்னிரண்டு நாள்கள் கழித்தே தெரிந்து கொண்டது. 1969-இல் மனிதன் சந்திரனில் முதன்முதலாகக் காலடி எடுத்து வைத்ததை, உலகின் பல பாகங்களில் இருந்த மக்கள், அதே நேரத்தில் தங்கள் தொலைக்காட்சியில் கண்டு களித்தனர். எனவே இன்றைய தகவல் தொடர்பு சாதனங்கள் உலகத்தைச் சுருக்கி விட்டன. உலகின் ஏதேனும் ஒரு மூலையில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியை உலகம் முழுவதும் உள்ள மக்கள் அதே நிமிடத்தில் அல்லது மறுநிமிடத்தில் அறிந்து கொள்கின்றனர்.

தொடர்பியல் விளக்கம்

'தொடர்பியல் என்பது நெகிழும் தன்மை வாய்ந்த ஒரு கருத்துப்படிவம் ஆகும். பொதுவாக இரண்டு இடங்களை ஓர் ஆற்றல் இணைக்கும்போது அங்குத் தொடர்பு ஏற்படுகிறது. சான்றாக, குளத்தில் ஓரிடத்தில் நிகழும் சலனம் குளத்தின் மற்றோர் இடத்திற்கும் அலை அலையாகச் சென்றடையும் போது தொடர்பு நிகழ்கிறது'' என்று வெஸ்டன் & எல்லிங்ஸ் ஒர்த் என்பவர்கள் கூறியுள்ளனர். ''உயிரிகள் வாழும் பிரிவுற்ற பகுதிகளை இணைத்து, அவர்களை ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தும் வழி முறையே தொடர்பியல் ஆகும்''. என்று

ஜீர்ஜென் ரூஸ்ச் என்பார் கூறியுள்ளார். செய்திகள், கருத்துக்கள், உணர்ச்சிகள், திறமைகள் போன்றவற்றைக் குறியீடுகள், சொற்கள், படங்கள், வரைபடங்கள், எண்கள் போன்றவற்றின் வழியாகப் பரப்புவதைத் தொடர்பியல் எனலாம். பொதுவாக இவ்வகைப் பரப்புச் செயல் அல்லது பரப்பு வழிமுறைகளைத் தொடர்பியல் என்பர்.

செயற் பாங்கு

இருவர் உரையாடும் போது கருத்துப் பரிமாற்றம் நடைபெறுகிறது. கொள்கைகள், கருத்துக்கள், உண்மைகள் போன்றன சொற்களாக மாற்றம் பெற்று ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு ஒலிவடிவில் செல்கின்றன. சில சமயங்களில் பேச்சற்ற செய்தித் தொடர்பும் (சைகை) செய்திகளைத் தெரியப்படுத்துகின்றன. எனவே ஒருவர் தொடர்ந்து ஆற்றும் உரை அல்லது தொடர்ந்து அனுப்பும் செய்தியே செயற்பாங்கு ஆகும். ஒரு நிகழ்ச்சி ஏன்? எதற்காக? எப்படி நடந்தது? என்பதை அறிய மக்கள் ஆவலாக உள்ளனர். அச் செய்தியின் உண்மைத்தன்மையை அறிவின் வழி புரிந்து கொள்கின்றனர். அதனால் கேட்போர் மனத்தில் மாற்றம் ஏற்படுகிறது. தொடர்பியலின் செயற்பாங்கைப் புரிந்துகொள்ள விரும்புபவர்கள் சிறந்த செய்தித் தொடர்பாளர்ாகவும் இருக்க வேண்டும்.

கூறுகள்

தொடர்பியலின் செயற்பாங்கை விளக்குவதற்குத் தொடர்பியல் செய்திகளைப் பல கூறுகளாகப் பிரிக்க வேண்டும். தொடர்பு கொள்ளும் வழிகளையும் பல வகைகளாகப் பிரித்து, ஒவ்வொன்றிற்கும் தனித்தன்மை கொடுக்க வேண்டும். சான்றாக, சொல்லப்பட்ட நிலையே முக்கியம் என்றால், சொல்லப்பட்ட செய்தியில் உள்ள மிக முக்கியமான கருத்தையும், அது சொல்லப்பட்ட நிலையோடு கொண்டுள்ள தொடர்பையும் அறிந்து கொள்ள வேண்டும். 1948-ஆம் ஆண்டு ஹெரால்டு லாஸ்வெல் என்பவர் முதன் முதலாகச் செய்தித் தொடர்பு முறையை (அ) யார்?, (ஆ) யாரிடம்?, (இ) எதன் வழியாக?, (ஈ) என்ன சொல்கிறார்?, (உ) என்ன

விளைவுகளுடன்? என ஐந்து பகுதிகளாகப் பிரித்து விளக்கினார். (அ) அனுப்புநர் ஒருவர், (ஆ) மற்றொருவருக்கு, (இ) ஏதோ ஒன்றின் வழியாக, (ஈ) சில விளைவுகளுடன், (உ) செய்தியை அனுப்புகிறார் என மேற் கூறியதற்கு விளக்கம் தரலாம்.

மேலும் இரண்டு

இவ்வைந்துடன் 'சூழல்' 'மனநிலை' என்ற இரண்டு காரணிகளையும் சேர்க்கலாம். ஒவ்வொரு செய்தித் தொடர்புச் செயலும் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சூழலில் நடந்தே ஆக வேண்டும் ஒருவர் திருமண வீட்டில் மற்றவர்களுடன் பழகும் சூழலும், ஈமச்சடங்கில் மற்றவர்களுடன் கலந்து பழகும் சூழலும் வெவ்வேறு ஆனதாக இருக்கும். எனவே தொடர்பு செயற்பாங்கில் 'சூழ்ல்' ஆறாவது இடத்தைப் பெறுகிறது.

தொடர்பு ஏற்படுவதற்குப் பெறுநரிடம் காரணத்தை அறியக்கூடிய 'மனநிலை' அல்லது எண்ணம் இருக்கவேண்டும் செய்தித் தொடர்பு ஏன் நடைபெற வேண்டும்? என்ற வினாவிற்கு மனமே விடையளிக்கும். ஒவ்வொருவரிடமும் ஏதேனும் ஒரு தேவை உருவாகிறது. அத்தேவையே அவர்களைத் தொடர்பு கொள்ளத் தூண்டுகிறது. செய்தித் தொடர்பு ஏற்பட இன்னும் பலகாரணங்கள் உள்ளன. செய்தித் தொடர்பைப் பகுத்தாய்ந்தால், என்ன நடக்கிறது? எப்படி? ஏன்? போன்ற பல வினாக்களுக்கு விடைகிடைக்கும். எனவே எண்ணம் அல்லது மனப்பாங்கு ஏழாவது இடத்தைப் பெறுகிறது.

வடிவம் பெறல்

செய்திப் பரிமாற்றம் நடைபெறும் போது, கருத்துக்கள் மனத்தில் தோன்றி, உருவம் பெற்று, மனத்தில் கணப்பொழுது தங்கி, பின்னர்ச் செயலாக வடிவம் பெறுகிறது. இக்கூற்று அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் பொருந்தும். செய்திகள் (அ) எச்சரிக்கை செய்தல், (ஆ) அறிவுரை கூறல், (இ) கருத்துக்களைத் தெரிவித்தல், (ஈ) மனமாற்றம் அடையச் செய்தல், (உ) உவகை யூட்டல் போன்ற பணிகளைச் செய்கின்றன.

வடிவங்கள்

செய்தி பல வடிவங்களில், பல வழிகளில் தேவையான வருக்குச் சென்றடைகிறது (அ) நிலப்பரப்பின் வகைகளை நிலப் படம் (**MAP**) விளக்குகிறது. (ஆ) வரைபடம் (**GRAPH**) விலை உயர்வு, மக்கள் பெருக்கம் போன்றவற்றைக் காட்டும் (இ) நிழல் படங்கள் (**PHOTO GRAPH**) நாம் பார்த்திராத காட்சிகளையும் நாடுநகரங்களையும் நமக்குக் காட்டுகின்றன. (ஈ) ஓர் இசை அல்லது பாடல் இசைஞரின் மனத்தையும், உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறது. (உ) நாடகம், நடனம், சிற்பம் போன்றவை கலைஞனின் உணர்ச்சிகளைப் பிரதிபலித்துக் காட்டுகின்றன. இவற்றைப் பார்க்கும்போதும், கேட்கும் போதும் நாம் படைப்பாளிகளுடன் தொடர்பு கொள்கிறோம். இதுநாமே செய்தியை உருவாக்குவது போன்றதாகும்.

சைகைகள்

நாம் அனுப்பும் அல்லது பெறும் பொருளுள் சைகைகளும் தொடர்புக்குள் அடங்கும். சைகை ஒரு செய்தியை அல்லது கருத்தை மற்றவருக்கு வழங்குகிறது ஒருவரை அமைதியாக இருக்கச் சொல்வதற்கும், பயமுறுத்துவதற்கும், எச்சரிக்கை செய்வதற்கும் ஆள்காட்டி விரலை உதடுகளின் மேல் வைத்துக் காட்டுவர். இருவர் உரையாடிக் கொண்டிருக்கும் போது, ஒரு வரின் சைகை மற்றவருக்கு முழுமையான பொருளைத்தர வேண்டும். ஒரு சைகையின் முழுமையான பொருளை மற்றவர் கள் புரிந்து கொள்ளும்போது, அது நல்ல சைகையாக மதிக்கப் படுகிறது.

சைகையும் சிக்கல்களும்

சைகைக்குப் பொருள் கொள்வதில் மூன்று சிக்கல்கள் ஏற் படுகின்றன. (அ) ஒரு குறிப்பிட்ட சைகையின் பொருள் பெறு நருக்கு விளங்காமல் போகலாம். ஒரே சைகைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் கொள்ள முடிகிறது. ஒரு சைக்குப் பொருள் அது பயன்படுத்தப்படும் காலம், இடம், சூழலைப் பொறுத்து மாறுகிறது. (இ) ஒரே சைகை பல்வேறுபட்ட மக்களுக்குப் பல்வேறு பொருள்களைத் தரும்.

முதல் சிக்கலுக்குத் தீர்வு

சைகைகளுக்கு உரிய பொருளை உருவாக்க நாமே கற்றுக் கொண்டுள்ளோம். முதலில் தாய்தந்தையர், நண்பர்கள், பள்ளித் தோழர்கள் முதலியோர் வழியாகவும், பின்பு வாழ்க்கை முழுவதும் அனுபவத்தின் மூலமாகவும் அதனைக் கற்றுக் கொள்கிறோம். ஒருவன் வேற்று மொழி கற்கச் செல்லும் போது அவனுக்குச் சைகைகள் செய்யவும், அதற்குப் பொருள் கொள்ளவும் கற்பிக்கின்றனர். வேற்று மொழிச் சொற்களை முழுமையாக உச்சரிப்பதனால் மட்டும் அவருக்கு அச்சொற் களின் பொருள தெரிந்திருக்க வேண்டும் என்ற தேவையில்லை. பொருள் தெரியாமல் செய்யும் சைகைகள் பயனற்றுப் போய் விடும். தொல்பொருள் ஆய்வாளர்கள் பல்லாண்டுகளாகியும் பழங்காலச் செப்பேடுகளுக்கும், சிலைவடிவங்களுக்கும் உரிய பொருள் கொள்ள முடியாமல் தவிக்கின்றனர்.

இரண்டாம் சிக்கலுக்குத் தீர்வு

ஒருவர் பயன்படுத்தும் சைகையின் இடம், காலப் பொருத் தத்தை அறிந்து மற்றவர் அதைப் பயன்படுத்தலாம். ஆங்கி லேயர் ஒருவர் தன் உள்ளங்கை தெளிவாகத் தெரியும்படி கைகளை உயர்த்தினால், எதிரே வருபவருக்குத் தன் வாழ்த்துக் களைத் தெரிவிக்கிறார் என்பது பொருளாகும். இதைக் கிரேக்கர் ஒருவர் கண்டால் ஆங்கிலேயன் தன்னை அவமதிப் பதாகக்கருதுவார். ஒருவருடைய இடையில் அல்லது தோளில் இன்னொருவர் கையைவைத்துக் கொண்டு செல்லுதல், அந் நாட்டின் பண்பாடு, நாகரிகம், சூழல், இடம், உடன் வருபவர் யார்? என்பதற்கேற்பப் பொருள் வேறுபடும்.

மூன்றாவது சிக்கலுக்குத் தீர்வு

மூன்றாவது சிக்கல் கடந்த காலத்தோடு தொடர்புடையது. இதில் இடம், பொருள் சூழல் போன்றவை அடங்கும். ஒருவர் 'ஆ' என்ற ஒலியோடு ஒருவிரலை நீட்டிக் சைகை செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். 'ஆ' என்பதற்குப் பசு, ஆச்சாமரம், ஆன்மா, வரை, அற்பம், மறுப்பு, நினைவு, உடன்

பாடு, துன்பம், வியப்பு, இரக்கம் போன்ற பொருள்களைக் கொள்ளலாம். இப்பொருள்கள் அனைத்தையும் ஒருவர் அறிந்திருக்க வேண்டிய தேவையும் இல்லை. இச் சைகையைப் பற்றி ஒன்றுமே அறியாமல் இருந்தாலும், கெடுதல் எதுவும் ஏற்படப் போவதில்லை ஏனெனில் பெரும்பாலும் ஒரு சைகையை, அது நிகழும் சூழலைப் பொறுத்துதான் பொருள் கொள்கிறோம். ஒருவர் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் பயன்படுத்திய சைகைகளுக்குப் பல பொருள்கள் இருப்பதால், ஒருவர் தான் பயன்படுத்தப்போகும் சைகை அல்லது சொற்கள் காலம், இடம், சூழல். பெறுநரின் அறிவு போன்றவற்றிற்குப் பொருந்தி அவரால் ஏற்றுக் கொள்ளக்கூடியதா? என்பதை எண்ணிப் பார்த்துப் பயன்படுத்த வேண்டும். உரிச்சொல்போல் ஒரே பொருளைத் தரும் பல சைகைகளும், பல பொருள்களைத் தரும் ஒரு சைகையும் உள.

குறியீடுகள்

சைகை என்பது ஒரு வகைக் குறியீடு ஆகும். நாம் செய்திகளைத் தெரிவிக்கச் சைகை என்னும் குறியீட்டைப் பயன்படுத்துகிறோம் தந்தியில் பயன்படுத்தும் மோர்ஸ் குறியீடு தெளிவான தனிப்பட்ட முறையில் அமைக்கப்பட்ட குறியீடு ஆகும் இதில் சொறகளுக்குப் பதிலாக மின்சார ஒலிகள் குறியீடுகளாகப் பயன்படுத்தப் படுகின்றன: மக்கள் பேசும் சொற்களும் ஒலிக்குறியீடுகளாகக் கருதப்படும். ஒரு நிழற்படம் கூட இருவகைக் குறியீடுகளை வெளிப்படுத்துகிறது. முதலாவதாக அவர் அணிந்துள்ள ஆடை. முகபாவனை போன்றவை பேச்சற்ற குறியீடு ஆகும் இரண்டாவதாக முகத்திற்கு அருகில் எடுக்கப்பட்ட நிழற்படம், அவரது பின்புலத்தில் உள்ள காட்சி அமைப்பு ஆகியன படக்குறியீடு ஆகும்.

குறியூட்டுச் செய்தி தொடர்பு சில வரையறைகளுக்கு உட்பட்டது. இவ்வரையறைகளுக்கு உட்பட்டவற்றை ''மரபு'' என்பர். பேச்சு, எழுத்து போன்றவையும் மரபாகக் கொள்ளப்படும் இவ்வகை இடங்களில், மக்கள் மரபை மீற முடியாத நிலையில் உள்ளனர். குறியீடுகளை ஒருவர் புரிந்து கொள்ளும் போதுதான் அதற்குப் பொருள் உண்டாகிறது; குறியீடாகவும் கருதப்படுகிறது'

‘குமுதம்’ இதழில் நம்பிக்கைகள்

மா. கிருபாகரன்

பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

எந்த ஓர் இலக்கியமும் அது தோன்றுங் காலத்தின், இடத்தின் சமுதாய, பண்பாட்டுக் கூறுகளைப் பிரதிபலிக்கும். எனவேதான் இலக்கியத்தைக் காலத்தின் கண்ணாடி என்பர். இன்றைய இதழ்கள் செய்திகளைத் தருவதுடன் சிறுகதை, தொடர்கதை நாடகம், துணுக்கு போன்றவற்றின் வாயிலாக இலக்கியப் பணியும் ஆற்றுகின்றன. இன்று தமிழகத்தில் வார இதழ்களில் விற்பனையில் முன்னணி வகிப்பது ‘குமுதம்’ இதழாகும். அவ்விதழ்ச் சிறுகதைகள், நாடகம் ஆகியன உணர்த்தும் நம்பிக்கைகள் பற்றி அறியமுற்படுவதே இக் கட்டுரையின் நோக்கம். 1986-ஆம் ஆண்டின் ஓராண்டு காலக் ‘குமுதம்’ இதழ்கள் மட்டுமே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

நம்பிக்கைகள்

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட குமுதம் இதழ்களில் மொத்தம் 201 கதைகள் மற்றும் நாடகம் இடம் பெற்றுள்ளன அவற்றுள் நம்பிக்கைகள் தொடர்பாக 27 கதைகள் மட்டுமே அமைந்துள்ளன.

கடவுள் நம்பிக்கை

மனிதன் மனதில் தோன்றும் நம்பிக்கைகளில் தலையாயது கடவுள் நம்பிக்கை அல்லது சமய நம்பிக்கை எனலாம் தெய்வ நம்பிக்கை, கடவுள் காப்பாற்றுவார், தெய்வச் செயல், போன்ற வகைகளில் கடவுள் நம்பிக்கை தொடர்பான கதைகள் இடம் பெற்றுள்ளன.

தான் என்னும் அகந்தையின்றி எல்லாம் கடவுள் செயல் என்று இறைவன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டால் எந்தச் சிரமமும் இல்லை என்பதனை, ''அடிக்க மறுத்த மணி'' என்ற கதையில் வரும்

> ''பவானி கிட்டப்போய் 'உன்பிள்ளையை அனுப்பு நான் பார்த்துப்பேனாக்கும்!' என்று நான் திமிராய்ச் சவால் விடுவானேன்? திண்டாடுவானேன்? பகவான் பார்த்துப் பான் என்று சொல்லியிருந்தால் இரண்டு மணிநேரமாய்ப் பட்ட கவலையும் பதட்டமும் பீதியும் இருந்திருக்காதே?' (குமு 19 6 87,ப.87) என்ற வாசகங்கள் உணர்த்தும்.

கடவுள் காப்பாற்றுவார் என்பதனை 'மூணாம் பையன்'' (10 4.86,ப.62) 'முளைப்பாரி' (9.10.86,ப.14), 'நாளைக்கு சுபத்ரா கல்யாணம் சொல்லவேண்டும்' (10 4.86,ப.10) ஆகிய கதைகள் எடுத்துக்காட்டுகின்றன. தம் வாழ்வில் நடைபெறும் நிகழ்ச்சிகள் இறைவன் ஏதோ ஒரு காரணமாகச் செய்கிறான் என்ற கருத்தினை 'மணி அடித்தால் போதுமா?' (25.9.86,ப 50) சித்திரிக்கிறது.

குல தெய்வம்

தனிப்பட்ட குழுவினரால், சமுதாயத்தால் மட்டும் வணங்கப்படும் தெய்வமான குலதெய்வ நம்பிக்கையினை 'பஞ்சாயத்துத் தீர்ப்பு' (13.2.86,ப.82), 'சுரேஷ் வீட்டுக் கோமாதா' (20.2 86,ப.77) ஆகிய கதைகள் புலப்படுத்துகின்றன.

பூஜை, வேண்டுதல்

இறைவனிடம் ஏதாவது வேண்டிப் பூஜை செய்தல் நம்பிக்கையோடு தொடர்புடைய வழக்கமாக உள்ளதனை 'ராத்தரி வைத்தியம்' என்ற கதையில் வரும்,

> ''சாமி பத்தியுடன் பூமி மாதாவிடமிருந்து காய்வரம் வாங்கறதுக்காகச் செய்யற பூஜை'' (6.2.86,ப 78)

என்பதால் தெளியலாம். 'கணேசனின் முதல் இரவு' என்ற கதை வேண்டுதல் நம்பிக்கையினைப் புலப்படுத்துகிறது.

புண்ணியம்

தெய்வத்துக்குத் தொண்டு செய்தால் எந்த நேரத்திலும் தெய்வம் துணை நிற்கும் என்பதனையும் அது ஒரு புனிதமான பணி என்பதனையும் 'லாரியில் சென்ற பல்லக்கு' என்ற கதையில் வரும்,

> "நீ தினம் தினம்தாயாருக்குப் பூக்கொண்டு வந்து கொடுத்தியே, அந்தப் புண்ணியம்தாம்மா உன்னைக் காப்பாத்தியிருக்கு" (29.5.86, ப.52)

என்ற கூற்றால் விளங்கும்.

பாவம்-பரிகாரம்

மனிதன் செய்கின்ற பாவத்திற்குப் பிராயச்சித்தம், பரிகாரம் வாயிலாகப் பாவத்தைக் குறைக்கலாம் என்ற நம்பிக்கை உள்ளமையை, "டியூஷன்பையன்" (25.12.86,ப.90) என்ற கதை வெளிப்படுத்துகிறது.

மறுபிறவி

மனிதன் இறப்பிற்குப் பின் மீண்டும் மறுபிறவி எடுக்கிறான் என்ற நம்பிக்கையை, "ஒரு மாடுவாங்கத் தீர்மானித்தாள் ரேவதி" (16.10.86, ப.82) என்ற கதையால் அறிய முடிகிறது.

சோதிடம், ராசி, நேரம்

எந்த ஒரு காரியத்திற்கும் நாள், நட்சத்திரம் பார்த்துத் தொடங்கும் பழக்கமும், அந்த நல்ல நாளில் செய்தால் எடுத்த காரியம் வெற்றியடையும் என்ற நம்பிக்கையும் நம்நாட்டில் பண்டுதொட்டு இன்றுவரை நிலவி வருகிறது. அந்த அடிப்படையில் சோதிடம், ராசி, நட்சத்திரம் பொருத்தம் போன்ற நம்பிக்கைகள் அடங்கும்.

சோதிடம் தொடர்பான நம்பிக்கையை "எங்கே குடை" என்ற கதையில் வரும்,

> "ஏதேதோ கணக்குப் போட்டு, கட்டாயம் கிடைக்கும் என்று கூறினார் ஆருடம்." (11.12 86, ப.95)

என்ற கதை சித்திரிக்கும். ''பூ! இப்படி ஒரு சோதிடமா?'' (25.12.86. ப. 71) என்ற கதையும் சோதிட நம்பிச்கையை வெளிப்படுத்துகிறது.

ராசி தொடர்பான நம்பிக்கையை, ''ஒருமனைவி இளைக்க முயலுகிறாள்'' (9.1.86,ப.38). ''படுக்கை தனித்தனி'' 4.9.86,ப 92), 'நீலத்துக்கும் மச்சம் வேண்டும்'' (27.3.86,ப 37), ''கட்டிலுக்குப் போட்டி'' (25.9.86,ப.63) ஆகிய கதைகள் பிரதி பலிக்கின்றன.

நல்லநேரம் அல்லது நல்ல காலம் வந்தால் எல்லாம் இனிதே நடக்கும் என்பதனை 'மாப்பிள்ளை ரெடி' என்ற நாடகத்தில் வரும்,

'வேளை வந்தா எல்லாம் மடமடன்னு நடக்கும்'

(24.4.86,ப.83)

என்ற வாசகம் அறிவுறுத்தும்

சகுனம்

வீட்டைவிட்டு வெளியில் செல்லும்போது புலப்படும் சகுனத்தால் நல்ல, கெட்ட பலன்கள் நடக்கும் என்ற நம்பிக்கை பலரிடம் காணப்படுகிறது. நல்ல சகுனம் கிடைக்கவில்லை யெனில் அந்த சகுனத்தடை அல்லது அபசகுனம் என்று காரணம் காட்டிச் செல்லாதிருப்போரும், சென்று காரியம் நடக்கவில்லையெனில் அப்போதே நினைத்தேன் என்று தம்மைத் தாமே நொந்து கொள்வோரும் உண்டு. இந்நிலையை, 'எங்கே என்கார் சாவி' என்ற கதையில் வரும்,

'மண்ணாங்கட்டி! அதான் அண்ணி போகிற போதே அபசகுனமாய்ப் பேசி என்னை நிறுத்தப் பார்த்தாங்களே! இப்ப திருப்தியாய்ப் போச்சாம்மா?' (11 9 86,ப 13)

என்பதால் தெளியலாம்.

அபசகுனமான சொல்லை உபயோகிப்பதும் உணர்ச்சி வசப் பட்ட நிலையிலான மனவருத்தத்தைத் தரும் என்பதனை 'உங்களுக்கு ஆதம்பாக்கமா' (10.7.86,ப.3) என்ற கதை சுட்டுகிறது.

மூடநம்பிக்கை

மக்களிடையே சில நம்பிக்கைகள் அறிவுக்கு ஒவ்வாதனவா கவும், மற்றவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடியனவாகவும் உள்ளமை மூடநம்பிக்கையாகப் புலப்படுத்தப்படுகிறது. இங்கு நம்பிக்கைகள் பொதுவாக அறிவுக்கு ஏற்றவைதானா என்ற ஐயம் எழுவது இயல்பே. இருப்பினும் ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் ஏதாவதொரு நம்பிக்கையை மையமிட்டே சுழல்கிறது. மேலும்அதனால் தீங்கு இல்லாதவரை சிக்கலில்லை என்பதால் நம்பிக்கைகள் அதன் அடிப்படையிலேயே எடுத்துக்காட்டப் பட்டது. ஆனால் சில நம்பிக்கைகள் மற்றவர்களை அச்சுறுத்து வதாகவும், பாதிப்பதாகவும் உள்ளதால் அதை மூடநம்பிக்கை என்ற பிரிவில் எடுத்துக்காட்டப்படுகிறது.

ஒருவன் தற்செயலான விபத்தில் காலமானதற்கு அவன் நண்பனால்தான் என்று பேசும் மூடநம்பிக்கையினை, ''கோணம்'' (29.5.86 ப.8) என்ற கதையும், பேய்பற்றிய நம்பிக்கை மூடத்தனமானது என்பதனை ''ஏரிக்கரையில் ராசாத்தி'' (12.6.86, ப. 62) என்ற கதையும் உணர்த்துகின்றன.

முடிபுகள்

குமுதம் இதழ் வெளிப்படுத்தும் நம்பிக்கைகளிலிருந்து,

1) கடவுளை நம்பினார் கைவிடப்படுவதில்லை, எல்லாம் அவன் செயல் என்ற நம்பிக்கையும், ஆண்டவனுக்குத் தொண்டு செய்தல் புண்ணியமானதும் அவன் அருள் கிடைக்கக்கூடியதுமான வழியாகும்.

2) பரிகாரம் பாவத்தைக் குறைக்கும்.

3) மறுபிறவி உண்டு.

4) ஒருகாரியம் தொடங்கும் போது, அல்லது காரியம் தொடர்பாக சோதிடம், ராசிபலன், சகுனம் ஆகியன பார்க்கப்படுகின்றன.

5) சில நம்பிக்கைகள் மூடத்தனமானவை என்பதோடு பிறரை அச்சுறுத்தவதாகவும் துன்பம் தருவதாகவும் உள்ளது என்ற முடிவுகளுக்கு வரலாம்.

மரணத்திற்குப்பின் மனிதர் நிலை

முத்து. குணசேகரன்

அ. வ. கல்வி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகம்

சிங்காரவேலர் 1930 களில் பேரியக்கமாக இருந்தவர். உலகில் உள்ள தமிழர்கள் கேள்வி கேட்டு விளக்கம் பெற்றது அவரிடமிருந்து மட்டும் தான். வாசகர்கள் அன்று கேட்டகேள் விகளுக்குச் சிங்காரவேலர் அளித்த பதில்கள் இன்றைக்கும் பயன் அளிக்கக் கூடியன.

அறிவுக்குப் பொருந்திய, பொருந்தாத எந்தச் செய்தியும் எந்தப் பத்திரிகையில் வந்தாலும் இவற்றிற்கெல்லாம் விடை யளிக்கும் மாமனிதர் சிங்காரவேலர்தான் என்று அவர் வாழ்ந்த காலத்தில் மக்கள் நம்பினர். 1934இல் வெளிவந்த 'தமிழரசு' என்னும் பத்திரிகையில் தாஸ்குப்தா என்பவரால் எழுதப்பட்ட 'மரணத்திற்குப் பின் மனிதர்நிலை' என்னும் கட்டுரை, வெளி வந்தது நரிவலம் வந்த நல்லூர் வாசி ஒருவர் இதன் தொடர் பான வினாவைச் சிங்காரவேலரிடம் கேட்க அதற்கான விடை 14.10.1934 பகுத்தறிவில் சிங்காரவேலரால் எழுதப்பட்டது

மனிதன் இறந்த பிறகு அதோடு அவனது கதை முடிந்து விடுகிறது. ஆனாலும் மனிதன் இறந்தபிறகு அவனுடைய ஆவி தொடர்ந்து உலவுவதாகப் பாமரன் முதல் பண்டிதர் வரை நம்புகின்றனர். விதைப்பதற்கும் புதைப்பதற்கும் வேறு பாடுள்ளது.

"புதைத்தேன் என்று நினைத்தேன்
இப்பொழுதான் புரிகிறது
விதைத்தேன் என்று"

ஒரு கவிஞன் குறிப்பிடுகின்றான். புதைக்கப்படுவது அனைத்து மே விதைக்கப்படுவதில்லை. அதைப் போலவே எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவாக இருக்கலாம். அனைத்துமே உண்மையாக இருக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. இதைப் போலவே மனிதன் இறப்புக்குப் பிறகும் ஆவியாக உலாவு கிறான் என்ற எண்ணம் எப்படியோ சமூகத்தில் உருவாகி விட்டது. உண்மை இல்லாத இதனைச் சிங்காரவேலர் தனது திறமையால் விளக்குகின்றார்.

ஏன் படைக்கிறார்கள் ?

"ஆதிமனிதர்கள் இறந்தவர்களுக்கு உணவு முதலியன வைத்துப்படைத்து வந்தார்கள். இறந்த பின் அவர்கள் ஆவி வடிவில் உலாவுகிறார்கள் என்பதே காரணம் (பகுத்தறிவு ப.3) என்று கூறும் சிங்காரவேலர் இத்தகைய எண்ணம் காந்திக்கும் கூட இருந்தது அவரும் இத்தகைய மூடஎண்ணத்திற்கு அடிமை யானவர்தான் என்பதை,

நமது மகாத்மா காந்தியும்
தனக்குக் கடவுள் அதைச்
சொன்னார் இதைச் சொன்னார் என்று கைக்
கூசாமல் எழுதுகிறார்
(பகுத்தறிவு - ப.2)

என்றும் கூறும் சிங்காரவேலர், காந்திக்கு இருந்த எண்ணத்தைப் போலவே அன்றைய மோசசுக்கும் இருந்தது, இது ஒரு மூட எண்ணமே என்னும் சிங்காரவேலர்

2000 வருஷங்களுக்கு
முந்தியே கடவுள்
தீப்பற்றி எரியும் புதரிலிருந்து
கொண்டு பத்துக் கட்டளைகளைத்
தனக்கு ஓதினாரென்று
பைபிளில் எழுதியுள்ள

கன்தயைக் கோடிக்கணக்கான
கிறிஸ்துவர்கள் நம்புகிறார்கள்

என்று கூறி, இவைகளெல்லாம் என்றென்றைக்கு உண்மையற்ற பொய்கள் என்று விளக்குவதுடன் இவற்றுடன் எவ்வளவு பெரிய மனிதர்கள் தொடர்புப் படுத்தப்பட்டாலும் நம்ப வேண்டுவதில்லை என விள்க்குகின்றார்.

''இன்று நம் தமிழ் நாட்டில் கற்களில் கடவுள் பிரசன்ன மாகிறார்'' (பகுத்தறிவு, ப.3) என்று நம்பி கோயிலுக்குப் போவதைப் போலவே ஆவி தொடர்பான சிந்தனையும் எனக் கூறி மறுக்கிறார்.

விஞ்ஞானிகள் என்பவர்கள் உண்மைக்காக வாதிடுபவர் கள். மக்களின் மூடத்தனத்தைப் போக்குவதில் அவர்களுக்குப் பெரும் பங்கு உள்ளது. ஆனாலும் அவர்களிலே கூட வளர்ப்பு முறையால் சொல்லும் கருத்துடன் தொடர்பற்றிருப்பதால், அவர்களின் கருத்தை ஏற்கவேண்டுமென்ற அவசியமில்லை என்கிறார் - சிங்காரவேலர்.

மின்சார இயலில் வல்லுநரான் விஞ்ஞானி தத்துவ இயலில் அல்லது இன்றைக் கொள்கையில் வல்லுநராக இருக்க வேண்டிய அவசியமில்லை என்றாலும், விஞ்ஞானி என்பதற் காக அவரின் வார்த்தைக்கு மரியாதை கொடுத்து ஏமாந்து போகின்ற மக்களை எச்சரிக்க நினைக்கிறார் சிங்காரவேலர்.

பிரபல விஞ்ஞானியாகிய
சர் ஆலிவர் லாட்ஜ்
தனது குமாரன் ரேமாண்ட்
என்பவர் இறந்தபிறகு
அவருடன் சம்பாஷித்ததாக
எழுதுகிறார்

(பகுத்தறிவு, ப.3)

என்று கூறி இதன் உண்மையற்ற கற்பனையைச் சிங்காரவேலர் மறுக்கிறார். மேலும்,

இறந்தபிறகு மனிதன்
ஜீவிக்கிறான் என்பதற்குப்
போதிய சாட்சியங்கள்
இல்லை

(பகுத்தறிவு, ப 3)

என்று கூறும் சிங்காரவேலர் ஒருகாலத்தில் அத்தகைய சம்பவங்கள் நடந்து இன்று அத்தகைய சம்பவங்கள் நடக்க வில்லையென்றால் அவற்றைச் சந்தேகமாக நோக்கவேண்டுவது நியாயம்தான் என்கிறார்.

(பகுத்தறிவு, ப.3)

இந்நிலையில் சிலர் ஏதோ ஒன்றை ஆவி வடிவில் பார்த்த தாகக் கூறுவதை எப்படி மறுக்க முடியும் என்ற வினாவிற்குச் சிங்காரவேலர்,

பார்த்தது ஒன்றாக
இருக்க அர்த்தப்
படுத்திக் கொண்டது
வேறாக இருக்கலாம்
கற்றனைக் கட்டையாகவும்
கானலை நீராகவும்
சிளிஞ்சளை
வெள்ளியாகவும் பார்த்
திருக்கலாம்

என்று கூறும் சிங்காரவேலர் இவை அலட்சியப்பார்வையால், அவசரப் பார்வையால் நிகழும் தவறுகள் என்கிறார்.

மனிதனும் ஒருவகையில் விலங்கினத்தைச் சேர்ந்தவன். மற்ற விலங்கினங்களுக்கு ஆவியோ, பேய், பிசாசுகள் தொடர்பான சிந்தனைகள் இல்லாத போது மனிதனுக்கு மட்டும் ஆவியுண்டு, மோட்ச நரகம் உண்டென்பது மோசடிதான் என்றும் சிங்கார வேலர்

நமக்குத் தோன்றும் ஆன்மா
ஏன் அவைகளுக்குத் தோன்றா?

(பகுத்தறிவு, ப.3)

என்று வினாவி ஆன்மா என்றென்றைக்கும், போலித்தனமான பொய்க் கூற்றென்கிறார்.

விஞ்ஞானம் ஒவ்வொரு துறையாக இன்று வானளவு வளர்ந்து வருகிறது. எதனைப் பற்றியும் ஆராய்ந்து உண்மை இன்மைகளை அது கூறிவருகிறது. இன்றுவரை அந்த விஞ்ஞானம் ஆவி உண்டு என்பதை ஒப்புக் கொள்ளவில்லை. இந்த நிலையில் ஆன்மாவை - ஆவியை ஒப்புக் கொள்வது பேதமையென்று கூறும் சிங்காரவேலர்,

மாணச விஞ்ஞானம் முதலிய
விஞ்ஞான வகைகளில்
பூத பௌதீக சக்திகளைத்
தவிர வேறு எந்த வித
ஆன்மா, உயிர், ஆவி
உள்ளதாகத் தெரியவில்லை

(பகுத்தறிவு, ப. 98)

என்று முடிவு கூறுகிறார். இத்தகைய எண்ணங்கள் பாமரர் களிடம் அதிகம்; அதைப்போலவே படித்த மதவாதிகளிடமும் அதிகமென்றும் சிங்காரவேலர் சூட்சம உடம்பில் ஆவிகள் உலவிற்றென்றும், அது அணி ஆபரணங்களை அணிந்து வந்த தென்றும் கூறும் ஆன்மவாதிகள் கூற்று, பொருந்தாத பொய் யுரையென்றும், உடம்புக்கு உரிமை உடையதாகக் கூறும் பொய்யான ஆன்மாவைப் போல அணி ஆபரணங்களுக்கும் சூட்சம உடம்பு உண்டா எனக்கேட்டு இது முழுமையும் மூட எண்ணமன்றி வேறல்ல என முடிவு கூறுகின்றார்.

துணைநூல்

ம.சிங்காரவேலு, (பகுத்தறிவு, பக். 3 & 18) 14.10.1934.

Vaishnava Agamas

S. Gurumurthi
Alagappa University, Karaikudi.

Various elements have gone into the making of Hindu religion Pre Vedic, Non-Aryan, Vedic, henotheistic, bhakti, monotheistic, ritualistic, (vedic-karma as well as agamic worship) temple worship domestic worship, tantric and many others of an intellectual or liturgic nature and numerous beliefs these are some of the constituents of the Hindu religion.

In the Hindu religion the vedas are held to be the most ancient sources of knowledge. They contain accounts of cosmology, religion, philosophy and secular life. Yet the religious aspects dominate over those of others.

Along with the Vedic tradition there existed a parallel line of religious system called Agama or Tantra. The Agama throws open the doors of worship to all irrespective of caste or sex. Kashmir could be taken to have been the home of the Agamas on the strength of the evidences available. 1. The Mahabharatha bears testimony to the rise and prevalance of the Agama-s

"The word Agama in the oldest Buddhist writing meant 'tradition'. 2. This word is interpreted by the Hindus as consisting of the initial letters of the words agata (come), gata (gone) and mata (approved)"

The Agama texts generally deal with the Vaishnava liturgy the meaning of the 'anthorpomorphic' form in which Vishnu is worshipped.

The Vaishnava Agamas are of two kinds, Vaikhanasa and Panchratira. The former is so called because it was founded, it is said in the Vaikhanasa agama of Marichi by the sage Vikhanas.

The later Pancharathra shows the way to the five goals of knowledge. Brahman, Mukti, Bhoga, Yoga, Prapancha; it includes Sankhya, with the four vedas and creates a five fold corpus of vedic knowledge.

> "Pancharathra is the faith which enjous that the face of a Saiva could not be seen for five successive nights".

In its ovigin Vaishnava religion must have developed into Panchratra system of the samhitas. Then it was mixed with other elements indicated by the namas of Vishnu, Narayana, Krishna, Rama, Gods and deified heroes, who were identified with Vasudeva. Hence arose the various forms of Vaishnavism.[4] The name Vishnu could be traced to the vedas, Narayana to the Mahabharatha and Bhagavan & Vasudeva to the Bhagavatgita, and Puranas.

That the cult of Vaishnavism has hoary past is known from the ancient Tamll texts like

Cilappathikaram (9)
Paripatal (10)
Purananuru (11) and
Kalittokai (12)

The Vaikhanasa seem to have managed most of the Vaishnava Temples in the Tamil country in the days of Raja Raja (5) The Panchnrathra became more prominent and the systeem approved and prescribed by Ramanuja himself. Hence the larger number of Pancharatra managed temples now as against a few Vaikhanasa temples.

The Pancharathra and Vaikhanasa agamas do not agree between themselves. In the first place the Vaikhanasa agama is almost exclusively Vaishnavite, while the Pancharathras are both Vaishnavite and non Vaishnavite.

The Vaikhanasas lean on the Vedic mantric side while the Pancharathra lean on the Tantric side, The Pancharathra system of worship is more popula because in the absence of Archakas any grihasta (married man) can look after the worship of God temporarily.

"The Vaikhanasa system of worship is not so easy. It can be done only by a Vaikhanasa archaka and no other person is entitled to worship even temporarily" (7)

The Vaikhanasas do not worship the Alvars, Acharyas, and mathadipatis (Mutt pontiffs) but due to Ramanuja's influence images of Alvars etc., were set up in some temples under Vaikhanasa agamic worship; nor do they recite the Tamil Prabhandam during worship (8)

Regarding Pancharatra's antiquity it is held by the scholars of the west that this system should have risen in the surroundings of tribals.

"Practice of cruel rites like marma, (killing) uccatana, (driving away) Vasikarna, (subjugation of others) akarsana, (bringing another towards oneself) Vidvesana (inciting hatred) and others are enjoined either alone or together in the Pancharathra text" (8.1)

Also, the Pancharatra Agama believes in using yantras for worship. The yantra is a metallic plate of a particular size with letters of the mantra of the deity written at the specific spots in the lotus like drawing on that plate. The repeated utterance of the mantras is held to infuse the

power of the deity into that plate. Among the major Sri Vaishnava temples in the tamil country Tirupati, Tiru Allikkeni Alagar Koil, Tiru Nirmalai, Tirukkottiyur, etc., follow the Vaikhanasa system while kanchi (varadaraja temple) Sri Rangam, Tiruvallur, Kumbakonam, Tirunarayanapuram, etc., follow the pancharatra system of worship.

In the paripadal among the Tamil Sangam literature assigned to the early centuries of the christian era, there is a fairly clear reference to the four Vyuhas (13). This means that in the Tamil country the Pancharatra doctrine was known at least a thousand years before Ramanauja.

In the Nachchiyar Koil (Tiru Naraiyur) the five manifestations of God according to the Pancharatra theory of Vyuhas are seen represented as idols. (14).

Though the daily worship is largely dominated by one or the other of the two agamas mentioned above in the Sri Vaishnava temples, numerous minor details are governed by various circumstances as they arose in the course of Sri Vaishnavism as a bhakti religion.

Foot Notes

1. Vide : Pauskarasamhita, 31, 106-111
2. Rhys Davids ; Agama E.R.E. Vol. 1.P -165
3. C. Chakravarthi : 'A note on the Age and worship of Tantras' - P-76
4. R.G. Bhandarkar: Report on the search of Sanskrit. Manuscripts in the Bombay presidency I. A. Vol XVIII P-189.
5. K.R. Venkatraman : The Vaikhanasas in the cultural heritage of India- Vol. IV P. 160

6. B. Bhattacharya ; Forward in the Saynkhya Sambita- P-10

7. K. Rangachari : Sri Vaishnava Brahmins - P.99

8. KR. Venkatraman : The Vaikhanasas in the cultural heritage of India Vol. IV P-162

8.1. Dr. V. Varadhachari : Seminar of Temple Arts & Architecture-Alagappa Univereity-1988

9. Cilappadikaram-V.2. 171, 172

10, Paripadal III. 48, 81.12

11. Purananuru - 56

12. Kalitokai - 26, 105

13. Paripadal : 3;82-82

14. Dr. N, Jegadesan-History of Sri Vaishnavism In the Tamil country- p - 356,

மணிக்கிராமம்

க. குமுதினி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

தென்னிந்தியாவில் ஏராளமான தொழிற்குழுக்கள் இயங்கின தொழிற்சங்கம் என்றால் ஒரு தோழமைக் குழுவோ. சகோதரத்து வக்குழுவோ தமக்குள் உறுதுணையாக இணைந்த அமைப்பு ஆகும். இவை, தமக்குள் உறுதுணை ஏற்படுத்துவதற்கோ உறுப்பினர்களைப் பாதுகாக்கும் பணிக்காகவோ அல்லது பொது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவோ அமைக்கப்படுவன. குழுஎன்ற சொல்லிற்கு மக்கட்கூட்டம். தொகுதி என்ற பொருட் களைச் செந்தமிழகராதி குறிப்பிடுகின்றது. அச்சொல்லிற்கு, பேரகராதி சுட்டும் பொருட்களுள் 'கூட்டம்' என்பதும் ஒன்று. செந்தமிழகராதியானது கூட்டம் என்ற சொல்லுக்குக் கூறும் பல பொருள்களுள் ஒன்று, 'சபை' எனப்படுவது. குழு, கூட்டம், சபை முதலிய சொற்கள் ஒரு பொருளைச் சுட்டுவனவாகக் கருதலாம். பலவகைத் தொழிற் குழுக்களில் ஒன்று வணிகக்குழு. இவ்வணிகக்குழு மிகப்பழங்காலத்தில் எவ்வாறு செயல்பட்டது என்பது பின்வருமாறு: மிகவும் வியக்கத்தக்க ஒரு வணிகமுறை யில் இயங்கிவந்தது. இதை ஆராவாரமற்ற, பேச்சற்ற அமைதி யான வாணிகம் அல்லது ஊமைப் பண்டமாற்றுமுறை அல்லது மண்டி வாணிகம் எனலாம். ஒரு மணியை அடிப்பதன் மூலமோ மற்ற முறையிலோ ஒரு சைகை (Signal) செய்து வாணிகம் செய்தனர். இந்த முறை பரவலாகக் கையாண்டுவந்த இடங்க ளாக சைபீரியா, மேற்கு ஆப்பிரிக்கா, தைமோர், இந்தியா, இலங்கை, சுமத்ரா, நியூகினி ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

சங்க காலத்திய தமிழகத்தில், பலவகைப்பட்ட வணிகர்கள் இருந்தனர். வணிகர்கள் குழுக்களாக வாணிகம் செய்தனர்.

வாணிகத்தில் உள்நாட்டு நில வாணிகக் குழுத்தலைவனாக மாசாத்துவானையும், கடல் வாணிகத் தலைவனாக மாநாய்கனையும் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு இறுதி வரை நானாதேசிகள், மணிக்கராமம் போன்ற வணிகக் குழுக்கள் தமிழகத்தில் சிறப்புற்று விளங்கின அதே காலத்தில், அஞ்சுவண்ணத்தார் என்ற வணிகக்குழு மேற்கத்திய நாடுகளிலிருந்து தமிழகம் வந்து, தங்கி வாணிகம் செய்தனர். இவ்வாய்வுரை மணிக்கிராமம் என்ற வணிகக் குழுவைப்பற்றி விளக்க முயல்கிறது.

மணிக்கிராமம்-விளக்கம்

மணிக்கிராமம் என்பது யாது? எதற்காக அமைக்கப் பட்டது? முதன்முதல் எங்கு தோன்றியது? என்பது பற்றிய எண்ணம் எழக்கூடும். டெய்லர், ''மணிக்கியர் கிருத்தவரில் ஒரு பிரிவினர்; அப்பெயர் தமிழில் மணிக்கிராமம் எனத் திரிந்து வழங்குவது போலும் என்று குறிப்பிடுகின்றார். குண்டர்ட், லோகன் முதலான பிற அறிஞர்களும் இதை ஒரு கிறித்தவக் குழு என்று நினைத்தார்கள். 'மணிக்கிராமத்தார் மணிவாசகப் பெருந்தகையாரால் சைவராக்கப்பெற்ற கிருத்தவர்களாவர். என்று ரெவரெண்ட் பீட் கூறுகிறார். ரிச்சர்டு கோலின்ஸ் இதை 'மாணவர்களின் கிராமம்' என்று நினைத்தார் இன்னும் பலர் இதை நன்கொடை வாங்குபவர்களைக் குறிக்கும் சொல்லாது கொண்டனர். ஆனால், இவர்களுக்குப் பிற்பட்டக் காலத்து ஆராய்ச்சியால் மணிக்கிராமம் ஒரு வாணிகக்குழு என்பது உறுதிப்படலாயிற்று. 'பாயனூர் பட்டாலா' என்ற பழைய மலையாளச் செய்யுள், இதை ஒரு வியாபாரச் சங்கம் என்று குறிப்பிட்டுள்ளது. நச்சினார்க்கினியர் இதை ஒரு குழுவின் பெயராகக் குறிப்பிடுகிறார்; அவர் மணிக்கிராமத்தின் பாட பேதம்தான் வாணிகக்கிராாம் என்று தெரிவிக்கின்றார். ஆனால், இக்காலத்து மொழியியல் ஆராய்ச்சி, வணிகக்கிராமம் என்னும் சொல்லே மணிக்கிராமம் என்னும் சொல்லாகத் திரிந்திருக்கக்கூடும் என்னும் எண்ணத்திற்கு இடம் தருகிறது.

ஏனெனில் திராவிடமொழிகளில் வ என்னும் ஒலி எளிதில் இடம்மாறி வழங்குவது ஓர் இயல்பாக இருந்து வருவதை மொழியியல் அறிஞர்கள் சுட்டுகின்றனர் எ. டு. வ >ம, விழி > முழி, வானம் > மானம், விழுங்கு > முழுங்கு

மணிக்கிராம ஊர்கள்

வணிகக்குழுக்கள் தமிழகத்தின் பெரிய நகரங்களில் இருந்தன. அவ்வணிகக் குழுக்கள் இருந்த ஊர்களை, அவ்வூரின் பெயரையும் குழுவின் பெயரையும் இணைத்துச் சொல்வது வழக்கமாக இருந்தது. சான்றாகச் சங்ககாலப் புலவர்களின் பெயரில் ஊர்ப்பெயரையும் சேர்த்துக் குறிப்பிட்டுள்ளதைக் காட்டலாம் (உறையூர் மருத்துவன் தாமோதரனார்) மணிக் கிராம வணிகர்கள் ஆதித்தபுரி, இளங்கோப்பட்டினம், காவிரிப் பூம்பட்டினம், கொங்குநாடு, கொடும்பாளூர் முதலிய ஊர்களில் குழுக்கள் அமைத்துக்கொண்டிருந்தனர். சான்றாக, இளங்கோப் பட்டினத்து மணிக்கிராமம், உறையூர் மணிக்கிராமம், காவிரிப் பூம்பட்டினத்து மணிக்கிராமம், கொங்குநாட்டு மணிக்கிராமம், கொடும்பாளூர் மணிக்கிராமம் என்பன இதைத் தெளிவுபடுத்து கின்றன. இக்காலத்தில் திருச்சியில் தில்லை நகர் என்று வழங்கப்பெறுவது உறையூர் மணிக்கிராமம் இருந்த இடமாகும் கொடும்பாளூர் மணிக்கிராமம் என்பது திருச்சியிலிருந்தும், புதுக்கோட்டையிலிருந்தும் மதுரை செல்லும் வழியில் கொடும்பை நெடுங்குளம் என்ற சிற்றூராக இன்று காட்சி அளிக்கிறது. மாயவரத்திலிருந்து காவிரிப்பூம்பட்டினம் செல்லும் வழியில், திருவெண்காடு என்னும் சிவத்தலத்தை அடுத்து மணிக்கிராமம் என்னும் ஊர் உள்ளது. இவ்வூர், காவிரிப்பூம் பட்டினத்து மணிக்கிராமமாகும்.

மணிக்கிராமம் - பட்டப்பெயர்

"பெருங்கோயிலகத் திருந்தருள மகோதையார் பட்டினத்து இரவிக்கொற்றனாய சேரமான் லோகப் பெருஞ்செட்டிக்கு மணிக்கிராமப் பட்டம் கொடுத்தோம் ... நகரத்துக் கர்த்தா வாய இரவிக்கொற்றனுக்கு" என்பது சேர அரசன் வீரராகவச் சக்கரவர்த்தியின் செப்பேடு ஆகும். இதிலிருந்து, சேரநாட்டு

அரசன் மணிக்கிராமம் என்னும் பட்டத்தை அளித்தான் என்பது பெறப்படுகின்றது. மணிக்கிராமம் என்னும் வணிகக் குழுவின் பெயர், வணிகக் குழுவின் உறுப்பினன் பெறும் வழக்கம் இருந்தது எனவும் அக்குழுவினர் அரசரிடம் பெற்ற பெருமதிப்பும் அறியமுடிகின்றது. சங்ககால வணிகர்கள் எட்டி காவிதி போன்ற பட்டங்களை அரசிரிடமிருந்து பெற்றனர் என்பலற்குச் சங்க இலக்கியங்கள் சான்று பகருகின்றன. கி. பி எட்டாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டுக் க்டைசி வரையில் பிற தமிழக அரசர்கள் மணிக்கிராமப் பட்டத்தை வணிகர்களுக்குக் கொடுத்துள்ளனரா என்பது ஆய்விற்குரியது.

மணிக்கிராமம் செயல்பட்ட காலம் :

பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் (846-869) மணிக்கிராமம் என்னும் தமிழக வணிகக் குழுவைத் தாய்லாந்து கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது கி பி. பதின் மூன்றாம் நூற்றாண்டின் கடைசிகாலப் பகுதியில் வாழ்ந்த வீரராகவச் சக்கரவர்த்தியின் காலம் வரை, மணிக்கிராமம் புகழுடன் இருந்துள்ளது. மணிக்கிராமம் என்பது கி.பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து, கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டுக் கடைசிகாலப் பகுதிவரை செயல்பட்டது எனலாம்.

மணிக்கிராமம் செய்த தொண்டுகள்

மணிக்கிராமம் எனும் வணிகக்குழு தனிப்பட்ட முறையிலும், பிற வணிகக் குழுக்களோடும் சேர்ந்து திட்டங்கள் வகுத்து, சமூகத்திற்குப் பல நிலைகளில் தொண்டாற்றியுள்ளது. மணிக்கிராம வணிகக் குழு உறுப்பினர்களில் வணிகன் ஒருவன் தனித்த நிலையில் தொண்டாற்றியுள்ளான். முதலாவதாக, வணிகக்குழுக்கள் கடல்கடந்த நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்தது மட்டுமன்றி அங்கு நற்செயல்கள் பல புரிந்துள்ளமை விளக்கப்படுகின்றது. நற்செயல் புரிந்த வணிகக்குழுக்களில், காவிரிப்பூம்பட்டினத்து மணிக்கிராம வணிகக்குழுவினர் இடம் பெறுகின்றனர். இக்குழுவினரைத் தாய்லாந்தில் பழைய தகுவா-யா நகரில் வாட்நா மியாங்கு (Wat Na Miang) கோயிலின் உட்புறத்துக் கல்லின்மீது, தமிழ்

மொழியில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது. அக்கல்வெட்டின் வாசகம், ''........ (5) வர்மன்கு (ணா) .... மாந்தன் நாங்கருள (யா)ன் தொட்ட குளம் பேர்சீரி அவனி நாரணம் மணிக்கிராமத்தார்க் (கும்) சேனா முகத்தார்க்கும் பாதார்க்கும் அடைக்கலம்'' என்பதாகும் இக்கல்வெட்டு, தமிழகத்துத் தஞ்சையைச் சேர்ந்த நாங்கூர் என்ற ஊரில் இருந்த ஒருவர் சாய்லாந்திலுள்ள திருமால் கோயிலில் குளம் ஒன்றை அமைத்து, அக்குளத்திற்கு மூன்றாம் நந்திவர்மனுடைய பட்டப்பெயரான 'அவனி நாரணன்' என்றப பெயரைச் சூட்டினார். இதிலிருந்து, தமிழ்நாட்டு வணிகக்குழு ஒன்று தாய்லாந்தில் நிலையாகத் தங்கியிருந்தனர் என்பது தெரிகிறது

மணிக்கிராமம் பிற வணிகக்குழுக்களோடு இணைந்து தொண்டாற்றுதல்

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானைத் தாலுகாவின் கடற்கரையில், தீத்தாண்டதானபுரம் அமைந்துள்ளது. அங்குக் காணப்படும் கல்வெட்டு செய்தி வருமாறு ; ''பழைய சிதைந்த கோயில் ஒன்றினைப் புதுப்பித்துக் கற்றளியாக்கப்பட்ட ஒரு மாபெரும் ஆலோசனைக்கூட்டம் ஒன்று கட்டப்பட்டதாகவும்'' அதில் பதினெட்டு விஷயங்கள் (மாவட்டங்கள்) கலந்து கொண்டதாகவும் குறிப்பிடுகின்றது. இதற்குப் பணம் திரட்டுவதற்காக வாணிகப் பொருள்கள்மீது அச்சுக்கு ஒரு காசு வீதம் வசூல் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்திற்குத் தென் இலங்கையைச் சேர்ந்த வளஞ்சியர், அஞ்சுவண்ணத்தார், மணிக்கிராமத்தார் போன்ற தனித்தியங்கும் வணிகப் பெருங்குழுவினரும் தமது இசைவினைத் தெரிவித்ததாக அறிகிறோம்.

மணிக்கிராமமும் அஞ்சுவண்ணமும் விவசாயிகளுக்குத் தேவையான நன்மைகளைச் செய்தனர் என்பதை, ''இந் நகரத்துக் காராளராக நீரேற்றார் அஞ்சுவண்ணமும் மணிக்கிராமமும் இவருள் இரண்டு தலையாருங் கூடிச்செய்வதே கருமமாகவும்'' என்ற செய்தி தெளிவாக்குகின்றது.

மணிக்கிராம வணிகக்குழு உறுப்பினர்கள், தனிப்பட்ட முறையில் பலவகைத் தொண்டாற்றியுள்ளனர். அவை, கோயிலுக்குத் திருவிளக்கு அமைத்தல், அன்னதானம் செய்தல் என்பன. விளக்கு அமைத்த செய்தியைத் திருநெல்வேலி மாவட்டம், திருக்குற்றாலத்திலுள்ள கல்வெட்டு ஒன்று, ''மணிக் கிராமத்து தர்மச்செட்டி ஆயின சடையன் கவையன் வச்ச விளக்கொன்று'' என்று கூறுவதிலிருந்து அறியமுடிகின்றது. ''திருவெள்ளறை திருவானைக்கல் பெருமானடிகள் உச்சம் போது, அமுதுசெய்தருளும்போது. ஒரு பிராமணனை ஊட்டுவிதாக மணிக்கிராமத்து நாராயணன் ஆச்சன் இவ்வூர் கல்லால் வைத்த பொன் ஐம்பதின் கழஞ்சு'' என்ற கல்வெட்டுத் தொடரால் அன்னதானம் அளிக்கப் பொன் கொடுத்தமை தெரிகின்றது. கோயில் நலனை முன்னிட்டு, நன்கொடை வழங்கிய செய்தியைக் ''கொடும்பாளூர் மணிக்கிராமத்து வியாபாரி மணிய மார்த்தாண்டான் ஸ்ரீகோயிலில் வைத்த கழஞ்சு'' என்ற செய்தி விளக்குகின்றது.

வணிகர்கள் பயன்படுத்திய நாணயம்

கி. பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் சேர நாட்டை ஆண்ட வீரகேரளவர்மன் (C 1125 — 1155 AD) என்ற அரசனுடைய ஆட்சிக் காலத்து. வெள்ளி நாணயங்கள் சில திருநெல்வேலியிலுள்ள வைகைக் குளத்தில் கிடைத்துள்ளது இரண்டாம் வீரகேரள வர்மன் ஆட்சிக்காலத்தில் வெளிநாட்டு வாணிகம் சிறப்பாக நடந்தது. சில பழைய ஆதாரங்களிலிருந்து, 'அச்சு', 'ஆணை அச்சு', 'அழகச்சு' முதலிய நாணயங்கள் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வழக்கில் இருந்ததாகத் தெரிகிறது. இதிலிருந்து, அக்காலத்தில் வழக்கிலிருந்த நாணயங்களையும் சேரநாட்டு மணிககிராம வணிகக்குழு பாண்டிய நாட்டோடு வணிகத் தொடர்பு வைத்திருந்ததையும் அறியமுடிகிறது. சில கல்வெட்டுக்கள் மணிக்கிராம வணிகர்கள் காசு, கழஞ்சு போன்ற பொன்னாலாகிய நாணயங்களையும் பயன்படுத்தியதைத் தெரிவிக்கின்றன. தமிழகத்திலும், கடல்கடந்த நாடுகளிலும் மணிக்கிராம வணிகர்கள் பயன்படுத்திய வாணிகப் பொருட்களையும், கடல்கடந்த நாடுகளிலிருந்து பெற்றபொருட்களையும், அந்நாட்டு நாணயங்கள் முதலியவை ஆய்வுக்குரியது.

புலவர் அந்தோணிமுத்துப் பிள்ளையின் பிளேக் சிந்து – ஓர் அறிமுகம்

வெ. கேசவராஜ்
தூய சவேரியார் தன்னாட்சிக்கல்லூரி,
பாளையங்கோட்டை.

முன்னுரை

புலவர் அந்தோணிமுத்துப் பிள்ளை 1863-ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த உத்தம பாளையத்திற்குரிய அமைந்தன் பட்டியில், வேளாளர் மரபில், கோவில் சவரி முத்துப் பிள்ளை, சின்னம்மாள் ஆகியோருக்கு மகனாய்ப் பிறந்தார். அவர் சிந்துப்பாடல்கள், சரய கவிகள், கீர்த்தனைப் பாடல்கள், நாடகங்கள் போன்றவற்றைப் படைத்தார். அப் படைப்புக்களுள் ஒன்றான 'பிளேக் சிந்து'வை அறிமுகப் படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிந்துப்பாடல்கள்

அந்தோணிமுத்துப் பிள்ளை இயற்றிய சிந்துப்பாடல்கள் பல திறத்தவை. 'இவர் இயற்றிய இரட்சணியச் சிந்து, இறை மகன் இயேசுக் கிறிஸ்து மனிதனை இரட்சித்த வரலாற்றினை முறையாக விவரிக்கின்றது. பிளேக் சிந்து, 'பிளேக்' என்னும் கொள்ளை நோயின் கொடுமையை உள்ளம் உருக - இறைவனின் அருள் பெறுக பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டதாகும். நொண்டிச் சிந்தும் பிளேக் நோயின் கொடுமைகளை மேலும் விவரிக்கின்றது. கம்பம் தாத்தப்பன் குளச்சிந்து, பெரு மழை பெய்ததால் மக்கள் உயிர் உற்ற துயரத்தினை உருக்க மாகக் கூறுகின்றது. சல்லிகட்டுச் சிந்து, கிராம மக்களின் வீர விளையாட்டைப் போற்றும் பாங்கில் அமைந்துள்ளது. புதுக்

கால் சிந்து, புதிய வாய்க்கால் வெட்டியதால் மக்கள் பெற்ற இனபத்தினையும் நன்மையினையும் நனிசிறக்கப் போற்று கின்றது.' இவையனைத்துமே, சமகால நிகழ்ச்சிகளைக் கவிதை வடிவில் தர விழைந்த புலவரின் முயற்சியையே காட்டுகின்றன.

பிளேக் சிந்துவின் பாடுபொருள்

இந்நூலில் 1920-24-ஆம் ஆண்டுகளில் மதுரை மாவட்டம், தேனி, பாளையம முதலிய பகுதிகளைச் சேர்ந்த ஊர்கள் தோறும் பரவிய கொள்ளை நோயான பிளேக்கின் கொடுமை விவரிக்கப்படுகின்றது. இந்நோய், ஐரோப்பா நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்து பரவியதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். எலிகள் வாயிலாக இந்நோய் பரவிய தன்மையையும், அதனால் மக்கள் உற்றதுயரத்தினையும், நோயிலிருந்து தப்பித்துக் கொள்ளும் பொருட்டு மக்கள் ஊரைவிட்டு வெளியேறியதையும், தடுப்பூசி போட்டுக் கொண்டதையும் இவர் குறித்துள்ளார்.

பிளேகு (Plague)

இந்நோயின் கொடுமையைத் தெரிந்து கொண்டால்தான் புலவரது படைப்பின் முக்கியத்துவத்தை உணர முடியும், 'பிளேகு' என்பது பாசில்லஸ் பெஸ்ட்டிஸ் என்னும் கிருமி யினால் உண்டாகும் காய்ச்சல், பிளேகு முதலிலே எலிகளுக்கு வருகிறது. நோய் வந்த எலிகளிலிருந்து, தெள்ளுப்பூச்சிகளின் வாயிலாகப் பிற எலிகளுக்கும் இந்நோய் பரவுகிறது. அப்பூச்சி களே மனிதருக்கும் இந்நோயைப் பரப்புகின்றன கிருமி, மனிதன் உடலில ஏறினதிலிருந்து நோய்க்கூறு தெரிவதற்குச் சாதாரண மாக 3-4 நாட்கள் ஆகின்றன. சில சமயம் 2-லிருந்து 12 நாட் கள் ஆகலாம். கிருமி உடலில் ஏறும் இடத்தில் ஒரு சிறிய கொப்புளம் உண்டாகலாம், பொதுவாக இரண்டாம் வாரத்தில் சீழ் பிடிக்கிறது, அதிலிருந்து 3, 4, 5-ஆம் நாளில் சாவு ஏற்படு கிறது.

பொதுவாக மனிதருக்கு பிளேகு தாக்குவதற்கு 2 அல்லது 3 வாரங்களுக்கு முன்னால் எலிகளுக்கு நோய் கண்டு அவை சாகின்றன. இதிலிருந்தே தகுந்த தடுப்பு முறைகளைக் கையாள

வேண்டிய அவகாசம் கிடைக்கிறது. பிளேகு ஊசி போட்டுக் கொள்வதன் வாயிலாக இந்நோயிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

காட்சிப் படுத்தும் திறன்

பிளேகு என்ற கொடிய நோய், மக்களை வருத்திய திறத்தினை, படிப்பவர் மனதில் பதியுமாறு பாடியுள்ளார் புலவர். பெரும்பாலான மக்கள் இந்நோய்க்குப் பயந்து வீட்டைக் காலி செய்துவிட்டு வெளியேறினர். ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோருமே குடிசைகள் அமைத்துக் குடிபுக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவர்கள் பட்ட துயரத்தினைப் பின்வரும் பாடலடிகள் காட்டுகின்றன:

காற்றோ விறுவிறு வென்றே யடிப்பது
கரையான் கொடுமையைச் சொல்ல முடியாது
தூற்று மழையால் குடிசை நனைப்பது
தூக்கமில் லாதிர வெல்லாங் கழிப்பது

என்னென்ன கஷ்டம் - குடிசைக்குள்
என்னென்ன நஷ்டம்

படுக்கும் குழந்தை குட்டியொரு பக்கம்
பாம்பொடு தேளர ணையொரு பக்கம்
சூடிக்கும் ஒலுங்குக ளய்யோவோர் பக்கம்
கஞ்சிக்கல் லாத கவலையோர் பக்கம்

என்னென்ன துக்கம் - இதை வெளியே
சொன்னால் வெட்கம்'

இந்நோய்க்குப் பயந்து ஊரை விட்டே ஓடியவர்களுமுண்டு இதனை,

''உள்ள பொருளெல்லாம் போனாலும் நன்று
உயிர்பிழைத் தால்மாத்தி ரம்போது மென்று
பிள்ளை பெண்சாதிக ளைக்கூட்டிக் கொண்டு
பிறதேசம் புறப்பட்டார் சிலர்பயங் கொண்டு'

என்ற பாடலடிகள் காட்டுகின்றன.

ஊரிலுள்ள மக்களெல்லாம் காட்டுப்பகுதியில் சென்று தங்கினர். காட்டுப் பகுதியிலுள்ள விலங்குகளெல்லாம் ஊருக்குள் திரிந்தன. இந்தக் காட்சியைப் புலவர் அழகாகப் பாடியுள்ளார். அது வருமாறு :

'காட்டு நாய் நரிகளும் ஊரில் புகுந்தது
கழுதைப் புலிகளும் தெருவில் திரிந்தது
வீட்டுக்குப் போகச் சனங்கள் பயந்தது
மிக்கவே ஊரெல்லாம் நாற்றம் விளைந்தது

வீடுங்காடாச்சு - அய்யகோ
காடும் வீடாச்சு !'

பிணங்களை எடுப்பதற்குக் கூட ஆள் இல்லாத அவல நிலையைப் புலவர் நம் கண்முன் நிறுத்தும் பகுதி வருமாறு:

'ஆட்களில்லா வீட்டில் பிணமே கிடக்க
அப்பா அதுவெகு நாற்றமெடுக்க
நாய்க்குலம் கண்டதை தெருவிலிழுக்க
நண்ணியே போலீஸார் கண்டே தடுக்க

லானதும் பொய்யா - இதுவென்ன
அநியாயமய்யா'

இவ்வாறெல்லாம் காட்சிப்படுத்திய புலவர். இந்நோய் மக்களைத் தாக்குவதற்கான காரணங்களாக ஊகித்துக் கூறும் பகுதிகள் சிந்திக்கத் தக்கதாக அமைந்துள்ளன. அப்பகுதிகள் பின்வருமாறு:

'அநியாய மனிதர்கள் கட்டின பாவமோ
அதனாலே யேதேவ கோபத்தின் சாபமோ
மனிதர்கள் பூமியில் பொறுக்காத பாரமோ
வருடம் ரவுத்திரி பிறந்திட்ட நேரமோ'

'அரிசியில் தண்ணீர்விட் டுவிற்ற தோசமோ
அநியாய வட்டிகள் வாங்கின மோசமோ
தருமந்த னைமறந் திட்டமைப் பாசமோ
தவசம் அகவிலைக் கிட்ட துவேசமோ'.

இங்கு, மக்களின் நிலையைச் சுட்டிக் காட்டும் புலவரின் சிறப்பாற்றல் வெளிப்படுகிறது.

புலமைத் திறம்

புலவர், தான் கண்ட காட்சியைக் கற்பவர் மனத்திலும் தோன்றும் படியாகப் பாடுவதில் வெற்றி பெற்றுள்ளார். பாடலின் பெரும்பகுதியிலும் எதுகை, மோனை அமைத்துப் பாடியுள்ளார். யாப்பிலக்கண விதிகள் சிறிதும் பிறழாமல், கற்பனை நயத்துடன் இவர் பாடியுள்ளார் எனலாம். இசையோடு பாடத்தக்க வகையிலான இப்பாடல் கேட்பவர் மனத்திலும் கற்பவர் மனத்திலும் இன்பவுணர்வைத் தோற்றுவிக்கும் நிலையில் அமைந்துள்ளது.

சமுதாய விழிப்புணர்வு

புலவரின் இப்படைப்பு அவரது சமுதாய விழிப்புணர்விற்குத் தகுந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பிளேகு நோயின் கொடுமையைப் பாடல் வாயிலாகப் பரப்பும் எண்ணத்துடனேயே அவர் இந்நூலை இயற்றினார் என்பதில் ஐயமில்லை. தாம் இயற்றிய பாடலை அச்சில் கொண்டு வந்து, அனைவரையும் அறியச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் அவரிடம் இருந்தது என்பதனை, அவர் பிளேகு தொடர்பாகப் பாடிய மற்றொரு பாடல் தெளிவுறுத்துகிறது. அப்பகுதி வருமாறு:

'... உருகிநின்ற சனங்களெல்லாம் ஊர் புகுந்தார்
சுகமாக
உள்ளதெல்லாம் விரிவாகப்பாட - வேணுமென்றால்
கொள்ளை ரூபாய் செல்லும் அச்சுப்போட'

நூலின் இலக்கிய தகுதி

பாடலாசிரியன் தான் சொல்ல வந்த கருத்துக்களை, அழகுணர்ச்சியுடன் சொல்ல வேண்டியது அவசியம். இலக்கியம் வெறும் கருத்துக் கோவையன்று, அது அழகுணர்ச்சியுடன் சம்பந்தப்பட்டது. கருத்தாழமற்ற ஆனால் கலையழகுள்ள ஓர்

ஆக்கம் இலக்கியமாகக் கருதப்படலாம். ஆனால் கலையழகற்ற கருத்தாழமுள்ள ஆக்கம் இலக்கியமாகாது' என்பார் சிவத்தம்பி பிளேக் சிந்து என்ற இப்படைப்பு. கருத்தாழத்துடன் அழகுணர்ச்சியும் நிரம்பப் பெற்று விளங்குகிறது. ஒரு நல்ல இலக்கியப் படைப்பிற்கான முழுத் தகுதியையும் பெற்று விளங்குகிறது எனலாம்.

முடிவுரை

புலவர் அந்தோனிமுத்துப் பிள்ளையின் படைப்புக்களுள் ஒன்றான பிளேக் சிந்து, எளிமையும் இனிமையும் வாய்ந்ததாக வும், சமுதாய விழிப்புணர்சியைக் காட்டுவதாகவும் விளங்கும் நல்லதொரு இலக்கியமாகும். அவருடைய படைப்புக்கள் அனைததையும் அறிவுலகத்திற்கு அறிமுகப் படுத்துவது நம் முடைய கடமையாகும். அதுவே நாம் அவருக்குச் செலுத்தும் நன்றிக் கடனாகும்.

பயன்பட்ட நூற்கள்

1. அந்தோணிமுத்துப் பிள்ளை, சந்தமார் சிந்துக் கவிதைகள், பர்க்கியராஜ், ஞா., (ப ஆ.), திருச்சிராப்பள்ளி, 1981, முதற்பதிப்பு

2) மார்க்ஸ். அ., சிற்றிலக்கியங்கள் சில குறிப்புகள், குடந்தை சிலிக்குயில் வெளியீடு, 1983, முதற்பதிப்பு.

3. முத்துசாமி ல. கி., ''பிளேகு'', 'கலைக்களஞ்சியம். தொகுதி-7', அவினாசிலிங்கம். தி.சு., (ப. ஆ.), சென்னை 1960, முதற்பதிப்பு.

A New Note on the Gajasamhara Murthi Idol of Vazhuvur Temple

S. Govindaraju
Annamalai University

The Gajasamharamurti of Vazhuvur temple (Thanjavur District) is a fine Sculptural metalic representation of one among the most famous terrific, destructive aspect of Siva mentioned in the Agamas and Silpasastras. This brilliant iconographic form is kept in the South facing Jnanasabha, opposite to the southern entrance of the front mandapa of this temple. It is a marvelous gem of the art of metal casting a moulded epic on metal, and above all a grandly conceived finest creation on metal.

Thoughts carcely mentioned in the benedictory verses of sew epigraphs[1], the concept of gajasamharam has been referred to in a number of places, with Tamil Saiva literary pieces. It has also found a place in the Suprabhedagama,[2] Kuma,[3] Varaha[4] and Skandapuranas[5] as well as in the sthalapurana of Vazhuvur[6]. Though these literary works differ from each other with regard to the concept of this manifestation, they unanimously agree on its basic event of the killing and skinning of the Gajasura and garbeing his skin by Siva as his upper government. This incident is als reflected in silapathikaram, a pen picture of Ilangovadikal of the post Sangam age.

The beronze made Gajasamhara murti of Vazhuvur stands majestically with masculine vigour in triechanga posture, on the slayed head of the straightly looking elephant

giant with its grafully twisted trunk, wivinow-shaped ears and pointed tusks and piercing opended dead-eyes by firmly planting his right leg on it. It raises up its elegently and diagonally bent left leg almost to the level of its waist in the Utkutikasana posture, traversing the trigh of its other leg. The disposition of its legs are expressive of its trampling as well as the dancing attitude of the Lord on the head of the demonic elephant. The feet of its lifted left leg is exposed in a superb abhaya hasta attitude, indicating the protection to the devotees through its feet. The splendid exposition of the seet of its left leg is nothing but a demonstration of artistic excellence and exceedingly pleasing expression of divine ecstasy.

Of its eight arms, the two fore arms are stretched out on eitherside and hold the slayed hide, a loft near its (hind) legs. Its another three right arms are armed with a kettle drum, a very artistically shaped glittering trident and a sword respectively. While each of its remaining three hands are holding a snake, shield and a skill-cap in such an order. The entire weapons are held in a realistic manner as in the cases of the sculptures of the pallava period. The postures of its stretched hands and legs exhibit the whirling movements of dance and present a lovely seenery with full of life.

While the elephant's head is of the right foot of Siva its tail which is curled upwards is visibly and realistically designed above the head of Siva at its proper place i e. at the top or the skin of the elephant is fantastically arranged in the form of a Prabhamandala surrounding the figure of Siva in such a way to give the realistic appearance of its covering as a germent at the leack of the almighty. The twisted nature of the tail is remarkable for its realism as it will be the usual position of an animal at the time of its

fatal end, out of agony. It is also a vivid port rayal of a fighting animal.

Of the hind legs of the elephant, displayed a loft as a part of the skin hanging from the fore arms of the Murti, the left leg is hanging infront of the upperpart of the aureole, the right one is arranged out side the prabha. Its remaining hands are hanging down so as to form the two bottom ends of the aurole on either side of the elephant's head.

A single-hooded snake is also represented on the head of the elephant. The hooded snake, which is a perfect symbol of wisdom on the head of the animal pronounces a deep symbolic representation of the subjugation of ignorance out of the setter, anavams by wisdom.

The head of the image is adorned with a highly ornated and impressive **Jatamakuta** matted in the form of Jatamandala with a resplendent crescent-moon and a coiled snake on its left and right sides. The middle portion of the head is adormed with a grinning human skill, slanked by snakes on eitherside. The hair style as well as the other ornamentation. of Gajantaka lead us to assign if to the later Chola period.[7]

The image is embellished with a limited number of but most exquisitely wrought ornaments. Germent of its waist reaches upto its thighs. The downward limit of the garb is clearly marked by lines around the middle of its thighs.

The balanced composure of the entire body of Gajantaka especially the graceful flexion of its waist, the unique, superle, artistic disposition of its various parts such, as its legs and hands stretching like the branches of a tree on either side of Siva, the display of appropriate weapons in a naturalistic manner, the contour of the youthful chest, the charming

arrangement of its braided hair into a Jatamandala, the simple limited but proper ornamentation at apt places, the tremoundous execution of the skin, legs, head, ears, eyes, trunk, tusk and tail of elephant and above all the exuberent exposition of the foot of the left leg of the g·jıri and the depiction of various countenances of its face, wishort every one of the part of the image are remarkable, for their fully developed rather matured and perfect artistic excellence both in size and execution in constrast to other identical catagories of stone.

Hence our analysis leads us to surmise that the sacred gajantaka bronze of Vazhuvur is the most illustrious charming, finest singular, rare, realistic artistic creation of the South Indian metal craftsman of the Chola period. The whole composition of the group of gajantaka is a fountain of divinity and splendid artistic beauty.

Foot Notes

1 E.I. Vol.XXVI, pp. 1-5.

2 T A Gopinatha Rao, Elements of Hindu Iconography Vol. II, Part - I, p. 114.

3 Ibid

4 Ibid

5 Ibid

6 R. Panchanatham Pillai, Sthalapuram of Vazhuvur P.14.

7 Contra C. Sivaramamoorthy, Nataraja in Art, thought Literature (National museum, New Delhi, 1974), p.103.

‘பார்வையில் பயணங்கள்’

அ. கோபிநாத்
பிசப் ஈபர் கல்லூரி, திருச்சி. 17.

கடல் கடந்த கப்பல் - விமானப் பயணங்களில் தான் பல்வகை நிகழ்ச்சிகள் நடைபெறும் என்பதில்லை. நம் தமிழகத்தில்-உள்ளூர்ப் பயணங்களிலேயே நம் பார்வையில் பல்வேறு கதைக் கருக்கள்-பாத்திரப் படைப்பினர் தோன்றலாம். பேராசிரியர் டாக்டர் மு.வ. அவர்கள் குறிப்பிடுவது போன்று சென்னையிலேயே பாரிமுனையிலிருந்து மாநகரத்தின் மற்றொரு திநப்பத்தை அடைவதன் முன்னர் பல நிகழ்ச்சிகளைக் காண லாம் என்பது முற்றிலும் உண்மையே! இங்கு என் பார்வையில் நான் கண்ட ஓரிரு பயணங்களையே குறிப்பிட விரும்பு கின்றேன்.

கோவையில் காந்திபார்க் to காந்திபார்க் எனச்செல்லும் ஏழாம் எண் பேருந்து எப்பொழுதும்தான் கூட்டத்திற்கும் பொருள் பறி போவதற்கும் பேர் போனது. நான் கோவை பூ.சா.கோ. கலை அறிவியற் கல்லூரியில் ஆய்வு மேற்கொண்டி ருந்த காலமது நான் அந்த ஏழாம் எண் பேருந்தில் கடை வீதியில் ஏறி அப்பொழுது காலியாக இருந்த ஓர் இருக்கையில் அமர்ந்தேன். காந்திபுரத்தில் கூட்டம் திமுதிமு வென்று ஏறியது கூட்டம் நிரம்பி வழியத் தொடங்கியது. என்னருகே பேருந்து கம்பியைப் பிடித்து நின்று கொண்டிருந்த ஒருவர் வண்டி புறப் படத் தொடங்கியதும் வெளியே பேனர்களைப் பராக்குப் பார்க்கத் தொடங்கினார்.

இதற்கிடையே பயணியர் இடையே இருந்து வெளிப்பட்ட ஒருவன் தான் நின்ற இடத்திலிருந்தே கையைப் பின்புறம் நீட்டி, பேனர் பார்த்துக் கொண்டிருந்தவர் பேன்ட் பையில் கைவிட

முயற்சி செய்யத் தொடங்கினான். ஓரளவு அவன் வெற்றி பெறத் தொடங்கும் நேரம்... எதிர்பாராமல் இக்காட்சி என் கண்களுக்குப்பட்டது. லேசாக, பராக்குப் பார்க்கும் பணத்தைப் பறி கொடுக்க இருந்த அவரை இடித்தேன், இருமினேன் இதைக் கவனியாத அவர் தொடர்ந்து தம் பராக்குப் பார்க்கும் பணியில் ஈடுபட்டார் இப்போது ஜேப்படிக்காரன் பார்வைக் கூரம்பு என்னைச் சுட்டது. மீண்டும் முயற்சியில் படையெடுப்பில் - அயர்ச்சி அடையா புரூஸ் மன்னனைப்போன்று, கஜினி முகமது போன்று, இவன் தன் தொழிலில் நாட்டம் செலுத்தினான்.

இப்போதும் பறிகொடுக்க இருந்த அந்த நபர் அத்திருடன் தன் மீது சரிவதையோ கையைப் பேன்ட்பாக்கெட் பக்கம் கொண்டு செல்வதையோ கவனிக்கவில்லை, பொறுமையிழந்த நான் பிரேக் போட்டபோது அவர் மீது கவனத்தைக் கவர விழுந்து வைத்தேன். அதற்கு அவர் என் மீது எரிந்து விழுந்தாரே தவிர எரிய வேண்டிய இடத்தின் பக்கம் கண்ணைத் திருப்பவில்லை. கடைசியில் ஒரு வழியாக இருமி, கைகாட்டி அவருக்கு எச்சரிக்கை செய்தேன் அவரும் ஓரளவில் அதை அறிந்து பர்சை எடுத்துத் தன்முன்பக்க பனியனுக்குள் வைத்துக் கொண்டார். பிக்பாக்கெட் செய்ய வந்தவனின் கோபம் முழுக்க இப்போது என் பக்கம் திரும்பி விட்டது. அவன் பல்லைக் கடித்து, கண்ணை உருட்டி என்னை முறைத் தான். நான் வேறு திசைக்குப் பார்வையைச் செலுத்தினேன். அவன் போகும் போது சிங்க வடிவினைக் கொண்டு பிரமிட் அமைப்பிலுள்ள தன் இரும்பு மோதிரத்தைப் பேருந்து கம்பியில் இரண்டு முறை தட்டி என்னை எச்சரிக்கை செய்வது போல் தலையாட்டி முறைத்துப் பார்த்த வண்ணமே இறங்கிச் சென்றான்

மற்றொரு நிகழ்ச்சி வேடிக்கையானது கோவையிலிருந்து நீலகிரி விரைவு வண்டி ஏறி சென்னை செல்ல வேண்டிய வேலைச் சூழ்நிலை. கோவையில் உறவினர் நண்பர்கள் வழி யனுப்ப பிரியாவிடை பெற்றுப் புறப்பட்டேன். வண்டி பறந்தது ஈரோடு வந்தடைந்தது. அங்கு பருத்த இரண்டு பேர் பாரம்

மிகுந்த இரண்டு பெரிய பெட்டிகளைச் சுமக்க முடியாமல் சுமந்து வந்து என் பெட்டியில் ஏறினர். இட ஒதுக்கீடு (Reserve) செய்யாதவர் போலும்! ஆனால் அதே பெட்டியில் ஏறியிருந்த அவர்களுடைய நண்பர் ஒருவர் இரண்டு விரிப்புகளை விரித்து அவர்களுக்காகக் காத்திருந்தார்.

உள்ளே வந்த இருவரும் அந்த பெரிய இரும்புப் பெட்டி களை நான் இருந்த இருக்கைக்கு மேலாக, என் தலைக்கு நேராக, குடை போன்ற சிறிய பொருட்கள் வைக்கும் இடத்தில் வைத்தனர். வண்டியின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க பெட்டி யின் ஆட்டத்திற்கேற்ப இவர்கள் கொண்டு வந்திருந்த பெட்டி களும் தாளம போடத் தொடங்கின. நான் அமைதியாகத் தலைக்கு மேலாக ஆடும் பெட்டிகளையும் இவர்களையும் மாறி மாறிப் பார்த்தேன். அப்படியாவது குறிப்பறிந்து பெட்டிகளைக் கீழிறக்க மாட்டார்களா? என்ற என் நப்பாசைதான் காரணம். ஆயினும் அவ்விருவரும் புன்முறுவலுடன் ஒருவரை ஒருவர் பார்த்து நின்றனர். பொறுமை கெட்டுப் போன நான், "இந்தப் பெட்டிகளைச் சற்று மாற்றி வையுங்களேன்" என்று கூறினேன். உடனே அவ்விருவருள் ஒருவர், 'நாங்கள் தான் இங்கேயே இருக்கிறோமே" என்றார். உடனே நான், "நீங்கள் இருப்பீர் கள் இது என் தலையில் விழுந்தால் நான் இருக்க மாட்டானே' என்று பதில் கூறினேன். இதனைக் கேட்ட இருவரும் 'பயங்கர ஜோக்சார்' என்று சொல்லி எனக்கு நெருங்கிய நண்பர்களா யினர். துன்பத்திலும் மற்றவர்களைச் சிரிக்க வைக்கக் கூடிய நகைச்சுவையுணர்வு இருப்பின் எத்தகைய கடின நிலையிலும் வெற்றி பெறலாம் என்ற எண்ணத்தை இந்நிகழ்ச்சி எனக்கு அளித்தது.

மூன்றாவது ஒரு பயண நிகழ்ச்சி, உடல் நலமில்லாமல் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த என் தந்தையைக் காணத் தமையனாருடன் "ஆட்டோ சைக்கிள்" வண்டி யொன்றில் செல்லும் போது ஏற்பட்டதாகும். தமையனார் முன்னிருந்து ஓட்ட, பின்னால் ஒரு கைப்பையில் இரண்டு பிளாஸ்குகளை ஒரு கை பிடிக்க, மற்றொரு கையில் இரண்டு கனத்த புத்தகங்கள் (மருத்துவமனையில் படிக்க) ஏறியிருக்கப்

பின்னிருக்கையில் அமர்ந்தேன். புத்தகங்கள் வேண்டாம் என்று தமையனார் கூறியது கேளாமல் கண்ணபெருமான் போல புத்தகங்கள் கொண்ட கையாட்டி அபயம் கூறினேன். வேகமாகச் சென்று கொண்டிருந்த வண்டியின் பின்புறச் சக்கரத்தில் வேட்டியின் நுனி பிடிப்புண்டு சுற்ற ஆரம்பித்ததைக் கண்ட எனக்கும் தலைச் சுற்று; பின்னர் நான் கூச்சலிட, திரும்பிப் பார்த்த என் தமையனாருடன் வண்டியும் மறிந்தது. பிள்ாஸ்க்குகள் கொண்ட பை ஓர் புறம் தெறிக்க, புத்தகங்கள் மறுபுறம் விழ நானும் தமையனாரும் கீழே விழுந்து புரண்டோம். ஓர் புறம் உடம்பில் பட்ட வலி; 'உன்னையெல்லாம் இந்த வண்டியில் கூட்டி வந்தேனே ... என் புத்தியெ .....' தமையனார் வசவு மறுபுறம். எப்படியோ எழுந்து, எஞ்சிய துணியை இடுப்பில் கட்டி, பாதியை வண்டியில் பறிகொடுத்து ஒரு வழியாக வீடு வந்து சேர்ந்தோம். இரவு வேளை யானதால் யாரும் இதனைப் பார்க்கவில்லை என்றாலும், இந்நிகழ்ச்சியை நினைத்துப் பார்க்கையில் எனக்குச் சிரிப்புப் பொங்குவதுண்டு.

பழமொழி நானூற்று கால பொருளியல்

கே. எம். கே. கோமதிசங்கர்
புதுவைப் பல்கலைக் கழகம்.

பழமொழி நானூற்றுக் காலப் பொருளியல் அமைப்பைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள நமக்கு வாய்ப்பில்லை. நாடுகள் பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியும் ஒரு குறுநில மன்னனின் ஆளுகைக்குட்பட்டு இருந்தது அதன் பொருட்டுப் பரந்து பட்ட பொருளியல் நிலை உருவாகவில்லை.

தாம் வாழுகின்ற நாட்டினைப் பொறுத்து வாழ்க்கைமுறை வேறுபட்டிருந்தது தொழிலின் வழியாகப் பெறப்படுகின்ற பொருள்களும். ஆடு, மாடு, நிலம் போன்ற பொருள்களும் செல்வங்களாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தன.

பண்ட மாற்றினை அடிப்படையாகக்கொண்ட பொருளாதார வாழ்வியல் நிலவியது. அரசிற்கு மக்கள் அளிக்கின்ற பொருள்களை வைத்தே அரசின் பொருளாதாரச் செயற்பாடுகள் நிகழ்ந்ததனையும் அறியலாம். வாழ்வில் செல்வம் பெற்றுச் சிறப்புற்றிருந்ததற்கும் வறுமையுற்றதற்கும் பிறவிப் பயனே காரணம் என்ற கோட்பாடு நிலவியிருந்தது. அக்காலச் சமுதாயத்தில் பொருளாதாரம், தொழிலின் அடிப்படையிலும், வணிகத்தின் பொருட்டுமே நிறைவுபெற்றிருக்கிறது என்பதனை அறியலாம்.

பகையை வெல்லும் கருவி

சமுதாயக் கட்டமைப்பில் பின்னிப்பிணைந்திருக்கும் மனிதகுலம் தம்மை நிரந்தரமாய்ப் பாதுகாக்கப் பொருளினைப் பேணி

வளர்க்கும் ''பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை'', ''திரை கடலோடியும் திரவியம் தேடு'' என்று குறளும், மூதுரையும் மொழிவது அக்காலச் சமூக பொருளியல்சிந்தனையைத் துல்லியமாய்ப் படம் பிடித்துக்காட்டும்.

பொருளாதாரத்தில் மேல் மட்டத்தில் வாழும் ஒருவர் தம்மை எதிர்க்கவரும் பகையை வெல்ல பொருளினைக் கருவியாகக் கொள்ள வேண்டும். இக்கருத்தை வெளிப்படுத்த :

''தெருளா தொழுகும் திறனிலா தாரைப்
பொருளாலறுத்தல் பொருளே – பொருள் கொடுப்பின்
பாணித்து நிற்பார் - யாருளரோ ? வேல் குத்தின்
காணியின் குத்தே வலிது''.

(ப. மொ நா. செய். 197)

எனும் பாடல் வரிகளில் பயின்று வரும் பொருள் புலப் படுத்தும். பகை எழுந்த காலத்தே, அப்பகையை வெல்லக்கருதி பொருளினைக் கொடுத்துத் தம் பக்கம் வைத்துக்கொள்ள வேண்டும் எனும் சிந்தனை இக்கால அரசியல் சிந்த்னையோடு ஒத்துப்போவதை அறிய ஏதுவாகும்.

பொருளுடையாரின் மதிப்பு

சமுதாயத்தில் பொருளின் மதிப்பு வளர்ந்து வரும் கால கட்டத்தில் பொருள் உள்ளவரை மதிப்பது என்பது சமூக நியதி. ஆகவே, பொருள் உடையவர் எந்நாட்டிற்குச் சென்றாலும் மதிக்சப்பட்டனர். அவர்களை நாடி அனைவரும் வந்த தனையும் அறிய முடிகிறது. பொருள் வசதி படைத்தவர்களைச் சமூகம் மதித்திருக்கிறது என்பதை உய்த்துணரலாம். பொருள் உடையார் செய்யத் தொடங்கிய செயல்கள் முடியாதன இல்லாமல், நன்மையாக நடக்கும். கடல்தாண்டிச் செலினும் அங்கும் வெற்றியே காண்பர். இக்கருத்தின்வழி பெறப்படுவது, அக்கா்லத்தில் கடல்தாண்டி வாணிகம் செனறதனையும், வா்ணிகத்தின் மூலம் பொருள் ஈட்டியதனையும், அறிய முடிகிறது. பெருஞ்செல்வர்களாய்த் திகழ்ந்தவர்களின் செயல்கள் தாமத

மின்றி நடைபெற்றிருக்கிறதென்பதையும் காணமுடிகிறது. இவ்வணிக வர்க்கம், சமுதாய படி நிலையில் அரச குலத்தினரோடு போட்டி போடும் அளவிற்குச் செல்வச்சிறப்புடன் விளங்கியது என்பதற்குச் சிலப்பதிகாரம் சான்று பகரும். வணிக வர்க்கத்தினர், சமண மதத்தினை ஆதரித்தமையினால் அவர்கள் பற்றிய செய்தி பாடல்களில் இடம் பெற்றிருப்பதனையும் பார்க்க முடிகிறது.

பொருளைப்பெற்றிருப்பவர்கள் தமது செயல்களை நிறைவேற்றும் பொருட்டு ஆள்களைத் தேடுவதில்லை. பொருள் இருப்பதால் அவரை அனைவரும் நாடிவருவார் என்றும், செல்வமுடையவர்களை எல்லோரும் புகழ்வர் என்றும், பொருள் பெற்றிருப்பவரைச் சமூகம் மிக்க மதிப்புக் கொடுத்திருக்கிறது என்பது தெரியவருகிறது. இதனைக்கொண்டு அக்காலச் சமுதாயத்தில் பொருளாதாரம் ஆழமாக வேரூன்றித் தனி உடைமை மலர்ந்திருந்ததனைத் தெளிவாக்கும்.

சேமிப்புச் சிந்தனை

தனியுடைமை சமுதாயம் ஆழ்மாக வேரூன்றியவுடன் மனித மதிப்பு, பொருளை வைத்தே வரையறுக்கப்பட்டிருக்கிறது. பொருள் படைத்தவர்கள் சமூகத்தில் தமது ஆதிக்கத்தை வலுவாகச் செலுத்தி வந்திருப்பதையும் அறிய இயலும.

உடைமைகள் இல்லாதவர்களைச் சமுதாயம் இறுதிபடி நிலையில் வைத்திருக்கவேண்டும். பொருள் அற்றவர்களைச் சமூக அந்தஸ்தில் உயர்த்தவேண்டும். அதன் மூலம் இல்லாமையை ஒழித்துச் சமுதாய சமன்பாட்டைக் காணமுடியும் என்று சமணமுனிவர்கள் நம்பினர்போலும். அதனைத் தொடர்ந்தே சேமிப்பின் நன்மையை வலியுறுத்திப்பாடினர். வருவாய் சிறிதாயினும் நாள்தோறும் சிறிது சிறிதாகச் சேமித்து வைத்தால் செல்வம் வளர்ந்து வரும் என்றும் பின்னாளில் உதவும் பொருட்டுப் பொருளினைச் சேமித்துக் காவல் செய்ய வேண்டும் என்றும் பொருளினைச் சிறிதுசிறிதாகச் சேமித்து வைப்பதன் மூலம் பெரும்பொருள் அடையலாம் என்று வலியுறுத்தப்பட்ட

தனை அறியலாம். இச்சேமிப்பு வற்புறுத்தலின் நோக்கம், சமுதாயம் சாதி, மதம், அரசியல், ஒழுக்கக்குறை போன்றவற்றால் சிதறுண்டு இருந்ததனை போன்றும், பொருளின் மூலமும் வேறுபட்டிருந்ததனை அறிந்து அதனை மாற்றும் முயற்சியாகப் பாடப்பட்டிருக்கவேண்டும் எனத்தெரியவருகிறது

பொருள் பாதுகாப்பு

பொருளின் மதிப்பு அறிந்து சேமிப்பு வலியுறுத்தப்பட்டது. பொருளைச் சேமித்த பின்பு தமக்கும் தன் எச்சத்திற்கும் பயன்படும் பொருட்டு பாதுகாத்து வைப்பதும், மிகவும் அடிப்படையானது, புலிக்குக் காடு பாதுகாவலாயிருப்பது போலக் காட்டிற்குப் புலியும் காவலாகும். ஆகவே பொருளினைப் பெற்றவன் அப்பொருளைப் பாதுகாத்து வைப்பானாயின் அதுவே அவனுக்குப் பாதுகாப்பாய் அமையும் என்றும், ஒவ்வொருவரும் தத்தம் பொருளைத் தாமே பாதுகாத்தல் வேண்டும் என்றும் கூறப்பட்டது. பொருளினைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது, அக்கால அரசியல் சூழ்நிலையாலும், உறவுகள் என்று நம்பிப் பொருளைக் கொடுத்து இழந்ததனைக்கண்டும், பொருள்கள் கள்ளர்களால் களவு செய்யப்பட்டதனைக் கொண்டும் பாதுகாப்புப்பற்றிப் பேசப்பட்டது அன்றைய சமூக அமைப்பில் பொருள் ஒருவனை ஆபத்திலிருந்து காப்பாற்றியது என்பது தனிவுடைமையின் வளர்ச்சி நிலையினைச் சுட்டும் எனலாம்.

பொருளும், சமூக அங்கிகாரமும்

பொருளுடையவரை அக்காலச்சமுதாயம் மிகவும் மதிப்புடன் போற்றியிருக்கிறது. பொருள் சிறிதுடையவரை இகழக் கூடாது என்று உணர்த்துகிற போக்கையும் அறியமுடிகிறது. அதன்மூலம் பொருளின் ஆளுமையை நம்மால் புரிந்துகொள்ள வாய்ப்பாகிறது. பொருள் சிறிதுடையவரை இகழக்கூடாது. ஏனெனில் அங்காடியில் மேயும் வலிமையற்ற பழங்கன்று ஒரு நாளில் எருதுவாக மாறும் ஆதலினால், இகழாமை வேண்டும் என்று இயங்கியல் விதியினை விளக்குகிறார். இன்று அறியவ

ராய் இருப்பவர்கள் காலகதியில் பொருள் படைத்தவராய் மாறுவர். இச்சமூக உண்மையை விளக்குவதன் காரணமாக மதிப்பின்மை நேர்ந்திருக்கலாம் என்று கருதலாம். பெருஞ்செல்வமுடையவர்களின் செல்வம் சுருங்கிய விடத்தும் அவர் பிறர்க்குத் தாழ்வாகத் தோன்றார் எனும் கருத்து. சமூக அந்தஸ்தில் செல்வர்கள் உயர்ந்த நிலையில் இருந்ததனை விளக்கும்.

பொருள்காப்பாரின் தகுதி- இடம்

பொருளைத் திரட்டிச் செல்வந்தனாய் வாழ்பவன் தமது உறவு என்று நினைநது தகுதியற்றவரிடமும், சிறுமை குணம் உடையவரிடமும் தருதல் கூடாது. அவ்வாறு செய்தால் பொருள் திரும்ப வராமல் போகும் நிலை உருவாகும். ஆகவே தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து பொருள்களை ஒப்படைக்க வேண்டும் என்றும் பொருள் கைவிட்டு மாறினால் அதனை மீட்டுத் தருவார் இல்லை. ஆதலினால் பொருளைத் தக்க இடத்தில் பாதுகாத்தலே சிறப்பு என்று பேசுகிறார். பொருளை யாரும் நெருங்கமுடியாத தக்க இடத்தில் வைத்து காவல் செய்ய வேண்டும் என்றும் தகுதியற்றவரிடம் கொடுத்த பொருள் திரும்பி வராமல் போனதும், பாதுகாப்பான இடமில்லாததால் பொருள் களவாடப்பட்டிருந்ததனையும், உறவினர் போல் நடந்து ஏமாற்றிப் பொருளைப்பறித்தனையும் வலியுறுத்திக் கூறுவது மூலம் அக்காலச் சமூகப் பின்புலம் தெரிய வருகிறது.

பொருள் தேடும் காலம்

பொருள்களை எளிதில் பெறக்கூடிய காலம் எது என்று அறிந்து அக்காலத்தில் பெறுதல் வேண்டும். அவ்வாறின்றி அது கிடைக்காத காலத்தில் முயல்வதால் யாதொரு பயன் பாடும் விளைதல் இல்லை. எளிதாகக் கொள்ளக் கூடிய பொருளைக் கொள்ளாது. அரிதாயவிடத்து பின்னர் அதனை வருந்தி பெறுதலால் பயன் இல்லை என்று கூறும் கருத்து, சிந்திக்கத் தக்கது. காலத்தின் அருமை தெரியாததனாலும், திட்டமிடாத செயலினாலும், இது போன்று நிகழும் என்பதை

வெளிப்படுத்துகிறார் [போலும். காலத்தின் அருமையைக் கூறுவதன் மூலம் எக்காலமும் பொருள் பெறும் நிலை இல்லாதிருக்க வேண்டும். அதன்பொருட்டு, காலத்தினை உணர்த்திப் பாடினமை புலப்படுத்தும்.

பொருளும், களவும்

அக்காலச் சமுதாயத்தில் பெரும் செல்வந்தர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்கள் பெரும் செல்வம் பெற்றதின் காரணமாக, கள்வர்கள் பொருள்களைக் களவு செய்துவிட்டுப் போனாலும், அதற்காக வருந்தார் என்றும் மற்றும் நோக்கத் தக்கது. இப்பாடல் பெரும் பொருள்களை இழந்த செல்வந்தர்களைச் சமாதானம் செய்யும் பாங்கிலேயே அமைந்துள்ளது எனலாம்.

கடன்

கடன்களைத் ''தனிசு'' (ப. மொ. நா 298) என்றனர். எப்போதும் போல் அக்காலத்திலும் மக்கள் இன்முகத்தோடு கடன்வாங்கி முன் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கப் பின் வாங்கியவராகத் திகழ்ந்தனர். கடன் கொடுப்போர் தாம் கொடுத்த கடனுக்குச் சாட்சியின்றிக் கொடுக்கப்பட்டால் அதற்கு வழக்குத் தொடுக்கப்பட்டதையும் வழக்குக் கொடூரமானதாகத் திகழ்ந்ததனையும் அறிய முடியும். கடன் வாங்கியவர் பொருளைக் குறிப்பிட்ட காலத்தில் தராவிட்டால், கடனைக் கேட்கச் செல்லும் காலத்தில் சினந்தால் அதன் மூலம் மனக் கசப்பு உருவாகி விடும் என்று கூறுகிறார்.

சாட்சி இல்லாமல் கடன் கொடுத்தவன் ஊர் சபையை அணுகி, கடனைப் பெற்றுத்தரவேண்டும் என்று கேட்க, ஊர் வழக்கப்படி பாம்பு உறையும், குடத்திற்குள் கையை விட்டுத் தம்மை குற்றமற்றவனாய் நிரூபிக்கும்படியான வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தனையும் அறிய ஒன்றும்.. இதன் மூலம் கடன் கொடுப்பவர் சான்றுடன் கொடுக்கப்பட்டதனையும். சான்றில்லையெனில் குற்றமற்றவர்கள் கடத்தண்டனை அடைய நேர்ந்திருக்கிறது என்பதும் உய்த்துணர முடிகிறது.

கரிகாலனும் இளந்திரையனும்

செ. கோவிந்தன்

அரசினர் கல்லூரி, சித்தூர்-பாலக்காடு.

கரிகால சோழன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் என்பது தமிழறிஞர்கள் பொதுவாக ஏற்றுக்கொண்ட கொள்கையாகும் இவர்கள் கொள்கைக்கு அடிப்படை சிலப்பதிகாரத்தில் வரும் கயவாகு எனும் ஈழ மன்னனின் பெயராகும். சிலப்பதிகாரத்தின்படிக் கண்ணகி பிரதிட்டையின்போது வஞ்சி வந்திருந்த வேற்று நாட்டு மன்னர்களில் கயவாகுவும் ஒருவன். இவன் காலம் கி.பி.174-196. கரிகாலன் அவையில்தான் மாதவியின் நடன அரங்கேற்றம் நடந்தது. ஆகவே, சிலப்பதிகார காலம் கரிகாலன் காலமே. சிலப்பதிகார காலம் கயவாகு காலம் என்பததால் கரிகாலன் காலமும் கயவாகு காலமான கி. பி. இரண்டாம் நூற்றாண்டாகும் என்பது இவர்கள் கொள்கை.

ஆனால். இன்று வரலாற்று அறிஞர்கள் சிலப்பதிகார காலம் இரண்டாம் நூற்றாண்டு என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்நிலையில் கரிகாலன் காலமும் இரண்டாம் நூற்றாண்டு என்ற கொள்கை மறு பரிசீலனைக்கு உட்படவேண்டியதாயுள்ளது. பண்டைப் புலவோரான கபிலர், பரணர், பெருந்தலைச் சாத்தனார், கடியலூர் உருத்திரங் கண்ணனார், முடத்தாமக் கண்ணியார், வெண்ணிக்குயத்தியார், பெருங்குன்றூர்க் கிழார் ஆகியோரது செய்யுட்கள் தரும் அரிதான வரலாற்றுக் குறிப்புக்கள் கரிகாலன் காலம் பற்றிய புதிய கணிப்புக்களுக்கு இடம் தருகின்றது.

கரிகாலனின் தந்தை உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னி என்று பொருநராற்றுப்படை மிகத் தெளிவாகக் கூறுகின்றது.

அடி 130) உருவப் பஃறேர் என்ற தொடர் உருவப் பள்ளி (என்று மாறியிருக்கலாமோ என்று தோன்றுகிறது. இஃது உண்மையானால் இளஞ்சேட் சென்னி ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டத்திலுள்ள உருவப் பள்ளி எனும் ஊரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டு வந்திருக்கிறார் என்று கொள்ள நேரிடும். இளஞ்சேட் சென்னியென்பதிலுள்ள சேட் (சேண்) என்பதற்குத் 'தொலை' என்று தானே பொருள்? இக்காரணம் கொண்டுதான் போலும் தெலுங்குச் சோழர்கள் தங்களைக் கரிகாலன் வழித்தோன்றல்கள் என்றனர். இச்சென்னி இன்னொரு இடத்தில் (அகம் 375) 'சோழன் செருப்பாழியெறிந்த இளம் பெருஞ் சென்னி' எனப் படுகிறான். இதனை நோக்க இவன் பாழிப்போரில் (சித்தூர் மாவட்டம் மதனப்பள்ளி தாலுக்காவில் உள்ள சிர்ப்பலி, சிப்பலி, சீட்புலி என்று தற்போது அழைக்கப் படும் ஊர்) வடுக அரசனை வென்று உருவப் பள்ளிக்குத் தலைவனானான் என்று கொள்ள வேண்டியதாயுள்ளது. புறப் பொருள் வெண்பா மாலை எனும் இலக்கண நூலுக்கு இலக்கியமாக விளங்கும் பாண்டிக் கோவையில் விதந்து கூறப் படும் பாழிப் போர் இதுவாக இருக்க இடம் உள்ளது. பாண்டியன் பன்னாடு தந்த மாறன் வழுதி என்ற தொடரில் வரும் பன்னாடு எனும் பெயர் ஆந்திராவில் கடப்பை ஜில்லா வில் பல் நாடு என்று இன்றும் இருக்கின்ற ஊராகும். இன்றும் பல்நாட்டின் பல பகுதிகளில் மார்பிள் கற்கள் வெட்டியெடுக்கப் படுகின்றது. இக்குறிப்புக்களால் பண்டைத் தமிழ் அரசர் சிறப்பாகச் சோழர்கள் ஆந்திரர் மேல் (வடுகர்) போர் தொடுத்து பலமுறை வெற்றி கண்ட செய்தி உறுதிப்படும். இவ்வாறு இவர்கள் வட பகுதி நோக்கிச் செல்லக் காரணம், வடுகர்களான களப்பிரர் (கங்கர் ?) என்னும் மரபினர் தமிழ் மன்னர்களை வென்று புகார், உறையூர், மதுரை ஆகிய இடங்களை ஆண்டு வந்தமையே யாகும். பாண்டியன் தன் நாட்டை களப்பிரர்பால் இழக்க வடபால் சென்று பல்நாட்டை வெற்றி கண்ட செய்தியைத்தான் இளங்கோவடிகள் பிற் காலத்தில் 'வடதிசை கங்கையும், இமயமும் கொண்டு தென் திசையாண்ட தென்னவன் வாழி!'' (சிலம்பு 16:21-22) என்று கூறினால் போலும்.

சோழர்கள் தங்கள் நாட்டைக் களப்பிரர்பால் பறிகொடுத்தது கி.பி. நான்கு அல்லது ஐந்தாம் நூற்றாண்டாக இருக்கலாம். (கி.பி.250 தொட்டு 475 வரை தென்னகம் களப்பிரர்வசம் முழுமையாக இருந்தது ; அதனால் அக்காலம் தமிழர்களின் இருண்ட காலம் என்ற கூற்றுக்கு வரலாற்று ரீதியான ஆதாரங்கள் இல்லை) அச்சுத விக்கந்தன் (விச்கிராந்தன்) என்ற களப்பிர அரசன் புகாரை ஆண்ட காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டாகும். இது புத்த தத்தமகாதேரர் என்ற பௌத்தபிக்கு தாம் விநய விரிச்சயம் என்ற நூலை பூதமங்கலத்தில் எழுதிய போது புகாரை அச்சுதவிக்கந்தன் என்ற அரசன் ஆண்டான் என்ற குறிப்பால் தெரியவருகிறது. இப்புத்த தத்தர் புத்த கோஷாச் சாரியின் காலத்தவர். அவர் இலடங்கையரசன் மகாநாமன் கி.பி. 409-430) காலத்தவர். எனவே புத்த தத்தரும் புத்தகோஷரும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டினர் அச்சுத விக்கந்தனும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டினர். இவன் காலத்தில்தான் சோழர்கள் வடபகுதி நோக்கிச் சென்றிருக்க வேண்டும். பின்னர் காலம் பார்த்து காஞ்சியையும் புகாரையும் மீட்க முயற்சித்த காலம் பல்லவ மன்னன் முதலாம் நந்திவர்மனுக்குப் பின்னரும் சிம்ம விஷ்ணுவின் தந்தை சிம்மவர்மனுக்கு முன்னரும் உள்ள காலமாக இருக்கவேண்டும் என்பர் வரலாற்றாசிரியர்கள். (பண்டைய இந்திய வரலாறு (ஆங்.) பக்கம் 106 கே.எஸ் சுப்பிரமணியன்)

இனிச் சோழன் இளஞ்சேட் சென்னி. சேரமன்னன் குடந்கோ நெடுஞ்சேரலாதன், சென்னியின் இளவல் கரிகாலன், சேரனின் இளவல் படுகடலோட்டிய குட்டுவன் ஆகிய 'அரசர்களைக் கபிலர் கழாத்தலையார் பரணர், கடியலூர் உருத்திரங் கண்ணனார், முடத்தாமக் கண்ணியார், வெண்ணிக்குயத்தியார் ஆகியோர் பாடியுள்ளார். இவர்களில் அறிந்தோ அறியாமலோ வரலாற்றுக் குறிப்புக்களைபும் தமிழரல்லாத வேற்றரசர்கள் பெயர்களையும் நமக்குத் தந்திருப்பவர்கள் கபிலரும் பெருந்தலைச் சாத்தனாருமேயாவர். இவ்விருவரும் தமிழரல்லாத சளுக்கியர், ஆனந்தர் ஆகிய அரசர்களைப் பற்றித் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

கபிலர் குறிஞ்சிப் பாட்டில் வடநாட்டு அரசன் ஒரு பிரகதத்தனைக் குறிக்கின்றார். அகப்புறப்பாடல்களில் புலிகடிமால் விச்சிக்கோன், இருங்கோவேள் ஆகிய பெயர்களையும் தருகிறார். இம்மூன்று பெயர்களும் சளுக்கிய அரசர்களையே குறிக்கின்றன. சளுக்கியர்கள் வேளிர் குலத்தவர், மேலைக்கடலிலுள்ள துவாரகாபுரியிலிருந்து கிழக்கு நோக்கி வந்தவர்கள். அக்னி குலத்தவர். இச் செய்திகளைக் கபிலர் தம் பாடல்களில் கூறியுள்ளார். இச் சளுக்கியர்கள் வாதாபியைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவர்கள், இம்மரபின் முதல் மன்னன் விசயாதித்தன். இவனையே கபிலர் விச்சிக்கோ என்பார். (புறம் 200) விச்சிக்கோவின் மகன் இளவிச்சிக்கோவை பெருந்தலைச்சாத்தன் பாடுகிறார் (புறம் 151). இளவிச்சிக்கோவை யடுத்து புலிகடிமாலை புறம் 201 ம் பாடலில் குறிக்கிறார். துவரையாண்ட வேளிர்களில் 49-வது அரசன் என்கிறான். பொன்படுமால் வரை (ஸ்ரீசைலம்)க் கிழவன் என்கிறான். எனவே, கபிலர் பாடிய விச்சி, இளவிச்சிக்கோ புலிகடிமால் என்பவர் வரலாற்றில் முறையே சளுக்கிய விசயாதித்தன் அவன் மகன் சயசிம்மன், அவன் மகன் புலிகேசி I என்பவராவர். இவர்கள் கி.பி. 475-இல் இருந்து 566 வரை ஆட்சி புரிந்தவர்கள். பெருந்தலைச்சாத்தன் பாடிய இளங்கண்டீரக்கோன் ஆனந்த கோத்ரத்தைச்சார்ந்த இளவரசன்; இளவிச்சிக்கோவின் நண்பன். குண்டூர் மாவட்டத்தின் பகுதிகளை ஆண்டவன்; இவன் கோ நகரம் கண்டரபுரம் (கண்டேரு). [ஆந்திராவின் பண்டைய வரலாறு (ஆங்) பக். 109, கே. எஸ். சுப்ரமணியம்] கண்டரன், விஷ்ணு குண்டின் அரசர்களை வென்று தான் இப்பகுதியை ஆளத்தொடங்கினான். கிருஷ்ணயாற்றின் தலைவனான பென்ன நாதனை கண்டரன் வென்றான் எனத்தெரிகிறது. கபிலர் கூறும் பிரகத்தன் இப்பென்ன நாதனாக இருக்கக்கூடுமோ என்ற ஐயம் உள்ளது; ஏன் எனில் டாக்டர் ஹில்ஷ் தனது 'கோர்ப்பஸ் இன்ஸ்கிருப்ஷனியம் இன்டிகாரம்' எனும் நூலின் மூன்றாம் தொகுதி பக்கம் 284-18b இல் வரும் கல்வெட்டில் சுட்டப்பெறும் பிரகதாதித்தன் கிருஷ்ணயாற்றுக்கு வடக்கேயுள்ளவனாக இருக்கலாம் என்கிறார். இன்னும் ஹீணர் இனத்தை ஒடுக்குவதில் மௌதாரி அரசன் ஈசானவர்மன்

உதவியைப் பெற்ற குப்த அரசன் நரசிம்ம குப்த பாலாதித் தனாக (கி.பி.533)க்கூட இருக்கலாம். (இந்திய வரலாறு ஏ.சி. பானர்ஜி (ஆங்) ஏ. முகர்ஜி & கம். கல்கத்தா 1972 பக்.142) ஆகவே, விச்சிக்கோவின் முதுமைக்காலத்தில் இளையவனாக இருந்த கபிலர் புலிகடிமாலின் (புலிகேசி I) இளமைக்காலத்தில் முதியவராக இருந்திருக்கவேண்டும், அதனால் கபிலர் வாழ்ந்த காலம் கி.பி. 500 முதல் 560 வரையாகலாம். சளுக்கியர் அக்நி பரம்பரையினர்; இதனைத்தான் கபிலர் இருங்கோவேள் என் கிறார். (அக்நி-அங்கீரஸ்-இருங்கோ; இங்கிலீஷ்-ஆங்கிலமாவதும் காண்க)

கபிலரும் பரணரும் ஒரு காலத்தவர், பரணர் நான்காம் புறப்பாட்டில் கரிகாலன் தந்தை உருவப்பஃறே ரிளஞ்சேட் சென்னியைப் பாடுகிறார். குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேல்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் போர்ப் புறத்துப் பொருது வீழ்ந்தபோது பாடியுள்ளார். புறம் 369ல் சேரமான் கடலோட்டிய வேல் கெழு குட்டுவனைப் பாடுகிறார். சேரமான் பெருஞ்சேரலாதன் சோழன் கரிகாற் பெருவளத்தா னோடு பொருது புறப்புண் நாணி வடக்கிருந்தானைக் கழாத் தலையார் 65 ஆம் புறப்பாட்டில் பாடுகிறார். ஆனால் கபிலர் மட்டும் கரிகாலனைப் பாடவில்லை; காரணம் தெரியவில்லை; ஒரு கால் வயது முதிர்ச்சியாக இருக்கலாம். ஆகவே, கபிலருக்கு அறுபதுக்கு மேல் வயதிருக்கும்போது கரிகாலன் இளைஞனாகக் கூட இருக்கலாம்.

கரிகாலனின் காலத்தை மிக நுட்பமாக அறுதியிட்டுக்கூறு வதற்கு கலிங்கத்துப் பரணியில் ஒரு சான்றுள்ளது. அது 'கறை செய் பொன்னியில் தொடர வந்திலா முகரியைத் தண்டித்தது' ஆகும். (க.பரணி-இராசபாரம்பரியம் செய்.20) இம்முகரி கன்னோசியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த மௌகாரி இனத்தைச் சார்ந்த ஈசானவர்மன் மௌகாரியேயாகும். முகரி யால் தொடங்கப் பெற்றது மௌகாரி மரபு என்று பாண கவியின் ஹர்ஷ சரிதம் விளக்கம் கூறும். இவன் கி.பி.554ல் வெட்டிய கல்வெட்டொன்று ஆந்திரர்களையும், கௌடர்களை யும், சூனிகர்களையும் வென்றதாகக் கூறுகிறது. இச்சூளிகர்கள்

சோழர்களேயாவர். புண்ணிய குமரன் (625-655) என்ற தெலுங்குச் சோழனின் மலேபாடு (மேல்பாடி)ச் செப்பேட்டில் கரிகாலன் தன் தாமரை பாதங்களால் திரிலோசன பல்லவனின் மூன்றாவது கண்ணை அழித்தான் என்று கூறுகிறான். (சோழர்கள் (ஆங்) பக்கம் 36 கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி)

செயங்கொண்டார் இக்கதையினை மனதில் கொண்டுதான் முகரியன் மூன்றாவது கண்ணை இங்கே படத்திலிருந்து அழித்ததும் அங்கே அவனது கண் போயிற்று என்கிறார். ஒருகால் ஈசான வர்மனை (ஈசன் சிவன்)த்தான் திரிலோசன பல்லவர் என்று புண்ணிய குமரன் மாற்றிக் கூறியிருக்கலாம். இதனால் பின்னால் வந்த ஒருகதையில் திரிலோசன பல்லவனை தூய தமிழில் 'முக்கண்டி காடு வெட்டி' என்றனர் (முக்கண்களையுடையவன் முக்கண்டி) இவற்றையெல்லாம் இணைத்துப் பார்க்கும் பொழுது கரிகாலசோழன் கி.பி. 554ல் இருந்திருக்கிறான் ஆகவே, அவன் வாழந்த காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு என்பது தெரியவரும்.

இனி கரிகாலன் காலத்தவனான தொண்டைமான் இளந்திரையன் யார் எனக் காண்போம். இவனை 'முந்நீர் தரு மரபின் உரவோன் உம்பல்' என்பார் உருத்திரங்கண்ணனார். முந்நீர் கடலாகும்! 'கடல் மரபு' அல்லது 'திரை மரபு' சாகர மரபாகும். இச்சாகரர்கள் பூகியர்கள், தாதகர்கள் போன்ற புதிய மரபுகள் ஆந்திர சாதவாகனப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு கி.பி. நான்கு அல்லது ஐந்தாம் நூற்றாண்டில் எழுந்தவை. இச்சாகரர்கள் நாகர் இனத்தவரோடு மண உறவு கொண்டனர். இவ்வாறு பூகிய மரபினைச் சேர்ந்த ஸ்கந்த ஸ்ரீ என்பவன் இக்ஷுவாகு மரபைச் சேர்ந்த சாந்திஸ்ரீயை மணம் செய்து ஸ்கந்த ஸாகரம் நாகன் என்ற மகனைப் பெற்றான். இப் பெயரை தமிழ்ப் படுத்தினால் இளந்திரையன் நாகன் என்று வரும். இளந்திரையன் நாகப்பெண்ணிடம் சோழனுக்குப் பிறந்தவன் என்ற மணிமேகலைக் கூற்றை வைத்து நோக்க இளந்திரையன் சாகர மரபைச் சேர்ந்த ஸ்கந்த ஸாகரம் நாகன் தான் என்பது போதரும். ஆகவே, இளந்திரையனும் கரிகால் சோழன் காலத்தவனே.

Villu Pa:ttu: Performing Folk Art of Tamil Nadu

S. Sakthivel
Tamil University.

No systematic and scientific work has been done so far in the field of performing folk arts of Tamil Nadu. An attempt is made here in this paper to present briefly the Villu Pattu, a performing folk art of Tamil Nadu.

Tamil Nadu is very rich in Folklore. It is a storehouse of folk tradition and culture. Folk culture in general and folk arts in particular are dying under the impact of modern civilization. It is high time to preserve the vanishing folk arts of Tamil Nadu - Tamil Nadu has preserved a fascinating variety of performing folk arts.

Arts chiefly aim at the attainment of excellence, distinction, perfection and precision. Arts function as outlet for human feelings. Even though feeling and emotion are common to all, but artistic representation is found in a few persons. They used call as artists. Folk arts give pleasure for both the performing artists and the people. In its initial stage entertainment is the only criterion and real enjoyment is the only residuary value of the folk arts. Emotion as expressed in the classical art is artificial where as in folk art it is original and natural. Folk art is of great national importance and aesthetic value. Folk art the produced by the folk because they look like folk art in style, content, material and technique. Folk art is people's art. In folk arts

we find life and vigour. It becomes part and parcel of rural folk. Primitive art was the foundation for folk art and folk art was the foundation of the more refined or classical art. Most of the folk arts of Tamil Nadu form part and parcel of religious festivals. As far as Tamil Nadu is concerned religious belief is the real cause for the survivals of these folk arts In Southern Districts there is no Kotai festival without Villu Pattu and Kaniyan attam.

The performing arts are primarily concerned with traditional music, dance and drama. The performing arts spring from the creative imagination of man and reward him with the deepest satisfaction known to him. Many of the art forms consist of ceremonies that enact various myths or recapture group experiences of an earlier day or comprise rituals demanded by the system of beliefs to achieve ends held important for group survival such as ensuring rainfall or fertility or victory in combat. Folk arts are often special, anticipated, ceremonial and religious.

Villu Pa:ttu (bow song) is performed by the folk artists. It is called Vil Pa:ttu, Villup Pa:ttu and Villaticca:n Pa:ttu. This folk art has been very popular in Tirunelveli and Kanyakumari Districts. Kodai festival is considered incomplete without Villu Pattu. Kodai is conducted to propitiate village deities like sastha, Sudalaimadan, Isakki, Mariyamman and Muthalamman. When the rural folk suffer they believe that it is due to the anger of the village deity. So they seek to appease the deity by offering community worship to it.

There is no evidence in ancient Tamil literature. According to Somalay, Arasa pulavar originated Villu Pattu in the 15th century. Dr.N. Vanamamalai says that there are references in Teivaccilaiyar virali vitu tu:tu. It belongs to 16 th century.

References are also found in Mukku:tal pallu. Generally ballads are sung in the Villu Pattu. Sixteen and seventeenth centuries are considered and taken as the period when the first ballad was written. Virali vitu tu:tu and Mukku·tal Pallu were composed in the 16th and second half of 17 the century. From this it is inferred that Villu Pallu might have originated most probably in the 15th century.

In this folk art, eight persons participate in it. The leader of the group called as 'Pulavar' sitting in the centre will have two slender (vi:cuko:l) in his hands. There will be one pitcher player who will strike the mouth of pitcher with his right hand and his left hand on the body of the pitcher. One plays with utukku. Another plays cymbals The chief person, pulavar who holds vi:cuko:l controls the flow and progress of the performance. Besides the bow, utukku, Kutam, Talam and Talakkattai are also used. Villu Pattu pulavar, accompanied. by band of singers (Pin pa:ttukka:rar) who provide vocal as well as instrument accompaniment. The song of the pulavar is repeated very often in refrain by the members of the party. After the main story teller completes a line of story, the other will say in chorus a:ma:, appatiya: and eppati? Some words are repited again. Sometimes last words will be repitated by the play back singers. The deftness and the imagination with which he plays with Vi:cu ko:l is a marvel during such performance. At present there is no restriction regarding the number of members.

The programme of the Villu Pattu will be as follows:

i) Invocation to gods (Ka:ppu viruttam-Vinayakar vanakkam A prayer to Gods in the story and also gods in the village where performance is held.

ii) A prayer to Guru 'entan kuruna:tan malar pa:tam atiye:n'

iii) A humble homage to audience (the audience is requested to excuse the group for their omissions and commissions if any during the course of performance)

iv) Narrating story

v) Conclusion (Benediction) Ends with 'Vali pa:tutal' a prayer for long life and thanks giving to all

There are some groups who strictly follow these traditions even to-day. Artist will narrate the birth of Sastha (Ayyanar) in short irrespective of story selected. In the middle of performance the chief expresses his heartfelt thanks to persons who presents 'moy', Sometimes performance will be held throughout night. People used to say 'Villaticca:n ko:yilile: Vilakku vaikka ne:ramille' (there is no time even for lightning the lamps there). The common ragas which are used in Villu Pattu are Kalyani, kambodhi, pilahari, pupalam, muhari and nilampari. The last two are compulsory in Villu Pattu.

Thovalai Sundaram Pillai revolutionized Villupattu it several ways. There was a saying in Nanjil Nadu that 'Collukku sundaram, Villukku kolappan and pe:ykku na.rayanan' which means Sundaram is famous for his chaste Tamil, Kolappan for his playing of Veesukol and Narayanan for narrating the story of evil spirits. Sundaram pillai used Villu Pattu as a mass media for national resurgence. The contribution of Sattur Pichaikutti in Villupattu was a significant one. He was the first man who performed Villu Pattu other than for religious. Sattur Pichaikutti has introduced new instruments to:lak, a:rme:niyam and Pulpulta:na. Subbu Arumugham modernized Villu Pattu by adding electronic musical instrument. N.S. Krishnan has popularised

this folk art throughout Tamil Nadu through films. Subbu Arumugham says 'If Kalaivanar is alive Villu Pattu would have become an International narrative art.'

Stories depicting the triumph of good over evil seem to have been very popular in country side. Now Government agencies have been making use of this form to put across messages of social reforms, untouchability and family planning.

அரசு அலுவலகங்களில் தமிழ் ஓர் கண்ணோட்டம்

கொடுமுடி ச. சண்முகம்
புதுவைப் பல்கலைக் கழகம்.

தமிழ் நாட்டில் ஆங்கிலத்தின் ஆதிக்கம் சற்றே தன் பிடியைக் குறைத்துக் கொண்டு வருகிறது. அந்த இடத்தில் தமிழை ஏற்றி வைக்கும் பொறுப்பு இந்தத் தலைமுறையினரிடம் வந்துள்ளது. ஒப்பந்தங்கள், குறிப்பீட்டுரைகள், விலைவிவரப்பட்டியல், தகவல் நூல் முதலியன தமிழில் எழுத வேண்டிய அவசியம் வந்துள்ளது.

தொடக்கத்தில் அத்தனையும் மொழிபெயர்ப்பு வழியாகவே செய்ய வேண்டியுள்ளது. ஆங்கிலத்தின் மொழியமைப்பும் தமிழின் மொழியமைப்பும் அடிப்படையில் பல வேறுபாடு கொண்டனவாக உள்ளன. மொழியின் பண்பறிந்து பொருள் சிறப்பிற்கு அதிக முக்கியம் அளிக்க வேண்டியுள்ளது.

அரசு அலுவலகங்களில் முதலில் தமிழில் எழுதினால் போதும் என்ற நிலை இருந்தது. தற்போது நல்ல தமிழில் இருக்க வேண்டும் என்ற உந்தல் ஏற்பட்டுள்ளது.

ஆங்கிலத்திலிருந்து, தமிழுக்கு மாறியபோது ஆங்கிலக் கட்டகத்திலேயே, தமிழ்ச் சொற்களைப் போடும் பழக்கம் ஆட்சி பெற்றது. சில வடிவங்களைக் காண்போம்.

அ) பார்வை: 1. அரசு ஆணை நிலை எண். 2181 பொது
நாள் 5.10.83

2. திரு.கொடுமுடி ச.சண்முகன், உதவிச் செயற் பொறியாளர் விண்ணப்பம் நாள் 26.7.85

ஆங்கிலத்தில் இதன் வடிவம்

Reference: 1. G O. (Permanent) No. 2181 PWD dt-5.10.83

2. Thiru. K.S.Shanmugam, AEE application dated 26 7.85

ஆங்கிலம் தமிழ் இரண்டையும் ஒப்பிட்டுப்பார்த்தால் ஆங்கிலக் கட்டகத்தில், எங்கெங்கு ஆங்கிலச் சொற்கள் வருகின்றனவோ அங்கங்கு அதனதன் தமிழ் இணைகள் இட்டு நிரப்பப்பட்டுள்ளன ஆங்கிலத்தில் உள்ளனவற்றைப் படிக்கும் போது ஓட்டம் உள்ளது. தமிழில் படிக்கும் போது ஓட்டம் இல்லை. ஒன்றின் மொழிமரபு மற்றதற்குப் பொருந்தவில்லை இருந்த போதிலும் தமிழ் எழுத்துகளில் கண்டாலே போதும என்றிருந்த காலத்தில், மொழியின் இனிமையை வற்புறுத்த முடியவில்லை.

தமிழல் எப்படி அமைய வேண்டுமென்பதைக் காண்போம். முதல் குறிப்பு ஓர் அரசாணை பற்றியது. அரசாணைகள் மூன்று வகைப்படும், நிலை, வாலாயம், பல்வகை என மூன்று வகைப்படும், அதில் நிலை வகையைச் சேர்ந்தது இவ்வரசாணை. அரசில் பல்வேறு துறைகள் உள்ளன. பொதுப் பணித்துறையிலிருந்து வெளியானது இவ்வரசாணை. இதற்கென ஒரு எண் உண்டு, ஒரு குறிப்பிட்ட தேதியில் வெளியானது. எனவே நான்கு அடையாளக் குறிப்புகள் கொண்ட அரசாணை. தமிழ் முறைப்படி பண்புகள் முன்னால் வரும்

அரசாணை:
நிலை வகையைச் சேர்ந்தது
பொதுப் பணித்துறை வெளியிட்டது.
2181 எண் கொண்டது
5.10.83 நாளிட்டது.
பொபது 2181 எண் கொண்ட

5.10.83. நாளிட்ட
நிலை அரசாணை

1. பொபது 2181 எண் 5.10.83 நாள் நிலை அரசாணை. இதில் எண்கொண்ட, நாளிட்ட என்பவற்றை எண்-நாள் எனச் சுருக்கிக் கொள்ளலாம்.

ஆ. **Thiru K.S.Shanmugam, AEE,** application dated 26.7.85

திரு. கொடுமுடிச. சண்முகன், உதவிச் செயற்பொறியாளர்
விண்ணப்பம் நாள் 26.7.85

விண்ணப்பம்
26.7.85 நாள் கொண்டது
கொடுமுடி ச.சண்முகன் அவர்களுடையது.
அவர் உதவிச் செயற்பொறியாளர்

உதவிச் செயற்பொறியாளர்
திரு.கொடுமுடி. ச. சண்முகன் அவர்களின்
26.7.86 நாள் விண்ணப்பம்

இ. தற்போது கொடுமுடி ச.சண்முகன் உதவிச் செயற் பொறியாளர் விண்ணப்பம் என்ற ஆங்கிலக் கட்டகத்தின்படி எழுதப்படுகிறது. விண்ணப்பம் சண்முகனாருடையது. அவர் உதவிச் செயற்பொறியாளராக இருக்கிறார். எனவே உதவி செயற்பொறியாளர், சண்முகன் விண்ணப்பம் என்றிருத்தலே முறை.

பல இடங்களில் இந்த ஒழுங்கு மாற வேண்டியுள்ளது கடிதங்களை மேலதிகாரிகளுக்குப் பணிந்தனுப்பும்போது எழுதும் வாசகம் வருமாறு.

செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, சேலம் கோட்டம், குமாரசாமிப்பட்டி, சேலத்துக்குப் பணிந்தனுப்புகிறது. **Submitted to Exe. Engineer/PWD/Salem Division Komarasamypatti, Salem** என்பதன் நேரடி மொழிபெயர்ப்பு சேலத்துக்கா பணிந்தனுப்புபகிறோம். செயற்பொறியாளருக்குப்பணிந்தனுப்புகிறோம். மற்றவை செயற் பொறியாளரின்

முகவரி தமிழ் கட்டக முறைப்படி எழுதுவதாயின், நிரலை மாற்றி அமைக்கவேண்டும்.

சேலம், கொமாரசாமிப்பட்டி, சேலம் கோட்டம், பொதுப் பணித்துறை செயற்பொறியாளருக்குப் பணிந்தனுப்பப்படுகிறது என்பதே முறை.

கடிதங்களின் முகவரிகள் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு ஆங்கிலக் கட்டகத்திலேயே இறக்கப்படுகின்றன.

From	To
K.S.Shanmugam,M.E.,	The Chief Engineer(Gl.)
Executive Engineer/PWD/	Public Works Department,
Project Investigation Division.	Madras-600 005.
Salem-636 016	

Letter No ROC. 8210/88/dt.26.12.88

வரைநர்	பெறுநர்
கொடுமுடி.ச.சண்முகன்,எம்.இ.,	தலைமைப் பொறியாளர் (பொது)
செயற்பொறியாளர்/பொபது/	பொதுப்பணித்துறை
திட்ட ஆய்வுக்கோட்டம்,	சென்னை. 600 005
சேலம்.636 016	

ந.க எண் 8210/88/நாள் 26.12.88

இதன் ஆங்கிலக் கட்டகத்தை மாற்றி தமிழில் எழுதுவதாயின் பின் கண்டவாறு எழுதலாம்.

சேலம். 636 016	சென்னை. 600 005
திட்டாய்வுக் கோட்டம்,	பொதுப்பணித்துறை,
பொபது, செயற்பொறியாளர்	பொதுத் தலைமைப் பொறியாளர்.
கொடுமுடி. ச. சண்முகன்	
அவர்கள்	அவர்களுக்கு எழுதியது

8210/88/எண்கொண்ட 1988.12.26 நாளிட்ட நடப்புக் கடிதம்

உ. இதில் கட்டகம் தவிர வேறு சில மாற்றங்களும் குறிப்பிடத்தக்கது தலைமைப் பொறியாளர் (பொது) தலைமைப்பொறியாளர் (கட்டடம்) தலைமைப்பொறியாளர் (நிலநீர்) போன்றவற்றை, பொதுத் தலைமைப்பொறியாளர், கட்டடத் தலைமைப் பொறியாளர். நிலநீர்த் தலைமைபொறியாளர் எனப் பொருத்தமாக இருக்கும்.

நகல் தலைமைப்பொறியாளர் (கட்டடத்) .துக்குப் பணிந்தனுப்பப்படுகிறது என எழுதும் அவலத்தைத் தவிர்த்து, கட்டடத் தலைமைப் பொறியாளருக்குப் பணிந்தனுப்பலாம்.

ஊ. தேதியை எண்ணால் எழுதும் முறையை நிலைப்படுத்தி இந்தியச் செந்தர நிறுவனம் ஒரு சுவடி வெளியிட்டுள்ளது. 7900/1976 எண் கொண்டது அது, அனைத்துலகச் செந்தர நிறுவனத்தின் சுவடி ஒன்றினை அடிப்படையாகக் கொண்டது, தேதி-மாதம்-ஆண்டு என்னும் முறையில் எழுதுவதற்குப் பதிலாக ஆண்டு-மாதம்-தேதி என்றவாறு எழுதவேண்டும்.

இறங்குவரிசையில் பல நன்மைகள் உண்டு

1. ஆண்டு - மாதம்-தேதி - மணி-விநாடி - நொடி என்றவாறு தொடர்ந்து கீழ்வாய் இலக்கத்தில் எழுதலாம்.
2. கூட்டல், கழித்தல் செய்வதற்கு ஏற்ற வகையில் உள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் மொழியின் வாசகத்திற்கேற்ப உள்ளது. 1988ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ந் தேதி எனப்படிக்கலாம் (1988.12.26). ஆங்கிலமொழி ஒழுங்கிற்கேற்ப **This day the twenty sixth of December** 1988 என்பது தான் தற்போது 26.12.1988 என எழுதப்படுகிறது.

இந்தியச் செந்தரநிறுவனச் சான்று உள்ளதால், அதை எல்லோரும் பின்பற்றலாம். யாருடைய ஒப்புதலும் முன்னனுமதியும் தேவையில்லை.

எ. As per your letter number First cited ... என்பதை உங்கள் கடித எண் 1 இன் படி ... என எழுது கிறார்கள். உங்களுடைய முதல் கடிதத்தின்படி...... என இருத்தல் வேண்டும்.

ஏ. **As quoted in your letter number cited above** என்பதை மேற்கண்ட உங்கள் கடித எண்ணில் கூறியவாறு ...... என எழுதுவர். மேற்கண்ட உங்கள் கடிதத்தில் கண்ட வாறு...... என இருந்தால்போதும்.

ஒ. சிற்றெண் இடுதலில் தமிழ் உயிர் பத்து எழுத்து களை மட்டும் பயன்படுத்தலாம் அ இ உ எ ஒ என்ற 5 குறிலும் 1, 3, 5, 7, 9 என்ற 5 ஒற்றைப்படை எண்களையும் ஆ ஈ ஊ ஏ ஓ என்ற 5 நெடில்கள் 2, 4, 6, 8, 10 என்ற 5 இரட்டைப்படை எண்களையும் சுட்டும் 11, 12, 13 என்பன அஅ, அஆ, அஇ... என்றவாறு தொடரும், ஆங்கிலம் இதற்கு ஒரு மோசமான உதாரணம்

a, b c ......x, y z என்பன 26 எண்களைச் சுட்டும் aa, ab, ac ...... ax, ay, az ... என்பன 27, 28, 26 ... 50, 51 52 என்று பொருள்படும். எனவே ஆங்கிலத்தைவிட தமிழ் எழுத்துகள் மிகவும் பொருத்தமானவை ஐ, ஔ என்பன வற்றை எண்வகையில் ஒதுக்கிவிடுகிறோம்.

ஒ. கடந்த 300 ஆண்டுகளாக ஆங்கிலத்தோடு புழங்கி யிருந்தோம். தமிழுக்கு மாறும்போது தமிழில் எண்ணி எழுதாமல் போய்விட்டோம். நமது பெற்றோருக்கு எழு துவதாக எண்ணிக்கொண்டால் தமிழ் மரபு வந்துவிடும்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பது நம் நோக்கம், ஆங்கிலச் சட்டகத்தில் தமிழ் எழுத்துகளைப் பெய்வது தமிழாகாது. அரசு அதிகாரிகள் நல்ல தமிழில் எழுதப் பழக வேண்டும். அப்போது தான் தமிழ் நாடு அரசு உண்மை யிலேயே தமிழ் நாடும் அரசாகி, மேன்மேலும் உயரும்.

உசபூசை சூரியவழிபாடே

அ. சண்முகம் பிள்ளை
கேரளப் பல்கலைக்கழகம்.

அறிவியல் முறைப்படி சிந்திக்கவோ, இயற்கையின் ஆற்றலையும் செயலையும அறிந்து கொள்ளவோ முடியாத போது, நம்பிக்கை ஒன்றே மனித வாழ்வினை நடத்திச் செல்லும் சாரதியகா விளங்குகிறது. அந்நம்பிக்கையினடிப்படையில் தனக்கு நலன் அளிக்கவும், தனக்கு அளிக்கப்பட்ட நலனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டாகவும் இயற்கையை வணங்கத் தொடங்கினான்.

''கொடிநிலை கந்தழி வள்ளியென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே''
(தொல்.பொருள். 85)

என்பது தொல்காப்பிய நூற்பா. பழந்தமிழர்கள் கடவுளைச் சூரியன், சந்திரன் முதலிய ஒளியுடைய பொருள்கள் மூலம் தொடக்கத்தில் வழிபட்டார்கள் என்பதை இது குறிப்பிடுகின்றது. காலப்போக்கில் மனிதனின் கலைத்திறனின் பெருக்கத்தால் உருவ வழிபாடு உருப்பெற்று வளர்ச்சியடைந்தது. வழிபடுபவர் மட்டுமன்றி அவரைச் சார்ந்தோரும் இதனால் பயனடைகிறார்கள் என்பதால். 'ஆலயந் தொழுவது சாலவும் நன்றென்று' கருதப்பட்டது. திருமூலரும்,

''முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்கு தீங்குள வாரி வளங்குன்றும்''
(திருமந்திரம். 518)

என்று பூசையை வலியுறுத்துகிறார். இந்துக்கள், அளவில் சைவர்கள் ஆயினும் வைணவராயினும் சிறப்பாக வற்புறுத்துவது பூசை அல்லது திருவாராதனத்தையே. ஆலயத்திற்கு ஆலயம் மாறுபடும் இப்பூசை பலபெயர்களில், பலகாலங்களில் ஆலயங்களில் நடைபெறுகின்றன.

கேரளத்திலும், தமிழகத்தின் சில பகுதிகளிலுமுள்ள ஆலயங்களில் காலை வழிபாடு 'உசபூசை' யுடன் தொடங்குகிறது. பள்ளியறையில் துயில் கொள்கின்ற இறைவனைக் கதிரவன் தோன்றுமுன திருக்கோலத்தில் எழுந்தருளச்செய்து பூசை செய்வதுதான் உசபூசை என்கிறார் உத்தமன்[1]. இறைவனைத் துயிலெழுப்புவதும் ஒரு அங்கமாயினும், இது சூரியனுக்குரிய பூசையே என்பதும், இச்சூரிய வழிபாடு கேரளத்தில் (திருவாங்கூர்) அர்த்தநாரி சூரிய வழிபாடாகக் காணக்கிடக்கிறது என்பதும் இக்கட்டுரையில் விளக்கம் பெறுகின்றன.

சூரிய பூசை

ஆகமவிதிப்படி காலையில் ஆலயங்களில் கண்டிப்பாகச் செய்யப்பட வேண்டிய கிரியைகளில் சூரிய பூசையும் ஒன்று. சூரியபூசையின் போது சூரியபகவானும் அவருடைய சகாக்களும் அட்டதிக்குப் பாலகர்களும் அதிகாரம் பெற்ற ஆசாரியரால் அழைத்து ஆராதிக்கப்படும் போது நவக்கிரகங்கள் தொடர்பான தேவகணங்கள் தோன்றி ஆலயத்தில் ஏற்பட்டுள்ள புண்யாகக் கூடாரக் கவசத்துள் அருட்பணி தொடங்குகின்றனரென்று வெறும் அனுமானத்தாலன்றி நிச்சயமாகக் கூறிவிடலாம். ஏனெனில், முறைப்படி ஆவாகணஞ் செய்யின், அழைக்கப்படும் தேவர்களும் மூர்த்திகளும் தோன்றுவர் (பிரசன்னமாவர்) என்பது ஆகமங்களின் துணிபு.[2] எனவே, இந்த உசக்கால் ஆராதனத்தால் ஆண், பெண், சிசுக்கள் - இவர்களுக்கு நன்மை (ஷேமம்) உண்டாகும் வாய்ப்புள்ளது. இதன் தேவையறியப் படாமையால் இன்று பெரும்பாலும் இப்பூசை முறையாகச் செய்யப்படுவதில்லை எனலாம். ஆனால், வழிபாட்டு முறைகளில் கட்டுப்பாட்டையும் கண்டிப்பையும் வலியுறுத்தும் சாக்த ஆகமங்களின் செல்வாக்கு மிகுதியால் பண்டைய சேரநாட்டு ஆலயங்கள் இவற்றில் கட்டுக்கோப்புடன் செயலாற்றின என்ப

தறியலாம். மேலும், வேதங்களில் சூரியனும் விஷ்ணுவும் ஒன்றாக அறியப்படுவது[3], சூரியனே விஷ்ணுவாக மாறி வளர்ந் திருக்க வேண்டுமென்பது[4], என்பனபோன்ற கருத்தேற்றங் களால் வைணவ ஆலயங்களில் இக்கட்டுப்பாடு இன்னும் மிகுதி யாகவே காணப்பட்டது எனலாம்.

உசை என்னும் பெண்

வேதங்களில் சூரியன் உதிப்பதற்குமுன் அதிகாலையில் தோன்றுகின்ற ஒளி 'உசை' (உஷஸ்) என்னும் பெண் தெய்வ மாகக் குறிக்கப்படுகிறாள். பெண்மையின் இன்பத்தை எல்லாம் திரட்டியுருவாக்கிய எழிலுருவான அவள், தனது காதலனாகிய சூரியனுடன் எப்பொழுதும் திகழ்கிறாள் என்கிறது வேதம்[5].

அர்த்தநாரி வடிவம்

வேதம் தனியாகத் தெய்வத்தைப் பாடுவது போல், சில கவிதைகளில் இரட்டைத் தெய்வங்களையோ அல்லது மேற்பட்ட தெய்வங்களையோ இணைத்துப் பாடுவதுண்டு. இதனை அடிப் படையாகக் கொண்டு எழுந்தவையே சிவனுக்கும் விஷ்ணுவிற்கு முரிய 'அர்த்தநாரி' வடிவங்கள். (அர்த்தநாரீசுவரர், அர்த்த நாரி விஷ்ணு) உமையொரு பாகனான சிவன்போல-இலட்சுமி பாகனாகத்திகழும் நாராயணன் போல-உசையை ஒரு பாக மாகக் கொண்டு திகழுகிறார் அர்த்தநாரி சூரிய பகவான்[6].

தமிழ்நாட்டில் சோழப்பேரரசர்களால் இந்த அர்த்த நாரிசூரியன் வணங்கப்பட்டு வந்துள்ளதை கும்பகோணத்திற்கு அருகிலுள்ள 'தாராசுரம்' ஆலயச் சிற்பம் ஒன்றால் அறியலாம். கி.பி. 1265ஆம் ஆண்டையொட்டி இரண்டாம் இராஜராஜ சோழனால் கட்டப்பட்ட இவ்வாலயத்தின் முன் மண்டபச் சிற்பத்தை அர்த்தநாரி சூரியன் சிற்பம் என்று சமீபத்தில் ஆராய்ந்து விளக்கியுள்ளார் இரா. நாகசாமி[7]. இவ்வாலயம் சாக்தமரபைப் பின்பற்றி வந்துள்ளதாகத் தெரிகிறது. எனவே தனக்கு முன்னர் வெளிப்பட்டு, உலக இருளை அகற்றுகின்ற உசையை தனது அருள் சக்தியாகக் கொண்டு, ஆணும் பெண்ணு மாக இணைந்த உருக்கொண்டு அருள் பாலிக்கும் சூரியனை, இவ்வாறு வழிபடும் மரபு (தமிழ்நாட்டில்) உண்டென்பது புலனாகிறது.

திருவதாங்கூர் ஆலயங்களில் இப்பூசையின்போது சூரிய உதயத்திற்கு முன்பாக இறைவனுக்குத் திருவமுதுடன் தீபாராதனை முதலான பூசை முறைகள் தொடங்கப் பெறுவதில் உள்ள கட்டுப்பாடும், உசபூசை' என்னும் பெயரிலேயே இப் பூசை வழங்கப்பெறுவதும் கொண்டு நோக்கும்போது, இப் பூசை நடைபெற வேண்டிய காலம் மற்றும் இதற்கும் 'உசை'க்கும் உள்ள தொடர்பு போன்றவை தெளிவாய்ப் புலப்படுமாறுள்ளது. மேலும், இப்பூசை முடிவுறும் போது சூரியன் உதித்து விடுகிறான். உத்தரகாரண ஆகமத்திலும் இப்பூசையின் முடிவில் சூரியன் உதிக்க வேண்டுமென்ற குறிப்பு உள்ளது[8]. இவற்றைத் தொகுத்து நோக்கும்போது உசபூசை சூரியனுக்குரிய பூசையே என்றும், இங்கு சூரியன் உசையொரு பாகனாக-அர்த்த நாரி சூரியனாகக் கருத்திற் கொண்டு வழிபடப்படுகிறான் என்றும் கருத இடமுள்ளது. இது கடவுளில் தாய்மை கூறப்படும் சாக்தத்தின் கவர்ச்சிகரமான வழிபாட்டு முறைகளில் ஒன்றேயாகும் இவ்விதம் தாய்மைத் தத்துவத்தை அதிகமாக வலியுறுத்துவது கண்டே மேல்நாட்டார் சாக்தத்தை, 'பெண்ணுக்கு உரிமை கேட்கும் ஓர் ஒருமையாளர் கோட்பாடு' என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் உண்மையில் இதில், சக்தியைப் பெண் என்று உருவகமாகவும் அடையாளமாகவுமே கொள்ளப்படுகிறது என்பார் டி. எம். பி. மகாதேவன்[9]. இவ்வாறு சாக்த ஆகமங்கள் செல்வாக்குப் பெற்றுள்ள கேரளத்தில் 'மூன்றும் மூன்றுக்கு மேற்பட்டதுமான திருக்காலங்களைப் பெற்றுள்ள ஆலயங்களிலெல்லாம் காலைப் பூசை 6-30 மணிக்குள் முடிக்கப் படவேண்டுமென்று[10] வரைமுறை செய்யப்பட்டுள்ளமை, சாக்த மரபைப் பிரதிபலிக்கும் தாராசுர ஆலயச் சிற்பம் போன்று அர்த்தநாரி சூரிய வழிபாட்டை வலியுறுத்தவே என்றால் அது மிகையாகாது.

இவ்விதம் 'உசபூசை' என்பது இறைவனைத் துயிலுணர்த்திச் செய்யப்படும் முதல்பூசை என்னும் கருதுகோளுக்கெதிராய், அது ஒரு சூரியபூசையே என்றும், கடவுளில் தாய்மை காணும் சாக்தத்தின் செல்வாக்குப்பெற்ற ஆலயங்களில் இச் சூரியன் அர்த்தநாரி சூரியனாகக் கருதப்பட்டான் என்பதும் தெளிவாகும் சில கல்வெட்டுக்களில் தமிழுக்கும் மலையாளத்

திற்கும் பொதுவான 'புலரி' என்னும் சொல்லாலும் இத்திருக் காலம் குறிக்கப்பட்டுள்ளமை சிறப்பாகும்[11] சில ஆலயங்களில் இவை பிற்கால மன்னர் தொடர்பால் பெயர் மாற்றங் கொண் டாலும் பழையபெயர் 'உசபூசை' என்பதுவே. இதனைச் சான்று களால் நிறுவலாம். திருவதாங்கூரின் ஆளுகைக்குட்பட்டு தற்போது தமிழகத்துடன் இணைக்கப்பட்ட சுசீந்திரம் ஆலயத்தில் உசபூசை உதயமார்த்தாண்ட பூசை என்று இரு பெயர்களில் அழைக்கப்படினும் உசபூசையே பழைய பெயரென் றும் உதய மார்த்தாண்ட பூசை என்பது பிற்கால மன்னர் தொடர்பால் பெயர் மாற்றம் கொண்டது என்பதும் அவ் வாலயக் கல்வெட்டாலறியப்படுகிறது[12].

அடிக்குறிப்புகள்

1) உத்தமன், 'ஆறுகால பூஜை' இந்துமதம் அழைக்கிறது. அக் '85' ப 3
2) ஆ. சொக்கலிங்கம், ஆலயங்களின் உட்பொருள் விளக்கம். II. ப. 216
3) வேத உரையாசிரியர் 'யஸ்கர்' சூரியன்தான் விஷ்ணு என்றே கூறியிருக்கிறார்
4) கு. அருணாசலக் கவுண்டர், தமிழ் பண்பாட்டில் வைணவம். ப. 2
5) இரா. நாகசாமி, 'அர்த்தநாரி சூரியன்', தினமணி 15—1—88, ப. 1
6) மேற்படி, ப. IV
7) மேற்படி, ப. I & IV
8) K. K Pillai, The Sucindram Temple p. 208
9) டி. எம். பி. மகாதேவன், இந்து சமயத் தத்துவம். பக். 186-187
10) The Travancore Devaswom Manual, Vol. I, Part I, p. 58
11) கிளிமானூர் மற்றும் வெள்ளலூர் கல்வெட்டுக்களில் 'புலரி' என்று குறிக்கப்பட்டுள்ளது.
12) K. K. Pillai, op., cit. p. 209

குற்றவியல் - ஒரு சமுதாய நோக்கு

சாமி. சந்திரசேகரன்
திருச்சி.

குற்றம் இழைக்கும் தன்மையற்ற ஒரு சமுதாயத்தை நாம் காணுதல் மிக அரிது. ஒவ்வொரு மனிதனும் சரியான பாதையில் செலல வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறான். கடுங் குற்றவாளிகள்கூட மற்றவர்கள் சரியான நடைபோட வேண்டும் என்று பெரும்பாலும் எதிர்பார்ப்பார்கள். ஆனால் சில மனிதர்கள் திசை மாறிய பறவைகளாகச் சமுதாய வானில் குற்றவாளிகளாக பறக்கின்றார்கள். மனிதன் சமுதாயத்தின் ஒரு அங்கமாகப் பிரிக்கப்பட்டுவிட முடியாமல் இணைநடை போடுகின்றான். அவன் வாழும் சமுதாயத்தில்தான் அவனது உரிமைகளும், விருப்பங்களும் காக்கப்படுகின்றன. ஆனால் அதே சமயத்தில் அவனுக்குச் சில கடமைகளும் விதிக்கப்பட்டுள்ளன. எப்பொழுது அவன் மற்ற சக மனிதர்களின் உரிமைகளுக்குச் சரியான மரியாதை அளிக்கவில்லையோ அப்போது தடம்புரண்ட இரயிலாக குற்றவாளி ஆகின்றான். ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் விதிக்கப்பட்ட கடமையாக, வாழும் சமுதாயத்தைச் சரியான பாதையில் செலுத்த வேண்டிய பொறுப்பு உள்ளது. அத்தகைய சிரமமான காரியத்தைக் கைக்கொள்ள, மேற்கொள்ள அது எடுத்துக்கொள்ளும் சிறந்த கருவியே சட்டம் என்பது. மனிதனது நடத்தை அவன் வாழும் சமுதாயத்தில், சட்டம் அனுமதிக்கும் என்றால் சட்டபூர்வமானது என்றும் அனுமதிக்காது என்றால் சட்ட விரோதமானது ஏன்று கொள்ளப்படுகிறது.

பன்னெடுங்காலமாக, தொடர் ஓட்டமாக குற்றங்கள் அதிகரித்து கொண்டுதான் இருக்கின்றன. அதில் உலகப் பொதுவுடைமையைக் காணலாம். ஆனால் இந்தியா என்று கொள்ளும்

போது குற்றம் அதிகரிப்புச் சதவீதம், மற்ற நாடுகளைக் காணும் பொழுது சற்றுக் குறைவாக இருப்பதைக் காணலாம் குடும்பத் தலைமை அதன் மற்ற உறுப்பினர்களை அணைத்து அரவணைத்து ஆளும் தன்மையோடு, ஆளுகைத் தன்மையும் மேம்பட்டு இருப்பதே இதற்குக் காரணம். இதனினும் மிக முக்கியமாக ஆன்மீகம் இங்கே கரைபுரண்டு ஓடுவதே காரணம்.

சட்டம் கொண்டு எடைபோடப்படும் பண்பாடு, அறவழி ஈடுபாடு

ஒரு நாட்டில் வழங்கப்படும் குற்றவியல் சட்டங்களைக் கொண்டே அந்நாட்டின் பண்பரட்டின் மேன்மையையும், அழுத்தத்தையும், அறவழியில் அது கொண்டுள்ள ஈடுபாட்டையும் எடைபோடலாம். சூதாட்டததை ஒழிக்கும் வண்ணமாக சூதாட்ட ஒழிப்புச் சட்டம் இந்தியாவில் இருககிறது மூத்தோர் வகுத்த மூன்று பெருந்தீமைகளான கட்குடி, சூதாடுதல், பிறன் மனை நயத்தலில் ஒன்றான மனிதனது உழைக்கும் எண்ணத்தையும், வேகத்தையும் மாற்றிவிடக் கூடிய சூதாட்டம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்கு ஏற்படுத்தப்பட்டதே அந்தச் சட்டம். மது மனிதனின் உடலை மட்டும் அல்லாது அவனது ஆன்மாவையே கீழ்மைப் படுத்தும் என்பதை நன்கு உணர்ந்தே மது விலக்குச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தியாவில் பல மாநிலங்களுக்கு பணத்தின்மேல் கொண்ட மயக்கம், மனிதனின் மனதை மயக்கச்செய்யும், போதைக்கு அடிமையாகி பல போதைகளை உருவாக்கிவிடும் கொடிய மதுக்கடைகளை திறக்க வேண்டி ஆகிவிட்டது. ஒருவனுக்கு ஒருத்தி என்று வரையறுத்து மனித நாகரிகத்தை மேன்மைப்படுத்த, உடலை விலை பேசிடும் அநாகரிக வழக்கத்தைப் போக்கிட விபச்சாரத் தடைச் சட்டம் அமுலில் உள்ளது. பெண்ணைத் தாயாகப் பேணிப் போற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தும் இந்தியா, பெண்ணைப் போதைப் பொருளாகக் கொண்டு அவளது விருப்பத்துக்கு மாறாகப் புணர்ச்சி கொள்ளும் ஆடவனைக் கடுமையான தண்டனைக்குள்ளாக்குகிறது. இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 376-ல் பிறன்மனை நயவாமையை வலியுறுத்தி, திருமணமான பெண்களுடன் தொடர்பு கொள்வதைக் குற்றமாகக் கருதி தண்டனைக்குள்ளாக்குகிறது நம் நாட்டுச்சட்டம் (இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 497).

மேலே கண்டவைகள் உயர்ந்த பண்பாட்டின், கலாச்சாரத்தின் மாண்பைக் காட்டிட, கட்டுப்பாட்டு நெறியினை போதிக்கும் வல்லமை கொண்டுள்ளது.

அறச்சட்டம், சட்டம்

சட்டம் என்பது ஒரு முடிவை நோக்கிப் போகும் ஒரு வழி (Law is a means to an end), அந்த முடிவு என்ன என்று பார்க்கும் பொழுது பரந்து, விரிந்த நிலையில் அனைவருக்கும் நீதி வழங்குவதே. அறநெறி என்பது மனிதனுடைய இதயத்திலிருந்து அவனுடைய உயர்ந்த எண்ணங்களில் இருந்து பிறக்கிறது. அறவழியில் நடைபோட வேண்டும் என்று மனிதன் விரும்பினால் அவன் அற நிலையைக் கைக்கொள்கிறான் என்று ஆகிறது. உண்மையில் அவன் அப்படி அறவழியில் செல்ல வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுவதில்லை. கட்டாயத்தினால் அவன் அறவழி செல்லப் படுகிறான் என்றால் அவனை அறவழிச் சான்றோன் எனக் கொள்ளுதல் கடினம். அகத்தில் தோன்றி மனிதனை அறவழிப் படுத்துவது அறம், புறத்தே புனரமைப்பது சட்டம்.

சட்டத்தில் எதிர்பார்ப்பது

1) சமுதாயத்தின் தேவைக்கேற்ப, காலத்தின் அவசியம் நோக்கி சட்டம் தன்னை ஓரளவு மாற்றிக் கொள்வதில் தவறில்லை.

2) மனிதன் ஒரு சிறந்த வாழ்க்கை வாழ்வதற்கான, மேற்கொள்வதற்கான வழிமுறையை, பாதையைச் சட்டம் காண்பிக்க வேண்டும்.

3) மனிதர்களுக்கிடையே உள்ள பொதுமை, சரிசமமான தன்மைகளை, பாங்கை மேம்படுத்தக்கூடியதாக சட்டம் விளங்கவேண்டும்.

4) மனிதனின் கடமையை வலியுறுத்தி அதே சமயத்தில் அவனது உரிமைகளைக் காக்கும் சாதனமாக அது விளங்க வேண்டும்.

5) சட்டங்கள் இயற்றப்படும்பொழுது அறக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டதாக விளங்குவதுடன் அது செயல்படுத்தப்படும்போதும் அந்த அறத்தன்மையை கொண்டு விளங்கிவிடவேண்டும்.

6) பெரும்பாலும் சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான மக்களின் நன்மையை, மேம்பாட்டை காக்கக் கூடிய வகையில் சட்டம் இயற்றப்படவேண்டும்.

குற்றவியல் சட்டங்களின் தன்மை

குற்றவியல் சட்டங்கள் பெரும்பாலும் மனிதமனங்களின் பலவீனத்தை, பொறாமைத் தன்மையை, கொடுங்கோலத் தன்மையை படம்பிடித்துக் காட்டுகிறது. **Criminal law Portrays worst in man, his Weaknesses, Wickedness and Wretchedness.**

மனித மனங்களை அரித்து, அவனுடைய ஆளுமைத் தன்மையை வேண்டா வழியில் வெளிப்படுத்தத் துடிக்கும் வேண்டா வடிகாலாக மிதமிஞ்சிய செல்வப்பற்று. பணத்தின் மேல் கொண்ட மோகம், வரையரையற்ற பாலுணர்வு, மற்றவர் களின் உணர்வுகளை நியாயங்களை புரிந்துகொள்ளாது இருத்தல் போன்றவைகள் இருக்கின்றன. கணக்கு வரையற்ற சட்டங்களின் அதிகரிப்பு மனித மனங்களின் ஆணவம் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதையே காட்டுகிறது **The law of Crimes concerns every person in every situation, unlike anyother branch of law.**

குற்றவியல் சட்டங்கள் ஒவ்வொரு மனிதன்னையும், அவனுடைய எல்லா சந்தர்ப்பங்களிலும் !எடைபோட்டு கண் காணித்து வருகின்றது. குற்றவியல் சட்டங்கள் ஒவ்வொரு மனிதனையும் அவன் சரியான வழியில் செல்லவேண்டும் என்று வற்புறுத்துவதுடன், அவன் அறவழியில் சென்றிடக்காக்கவும், செய்வதன் மூலம் மனிதர்கள் அடங்கிய சமுதாயத்தை காக்கிறது எனலாம்.

அனல்பட்டால் உருகிவிடக்கூடிய வெண்ணெய் ஆக மனிதனுக்கும் குற்றங்களுக்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதை மறுக்க இயலாது. அவற்றைக் கட்டுப்படுத்தி மேன்மை வழியில் சென்றிடக் குற்றவியல் சட்டங்கள் துணைபுரிகின்றன. சட்டமும் உண்மையும் பிரிக்க முடியாது ஒரு கிளையில் பூத்த இரு மலர்களாக மணம் வீசு வதைக் காணலாம் தண்டனை கொடுப்பதைச் சட்டம் தன் ஒரு அங்கமாக கொண்டிருக்கிறது. அது ஆளும் அரசின் உயர்ந்த எண்ணத்தை, கோட்பாட்டை, அதிகாரத்தை வலியுறுத்துவதுடன் அது தன்னிடத்தே அறவழித்தன்மையும், சட்டத்தின் மேன்மையும் கொண்டு சமுதாயப் பொது அமைதியை ஏற்படுத்த வழி வகுக்கிறது.

குற்றத்தையும் குற்றவாளியையும் நோக்கிடுதல்

ஒரு மனிதனுக்குக் குற்றம் செய்யவேண்டும் என்ற தன்மை எவ்வாறு உருவாகிறது என்பதை எடைபோட ஒட்டுமொத்தப் பார்வையை நீக்கி, தனிப்பட்ட (Individual approach) முறையில் எடைபோடவேண்டும். அது குற்றவாளியின் நடைமுறை வாழ்க்கை (Biological), அவனுடைய அறிவின்தன்மை (Mental) மற்றும் அவனது குணப்பாடுகளைத் தொடுவதாக இருக்க வேண்டும் இதனுடைய மாறுபட்ட கோணமாக மனிதன் வாழும் சமுதாயத்தின் அமைப்புக் கண் கொண்டும் பார்க்கக் குற்றத்தின் தோற்றம் புலப்படும். சமுதாயத்தில் அவன் வாழும் நிலைமையும் குற்றத்தின் தன்மையை நிர்ணயிக்கிறது. வாழும் சமுதாயத்தின் புறச்சூழ்நிலைகள், குற்றவாளியை உருவாக்கும் தன்மையை கொண்டிருக்கலாம் எனக் கொள்ளலாம் சமுதாய அமைப்பு எனக் கூற அது குடும்பம், கல்வி நிறுவனங்கள் செயல் பாடு, மதம், பொருளாதார அமைப்புக்கள், அரசியல் அமைப்புக்கள், பொதுஜன தொடர்பு சாதனங்கள் ஆளுகை என்று பல்வேறு அளவில் விரிகின்றன. அன்பைப் போதிக்கும் மதத்தை மனிதனின் சிந்தனையைப் பதப்படுத்தும் அரிய கருவியாகக் கொள்ளலாம். குறுகிய கண்ணோட்டம் கொள்ள அது மதவெறியாக மாறி னால், அது மதத்தின் தவறாகாது. மாறாக உலகசகோதரத்து வத்தை போதிக்கும் மதத்தை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதையே காட்டும்.

குடும்பம்

மனிதன் பிறப்பெடுத்தபிறகு சந்திக்கும் முதல் தொடர்பு குடும்பம்தான். குற்றம் செய்யவேண்டும் என்ற தன்மையை ஊட்டுவதில் அல்லது அதிலிருந்து விலகி நிற்பதில் குடும்பம் பெரும்பங்கை வகிக்கின்றது. உளவியல் அறிஞர்கள் மனிதனின் அடிப்படைக் குணத்தன்மை (Basic personality) அவனுடைய முதல் 10 அல்லது 12 வருடங்களிலேயே அமைந்துவிடுகிறது எனக் கூறுகிறார்கள். இதிலிருந்து மாறுபட்டிருந்தால் அதை சொற்ப விதிவிலக்குகள் எனத்தான் கூறமுடியும். ஒவ்வொரு குடும்பமும் குழந்தைகளின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்வதாக, அவர்களுக்குச் சிறந்த பாதுகாப்பு அளிப்பதாக விளங்க வேண்டும்.

வெறும் உணவுபடைத்தல், உடைவழங்கல், இருக்க இடம் கொடுத்தல், அதாவது பொருளாதார பாதுகாப்பு மட்டும் குழந்தையின் தேவையை பூர்த்தி செய்வதாகக் கொள்ள இயலாது.

அன்பைச் சொரியும் பாதுகாப்பு, குழந்தையை அறிந்து கொண்ட தன்மையும் விளங்கவேண்டும். ஒவ்வொரு குழந்தையின் சாதனை, சிறந்த செயல்பாடுகள் மதிக்கப்படுவதுடன், சரியான சமயத்தில் போற்றப்படவும் வேண்டும். கூடப்பிறந்த சகோதர, சகோதரிகள் உறவு அன்பு கொண்டதாக, பாசம் கொண்டதாக இருக்கவேண்டும். போட்டி இருக்கலாம் ஆனால் அது நட்பு முறையில் கொண்டதாக விளங்கவேண்டும். ஒவ்வொரு குழந்தையும் சில சலுகைகளை, சிறந்த மதிப்பை (S atus) குடும்பத்தில் கொண்டிருப்பதை, தான் குடும்பத்தின் மற்ற அங்கத்தினர்களால் விரும்பப்படுவதை உணரக் கூடிய அளவில் குடும்பம் விளங்கவேண்டும்

முடிவுரை

குற்றம், குற்றவியல், குற்றம் தோன்றும் தன்மை, வாய்ப்புகள், வசதிகள் பற்றிய சிந்தனைகளை, ஆய்வை இக்கட்டுரை ஏதோ ஓரளவு தொட்டிருக்கிறது என்றுதான் கூறமுடியும். கடல் அளவு விரிந்துள்ள சிந்தனைக் கருத்துக்களில் ஏதோ கையளவு அளவில் இச்சிந்தனை, எல்லாம் வல்ல பகவானின் அருளால் சொல்லப்பட்டுள்ளது.

நாளிதழ்களில் படங்களும், விளம்பர மொழியமைப்பும்

சந்திரமணி ஜெபராணி
உசிலம்பட்டி.

தோற்றுவாய்

இன்றைய உலகில் சமூக வாழ்க்கையின் இன்றியமையாத அங்கமாக நாளிதழ்கள் திகழ்கின்றன. விற்பனை, பொருளியல் வசதிகள் முதலிய காரணங்களினால் நாளிதழ்கள் விளம்பரங் களை வெளியிடத் தொடங்கின. தற்காலத்தில் விளம்பரங்கள் இல்லாத நாளிதழ்களே இல்லை என்னும் அளவிற்கு விளம்பரங்கள் வெளி வருகின்றன. 'நாளிதழ்களில் படங்களும் விளம்பர மொழியமைப்பும், என்ற இக்கட்டுரைக்கு தினகரன், தினத்தந்தி, தினமணி, தினமலர் ஆகிய நான்கு நாளிதழ்களும் முதன்மை ஆதாரங்களாகின்றன.

எந்த ஒரு செய்தியையும் சொற்களால் விளக்குவதை விட எளிமையாகவும், விரைவாகவும், படங்களின் மூலம விளக்க முடியும். படத்துடன் விளம்பரம் செய்வதால் வாசகர்களின் கண்களில் அந்தப்படமே முதலில் தெரிகின்றது. படத்தைக் கண்டவுடன் அதன் மூலம் என்ன சொல்லப்பட்டிருக்கின்றது என்பதை அறிய அதனுடன் வெளியிடப்பட்டுள்ள வாசகங்களைப் பார்க்கின்றனர். வாசகர்களைக் கவர்வதற் காகவும் பல படங்கள் அமைந்த விளம்பரங்கள் வெளி வருகின்றன.

பொதுவாக, எந்தெந்தப் பொருள்களை விளம்பரம் செய் கிறார்களோ, அந்தப் பொருள்களே விளம்பரங்களில் படங் களாக அமைந்துள்ளன. விளம்பரப் பொருளின் தன்மையை

விளக்கவும் படம் அமைந்துள்ளது. இவைதவிர அப்பொருளைப் பயன்படுத்திப் பயன்அடைந்தவர்களின் படங்களையும், விளம்பரப் பொருளையும் சேர்த்துப் படமாக வெளியிடும் விளம்பரங்களும் அமைந்து உள்ளன. விளம்பரப் பொருளுக்கும். விளம்பரப் படத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாமலும் விளம்பரங்கள் அமைந்துள்ளன.

விளம்பரப் படத்தோடு தொடர்புடைய மொழி

விளம்பரப் படங்களோடு தொடர்புடையதாக விளம்பர மொழி அமைந்து அல்லது விளம்பரப் படங்களை விளக்க விளம்பர மொழி அமைந்திருத்தலை இப்பிரிவினுள் அடக்கலாம்.

சான்றாக வீடு கட்டுவதற்குரிய முறுக்குக் கம்பிகளைக் குறித்து விளம்பரம் செய்கையில், கம்பியின் படத்திற்கு மேல் உறுதியான இருகைகளிரண்டு ஒன்றை ஒன்று கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருப்பது போன்று விளம்பரத்தின் படம் அமைந்துள்ளது உறுதியானது என்பதைக் குறிப்பதாக இப்படம் அமைக்கப்பட்டுள்ளது இதனைக் குறித்து விளக்குகையில்,

''தரம் என்னும் தன்மையால் தகுதி பெற்றது
உறுதியும் வாய்ந்ததால் உயர்வு அடைந்தது
நிகர் இல்லை என்பதால் **TSRM** நிலைத்து விட்டது''(1)

என்ற தொடர்களில், 'உறுதி வாய்ந்தது' என்று குறிப்பிட்டு உள்ளதால், படத்திற்கும் வாசகத்திற்கும் நேரடித் தொடர்பு இருக்கின்றது.

படத்தோடு சேர்ந்தால்தான் மொழிக்குப் பொருள்

விளம்பர வாசகத்தின் மூலம் விளம்பரப்படுத்தப்படும் பொருளின்பெயரைக் குறித்தோ அல்லது விளம்பரப்பொருளைக் குறித்தோ தெளிவான தகவல் கொடுக்கப்படாமல் இருக்கும் போது, அவ்விளம்பரத்தில், உள்ள படத்தின் மூலம் அப் பொருளைக் குறித்து அறிந்து கொள்ள முடிகின்றது.

சான்றாகத் தினத்தந்தியில் வெளிவந்துள்ள கீழ்க்கண்ட விளம்பரத்தினைக் கொள்ளலாம். சிகரெட் விளம்பரத்தில்

"ஊக்கமே
பரம திருப்தி".

என்ற தொடர் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குப் படமாகத் தலையில் தலைக்கவசம் வைத்துள்ள ஒரு மனிதன் கையில் சிகரெட் வைத்திருப்பது போன்று உளளது. இவ்விளம்பரத்தில் 'ஊக்கமே பரம திருப்தி' என்ற தொடருக்குப் பொருள் படத்தின் மூலமே தெளிவாகின்றது.

படங்களுக்கும், வாசகங்களுக்கும் உள்ள மறைமுகத்தொடர்பு

சில இடங்களில் படத்திற்கும், வாசகத்திற்கும் நேரடித் தொடர்பு இல்லாதது போல் தோன்றினாலும் அப்படங்கள் மறைமுகமாக ஒரு பொருளை உணர்த்துகின்றன.

சான்றாகத் தினமணியில் கருத்தடைச் சாதன விளம்பரத்தில் தலைப்பாகக்

"காதல் உறவிலே
இப்போது ஒரு புதிய சங்கமம்"

என்ற தொடர் அமைந்துள்ளது. இதன் துணைத் தலைப்பாக

"இயல்பான உணர்ச்சி இழப்பதில்லை
பக்க விளைவுகள் இல்லை
முற்றிலும் பாதுகாப்பானது, ஆற்றல்மிக்கது".

என்ற தொடர்கள் காணப்படுகின்றன. இவ்விளம்பரத்தின் படமாகக் கருத்தடைச் சாதனம், அட்டையின் உள்ளே இருப்பது போன்றும், அதன்மீது இலையுடன் கூடிய ரோஜா மொட்டு ஒன்று இருப்பது போன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ரோஜாப் பூவினைக் குறித்தோ, அதன் குணங்களைக் குறித்தோ, எவ்விதமான செய்தியும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், கருத்தடைச் சாதனத்தின் மென்மைத் தன்மையைக் குறிப்பதற்காக இப்படம் வெளியிடப்பட்டுள்ளது.

தன்மை விளக்கப்படமும் மொழியும்

விளம்பரப் படுத்தப்படும் பொருளை மட்டும் படமாகப் போடாமல், அப்பொருளின் தன்மையை விளக்கப் பல படங்களையும் பொருத்தமான மொழியமைப்பையும் உபயோகப் படுத்துகின்றனர். சான்றாக,

"வீணா பிராண்ட்
போர்ட்லாண்ட் சிமெண்ட்
உறுதியான கட்டிடத்திற்கு
உ.யர்ரக சிமெண்ட்"

என்றுள்ள விளம்பரத்தில் வீணா பிராண்ட் சிமிண்ட் மூட்டையின் படமும், ஒரு கட்டிடத்தைச் சங்கிலியால் சுற்றி, யானை இழுப்பது போன்றும் படம் அமைந்துள்ளது. பலம் வாய்ந்த யானையே இழுத்தாலும் அசையாத உறுதிமிக்க கட்டிடம் என்பதைக் குறிக்கும் வகையில் யானைப்படமும், அதற்கேற்றாற்போல் உறுதியான கட்டிடத்திற்கு உயர்ரக சிமெண்ட் என்ற தொடரும் அமைந்துள்ளன.

வேறுபட்ட படங்களுக்குப் பொருத்தமான மொழியமைப்பு

ஒரே பொருளைக் குறித்துப் பல்வேறு படங்களுடன் கூடிய விளம்பரம் வரும்போது, படங்களுக்கு ஏற்றாற் போல் மொழி அமைந்துள்ளது.

சான்று:

கிராம்டன் கிரிவ்ஸ் தொலைக்காட்சியைக் குறித்து இரு வகையான விளம்பரங்கள் வெளிவந்துள்ளன. முதல்வகை விளம்பரத்தில்

"தேர்ந்தெடுககப் பலவகைகளை
வழங்குகிறது கிராம்டன் கிரீவ்ஸ்......

ஏனெனில், பல்லாண்டு இன்பமூட்டும் சாதனங்களில் சில உண்டு., என்ற தொடர்களுடன் மூன்று தொலைக்காட்சிப் பெட்டிகள் படத்தில் அமைந்துள்ளன. இங்குப் படத்தோடு இயைந்த மொழியமைப்பு உள்ளதைக் காணலாம்.

இரண்டாவது வகை விளம்பரத்தில் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்பட நடிகை ரேகாவின் படம் தெரிவது போன்று அமைந்துள்ளது. இதற்கு விளக்கமாக

"மறக்கத் தான் முடியுமோ உம்ராவ்ஜான்
படத்திலே ரேகாவின் மாயாஜாலக் கலை!"

என்றுள்ளது. இதனை அடுத்து முதல்வகை விளம்பரத்தில் இடம் பெற்றுள்ள வாசகங்களும் படங்களும், அப்படியே இரண்டாவது வகை விளம்பரத்தில் இடம் பெற்றுள்ளன. இங்ஙனம் ஒரே விளம்பரத்திற்குப் படங்கள் வேறுபடும் போது அப்படங்களுக்கு ஏற்றவாறே மொழியமைப்பும் உள்ளது.

தினகரனில் முதல்வகை விளம்பரம் மட்டுமே காணப்படுகின்றது தினத்தந்தியில் இவ்விருவகை விளம்பரங்களும் காணப்படுகின்றன.

படமாறுபாடு

'தேசிய சேமிப்பு நிறுவனம்'' என்ற விளம்பரம் தினத்தந்தியிலும் தினமலரிலும் இடம் பெற்றுள்ளது. ஆனால் தினமலரில் மட்டும் இவ்விளம்பரம் படத்தோடு கூடிய விளம்பரமாக அமைந்துள்ளது.

> ''சேமிப்பு வேகமாக
> வளர்கின்றது''.

என்ற தொடரின் பக்கவாட்டில் உண்டியல் படம் உள்ளது. இதில் 5 பைசா, 10 பைசா, 25 பைசா 50 பைசா இவற்றின் படங்கள் உள்ளன. முதலில் 50 பைசா உண்டியலின் உள்ளே போவதுபோன்று உள்ளது. இதில் படத்திற்கும், வாசகத்திற்கும் முரண்பாடு காணப்படுகின்றது. சேமிப்பு வேகமாக வளர்கின்றதுஎன்ற வாசகம் இருப்பதால் முதலில் 5 பைசா பின் 10 பைசாபின் 25 பைசா 50 பைசா உண்டியலின் உட்செல்வது போன்று அமைந்திருக்க வேண்டும். ஆனால் மாறுபாடாக அமைந்துள்ளது.

பொருள் - படம் இயைபின்மை

விளம்பரப்படுத்தப்படும் பொருளுக்கும், அவ்விளம்பரப் படத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாமல் படங்கள் வெளி வருகின்றன. விளம்பரங்களில் உள்ள படங்களில் பெண்கள் படமே அதிகமாகக் காணப்படுகின்றன. துணிக்கடை விளம், பரங்களிலும், சமையல் பொருள்களை விளம்பரம் செய்வதிலும் பெண்கள் படம் இடம் பெறுவது பொருத்தமே. இவை தவிர

பொதுவான நிகழ்ச்சிகளுக்கும் பெண்கள் படங்கள் இடம் பெறுகின்றன.

சான்று:

பத்தி விளம்பரத்தில் மூன்று பெண்கள் வரிசையாக நிற்பது போன்று படங்கள் அமைக்கப்பட்டு இதன் கீழே

''மூன்று நறுமணங்கள் கொண்ட
தேவதா இண்ட்ஸ்டிக்ஸ் (பத்திகள்)''

என்று விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் விளம்பரப் படுத்தப்படும் பொருளுக்கும் விளம்பரப் படத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாமல் விளம்பரம் அமைந்துள்ளது.

இங்ஙனம் படத்திற்கும் மொழிக்கும் தொடர்பு இல்லாமலும் விளம்பரங்கள் அமையக்கூடும் என்ற கருத்தினை விளம்பர நிறுவனத்தினரும் ஏற்றுக்கொண்டதை ஆய்வாளருடனான பேட்டியிலிருந்தும் அறியலாம்.

இறுவாய்

ஆய்விற்குரிய நாளிதழ்களில், மொழிக்கு ஏற்றவாறு படம், மொழியினை விளக்கப்படம், படத்திற்கு ஏற்றவாறு மொழி என்ற மூன்று நிலைகளில் படங்களும் மொழியும் ஒன்றோடொன்று தொடர்புள்ளனவாய் உள்ளன.

இவை தவிர விளம்பரப்படத்திற்கும் அதன் வாசகத்திற்கும் மறைமுகத் தொடர்பும் காணப்படுகின்றது.

ஒரே பொருள் பல முறைகளில் விளம்பரப்படுத்தப்படுகின்றது. காலத்திற்கு ஏற்றவாறு விளம்பரங்கள் அமைய இவ்வாறு மாற்றம் செய்யப்படுகின்றது.

நாளிதழ்களில் ஒரே பொருள் விளம்பரப்படுத்தப்படும் முறையில் மாறுபாடாகக் காணப்படுகின்றது.

நாளிதழ்களில் விளம்பரப் படங்களும், விளம்பர மொழியமைப்பும், எவ்விதத் தொடர்பும் இல்லாமலும் காணப்படுகின்றன.

புதையலில் கிடைத்த பொற்காசுகள்

மா. சந்திரமூர்த்தி
தொல்பொருள் ஆய்வுத்துறை.

அமைவிடம்

தென்னாற்காடு மாவட்டம் கடலூர் வட்டம் குறிஞ்சிப் பாடி பிர்காவில் உள்ள சிறிய கிராமம் வரதராஜன்பேட்டை. கடலூரில் இருந்து 32 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந் துள்ளது. குறிஞ்சிப்பாடியில் இருந்து 2 கி. மீ. தொலைவிலும் இவ்வூரை அடையலாம்.

ஊரும் பேரும்

இவ்வூரின் தற்போதைய பெயர் வரதராஜன்பேட்டை என்பது. இன்று சிற்றூராக விளங்கும் இக்கிராமம், பண்டைய நாளில் சீரும் சிறப்புமாக விளங்கி வந்துள்ளது. அதற்கான அடிப்படை ஆதாரங்களும், தொன்மைச் சான்றுகளும் வரலாற்றுச் சுவடுகளும் இக்கிராமம் முழுவதும் காணக்கிடைக் கின்றன. பண்டைய நாளில் சோழர். கங்கர், காகதீயர், விஜய நகரர், நாயக்கர் என பல்வேறு அரச பரம்பரையினர் ஆட்சி செய்த காலத்தில் இவ்வூர் புகழ் பூத்த பகுதியாக விளங்கி வந்துள்ளது.

சுற்றுபுற சூழல்

இவ்வூரைச் சுற்றிலும் மக்கள் வாழ்ந்த தடயங்களோடு கூடிய வாழ்விடங்களும், மண்மேடுகளும், மாளிகை மேடுகளும், முதுமக்கள் தாழிகளும், காணப்படுகின்றன. அவ்வாறு கலைச் சிறப்பு வாய்ந்த கிராமியக் கோயில்களும் காணப்படுகின்றன. அவற்றை ஒட்டி குளங்களும், ஏரியும் அமைந்துள்ளன.

சோழர் கால ஐயனார்

இவ்வூரின் குளக்கரையில் இயற்கையான சூழலில் ஐயனார் கோயில் அமைந்துள்ளது அக்கோயில் கருவறையில் இரண்டு ஐயனார் சிலைகள் உள்ளன. இரண்டும் யானை மீது அமர்ந்து கையில் செண்டு பிடித்து சவாரி செய்யும் பாங்கில் கம்பீரமாக காட்சியளிக்கின்றது. இவ்விரு சிற்பங்களில் வலது கை உடைந்த நிலையில் உள்ள சிற்பம் தொன்மை மிக்கது. வனப்பும் வரலாற்றுச் சிறப்பும் கொண்டது 1000 ஆண்டுகட்கு முற்பட்ட இச்சிறபத்தின் உருவமைப்பு, தலைக் கோலம், முகப்பொலிவு ஆடை அணிகளின் தன்மை, ஐயனாரின் வாகனமான யானையின் வடிவ அமைப்பு யாவும் முந்தைய சோழர் கலைப் பாணியில் அமைந்துள்ளன. இச்சிற்பம் கி.பி. 10–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தது இவ்வுருவம் முந்திய சோழர் கால சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

இக்கோயிலில் உள்ள இரண்டாவது சிற்பம் கி.பி. 15, 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இது விஜயநகர பேரரசர்கள் காலத்தியது. இவ்வூரில் கிடைத்துள்ள விஜயநகர காலத்து காசுகளும், இச்சிற்பத்தின் காலமும் சமகாலத்ததாக அறியமுடிகிறது. பண்டைய சிற்பங்களை வழிபாட்டில் கொண்டுள்ள இக்கோயிலில் பிற்காலத்தில் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

தங்கப் புதையல் கிடைத்த வரலாறு

இவ்வூர் ஐயனார் கோயிலை அடுத்துள்ள புறம்போக்கு பகுதி ஐயனார் கோயிலைச் சார்ந்தது. இங்கு 5-1–89 அன்று இக்கிராமத்தைச் சேர்ந்த திரு. கலியமூர்த்தி என்ற விவசாயி ஏரிக்கரையில் உள்ள கோயில் புறம்போக்கு பகுதியில்உட்கார்ந்து குச்சியினால் மண்ணை கிளரிக்கொண்டு இருந்த பொழுது தரையிலிருந்து மட்கலயத்தின் விளிம்பு பகுதி வெளியில் தெரிந்தது. பின்னர் கலியமூர்த்தி மேலும் மண்ணை தோண்டி பார்த்தார் அங்கே கனமான மட்கலயம் ஒன்று இருப்பதை கண்டு அதை வெளியில் எடுத்து. அதனை ஐயனார் கோயில் குளக்கரையில் உள்ள காணிக்கல்லில் மோதி உடைத்தார். அதிலிருந்து பழங்கால தங்க நாணயங்கள், தங்க வில்லைகள்.

சிதறின. இதனை தற்செயலாக அங்கு வந்த சிலர் நேரில் கண்டனர். தங்க புதையல் பற்றிய செய்தி அக்கிராமம் முழுவதும் பரவியது இது பற்றி தகவல் அறிந்த குறிஞ்சிப்பாடி காவல் துறையினர் கலியமூர்த்தி வீட்டிற்கு சென்று சோதனையிட்டு அவர் வீட்டில் இருந்த தங்க காசுகளையும், தங்க கட்டிகளையும் பறிமுதல் செய்தனர். பின்னர் கடலூர் வட்டாட்சியர், மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரிடம் புதையல் ஒப்படைக்கப்பட்டது. இதனை மாவட்ட ஆட்சியர், தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர், தென்னாற்காடு மாவட்ட பதிவு அலுவலர் மற்றும் தொல்பொருள் அலுவலர் ஆகியோர் ஆய்வு செய்தனர்

தங்கப் புத்தயல்

இங்கு கிடைத்த தங்க புதையலில் 7 உருக்கிய தங்ககட்டிகளும், 13 பொன் வளையங்களும், 77 பெரிய பொற்காசுகளும், 93 சிறிய பொற்காசுகளும் உள்ளன. இவற்றின் ஆய்வுகள் வருமாறு.

பொற்காசுகள்

இங்கு கிடைத்துள்ள பொற் காசுகளை மூன்று வகையாக பிரிக்கலாம். முதல் வகை கங்கர்கள் காலத்தவை; இரண்டாவது வகை காகதீய மன்னர்கள் காலத்தது; மூன்றாவது வகை பொற்காசு விஜயநகர காலத்தவை ஆகும்.

கங்கர் காலப் பொற்காசுகள்

இப் பொற்காசுகள் வட்டவடிவ அமைப்புடையவை. இதன் முன்புறம் யானையின் உருவமும், மறுபுறம் மலர் கொடிகளும் பொறிக்கப்பட்டு காணப்படுகின்றது. யானையின் உருவம் நின்ற நிலையில் கம்பீரமாக காணப்படுகிறது. அதன் துதிக்கை தரைவரை நேராக கீழ் நோக்கி நீண்டுள்ளது. அதன் துதிக்கை முனை உட்புறம் வளைந்துள்ளது. பெருத்த மத்தகமும், கூர்மையான கண்களும், நீண்ட தந்தமும், விரிந்த காதும், பெருத்த உடலும், வலுவான கால்களும், நீண்ட வாலும் கொண்டு சிறப்புடன் காணப்படுகின்றது. இக்காசின் பின்புறம் வளைந்து வனப்பூட்டும், மலர் கொடிகள் (   )

காட்டப்பட்டுள்ளன. இதைத்தவிர இவ்வகை காசில் எழுத்துக்கள் ஏதும் பொறிக்கப்படவில்லை. இங்கு கிடைத்துள்ள காசுகளில் காலத்தால் முற்பட்டதாக இவற்றை கருதலாம்.

இக்காசுகள் $1\frac{1}{4}$ செ.மீ. விட்டமுடையவை. இவை ஒவ்வொன்றும் 3 800 மி.கிராம் அதிகபட்ச எடையும் 3 650 மி.கிராம் குறைந்த பட்ச எடையும் கொண்டுள்ளன. இக்காசுகளில் காணப்படும் எடைக்குறைவு மக்கள் பயன்படுத்தி இருந்ததினால் ஏற்பட்ட தேய்மானமாக இருக்கக்கூடும். எனவே இக்காசுகள் புழக்கத்தில் இருந்திருக்க வேண்டும் என்பது புலப்படுகின்றது. யானையின் பின் பகுதி தேய்ந்துள்ள இக்காசுகள் பயன்பாட்டில் இருந்து வந்திருக்க வேண்டும் என்பதை தெளிவு படுத்துகிறது. இவ்வாறு யானை உருவம் பொறித்த 6 காசுகள் மட்டும் இங்கு கிடைத்துள்ளன. இது போன்று யானை உருவம் பொறித்த பொற்காசுகள் கங்கர்கள் காலத்தில் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் இவ்வகை காசுகள் தென் ஆற்காடு மாவட்டத்தில் கிடைத்திருப்பது இதுவே முதல் தடவை ஆகும். இக்காசுகள் கி.பி. 8 அல்லது 9 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த கங்க வம்சத்து மன்னர்களின் செல்வாக்கு பற்றியும், அவர்களின் ஆட்சிப் பரப்பு அளவையும், வணிகத் தொடர்பையும் அறிந்து கொள்வதற்கு பெரிதும் பயன்படுகின்றது.

காகதீயர் காசுகள்

இக்காசுகள் வட்ட வடிவமானவை. இக்காசுகளின் முன்புறம் உட்குவிந்த நிலையிலும், பின்புறம் மேடாகவும் உள்ளது மேடாக உள்ள பகுதியில் சிறிய கீறல்கள் மட்டும் உள்ளன. உருவம் மற்றும் எழுத்துக்கள் ஏதும் பொறிக்கப்படவில்லை. முன்பகுதியில் குழல் ஊதும் வேணுகோபாலனின் சிறிய உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் கால்களை பின்னி நின்று கொண்டு இரு கைகளில் குழலையேந்தி வேணுகானம் இசைக்கும் நிலையில் காணப்படுகின்றது. இதன் தலைமீது குடை போன்ற அமைப்பு காணப்படுகின்றது. அதன் பக்கங்களில் சங்கு சக்கரம் இரண்டும் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் இதில் கி.பி. 12, 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் கால்

தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. நேரில் ஆய்வு செய்த தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. நடன காசிநாதன் அவர்கள் இவ்வெழுத்துக்களை 'ஸ்ரீ கணபதி' என படித்துள்ளார். கணபதி காகதீய மன்னர்களில் புகழ் பெற்றவர் எனவே இக்காசுகளை காகதிய வம்சத்து சேர்ந்த கணபதி என்ற மன்னருடைய காலத்து நாணயங்களாக கருதலாம்.

இவ்வகை பொற்காசுகள் 71 இங்கு கிடைத்துள்ளன. இக்காசுகள் ஒவ்வொன்றும் $1\frac{1}{2}$ செ.மீ. விட்டமுடையவை சுங்கர் காலத்து காசுகளை விட சற்று உருவில் பெரியவை இக்காசுகள் ஒவ்வொன்றும் 3.450 மி கிராம் அதிக பட்ச எடையும், 3.400 மி கிராம் குறைந்த பட்ச எடையும் கொண்டவை. இக்காசுகள் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. தமிழகத்தில் காகதீய மன்னர் காலத்து காசுகள் மிக அரிதாகவே கிடைத்துள்ளன. எனவே இக்கண்டுபிடிப்பு சிறந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இப்பகுதியில் கிடைத்துள்ள காகதிய காசுகள் அக்கால வணிகத் தொடர்பினையும், வரலாற்று தொடர்பினையும் அறிந்து கொள்வதற்கு வகை செய்கின்றது. இங்கு கிடைத்துள்ள 71 பொற் காசுகளும் $244\frac{1}{2}$ கிராம் எடை உடையவை.

விஜயநகர காசுகள்

இப்புதையல் கிடைத்துள்ள காசுகளிலேயே மிகவும் சிறிய பொற்காசுகளாக இவை காணப்படுகின்றன. இவற்றை 'கொள்ளு காசுகள்' என்றும் 'மிளகாய் விரை பவுன்' என்றும் பாமர மக்கள் அழைத்து வருகின்றனர். இதன் உருவ அமைப்பு மிளகாய் விதையைப் போன்று தட்டையாக காணப்படுவதால் அப்பெயர் வழங்கிற்று எனலாம். இத்தகைய காசுகள் தமிழகத்தில்அனைத்து பகுதிகளிலும் அதிக அளவில் கிடைத்து வருகின்றன இங்கு இவ்வகை சிறிய காசுகள் 93 கிடைத்துள்ளன இவை ஒவ்வொன்றும் 3/4 செ. மீ விட்டமுடையவை. 350 மி. கி. எடையுடையவை. 93 காசுகளும் மொத்தம் 36 கிராம் எடை உடையவை. இக்காசின் முன்புறத்தில் குறுக்காக ஒரு கோடும் அதன் மீது வரிசைக்கு 4 புள்ளிகள் வீதம் மூன்று

வரிசைகளில் 12 புள்ளிகள் குறிக்கப்பட்டுள்ளன. பின்புறத்தில் வளைவுகளும் 12 புள்ளிகளும் உள்ளன. இக்காசுகள் விஜயநகர மன்னரான வீரராயர் காலத்து காசுகளாக கருதப்படுகிறது. இத்தகைய காசுகளை ஆய்வாளர்கள் 'வீரராயர் பணம்' என்றும் குறிப்பர். இவ்வகை காசுகள் இம்மாவட்டத்தில் விருத்தாசலம், திருக்கோயிலூர் பண்ருட்டி ஆகிய வ்ட்டங்களிலும் கிடைத்துள்ளன. இவை சுமார் 400 ஆண்டுகட்கு முற்பட்டது. இங்கு கிடைத்துள்ள காசுகளில் காலத்தால் பிற்பட்ட காசுகளாக இவற்றை கருதல்ாம். இவை கி. பி. 15,16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

இம்மூவகை காசுகளும் பொற்காசுகள் என்று அழைக்கப் பட்டாலும் கங்கர் மற்றும் காகதிய காசுகளில் 20 விழுக்காடு வெள்ளி கலந்துள்ளது. ஏனைய விஜய நகர காசுகளில் வெள்ளியும், செமபும் குறைந்த விழுக்காடு கலந்துள்ளன. எனினும் இவை 14 முதல் 16 காரட் வரை தரமுடையவை என கருதப்படுகிறது.

தங்கமெட்டிகள்

இப்புதையல் தொகுப்பில் காலில் அணியும் தங்க மெட்டிகள் 13 எண்ணிக்கைகள் கிடைத்துள்ளன. இவை அனைத்தும் $81\frac{1}{2}$ கிராம் எடையுடையவை. மெட்டிகள் ஒவ்வொன்றும் அதிக பட்ச எடை 13 300 மி கிராம். குறைந்த பட்ச எடை 2.800 மி. கிராமும் உடையவை. இவை 2 செ மீ. விட்டமுடையவை மெட்டியில் தங்கத்தோடு வெள்ளி கலப்புமுள்ளது. இந்த அணிகலன்களுடன் கங்கர்-காகதீயர்-விஜயநகர காலத்து காசுகளும் கிடைத்துள்ளன. எனவே இறுதியில் கிடைத்துள்ள விஜயநகர காலத்து காசுகளின் காலமான கி. பி. 15, 16 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இவ்வணிகளை கருதலாம் விஜயநகர காலத்து சிற்பங்களில் மகளிர் அணிந்துள்ள அணிகளோடு இவற்றை ஒப்பிடலாம் அக்கால மகளிரின் அணி வகைகளையும், செல்வ செழிப்பினையும் அறிய இவை துணை புரிகின்றன.

சாதி ஒழிப்பு – கவிமணியும் குமரன் ஆசானும் ஒரு ஒப்பீடு

த. சம்புலிங்கம்
புதுவைப் பல்கலைக்கழகம்.

முன்னுரை:

சாதிவெறி இன்று தலை விரித்தாடுகிறது. சாதியின் பெயரால் நடக்கும் சிலசெயல்கள் இன்று சமூகத்தின் அமைதிக்கும் ஒற்றுமைக்கும் கேடுவிளைவிக்கின்றன. ஒரு படைப்பாளன் தன் காலத்து நிகழ்ச்சிகளை இலக்கியத்தில் விளக்குவதோடு, சிக்கலுக்கான விடைகளையும் கூறும் முன்னோடிச் சிந்தனையாளனாகவும் திகழவேண்டும் அது அவனது சமூகக் கடமையும்கூட. இவ்வகையில் தமிழ்க்கவிஞனான கவிமணியும் மலையாளக் கவிஞனான குமரன் ஆசானும் சாதிபற்றிக் கொண்டு இருந்த கருத்துக்களை அவர்தம் படைப்புக்களின் வழி சமூகக் கண் கொண்டு ஒப்பிட்டு விளக்குகிறது இக்கட்டுரை.

கவிமணியும் குமரன் ஆசானும்

தென்தமிழ் நாட்டுச் குமரிமாவட்டம் தேரூரில் 1876 சூலை 28 ல் தோன்றியவர் கவிமணி. எளிய இனிய மணியான கவிதையைத் தந்ததாலும் தேசியம் புகழ்ந்ததாலும் 'கவிமணி' எனவும் 'தேசிய' எனவும் சிறப்புப் பெயர்கள் இவரியற்பெயர் முன் நின்றன 'மலரும் மாலையும்'', ''ஆசியசோதி'', ''மருமக்கள் வழி மான்மியம்'', ''உமர்கய்யாம் பாடல்கள்'' முதலானவை இவரது படைப்புக்களாயினும், ஆசிய சோதியும், உமர்கய்யாம் பாடல்களும் மொழிபெயர்ப்புப் பாடல்களே. பிறநாட்டு, பிறமொழிக்கவிதைகள் மேல் இவர்க்கிருந்த பற்றினை இவை புலப்படுத்துகின்ன.

பண்டைய சேரநாட்டு, இன்றைய கேரள நாட்டின் தலை நகராம் திருவனந்தபுரத்திற்கு வடக்கே இருபத்தைந்து மைல் தொலைவில் ''காயிக்கர'' என்ற ஊரில் தோன்றியவர் குமரன் ஆசான் 'குமாரு' உரிமைகள் பல மறுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட ஈழவசமுதாயத்தைச் சேர்ந்தவர். ஆயின் பொருளாதாரத்தில் நடுத்தரவர்க்கம் வாய்ப்பிருந்தும் சமஸ்கிருதமும் ஆங்கிலமும் கற்றுக்கொள்ள உரிமைகள் மறுக்கப்பட்டன என்ற போதிலும் கர்நாடகம், கல்கத்தா முதலான இடங்களுக்குச் சென்று கற்றுத் திரும்பினார். தற்கால மலையாளக் கவிதை உலகின் முதல் மூவர்களுள் (வள்ளத்தோள், உள்ளூர், குமரன் ஆசான்) முதன்மையிடத்தைப் பெற்று 'எரிநட்சத்திரம்' என அழைக்கப் பட்டவர்.

பாரதியைப் போலவே மிகக் குறைந்த வயதில் படைப்புப் பல படைத்து 1924ல் மறைந்த (தோற்றம் 1873) இவரது படைப்புக்கள் 'நளினி', 'கருண';' துரவஸ்த',; 'சிந்தாகுலசீத' 'சண்டால பிச்சுகி' 'புத்தசரிதம்' 'பாலராமாயணம்' முதலாயினவாகும்.

சாதிபற்றிக் கவிமணியும் குமரன் ஆசானும்

சாதிபற்றிய தனதுகருத்தை கவிமணி ஆசிய சோதியில் புலப் படுத்துகிறார். எட்வின் ஆர்னால்டு என்பார் எழுதிய ''லைட் ஆஃப் ஏசியா' என்ற நூலின் தழுவலாம். இது புத்தரின் வாழ்க்கைச் சரிதத்தை எடுத்து மொழிகிறது. காடு மேடெல் லாம் அலைந்த புத்தர் வெயிலில் வாடிவதங்கி மயங்கி விழு கிறார். வழியிடைக்கண்ட ஆடுமேய்க்கும் ஆயர்குலச் செல்வன் திகைத்து, என் செய்வேன் என்று புலம்பி, உயர்குலத்தாராகிய இவரைத் தீண்டுதல் தகாதென தயங்கி, இறுதியில் செடிகொடி களை வெட்டி முகம் வெயிலில் படாமல் இருக்க நிழல்படச் செய்கிறான் வெள்ளாடு ஒன்றைக் கொணர்ந்து மடுவினைக் கறந்து வாயில் படுமாறு செய்கிறான். சில்லெனப் பட்டதும் மெல்லக் கண் விழித்த புத்தர் இன்னும் பால் கேட்கிறார். இருவர்க்கும் இடை நடந்த உரையாடலில் கவிமணி தன் கருத்தைப் புகுத்துகிறார்.

புத்தர்: தம்பி, அந்தக்கலத்திலே இன்னும் கொஞ்சம் பால் கறந்து தா,

சிறுவன்: அய்யய்யோ ஆகாது, யான் தங்களைக் கையினால் தீண்டவொண்ணா இடையன், ஒரு காட்டுமனிதன்.

புத்தர். தம்பி, பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை எவர் உடம்பிலும் ஓடும் குருதி சிவப்பு நிறம். எவர்விழி நீர்க்கும் உப்பே இயற்கைக் குணம். ஓடும் குருதி யில வடிந்து ஒழுகும் கண்ணீரில் சாதிகள் தேடிப் பார்ப்பினும் கிடைப்பதில்லை. பிறப்பினால் யார்க் கும் பெருமை வராது. சிறப்பு வேண்டுமெனில் நல்ல செய்கை வேண்டும். நன்மைசெய்வோரே உயர்ந்தார் அல்லார் தாழ்ந்தோர்.

சிறுவன் மனம்மாறிப் பால்கறந்துதர புத்தர் களைப்பு நீங்கு கிறார். குமரன் ஆசான் சாதிபற்றிய தனது கருத்தை 'துரவஸ்த' யிலும் 'சண்டால பிச்சுகியிலும்' வெளிப்படுத்துகிறார். துரவஸ்தயில் உயர்சாதி நம்பூதிரிப்பெண் ஒருத்தி ஏழைப் புலையன் குடிலை அடைகின்றாள். இவர்கள் காதல் வாழ்விற்கு சாதி ஒரு தடையாக கவிஞர் கூறவில்லை. 'சண்டால பிச்சுகியில்' புலைப்பெண் ஒருத்தி 'தாகத்தால் நீர் கேட்ட பௌத்தத் துறவிக்கு நீர்வார்த்து' அவனது ஒளி பொருந்திய முகத்திற்கும் கட்டமைப்பான உடலுக்கும் நெஞ்சில் பால் வார்த்து விடுகிறாள் "விளைவு அவளும் ஓர் பௌத்தப் பிக்குணியாகி பௌத்தசங்கத்தில் சேர்ந்து உயர்சாதியினருடன் உடனுறைகிறாள். பௌத்த சங்க வளர்ச்சிபெறாத உயர்சாதி அந்தணர், கலகம் விளைவிக்கின்றனர். கேரளாவில் மாப்பிள்ளைக்கலகம் அடங்கி முடிந்திருந்தசமயம் அது, காட்டுத் தீபோல் செய்திபரவுகிறது.

தலைசிரைத்து மொட்டையிட்டமட்டில் சுத்தமாய் ஒரு
புலைமகள் உயர்ந்த சாதிக்காரியாகி மேலும் நம்
சரிசமத்துயர்ந்த பெண்களோடுறங்குகிறாள்
கரிசனத்திருத்தி கூடப் பந்தி சோறு போடுறார்

பெரிய பிரச்சினையாகி விட்டஇது மன்னன் செவியில்பட மன்னன் மடத்துத் தலைவரை அணுகுகிறான். மடத்துத் தலைவர் மன்னனுக்கு உரைக்கிறார்.

மாதங்கி சேதிதானே, சாஸ்திரம் கூறினால் அது வாஸ்த வமோ சாதி பார்த்துள கூத்தையெலாம் மிஞ்சும் கேலிக்கூற்று, காட்டுவிலங்குகள் தன் எதிரொலிகேட்டு அச்சத்தால் கிறீச் சிட்டுக்கத்தும் சாதிக்கூச்சல், எலும்பிலும் குருதியிலும் சாதி காண முடியுமா! அந்தணர்க்கு முப்புரிநூலும் குடுமி அப்பிய விபூதியும் கருவிலே வாய்த்ததல்லவே பிறர்நலம் கண்டு பொறாத சுயநலக்காரர் கிளப்பிவிடும் புகைமூட்டம் இது, மனத்தில் படர்ந்து தீயாய்கனன்று காண்இடம் கூடவிடாமல் பற்றிஎரியும் குடும்பத்தை அழிக்கும். சுற்றத்து உறவுகள் தகர்க்கும். இனத்தார் காட்டும் அன்பையும் கெடுத்திடும். நம்மவர் என்று கூடிவாழ் வோரிடமும் பகைவளர்த்துப் பொசுக்கும். பல உயிர்களையும் பலிவாங்கும் இது ஒரு மாமாகிக் கொள்ளை நோய். இதனைத் தவிர்த்தல் வேண்டும், வளரவிடக் கூடாது.

குடித்தனம் தகர்க்கும் சுற்றத்து உறவுகள் கோணலாக
அடித்திடும் இனத்தார் காட்டும் அன்பொடும் அவர் பால் அன்பைக்
கெடுத்திடும் பகைவளர்த்துத் தமரென ஒட்டிவாழும்
அடுத்தவர் அகற்றல் என்ன அகல்உலகு அதையே தீர்க்கும்.

சமூக அமைப்பில் சாதி

கூடிவாழும் மக்கள் கூட்டமாகிய சமூகம் பல அடுக்கமைப் புக்களைக் கொண்டது. அவற்றுள் ஒன்று எய்தப்படுகிற அந்தஸ்தை உடைய சமூக அமைப்பு, இது பொருளியல் சாரணிகளால் மாறக்கூடியது. அடுத்தது சார்த்தப்படுகிற அந்தஸ்தை உடைய சமூக அடுக்கமைப்பு, இதுமாறாதது என்று தற்கால சமூகவியல் அறிஞர் கூறுவர். சாதிமுறை அமைப்பு இதற்குத் தக்க எடுத்துக்காட்டு கல்வி, செல்வம், செய்தொழில், சமயம் முதலாயினவும் அந்தஸ்தை நிர்ணயிக்கு மாயினும் அதனை முயன்றால் எய்திவிடலாம். ஆனால் சாதி முறை அமைப்பில் எய்தமுடியாது என்பது அவரதுகணிப்பு.

ஒப்பீடு

இருவருமே சமகாலப் புலவர்கள். கவிமணி பிறப்பால் மூன்றாண்டு இளையவர், பிறப்பிடம் 50 கி மீ. இடைவெளிக்குள் இருவருடைய கவிதைக்கும் கரு புத்தரின் வாழ்க்கைச் சரிதம். இருவரின் உபதேசத்திற்கும் அடிப்படை புத்தரின் உபதேசம். பிறப்பால் கவிமணி உயர்குலம், குமரன்ஆசான் சற்றுக்கம்மி. இருவருமே சாதிமுறை சமுதாயம் அமைந்து கிடந்ததை ஒப்புக் கொள்கின்றனர். அது கூடாதென வெறுக்கவும் செய்கின்றனர் கவிமணியின் கவிதைகள் எளியவை, குமரன் ஆசான் கவிதைகளோ கற்பனை இயல் (Romantism) வாதத்தில் முகிழ்த்துக் கொடிகட்டிப் பறக்கிறது. இருவருமே தாய்வழிச்சமூக அமைப்புக்கு முக்கியம் தரும் பகுதியைச் சேர்ந்தவர்கள். ஆயினும் கவிமணி அதனை இங்கு வெளியிடவில்லை, தனிநூலே படைத்துள்ளார். குமரன்ஆசானோ துரவஸ்தயிலும் சண்டால பிச்சுகியிலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு மட்டுமல்ல அவ்வகைப் போரார்ட்டத்திற்கு பெண்டிரையே மையமாக வைத்துப போராடுகிறார் கவிமணியின் கவிதை மிதவாதப் போக்குடையதாகத் தோன்றுதற்கு அவர் பிறந்த குலம் காரணமாகியுள்ளது தெரிகிறது. குமரன் ஆசானோ தான்பட்ட இன்னல்களுக்கெல்லாம் தனது கவிதையை உணர்ச்சியின் வடிகாலாக்கிக் கொள்வதால் தீவிரவாதத் தன்மை தெரிகிறது. இருவருமே அடிமைப்பட்ட இந்திய சமூகஅமைப்பைச் சேர்ந்தவர்கள். இருவருமே சமூகவிடுதலையை விரும்பியவர்கள். எனினும்குமரன் ஆசானே கவிமணியை விட இப்பிரச்சினையின் ஆணிவேரைக் கெல்லி, புரையோடிப்போன இந்த நோய்க்கு மருந்தும் இடுகிறார். சாதியற்ற, கலப்பின மக்களைக் கொண்ட சமூக அமைப்பு, அதாவது சார்த்தப்படுகிற அந்தஸ்துடைய சமூக அமைப்பு இல்லாமல் போக, அனைத்தும் எய்தப்படுகிற அந்தஸ்தைஉடைய சமூக அமைப்பாகமாற்ற

''ஈனப்புலைச்சி உடம்பில்-இரண்டு
ஆன பிறப்புடை அய்யர்
இட்டவிதை முளையாதோ''

எனவழியும் கூறி உயர்ந்து நிற்கிறார்.

சிற்றிலக்கியங்களில் நாட்டுப்புறக்கூறுகள்

பெ. கு. சாந்தகுமார்
பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கானது சிற்றிலக்கியங்களிலும் சிறப்பாக இடம்பெறக் காணலாம். இலக்கிய வகைகளான அம்மானை, தூது, மாலை, நொட்டி நாடகம், பள்ளு குறவஞ்சி முதலியவையும் நாடோடிப் பாடல்களையே ஆதாரமாகக் கொண்டு திருத்தி அமைக்கப்பட்டவை என்பர் தி.ரு.தி நா. சுப்பிரமணியம். இவற்றுள் குறவஞ்சி, தூது, பள்ளு ஆகியவற்றில் நாட்டுப்புறக் கூறுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

குற்றாலக்குறவஞ்சி

திரும்பவருதல்

மரபு தொடர்களும் கருத்துக்களும் மீண்டும் மீண்டும் வருதல் வாய்மொழி இலக்கியத்தின் முக்கியமான பண்புகளில் ஒன்று. அதாவது ''திரும்பக்கூறல் உலகெங்கிலும் வாய்மொழி இலக்கியத்தின் இன்றியமையாத கூறாக கொள்ளப்படுகிறது'' என்பர் க. கைலாசபதி. குறவஞ்சியிலும் 'அம்மே' என்னும் சொல் திரும்பத் திரும்ப வரும் ஒரு பொதுச் சொல்லாகக் காணப்படுகிறது. 'சிங்கா', 'சிங்கி', 'குறவர்' 'ஜயே' என்னும் சொற்கள் திரும்பத் திரும்ப வரும் பொதுச் சொற்களாக அமைகின்றன.

இசை

குறவஞ்சியில் இசைப்பாடலுக்கு ஏற்றவகையில் கீர்த்தனங்களும், சிந்துக்களும் நிறைந்து நிற்கின்றன. பாடி ஆடுவதற்

கேற்ற வகையில் தாழிசை போன்ற அமைப்பில் வரும் கீர்த்தனங்கள் இசைப்பாங்கு பெற்றுத் திகழ்வதோடு, நாட்டுப் புறப் பாடல்களையும் நினைவூட்டுவனவாக உள்ளன.

வால சந்திரனே யெவர்க்கும்
வஞ்சனை யாகாது கண்டாய் வெண்ணிலாவே - விண்ணே
காலம்போம் வார்த்தைகள் நிற்கும்
கண்ட கரும்ம் நான் சொன்னேன் வெண்ணிலாவே
சோலி செய்ய வேணு மென்று
துணிந்து விண்ணிலெழுந்து வந்தாய் வெண்ணிலாவே
காக்கும். (தியா. குற. ப. 10)

இவ்வாறு குறவஞ்சியில் வரும் பெரும்பான்மையான பாடல் கள் எளிமையாகவும் நாட்டுப்புறப் பாடல்களுக்கே உரித்தான இசைப்பாங்குடனும் காணப்படுகின்றன[1].

புராண மரபுச் செய்திகள்

குறவஞ்சி இலக்கியத்தில் புராணக் கருத்துக்கள் மிகுந்து காணப்படுகின்றன. இதில் சமயத் தொடர்பான புராணக் கதைகள் இடம் பெறுகின்றன. சைவ சமயத்தினர் வைணவம், சமணம் ஆகிய சமயங்களைக் குறைத்துக் கூறுவதும், வைணவ சமயத்தினர் சைவத்தைத் தாக்கிப் பேசுவதும், கிருத்துவர் இந்து சமயத்தைச் சாடி உரைப்பதும் குறவஞ்சி இலக்கியங்களில் பயின்றுவரும் ஒரு போக்காக உள்ளது.

"அரிகூட அயன்கூட மறைகூட தினந்தேட
அரிதாய் நின்ற திரிகூடப்பதி" (குற். குற. பா. 57)

என்றும்

"செங்கண் மால் சிவன் ஆகியநாடு"
(குற். குற. பா.86:6)

என்று வருவதைக் காணலாம்.

முக்கூடற்பள்ளு

இசை

இந்நூல் கலிப்பா, விருத்தம், சிந்து முதலிய சிற்றடி பேரடிகளால் இயற்றப்பட்டு, இசையோடு பாடப்படும் சிறப்பினையுடையது. இவ்வாறு பள்ளில் சிந்தின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படுகிறது.

"தானதைத் தானன தனனம்
தான்னதத் தானன தனனம்
தானதைத் தானன தனம்
தய்யா தனனா
பூவலயக் காவலன் எனவும்
பூவைநிறச் சேவையன் எனவும்
போதுனுமெட் டாதவன் எனவும்
பொய்யா மறைத்தேர்

தொழில்

பள்ளு இலக்கியத்தில் உழவுத் தொழிலைப் பற்றிய கருத்துக்களை விரிவான முறையில் எடுத்துரைக்கின்றது. இவை நாட்டுப்புறப் பாடல்களின் வகையான தொழில் பாடல்களோடு ஒத்துள்ளன. உழவுத் தொழிலின் முக்கிய வேலைகளான ஏர் இடுதலை, நல்லவித்தைத் தேர்ந்து தெளிதல் போன்றவற்றை இப்பள்ளு இலக்கியத்தில் காணலாம்

பார்த்த மாத்திரத்திலே பாத்திரத்தின் திறன் அறியும் அனுபவத்தை,

"தயரத ராமரான தாமரைக் கண்ணழகர்
தனு வாங்கி மரமேழும் சாய்ந்த நாளில்
கயமர மொன்று வளைக்கை யொன்று நுகமொன்று
கழுந்தேர்க்கா லொன்று சிறுகைக்கோல் ஒன்று
வயலுழுங் குத்தியொன்று வளைமேழி ஒன்றிந்த
வகையேழும் அந்த ஏழு மரத்தால் செய்தே
இயல்பாய்ப் பதனம்பண்ணி இருப்பதுண்டத்தனையும்
எண்ணி அறியவல்லார் எவர்கா ணாண்டே"

என்ற பாடலில் அறியலாம்.

சித்தரக் காலிவாலான் சிறைமீட்டான் மணல்வாரி
செஞ்சம்பா கருஞ்சூரை சீரகச் சம்பா
முத்து விளங்கிமலை முண்டன் பொற்பாளை நெடு
மூக்கன் அரிக்கிராவி மூங்கிற் சம்பா
கத்தூரி வணன் காடைக் கழுத்தின் இரங்கல் மீட்பான்
கல்லுண்டை பூம்பாளை பாற்கருக்கன் வெள்ளை
பூத்தன் கருங்குருவை புனுகாகுச்சம் பாவும் இரு
பூவுக்கும் விதை சரிற் போட்டே னாண்டே

இவ்வாறு இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய பள்ளர்கள் இன்றுபோல் செயற்கை உரங்களைப் பயன்படுத்தி மன்னுயிர்க்குத் தீங்கு விளைவிக்காது, இயற்கை உரங்களைப் பயன்படுத்தி நல்விளைச்சலை உண்டாக்கி முற்றிய நல்வித்துக் களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறியலாம்.

தூது இலக்கியம்

''நாட்டுப்புற மக்களிடையே தொன்மைக் காலம் முதல் இன்றுவரையிலும் இடையறாது வழக்கில் இருந்துவரும் பழமொழிகள், புராணக்கதைகள், நாட்டுப்புறப்பேச்சு வழக்கு போன்ற நாட்டுப்புற இலக்கியக் கூறுகளைத் தூதுப்புலவர்கள் தம் பெரும்புலப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தியமையைக் காணும்போது சிற்றிலக்கியங்களில் பெரும்பாலானவை நாட்டுப் புறப் பாடல்களிலிருந்து இலக்கிய வடிவம் பெற்றவையே[2]'' என்ற கருத்தின் உண்மை விளங்குகிறது.

பழமொழிகள்

தூது நூல்களில் பொதுவாக பழமொழிகள் பயன்படுத்தப் படுகின்றன. எனினும் விறலிவிடு தூது, தூது நூற்களில் பெருமளவிற்குக் கையாளப்படுகின்றன. தாய்க்கிழவி கருவுறுதல், தாய் மகளுக்கு அறிவுரை கூறுதல், அவதானியின் மனவுறுதி, தோழியர் பண்புகள், அவதானி கைப்பொருள் இழத்தல், அவதானி-தாய்க்கிழவி சண்டை, சபையோர் அறிவுரை கூறுதல் என்னுமிடங்களில் அன்றாடம் மக்களிடையே வழங்கி வரும் பழமொழிகள் பல இடம்பெறுகின்றன. கூளப்ப நாயக்கன் விறலி விடுதூது, சேதுபதி விறலிவிடு தூது, செண்டலங்காரன்

விறலிவிடு தூத், சிதம்பரேசுவரர் விறலிவிடு தூது, நண்ணாவூர் சங்கமேசுர சுவாமி தேவநாயகி அம்மன் பேரில் விறலிவிடு தூது என்னும் ஆறு நூல்களில் மட்டும் 185 பழமொழிகள் கையாளப்பட்டுள்ளன. ஆற்றில் கரைத்தபுளி (சிதம். 926) அந்தகன் கண்பெற்றாய் போல (வெள்ளை 213) தெய்வம் வெளியான பின்பு பீடம் தொழுவாகுண்டோ (நெல். 418) ஆரியக் கூத்து ஆடுகினும் காரியத்தில் கண்ணாயிரு (சிதம்.226) உடம்பறியா பேயாட்டா (சேதுபதி 462) போன்ற பழமொழிகளைச் சான்று கூறலாம்.

பேச்சுவழக்குச் சொற்கள்

தூது நூற்களில் இலக்கிய மாந்தர்களின் உரையாடல் களின் போது பேச்சு வழக்கு சொற்கள் பெருமளவில் கை யாளப்படுகின்றன. அட்டி, அன்னைக்கு, ஆமக்கன், எத்தாப்பு, ஒல்லை, ஒட்டிக்கிரட்டி, கடுக்கம், காயக்கம், கிட்ட வரப் படாது, கல்காந்தம், சரிப்படும், சள்ளிடுதல், சள்ளை சித்துவம் திருக்கு துறட்டு, தொறட்டு, நொண்டி, பாடு பீத்து, பிட்டக் கம், பைய மூக்கு ரூட்டி, லூட்டி, வடக்குத்தி, வைப்பு முதலிய சில சொற்களைத் தூது நூல்களில் இடம்பெறும் பேச்சு வழக்குச் சொற்களுக்குச் சான்று காட்டலாம்.

புராண இதிகாசக் கதைக்கூறுகள்

தூது நூற்களில் தலைவன் பெருமைகள் கூறுதல் (பத்மகிரி 80) தூதுப்பொருளின் பெருமைகள் கூறல் (செவ் 269) பிற பொருள்களை தூது அனுப்பாமையின் காரணங்கள் கூறல் (தமிழ். 1687) இதற்கு முன்னால் தூது சென்றோர் (மான் 54) வேசி செயல (சேதுபதி 381) தலைவி புலம்பல் (அழகர் 120) விறலி அறிவுரை கூறல் (சிதம். 1167), பெண்ணாசையின் கொடுமை கூறல் (உளம். 924) நஸ்பர்கறிவுரை கூறல் (சேதுபதி 1116) போன்ற சூழல்களில் தூதுப்புலவர்களால் சிவ பெருமான், திருமால், பிரமன், துர்க்கை, கணபதி, முருகன், அனுமன் போன்ற இறைத்தொடர்புக் கதைகளும், சந்திரன், வாயு தொடர்பான கதைகளும், பாண்டவர் நளன் போன்றவர் கள் தொடர்பான கதைகளும், கலைக்கோட்டு முனிவர்,

அகத்திய முனிவர் தொடர்பான கதைகளும், கூலி முதுகில் சூடு சோறளித்தல் முதலான கதைகளும், குறிப்பாகவும் சற்று விளக்கமாகவும் காட்டப்பெறுகின்றன. புராண இதிகாசக் கட்டுக் கதைகள் இல்லாத தூது நூல்களே இல்லை எனக் கூறுமளவுக்குப் பெருமளவு இக்கதைகள் குறிப்பிடப் பெறுகின்றன.

முடிவு

இதுகாறுங் கண்டவற்றால் நாட்டுப்புற மக்களிடம் இயல்பாக, வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து காணப் பெறுவனவும் நாட்டுப்புற இலக்கியக் கூறுகள் எனக் கருதப் பெறுவனவும் ஆகிய திரும்ப வருதல், இசை, தொழில், பழமொழிகள், பேச்சு, வழக்குச் சொற்கள். புராண இதிகாசக் கதைகள் என்பன குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு. தூது ஆகிய நூல்களில் இடம் பெறுமாற்றை அறிய முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. வே.பிரேமலதா(பதி.) தியாகேசர் குறவஞ்சி,முன்னுரை ப. 26

2. ந. வீ. செயராமன், சிற்றிலக்கியத் திறனாய்வு-ப. 181

பாரதியாரின் 'சந்திரிகையின் கதை'யும் குரஜாடாவின் 'கன்யாசுங்கமும்'

சாந்தாடி சதாசிவன்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்.

காலத்திற்கேற்ற கருத்துக்களைப் பாரதியார் தம் எளிய மொழி நடையில் எல்லோரும் அறியும் வண்ணம் உணர்த்தியது போன்றே குரஜாடா அப்பாராவு (1861 - 1915) என்னும் மகாகவி தெலுங்குமொழியில் பல புதிய சிந்தனைகளை எளிய மொழிநடையில் உணர்த்தியுள்ளார். இவ்விருகவிஞர்களும் தத்தம் மொழிகளில் புதுமைகளைப் படைத்தவர்கள் என்பதில் மிகையில்லை.

பாரதியார் தமிழில் 'சந்திரிகையின் கதை' என்னும் ஒரு சமூக சீர்திருத்த நாவலை இயற்றியுள்ளது போன்றே குரஜாடாவும் 'கன்யாசுங்கம்' என்னும் ஒரு சமூக சீர்திருத்த நாடகத்தை இயற்றியுள்ளார். இவ்விருநூல்களும் 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பிராமணர்களிடையே இருந்து வந்த கன்யாசுங்கம், கிழவர்களுக்குச் சிறுமிகளை மணமுடித்தல், விதவை மணத்தை மறுத்தல் முதலானவற்றைக் கதைப்பொருளாகக் கொண்டுள்ளன. இவற்றை இருநூல்களின் பாத்திரப் படைப்புகளின் வழி ஒப்பிட்டுக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கன்யாசுங்கம் என்பது பணம் கொடுத்துப் பெண்ணைக் கொள்வதாகும். இவ்வழக்கம் ஆந்திரநாட்டில் அன்று பெருமளவில் இருந்ததோடு தமிழ்நாட்டிலும் இருந்து வந்தது.

இதைப் பாரதியாரே, ''அக்காலத்தில் வரசுங்கம் அதாவது மாப்பிள்ளையைப் பெண்வீட்டார் பணம் கொடுத்து கிரயத்திற்கு வாங்குதல் என்ற வழக்கம் கிடையாது. கன்யாசுங்கம் அதாவது பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டார் கிரயங் கொடுத்து வாங்குதல்-என்ற வழக்கமே நடைபெற்று வந்தது'' என்று சந்திரிகையின் கதையில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வழக்கம் இருந்ததால் பலர் தம் பெண்களின் நல்வாழ்வையும் கருதாமல் பணத்திற்காகவும் சொத்திற்காகவும் ஆசை கொண்டு வயதான கிழவர்களுக்கும் தம்பெண்களைத் தந்தனர். அதனால் சிறிது நாட்களில் அவர்கள் இளம் விதவைகளாயினர். இதை அடிப்படையாகக் கொண்டே கன்யாசுங்கம் அமைந்துள்ளது.

கன்யாசுங்கத்தில் வரும் புச்சம்மா, மீனாட்சி என்னும் இருவிதவைகளும் தம் தந்தையர்களின் பணத்தாசைக்கு இளம் வயதிலேயே பலியானவர்கள். இவர்களுள் புச்சம்மா என்பவள் திருமணத்தின் போதே கணவனை இழந்த பரிதாபத்திற்குரியவர். இளமையின் காரணமாக மீனாட்சி ராமபந்துலு என்னும் அயோக்கியனிடம் கள்ளவுறவு கொள்கிறாள்; அவளைத் திருமணம் செய்து கொள்ளும்படி வேண்டுகிறாள். ஆனால் அவன் இறுதியில் அவளை ஏமாற்றிவிடுகிறான் புச்சம்மாவைக் கிரிசம் என்பவன் பணத்திற்கு ஆசைப்பட்டு மணம் செய்து கொள்ள முயலுகிறான். அவள் அதற்குச் சம்மதம் தருவதோடு தன்னிலை தன் தங்கைக்கும் வரக்கூடாது என்பதற்காகத் தன் தங்கைக்கும் அறுபது வயது கிழவனான லுப்தவதானிக்கும நடக்கவிருக்கும் திருமணத்தைத் தடுக்கவும் முயற்சி செய்கிறாள். தம் ச்மூகத்தினரை எதிர்த்து விதவைமணம் கொள்ள புச்சம்மா முனவந்தாலும் இறுதியில் கிரீசம் அவளை ஏமாற்றி விடுகிறான். இவ்வாறு குரஜாடா தம் நூலில் விதவைகளைப் படைத்திருக்கப் பாரதியார் தம் நூல்ல் அதற்கு மாறாகப் படைத்துள்ளார்.

சந்திரிகையின் கதையில் வரும் விசாலாட்சி பூப்பெய்துவதற்கு முன்பே விதவையானவள். அத்துடன் பூகம்பத்தின்

விளைவால் தன் தாய் தந்தையரோடு உறவினரையும் இழந்தவள். தன் அண்ணியின் கட்டளைப்படி மறுமணம் கொள்ள முயல்கிறாள். பலர் அதற்கு அவளைப் பழித்தாலும் அவள் மனம் தளர்வதில்லை. சோமநாதய்யர் முதலானவர்கள் பணத்திற்காகவும் அழகிற்காகவும் அவளை அடைய முயல்கின்றனரேயன்றி மணம் கொள்ள முயல்வதில்லை. அந்நிலையிலும் விசாலாட்சி உறுதியுடன் பல இன்னல்களைக் கடந்து இறுதியில் நித்தியானந்தம் என்னும் பால சந்நியாசியைச் சந்தித்து, காதல்கொண்டு அவனை மணக்கிறாள். இவ்வாறு பாரதியார் தம் நூலில் விதவையைப் படைத்துள்ளார்.

குரஜாடா புச்சம்மா, மீனாட்சி எனும் இரு விதவைகளைத் தம் சமூகத்தை எதிர்த்து மணம் புரிந்து கொள்ள முயல்வோராகப் படைத்திருந்தாலும் அவர்கள் மறுமணம் கொளபவர்களாகப் படைக்கப் படவில்லை. ஏனென்றால் கிரீசமும் ராமபந்துலுவும் அவர்களின் நகை, சொத்திற்காக அவர்களை மணம் கொள்ள வருகின்றனரேயன்றி அவர்கள் மீது அன்பு கொண்டன்று. இதிலிருந்து அன்புகொண்டு விதவைகளை மணம் கொள்வதை விட்டுவிட்டு அவர்களின் சொத்திற்காக மணம் கொள்வதைக் குரஜாடா வெறுக்கின்றார் எனத் தெரிகிறது. ஆனால் பாரதியார் படைத்துள்ள விசாலாட்சி மறுமணம் கொள்வதில் உறுதியுடன் செயல்படுபவளாக இருப்பதால் அவள் இறுதியில் மணம் புரிந்து கொள்பவளாகப் படைக்கப்பட்டுள்ளாள். இதிலிருந்து இளம் விதவைகள் தக்க ஆடவனை நாடி மணம் புரிய வேண்டும் என்பதைப் பாரதியார் வலியுறுத்துவதாகத் தெரிகிறது. மேலும் பாரதி கண்ட புதுமைப் பெண்ணை விசாலாட்சியிடம் காணலாம்.

விதவை மணம் குறித்துக் குருஜாடா தம் நூலில் கிரீசத்தின் வாயிலாக இவ்வாறு குறிப்பிடுகின்றார். மனைவி இறந்து விட்டால் ஆண்கள் திருமணம் செய்துக் கொள்ளும்போது பெண்கள் ஏன் கணவன் இறந்துவிட்டால் திருமணம் செய்துக் கொள்ளக் கூடாது? அது அநியாயமல்லவா? விதவைகள் திருமணம் செய்து கொள்ளலாம் என்று ஸ்மிருதி, வேதங்

களில் இருப்பதாகப் பெரிய பண்டிதர்கள் கூறுகிறர்கள், அவ்வாறு விதவை மணம் கொள்ளாமல் இருப்பது பாவம் என்று கூறுகிறார். இக்கருத்திற்கு விளக்கமாகப் பாரதியாரும் விசாலாட்சியின் அண்ணியின் வாயிலாக, ஆண்களும் பெண் களும் ஒ'ருங்கே யமனுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார்கள் ஆதலால் ஆண்களுக்குப் பெண்கள் அடிமைகளாய், ஆண்களுக்கு அஞ்சி பெண்கள் ஜீவனுள்ளவரை வருந்தி வருந்தி மடியவேண்டிய அவசியமில்லை என்று கூறுகிறார். மேலும் பாரதியார், விதவை மணத்தை மறுக்கும் ஆண்கள், தம் சுயநலத்திற்காக எழுதி வைத்திருக்கும் நீசத்தனமான சாத்திரங்களைக் கிழித்து அடுப் பிலே போடும்படிக கூறுகிறார். சாத்திரங்களை நம்பும் பிராமணர்களுக்கு அச்சா த்திரங்களிலேயே விதவைமணம் உள்ளதென்று அவர்கள் உணரும்படி குரஜாடா கூறுவது ஒரு புறமிருக்க, பாரதியார் விதவை மணத்தை ஏற்காத சாத்திரங் களைக் கிழித்து அடுப்பிலே இடும்படிக் கூறுவது அவரின் ஆவேச உணர்வையும் மூடத்தனத்தை முறியடிக்க அவர் கூறு வதையும் அறியலாம்.

அக்காலத்தில் இராஜ மகேந்திரவரத்தில் வீரேசலிங்கம் பந்துலு முதலான சீர்திருத்தச்சடைக்காரர்கள் விதவைகளுக்கு மடமமைத்து அதில் அவர்களுக்கு ஆதரவையும் கல்வியையும் தந்து வந்தனர். விதவைகள் விரும்பினால் அவர்களுக்குத் திருமணமும் செய்து வைத்தனர். இதைப் பல இடங்களில் கன்யாசுங்கத்தில் காணலாம். இம்மன்றத்திற்குக் கொண்டு சென்றே கிரீசமும் ராமபந்தலுவும் முறையே புச்சம்மாவையும் மீனாட்சியையும் மணம் புரிந்து கொள்வதாகக் கூறுவதைக் காணலாம். இறுதியில் புச்சம்மாவும் மீனாட்சியும் விதவைகள் மடத்திற்குச் செல்வதாகவே கதையமைந்துள்ளது. பாரதியாரின் கதையில் இம்மடம் பற்றி தெரிவதோடு விதவைமணத்தைப் புரிவதில் முயற்சி கொண்ட வீரேசலிங்கம் பந்துலுவையும் காணமுடிகிறது. அவரும் அவர்தம் மனைவியாரும் சந்திரிகையின் கதையில் சிறந்த கதைமாந்தர்களாக இடம் பெற்றுள்ளனர். இவர்களின் மூலமே விசாலாட்சி திருமணம் செய்துவைக்கும் படி வேண்டுகிறாள். இறுதியில் இவர் அவளுக்குத் திருமணமும்

செய்துவைக்கிறார். வீரேசலிங்கம் பந்துலுவைப்பற்றி குரஜாடா குறிப்பிட்டாலும் அவரையே பாரதியார் முக்கிய கதைமாந்தரா கத்தம் நூலில் படைத்திருப்பது அவர்மீதும் அவர்தம் படைப்பு களின் மீதும் பாரதியார் கொண்டிருந்த பற்றைக் காட்டு கிறது.

பாரதியார் தம்நூலில் விதவைமணத்தை மட்டுமன்றி கலப்புமணத்தையும் படைத்துள்ளார். கோபாலய்யங்கார் என்னும் பிராமணர் இடையர் குலப்பெண்ணான மீனாட்சியை மணம்புரிவதைக் காணலாம். மேலும் பிராமணர்கள் பிராமணர் குலத்தில் மாத்திரமல்லாமல் மற்றவருணங்களிலும் பெண் கொள்ளலாம் என்று சாத்திரங்கள் கூறுவதாகக் கூறுவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய கலப்பு மணத்தைக் குரஜாடாவின் நூலில்காணமுடியவில்லை. ஒருவேளை அதை அவர் தம்கதைக் குத்தொடர்பில்லை என்று விட்டிருக்கலாம்.

இனி, இருநூல்களிலும் ஆந்திரா, தமிழ் நாட்டில் இருந்த அன்றைய பிராமணச் சமுதாயத்தைக் காட்டுவதோடு அவர் களிடையே இருந்த சில மூடவழக்கங்களையும் காட்டுகின்றன. ஜாதகம் பார்த்து மணம் செய்தல், விதவைகள் கூந்தலை மழித்தல், வறுமை, கடன் தொல்லைகளினால் கிழவர்களுக்கும் பூப்பெய்தாதப் பெண்களைத் தந்து பணம் பெறுதல், பெண்கள் பூப்பெய்துவதற்கு முன்பே மணம் செய்தல் முதலான வழக்கங் களை இருநூல்களிலும் காணலாம். இளம் விதவைகளை மற்ற பிராமணர்கள் அடைந்து அவர்களை இழிவாகக் கருதுவதையும் இருநூல்களில் காணலாம்.

இவ்வாறாக, இருநூல்களிலும் கன்யாசுங்கம், இளம் விதவைகளின் துயர், விதவைமணம் ஆகியவற்றைக் கண்டாலும் குரஜாடா அப்பாராவு, அன்று கன்யாசுங்கத்தினால் பெண்கள் அவதிக்குள்ளாவதையும் அவர்களைப்பிராமணர்கள் இழிவாக நடத்துவதையும் கதைமாந்தர்கள் வாயிலாக எதார்த்தமாகப் படைத்திருப்பதைக் காணமுடிகிறான். ஆனால் பாரதியார், குரஜாடா படைத்துள்ளது போன்றே கதைமாந்தர்களைப்

படைத்திருந்தாலும் அம்மாந்தர்களுள் விசாலாட்சி, நித்தியானந்தம், கோபாலய்யர் முதலான பாத்திரங்கள் பிராமணசமுகத்தை எதிர்த்து விதவைமணம், கலப்புமணம் கொள்ளும் புரட்சி மாந்தர்களாகப் படைத்திருப்பதைக் காணலாம். இதிலிருந்து பாரதியார் குர்ஜாடாவைவிட, சீர்த் திருத்தக் கருத்துக்களைப் படைப்பதில் ஆர்வம் கொண்டிருப் பதை அறியமுடிகிறது.

தமிழ்-இந்தி நாட்டுப்புற விடுகதைகள்

சாரதா இரமணி
இந்தித் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

நுழைவாயில்

எழுதா இலக்கியமான நாட்டுப்புற இலக்கியங்களில் விடுகதைகள் குறுகிய அமைப்பைக் கொண்ட இலக்கிய வகைகளுள் ஒன்றாக விளங்குகின்றன. மானிட இனத்தின் பழைமையான இலக்கிய வகைகளுள் விடுகதையும் ஒன்றாகும். பெரும்பாலும் விடுகதையின் அடிப்படைப் பண்பு உருவகமாகும். விடுகதைகள் அறிவுக்கு ஆக்கமும், உள்ளத்திற்கு விருந்தும் அளிக்கவல்லன. உற்சாக மூட்டிச் சிந்திக்க வைப்பதே விடுகதையின் குறிக்கோளாகும். இத்தகு பண்புகளை உடைய இவ்விடுகதைகள் தமிழிலும் — இந்தியிலும் எவ்வாறு ஒருமைப்பாடு உடையனவாக அமைந்துள்ளன என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

இந்திய விடுகதைகள்

இந்தியாவில் பல்வேறு இனங்கள், மொழிகள். சாதி சமயப் பிரிவுகள் காணப்படினும் இவ்வேற்றுமைக் கூறுகளுக்கிடையே சில ஒற்றுமைக் கூறுகள் பண்பாட்டின் அடிப்படையில் அமைந்து கிடக்கின்றன. இந்திய மொழிகளுள் காணக் கிடக்கும் விடுகதைகளிடையே அமைப்பு. பொருள், தன்மை, வடிவம். பயன் போன்ற கூறுகளில் ஒருங்கிணைந்த ஓர் ஒருமைப்பாட்டை கூர்ந்து நோக்கின் அறிய முடியும்.

பெரும்பாலும் இந்திய மொழிகளில் விடுகதைகள் பாட்டு வடிவிலேயே அமைந்திருந்தன என்பதற்கு ரிக் வேதத்தில் காணப்படும் விடுகதைகளின் வடிவம் சான்றாக அமைகின்றது. விடுகதைகளை பொருள் கருதி,

1. விழா விடுகதைகள்.
2. இலக்கிய விடுகதைகள்
3. பொழுதுபோக்கு விடுகதைகள்

என பலவாறாகப் பார்த்தாலும் பின்னர் இவை எல்லையை விரிவாக்கிக் கொண்டன. மனித வாழ்க்கையில் தொடர்புடைய எல்லாப் பொருட்களைப் பற்றியும் விடுகதைகள் காணப்படுகின்றன. இவ்விடுகதைகளில் தமிழ், இந்தி மொழிகளில் காணப்படும் பொழுதுபோக்கு விடுகதைகள், கணித விடுகதைகள் போன்றவற்றின் ஒப்பீடுகள் இங்கு சுட்டி காட்டப் படுகின்றன.

பொழுதுபோக்கு விடுகதைகள்

பொழுதுபோக்கு விடுகதைகள் உண்ணும் பண்டங்கள், இயற்கை, வீட்டுக்குத் தேவைப்படும் பொருட்கள், விலங்குகள் போன்றவற்றைப் பற்றிய்வாக அமைந்திருக்கும்.

முள்ளங்கி பற்றிய விடுகதை ஒன்று தமிழிலும் இந்தியிலும் காணப்படுகின்றது. இம் முள்ளங்கி பற்றி தமிழில்,

மண்ணுக்குள்ளே வெள்ளை மீன் - அது என்ன? என்றும்

வெள்ளிக்கட்டி மண்ணுக்குள்ளே - அது என்ன? என்றும் காணப்படுவதைப் போன்று இந்தியில்,

ஒரு தோட்டத்தில் ஓர் அதிசயம்
பாதி கொக்கு பாதி கிளி

என்ற விடுகதை முள்ளங்கியைப் பற்றியனவாக அமைந்திருக்கின்றமையை நோக்கும்போது இவ்விரு மொழிகளிலும் இவ் விடுகதை பெரும்பான்மையான ஒருமைப்பாட்டுடன் விளங்குவதைக் காண முடிகின்றது.

மேலும் சீனிக்கிழங்கு பற்றிய விடுகதையானது தமிழில்,

செம்மண்ணுக்குள்ளே சிவப்பு மனிதன் - அது என்ன? என்றிருக்க இந்தியில்,

பூமியில் புதைந்த சிவப்புப் பிரம்பை
மாமியார் எடுத்து மருமகளைத் துரத்தினாள்

என வழங்கப்படுகின்றது. இதுபோன்று இன்னும் பல்வேறு பொருள்களை சுட்டும் விதத்திலும் இவ்விடுகதைகள் அமைந்துள்ளமையை இருமொழிகளிலும் காண முடிகின்றது. இப்பொழுதுபோக்கு விடுகதைகள் வழி மக்களின் அன்றாட உபயோகத்தில் இருக்கும் பொருட்கள் மற்றும் சமூக பழக்க வழக்கங்கள் போன்றனவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது எனலாம்.

கணித விடுகதைகள்

பொழுதுபோக்கு விடுகதைகளின் விடைகளைச் சுலபமாகக் கண்டுபிடித்துவிடலாம். ஆனால் கணித விடுகதைகளுக்கு விடை காண மூளைக்கு வேலை கொடுக்க வேண்டும். பெரும்பாலும் தமிழ், இந்திமொழிகளிலுள்ள விடுகதைகள் இத்தன்மைகளை உடையனவாகவே காணப்படுகின்றமையை இவ்விரு மொழிகளிலும் காணப்படுகின்ற விடுகதைகளின் வழி உணர முடிகின்றது.

கணித விடுகதைகள் பெரும்பாலும் கணிதம் தொடர்பான அறிவினை பிரதிபலிப்பனவாகவே அமைந்திருக்கும். இந்தியில் இக்கணிதம் தொடர்பான விடுகதைகள் வருமாறு,

நான்கு அணா ஒரு ஆடு, எட்டணா ஒரு பசு
நான்கு ரூபாய் ஒரு எருமை, இருபது ரூபாய் இருபது ஜீவன்கள்

என்றும், மற்றொரு விடுகதை,

உளுந்து எவ்வளவு இருக்கிறது
ராவணன் மண்டோதரி தலையளவு
நான் அனுமன் தந்தையால் ஊதிச் சுத்தம் செய்வேன்
அப்பொழுது ராமனின் தந்தைக்குச் சமானமாகத் தருவேன்

என்றும் அமைந்துள்ளன. இவ்விரு விடுகதைகளில் முதலாவது அமைந்த விடுகதையானது முற்றிலும் கணிதம் தொடர்பான

விடுகதையாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதில் விலங்குகளில் விலை கொடுக்கப்பட்டு இறுதியாக குறிப்பிட்ட தொகையை கூறி அத்தொகைக்கு இவ்வளவு விலங்குகள் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் ஒவ்வொரு விலங்கு வகையிலும் எத்தனை விலங்குகள் வாங்கப்பட்டுள்ளன என்பதுதான் இங்கு எதிராளி தேடிப்பிடிக்க வேண்டிய விடையாக அமைகின்றது.

சிறிது நேரம் சிந்திப்பின் உடன் விடை கிடைக்கும், அவ்விடை வருமாறு :

ஆடுகள் இரண்டு, பசுக்கள் பதினைந்து, எருமை மூன்று என்பது தான் முதலாவதாக அமைந்துள்ள கணித விடுகதைக்கு பதிலாகும் இதேபோன்று இரண்டாவது விடுகதையாக அமைந்துள்ள கணித விடுகதையானது முழுக்க கணிதம் தொடர்பான விடுகதையாக அமையாமல் கணித அறிவோடு சிறிது புராண அறிவையும் சோதிக்கும் முகமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விடுகதைக்கு விடை அளிக்க வேண்டுமெனில் எதிராளிக்கு கணித அறிவுடன் புராண அறிவும் தேவைப்படுகின்றமையை பின்வரும் இதன் விடையின் வாயிலாக அறிய முடியும். அவ்விடை வருமாறு :

கேள்வி - 1	:	உளுந்து எவ்வளவு இருக்கிறது
பதில்	:	ராவணன் தலை (பத்து) மண்டோதரி தலை (ஒன்று) ஆக பதினொன்று சேர் இருக்கிறது.
கேள்வி - 2	:	நான் அனுமன் தந்தையால் வைதிச் சுத்தம் செய்வேன். நான் அனுமன் தந்தை (வாய்வு & காற்று) வீசி தூசியை பறக்கச் செய்து சுத்தம்செய்வேன்.
பதில்	:	நான் ராமனின் தந்தைக்குச் சமானமாகத் தருவேன். ராமனின் தந்தை தசரதன் (தசம்-பத்து) பத்து சேர் தருவேன்.

என்பது மேற்கூறிய இரண்டாவது விடுகதையின் பதிலாகும். இவ்விடுகதையின் பதிலை நோக்கும்போது விடுகதையை விடு விக்க கணித அறிவும் புராண அறிவும் எவ்வளவு இன்றியமை யாதது என்பதை இவ்விடையின் வாயிலாக எளிதில் உணரலாம்.

இது போன்ற விடுகதைகள் இந்தியை நோக்க தமிழில் மிகுதியாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்கூறப்பட்ட இந்தி கணித விடுகதைக்கு ஒப்பாக தமிழில் ஓர் விடுகதை வருமாறு:
ஒரு சொல்லின்,

1 1 5. 6 எழுத்துக்களைச் சேர்ந்தால் தலையாகும்.

2 5. 6 4. 3. எழுத்துக்களைச் சேர்த்தால் தச்சர் கருவியாகும்

3 4. 2. 3 எழுத்துக்களைச் சேர்த்தால் வெந்து பார்க்கும் முறையாகும்

4 2. 3. 4. 6 எழுத்துக்களைச் சேர்த்தால் தூணாகும்.

5 2. 5. 6 எழுத்துக்களைச் சேர்த்தால் வகுப்பாகும்.

6 4. 5. 6 எழுத்துக்களைச் சேர்த்தால் ஆதிக்கடவுளாகும்.

இந்த ஊரின் பெயர் என்ன?

மேற்கூறப்பட்ட விடுகதையானது கணித அறிவினை வெளிப் படுத்தவதுடன் பொது அறிவினையும் சோதிப்பதாக அமைந் துள்ளமையை இதன் விடையின் வழியே அறிய முடியும்.

விடை:	1	2	3	4	5	6
	சி	த	ம்	ப	ர	ம்

1) சிரம்

2) ரம்பம்

3) பதம்
4) தம்பம்
5) தரம்
6) பரம்

போன்ற இவ்விடைகள் மேற்கூறிய கருத்தை உறுதிப்படுத்தும்) இவ்வாறு இந்தி மற்றும் தமிழ் மொழியில் உள்ள விடுகதைகள் ஒன்றோடொன்று ஒருமைப்பாட்டுத் தன்மையுடையனவாகவும், சிற்சில விடுகதைகள் வேறுபாடுகள் உடையனவாகக் காணப் பட்டாலும் அவ் வேறுபாட்டுள்ளும் ஓர் ஒருமைப்பாட்டுத் தன்மையினை காண முடிவதை மேற்கூறிய ஒப்பீட்டின் வழி அறிய முடிகின்றது.

முடிவுரை

இவ்விரு மொழிகளின் விடுகதைகளை நோக்கும்போது அவை மனித இனத்தின் சிந்தனைத் திறனை அளவிட்டு அறிவிக்கும் கருவியாக நிற்பதோடு மட்டுமின்றி மக்களின் செயல்முறைகள், பழக்கவழக்கங்கள், சிந்தனைப்போக்குகள், கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியவற்றை வெளிப் படுத்துவதுடன் பொழுதுபோக்கு அம்சமாகவும் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டுப்புறக் கதைகளின் வகைப்பாடு

ச. சிவகாமி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

வளர்ந்துவரும் நாட்டுப்புறவியல் ஆய்வில் நாட்டுப்புறக் கதைகள் சிறப்பிடம் பெறுகின்றன. சிறியோர் முதல் பெரியோர் வரை, பாமரர் முதல் கற்றோர் வரை அனைவரையும் கவரும் இவ்வாய்மொழி வழி வளர்ந்த கதைகள் திறனாய்வாளரையும் இப்பொழுது மிகுதியாக ஈர்த்துள்ளன, நாட்டுப்புறப்பாடல்களிடையே பலவகைகள் காணப்படுவது போன்று இதனுள்ளும் பலவகைகள் அமைகின்றன. தமிழில் வழங்கும் நாட்டுப்புறக் கதைகளின் வகைமையினை இனங்காண முயற்சிக்கின்றது இக் கட்டுரை.

நாட்டுப்புறவியலில் தம் பார்வையைச் செலுத்திய மேனாட்டார் நாட்டுப்புறக் கதைகளை வகைப்படுத்தும் முயற்சியினையும் மேற்கொண்டுள்ளனர். இங்கு இருவிதக் கருத்துகள் காணப்படுகின்றன. வீரதீரச்செயல்களைப் போற்றும் பழங் கதைகள் (Myths), புராணக்கதைகள் (Legends), இவற்றை நாட்டுப்புறக் கதைகளுடன் இணைத்தும் (p.302, The New Book of knowledge, Vol. 6, 1973), தனித்தும் (p.497, International Encyclopaedia of Social Sciences, Vol.5, 1972) நோக்குதல் அமைகிறது. எனவே எவையெவை நாட்டுப்புறக் கதைகளாகும் என்பதிலேயே சிக்கல் எழக் காண்கின்றோம். பெரும்பான்மையோர் கருத்து பற்றியும், நாட்டுப்புறக்கதைகளின் இயல்புகளை இவையும் கொண்டிருத்தல் பற்றியும், தமிழில் தொகுக்கப் பட்டுள்ள நாட்டுப்புறக் கதை நூல்களை நோக்கியும் வீரதீரச் செயல்களைப் போற்றும் பழங்கதைகளும், புராணக்கதைகளும் இவண் நாட்டுப்புறக்கதைகளாகக் கருதப்பட்டுள்ளன.

நாட்டுப்புறக் கதைகளின் வகைப்பாடுகளிலும் ஒற்றுமையைக் காண்பதற்கில்லை. வீரதீரக் கதைகள், புராணக்கதைகள், வழக்குக்கதைகள் (Popular stories) எனப் பொதுவான (p.519, Encyclopaedia Britannica, Vol.9, 1972) மேல்நோக்கான வகைப்பாடு அமைகின்றது. மற்றும் வழக்குக் கதைகளை மேலும் வகைப்படுத்தலும் காணப்படுகின்றது. தனி நிகழ்வுக் கதைகள் (anecdotes), விலங்குக்கதைகள் (animal tales), விளக்கக் கதைகள் (Why stories or origin stories), கூட்டுக் கதைகள் (Cumulative Stories), அறவுரைக் கதைகள் (Moralizing tales), வியத்தகுக் கற்பனை கதைகள் (Tall tales), அறிவிலிக் கதைகள் (Noodle stories), வீரதீரக் கற்பனைக் கதைகள் (Yarns), நகைச்சுவைக் கதைகள் (Jokes) என அவை அமைகின்றன (p.302, The New book of knowledge). இதன் பகுப்பிலும் ஒருமையின்மையை, உணரமுடிகின்றது (p.125, Joseph.T. Shipley, Dictionary of World Literary Terms, 1970 p.494, Encyclopaedia Americana, Vol.11, 1970).

தமிழில் வழங்கும் நாட்டுப்புறக் கதைகளை தேவர் கதைகள், வீரர் கதைகள், வாழ்க்கைப் பயிற்சிக் கதைகள், பல கதைத் தொகுப்புகள், தேவர் மனிதர் இணைவுக் கதைகள் என வகைப்படுத்தியிருக்கக் காணலாம் (ப.379, கலைக்களஞ்சியம் தொகுதி 6, 1959). இவ்வகைப்பாடுகளிடையே முரண் எண்ணங்கள் காணப்படுவதுடன், வகைமைக்குப் பயன்படுத்திய அளவுகோலும் பலவாக இருத்தல் புலப்படுகிறது. ஒரு பகுப்பு நெறிக்கு அளவுகோலும் ஒன்றாகவே இருத்தல் ஏற்புடைத்தாதலின் இங்கு அம்முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

தமிழில் வழங்கும் இக்கதைகள் வடிவம், பொருள், கதாபாத்திரங்கள் எனும் மூன்று அளவுகோல்களால் மூலவழிகளில் பகுத்தற்கு இடமளிக்கின்றன.

வடிவம்

செம்மையிலக்கியங்களில் வெண்பா, விருத்தம் என யாப்பு கொண்டோ நாடகம், காப்பியம், தனிப்பாடல் என

அமைப்புநிலை கொண்டோ வடிவ வகைப்பாடு அமைய இங்கு கதையின் நீட்சி அளவுகோலாகிறது. குறுங்கதை, சிறு கதை, நெடுங்கதை, தொடர்கதை என நான்காக வடிவ நிலையில் இக்கதைகள் வகுக்கப்படலாம். மிகக் குறுகிய வடிவில் ஓரிரு பக்கங்களிலேயே நிறைவடைந்துவிடும் கதைகளைக் குறுங்கதைகள் எனவும், மிக நீண்டு பல பத்துப் பக்கங்களுக்குச் செல்வனவற்றை நெடுங்கதைகள் எனவும் இரண்டிற்கும் இடைப்பட்டனவற்றைச் சிறுகதைகள் எனவும் நவிலலாம். இவற்றினின்று முற்றிலும் மாறுபட்ட நிலையில் அமையும் தொடர்கதைகளை மாலைத்தொடர், சங்கிலித்தொடர் என இரண்டாக மீண்டும் பகுக்கலாம். தனித்தனிக் கதைகளைக் கதைத் தலைவன் ஒருவனே என்ற நிலையில் இணைத்து வழங்குவன மாலைத்தொடர் கதைகளாம். தெனாலிராமன் கதைகள், மரியாதைராமன் கதைகள் போன்றவை இத்தகையன. கதைத் தலைவன் ஒருவனாயினும் கதைக்குள் கதையாகப் பல்வேறு கதைகளாகப் பின்னப் பட்டிருக்கும் மதனகாமராஜன் கதை, விக்கிரமாதித்தன் கதை, பஞ்சதந்திரக்கதை முதலானவற்றைச் சங்கிலித்தொடர் கதைகள் எனவும் காட்டலாம்.

பொருள்

பாடுபொருளால் இலக்கியத்தை வகைப்படுத்துவதும் செம்மையிலக்கியப் பாங்கினதே. பொழுதுபோக்கு, அறிவுரை, வாழ்வியல் எனும் முப்பெரும் பிரிவுகளில் அடங்கும் இக் கதைகள் மேலும் சில உட்பகுப்புக்களுக்கும் இடம் கொடுக் கின்றன. பின்வரும் வரைபடம் அவற்றைச் சுட்டும்.

பொருள்

- பொழுதுபோக்கு
  1. வீரதீரச் செயல்கள்
  2. மாய மந்திர தந்திரச் செயல்கள்
  3. நகைச்சுவை
- அறிவுரை
- வாழ்வியல்
  - இயல்வு
    1. அறிவுத்திறன் விளக்கம்
    2. நடைமுறை
       - நல்லவன் வாழ்வுபெறல்
       - தீயவன் அழிதல்
  - புனைவு
    - இயற்கை விளக்கம்

கதைத்தலைவனின் ஆற்றலைப் புலப்படுத்துவதாக, சாதாரண மானிடனைவிட மிகுதியான வீரமும், வியத்தகு செயல்கள் புரிபவனாகவும் அமைவனவற்றை வீரதீரச்செயல் கதைகள் எனக் குறிப்பிடலாம் மாயம், மந்திரம் முதலான மீவியற்கைச் சக்திகளின் செயற்பாடுகள் கதையில் முதலிடம் பெறும்பொழுது அவை மாய மந்திர தந்திரச் செயற் கதைகளாகின்றன. கதைத் தலைவனின் அறிவற்ற மடத்தனமான செயல்களை, வேண்டாத பண்புகளை, உருவத்தை எனப் பல நிலைகளில் நையாண்டி செய்வதாக அமைவன நகைச்சுவையின் பாற்படுகின்றன. இவற்றை வேடிக்கைக் கதைகள் என்றும் மொழிவர். கதை கேட்பவர் வாழ்க்கையை எப்படி நல்வழியில் அமைத்துக் கொள்ள வேண்டும்; தீய வழியில் செல்லலாகாது என்பன வற்றை வலியுறுத்திப் போதித்தலை உள்ளடக்குவன அறிவுரைக் கதைகளாகும்.

மூன்றாம் பிரிவான வாழ்வியல் மீண்டும் இயல்பு, புனைவு என இரண்டாக வகைப்படுகிறது. கதைத் தலைவனின் அறிவுத்திறனுக்கு முதன்மையளித்து அதனை விளக்குவதாக அமையும் கதைகள் அறிவுத்திறன் விளக்கக் கதைகளாகின்றன. மரியாதைராமன், அப்பாஜி போன்றோர் கதைகள் சான்றாகும். நடைமுறை வாழ்வாக அமையும் - எவ்வளவு துன்பங்கள் வந்தபோதிலும் நல்லவன் இறுதியில் நலம்பெறுவான்; எவ்வளவு இன்பங்களை, சிறப்புகளைத் தீயவன் பெற்றாலும் இறுதியில் அழிவான் எனும் உண்மை அல்லது நம்பிக்கையை வலியுறுத்தும் கதைகள் நடைமுறைக் கதைகளாகின்றன. வாழ்வின் இயல்பினைச் சுட்டுவதாக இவை நிற்றலின் இயல்பு வகையாகின்றன.

இறைமை, உலகத்தோற்றம், இயற்கைப் பொருட்களின் பண்பு ஆற்றல் என நம்மைச் சுற்றியுள்ளவற்றிற்கு, அன்றாட வாழ்வில் காண்பனவற்றிற்குக் கற்பனையான காரணங்களைப் புனைந்துரைத்தல் புனைவாக நிற்கின்றன.

கதைகளில் இடம்பெறும் கதாபாத்திரங்களைக் கொண்டும் வகைப்படுத்தற்கு நாட்டுப்புறக்கதைகள் இடனளிக்கின்றன இயற்கை, மீவியற்கை எனும் இருபெரும் பிரிவுகளில் இக்கதா

பாத்திரங்கள் அடங்குகின்றன. இயற்கை எனும் பொழுது மானிடர், விலங்கு, பறவை, தாவரம் முதலான இயற்கைப் பாத்திரங்கள் முதன்மைபெற்றுக் கதைகள் சிறப்புற்று நிற்றலைச் சுட்டுகிறது. விலங்கு, பறவை. தாவரம் போனறவை இயற்கைக் குப் புறம்பான நிலையில் பேசுகின்ற, செயலாற்றுகின்ற திறன் படைத்தவையாக அமையினும் அக்கதாபாத்திரங்கள் உலகில் வாழ்வன எனும் நிலையில் இவண் கொள்ளப்பட்டுள்ளன. தேவதைகள், பேய், பூதம், அரக்கர் மற்றும் கற்பனைப் படைப் பாக அமையும் விலங்கு. பறவை போன்றவை முதன்மை பெறும்பொழுது அவை மீவியற்கையாக அமைகின்றன. இம்மீவியற்கைக் கூறுகள் கதைகளில் இடம்பெறும்பொழுது கதைத்தலைவன் மானிடனாக அமையினும் இவை துணை நிற்றல் அல்லது எதிர்நிற்றல் எனும் நிலையில் கதையின் போக் கினை வளர்த்து, கதை கேட்பதில் மிகுந்த ஈடுபாட்டைத் தருதலாலும் கதையின், சிறப்பாக நிற்றலாலும் இங்கு இவ் வகைப்பாட்டின் அளவுகோலாக அமைந்துள்ளன.

இவ்வாறு துணைநிற்போரும், எதிர்நிற்போரும் கதைத் தலைவரைவிடச் சிறப்புற்று நிற்கும் நிலையில் நாட்டுப்புறக் கதைகள் செம்மையிலக்கியத்தினின்றும் பெரிதும் வேறுபட்டு நிற்கக் காண்கிறோம். வகைப்பாடுகள்கூட குறிப்பிட்ட இலக் கியத்தின் தனித்தன்மையை வரையறுக்க இயலும் என்பதற்கு இஃது ஓர் சான்றாம். ஒரே வகை இலக்கியம் இவ்வாறு பன்முக நோக்கிலும் வகைப்பாட்டிற்கு இடம்தரும் என்பதும் இங்குப் பெறப்படுகின்றது.

இவற்றைத் தவிர நாட்டுப்புறக் கதைகளின் இயல்பில், இன்றைய படைப்பாளர்களால் உருவாக்கப்படும் பாரதியாரின் நவதந்திரக்கதைகள், கண்ணதாசனின் குட்டிக்கதைகள், சிறுவர் இதழ்களில் மற்றும் சிறுவர்களுக்காகப் படைக்கப்படும் கதைகள் போன்றனவும் இவ்வகைப்பாடுகளில் அடங்குதற்குரியன. நாட்டுப்புறக் கதைகளை முழுமையாக அடியொற்றி இன்றுப் பலவாறாகக் கதைகள் படைக்கப்பட்டு வரும் சூழலில் இவ் வகைப்பாட்டு முயற்சி செப்பம் பெறும் தன்மையுடையதே என்பதும் குறிப்பிடற்பாலது.

'சோழர்குல வரலாற்றில் ஒரு விடி வெள்ளி'

த. சின்னத்தம்பி
பூம்புகார்க் கல்லூரி, மேலையூர்.

தோற்றுவாய்

நம் முதல் இராசேந்திர சோழன், முதல் இராசராச சோழனுக்கும் வானவன் மாதேவி என்று வழங்கும் திரிபுவன மாதேவிக்கும் குல மரபுப்படி சத்திரியர் குலத்தில் மகனாகப் பிறந்தான் இவன் மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் பிறந்தவன். திருமுதுகுன்றமுடையார் கோயிலில் திங்கள் தோறும் திருவாதிரை நாளில் விழா நடத்துவதற்கு நிலம் அளித்துள்ளான்.

சிறப்புப் பெயர்கள்

இம் மன்னனின் தந்தை இவனுக்கு 'மதுராந்தகன்' என்று பெயரிட்டிருந்தனன் என்பது திருவாலங்காட்டுச் செப்பேடு களும் கன்னியாகுமரி கல்வெட்டும் தெரிவிக்கின்றன. திருவாலங் காட்டுச் செப்பேடுகள் இவனை இறைவன் நெற்றிக்கண் காணாத மற்றொரு 'காமவேள்' என்று கூறுவதிலிருந்து தன் பாட்டனாகிய சுந்தர சோழனைப் போல் மிகவும் எழிலுடன் திகழ்ந்தனன் எனலாம். கி. பி. 1012-ல் இவன் தந்தை இவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிய நாளில் 'இராசேந்திரன்' என்ற அபிடேகப் பெயர் வழங்கப்பட்டது. கி பி. 1014-ல் தந்தை இறந்தபின் 'பரகேசரி' என்னும் பட்டம் புனைந்து சோழ நாட்டிற்குச் சக்கரவர்த்தியானான்.

மெய்க்கீர்த்திச் செய்திகள்

மெய்க்கீர்த்தி என்பது பேரரசனது மெய்ப்புகழையும்

வரலாற்றையும் எடுத்துரைத்து, அவன் தன் மாதேவியுடன் நீடுவாழ்க என வாழ்த்தி, அம்மனன் இயற்பெயரோடு சிறப்புப் பெயர்களையும் ஆட்சியாண்டினையும் கூறும் செய்யுளாகும். இதன் இலக்கணத்தை

'சீர்நான் காசி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்புக ழெல்லாஞ் சொல்லியும்
அந்தத் தவன்வர லாறு சொல்லியும்
அவளுடன் வாழ்கெனச் சொல்லியு மறறவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி'

என்னும் பன்னிருபாட்டியல் சூத்திரத்தால் நன்குணரலாம்.

இராசராச சோழனின் எட்டாம் ஆட்சியாண்டில் துவங்கிய மெய்க்கீர்த்தி. இராசேந்திரன் காலத்தில் நன்கு வளர்ச்சிப் பெற்றது. இவனது மெய்க்கீர்த்தி,

'திருமன்னி வளர விருநில மடந்தையும்
போர்ச்சயப் பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுந்
தன்பெருந் தேவிய ராகி யின்புற

என்று துவங்குகிறது. இராசேந்திரசோழனின் போரின் வெற்றி மாலையைக் கூறுகிறது. தன் தந்தையால் வெல்லமுடியாத எஞ்சிய நாடுகளை எல்லாம் போரில் வென்ற ஒரு மாபெரும் மன்னன் முதலாம் இராசேந்திரன்.

இலங்கை முழுமையும், கேரளம், மதுரை, கங்கை வரை வடநாடு முழுமையும், கீழ்த்திசையில் கடல் நடுவிலுள்ள பல் வேறு தீவுகளையும் வென்ற ஒரு சிறந்த வீரன். இராசேந்திரனின் படைத்தலைவனாகிய அறையன் இராசராசன் பல உள்நாடு களை வென்று, பேரரசனாகிய மகிபாலனைப் போரில் புறங் காட்டியோடும்படிச் செய்து, தோல்வியுற்ற மன்னர்களின் தலைகளில் கங்கை நீர் நிரம்பிய குடங்களையும் வைத்துக் கொண்டு தன் சோழநாட்டிற்குத் திரும்பினான். அப்படை யெழுச்சி நிகழ்ந்தபோது இபபடைத்தலைவன் தன் அறிவின்

திறமையால் கங்கை பேராற்றில் யானைகளை வரிசையாக நிறுத்திப் பாலங்கள் அமைத்து அவற்றின் மீது தன் படைகளைச் செலுத்தி அவ்வாற்றை எளிதாகக் கடந்து சென்றான் என்று திருவாலங்காட்டு செப்பேடுகள் கூறுகின்றன. வடநாட்டில் வெற்றிப் பெற்றுத் திரும்பிய தன் படைத்தலைவனை சோழன் கோதவரியாற்றங்கரையிற்கண்டு பெருமகிழ்ச்சியுற்று, அவன் கொணர்ந்தவற்றை ஏற்றுக்கொண்டு அவனோடு தன் நாட்டிற்குத் திரும்பினான் இதனைக் கங்கை கொண்ட சோழ புரத்திற்குக் கிழக்கேயுள்ள திருலோக்கி (திரைலோக்கிய சுந்தரம்) என்ற ஊரில் உள்ள கல்வெட்டு, 'இராசேந்திரசோழ தேவர் கங்கை கொண்டு எழுந்தருளுகின்ற இடத்துத் திருவடிதொழுது' என்பதிலிருந்தும், கும்பகோணத்தில் நாகேச்சுரரது கோயிலில் இறைவன் திரு முன்னர் வைக்கப்பெற்றுள்ள 'கங்கை விநாயகர்' படிமமும் உணர்த்தும். மேலும் தன் கப்பற்படை வலிமையால் கீழ்த்திசை நாடுகளில் உள்ள கடல் தீவுகளைப் போரில் வென்று கடாரத்து அரசனை வென்று பல்வேறு பொருள்களுடன் திரும்பும் போது ஸ்ரீவிசயம், பண்ணை, மலையூர், இலிம்பங்கம், வளைப்பந்தூர், தக்கோலம், தமாலிங்கம், இலாமுரிதேசம், நக்கவாரம், கடாரம் போன்ற நாடுகளை வென்றான் என்பதி லிருந்துதான் 'கங்கை கொண்ட சோழன்' 'கடாரங்கொண்ட சோழன்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான் என்று இவனது மெய்க்கீர்த்திக் கூறும்.

சமயப்பணி

சோதிடச் சாஸ்திரப்படி, மார்கழி மாதத்தில் பிறந்தவளிடம் தெய்வப்பற்று அளவு கடந்து காணப்படும். முதலாம் இராசேந்திர சோழன் மார்கழி திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்ததால் இறைவனிடம் அதிக ஈடுபாடு உடையவனாகத் தோன்றினான் என்பதிற்கிணங்க, ஒரு புதிய தலைநகரை அமைத்து, அதற்குப் போரின் வெற்றியின் சின்னமாக கங்கை கொண்ட சோழபுரம் என்று பெயரிட்டுத் தலைநகராக்கி தன் தந்தையைப் போல் ஒரு மாபெரும் சிவாலயத்தைக்கட்டி வைத்து உள்ளம் குளிர்ந்தான். தென் இந்தியக் கோயில் வரலாற்றில் 13 அடி உயரமுள்ள சிவலிங்கம் இக்கோயிலில்

மட்டும் தான் என்பது, இவனது மாபெரும் வெற்றியை எடுத்துக் காட்டுகிறது.

இந்நகர் 'கங்காபுரி' என்று கலிங்கத்துப்பரணியிலும், விக்கிரம சோழன் உலாவிலும், கங்கை மாநகர் என்று வீரராசேந்திரசோழன் மெய்க்கீர்த்தியிலும், "கங்காபுரம்' என்று தண்டியலங்கார மேற்கொள் பாடலிலும் புகழ்ந்து கூறப்பட்டு உள்ளது.

இந்த விமானம் ஒரு ஆண் அழகனுக்கு ஒப்பிடப்படுகிறது. இங்குள்ள பல்வேறு கற்சிற்பங்களும், ஒரே கல்லில் அமைந்துள்ள நவக்கிரகங்களும், மகா மண்டபமும், சிங்கமுகக் கிணறும் துர்க்கையும் மிகவும் எழில் மிக்கவை ஆகும். இக் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிவந்தங்களோ, ஊர்களோ இக்காலத்தில் இல்லை. ஆனால் இக்கோயிலுக்கு ஆண்டு ஒன்றுக்கு 340 கழஞ்சு பொன்னும், 1,10,000 கலங்கள் நெல்லும் கொடுக்க வேண்டும் என்று பல்வேறு கிராமங்களுக்குக் கட்டளை இட்டதாக கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. இவரது சைவகுரு சர்வசிவ பண்டிதருக்கு ஆசாரிய போகமாக ஆண்டு தோறும் 2000 கலங்கள் நெல் அளிக்குமாறு கட்டளை இட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் புறச் சமயமாகிய புத்தகோயிலுக்குத் தன் தந்தையினால் அளிக்கப்பட்ட ஆனை மங்கலம் என்ற ஊர் இவர் காலத்தில் தான் சாசனம் செய்து அளிக்கப்பட்டதிலிருந்து புறச் சமயத்திற்கும் பாதுகாப்பு அளித்தார் என்பது இவரது சமய ஒற்றுமையை காட்டுகிறது. இவன் நாகைக் கருவில் செம்பியன் மாதேவி என்னும் ஊரில் செம்பியன் மாதேவி என்ற திருக்கோயில் கட்டி, செம்பியன் மாதேவியாரின் திருவுருவப் படிமத்தை அக்கோயிலில் எழுந்தருளச் செய்து, அத்திருக்கோயில் நாள் வழிபாட்டிற்கு நிவந்தம் அளித்துள்ளான். இவன் சோழநாட்டிற்கப்பாலும், திருக்கோயில் கட்டி சமயத்தையும், கட்டிடக்கலையையும் வளர்த்த நிலையை நன்குணர்த்துகிறது.

உட்டத்தூர். திருப்பத்தூர், மகாதானபுரம், திருநல்லூர், திருமழவாடி, இராமநாதன் கோயில், திருவையாறு, திருவாரூர்,

பிரமதேசம், பனயவரம், கவந்தந்தலம், கூவம் அகரம், திருப் பசூர். திருவொற்றியூர், குலம்பந்தல், மன்னார்கோயில், சிட்டி பெட்டா, கோலார், பெலதிரு. சுத்துரு, நந்திகுண்டா, கலிதிண்டி போன்ற இடங்களிலும் இவர் காலத்தில் திருக்கோயில்கள் கட்டப்பெற்றன. இவர் காலத்தில் சுமார் 55 கோயில்கள் தோன்றியதிலிருந்து இவரது சமயப் பணி நன்கு தெரிகிறது.

உட்கோட்டையில்தான் சோழ மன்னர்களுடைய சோழ கேரளன், முடிகொண்ட சோழன் போன்ற அரண்மனைகள் இருந்தன என்பதை அகழ்வாய்வில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள **'மாளிகைமேடு'** என்ற இடத்தால் உணரலாம்.

நிலவளமும் நீர்வளமும்

தன் தலைநகராகிய கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மேற்றிசையில் பெரியதோர் ஏரியை வெட்டுவித்து மக்கட்கு விவசாய விளை நிலங்களுக்கு நீர்ப்பாசனத் திட்டத்தைத் தோற்றுவித்தான். நீர்வளத்தால் நாடு செழுமையடைந்தது. அப்பேரரி 'சோழகங்கம்' என்றும், மேலும் அதனை நீர்மய மான வெற்றித்தூண் என்றும் திருவாலங்காட்டுச் செப்பேடு கள் கூறுகின்றன.

இதனை இக்காலத்தில் 'பொன்னேரி' என்றும் கூறுவர். கொள்ளிடத்திற்கும், பொன்னேரிக்கும், வீராணம் ஏரிக்கும் காவிரி நீர் போகுவரவு இருந்ததாக வரலாறு கூறுகிறது. ஆனால் தற்போது எந்தவித தொடர்புமின்றி பொன்னேரி மட்டும் வறண்டு காட்சியளிக்கிறது.

மனைவிகளும் மக்களும்

இம்மன்னனுக்கு முக்கோக்கிழானடிகள், அரிந்தவன் மாதேவி, வானவன் மாதேவி, வீரமாதேவி. பஞ்சவன் மாதேவி என ஐந்து மனைவிமார்கள் இருந்தனர். இவர்களில் வானமா தேவி தான் பட்டத்தரசியாக இருந்திருக்கலாம் என்பதை 'வானமாதேவி' என்னும் ஊர்ப்பெயரால் ஊகிக்கின்றனர். இவ்வேந்தருக்கு மக்கள் பலர் உண்டு. இம்மன்னனுக்குப் பின்

முதல் இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன், வீர ராசேந்திரன் ஆகியோர்கள் முறையே ஆட்சி செய்தனர். அம்மூவரும் வேள்வியில் தோன்றும் முத்தீயைப் போல் இராசேந்திர சோழனின் புதல்வர்கள் தோன்றினார்கள் என்று கன்னியாகுமரிக் கல்வெட்டு கூறுகின்றது. தன் தந்தையின் ஆணையின் படி சேரபாண்டிய நாடுகளுக்கு அரசப் பிரதிநிதியாய் மதுரை மாநகரில் வீற்றிருந்து ஆட்சி புரிந்த சடையவர்மன் சுந்தர சோழ பாண்டியன் என்பவன் இராசேந்திர சோழனுடைய மற்றொரு புதல்வன் ஆவான். அருண்மொழி நங்கை, அம்மங்கைதேவி ஆகிய இரு மகள்கள் உண்டு. அம்மங்கை தேவி கீழைச் சாளுக்கிய மன்னன் விமலாதித்தனுக்கும். முதல் இராசராச சோழன் மகள் குந்தவைக்கும் பிறந்த இராசராச நரேந்திரன் என்னும் அரச குமாரனுக்கு மணஞ் செய்து கொடுக்கப்பட்டு, அவர்களுக்குப் பிறந்த மகனும், முதலாம் இராசேந்திரனின் பேரனும் ஆகிய முதலாம் குலோத்துங்க சோழன் சோழ நாட்டில் ஆண் வாரிசு இல்லாத நேரத்தில் முடி சூடிக்கொண்டு சோழ நாட்டின் சக்கரவர்த்தியமாக ஆட்சி செய்தான என்பது சோழர் குல வரலாற்றில் ஒரு திருப்புமுனை ஆயிற்று என்பது குறிப்பிடத்தக்கது.

சோழர்கால ஊர்கள்

கங்கை கொண்ட சோழபுரம், செயங்கொண்ட சோழபுரம், வாணதிரையன் பட்டினம், கடாரங்கொண்டான், கொல்லாபுரம், உட்கோட்டை, சுண்ணும்பு குழி, வாணவன் மாதேவி, ஆயுத களம், சோழமாதேவி, இலையூர் — வாரியங் காவல், பொன்பரப்பி. சிறுகளத்தூர், சோழன் குடிக்காடு, சின்னவளையம், பெரியவளையம், மெய்காவல் புத்தூர், பரணம், திருப்புறம்பியம், வீர சோழபுரம், தொட்டிக்குளம், போன்ற ஊர்களும், மற்றும் பல ஊர்களும் சோழ நாட்டில் சோழர்களது வரலாற்றை விளக்குகின்றன.

அரசியல் அதிகாரிகள்

விக்கிரம சோழியவரையனாகிய அரையன் இராசராசன், முதலாம் இராசேந்திரனின் படைத்தலைவன் ஆவான். அரசன் ஆணைப்படி வெற்றிமாலை சூடியவன். கிருஷ்ணன் இராமனை மும்முடிச் சோழன் படைத்தலைவனாக விளங்கினான்.

"வல்லபாச்சாரியாரும் - அவர் வகுத்த மதமும்"- ஓரறிமுகம்

டி. சீனிவாசவரதன்
முஸ்லிம் பல்கலைக்கழகம்-அலிகார்

1. தோற்றுவாய்

கண்ணன்-இராதை இவர்களைப் பிரும்மமாக-தலைமைத் தெய்வங்களாக-ஏற்று வடநாட்டில் பக்திப்பிரசாரத்தைத் தோற்றுவித்தவர் இருவர் 1-ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர், 2-வல்லபாச்சாரியார். இவ்விருவரும் நிம்பார்க்கரின் ''த்வைதாத்வைதம்'' என்னும் மதத்தினைப் பின்பற்றியவர்கள். இவ்விருவருள் வல்லபர் ''சுத்தாத்வைதம்'' என்ற சித்தாந்தத்தையும், ''புஷ்டி மார்க்கம்'' என்னும் சம்பிரதாயத்தையும் தோற்றுவித்தார். வடநாட்டின்மிகச்சிறந்த கிருஷ்ணபக்தரான ''சூர்தாஸி''ன் குரு வல்லபரேயாவார். தமிழகத்தில் இராமானுசர் வகுத்த விசிட்டாத்வைதத்தில் பக்தியும்-சரணாகதியும் இடம்பெறுகின்றன இவருக்குப்பின் வந்த வைணவமதமனைத்தும் பக்தி-சரணாகதிகளை ஏற்றன.

2. வல்லபர் வரலாறு

வல்லபரின் வாழ்க்கை வரலாறு ''வல்லபதிக் விஜயம்'' என்ற நூலிலிருந்து வெளிப்படுகிறது. இவர் கோதாவிரி நதிக் கரையிலுள்ள ''காகர் வாடா'' என்னுங் கிராமத்தில் ''லஷ்மண பட்டர்''-''இல்லம காரு'' என்ற தம்பதிகளுக்குத் திருமகனாக அவதரித்தார் இவர் தோன்றிய ஆண்டு கி.பி. 1478 மறைந்த ஆண்டு கி.பி 1530 ஆகும் இவரது பிறப்பு, மற்றும் வாழ்க்கை பற்றிப்பல செவி வழிச செய்திகள் உலவுகின்றன.

இவர் தமது பத்தாவது வயதிற்குள் வேதம், வேதாந்தங்கள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார். இவரது தந்தை இதே சமயம் மறைந்துவிட்டதால் வல்லபர் தம் பெற்றோருடன் தங்கியிருந்த காசியை விட்டுத் தென்னகம் வந்தார் அவ்வமயம் சிறப்புப் பெற்றிருந்து சமய குரவர்களைச் சந்தித்து வேதாந்தக் கருத்துக்களின் உண்மையினைக் கேட்டுணர்ந்தார். இவர் தம் ஆயுட்காலத்துக்குள் மூன்று முறை (1489, 1493, 1497 கி.பி ஆண்டுகளில்) பாரததேசம் முழுவதையும் சுற்றி வந்து, ஆங்காங்குள்ள சித்தாந்திகளை வாதில் வென்று வாகை சூடினார்.

1508 கி.பி. யில் வித்யாநகரில் நடந்த புலவர் அவையில் வைணவமதத்தினருக்குத் துணையாக நின்று அத்வைதிகளை வென்றார். இதனைக் கண்டு மகிழ்ந்த விசய நகர மன்னன் வல்லபருக்குக் கனகாபிடேகம் செய்வித்தான்.

இவர் 1501 கி பி. இல் 'மதுமங்களர்' என்பவரின் மகன் 'மகாலக்ஷ்மி'' யை மணந்தார். இவருக்கு 'கோபிநாத்' 'விட்டல்நாத்' என்ற இரண்டு புதல்வர்கள் பிறந்தனர்.

வல்லபர் 84 நூல்கள் எழுதினார் என்று நம்பப்படுகிறது. ஆனால் அவற்றுள் இன்று சிறிதும் பெரிதுமாக முப்பது நூல்களே கிடைக்கின்றன. அவற்றுள்ளும் பிரும்ம சூத்திரத்தின் 'அணுபாஷ்யம்' பாகவதத்தின் 'சிபோதினிமீகா' 'ஷோடசகிரந்தம்' 'புருடோத்தம ஸஹஸ்ரநாமம்' என்பன மிக்க புகழ் பெற்றன.

3. சுத்தாத்வைதம் (பிரும்மம்)

சுத்தம் என்பதற்குக் கலப்பின்மை என்று பொருள். 'பிரும்மம்' மாயையின் கலப்பின்றித்தானே காரணம் --- காரியம் இரண்டுமாக இருப்பதாகும் என்னுங்கருத்தினை நிறுவியதால் வல்லபரின் சித்தாந்தம் 'சுத்தாத்வைதம்' எனப்பட்டது. ஆதி சங்கரர் 'பிரும்மம்' மாயைக்கிலக்காகி உலகத்தினைப் படைக்கிறது என்பர். இராமானுசர் உட்பட அனைவரும் இக்கருத்தினை ஏற்பதில்லை.

'பிரும்மத்தின் மற்றொரு வடிவமே உலகு உலகு விகார மற்றது. பிரும்மம், சீவன், உலகு மூன்றுமே பிரும்மத்தின் வடிவங்களே. (சுத்தாத்வைத மார்த்தாண்டம், சு. 28) பிரும் மத்திற்குத் தான், தன்னைச் சார்ந்தது, தன்னின் வேறுபட்டது என்ற வேறுபாடுகள் கிடையாது. இது, தான் விரும்பும் உருவ மெடுத்துக் கொண்டு அலகிலா விளையாட்டினைச் செய்து மகிழ்கிறது. விளையாட்டிற்குள்ளேயே தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறது. நெருப்புக் கட்டையிலிருந்து தெளித்து வெளிப் படும் பொறிகளைப் போல பிரும்மத்திலிருந்தே பல்வகைச் சீவன்களும் வெளிப்படுகின்றன. 'சீவன், உலகு ஆகியவை பிரும் ம்த்தினின்றும் சிறிதும் வேறுபாடற்றவை' என்று கூறுதலால் 'சுத்தாத்வைதம்' 'அவிக்ருத பரிணாம வாதம' (வேறுபாடற்ற திரிபு எனுங்கூற்று) என்றுங்கூறப்படுகிறது

எல்லாப் பொருளும் பிரும்மத்திலிருந்தே வெளிப்படுகின் றன. மறுபடிப் பிரும்மத்துக்குள்ளேயே மறைகின்றன. தோற்றம் - மறைவு என்னும் செயல்களே, ஒன்று பலவாகவும் - பல ஒன்றாகவும் தோன்றக் காரணமாகும். பிரும்மத்தின் கூறுகள் சத்து, சித்து, ஆனந்தம் என்பனவாகும். சடப்பொருள் களில் 'சத்து' மட்டும் வெளிப்படையாக உள்ளது. சீவனில் சத்து, சித்து இரண்டும் வெளிப்படையாயுள்ளன. ஆனந்தம் மறைவாக உள்ளது. ஆனந்தக்கூறு ஒவ்வொரு சீவனுக்குள்ளும் 'அந்தராத்மா' வாக இருக்கிறது. இதுவே 'அந்தர்யாமி' எனப் படும் (தத்துவதீபநிபந்தம் சாஸ்திரார்த்த பிரகர்ணம் சு-323.)

பிரும்மத்தின் சுத்தநிலை 'புருஷோத்தம-பரப்பிரும்மம்' எனப்படும். அதன் ஒருருவம் 'அக்ஷர-பிரும்மம் ஆகும். இவ் வக்ஷரபிரும்மத்திலிருந்தே உலகு, சீவன் ஆகியவை தோற்ற மெடுக்கின்றன. அதன் மற்றொரு உருவம் 'ரஸரூபம்' எனப் படும். இது ஆறு குணங்களுடன் கூடியது. ஆறு குணங்களா வன ; 1) ஐச்வர்யம், 2) வீரியம் 3) கீர்த்தி 4) ஸ்ரீ 5) ஞானம் 6) வைராக்யம் என்பனவாம். இவ்வறு குணங்களும் சீவனிடத் தில் வெளிப்படுகையில் அவன் இன்பத்துடன் வாழ்வான் இக் குணங்கள் மறையுமாயின் துன்பமடைவான். ரஸரூபமான

பிரும்மம் அக்ஷரபிரும்மமாகும் போது லீலைகள் பலபுரியும் அக்ஷர பிரும்மம் உள்ள இடம் 'கோலோகம்' எனப்படும்.

வல்லபர் மதப்படி 'கிருஷ்ணன்' 'பூரணானந்த ரூபனான பரபிரும்மமே' யாவான். அவதார புருஷன் அல்ல'. பிரும்மமே அக்ஷர ரூபமாகத் தன் அளவற்ற சக்திகளுடன் ஆயர்பாடியில் விளையாட்டு விருப்பத்துடன் வெளிப்பட்டான்' என்பர் வல்லபர் 'கோகுலம்' மாயைக்கு அப்பாற்பட்ட இடம்.

4 சீவன்

வல்லபர் கருத்துப்படிச் சீவன் அணுவுருவானவன். பொருட்களில் உள்ள நாற்றம் போல் சீவனிடத்தில் உடல் முழுவதும் உணர்வு நிரம்பியுளது. இவன் அழிவில்லாதவன், கணக்கற்றவன். பிரும்மத்திடம் உள்ள குணங்கள் அனைத்தும் சீவனிடத்தும் உண்டு. மாயை, அவிச்சை, விச்சை என இருவகைப் படும். அவிச்சை மாயையால் சீவன் கட்டுண்ணப் படுகிறான். எனவே இவனிடம் இயற்கையாய் உள்ள ஆறு குணங்களும் மறைந்து விடுகின்றன. ஆதலால் சீவன் பல பிறப்புக்கள் எடுத்து உழல்கின்றான்.

இவர் உலகை மெய் என்று கொண்டாரேனும், உலகியலைப் பொய்த்தோற்றம் என்பர். சீவனுடன் அவிச்சை மாயையின் கலப்பால் உலகியல் தோன்றியது. நான்-எனது என்னும் கற்பனை எண்ணமே உலகியல். சீவன் அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டதும் உலகியல் மறைந்து போகும். ஆனால் உலகு மறையாது அது பிரும்மத்துடன் ஒன்றுவது அப்பிரும்மத்தின் விருப்பத்தைப் பொறுத்தது ஆகும். அவிச்சை மாயையால் கட்டுண்ணப்படும் சீவன் விச்சை மாயையால் விடுபடுவான்.

சீவன் அவிச்சையிலிருந்து விடுபடவும் இறைவன் அருள் வேண்டும். அவிச்சை மாயையிலிருந்து விடுபட்டதும் சீவன் ''நித்யானந்தம்'' அடைகிறான். இறைவனின் அருள் ''போஷணம்'' எனப்படும். இறைவன் அருள் பெற ஒரேவழி அவனிடம் பக்தி செலுத்துவதேயாகும்.

5. புஷ்டிமார்க்கம் [அருள் வழி]

வல்லபர் வகுத்த சித்தாந்தம்' 'சுத்தாத்வைதம்.'' அதுபற்றி இதுவரை விளக்கினோம் அவர்வகுத்த 'ஸம்பிரதாயம்' 'புஷ்டி மார்க்கம்'' எனப்படும் ''போஷணம் ததனுக்ரஹ:'' [பாகவதம் 2—10—4] என்னுந்தொடருக்கு அவனது [இறைவன்] அருள் ''போஷணம்'' என்பது பொருள். இதனடிப்படையில் ''அவனருள் பெற வகுத்தவழி''. என்ற பொருளில் 'புஷ்டி மார்க்கம்' என்று பெயரிடப்பட்டது. புஷ்டி மார்க்கத்தினைப் பற்றி வல்லபாச் சாரியார் 1) தத்துவதீபநிபந்தம் 2) சம்பிரதாயப் பிரதீபம் போன்ற பல நூல்களில் விளக்கந்தந்துள்ளார். விரிவஞ்சியவை யீண்டு விளக்கப்படவில்லை.

6. முடிவுரை

இதுகாறும் வல்லபரின் சரித்திரம், அவர்தம் சுத்தாத் வைதம் — புஷ்டி மார்க்கம் என்பன சுருக்கமாக அறிமுகம் செய்விக்கப்பட்டன.

துணைநின்ற நூல்கள் (இந்தி)

1) டாக்டர் ஹர்வம்சலால் சர்மா — சூர் ஔர் உன் கா ஸாஹித்ய. பாரத் பிரகாசன் மந்திர், அலிகார் 1982.

2) டாக்டர் ஹர்வம்சலால் சர்மா ஸர்வாத்ம தர்சன். நாகரீ பிரசாரிணீசயி காசி. 1969.

நாயக்கர் கால கொடை-சமூக மதிப்பீடு

சு. சுகந்தி

முன்னுரை

பதினைந்தாம் நூற்றாண்டில் தமிழகத்தில் பாண்டியர்கள் சிலர் ஆட்சி புரிந்தனர். இந்த நூற்றாண்டில் வாழ்ந்த அரசர்களின் தானம் வழங்கிய நிகழ்ச்சி சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றது.

தானங்கள் வழங்கப்பட்டதன் காரணங்கள்

அரசர்களும், உயர் அதிகாரிகளும், தங்களின் தேவை கருதியே தானங்கள் பல செய்துள்ளனர். நிலதானம், பண தானம் செய்தல், கோயிலுக்கு நைவேத்தியம் செய்து தங்களின் குறைகளை நீக்கும்படி வேண்டிக் கொள்ளல் முதலானவற்றின் அடிப்படையில் த்ானங்கள் வழங்கப்பட்டன. ஆடுகளும் தானமாக வழங்கப்பட்டன. திருவிழாக்களின் போதும் தானமளித்தல் நிகழ்ந்துள்ளது தோட்டங்கள், குளம் போன்றவைகளையும் தானமாகக் கொடுத்தனர்.

தானங்களின் பிரிவுகள்

கிடைத்திருக்கும் சான்றுகளின் மூலம் தானங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. பாளையக் காரனிடமிருந்து நிலங்களை மானியமாகப் பெறுதல்

2. தங்களின் தேவைக்குப்போக மீதியிருந்த பொருட்களை கோயில்களுக்கும், பூசைக்கும், தானமாக வழங்குதல். நிலங்களை பிராமணர்கள், அதிகாரிகள், தேவரடி யார்கள் முதலியோர் தானமாக வழங்கினார்கள் என்று கல்வெட்டுக்கள் எடுத்துரைக்கின்றன.

கல்வெட்டில் சமூக செய்தி

தன்னைக் கொல்ல வந்த புலியைக் கொன்ற வீரனுக்குத் திருமலை நாயக்கர் ஐந்து கிராமங்களை மானியமாக்கிய செய்தியைத் தருகிறது பொருப்பு மேட்டுப் பட்டயம் ஒன்று.

தானம் வழங்குவதன் நோக்கங்கள்

1. ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு படையுதவி, பொருள் உதவி பெறுதல்
2. அதிகாரிகளுக்குச் சம்பளம்
3. பொது நலம் [வரி]
4. சமயப் பாதுகாப்பு
5. தேவரடியார், தேவகன்மிகளுக்குப்பாதுகாப்பு அளித்தல்
6. தம்முடைய குலம் விளங்குவதற்கு என்று இவ்வாறு பல நோக்கங்களைக் கொண்டு தானம் வழங்கப் பட்டுள்ளது.

மானியம் வழங்கும் உரிமை உடையவர்கள்

1. அரசர்கள்
2. அரசு அதிகாரிகள் [நிர்வாகிகள்]

தானத்தை ஏற்றுக் கொள்பவர்கள்

1. அரசு அதிகாரிகள்
2. சமய நிறுவனங்கள்
3. பொது நலத் திட்டங்கள்

தானங்களின் வகைகள்

1. வரிகள்
2. நிலங்கள்
3. ஊர்கள்
4. விளை பொருட்கள்

5. பணம்
6. காணிக்கை
7. விளக்கு எரித்தல்
8. நீர்ப்பாசனம்

என்னும் முறைகளில் வகைபடுத்தப்படுகின்றன.

வரிகள்

திருமலை தேவமகாராசர் காலத்தில் விஜய நகரப் பேரரசில் சாளுவ மன்னன் திருமலையதேவன் கல்லணை நாட்டிலிருந்து வரும் காணிக்கை உள்ளிட்ட பல வரிகளை 1. கோபுர திருப் பணிக்கும் 2. திருமஞ்சனம் திருமாலை போன்ற பூசைப் பணி களுக்கும் இராமநத்தீஸ்வரம் கோயிலுக்குத் தானம் அளித்த செய்தியைக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

3. அதிகமாக வரும் வரிகளையும், வருமானங்களையும் சர்வமானியமாக அளித்த செய்தியும் காணப்படுகின்றது.

4. பள்ளி கொண்ட பெருமானுக்கு பூசை, திருப்பணி நடத்தும்படி திப்பய்ய தேவ மகாராயர் நியமம் பண்ணிக் கொடுத்தபடி மஹத்துமல்லய சுவாமிகள் கொடி சூலவரியும் கழித்து தானமளித்தார் என்று கல்வெட்டு குறிக்கின்றது. காணிக்கை, கட்டாயம், சூலவரி போன்ற வரிகளை நீக்கி நிலம் போன்றவற்றை தானம் அளித்தார்கள். வரியை நீக்கியதற்கு அறிகுறியாக சூலக்குறி கல்வெட்டொன்றில் (சோழமண்டலத் தில்) பொறிக்கப்பட்டுள்ளது.

நிலங்களில் தானம்

1) சிவன் கோயிலுக்கு மூன்று வேலி நன்சையும், இரண்டு வேலி புன்சையும் இலட்சும தேவார்த்தி தேவர் தானமாக கொடுத்த நிகழ்ச்சியும், கோயில் திருப்பணிக்கு மட்டுமன்றி திருப்பணி செய்து பெருநீராட்டு நடத்தி வைத்ததையும், இறைவனின் திருப்பள்ளி எழுச்சிக்காக நிலங்கள் தானமாக வழங்கிய குறிப்பும் திருமலை வாயில் கல்வெட்டில் குறிக்கப் பட்டுள்ளது. 2) திருமலைக் கோயில் திருவண்டிக் காப்பு நிகழ்ச்சிக்காகவும், நெய்க்காகவும், அறக் காரியங்களுக்காகவும், பெண்கடவுளுக்கு திருப்பூரத் திருநாளில் நடைபெறுகின்ற பல

கோயில் சடங்குகளுக்கும் மகாசபை உறுப்பினர்களால் நிலம் சர்வமானியமாக வழங்கப்பட்ட செய்தி தெரிய வருகிறது. அந்தணர்களுக்கும் நிலங்கள் தானமாக வழங்கப் பட்டன. தருமபுத்திரர் கோயிலுக்கு கிராம முக்கியஸ்தர்களால் 150 குழி நிலம் தானமாக வழங்கப்பட்டன. வரியில்லாத நிலங்களும் தானமாக வழங்கப்பட்டுள்ளது. அர்ச்சன விருத்திக்காகவு இம்மடி தேவராயா, திருமலை நாயக்கர் இவர்களாலும் நிலங்கள் தேவதான கிராமங்களுக்குத் தானமாக அளிக்கப் பட்டுள்ளன. 3) தேவிகாபுரத்து கல்வெட்டொன்றில் கோயில் அறங்காவலர்களும், விச்வேச்சுவர சிவாச்சாரியாராலும் அறுவன் பாடி என்ற ஊரிலிருந்த வடமலையார் என்ற வித்வானுக்கு வீடும், நிலமும் தானமாக வழங்கப்பட்ட செய்தி காணப்படு கின்றது.

ஊர் தானம்

தென்னிந்திய கோயில் சாசனங்களில் அரசர்கள் கோயில் திருப்பணிக்காக வேலூரைத் தானமாக கொடுத்த நிகழ்ச்சியும், ஒபலரச நல்லூர் என்ற கிராமம் சிவக்கொழுந்தீச்சுவரர் கோயிலுக்குத் தானமாக அளிக்கப்பட்ட நிகழ்ச்சியும், கிருஷ்ண தேவ ராயர் காலத்தில் கிருஷ்ணராயபுரம் என்ற கிராமத்தை தான மாகப் பெற்ற குறிப்பும், அதனை சர்வமானியாக கோயிலுக்கு அளிக்கப்பட்ட குறிப்பும் காணப்படுகின்றது.

விளை பொருட்கள்

நிலத்தில் விளையும் பொருட்கள் போன்றவையும் தான மாக வழங்கப்பட்டன.

பணதானம்

திருமலைக் கோயில் திருவண்டிக்காப்பு நிகழ்ச்சிக்காகவும், நெய்க்காகவும், அறக்காரியங்களுக்கும், ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமிக்கு திருப்போகைத் தாளிகை என்கிற ஏற்பாட்டிற்காக 1000 பணம் உபயம் அளிக்கப்பட்ட நிகழ்ச்சியும், அபிசேடகம் செய்து காணிக்கை செலுத்துவதற்கு 300 பணமும், அரசர்கள் தம்முடைய பிறந்த நாளில் கோயிலில் அபிசேடகம் செய்வதற்கு (நரசிம்ம பிரபு, கேசவய்யா) தங்கள் பெயரில் ரூ 4000 பணமும்

திருமலைக் கோயிலுக்கு உபயம் அளித்தனர் வெங்கடேஸ் வரருக்கு பிரமோட்சலத்திற்காக சில குறிப்பிட்ட காணிக்கையும் ரூ. 1160 பணமும் தானமாக வழங்கப்பட்டன. நைவேத்தியம் செய்வதற்கும் தருமகாரியங்கள், திருப்போகைத் தாளிகைக்கும் கைங்கரியங்களுக்காகவும் 2000 பணம் 1180 பணம் என்று பணதானம் அளிக்கப்பட்ட நிகழ்ச்சி திருமலைக் கல்வெட்டின் மூலம் அறியப்படுகின்றது.

விளக்கு எரித்தலில் தானம்


கோனேரி மற்றும் உலகளந்த வேலன் என்ற இரு அரசு அலுவலர்களால் திருமலைக் கோயிலுக்கு நுந்தாவிளக்கு எரிப்பதற்கு நெய் வழங்கப்பட்டது கோயிலில் இரட்டை விளக்குகள் ஏற்றுவதற்கு பொற்காசுகள் தானமாக வழங்கப் பட்டன கோயிலில் விளக்கேற்றுவதற்கு அரசு அதிகாரிகள் மட்டுமன்றி பொது மக்களும் (உழவர், நெசவாளர்) விளக் கேற்றினர் என்று தென்னிந்திய கோயிற் சாசனக்குறிப்புகள் தெரிவிக்கின்றன.

நீர்ப்பாசனத்தில் தானங்கள்

கால்வாய்கள் வெட்டுவதற்காக கோயில்களுக்கு பணம் தானமாகக் கொடுக்கப்பட்டது. அரசர்கள் தங்கள் குலம்விளங்க கோயிலுக்கு வேண்டிக் கொண்டு அவரவர்கள் நாட்டிலும், பொதுமக்கள் அவர்களின் ஊர்களிலும் தம் சொந்தப் பணத்தில் நீர்ப்பாசன கால்வாய் ஒன்று வெட்டுவதற்கும், கால்வாய் வெட்டுவதற்கு திருப்போனகம் என்கிற காணிக்கையும் தான மாக அளித்தார்கள். நீர்ப்பாசனம் அரசின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

நிலம்—உழவர் = உற்பத்தி

இம் மூன்றையும் விளக்கும் வரைபடம் கீழே விளக்கப் பட்டுள்ளது.


அரசன்
பாளையக்காரர்
தனிப்பட்ட ஆட்கள்
மானியதாரர்கள்
தேவரடியார்
அந்தணர்
1. அதிகாரி
2. வீரர்கள்
சமயநிறுவனங்கள்
பொதுநலத் திட்டம்
1. கோயில்
2. பூசை
3. விழாக்கள்
சத்திரம்
அணை
குளம்

தோடர் - கோயிற் பூசாரியின் நியமனமும் சொற்களும்

சுகந்தி அனந்தசயனம்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

சமயம் என்பது மனிதனின் வாழ்வோடு தொன்று தொட்டே தொடர்பு கொண்டுள்ளது. சமயத்தில் தெய்வத்திற்கும் மனித ருக்குமிடையே ஓர் இணைப்புப் பாலமாக விளங்குபவர் பூசாரி யாவார். இவர் இறைவனுக்குப் பூசை செய்வது, கோயில் தொடர்பான காரியங்களைக் கவனிப்பது, ஊர்த்தலைவராகவும் இருப்பது ஆகியவற்றைக் கடமையாகக் கொண்டுள்ளார். என்வே சமுதாய வாழ்க்கையினோடும் தொடர்பு கொண் டுள்ளமையால், மக்கள் பூசாரியைச் சிறப்பாக கருதி, தங்கள் வீட்டு சுபகாரியங்களிலும், அமங்கல காரியங்களிலும் இன்றி யமையாத இடத்தைத் தருகின்றனர். இவ்வழக்கம் சமயம் தோன்றிய காலந் தொடங்கி இன்று வரையிலும் தொன்று தொட்டு வருகின்றது. கால ஓட்டத்தையும் எதிர்த்து நின்று இன்றும் எல்லாவகை மக்களிடத்தும் காணப்படுகின்றது.

ஊர்களில் அமைந்த ஒவ்வொரு கோயிலுக்கும் தனிப்பட்ட பூசாரி இருக்கின்றனர். இவ்விறைப்பணி தலைமுறையாக வரு கின்றது. சில சமயங்களில் பூசாரிகள் ஊர்ப் பெரியவர்களா லும் நியமிக்கப்படுகின்றனர். தகுதி படைத்தவரையே ஊர்ப் பெரியவர்கள் பூசாரியாக்குவர். தகுதிகள் என்பன. இறைவனி டம் மிகுந்த பக்தி உடையவராகவும், மனத்தூய்மை கொண்டவ ராகவும் இருத்தல் வேண்டும். விரதங்களை மேற்கொள்பவ ராகவும், மந்திரங்களை மனனம் செய்ய வல்லவராகவும் இருத்

தல் வேண்டும். முறைப்படி பூசனை இயற்ற கற்றிருக்க வேண்டும். பொதுவாக பூசாரி நியமனம் என்பது சடங்கு களின்றி நடைபெறும் நிகழ்ச்சியாகும். ஆனால் சமுதாயத்தில் இன்றியமையாத இடத்தைப் பெறும் பூசாரியை நியமித்தலில் பல சடங்குகளைச் செய்து ஒரு விழாவாகவே கொண்டாடு வதை நீலகிரியில் வாழும் தோடர் சமுதாயத்தில் காணலாம். நியமனச் சடங்குகளை — அவைகளைச் சுட்டும் சொற்களின் வழி காணுதலே இவ்வாய்வின் நோக்கம்.

தோடர்களால் கோயிலாகக் கருதி வணங்கப் பெறுவது அவர்தம் பாற்பண்ணையேயாகும். இவர்களிடையே மூவகை யான பாற்பண்ணைகள உள்ளன. சாதாரண பண்ணை, தீப் பண்ணை மற்றும் பேராலயம் (Catherdral like) ஆகியவற்றில் முறையே பாலிகர்த்மொக். வுசலோள் மற்றும் போலோள் ஆகிய பூசாரிகள் நியமிக்கப்படுவர். இவர்களது நியமனத்தில் முதலிருவகையினர் ஒரு முறையிலும் போலோள் மற்றொரு முறையிலும் தேர்ந்தெடுக்கப்படுவர் இவர்களுக்கு உதவியாளர் களும் உள்ளனர்.

பாலிகர்த் மொக், வுசலோள் நியமனம்

கெர்கட்திதி

கெர் > குவீன் (தோடா) > கோவணம் (தமிழ்)
= இடுப்பில் கட்டும் துணி
கட் > கட்டு
= இடுப்பில் துணியைக் கட்டுதல்

தூணி வட்கினா?

தூணி > துணி
வட் > வடு > உடு
உடுத்து
துணியை உடுக்கவா?

வுசலோளாக நியமிக்கப் படுபவர் தலைமைப் பூசாரியிடம் "தூணியை உடுக்கவா" எனக் கேட்க, அவர் உடுத்து எனக் கூற தூணியை இடுப்பில் உடுக்கும் சடங்கிது. தூணி என்பது இங்கு வுசலோள் உடுத்தும் கருப்புநிற ஆடைவகையினைக் குறிக்கும் சிறப்புச் சொல். இச்சடங்கு உலகியல் வாழ்வை வெறுத்து (அல்) விட்டு கோயிற் பணியை மேற்கொள்ளும் முதல் படியாகும்.

துட்ர் அஸ்பினி

துட்ர் = தோடரின் புனித மரம்

அஸ்ப் > அலம்பு > அஸ்ப்

= கழுவுதல்

'துட்ர்' என்ற புனித மரத்தின் இலையைப் "பாலிநீப" என்ற புனித நீரோடையில் கழுவிக் கொண்டு வரவேண்டும். தமிழர் துளசி மற்றும் வேப்பமரத்து இலைகளைத் தூய்மையாகப் போற்றுதல் போன்று, தோடர் 'துட்ர்' என்ற மரத்தைப் புனித மாகக் கருதி எல்லா வகைச் சடங்குகளிலும் பயன்படுத்து கின்றனர். பூசாரியின் புறத்தூய்மையைக் குறிக்கும் இரண்டாம் சடங்கிது

மூவத்கினா?

மூ — தோடரின் பாற்பண்ணைக்குள்ளிருக்கும் மண் பாத்திரம்

> முகவை (தமிழ்) > மூ

வத் — தொட

> பொர்துகே (கன்னடம் = தொட) > பொத் (கோத்தா) > வத் (தோடா)

மூ என்ற புனிதப் பாத்திரத்தைத் தொடவா என்ற தலைமைப் பூசாரியிடம் வினவ அவர் தொடு என்பதற்கேற்ப அவன் பண்ணைக்குள் சென்று அப்பாத்திரத்தைத் தொடுகிறான்.

மூன்றாம் சடங்காகிய இது மேலும் தூய்மைபபட்டு, இறைவனோடு தன்னை ஐக்கியப்படுதலை உணர்த்துகின்றது.

போலோளின் நியமனம்

நீரோடிதி

நீர் — தண்ணீர்

ஆட் — ஆடல்

= நீராடல்.

புனித ஆற்றில் முதலில் நீராடுதல் வேண்டும். இது பிற இனத்தவராலும் மேற்கொள்ளப்படும் வழக்கமாகும்.

தெஷ்நீரோட்

தெஷ் — சோற்றுத் திரள்

நீரோட் — நீராடுதல்

வயிறார உண்டு விட்டு, புனித நீரோடையில் நீராடவேண்டும் பின் பாற்பண்ணையினுள் சென்று மூ பாத்திரத்தைத் தொட வேண்டும்.

போலோள் மிகச் சிறப்பான இடத்தைப் பெறுவதால் இவர், பூசாரியாவதற்கு முன் பல விரதங்களை மேற்கொள்ளவேண்டும். வுசலோளின் சடங்கு முறைகளை மேற்கொண்ட பின், தன் ஆடைகளை முற்றிலும் களைந்து, தோட இனத்தின் ஒரு பிரிவான 'தேர்த்தாள்' இனத்தைச் சார்ந்த வயதான பெண்ணிடம் சோற்று உருண்டையைப் பெற்று வயிறார உண்டுவிட்டு பின்னர் நீராடிவிட்டு போலோளிற்குரிய சாம்பல் நிற உடையை அணிதல் வேண்டும்.

புற உலகின் தொடர்பினை முற்றில் துறப்பதற்கு இச் சடங்கைச் செய்கின்றனர். நிர்வாணக் கோலம் உலக ஆசைகளை முற்றிலும் துறப்பதைக் குறிக்கும் தத்துவச் செயலாகும்.

கல்த்மொக் [போலோளின் உதவியாளர்] நியமனம்
துணி துவச் வஸ்தினா ?

துணி - துணி (தலைமைப் பூசாரியின்)

துவச் - துவைத்து

வஸ்தினா - வரட்டுமா ?

என்று கேட்க, தலைமைப் பூசாரி 'வா' என்று கூற, கல்த் மொக் துணியைப் புனித நீரோடையில் துவைத்து வருவான. இந்நிகழ்ச்சி குருகுல முறையை நினைவு படுத்துகிறது.

தெஸ்த் துவத்கினா ?

துதெஸ்த் - உயர்ந்த பகுதி

வத் - தொடு

தீப்பண்ணையின் உயர்ந்த பகுதியைத் தொடுதல் வேண்டும் இதுவும் புனிதப் படுவதை யுணர்த்தும்.

துவட்நோர்

துவத் - தொடு
நோர் - கயிறு

தன் இடையிலுள்ள அரைஞாண் கயிற்றையும், துணியையும் களைந்துவிட்டு பூசாரியின் தூணியை அணிதல். பூசாரியாவதற்கு முன் இவ்வுலகத்துக்குரியவற்றைக் களைந்து இறைவனோடு ஒன்றுபடுவதை யுணர்த்தும் சடங்கிதாகும்.

இதுகாறும் கூறப்பட்ட சடங்கு நியமனச் சொற்களின் வழி பெறப்படும் சடங்கு நிகழ்ச்சிகள் செய்திகளாவன :

1) தோடரின் சமூகத்தில் காணப்படும் சாதாரண புனிதப் பாற்பண்ணை மற்றும் பேராலயத்திற்கு தனிப்பட்ட பூசாரிகளும் அவர்களுக்கு உதவியாளர்களும் உள்ளனர்.

2) நியமனச் சடங்கு நிகழ்ச்சிகளாக

   1) புனித நீரோடையில் நீராடல்

   2) 'துட்ர்' இலைகளைக் கழுவுதல்

3) புனிதப் பாற்பண்ணைக்குரிய பொருட்களைத் தொடுதல் ஆகியன உள்ளன.

3) பூசாரிகளுக்கென்று உள்ள கறுப்புநிற மற்றும் சாம்பல் நிற ஆடைகள் அவர்களது சிறப்பை உணர்த்துகின்றன.

4) பூசாரியாவதற்கு பல விரதங்களை மேற்கொள்ள வேண்டும்.

5) தத்துவ நோக்கும், குருகுல முறைகளும் இவர்தம் சடங்குகளில் காணப்படுகின்றன.

தோடரின் பூசாரி நியமனம், பிற இனத்தவரோடு கொண்ட ஒற்றுமை

1) அகத்தூய்மை, புறத்தூய்மை ஆகியவை பிற இனத்தவரால் எவ்வாறு சிறப்பாகக் கருதப்படுகின்றதோ அவ்வாறே தோடரின் பூசாரி நியமனத்திலும் இவை பின்பற்றப்படுகின்றன.

2) சைவர் வில்வ மரத்தையும், சமணர் அசோக மரத்தையும், வைணவர் துளசிச் செடியினையும், சக்தி வழிபாட்டினர் வேப்ப மரத்தையும், பிள்ளையாரை வணங்குபவர் அரச மரத்தையும் தெய்வ மரமாகக் கொள்வதைப் போன்றே தோடரும் தூதர் (துட்ர்) மரத்தைப் புனிதமாகக் கருதினர்

தோடரின் சிறப்புத் தன்மைகள்

1. பூசாரியின் நியமனம் சிறப்பாகவும், ஒரு சமுதாய விழாவாகவும் நடத்தப் பெறுகின்றது.

2 சடங்குகள் அவர்தம் பண்பாட்டை உணர்த்துவனவாக உள்ளன.

3. பூசாரிகளுக்கென்றே குறிப்பிட்ட ஆடை வகைகளைக் கொண்டுள்ளனர்.

தோடர், இவ்வகையில் நியமிக்கப்பட்ட பூசாரியைச் சிறப்பானவராகக் கருதுகின்றனர். தோடர் தம் பண்பாட்டு நெறியில் இவர்களுக்கென்றே தனியிடம் அமைந்துள்ளது.

புதுவையில் காணப்படும் பிரஞ்சு கலாச்சாரத் தடயங்கள்

ம. சுத்திக்கரமேரிராசு
புதுவைப் பல்கலைக்கழகம்

சிறு மாநிலமானப் புதுவைப் பகுதி உலகளவில் அறிமுகப் படுத்தப்பட்டது பிரஞ்சியர்களது வருகைக்குப் பின்னரே. இந்தியாவின் பிற பகுதிகளை ஆங்கிலேயர் ஆண்டு வந்த காலத்தில் புதுவை, காரைக்கால், மாஹே, ஏனாம் சந்திர நாகூர் ஆகிய பகுதிகளை பிரஞ்சியர் ஆண்டு வந்தனர். சந்திரநாகூர் பின்னால் வங்காளத்துடன் இணைக்கப்பட்டது. ஒரு சாம்ராஜ்ஜியம் ஆட்சி புரிந்ததற்கு அடையாளமாக அது விட்டுச் சென்ற நினைவுச் சின்னங்களே சான்று பகர்கின்றன. சந்திரநாகூரைத் தவிர்த்து ஏனைய நான்கு மாநிலமும் பிரஞ்சு காலனியாக இருந்து வந்தமையால் அப்பகுதியில் பிரஞ்சு தடயங்கள் அமைந்து விளங்குவதில்வியப்பேதுமில்லை எனினும், ஏனைய பிற பகுதிகளைக் காட்டிலும் பிரஞ்சு கலாச்சாரத் தடயங்கள் மிக ஆழமாகப் பதிந்திருக்கின்ற பகுதி என புதுவையைச் சுட்டலாம்.

முட்டை வடிவ புதுவையின் நகர் அமைப்பு இந்தியாவில் எப்பகுதியிலும் காணப்படாத சிறப்பம்சம். வளைவு நெளிவு அற்ற நேரான வீதிகள், வீதிகளின் இரு புறங்களிலும் கழிவு நீர்ப் பாதை பிரஞ்சு நாட்டு கலாச்சாரத்தை பிரதிபலிக் கின்றன. நகரின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள வீதிகள் பிரஞ்சு பெயர்களைத் தாங்கி நிற்கின்றன. உதாரணமாக மர்த்தேன் வீதி, லப்போர்த்தோனே வீதி, லூயி வீதி, பசார்

செயிண்ட் லாரன்ஸ் வீதி, டி லாரிஸ்டன் வீதி ஆகும். சில வீதிகள் பிரஞ்சு மொழியில் 'ரூய்' என்ற வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இது பிரஞ்சியர்கள் குடியேறி வாழ்ந்த பகுதி என்பதனை நிருபிக்கின்றது. இன்றும் நகரின் கிழக்குப் பகுதி அவர்களது நினைவுத் தடயங்களைத் தாங்கி நிற்கும் பெட்டகமாகக் காட்சி அளித்து வருகிறது எனலாம்.

புதுவை நகராட்சி அலுவலகத்தின் அருகில் கடற்கரை யினைப் பார்த்தவாறு அமைந்துள்ள போர் வீரர்களின் நினை வுச் சின்னம் (மொனாய்மான் ஒமோர்) காட்சியளிக்கின்றது. புதுவை முழுமை பெற அரும்பாடுபட்ட பிரஞ்சு இந்திய கவர்னரான டியூப்ளேயின் சிலை - கடற்கரையொட்டிய பூங்கா வில் கம்பீரமாக நிற்கின்றது புதுவை பூங்காவைச் சுற்றி நான்கு கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளது. இது டியூப்ளேயின் காலத்தது மூன்று லத்தீன் மொழியிலும் ஒன்று தமிழிலும இருக்கின்றன. வெள்ளையர், கருப்பர் என்று பாகு படுத்துவதற்காகக் கட்டப்பட்ட செஞ்சி சாலை வாய்க்கால் இன்றும் பிரஞ்சியர்களை நினைவூட்டி நிற்கிறது.

பிரஞ்சியைப் போதனா மொழியாகவும், விருப்பப்பாட மாகவும் கொண்ட பள்ளிகள் எண்ணிக்கையில் ஏறக்குறைய ஆறுக்கு மேல் இயங்கி வருகின்றன. உயர்மட்ட அளவில் பிரஞ்சு கல்லூரி, தாகூர் கலைக்கல்லூரி, பாரதிதாசன் பெண் கள் கல்லூரி பல்கலைக் கழகம் ஆகியவை செயலாற்றி வரு கின்றன. கல்வித்துறையில் பிரஞ்சு பிரிவு செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

புதுவையில் இன்று முக்கியக் கோயிலாக விளங்கும் ஜென்ம ராக்கினி மாதாகோயில் என்றழைக்கப்படும் சம்பாகோயிலும், துய்மா வீதியில் அமைந்துள்ள சம்மனசுகள் அரசி கோயிலும் பிரஞ்சு பாதிரிமார்களால் உருவாக்கப்பட்ட தலைசிறந்த கோயில்கள் எனலாம். இக்கோயில்களில் காணப்படும் கலை நுணுக்கமே பிரஞ்சியர்களது கலை அம்சத்திற்கு ஒரு எடுத்துக் காட்டு. துய்மா வீதியில் அமைந்துள்ள சம்மனசுகள் அரசி கோயிலில் இன்றும் சடங்கு முறை பிரஞ்சு முறையில் நடந்து

வருவது நோக்கற்பாலது. புதுவையில் மட்டுமல்லாது புதுவை யைச் சுற்றியிலுள்ள பகுதிகளிலும் பிரஞ்சியர்களது கலை அம்சம் காணப்படுவது இன்றும் கண்கூடானக் காட்சி.

இந்நகரிலும், நகரின் சுற்றுப்புறத்திலும் பிரஞ்சு குடியுரிமை பெற்ற குடும்பத்தினர் ஏறக்குறைய பத்தாயிரத்திற்கு மேல் வாழ்ந்து வருகின்றனர். நகரின் தென்பகுதியிலும் சுற்றியுள்ள நெல்லித்தோப்பு, உழவர்கரை, அரியாங்குப்பம், குருசுகுப்பம், வ உ.சி நகர், திருவள்ளுவர் நகர். கோலாஸ் நகர் ஆகியப் பகுதிகளில் பெருவாரியாக வாழ்ந்து வருகின்றனர். இது பிரஞ்சு கலாச்சாரத்தாக்கம் எவ்வளவு வேர் ஊன்றி இருக்கிறது என்பதனை நிருபிக்கின்றது. இம்மக்களது பெயர்களில் ஒரு விசித்திரம் காணப்படுகிறது. பெயரினை அடுத்து ஒரு துணைப் பெயர் இடம் பெறுவது தமிழரிடையே இல்லாத ஒன்று. இத் துணைப் பெயர் அம்மக்களது குடும்பப் பெயராக அழைக்கப் படுகிறது. இவர்களது அன்றாட நடை, உடை, பாவனைகள், ரசனைகள், மனப்போக்குகள், நாகரீகங்கள் அனைத்தும் பிரஞ்சு கலாச்சாரத்தினை ஒட்டி விளங்குகின்றது. இக்கலாச்சார அமைப்பு இவர்களது வாழ்க்கையின் தரத்தினை உயர்த்திக் காட்டுவதால் சமுதாயத்தில் இவர்கள் பிற மக்களிடமிருந்து தனித்து காணப்படுகின்றனர்.

பிரஞ்சு குடியுரிமை பெற்ற இம்மக்களது அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் அங்கமாக காளத்தீஸ்வரன் கோயில் தெருவின் கீழ்க்கோடியில் அமைந்துள்ள பிரஞ்சு தூதரகம் செயலாற்றுகிறது.

ஒய்வுபெற்ற பிரஞ்சு இந்திய ராணுவ வீரர்களுக்கான (பொய்யே தே சொலதா) அலுவலகம் செயல்படுகிறது. இவர் களது நலனுக்காகப் பல சங்கங்களும் இயங்கி வருகின்றன. பிரஞ்சு மொழிக் கல்வி நிறுவனம், பிரஞ்சு இந்திய பண்பாட்டுக் கழகம், பிரஞ்சு இந்திய பயிற்சிப் பள்ளி, பிரஞ்சு இந்திய சமூக நிறுவனம் ஆகியவை இன்று இந்தியாவுக்கும், பிரான் சுக்கும் இடையே ஒரு நல்ல நட்புறவினை வளர்க்கும் அங்கங் களாக செயல்படுகின்றன.

இந்தியாவில் எங்கும் காணப்படாத வகையில் புதுவையிலும் புதுவையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பிரஞ்சு கலாச்சாரத்தை நினைவூட்டுகின்ற பெத்தாங் விளையாட்டு விளையாடப்பட்டு வருகின்றது.

புதுவையில், பிரஞ்சியர்களது ஆட்சிக் காலத்தில் 14 ஜுலை மிக சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. பிரஞ்சியர்களது வரலாற்றினைக் கூறும் ஆனந்தரங்கப்பிள்ளையின் டைரி இதனைக் கூறத் தவறவில்லை. இவ்விழா இன்றும் பிரஞ்சு குடியுரிமை பெற்ற மக்களால் இந்நகரில் கொண்டாடப்பட்டு வருகின்றது எனலாம். இந்நாளை குடியரசு தின நாளாகவும், நவம்பர் 11 ஐ போர் நிறுத்த நாளாகவும் கொண்டாடுகின்றனர். இதுத் தவிர மே 8, ஜுன் 18 ஆகிய நாட்களும் இவர்களால் கொண்டாடப்படுகிறது. இவை அனைத்திலும் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்படுவது பிரஞ்சு குடியரசு தினவிழா. அன்றுக் காலை போர் வீரர்களின் நினைவுச் சின்னத்திற்கு ராணுவ மரியாதையுடன் மலர் வைத்து அஞ்சலி செலுத்துகின்றனர். மாலை பிரஞ்சிந்திய ராணுவ அலுவலகத்தையும் போர்வீரர்களின் நினைவுச் சின்னத்தையும் மின் விளக்குகளால் அலங்கரிப்பர். பிரஞ்சு குடியரசு தினவிழா பதிப்பினை நிழற்படக் கருவியின் மூலம் பொதுமக்களுக்குக் காண்பிப்பர் வீடுகளில் பிரஞ்சு கொடியும் இந்தியக் கொடியும் சேர்ந்து பறக்கவிடுவர். சிறப்பான விருந்தம்சம் பிரஞ்சு தூதரகத்தில் நடைபெறும்.

பிரஞ்சியர்களது காலத்தில் உழைப்பவர்களுக்கு ஓய்வு நாளாக ஞாயிறு தினத்தையும், மாணவர்களுக்காக வியாழனையும் ஒதுக்கி விடுமுறை அளித்து வந்தனர். இந்த முறை இன்றும் வழக்கத்தில் இருந்து வருகின்றது. பிரஞ்சு இந்திய பண்பாட்டுக் கழகத்திலும், ரோமன் நூலகத்திலும் பிரஞ்சு நூல்களின் எண்ணிக்கை மிகுந்து காணப்படுகிறது. பல அலுவலகங்களும், விளையாட்டுச் சங்கங்களும், வீடுகளும் பெயர்ப்பலகைகளில் பிரஞ்சு பெயர்களைத் தாங்கி நிற்கின்றன. பிரஞ்சு குடியுரிமை அல்லாத தமிழர்களது பிள்ளைகள் 400க்கு

மேலாக பிரஞ்சு மொழி கற்கின்ற புதுமையைப் புதுவையில் காணலாம். பிரஞ்சு மொழியை அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கும் பகுதி நேரா தனியார் நிறுவனங்கள் பல தோன்றி செயல்பட்டுவருகின்றன பொது மக்கள் பயன்படுத்தி வரும் பிரஞ்சு சொற்களும் சில கலாச்சாரப் பண்புகளும் வழிவழி யாக அழியாத தடயங்களாக விளங்கி வருகின்றன.

நமது முன்னாள் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் புதுவை மாநிலம் இந்தியாவுடன் இணைந்த போதும் அது என்றும் பிரஞ்சுக் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் பல கணியாக இருக்க வேண்டும் என்ற அவரது கனவு நனவாகி வருகின்றது எங்கும் பிரஞ்சு கலாச்சாரத்தின் சாயல் வேரூன்றி இருப்பது பெருமைக்குரிய ஒன்று. இக் கலாச்சாரத் தடயங்கள் புதுவைக்கு ஒரு தனி இடத்தையே, உருவாக்கிக் கொடுத் திருப்பது முற்றிலும் உண்மை. இதன் தனித்தன்மையை மேலும் போற்றி காக்க வேண்டியது புதுவை மக்களது கடமையாகும்.

கல்வெட்டுக்களால் அறியலாகும் கோயில் விளக்கெரித்தலின் பின்புலம்

ஜா. சுந்தர்
புதுவைப் பல்கலைக்கழகம்

கோயிலில் விளக்கெரித்தல் என்பது நேர்த்திக்கடன் சார்ந்தது. ஆனால் கல்வெட்டுக்களில் கோயிலுக்கு எரித்தல் என்பது பல்வேறு காரணங்களைச் சுட்டிக் காட்டுவதாகச் செய்திகள் உள்ளன. கல்வெட்டுக்களில் இடம்பெறும் விளக்கெரித்தல் ஒரு வகையில் தானம் சார்ந்ததாகவும் மற்றொரு வகையில் தண்டனை சார்ந்ததாகவும் அமைந்துள்ளது. தானம் சார்ந்தவையாக அமையும் கல்வெட்டுக்களே மிகுதி. ஆனால் தண்டனை சார்ந்த கல்வெட்டுக்கள் அதைவிடக்குறைவு. எனினும் அவையாவும் ஒருவகையில் தானம் சார்ந்த கல்வெட்டுக்களுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றன.

தானமாக விளக்கு எரிக்கப்பணம் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்படும் கல்வெட்டுக்களே அதிகம் எனினும் அவற்றில் நேரடியாகத் 'தானம்' என்ற சொல் குறிப்பிடப்படும் கல் வெட்டுக்கள் மிகவும் குறைவு. இவ்வாறு தானம் என்ற சொல் இல்லாது வரும் கல்வெட்டுக்கள் யாவும் தண்டனை சார்ந்ததாக அமைந்திருக்கவேண்டும் என்பதைச் சோழர் காலக் கல்வெட்டுக்களின் வழி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்க மாகும்.

சோழர் கால ஆட்சியின் கீழ்த்தமிழகம் இருந்தபோது பல்வேறு நீதிமுறைகள் இருந்து வந்துள்ளன. தவறுகளைத்

தண்டிக்க ஊர்ச்சபை இருந்தது. இவ்வூர்ச் சபையினரால் குற்றங்களுக்கு ஏற்பத் தண்டனை வழங்கிய முறைகளுள் ஒன்றே விளக்கெரித்தலாகும்.

தவறு செய்தவனை ஊர்ச்சபையினர் அழைத்து அவன் செய்த பழிபாவங்களுக்காகக் (பரிகாரமாக) கோயிலில் அன்றாடம் விளக்கெரிக்கச் செய்தனர். விளக்கு எரிப்பதற்குரிய எண்ணெய்ச் செலவுக்கும் ஏனைய பிற செலவுக்குமாகப் பணம், ஆடு, மாடு, நெல், பொன் ஆகிய பொருட்கள் பெறப்பட்டன. சிலர் தண்டனைப் பொருளாக நிலத்தையும் கொடுத்துள்ளனர்.

சோழர் காலக் கல்வெட்டுக்களில் கி.பி. 10-ஆம் 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பெரும்பான்மையான கல்வெட்டுக்கள் விளக்கு எரித்த செய்தியையே குறிப்பிடுகின்றன. நேர்த்திக் கடனாகக் கோயிலில் விளக்கு எரிப்பவர்களாயின் பெரும் பாலும் நேரடியாகக் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து விளக்கினை ஏற்றி வைப்பது வழக்கம். அவ்வாறு செய்ய முடியாதவர்கள் பிறர் மூலம் அப்பணியைச் செய்யும் படிப் பணிப்பர் அவ்வாறு பணிக்கப்பட்ட கோயிற் பூசாரிகளின் பெயர்கள் ஒருசில கல்வெட்டுக்களில் மட்டுமே கிடைத்துள்ளது. இவ்வாறு பணிக்கப்படாது வரும் கல்வெட்டுக்கள் யாவும், தண்டனை சார்ந்ததாகவே அமைந்திருக்க வேண்டும். ஏனெனில் பணிக்கப்பட்டவர்களின் பெயர்கள் இல்லாது குறிப் பிட்ட ஒரு நபர் கொடுத்த காசு முதலாய பொருள்கள் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோர் கொடுத்த பொருள்கள் மட்டுமே அவற்றில் இடம் பெற்றுள்ளன. இக்கல்வெட்டுக்களில் பிற செய்திகள் மிக அரிதாகவே இடம் பெறுகின்றன.

குறிப்பிட்ட ஒரு நபர் கோயில் நுந்தா விளக்கு எரிக்க கோயிற் பண்டாரத்தே **(Treasury)** ஒடுக்கின காசு இத்தனை, ஆடு இத்தனை, பசு இத்தனை, நிலம் இத்தனை 'மா' அல்லது 'வேலி' நெல் இத்தனை கலன் என்ற கல்வெட்டுக்கள் அமைந் துள்ளன மேலும். இதன் மூலம் அறியக் கூடிய மற்றொரு செய்தி யாதெனில்; விளக்கு எரிக்கக் கொடுக்கப்பட்ட பொருள்

களின் அளவை முறை ஆளுக்கு ஆள் வேறுபடாத நிலையில் ஒரு குறிப்பிட்ட குறைந்த எண்ணிக்கையிலிருந்து பல மடங்கு களாக அதிகரித்துச் செல்லும் போக்காகும்.

சான்றாகக் கோயில் விளக்கெரிக்க ஆடுகளைத் தானம் செய்வோர் 30, 60, 90 ...... 180 என்ற அளவிலேயே செலுத்து வந்துள்ளனர் இவற்றை நோக்கும் போது இவை நேர்த்திக் கடனுக்காகவோ அல்லது தானமாகவோ கொடுக்கப்பட்டவை என்ற கருத்துக்கு நாம் வருவது கடினம். ஏனெனில் தானம் செய்வோர் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப பல்வேறு எண்ணிக் கையில் செலுத்தியிருப்பர். மேற்கண்ட எண்ணிக்கையில் குறிப் பிட்ட தொடரமைப்பில் செலுத்தியிருப்பர் என்று கூறுதற்கு இல்லை.

எனவே மேற்கண்ட எண்ணிக்கை முறை ஊர்ச்சபை யினரால் தண்டனைக்காக விதிக்கப்பட்ட அபராதத் தொகை யின் எண்ணிக்கை எனலாம். இவை தவிர தானமாகக் கோயிலுக்கு விளக்கெரிக்கக் கொடுக்கப்பட்ட பசுக்களின் எண்ணிக்கையும் 32, 64......என்ற தொடர் அமைப்பிலேயே அமைந்துள்ளது.

மேலும் தண்டனைக்காகவே இவ்விளக்கெரித்தல் கொடுக் கப்பட்டது என்பதனைச் சிற்சில கல்வெட்டுக்கள் நேரடியாக எடுத்தியம்புகின்றன. கொலைக் குற்றத்திற்குக் கூட இவ்விளக்கு எரித்தல் தண்டனையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. சான்றாக தென்னார்காடு மாவட்டம் ஜம்பையில் கிடைத்துள்ள விக்கிரம சோழனின் 9-வது ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டைக் கூறலாம்.

இக்கல்வெட்டில் கடம்பூர்வெள்ளாளன் கூடலுடையானும் அதே ஊரைச்சேர்ந்த பிச்சன் பன்மன்கண்டனும் தங்களுக்குள் ஏற்பட்ட நிலப்பிரச்சனை காரணமாக ஒருவரை ஒருவர் குத்திக் கொண்டனர். குத்திக் கொண்டதில் பன்மன்கண்டன் என்பவன் இறந்து போனான் கொலை செய்தவனுக்குத் தண்டனையாகப் பெண்ணை ஆற்றின் வடகரையில் அமைந்த

திருநாகீஸ்வரமுடையார் கோயிலில் நுந்தா விளக்கு எரிக்க 32 பசுக்களைத் தானமாகக் கொடுக்கவேண்டும் என்று ஊர்ச் சபையினரால் தீர்ப்புக் கூறப்பட்டுள்ளது.

மேலும் இதே மாவட்டத்தைச் சேர்ந்த திருக்கோவிலூர்க் கல்வெட்டு ஒன்றினையும் இதற்குச் சான்றாகக் கூறலாம். தன் மனைவியைக் கையாலே தள்ளிக் கொன்றவனுக்குத் தண்டனை யாக கோயிலுக்கு ஏதோ சில பொருட்களை உப்யம் செய்யச் சொல்லித் 'திசையாயிரத்து ஐந்நூற்றுவா குழாத்தைச்' சேர்ந்த வர்கள் தீர்ப்புக் கூறியுள்ளனர். இவன் கொடுத்த பொருள் எதுவென்று அறிய முடியாத நிலையில் கல்வெட்டு சிதைந் துள்ளது.

இவையாவற்றையும் நோக்கும் போது சோழர்காலத்தில் தண்டனை முறைகள் மிகக் குறைந்தே காணப்பட்டு வந்து உள்ளன என்பதை அறிய முடிகின்றது. அதோடு விளக்கெரித்தல் என்ற தொடர் பெரும்பான்மையான கல்வெட்டில் இடம் பெற்றதன் காரணத்தையும் அறிய முடிகின்றது.

பெரும்பான்மையான கல்வெட்டில் விளக்கெரிப்பதற்காக ஒடுக்கின காசு இவ்வளவு என்ற உள்ளது. பிற செய்திகள் இல்லாது காணப்படுகின்றது. இவை யாவும் குற்றங்கள் குறிப் பிடப்படாத கல்வெட்டுக்களே. ஒரே கோயிலுக்கு பல்வேறு நபர்கள் ஒரே ஒரு விளக்கை மட்டும் எரிக்க ஆண்டு முழுவதும் ஆகும் செலவுக்காக காசு கொடுத்தல் என்பது அரிதே. காசு தவிர நெல், பொன், அந்தராயம், பாட்டம் (வரிகள்) ஆடு, மாடு, நிலம் போன்றவையும் அவ்விளக்கு எரிக்கக் கொடுத்த தாகச் செய்தி உள்ளது. இத்தனை வருமானத்தின் மூலம் வரும் வருவாய் அனைத்தும் அவ்விளக்குக்காக செலவிடப்படுவ தில்லை அவை அனைத்தும் கோயிற் பண்டாரங்களை (Treasury) நிறைத்திருக்க வேண்டும். விளக்கு எரிக்க என்று பல்வேறு நபர்கள் குறிப்பாகக் குறிப்பிட்ட 'சில விளக்குகளை எரிக்க' என்று இருக்கும் கல்வெட்டுக்கள் எல்லாம் சிறுசிறு குற்றங் களுக்காக விதிக்கப்பட்ட தண்டனையாகும் (அபராதம்). இத் தண்டனை அல்லது அபராதம் அவரவர் தகுதிக்கு ஏற்பக் கொடுக்கப்பட்டது.

அபராதத் தொகை அவரவர் தகுதிக்கு ஏற்ப வழங்கப் பட்டமையை பல கல்வெட்டுச் சான்றுகள் எடுத்துக் காட்டு கின்றன. சான்றாக பொருளாதாரத்தில் கீழ்நிலையில் உள்ள வர்கள் பாதி விளக்கு எரித்த செய்தியைக் குறிப்பிடலாம். இவர்கள் தங்கள் தகுதிக்குத் தகுந்தவாறு பாதி விளக்கு எரிக்கவும், ஒரு விளக்கு எரிக்கவும் காசு கொடுத்து வந்துள்ளனர்.

இவை தவிர கோயிலுககு விளக்கு எரிப்பவர்கள் ஊர் விட்டு ஊர் சென்றாலும் தவறாது அதனை எரித்தல் வேண்டும் எனற கண்டிப்பும் இருந்து வந்துள்ளது. ஊர் விட்டு ஊர் செல்பவர்கள், தான் எரித்து வந்த விளக்கினை எரிக்காது விட்டுவிட்டால் குரால் பசுவைக் கொன்ற பாவத்துக்கு உள்ளா வார்கள் என்ற பாவ-புண்ணியம் போன்ற செயல்களும் கல் வெட்டில் இடம் பெற்றுள்ளது. அக்காலக் கண்டிப்பும், மக்களை நம்பிக்கையின் வழி பயமுறுத்தும்போக்கும் இருந்ததை இக் கல்வெட்டுச் செய்திகளால் அறியமுடிகிறது.

இவை யாவற்றையும் தொகுத்து நோக்கும்போது விளக் கெரித்தல் என்பது பெரும்பான்மையாக தண்டனையின் பொருட்டுக் கொடுக்கப்பட்ட ஒரு செயலே ஆகும். இத் தண்டனை அவரவர் தகுதிக்கு ஏற்பக் கொடுக்கப்பட்டுள்ளது. இத் தண்டனையை மீறிச் சென்றவர்களும் இருந்த காரணத் தினால் அவற்றைத் தடுக்க பாவ புண்ணியம் என்ற மூட நம்பிக்கையைக் காட்டி அச்செயலைச் செய்யும் படிப் பணித் துள்ளனர். மொத்தத்தில் குற்றத்தைத் தண்டிக்கப் பயன்பட்ட முறைகளுள் ஒன்றாக விளக்கெரித்தல் இருந்து வந்துள்ளது. இதனை அக்கால (சோழர்கால) அரசுகளும் ஊர்ச்சபைகளும் செய்து வந்துள்ளன.

தமிழில் சிறுவர் பத்திரிகைகள் ஓர் அறிமுகம்

மு. சுப்புலெட்சுமி
பராசக்தி மகளிர்கல்லூரி, குற்றாலம்

1.0 வருங்காலச் சமுதாயத்தின் தூண்களாக விளங்கப் போகும் சிறுவர்தம் அறிவு வளர்ச்சியிலும், உள்ளத்தைப் பண்படுத்தும் பணியிலும், சிறுவர்க்கான பத்திரிகைகளுக்கும் பெரும் பங்குண்டு வல்லரசுகளுக்கு இருக்கும் செல்வாக்கை விட. போர்க்குணம் படைத்தவர்களுக்குள்ள பலத்தைவிட அறிவாளிகளுக்குத்தரும் மேன்மையை விட பத்திரிகைக்கு இன்று அதிக செல்வாக்கும், மேன்மையும் கிடைத்திருக்கின்றது. எனவே வலிமையான இந்தப் பத்திரிகை என்னும் பெருங் கருவியின் துணை கொண்டு, வயதிலும், அறிவிலும் வளர்ந்த மனிதர்களுக்கு மட்டுமல்லாது, வளர்ந்து வரும் இளஞ் சிறார்களின் வளமான எதிர்கால வாழ்வுக்கேற்ற நல்ல பல கருத்துக்களைத் தந்து நெறிப்படுத்தும் வழிவகைகளைத் தெரிந்து தெளிவது இன்றியமையாததாகும்.

1.1 தமிழில் சிறுவர் பத்திரிகையின் தோற்றம்

ஐரோப்பியர்களால் பெரும் முயற்சியுடன் வளர்க்கப்பட்ட பத்திரிகைத்துறை. தமிழகத்தில், தமிழ் மொழியில் உரை நடையை வள்ர்த்தும், சிறுகதையைப் பெருக்கியும், அகராதியை அறிமுகப்படுத்தியும், அச்சையும், அச்சுப்பொறியையும், வழக்கிற்கு வரச்செய்த கிறிஸ்தவப் பாதிரிமார்களால் பெரிதும் ஆர்வம் காட்டி வளர்க்கப்பட்ட தென்றறியப்படுகின்றது.

முதன் முதலில் தமிழ் மொழிக்கும் ஓரிடம் தந்து வெளி வந்த பத்திரிகை 'சிலோன் கெசட்' என்பதாகும். அதன்பின்பு 1831-ம்ஆண்டு கிறிஸ்தவ சமயப் பிரச்சாரக்கழகத்தால் 'தமிழ்ப்

பத்திரிகை' (Tamil magazine) என்ற செய்தி இதழொன்று தமிழ்மொழியிலேயே வெளிவந்தது. மக்களுக்குத் தேவையான பல கருத்துக்களை அன்று இப்பத்திரிகை வெளியிட்டது என்றறியப்படுகின்றது. இப்பத்திரிகை தோன்றி வளர்ந்த ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் தான் 1840-ம் ஆண்டு 'பாலதீபிகை' என்ற பெயரில் சிறுவர்களுக்கான பத்திரிகை யொன்று வெளியிடப்பட்டது. இதன் வழி பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே 'இளஞ்சிறார்களுக்கென்று ஒரு பத்திரிகை வெளிவருவதன் தேவை உணரப்பட்டிருந்தமைப் புலனாகின்றது.

1.1 1. சிறுவர் பத்திரிகையின் வளர்ச்சி நிலை

சிறுவர்களுக்கென்று 'பாலதீபிகை' என்ற பத்திரிகை வெளிவரும்வரை சிறுவர்களுக்கேற்ற செய்திகளும் கருததுக் களும் பெரியவர்கட்கான பத்திரிகைகளிலேயே இடம பெற்றிருந்தன. அவ்வகையில் தமிழர்நேசன், ஆனந்த விகடன், கல்கி, சுதேசமித்திரன், கலைமகள், அமுதசுரபி, ஜெகன்மோஹினி கலைக்கதிர், தினமணிக்கதிர், கலாவல்லி, உமா, அரவிந்தம் முதலிய பத்திரிகைகள் குறிப்பிடத்தவை. இக்காலக் கட்டத்தில் வெளிவந்த பல பத்திரிகைகளில் சிறுவர்களை மகிழ்வுறுத்தும் வண்ணம் கதைகள் பல இடம் பெறலாயின சுவாமி நாத அய்யரவர்கள், சிறுவருக்கேற்ற பல குட்டிக்கதைகளை, 'விவேக சிந்தாமணி'' என்ற பத்திரிகையிலும், 'ஜனவிநோதினி'' என்ற பத்திரிகையிலும் எழுதி வந்தார். 1917ல் மாதவய்யா 'தமிழர் நேசன்' என்ற பத்திரிகையில் வாய்மொழியாகச் சொல்லப் பட்டு வந்த பல கதைகளை எழுதி வந்தமையும் புலனா கின்றது.

1.1.1.1. தமிழிலக்கிய உலகோடு தொடர்புடைய சிலரால் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சிகளைத் தொடர்ந்து, பாளையங்கோட்டை கிறஸ்தவ சங்கத்தாரால் 1839-ல் 'சிறு பிள்ளையின் நேசத்தோழன்' என்ற பத்திரிகையும், இலங்கையி லுள்ள யாழ்ப்பாணத்திலிருந்த அமைரிக்க வேத போதக சபையினரால் 1859-ம் ஆண்டு 'பாலியர் நேசன்' என்ற

பத்திரிகையும் வெளிவந்தன. எனினும் இப்பத்திரிகைகளெல்லாம் காலப் போக்கில் சில காரணங்களால் தடைப் பட்டுப்போயின என்றறியப்படுகிறது. இருப்பினும் 19ம் நூற்றாண்டில் இறுதிப்பகுதியில் சிறுவர்களுக்கான பத்திரிகைகளை வெளியிடுவதில் முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பது மட்டும் தெளிவாகப் புலப்படுகின்றது.

1.1 1.2 'பாலதீபிகை'யால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி. இருபதின் இடைப்பகுதியில் அதாவது 1942ல் வெளிவந்த 'பாப்பா மலர்' என்ற பத்திரிகையின் வாயிலாகச் சிறுவர் பத்திரிகைகளின் வளர்ச்சிக்கு ஒரு தெளிவான பாதை புலப்படத் தொடங்கியதெனலாம்.

1.1.1.3 இதன் விளைவாக 1944 லிருந்து 1952 வரை எண்ணற்ற பல சிறுவர் பத்திரிகைகள் தோற்றம் பெறலாயின. காலணா, அரையணா, ஒரணா, இரண்டணா என்ற விலைகளில் மான், மயில், குருவி, கிளி, அம்பி, சிறுமி, மாணவன், யுவன், டிங்-டாங், சிறுவர் கதிர், சிறுவர் சோலை, சிறுவர் உலகம் ஆகிய பெயர்களில் 150 க்கும் மேலான பத்திரிகைகள் வெளிவந்தனவென்றறியப்படுகிறது. இதனால் இக்காலக் கட்டத்தைச் சிறுவர் பத்திரிகைகளின் பொற்காலமென்று கூட அழைக்காலம். இப்பத்திரிகைகளில் பல ஆயிரக்கணக்கில் விற்பனையான போதிலுங்கூட அனுபவமில்லாதவர்களால் நடத்தப்பட்டக் காரணத்தால், பத்திரிகையில் இடம்பெற்ற கருத்துக்களின் தரம் குறைந்து காலபோக்கில் வீழ்ச்சியடைந்தன.

1.1.1.4 வீழ்ச்சிக்கு இடையிலும், குறிப்பிடத்தக்கப் பணிகளையாற்றி, சிறுவர் இலக்கிய வரலாற்றில் சிறந்த இடத்தைப் பெற்ற பத்திரிகைகளும் சில உள்ளன. அவற்றுள் வை. கோவிந்தனின் 'அணில்', பூவண்ணனின் 'கரும்பு', சிறுவர்கட்காகத் தொடங்கப்பட்டு, பின்னர் இளைஞர்களுக்கு ஆகிவிட்ட 'கல்கண்டு' முதலான பத்திரிகைகள் குறிப்பிடத்தச்கனவாகும். சிறுவர்கள் சுவைத்துப் படித்து மகிழும்படியான துப்பறியும் கதைகளை முதன் முதலாகப் புகுத்தியது கல்கண்டு பத்திரிகையே எனலாம்.

1.1.1.5 வானதி திருநாவுக்கரசால் நடத்தப்பட்ட நகைச் சுவை மிகுந்த 'ஜில்ஜில்' பத்திரிகையும், 'கோமாளி, 'மிட்டாய்' என்ற பத்திரிகைகளும், ரா.சி. ரங்கராஜன் ஆசிரியராக இருந்து வெளியிட்ட 'வானரசேனை' 'ஜிங்லி' ஆகிய பத்திரிகைகளும் சிறுவர்களுச்கேற்ற கருத்துக்களை வெளியிட்ட பத்திரிகைகளில் குறிப்பிடத்தக்கனவாகும்.

1.1.2 சிறுவர் பத்திரிகைகளும், படைப்பாளர்களும்

சிறுவர்களுக்கான பத்திரிகைகள் வளர்ந்ததோடு மட்டு மல்லாது, அப்பத்திரிகைகளில் சிறுவருலகத்தின் சுவையும், தேவையும் உணர்ந்து படைப்புக்களை வெளியிடுகின்ற படைப் பாளர்களும் தோன்றி வளரலாயினர் என்பது குறிப்பிடத் தக்கது.

1 1.2.1 சிறுவருலகத்தைக் கவருகின்ற கார்ட்டூன்களை வெளியிட்ட 'சித்திரக்குள்ளன்' அண்ணா, பாரதிதாசன், பன் மொழிப்புலவர் முதலானோர் எழுதிய 'முத்து' முதலான பத்திரிகைகள் புதிய எழுத்தாளர்களை ஆதரித்து வெளிவந்தன.

1 1.2 2 மேலும் *1950*ல் 'தொடங்கி சில காரணங்களால் நின்று விட்ட 'கண்ணன்', *1951*ல் தொடங்கப்பட்ட 'பூஞ்சோலை', கல்கி சதாசிவத்தின் 'கோகுலம்' ஆகிய பத்திரிகைகள் சிறுவர் உலகத்திற்கு ஆற்றிய பெருந்தொண் டினால் அவை சிறுவர் இலக்கிய வரலாற்றில் நீங்கா இடத்தைப் பெற்றுள்ளமை புலனாகின்றது.

1 1.3 இன்றைய சிறுவர் பத்திரிகைகள்

மிக வேகமாகவும், மிகுதியாகவும் தோன்றி வளர்ந்த சிறுவர் பத்திரிகைகளில் பல இன்று தொடர்ந்து வெளி வரும் வாய்ப்பற்ற நிலையில், *1947*லிருந்து பதின்மூன்று மொழிகளில் தொடர்ந்து வெளிவநம் வாய்ப்பைப் பெற்ற ஒரே சிறுவர் பத்திரிகை 'அம்புலி மாமா' என்பது அறியத்தக்கது.

1.1.3.1 தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளிலும் 'அம்புலிமாமா' என்ற பெயரில் வெளிவரும் இப்பத்திரிகை

வெவ்வேறு காலகட்டங்களில் கன்னடம் (1948), ஹிந்தி (1949), குஜராத்தி (1954), ஆங்கிலம் (1970), வங்காளி (1972), பஞ்சாபி (1975), அஸ்ஸாமி (1974) ஆகிய மொழிகளில் 'சந்தமாமா' என்ற பெயரிலும், மராத்தியில் (1952) 'சந்தோலியா, (Chandolea) என்றும், அம்பிலிமாமா (Ambilimama) என்ற பெயரில் மலையாளத்திலும், சிங்களத்திலும் (1970) 'ஜகமாமு' (Jabamamu) என்ற பெயரில் ஒரியா மொழியிலும் தோன்றி வெளிவந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

1.1.3,2 பதின்மூன்று மொழிகளில் வெளிவருகின்ற 'அம்புலி மாமா' பத்திரிகையில் ஆங்கிலம், சிங்களம், நீங்கலாக ஏனைய அனைத்து மொழி இதழ்களிலும் உள்ளடக்கங்கள் பெரும் பாலும் ஒன்று போலவே அமைந்திருக்கக்காணலாம். 'சந்த மாமா' என்ற தெலுங்குப் பத்திரிகையில் வரும் உள்ளடங் களே பெரும்பாலும் பிறமொழிப்பத்திரிகைகளிலும் மொழி பெயர்த்துத் தரப்படுகின்றன. மேலும் அந்தந்த மொழிப் பத்திரிகையின் ஆசிரியர்கள் (Editors) ஒன்று கூடி எழுத்தாளர் களிடமிருந்து வரும் கதைகளைப் பரிசீலனை செய்து விரும்பி னால் பக்கங்கட்கு ஏற்றவாறு மாற்றங்கள் செய்தும் வெளி யிடுகின்றனரென்பதும் அறியத் தக்கது.

1.1.3.3 1975ம் ஆண்டு மே மாதத்திலிருந்து 'பொம்மை வீடு' என்ற சிறுவர் இதழ் சென்னையிலிருந்து வெளிவரு கின்றது. இவ்விதழ் 'பொம்மரில்லு' என்ற பெயரில் தெலுங்கி லும், 'குடியா' என்ற பெயரில் ஹிந்தியிலும் (1903), 'பம்பேமனே' என்ற பெயரில் கன்னடத்திலும் (1977) வெளி வருகின்றது.

1.1.3.4 பி,டி. ராதா கிருஷ்ணனை ஆசிரியராக கொண்டு பாலமித்ரா' என்ற சிறுவர் இதழ் ,1977 லிருந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. இவ்விதழ் 'பாலமித்ரா' என்ற பெயரி லேயே 1949 முதல் தெலுங்கிலும். 1950 முதல் கன்னடத்திலும் வெளியிடப்பட்டு வருகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

1.1.3.5 சர்வதேசக் குழந்தைகள் ஆண்டிலே (1979) தொடங்கப்பட்ட பாலர் வண்ண மாத மலரான 'ரத்ன பாலா'

என்ற பத்திரிகை முல்லைத் தங்கராசனையும், பின்னர் கே.ஆர் வாசுதேவனையும் ஆசிரியராகக் கொண்டு சிவகாசியிலுள்ள ஓரியண்ட் லித்தோ பிரஸ் அச்சகத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.

1.1.3 6 சிவகாசியிலுள்ள அணில் லித்தோ கிராபிங் கம்பெனி, 1980– ஜனவரியிலிருந்து 'மணிபாப்பா' என்ற ஒரு மாத இதழை வெளியிட்டு வருகிறதென்பதும் அறியத்தக்கது.

1.1.3.7 இன்று சிறுவர்கட்கென வெளிவரும் பத்திரிகைகளில் கோகுலம் குறிப்பிடத்தக்கதோர் இடம் பெற்றுள்ளது. சிலகாலம் தடைப்பட்டிருந்தபின் 1982ல் மீண்டும் தொடங்கப்பட்ட இவ்விதழின் ஆசிரியர் கி. ராஜேந்திரன், கௌரவ ஆசிரியர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா ஆவர்.

1.1.3 8 பைகோ வெளியீட்டின் 'பூந்தளிர்' என்ற இதழ் மாதம் இருமுறை சிறுவர்களுக்காக வெளியிடப்படுகின்ற பத்திரிகையாகும். பூந்தளிரின் மற்றொரு வெளியீடாகிய 'பூந்தளிர் அயர்சித்திரக்கதை, புராண இதிகாசக் கதைகளையும் நாடோடிக்கதைகளையும். வரலாற்றுக் கதைகளையும் படங்களோடு வெளியிடுகின்றது.

1.1.3.9 இன்று வெளிவருகின்ற தினமலர் நாளிதழ், சிறுவர்க்கென சிறுவர் வாரமலரை வெள்ளிக்கிழமைகளில் வெளியிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. பெருமளவில் செயல்பட்டு வரும் நாளிதழ்களால் லாபம் கருதாது சிறுவர்க்கென்த் தனி இதழை நடத்த முடியும் என்பதை இதன்வழி அறியலாம்.

1.1.4 சிறுவர் இதழ்களின் இன்றைய நிலை

சிறுவர் பத்திரிகையுலகின் சில பத்திரிகைகள் சில கால கட்டங்களில் தோன்றியும், தோன்றிய பத்திரிகைகள் நிலை பெறாது மறைந்தும் ஒரு சில பத்திரிகைகளே தொடர்ந்து வெளிவந்து கொண்டும் இருக்கின்ற நிலையைக்காணமுடிகிறது.

Planning The Thesis

R. Suresh.
University of Pondicherry.

Selecting a Topic

The selection of a suitable topic for a thesis or dissertation is in many ways the most difficult task. A thorough knowledge of a particular subject area is needed. Hence, at the honours under-graduate level, students are required to have completed a major in the subject before embarking on the thesis. At the master's and doctoral levels it is necessary not only to have completed this cartxer course work but also to have successfully completed an honours thesis and sometimes a pretiminary or qualifying examination as well.

It is the ability to detect problems that the post-graduate student must develop, for every thesis or dissertation should set out to shed light on the solution to a particular problem. In fact, the first question examiners usually consider when marking a thesis is ; Does it make a contribution to knowledge in this field ? phrased another way, this question becomes ; was there a problem to be investigated and did the thesis attempt to solve this problem?

A Source of problems for Investigation

The research fellow, lecturer or professor who is active in research is usually a fund of research problems. Like Gorgon's head, the none problems investigated, the more

problems emerge for investigation. A study of the current literature in the chosen field will indicate the problems that are being investigated and will suggest further problems for investigation.

The research fellow, should be femiliar too, with recent doctoral studies in his/her field of interest. Publications such as Dissertation Abstracts which appears monthly, present concise summaries of doctoral dissertations submitted at most leading universities. These summaries usually conclude with suggestions for future research.

Criteria for Selecting a Topic

Once the researcher have narrowed down his/her field of interest and have identified several problem areas for possible investigation, there are a number of questions the researcher ask about the topic.

1) Is there adequate supervision ?
2) Does the topic really interest the researcher ?
3) Can the topic be completed in the required time?
4) Is the necessary equipment available ?
5) Are subjects available ?
6) Are liberary facilities sufficient ?
7) Is the study fasible ?
8) Is the problem a significant one ?

The researcher must alone judge whether the time, effort and expense for tackling a particular problem are justified.

Reviewing The Literature

The review of literature is a task that continues throughout the duration of the thesis. It begins with a search for a suitable topic. Once a topic has been decided upon, it is essential to review all relevant material which has a bearing on the topic. The review of the literature is included in the final written thesis as a key section or chapter.

It is necessary to show how the problem under investigation relates to previout research studies. In some subject areas it is important to locate the problem within a theoretical framework and in such cases the underlying theory needs to be reviewed as well.

It is useful in initially surveying a field to work from the general to the specific or to work from tertiary and secondary sources of information to primary sources.

Primary sources

These include first hand accounts of experimentation and investigation (articles improfessional journals, monographs, doctoral theses, interviews, and questionnaires), original works (letters, diaries, eyewitness accounts, poems, novels, autobiographies) and reports (proceedings of Parliament, court testimony, reports of governmental departments and agencies, annual reports, minutes).

Secondary sources

These include summaries of information gathered from primary sources. These include translations, summaries and reviews of research (for example, encyclopedia articles),

abstracts, guide books and other publications containing factual information, commentauies and so on.

Tertiary sources

Textbooks are usually examples of tertiary sources of information since these are generally compiled from secondary sources. Tertiary sources of information can be useful in providing an overview or broad summary of a field. However, there is no substitute for consulting primary sources if they are available and post-graduate work in most subject areas demands it.

The use of cards for recording references and for taking notes is a widely accepted practice because of its effeciency, For certain types of research, secondary sources play a vita role as a consultancy material.

Research Design

It cannot be emphasised too strongly that details of research design should be decided (and, preferably written down) before the collection of data. The method collecting data is adapted to the research design. it is extremely difficult and sometimes impossible to find a research design to fit data that have already been collected. Most institutions, infact, require the submission of a formal written research, proposal which must be approved before the student is permitted to undertake the study. Basically, research studies fall into two broad catagories : empirical and analytical. Empirical or experimental studies are conducted mainly in the Science-type subjects whereas analytical or literary studies are generally conducted in the arts-type subjects.

The Chapter Outline

The preparation of a chapter outline is a useful first step in writing the rough draff. The chapters in most theses and dissertations follow a fairly standard formal. There is an introductory chapter and usually there is a chapter reviewing previous research. The next few chapters, the body of the theses vary according to the study. The empirical rescarch study frequently has one or more chapters on procedures and techniques (hypotheses, sample, tests, research design) and one or more chapters on results of study. The analyticaŗ research study frequently has a division of chapters according toea chronological development (for instance, early stone age, middle stone age, late stone age ; the early years, the formative years and so on) or a logical development (Poetry, drama, fiction, satinə). The final chapter is for conclusions.

Within each chapter there are major subheadings and there are minor subheadings. These headings often derive from the headings used in note making or from some of the points described above.

Below are sample chapter outlines for an introdactory and for a final chapter.

Chapter

I INTRODUCTION

The Problem

statement of problem

significance of study

Setting of Study

Limits of Study

VIII CONCLUSIONS AND RECOMMENDATIONS

Problems and Procedures

conclusions

Major Recommentations

Establishment of Research centre.

Appointment of Rescarch personnel

A Direction for Future Research.

A chapter outline is a guide for planning the thesis Some of the headings may need to be changed as the investigation progresses. The final form is determined by the nature of the study itself and by the conventions of scholarly writing.

BIBLIOGRAPHY :-

1) Janathan Anderson

The University of new England

Berry H. Durston

Western Australian institute of Technology

Millient Poole

La Trobe University

"Thesis and Assignment Writing",

Wiley Eastern Limited,

New Delhi - 110 002, Seventh

wiley Eastern Reprint, July 1986.

Rs. 15.

II) G. Stimpson, —**"Book about a Thousand Things"**

New York: Harper, PP. viii—ix

கோவில்பட்டி வட்டார விடுகதைகளில் உறவு முறைப் பெயர்கள்

சீ. சுலோசமணி
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.

முன்னுரை

பிற உயிரினங்களுக்கு இல்லாத பெரும் பேராகிய மொழி அறிவினைப் பெற்ற ஆதி மனிதன், காலப் போக்கில் அதனை வளப்படுத்தித் தன் உள்ளத்து உணர்வுகளைப் பிறருக்கு எடுத்துரைக்கவும், உணர்த்தும் கருத்துக்களைக் கேட்போர் மனங் கொள்ளும் வகையில் நயம்பட மொழியினைக் கையாளவும் கற்றுக் கொண்டான். இங்ஙனம் உருவாகிய மனித இனத்தில் மொழி வளர்ச்சி பாடல்களாகவும் பரிணமித்தது. பின்னர் அப்பாடல் வழி பல கருத்துக்களை வெளிப்படுத்தும் நிலையும் உருவாயிற்று. இவ்வாறு வாய்மொழி வழியாகத் தலைமுறை தலைமுறையாகப் பரவத் தொடங்கிய இப்பாடல்கள் ஏட்டில் எழுதாக் கலையாக உருவாயிற்று. வாய்மொழி இலக்கியம். நாடோடி இலக்கியம், நாடோடிப்பாடல்கள், ஏட்டில் எழுதாக் கவிதைகள், நாட்டார் வழக்காற்றியல், மூதுரைப்பா விடுகதைப்பா எனப் பலவாறாக வழங்கப்பட்டு வரலாயிற்று. தந்தை வழி மகனுக்கு என்று பரம்பரை மரபுப்படி வளர்ந்து வந்துள்ள இவ்வாய்மொழி இலக்கியங்களின் ஒரு கூறாக விடுகதையும் இடம் பெற்றுள்ளது.

'இலக்கியம் காலத்தைக் காட்டும் கண்ணாடியாகும்' என்ற கூற்றிற்கிணங்க விடுகதையும் தான் வழங்கப்படும் காலக்கட்டத்திற்குரிய சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் முறையில் சிறந்ததோர் இலக்கியமாகிறது.

விடுகதையென்னும் இவ்வாய்மொழி இலக்கிய வளர்ச்சி சிதம்பரனார் மாவட்டத்தைச் சார்ந்த தொழில் நகரமாகிய கோவில்பட்டி வட்டாரத்தில் பெருகி வந்துள்ள நிலையைக் காணமுடிகிறது. இவ்வட்டாரத்தில் வழங்கப்பட்டு வருகின்ற விடுகதைகள் வெளிப்படுத்தும் வாழ்வியல் செய்திகள்பலவாகும். அவற்றுள் இவ்வட்டார மக்களிடையே வழங்கப்பட்டு வருகின்ற உறவுப் பெயர்களையும், அவற்றின் வழி அறியலாகும் உறவு நிலைகள் குறித்தசெய்திகளையும் ஆராய்வதே இங்கு நோக்கமாகும்.

விடுகதை - விளக்கம்

இயற்கையோடு இயைந்த வாழ்வினைக் கொண்டவர் சிற்றூர் மக்கள். அம்மக்களின் உள்ளக் கருத்துக்களை உள்ளபடியே காட்டும் தன்மை கொண்டவை அவர்களிடையே வழங்கப்பட்டுவருகின்ற விடுகதைகள் எனலாம். அவை வினா விடைப் போக்குடையனவாகவும், சிந்தனையைத் தூண்டுவன வாகவும், அறிவிற்கு உரை கல்லாகவும் அமைகின்றன. மேலும் குறிப்பிட்ட வட்டாரத்தின் வாழ்வு நிலைகளை உணர்த்துவன வாகவும் அமைகின்றன.

உறவு முறைப் பெயர்களில் விடுகதைகள்

கோவில்பட்டி வட்டாரச் சிற்றூர்களில் வாழும் மக்கள் பல்வேறு தொழிலினர். பல இனத்தவர். இன்பமெனினும் துன்ப மெனினும் அனைவரும் வேறுபாடற்ற நிலையில் ஒன்றுகூடி ஒருவருக்கொருவர் உதவியால் நிற்கும் உயர் பண்பினர். இங்ஙனம் ஓரினத்தவரால், உறவினராய் இருப்பவரிடையே வழங்கி வருகின்ற உறவு முறைப் பெயர்களைவைத்தே வேற்று இனத்து மக்களையும் தம் உறவாய்க் கருதுகின்ற முறையில் அழைக்கும் வழக்கம் கிராமத்து மக்களிடையே இயல்பாகக் காணபபடுகின்றதெனலாம். இவ்வியல்பின் காரணமாக அன்னாரின் பேச்சுக்களிடையே ஊடாடும் விடுகதைகளிலும் இவ்வுறவு முறைப் பெயர்கள் இடம் பெற்றுள்ள தன்மையைக் காணமுடிகிறது. கணவன்-மனைவி, தாய்-மகள், உடன்பிறந் தோர் ஆகிய குடும்ப உறவு நிலைகளைக் கொண்டமைந்த விடு கதைகள் கோவில்பட்டி வட்டாரத்தில் மிகுந்திருக்கக் காணலாம்.

கணவன்-மனைவி உறவு

கோவில்பட்டி வட்டாரத்தில் மனைவி தன் கணவனை அத்தான், மாமா, மச்சான் என்று அழைக்கின்ற முறை பெரு வழக்காகக் காணப்படுகிறது. குடும்ப உறவுகளிலே முதன்மை யாக வைத்துப் பேசப்படுகின்ற கணவன்-மனைவி உறவு நிலை குறித்த விடுகதைகளுக்கு,

"காட்டு மேட்டு எருவு கலகலங்குது
கப்பலேறி மஞ்சம் மினுமினுங்குது
அப்படிப்பட்ட அத்தானோடு எப்படிப்பேசுவது
நான்" - அது என்ன?
(நெருப்பு)

"மண்டையிலே மயிரில்லாத கொண்டைக்காரி
மனிதரோடு பேசாத மகிமைக்காரி
கொண்டவனைக் கண்டதும் களுக்கென்று சிரிச்சிடுவா"
அது என்ன ?
(நெற்கதிர்)

ஆகியவற்றைச் சான்றுகளாகக் கூறலாம். கணவனே கண் கண்ட தெய்வம் எனப் போற்றி வாழ்பவர் தமிழகத்துப் பெண்கள். அவர் தம் வாழ்வில் எத்தகு இன்னல்களும் இடை யூறுகளும் ஏற்படினும் கொண்டவனை நேரில் கண்டதும் அனைத்தையும் மறந்து மகிழும் பண்புடையார் என்பதை மேற் கூறிய விடுகதைகளின் வழி அறியமுடிகிறது.

கணவன் மனைவியை அடிமையாக்கும் ஆணாதிக்க சமுதாயத்தினையும் விடுகதைகள் கூறத்தவறவில்லை எனும் உண்மையினை,

"அப்பன் அடிக்க ஆத்தா இளவெயிலில் இளப்பாறி
தீயில வெந்து வீடுதோறும் அடைக்கலமாவா"
— அது என்ன?
(மண்பானை)

என்ற விடுகதை உணர்த்துவதைக் காணலாம்.

தாய் - மகள் உறவு

தாய்-மகள் உறவுநிலைகளை விளக்கும் வகையில் பல விடு கதைகள் அமைந்துள்ளமையையும் காணமுடிகிறது. தான் பெற்றெடுத்த பிள்ளைகளின் நலனே தன் நலனெனக் கருதுபவள் தாய் அதிலும் குறிப்பாகப் பெண் குழந்தையைப் பெற்றெடுத்த தாயானவள் அப்பெண்ணுக்குத் திருமணம் ஆகும் காலம் வரை அரவணைத்துப் போற்றும் தாயாகவும், பணிப்பெண்ணாகவும், தோழியாகவும் போற்றிச் சீராட்டுவாள். திருமணத்தின்போது அத்தாய் சீர்வரிசைகள் பல செய்து மகளைச் சிறப்பிப்பாள். வரும் தட்சணைக்காகவே பெண்களைத் திருமணம் செய்ய முன்வரும் ஆடவர்கள் நிறைந்த இன்றைய சமுதாயத்தில் சீர்வரிசைகளோடு மகளைத் திருமணக் கொலுவில் ஏற்றிவைக்க விரும்புகின்ற தாய் தெருவிற்கு வரவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளமையையும் இவ்வட்டார விடுகதைகள் சுட்டிக் காட்டுகின்றன.

"தாய் தெருவிலே மகள் கொலுவிலே" -
அது என்ன ?
(நெல் உமி - அரிசி)

என்ற விடுகதை வழி வரதட்சணையும், சீர் வரிசையும் தந்து மகளைப் புகுந்த வீடு அனுப்புதற்பொருட்டு தாய் படும் துயர் நிலை வெளிப்படக் காணலாம்.

தாயும் தந்தையும் தம் மகளின் வாழ்வு நலம் சிறக்க விரும்பித் தங்களின் சுக துக்கங்களையெல்லாம பொருட்படுத்தாது வாழுகின்ற தியாக நிலையை அறிவுறுத்துகின்ற முறையில்,

"தாய் பரட்டை மகள் சிமிட்டி" - அது என்ன ?
(இலந்தைமரம்)

"அம்மா பரட்டை அப்பா சொறியன்
மகள் சக்கரவர்த்தி" - அது என்ன ?
(பலாப்பழம்)

ஆகிய விடுகதைகள் வழங்கி வரக் காணலாம்.

மேலும் தாய் என்பவள் தானீன்ற மக்கள் எதைக் கேட்டாலும் மறுக்காது, தனக்கென்று கருதாது தருகின்ற கனிந்த மனங்கொண்டவள் என்பதை,

"எங்க அம்மா கருப்பு, என்ன கேட்டாலும்
கொடுப்பா" - அது என்ன ?

(பனை மரம்)

"தாய் இனிப்பு மகள் புளிப்பு மகள்பிள்ளை பேத்தி
மணம்" - அது என்ன ?

(பால், தயிர், நெய்)

ஆகிய விடுகதைகளின் வழி அறியலாம்.

கோவில்பட்டி வட்டாரத்தில் தாய் மகள், தாய் தந்தை-மகள் ஆகிய இருவகையிலான உறவு முறைகளையும் அவ்வுறவு முறையிலுள்ள பிணைப்புத் தன்மைகளையும் விளக்கும் வகையில் மிகுதியான விடுகதைகள் வழங்கி வருவதை அறிய முடிகிறது. இதன் வழி குடும்ப உறவில் பெற்றோர் - மகள் என்ற உறவு நிலையின் நெருக்கமும் அதன் சிறப்பும் இவ் வட்டார மக்களால் பெரிதும் போற்றப்படும். தன்மையும் புலனாகின்றதெனலாம்.

உடன் பிறப்பு உறவுகள்

'சாதிகள் இல்லையடிப் பாப்பா', 'சாதியிரண்டொழிய வேறில்லை' - என்றெல்லாம் சான்றோர் பலரும் காலங் காலமாய்ச் சாதி வேறுபாடுகளை மறந்து ஒன்றென வாழும் சமுதாய வாழ்வையே வற்புறுத்தி வந்துள்ளனர். ஆனால் பாமர மக்களிடையே மட்டுமல்லாது கற்றோரிடையேயும் தலைவிரித் தாடுகின்ற இச்சாதிப் பாகுபாடு கிராமப்புறங்களை மிகுதியும் பாதிப்பதில்லை என்றறிய முடிகிறது. இனம், மதம் ஆகிய வற்றால் வேறுபட்டவர்களையும் கூட வயதில் மூததோராயின் 'அவர்களை,அண்ணாச்சி' ,'அக்கா' என்றும் வயதில் இளையோராயின் அவர்களைத் 'தம்பி', 'தங்கச்சி' என்றும் அழைக்கின்ற உறவுமுறை வழக்கம் இன்றும் கிராமப்புறங்களில்

மட்டுமே காணப்படுகிறது. உடன் பிறந்தாரல்லாதாரையும் உடன் பிறப்பெனப் பெயரிட்டு அழைக்கின்ற பண்பினை இதன்வழி அறியமுடிகிறது.

இன்றைய மாறிவரும் சமுதாயப் போக்கில் உடன் பிறந்தோருள்ளும் வாழ்க்கைத் தராதரப் பேதங்கள் உருவாகி வரும் நிலையை அறிவுறுத்துகின்ற முறையில்,

'அண்ணனுக்கு எட்டாதது தம்பிக்கு எட்டிவிடும்''
— அது என்ன ?
(உதடு)

'அக்கா வீட்டுக்குத் தங்கச்சி போகலாம்
தங்கச்சி வீட்டுக்கு அக்கா போகமுடியாது'
— அது என்ன ?
(நாழி — உழக்கு)

போன்ற விடுகதைகள் அமைந்துள்ளதையும் அறிய முடிகிறது. இதனையே ஏட்டிலக்கியமும்,

''ஒரு குடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடை யோனாறு அரசும் செல்லும்''

என்னுரைக்கக் காணலாம்.

மேலும் பல்வேறுபட்ட சமுதாயச் சூழல்களினால் உடன் பிறப்பு உறவும் இன்று பாதிக்கப்பட்டுள்ள உண்மையினையும் விடுகதைகள் எடுத்துக்காட்டுகின்றன எனலாம்.

முடிவுரை

கோவில்பட்டி வட்டார விடுகதைகள், தாய் – மகள், உடன் பிறப்பு ஆகிய உறவு முறைகளை விளக்குவதன் வழி நடைமுறை சமுதாய நிலைகளையும் சுட்டிக் காட்டிச் செல்லுகின்ற போக்கு வெளிப்படக் காணலாம். அத்துடன் வேற்றுமையில் ஒற்றுமை காணும் கிராமத்து மக்களின் உயர் பண்பினை உணர்த்துவதையும் காணலாம்.

விநாயகன்

கு.ஆ. செல்வமணி
சென்னை கிறித்துவக்கல்லூரி

இக்கட்டுரையின் ஆய்வுப் பொருள் விநாயகன் என்னும் சொல். இச்சொல்லின் பொருளிலும், எழுதும் முறையிலும் தெளிவைக் காண்பதே நம் நோக்கம்.

சங்க இலக்கியத்தில் இச்சொல் யாண்டும் பயின்றிலது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே இச்சொல் தமிழ் நூல்களில் இடம் பெறுகிறது.

இச்சொல் இரு பகுதிகளைக் கொண்டது: வி-என்ற முன்னொட்டும், நாயகன் என்ற சொல்லுமாம்.

விநாயக என்ற சொல்லிற்கு வட மொழியில் பல பொருள் கள் உரைக்கப் படுகின்றன. நீக்கம்; (தடைகளை) நீக்குவோன்; கணேசன்; தலைவன்; குரு; ஒரு புத்தன்; கருடனின் ஒரு பெயர்; தடை.

இச்சொல்லிற்குப் புராணங்கள் (**பாவிஷ்யத் புராணம், வாமன புராணம்**) தரும் விளக்கம்: நல்லோரைச் செம்மையான வழிப் படுத்துவோன்; தந்தை (நாயகன்) இவ்வாறு பிறந்ததால் வி-நாயகன் எனப் பெயர் பெற்றான் என்பனவாம். புராணச் சொற்பொருள் இத்தகையனவாயிருக்க, சொல்லாய்வு நெறிப்படி பொருள் கொள்ளுதல் தகும்.

வி-என்ற முன்னொட்டினையும் நாயகன் என்ற சொல்லினையும் ஆய்தல் வேண்டும்.

,வி' என்னும் முன்னொட்டு

உபசர்க்கமாக வி-வருங்கால் 1. இன்மை, 2. எதிரிடை, 3. மாறுபாடு, 4. மிகுதி போன்ற பொருள்கள் உணர்த்தும்.

இன்மை: ராகம். பற்று; வி+ராகம் - விராகம், பற்றின்மை.

எதிரிடை: சமம் × விசமம், கோணலான நிலை.

மாறுபாடு: விபட்சன், பட்சத்திற்கு மாறுபாடான தொடர்பு
உடையோன், வாதத்தில் எதிரி; விபக்கம்,
மாறுபடும் காட்சி;விபக்கன், எதிரி.

மிகுதி: விகணிதம், கணிப்பில் அடங்காமை.

மேற்சொன்ன நான்குபொருள்களுள் மிகுதிப்பொருளே ஏற்புடையதெனக் கொண்டு, நாயகருள் மிகுந்த, தலைமையான நாயகனே விநாயகன் என்றுரைப்பர் (அபிதானசிந்தாமணி *(1983)*, ப.1440)

ஒரு வேளை இந்நான்கு பொருளினுள் ஒன்றையும் உணர்த்தாமலும் வரும். எடுத்துக்காட்டாக, விநாழிகை (விநாடிகை), விபணம் (விலை, பணம்), விகணனம் (கணிக்கை) ! போன்ற சொல்களில் 'வி' யாதொரு குறித்த பொருளையும் உணர்த்தாது இதுபோன்று விநாயகன் என்பதிலும் மேற்குறிப்பிட்ட (மிகுதி உட்பட்ட) நான்கு பொருளினையும் உணர்த்தாது வி-முனனொட்டு வந்தது எனக் கொள்ளவும் இடமுண்டு.

நாயகன்

'நாயக' என்ற வட சொல்லின் தமிழ் வடிவமே நாயகன் என்பர். நாயக என்ற சொல்லைச் சற்றுப் பார்ப்போம்.

'நாயக' என்ற வட சொல் 'நாய' என்ற சொல்லினின்றும் தோன்றியது. 'நாயக' என்ற சொல் நடத்துநன், வழிகாட்டுவோன், தலைவன் என்றல்லாம் பொருள்படும். இச்சொல்லின் பெண்பால் வடிவம் 'நாயிகா' என்பது. இச் சொல் தலைவி, நாடகத்தில் முதன்மையான பாத்திரம் (கிழத்தி) என்று

பொருள்படும். இச்சொல்லின் தமிழ் வடிவம் நாயகி என்பது. நாயகி என்று ஒரு வட சொல் இல்லை.

நாயக, நாயிக என்ற இரு சொல்களுக்கும் அடிச்சொல் நாய என்பது. இதன் பொருள், நடத்துனன், வழிகாட்டி; நடத்துதல், வழிகாட்டுதல் என்பனவாம்.

நாய என்ற சொல்லுக்கு வேர்ச்சொல்லாக 'நீ' என்ற சொல்லைக் காட்டுவர். 'நீ' என்பது வழிநடத்து அல்லது இயக்கு என்று பொருள்படும் என்பர்.

'நீ' என்ற சொல் வட சொல்தானா? ஒரு சொல் வட சொல்தானா என்று காண ஐந்து வழிகள் உள்ளன என பரோ (Collected Papers (1968), பக். 298-304) என்ற அறிஞர் கூறுவார். இவ்வழிகளுள் முதன்மையான வழி யாதெனில் ஒரு குறித்த சொல்லிற்குரிய வேர்ச்சொல் வடமொழி தவிர பிற இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும் பயின்று வருகிறதா எனக் காணுதல், பிற மொழிகளில் அவ்வேர்ச்சொல்லோ அல்லது அதோடு தொடர்புடைய பிற வடிவமோ பயிலாவிடின் அச் சொல் வடமொழிச் சொல் அன்று எனலாம் என்பார். இதன் படி, 'நீ' என்ற சொல்லிற்கு பிற இந்தோ-ஐரோப்பிய மொழி களில் வேர்ச்சொல் உளதா என்றால் யாதொன்றும் இல்லையாம். எனவே இச்சொல் வடமொழிச் சொல்லன்று எனலாம்.

நாயன்: தமிழ் வழிப்பொருள்

ஆ ...... ஆய்

ஆ என்னும் தமிழ்த் தலையடி இரக்கக்குறிப்பு (இடைச் சொல்), ஏவற் பொருண்மை (வினைச்சொல்), புடை பெயர்ச்சி (உரிச்சொல்), பெற்றம் (பெயர்ச்சொல்) என்று பல பொருள் கள் உடைய சொல். ஈண்டு அது பெற்றம் என்ற பொருளில் வழங்குகின்றது. இத்தலையடியுடன் யகர மெய்யைப் புணர்க்க 'ஆய்' என்ற சொல் தோன்றும். பொருளை வரையறுத்துத் துலக்க மெய்(கள்) உயிரோடு அடுத்து வழங்கப் பெறும். இம் மெய் வியஞ்சனம் எனப்படும்.

ஆய் எனுஞ்சொல் 1. நுணுகுதல் (தொல்.2–330, வினைச் சொல்) 2. நுண்மை (புறநா 117; 10, பெயர்ச்சொல்) 3. தாய் (ஆய்-யாய்-ஆய்-தாய் (த்+ஆய்), பெயர்ச்சொல்), 4. இடையர் குலம் (சீவகீ 426; ஆயர், தொல். 3-1 21, பெயர்ச்சொல்) என்றெல்லாம் பொருள்படும்.

சங்க இலக்கியத்தில் ஆய் என்ற ஒரு வள்ளலின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது (புறநா. 126:5, 127:6; குறு. 84:3). இவன் ஆய்க்குடி என்னும் ஊரினின்று அரசாட்சி செய்து வந்தான். பழனிக்கு அருகே இப்பெயர் உடைய ஊர் உள்ளது. வேறு சில இடங்களிலும் இப்பெயர் உடைய ஊர் உள்ளதாக **சிறப்புப் பெயர் அகராதி** (சென்னை : தி. செ. சை. நூ. கழகம் 1970,ப. 55) கூறும். ஆய் என்னும் இடைவர் வாழ்ந்த குடி ஆய்க்குடி என்பர்.

ஆய் — நாயன்

தமிழகத்தில் அரசாட்சி தோன்றியது முல்லை அல்லது காட்டு நிலத்தில் என்பார் சீனிவாச ஐயங்கார். அவர் கூறுவது: அரசனுக்குரிய தமிழ்ச்சொல் கோன் என்பது. இது இடையனைக் குறிப்பது. கோன் — கோ (அரசன்). இடையன், அரசன் என்ற இருவரின் தொழில் ஒற்றுமை பற்றி கோன் என்ற சொல் அரசனுக்கும் வழங்கலாயிற்று என்பார். கோன் என்ற சொல் தலைவன் என்ற பொருளிலும் வழங்கியதுண்டு. (மது 74). ந. சுப்பிரமணியன் மேற்கூறிய சீனிவாச ஐயங்காரின் கொள்கையை மறுப்பார் முல்லை நிலத்திலேயே அரசாட்சி துவங்கியது என்பது பொருந்தாது என்றும் மலை நாட்டை உடைய சேரர் வில்லைச் சின்னமாகக் கொண்டிருப்பதால் ஆண்டு மலை வேடனே அரசனுக்கு முன்னோடியாவான் என்பார் எங்ஙனமிருப்பினும், கோன் என்ற அரசனைக் குறிக்கும் சொல்லின் தோற்றுவாய் முல்லை நிலக் கோன் என்பது புலனாகும். இது மெய்யெனில் நாயன் என்று அரசனைக் குறிக்கும் சொல் ஆயன் என்ற இடையனைக் குறிக்கும் சொல்லினின்றும் தோறிற்று எனக் கொள்ள இடமுண்டு; கோன் என்ற சொல் இடையன், அரசன் என்ற இருவரையும குறிக்க, ஆயன் என்ற சொல் இடையனை மட்டுமே குறித்ததாம்.

ஆய்ன் என்ற சொல் 'ஆய்' என்ற சொல்லினின்றும் தோன்றியது ஆய் என்பது இடையரைக் குறித்ததெனினும் சில தலைவரையும் குறித்தது. ஆய் என்ற வள்ளல் (சிறு. 95-99) ஆய் அண்டிரன் (புறநா. 129:5, 374:16, 240:3), ஆய் எயினன் அக. (113 208) என்ற வேளிர்களும் இப்பெயருடைய வர் முரஞ்சியூர் முடி நாகர் ஆயர் (புறநா. 2) என்பவரும் ஆய் என்ற பெயர் உடையவர். 'ஆவி' என்ற பெயரும் (ஆவியர் பெருமகன் பெருங்கல் நாடன் பேகன், சிறு 86-87; ஆவியர் கோ, புறநா. 147:9) ஆய் என்பதுடன் தொடர்புடையது என்பர்.

ஆய் என்று பெயருடைய இவ்வாட்சித் தலைவர்கள் அனை வரும் இடையர் குலத்தவராக இருந்திருத்தல் வேண்டும். அல் லது இடையனுக்கும் ஆட்சித் தலைவனுக்கும் உள்ள தொழில் ஒற்றுமை பற்றி இப்பெயர் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

நகர மெய்யுடன் ஆயன் என்ற சொல் கூடி நாயன் என்ற சொல் தோன்றும்; ந் + ஆயன் — நாயன். ஆயன் என்ற உயிரடிச் சொல்லுடன் நகர மெய்யேறிப் பிறிதொரு சொல் தோன்றியது. இவ்வாறு உயிரடிச் சொல்லுடன் மெய்யெழுத் துக்களைச் சேர்த்துப் பிற சொல்களைத் தோற்றுவிப்பது தமிழ்ச் சொற்பிறப்புக் கட்டளைகளுள் ஒன்றாம். இக்கட் டளையை, வலியுறுத்தும் முதனிலை மெய்ப்பேறு என்பர், தலை யடிகளை உறுத்து உச்சரித்தல் மூலமாய் வேறு புதுச்சொற்களை ஆக்கிக் கொள்ளுதற்குச் சிறந்த உபாயமாய் அமைந்தன முதனிலை மெய்களாம். தமிழ் அகராதியில் உள்ள மெய்வருக்க முதனிலைச் சொற்கள் எல்லாம் இவ்வாறே தோன்றின.

நாயன் என்பது தலைவன் (நாயன் வென்றி கொள்ள பாடல் கேட்க, திருவாலவா. 54, 36) அரசன், கடவுள் என்றெல்லாம் பொருள்படும். நாயன்-நாயகன். நாயகன், என்றால் இருபது யானைகட்கும், இருபது குதிரைகட்கும் தலைவன் (சுக்கிற நீதி 74) பத்து கிராமங்களுக்குத் தலைவன் (சுக்கிற நீதி 27), தலைவன் (பூத நாயகன், கம்பரா. அங்கத. 21). கணவன் (மலர் மங்கை நாயகன் திவ். பெரியதி. 10, 7, 6).

ஆயன் என்பான் ஆக்கணத்தின் தலைவன் ஆதலால்' அவனினின்றும் மக்கள் கணத்தின் தலைவனை வேறுபடுத்த உணர நகர முதனிலை மெய் புணர்த்து நாயன் என்ற சொல் தோன்றிற்றாம் நாயன் என்ற தமிழ்ச் சொல்லினின்றே 'நாயக' என்ற வட சொல்லும், 'நாயகன், என்ற தமிழ்ச் சொல்லும் தோன்றும்: (தமிழ்) நாயன்-(சமசு) நாயக (தமிழ்) நாயகன் (சமசு.) விநாயக— (தமிழ்) விநாயகன.

'ஆயன்' என்ற சொல்லினின்று தோன்றிய பிற சொல்கள்:

நாயகன், நாயகம், நாயகத்தி, நாயகாதிபன், நாயகப்பதித் நாயகத்தான், நாயகி, நாயிகை, நாய்கன், மாநாய்கன், நாயக்கன், நாயக்கச்சி, நாய்ச்சி, நாய்ச்சியார், நாயன், நாயன்தே, நாயன்மார், நாயனார், நாயன் ஆய்ச்சியார்.

சொல்வரிவடிவம்:

விநாயகன் என்ற சொல்லில் பயிலும் எழுத்து தந்நகர மேயன்றி னன்னகரமன்று. னன்னகரமிட்டெழுத, அச்சொல் வேறுபடும் வினாயகன் என்று எழுதியக்கால், அச்சொல்லின் அடிச்சொல் 'கேள்வி' என்று பொருள்படும் 'வினா' — என்ற சொல்லாம் இவ்வடிச்சொல் வழிப்பொருள் கொண்டால் சிறப்பாகாமை காண்க.

இனி, விநாயகன் என்ற சொல்லில் மொழியிடை 'ந வருமோ என ஐயுறலாகாது. மொழி முதல். இடை, கடை என்ற மூவிடங்களிலும் 'ந' வரும்.

மொழி முதலில் ந-: நகு. நறு நல், நம் போன்ற எண்ணிறந்த சொல்கள்: நன்மைப் பொருளில் ந ஓரெழுத்து ஒரு சொல்.

கடையில் – ந - : ஆகுந. சொல்லுந, கேட்குந, அறிந, தடுக்குந, தகுந. செய்ந. பொருந, புனைந. பிறழ்ந, மிகுந, முடிந, போல்வன அனைத்தும் சங்க இலக்கியத்தில் காணப் படுவன.

சிதம்பரம் நடராஜப் பெருமானுக்கு உடையார் பாளயம் ஜமீன் அளித்த தான்மம்

ச. செல்வராஜ்
மாவட்ட தொல்பொருள் அலுவலர், சிதம்பரம்

செப்புப்பட்டயம்

மன்னரின் ஆணையோ அன்றி மக்களில் ஒரு குறிப்பிட்ட இனத்தாருக்குள் ஏற்படும் ஒப்பந்தங்களையோ, அன்றி மன்னர் குறுநில மன்னர்கள், ஜமீன்கள் அளிக்கக்கூடிய தன்மத்தையோ அக்காலத்தில் தாமிரத்தகட்டில் என்றும் அழியாவண்ணம் எழுதி அதை உரியவரிடம் ஒப்படைப்பார்கள். இதனை தாமிர சாசனம் என்றும் செப்புப்பட்டயம் என்றும் கூறுவர். செப்புப் பட்டயங்கள் மூலம் தான் நம் வரலாற்றிற்கு அரிய செய்திகளை வழங்கி வரலாற்றை தெளிவு படுத்தி உள்ளது. அது போன்று செப்புப்பட்டயங்களில் காணப்படுபவை சில கல்வெட்டிலும், கல்வெட்டில் உள்ளவை செப்புப்பட்டயங்களிலும் காணமுடியும். கல்வெட்டை வெட்டி முடிக்கும் பொழுது 'கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க' என்று கல்வெட்டை இன்றும் பழமையான கோயில் கல்வெட்டுக்களை ஆய்வு செய்தால் அறிந்து மகிழலாம். கல்லிலும் செம்பிலும் வெட்டுவது காலத்தால் அழியாத நிலை பெற்றது

செப்புப்பட்டயத்தின் அமைப்பு

பட்டயங்கள் யாரால் கொடுக்கப்பட்டது, யாருக்கு கொடுக் கப்பட்டது, என்ன காரணத்திற்கு கொடுக்கப்பட்டது, அதனை

நிர்வகிக்கும் பொறுப்பு யாருக்கு, அதன் காலம், முடிவு என்று பகுத்து எழுதுவார்கள். அதன்படி இங்கு அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட உடையார் பாளயம் ஜமீன் அளித்த செப்புப் பட்டயமும் அமைந்துள்ளது.

உருவப்படங்கள்

இக்கட்டுரையில் இடம்பெறும் செப்புப்பட்டயம் இரண்டு பக்கமும் எழுதப்பட்ட ஒன்று முகப்பின் தலைப்பில் அரைவட்ட வடிவில் வெட்டப்பட்டுள்ளது. முதல் சிறிய பகுதியை கோடிட்டு மூன்றாகப் பிரித்து அதில் மூன்று உருவச் சிற்பங்கள் செதுக்கப் பட்டு கோட்டு ஓவியம் போன்று செதுக்கப்பட்டுள்ளது. இதில் நடுவில் நடராஜர் நாட்டியமாடுவது போன்று கீழே முயலகனின் உருவமும் பொறித்து நான்கு கைகளுடன் காலை தூக்கி ஆடுவது போல செதுக்கப்பட்டுள்ளது. இடது புறம் குருநமச் சிவாய மூர்த்தி என்று எழுதப்பட்ட வாசகத்துடன் அமர்ந்த நிலையில் குறுநமச்சிவாயர் படம் செதுக்கப்பட்டுள்ளது தலை அலங்காரமும் காட்டப்பட்டுள்ளது. இரண்டு கைகளையும் தொடையில் வைத்தது போன்று உள்ளது. வலது புறம் உடை யார் பாளய ஜமீன் பரம்பரையை சேர்ந்த காலக்க தோழ உடையார் அவர்களின் திருவுருவமும் செதுக்கப்பட்டுள்ளது. இது இரண்டு கைகளை கூப்பி வணங்கிய நிலையிலும் மேலும் தலையில் தலைப்பாகை கிரீட அமைப்பு போன்று காணப்படு வதால் இவர் ஓர் குறுநில மன்னர் போல தோன்றுகின்றார்.

செப்புப்பட்டயம் வழங்கியவர்

சோழபுரத்து பள்ளி கொண்ட காலக்கதோழ உடையார் குமாரர் சின்ன நல்ல காலக்கதோழ உடையார் சோணாசல தம்பிரான் சந்ததியாரான குருநமச்சிவாயருக்கு வழங்கப் பட்டது. இதில் கூறப்பட்ட காலக்கதோழ உடையார் என்பது உடையார் பாளய ஜமீன் பரம்பரையை சேர்ந்தவர் ஆவர் தோழ என்பது உடையார் பாளய ஜமீன் பரம் பரையைச் சார்ந்த உடையார்களின் பொதுப்பட்ட பெயர் ஆகும் அடுத்து பட்டயத்தில் குறிக்கும் சோழபுரத்து பள்ளி

கொண்ட என்பது கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள என்று பொருள் கொள்ளலாம். இவ்வுடையார்கள் கங்கை கொண்ட சோழபுரத்தின் கீழ் உள்ளவர்கள். கங்கை கொண்ட சோழபுரத்தையே சோழபுரம் என்று குறிப்பிடுகின்றது என்றும் கருதலாம்.

வரிகள்

முதல் பக்கத்தில் 26 வரிகளும் இரண்டாவது பக்கத்தில் 8 வரிகளும் மொத்தம் 34 வரிகளும் கொண்டுள்ளது. இவற்றில் இறுதியில் தெலுங்கு வாசகமும் உள்ளது.

மொழி

தமிழ் எழுத்துக்கள் மூலம் எழுதப்பட்டுள்ளது.

பட்டயம் கூறும் தன்மம்

சிதம்பரம் நடராசப் பெருமானுக்கு சர்வ கட்டளை பூசைக்கும் நெய் வெய்தியத்திற்கு இளகாம்பூர் கிராமத்தின் நான்கு பக்கமும் உள்ள நிலங்கள் அனைத்தும் தானமாக வழங் கப்படுகிறது இந்த நிலத்தை கொண்டு நடராசப் பெருமானுக்கு தினமும் பூசையும் நெய்வெத்தியமும் தொடர்ந்து நடை பெறுதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இளகாம்பூர் என்ற கிராமம் சிதம்பரத்தில் இருந்து 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

தன்மம் பாதுகாக்கும் உரிமை

இந்த தன்மத்தை செவ்வனே பாதுகாத்து நடத்திவர சோனாசல தம்பிரான் சந்ததியார் குருநமச்சிவாயமூர்த்திர இவர்களால் நல்ல முறையில் நடத்தி வருதல் வேண்டும் என்று குறிப்பிட்டு தாமிர சாசனம் குருநமசிவாயமூர்த்தி அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பட்டயத்தின் முடிவு

இத்தன்மம் சந்திரன், சூரியன் உள்ளவரை நடைபெறுதல் வேண்டும். இதை யாராவது தடை செய்ய நேர்ந்தால் கங்கை

கரையில் காராம் பசுவை கொன்ற பாவத்திற்கு ஆளாவார் என்றும், இதை நல்ல முறையில் நடத்தி பரிபாலனம் செய்தால் குறை நீங்கி, நீண்ட ஆயுளுடன் நீடுழி வாழ்வார்கள். இவர் கள் சிதம்பரத்தில் ஸ்ரீசபா நடேசரின் அர்த சாமத்து தரிசனம் பண்ணின பலன் பெறுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

குறுநமச்சிவாயர்

இவர் சிறந்த சிவபக்தர். நல் அருந்தொண்டு ஆற்றியவர். இவர் பெயரில் மடங்கள் நிறுவி நல்ல தர்ம காரியங்கள் பல செய்யப்பட்டு வந்துள்ளன. எனவே இப்பட்டயம் இவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

காலம்

இதில் குறிக்கப்படும் காலம் ''ஸ்வஸ்தி ஸ்ரீ சாலியவாகன சகாப்தம் 1445 (என்று தமிழ் எழுத்துக்களில் எழுதப் பட்டுள்ளது) இதன் மேல் செல்லா நின்ற வருஷம் முக வருஷம் பங்குனி மாதம் 16 ஆம் நாள் சோமவாரமும் உத்திரா நட்சத்திரமும் சுக்குலபட்சமும் சுக்ரதநாமயோகமும் பாலிய வாகனமும் கூடிய சுபதினத்தில்'' எழுதப்பட்டது. என்று குறிப்பு வருகின்றது. அதன்படி செப்புப்பட்டயத்தின் காலம் 1445 + 78. 1523 A.D 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகும். எழுத்தமைதியும் வரலாற்று தடயங்களும் இதன் காலத்தோடு ஒன்றி நிற்கின்றது. எனவே இதன் காலத்தை 16ஆம் நூற் றாண்டின் முற்பகுதி என்றும் மேலும் குறுநமச்சிவாயர் பதினாராம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்ப தாலும் இதன் காலத்தை 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்று கூறலாம்.

செப்புப்பட்டயம்

1) ஸ்ரீ புலோக கயிலாசமாகிய சிதம்பறம் ஹீ சபா

2) நடேசர் சன்னதானமாகிய சறுவ கட்டளைக்கி சோழ புறத்து பள்ளி கொண்ட காலக்க தோழ

3) ஒடையார் குமாறர் சின்ன நல்ல காலக்கதொ

4) ழ ஒடையார் சோணாசல தம்பிறான் சந்ததியா

5) ன குறு நமசிவாயர்க்கு யெழிதி குடுத்தா ம் பற

6) சாதன பட்டயம் சொ ஸ் த ஸ்ரீ சாலிய வாகன சகா

7) பதம் சூசுளசு ய ரு இதன் யேல் செல்லா நிண்ட ஸ்ரீ முக

8) பங்குணி மாதம் யசா சோமவாரமும் உத்திர நஷ்சத்திர

9) மும் சுக்குல பஷ்சமும் சுகுறத நாம யோகமும் பாலி

10) யாகறணமும் கட்டின் சுப தினத்தில் பயறணி பாவி

11) யமறுத்திர புறியீஷ்யற சுவாமி சன்னதானத்தில்

12) லிருந்து யெழிதின கோடி சூறிய பிறகாச மாகிய

13) கயிலாச வாசகராகிய நிர்மல நிர்க்குன நிர்முசன்

14) நிறுமயமானச் சச்சிதாநந்த சொருபமான அகில

15) ம் அண்டம் கோடி பிறமாண்டணாயகாளன அருன்

16) சிங்காரம் கினாம யுள்ள ஸ்ரீ சபா நடெசர் கோ

17) வில் சறுவ கட்டளை பூசை நெவெத்தியத்துக்கு

18) அரிசி பத்து யெலகம்பூர் கிறாமம் நார் பாங்கி

19) லுள்ள நிலம் முளுமையும் சபா நடெசர் க்குவு

20) ட்டு சிலா சாசன சகிதமாயிறுக்கிற அந்த தரும

21) த்தை நடத்திக் கொண்டு வறு யிந்த தறமத்தை சே

22) ஈனா சலதம்பிறான் சந்ததியார் குருநமசிவாய

23) மூற்த்தி யிவர்களால் யிந்த தருமத்தை தீஷச

24) சீஷ பாறம் பஷியாமி சந்திராதித்தர லுள்ளவரை

25) யில் தற்மத்தை நடத்தி கொண்டே வரவும்

26) யிந்த தறமத்தை யாதாமொறு உறாயிந்த தறம்

27) த்துச்கு விகாதம் செயிதால் காசியிலெ கெங்

28) கைகறையிலே காறாபசுவு கென்ன தோஷத்தி

29) ல் போவார்கள் யிந்தற்மத்தை பறி பாலினம்

30) செயித வர்கள் நீடுழி காலமும் கு பெற சமைப

31) த்தும் மாற் கண்ட ஆயிசாயிறுத்து சிதம்பற

32) த்தில் அர்த்த சாமத்து தெறீசினம் பண்ணி

33) ன பாலன் கிடைக்கும்

நன்றி.

திரு. சிவராமன் வரலாற்று பேராசிரியர் விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரி அவர்கள் அளித்த பட்டயத்தின் தாள் பிரதி கொண்டு இக்கட்டுரை எழுதப் பட்டது.

கோயில்களும் மகப்பேறும்

நா. செல்வராசு,
புதுவைப் பல்கலைக்கழகம்

இறைவனை நோக்கி மக்கள் விடுக்கும் பல்வேறு வேண்டல்களில் 'மகப்பேறு வேண்டுதல்' ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது. தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாகச் சீர்காழி வட்டத்திலுள்ள நாட்டுப்புறத் தெய்வக் கோயில்களில் இவ் வேண்டுதல் மிகுதியாக இடம் பெற்றிருத்தலைக் காண முடியும், தமிழகத்தின் வரலாற்றுக் காலம் தொடங்கி இன்றுவரை பிள்ளைப் பேற்றின் சிறப்பினைப் பல்வேறு இலக்கியங்கள் பலபட மொழிகின்றன. பிள்ளைப்பேறு வாய்க்காமையால் தோன்றும் வருத்தங்களும் குடும்பநலக் குறைவுகளும் நிறைந்த எண்ணற்ற மலட்டு நாட்டுப்புறப் பாடல்கள் கிடைத்துள்ளன. மலட்டிலிருந்து விடுபெற மக்கள் தம்மின் உயர்ந்த சத்தியை வழிபடமுயன்றனர். அச்சத்தியே தமக்கு மகவரம் தரும் என நம்பினர். இந்நம்பிக்கையை அடியொற்றிய வழிபாடுகள் சீர்காழிவட்ட நாட்டுப்புறத் தெய்வக் கோயில்களில் நிகழ்கின்றன. அக்கோயில்களில் நடைபெறும் மகப்பேறு வேண்டுதலில் ஒரு கூறினை மட்டும் சமூக இயல் நோக்கில் அணுக இக்கட்டுரை முயல்கின்றது.

கோயில்களும் மகப்பேறும்

மகப்பேறு வேண்டுவோர் கோயில்களில் இரவு நேரத்தில் தங்குதலை இறைக்கடனாக மேற்கொண்டுள்ளனர். இரவு யாமப் பூசையினைத் தொடர்ந்து விடியலில் நடைபெறும் பூசை வரையிலான இடைநேரத்தில் கோயில்களில் தங்கியிருப்பது மரபாகக் கருதப்படுகின்றது. மாதானத்தில் உள்ள மாரியம்மன் கோயிலில் விழாக்காலங்களில் மகப்பேறு வேண்டுவோர்

இரவில் தங்குகின்றனர். இவ்விரதத்திற்காக வியாழக்கிழமை இரவினைத் தேர்ந்தெடுக்கின்றனர். வியாழன் பகற்பொழுதில் வீட்டினைத் தூய்மை செய்து விரதம் அனுட்டிக்கின்றனர். அன்று நண்பகற்பொழுதில் உண்ணும் உணவைத் தவிர வேறு உணவு உண்பதில்லை. மாலை ஆறுமணிக்குள் கோயிலுக்குள் சென்று விடுகின்றனர். இரவு எட்டு மணி அளவில் நடைபெறும் பூசையில் கலந்துகொள்வர். பின்னர்க் கோயிலின் பிரகாரத்தில் படுத்து உறங்குவர். விடியற்காலையில் எழுந்து நீராடிய பின்னர் வைகறைப் பூசையில்கலந்து கொள்வர். அதுபோது வழங்கப் பெறும் அபிடேகப் பாலினைக் குடித்து விரதத்தை முடித்துக் கொள்வர். பாலைக் குடிப்பதற்கு முன் அக்கோயிலின் மரமாகக் கருதப்பெறும் வேப்பமரத்தின் இலையினைச்சாந்தாக அரைத்துப் பாலோடு உண்கின்றனர். இச்சாந்து உற்பத்தியாகும் கரு உயிர் களை உண்ணும் கிருமிகளை அழித்து விடுவதாக நம்புகின்றனர். பின்னர்க்கோயிலில் பொங்கல் இட்டு மாரியம்மனுக்குப் படைத்த பின்னர் அவ்வுணவை உட்கொள்கின்றனர். இச்சடங்கு தொடர்ந்து மூன்று வியாழன் இரவுகளில் நடைபெறுகின்றது.

இவ்வாறே கோயிலில் தங்கும் நிகழ்ச்சி வைத்தீஸ்வரன் கோயிலில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இங்குப் பிணி தீர்க்கும் மண் மருந்தினை உட்கொள்வர். இது பெருந்தெய்வக் கோயில் என்பதும் கருதத்தக்கது. இதுபோன்றே வலங்கைமான் மாரியம்மன் கோயிலில் ஞாயிற்றுக்கிழமை இரவுப்பொழுதில் பெண்கள் தங்குவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மகப்பேறு வேண்டிக் கோயிலில் தங்கும் வழக்கம் எவ்வாறு தோன்றியிருக்கக் கூடும், எப்பொழுது தோன்றி யிருக்கக் கூடும் என்ற வினாக்களுக்கு விடை காண்பது எளி தன்று கோயிலுக்கும் அல்லது தெய்வங்களுக்கும் உடலுறவுக்கும் அல்லது மக்கட்பேற்றிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததை மானிடவியல் அறிஞர்களும் சமூகவியல் அறிஞர்களும் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். கலிபோர்னியா தீபகற்பத்திலுள்ள சில குலங்களிடையே விழாக்காலங்களில் வரைமுறையற்ற புணர்ச்சி நிகழ்வதாகவும் இதில் கலந்து கொள்வதற்காகப் பல குலங்கள்

திரண்டு வருவதாகவும் கூறும் 'பான்கிராப்ட்' என்பாரின் கருத்தை, எங்கெல்ஸ் மேற்கோள் காட்டியிருப்பது சிந்திக்கத் தக்கது மேலும், ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து வரும் சில மக்கள் சமூகங்களின் தலைவர்களும் மந்திரவாதிகளும் தம்முடைய பல மனைவியரைச் சில விழாக்களின் (சாடேர்னேலிய விருந்து விழாக்களின்) சமயங்களில் வாலிபர்களோடு இன்பம் அனுப விக்க அனுமதிக்கின்றனர். பாபிலோனியப் பெண்கள் வருடத் தில் ஒரு தடவை மிலிட்டா கோயிலில் தங்களை ஒப்புகொடுத்து விடவேண்டியிருந்தது. இதர மத்தியக் கிழக்கு நாட்டுமக்கள் சமூகங்கள், தமது பெண்களைப் பல வருடங்களாக அனெய்டிஸ் தேவதையின் கோயிலுக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கே அவர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட, தங்களுக்குப் பிடித்தமான ஆண்களுடன் சுதந்திரமாக உறவுகொள்ள வேண்டும், பிறகுதான் அவர்கள் மணம்புரிந்துகொள்ள அனு மதித்தார்கள். மதப்போர்வையால் மூடப்பட்ட பழக்கங்கள் மத்தியதரைக் கடலுக்கும் கங்கை நதிக்கும் இடையிலுள்ள ஆசிய மக்கள் சமூகங்களில் நடைபெறுகின்றது, என எங்கெல்ஸ் குறிப்பிடுவர். விலைமகளிரின் தோற்றமும் ஒருவாறு கோயிலி லிருந்துதான் தொடங்கியதாகத் தெரிகிறது. பணத்திற்காக உறவுக்கு உடன்படுவது என்பது முதலில் ஒரு மதச்செய்கை யாகவே இருந்தது. இந்நிகழ்ச்சி காதல் தெய்வத்தின் கோயிலில் நடந்தது. அதனால் பெறப்படும் பணம் கோயில் கஜானாவை அடைந்தது. இவ்வாறு ஆர்மீனியாவிலுள்ள அனெஸ்டின் ஹீரோடூல்களும் (கோயில் சேவகிகளும்) கோரின்திலுள்ள அப்ரோடைடியின் ஹீரோடூல்களும் காணிக்கைக்காகக் கோயி லிருந்து தம்மை ஒப்புக் கொடுத்தனர். காணிக்கைகளைப் பெற்றுக்கொண்டு உறவுகொள்ளும் நிலை ஆதியில் எல்லாப் பெண்களுக்கும் உரிய கடமையாக இருந்து பின்னால் அது பூசாரிணிகளுக்கு மட்டும் உரியதாக மாறியது என்று கூறும் சமூகவியல் அறிஞர் தம் கருத்தும் சிந்தனைக்குரியது.

இவ்வாறாகக் கோயிலில் உறவு கொள்வது என்பது ஆதி யில் நடைமுறை வழக்கமாக இருந்தது. பின்னர்க் கோயிலில் ஆண்களும் பெண்களும் இருந்து, பிள்ளைப்பேற்றிற்கு உதவிய

தாகவும் தெரிகிறது. இதனை 'நமது சமூகம்' என்ற நூல் விளக்கமாகக் கூறும்.

> "பழைய நாகரிகங்களில் தேவாலயங்களில் பெண்கள் **(Kedeshoth)** ஆண்கள் **(Kedeshim)** ஆகிய குழுவினர் இருந்து இன்ப நுகர்ச்சிக்கும். பிள்ளைப் பேற்றிற்கும் உதவியதாகத் தெரிகிறது. இவ்வாலயங்களில் வரையறையின்றி ஆண்கள் தேர்ந்தெடுக்க அவர்கள் கொடுக்கும் பணத்தைப் பெற்றுக் கொண்டு அல்லது கோயிலுக்குச் செலுத்திக் கூட வேண்டிய கட்டாய வழக்கங்கள் இருந்தன தற்காலத்தில் பிள்ளைப்பேறு கருதிக் கோயில்களில் சிலநாட்கள் தங்கியிருப்பதும், இத்தொடர்பையே குறிக்கும்,

என்ற அறிஞர்தம் கருத்தும் சிந்தனைக்குரியது ஆக, ஆதி காலத்தில் கோயிலில் உறவுகொள்ளுதல் என்ற ஒன்றின் எச்சமே பிற்காலத்தில் கோயில்களில் மகப்பேறு வேண்டி இரவு நேரங்களில் தங்குதலாக நிலவியிருக்க வேண்டும் என்று கருத வேண்டியிருக்கிறது. இக்கருத்து மேலும் ஆய்விற்குரியது.

சமூகவியல் நோக்கில் மகப்பேறு வேண்டுதல்

மக்கட்பேறு என்ற சொள்கை சமூகவியல் நோக்கில் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. பொதுவுடைமைச் சொத்து முறையிலிருந்து தனியுடைமைச் சொத்து முறையிலான மாற்றம் வாரிசுரிமையையும் அதன்வழி ஒருகணவ மணமுறையையும் தோற்றுவித்தது. பலதார பல கணவ மண முறைகளில் பிறந்த குழந்தைகள் பொதுவானவர் இன்னார் மகன் இவன் என்று சுட்டிக் கூறாத நிலை அங்குக் காணப் பெற்றது. பொதுவுடைமைச் சொத்துக் காலத்தில் ஓரினம் ஒரு குழுவாக இயங்கி வந்தது. சொத்து அனைவருக்கும் பொது வானது. அங்கு ஆடவரும் பெண்டிரும் பொதுவானவர். இந் நிலை மாறித் தனியுடைமை தோன்றும்போது அதனைத் தக்க வைத்துக்கொள்ள எண்ணம் தோன்றியது. இங்குதான் மனிதன் முதன்முதலில் தனக்கொரு வாரிசு தேவையை உணர்ந்தான். தன்வாரிசு அல்லது தன்மகன் என்று சுட்டிக்கூற வேண்டு

மாயின் மனைவி தனக்கே உரிமையுடையவளாக இருத்தல் வேண்டும். அவள் பிற ஆடவரோடு உறவு கொள்ளல் ஆகாது. இத்தத்துவத்தின் வளர்ச்சி ஒரு கணவ மணமுறையைத் தோற்றுவித்தது. 'குடும்பத்தின் ஆட்சி தனதே எனக்கூடிய குழந்தைகளைப் பெறுவது, தனது செல்வத்திற்கு வாரிசாக வரவிதியுள்ளவர்களைப் பெறுவது இவை மட்டுந்தான் ஒருதார மணத்தின் இலட்சியங்கள் என்று கிரேக்கர்கள் பகிரங்கமாக ஒத்துக் கொண்டார்கள். கிரேக்க மனைவி அவளுடைய கணவனைப் பொறுத்தவரையில் சட்டப்பூர்வமான வாரிசுகளுக்குத் தாயாக மட்டுமே கருதப் பெற்றாள். பண்டைய மேலை நாடுகளில் குழந்தைகள் பிறக்காத திருமணங்கள் ரத்துச் செய்யப்பெற்றன. இதற்குச் சான்றாகக் கி. மு. 560-இல் வாழ்ந்த அனாக் ஸாண்டி ரிடாஸை எங்கெல்ஸ் எடுத்துக்காட்டுவர். குழந்தைப்பேறு வாய்க்காதவர்கள் கணவனால் விலக்கப் பட்டனர். கணவன் மறுமணம் செய்து கொள்வதின் மூலம் முதல் மனைவி இல்லற உரிமைகளை இழக்கிறாள். வாரிசுகளைப் பெற்றுத் தரும் மனைவியே குடும்பத்தின் தலைவி ஆகிறாள். பிறமனைவியர் அவளுள் அடக்கம், இத்னை இன்றைய முதுவர் பழங்குடியினரிடம் காணலாம். இந்நிலையில் பிள்ளைப்பேறு கிட்டாத போது பல உரிமைகளையும், செல்வாக்கினையும் இழந்து விடுகின்றனர். இத்தகு இழிநிலையிலிருந்து விடுபடுதற்குப் பெண்கள் மகப்பேற்றை வேண்டினராதல் வேண்டும். இத்தத்துவமே பிற்காலத்தில் இறைமைக் கோட்பாட்டோடு சேர்க்கப்பெற்று வளர்ச்சியுற்றிருக்க வேண்டும். இறைவனை வழிபட்டாவது மக்களைப் பெறுதல் வேண்டும் என்ற விழைவு சமூகத்தில் தோன்றியிருக்க வேண்டும். இவ்விழைவின் எச்சங்களே இன்றைய நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டில் மகப்பேறு வேண்டுதலாக உருப்பெற்றிருக்க வேண்டும்.

சமய மறுமலர்ச்சியில் இயற்கையின் பங்கு

தி.ரா. செல்வராசன்,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி.

அறநெறி இலக்கியங்களை அடுத்துத் தோன்றிய் இறைவழி பாட்டுப் பாடல்களில் இயற்கை சிறப்பாக இடம் பெற்றுள்ள மைக்குத் தமிழ்நாட்டுச் சூழலும் காரணமாக உள்ளது. அயலவ ராகிய களப்பிரர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் வந்த பாண்டிய மன்னரும் பல்லவ மன்னரும் சமண சமயத்தைப் பின்பற்றி வந்தனர். தமிழகத்தில் சமணத்தின் செல்வாக்கு மேலோங்கி இருந்தது. மற்றும் பல்லவர்கள் தமிழ்மொழியிலும் வட மொழிக்குப் பேராதரவு நல்கிப் போற்றி வந்தனர்.

சைவ சமய மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க எழுந்த தோத்திரப்பாடல் சில புதிய போக்குகளை மேற்கொண்டது. இறைவனை எண்ணி எழும் உவகைப் பெருக்கை வடித்திட விருத்த யாப்பும், செவி குளிரச் செய்யும் பண்ணமைப்பும் இன்றியமையாதனவாக இருந்தன. இயற்கைநெறிக் காலமாகிய சங்க காலத்தில் போற்றப்பட்ட இயற்கை மீண்டும் மிகுதியாக எடுத்தாளப்பட்டது.

இறைவன் எழுந்தருளியிருக்கும் தலங்களின் இயற்கைக் காட்சி அழகையும், அவனை அடையத் துடித்துத் தூதாக அனுப்பப்படும் இயற்கைப் பொருள்களின் இயல்பினையும், இறைமையின் சான்றுகளாகத் திகழும் இயற்கையின் சிறப் பினையும் இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள நேயப் பிணைப் பினையும் தேவார மூவர் தம் பாடல்களில் சந்த நயத்துடன் எடுத்துரைத்து மக்கள் மனத்தைக் கவர்ந்து அமைதிப் புரட்சிக்கு வழிவகுத்தனர். வாழ்க்கை மறுப்புக் கொள்கையால், இன்பம்

பயக்கும் கலைகளையும் புலனின்பம் நல்கும் உலகக் காட்சி. களையும் வெறுத்து ஒதுக்கிய புறச் சமயங்களை வெல்வதற்கு இறைவனின் உறையுளாக விளங்கும் இயற்கையின் வடிவமும் வண்ணமும் இயக்கமும் பயனும் எடுத்துச் சொல்லப்பட்டன.

மற்றும் சைவ சமயத்தின் உட்சமயங்களாக விளங்கிய பாசுபதம், காபாலிகம் முதலிய வெவ்வேறு வகையான கோட் பாடுகளையும் வழிபாட்டு முறைகளையும் கைக்கொண்டு இருந்தன. கடுமையும் கொடுமையும் கொண்ட அத்தகைய கொள்கையினும் திருக்கோயில் வழிபாட்டு · முறைகளாகிய பூவும் நீரும் சுமந்து இறைவனைத் துதிக்கும் நன்னய செயலுக்கு இயறகை துணைபுரிவதை மூவரும் தத்தம் பாடலில் எடுத்துக் காட்டியுள்ளனர். அருளே வடிவான இறைவனைக் கலைகள் வாயிலாகப் போற்றுதல், உள்ளொளி பெறுதல், வழிபாடு இயற்றல், திருவடியைச் சரணடைதல், அருளில் ஒன்று கலத்தல் ஆகியவை தேவாரத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும். இவற்றை எடுத்தியம்ப இயற்கைப் பொருள்கள் பாடல்களில் இடம் பெற்றன.

தொடரும் மரபு

சங்க காலத்தில் மன்னர்களையும் வள்ளல்களையும் ஆடியும் பாடியும் சென்ற கலைப்புலமை வாழ்க்கை பின்னர் சிவபெரு மானை நாடித் திருக்கோயில்களுக்கு ஆடிப்பாடிச் சென்று வழி படும் சமய நெறியாக உருக்கொண்டது தலைவன் தலைவியின் அன்புக் காதல், ஆன்மா ஆண்டவன் அருட்காதலாக மாற்றம் பெற்றது. அவ்வாறே ஆற்றுப்படைப் பாடல்களில் கண்ட இட வருண்னை, திருத்தலக் காட்சித் தோற்றங்கள் ஆயின. இயற்கைப் பொருள்கள் திணையைக் குறித்தனபோலக் கொன் றையும், திங்களும் சிவனை நினைவூட்டின இவ்வாறு இறை நெறிப்பாடல்களில் இயற்கையின் ஆட்சி நிலைபெற்றது.

பல்லவர் காலத்துச் சைவ சமய மறுமலர்ச்சியில் வேத நெறியும் புராணக் கதைகளும் தமிழ் வழிபாட்டு முறையோடு ஒன்று கலந்து வளர்ச்சி பெற்றன. தமிழ் நாட்டுத் தெய்வங்

களுடன் வட நாட்டுத் தெய்வங்கள் இணைத்துரைக்கப்பட்டன. தோன்றுதொட்டு நிலவி வந்த தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ற வழிபாட்டு முறைகள் சைவ சமய மறுமலர்ச்சிக்கு அடிப்படை யாய் விளங்கின. வேதமும் புராணமும் தமிழ் இறை நெறியும் கலந்து எழுந்த இந்து மத எழுச்சிக்குப் பல தலைமுறைகளாகத் தொடர்ந்து வந்த தமிழ்க் கொள்கைகளும் கோட்பாடுகளும் அடித்தளமாக அமைந்தன. எல்லாம் வல்ல பரம்பொருளிடத்துச் செலுத்தும் எல்லையில்லா அன்பே பக்தியாகும். இப்பக்தி இயக்கம் தமிழ்நாட்டில் தோன்றிப் பின் இந்தியா முழுவதும் பரவியதாக அறிஞர்கள் சொல்கிறார்கள். எனவே இதய உணர் புடன் இயற்கையை இணைக்கும் தமிழ்நாட்டு இலக்கிய மரபு பக்திப் பாடல்களிலும் பின்பற்றப்பட்டது. அகமாயினும் புற மாயினும் இயற்கையின்றி இயங்காத தமிழ்ச் சிந்தனை, பக்தி இயக்க வளர்ச்சியிலும் இறைமையையும் இயற்கையையும் இயைபுபடுத்திக்கொண்டது

கடவுளுக்கும் உயிர்களுக்கும் உள்ள உறவை விளக்க இயற்கை இன்றியமையாததாக விளங்கியது. உணர முடியாத இடத்தில் இறைவன் இருக்கின்றான் என்பதைக் காட்டிலும், பொருள்களில் எல்லாம் அவன் உள்நின்று இயக்குகிறான் என்ற கொள்கையே மக்களின் நம்பிக்கையை விரைந்து பெற்றது. மனித வாழ்வுக்கு உதவும் இயற்கையைக் காட்டி இறைமையைச் சுட்டுவது நற்பயன் விளைத்தது. நுண்ணிய மெய்யுணர்வுக் கருத்துகள், எல்லாரும் எளிதில் அறிந்த இயற்கைப் பொருள் கள் வாயிலாகப் படைத்து மொழியப்பட்டன.

'பல்லவர் காலத்திற்கு முன்பு வைதிக நெறி தமிழ் நாட்டிற் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்ததெனக் கொள் வதற்கு வரலாற்றில் இடமில்லை. வைதிக சமயம் பழந்தமிழர் சமயத்தோடு சேர்ந்திருந்ததனால், வைதிக சமயமே மறுமலர்ச்சி பெறுவதாகக் கொள்ள முடிந்தது. எனவே, பல்லவர் காலச் சமய மறுமலர்ச்சியில் பழந்தமிழர் சமயம் வென்றது, வைதிக சமயம் வென்றது, பௌராணிக சமயம் வென்றது எனப் பலவாறு கூறலாம், என்பதிலிருந்து பழந்தமிழர் சமயக்

கொள்கையின் உயிரோட்டம் காலந்தோறும் தொடர்ந்து வருவதை அறியலாம். தெய்வத்தை இயற்கையோடு இயைந்த அனுபவப் பொருளாகக் கண்ட பழந்தமிழ்க் கொள்கையே பல்லவர் காலத்தில், இயற்கை வழி இறைமையை உணரும் இலக்கியப் பாங்காக உருப்பெற்று வளர்ந்தது.

மனிதர்களைப் புகழ்ந்து பாடுவதைப் போற்றாத அருளாளர்கள் இயற்கையின் அழகினையும் இயக்கத்தையும் பாடுவதன் வாயிலாக இறை அனுபவத்தைப் பாடினார்கள். இயற்கை வேறு, இறைமை வேறு என்ற மாறுபாட்டைத் தேவாரத்தில் காண இயலவில்லை. இறை உணர்வில் தோய்ந்து இயற்கையைப் பாடினாலும் அது இயற்கைப் பாடலாவதில்லை இறைப்பாடலே ஆகும்.

முழுதும் இயற்கை

சம்பந்தர் திருக்கண்ணார் கோயிலை அடைந்து அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானை, 'தண்ணார் திங்கள்' என்னும் திருப்பதிகம் பாடி வணங்கினார். அதில் இரண்டாவது பாடலில், மண்ணியாறு வளம் பெருக்குகின்ற வயல்கள் நிறைந்த சோலையிலே குயிலின் பாடலுக்கேற்ப வண்டு பாடும் கண்ணார் கோயில் இது என்று கூறுகின்றார்:

> சந்தமர் சந்துங் காரகி லுந்தண் கதிர்முத்தும்
> வந்தமர் தெண்ணீர் மண்ணி வளஞ்சேர் வயன்மண்டிக்
> கொந்தலர் சோலைக் கோகில மாடக் குளிர்வண்டு
> செந்திசை பாடுஞ் சீர்திகழ் கண்ணார் கோயிலே
> (1-101-2)

இதில் இறைவனைப் பற்றிய குறிப்பும் இல்லை; கோயிலைப் பற்றிய செய்தியும் இல்லை; இயற்கை வளம் நிறைந்துள்ளது. மண்ணியாறு சந்தனம், அகில், முத்து ஆகிய அரும்பொருள் களைக் கொண்டு வந்து வளம் சேர்க்கின்றது. நீர் வளத்தால் நிலவளம் பெருகும் வயல்வளம், பூங்கொத்துகளை உடைய சோலையில் கோகிலம் ஆடுகிறது. குளிர்ந்த வண்டு இசைபாடு கிறது. ஆறு, இறைவனின் தண்ணிய பேரருளுக்கும், அதில்

வரும் மணமும் ஒளியும் உள்ள பொருள்கள் அவன் வழங்கும் இனிய பண்புகளுக்கும், கோகிலமும் வண்டும் ஆடல் பாடலுக்குக் குறியீடுகளாகக் கொண்டால், திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள கடவுளின் காட்சியை இயற்கையில் காண லாம். இறைவனும் இயற்கையும் வேறுவேறு அல்ல என்பதை இப்பாடல் சுட்டுவதாகக் கருதலாம். நாவுக்கரசரின் பாடல் களுள்ளும் முழுவதும் இயற்கை இடம் பெற்றுள்ள பாடல்கள் காணப்படுகின்றன. பாடலின் இறுதியில் உள்ள 'அடிகளாரே' எனும் சொல் தவிர்த்துப்பிற எல்லாம் இயற்கைக் காட்சிகளாக உள்ளன குவளை, நெற்பயிர், ஆம்பல், நெய்தல், தென்னை, மாமரம், பழங்கள், பறவைகள் ஆகியன பாடலில் நிறைந்து விளங்குகின்றன.

அருதெலாங் குவளைசெந்நெ லகலிலை யாம்பனெய்தல்
தெருவெலாந் தெங்குமாவும் பழம்விழும் படப்பை யெல்லாம்
குருகினங் கூடயாங்கே கும்மலித் திறகுலர்த்தி
மருவலா மிங்கள் காட்டும் வலம்புரத் தடிகளாரே.
(4-55-8)

இவ்வாறே சுந்தரர், திருக்காளத்தி மலையைத் தொழுது, திருப் பருப்பதத்தை நினைந்து அங்குச் சென்று பணிந்தது போல மகிழ்ந்து பாடிய பதிகத்தில் முதல் பாடல்:

மானும்மரை இனமும்மயி லினமுங்கலந் தெங்கும்
தாமே மிக மேய்ந்துதடஞ் சுனைநீர்களைப் பருகிப்
பூமாமர முறிஞ்சிப்பொழி லூடே சென்று புக்குத்
தோமாம்பொழில் நீழற்றுயில் சீபர்ப்பத மலையே.
(7-79-1)

மான், மரை கூட்டங்கள் தமக்குரிய உணவுகளைத் தேடி உண்டு, சுனைகளில் தேனைப் பருகி, மரங்களில் உராய்ந்து மாமரப் பொழிலில் உறங்கும் திருப்பருப்பதமலை என்ற கருத்தே இப்பாடலில் காணக்கிடைக்கின்றது. இதிலும் இறை

பற்றிய குறிப்புக் காணப்படவில்லை. சொல்லெச்சமாக, 'திருப்பருப்பத மலையே எங்கள் சிவபிரானது மலை' என்று பொருள் முடிவு காட்டப்படுகிறது. மலையின் வளப்பத்தால் பல்லுயிரும் நிறைவுடன் வாழ்வது சுட்டி, இறைவன் திருக் கருணையை நினைந்து போற்றுமாறு இப்பதிகம் அமைந் துள்ளது. இதில் உள்ள ஒன்பது பாடல்களிலும் மலையின் இயற்கைக் காட்சியே இடம் பெற்றுள்ளது. திருக்கடைக்காப் பாக உள்ள பத்தாம் பாடலில், சிவன் இன்பமே வடிவானவன் என்ற பொருளில் 'செல்லலுற வரிய சிவன் சீபர்ப்பத மலையை' என்று சுந்தரர் பாடியுள்ளார்.

இயற்கைக் காட்சிகளை உணர்வாகவும் இறையருளை உயிராகவும் கொண்ட இப்பதிகப் பாடல்கள் வாயிலாக. இறை அனுபவத்தில் ஆழும்போதெல்லாம் அருளாளர்கள் கண்ட மனக்காட்சிகளை அறியலாம். இறை அனுபவத்தால் அவர்கள் பெறும் இன்ப உணர்வை இயற்கைக் காட்சிகளால் பிறர்க்கு உணர்த்த முயன்றுள்ளனர். மூவர் தேவாரத்தில் இயற்கையையும் இறைவனையும் இணைந்த நிலையில் கண்ட காட்சியும் உண்டு; இறைமையில் இயற்கையைக் கண்ட முறையும் உண்டு; இயற் கையில் இறைமையைக் கண்ட கோலமும் உண்டு.

மரபுப் பொறியியல் வழி நோய்த் தடுப்பு

கொ. ப செல்லப்பன்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் வல்லுநர்கள் பல்வகை மூலப்பொருட்களைக் கொண்டும், தொழில் நுட்பங்களைக் கையாண்டும் தொழிற்துறைகளுக்கு வேண்டிய எந்திரங்கள், கருவிகள் மற்றும் சாதனங்களை வடிவமைத்துத் தொழில் வளர்ச்சிக்கு உதவுவது போன்று, அண்மைக் காலத்தில் தோன்றிய உயிர் நுட்பவியல் (Bio technology) என்னும் புதிய அறிவியல் துறையின் ஆய்வுகளின் பயனாக, பெருமளவில் பயன்தரக் கூடிய உயிரின வகைகளும். அவைகளின் மேம்பாட்டிற்கான செயல் முறைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உயிர் நுட்பவியலின் ஒரு முக்கிய அங்கமான மரபுப் பொறியியலில் (Genetic Engineering) வியக்கத் தக்க கண்டுபிடிப்புகளை உண்டாக்கியதற்காக இதுவரை 35-க்கும் மேற்பட்ட அறிவியலாருக்கு உலகின் மிகச் சிறநத நோபல் பரிசு அளிக்கப்பட்டிருப்பதிலிருந்து இத்துறையின் சிறப்பை நன்கு உணரலாம்.

இன்று நாம் மூன்று பெரும் பிரச்சனைகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றோம். அவை, பசி, நோய் மற்றும் எரிபொருள் பற்றாக்குறையாகும். இவைகளுக்குத் தீர்வு காண்பதே உயிர் நுட்பவியலாரின் தலையாய பணி.

மரபுப் பொறியியல் ஆய்வுகளின் பயனாக 20-ஆம் நூற்றாண்டில் பசுமைப் புரட்சி தோன்றி பல கலப்புப் பயிரினங்களை செயற்கை முறையில் தோற்றுவித்து, அதிக விளைச்சல்களை குறுகிய காலத்தில் பெற்று நமது உணவு பற்றாக்குறை

ஓரளவு ஈடு செய்யப்பட்டுள்ளது. இதே போன்று, நமது எரி பொருள் பற்றாக் குறையைப்போக்க மரபுப் பொறியியல் பல நுட்பங்களைக் கொண்டு ஆய்வு நடத்தி வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில், நோய்த்தடுப்பில் மரபுப் பொறியியல் வல்லுநர் கள் பல சாதனைகளை உண்டாக்கியிருப்பது நம்மில் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

நம்மிடையே காணப்படும் நோய்கள் மூன்று வகைப்படும். அவை, 1. பாக்டீரியா, வைரஸ் போன்ற நச்சு உயிரிகளால் ஏற்படும் நோய்கள்; 2. ஊட்டச் சத்து மற்றும் உயிர்ச்சத்துப் பற்றாக்குறை நோய்கள்; 3. மரபு வழி நோய்கள் இன்று 30க்கும் மேற்பட்ட மரபு வழி நோய்களை, ஒரு குழந்தை தன் தாயின் கருப்பையில் வளரும் போதே, அறிந்துகொள்ள புதிய உத்திகள் கிடைத்துள்ளன. ஹீமோபிலியா **(Hemophilia)** என்ற இரத்தக் கசிவு நோய், பினைல் கீடோநூரியா **(Phenyl -ketonuria)** என்ற வளர்சிதைமாற்றக்குறை நோய், எரித்ரோபிளாஸ்டோசிஸ் ஃபீடாலிஸ் (Erythroblastosis foetalis) என்னும் சோகை நோய், மற்றும் பல்வேறு வகை மனவளர்ச்சி குன்றி நோய்கள் மர்பு வழி நோய்களில் சிலவாகும். மேலும் நம்மை அதிர்ச்சியுறச் செய்யும் நீரிழிவு மற்றும் பல்வகை புற்றுநோய்களின் தடுப்பில், மர்புப்பொறியல் கடந்த சில ஆண்டுகளில் மிகப்பெரிய சாதனைகளைச் செய்துள்ளது. இவ் வகை நோய்த்தடுப்பு முறையில் ஒரு முக்கியமான மரபுப் பொறி நுட்பம் கையாளப்படுகிறது. இதற்கு 'மாறி இணைவு டி.என்.ஏ' (Recombinant DNA) என்று பெயர். இந்த நுட்பத்தைப்பற்றித் தெரிந்து கொள்ளும் முன்பு, 'டி.என்.ஏ' வைப் பற்றித் தெரிந்து கொள்வது அவசியம்.

நமது பல்வேறு பாரம்பரியப் பண்புகளுக்கு மரபு மூலங்களே (Genes) காரணமாகும். மரபுமூலங்களின் கட்டளைப் படியே உடலின் பல வளர்சிதை மாற்றங்கள் இயங்குகின்றன. சந்ததிகளுக்கிடையே நிகழும் நெருங்கிய தொடர்புகளுக்கும் மரபு மூலங்கள் காரணமர்கின்றன. மரபு மூலங்கள் டிஆக்சி ரிபோஸ் நியூக்ளிக் அமிலம் **(Deoxy ribose nucleic acid -(DNA)]**

என்ற கூட்டு வேதிப்பொருளால் ஆனது. ஒவ்வொரு டி என்.ஏ, மூலக்கூறிலும் சர்க்கரை, பாஸ்பேட் மற்றும் அடினைன், தைமைன், குவனைன், சைடோசின் என்ற நான்கு வகை நைட்ரசன் உப்பு மூலங்களைக் கொண்ட 10,000 வரையிலான நீயூக்ளியோ-டைடுகள் (Nueleotides)சங்கலி போன்ற அமைவில் உள்ளன. ஒரு டி. என். ஏ. மூலக்கூறில் இத்தகைய இரண்டு நீண்ட சங்கலிகள் ஒன்றோடு ஒன்று கயிறு போன்று பிண்ணிய நிலையில் இருக்கும். இதில் ஒரு சங்கலியில் உள்ள ஒரு நைட்ரசன் உப்பு மூலம் மற்றொரு சங்கலியின் ஒரு குறிப் பிட்ட உப்பு மூலத்துடன் மட்டும் பொருந்தியிருக்கும் மேலும், உப்பு மூலங்கள் ஒரு குறிப்பிட்ட வரிசையில் அமையப் பெற்றிருக்கும் இந்த வரிசை அமைப்பே ஒரு மரபு மூலத்தின் மரபியல்புத் தன்மையையும், செயல்திறனையும் நிர்ணயிக்கிறது மேலே விவரிக்கப்பட்ட வேதி அமைப்பைக் கொண்ட நூற்றுக் கணக்கான மரபு மூலங்கள் நம் உடல் செல்களில் உள்ள உட்கரு (Nucleus) வில் இருக்கும் வண்ண உடலி (Chromosomes) களில் வரிசையாக ஒரு நீண்டகம்பியில் பாசிமணிகள் கோர்க்கப் பட்டது போன்று காட்சி தரும்.

மாறி இணைவு டி. என். ஏ. பொறியியல் நுட்பத்தில், பாக்டீரியம் போன்ற நுண்ணுயிரிகளில் ஒரு வகை பாக்டீரியத் தின் தேர்ந்தெடுத்த டி. என். ஏ மூலக்கூறின் ஒரு சிறு பகுதி யைத் துண்டாக்கி மற்றொரு வகை பாக்டீரியத்தின் செல்லுக் குள் வைரஸ் என்ற நுண் உயிரியின் துணை கொண்டு செலுத்தி அதன் டி. என். ஏ மூலக்கூறின் ஒரு குறிப்பிட்ட பகுதியுடன் பொருந்தச் செய்வதாகும். இந்த நிகழ்ச்சியின்போது, டி. என். ஏ மூலக்கூறு சங்கலிகளை வேண்டிய இடத்தில் துண்டு செய்ய ஒரு சிறப்பான நொதி (Restriction endonuclease) துணை புரிகிறது. இத்தகைய மூலக்கூறு மாற்றத்தின் விளைவாக, இரண்டாவது வகை பாக்டீரியத்தின் டி. என். ஏ-ன் ஒரு பகுதி முதல் வகை பாக்டீரியத்தின் டி. என்.ஏ-ன் ஒரு பகுதியைப் புதி தாகக் கொண்டிருக்கும். இத்தகைய மாற்றத்திற்குப் பிறகு திசு வளர்ப்பு முறையில் இரண்டாவது வகை பாக்டீரியம் இலட்சக் கணக்கில் பெருக்கம் அடையச் செய்யப்படுகிறது. இதற்கு மரபு

மூலப் பெருக்கம் (gene cloning) என்று பெயர். இதில், இரண்டாவது பாக்டீரியத்தில் செலுத்தப்பட்ட அந்நிய டி. என். ஏ-ன் ஒரு சிறு பகுதி பல மடங்காகப் பெருக்கமடைகிறது. இதை வேறு விதமாகப் பின் வருமாறு கூறலாம்.

ஏற்கனவே அச்சிடப்பட்ட செய்திகளைக் கொண்ட ஒரு தாளில் புதிதாக ஒரு செய்தியைச் சேர்க்க வேண்டியிருப்பின், அத்தாளை, வேண்டிய இடத்தில் இரண்டாக வெட்டிய பின்பு, சேர்க்கப்படவேண்டிய செய்தியை இடையில் சேர்த்து வெட்டப் பட்ட துண்டுகளை மீண்டும் இணைத்து புகைப்பட நகல் முறையில் வேண்டிய பிரதிகளை எடுத்துக் கொள்வது போன்றது.

இம்முறையில், 1982-ல் முதன் முதலில் நீரிழிவைக் கட்டுப் படுத்தும் மனித இன்சுலின் மருந்து கண்டு பிடிக்கப்பட்டது.

மேலும், குட்டையான உருவத்தன்மையை போக்கவல்ல மனித வளர்ச்சி ஊக்கிகள், ஈரல் புற்று நோய், சுரப்பி நாளங் களின் வீக்கம், ஆகியவற்றைத் தடுக்கப் பயன்படும் மருந்துகள் பொறியியல் நுட்பத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டவைகளே.

அண்மைக் காலத்தில் புற்றுநோய்த் தடுப்பு ஆய்வில் மரபுப் பொறியியல் பெரும் பங்கு வகிக்கிறது. பெரும்பாலான வகைப் புற்று நோய்கள் 'ஆன்கோ ஜீன்ஸ்' (Oncogenes) என்ற புற்று நோய் மரபு மூலங்களினால் தோன்றுகின்றன. இதுவரை இத் தகைய 19 மரபு மூலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இம் மரபு மூலங்கள் உடலின் எல்லா செல்களிலும் இருந்தாலும், சில செல்கள்தான் இவைகளின் தூண்டுதலினால், புற்றுநோயை உண்டாக்க வல்ல தாய்ச் செல்களாக மாற்றமடைந்து, கட்டுப் பாடற்ற முறையில் பெருக்கம் அடைந்து, கட்டிகளாக வளர்ச்சி யடைகின்றன. சிலவகைப் புற்று நோய்களுக்கு அண்மையில் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒருவகை வைரஸ் கிருமி (Epstein-Bars virus) யினால் கண்ணம், ஈரல், சிறுநீரகம். கருப்பை, குடல்பகுதி ஆகியவற்றில் தூண்டப்படும் கட்டிகளுக்கு ஆற்றல் வாய்ந்த தடுப்பு மருந்துகள் பயன்

பாட்டிற்கு வரத் துவங்கியிருக்கின்றன. மேலும் உலகின் பல் வேறு நாடுகளில் 150க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மரபுப் பொறியியல் ஆய்வின் விளைவாகத் தோன்றிய தடுப்பு மருந்து களை வியாபார ரீதியில் உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளன.

நம்மிடையே காணப்படும் பெரும்பாலான நோய்களுக்கு மரபு மூலங்களில் உண்டாகும் குறைபாடுகளே காரணமாகும். மரபு மூலங்கள் பல காரணங்களினால் திடீர் வேதி மாற்றங்கள் அடைந்து மாறுபட்ட செயல்திறன் கொண்டவைகளாக மாறி நோய்களை உண்டாக்குகின்றன. இன்னும் சில ஆண்டுகளில்' மாறுபட்ட செயல்திறன் கொண்ட அல்லது பழுதடைந்த மரபு மூலங்களுக்குப் பதிலாக இயல்பான செயல்திறன் கொண்ட சோதனைக் கூடத்தில் தயாரிக்கப்பட்ட மரபு மூலங்களை நமது உடலில் செலுத்தி நோய்களைக் குணப்படுத்தும் 'ஜீன் சிகிச்சை' **(Gene Therapy)** முறை நடைமுறைக்கு வருவதற்கான வாய்ப்பு கள் உள்ளன.

எடுத்துக்காட்டாக, இன்று நீரிழிவால் துன்புறும் ஒருவர், நாள்தோறும் இன்சுலின் ஊசி போட்டு நோயின் கொடுமையி லிருந்து அவ்வப்போது நிவாரணம் பெறமுடிகிறது. எதிர் காலத்தில், இந்நோய் கண்டுள்ள ஒருவருக்கு பழுதடைந்த மரபு மூலத்திற்குப் பதிலாக, புதிய செயல்திறன் கொண்ட மரபு மூலங்களை உட்செலுத்தி நீரிழிவு நோயை நிரந்தரமாகப்போக்க வழிவகைகள் கிடைக்க வாய்ப்புள்ளது. இருபத்தொன்றாம் நூற்றாண்டின் மத்தியில் இத்தகைய சிகிச்சைமுறை நடை முறையில் கொண்டுவருவதற்கான வாய்ப்புகள் தோன்றும் என்று உறுதியாக நம்பலாம்.

பகல்வேடக் கலைஞர்களின் சமூக நிலை

சோ. சேகர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,

நாட்டுப்புற அறிஞர்களின் கூற்றுப்படி, இன்று நாட்டுப் புறக் கலைகள் தத்தம் உண்மையான இயல்பினின்று காலத்தால் பல மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கின்றன. தமிழ்நாட்டில் நாட்டுப்புறக்கலைகள், தமிழகத்திலேயே தோன்றிய கலைகளென்றும் பிற நாட்டிலிருந்து தமிழகத்திற்கு கொண்டு வரப்பட்ட கலைகளென்றும், இருவேறுபட்ட கலைகளும் கலந்த நிலையென்றும் பலவாறு தோற்றத்தாலும், வடிவத்தாலும் மாறுபாடு கொண்டிருக்கின்றன. இந்நாட்டுப் புறக் கலைகள் பெரும்பாலும் சமூக, கலாச்சார, பண்பாட்டு அடிப்படையிலும் கலைஞர்களால் வழிவழியாய் நிகழ்த்தப்பட்டு வருவதாலும், மற்றும் சிலரின் ஆர்வத்தினடிப்படையிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன எனலாம்.

'பகல்வேடம்' என்கிற கலை தமிழகத்தில் வழக்கில் இருந்து கொண்டிருக்கிற நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றாகும். இது பகலில் புராணக் கதாபாத்திரங்கள் போல வேடமணிந்து தெருத்தெருவாக மக்கள் முன் சென்று கதை சொல்லிப் பாடி ஆடுகிற கலையாக இருக்கிறது. தெலுங்கு மொழியினைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களிடமே இக்கலைவடிவம் இருந்து வருகிறது. 'பகல்வேடம்' என்கிற இக்கலை பலவேடங்களைப் புனைந்து செல்லுவதால் 'பலவேடம்' என்றும், பகலில் நிகழ்த்தப்பெறுவதால் 'பகல் வேடம்' என்றும் அழைக்கப்படுகிறது. ஆந்திராவில் இதே கலை 'பகடிவேஷலு' எனும் பெயரில் நிகழ்த்தப்பெறுவது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் குடி

யேறியுள்ள தெலுங்கு பேசுகிற பகல்வேடக் கலைஞர்கள் தமிழ் மொழியில் இக்கலையைத் தமிழ்நாட்டிற்குள்ளேயே நிகழ்த்துவ தென்பதும், ஆந்திராவிலுள்ள பகடிவேஷலுக் கலைஞர்கள் அண்டை மாநிலங்களான கேரளா, கன்னடா, தமிழ்நாடு முதலிய நாடுகளுக்குச் சென்று இக்கலையைத் தங்கள் தாய் மொழியான தெலுங்கிலேயே நிகழ்த்துவதென்பதும் இருந்து வருகிறது. ஆந்திரக் கலைஞர்களுக்கு இது மட்டுமே தொழிலாக இருக்கிறது ஆனால் தமிழகப் பகல் வேடக்கலைஞர்களுக்கு இது பகுதிநேரத் தொழிலாக இருப்பதைக் காணமுடிகிறது. இக்கலைவடிவம் தமிழகத்தில் இருந்ததற்கான சான்றுகளே இல்லை. ஆனால் தெலுங்கு இலக்கியத்தில் இக்கலைவடிவம் ஆந்திராவில் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன. நாயக்கர்களின் ஆட்சிக் காலத்திற்குப் பிறகே இப்பகல் வேடக் கலைஞர்கள் தமிழ் நாட்டிற்கு வந்து குடியேறியிருக்க வேண்டும். அவ்வாறு குடிவந்தவர்கள் நிலையாக இங்கேயே தங்கி இக்கலையை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றனர் எனக் கூற வாய்ப்பிருக்கிறது. தமிழகத்திலேயே தங்கிவிட்ட இப்பகல் வேடக் கலைஞர்களின் சமூக, பொருளாதார வாழ்க்கை நிலை பற்றிக் கூற இக்கட்டுரை முயல்கிறது

பகல்வேடக் கலைஞர்களின் பூர்வீகம்

நாட்டுப்புற இசைக்கலை மிகப் பழமையானது. பெரும் பாலும் இசைக் கலையைக் குறிப்பிட்ட ஒரு சமூகத்தினரே மேற்கொண்டிருந்தனர் "ருஷ்யா முதலிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் இவ்வாறான இசைக்கலை பாடும் பரம்பரை இருந்ததனை பௌரா (Bowra) சேட்விக் (Chadwick) முதலி யோர் ஆராய்ந்து விளக்கியுள்ளார்கள்" என்பார் தை. பொ மீ. அவர்கள்.

சிவபுராணம், இதிகாசம் போன்றவற்றில் வரும் பாத்திரங் களைப் போலவும், தெய்வங்களைப் போலவும் வேடமிட்டுக் கொண்டும் தெருத் தெருவாகவும் வீடு வீடாகவும் பாடிக்

கொண்டும், உரையாடிக்கொண்டும் சென்றிருக்க வேண்டும். நாயக்கர் காலத்தில் இதுவே முழுமையடைந்து தனியொரு கலையாக வளர்ச்சியுற்றிருக்கிறது. பகல்வேடக் கலையில் ஈடு படும் கலைஞர்களின் தாய்மொழி, சாதி, சமயம் சடங்காச் சாரங்கள் ஆகியவற்றைப் பார்க்கும்போது. இவர்கள் நாயக்கர் களின் ஆட்சிக்காலத்தில் ஆந்திராவிலிருந்து தமிழகத்திற்கு வந்திருப்பதற்குப் பெரும் வாய்ப்புண்டு. இக்கலை பல நூற் றாண்டுகளுக்கு முன்பிருந்தே இங்கு வழங்கி வரும் ஒரு கலை யாக அமைந்துள்ளது. மன்னர்கள் உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் இவர்களைப் பயன்படுத்தினர் என்ற கருத்தும் நிலவுகிறது. ''இக்கலை தஞ்சையில் உள்ள வல்லம் பகுதியில் தான் முதலில் தோன்றியதாகவும், பின்னர் திண்டிவனம் பகுதி யில் பரவியதாகவும் இக்கலையில் ஈடுபட்டுள்ள பாலவடிவு எனும் கலைஞர் தம் மூதாதையர்கள் கூறியதாகக் குறிப்பிடு கிறார்' என முருகேசன் கூறுவதும் நினைவு கூறத்தக்கது. கள ஆய்வின் போதும் இக்கலைஞர்கள் கூறிய செய்தியாலும் இக் கருத்து மேலும் உறுதி பெறுகிறது.

சமயம்

இன்று பகல் வேடமிட்டு ஆடும் எல்லாக் கலைஞர்களும் சைவ சமயத்தின் ஒரு பிரிவான வீரசைவத்தைச் சார்ந்தவர் களாக இருக்கின்றனர் திண்டிவனத்தை அடுத்துள்ள பகல். வேடக் கலைஞர்களும் வீரசைவத்தைச் சேர்ந்தவர்களே. ஆந்திரப் பகல்வேடக் கலைஞர்களும் தங்களை வீரசைவர்கள் என்றே கூறிக் கொள்கின்றனர்.

வீரசைவர்களில் 'ஜங்கமர்' என்ற ஒரு பிரிவும் உண்டு. 'சரணர்' என்ற ஒரு பிரிவும் உண்டு. ஜங்கமர்கள் எப்பொழுதும் கூட்டத்தவர்களாகவே இருப்பர். சரணர்கள் தனித்தவர் களாகவே இருப்பர். ''ஜங்கமர்கள் அவதார புருஷர்களைப் போன்றவர் அல்லமாப் பிரபுத்தேவர், பசவேசர் போன்றவர் கள் ஜங்கமர்கள் கடவுளால் அமைக்கப்பெற்ற சில குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்றவதற்காக வந்தவர்கள்'' பகல் வேடக் கலைஞர்கள் இக்கலையைக் கடவுளின் அவதாரக்கலை என்றே கூறுகின்றனர்.

சாதிப் பிரிவுகள்

"இந்திய சமூகத்தில் அடிமை உடைமை அமைப்பில் தோன்றி இன்றும் கூட நீடித்து வருகின்ற ஒரு அம்சம் சாதிப் பிரிவினை ஆகும். இந்த சாதிகள் என்பவை ஆரம்பத்தில் வேலைப் பிரிவினையின் ஒரு சமூக வடிவமாகத் தோன்றி மக்களை அவர்களின் பிறப்பு, தொழில் ஆகிய இரண்டின் அடிப்படையில் ஒன்றுபடுத்தின". தொழில் அடிப்படையில் பகுக்கப்பட்ட சாதிப்பிரிவில் கூத்துக்கலைஞர்கள் பெரும்பாலும் தாழ்நிலையில் உள்ளவர்களாகவே இருக்கின்றனர். பகல் வேடமிடும் கலைஞர்களின் சாதி சட்டப்பூர்வமாக (அதாவது வேலை, படிப்பு முதலியவற்றில்) 'ஜங்கம பண்டாடம்' எனப் பதிவு செய்யப்படுகிறது. ஆனால் சமுதாய மதிப்பிற்காகவும், தாங்கள் வாழ்கின்ற இடங்களுக்கேற்பத் தங்களது சாதியினை குல்லுக் கவர நாயுடு, பலிங்க நாயுடு, லிங்காயத்து நாயுடு எனக் கூறிக் கொள்கின்றனர்.

பகல் வேடமிடும் கலைஞர்களுடைய பெரியவர்கள் 'லிங் காயத்து, அணிந்த ஆசாரவாதிகளாக உள்ளனர். இதனால் அவர்கள் தங்களை லிங்காயத்து நாயுடு. பலிங்க நாயுடு என அழைத்துக் கொள்வதாக இருக்கலாம் எவ்வாறிருப்பினும் இவர்களின் தாய்மொழி தெலுங்காக உள்ளதால் நாயுடு சாதி யின் உட்பிரிவுகளில் ஏதாவது ஒன்றாக இருக்கலாம்.

வழிபாடு

தமிழகத்திலுள்ள பெரும்பான்மையான நாட்டுப்புறக் கலைகள் தெய்வத்தோடு தொடர்புடையனவாக வளர்ந்து வந்துள்ளன. "கண்ணுக்கும் செவிக்கும் ஒரு சேர விருந்தளிக் கும் பாங்குடையது கூத்துக்கலை ஒன்றே. நாடகம், நடனம், இசை போன்ற பற்பல கலைகள் ஆலயங்களின் மடியிலேயே தவழ்ந்தன என்பதைத் தமிழக வரலாறு தெளிவாகக் கூறும். தமிழகத்தில் மட்டுமின்றி உலகெங்கும் கலைகள் தெய்வத்துடன் இணைத்துச் சொல்லப்படுவது பொதுவான ஒன்றாகும்". பகல் வேடம் எனும் நாட்டுப்புறக் கலையும் சிவனுடைய அவதாரத்

ைதக் கூறும் கலையாகவே தோன்றி வளர்ச்சி பெற்றதாகக் கூறுகின்றனர்.

வீரசைவ மரபில் வந்தவர்களான பல்வேடக் கலைஞர்கள் சிவபெருமானையே தங்கள் முழுமுதற் கடவுளாகக் கொண்டு உள்ளனர். இவர்களின் குலதெய்வம் வீரபத்திர சுவாமியாகும். இதுவும சிவனின் பல உருவங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. வீரபத்திரரை வழிபட்ட பின்பே எந்த ஒரு காரியத்தையும் தொடங்குகின்றனர் திருமணம், பூப்பெய்தல், குழந்தைப்பிறப்பு, பெயரிடல் முதலிய அனைத்துச் சடங்கு முறைகளிலும் வீர பத்திரரை வணங்கிய பிறகே நிகழ்ச்சி தொடங்கப் பெறுகிறது என்பது கள ஆய்வின்மூலம் அறியப்பெற்றது. மேலும் மாரியம்மன், காட்டேரி, முனீஸ்வரன், கங்கை அம்மன் போன்ற சிறு தெய்வங்களையும் இவர்கள் வழிபடுகின்றனர்.

பொருளாதார நிலை

பகல் வேடமிடுதல் பரம்பரைத் தொழிலாய் இருந்த போதிலும் பொருளாதாரச் சூழல் காரணமாக இக்கலைஞர்கள் இன்று விவசாயத்திலும் ஈடுபடுகின்றனர். பகல் வேடமிடும காலங்களில் ஒரு முகாமிற்குச் செல்லும் போது தங்களுடைய சொந்தச் செலவிலேயே செல்கின்றனர். ஒரு வேடத்தை இரண்டு நாள் போடுவர். அவ்வாறு இரண்டு அல்லது மூன்று வேடங்களை இரண்டு இரண்டு நாட்கள் என்ற முறையில் ஒரு வாரத்திற்குக் குறையாமல். நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். நிகழ்ச்சி முடிந்த பின்பு ஒருவர் அனுமார் வேடம் பூண்டு கொண்டுவர மற்றவர்களும் வசூலுக்கு உடன் செல்வர். செல்லும் போது இடையிடையே சில பாட்டுக்கள் பாடி, பணம் வசூலிப்பர். இதற்கெனத் தனி நோட்டுப்புத்தகம் வைத்திருக் கின்றனர். பணம் கொடுப்பவர்கள் தங்கள் பெயரையோ, கடையின் முத்திரையையோ பதிப்பர். ஒரு முகாமில் குறைந்தது ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். இரண்டாயிரம் ரூபாய் வருமானம் வரும். சில சமயம் அதைவிட குறைவாகவும் கிடைக்கும். மொத்தத்தில் இவ்வளவு தான் கிடைக்கும் என்று உறுதியாகக் கூறமுடியாது என்று கலைஞர் ஒருவர் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் கிடைக்கும் வருமானத்தைக் கலைஞர்கள் சமமாகப்பங்கிட்டுக் கொள்கின்றனர். மொத்தத்தில் பகல்வேடக் கலைஞர்கள் பொருளாதார நிலையில் பின்தங்கியே உள்ளனர். இவர்களின் வீடுகள் 'நாணல் புல்லால்' மேய்ந்த நிலையிலேயே உள்ளன. பொருளாதாரச் சிக்கலினால் இவர்களின் கல்வியும் பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் ஐந்தாம் வகுப்புக்கு மேல் படித்தவர்களை இக்கலைஞர்கள் மத்தியில் காணமுடியவில்லை. ஒரு சில வசதியுள்ள குடும்பங்களில் சிலர் மட்டும் படித்து அரசாங்க வேலையில் உள்ளனர்.

பெண்கள் நிலை

'பகல் வேடக் கலைஞர்கள் தொழிலுக்கு வெளியூர் சென்று விடும்போதெல்லாம் பெண்களே குடும்பப் பொறுப்பைக் கவனித்துக் கொள்கின்றனர், பெரும்பாலும் நல்ல உழைப்பாளி களாகவே விளங்குகின்றனர். கல்வியறிவு பெற்றவர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். பெண்களைப் பகல்வேடக் கலையில் எந்த விதத்திலும் பயன்படுத்துவதில்லை. வெளியூர் செல்லும் போது கூட ஆண்கள் பெண்களை அழைத்துச்செல்லும் வழக்க மில்லை. ஆனால் ஆந்திரப் பகல்வேடக் கலைஞர்கள் பெண் களை உடன் அழைத்து வருகின்றனர். இதன் காரணம் ஆந்திரக் கலைஞர்களுக்குப் பகல் வேடம் ஒன்றே தொழில். மேலும் நீண்ட தூரங்கள் பயணம் செய்ய வேண்டியுள்ளது. இதனால் பெண்களை உடன் கூட்டிவருகின்றனர். ஆனால் தமிழகக் கலைஞர்கள் விவசாயத்தையும் கவனிக்க வேண்டி யுள்ளது. அப்பொறுப்புகளில் சிலவற்றைப் பெண்களிடம் ஒப் படைக்கின்றனர். அதனால் பெண்களைத் தங்களோடு அழைத்து வருவதில்லை.

முடிவுகள்

பகல் வேடக் கலைஞர்கள் ஆந்திராவிலிருந்து தமிழகத் திற்கு வந்தவர்கள். தொடக்கத்தில் தஞ்சைப்பகுதியில் இக் கலை வளர்ந்திருக்க வேண்டும். இப்போது திண்டிவனம் பகுதி யில் இவர்கள் பரவியுள்ளனர்.

சுஜாதாவின் மொழி நடை

தூ. சேதுபாண்டியன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

இன்றைய தமிழ் எழுத்தாளர்களிடையே சுஜாதா தமக்கென ஓர் இடத்தை நிலை நிறுத்திக்கொண்டிருக்கிறார். அவர் படைப்புகளின் உள்ளடக்கத்தைவிட அவர் கதை கூறும் முறையே இத்தகைய சிறப்பிடத்தை அவருக்குக் கொடுத்துள்ளது என்றால் அது மிகையாகாது. எழுத்தாளர் சுஜாதாவின் படைப்புக்களில் காணப்படும் நடையியற் கூறுகளை விளக்க முயல்கிறது இக்கட்டுரை. இந்த ஆய்வுக்குச் சுஜாதாவின் படைப்பிலக்கிய நூல்கள் முதன்மைச் சான்றுகளாகின்றன. நடையியல் பற்றிய நூல்களும், சுஜாதாவைப் பற்றிய விமரிசனங்களும் துணைமைச் சான்றுகளாகின்றன.

படைப்பிலக்கிய மொழியினை ஆராயும் போது, படைப்பாளியின் மொழி நடை என்றும்; இலக்கியப்பாத்திரத்தின் மொழி நடை என்றும் இரண்டாகப் பகுத்துக்கொண்டு ஆய்தல் வேண்டும் என்பர் இதனடிப்படையில் சுஜாதாவின் மொழி நடையையும், சுஜாதாவின் பாத்திரங்களையும் பகுத்துக் கொண்டு பார்த்தால் மிக மிக்ச் சில பகுதிகளில் மட்டுமே சுஜாதாவின் மொழிவேறு, அவர் பாத்திரங்களின் மொழி வேறு என்று வேறுபடுத்தமுடிகிறது. ஏனெனில் சுஜாதா கதை கூறும் பகுதிகளிலும், வருணனைப் பகுதிகளிலும் எவ்விதமான மொழி நடையைப் பயன்படுத்தியிருக்கிறாரோ அதையேதான் பாத்திரங்களின் வாயிலாக அமையும் உரையாடல்களிலும் பயன்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது.

புனைகதை ஆசிரியர் விளக்கப் பகுதிகளிலும், வருணனைப் பகுதிகளிலும் பயன்படுத்தும் தம் சொந்த நடையிலிருந்து பாத்

திரங்களின் கூற்றாக அமையும் நடை வேறுபட்டதாய்க் கதை மாந்தர் தம் மனப்போக்கை ஒட்டியதாய் விளங்குவதே சிறப்பாகும். ஆனால் சுஜாதாவின் படைப்பில் இச்சிறப்பு குறைந்தே காணப்படுகிறது. இக்கட்டுரையில் குறிக்கப்பட்டுள்ள நடையியல் கூறுகள்யாவும் சுஜாதாவின் கதை கூறும் பகுதிகள், வருணனைப் பகுதிகள் ஆகியவற்றிற்கும், சுஜாதாவின் பாத்திரங்களின் உரையாடல் போன்றவற்றிற்கும் பொதுவானவையே.

நடையியல் கூறுகளை ஒலி நிலையிலமைந்தவை, சொல் நிலையிலமைந்தவை, தொடர் நிலையிலமைந்தவை என மூன்று பெரும் பிரிவுகளில் விளக்கலாம்.

ஒலி நிலையிலமைந்த நடையியல் கூறுகள்

ஒலிகளுக்கும் பொருளுக்கும் தொடர்பேதுமில்லை என்று இன்றைய நடையியல் பற்றி ஆய்ந்த அறிஞர்கள் கருதினாலும் சில ஒலிகளைத் திரும்பத் திரும்பப் பெய்து எழுதுவதன் மூலம் கூற வந்த கருத்தைத் தெளிவாக உணர்த்த முடிகிறது, அல்லது கூறும் கருத்துக்கு அதிக அழுத்தம் தர முடிகிறது என்பதைச் சுஜாதாவின் படைப்புக்களில் உணர முடிகிறது. தமிழிலக்கிய உலகத்தைப் பொறுத்த வரையில் இது மிகப்பழைய உத்தியேயாகும் ஒரு மெய்யெழுத்தை நான்கைந்து முறை நீட்டி எழுதுவது — ஒற்றளபெடை என்ற — பழைய உத்தியேயாகும். ஆனால் பண்டைத் தமிழில் ஒற்றளபெடையில் இரண்டுமெய்களே இடம்பெறும் ஆனால் சுஜாதாவின் மொழியில் குறைந்தது நான்கு மெய்களாவது திரும்பத் திரும்ப இடம் பெறுவதைக் காணலாம். சுஜாதாவின் முதல் நாவல் ‘நைலான் கயிறு’. அந்த நாவலிலேயே இந்த உத்தி முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. கொலை செய்யும் ஒருவர், கழுத்தை நைலான் கயிற்றினால் இறுக்குவதைக் கூறும்போது, ‘இறுக்க்க்க்கினான்’ என்று எழுதியுள்ளார். இதன் மூலம் அந்த இறுக்கத்தின் வலிமையை வாசகருக்கு உணர்த்த முயல்கிறார் சுஜாதா. இது இவருடைய நிலையான நடையியல் கூறுகளில் ஒன்றாகவே இடம் பெறுகிறது.

'வானமென்னும் வீதியிலே' என்னும் நாவலில் ஒரு பாத்திரம் தன் விரல்கள் எரிவதைப் பற்றிக் கூறும்போது இதே முறை அப்பாத்திரத்தின் கூற்றில் 'விரல்கள் எர்ர்ர்ர்ரிந்தன' என்று அமைந்திருப்பதைக் காணலாம்.

'பிரிவோம் சந்திப்போம்' என்ற நாவலில் 'ரொம்ப' என்ற அடைச்சொல், 'ரொம்ம்ம்மப லக்கி' என்று எழுதப்பட்டுள்ளது. இவையாவும் ஒலிகளுக்கு என்று தனியாகப் பொருளேதும் இல்லை என்றாலும் ஒலிகளைப் பயன்படுத்தும் முறையினால் பொருளின் சிறப்பை அழுத்தமாக விளக்க முடிகிறது என்ற கருத்துக்கு இடமளிக்கின்றன.

ஒலிக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்தும் முறை

ஒலிநிலையில் காணப்படும் மற்றொரு கூறு ஒலிக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்தலாகும். இவ்வொலிக்குறிப்புச்சொற்கள் வினையடையாகப் பயன்படுத்தப்படுதல் தமிழ்மொழியின் பழைய இலக்கியங்களில் காணப்படும் ஒரு கூறாகும். ஆனால் சுஜாதாவோ இவ் ஒலிக்குறிப்புச் சொற்களை வேறு எவ்விதத் தொடர் அமைப்பும் இன்றியே பயன்படுத்திப் பொருள் விளங்கச் செய்வதனைக் காணமுடிகிறது.

'அனிதா இளம் மனைவி' என்ற நாவலில் 'கிர்ர்ர்ரக்... கிர்ர்ர்ரக்' என்று எழுதித் தொலைபேசியின் டயலைச் சுற்றுவதை உணர்த்துகிறார்.

இதுபோலவே ஒலிக்குறிப்புச் சொல்லை வினையாகவே பயன்படுத்தும் உத்தியைச் சுஜாதாவின் மொழிநடையில் காணமுடிகிறது. 'சிவந்த கைகள்' என்ற நாவலில் 'எதிர்முனைகிர்ரிங்கியது' என்ற தொடரின் மூலம் தொலைபேசி மணியடித்ததை வருணிக்கிறார்.

ஒலியக்கட்டமைப்புச்சிதைவு

சுஜாதாவின் மொழிநடையில் காணப்படும் மற்றொரு கூறு, தமிழ் ஒலியக்கட்டமைப்புப் பற்றிய சிந்தனையே இல்லாத வகையில் பிறமொழிச் சொற்களை இயற்கைப்படுத்தாமலே

பயன்படுத்துவதாகும். இதுகுறித்துச் சுஜாதாவே ஓரிடத்தில், 'இந்தப்புத்தகத்தை எழுதும்போது நான் அமைத்துக்கொண்ட முதல்விதி பிறநாட்டு நல்லறிஞர்கள் வார்த்தைகளும் தமிழில் வேண்டும்... என்பதே. என்னைப் பொறுத்தவரையில் ஸிபியூ, ரிஜிஸ்டர், டெர்மினல், விடியூ என்பதெல்லாம் தமிழ்வார்த்தைகளே. ஒட்டு மொத்தமாக உள்ளே ஓட்டிக்கொண்டு வந்து ஞானஸ்னானம் செய்து சேர்த்துக்கொண்டு விட்டேன். தொல்காப்பியனாரே வடசொற்கிளவியை எப்படிவரவேற்கலாம் என்று சூத்திரம் சொல்லியிருக்கிறார்'' என்று நியாயப்படுத்த முயல்கிறார். (சுஜாதா, 19 : 4-5).

சொல் நிலையில் அமையும் கூறுகள்

சொல் நிலையில் அமையும் நடையியல் கூறுகளில் சொல்லாக்கம் என்பதே குறிப்பிடத் தகுந்த கூறாம். சுஜாதா தன்' ப்டைப்பில் பல சொற்களை ஒப்புமையாக்க முறையில் ஆக்கிக் கொண்டுள்ளார்.

'பிரிவோம் சந்திப்போம்' என்ற நாவலில் 'நடனமாடும் பெண்' என்ற பொருளில் **நடனி** என்ற சொல்லை உருவாக்கிக் கொள்கிறார். இதே நாவலில் காரின் சொந்தக்காரர் என்ற பொருளில் **காரர்கள்** என்ற சொல்லை உருவாக்கிப் பயன்படுத்தியுள்ளார். **6961** என்ற சிறுகதைத் தொகுப்பின்கண் 'அன்னியன் என்ற ஆண்பால் சொல்லுக்கு இணையான பெண்பால் சொல்லாக **'அன்னியள்'** என்ற சொல்லைக் கையாள்கிறார்.

இதே போன்ற **'திடகாத்திரள்', 'வாட்டசாட்டள்'** என்று அடைச்சொற்களுடன் பால் விகுதி இணைத்து பெயராக்கும் முயற்சியை இவருடைய படைப்பில் காணமுடிகிறது.

இச்சொல்லாக்கங்களுக்கு என எந்த ஒரு நோக்கமும் இருப்பதாய்க் கூறமுடியவில்லை. இது சுஜாதாவின் மொழிப் பயன்பாட்டில் காணப்படும் ஒரு குறிப்பிடத்தகுந்த கூறு ஆகும்.

பெயர்ச் சொற்களை வினைச் சொல்லாகப் பயன்படுத்தல்

பெயர்ச் சொற்களை வினையாக்கிக் கொள்வது என்பது ஆங்கில மொழியில் மிகவும் பெருகிக் காணப்படும் வழக்க

மாகும். இவ்வழக்கத்தைத் தமிழில் புகுத்துவதைச் சுஜாதா தனது நடையியற் கூறுகளில் ஒன்றாகக் கையாள்கிறார்.

'நகரம்' சிறுகதைத் தொகுப்பில் பிடிவாதம் என்ற பெயர்ச் சொல் வினையாக்கப் பெற்று 'பிடிவாதித்தாள்' என்று கையாளப் பட்டுள்ளது. தமிழில் 'பிடிவாதம் செய்தாள்', 'பிடிவாதம் பிடித்தாள்' என்று பயன்படுத்துவதே மரபாகும்.

'அனிதா இளம் மனைவி' என்ற நாவலில் தொலைபேசி என்ற பெயர்ச்சொல் வினையாக மாற்றம் பெற்று 'தொலை பேசினான்' என்று பயன்படுத்தப்பட்டுள்ளது. இவற்றிற்கெல் லாம் ஆங்கில மொழியமைப்பின் தாக்கமே காரணம் என்று கருத இடமுள்ளது.

பதிலாக்க உத்தி

ஒரு சொல் அல்லது தொடருக்குப் பதிலாக அதனைக் குறிக்கும் வேறு சொல் அல்லது தொடரைப்பயன்படுத்தி அதன் மூலம் தான் கூறவந்த கருத்தை உணரச்செய்தல் என்னும் உத்தியைப் பல இடங்களில் சுஜாதா கையாள்கிறார்.

'நெற்றியில் காலை பூஜை தெரிந்தது' என்று வரும் தொடர் சிவந்தகைகள் நாவலில் இடம்பெறுகிறது. இங்கு நெற்றியில் திருநீறு பூசப்பட்டிருந்தது என்பதை இப்படிக் கூறுகிறார். இது போலவே மற்றோர் இடத்தில் 'என்னை யாராவது ப்ருதிவிராஜ செய்யப்போகிறார்கள் என்றா?' என்று ஒரு பெண் கேட்பது போல் அமையும் தொடரில் ப்ருதிவிராஜ் என்பது கடத்தப் போகிறார்கள் என்ற பொருளில் அல்லது சிறையெடுத்துச் செல்லுதல் என்ற பொருளில் பயன் படுத்தப்பட்டிருக்கிறது இதுபோன்ற சொற்பிரயோகங்கள் சுஜாதாவின் தனித்தன்மை களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்

நுண்பொருளை விளக்கப் பருப்பொருளைப் பயன்படுத்தல்

நுண்பொருட் பொருண்மையைச் சரியாக உணர்த்துதல் வேண்டும் என்ற நிலையில் பருப்பொருட்களைப் பயன்படுத்தி அவற்றை வருணிக்கும் முறையைக் கையாள்கிறாள் சுஜாதா.

"ராஜேன்" — குரலில் சாக்லேட் வழிந்தது. "இன்று நாம் சந்திக்கப் போகிறோம், தனியாக, மிகத்தனியாக — 'சாக்லெட்டை இன்னும் குழைத்தாள்—' (வானமென்னும் வீதியிலே—சுஜாதா)

என அமையும் பகுதியில் குரலின் இனிமையை உணர்த்த சாக்லெட்டைப் பயன்படுத்தியுள்ளார். இங்கு இனிமை என்னும் செவிப்புலனுக்குரிய நுண்பொருளுணர்வைச் சாக்லெட் என்னும் பருப்பொருளால் விளக்குகிறார். இது தமிழிலக்கிய மரபில் பக்தி இலக்கியுக்காலத்தில் பயன்படுத்தப்பட்டுப் பின்னர் வழக் கருகிப்போன ஓர் உத்தியேயாம்.

நீக்கல் உத்தி

வாக்கிய அமைப்பில் நீக்கல் உத்தியை அதிகமாகவே பயன் படுத்துகிறார் சுஜாதா. மிகைக்கூறு என்று கருதும் பகுதியை நீக்குதல் என்பது எல்லாமொழிக்கும் பொதுவான பண்பு தான்.

ஆனால் சுஜாதா பயன்படுத்தும் நீக்கல் சற்று வித்தியாச. மானதாகவே அமைந்துள்ளது. அவை தமிழ் மரபுக்குச் சற்று புதிதாகவே உள்ளன.

'அவருடைய ஆங்கிலம் இவனுக்குப் புரியவில்லை,
இவன் ஆங்கிலம் அவருக்கு' என்றமையும் தொடரும்,
'டாக்டர் கலைஞர் கருணாநிதியை ஒரு பொதுக்கூட்டத்தில்
கேட்டேன்' என்றமையும் தொடரும்,
'அனிதா நானிருக்கிறேன், என்றான் கணேஷ்;

என்றாள் மோனிகா, என்றமையும் தொடரும் சுஜாதாவின் நீக்கல் உத்திக்குச் சான்றுகளாகின்றன.

இதுகாறும் கூறிய நடையியல் கூறுகள் எல்லாம் இணைந்தே புதியதொரு வித்தியாசமான நடையைச் சுஜாதாவிற்கு வழங்கியுள்ளன எனலாம்.

வட்டார அணுகுமுறை

தே. சொக்கலிங்கம்
அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி

படைப்பும் வட்டாரச் சார்பும்

இலக்கிய ஆராய்ச்சியில், ஆய்வாளர்கள் பலவேறு அணுகு முறைகளை மேற்கொண்டு இலக்கியங்களை ஆராய்கின்றனர். தமிழில் தோன்றிய இலக்கியங்கள் பலவும், தாம் தோன்றிய பகுதியின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் காட்டுவன. அவற்றைப் படைக்கும் இலக்கியப் படைப்பாளி, தன் படைப்பில் வாழும் வட்டாரத்தின் சார்பையும் சூழலையும் ஏற்று கின்றான். எந்த இலக்கியமாயினும்|எழுத்தாயினும் அதில், அது தோன்றும் வட்டாரச் சாயல் காணப்படுவது இயல்பே யாகும். இலக்கியப் படைப்பாளி அறிந்தும் அறியாமலும் வட்டாரச் சாயல் படைப்பில் இடம் பெறுகிறது. அதனால் வட்டாரச் சாயல் இலக்கியங்களில் இருத்தல் தவிர்க்க முடியாத தாகி விட்டது.

வட்டாரச் சார்புக்குள் அகப்படாமல் பாடும் படைப்பாளி கள் எப்போதாவது தோன்றுகின்றனர். திருவள்ளுவர் இனம், மொழி, நாடு அனைத்தும் கடந்த உலகப் பொது நிலையில் திருக்குறளை ஆக்கினார். இவரைப் போலப் பொதுமையாக-வட்டார உணர்வுக்கு ஆட்படாத புலவர்கள் தமிழகத்தில் எவருமிலர் புலவன் வாழும் இடமும் இனமும் படைப்பாளி களைக் கவர்ந்து தன் வயப்படுத்திவிடுகின்றன. ஆதலின் படைப்பாளிகளின் படைப்புகளில் வட்டாரச் சார்பு எவ்வா றேனும் நுழைந்துவிடுகின்றது. தமிழகத்தில் திருத்தலங்களை யும் திவ்விய தேசங்களையும் பாடுகின்ற பத்திப் பாடல்களால் வட்டாரச் சார்பு தமிழ்ப்பாடல்களில் மிகுதியாகப் புகுந்தன.

இதன் காரணமாக எழுந்த தலபுராண வளர்ச்சியும் வட்டாரக் கூறுகளை இலக்கியங்களில் பெரிதும் இடம் பெறச் செய்தது. இன்றைய இலக்கிய வளர்ச்சியிலும் வட்டாரச் சார்புடைய புதினங்கள், சிறுகதைகள் தோன்றுகின்றன.

சார்பின் இயல்பு

தமிழிலக்கியங்களில் வட்டாரச் சார்புடைய நூல்கள் மிகுதி சங்க விலக்கியங்களிலுள்ள திணைப்பாடல்கள் எல்லாம் ஒவ்வொரு நிலத்தையும் புனைந்து தம்மை இனங்காட்டிக் கொள்கின்றன. இவற்றின் வட்டாரச்சார்பை உணர்ந்துதான் முந்தையோர் முதற்பொருள் என்றும் கருப்பொருள் என்றும் பகுத்துக் கொண்டிருந்தனர். பின் எழுந்த பள்ளு, குறவஞ்சி, வில்லுப்பாட்டுப் போன்றவற்றிலும் வட்டாரச்சார்பு மிகுதி. இவ்விலக்கியங்களில் நிலத்தின் இயல்பும் வாழும் மக்களின் வாழ்வியலும் சித்திரிக்கப்பட்டிருக்கும். சமய இலக்கியங்களும் வட்டாரச்சார்பின என்று கொள்வதே பொருத்தமாகும். வைணவ இலக்கியங்களிலும் அவற்றின் உரைகளிலும் காணப்படும் சொல்லாட்சியும் நடையும் தனிப்போக்கின. இவற்றைப் புரிந்து கொள்ள அக்குழுவின் சார்பும் உறவும் வேண்டும் வைணவ நூல்கள் போலவே சித்தர் நூல்களையும் இசுலாமிய இலக்கியங்களையும் குழுச் சார்புடையனவாக - வட்டாரச்சார்புடையன வாகக் கொள்ள வேண்டும். இவைமொழி நடையாலும் சொல்லாட்சியாலும் மொழிக்கலப்பாலும் பிறருக்கு விளங்காதவாறு வரையறைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் பொருளும் கருத்தும் அந்தந்தக் குழுவின் தொடர்புடையவர்களுக்குத் தான் புலனாம்.

வட்டார அணுகுமுறை

படைப்பிலக்கியங்கள் வட்டாரச் சார்புடையனவாய் இருத்தலின் அவ்வியல்பைத் தனித்துக் காண்பது உரிய நோக்காகும். ஆய்வாளன், படைப்பிலக்கியங்களின் வட்டாரச் சாயலை இனங்கண்டு தன் ஆய்வை மேற்கொள்ள வேண்டும். இலக்கியத்தில் காணப்படும் மக்கள் பெயர்கள், ஊர்ப்பெயர்கள், பழக்க வழக்கங்கள், சொல் வழக்குகள், நிலவியல் இயல்புகள்/

புயிரினம்/ உயிரினம் ஆகியவற்றை ஆராய்ந்து வட்டாரச் சார்பைக் கண்டு விளக்கி முடிபுகள் காணும் நெறி, வட்டார அணுகுமுறை எனப்படும். மேற்கூறியவற்றை இனங்கண்டு ஆய்வாளன் வட்டாரத்தோடு தொடர்பு கொண்டு ஆய்வை மேற்கொள்ள வேண்டும். எனவே இந்த அணுகு முறை நூலாய்வும் கள ஆய்வும் இணைந்ததாகும்.

வட்டார அணுகுமுறையை மேற் கொள்ளுவோன், தான் ஆராய முற்படும் நூல் தோன்றிய வட்டாரத்தையும் நூலாசிரியன் வாழ்ந்த வட்டாரத்தையும் நூல் முதலிய பொருளுக்குரிய வட்டாரத்தையும் கண்டறிய வேண்டும். இம் முயற்சியில் நூலின் ஏடுகள் கிடைத்த பகுதியையும் அறிந்து ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் இவ் வணுகுமுறை முரண்பாடின்றி முழுமை பெற்றதாக உருவாகும் இஃது இலக்கிய ஆராய்ச்சிக்கு வேண்டப்படுவது போல இலக் கியப்பதிப்புக்கும் உரியதாகும்.

பின்பற்றாமையால் விளைந்த பிழை

வட்டார நோக்குடைய இவ்வணுகுமுறை இன்மையால் பல சிற்றிலக்கியப்பதிப்புகளில் பிழைபாடுகள் நேர்ந்துள்ளன. பல கும்மிப் பாடல்களை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொகுத்து வெளியிட்டிருக்கிறது. அதில்' சீரணி அம்மன் கும்மி' இடம் பெற்றுள்ளது. இந்த இறைவியின் பெயர் கீரணி அம்மன். ஓலைச்சுவடியிலும் இப்பெயர் காணப்படுகிறது. பதிப்பாசிரியர் கீரணி' என்ற சொல் பொருளற்றதாய்க் கருதி ஏடு எழுதியோரின் பிழை என்று கொண்டு 'சீரணி' என்று பதிப்பித்துள்ளார். வட்டாரத் தொடர்பு, பதிப்பாசிரியருக்கு இருந்திருப்பின் இப்பிழை நேர்ந்திருக்காது.

இந்நிறுவனத்தின் மற்றொரு வெளியீடு 'சின்னமதிபன் குளுவ நாடகம்' இதனைப்பதிப்பிக்கும் போது நூலின் வட்டாரம், ஓலைச்சுவடி கிட்டிய இடம், நூலாசிரியன் வாழ் விடம் ஆகியன கருத்தில் கொள்ளப்படவில்லை. பதிப்பாசிரியர் இந்நாடகத்தில் இடம்பெறும் பல ஊர்களைத் தவறாக அடை

யாளம் காட்டியிருக்கிறார். இந்நாடகம் சுட்டும் 'சிங்கை' என்ற ஊர், இன்று இராங்கியம் என்று வழங்குகிறது. இஃது இராச சிங்க மங்கலம் என்பதன் மரூஉ. இவ்வூர்ச் சிவன் கோயிலி லுள்ள கல்வெட்டுகள் 'இராச சிங்க மங்கலத்தூரவரோம்' (புதுகை 491) என்று ஊரின் பெயரைக் குறிக்கின்றன. இவ் வுண்மையை அறியாது இப்பதிப்பு, திருவாடானைக் கருகி லுள்ள இராசசிங்க மங்கலம் என்று சுட்டும். வட்டார நோக் குடைய அணுகு முறை இருந்திருப்பின் இத்தகைய பிழைகள் நேர்ந்திரா.

தமிழ்நாடு பாட்நூல் நிறுவனம், பல குறவஞ்சி நூல் களைத் திரட்டிக் 'குறவஞ்சி' என்று வெளியிட்டிருக்கிறது. அத்தொகுப்பில் 'காங்கேயன் குறவஞ்சி' என்ற நூலும் அடங்கும். இந்நூல் பசும் பொன்மாவட்டம் செம்பொன் மாரி என்ற ஊரைச் சார்ந்த செல்லப்பனால் பாடப்பட்டது; இக்குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவனும் இவ்வட்டாரத் தினன். இக்குறவஞ்சி நூலின் கடவுள் வாழ்த்தில் இந்த வட்டாரக் கடவுளரே சுட்டப்படுகின்றனர். நூலில் இடம் பெறும் ஊர்களும் இப்பகுதியின. ஆனால் பதிப்பாசிரியர் 'காங்கேயன்' என்ற பெயரைமட்டும் கருத்திற்கொண்டு பாட்டுடைத் தலைவனைக் கோவை மாவட்டத்தினன் என்று கருதிப் பெரிதும் இடர்ப்படுகிறார். அந்நூலின் 'முன்னுரை' யை நோக்கின் இது புலனாம். பதிப்பாசிரியன் மூல ஏட்டா ராய்ச்சியோடு வட்டாரத் தொடர்பும் கொண்டு நூலைப் பதிப்பிக்க வேண்டும்.

நூல்களைப் பதிப்பிப்போர், தாம் பெற்ற மூல ஏடுகளை முதன்மையாகக் கொள்வது போல அந்த வட்டாரத்தோடும் தொடர்பு கொள்வது மிகவும் தேவையானது. அப்போது தான் பதிப்பிக்கும் நூல் கூறுவனவற்றைத் தெளிவாக ஐயமின்றி உணரவும் உணர்த்தவும் முடியும். எனவே வட்டார அணுகு முறை ஆய்வுலகுக்கு இன்றியமையாதது போலப்பதிப்புத் துறைக்கும் இன்றியமையாதது என்பது போதரும்.

வட்டார அணுகுமுறையும் திறனாய்வும்

வட்டார அணுகுமுறையால் இலக்கியப் புதிப்புக்கள் செம்மையுறுவது போல இலக்கியத் திறனாய்வும் வளமை யடைகிறது. முக்கூடற் பள்ளு, கண்ணுடையம்மன் பள்போன்ற ஓரிலக்கிய வகை நூல்களை ஆராயும் போது, இரண்டின் ஒற்றுமையும் வேற்றுமையும் புலப்படும். பள்ளு இலக்கிய வகையின் அமைப்பில் அன்றிக் கருத்தோட்டத்திலும் வேறுபாடு காணப்படுகிறது. கருத்தமைப்பில் எழும் வேற்றுமை வட்டாரச் சார்பால் தோன்றுவதாகும். ஒத்த இலக்கியவடிவங்கள் இடையே வேற்றுமை காணப்படுதற்கு வட்டாரச் சார்பும் ஒரு காரண மாகும். பல இலக்கியங்களுக்கிடையே அமைந்துள்ள வட்டாரத் தன்மைகளைத் தெளிவாகப் பிரித்தறிய இந்த அணுகு முறை இவ்வாறு துணைநிற்கின்றது

பயன்பாடு

ஓரிலக்கியம் சிறுசிறு கூறாக்த் தோன்றிக் காலந்தோறும் வளர்ச்சி பெற்று முழுஉருவம் பெறுகிறது. வட்டார அணுகு முறையால் முதற்கண் தோன்றும் சிறு கூறு எங்குத் தோன்றிற்று என்றும் அஃது எவ்வெவ்வாறு வளர்ச்சி பெற்று வழங்கியது என்றும், பின் முழு வடிவு பெற்று உருவானது என்றும் அறிந்து கொள்ள முடியும். எனவே இலக்கியவடிவங்களின் பரிணாம வளர்ச்சியை, இவ்வட்டார அணுகுமுறை வெளிப் படுத்தும் அன்றி ஓரிலக்கிய வடிவாக்கத்தில் வட்டார எல்லை எந்த அளவுக்குதுணை புரிகின்றது என்பதையும் காட்டும். பாவைப்பாடல், அம்பா ஆடலின் வளர்ச்சி என்பர். அம்பா ஆடல் பற்றிய குறிப்பு, பாண்டிய நாட்டுப் பரிபாடலில் காணப்படுகின்றது. இவ்அம்பா ஆடல் நோன்பு, பாண்டிய நாட்டு மகளிர் வழக்கமாகும். பாண்டி நாட்டு வில்லிப்புத்தூரில் வாழ்ந்த கோதை நாச்சியார் என்ற பெண்பாற் புலவர் இந் நோன்பை மையப்படுத்தித் திருப்பாவை பாடினார். இதனைப் பின்பற்றிப் பாண்டிய நாட்டு அமைச்சர் மாணிக்கவாசகர்

திருப்பாவை இயற்றினார். ஒரே வட்டாரத்தில் சிறு கூறாக இருந்தது வட்டாரத் தொடர்பினால் தனி முழுவடிவம் பெற்றது; அதனால் தனி இலக்கியவகை உருவானது. இத்தகைய இலக்கியப் பரிணாமவளர்ச்சியையும் ஆக்கத்தையும் வட்டார அணுகு முறையால் உணர முடியும். எனவே இலக்கிய ஆய்வில் வட்டார அணுகுமுறை தனியிடம் பெற்றுள்ளது.

தெத்தூர் பெத்தாண்டியம்மன்

தே. ஞானசேகரன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

முன்னுரை

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டாரத்தில் உள்ளது தெத்தூர். இங்கு பறையர் இனத்தவர்களும் பிற உயர்சாதியினரும் வாழ்ந்து வருகின்றனர். பறையர் இனத்தவர்களின் குல தெய்வம் பெத்தாண்டியம்மன் ஆகும். இத் தெய்வத்தின் துணை தெய்வமாக சந்தனக்கருப்பும், காவல் தெய்வமாக பனையடியான் என்னும் தெய்வமும் வழிபடப்படுகிறது. இத் தெய்வங்கள் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப் பட்டிருக்கிறது. பறையர் இனத்தைச் சேர்ந்த பெத்தாலம்மன், சந்தனக்கருப்பு, பள்ளர் இனத்தைச் சேர்ந்த பனையடியான் மூவரும் மனிதர்களாக வாழ்ந்து இறந்தபின்னர் வழிபடும் கடவுளாக மாற்றப்பட்டுள்ளனர். இத்தெய்வங்கள் தொடர்பான கதைகளை மட்டும் விளக்கி, இக்கதைகளில் தெரியவரும் உண்மை நிகழ்ச்சிகளை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது. முதலில் பெத்தாண்டியம்மன் தொடர்பான கதைகளைத் தகவலாளர்கள் கூறியபடி சொல்லி, இக்கதை தொடர்பான உண்மை நிகழ்ச்சிகள் பின்பகுதியில் விளக்கப் படுகிறது.

பெத்தாண்டியம்மன்

தெத்தூரில் பறையர் இனத்தில் பெத்தாலம்மன் என்ற பெயருடைய பருவப் பெண் தனது நான்கு சகோதரர்களுடன் வாழ்ந்து வந்தனர். இவ்வூருக்கு அருகிலுள்ள மலையில் விறகு வெட்டிவரச் செல்வது இவளின் வழக்கம். இவ்வாறு விறகு வெட்டச் சென்ற பெத்தாலம்மனுக்கு முடபுதரில் சிக்கி, தன்து

ஆடைகள் முழுதும் கிழிந்துபடக்கூடிய நிலை ஏற்படுகிறது. கிழிந்துபட்ட ஆடைகளுடன் வீடு திரும்புவது அவமானம் என்று கருதி தனது சேலையால் தூக்குப்போட்டுத் தற்கொலை செய்து கொள்கிறாள். தங்கையைத் தேடிச்சென்ற சகோதரர் கள், மலையில் அவள் இறந்து கிடப்பதைக் கண்டுபிடித்து பிணத்தை எரியூட்டுகின்றனர். அவ்வது சேலை மட்டும் தீயில் வேகாது இருக்கிறது. அச்சேலையை எடுத்துவைத்து, அவளின் வழிவந்தவர்கள் பெத்தாண்டியம்மன் என்று பெயரிட்டு குல தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். பெத்தாலம்மன் இறந்த போது வெள்ளைச்சேலை அணிந்திருந்ததால், இத்தெய்வத்தை வழிபடுபவர்கள் திருமணத்தின்போது மணப்பெண்ணுக்கு வெள்ளைச் சேலையை அணிவிக்கும் வழக்கத்தினைக் கொண்டுள்ளனர்.

சந்தனக்கருப்பன்

தெத்தூரில் முன்னொரு காலத்தில் சந்தனக்கருப்பன் என்ற பெயருடைய பறையர் இனத்து இளைஞன் வாழ்ந்து வந்தான். இவன் அதே ஊரைச்சேர்ந்த உயர்சாதிப் பெண்ணை, விரும்பி மணம் செய்து கொண்டான். இதனால் ஆத்திரம் அடைந்த உயர்சாதியினர் சந்தனக்கருப்பனைக் கொலை செய்யத் திட்டமிடுகின்றனர் இதனை அறிந்த சந்தனக்கருப்பன் மனைவி யுடன் தலைமறைவாகி விடுகிறான். சந்தனக்கருப்பனின் இச் செயலால் உயர்சாதியினருக்கும், சந்தனக்கருப்பன் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பெரிய அளவிலான கலகம் ஏற்படுகிறது. சந்தனக் கருப்பனின் சமூகத்தவர்கள் வேறு ஊருக்குக் குடி பெயர்ந்து செல்கின்றனர். பல ஆண்டுகள் ஆகியும் சந்தனக் கருப்பன் உயிருடன் திரும்பாததைக் கண்ட, அவன் வழி வந்தவர்கள், சந்தனக்கருப்பனை பெத்தாண்டியம்மனுடன் இணைத்து தெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

பனையடியான்

சந்தனக் கருப்பனுடன், தெத்தூரைச் சேர்ந்த பனையடியான் என்ற பள்ளர் சாதியைச் சேர்ந்தவன் நண்பனாக் இருந்து வருகிறார். சந்தனக்கருப்பன் உயர்சாதிப் பெண்ணை

மணந்ததால் ஏற்பட்ட கலகத்தில் சந்தனக்கருப்பனுக்குத் துணையாக பறையர்களுடன் சேர்ந்து சண்டையிடுகிறான். இச் சண்டையில் பனையடியான் இறந்துபடுகிறான். பனை மரத்தைப் பிடுங்கி சண்டை செய்ததால் இவனுக்கு பனையடியான் என்று பெயரிட்டு, அவனையும் தெய்வமாக வைத்து வழிபட்டுவருகின்றனர் பறையர் இனத்தவர்கள் பனையடியான் பெத்தாண்டியம்மனுக்கும் சந்தனக்கருப்பிற்கும் காவல் தெய்வமாக விளங்குகிறது.

கள ஆய்வின்போது சேகரிக்கப்பட்ட கதைகள் தகவலாளர்கள் கூறியபடி மேற்கண்டவாறு அமைகிறது .இக்கதைகளுடன் தொடர்புடைய கருத்துக்களை இத் தெய்வத்தை வழிபடும் கூ. முத்தன் என்பவர்மூலம் பின்வருமாறு அறியமுடிந்தது. பெத்தாலம்மனின் நான்கு சகோதரர்களில் ஒருவனே சந்தனக் கருப்பன், இவனின் நண்பனே பனையடியான். இவர்கள் மூவரும் ஒரே நாளில் உயர்சாதிக்காரர்களால் கொலைசெய்யப் பட்டவர்கள் இவர்களின் நினைவாகவே இவ்வழிபாடு நிகழ்கிறது என்று தெரிவித்தார். இவரின் கருத்துப்படி தகவலாளர்கள் கூறிய கதைகளில் பல்வேறு நிகழ்ச்சிகள் மறைத்துச் சொல்லப்படுகிறது. என்று அறியமுடிந்தது. தெய்வங்களின் உண்மை வரலாற்றை உயர்சாதியினருக்குப் பயந்து இன்றும் மறைத்துச் சொல்லி வருகின்றனர்.

கதைகளில் மறைக்கப்பட்ட செய்திகள்

பெத்தாலம்மன் கதையில, பெத்தாலம்மன் மலையிலுள்ள முட்புதரில் சிக்குண்டு சேலைகிழிந்த நிலையில் ஊருக்குத் திரும்ப வழியின்றி தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப் படுகிறது. அவளின் மரணத்திற்கான காரணம் இவ்வாறும் இருந்திருக்கலாம். மலையில் தனியாக இருந்த பெத்தாலம்மனின் கற்பிற்கு ஊறு விளைவிக்கும் நிகழ்ச்சி ஏதேனும் நடந்திருந்து அவள் தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கலாம். இதற்கான சான்றுகள் கதைகளிலே உள்ளது. இறந்து கிடந்த பெத்தாலம்மன் சேலைமுழுவதும் கிழிக்கப்பட்டு கிடந்தாள் என்று கூறுவதைச் சொல்லலாம். இதேபோன்று

சந்தனக் கருப்பன் கதையில், மனைவியுடன் தப்பியோடிய சந்தனக்கருப்பன் மறுபடியும் உயிருடன் திரும்பி வராததால், அவனது வீரத்தைப் பாராட்டி தெய்வமாக்கினர் என்று கதை கூறுகிறது. சந்தனக் கருப்பன் உயர்சாதிப் பெண்ணை மணந்து கொண்டதால், ஆத்திரமுற்ற உயர்சாதியினர் சந்தனக் கருப் பனைக் கொலை செய்திருக்கலாம் ஏனெனில் அவன் தெய்வ மாக வழிபடப்படும் நிலையில் அவனது மரணம் உறுதியாக அம்மக்களுக்குத் தெரிந்திருக்கும். தமது சமூகத்தைச் சேர்ந்த ஒருவன் உயர்சாதியினரால் கொலை செய்யப்பட்டான் என்று சொல்வது தகுதிக்குறைவு என்றும், இதனால் இன்றளவும் உள்ள உயர்சாதியினருக்குக் கோபத்தைக் கொடுக்கக்கூடும் என்றும், இவர்கள் சந்தனக்கருப்பனின் மரணத்தை மறைத்துச் சொல்கிறார்கள் அவ்வளவே. எவ்வா றெனில் பனையடியான் கதை சந்தனக்கருப்பனுடன் தொடர்பு படுத்தப்படுகிறது. சந்தனக்கருப்பனின் செயலால் ஏற்பட்ட சாதிக்கலவரத்தில் சந்தனக்கருப்பனின் நண்பன் பனையடி யான் கலவரத்தின்போது கொல்லப்பட்டிருக்கிறான். பனையடி யான் சந்தனக்கருப்பிற்குக் காவல் தெய்வமாக ஆக்கப்பட்டிருப் பதும் நினைவு கூறத்தக்கது. சந்தனக்கருப்பனின் செயலால் ஏற்பட்ட கலகத்தில் பறையர்களுக்குத் துணையாகப் பள்ளர் களும் துணை செய்துள்ளனர் என்பதை பனையடியானைத் தெய்வமாக வழிபடுவதிலிருந்து தெரியவருகிறது. இக்கலவரத் தின்பொழுது சந்தனக்கருப்பனும் கலந்துகொண்டு உயிர்விட் டிருக்கவேண்டும். இதனைப் பின்வருமாறு தொடர்புபடுத்திக் காணலாம்.

கதைவழி அறியலாகும் உண்மை

மேற்கண்ட கதைகளின் வழியும், தகவலாளர்கள் கூறும் செய்திகள் வழியும் பெத்தாலம்மன், சந்தனக்கருப்பன், பனையடியான் ஆகியமூவரும் இறந்துபட்டதற்கான காரணங் களை பின்வருமாறு காணலாம். பெத்தாண்டியம்மனுக்கு சந்தனக்கருப்பன் துணைத் தெய்வமாக விளங்குவதிலிருந்து, சந்தனக்கருப்பனின் சகோதரியே பெத்தாலம்மன் என்றும்

கொள்ளலாம். சந்தனக்கருப்பனுக்கு பனையடியான் காவல் தெய்வமாக வழிபடப்படுவதிலிருந்து, சந்தனக்கருப்பனின் செயலால் ஏற்பட்ட கலகத்தில் இறந்துபட்ட பள்ளர் இனத்தைச் சேர்ந்த பனையடியான் சந்தனக்கருப்பனின் நண்பன் என்றும் நம்பலாம். பள்ளர் இனத்தைச் சேர்ந்த பனையடியானை பறையர் வழிபடுவதிலிருந்து, பறையர்களுக்குத் துணையாக பள்ளர்களும் மேற்சொன்ன சாதிக்கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அறியலாம்.

பெத்தாலம்மனின் சகோதரன் சந்தனக்கருப்பன் என்று கொண்டால் இவர்களின் மரணம் பின்வருமாறு அடுத்தடுத்து நிகழ்ந்திருக்க வாய்ப்புண்டு. சந்தனக்கருப்பன் உயர்சாதிப் பெண்ணை மணமுடித்துக்கொண்டு தப்பியோடியதால் ஆத்திர மடைந்த உயர்சாதியினர் சந்தனக்கருப்பனின் சகோதரி பெத்தாலம்மனின் கற்பிற்கு ஊறு விளைவித்திருக்கலாம் இதனால் பெத்தாலம்மன் தற்கொலை செய்துகொண்டு இறந்து பட்டிருக்கலாம். தன் சகோதரி இறந்துபட்ட நிலையில் சந்தனக்கருப்பனும், அவனது உறவினர்களும் உயர்சாதி யினரிடம் கலகம் செய்யும் நிலை ஏற்பட்டிருக்கும். இக்கலகத்தில் சந்தனக்கருப்பன், அவனது நண்பன் பனையடியான் ஆகியோர் கொலை செய்யப்பட்டிருப்பர் என்றும் கருத இடமுண்டு.

பின்னர் இம்மக்கள் பெத்தாலம்மன், சந்தனக்கருப்பன், பனையடியான் மூவரும் இறந்துபட்ட நிலையில் அவர்களை தெய்வமாக்கியிருக்கவேண்டும் சாதாரண மனிதர்களாக இருந்தவர்கள் தெய்வநிலைக்கு உயர்த்தப்பட்டிருப்பதை நோக்க சந்தனக்கருப்பன், பனையடியான் இருவரும் இச் சமூகத்தில் பெரிதும் மதிக்கப்பட்ட வீரர்களாகக் இருந்திருப்பர். பெத்தாலம்மனும் ஒரு வீரமிக்க பெண்ணாகவே வாழ்ந்திருக்க வேண்டும். இதினின்று இம்மூவரும் இறந்துபட்ட நிலையில், ஏற்பட்ட சாதிக் கலவரம் பெருமளவிலான உயிர்சேதத்தை உண்டாக்கியது மட்டும் அல்லாமல், இவ்வூர் மக்கள் அனை வரும் உயர்சாதியினருக்குப் பயந்து வேறு ஊர்களுக்கு இடம் பெயர்ந்திருக்கின்றனர் என்பதையும் அறிகின்றோம். பொது

வாக மதுரை மாவட்டத்தில் வழிபடப்படும் நாட்டுப்புறத் தெய்வங்களின் வரலாறுகள் மனிதர்களாக இருந்து வீரச்செயல் புரிந்து இறந்த பின் தெய்வமாகியதையே தெரிவிக்கிறது. இவ் வகையில் பெத்தாலம்மன், சந்தனக்கருப்பு, பனையடியான் மூவரும் உயர்சாதியினருக்கும், பறையர். பள்ளர் இனத்தவருக் கும் நடந்த சண்டையில் இறந்து பட்டவர்களே என்றும் களப் பகுதிச் செய்திகள் உறுதிப்படுத்துகின்றது .

மனிதர்கள் — தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுதல்

அச்சத்தின் அடிப்படையிலும், அன்பின் அடிப்படையிலும் வழிபாடு தோனறியது என்பர். தீய ஆவிகள், இயற்கைச் சீற்றங்கள் ஆகியவற்றிடம் மனிதன் கொண்ட அச்சம் ஆவி வழிபாட்டையும், இயற்கை வழிபாட்டையும் தோற்றுவித்தன. மனிதன் தன் முன்னோர்களிடம் கொண்ட காரணமாக அவர்கள் இறந்த பின்பு அவர்களை வழிபடு கடவுளாகக் கண்டான், மனிதனை வழிபடுவது. ஆவி வழிபாட்டினின்று வளர்ந்து நடுகல் வழிபாடாக மாறி, இன்று முன்னோர்களை வழிபடும் குல தெய்வ வழிபாடாகவும், நாட்டுப்புறத் தெய்வ வழிபாடாகவும் அமைகிறது,

முடிவுரை

கலப்புமணத்தால் உயர்சாதியினருக்கும், தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கும் ஏற்பட்ட சாதிக்கலவரத்தில் வீரமரணம் அடைந்தவர்களின் நினைவாக இத்தெய்வம் வழிபடப்படுகிறது. இத்தெய்வக்கதைகள் அக்கால சமூக அமைப்பில் சாதிகளுக் குள் நடந்த போராட்டத்தைக் காட்டுகிறது. நாட்டுப்புறத் தெய்வங்களின் வரலாறுகளை அறிந்துகொள்ள இத்தெய்வக் கதை பெரிதும் உதவுகிறது. இதுபோன்ற மதுரை மாவட்டத்தி லுள்ள அனைத்து நாட்டுப்புறத் தெய்வங்களின் வழக்காறு களும் தொகுக்கப்பட்டு, ஆராயின் அக்காலச் சமூதாய வரலாற் றை ஓரளவுக்கு அறிந்துகொள்ள முடியும் மனித வழிபாடே நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு என்பதற்கு, பெத்தாண்டி யம்மன் வழிபாடு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கைவல்லிய நவநீதத்தில் சமுதாயச் சிந்தனைகள்

சு. தங்கத்துரை,
அ அ.அ.ஆ கலைக்கல்லூரி, நாமக்கல்

தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்லிய நவநீதம் ஓர் அத்வைத நூல். தத்துவ. சமயக் கருத்துக்களைவெளிப் படுத்தக்கூடிய நூற்களில் அக்காலக் கட்டத்தில் காணப்பட்ட சமுதாயச் சிந்தனைகள் நிறைந்திருப்பதைக் காண முடிகிறது. கைவல்லிய நவநீதத்தில் காணப்படும் சமுதாயச் சிந்தனைகளை இக்கட்டுரையில் காணலாம்.

சமுதாயச் சிந்தனைகளை குடும்ப நிலை, குருநிலை, பொது வான என்ற மூன்று நிலைகளில் கருத்துக்களைப் பிரித்துக் கட்டுரையல் விளக்கப்பட்டுள்ளது.

குடும்ப நிலை

குடும்ப வாழ்க்கை ஒரு சிக்கலானது (த.வி.ப 6). தவமான மனைத் தொழில்கள் (ச.தெ.ப.22 4) என இல்வாழ்க்கையின் சிறப்பை இவ்வரிகள் மூலம் அறிய முடிகிறது.

தாய் தன்னுடைய குழந்தைகளுக்கு நோய் தீர தின்பண்டங் களைக்காட்டி அதனுள் மருந்தை வைத்துக் கொடுப்பாள் (ச தெ.ப 73) மேலும், "தாயையன்றி மக்களுக்கொரு பிறவியுஞ் சாதியும் வேறுண்டோ" (ச.தெ.ப.90.2) என தாயே மக்களின் எல்லா நிலைக்கும் காரண கர்த்தாவாகும் என்கிறார்

தந்தை தன்னுடைய குழந்தைகள் பிற்காலத்தில் துன்ப மடையாமல் வாழ்தற்குரிய பொருள்களைச் சம்பாதித்து வைக்க வேண்டும் (ச.தெ.ப.119) என தந்தையின் கடமையை காட்டி யுள்ளார்.

ஒரு தாய் மக்களாக இருந்தாலும் தங்களுக்குள்ளே பகைத்துக் கொண்டு வாழ்வதை உலகெங்கும் காணமுடிகிறது (ச.தெ.ப.81). மக்களிடம் ஒற்றுமை என்பது இருக்காது என்றும், அவை பெயராலும், இடங்களாலும், ஓதரும் உபாதியாலும், உடலாலும், உணர்வினாலும் ஏற்படும் (த.வி.ப.70) என மக்களின் மனப்பான்மையை நூலில் காட்டியுள்ளார்.

மனிதர்களின் இயற்கைக் குணத்தை,

'' போகமாருயிர் கண்டதையுன்பதும் புணர்வது
மியல்பே காண்'

(ச தெ ப 74 1) எனவும், மதுமாமிசங்களை உண்ண விரும்பினால் யாகங்கள் செய்து உண்ண வேண்டும் என்றும், பெண்களிடம் காமங் கொண்டால் மனைவியிடம் புணர வேண்டும் என்றும், நேரிட்ட பெண்களைப் புணரக்கூடாது, கண்ட உணவுகளை உண்ணக் கூடாது என்றும் (ச.தெ ப·75) விளக்கியுள்ளார்.

குருநிலை

குருவைப் பார்க்கச் செல்கின்றபோது வெறுங்கையோடு போகக் கூடாது என்பதை கீழ்வரும் வரியால் அறியலாம். போனவன் வெறுங்கையோடே போகாத வண்ணஞ் சென்று'' (த.வி.ப.6 3). குரு மாணவனை எப்படி ஏற்றுக் கொள்கிறார் என்பதனை,

'அன்னதல சிசுவை யையனாமை மீன் பறவை போலத்

தன்னகங் கருதி நோக்கித் தடவிச் சந்நிதி யிருத்தி' (த. வி.ப 8.1,2) இவ்வரிகள் விளக்குகின்றன.

ஒருவனுக்கு அறிவுறுத்தல் எல்லா நேரங்களிலும் செய்யக் கூடாது. அவனது பக்குவநிலை அறிந்து அவன் கேட்ட பிறகே அறிவுரை செய்ய வேண்டும் (த.வி ப 1i). இக்கருத்தை கைவல்லிய நவநீதத்தில் முழுக்கக் காணலாம். 'இணங்கிய குருவே யென்னை யிரட்சித்தல் வேண்டுமென்றான்' (த வி.ப.7.4). குரு

சொன்ன சொல்லைக் கேட்டால், ''சொன்னது கேட்பாயாகிற் றொடர்பவந் தொலையுமென்றான்'' (த.வி.ப.8.4) என பயன் உண்டு என்கிறார்.

மக்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களை நீக்க வேண்டும் என்பதனை கீழ்வரும் உவமையால் காட்டுகிறார்.

'நார் குழி பறித்து மெள்ள நாட்டிய நெடிய கம்பம்
உரமுறக் குத்திக் குத்தி யுறைப்பிககு முபாயம் போல''

(ச.தெ.ப.1.1,2), கொஞ்சம் கொஞ்சமாக ஆசிரியரிடம் அறிவுரை பெற்று அறிவை நிலைநாட்ட வேண்டும். ஆசிரியருடைய அறிவுரையால் அறியாமை நீங்கிய பிறகு அது நம்பிடம் திரும்பி வராது (ச.தெ.ப.5). இவ்வாறு குருவின் கடமை, மதிப்பு, செயல், அன்பு போன்றவை இந்நூலில் ஆழமாக வெளிப்பட்டுள்ளதை காண முடிகிறது.

பொதுவான சிந்தனைகள்

உலகத்தில் எப்படி வாழ வேண்டும் என்பதை, 'தாமரை யிலைத் தண்ணீர் போற் சகத்தோடுங் கூடிவாழ்'' (த வி.ப 89 3) என விளக்கியுள்ளார்.

வாழ்வில் முன்னேற கேட்டல், சிந்தித்தல், தெளிதல் (த வி. ப.80) என்ற மூன்றையும் எல்லா காலமும் செய்தல் வேண்டும்.. இவைகளே வாழ்க்கையின் முன்னேற்றத்தை தடுக்கும் தடைகளாகும் (த.வி ப.84) இந்த மூன்றையும் நீக்கி வாழ்வதே தன்னுடைய ஆசிரியருக்குச் செய்யும் கைமாறாகும். இதனால் தான் அறிவினால் எதையும் சிந்திக்க வேண்டும் என்றும் (த. வி. ப. 76, 76).

'உன்னை யநுபவித்தறிவாய் நீயே' (த வி. ப.67,4)
என்றும்,

'அனுபவித்தறிந்த பொருளே உண்மை (ச.தெ.ப,83.3)
என்றும்,

'உன்னை நீ யறிந்தாயாகிலுனக்கொரு கேடுமில்லை'
(த வி.ப. 13.3) என்றும்,

'தன்னைப் பார்ப்பதுங் தனனக் கொண்டேதான் (த.வி. ப.66 3) என்றும்

குறிப்பிட்டுள்ளார். வேதநூல் படித்தாலும் அன்னதானங்கள் செய்தாலும், மந்திரம், யாகங்கள் செய்தாலும் இவைகளால் தன்னை அறியமுடியாது.

உலகத்தில் அந்தந்த பொருட்கள் இயற்கையாகவே அதன தன் செயல்களைச் செய்கின்றன என்பதை கீழ்வரும் வரிகள் விளக்குகின்றன.

'செய்கையுஞ் செய்விக்கையுமற்றிருக்குமென்முன்
செடமானவுலகமெலாஞ் சேட்டை செய்யும்'
(ச. தெ ப. 24. 2)

ஒரு அரசமரத்தில் இரண்டு பறவைகள் வாழ்கின்றன. அவற்றுள் ஒன்று அம்மரத்தின் கனிகளில் இது நல்லது இது நல்லது என்று உண்ணும்; மற்றொரு பறவை உண்ணாது ச. தெ. ப. 58). இக்கருத்து உலக மக்களில் சிலர்கிடைத்ததை எல்லாம் உட்கொள்வர் - சிலர்தேவைக்கு ஏற்ற நல்லதையே உட்கொள்வர்என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

'வழி நடப்பவர் பாராமுகமாயினான் மலாந்த
கண் ணிருந்தாலும் குழியில் வீழ்வர். (ச.தெ.ப.50,23)

என வாழ்க்கைச் சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளார். மனிதனுக்கு நினைவு எவ்வளவு அவசியம் என்றும், இல்லா விட்டால் என்ன நிலை ஏற்படும் என்பதை,

'மனைக்குள் வைத்த பண்டங்களை மறந்தவன் வருட
நூறழுதாலும் நினைத்துணர்ந்த பின் கிட்டும்.
(ச.தெ ப.71.1,2)

இவ்வரிகள் மூலம் அறியலாம்.

முயற்சி மிக முக்கியம் என கீழ்வரும் வரியால் காட்டியுள்ளார்.

'சாதனமின்றி யொன்றைச் சாதிப்பாருலகில்லை'
(த.வி ப.4.1)

புதுப்பெண் நாணம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை

'தன்பதி யல்லாப்பேர் கடமையல்லனல்ல னென்றாள்
அன்பனைக் கேட்ட நேரமவள் வெட்கி மௌந்
மானாள்'

(ச.தெ ப 9.1 2) இவ்வாறு விளக்கியுள்ளார்.

தன்னுடைய வேடத்தை விட்டு வேறு வேடங் கொண்டு மறைந்திருப்போரை அறிய விரும்பினவன் வேடமாறியுள்ள அவரது குணங்களையும், ஒழுக்கங்களையும், அடையாளங் களையும் ஆராய்ந்து இவர் இன்னாரென்றறிய வேண்டும். அவ்வாறறியாமல் வெகுதூரங்கால் சலிக்க ஓடினாலும், மலை மேலேறிக் குதித்தாலும், தலைகீழாக நின்றாலும், உயரமான தம்பத்தில் ஏறிக் கூத்தாடினாலும், இவை தவிர பல கருமங் களைச் செய்தாலும் அவரது உண்மை வடிவத்தை அறிய முடியாது (ச தெ ப.66) என ஒருவனை அறிய எவ்வகை உத்தியை பயன்படுத்த வேண்டும் என்பதை வெளிப்படுத்தி யுள்ளார்.

இயற்கைப் பொருள்களின் சிறப்புகளை காரணத்தோடு வெளிப்படுத்துகிறார். கருப்பை, முட்டை போன்றவற்றுள் இருந்து வெளிப்படுபவை பல நிறங்கலந்த சித்திரங்களாக வெளிப்படுகிறது. (ச.தெ ப.100) புல் முதலிய அசதேனப் பொருளனைத்தும் பூத்து காய்க்குங் காலத்தின் விசித்திரங் களைக் கவனித்தால் ஒவ்வொரு உயிர்க்கும் குணங்கள் வேறு பட்டிருப்பதை காணமுடிகிறது (ச தெ.ப.99). ஒரு மலரினிடத் துள்ள வடிவ, ரச உணர்ச்சிகள் ஒன்றாக இருக்குமாயினும் அவற்றுள், ஒவ்வொன்றும் நேத்திரம் முதலிய இந்திரியங்களுள் ஒவ்வொன்றாலறியப்படுமே அல்லாமல் ஓர் இந்திரியத்தினால்

எல்லாக் குணங்களும் அறியப்படுவதில்லை (ச.தெ.ப.108). தேனிக்கள் ஒன்றாகவும், ஒரு சுவையுடையதாகவும் பல பூவினின்றும் தேனெடுத்துச் சேர்க்கும் (ச.தெ.ப.134). பல பூக்களினின்றும் தேனிக்கள் எடுத்து ஒன்றாகச் சேர்த்ததே தேன் (ச தெ.ப.144).

உருளையாய் இருக்கின்ற மண்ணை கடம் என்று சொல்ல மாட்டார்கள். அது அதனதன் வடிவத்தை அடைந்த பிறகு தான் பெயர் பெறுகின்றன (ச தெ ப.103).

நீர் நிரம்பிய குடத்திலுள்ள தண்ணீர் எப்பொழுதும் குளிர்ச்சியாகவே இருக்கும் (ச.தெ ப.130). உலையில் வைத் துருக்கிய உலோக நீரானது அச்சுக் கருவிகளில் வார்த்தபோது அவ்வச்சுக் கருவிகளுக்குச் சமானமாய்ப் பல உருவங்கள் அமையும் (ச தெ.ப.12). துலக்கமான கண்ணாடியை அடிக்கடி துலக்கினால் பழுதாகாது (ச.தெ ப 48). களங்கமற்ற கண்ணாடிமுன் வேறோர் களங்கமற்ற கண்ணாடியைக் காட்டும்போது அதனதன் சிறப்புத் தெரியும் (ச.தெ ப.18).

செப்புக் கண்ணாடியிலுள்ள களங்கத்தைப் போக்க அதற் குரிய பொருளோடு கூடிய தொழில் வேண்டும் அதில் உள்ள கறுப்பு நிறம் பொய்த் தோற்றமே என்று காண்பதற்கு அறிவே போதும். வேறு எதுவும் தேவையில்லை (ச.தெ ப.69) ஒவ்வொரு பொருளையும் அதற்குரிய பொருளைக் கொண்டு துலக்க வேண்டும். செப்புக்கண்ணாடியிலுள்ள களங்கத்தை செங்கல்மா முதலியவற்றைக் கொண்டு துலக்கினால் அதுமாறும் ஆனால் அதை ஞானத்தைக் கொண்டு விளக்க முயற்சிப்பார்களா (ச.தெ.ப. 68).

அடைக்கலம் என்று வருபவர்க்கு உதவி செய்ய வேண்டும் (த.வி.ப.8.1).

பேச்சு வழக்கில் பயன்படுத்தக்கூடிய அக்காலச் சமுதாய சிந்தனைகளை உவமைகள் மூலம் சுட்டியுள்ளார்.

மங்கல வாழ்த்துப் பாடலில் சமுதாயச் செய்திகள்

அ. தங்கப்பா, எம். ஏ, டி. ஜி. டி.,
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்.

1 0 முன்னுரை

"சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பாகும்"[1]. சமூகம், சமுதாயம் என்பன ஒரு பொருள் குறித்த பல சொல்லாகும். இக்காலச் சமுதாயத்தைப்பற்றிக் களஆய்வு செய்து அறிய இயலும். மக்கள் குழுக்கள், நிலையங்கள் முதலியவற்றைக் களஆய்வுத் தரவுகளாகத் திரட்டி அவற்றின் மூலம் தற்காலச் சமுதாயத்தைப்பற்றி அறியலாம் பண்டைச் சமுதாயத்தைப் பற்றி அறிய வேண்டுமெனில் இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், பிறநாட்டு அறிஞர் ஆவணக் குறிப்புகள் முதலியன மூல ஆதாரங்களாக அமைகின்றன.

தமிழர் சமுதாயத்தை முழு அளவில் அறிந்துகொள்ள அமைவது தமிழின் முதல்காப்பியமான சிலப்பதிகாரமாகும். இதில் தமிழர்தம் சமுதாய வாழ்வு சிறப்பாக இடம் பெற்றுள்ளது. சிலம்பின் முதற்காண்டமான புகார்க்காண்டத்தில் முதலாவதாக இடம் பெறுவது மங்கல வாழ்த்துப் பாடலாகும். அதில் திருமணம், புகார்நகரம், மக்கள் ஆகிய செய்திகள் இங்கு ஆய்வுப்பொருளாக அமைகின்றன

2 0 திருமணம்

திருமணம் என்பதை திரு+மணம் எனப் பிரிக்கலாம். 'திரு' என்பது அழகினையும், 'நறு' என்பது நறுநாற்றத்தை

யும் குறிப்பன. ஒத்த நிலையிலுள்ள ஆணும் பெண்ணும் தாமே எதிர்ப்பட்டுக் காதலிப்பது களவு வாழ்க்கை; ஊரறிய அவர்கள் மணம் செய்து கொள்ளும் வாழ்க்கை கற்புவாழ்க்கை; இரண்டு மின்றிப் பெற்றோரும் சுற்றத்தோரும் இயைந்து திருமணம் நடத்தும் வாழ்க்கை களவின் வழி வாராக் கற்பு'[2] என்பர். கோவலன்-கண்ணகி திருமணம் இவ்வகையினதாகும் இதனை,

> "இருபெருங்குரவரு மொருபெரு நாளான்
> மணவணி காண மகிழ்ந்தனர்"[3]

எனும் வரிகளால் அறியலாம்.

ஆண்களுக்குத் திருமண வயது பதினாறின் உள்ளும், பெண்களுக்குப் பன்னிரெண்டுக்குள்ளும் இருத்தல் வேண்டும் என்ற குறிப்பு மங்கலவாழ்த்துப்பாடலின் வழி அறியப் பெறு கிறது. இது ஆண்களுக்கு வயது இருபத்தொன்றாகவும் பெண் களுக்குப் பதினெட்டாகவும் நிரம்பிய பின்தான் திருமணம் நடக்கவேண்டும் என்ற தற்கால விதியிலிருந்து மாறுபடுவதைக் காணலாம்

சிலப்பதிகாரத்தில் கோவலன்-கண்ணகி திருமணச்செய்தி அழகிய அணிகலன் அணிந்த மகளிர் மூலம் நகரமக்களுக்குப் பறைசாற்றித் தெரிவிக்கப்பட்டது. சந்திரன் உரோகிணி நட்சத்திரத்துடன் சேரும் நல்லநாளில்

> 'மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து
> நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்'[4]

மாமுது பார்ப்பான் மறைவழி காட்ட திருமணம் நடந்தது. தீவலம் செய்யப்பட்டது. பலதிறப்பட்ட பெண்கள் மண மக்களைச் சூழ்ந்து

> 'காதலற் பிரியாமற் கவவுக்கை நெகிழாமல்
> தீதறுக'[5]

என வாழ்த்தினர். பின்னர் நல்லமளி ஏற்றினர்.

பண்டைக்காலத் தமிழ்ச் சமுதாயத் திருமண முறையி லிருந்து மாறுபட்ட குறிப்பு சில இதில் உள்ளது. பண்டைக் காலத்தில் தமிழர் திருமணம் எங்ஙனம் நடைபெற்றது என்பதைப் பின்வரும் நல்லாவூர்கிழார் பாடல் கூறுகிறது.

'திருமணம் நிகழவிருக்கும் வீடு அழகு செய்யப்பெற்றது. வீட்டின் முன் பந்தலிட்டு யாண்டும் மணற்பரப்பி வைக்கப் பட்டது. வீடு முழுவதும் விளக்குகள் ஒளியுடன் விளங்கின. திருமணத்திற்கு வந்த உற்றார் உறவினர்க்கு உழுந்து பெய்யப் பட்டுச் செய்த உழுந்தங்களியும் வெண்சோறும் உண்ணத் தயாராக வைக்கப்பட்டு இருந்தன. முதுசெம்பெண்டிர் திருமணநாள் வந்ததென மகிழ்ச்சியுடன் கூறிப் பூவும் நெல்லும் கலந்த நீரை தலைமீது வைத்துக் கொண்டனர். நற்புதல்வஃரப் பயந்த திதலையார் நால்வர் கூடி வந்தனர். குடங்களில் உள்ள நீரை மணமக்கள் தலையில் பெய்து

''கற்பினின் வழாஅ' நற்பல வுதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை
யாகென''[6]

என வாழ்த்தினர். பின்னர் வந்த உற்றார்.

'பேர் இற்கிழத்தி ஆக''[7]

என வாழ்த்தினர். பின்னர் அன்றிரவே இருவரும் இன்பம் துய்த்தனர் எனக் கூறப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத் திருமணமுறை அகநானூறு காட்டும் திருமண முறையில் சில ஒப்புமையுடனும் சிறிது மாறுபட்டும் அமைந்து உள்ளது, சந்திரன் உரோகிணியுடன் சேரும் நன் னாளில் திருமணம் நடந்தது என்ற உண்மை ஈர்இடங்களிலும் காணப்படுகிறது. இது இன்றுவரை நிலைத்து நிற்பதையும் காணலாம். பெண்கள் மணமக்களை வாழ்த்துகின்ற வழக்கத்தை இரு நூலிலும் காணலாம்.

மாமுதுபார்ப்பான் மறைவழிகாட்டலும், தீவலம் வருதலும் பிற்காலத்தில் தோன்றி வளர்ந்த வழக்காக இருக்கலாம். மேலும். பெண்ணெடுப்பு வழக்காறு ஒரு சாதியினரிடையே நடைபெற்றது. சான்றாக வணிகன் மகனான கோவலனுக்கும் வணிகன் மகளான கண்ணகிக்கும் திருமணம் நடைபெற்றதைக் கூறலாம்.

3 0 புகார் நகரம்

புகார் நகரம் செல்வ வளத்தோடு சிறந்து விளங்கியது. மங்கல வாழ்த்துப்பாடலில்,

'போகநீள் புகழ்மன்னும் புகார்'[8]
'பொதுவறு சிறப்புற் புகாரே யாயினும்'[9]

என இரண்டு அடைமொழி கொடுத்து சொர்க்கத்திற்குச் சமமாக அந்நகரைச் சிறப்பித்துப்பாடியுள்ளார் இளங்கோவடிகள். அந்நகரத்தில் உயர்ந்தோர் பலர் வாழ்ந்தனர். இதனால்தான் இளங்கோவடிகளார், தம் காப்பியத்தின் துவக்கத்தில் திங்கள், ஞாயிறு, மழை ஆகியவற்றை வாழ்த்தி இறுதியாகப் புகார் நகரையும்,

'பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி யுலகிற் கவன்குலத்தோ
டோங்கிப் பரந்தொழுக லான்'[10]

என வாழ்த்துகிறார்.

4.0 மக்கள்

மங்கல வாழ்த்துப்பாடலில் அரசர், வணிகர், பார்ப்பனர் ஆகியோர் பற்றிய குறிப்புகளைக் காணலாம், அவை பின் வருமாறு.

4.1 அரசர்

'பெருநில முழுதாளும் பெருமகன்'[11]

என அரசனைக்குறிக்கப் பொதுச்சொல் கையாளப்பட்டுள்ளது.

மங்கல வாழ்த்துப்பாடலில் புகாரை வாழ்த்தும் போது,

'வீங்குநீர் வேலி யுலகிற் கவன்குலத்தோ'
டோங்குப் பரந்தொழுக லான்'[12]

என்றும் இறுதியில் பாடல் முடியும் போது,

'இப்பா லிமயத் திருத்திய வாள் வேங்கை
....
ஒருதனி யாழி யுருட்டுவோ னெனவே'[13]

என்று சோழமன்னனைப் பற்றி வருகின்றது. மேற்கூறிய வற்றிலிருந்து சோழ மன்னனுடைய குடிச்சிறப்பையும் வெற்றிச் சிறப்பையும் அறியமுடிகிறது.

4.2 வணிகர்

சிலம்பில் மங்கல வாழ்த்துப்பாடலில் அரசனோடு ஒப்ப மதிக்கத்தக்க வகையில் செல்வ வளத்தில் வணிகர் உயர்ந்து விளங்கினர். இதனை,

'ஒருதனிக் குடிகளோ டுயர்ந்தோங்கு செல்வத்தான்' [14]

என்று கூறுவதிலிருந்து அறியலாம். மேலும் திருமணம் முதலிய விழாக்கள் போது அரசனோடு ஒப்ப மதிக்கத்தக்க வகையில் வணிகர் கொண்டாடினர். சான்றாக, கோவலன் — கண்ணகி திருமணத்தைக் கூறலாம்.

4.3 பார்ப்பார்

பார்ப்பாரைப் பற்றி ஓரிடத்தில் மட்டும் குறிப்பு வருசிறது இதற்கு அடியார்க்கு நல்லார், "பிதாமகன்; புரோகிதன்" எனப் பொருள் உரைப்பர் இவர்கள் திருமணத்தில் தீ வளர்த்து வேதம் ஓதி வாழ்ந்தனர் என அறியப்பெறுகிறது.

5.0 முடிவுரை

இது காறும் கண்டவற்றிலிருந்து,

1. திருமணம் ஒரு குழுவினரிடம் ஆரிய முறைப்படி நடந்துள்ளது. ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமண வயது நிர்ணயிக்கப்பட்டு நன்முறையில் பின்பற்றப்பட்டது;

2. புகார்நகரம் பதிஎழு அறியாப் பழங்குடி பெற்ற நகர மென்று சிறப்புற்று விளங்கிற்று.

3. அரசர், வணிகர், பார்ப்பார் மூவரைப்பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. அரசரைப்பற்றி நான்கிடத்தும், வணிகர் குறித்து ஈரிடத்தும், பார்ப்பார் பற்றி ஓரிடத்தும் குறிப்புகள் உள்ளன. அரசருக்கு அடுத்த நிலையில் **(standard of living)** வணிகர் இருந்திருக்கலாம் என அறியப்பெறுகிறது.

அடிக்குறிப்புகள்

1) தி சு. அவினாசிலிங்கம், **கலைக்களஞ்சியம்**. தொகுதி-4, தமிழ்வளர்ச்சிக்கழகம், சென்னை, 1956, பக்கம்.477.
2) லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார், **சங்ககாலத் தமிழர் வாழ்வு**, பக்கம். 74.
3) சிலப். 1 : 41–42.
4) சிலப். 1 : 48-49.
5) சிலப். 1 : 61-62
6) அகம். 86 : 13-14
7) அகம். 86 : 19
8) சிலப். 1 : 22
9) சிலப். 1 : 16
10) சிலப். 1 : 10-12
11) சிலப். 1 : 31
12) சிலப். 1 : 11-12
13) சிலப். 1 : 65-68
14) சிலப். 1 : 32

கோயில்களின் உட்பொருள் நுட்பம்

இல. தங்கவேல்,
பாளையங்கோட்டூர்.

1. முன்னுரை

உள்ளத்தைப் பக்குவப் படுத்தவும் உயரிய உணர்வை உருவாக்கவும் உதவுவது சமயமாகும். சிவபெருமானை முழு முதல் கடவுளாகப் போற்றும் சைவம், சமயங்களை நால்வகைப் படுத்துகின்றது. வேதங்களையும் ஆகமங்களையும் ஏற்றுக் கொள்ளும் வேறுபாட்டின் அடிப்படையின் அகச்சமயம், புறச் சமயம், அகப்புறச்சமயம், புறப் புறச் சமயம் என அவை நான்காம் இவை ஒவ்வொன்றும் ஆறு ஆறு ஆக மேலும் வகுக்கப்பட்டுள்ளன. இறைவன் குடியிருக்கும் இல்லமே கோவில் ஆகும். வடமொழிவாணர் கோவிலை "ஆலயம்" எனக் குறிப்பர். கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எனவும் ஆலயம் தொழுவது சாலவும் நன்று எனவும் வழங்கும் தொடர்கள் கோவிலின் மாண்பை எடுத்து மொழிகின்றன. திருக்கோவில் அமைப்பும், பிற சிறப்பும் பலவாக விரித்துரைக் கப்பட்டுள்ளன. கோவில் என்றாலே தில்லைத் திருக்கோவிலையே குறிக்கும் என்பர்

2. இறையும் நிறையும்

இறைவன் எல்லா இடங்களிலும் நிறைந்துள்ளான். வட மொழியாளர் இச் செய்தியை 'சருவ வியாபி' என்று கூறுவர். நிலம், நீர், நெருப்பு, காற்று, விண்வெளி ஆகிய ஐந்தும் கலந்த நிலையே உலகம். இறைவனை வழிபடுவதற்கு உருவ நிலை தேவைப்படும். பழந்தமிழர் இறைவனை ஐம்பெரும் பூதங்களின் வடிவில் வழிபட்டு வந்துள்ளனர். இறைவன் நிலவடிவில் வழி படப்பெறும் இடம் திருவாரூர்; நீர்வடிவில் வழிபடப்பெறும்

இடம் திருவானைக்கா; நெருப்பு வடிவில் வழிபடப் பெறும் இடம் திருவண்ணாமலை; காற்று வடிவில் வழிபடப்பெறும் இடம் திருக்காளத்தி; விண்வெளி உருவில் வழிபடப்பெறும் இடம் தில்லையாகிய சிதம்பரம். அருளாளர் திருமூலர் இறைவன் ஐம்பூதங்களிலும் கூத்தாடுவதாகப் பாடிப் பரவுகிறார்.

"காளியோ டாடிக் கனகாசலத் தாடிக்
கூளியோ டாடிக் குவலயத்தே யாடி
நீடியநீர் தீகால் நீள்வானிடை யாடி
நாளுற அம்பலத் தேயாடும் நாதனே"

சிவபெருமானின் திருக்கூத்து ஐந்து தொழிலையும் உணர்த்துவதாகும். படைத்தல் தொழிலால் அவர் பிரமன் ஆகிறார் காத்தல் தொழிலால் அவர் திருமால் ஆகிறார்; அழித்தல் தொழிலால் அவர் உருத்திரன் ஆகிறார்; மறைத்தல் தொழிலால் அவர் மகேசுவரர் ஆகிறார்; அருளல் தொழிலால் அவர் சதாசிவம் ஆகிறார். நடராசத்தோற்றத்தில் திருக்கை உடுக்கை உலகின் படைப்பையும், அருளும் திருக்கை காத்தலையும், கை நெருப்பு அழித்தலையும், முயலகனாகிய பூதத்தின்மீது அமர்ந்த கால் மறைத்தலையும். தூக்கியகால் அருளலையும் குறிக்கின்றன. உலகம் விராடபுருவனின் வடிவம் என்பர். அதன் மூல ஆதாரமாக அமைவது திருவாரூர் கொப்பூழ் ஆகத் திகழ்வது திருவானைக்கா; மணிபூரகமாக மிளிர்வது திருவண்ணாமலை; கண்டமாக விளங்குவது திருக்காளத்தி; இதயமாகத் துலங்குவது தில்லை. இறைவன் திருக்கூத்து நிகழ்த்தும் தில்லை பொன்னம்பலம் எனவும், மதுரை வெள்ளிபம்பலம் எனவும், நெல்லை தாமிர அம்பலம் எனவும், திருக்குற்றாலம் சித்திர அம்பலம் எனவும், திருவாலங்காடு இரத்தின அம்பலம் எனவும் வழங்கப் படுகின்றன இறைவன் நிறைவுடையவராக இருப்பதுபோன்று நாம் ஒவ்வொருவரும் நிறைவுடையவராகத் திகழ வேண்டும். 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே'. என்னும் குமர குருபரரின் கருத்து ஈண்டு எண்ணதக்கதாகும்.

3 வழிபாட்டுத் தலங்கள்

அருள்மொழித் தேவராகிய சேக்கிழாருக்கு 'உலகெலாம்', என்று அடியெடுத்து கொடுத்து, 'திருத்தொண்டர் புராணம் பாடத் தூண்டியவர் சிவபெருமான் என்பர் உலகம் என்னும் சொல் நிலத்தைக் குறிப்பதாகவும், 'உலாவுதல்' என்னும் சொல் காற்றைக் குறிப்பதாகவும்.' நீர்மலி வேணியன்' என்னும் சொல் நீரைக் குறிப்பதாகவும், 'அலகில் சோதியன்' என்னும் சொல் நெருப்பைக் குறிப்பதாகவும் அம்பலத்தாடுவான் என்னும் சொல் விண்வெளியைக் குறிப்பதாகவும் அமைந்துள்ளன. ஐம்பெரும் பூதங்களைக் குறித்துக் கட்டப்பட்ட கோயில்கள் காஞ்சி, காளத்தி, திருவானைக்கா, திருவண்ணாமலை, சிதம்பரம் ஆகிய இடங்களில் சிறப்புற விளங்குகின்றன. காஞ்சி ஏகாம்பரநாதர் கோவில் கோபுரம் பதினொரு அடுக்கு உடையதாகும். ஆயிரங்கால் மண்டபமும், பெரிய குளமும் அங்கே உள்ளன களாத்தி கோவிலின் மூலதானத்தில் எரியும் விளக்குகள் காற்றினால் அசைகின்றன. வேடன் கண்ணப்பன் முத்தி பெற்ற தலம் இது. கிருட்டிண தேவராயன் கட்டிய மண்பமும், இரண்டாம் குலோத்துங்கன் எழுப்பிய கோபுரமும் குறிப்பிடத்தக்கன இக் கோவிலுக்குக் குளத்திற்குப் பதிலாக் சுவர்ணமுகி ஆறு அமைந்துள்ளது. சோழன் செங்கணான் கட்டிய எழுபத்திரண்டு கோவில்களுள் திருவானைக்கா கோவில் தனிச்சிறப்பு வாய்ந்தாகும்; யானை முத்தி பெற்ற திருத்தலம் இது துப்புரவிற்குப் பெயர் பெற்ற திருவண்ணமலைக் கோவில் நெருப்பைக் குறித்துக் கட்டப்பட்டதாகும். நெருப்பில் உள்ள தீ உற்பத்திக்கும், அழல் காப்புக்கும், வெளிச்சம் விளக்கத்துகும் உதவுகின்றன இடைக் காட்டுச் சித்தர், அருணகிரியார் வல்லாள அரசன் ஆகியோர் இத்தலத்தில் முத்தி அடைந்து உள்ளனர். வெளிவடிவில் உருவாகிய தில்லைக் கோவில் சிற்றம் பலத்திற்குப் பராந்தகச் சோழனும், பேரம்பலத்துக்கு இரண்டாம் குலோத்துங்கச் சோழனும் பொன்னால் கூரை வேய்ந்துள்ளனர். மூவர் அருளிய தேவாரப் பாடல்களைப் பெற்றிருந்த இத்திருக்கோவிலிலிருந்து இராசராசன் மீட்டுக் காத்த ஓலைகளே இப்போது அச்சாகி உள்ளன. திருமூலரும்,,

சேக்கிழாரும் தங்கள் அருள்நூல்களை இங்கிருந்தே எழுதி முடித்தனர் என்பர்.

4. ஏழும் எட்டும்

இறைவனின் நாட்டியத்தை அடிப்படையாகக் கொண்டு ஏழு இடங்கள் சிறப்பித்துச் சொல்லப்படுகின்றன. அசபா நடனத்தை ஆடும் வீதிவிடங்கரைத் திருவாரூரில் காணலாம்; உன்மத்த நடனம் ஆடும் நாக விடங்கரைத் திருநள்ளாற்றில் பார்க்கலாம்; பாரா ஆதரங்க நடனம் ஆடும் சுந்தரவிடங்கரைத் திருநாகைக் காரோணத்தில் சந்திக்கலாம்; குக்குட நடனம் ஆடும் ஆதிவிடங்கரைத் திருக்காறாயில் சேவிக்கலாம்; பிருங்க நடனம் ஆடும் அவனிவிடங்கரைத் திருக்கோளிலியில் வணங்கலாம்; கமலநடனம் ஆடும் நீலவிடங்கரைத் திருவாய் மூரில் தரிசிக்கலாம்; அத்தபாத நடனம் ஆடும் புவனிவிடங் கரைத் திருமறைக் காட்டில் தொழலாம். இறைவனின் வீரச் செயல்களை விளம்பும் திருத்தலங்கள் எட்டும் அட்டவீரட்டங் களாகும். சிவபெருமான் பிரமனது தலையைக் கொய்த இடம் திருக்கண்டியூராகும்; அந்தக அசுரனைக் கொன்ற இடம் திருக்கோவிலூர் ஆகும்; திரிபுரத்தை எரித்த இடம் திருவதிகை ஆகும்: தக்கன் தலையைக் கொய்த இடம் திருப்பறியலூர் ஆகும்; சலந்தர அசுரனைக் கொன்ற இடம் திருவிற்குடியாகும்; சிவபெருமான் யானையை வழுவூரில் உறித்தார்; காமனைத் திருக்குறுக்கையில் எரித்தார்; எமனைத் திருக்கடவூரில் உதைத்தார் என்பர்.

5. மும்முறையும் உட்பொருளும்

மாந்தர் ஒவ்வொருவரும் அறிவு, இச்சை, செயல் ஆகிய மூன்று இயல்பினராவர். அறிவு வரம்பற்றது; இச்சை எல்லை யற்றது, அவை இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு இயற்றும் செயல் பல சிக்கல்களை எழுப்புவது. ஆன்மாவுக்கு உணவு தருவதற்காக உருவாக்கப்பட்ட திருக்கோவில்களில் அறிவு, இச்சை, செயல் ஆகியவற்றிற்கு ஏற்ப அமைப்பு முறை ஆராதனை முறை, தரிசன முறை ஆகியவை விளங்குகின்றன. அடியாருடைய அறிவைப் பெருக்குவது அறிகுறிப்பொருளாகும்.

இச்சையைப் பயன்படுத்துவது அருள் நெறிப் பொருளாகும். அடியாருக்கு உள்ளத்தே அமைதியையும் ஆன்மீக வளர்ச்சியையும் வழங்குவது அநுபவப் பொருளாகும். அன்பையே மத்தாக்கி அறிவைக்கயிறாகச் சுருட்டி ஊக்கத்துடன் கடைந்தால் பாலில் நெய்யாக அமைந்துள்ள இறைவன் பாரினில் தோன்றுவான் என்கிறார் திருநாவுக்கரசர்.

'விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்,
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்;
உறவுக் கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே'

ஆறுமுக நாவலர் தம் பால பாடத்தில் கூறுவது போன்று, கடவுளுடைய பண்புகளையும், பெருமைகளையும் அவரை வழிபடுமுறையினையும், அவ்வழிபாட்டால் பெறப்படும் பயனையும் நாம் உணர்ந்து செயலாற்ற வேண்டும். திருக்கோவில்கள் தூலமாயும் சூக்குமமாயும் காட்டும் வழிகளில் அவற்றைப் பின்பற்றி ஒழுகுவதே உண்மை வழிபாடாகும்.

6 அம்பலத்தாடுவான்

திருச்சிற்றம்பலத்தில் இன்பக் கூத்தருளும் சிவபெருமான் நடராசன் எனப் போற்றப்படுகிறான். தில்லையில் ஐம்பத்தொரு ஏக்கர் நிலப்பரப்பில் விளங்கும் திருக்கோயில் நூற்று முப்பத்து மூன்று அடி உயரமுள்ள இராச கோபுரங்கள் நான்குடன் திகழ்கிறது. சிற்சபை என்னும் பொன்னம்பலத்தின் மேலுள்ள ஒன்பது தங்கக் கலசங்கள் ஒன்பது சக்திகளைக் குறிக்கின்றன; அறுபத்துநான்கு கலைகளைச் சுட்டும் வகையில் இங்கே அறுபத்து நான்கு கைம்மரங்கள் அமைந்துள்ளன; மாந்தன் நாள் தோறும் வெளிவிடும் மூச்சுக்காற்றை உணர்த்தும் வகையில் இருபத்தொன்றாயிரத்து அறுநூறு ஓடுகள் வேயப்பட்டுள்ளன; நாடிகளின் எண்ணிக்கையை உணர்த்தும் வகையில் எழுபத்திராயிரம் ஆணிகள் பொருத்தப்பட்டுள்ளன. மாந்தன் உள்ளத்தில் உறையும் இறைவனே பொன்னம்பலத்தில் வீற்றிருக்கின்றார். கனகசபையில் உள்ள பதினெட்டுத்

தூண்கள் பதினெட்டுப் புராணங்களை உணர்த்துகின்றன. வெள்ளிப் படிகள் ஐந்தும் ஐந்தெழுத்தை நினைவூட்டுகின்றன. பலகணிகள் தொண்ணூற்றாறும் தத்துவங்களைத் தெளிவுறுத்துகின்றன. சிற்சபையில் இறைவன் விண்வெளி வடிவில் இருக்கிறார் என்பதை உணர்த்தும் வகையில் திருவுருவம் எதுவுமின்றி, பொன்னாலான வில்வதள மாலை ஒன்று மட்டும் தொங்கிக் கொண்டிருக்கிறது சைவ சமயக்குரவர் நால்வரும் பணிந்து வணங்கிப் போற்றிப் பதிகங்கள் பாடிய பெருமைக்குரிய திருத்தலம் தில்லை அங்கே சிற்றம்பலம், பொன்னம்பலம், பேரம்பலம், நாட்டிய சபை, ஆயிரங்கால் மண்டபமாகிய அரசவை என்னும் ஐந்து அமைப்புகள் உள்ளன.

நிறைவுரை

தில்லைத் திருக்கோவில் சைவப் பெருமக்களுக்குத் தனிச் சிறப்பும், பெருமையும் தருவதாகும். தமிழகத்தில் ஆயிரத் தெட்டுச் சிவன் கோவில்கள் உள்ளனவாம். எனினும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் மேன்மையுடன் மிளிரும் தில்லையே 'திருக்கோவில்' என்று ஏற்றிப் போற்றப்படுகிறது. 'புலியூர்', புண்டரீகபுரம், பூலோக கைலாசம், வியாக்கிரபுரம் ஆகிய பல்வேறு பெயர்களுடன் தில்லை திகழ்கிறது. தமிழகத் திருக்கோவில்களுள் மிகுதியான நூல்களினாலும், பாடல்களினாலும் போற்றப்படும் தில்லையில் ஆறுகால பூசைகளுக்கும் விழாக்களுக்கும் கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டு முறையாக நிறைவேற்றப்படுகின்றன. கௌட நாட்டுச் சிம்ம வர்மன் தன் உடல் நோய் நீங்கிப் பொன்னிறத்துடன் பொலிவதற்குப் பேரருள் புரிந்த சிவபெருமானுக்கு எழுப்பிய திருக்கோவிலில் பிற்காலத்தில் இரண்டாம் குலோத்துங்கச் சோழன் பல அரிய திருப்பணிகளை நிறைவேற்றியுள்ளான்; விக்கிரமசோழன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோரால் கோவிலின் மூன்றாம் சுற்று மாளிகை அமைந்துள்ளது. நடராசப் பெருமானைப் போற்றிப் பாடி முத்தி அடைந்த முத்துத்தாண்டவர் கீர்த்தனைகள் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவை.

தமிழ் நாளிதழ்களில் வாசகர் கடிதங்கள்

சு. தம்புசாமி
பூலாம்பாடி- பெரம்பலூர்

நாளிதழ்களின் உள்ளடக்கத்தை செய்திக் கூறு என்றும் செய்தியல்லாக் கூறுகள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். செய்தியல்லாக் கூறுகளில் ஒன்றுதான் வாசகர் கடிதங்கள் என்ற பகுதியாகும். வாசகர் கடிதங்கள் என்பது நாளிதழின் வாசகர்கள் அதில் வெளிவந்த செய்திகள், கட்டுரைகள், தலையங்கம், தொடர்கதை, சிறுகதை, சிரிப்புப் படம், கருத்துப்படம் முதலானவற்றைப் பற்றி எழுதுகின்ற கருத்துப் பட்டைப்பு எனலாம்.

தலையங்கத்தைப் போலவே வாசகர் கடிதங்கள் என்பதும் கருத்து வெளிப்பாடுதான் என்றாலும் இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. தலையங்கம் நாளிதழின் ஆசிரியரால் அல்லது ஆசிரியர் குழுவினரால், அந்த நாளிதழின் கொள்கைகளுக் கேற்ப எழுதப்படுவதாகும். இதில் வாசகர்களின் கருத்துக்களே இடம் பெற்றிருக்கும்

உங்களுக்கென்ன வந்தது என்ற மனப்பான்மையுள்ள சமுதாயத்தில் நாளிதழ்களுக்கு வாசகர் கடிதங்களை எழுதுவோரின் பணி மகத்தானது, எதையும் சாதிக்கும் வல்லமை படைதததாகும். பல சமூகப் பிரச்சனைகள் இவர்கள் எழுதும் கடிதங்களால் தீர்ந்திருக்கின்றன.

இக்கட்டுரைக்கு 1987 - ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வெளிவந்த தினமணி, தினமலர், தினத்தந்தி நாளிதழ்கள் மட்டும் ஆய்வுப் பரப்பாகக் கொள்ளப்பட்டது. கட்டுரையில்

மூன்று நாளிதழ்களிலும் வாசகர் கடிதங்கள் அமைந்துள்ள பக்கம் வாசகர் கடிதங்களை எந்த தலைப்புகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன, இந்த நாளிதழ்களில் காணப்படும் வாசகர் கடிதங்களின் அமைப்பு, நாளிதழ்கள் வாசகர் கடிதங்களுக்கு கொடுத்துள்ள முக்கியத்துவம், வாசகர்களின் சிந்தனைத் திறன் முதலானவைப் பற்றி கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு உள்ளன.

வாசகர் கடிதங்கள் அமைந்துள்ள பக்கம்

தினமணி, தினமலர், தினத்தந்தி என்ற மூன்று நாளிதழ்களும் வாசகர் கடிதங்களை ஒரு குறிப்பிட்ட பக்கத்தில் வெளியிடுவதை வழக்கமாகக் கொணடுள்ளன. தினமணி நாளிதழ் ஒவ்வொரு நாளும் நான்காவது பக்கத்தின் இறுதிப் பகுதியில் வாசகர் கடிதங்களை வெளியிடுகின்றது. இப்பகுதியில் தலையங்கம், கட்டுரைகள் முதலான படைப்புகள் இடம் பெற்றிருக்கின்றன. தினமலர் வாசகர் கடிதங்களை ஆறாவது பக்கத்தில் வெளியிட்டுள்ளது. தினத்தந்தி நான்காவது பக்கத்தில் வாசகர் கடிதங்களை வெளியிடுகின்றது. இப்பகுதியில் ஆண்டியார் என்ற சிரிப்புப் பகுதியும், படக்கதையும் இடம் பெற்றிருக்கும்,

வாசகர் கடிதங்கள் வெளியிடப்படும் தலைப்புகள்

தினமணியில் வாசகர் கடிதங்கள் இரண்டு தலைப்புகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது. 'வாசகர் கருத்துக்கள்' என்ற தலைப்பில் கீழ் செய்தி, கட்டுரை, தலையங்கம், பிற படைப்புகளைப் பற்றிய கடிதங்களையும் 'ஆராய்ச்சிமணி' என்ற தலைப்பின் கீழ் நகர மக்களின் குறைகளையும் எடுத்துச் கூறும் கடிதங்களை ஒவ்வொரு வாரமும் புதன்கிழமையன்று வெளியிடுகின்றது.

தினமலரில் 'புகார்பெட்டி' என்ற தலைப்பின் கீழ் வாசகர் கடிதங்கள் வந்துள்ளது 'புகார் பெட்டி' என்ற தலைப்புக்கு ஏற்ப 'சாலையை சரி செய்ய வேண்டும்' 'மின்சப்ளை சரியாகுமா' என்பது போன்ற புகார் கடிதங்களையே வெளியிட்டுள்ளது.

தினத்தந்தி வாசகர் கடிதங்களை 'உங்கள் குரல்' என்ற தலைப்பின் கீழ் பல்வேறு வகையான கடிதங்களை வெளியிட்டு உள்ளது.

வாசகர் கடிதங்களுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம்

ஒரு நாளிதழில் வெளியாகும் வாசகர் கடிதங்களை வைத்துக் கொண்டு, அந்த நாளிதழ் வாசகர் மத்தியில் எத்தகைய செல்வாக்குப் பெற்றுள்ளது என்பதனை அறியலாம். தினமணி நாளிதழ் டிசம்பர் மாதத்தில் 349 வாசகர் கடிதங்களை வெளியிட்டுள்ளது. தினமலர் 5 வாசகர் கடிதங்களையும் தினத்தந்தி 46 வாசகர் கடிதங்களையும் வெளியிட்டுள்ளன. இந்த எண்ணிக்கையைப் பார்க்கும்போது தினமணி நாளிதழே வாசகர் கடிதங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பது புலனாகின்றது. இதிலிருந்து வாசகர் மத்தியில் செல்வாக்குப் பெற்ற இதழாக விளங்குவது தினமணி நாளிதழே என்பது தெளிவாக விளங்குகின்றது.

வாசகர் கடிதங்களின் அமைப்பு

வாசகர் கடிதங்கள் ஏதேனும் ஒரு செய்தியை அல்லது கருத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுவதாகும். வாசகர் தாம் படித்த செய்தி என்ன என்பதையோ அல்லது தாம் எடுத்துக் கொண்டுள்ள கருத்து என்ன என்பதை தெரிவித்தப் பிறகு, தாம் சொல்ல வந்ததைக் கூறி முடிவில் அதற்கு வேண்டுகோள் விடுப்பதாகவோ ஆதரிப்பதாகவோ, அல்லது எச்சரிக்கை செய்வதாகவோ, பிரச்சனைகளுக்குத் தீர்வு சொல்வதாகவோ, பாராட்டுத் தெரிவிப்பதாகவோ அமைக்கப்படுதல் வேண்டும். இத்தகைய அமைப்பு முறையினை மூன்று நாளிதழ்களுமே பின்பற்றுகின்றன என்றாலும், தினமணி நாளிதழே அமைப்பில் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளதைக் காணமுடிகிறது.

தினமணி, தினமலர், தினத்தந்தி என்ற மூன்று இதழ்களுமே வாசகர் கடிதங்களுக்கு தலைப்புகள் கொடுத்து வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளன. தினமணியும் தினமலரும்

கடிதங்களுக்கு தலைப்பு கொடுத்தவுடன் நேரடியாகவே தொடங்கிவிடுகின்றன. தினத்தந்தி நாளிதழ் மட்டும் 'ஐயா' என்று விளித்து பின்பு கடிதங்களை வெளியிட்டுள்ளது

வாசகர் கடிதங்கள் ஒரு அஞ்சல் அட்டையில் எழுதக்கூடிய அளவிலேயே அமைந்திருக்க வேண்டும் என்பது நாளிதழ்கள் வகுத்துள்ள ஒரு பொதுவன விதியாகும் தினத்தந்தியிலும் தினமலரிலும் அமைந்துள்ள கடிதங்கள் அந்த அளவிலேயே அமைந்துள்ளன. ஆனால் தினமணியில் அமைந்துள்ள பெரும் பாலான கடிதங்கள் அஞ்சல் அட்டையில் அடக்க முடியாத அளவில் பெரியனவாக காணப்படுகின்றன.

கடிதங்களின் மொழிநடை

தினமணி நாளிதழ் வாசகர் கடிதங்களுக்கு கொடுக்கும் தலைப்புகளையும் வாசகர் கடிதங்களில் அமைந்துள்ள கருத்துக் களையும் நல்ல தமிழில் வெளியிடுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளது. தினமலரில் தலைப்புகள் மக்கள் மொழியிலும் (பெரம்பலுருக்கு ரூட்பஸ் வேண்டும். மின்சப்ளை சரியாகுமா, கரண்ட் நடத்தும் கண்ணாமூச்சி) கடிதங்களின் கருத்துக்கள் நல்ல தமிழிலும் அமைந்துள்ளன.

தினத்தந்தியில் வாசகர் கடிதங்களுக்கு கொடுக்கப்படும் தலைப்பும், வாசகர் கடிதங்களும் மக்கள் மொழியிலேயே அமைந்துள்ளன. "நாம் யாரை நொந்து கொள்வது? இலங்கை யில் மீண்டும் போரா? நினைக்கவே சங்கடம் போங்கள்' என்றும் "கன்னித்தீவு படக்கதை படிக்க படிக்க விறுவிறுப்பாக இருக்கிறது. சிந்துபாத் சரியான சூரன் என்ற தினத்தந்தியின் கடிதங்கள் மக்கள் மொழி நடையில் அமைந்திருப்பதைக் காணலாம்.

சிந்தனைத் திறன்

தினமணிக்கு வாசகர் கடிதங்களை கல்லூரி பேராசியர்கள் நீதிபதிகள், மருத்துவ அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் என்று பல்வேறு பதவிகளில் இருப்பவர்களும் எழுதியுள்ளனர். இவர்கள் மொழி பற்றிய

பிரச்சனை, இலங்கைப் பிரச்சனை, அரசியல் பிரச்சனை அரசு அறிவிக்கும் திட்டங்கள், சமுதாயப் பிரச்சனை என்று பல்வேறு பிரச்சனைகளைப் பற்றி எழுதியிருப்பதால் கடிதங்கள் சிந்தனை வளம் படைத்தவைகளாக விளங்குகின்றன.

(எ.டு.) 'அறிவியல் சொல்லாக்கம் மட்டும் போதுமா? என வினவிய திரு. ஆர். சத்யன் "சொல்லாக்கம் குழுக்கள் தேவையில்லை. அறிவியல் சொல்லாக்கம் கூடாது அது தானே வரும்" என்று கூறுவது எற்புடையது அல்ல. விஞ்ஞானம் வளர்ந்தாலும் விஞ்ஞானச் சொற்களைத் தரப்படுத்த ஓர் அமைப்பு தேவையே. ஏற்கனவே நிலைபெற்ற அறிவியலுக்கும் இனி வளரும் அறிவியலுக்கும் ஒருங்கிணைந்த கலைச் சொல் லாக்கம் மிகமிக இன்றியமையாதது. இல்லையெனில் ஒரு மொழி பேசும் மக்களுக்குள்ளேயே அறிவியல் தொடர்பும் வளர்ச்சியும் எந்த ஓர்மையும் இன்றிச் சிதைந்துபோகும். கலைச்சொல்லாக்க மே கூடாது என வெறுத்தல் லஞ்ச ஊழல்களுக்கு நடுவில் தூய வாழ்க்கை நடத்த இயலாததால் வாழ்க்கையே வேண்டாம் எனச் சொல்வதை ஒத்தது' என்ற தினமணி வாசகரின் கடிதத்தில் அறிவியல் சொல்லாக்கத்தின் தேவையை வலியுறுத்து வதில் சிந்தனைத்திறன் வெளிப்பட்டிருப்பதனைக் காணலாம்.

தினமலரின் வாசகர்கள் நகர மற்றும் கிராம மக்களின் குறைகளைப் பற்றிய கடிதங்களை மட்டுமே எழுதியிருப்பதால் சிந்தனைத் திறன் வெளிப்படவில்லை

தினத்தந்தியின் வாசகர்கள் பல்வேறு வகையான கடிதங் களை எழுதியிருந்தாலும் கூட அக்கடிதங்கள் தினமணியின் வாசகர் கடிதங்களைப் போல சிந்தனை வளம் படைத்தவ கள்ாக இல்லை என்று குறிப்பிடலாம்.

முடிவுரை

1) தினத்தந்தி, தின்மலர், தினமணி ஆகிய மூன்று நாளிதழ் களும் வாசகர் கடிதங்களை வெவ்வேறு பக்கங்களில் வெளியிடுகின்றன.

2) தினமணி, 'வாசகர் கருத்துக்கள்' 'ஆராய்ச்சிமணி' என்ற இரு தலைப்புகளிலும் தினமலர் 'புகார் பெட்டி' என்ற தலைப்பிலும் தினத்தந்தி 'உங்கள் கருத்துக்கள்' என்ற தலைப்பிலும் வாசகர் கடிதங்களை வெளியிட்டு உள்ளன.

3) தினத்தந்தி, தினமலரைக் காட்டிலும் தினமணி நாளிதழே வாசகர் கடிதங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றது.

4) வாசகர் கடிதங்களின் அமைப்புமுறையிலும் தினமணியே மிகுத்த கவனம் செலுத்துகின்றது.

5) தினமணி வாசகர் கடிதங்களை நல்ல தமிழில் வெளியிடு கின்றது. தினத்தந்தியும் தினமலரும் மக்கள் மொழி நடையில் வெளியிடுகின்றன.

6) தினத்தந்தி, தினமலர் வாசகர்களைவிட தினமணியின் வாசகர்கள் உயர்ந்த பதவிகளில் இருப்பவர்களாகவும், சிந்தனைத் திறன் மிக்கவர்களாகவும் விளங்கு கின்றனர்.

காணிக்காரர்களின் மதமும் கடவுள் வழிபாடும்

யோ. தர்மராஜ்,
கேரளப் பல்கலைக்கழகம்.

பழங்குடிகளுடைய மொழி, பழக்கவழக்கங்கள், நம்பிக்கை கடவுள் வழிபாடு போன்றவை நாகரீகச்சமுதாய அமைப்புகளிலிருந்து வேறுபடுகின்றன. 'காணிக்காரன்' என்னும் பழங்குடி மக்கள் நெல்லை மாவட்டத்தில் ஐந்து குடியிருப்புகளிலும் குமரி மாவட்டத்தில் நாற்பத்தெட்டரைக் குடியிருப்புகளிலும் வாழ்ந்து வருகின்றனர். தமிழகத்தில் மட்டும் சுமார் ஏழாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இருப்பதாக அறிய முடிகின்றது. இக்கட்டுரையில் காணிக்காரர்களின் மதமும் கடவுள் வழிபாடும் குறித்துச் சித்தரிக்கப்படுகின்றது.

காணிக்காரர்களின் மதமும் வழிபாடும்

பழங்குடி மக்களிடையே குறிப்பிட்ட தெய்வவழிபாடு காணப்படுவதில்லை. பல தெய்வவழிபாடுதான் மிகுதியாக உள்ளது. காணிக்காரர்களிடையே பெருந்தெய்வ வழிபாட்டைவிடச் சிறு தெய்வ வழிபாடுதான் மிகுதியாகக் காணப்படுகிறது. கள ஆய்விலிருந்து தொடக்க காலத்தில் இயற்கை வழிபாடும் பின்னர் குல தெய்வவழிபாடும் தற்காலத்தில் சிறுபான்மை, பெருந்தெய்வ வழிபாடும் அவர்களிடம் இருந்து வருவதை அறிய முடிகின்றது.

வழிபாட்டுமுறைகள்

பழங்குடி மக்கள் இயற்கையின் சீற்றத்திலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளவும் இறந்த முன்னோர்களின் ஆவிகள்

தங்களைத் துன்புறுத்துவதிலிருந்து விடுபடவும் வழிபாடுகள் நடத்தினர். தற்காலத்தில் வெளியுலகத் தொடர்பால் பெருந் தெய்வழிபாட்டையும் கடைபிடிக்கின்றனர். இறைவழிபாட்டில் தெய்வத்திற்குப் படைக்கப்படும் பொருட்கள் தெய்வத்திற் குத் தெய்வம் வேறுபடுகின்றன. பொதுவான வழிபாட்டுப் பொருட்களாக பழம். வெற்றிலை, பாக்கு, கமுகம்பூ, பொரி. தெள்ளி ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுடன் சில தெய்வங்களுக்குக் கஞ்சா சாராயம், ஆழத் தெங்கின் கள் போன்றனவும் படைக்கப்படுகின்றன. சிறு தெய்வங்களில் சில வற்றிற்குக் கோழியும் ஆட்டுக்கடாவும் பலி செலுத்தப்படு கின்றன. கோயில்கட்டி வழிபடும் வழக்கம் சில இடங்களில் காணப்படுகினறன

காணிக்காரர்கள் வழிபடும் தெய்வங்கள்

காணிக்காரர்கள் எண்ணற்ற தெய்வங்களை வழிபடு கின்றனர். அத்தெய்வங்கள் ஒரு காலத்தில் அவர்களிடையே மனிதனாக வாழ்ந்து செயற்கரிய வீரதீரச் செயல்கள் செய்தவர் களே ஆவர்.

காலாட்டுத்தம்புரான், கீமலைத்தம்புரான், சாஸ்தா, அகஸ்தியர் ஆகியோரைக் குறித்த தோற்றப்பாடல்களும் கதை களுமே அதற்குச் சான்றாகும். அத்தெய்வங்களுள் மாடன், மாரியம்மை, வேட்டைத் தெய்வமாகிய காத்திரவாணிமக்கள், அகஸ்தியல். சூரியன் உச்சிலிப்பே, மல்லன் தம்புரான், மாதப் பெருமாள், ஆயிரவில்லி, எசக்கி சிவன், விஷ்ணு. சுப்பிர மணியன். கொட்டாரத்து தமபுரான், அய்யப்பசாமி போன்ற தெய்வங்களையும் வழிபடுகின்றனர்.

சூரிய வழிபாடு

பழங்குடி மக்கள் இயற்கையை வழிபடுவதில் சூரியவழி பாடுதான் முதன்மை வழிபாடாகக் கருதப்படுகின்றது. காணிக் காரர்களும் சூரியனை இவ்வுலகைப் படைத்த பகவான் என்றும் தம்புரான் என்றும் அழைக்கின்றனர். வேதங்களிலும் சூரிய வழிபாடு குறிப்பிடப்படுவதை இங்கு இணைத்துப் பார்க்கலாம். தமிழ்ப் பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம்

'ஞாயிறு போற்றுதும் ஞாயிறுப் போற்றுதும்' என்று சூரிய வழி பாட்டைக் குறிப்பிடுகின்றது. நாட்டுப் புறங்களில் வாழும் மக்கள் தைப்பொங்கல் அன்று புதுக்கலத்தில் பொங்கலிட்டு சூரியனுக்குப் படைக்கின்றனர். அறிந்தோ அறியாமலோ சூரியன் பயிர்செழிப்புக்கும், நோய் தீர்ப்புக்கும் மழை வளத் திற்கும் காரணமாக இருக்கின்றது என்ற நம்பிக்கை இருப்பதைப் பொதுவாக உணர முடிகின்றது.

காணிக்காரர்கள் சூரிய வழிபாட்டிற்காகத் திறந்த வெளி யில் வைத்து அதிகாலை நேரத்தில் பொங்கலை படைக் கின்றனர். பின்னர் வாழை இலையில் சமைத்ததை வைத்துச் சூரியனை வணங்குகின்றனர். அதன்பின் மருதப்பூவால் நீரெடுத்து ஞாயிறை நோக்கித் தெளிக்கின்றனர். இதற்கு நீரும் பூவும் கொடுத்தல் என்று பெயர். வழிபாடு முடிந்தவுடன் படைத்தவற்றை வந்தவர்களுக்குப் பரிமாறுகின்றனர். வேட்டைக்குச் செல்லும் போதும் சூரிய வழிபாடு செய் கின்றனர்

காலாட்டுத் தம்புரான் வழிபாடு

காலாட்டுத் தம்புரான் தோற்றம் குறித்த கதைகளும் பாடல்களும் வாய்மொழியாக வழங்கி வருகின்றன. காலாட்டுத் தம்புரான் வழிபாடு நடைபெறுகின்ற நாளுக்கு முதல்நாள் இரவு சாற்றுப்பாட்டு நடைபெறும். முட்டுக்காணியும் பிலாத்தி யும் 'கொக்கரெ' என்னும் இசைக்கருவியை இசைத்துப் பாடு வார்கள். பெண்கள் அதற்கேற்பக் குரலை ஒலி எழுப்புவார் கள். காலையில் கோழி அல்லது ஆட்டுக்கிடா பலி செலுத்தப் படும். காணிக்காரர்களின் சமுதாயத்தில் யாருக்காவது நோய் ஏற்பட்டால் காலாட்டு தம்புரானைத் துள்ளி வரவழைக் கின்றனர் சாமியை வர வழைத்ததும் நோய் எதனால் வந்த தென்றும் அதனைத் தீர்க்கும் முறைகள் என்னவென்றும் கேட் கிறார்கள், சாமி கேட்பதையெல்லாம் படைக்கப்படுகினறது. காலாட்டுத் தம்புரான் வழிபாடு குலதெய்வவழி பாட்டுவழி வந்த சிறு தெய்வ வழிபாடகத் தோன்றுகிறது.

சாஸ்தா வழிபாடு

திருவிதாங்கூரிலுள்ள மலைப்பகுதிகளில் சாஸ்தா கோவில் கள் காணப்படுகின்றன. குமரி ம்ாவட்டத்திலுள்ள அரங்க நாட்டு சாஸ்தா கோவிலில் வருடந்தோறும் மீனம் (மார்ச்— ஏப்ரல்) மாதம் திருவிழா நடைபெறுகின்றது.

சாஸ்தாவின் தோற்றம் குறித்துப் பல்வேறு கதைகள் வழங்குகின்றன. எல்லாக் கதைகளின் கருத்தும் ஒன்றைத்தான் வலியுறுத்துகின்றன. மனிதனுக்கும், பயிர்களுக்கும் தீங்கு விளை விக்கக்கூடிய கொடிய விலங்குகளை அழிப்பதற்குத் தோன்றிய தாகவே குறிப்பிடுகின்றன. சாஸ்தா தன் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள கருக்கு ஒன்றைப்பறித்து வருகின்றார். தேங்காயின் தொண்டு அவருக்குப் பின்சென்ற பறையனால் நீக்கப்படுகின் றது. சாஸ்தாவும் பறையனும் கூனிச்சிப் பாறைக்கு வருகின்றனர் அங்கு இருள் சூழ்ந்து காணப்பட்டதால் தேங்காய் நீரில் எரியும் படி ஒரு விளக்குச் செய்யப்பட்டது. அவர்கள் கூனிச்சிப் பாறை யில் இருக்கும்போது காணிக்காரர்கள் வாழைப்பழங்களைச் சுமந்து கொண்டிருந்தனர். சாஸ்தாவுடன் வந்த பறையன் அவரைக் காணிக்காரர்களின் பொறுப்பில் விட்டுச் சென்றான். சாஸ்தாவின் தோற்றம் குறித்து அறியாதபோதும் காணிக்காரர் கள்அவரை ஏற்றுக் கொண்டனர்.காணிக்காரர்களுக்கு இன்னல் விளைவிக்கும் கொடிய விலங்குகளையும் பாம்புகளையும் அழிப் பதற்கு வந்ததாகச் சாஸ்தா கூறினார். சாஸ்தாவைப் பின் தொடர்ந்து காணிக்காரர்களும் பாம்புகளை அழிக்கும் வேலை யில் ஈடுபட்டனர். பாம்புகள் அவர்களுடைய தாக்குதலுக்கு அஞ்சிப் பாம்பினேரிப் பாறைப் பிளவுகளில் மறைந்து கொண் டன. சாஸ்தா அப்பாம்புக் கூட்டங்களை அழித்தார். காணிக் காரர்கள் பார்த்து ஆரவாரம் செய்துக் கொண்டிருக்கவே மீனத் தில் வருவதாகக் கூறி மறைந்தார். காணிக்காரர்கள் சாஸ்தா வின் புகழை நிலைநாட்டவும் அவரது அருள் கிடைக்கவும் வருடந் தோறும் மீனம்மாசத்தில் விழா எடுத்துச் சிறப்பிக்கின்றனர். அரங்க நாட்டில் உள்ள கோயிலில் சிறப்பாக விழா நடை பெறும். அவ்விழாவில் காணிக்காரன், பறையன், குறவன், குறிப்பு ஆகியோருக்கு முக்கியத்துவம் உண்டு. சாஸ்தா வழி

பாட்டை நடத்துகின்ற காணிக்காரன் கோயில் அர்ச்சகனாக மதிக்கப்படுகின்றான். இன்றும் அவ்வழிபாடு சிறப்பாக நடை பெற்று வருகின்றது.

அகஸ்தியர் வழிபாடு

அகஸ்தியருக்கு வருடத்திற்கு ஒருமுறை கும்பம் (பெப்பிரவரி மார்ச்) மாதத்தில் வழிபாடு செய்கின்றனர். பல்வேறு இடங்களி லும் வாழும் காணிக்காரர்கள் பௌர்ணமிக்குநான்கு நாட்கள் முன்னதாகவே அகஸ்தியர் கூடம் சென்று தங்குகின்றனர். மறு நாள் காலையில் நீராடி விட்டுப் பச்சை அரிசியும் பழமும் கடை கின்றனர். அதன்பின் நாங்கள் காட்டில் வாழ்கின்றோம் எங் களை நோய்களிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் காப்பாற்ற உன்னைத் தவிர எவரும் இல்லை என்று வேண்டிக் கொள் கின்றனர். மூன்றாவது நாள் காட்டிலுள்ள சக்தி வாய்ந்த மூலிகைகளைக் சேகரித்துவிட்டு வீட்டுக்குத் திரும்புகின்றனர். மருத்துவம், மந்திரம் போன்ற ஞானங்களைத் தங்களுக்கு அளித்தவர் அகத்தியர் என்று கருதுகின்றனர். அதனால் அவரைத் தங்களுடைய குரு என்றே அழைக்கின்றனர். அகஸ் தியர் கோயில்கள் சில காணிக்காரர்களின் குடியிருப்புகளில் காணப்படுகின்றன.

வடக்கன் பேய் வழிபாடு

காணிக்காரர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் பிலாத்தியை வரவழைக்கின்றனர். பிலாத்தி மந்திரம் உச்சரித்து வடக்கம் பேயை அழைக்கிறான். என்ன காரணத்தினால் சிக்கல் ஏற்பட்டதென்பதை அனைவரும் கேட்கும் அளவில் பிலாத்தி கூறுகின்றான். அவன் கூற்றுப்படி உயிர்பலி செலுத்தப்படுகிறது. பலி செலுத்தாவிட்டால் மேலும் பல விளைவுகள் ஏற்படும் என்பதைக் காணிக்காரர்கள் நம்பு கின்றனர்.

காணிக்காரர்கள் சமய நம்பிக்கைக்கும், தெய்வ வழி பாட்டுக்கும் காரண காரியத்தொடர்புகள் இருப்பதை அறிய முடிகின்றது. இயற்கை வழிபாட்டால் தங்களுக்கு நன்மை

கிட்டும் என்பதால் சூரியன், மழை ஆகியவற்றிற்கு வழிபாடு நடத்துகின்றனர். வனவிலங்குகளின் இன்னல்களிலிருந்து தங்களையும் தங்களுடைய விளைபொருட்களையும் பாதுகாத்துக் கொள்ளச் சாஸ்தாவை வழிபடுகின்றனர். நோயிலிருந்து விடுபடக் காலாட்டுத் தம்புரானை வழிபடுகின்றனர். மருத்துவம், மந்திரம் போன்றவற்றிற்கான ஞானத்தைத் தந்தவர் அகஸ்தியர் என்று கருதுவதால் அவரைக் குருவாகக் கருதி வழிபாடு செய்கின்றனர்.

'அணிகலன் அணிதல்' - திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு

தாயம்மாள் அறவாணன்
புதுச்சேரி.

அழகுக்கு அணி செய்யும் அணிகலன்களை அனைவரும் அணிந்து அழகு பார்ப்பது இயல்பு திராவிட ஆப்பிரிக்கப் பெண்டிருக்கு ஏனைய நாட்டு மகளிரினும் விருப்பு மிகுதி. இவர்கள் தலைமுதல் கால் வரை அணிகலன்கள் அணிந்து அழகு பார்ப்பர். நாகரிக வளர்ச்சியுற்ற இக்காலத்தும் கூட அணிகல விருப்பு உடையவர் திராவிட ஆப்பிரிக்கப் பெண்டிர். விழா, விருந்து, வீட்டுச் சடங்கு, நாட்டுச் சடங்கு, நடனம், இசை போன்றவற்றில் ஆப்பிரிக்கப் பெண்ணின் உடலில் அணிகலன்கள் பெரும் பங்கு கொள்கின்றன. நகை அணிந்தால் தான் சமூகத்தில் தனி மதிப்பு என்று நம்புவர் ஆப்பிரிக்கர்.

1. அணி செய்யப் பயன்படு பொருள்கள்

அணிகலன்கள் ஆப்பிரிக்க நுணுக்கக் கைவினைஞர்களால் செய்யப்படுகின்றன. வெள்ளி, தங்கம், இரும்பு, ஈயம் முதலியவை பயன்படு பொருள்கள். தாவரங்களிலிருந்தும், கடல் பொருளிலிருந்தும், விலங்கு முடி, நகம்,பல் இவற்றி லிருந்தும், பறவைகளின் தூவல்களிலிருந்தும், உலோகங்களி லிருந்தும் அணிகலன்கள் உருவாகின்றன.

2. தலையணிகலன்

ஆப்பிரிக்கப் பெண்டிர் தலையில் பொதுவாக அணிகலன்கள் அணிவதில்லை...இருப்பினும் சில ஆப்பிரிக்கப் பெண்கள் திராவிட நடன மகளிர் தலையின் முன்புறம் அணியும் நெற்றி அணிகலன் போன்றதொரு அணிகலனை அணிவதுண்டு. தங்கம்

வெள்ளி காசுகளைக் கோத்து நெற்றிக்கு முன்புறத் தலையில் அணிவது வழக்கம். இத்தலையணிகலன் மிகவும் அருகியே சிலரால் மட்டும் அணியப் பெறுவது.

2.1 தலையில் சோழி

ஏனைய மகளிர் தலையில் தங்க அணிகளுக்குப் பதில் சோழிகளைக் கட்டித் தொங்கவிடுவதுண்டு. சோழியை அழகுக்காக அணிவதைவிட மாந்திரிகத்திற்காக அணிவது பழக்கம். பெண்குழந்தை முதல் பெரிய பாட்டி வரை சோழியைத் தலையில் கோத்திருப்பர், சில சோழிகளைத் தோலோடு சேர்த்துத் தைத்து அழகு செய்து அதையும் தலையில் அணிவர்.

2.2 தலையில் தோல்பை

ஆப்பிரிக்கப் பெண்டிர் 'கிரிகிரி' என்ற மாந்திரிகத்திற்காகச் (நம்மூர் தாயத்து போல) சிறிதாகத் தோல்பை செய்து அதையும் தலையில் அணிகலனாக அணிந்து கொள்வர்.

3. காதணி

பெண் குழந்தைகளுக்குக் காதில் அணிகலன்கள் அணிந்து அழகு பார்ப்பர். பொதுவாக எல்லாப் பெண்டிரும் காதில் அணிகலன்கள் கண்டிப்பாக அணிந்திருப்பர்.

3.1 குழந்தைக் காதணி

தாய் மாமனுக்கும் காதணிவிழாவிற்கும் நெருக்கமான தொடர்பு திராவிடரைப் போலவே ஆப்பிரிக்கரிடத்தும் உளது. தாய்மாமன் செலவில் பெண் குழந்தைகளுக்குக் காதுகுத்தி அணிகலன் அணிவது ஆப்பிரிக்க மரபு. குழந்தைகளுக்கு நான்கு அல்லது ஐந்து வயது ஆகும்போது காதுகுத்து விழா நடைபெறும். அப்போது தாய் மாமனுக்கு ஐந்து ஆடுகள் பரிசாகக் கொடுத்து அவருடைய அனுமதி பெற வேண்டும். தாய்மாமன் தந்தைக்கு நிகரானவன். அவன் தன் மருமகளைத் திருமணம் செய்வதில்லை. அதிக உரிமை உடைமையால் அவனிடம் இசைவு பெற்ற பின்னரே காது குத்துதல் பழக்கம். சில

பெண் குழந்தைகளுக்குச் சில ஆப்பிரிக்க மக்கள் பிறந்த அன்றே காது குத்தி விடுவதுண்டு.

3.2. பெண்டிர் காதணி

பெண்டிர் பல்வேறு வகையான காதணிகளை அணிவது வியப்பும் வேடிக்கையும் கலந்தது. நீண்டு தொங்கும் இயல்புடைய காதணிகளை விரும்பி அணிவர். காதில் தெற்குப் பகுதி (மதுரை, நெல்லை, குமரி) மக்கள் அணியும் ‘பாம்படம்’ என்ற அணிகலனை ஒத்த அணிகலனைத் தம்காதில்ஆப்பிரிக்கர் அணிவது பெரும் வியப்பானதொன்று. இத்தகைய நீண்டு தொங்கும் அணிகலனை அணிந்த காதும் வடிந்து வீழ் காதாக இருக்கும். சிலர் காது துளை சிறிதாக இருப்பதால் இவ்வணிகலன் அணிய இயலாது என்பதற்காகத் தக்கையிட்டுக் காதைப் பெரிதாக்கிக் கொள்வர். திராவிடப் பெண்டிரும் பண்டைய காலத்துப் பாம்படம் அணியத் தக்கையிட்டுப் பெரிதாக்குவது போல ஆப்பிரிக்கப் பெண்டிரும் தம் காதுகளின் ஓட்டையைப் பெரிதாக்கித் தொங்கும் அணிகலனை அணிந்து அழகு பார்ப்பர். அறுபது எழுபது வயது பாட்டி கூடக் காது அணிகலன்களை நாகரிகமாகக் காதுகளில் தொங்க இட்டுக் கொண்டு தம்மை அழகுபடுத்துவது வேடிக்கையாகத் தோன்றும். சில பெண்களின் காது அணி தாங்கும் ஆற்றல் இழந்து அறுந்து விடுவதும் உண்டு.

3.3 காதில் ஏனைய பகுதிகளிலும் அணிகலன்கள்

சில ஆப்பிரிக்கப் பெண்டிர் காதின் விளிம்பு ஓரங்களில் துளையிட்டு அவற்றிலும் அணிகலன்களை அணிவர். கல்வி கற்கும் தற்காலப் பெண்கள் பெரும்பாலும் அவ்வாறு செய்வதில்லை. தென்னிந்திய முகமதியப் பெண்கள் அவ்வாறு காது ஓரமெல்லாம் அணிகலன்களை அணிவதைப் போல ஆப்பிரிக்கப் பெண்டிரும் காதின் விளிம்புகளில் அணிகலன்களை அணிவர். பண்டைக் காலத்தில் ‘கொப்பு’ என்ற அணிகலனைத் தமிழ் மக்கள் அணிந்திருந்தமை இங்கே ஒப்பு நோக்கத்தக்கது. தற்போதும் காதின் கீழ்ப்பகுதிக்குப் பக்கத்தில் துளை இட்டுச் சிறு பொட்டு வடிவில் காதணி அணிவர்.

4. மூக்கணி

மூக்கணி அணிவது தென்னிந்தியருக்கே உரிய பழக்கம். அதிலும் தமிழ்ப் பெண்கள் மூக்கின் வலப்புறப் பகுதியில் ஓட்டையிட்டு அதில் அணிகலன் அணிந்து அழகு பார்ப்பர். பண்டைய திராவிடப்பெண்டிர் 'புல்லாக்கு' என்ற ஓர் அணி மூக்கின் கீழ்ப்பகுதியில் அணிந்திருந்தனர். இன்றும் அதன் எச்சத்தை நடன நங்கையரிடமும் மணமகளிரிடமும் காணமுடிகிறது. அத்தகைய புல்லக்கு அணியை ஒத்த அணியை ஆப்பிரிக்கப் பெண்டிருள் மிகச் சிலர் அணிந்துள்ளனர் நம் திராவிடப் பெண்டிர் அணியும் மூக்குத்தி அணிகலன் போல ஆப்பிரிக்கர் அணிவதில்லை. திராவிட மூக்குத்தி ஆப்பிரிக்கப் பெண்களுக்கு வியப்பூட்டும் ஓர் அணியே.

4.1. ஆப்பிரிக்க செனகாலில் உள்ள 'பேல்' என்ற இனம் திராவிடரை ஒத்த உடல் உருவ, பழக்க வழக்க ஒற்றுமை உடைய இனம். அவ்வின மக்கள் தமிழரைப் போல மூக்குத்தி அணிவதுண்டு என்று கருதுவர் அறிஞர். திராவிட மக்களைப் போல இவ்வணி ஒரு மங்கலச் சின்னமாக ஆப்பிரிக்காவில் சருதப்படவில்லை.

5. கழுத்தணி

கழுத்தில் வகைவகையான அணிகலன்களை அணிவது ஆப்பிரிக்கப் பெண்கள் இயல்பு, நீளமாகத் தொங்கும் தங்க, வெள்ளி அணிகளை அணிவர். பெரிய பதைக்கம் அவ்வணிகளில் தொங்கும் இரண்டு சரம் உடைய அணிகளையும் மூன்று நான்கு கழுத்தணிகளையும் ஒன்றாக அணிவது அம்மக்கள் இயல்பு. ஒவிம்புண்டு இன ஆப்பிரிக்கப் பெண்கள் கருவுற்ற போது சோழிகளைக் கயிற்றில் கோத்து கழுத்தில் அணிந்து கொள்வர். அம்மாலை, அம்மா அல்லது பாட்டி அணிந்ததாக இருந்தால் அது மிகுந்த ஆற்றல் பெற்றது என்று நம்புவர். மாந்திரிகத்திற்காகக் கருவுற்ற பெண் சோழி மாலை அணிந்திருக்கலாம். இளம் பெண்கள் சிறிய கழுத்தணி ஒன்றை அழகுக்காக அணிவர், பாசிமணிகளையும் அணிவர்.

5.1 ஆடவர் கழுத்தணி

ஆண்களும் கழுத்தில் நீள ஒற்றைச் சங்கிலியை அணிவர். சமூகத்தில் பெரும் மதிப்பு ஏற்படுவதற்காக ஆண்களும் பெண்களும் அணிகளை அணிவர்.

5.2 தாலி

சங்க காலத்தில் தமிழரால் தாலி அணியப் பெறவில்லை அது ஒரு மங்கலப் பொருளாகக் கருதப் பெற்றிலது. பிற்காலத்தில்தான் திருமணத்தில் ஆடவன் பெண்ணின் கழுத்தில் தாலி கட்டுவதும் அவன் இறப்பதற்குப் பிறகு அது கழற்றப்படுவதுமான பழக்கம் வந்தது. இத்தகு பழக்கம் ஆப்பிரிக்காவில் இல்லை.

6. தோளணி

தோளிலும் உலோக வளையம் அணியும் பழக்கத்தினர் ஆப்பிரிக்கர். சில பெண்கள் ஆட்டின் நரம்பால் கோக்கப்பட்ட தாயத்தைத் தோளில் கட்டிக் கொள்வதுண்டு. அது மற்றவர் செய்த மாந்திரீகத்தின் தீங்கைத் தடுக்கும் ஆற்றல் வாய்ந்தது என்று நம்புவர். ஆண்களும் பெண்களும் தோளில் தாயத்து கட்டிக் கொள்வர்

7. கையணி

கையில் தங்கத்தாலான அணியை அணிவர். ஆப்பிரிக்கத் தலை பொறித்த ஒரு பெரிய தட்டையான அணியை அணிவதும் உண்டு நிறைய தங்கவளையல்களையோ அல்லது வெள்ளி வளையல்களையோ அணிந்து அழகு கூட்டுவர். கையணிக்கு ஓலப் மொழியில் லாம் (Lam) என்று பெயர். தந்த வளையல்களைச் சாதாரணமாக அணிவர்.

7.1 ஆடவர் கையணி

ஆண்கள் சங்கலி போன்ற இறுகலற்ற அணியை முன் கையில் அணிவர், ஆண்களும் பெண்களும் வெள்ளிக் கம்பியை வளைவாகச் செய்து முன் பகுதியைத் தொட்டுக் கொண்டிருக்கும்

படி அணிவர், ஆப்பிரிக்க ஆடவர் தொடி அணிவதில் மிகுந்த ஆர்வம் உடைவர். மேலும் தங்கச் சங்கிலியையும் வசதி படைத்த ஆண்கள் அணிவர். பெரிய அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகள்கூட அவ்வாறு கையணி அணியும் விருப்பினர்.

8. கைவிரலணி

பத்து விரல்களிலும் மோதிரம் அணியும் ஆசை பெண் களுக்கு உண்டு. இரண்டு பெருவிரல்கள் நீங்கலாக ஏனைய எட்டு விரல்களிலும், தங்க வெள்ளி மோதிரங்களை அணிவர். பல்வேறு வகைகளாலான அணிகள் பார்க்க அழகாக இருக்கும்.

8.1 ஆடவர் விரலணி

ஆண்கள் அழகு வேலைப்பாடுடைய அணியை அவ்வள வாக அணியாமல், தங்க வெள்ளி மோதிரங்களை எளிமையாக அணிவர், குழந்தைகளும் சிறுமோதிரம் அணியும் பெண்களே அணிகலப் பிரியர். கிருத்துவர்களின் திருமண மோதிரப் பழக்க மும் ஆப்பிரிக்கக் கிருத்துவரிடம் உள்ளது. ஏனைய முகமதிய ஆப்பிரிக்கரிடம் கணவன் மனைவிக்கு மோதிரப் பரிசு தருவதும் உண்டு. மணச் சின்னம் என்பதில்லை. மோதிரத்திற்கு ஓலப் மொழியில் கியாரோ லோகோ (Giyaro logo) என்று பெயர்.

9. அரைநாண்

அரையில் ஆப்பிரிக்க ஆடவரும் பெண்டிரும் அரைநாண் அணியும் பழக்கத்தினர்: அரைநாண் அணிவதன் முதன்மை நோக்கம் மந்திர நோக்குதான், மந்திரத் தகட்டை உள்ளே வைத்துத் தோலால் சுற்றப்பெற்ற ஒருவகை சதுரஅமைப்புடைய தாயத்தை அரையில் கோத்து இருப்பர். சோழியும் தோலினுள் சுற்றப்பெற்றிருக்கும். அச் சோழிகளை மாந்திரிகைத் தாயத் தாக எண்ணி அரையில் அணிவதும் நம்புவதும் வழக்கம். ஆவி பேய், சூனியம் இவை தாயத்தால் நீங்கிவிடும் அல்லது அண்டி வாரா என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் அரைநாண் அணிவர். திராவிடரின் அரைநாண் தாயத்தோடு மேற்கண்ட செய்கையை ஒப்பிடலாம்.

அம்பிகாபதி-ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்

ச. தியாகராசன்,
ஜவகர் அறிவியல் கல்லூரி, நெய்வேலி.

முன்னுரை

இலக்கியங்கள் மனித வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி என்பர். தமிழ் இலக்கியங்கள் மூலம் நம் பண்டைத் தமிழர்களின் பண்பாடு, நாகரிகம், அரசியல் முதலியவற்றை அறிய முடிகிறது. சிறந்த புலவர்கள் மேல் கொண்ட தீராத அன்பு காரணமாக பிற்காலத்தியப் புலவர்கள் பெயர்களையே தனக்கும் சூடிக் கொள்கின்றனர். சான்றாக ஔவையார் என்ற பெயரில் பல புலவர்கள் வாழ்ந்ததாக தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. அவ்வகையில் அம்பிகாபதி என்ற புலவர் பற்றிய இலக்கியவாதிகள் கருத்துகளைப் பற்றி ஆய்ந்து முடிவு காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அம்பிகாபதி என்றவுடன் நமக்கு நினைவுக்கு வரும் பெயர் கம்பன் மகன் அம்பிகாவதியாகும். ஆனால் அம்பிகாபதி பற்றிய மூன்று குறிப்புகள் இலக்கிய வரலாற்றில் தென்படுகின்றன.

ஒன்று: அம்பிகாபதி கோவை பாடிய அம்பிகாபதி

இரண்டு: தண்டியலங்காரம் பாடிய தண்டியாசிரியர் தந்தை அம்பிகாபதி

மூன்று: நெல்லை வருத்தக் கோவை பாடிய வீரை என்ற ஊரைச் சேர்ந்த அம்பிகாபதி.

கவிச் சக்கரவர்த்தி கம்பர் நாட்டாழ்வாரின் புதல்வன். அம்பிகாபதி என்பது வழக்கில் உள்ள கதை. இவர் இளமையிலேயே நுணுக்கமான அறிவு பெற்று விளங்கினார் என்றும் அம்பிகாபதி கோவை என்னும் நூலை இயற்றினார் என்றும் வேறு நூல் எதுவும் இவர் இயற்றவில்லை என்றும் மு. அருணாசலம் கூறுவார். இனி கம்பர் மகன் அம்பிகாபதி பற்றி வழங்கும் கதை இங்கு விளக்கப்படுகிறது.

குலோத்துங்கச்சோழன் மகள் மீது அம்பிகாபதி காதல் கொண்டிருந்தான். கம்பருக்கும் இது தெரியும். ஒரு நாள் மன்னன் உண்மையை அறிய விருந்து ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தான் அவ்விருந்தில் கம்பரும், அம்பிகாபதியும் அமர்ந்திருந்தனர். தன்மகளை அழைத்து மன்னன் விருந்து பறிமாறச் செய்தான். தன் காதலியைக் கண்ட கவிஞன் அம்பிகாபதிக்கு கவிதை வெள்ளமென புறப்பட்டு வெளிவந்தது.

> "இட்டடி நோவ எடுத்தடி கொப்புளிக்க
> வட்டில் சுமந்து மருங்கசைய......

என்று பாடத்தொடங்கினான், மீதமுள்ள இருவரிகளையும் அம்பிகாபதி பாடிவிட்டால் தன் மகனின் காதல் உணர்வு வெளிப்பட்டு விடுமே என்று கம்பன் அஞ்சினான. எனவே நாமகளின் அருளால் தெருவில் ஒருத்திக் கிழங்கு விற்று வந்தாள், அப்பெண்ணை நினைத்து தன்மகன் பாடியது போல மீதமுள்ள இரண்டு அடிகளைக் கம்பர்,

— கொட்டி

> "கிழங்கோ கிழங்கென்று கூறுவாள், எந்தை
> வழங் கோசை வையம்பெறும்"

என்று பாடி முடித்தா.

அம்பிகாபதியின் காதலை கண்டு உணரமுடியாத மன்னன் அம்பிகாபதியை நோக்கி நீ காதற் சுவைபடாமல் நூறு பாடல்களைப் பாடவேண்டும். அவ்வாறு பாடினால் உன்னை விட்டு விடுவேன், உன்பாடல்களில் காதற்சுவை தென்பட்டால் உன்னைச் சிரச்சேதம் செய்வேன்,' என்று ஆணையிட்டான். அரசகட்டளைக்கு இணங்கிய அம்பிகாபதி காப்பு செய்யுளைப்

பாடி பின் வரிசையாகப் பாடிக்கொண்டே வந்தான். உப்பரிகையில் இருந்து சன்னல் வழியாக கவனித்து, அம்பிகாபதியின் பாடல்களை அமராவதி எண்ணிக் கொண்டிருந்தாள். காப்பு செய்யுளையும் சேர்த்து புலவன் 99வது பாடல் பாடும்போது 100 எனத் தலைவிக் கணக்கிட்டு தன் தலையை வெளியே நீட்டினாள். உண்மைக் காதலியை உற்றுநோக்கிய அம்பிகாபதி காதல் சுவை பட,

'சற்றே பருத்த தனமே குலுங்க தரளவடம்
துற்றே அசைய குழையசலாட துயர் கொள் செல்வாய்
நற்றேன் எழுக நடனசிங்கார நடையழகின்
பொற்றேர் இருந்த தலையலங்காரம் புறப்பட்டதே'

என்ற பாலைப் பாடிமுடித்தான். உண்மைநிலை உணர்ந்த மன்னன் அம்பிகாபதிக்கு மரணத்தண்டனைக் கொடுத்தான் என்பது கதை.

இந்நிகழ்ச்சி உண்மையா என்பதும் கம்பரின் மகனே அம்பிகாபதி தானா என்பதும் கற்பனை என்றும் தள்ள முடியாது உண்மை என்றும் ஏற்க முடியவில்லை. இது இன்னும் ஆராயப்பட வேண்டிய ஒன்று ஆகும். சோழ அரசர்கள் புலவர்களை கண்டு மதித்தனர். அதனால் சிறந்த புலவர்களால் நிலைபெற்ற இலக்கியங்கள் படைக்க முடிந்தது என்பது வரலாறு கூறும் உண்மை. அவ்வாறெனில் குலோத்துங்கச் சோழன் காலத்தில் வாழ்ந்த கம்பனை ஏன் அரசர் ஆதரிக்கவில்லை. அப்படி ஆதரித்து இருந்தால் சடையப்பரை தன் காவியத்தில் நன்றி மறவா உணர்வோடு சுட்டிக்காட்டிய கம்பர் சோழனை ஏன் சுட்ட வில்லை என்ற நோக்கில் பிற்காலப் புலவர் சிந்தித்து இருப்பர். எனவே மன்னனுக்கு மகள் இருந்ததாகவும், கம்பர் மகன் காதலித்ததாகவும் அதனால் மன்னனுக்கும் கம்பனுக்கும் இடைவெறி ஏற்பட்டதாகவும் கற்பனை செய்து காவியம் செய்து இருப்பர். இப்புலவர் கம்பனுக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்றநோக்கில் இவ்வாறு செய்திருக்கலாம் என்று துணிய முடிகிறது.

இரண்டாவதாக தண்டியாசிரியர் தந்தை அம்பிகாபதி, இவரைபற்றிய குறிப்பு தண்டியலங்காரச் சிறப்பு பாயிரச் செய்யுளில் காணப்படுகிறது

'பூவிரி தண்பொழில் காவிரி நாட்டு
வம்பவிழ் தெரியல் அம்பிகாபதி
மேவருந் தவத்தினில் பயந்த
தாவருஞ் சீர்த்தித் தண்டியென் பவனே'

தண்டியாசிரியர் தந்தை அம்பிகாபதி என்பதற்கு இச்சிறப்பு பாயிரம் தவிர வேறு சான்றில்லை இருப்பினும் கோவை பாடிய அம்பிகாபதியும் தண்டியாசிரியர் தந்தையும் ஒருவர் என்பர் மு. அருணாசலம். அதற்கு அவர்கூறும் காரணங்கள்;

1) தண்டியாசிரியர் சொல்லணியில் 95 ஆம் சூத்திரவுரையில் சித்திரக் கவிகளுள் திரிபங்கிக்கு ஆதரந்தீர். அன்னை போலினியாய்? அம்பிகாபதியே எனத் தொடங்கும் வெண்பாப் பாடலை உதாரணம் காட்டுகிறார். அம்பிகாபதி என்ற சொல் அம்பிகாபதி என்ற புலவரை நினைவூட்டுகிறது. நுண்மான நுழைபுலம் மிக்கவர். தன் தந்தையிடம் தண்டியார் கல்வி பயின்றிருப்பர். ஞானாசிரியர் என்ற நிலையில் அவரிடம் கொண்ட ஈடுபாட்டால் இவ்வாறு செய்யுளில் அமைத்தார் என்று கருதுவது பொருத்தமாகலாம்.

2) 'சோகமெவன் கொல்' 'இடத்திறத் தைத்துற'

எனத் தொடங்கும் இரண்டு பாடல்கள் தண்டியலங்காரத்தில் மேற்கோள் செய்யுளாக காட்டப்படுகின்றன. அம்பிகாபதிக்கு கோவையில் இவ்விரு பாடல்களும் பிரிவாற்றாத தலைவிக்கு தலைவன் தேர்வரவு கூறி தோழி ஆற்றுவித்தத் துறைக்கு உரியன. தண்டியாசிரியர் தாள் வெண்பா இயற்றி உதாரணம் காட்டுவார் அல்லது பழைய செய்யுளைக் கையாள்வார். எனவே தன் தந்தையார் பாடிய அம்பிகாபதிக் கோவையில் உள்ள இருபாடல்களையும் எடுத்து கையாண்டுள்ளார் என அறிய முடிகிறது.

3) ஆசிரியர் சிலர் சில சொற்களையும் சில தொடர்களையும் விரும்பி கையாள்வர் தண்டியலங்காரத்தில் காணப்படும்.

'சோகம் எவன் கொல்' என்ற பாடலில் வரும் 'தோகை நடம் செய்யும்' என்ற சொற்றொடர் கோவையில் 'கறியுறு' (தோகைக்கண் நடஞ் செய்) எனத் தொடங்கும் பாடலிலும் பெடை நின்று (தோகை பெரு நடஞ்செய்) எதைத் தொடங்கும் பாடலும் களிதங்கு (தோகை கணம் நடமாட) எனத் தொடங்கும் பாடலிலும் பயின்று வருகிறது.

மேற்கண்ட கவிஞர்களால் கோவை பாடிய அம்பிகாபதியும் தண்டியின் தந்தை அம்பிகாபதியும் ஒருவர் எனக் கருத முடிகிறது. இவர்காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு எனலாம். கம்பரின் காலம் கி பி 9 ஆம் நூற்றாண்டு என்றும் 12 ஆம் நூற்றாண்டின் முன்பின் வாழ்ந்தவர் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இனி மூன்றாவதாக உள்ள அம்பிகாபதி பற்றி விளக்கப்படுகிறது.

நெல்லை வருக்கக் கோவைப் பாடியவர் பெயரும் அம்பிகாபதி என்பது இவர் வீரை என்னும் ஊரினர். சௌந்தரியலக்கரியைத் தமிழில் பாடிய வீரை கவிராச பண்டிதரின் மகன். இவர் காலம் கி பி 16 ஆம் நூற்றாண்டு. இக்கோவை பாடலின் செய்யுள் என்று இலக்கண விளக்கத்துள் மேற்கோளாக காட்டப்பட்டுள்ளது என்பர் மு. அருணாசலம்.

முடிவுரை

கம்பனின் காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டா? கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் முன்பின் பகுதியா என்பதில் இன்னமும் கருத்து வேறுபாடு உள்ளது. கம்பன்கவிகள் மற்றும் அம்பிகாபதி பாடியதாக காணப்படும் தனிப்பாடல்கள், கோவைப் பாடல்களின் கொல்லாட்சி மூலமும் கால வேறுபாட்டை நுணுக்கமாக அறிய முடியவில்லை. மு. அருணாசலம் கூற்றுப்படி கோவை பாடியவரும் தண்டியாசிரியர் தந்தையும்

ஒருவர் எனவும் வருக்கக்கோவை பாடியவர் வேறு எனவும் கூறமுடிகிறது.

1) அருணாசலம். மு, தமிழ் இலக்கியவரலாறு-கி. பி. 12 ஆம் நூற்றாண்டு, மாயரம் 1973,

2) சுந்தரமூர்த்தி. கு, (பதிப்பாசிரியர்), தண்டியலங்காரம், திருப்பனந்தாள் 1967

3) தனிப்பாடல் திரட்டு, மீனாட்சி பதிப்பகம், மதுரை 1972.

★சைவ மடங்களின் தமிழ்த் தொண்டு-ஒரு நோக்கு

பெரு. தியாகராசன்,
ம.தி.தா.இந்துக்கல்லூரி, நெல்லை

1.0. பத்து வகையில் அடக்கி நோக்கலாம்

பிற்காலச் சோழப்பேரரசு வீழ்ச்சியடைந்த பின்னர் தமிழகத்தில் சைவமும் தமிழும் வளர்க்கும் அரசர்கள் அருகி விட்டனர். புலவர்களைப் போற்றிப் புரந்தந்த அரசர்கள் அருகிவிட்டதால் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு முதல் சைவ மடங்கள் பல தமிழகத்தில் தோன்றிச் சமய வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் தொண்டு செய்யலாயின. அவற்றில் (1) திருவாடுதுறை ஆதீனம் (2) திருப்பனந்தாள் காசிமடம் (3) தருமபுர ஆதீனம் (4) மதுரை ஆதீனம் முதலியவை குறிப் பிடத்தக்கன. இவைகளேயன்றித் திருவண்ணாமலை ஆதீனம், ஞானியர் மடம்[1] போன்ற மடங்களும் தமிழ் வளர்ச்சிக்குத் தம் மாலரன தொண்டுகளைத் திறம்படச் செய்து வருகின்றன. சைவ மடங்களின் தமிழ்த் தொண்டைப் பத்து வகைகளில் அடக்கி நோக்கலாம்.

1.1. ஆதீனத் தலைவர்களின் அருந்தமிழ்ப்பணி

ஆதீனத்து மடாதிபதிகள் சிறந்த கவிஞர்களாகவும், அறிஞர் களாகவும் விளங்கினார்கள்; எண்ணற்ற தமிழ் நூல்களை உருவாக்கித் தமிழ்த்தாய்க்கு அணிவித்தார்கள்.

எடுத்துக்காட்டாக நமச்சிவாய தேசிகர் திருவாடுதுறை ஆதீனத் தலைவராய் விளங்கினார். இவர் 'இருபா இருபஃது' 'வினாவெண்பா' ஆகிய இரண்டு நூல்களுக்கும் உரைவகுத்தார். அம்பலவாண தேசிகராகிய திருவாடுதுறை ஆதீனத்தலைவர்

பத்து நூல்களை இயற்றித் தமிழத்தாய்க்கு அணிவித்தார். 'இலக்கணக் கொத்து' ஆசிரியர் ஈசானதேசிகர் திருவாடுதுறை ஆதீனத் தலைவராக விளங்கினார் என்பது ஈண்டுக்கருதற் பாலதாம்.

தருமபுர ஆதீனத் தலைவராக விளங்கிய வெள்ளியம்பலத் தம்பிரான் சிறந்த தமிழ்ப் புலவர். சிவப்பிரகாச சுவாமிகளே இவரிடம் இலக்கணம் பயின்றார். 'சினிஞான சித்தியாருக்கு' விரிவுரையும் 'முத்தி நிச்சியம்' என்ற நூலுக்கு விளக்கவுரையும் எழுதினார் வெள்ளியம்பலத்தம்பிரான். இக்காலத்தில் தவத்திரு. குன்றக்குடி அடிகளாரின் தமிழ்ப்புலமையும் தொண்டும் அறிஞர் பாராட்டும் வண்ணம் அமைந்துள்ளது.

12. அறிஞர்களையும் புலவர்களையும் புரந்தது

பிற்காலச் சோழப் பேரரசு வீழ்ச்சி அடைந்ததும் தமிழகத்தில் புலவர்களைப் பாதுகாக்கும் அரசர்கள் அருகிவிட்டனர். கி.பி.14-ஆம் நூற்றாண்டு முதல் இன்று வரை தமிழ்ப் பெரும் புலவர்களையும் அறிஞர்களையும் புரந்தந்த பெருமையும் சைவ மடங்களைச் சார்ந்ததாகும்.

எடுத்துக்காட்டாகச் சங்கர நமச்சிவாயர், மாதவச் சிவஞான முனிவர், மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, டாக்டர் உ.வே.சாமி நாதய்யர், இசையரசு தண்டபாணி தேசிகர் முதலிய தமிழ்ப்பெரும் புலவர்களைத் திருவாடுதுறை ஆதீனம் போற்றிப் புரந்தந்தது; இது மிகவும் பாராட்டுதற்குரிய பணியாகும்.

13. பதிப்புப் பணியும் நூல்வெளியீடும்

சமய நூல்களையும் சிறந்த தமிழ் நூல்களையும் பெரும் பொருள் செலவிட்டுப் பதிப்பித்தும் வெளியிட்டும் அறிஞர்களுக்கும் மாணவர்களுக்கும் குறைந்த விலையில் இலவசமாக வழங்கியும் தமிழுக்குச் சைவமடங்கள் தொண்டு செய்து வருகின்றன:

தருமபுரி ஆதீனம் குறைந்த விலையில் திருக்குறள் உரைவளம் வெளியிட்டு, தமிழுக்குத் தலையாய தொண்டு செய்துள்ளது. திருப்பனந்தாள் காசிமடம் நூல் வெளியீட்டிற்காக அறக் கட்டளைகள் நிறுவிப் பன்னிரு திருமுறைகள், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம். குமரகுருபர் சுவாமிகள் பிரபந்தத்திரட்டு, கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்த திரட்டு முதலிய வற்றை அழகிய முறையில் அச்சிட்டு மிகக்குறைந்த விலையில் எல்லோரும் வாங்கிப் படிக்குமாறு வெளியிட்டுள்ளது. இது சிறந்த தமிழ்த் தொண்டாகும். இப்பணியை மேலும் விரிவு படுத்தினால் தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்துணையாக அமையும்.

1.4. பழஞ்சுவடிகளைப் பாதுகாத்தது

பழங்காலத்து ஓலைச் சுவடிகளைத் .தேடித் தொகுத்து அழிந்து போகாமல் பாதுகாத்த பெருமை இம்மடங்களைச் சார்ந்தது.

எடுத்துக்காட்டாக டாக்டர் உ.வே.சா.அவர்களுக்குச் சங்க இலக்கிய ஓலைச் சுவடிகளை உதவியது தருமபுரி ஆதீனத்திருமட மாகும். இம்மடத்திலுள்ள பெரிய நூல்நிலையத்தில் பழங்கால ஓலைச் சுவடிகள் மிகுதியாகவுள்ளன; பழந்தமிழ்ச் சுவடிகள் கிடைத்தற்கரிய செல்வங்களாகக் கொள்ளத்தக்கன; அவ் வோலைச் சுவடிகளைப் பாதுகாத்தது அரிய தமிழ்த் தொண்டு ஆகும்.

1.5. மாநாடுகளும் சொற்பொழிவுகளும்

திருமுறை மகாநாடுகள் நடத்தியும் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்தும் திருமந்திரம், தேவாரம், பெரியபுராணம் முதலிய நூல்களின் பெருமையையும் அருமையையும் உலகிற்குப் பறை சாற்றுகின்றன.

ஆண்டுதோறும் திருவாடுதுறை ஆதீனம் திருமந்திர மகா நாட்டைச், சிறப்பாக நடத்தி, மலரும் வெளியிடுகிறது. அம்மலர் அரிய ஆராய்ச்சி நூலாக விளங்குகின்றது. திருவெண்ணெய் நல்லூரில் சிவஞான போத மகாநாடும், வெவ்வேறு இடங்களில்

திருமுறை மகாநாடுகளும் திருவாடுதுறை ஆதீனத்தால் நடத்தப் பட்டு வருகின்றன; இதுவும் குறிப்பிடத்தக்க தமிழ்ப்பணியாகும்.

1.6. இதழ் வெளியீட்டுப்பணி

வார, திங்கள் இதழ்களை நடத்தி அதன்வழித் தமிழ் வாழ-வளர வழிவகுத்த பெருமையும் சைவ மடங்களைச் சார்ந்த தாகும்.

சான்றாகக் 'குமரகுருபரன்' என்ற திங்கள் இதழ் திருப்பனந் தாள் காசி மடத்தின் வெளியீடாக வருகிறது. 'ஞானசம்பந்தம்' என்னும் திங்களேடு தருமபுரி ஆதீன வெளியீடாக வருகிறது. அவை சமயமும் தமிழும் வளரத் துணை செய்கின்றன. தற்கால இதழியல் வளர்ச்சிக்கேற்பத் தரமான சமய, தத்துவ இதழ் களை மேலும் சிறந்த முறையில் வெளியிடலாம்.

1.7. தமிழிசை வளர்ச்சிக்கு ஓதுவார்கள்

தமிழிசை வளர்ச்சிக்கு ஓதுவார்களை திருக்கோயில்களில் நியமித்துத் தேவார திருவாசகங்களை இசையோடு பாட எல்லா ஆதீனங்களும் ஏற்பாடு செய்துள்ளன. தற்பொழுது திருக் கோயில்களில் பண்சுமந்த பாடல்களைப் பாடும் ஓதுவார்கள் அருகி வருகின்றார்கள். ஓதுவார்கள் வாயிலாகப் பண்ணொடு திருமுறை பாடும் பழக்கத்திற்குப் புத்துயிர் தருதல் வேண்டும்.

1.8. மாணாக்கர்களை ஊக்கித் தமிழ் வளர்த்தல்

சைவ மடங்கள் உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர் கட்குப் பண உதவியும் பரிசுகளும் கொடுத்துத் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகின்றன.

திருவைகுண்டத்தில் ''குமரகுருபர சுவாமிகள் கலைக்கல்லூரி'' திருப்பனந்தாள் காசி மடத்தின் ஆதரவில் இயங்குகின்றது; இக்கல்லூரியில், மாணவர்கட்கு உதவித் தொகை வழங்கப்படு கின்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்களையும் திருவாடுதுறை, திருப்பனந்தாள் காசிமடம்

ஆகியவை பெரிதும் ஆதரித்து வருகின்றன. இப்பணியை மேலும் வளர்த்து இளைய தலைமுறையினர்க்குத் தொண்டு செய்வதில் திருமடங்கள் ஆர்வங் காட்டுதல் வேண்டும். மாணவ மாண வியரிடையே சமயமும் தமிழும் வளர்ந்தோங்கச் செய்வதும் திருமடங்களின் தலையாய கடமையாகும்.

1.9. கல்வித் தொண்டும் கலைத் தொண்டும்

தேவார இசைப்பள்ளி, செந்தமிழ்க் கல்லூரி முதலிய கல்வி நிலையங்களை நிறுவி இயற்றமிழ் வளர்ச்சிக்கும் இசைத்தமிழ் வளர்ச்சிக்கும் உறுதுணையாக சைவ மடங்கள் நின்றன; இதுவும் குறிப்பிடத்தக்க தமிழ்ப்பணியாகும்.

சான்றாகத் திருப்பனந்தாள் காசிமடம் செந்தமிழ்க் கல்லூரியை நடத்தி வருகின்றது; தமிழ் வித்வான் தேர்வில் மாநிலத்தில் முதல்வராகத் தேர்ச்சி பெறுவோர்க்கு ஆயிரம் வெண்பொற்காசுகள் வழங்கித் தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றது. திருவாடுதுறை ஆதீனம் தேவார இசைப்பள்ளிகளை நிறுவி நடத்தி வருகின்றது. தமிழிசை வளர்ச்சிக்கு இப்பள்ளி வழிகோலியது.

1.10. மாரிபோல் வாரி வழங்கல்

கல்வி நிலையங்கட்கும், கலை நிலையங்கட்கும் மாரிபோல் வாரி வழங்கித் தமிழகத்தில் கல்வி-கலைப்பயிர் செழிக்கச் சைவ மடங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. இப்பணியும் மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

குற்றாலம் 'பராசக்தி மகளிர் கல்லூரி' யின் வளர்ச்சிக்கு 1000 ஏக்கர் நிலத்து வருமானத்தைக் கொடுத்து ஆக்கமும் ஊக்கமும் தருவது திருவாடுதுறை ஆதீனமாகும். தற்கால அறிவியல் வளர்ச்சிக்கேற்பத் தொழில் நுட்பப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் தாராளமாக உதவி, நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் துணை நிற்கலாம்.

முனைப்போடு முன் வருக

இவ்வாறு சைவமும் தமிழும் தழைத்தோங்க சைவமடங்கள் அருந்தொண்டு ஆற்றின-ஆற்றி வருகின்றன; வளர்ந்து வரும் சமுதாயச் சூழலுக்கு ஏற்பவும் மாறி வரும் காலத்தின் தேவைக்கு ஏற்பவும் சைவமடங்கள் தமிழ் வளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்கும் இன்னும் முனைப்போடு தொண்டாற்ற முன்வருதல் வேண்டும். தவத்திரு குன்றக்குடி அடிகளார் கிராமப்புற வளர்ச்சிக்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் திட்டமிட்டுத் தொண்டாற்றி வருவது போல் பிற சைவ மடங்களும் தமிழ்த்தொண்டோடும் சமயப்பணியோடும் நில்லாது சமுதாய மேம்பாட்டுப் பணி களிலும் ஆர்வம் காட்டுதல் வேண்டும்.

*Ka:mattuppa:l and Hala's Saptasathi: A Perspective in Comparison

K. D. Thirunavukkarasu
International Institute of Tamil Studies, Madras

Tirukkural is one of the finest and world reknowned Tamil Classic that has been acclaimed as a supreme didactic literature in the languages of the world.

The third part of this great work is known as *Kamattuppal*, that deals with the psychological values of human life. The love between a man and woman and the consummation of the emotional attitude of the lovers are clearly portrayed in Tirukkural. The lover's life has been distinguished as pre-marital love (Kalavu) and married love (Karpu). There are 250 couplets, grouped into 25 chapters that give us some glimpses about the lover's life which has been crystalized into a significant tradition of the Tamils during the Sangam Age (C.B.C. 300-300 A.D.).

Prakrit work

One of the important literary compositions in Prakrit is Saptasathi, compiled by Hala, a Sathavahana ruler in the second century A.D. This is a large collection of "Seven Hundred Verses" of great charm and beauty in the Arya metre. These poems are known for their preciseness, felicity of imagination and locidity of presentation. They contain

simple and realistic descriptions and references to the lives of peasants and the common-folk,

Cultural Milieu

Kamattuppal of Tirukkural appears as a composition of highly conventionalised poems, whereas the verses of Saptasathi contains stanzas which are not governed by any conventions or code of conduct. But these two works arrest our attention as picturesque lyrics and dramatic-monologues.

Dr. A. L. Basham, the eminent Indologist of this century, observes that "the treatment of the love affairs of the country folk (in Saptasathi), reminds us of early Tamil poetry and suggests that Hala may have tapped a widely diffused sources *in South Indian Folk-songs*".[1]

Shades of Difference

Tiruvalluvar depicts idealized pictures of the life of lovers, that lay stress on the chastity of the lover and his beloved. In Saptasathi, one can find all-sorts of mental aberrations and deviations in the life of lovers.

If we use the parlance of Freud, most of the verses in Saptasathi extol the carnal pleasures of thirst and hunger of an average man. Though, there are some colourful pictures about the life of lovers, they pronounce the illicit relation between a woman and a man.

Similarities in Form and Theme

Let us ponder over some of the similarities that have a scintillating effect on the readers.

The agony and languish of a love-lorn lady, who is anxiously waiting and expecting the return of her lover, who have gone to a different country a couple of months ago on a business tour, has been expressed by Valluvar with soul-stirring pathos and sentiments.

> "Who will support a man in his grief, if the heart of his beloved refuses him to help".
>
> (Tiru. 1299)

The same sentiments and the feelings of a tender heart has been described in the following verse of Saptasathi:

"Who is to be looked at obliquely (tyme) who is to be told about my happiness and misery? With whom shall I just in this wretched village? My dear heart, you are the only intimate friend of mine. But you are not sympathetic with me (Saft. II. 64).

This poem serves as a commentary to the Tirukkural couplet cited above.

Valluvar categorically asserts that those who stoops to admit their defeat at the time of sulking or love-quarrel, are really the winners in their domestic life.

This novel idea has been expressed in kural with great vigour and vibration of mental agony:

"It is the one who yieldeth first who is the winner in lovers' quarrel, that can be seen indeed at the time of reconciliation" (Tiru.1327).

This theme has been explained in a different form in the following verse:

"Only those men who conceal their own authority, and conciliate like slaves to indignant women, become beloved of ladies" (Sapt. I:91)

Radical Difference

Valluvar depicts the sentiments of a lover, who has lost his heart by the sight of the fascinating lady, whom he loves with his heart and soul.

He could not bear the pangs of scornful look of his beloved who want only behaves like an unknown girl:

"When I look at her, she looks that the ground; but
When I look away, she looks at me and smiles"
(Tiru. 1094)

But in the Gatha Saptasathi, the plate has been turned. The heroine, without any sense of shame tells that

"Whtaever opening of my limbs, does he, with his unwinking eyes, cast his glance at, I cover the same, but at the same time, I wish it to be seen by him" (Sapt.I:73).

The heroine of Gatha Saptasathi, without any strains of modesty, openly utters that how she is very eager to show or demonstrate the beautiful parts of her body to the stranger, who is not a lover.

We can cite a number of verses like these to point out the difference in the treatment of themes of love in Tirukkural and Saptasathi.

Foot Note

1. A. L. Basham, The Wonder that was India, p. 461.

ஆற்காட்டு நவாபு கால சமுதாய நிலை

து. துளசிராமன்
தொல்பொருள் ஆய்வுத்துறை, ஆற்காடு.

கி.பி. 1333 முதல் 1377 வரை சுமார் 44 ஆண்டுகள் மதுரை சுல்தான்கள் தமிழகத்தை ஆட்சி புரிந்தனர். இவர்களுக்குப் பின்னர் முகலாய பேரரசர் ஔரங்கசீப் கி.பி. 1690ல் சுல்பிகர் அலிகான் என்னும் படைத்தலைவனை அனுப்பி தமிழகத்தை வென்றார். பின்னர் இப்பகுதியை ஆட்சி புரிய நவாபுகள் நியமிக்கப்பட்டனர். கி.பி. 1690 முதல் கி.பி. 1855 வரை சுமார் 165 ஆண்டுகள் ஆற்காட்டைத் தலைநகரமாகக் கொண்டு நவாபுகள் ஆட்சி புரிந்தனர். இவர்கள் காலத்தில் சமூக, பொருளாதார, நிர்வாக நிலைகள் எவ்வாறு இருந்தன் என்பது குறித்து சில சுவையான செய்திகளை இக்கட்டுரையில் காணலாம்.

நாட்டுப் பிரிவுகள்

பேரரசு 'சுபா' (மாநிலம்) என அழைக்கப்பட்டது. சுபா பல கில்லாக்களாகவும் (ஜில்லா -மாவட்டம்), கில்லா பல ஜாகிர்களாகவும் (வட்டம்), ஜாகிர் பல பர்கானாகளாகவும் (பிர்கா துணை வட்டம்), பர்கானாக்கள் பல கிராமங்களாகவும், மதுராக்களாகவும் பிரிக்கப்பட்டு நிர்வாகம் மிகவும் செம்மையாக நடத்தப்பட்டது. சுபாவின் தலைவர் சுபேதார் அல்லது நவாப் எனவும், கில்லாவின் தலைவர் கில்லேதான் எனவும், ஜாகிரின் தலைவர் ஜாகிர்தார் எனவும் பர்கானாவின் தலைவர் அமானி அல்லது அமல்தார் எனவும் அழைக்கப்பட்டார்கள். சுபா முழுவதையும் சிரான் முறையில் நிர்வகிக்க

நவாபுக்கு துணையாக திவான் என்பவர் செயல்பட்டார். திவான் தான் மாநிலத்தின் உண்மையான நிர்வாகி எனலாம்.

நிலவரி

மாநிலத்திலுள்ள விளை நிலங்கள் அனைத்தும் முறைப் படுத்தப்பட்டு, அவற்றிற்கு வரிகள் விதிக்கப்பட்டன. நிலவரி ''பேஸ்கிஸ்தி' என்னும் பெயரில் காசாகவும், விளை பொருட் களாகவும் வசூலிக்கப்பட்டன. நிலவரியே நாட்டின் முக்கிய வருவாயாக கருதப்பட்டது. அரசுக்கு சொந்தமான நிலங்கள் 'கர்ல்சா' என அழைக்கப்பட்டன. தரிசு நிலங்களுக்கும், வறட்சி காலங்களிலும் நிலவரி ரத்து செய்யப்பட்டது. நஞ்சை நிலங் களின் வரி விகிதங்கள் ஆண்டுக்கு ஆண்டு மாறுபட்டது. இதனால் வரி செலுத்த முடியாமல் குடியானவர்கள் தவித்த னர். வரி செலுத்தாதவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன.

வறட்சி நிவாரணப்பணி

கர்நாடகத்தில் கி.பி. 1773 இல் மாபெரும் பஞ்சம் தோன்றியது. இக் காலத்தில் உணவு தானியங்கள் நவாபுகள் ஆட்சிக்கு உட்பட்ட மற்ற பகுதிகளிலிருந்து பாதிக்கப்பட்ட இடங்களுக்கு கொண்டு வரப்பட்டன.

இந்து முஸ்லீம் என எந்த பாகுபாடும் இல்லாமல் பாதிக்கப் பட்ட அனைத்து ஏழை மக்களுக்கும் வேலைக்கு கால்சேர் சமைத்த சோறும் தயிறும் வழங்கப்பட்டது. இதற்காக அன்ன சத்திரங்கள் அனைத்து ஊர்களிலும் திறக்கப்பட்டன. இந்த சத்திரங்களில் அனைத்து இன மக்களும் சாப்பிடுவதற்கு ஏற்ற வகையில் உணவு சமைப்பதற்கு பிராமணர்கள் நியமிக்கப் பட்டனர்.

நவாபுகள் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த எந்த ஒரு குடிமகனும் பஞ்சத்தால் இறக்கக்கூடாது என்னும் உயர்ந்த கோட்பாடு கண்டிப்புடன் பின்பற்றப்பட்டது. நிவாரணப்

பணி சிறப்புற நடைபெற இறைவனிடத்தில் பயமும், உண்மை நோக்கும் கொண்டவர்களையே மேற்பார்வையாளர்களாக நியமித்தனர்.

தண்ணீர் பஞ்ச காலங்களில் அனைத்துப் பெருவழிகளிலும் தண்ணீர் பந்தல்கள் (ஜலந்தாரிகள்) அமைத்து வழிப்போக்கர் களுக்கு தண்ணீர் வழங்கினார்கள். ஏழைப் பெண்களுக்கும் விதவைகளுக்கும் மாதாந்திர உதவித் தொகை வழங்கப்பட்டது.

நவாபுகளில் சமய சார்பற்ற கொள்கைகள்

ஆற்காட்டு நவாபுகள் சமயசார்பற்ற கொள்கையை பின் பற்றினார்கள். இந்துமத கோஸ் ஸ்வாமிகள், மகானிகள் மற்றும் புரோகிதர்களுக்கும், இஸ்லாமிய மறை ஞானிகள் மற்றும் பக்கிரிகளுக்கும் நாட்படி வழங்கப்பட்டது. கோயில்கள் மடங்கள், பத்திரங்கள், மசந்திகள், தர்காக்கள் போன்ற வற்றிற்கு மானியங்கள் விடப்பட்டன. பிற மதத்தவர்கள் தங்கள் மதச் சடங்குகளை விரிவாக செய்யவும் விழாக்களை சிறப்பாக கொண்டாடவும் அனுமதிக்கப்பட்டார்கள். கோயில் களுக்கும், புண்ணியஸ்தலங்களுக்கும் செல்லும் பக்தர்களுக்கு சிறப்பு ஏற்பாடுகளும் பாதுகாப்பும் வழங்கப்பட்டன.

மருத்துவ வசதி

ஆற்காட்டு நவாபுகள் தம் நாட்டு மக்களுக்கு சிறப்பான சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் ஏற்படுத்தி கொடுத்தார் கள். மருத்துவ மனைகள் திறமை வாய்ந்த மருத்துவர்களால் நிறுவகிக்கப்பட்டன. மருத்துவ மனைகளில் இலவச உணவும் படுக்கையும், மருத்துவமும் அளிக்கப்பட்டன. கண் சம்பந்தப் பட்ட நோய்களுக்கு தனிக்கவனம் செலுத்தப்பட்டது. மருத்துவ மனைக்குள் அனுமதிக்கப்படும் ஒரு நோயாளி சிறந்த முறையில் உடல் நலம் பெற்று வெளியேறும் போது, மருத்துவம் பார்த்த மருத்துவருக்கு சிறப்பூதியம் வழங்கப்பட்டது. அனாதை இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டு சிறந்த முறையில் நிர்வகிக்கப் பட்டன.

நீதி

மாநிலத்தின் தலைநகராகிய ஆற்காட்டில (முகமதுபூர்) தலைமை நீதிமன்றம் (**Supreme Court**) இருந்தது. இதோடு அனைத்து சில்லா (ஜில்லா) க்களிலும் ஜாகீர்களிலும் (வட்டம்) முதல் மற்றும் இரண்டாம் நிலை நீதிமன்றங்கள் செயல் பட்டன. நீதிபதிகள் அனைவரும் சிறந்த கல்விமான்களாகவும் இறையண்பு உடையவர்களாகவும் விளங்கினர் வழக்குகள் அனைத்திற்கும் இறைவன் பெயராலேயே தீர்ப்புகள் வழங்கப் பட்டன.

நவாபுகளின் அலுவலக மொழியாக (**official language**) பெர்சியன மொழி பயன்படுத்தப்பட்டது. எனவே தீர்ப்பு விவரங்கள் யாவும் பெர்சியன் மொழியிலேயே வழங்கப் பட்டன. காஜி என்பவர் நீதிபதியாகவும் சிரசுதர் என்பவர் நீதிமன்ற நிர்வாகியாகவும் செயல்பட்டனர்.

படை

''ஒரு நாட்டு குதிரைப்படையின் அளவைக் கொண்டு தான் அந்நாட்டின் செல்வ செழிப்பின் நிலையை அறிய முடியும்'' என்னும் முகலாய பேரரசர் அக்பரின் கூற்றுக்கு ஏற்ப ஆற்காட்டு நவாபுகள் தங்கள் குதிரை படையை மிகச் சிறப்பாக அமைத்து நல்ல முறையில் குதிரைகளை பராமரித்த னர். அக்காலத்தில் திருப்பதியில் குதிரைகள் விற்கப்படும் பெரும் சந்தை ஒன்று இருந்தது. ஆற்காட்டு நவாபுகள் ஒரு தடவைக்கு குறைந்தது 10,000 குதிரைகளை அச்சந்தையில் இருந்து தம் குதிரைப்படைக்கு வாங்கினார்கள். நவாப் வாலாஜா குதிரை ஏற்றத்திலும் போர் செய்வதிலும் மிகவும் திறமை சாலியாக விளங்கினார். போர் காலங்களில் தம் படைகளுக்கு நவாப் வாலாஜாவே தலைமை தாங்கிச் செல் வார். இவர் ஆங்கிலேயர்களுடன் சுமூகமான உறவு கொண்டு இருந்ததால் அவர்களுடைய சிறந்த கட்டுப்பாடான படை அமைப்பு முறைகளை தம்முடைய படையிலும் புகுத்தினார். ஆங்கிலேயர்களைக் கூட தம் படையில் அலுவலர்களாகவும், போர் வீரர்களாகவும் சேர்த்துக் கொண்டார். அனைத்து படை

களுக்கும் நவாபே தலைவராவர். படைகளின் ஒவ்வொரு பிரிவுக்கும் பவுசுதார் என்பவர் தலைவராக விளங்கினார். படைகளுக்கு ஆகும் செலவு கணக்குகளை நிர்வகிக்க பிக்ஷி என்பவர் நியமிக்கப்பட்டார்.

கோட்டைகள்

நவாபுகள் தங்களை நிலைப்படுத்திக் கொள்ள பெரும் போர்களில் ஈடுபட வேண்டியதாயிற்று இதற்காக இவர்கள் கர்நாடகத்தில் சுமார் 60 க்கும் மேற்பட்ட கோட்டைகளை நிறுவி அவற்றில் தம் படைகளை நிலையாக வைத்திருந்தார்கள். இக்கோட்டைகளில் படைநிர்வாக அலுவலகங்களுடன் நாட்டு நிர்வாக அலுவலகங்களும் செயல்பட்டன.

கோட்டைகள் இருந்த இடங்கள் வருமாறு

1) கிடங்கில்	2) பெருமுக்கல்	3) வழுதாவூர்
4) விருத்தாசலம்	5) பாளயம் கோட்டை	6) இறைஞன் குடி
7) போளூர்	8) முஸ்தாபகட் (சங்கராபுரம்)	9) வேப்பூர்
10) ராவுத்தநல்லூர்	11) சிதம்பரம்	12) திருவண்ணா மலை
13) எலவானாசூர்	14) பெண்ணாத் தூர்	15) திம்மபைய துருகம்
16) தியாக துருகம்	17) வாலிகொண்ட புரம்	18) ஆரணி
19) சேத்பட்டு	20) செங்கற்பட்டு	21) கருங்குழி
22) பூவிருந்தவல்லி	23) மயிலாப்பூர்	24) திருப்பாச்சூர்
25) தாமரைப் பாக்கம்	26) திமிரி	27) ஆற்காடு

28) வேலூர்	29) வந்தவாசி	30) படவேடு
31) வண்ணரின் துருகம்	32) கக்கிலிதுருகம்	33) ஆம்பூர்
34) சந்திரகிரி	35) உதயகிரி	36) ராணிப் பேட்டை
37) சத்தியவேடு	38) கிருஷ்ணகிரி	39) சித்தூர்
40) ஊத்துக் கோட்டை	41) நாகலாபுரம்	42) நின்றை
43) நாராயண வனம்	44) காளாஸ்திரி	45) திருமுல்லை வாயில்
46) கரிகிரி	47) மகிமண்டலம்	48) திருப்பத்தூர்
49) தேசூர்	50) காவிரிபாக்கம்	51) காஞ்சிபுரம்
52) கலவை	53) செஞ்சி (ஏழு கோட்டைகள்)	
54) பரங்கிப்பேட்டை		

கலைகளும் கைத்தொழில்களும்

ஆற்காட்டு நவாபுகள் தம் ஆட்சியின் பெரும் பகுதியை போர்களில் கழித்தாலும் கலைகளுக்கும் கைத்தொழில்களுக்கும் மிகுந்த ஊக்கமளித்தார்கள். கலைஞர்களும் கைத்தொழில் வினைஞர்களும் பெரும் மதிப்பு பெற்றார்கள். அவர்கள் எழுப்பிய அரண்மனைகளும், மசூதிகளும், தர்காக்களும், இன்றும் கலைச்சிறப்புடன் விளங்குகின்றன. அவர்கள் கால மர வேலைப்பாடுகளும் பீங்கான் மட்பண்டங்களும் இன்றும் போற்றப்படுகின்றன.

இசுலாமிய கலை மற்றும் கட்டிடக்கலைகளும்

இசுலாமியர்கள் இந்தியரின் மீது எடுத்த படையெடுப்புகளால் இந்திய பண்பாட்டிலும் மக்கள் வாழக்கையிலும் மட்டுமல்லாது. அவர்கள் வழிவழியாக பின்பற்றி வந்த கலைத் துறையிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. குறிப்பாககட்டிடக் கலையில் இந்திய இசுலாமிய கூறுகள் கலந்த ஒரு புதிய பாணியே உருவாகியது.

பெரியார் ஈ.வெ.ரா. கூறும் ஆராய்ச்சி மனப்பான்மை

ந. தூரன் கந்தசாமி
சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ் நாட்டில் பெரியார், ஈ. வெ. ரா. இயக்கத்தின் தாக்கம் பெறாத துறைகள் இல்லை. அவர் இந்த மண்ணில் நிலவி வந்த பலமான பழைய எண்ணங்களைச் சாடிப் புது நெறி கண்டார். பகுத்தறிவு அடிப்படையைப் பின்பற்றி வெற்றி கண்டார்.

பழைய எண்ணங்களுக்கும், புதிய சிந்தனைகளுக்கும் உள்ள இடைவெளியை எடுத்துக்காட்டி அவற்றிற்கிடையேயான முரண்பாடுகளைத் தெளிவுபடுத்தினார். இவரது பார்வை கலை, இலக்கியம், சமூகம் என்று விரிந்து கிடக்கிறது.

தமிழ் சமூக அமைப்பை உற்றுநோக்கி அதன் மூடக் கட்டுக்களைப் பகுத்தறிவுப் பார்வை கொண்டு ஆராய்ந்து கூறினார். ஆராய்ச்சித்தன்மை எதிலும் இருக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்.

மூடக்கட்டுகளுக்கான மூலம், அவற்றின் நோக்கம், வளர்ச்சி ஆகியவற்றைப்பற்றிய சரியான விளக்கங்களைக் கடுமையாகவே வைத்தார். தமிழகத்தில் அவர் மேற்கொண்ட இடையறாத கருத்துத்தாக்கத்தின்மூலம் பெரும் வெற்றி கண்டார்.

இக்கட்டுரை பெரியார் ஈ.வெ.ரா.வின் நோக்கம், அவர் கொள்கை, அவர்கூறும் ஆராய்ச்சித் தன்மை ஆகியவற்றை ஆராய்கிறது.

1. பெரியார் ஈ. வெ. ரா. வின் நோக்கம்

பெரியார் ஈ.வெ.ரா. தனது நோக்கம் பற்றித் தெளிவாக அறிவுறுத்தியுள்ளார்.

'ஈ.வெ.ராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மக்கள் சமுதாயத்தினரைப் போல் மானமும், அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக்கொண்டு அதே பணியாய் இருப்பவன். இதைத் தவிர வேறு பற்று ஒன்றும் இல்லாததாலும், பகுத்தறிவையே அடிப்படையாகக் கொண்டு கொள்கைகளையும், திட்டங்களையும் வகுப்பதால் நான் அத்தொண்டுக்குத் தகுதி உடையவன் என்றே கருதுகிறேன்'

— என்று தம் வாழ்வின் குறிக்கோளையும் தொண்டின் போக்கையும் தெளிவுபடுததியுள்ளார்.

பெரியாரின் நோக்கம் விமர்சிப்பதோடு அல்லாமல்,

1) இந்தச்சமுதாயத்தை மாற்றி அமைப்பதையே தம் வாழ்வுக்கடமையாகக் கொண்டு அம்மாற்றத்தைச் செய்வதற்கான வேலையை முழுமூச்சுடன் மேற்கொள்ளுதல்.

2) சமூக முன்னேற்றத்திற்குப் பண்பாடும், பொருளாதாரமும் அடிப்படையானவை. பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும் முனனேற்ற சமுதாயமாக இச்சமுதாயம் அமையத் தடுக்கும் சக்திகளை இனங்கண்டு அறிவு ஆராய்ச்சியை முதன்மைப்படுத்துதல்.

– ஆகியவை அவர் கொண்ட தலையாய நோக்கங்களாகும். இந்நோக்கம் நிறைவேற அவர் கொண்டிருந்த கொள்கைகளைப் பார்க்கலாம்.

2. ஈ. வெ. ரா. கொள்கை

பெரியார் ஈ.வெ ராவின் கொள்கைகளைப் பற்றித் தெளிவு கொள்ளாமல் அவர் எதிலும் ஆராய்ச்சித் தன்மை வேண்டு

மென்று வலியுறுத்துவது பற்றி அறிந்து கொள்வது இயலாத தாகும்.

1) ஈ.வெ.ரா. பெரியார் 'பகுத்தறிவை அடிபடையாக ஏற்றுக் கொண்டவர்' அதனை அடிப்படையாகக் கொண்டு தம் நோக்கத்தையும். ஆராய்ச்சித்தன்மை அறிவு பற்றியுமான விளங்கங்களை முன்வைத்தார்.

2) சாதி, சமயம் ஆகியவற்றால் ஏற்படுகின்ற வேறுபாடு க்ளை நீக்கித் திராவிட மக்களை ஒற்றுமையும் கட்டுப்பாடும் உள்ளவர்களாக்க முயல்வது.

3) அறிவுக்கும், தன்மானத்திற்கும் பகையானவற்றை வேரோடு களைந்து விடுவது.

4) மொழி அபிமானம், இலக்கிய அபிமானம் என்ப தெல்லாம்கிடையாது, வெறும் மனிதாபிமானம் அதுவும் வளர்ச்சி அபிமானம் மட்டும் தான் முக்கியம்.

5) சமயங்கள் தாராளச் சிந்தனைக்கு வழிவகுப்பதில்லை ஏற்றத்தாழ்வற்ற, போட்டி பொறாமை இல்லாத அமைதியான உலக வாழ்வுக்குச் சமயங்கள் அழிக்கப்பட்டே ஆகவேண்டும்.

6) ஆராய்ந்து பாராமல் எதையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது. அப்படிச் சொல்லப்பட்டவைகளின் அவசியத்தை அறிந்து அது இன்று சமுதாயத்துக்குப் பயன்படுமா என்று பார்த்து ஏற்றுக்கொள்ள வேண்டும். தன்புத்தியை முழுமையாய் நம்பவேண்டும்.

மேற்கண்டவைகளைப் பெரியார் தன்வாழ்நாளில் கடைப் பிடித்து இயக்கம் மூலம் மக்களிடம் எடுத்துக்கூறி வந்தார். இக்கொள்கை அக்காலத்திற்கு முக்கியமானதாய் இருந்தது.

மக்கள் கல்வி அறிவு அற்றவர்களாக இருந்த போது அவர் களிடம் பரப்பப்பட்டு வந்த போலிப் பழக்க வழக்கங்கள்

அவர்கள் வாழ்வையே எதிர்காலமற்றதாக, பின்தங்கியதாக, பயம், மூடநம்பிக்கை இவற்றின் மொத்த விளைநிலமாக மாற்றி இருந்தன. இதை மாற்றாமல் தமிழ்ச் சமூகம் ஏற்றம் பெற முடியாது என்று கண்ட பெரியார் அதற்காகத்தன் வாழ்வை அர்ப்பணித்தார். தமிழ் மக்களைப் பிணைத்து வைத் திருந்த கட்டுகள் மீது இடையறாது தாக்குதல் நடத்தியும், மக்களுக்கு எடுத்துக் கூறியும், வற்புறுத்தியும், வந்தார்.

இதற்காக அவர் மேற்கொண்டமுறை சற்றுக்கடுமையான தாகவே இருந்தது. அதுவே மக்களிடம் பரவுவதற்கு வேகம் கொடுத்தது.

3 ஆராய்ச்சி மனப்பான்மை

பெரியார் ஈ.வெ.ரா எந்த ஒன்றையும் பகுத்தறிவு அடிப் படை கொண்டு ஆராய்ந்து ஏன். எப்படி என்று பார்த்து அதன் இன்றைய, நாளைய அவசியத்தையும் பார்க்கவேண்டும் என்று கூறினார், இந்த முறையில் இவர் பழமை, இலக்கியம் ஆகியவற்றை ஆராய்வதற்கான வழிமுறைகளைக்கூறியுள்ளார். அவற்றை இனிக்காணலாம்.

3. அ) பழமை ஆராய்ச்சி

இந்தப் பூமி உண்டாகிப் பலகோடி ஆண்டுகளாக எத்தனையோ மாற்றங்கள் உண்டாகி இருக்கின்றன. ஆனால் இதில் மனிதகுல வரலாற்றில் மட்டும் மாற்றம் என்பது மிக வேகமானதாக இருக்கிறது. அதற்குக்காரணம் மனிதனுக்கு அடிப்படையில், ஆறாவது அறிவாகிய மனதால ஏதொன்றையும் பிரித்தறியும் ஆற்றல் பெற்றிருப்பதே ஆகும். இதுவே மனிதனை மற்ற உயிரினங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இந்த மாற்றத்திற்கான மனித உழைப்பு என்பது வரலாற்று முறையில் பார்க்கும்பொழுது மிக அதிகம்.

சென்ற நூற்றாண்டு மனிதனுக்கு இருந்த உழைப்புக்கும் இந்த நூற்றாண்டு மனிதனுக்கு இருக்கும் உழைப்புக்கும் மாற்றம் உண்டு எனினும் அடிப்படையில் மனிதனுக்கு உழைப்புத்தேவைப்படுகிறது. இந்த உழைப்பு அறிவு சார்ந்த

ஒன்றாய் இருக்கிறது. காலமாற்றத்திற்கு ஏற்ப மனிதன் மாறுவதோடு சமூகமும் மாறுகிறது அப்போது புதுப்புதுச் சிந்தனைகள் உண்டாகின்றன. அதற்கு ஆராய்ந்து பார்க்கும் மனப்பாங்கும் முக்கியமானதாகிறது. நேற்றைய சூழலில் மனிதனின் உழைப்பும், அறிவு ஆராய்ச்சியும் சரியேயெனினும் அது இன்றைய சூழலில் மாற்றம் பெற்றாகவேண்டிய கட்டாயம் உள்ளது. அப்படிப்பார்க்கும்போது அது எந்த வகையில் சரியென்று என்றும் பார்க்கவேண்டியுள்ளது இந்த அடிப்படையிலேயே பெரியார், ஈ.வெ.ரா. பழமைபற்றிய நமது ஆராய்ச்சி மனப்பான்மை தெளிவுபெற வேண்டுமென்று வலியுறுத்துகிறார்.

1. 'பழைய காலம் பொற்காலம்' என்றும் பழைய மனிதனைப்போல் இன்று நாமில்லை என்றும் அவனைப்போல என்று வாழ்வோம் என்றும் ஆதங்கப்படுவதோடு பழந் தமிழனையே பெருமையாய்ப் பேசிக்கொண்டிருப்பதை பெரியார் கேட்கிறார்;

'பழந்தமிழன் யார்? அவன்கொள்கை என்ன? அதற்கு ஆதாரம் என்ன? அதற்கு இன்று அவசியம் என்ன? - என்பன போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல ஆளைக்காணோம்'

இதில் பெரியார் கூறும் ஆராய்ச்சி மனப்பான்மை கருத்தில் கொள்ளப்பட்டே ஆராயப்படவேண்டும் என்பது புலப்படு கிறது. அப்படி இன்றைக்கு அவசியம் ஏற்படின் இன்று எது பற்றி அராய்கிறோமோ குறிப்பாக 'பழந்தமிழன்' பற்றி இன்று நமக்கு அவசியம் எழும்போது அவன் கொள்கை என்ன என்பது முதலில் அறியப்படவேண்டியதாகிறது அவன் கொள்கை இதுதானென முடிவுக்கு வரும் போது அதற்கான ஆதாரம் முக்கியமானதாகப் படுகிறது. பழந்தமிழன் யார்? என்பதைச் சரியாகக் கணித்துப்பார்த்தே முடிவுக்கு வரவேண்டியிருப்பதால் அது சரியாக இல்லாத பொழுது மேலும் அவனை வைத்துசமூகம் தன்னை முன்எடுத்துச் செல்லும் போது தடைகள் ஏற்படும், குழப்பம் ஏற்படும் என்பதை உணர்தலும் வேண்டப்படுவதாகிறது. ஆகவே இன்றைய

தேவை கருதிச் செய்யும் போது அவனைப் பற்றிய ஆராய்ச்சி முக்கியமானதாகிறது.

முன்னோர்கள் சொன்னதை அப்படியே செயல்படுத்தி வந்திருந்தால் இன்றைய வளர்ச்சியை எண்ணிப்பார்க்க முடியாது. அதனையே பெரியார், "உலக இயற்கை, மாறுபாட்டைக் கொண்டதாகும் அம்மாறுபாட்டை முன் னேற்றத்திற்கு ஏற்ற வண்ணம் அமைத்துக் கொள்ள வேண்டும். மாறாக, அவற்றைத்தள்ளி பழம்பெருமை பேசுதல் கூடாது" என்கிறார். மேலும், 'இதற்குக் காரணம் என்ன வென்றால் நமது அடிமைத்தனம் நம்முடைய தலையின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கிறது, அது நமது அறிவைக் கூரில்லாமல் செய்துவிட்டது. நமது நாட்டில் இருக்கக்கூடிய அறி வாளிகளும், தீர்க்கதரிசிகளும், கவிவாணர்களும் பழமையைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள்' என்றும் கூறுகிறார். இதிலிருந்து நாம் பழமையை உணர்ந்த முறையையும், அதன்மீது நமது ஆராய்ச்சி மனப் பான்மையையும் தெளிவுபடுத்துகிறார் என்பதோடு ஆராய்ச்சி, அறிவுத்தனம் என்பனவற்றை விளங்கிக் கொள்ளவைக்கிறார்'

ஆ) இலக்கிய ஆராய்ச்சி

தமிழ் மொழி, இலக்கியத்தின் வரலாற்றை எடுத்துக் கொண்டால் மிக நீண்ட பாரம்பரியம் உடையது. காலத் தேவைக்கு ஏற்பவும், சூழல் மாறுபாட்டுக்கு ஏற்பவும் தமிழ் தன் வடிவத்தை மாற்றிக் கொண்டு வந்திருக்கிறது. 10 ஆம் நூற்றாண்டில் காப்பியம் எழுதப்பட்டதற்கும் இன்று நாவல் எழுதப்படுவதற்கும் சமூக கால மாற்றமும் தேவையும் காரணமாகிறது. நாளைய நூற்றாண்டில் தமிழின் இந்த வடிவம் மறுக்கப்பட்டு வேறுவடிம் தோன்றலாம். அது அச் சமூக காலச் சூழலின் தேவைக்கான காரணங்கள்.

இன்றைய சூழலில் காப்பியம், புராணம் தோன்றவோ, வளரவோ இயலாது. அப்படி இருக்கையில் அதைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பது இன்றைய தேவையை உணர மறுப்ப தாகும்.

கேரளத்தில் வழங்கிவரும் நாட்டுப்புறத் தமிழ் நாடகங்கள்

பி. நசீம்தீன்,
கேரளப் பல்கலைக்கழகம்.

கேரளத்தில் தென்திருவிதாங்கூர் பகுதிகளில் வழங்கி வந்த தமிழ்க் கதைப்பாடல்கள் (தெக்கண் பாட்டுகள்) போல மத்திய கேரளப்பகுதிகளில் பல தமிழ் நாடகங்கள் வழங்கிவந்தன. சவிட்டு நாடகம், மீனாட்சி கல்யாண நாடகம், கம்ச நாடகம் ஆகியன பாலக்காடு மாவட்டத்தைச் சார்ந்த பகுதிகளில் வழங்கி வந்த நாடகங்கள் ஆகும். தொன்மைக் காலத்தில் பாலை நிலமாக இருந்த அப்பகுதி இடைக்காலத்திலும் போர்த்துக் கீசியர் காலத்திலும் பல மாற்றங்களைப் பெற்றது. கானகங்கள் அழிக்கப்பட்டுக் கழனிகள் ஆகின. சாலை இணைப் புக்கள் பெருகின. பாலைநில மக்களாயிருந்த எயினர் பிற்காலச் சமுதாய மாற்றங்களுக்கு ஈடு கொடுக்க இயலாமல் பிற்பட்ட வகுப்பினராகி, போர்த்துக்கீசிய கத்தோலிக்கச் சபையினரின் வருகைக்குப்பின் கிறித்தவ மத்தைச் சார்ந்தொழுகினர். இலத்தீன் கத்தோலிக்கர் என்ற இப்பிரிவினர் வீர மரபினர். அம்மரபு சார்ந்த மக்களுக்கு ஏற்றாற் போன்ற ஒரு மதப் பிரச்சார நாடகஅமைப்பு எனச் சவிட்டு நாடகத்தைக் கருத லாம். இந்நாடக அமைப்பின் பின்புலம் தெருக்கூத்தின் அமைப்பும் களரியின் பயிற்சியும் எனக் கொள்ளலாம் இக்கலை வடிவத்தின் கதையும், சில நாடக அமைப்புக்களும் போர்த்துக் கீசியக் கலையின் சாயல் பெற்றவையாகும். கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசியர் கேரளத்தில் மதம்பரப்ப வந்தனர். சவிட்டு நாடகங்களை உருவாக்கிய போர்த்துக்கீசிய

கத்தோலிக்க சபையோர் கேரளத்தை டச்சுக்காரர்களிடம் விட்டு நீங்கிய காலகட்டத்தில்தான் கோழிக் கோட்டு மான வேத ராஜா கதகளியின் முதல் வடிவமான கிருஷ்ணனாட்டத்தைத் தோற்றுவித்தார் என்பர் (கி. பி. 1654). மீனாட்சி நாடகம், கம்சநாடகம் ஆகியன பாலக்காட்டு பிராமணர்களிடையே வழங்கி வந்த நாடகங்களாகும்

சவிட்டு நாடகம்

பாலக்காடு அடங்கிய பண்டையக் கொச்சி சமஸ்தானப் பகுதிகளில் இலத்தீன் கத்தோலிக்க மக்களால் பெரிதும் விரும்பி நடிக்கப்பட்டு வந்த நாடகங்கள் 'சவிட்டு நாடகம்' எனும் பெயரால் வழங்கப்படுகின்றன. தமிழகத்தில் வழங்கிவரும் தெருக்கூத்தின் பண்புகள் பெற்றது இந்நாடக வடிவம். பெரிய மேடையிட்டுப் பல நடிகர்கள் நாடகமேடை உடைவதுபோலக் கால் சுவடுகள் மிதித்து ஆடுவதனால் 'தட்டுப் பொளிப்பன்' நாடகம் என்றும் வேடிக்கையாகக் கூறுவர். இந்நாடகத்தில் நடிக்க ஆசை கொள்வோர் அண்ணாவியை (தலைமைப் புலவர்) அழைத்து அவரிடம் ஆசிபெற்றுப் பின் களரிப் பயிற்சி பெறுகின்றனர். உடற்பயிற்சி, ஆயுதங்களைப் பயன்படுத்தும் பயிற்சி ஆகியன இதிலடங்கும். அதன்பின்னர் நாடகப்பாட்டுகளுக்கு நடிக்கும் முறை கற்பிக்கப்படுகிறது. இதனைச் 'சொல்லியாட்டமென்று' கூறுவர். இதில்பாட்டுக்கேற்ப அடியெடுத்து மிதித்து ஆடுவது மிகச் சிக்கலானதாகும். ஒவ்வொரு அடிவைப்புக் கேற்பக் கையும் கண்ணும அசைவுபெறவேண்டும். 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் கிறித்தவ சபையோரால் அறிமுகப்படுத்தப் பட்ட நாடகக் கலையின் அடிச்சுவட்டில் தென்னகத் தெருக் கூத்து கதகளி, களரி அம்சங்களை உட்கொண்டு வளர்ந்ததே சவிட்டுநாடகம். யக்ஷகானத்தில் போல சுவடுவைத்து ஆடும் ஆட்டத்திற்கு இதில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்றாலும் இது தாண்டவ அமைப்புக் கொண்டதாகும். ஐரோப்பியக் கலைவடிவமான Litergical form, நாட்டியம், நாடகம், இசை, வரலாற்றுத் தொடர்பான கதை போன்றவற்றைத் தென்னகக் கலைகளான தெருக்கூத்து, களரி ஆகியவற்றுடன் இணைத்து ஒருபுதிய வடிவமாக உருக்கொண்டதே இவ்வமைப்பு

எனலாம். நாற்பதுக்கும் மேற்பட்ட சவிட்டு நாடகங்கள் நடிக்கப்பட்டு வந்ததாகவும் அவற்றில் பல இன்று ஏடுகளாக மட்டும் நிலை கொள்கின்றன என்றும் அறிகிறோம்.

கவ்ஷீனா நாடகம், அவுஸேப்பு நாடகம், காரல்மான்சரிதம் பீசினா நாடகம், கத்தரினா நாடகம், அலேசு நாடகம், அப்பலேசு நாடகம், ஜெனோவா நாடகம், நெப்போலியன் சரிதம். இஸாக்கு விஜயம், தாவீதுவிஜயம், யாக்கோபுநாடகம், லூசினா சரிதம், மார்ட்டின் கதை, தர்மில்டான் நாடகம், கீவர்கீஸ் நாடகம் சத்தியபாலன் நாடகம், ஞானசவுந்தரி நாடகம், கோமள சந்திரிகா நாடகம் போன்ற நாடகங்கள் இத்துறை முன்னணிக்கலைஞர்களால் நடிக்கப்பட்டு வந்துள்ளன தெருக்கூத்தமைப்பை ஒத்த இக்கலையைக் கேரளத்திற்குக் கொண்டுவந்தவர் 'சின்னத்தம்பி அண்ணாவி' எனும் தமிழர் என மரபு வழி வரலாற்றில் கூறுகின்றனர். ஈழத்திலும் தமிழகத்தில் கோவை மாவட்டப் பகுதிகளிலும் இந்நாடகம் நடிக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது ஈழத்தென் மோடி நாடகங்கள் பலவும் கத்தோலிக்கச் சமயஞ்சார்ந்தவை என்றும் சவிட்டுநாடக அமைப்புக் கொண்டவை என்றும் ஆய்வாளர் கருதுகின்றனர்.

சவிட்டு (கால் வைப்பு) படித்த நடிகர்கள் 'கவித்தம்' சொல்லிப் படிக்கின்றனர் ஒவ்வொருவகை அடிவைப்புககும் தனித்தனிக் கவித்தம் உண்டென்கின்றனர். நாட்டிய சாத்திரத்தில் 'தாண்டவம்' 'லாஸ்யம்' எனும் இருபிரிவுகள் குறிப்பிடப்படுகின்றன. சவிட்டு நாடகம் 'தாண்டவ' அமைப்புக் கொண்டது. தெருக்கூத்தில் நடிகர்கள் காலில் சலங்கை அணிவர். ஆனால் தாண்டவ நடன வகைசார்ந்த சவிட்டு நாடகத்தில் பெண் பாத்திரங்கள் ஏற்றுநடிப்போர் மட்டும்சலங்கை அணிகின்றனர். சவிட்டு நாடகச் சுவடுகளை (கால்வைப்பு) இரண்டாகப் பிரிப்பர். 1) பன்னிரு அடிப்படைச் சுவடுகள்: அவற்றின் இரட்டிப்புக்கள் பன்னிரண்டு; கலாசம் 12; இடைக்கலாசம் 12; அடந்தை 12; கவித்தம் 12: இவையே முதல்நிலைச் சுவடுகளாம். 2)இரண்டாவது வகைச் சுவடுகள்: எட்டுவகைப் பாத்திரப் பண்புகளுக்கேற்ப அமைக்கப்பட்டதாகும். முன்பாதம் மிதித்தல்,

நடுப்பாதத்தோடு அழுந்த மிதித்தல், குதிக்காலால் மிதித்தல் போன்று இவ்வகைச் சுவடுகள் பாத்திரங்களுக்கு ஏற்ப மாறு படுகின்றன. மின்னுகின்ற ஆடைகள், தொப்பிகள், மகுடம் முதலானவை இன்றியமையா வேடப்பொருள்களாகும். போர்க் காட்சிகளில் உண்மையான வாள் பயன்படுத்தப்படுகிறது. இந் நாடகங்களில் களரியினுடைய தாக்கத்தை இதனால் அறியலாம். பிறநாடகங்கள் நடைபெறுவதைவிடப் பெரிய அரங்கே அமைக் கப்படுகின்றது. ஏராளமான நடிகர்கள் கால் சுவடுகள் தட்டிச் சுற்றிவந்து ஆட மேடை வசதியளிக்கிறது. மேடையில் பெரிய குத்துவிளக்குக் கொளுத்தி அருகில் அண்ணாவி அமர அவரருகே உதவியாளர் (சுவடிக்காரர்) அமர்வர். தெருக்கூத்திற் போலவே கட்டியங்காரன் எனும் சிரிப்பூட்டும் பாத்திரம் சவிட்டு நாடகத்திலும் உள்ளது.

'கொலுவில் தரு' (அரசன்பாடும் முதல்பாட்டு), நாட்டு வளம் (அமைச்சன் நாட்டுவளம் கூறல்), கலை (எதிர் அரசர் கள் சந்தித்து வாய்ப்போர் தொடுத்தல்), 'யுத்தத் தரு' (போர்ப் பாட்டு-யுத்தத்திற்கு இடையிடையே இருதரப்பினரும் பாடுவது), துயரத்தரு, (ஒப்பாரி) ஆகிய அமைப்புக்கள் சவிட்டு நாடகத்தில் அமைந்துள்ளன.

இவ்வகை நாடகங்களில் மலையாள மொழி வழக்குகளும் வடசொற்களும் பாட்டோடு இயைந்திருப்பதைக் காணலாம். மிகுந்த பாடல்களும் இடையிட்ட வசனங்களும இந்நாடகங் களின் பொது அமைப்பாகும். சவிட்டுநாடகத்துக்கும் தமிழகத் தெருக்கூத்துக்கும் உள்ள தொடர்பினை இவ்வமைப்பு எடுத் துரைக்கின்றது. 'வசனங்கள்' பேச்சு வழக்குச் சொற்களை மிகுதியும் பெற்றமைகின்றன. 'மூவரசர் நாடகம்' எனும் சவிட்டு நாடகம் இவ்வாறு தொடங்குகின்றது:

'அர்ச்சிஷ்ட சிலுவையெனும் அடையாளத்தால்
அலகை எனும் சத்துருக்களிடத்து நின்று
நிச்சயமாய் ரெச்சித்துக் கொள்ளு மெங்கள்
நினைவில் வளர்ந்திருக்கு கின்ற சருவயீசா
தற்சுயமாய் பிதா சுதன் இஸ்பரீத்து

சாந்துவென்னும் திருத்துவத்தின் நாமத்தாலே
முற்செயலாய்த் திருச்சபையில் நடந்துவரும்
மூன்றரசர் சரிதை தனை யொழிகுவனே"

இது போன்ற பாடல்கள் 'விருத்தம்' எனப்படுகின்றன. உரை யாடல் அமைப்புக்கள் காட்சியாளரை முன்னிலைப்படுத்துவது முதலானவை 'வசனங்கள்' எனக் குறிப்பிடப்படுகின்றன. அவை

'ஆனால் கேளுமையா ராசாக்களே! கடவுள் பிறந்தவிடம் தேடி அலைய வேண்டியதில்ல. நமக்கு வழிகாட்டி வந்த தூதான நட்சத்திரத்த முன்னுக்குவிட்டு அவ்வழியாய் அவர்பாதம் கண்டு செந்தமிழ் பாமாலையிழைத்து அவரது பாதத்தில் சூட்டி நமது பாவம் தீர்ப்போமென்று அறிவீராக'

என்பது போன்றமைகின்றன. 'ஆனால் கேளும் சபையோர் களே' என்பது போன்று சபையோரை முன்னிலைப்படுத்தும் அமைப்பும் காணப்படுகின்றது. இந்நாடகத்தில் வசனப்பகுதியில் பிறமதக் கருத்துக்களை ஏளனம் செய்யும் அமைப்பும் காணப் படுகின்றது.

'கேளுங்கள் பிராமணரே! கலியுக முடிவிலே ராமதேவர் குதிரையாகப் பிறப்பாரென்று சொன்னீர்கள். எந்த ஊரிலே எந்தச் சாதியிலே ..பிறப்பான். இவன் முன்னாலே பிறந்த பத்த வதாரங்களிலே உலகத்துக்குச் செய்த நன்மை என்ன? ராம வாய்ப் பிறந்து பெண்சாதியைத் தோற்றான்......".

இவ்வாறான அமைப்பினை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

'தரு' என்று இவர்களால் குறிப்பிடப்படும் பாடலமைப்புக் கள் இசையோடு பாடக்கூடியவையாக அமைந்துள்ளன. சவிட்டு நாடகப் பாடல்கள் கர்நாடக சங்கீதத்தில் அமைந்தவையாகும். தாளம், ராகம் முதலானவை இவ்வமைப்புப் பெற்றாலும் சில போது ராக அமைப்புக்கள் மாற்றப்படுவதுண்டு. ஆட்டத்தின் சூழலுக்கேற்ப இம்மாற்றங்கள் நிகழுகின்றன. அப்போது

இலக்கணசுத்தமான கர்நாடக இசையை அங்கு எதிர்பார்க்க இயலாது. மூவரசர் நாடகத்தில் பேய்கள் (சாத்தனே) பாடும் 'தரு' இவ்வாறு அமைகிறது;

'திறமதைக் கேட்பாயே, பூமியில் நான் செய்யும்
திறமதைக் கேட்பாயே.
திறமதைக் கேட்பாயே செகத்தினில் வாழ்பவர்
பரனுரை மீறவே பண்டுமென் வஞ்சத்' (திறமதை)
'தாயுடன் தகப்பனை அடித்துமே ஏசவும்
தமயனுக்கடங்காமல் தம்பி மேலாகவும்
ஞாயங்கள் முறைதப்பி அழிவழக் குரைக்கவும்
லஞ்சங்கள் வாங்கியே பொய் சொல்லச்
செய்யுமெந்தன்' (திறமதைச்)

இவ்வாறு சமுதாயத்தில் காணப்படும் கீழ்நிலைகளையெல்லாம் அடுக்கி அவ்வாறு செய்யும் தம்திறம் குறித்துச் சாத்தான் பாடும் இவ்விசைப் பாடல் அமைகிறது.

'அத்திமாநகரில் அக்ஷயந்தோணியார் வாழி, மூன்று
முத்திபெற்றரசர் சரிதையை முயன்றனர் வாழி
படித்தவர் வாழி இதைநிதம் படிக்கவே சொல்லி கிட்ட
அடுத்துமே இருந்து கேட்கின்ற யாவரும் வாழி'.

என்று பழந்தமிழ் நாடக மரபை யொட்டி இந்நாடகமும் வாழி பாடுவதுடன் முடிகின்றது.

கேரளத்தில் சவிட்டுநாடகம் மிகவளர்ந்து ஆதரவு பெற்ற காலத்தில் இந்துப்புராணங்களை அடியொற்றிய பலநாடக முயற்சிகள் தோன்றின. கதகளியன்றியும், வடமொழி நாடகங்களும், தமிழ் சங்கீத நாடகங்களும் கேரளமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெறத்தொடங்கின. இம்முயற்சியின் தொடக்கமாகக் கதகளியின் அமைப்பை உட்கொண்ட பாலக் காட்டுத் தமிழ் பிராமணர்களின் 'கம்சநாடகம்' 'மீனாட்சி கல்யாண நாடகம்' முதலானவற்றைக் குறிப்பிடுவர். 'கொங்கன் படை' எனும் வீரவிழா இப்பகுதியில் நடைபெறுவதும் குறிப் பிடத்தக்கதாகும்.

அருட்பெருந்திரு இராமலிங்க வள்ளலாரும் நாராயணகுருவும்

சு. நடராசன்
ஆசியவியல் ஆய்வுநிறுவனம், சென்னை

19-ஆம் நூற்றாண்டில் தமிழகத்திலும் கேரளத்திலும் தோன்றிய இருபெரும் சமுதாயச் சிற்பிகள். இராமலிங்க வள்ளலாரும் நாராயணகுருவும் ஆவர். சமய, சமுதாய மேம்பாட்டிற்குரிய நற்கருத்துக்களை எடுத்துரைத்து மக்களை நல்வழிப்படுத்துவதில் இருவரும் பல நிலைகளில் ஒன்றுபடுகின்றனர். இருவரும் சமகாலத்தவராயினும் மாறுபட்ட இடம் சூழல்களில் வாழ்ந்தவர்கள். இவர்களுடைய வாழ்வு, ஆன்மீகப் பணி இலக்கியப் பணி, சமுதாயத் தொண்டு அருளுரைகள் போன்றவற்றை ஒப்பிட்டுச் சில செய்திகள் இவண் விளக்கப் பட்டுள்ளன.

தோற்றமும் இளமைப்பருவமும்

வள்ளலார் சிதம்பரத்தை அடுத்துள்ள மருதூரில் இராமையா பிள்ளை, சின்னம்மை தம்பதியருக்கு ஐந்தாவது மகவாய் 5-10-1823. ஞாயிற்றுக்கிழமையன்று சித்திரை நட்சத்திரத்தில் (கலியுகம்4925 சுபானு வருடம்புரட்டாசி மாதம் 21-ஆம் தேதி) பிறந்தார். பெற்றோர் இவரை இராமலிங்கம் என்றழைத்தனர் வள்ளலாரின் ஆறாவது திங்களிலேயே தந்தையார் இறக்க, தாயார் குழந்தைகளுடன் மருதூரினின்றுப் பொன்னேரிக்குச் சென்றுச் சில காலம் தங்கி, 1824இல் சென்னைக்கு வந்தார். இளவயதிலேயே இறையருள் வாய்க்கப்பெற்ற வள்ளலாருக்கு ஆசிரியரிடம் சென்று கல்வி கற்பதில் அதிக நாட்டம் ஏற்பட

வில்லையாயினும் ஓதாதுணர்ந்த கல்விமானாக விளங்கினார். வள்ளலாரின் புலமையை நன்குணர்ந்த ஆசிரியரும் அவரை வற்புறுத்தவில்லை. வள்ளலார் தனது ஒன்பதாவது வயதிலேயே கவிபாடும் ஆற்றலுடன் விளங்கினமையை அவரது கூற்றுக்களே மெய்ப்பிக்கின்றன (திருவருட்பா 6-26-7, 6-31-9, 6-38-76, 6-82-100) சென்னை வாழ்வின்போது வள்ளலார் திருவொற்றியூர், திருவலிதாயம், கந்தகோட்டம் போன்ற பல இடங்களுக்குச் சென்று சிவபெருமான், முருகன், அம்பிகை ஆகிய கடவுளரை வழிபட்டு வந்தார். ஆளரவமற்ற இடங்களில் அலைந்து திரிந்து எப்போதும் தனிமையில் இருப்பதையே விரும்பினார்.

நாராயணகுரு 20-8-1854இல் (ஆவணிமாதம் சதய நட்சத்திரத்தில்) திருவனந்தபுரத்திற்கு அருகிலுள்ள செம்பழந்தியில் வயல் வாரத்து வீட்டில் மாடன் ஆசான், குட்டியம்மை ஆகியோருக்கு ஒரே மகவாய் நான்காவதாகத் தோன்றினார். பெற்றோர் இவருக்கு நாராயணன் என்று பெயரிட்டு, நாணு என்று செல்லமாக அழைத்தனர் நாராயண குரு இளமையிலேயே நாராயணன் ஆசானிடம் துவக்கக் கல்வி கற்றார். பின்பு வேதாந்தம், ஆயுர்வேத மருத்துவ நூற்களைக் கற்றுத் தேர்ந்தார். திருவனந்தபுரத்திலுள்ள ஒரு தமிழ் நண்பருடன் ஏற்பட்டத் தொடர்பால் தமிழ் இலக்கண் இலக்கிய நூற்களை நன்கு கற்றார் தம் இருபதாவது வயதில் புதுப்பள்ளி ஊரைச் சேர்ந்த இராமன்பிள்ளை ஆசானிடம் சமஸ்கிருதம் கற்றார் கேரளத்திலுள்ள சட்டம்பி சுவாமிகளின் உதவியால் தத்துவ அறிவும் தைக்காடு அய்யாவு சுவாமிகளின் தொடர்பால் யோகப்பயிற்சியும் கைவரப்பெற்றார். இளமையில் கண்ணனை வழிபடு கடவுளாகக் கொண்டிருந்த நாராயணகுரு சிவ, முருக வழிபாட்டில் பெரிதும் ஈடுபாடு கொண்டு பாமாலைகள் பல தொடுத்தார். குருவும் வள்ளலாரைப் போன்று ஒரு தனிமை விரும்பி. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மருந்துவாழ் மலையில் சில காலம் தவவாழ்வில் ஈடுபட்டார்.

இல்லறமும் துறவறமும்

இல்லறவாழ்வில் நாட்டமின்றி இருந்த வள்ளலாரை மணம் புரியுமாறு குடும்பத்தார் வற்புறுத்த, தன் தமக்கையார்

உண்ணாமுலையம்மாளின் மகள் தனக்கோட்டியம்மாளை மணந்தார். எனினும் வள்ளலார் பள்ளியறையில் திருவாசகத்தை ஓதவே, குடும்பத்தார் அப்போது தான் தங்கள் தவற்றை உணர்ந்தனர். சின்னாட்களில் வள்ளலார் சென்னையை விட்டு வெள்ளாடைத் துறவியாகச் சிதம்பரத்தை வந்தடைந்தார் நாராயணகுருவும் வள்ளலாரைப் போன்று தன் உறவுப் பெண்ணான காளியம்மாளை மணந்தார். ஆனால் மணநாள் முதலே இல்லறவாழ்வில் நாட்டமின்றி 29-வது வயதிலேயே துறவுவாழ்வை மேற்கொண்டார்.

இலக்கியப் பணி

இறையருளால் வள்ளலார் கடவுளர் மீது இளவயதிலேயே பாடல்கள் பாடத் துவங்கினார். 1851இல் ஒழிவிலொடுக்கம், 1855 இல் தொண்ட மண்டலச் சதகம், 1857இல் சின்மயதீபிகை ஆகிய நூற்களைப் பதிப்பித்துள்ளார். 1874இல்மனுமுறை கண்ட வாசகம், 1879இல் சீவ காருண்ய ஒழுக்கம் ஆகிய உரை நடை நூற்களை எழுதியுள்ளார். மேலும் இறைவனை வழுத்தியும் மக்களுக்கு நன்னெறிகளை அறிவுறுத்தியும் இவர் பாடிய 5818 பாடல்கள் 379 பதிகங்களில் ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. வள்ளலாரின் சீடரான தொழுவூர் வேலாயுத முதலியார் என்பவர் தாம் முதன்முதலாக 1867இல் முதல் நான்கு திருமுறைகளையும், 1870இல் ஐந்தாம் திருமுறையையும், 1885இல் ஆறாம் திருமுறையையும் தொகுத்து வெளியிட்டார். இவை தவிர மேலும் பல பாடல்களையும் வள்ளலார் பாடியுள்ளார்.

மலையாளம், தமிழ் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் சிறந்து விளங்கிய நாராயணகுரு ஐம்பதுக்கும் மேற்பட்ட நூற்களை எழுதியுள்ளார். திருக்குறள் முதல் மூன்று அதிகாரங்களை மலையாளத்தில் மொழிபெயர்த்துள்ளார். தமிழ்த்தேவார அமைப்பில் ஐந்து பதிகங்களில் 50 பாடல்களை மலையாளமும் தமிழும் கலந்த நடையில் பாடியுள்ளார். 'சுத்யக்ஷீணி' என்ற வடமொழிப் பாடலைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இவரது படைப்புகளான சிவசதகம், ஜீவ காருண்ய பஞ்சகம்,

அனுகம்பா சதகம் ஆகியவற்றில் திருவாசகம், திருவருட்பா கருத்துக்கள் மிளிர்கின்றன. முக்கியமாக வள்ளலார் பதிப்பித்த ஒழிவிலொடுக்கம் என்ற நூலை, நாராயணகுரு மலையாளத்தில் மொழிபெயர்த்துள்ளதாக அறியமுடிகிறது. ஆனால் நூல் தற்போது கிடைக்கவில்லை. நாராயணகுருவின் இலக்கியப் பணியாக மலையாள மொழியில் 41 நூற்களும், வடமொழியில் 17 நூற்களும், தமிழ் மொழியில் இரண்டும் காணப்படுகின்றன.

சமய சமுதாயப் பணிகள்

வள்ளலார் தமது கருத்துக்களைப் பரப்ப 1865இல் சுத்த சமரச சன்மார்க்க சங்கம் ஒன்றை நிறுவினார். 23-5-1867 இல் சத்திய தருமச்சாலையை அமைத்தார். புலால் மறுத்தல், பசிப் பிணி தீர்த்தல் ஆகிய சீவகாருண்ய ஒழுக்கங்களே தருமச் சாலையின் தலையாயக் கொள்கைகள் 1870இல் வள்ளலார் மேட்டுக்குப்பம் சென்று சித்திவளாகத்தில் தங்கினார். பின் எல்லோரும் ஒருங்கு கூடித் தொழ 25-1-1872 இல் சத்திய ஞான சபையைத் தோற்றுவித்தார். ஜோதி வழிபாடே சபையின் முக்கிய வழிபாடு. இதில் 45 நாட்கள் பூசையில் வைத்த ஐந்தடி உயரமுள்ள நிலைக்கண்ணாடியையும் ஒரு குத்து விளக்கையும் பிரதிட்டைச் செய்தார். நிலைக்கண்ணாடிக்கும் விளக்குக்கும் இடையே ஏழு திரைகள் காணப்படும். ஒவ்வொரு திரையாக விலக விலக குத்து விளக்குச் சுடரின் ஜோதி கண்ணாடியில் தெரியும் நம்மிடையே காணப்படும் அஞ்ஞானத் திரைகள் விலகின் ஆனந்தமயமான அருட்பெருஞ்ஜோதியாக மாறலாம் என்பதே ஜோதிவழிபாட்டின் உட்பொருள்.

நாராயணகுருவும் 4-1-1903 இல் ஸ்ரீநாராயணகுரு தர்ம பரிபாலன சங்கத்தையும், 1916 இல் ஆலுவாயில் அத்வைத ஆசிரமம் ஒன்றையும், 11-1-1928 இல் நாராயண தர்ம சங்கம் ஒன்றையும் நிறுவி ஆக்கப்பூர்வமான சமுதாயப் பணிகள் நடைபெற வித்திட்டார் தாழ்த்தப்பட்டோருக்கு உயர்சாதியினர் கோயில்களில் அனுமதி மறுக்கப்படுவது கண்டு வருந்தி, முதன் முறையாக அருவிப்புரத்தில் ஒரு சிவன் கோயிலைக் கட்டினார் அந்தணர்கள் இதற்கு மறுப்புரைக்க, இது அந்தணர்களின் சிவன் அன்று; ஈழவர்களின் சிவன் என்று பதிலுரைத்தார்.

அதன்பின் சிவகிரி, ஆலுவாய் போன்ற பல்வேறிடங்களில் 60- க்கும் மேற்பட்ட கோயில்களைக் கட்டினார். 1922 இல் முருக்கம்புழையில் கட்டிய கோவிலில் உண்மை, கருணை, அன்பு இரக்கம் என்ற மலையாளச் சொற்கள் எழுதப்பட்டக் கல்லைப் பதிப்பித்தார்.

அருளுரைகள்

வள்ளலார் நெறியின் இரு கண்கள் சீவகாருணிய ஒழுக்கமும் ஆன்மநேய ஒருமைப்பாடும் ஆகும். மன்னுயிர்களைத்தன்னுயிர் போல் எண்ண வேண்டும். மனிதர்கள் அனைவரும் உயிர்க்குல ஒருமைப்பாட்டுடன் திகழ்தல் வேண்டும். சாதி, மத, இன பேதமின்றி எல்லோரும் ஒற்றுமையுடன் வாழவேண்டும். கடவுள் ஒருவரே அவர் அறிவாகவும் அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணையாகவும் இருப்பதை அறிந்து ஜோதி வடிவில் வழி படுதலே வள்ளலார் அறிவுறுத்திய சன்மார்க்க நெறி, பத்திமை நெறி நின்று முத்தியடைதல் சன்மார்க்கத்திற்கு மட்டுமே உரியது. சன்மார்க்கத்தைப் பின்பற்றினால் மரணமிலாப் பெரு வாழ்வுப் பெற்று சர்வ சித்தி வல்லமை பெறலாம். சிறு தெய்வ வழிபாடும் அதன் பெயரால் உயிர்ப்பலியும் செய்தல் கூடாது. பசிப்பிணியைத் தீர்த்தல் வேண்டும். புராணங்கள், சாத்திரங் கள் முடிவான உண்மையைக் கூறா. இறந்தவரை எரிக்காமல் புதைத்திட வேண்டும். இறந்தோர் பொருட்டாகத் திதி, கருமாதி போன்ற கருமங்களைச் செய்யக்கூடாது.

வள்ளலாரைப் போன்றே நாராயணகுருவும்கடவுள் ஒருவரே என்பதை ‘ஒரு ஜாதி ஒரு மதம் ஒரு தெய்வம் மனுஷ்யனு’ என்றுரைத்தார். சீவகாருண்ய ஒழுக்கத்தைப் பெரிதும் மதித்து எல்லா உயிர்களிடத்தும் இரக்கத்துடன் நடக்க தனது ஜீவ காருண்ய பஞ்சகம் என்ற நூலில் வேண்டுகிறார் பல மதங்கள் கூறும் கருத்து ஒன்றெனக் கொண்டு சாதி சமய வேறுபாடின்றி வாழவேண்டும். சிறு தெய்வ வழிபாடு உயிர்ப்பலி கொடுத்தல் ஆகியவற்றை நீக்கக் கோரிய நாராயணகுரு தாமே முன்னின்று குமரி மாவட்டத்திலுள்ள கோட்டாற்றில் 31 சிறு தெய்வப் பலிபீடங்களை அகற்றினார். ஈழவ மக்கள் கடைப்பிடித்து

வந்த பல மூடப்பழக்க வழக்கங்களை விட்டொழிக்கும்படி வற்புறுத்தினார். கள்ளுண்ணலைக் கடிந்துரைத்தார். தீண்டாமையை ஒழிக்கப்பாடுபட்டார். எல்லோரும் கல்வியறிவு பெற்று ஒற்றுமையுடன் இருந்து வாழ்வில் உயர்ந்தோங்க அறிவுறுத்தினார்.

இறைவனடிச் சார்தல்

சித்திவளாக மாளிகையில் உறைந்த வள்ளலார் 30-1-1874 இல் (ஸ்ரீமுக ஆண்டு தைத்திங்கள் 19-ஆம் நாள் வெள்ளிக்கிழமையன்று இரவு 15 நாழிகைக்கு) ஒரு தைப்பூச தினத்தன்று இரவு 12 மணிக்குத் திருவறைக்குள் நுழைந்து இரண்டரை நாழிகையில் இறைவனோடு கலந்தார்கள். நாராயணகுரு 28-9-1928 அன்று வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு சிவகிரி மடத்தில் சமாதியடைந்தார்.

இருவரிடையே உள்ள முக்கிய வேறுபாடு யாதெனின் வள்ளலாரின் கருத்துக்கள் மனிதகுல மேம்பாட்டிற்குரிய பொதுமை நிலையின. ஆனால் நாராயணகுருவின் அருளுரைகளோ தாழ்த்தப்பட்ட ஈழவகுல முன்னேற்றத்துக்குரியனவாகவே மிகுதியும் அமைந்துள்ளன. எனவே நாராயணகுரு ஒரு சமுதாய சீர்திருத்தவாதியாகக் கருதப்பட, வள்ளலார் ஒரு ஞானியாகக் கருதப்படுகிறார் இளவயதிலேயே இறையருள் பெற்றவராக வள்ளலார் வாழ்வு அமைய, நாராயணகுருவிற்கு அவ்வாறு அமையவில்லை ஆனால் இருவர் வாழ்விலும் பல அற்புதச் செயல்கள் நடந்துள்ளன. வள்ளலாரை நாராயணகுரு திருவருட்பாவை அடிகளார் தெய்வநிலையில் நின்று பாடினார் என்று புகழ்ந்துரைத்துள்ளதாக பாம்பன்சுவாமிகளின் சீடரான பாலசுந்தரர் கூற்றால் அறியமுடிகிறது. இவ்விருவர் காட்டிய அறநெறிகளையும் பின்பற்றினால் மனிதகுலம் மேம்பாடுடைதல் உறுதி.

பயன்பட்ட நூற்கள்

1, சிவஞானம், ம.பொ. வள்ளலார்கண்ட ஒருமைப்பாடு, இன்பநிலையம், சென்னை, 1963.

ஆனந்த தாண்டவம்

V. நடேசன்

R.S. தமிழ்க் கல்லூரி, சென்னை.

'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போன்மேனியிற் பால்
வெண்ணிலும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே''

— திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர் தில்லை அம்பலவாணர் ஆடும் திருக்கூத்தைக் காணவே மனிதப் பிறவி வேண்டும் என்றார். காரணம் என்ன ? தலையாய காரணம்: உலகிற் பிறந்தோர் உறுவது பெரும் துன்பம் ; அதனை நீக்கி எவ்வுயிரும் இன்பம் பெறுதலே கடமையாம் ; இன்பம் விரும்பித் தம் செயலால் துன்பம் அடைகின்றனர் மனிதர். மன்-நினைத்தல். நினைக்கும் ஆற்றல் பெற்றவனே மனிதன். வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம் எனும் உண்மையைத் தெளிந்தால் என்றும் இன்பமாகவே ஒருவர் வாழலாம். இவ்வரிய வாழ்விற்கு அறிவு இல்லை ; பேரறிவு வேண்டும் ; அறிவை செம்மையுறச் செய்வது க்ல்வியாம் கல்வியே கருந்தனம் ; கற்றோர் கண்ணிரண்டும் உடையோர் ; கல்லார் புறக்கண்ணாகிய புண்ணே உடையோர் கலைவல்லார் புறக்கண் மூலம் அக்க்கண் பெற்றுக் கடவுளைக் காண்கின்றனர்.

முயன்றாலும் நினைத்தபடி பயன் பெறுவதில்லை. இன்பம் அடைய முயன்ற போது மிகு துன்பம் வரக் காண்கின்றோம். ஆராய்ச்சி இல்லெனில் பயன் அவலமே. அறிவால் அறிவன

மூன்று. 1. அறிகின்ற நாம் 2. நம்மால் அறியப்படும் உலகம் 3 அறிய அறிவிக்கும் சக்தி ; இவைகளைப் பசு, பாசம், பதி என்ப. தமிழில் கடவுள், உயிர், உலகம் என்றும் இறை, உயிர், தளை என்றும் கூறுப. உயிரைப் பசு என்றோர் சைவர். பச் = கட்டுதல். பசுக்களைக் கயிற்றால் கட்டியே வளர்ப்பவர் இடையர். கட்டிய இடையன் அவிழ்த்தால் பசு விடுதலை பெறும். அதுபோல் பாசத்தால் கட்டப்பட்ட பசு (உயிர்) வைப் பதியே விடுதலை அளித்து அளித்து வீடு பேறு தருவன். ஆத்ம போதம் (உயிரறிவு) இல்லெனில் ஆண்டவனை அறிய முடியாது. ஐம்புலனும் சக்தியை இழக்கும். எனவே பதியினரு ளைப் பெறவாலறிவு பெறவேண்டும் வேத காலமுதல் இன்று வரை பதியை அறிய முடியாதவன்'' (அப்பிரமேயன்) என்பர் மேலோர்.

ஆனால் அப்பதியை அணுகும் ஒரு நெறியை ஞானிகள் கூறியுள்ளார்கள். அத்திருநெறி 'நம்மை நினைக்க, பூசிக்க வந்திக்க'' என்கின்றது. பாலில் உள்ள வெண்ணெய் வெளிப் படுதல் போல் நம்முள் உள்ள பதி (சிவ) வெளிப்படுவான் அருவநிலை. உருவநிலை அருவுருவநிலையுள்ள இறைவன் நம் வழி பாட்டிற்குரிய திருமேனி தாங்குகின்றான். நாம் வந்திக்கத் தக்க திருமேனி நடராஜ வடிவமரம், எந்த மதத்திலும் கடவுள் தத்துவத்தைக் கூறும் சிலைகளும் விக்கிரங்களும் (Idols) அறம் போதிக்கும் முத்திரைகளும் உண்டு. இதை உணராதவர். தாழ்ந்த மதத்தினர் ; உணர்வார் உயர்மதத்தினர் கடவுள் தத்துவத்தைக் கூறுபவைகளே விக்கிரகங்கள். கடவுள் நமக்காக. ஐந்தொழில்கள் புரிகின்றார் , உலகினைப் படைத்துக் காத்து, அழித்து, மறைத்து அருளுகின்றார். இறைவன் ஆடவில்லை எனின் உலகம் அழியும்.

ஐந்து தொழில்களையும் ஒரே சமயத்தில் செய்யும் பெருமை ஆனந்த தாண்டவத்திற்கே உண்டு. சிதம்பரேஸ்வரர் (நடராஜா) வடிவத்தில் நான்கு கைகளும் இரண்டு கால்களும் உள இருகைகள் வலத்தில் ஒன்றும் இடத்தில் ஒன்றும் தூக்கி இருக்கும், வலக்கையில் தமருகம் (உடுக்கை) இருக்கும் ;

உடுக்கை ஒலிக்கும், அந்த நாதத்திலிருந்தே (ஒலி) உலகம் சிருஷ்டிக்கப் படுவதால் கடவுளே படைப்புக்கர்த்தா ஆகிறார். அக்கைக்குந்நிழுள்ளது அபயக்கரம்; அஃது ''அஞ்சல்'' என்கிறது. தூககிய இடக்கையில் தீச்சுடர் இருக்கும்; அஃது அழிப்புக்கடவுள் இவனே என்கின்றது அதன் கீழுள்ள வீசுகளம் தூக்கிய திருவடி (குஞ்சிதபாதம்) யைச்சுட்டிக் காட்டுகிறது. இடக்காலும் இடக்கையும் அருளைக் குறிக்கும் வலக்கால் முயலகன் முதுகை அழுத்தி நிற்கும். அஃது உயிர்களுக்கு இளைப்பாறச் செய்கிறது.

தில்லை நடராஜரது தூக்கிய திருவடியே நாம் அடையத் தக்கது. அப்பெருமான் ஆடும் கூத்து ''ஓம் எனும் பிரணவத்துள்ளே திகழ்கின்றது. எனவே இக் கூத்தை நாதாந்த நடனம்' என்ப. அவ்விறைவனைச் சுற்றியுள்ள வட்டமான திருவாசி பிரணவத்தைக் குறிப்பதாம்.

பனித்த சடை குறிப்பன: உயர்ந்த குளிர்ந்த நிலையன், பற்றற்ற பரமயோகி; தஞ்சமடைந்தவரைத் தாங்குபவன்; பகையோடு வாழும் மதியையும் பாம்பினையும் நேசத்தோடு வாழ்விப்பவன் என்பன. **குனித்த புருவம்:** எண்ணிலி பாவிகள் நழுவுகின்றார்களே எனக் கவலைக் கொள்ளும் கருணையைக் குறிக்கும் **கொவ்வை செவ்வாய்:** செம்மேனியம்மாள்; நெருப்பார் மேனியன் எனக்காட்டும். **குமிண் சிரிப்பு:** புன்னகை பூத்து அடியார்களை வரவேற்பு தருபவன் எனக்காட்டும்.

பால் வெண்ணிறு பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்; பாதம் பெறச் சிவ சின்னம் மிக முக்கியம் எனும் உண்மையைக் குறிக்கும். இவையனைத்தையும் நினைத்தே மாணிக்க வாசகர் ''குறியொன்றும் இல்லாத கூத்தன் தன்கூத்தை என்க்கு, அறியும் வண்ணம் அருளியவாறு ஆர் பெறுவார் அச் சேரவே' என்றார்.

தில்லைவனத்தைச் செப்பனிட்டு விரிவாக்க யோகசாத்திர கர்த்தாவான ஸ்ரீ பதஞ்சலி முனிவச் சிதம்பரரகசியம் அறிந்து அதனை விஸ்வகர்மாவுக்குச் சொல்ல அவரும் அவர் மகிழ

ஆலயத்தை அழைத்தார். அவ்வமைப்பு யோகியாரது சரீரம் போன்றது வடக்கே தலையையும் தெற்கே காலினையும் வைத்து நோக்கின், கோயிலின் அமைப்பு விளக்கமுறும். இங்குள்ள ஆயிரக்கால் மண்டபம் நம் தலைப்புறத்துள்ள 1000 இதழுடைய தாமரைப்பூ போன்றது. தலைக்குள் இருக்கும் மூளை போன்றது இக்கோயில் சிவகங்கை எனும் திருக்குளம்.

கனக சபையில் பிரம்ம, விஷ்ணு, ருத்ர, மகேஸ்வர சதாசிவ ஸ்தானங்கள் ஐந்து உண்டு. பிரம்ம பீடத்தில் ஐந்து படிகளும் பஞ்சாட்சரங்களாம். 18 தூண்கள் 18 புராணங் களைக் குறிக்கும். விஷ்ணு பீடத்திலுள்ள கதவு அவித்தை எனப்படும் 96 பலகணிகளும் 28 தூண்களும் முறையே தத்து விகங்களையும் காமிக முதலிய ஆகமங்களையும் காட்டும். ருத்ர பீடத்திலுள்ள 5 ஸ்தம்பங்களும் பஞ்சபூதங்களையும் ஈஸ்வர பீடத்திலுள்ள 6 தங்கத் தூண்கள் வேதாந்தம் முதலிய் சாஸ்திரங்களைக் குறிக்கும். சதாசிவ பீடத்தூண்கள் 4 வேதாங் களைக்காட்டும், இவைகள் அடங்கிய இடத்தை சுத்த வித்யை எனவும் இரகசியம் முதல் ஆனந்த தாண்டவமூர்த்தி எழுந் தருளிய இடம் வரை பிரணவ பீடமும் என்பர். சித்தசபை மேலுள்ள 9 கலசங்களும் நவசக்தியையும் 64 கைமரங்கள் கலைகளையும் நினைப்பூட்டும்.

பொன்னம்பலக் கூரையிலுள்ள 21600 தங்க ஓடுகள், அவைகள் நிலைக்க அடிந்துள்ள 72000 ஆணிகள் முறையை மனிதனது ஒரு நாள்விடும் சுவாசங்களையும் அவை சஞ்சாரத் திற்கு ஆதாரயான நாடிகளைக் குறிக்கும். ஒரு தூணில் மூகலிங்கத்தையும் காணலாம். இவை யாவும் உணரின் ஓர் அடியான் நடராஜாவைக் கண்டு ஆனந்தமடையலாம். விரிப்பின் பெருகும்.

நாட்டுப்புறக் கதைப் பாடலில் பாத்திரப் படைப்பும் பண்பு நலனும்

ஹ.மு. நத்தாசா,
புதுக்கல்லூரி, சென்னை

'முழுமையான ஒவ்வொரு பாத்திரமும் தனக்கென ஒரு தனித்தன்மையைப் பெற்றிருக்கும்' என்பர், மு. அருணாசலம். அப்பாத்திரத்தின் தன்மையை ஆராயும் வகையைப் பின் வருமாறு நெறிபடுத்துவர், அ. ச. ஞானசம்பந்தன்: 'ஒரு பாத்திரத்தின் பண்பினை நாம் பல வழிகளில் ஆராயலாம். முதலாவது பாத்திரம் பிறபாத்திரங்களுடன் உரையாடும் சந்தர்ப்பம். இரண்டாவது, அப்பாத்திரம் சில சந்தர்ப்பங் களில் செய்யும் தனிமொழி. மூன்றாவது, பிறபாத்திரங்கள் இப்பாத்திரம் பற்றி நேரிலும் மறைவிலும் தம்முள் செய்யும் உரையாடல்கள்'. மேலை நாட்டறிஞர் அரிஸ்டாட்டில் படைக்கப்படும் பாத்திரங்களின் தன்மை', '1. சிறப்பாகவும் நல்லனவாகவும் 2. காலச்சூழலுக்கு ஏற்பப் பொருத்தமுடைய தாகவும் 3. வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய தாகவும் 4. இறுதி வரை ஒரு நிலைத்த பண்புடையதாகவும்' அமைய வேண்டும் என்று அறிவுறுத்துவர். இவ்வாறு படைக்கப்படும் பாத்திரங்களின் பண்பு நலன், ''வருணனை மூலம் விளக்கப் படுவதை விடச் செயல் மூலம் விளக்கப்படுவதே சிறப்பு' என்றுரைப்பர் வையாபுரியார்.

பாத்திரங்களின் பண்புநலன் குறித்து அறிஞர்கள் வழி மொழியும் கருத்துக்களின் அடிப்படையில், 'கான்சாகிபுசண்டை' என்னும் நாட்டுப்புறக்கதைப் பாடலில் இடம்பெறும் இருபெரும்

முரண்படு பாத்திரப்படைப்புகளின் பண்பு நலன்களை ஆய்ந்து உணர்வது இக்கட்டுரையின் அடிப்படை நோக்கமாகும்.

கதைப்பாடலில் தலைமைச் சான்ற பாத்திரப்படைப்பாக அமையும் கான்சாகிபு 'வீரப்பண்பு' மிக்கவனாகவும், அவனது வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சியில் முனைந்து ஈடுபட்ட தாண்டவராயன் என்பான் 'சூழ்ச்சி நோக்கினனாக வும்' கதைப்பாடலாசிரியனால் சித்தரிக்கப்படுகின்றனர். கதை யோட்டத்தில் கதைப்பாடலாசிரியனால் கையாளப்படும் நடை யோட்டம் இப்பாத்திரப்படைப்புகளின் பண்புநலன்களை வெகு அழகாக வெளிப்படுத்துகின்றது.

கான்சாகிபின் வீரப்பண்பு

ஆர்க்காட்டு நவாபு முகம்மதலியின் படைத்தலைவனா கவும் ஆங்கிலேய அதிகாரிகளின் நம்பிகைக்கு உரிய ஊழியனா கவும் பணிபுரிந்தவன், கான்சாகிபு இவனது வீரப்பண்பினால் கவரப்பட்ட ஆங்கிலேயரும் ஆர்க்காட்டு நவாபும் இவனைத் தென்தமிழ் நாட்டில் தொல்லை தந்து கொண்டிருந்த மறவர் களை யடக்குவதற்காக மதுரைக்கு அனுப்பிவைத்தனர். மறவர்களையடக்கி மதுரையில் ஆட்சிப் பொறுப்பைக் கைப் பற்றிய கான்சாகிபு, தனது வீரமேம்பாட்டில் தான்கொண்ட நம்பிக்கையின் காரணத்தால் ஆர்க்காட்டு நவாபையும் ஆங்கி லேயரையும் பகைத்துக் கொண்டு தன்னாட்சிநடத்தத் தொடங்கி னான். இவ்வாறு தனியரசு நடத்துவதற்குக் காரணமாய் அமைந்த அவனது வீரப்பண்பு கதையின் பல இடங்களில் எடுத்துரைக்கப்படுகிறது. இக்கதைப்பாடலின் தோற்றத்திற்கும் அவனது வீரப்பண்பே காரணமாக அமைந்தது. கதையில் இடம்பெறும் பின்வரும் நிகழ்ச்சிகள் அவனது வீரப்பண்பைப் பெருமைப்படுத்துகின்றன:

1. பரங்கிமலை என்னுமிடத்தில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் இடையே போர் மூண்டபோது, ஆங்கிலேயர் கான்சாகிபின் உதவியை நாடினர். பரங்கிமலைப் போரில் வெற்றி தேடித் தந்தால் மதுரைக் கோட்டையின்

இராணுவ அதிகாரியாக கான்சாகிபுவை நியமிப்பதாக உறுதி கூறினர்.

ஆங்கிலேயர் தந்த உறுதிமொழியை ஏற்று, தனக்கு அறை கூவலாக அமைந்த பரங்கிமலைப் போரில் ஈடுபட்டு வெற்றி பெற்றான், கான்சாகிபு. இவன். எதிரியுடன் போரிட்ட திறத்தை,

'குமுறுதே காரிடிகள் போல கானன்
கொளுத்தினான் பீரங்கி செல்லக்கூடாது
... ...
களை சூழ்ந்த பரங்கிமலைக் கோட்டை அங்கே
கல்லெல்லாந் தூள்ளாய்ப் பறக்குதே குண்டால்'

என்று வருணிக்கும் கதைப்பாடல்,

2. ஆளுமையற்ற நிர்வாகிகளால் அவல நிலைக்கு ஆளாக்கப்பட்ட மதுரையைக் கைப்பற்றும் பொறுப்பு கான் சாகிபிடம் ஒப்படைக்கப்பட்டபோது கான்சாகிபு தன் வீரச் சிறப்பினால் ஒடுங்காத மயிலாடிக் கள்ளர்களை ஒடுக்கி அடங்காத பிறமலை நாட்டாரை அடக்கி மதுரையின் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றியதாகக் கதைப்பாடல் கூறும்.

3. மடல் விடுத்தும் திறை செலுத்தாத காரணத்தால் சினம்கொண்ட கான்சாகிபு சிவகங்கை அரண்மனையைத் தீக்கிரையாக்கி பார்த்திபனூரைக் கொள்ளையடித்து வெற்றி யுடன் மதுரை திரும்பினான் என்னும் செய்தி கதைப்பாடலின் வாயிலாக அறியப்படுகிறது.

4. கான்சாகிபுவை வெல்லும் நோக்கத்துடன் வெள்ளை யர் திரட்டிவந்த படை திருப்புவனத்தில் கான்சாகிபுவின் படையுடன் நேருக்கு நேர் மோதியது. வெள்ளையருடன் கான் சாகிபு சண்டையிட்ட காட்சியை,

'வெள்ளரிக்காய் வீசினாற்போல-பாதர்
வீசினான் சிப்பாய்களைப் பொல்லாத கானன்

துப்பாக்கி திரும்புவதற்குள்ளே பாய்ந்து
துடியாக வெட்டினான் திசைமதுரை கானன்'

என்று படம்பிடித்துக் காட்டுகிறது கதைப்பாடல்.

5) கான்சாகிபுவின் ஆட்சிகாலத்தில் வீதியில் எறிந்த பணத்தைத் தொடுவதற்கும் யாருக்கும் துணிவில்லை என்று கதைப்பாடல் கூறும்.

'கட்டேது காவலறியார்கள் தேசம்
கறந்துபால் வெளிவைத்தால் காகமணுகாது'

என வரும் பாடல்வரிகள் இவ்வுண்மையை உறுதிப்படுத்தும்.

6) கான்சாகிபு விரும்பினால், திருப்புவனத்தைச் சீதன மாகப் பெற்றுத் தருவதாக அவன் மனைவி மாசா கூறியபோது அதனால் மனம் வெகுண்ட கான்சாகிபு,

'பெண்சாதி மானியந்தனிலே லவுண்டி
பதம்பெற்ற துரைகானு ஆள்வேனோ தேசம்
நாளைக்கே ஒரு பளித்தா தீர்த்து நானும்
வாங்குவேன் திருப்புவனம் கோட்டைநான் சிங்கம்'

என வீரவுரைப்பகர்வது அவனது மான உணர்வையும், அவன் தனது வீரத்தில் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறது.

7) வஞ்சகமாக கான்சாகிபுவைச் சிறைப்பிடித்த எதிரிகள் அவன் மீது இரக்கம்கொண்டு உண்பதற்கு உணவுவகைகள் கொண்டுவந்து வைக்க,

'அப்போது கான்சாயபு நீலன்பாதர்
அன்னம் வைத்த தட்டைக் கண்ணாலே பார்த்து
இடது காலாலே புதைத்திட்டான்'

என்று கதைப்பாடல் கூறும் செய்தி, வீழ்ச்சியடைத்த நிலை யிலும் வீரம் சோரம் போகாததன்மையைப் புலப்படுத்துகிறது.

இவ்வாறு கதைப்பாடலின் ஆரம்பம் முதல் இறுதிவரை வீரமேம்பாடு மிக்க பாத்திரப்படைப்பாகக் கான்சாகிபு சித்தரிக்கப்படுகிறான்.

தாண்டவராயனின் சூழ்ச்சி நோக்கு

சிவகங்கை சேதுபதி முத்துவடுகையரின் தளவாய் இருவர். ஒருவர் சிவகங்கை தளவாய் தாண்டவராயப் பிள்ளை. மற்றொருவர், இராமனாதபுரம் தளவாய் தாமோதரம் பிள்ளை. தளவாய் இருவருள்ளும் மதிநுட்பம் மிக்கவனாக தாண்டவராயனே சித்தரிக்கப்படுகிறான். தாண்டவராயன் அறிவுரைக் கேற்பவே சிவகங்கை மன்னர் செயல்பட்டார் என்று கதைப் பாடல் கூறும்.

ஆர்க்காட்டு நவாபின் பொருட்டு மதுரையைக் கைப்பற்றி பின்னர் தன்னாட்சி நடத்தத்துவங்கிய கான்சாகிபு தனக்குத் திறையாகத் திருப்புவனத்தை விட்டுத் தருமாறு தாண்டவ ராயனுக்குக் கடிதம் அனுப்பினான். வீரத்தால் கான்சாகிபை வெல்ல முடியாது என்ற உண்மையை நன்குணர்ந்த தாண்டவ ராயன் சூழ்ச்சி நோக்கினால் கான்சாகிபை வீழ்த்த எண்ணி னான். இவனது சூழ்ச்சி நோக்கு கான்சாகிபுவின் வீரத்துடன் போட்டியிடும் பாங்கு கதைப்பாடலில் சுவைபடச் சொல்லப் பட்டிருக்கிறது கதையில் இடம்பெறும் பின்வரும் நிகழ்ச்சிகள் தாண்டவராயனின் சூழ்ச்சி நோக்கை வெளிப்படுத்துகின்றன.

1) திருபபுவனத்தைத் திறையாக விட்டுத் தருமாறு வேண்டிய கான்சாகிபுடன் பகைக்க விரும்பாத தாண்டவராயன் அவனுடன் நல்லுறவு பாராட்ட பல முயற்சிகளை மேற் கொண்டான். முயற்சி பயனளிக்காத நிலையில் அவன் சூழ்ச்சி யைத் துணைக்கோடல் அவசியமாயிற்று. ஆர்க்காட்டு நவாபைத் தூண்டிவிட்டு வஞ்சம் தீர்க்க விரும்பிய தாண்டவ ராயன் தனது இந்நோக்கை இராமநாதபுரம் தளவாய் தாமோதரம்பிள்ளைக்குத் தெரியப்படுத்தியபோது அவர்,

'கான்சாயபு வந்தெதிர்த்தக்கால் எனது
கைச்சிரத்தைப் பாரடா அண்ணே'

என்றுதனது வீரவுணர்வை வெளிப்படுத்தினார். அப்போது தாண்டவராயன்,

“அவன் கருமருந்துக் காரனடா தம்பி அந்த
கானனுடன் சண்டை ஜெயிக்க முடியாது
இருபேர்க்கும் ஜனச்சேதமாகும் நாமும்
எதிர்நிற்கக் கூடாது துரைகானனோடே
நவாபை யழைத்து வந்துவிட்டு நாமும்
நலியாம லிருந்தழகு பார்க்கலாம்”

என்று கூறும் பதில் அவனது சூழ்ச்சி நோக்கைப் புலப்படுத்து கிறது.

2) குலப்பெருமையைப் போற்றிய தாமோதரம் பிள்ளை ஆர்க்காட்டு நவாபு சமூகத்தில் அடிபணிந்து நிற்க நாணிய போது,

‘காரியங் கொள்ளுமட்டும் தம்பி அவன்
காலையுங் கூட பிடிக்க வேணும்’

என்று தாண்டவராயன் தாமோதரம் பிள்ளைக்குக் கூறிய அறிவுரை வழி நாடிய காரியத்தைச் சாதிக்க வேடம் பல பூணுகின்ற திறனை அவனிடம் காண்கிறோம்

3) கான்சாகிபுவை வென்று மதுரையைக் கைப்பற்று வதானால், தனக்கு சிவகங்கையை விட்டுத்தரவேண்டும் என்று ஆர்க்காட்டு நவாபு வேண்டியபோது,

‘சிவகங்கை பேட்டையுட வளப்பம் ராசா
சிங்கம் நவாபே நான் சொல்லுகிறேன் கேளு
... ...
கூவவங்கே கோழி கிடையாது வந்து
குலைக்கவும் நாயதிலே கிடையாது சொன்னேன்

என்று தாண்டவராயன் கூறிய பொய்மொழி அவன் புனைந் துரைத் திறனிலும் வல்லவனென்பதைப் புலப்படுத்துகிறது.

4) தன் நாடு வறட்சிமிக்கது என்று நவாபை நம்பவைக்க ஒரு நாடகம் ‘ஆடிக்காட்டினான்.

The Concept of Karma According to Hindu Philosophy

P.R. Narasimhan,
Arulmigu Palaniandavar College of
Arts & Culture, Palani

BHAGAVAD GITA says that man's life is one of action and no one can remain inactive even for a single moment. Accordingly action is life and inaction means death. This points to us that actions determine our life. If actions are considered to be the determinants of our life, we have to know what sort of actions determine our life; whether all of them? or some of them? If actions determine our life, how can we be freed from the clutches of actions? Is it possible for us to be free from them or not? Hindu philosophy alone provides solutions to all these problems in a satisfactory manner in its doctrine of karma.

The theory of karma is an age old one. It has been fore-shadowed in the concept of **rta** or the eternal moral order of the Universe in the **Mantras.** of the **Rigveda** It explains the uniformity of nature and also the moral order. Even the gods are described as the guardians as well as the practicers of rta. According to it, the good are those who follow the path of rta. In the **Bra:hmanas, Yajna** or sacrifice is considered as a synonym to rta. Both rta and yajna anticipate the theory of karma which is formulated in the Upanisads and the Gita.

Hindu philosophy tells us that all our actions do not determine our life. Man performs two kinds of actions- involuntary or unconscious actions and voluntary or conscious actions. Only the conscious actions determine our life. When it is said that conscious actions determine our life, it is only when they are performed with the sense of 'I' ness or **Ahamka:ra,** with the sense that I am the doer of this action, and with the sense of 'my'ness or **Mamka:ra,** with the sense that this action is performed by me, they become karma and determine or bind us according to the Hindu law of karma. karma, according to Hindu philosophy, means not only the deed performed through mind, speech and body, but also the results or the consequences of the deed. According to the law of karma, there is nothing chaotic or capricious in the moral world. Therefore, it is said 'as we sow, so we reap'. What we are and what circumstances we find ourselves in are dependent on what we were and what we did; similarly what shall we be and how shall we be circumscribed will depend on what we are and what we do at present. The law of karma, thus, shows that every action has its own consequences and that when once the action is done, one cannot escape from its consequences. The consequences of actions will certainly yield fruits to the doer either in a near future or in a remote distance. The doer should expedite the consequences of this actions by means of experiencing. There is no other go for the doer of actions. The law of karma thus applies the principle of cause and effect and the conservation of energy to the moral world.

Hindu philosophy recognises three kinds of karmas. The actions that are being performed at present are called **A:ga:miya** karmas. The consequences of actions which have yet not begun to yield fruits are known as **Sancita** karma. Sancita karma is also called stored up karma. The moment the consequences begin to yield their fruits, they are called **Pra:rabdha** karma. According to the law of karma, the past determines the present and the present state of life determine the future. Thus it seems to be a deterministic theory. If everything is predetermined like the mechanical law of casuality, the critics may ask, where, then, is freedom to the individual? Actually the law of karma stands for the freedom of man'. will. It does not mean fatality. Of the three karmas, man has freedom in respect of the a:ga:miya and sancita karmas. But the pro:rabdha karma will take effect from which man can never escape. Man can shape his present state of life by chooing a better course of actions and store the consequences thereof. Thus though there is a certain amount of determinism, it is not to the exclusion of all freedom.

Hindu philosophy tells us that with the free will, man has to choose good actions. It also points to a way for man to adopt with his free will. In general man-kind almost always acts with ahamka:ra and mamaka:ra or with attachment or agency. Hindu philosophy calls man to perform the actions without attachment. When actions performed without attachment to their good or bad consequences, they become **Karmayo:ga**

and the doer is known as **Karma yo:gi**. When one performs actions without attachment and without any expectation of the good or bad results, such actions become **Nishka:ma karma.** But according to the law of karma, though one performs actions without attachment and without any expectation of the results, still the actions will bear their consequences. Hindu philosophy requires the actor to renounce the fruits of nishka:ma karma to god. This is called **Karmaphala Tya:ga.** If man does his actions with these principles then karmas will never bind him. On the other hand, they will lead him towards the path of liberation or mo:ksa.

Hindu philosophy also codifies duties or actions to be performed by each individual. It refers to duties pertained to the four stages of life namely **Brahmacarya, Grhasta, Vanaprasta,**and **Sanya:sa** under the caption of **A:srama Dharmas.** It also specify the duties to the four social classes **Bra:hmanas, Ksatriyas, Vaisyas** and **Sudras**-under the title **Varna dharmas.** These are the **Visesa Dharmas.** There are general or **Sa:dharana** dharmas which every man has to perform without any exception as a member of humanity. In addition to these actions Hindu philosophy mentions duties to be performed daily-**Nitya Karmas** and to be performed occasionally when their cause arise--**Naimittika Karmas.** Finally there is a class of duties called **Ka:mya Karmas** which has to be performed if one seeks to fulfill a particular desire. While the sa:dharana, nitya and naimittika karmas are obligatory on the individual unconditionally, the a:srama, varna and ka:mya karmas are

obligatory on the individual conditionally. The aśrama and varna duties are prescribed on the basis of the constituent elements of the physical bodies and of maturity of the mind. The individual is required to discharge only the duties pertained to his age and class. It is the **Svadharma** of the individual. He need not perform the duties pertained to the other class however best he can do. It is said that it is better to do one's own duties rather imperfectly than to do the duties of others perfectly.

The whole scheme of the law of karma, according to Hindu philosophy, has its goal - the Spiritual freedom of the individual self. Gita says that one can realize his highest personal good and social good by performing his specific duties. And if this is done with a sense of devotion to the deity, man can attain the highest perfection in the shape of **Mukti** or God realization. At the same time he contributes to the good of the society. In brief the law of karma tells us that selfish work forges one in bondage and selfless actions lead to freedom from fetters. "In this way and not otherwise it is that karma does not cling to you"—says the Isa Upanisad.

விண்வெளிக் கொள்கை

செ. நல்லுசாமி.
பிசப் ஈபர் கல்லூரி, திருச்சி

முன்னுரை

விண்வெளி என்ற சொல்லுக்கு நம்மால் கற்பனைச் செய்து பார்க்க முடியாத அளவுக்கு மிக பரந்து விரிந்து எல்லை யற்று காணப்படும் தள்ம் என பொருள் கூறலாம் விண்வெளி யில் எண்ணற்ற விண்மீன் குடும்பங்களும் கோள்களும் வரம் பின்றி இருக்கின்றன. அத்தகையவற்றுள் சூரிய குடும்பமும் ஒன்றாகும். இங்கு சூரியனின் விட்டத் தேய்வும், அதனால் கோள்களில் ஏற்பட்டுள்ள, ஏற்படுகின்ற விளைவுகளையும் எடுத்துரைக்கப்படுகின்றன.

சூரியகுடும்பம்

சூரியனை மையமாகக் கொண்டு நீல் வட்டபாதையில் புதன் வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனீஸ், நெப் டியூன், புளூட்டோ முதலிய கோள்கள் சுற்றிவருகின்றன. 'மேலும் புதிய கோள் ஒன்றை, நாஸாவின் விஞ்ஞானி டாக்டர் ஜான் ஆண்டர்சன் கண்டுபிடித்துள்ளார். அதன்பெயர் 'பிளனெட்' எனப்படும். இது பூமியைவிட 5 மடங்கு பெரியது. இக்கோள் சூரியனை சுற்றும்காலம் 700 ஆண்டுகளாகும் அதன் பாதை 1600 கோடி கி. மி. முதல் 3600 கோடி கி. மி. தூரம் வரை செல்கிறது'[1].

'1750-ஆம் ஆண்டு இந்தக் கோள் சூரியனுக்கு அருகே வந்தது. மீண்டும் 2500-லிருந்து 2800-குள் இக்கோள் சூரியனுக்கு அருகே வரும் என்று அமெரிக்க கடற்படை தொலைநோக்கி ஆய்வகம் மதிப்பிடுகிறது'[2].

சூரியனின் விட்டம்

சூரியனின் விட்டம் குறைந்துக்கொண்டே வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் சூரியனின் விட்டம் ஒரு குறிப்பிட்ட அளவு குறைகின்றது என்று இரஷ்ய விஞ்ஞானி ஒருவர் அவரது கட்டுரையில் கூறியுள்ளார். அதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் உண்டு. அவை 1. சூரியனின் கதிர்வீச் சத்தின் செறிவு குறைவு. 2. வாயு மண்டலத்தில் ஹைட்ரஜனை ஹீலியமாக மாற்றும்போதும்.

1. சூரியனின் கதிர் வீச்சு செறிவு குறைவு

சூரியன் ஒரு நெருப்பு கோளம். அது வாயு நிலையில் இருக்கின்றது. சூரியனிலிருந்து மிகவும் சக்தி வாய்ந்த ஒளிக் கதிர்கள். அதனை சுற்றிவரும் கோள்கள்மீது வீழ்ந்து, மீண்டும் பிரதிப்பலித்து சூரியனையே சென்றடைகின்றன. இந்தச் செயல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. இத் தொடர் நிகழ்ச்சியால் சூரியனுக்கும் கோள்களுக்கும் இடைப் பட்ட பகுதியில் மாசுகள் (தூசு) நிரம்ப உள்ளமையால் சூரிய னின்று வரும் போதும் கோள்களின்மீது பட்டு பிரதிப்பலித்து செல்லும்போதும் ஒளிக்கறறை செறிவு குறைகின்றன. இந் நிகழ்ச்சியால் மாசுகளால் தடைப்படாத ஒளிக்கற்றைகள் மட்டும் சூரியனை சென்று அடைகின்றன. மாசுகளால் பாதிக் கப்படும் ஒளிக்கற்றை செறிவுகுறைவதால் சூரியனை சென்றடை வதில்லை. இதனால் சூரியன் பகுதி குறைகிறது.

2. வாயு மண்டலத்திலுள்ள ஹைட்ரஜனை ஹீலியமாக மாற்றும் போது

'நமது சூரியன் ஒவ்வொரு வினாடியிலும் 630 மில்லியன் டன் ஹைட்ரஜனை 625.4 மில்லியன் டன் ஹீலியமாக மாற்று கிறது இவ்வாறு சூரியன் ஒவ்வொரு நாளும் 39744 கோடி டன் நிறையிள்ள பொருளை இழக்கிறது. இதனாலும் சூரியனின் அளவு குறைந்துக் கொண்டே வருகிறது'[3].

பூமியில் மனிதன் தோற்றமும் அழிவும்

சூரியனின் அளவு குறைந்துக்கொண்டே வருவதால் ஏறத்

தாழ 2 இலட்சம் ஆண்டுகள் சென்றபின், பூமிக்கு சூரியனின் ஒளிக்கற்றை வந்தடையாது. இந்த நிலையில் பூமியில் எந்த உயிரினங்களும் வாழ முடியாது.

தற்பொழுது பூமியில் மிதமான வெப்பநிலை நில்வுகின்ற தால் மனித இனம் வாழ முடிகின்றன மனிதனின் உடல் வெப்பநிலை 98.4° எப் இந்த வெப்பநிலையை விட சுற்றுப்புற வெப்பநிலை 15°எப் குறைந்தாலோ, அதிகமானாலோ முறையே மிககுளிரோ, மிகவெப்பமோ ஏற்பட்டு மனிதன்தாங்க முடியாத நிலையில் தவிப்பான். ஆனால் சுற்றுப்புற வெப்பநிலை சூரியனின் விட்டம் குறைவால், இனிவெப்பநிலை அதிகரிக்காது; வெப்பநிலை குறைந்துக் கொண்டே செல்லும் 20°எப் வெப்ப நிலை குறைகின்ற போது கண்டிப்பாக மனித இனம் பூமியில் 50 சதவிகிதம் அழியத் தொடங்கி விடும்

அதே சமயம் பூமிக்கு அடுத்த சூரியனுக்கு அருகே இரண் டாவதாக உள்ள வெள்ளி கோளில் மனிதன் வாழவதற்கேற்ற வெப்பநிலை நிலவும்போது மனித இனம் தோன்றக்கூடும். இங்கு வெப்பத்தால் எவ்வாறு உயிரினங்கள் தோன்றி பெருகு வதற்கு முடியும்? என வினா எழுப்பலாம், அதற்கு விடையாக சில சான்று அளிக்கிறேன்

(எ.டு.1) உயிரினங்கள் வெப்பத்தினால்தான் தோன்று கின்ற கருத்துக்கு ஓர் எளிமையான சான்று, ஒரு மாட்டின் சாணத்தை ஒருநாள் முழுவதும் வைத்திருந்து மறு நாள் அச் சாணத்தை கிளறிப் பார்த்தால் வெப்ப ஆவி வெளியேறும் அத் துடன் வண்டுகளும் காணப்படும். அதற்கு என்ன காரணம் என்று ஆராயும் போது அச்சாணம் இருக்கும் இடத்தில் (மண்) வெப்பத்தை வெளியேற்றாமல் இருப்பதால், அந்த உள் வெப்பத்தால் உயிர் வண்டு தோன்றுகிறது.

(எ.டு.2) உயிரினங்கள் தோன்றுவதற்கு மட்டுமே அல்லா மல் உயிரினங்களின் பெருக்கத்திற்கும் அதிகரிப்பிற்கும் வெப்பமே காரணம். இக் கூற்றை நாம் நம்முடைய நடை

முறையிலே காணலாம். பூமியில் வெப்பம் குறைந்த குளிர் மிகுந்த இங்கிலாந்து ஐஸ்லாந்து, சுவிட்சர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் மக்கள் இனப்பெருக்கம் மிகக் குறைவு.

ஆனால் வெப்பம் மிகுந்த இந்தியா, சீனா, போன்ற நாடுகளில் மககள் இனப்பெருக்கம் மிக அதிகம். இதற்கு அடிப்படை காரணம் வெப்பம்தான், ஆகவே வெள்ளி கோளிற்கு மனிதன் வாழ்வதற்கேற்ற வெப்பநிலை கிடைக்கும் பொழுது மனித உயிர்கள் தோன்றும், தொடர்ந்து சூரியன் குறையும் போது பூமியைப் போன்று வெள்ளி கோளிற்கும் சூரியன் வெப்பம் 5 இலட்சம் ஆண்டுகள் சென்ற பின் கிடைக்காது. அப்பொழுது வெள்ளியிலும் மனித இனம் அழியத் தொடங்கும்.

அதே சமயம் புதன் மிதமான வெப்ப நிலை பெறும், அப்பொழுது புதன் கோளில் மனித இனம் தோன்றும். சூரியனின் மிதமான வெப்பநிலை ஏறத்தாழ 2 இலட்சம் ஆண்டுகள் வரை புதனிற்குக் கிடைக்கும் காலம் வரையிலும் மனித இனம் வாழும் அதன் பிறகு சூரிய வெப்பம் புதன் கோளிற்கு கிடைக்காத போது மனித இனம் புதனில் அழிந்து விடும். ஆம்! புதனில் மட்டுமல்ல, சூரியகுடும்பத்திலே இன்னும் 10 இலட்சம் ஆண்டுகளுக்குள் மனித இனம் அறவே இருக்காது.

ஆனால் சூரிய குடும்பத்தில் மனித இனம் ஏறத்தாழ பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியிருக்கிறது. பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு சூரியனின் ஒளிக்கதிர் (வெப்பம்) சூரிய குடும்பத்தின் இறுதி கோள்களாகிய 'பிளெனெட்' 'புளுட்டோ' கோள்களுக்கும் கிடைத்திருக்கும் மிதமான வெப்பநிலையில் பிளெனெட், புளுட்டோ கோள்களில் மனிதன் தோன்றி வாழ்ந்திருக்க வேண்டும்.

சூரியனின் விட்டம் குறைய குறைய படிப்படியாக நெப்டியூன், சனி, யுரேனீஸ், வியாழன், செவ்வாய் ஆகிய கோள்களில் மனிதன் வாழ்வதற்கேற்ற மிதமான வெப்பநிலையில், மனிதன் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது இதன் மூலம் உணர்த்தப்படுகிறது.

முடிவுரை

பூமியில் மனித இனம் முதலில் குளிர் மிகுந்த நாடுகளில் தான் முதலில் அழியத் தொடங்கும். அதன்பிறகு வெப்ப நாடுகளில் மனித இனம் இறுதியாக அழியும். ஆனால் நாம் அவ்வாறு அழிய வேண்டியதில்லை, நம்முடைய தெளிவான சிந்தனையினாலும், ஆராய்ச்சியாலும், ராக்கெட் போன்ற போக்குவரத்து சாதனங்களை செய்து, அதன் மூலம் அச்சமயம் மிதமாக வெப்பநிலை நிலவும் வெள்ளிக்கோளிற்குச் சென்று குடியேறலாம். எனவே நம்முடைய விண்வெளிப் பயணம் இனி வெள்ளிக்கோளை நோக்கிச்செயல் படுத்த வேண்டும்.

தற்சமயம் அமெரிக்கா, இரஷ்யா போன்ற நாடுகள் செவ்வாய் கோளிற்கு சென்று மனிதனை குடி அமர்த்த முடியுமா என்ற சிந்தனை ஆராய்ச்சியில் மூழ்கியுள்ளது. கண்டிப்பாக முடியாது. இனி ஒருபோதும் செவ்வாய் கிரகத்திற்கு சென்று மனிதன் செயற்கை வெப்பமின்றி இயற்கையாக வாழ முடியாது. எனவே மக்களை அங்கு சென்று குடி அமர்த்த முடியுமா? என்ற சிந்தனையை விடுத்து அங்கு என்னென்ன உயிர்கள் வாழ்ந்துள்ளன; அவைகளின் தகவமைப்புகள் எப்படி உள்ளன என்பதை ஆராயலாம்.

இருப்பினும் நாம் இனி வெள்ளி பயணத்திற்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

மேற்கோள் நூல்

1. கலைக்கதிர்
2. கலைக்கதிர்
3. தினமணி

இதழ்ச் சிறுகதைகளில் மகளிர் சிக்கல்கள்

நா. நளினிதேவி.
அரசுமகளிர் கல்லூரி, புதுக்கோட்டை.

0.1. சிறுகதைகளை இலக்கியக் காலதர்கள் (சன்னல்கள்) எனலாம். ஓய்வாக வீட்டின் முன்அறையில் அமர்ந்து கொண்டு அங்குள்ள ஒரு சிறு காலதர் வழியே பரந்து விரிந்த தெரு நிகழ்ச்சிகளைப் பார்ப்பது போன்று சிறு கதைகளின் வாயிலாகச் சமுதாய நிகழ்வுகளைக் கண்டு அவற்றைக் கருத்திலிருத்தவும் முடிகின்றது. காலத்தின் எதிரொளியே இலக்கியம். ஆதலால் அவ்விலக்கிய வகையுள் ஒன்றாகிய சிறுகதை இக்காலச் சமுதாயத்தின் போக்கையும், தேவையையும் காட்டுகின்றது. பொதுவாக இன்றைய மகளிர் சிக்கல்களைச் சிறுகதைகள் வெகு நுட்பமாகவும், மிக ஆழமாகவும் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வுண்மையை அரண் செய்யும் வண்ணம் கல்கி இதழில், இவ்வாண்டு அமரர் கல்கி நினைவுப் போட்டியில் பரிசு பெற்ற முதல் மூன்று கதைகளைக் காணலாம்.

0.2 சிக்கல்களும் விளைவுகளும்

நடுநிலை வகுப்பு மகளிரின் ஊதியமில்லாப் பணிச்சுமை, ஓய்வில்லா உழைப்பு, பிள்ளைகளின் புறக்கணிப்பு, உடல் உள்ள வளக் குறைவு, குடும்பச் சிதைவு, அந்நியமாதல், அடித்தள மகளிரின் வறுமை நிலை முதலியன இம்மூன்று கதைகளிலும் இடம் பெற்றுள்ளன.

0.3. காரணங்களும், தீர்வுகளும்

மேற்குறித்த சிக்கல்களுக்குப் பெண்களுக்கே உரித்தாக்கப் பட்ட வீட்டுப் பணிகளும் (வேலைப் பங்கீட்டு முறை) பெண்

கல்வி இன்மையும். பொருளியல் உரிமை இன்மையும், பெண் கல்வியின் எதிர் விளைவுகளும், வரதட்சணை முறையும், பழமைப் பற்றும், அரசியல் கட்சிப்பற்றும் காரணங்களாகக் கூறப்பட்டுள்ளன. காலத்துக்கு ஏற்ற மாற்றம், பழைய சமய நூல்களில் புதிய சிந்தனை, பொருளியல் விடுதலை, பெண்களின் சொந்த முயற்சி போன்ற தீர்வுகள் சிக்கல்களைக் களையும் வழிகளாகக் காட்டப்பட்டுள்ளன.

0.4 முக்கதைகளின் கதைப்பொருள்

4.1. (சங்கரன் முதற்பரிசு: சத்தியப்பிரியன்)

நடுநிலை வகுப்பைச் சார்ந்த சங்கரனின் தாய் ஆதிசங்கரர் போன்று தன் மூத்த பிள்ளை தனக்குக் கொள்ளி வைக்க வேண்டும்; வீட்டு வேலைகளில் இருந்து ஓய்வு பெற்று, அவனிடம் தங்கி எஞ்சிய வாழ்நாளைப் போக்க வேண்டும் என்று விரும்புகின்றாள். இளையமகன் சிவசு அவள் விரும்பிய ஓய்வை அளித்தும், வெகுதொலைவில் உள்ள சங்கரனை வரவழைத்துக் கொள்ளி வைக்கச் செய்தும் அவள் ஆசைகளை நிறைவேற்றி வைக்கின்றான்.

4.2. புதிய சுவடுகள்

(2ஆம் பரிசு: கே.பி. ஜனார்த்தனன்)

திருமணத்தின்போது தருவதாகக் கூறிய வரதட்சணை; பணத்தில் எஞ்சிய 5000 ரூபாயை வாங்கி வருமாறு தாரணியைப் புகுந்த வீட்டார் பிறந்த வீட்டிற்கு அனுப்புகின்றனர். பிறந்த வீட்டிலும் அவள் அந்நியமாக்கப்பட்டு, மனம் வெறுத்து அநாதை ஆசிரமத்தில் செவிலித்தாயாகும் நோக்குடன் வீட்டை விட்டு வெளியேறுகின்றாள்.

4.3. திறப்புவிழா

(3ஆம் பரிசு: தமிழினியன்)

அரசியல் கட்சி ஒன்றில் தீவிரப்பற்றுக்கொண்டு மனைவியை யும், குழந்தையையும் வறுமையில் ஆழ்த்தி ஒரு நாள் கட்சி விழாவுக்குச் சென்ற இடத்தில் லாரி விபத்தொன்றில் உயிர்

துறந்த பின்னர் அவன் தியாகியாக்கப்படுவதை மனைவியே தடுத்து நிறுத்துகின்றாள்.

0:5: பெயர்ப்பொருத்தமும், உள்ளீடும்.

0:5:1 தம்மீது பாசம் கொண்ட தாய்க்குரிய கடமைகளைச் செய்யாமல் தனியேவிட்டுச் சென்று பற்றற்ற நிலையில் தாய்க்குக் கொள்ளி மட்டும் வைக்க வந்த ஆதிசங்கரரை நினைவு படுத்துகின்றது சங்கரன் எனும் பெயர்.

0:5:2 புகுந்த வீட்டிலும். பிறந்த வீட்டிலுமாக உறவினர் களிடையே அந்நியப்பட்டு நின்ற தாரணி அதற்காக அழுது அரற்றாமல், வாழ்வை முடித்துக் கொள்ளாமல், தன்காலில் நிற்கும் முயற்சியுடன் உறவல்லாத அந்நிய நெஞ்சங்களுடன் வாழத்துணிவதைப் 'புதியசுவடுகள்' எனும்பெயர் குறிக்கின்றது.

0·5:3 அறியாமையையும், பொறுப்பின்மையையும் தியாகங் களாக்கும் அரசியல் அவலங்களுக்கு முடிவுகட்டும் மகளிரின் துணிவான முயற்சிக்குத் திறப்பு விழா எனும் பெயர் சாலப் பொருந்தும்.

0:6:1 பணிச்சுமையும், ஓய்வில்லா உழைப்பும்

'சங்கரன்' கதையில் அவனுடைய தாய், கணவனை இழந்து தம் ஐந்து பிள்ளைகளையும் வளர்ப்பதற்கு வீட்டிலும், வெளியி லும் உழைக்கின்றாள். கோயில், விழா என்று அவள் சென்று இரவு பத்து மணிக்கு மேல் திரும்ப நேரிட்டாலும் பாத்திரங் களும், துணிகளும் அவளுக்காகக் காத்திருக்கும். கூட்டுக்குடும்ப் அமைப்பில் பெண்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பிருந்தது. தனிக்குடும்ப அமைப்பில் இளைய தலைமுறைப் பெண்கள் பணிக்குச் சென்றுவிட, வயதான தாய்மார்களே தொடர்ந்து பொறுப்பேற்க வேண்டியுள்ளது. பாசத்தினால் அளவுக்கு மீறிய பணிகளைச் செய்து வந்தாலும், வயதான நிலையில் வேலைப் !பளுவைத் தாங்குவதற்கு இயலாமல் அதனைக் குறைக்கவும், ஓய்வெடுக்கவும் விரும்புகின்றனர். ஆனால் அவர்களின் விருப்பு, வெறுப்புகளுக்கு இடமே இல்லை.

அலுவலர்மகளிர் **(Working womeu)** சிக்கல்களைப் போலவே வயதான பெண்களின் **(House wives)** வீட்டு வேலைச் சிக்கலும் கடுமையான ஒன்றே. நுட்பமான இச்சிக்கலை இக்கதை அழகாக எடுத்துக்காட்டியுள்ளது. 'பெண்களால் வேலைக்குப் போய்ட்டு வீட்டு வேலையையும்!பார்க்கிறது கஷ்டம்தான். ஆனா வேலைக் குப்போற பெண்கள் வீட்டில் என்னைப்போல் வயசானவங்க ஒண்டியா வீட்டு வேலை செய்யறதும் கஷ்டம்தான்' எனும் சங்கரன் அன்னை கூற்று இதனை மெய்ப்பிக்கும்.

0:6:2 வாழ்நாள் முழுவதுமான உழைப்புக்குச் சிறிதும் ஊதியம் இல்லாத நிலையில் உள்ளமும், உடலும் ஓய்வை நாடித் துடித்துத் தன் பிள்ளைகளையே தான் சுகமாக அமர்ந்து போகும் காவடியாக எதிர்பார்க்கின்றாள். அவர்களோ அவளையே சுமையாகக் கருதும்போது உழைப்பால் ஓய்ந்த உடல் ஏமாற்றத்தால் நலிகின்றது.

0:6:3 'கைம்பெண்கள் வளர்த்த பிள்ளைகள் உருப்படி யாக மாட்டார்' என்ற மொழியைப் பொய்யாக்கி நலமே வளர்த்த பிள்ளைகள் தன்னைப் புறக்கணிக்கும்போது அவள் தன் துணையற்ற நிலையை எண்ணி வருந்தும் அவலம் வயதான பொருளியல் விடுதலை இல்லாத பெண்களுக்குப் பொதுவானது. மகளிர் சமுதாயத்தின் இச்சிக்கல் வளர்ந்து வரும் ஒன்றாகும்.

0:7:1 பழைமைப் பற்றும், புதிய பார்வையும்

மகளிரின் உடல் உள்ள நலிவிற்கு அவர்களின் பழைமைப் பற்று அடிப்படைக் காரணமாக அமைகின்றது. பெண்களின் கருத்துக்கும், உணர்வுக்கும் சிறிதும் இடமின்றி முற்றிலும் ஆண்களின் வசதிக்கு ஆண்களாலேயே எழுதப்பட்டவை நமது பழைய புராணங்கள், சாத்திரங்கள், நீதிகள் முதலானவை. இந்த உண்மை அறியும் திறன் இன்றி, அறியினும் ஏற்றுக் கொள்ளும் பக்குவம் இன்றி அவற்றை அப்படியே பின்பற்ற விழைகின்றனர், தாய் மற்றும் உடன்பிறப்புக்கள் பற்றிய கவலையின்றித் தன் முன்னேற்றத்தையே நோக்காகக் கொண்டு கடல்மேல் பறந்து கொண்டிருக்கும் முதல் மகன் சங்கரன்தான்

தனக்குக் கொள்ளி வைக்க வேண்டும் என்று விரும்பித் தொலை வில் இருக்கும் அவன் வருவானோ என்று ஏங்குகின்றாள் தாய். அவ்வேக்கமே புண்ணாகிப் புரையோடி அவளது இறப்புக்கும் காரணமாகின்றது.

0:7:2 அவளது அவ்வறியாமை நிரம்பிய நம்பிக்கையை இரண்டாவது மகன் சிவசு மாற்ற முயற்சி செய்கின்றான். ஆதிசங்கரர் படைப்பு அவரை மனிதனாகக் காட்டமுடியாமலும் 'அவதார புருஷனாக'க் காட்ட இயலாமலும் குழம்பிய குழப் பத்தின் முடிவு. அதனால்தான் துணையற்ற தாயைத் தனியே தவிக்கவிட்டுவிட்டு வேதம்தான் பெரிது என்று சென்ற சங்கரர், பற்றற்ற துறவியானபோதும் தாய்க்குக் கொள்ளி போட வருகின்றார் என விளக்கம் கொடுத்துக் கொள்ளிமட்டும் போட்டால் போதாது, அவளை மகிழ்ச்சியுடன் வைத்துப் பேணும் பொறுப்பும் உண்டு' என்று கூறி வம்ச விருத்திக்காகத் தான் திருமணம் என்று கூறுவதும் ஆண்களின் தற்காப்பு விதிதான் எனக் கருதித் திருமணம் செய்து கொள்ளாமல் தாயுடன் இருந்து முதுமைக் காலத்தில் அவள் விரும்பிய ஓய்வையும், பொழுது போக்குக்ளையும் தருகின்றான்.

0:7:3 எனினும் முதுமைக் காலத்தில் பெண்கள், பிள்ளை களைச் சார்ந்து நிற்கும் (குழந்தைப் பருவத்தில் தகப்பனையும், பின்னர் கணவனையும்) மரபுநிலையை மாற்றிப் பெண்களைத் தற்சார்புடையவராய் ஆக்குவதுதான் இச்சிக்கலுக்கு நிலை யான தீர்வாகும் என்பதும் நினைவிற் கொள்ளத்தக்கது. இக் கதையில் சிவசுவின் செயல் தற்காலிகத் தீர்வே.

0:8:1 பெண்கல்வியின் எதிர்விளைவுகள்

பெண்கல்வியும், வேலைவாய்ப்பும் வீட்டுப் பெண்களின் (Housewives) பணிச்சுமையைப் பெருக்கியுள்ளது. கல்விகற்ற பெண்கள், தம்வாழ்க்கையையும், வசதியையும் கருதுகின்றனரே தவிரப் பிறந்த வீட்டிற்குத் தம் கடமைகளும் உண்டு என்பதை எண்ணுவதில்லை. அலுவலகம் சென்று வருவதையே அரிய செயல் என்ற பொய்யான தோற்றத்தை உருவாக்கிக் கொள் கின்றனர். கல்யாணம் குடும்பம் என்று தான் சிந்திக்கின்றனர்.

இதனால் பெற்றோர் மகள் என்ற அன்பு இழைகள் கடமை நூல்களாகி விடுகின்றன. உளமார்ந்த உறவு இல்லாமற் போய் விடுகின்றது. 'சங்கரன்' ரேவதியும், சீதாவும் தாய் தமக்குத் துணையாக வரவில்லை என்றபோது அவளைப்பற்றிக்கவலையே கொள்ளாது, இறப்புக்கு மட்டும் பிள்ளைகளை உறவினர் இல்லத்தில் விட்டுவிட்டு வருகின்றனர். இவ்வாறு தாய், மகள் அன்புணர்வு சிதைந்து கொண்டே வருமாயின் சமுதாய வாழ்க்கை உயிர்த்துடிப்பற்ற பாலைவன வாழ்க்கையாகிவிடும்.

0:9:1 அந்நியப்படுதலும் குடும்பச் சிதைவும்

வரதட்சணை எனும் சமுதாயக் கொடுமை பெண்களைப் பிறந்த வீட்டிலும், புகுந்த வீட்டிலும் அந்நியப்படுத்துகின்றது. திருமணத்தின்போது கொடுப்பதாகக் கூறிய ஐயாயிரம் ரூபாய் வரதட்சணையை வாங்கி வருமாறு தாரணியை மாமியாரும், மாமனாரும் அனுப்பிவைக்க, அவள் கணவன் சந்திரனும் அவர் களுடன் சேர்ந்து கொள்கின்றான். புகுந்த வீட்டில் அந்நியப் படுத்தப்பட்ட தாரணி பிறந்த வீட்டிற்கு வந்த போது, கணவனைக் கைக்குள் போடத் திறமையில்லை என இடித் துரைப்பதோடு, அடுத்த பெண்ணின் திருமணத்துக்கு. அவள் தடையாக இருப்பதாகவும் எண்ணுகின்றனர். பெற்றோரின் மனநிலை அறிந்த தாரணி. அங்கிருந்தும் வெளியேறி அநாதை இல்லத்தில் செவிலித் தாயாக அடைக்கலமாகின்றாள். எனவே வளமாக உருவாக வேண்டிய அவள் குடும்பம் சிதைகின்றது. சமுதாயப் பயிரின் நாற்றங்கால்களாகிய குடும்பங்கள் இங்ஙனம் சிதைவுறுவது சமுதாய வளத்துக்கு மாறானது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

0:10:1 அரசியல் கட்சிப்பற்றும், வறுமை நிலையும்

அடிப்படைத் தேவைகளுக்கே போராடிக் கொண்டிருக்கும் அடித்தள மகளிரின் வாழ்க்கை, ஆண்களின் அரசியல் கட்சிப் பற்றால் மேலும் அவலமாகியுள்ளது. 'திறப்புவிழா' வீரையனின் மனைவி செண்பகமும், மகன் சரவணனும் பசியால் வாடி, மாற்றுத் துணிகூட இல்லாமல் தவிக்கின்றனர். பள்ளிக்குக் 'காப்பி நோட்டு' கொண்டு செல்லாமல் மகன் அடிவாங்குகின்றான்.

மூவாமைக் காய்பதோர் மருந்து

இரா. நிர்மலா
சென்னைப் பல்கலைக்கழகம்

'எல்லா மனிதர்களும் சிரஞ்சீவிகளாய் இருக்கவே விரும்புகின்றனர்' என்று !இங்கிலாந்து பழமொழி ஒன்று கூறுகிறது. 'கிழவர் கிழவியரெனப்படாமல் நிலையுறுதலையுடைய இளமையைத் தரும்படி வையை ஆற்றை மக்கள் வேண்டுவதைப் பரிபாடல் (11-120-21) காட்டுகிறது. அவ்வாறாயின் நிலையான இளமையை மக்கள் எய்த இயலுமா? 'மூவா இளமை இயைந்தாரும் இல்லை' என்று **நான்மணிக்கடிகை** (78) திட்டவட்டமாகக் கூறுகிறது. அதனை அறிந்தும். எக்காலத்தும் இளமையாக இருக்க வேண்டும் என்னும் விருப்பத்தால் முதுமையை முறியடித்தல் தொடர்பாகப் பல புனைந்துரைகளை மக்கள் வழங்கிவருவதை, மொழி, இன வேறுபாடின்றி எல்லாச் சமுதாயங்களிலும் காணமுடிகிறது.

இளமையை மீட்டுத்தரும் நீரூற்றுகள் பற்றிய நம்பிக்கை அமெரிக்காவிலும் இருந்ததாக அறிகிறோம். அந்நீரூற்றின் நீரை அருந்தினாலோ அல்லது அந்நீரூற்றில் குளித்தாலோ முதுமை மாறி இளமை பெறலாம் என்று நம்பப்பட்டது. இத்தகைய நிரூற்றைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கிய ஜுவன் போன்ஸ் டிலியன் (**Juan Ponce de Leon**) என்பவர் கி.பி. 1513 இல் தற்செயலாகப் புளோரிடாவைக் (**Florida**) கண்டுபிடித்த செய்தியை வரலாறு காட்டுகிறது. இது போன்ற நம்பிக்கைகள் வடமொழியிலும் இருக்கக் காணலாம். கந்தமாதன மலையில் ஒரு பள்ளத்தில் பொன்னிறமான, பாம்புகளால் காக்கப்பட்ட, குபேரனுக்கு மிகவும் விருப்பமான தேனைத் தான் கண்டதாக

வும் அத்தேனைப் பருகினால் கிழவன் இளையோனாவான் என்று கூறக்கேட்ட வேடர்கள் அதை எடுக்கச்சென்று நாசத்தை அடைந்ததாகவும் விதுரர் துரியோதனிடம் கூறியதாக ஒரு கதை உள்ளது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன்னர்த் தோன்றியவராகக் கருதப்படும் பர்த்ருஹரி. மூப்படையாது என்றும் இளமையுடன் இருக்கவல்ல திறத்தை அளிக்கும் மாங் கனி ஒன்றை ஒரு முனிவர் அளிக்கப்பெற்று, அதனை உண்டு, இன்னும் சிரஞ்சீவியாகக் காசியிலுள்ள குகையொன்றில் வாழ்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறே, இளமையை மீட்கவல்ல பொருட்கள் பற்றிய நம்பிக்கைகள் பல தமிழிலும் வழங்கிவரக் காணலாம்.

குமரியாடல்

சீவகன் சுரமஞ்சரியைக் காணச்சென்றபோது முதியவேடம் பூண்டு செல்கின்றான். அவனைக் கண்டு உசாவிய மகளிரிடம் குமரியாடப் போந்ததாகக் குறிப்பிடுகிறான். அவ்வாறு குமரி யாடுவதன் பயன் என்ன என்று அவர்கள் வினவ, 'முந்தி நலிகின்ற முது மூப்பொழியும்' (2020) என்று உரைக்கின்றான் அவன், குமரி என்று சுரமஞ்சரியையும், அவளைக் கூடினால் தன்மூப்பு வேடம் களைந்து மீண்டும் இளமைத் தோற்றம் பெறுவான் என்ற பொருளில் அவ்வாறு குறிப்பிட்டான். எனினும் அம்மகளிர் குமரியாடுதல் என்பதை நீராடல் என்ற பொருளிலேயே எடுத்துக் கொண்டனர். இவ்வாறு இருபொருள் படும் வகையில் 'குமரியாடல்' என்னும் தொடரைப் பெரும் பற்றப்புலியூர் நம்பி சிவன் வளையல் விற்ற திருவிளையாடலி லும் (23:19), கச்சியப்ப முனிவர் முருகன் வள்ளியை நாடிச் சென்ற சூழலிலும் (கந்த. வள்ளி திருமணப் படலம், 97) காட்டியுள்ளனர். இராமேச்சுரத்தில் நரைமயிரைக் கருமை யாக்க வல்ல தீர்த்தம் இருப்பதாகத் தேவையுலா (28-29) குறிப் பிடுகிறது.

.... ஒருசுனை யுண்டதிற்
தோய்ந்து முழுகியெழுந்தால் வாயிற்

பல்லில்லாக் கிழவனும் வால்குமரனைப்
பார்த்தாப்போலே யிருந்திடு வான்

என்று நாகமலையிலுள்ள மூப்பு போக்கும் சுனையைப் பற்றி மோகனாங்கியிடம் குறத்தி கூறுவதைப் **பாம்பன காங்கேயன் குறவஞ்சியில்** காணலாம் (ப.77)

மூலிகைகள்

ஓதாளர் குறவஞ்சியில் அலகுமலையின் வளத்தைக் குறத்தி பாடும்போது பல வளங்களுள் ஒன்றாக அங்குள்ள மூலிகைகளையும் குறிப் பிடுகின்றாள். 'கருவாகும்வெள் ளாலின்மேல் புல்லுருவியைக்கட்டினால் ... சாயுங் கொங்கையும் பாயநிற்கிற சக்தி யுண்டாகும்' என்றும் வயதேறாமலே செய்யும் பச்சிலைகளும் அவள் வாழும் மலையில் உண்டு என்றும் கூறுகின்றாள் (ப.153). **கும்பேசர் குறவஞ்சி நாடகத்தில்** காணாமல்போன சிங்கியைத் தேடிச் செல்லும் சிங்கன் அவள் இருக்கும் இடத்தைக் கூறுவாருக்கு, 'நரைத்த மயிர் கறுத்து வர நல்ல மாத்திரை' தருவதாகவும், 'விழுந்துதாளம் போடுமுலை விம்மிநெருக்க வேர்' தருவதாகவும் (105:2) கூறுகிறான். இதே சூழலில், 'ஏற்றிடு மூப்பினார் சிறுபிள்ளை களாகி / யிலங்கிட மூல்கை யிருக்குது தருகிறேன்' என்று **சரபேந்திர பூபாலக் குறவஞ்சியும் (68:2:3)**,

எண்ணும் பதினாறு வயதாகி இருந்திடத்
தக்க மருந்துகள் நானறிவேன்
நண்ணுந் தலைக்கூந்தல் நரையாமல் இருக்க
மருந்துகள் நன்கறிவேன்
தனமே சரிந்திடின் தந்திக் கோடென
நிற்க மருந்தறிவேன்

என்று **காங்கேயன் குறவஞ்சியும்** (19) குறிப்பிடுகின்றன.

கருநெல்லி

நரை, திரை போக்கும் மூலிகை கஞ்சமலையில் இருப்பதாகக் கேள்வியுற்ற மூலன் என்னும் அந்தணன் அம்மூலிகையைத் தேடிச்சென்றான். அப்பொழுது அவனுடைய மாணவன் உணவு சமைத்தான். அருகே கிடந்த ஒரு குச்சியினைக் கொண்டு

அரிசியைக் கிளற, சோறு வெண்மை நீங்கி கருமை நிற முற்றது. ஆசிரியனுக்கு அஞ்சி, அக்கோல் நரை திரை மாற்ற வல்ல கருநெல்லியின் குச்சி என்பதை அறியாது அதனை நெருப்பில் எறிந்துவிட்டுச் சோற்றையும் உண்டுவிட்டான். உடனே அவனது நரை திரையுடனான முதுமைத் தோற்றம் நீங்கி இளமை பெற்றான். மூலிகை கிடைக்காது திரும்பிவந்த ஆசிரியன் நடந்தது அறிந்து மாணவன் உண்ட உணவினைக் கக்கச்செய்து, அதனைத் தான் உண்டு இளமை பெற்றான் என்று கஞ்சமலையின் பெருமையைக் கொங்குமண்டலச் சதகம் (69) உரைக்கிறது. மூப்பினைக் கெடுத்து இளமையைக் கொடுக்கின்ற கருநெல்லியினை **சரபேந்திர பூபாலக்** குறவஞ்சியும் (38:5) **விராலிமலை வேலவர்** குறவஞ்சியும் (41) குறிப்பிட்டுள்ளன.

கடவுள் வழிபாடு

திருநீலகண்ட நாயனார் சந்தர்ப்பச் சூழலால் இளமையிலேயே காமத்தைவிட்டு இறைவனையே வழிபட்டு மூப்படைய, அவரது பக்தித் திறம் கண்டு இறைவன் அவருக்கும், அவருடைய மனைவியருக்கும் மீண்டும் இளமையை அருளிச் செய்தான் என்று கூறப்படுகிறது (11ஆம் திருமுறை 33:2, பெரியபுராணம் 368-402). இறைவனின் திருவிளையாடல்களுள் ஒன்றாக முதியோரை இளையோராக்கிய நிகழ்ச்சி பெரும்பற்றப் புலியூர் நம்பி (13:83), பரஞ்சோதி முனிவர் (20:9) ஆகியோரது திருவிளையாடற் புராணங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. பீளை வழிந்தோடும் கிழவரைக் காளையாகச் செய்தது மட்டுமன்றி, அவர் வயதுக்கிசைய அவர்தம் ஈளை வாயுடைய மூப்பெய்திய மனைவியரையும் கருவடைந்து இளமை ஆளும்படி சித்து விளையாடலை இறைவன் புரிந்தான் என்று **திருவிளையாடற்புராணம்** (20:16) கூறுகிறது.

இறைவனைத் தொழுதால் மூப்பு ஏற்படாது என்ற கருத்தினைச் சமயச் சான்றோர் பலரும் உரைத்துள்ளனர். அத்துடன் நமக்கும் இறைவன் மூப்பினைக் கெடுத்து அருளினான் என்று கூறியுள்ளனர்[2]. இறைவனைத் தொழுதல் மட்டுமன்றி இறைவனின் மேல் பாடப்பட்டுள்ள பக்திப் பாடல்களைப்

பாடுதலும் மூப்பினைத் தடுக்கும் என்னும் அடிப்படையில் சம்பந்தர் பாடிய பாடல்வல்லார் நரைதிரையின்றி நன்னெறி சேர்வர்(சம்பந்தர்தேவாரம் *291:11*) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தொகுப்புரை

வடமொழிக் காப்பியமான **மகாபாரதம்** முதுமையைத் தடுக்கவல்ல தேன், மாறா இளமையுடன் வாழும் மார்க்கண்டேயர், சுவர்க்கத்தில் இளமையுடன் வாழும் வானவர், சாபத்தால் முதுமைபெற்று அம் முதுமையை மகனிடம் கொடுத்து விட்டு மகனது இளமைகொண்டு காமம் நுகர்ந்த யயாதி முதலிய இளமை மீள்வு, முதுமை தவிர்தல் தொடர்பான கதைகளைக் கூறக் காண்கிறோம். இவைபோன்ற செய்திகளைச் சங்க இலக்கியத்தில் காண இயலவில்லை. ‘முதிர்ந்தோர் இளமை ஒழிந்தும் எய்தார்’ (நற்.*314*) என்னும் நிகழ்வியல் பாங்கைச் சங்க இலக்கியத்தில் காணலாம் சமயக் கருத்துகளின் கலப்பினைத் தன்னகத்தே கொண்ட பரிபாடலில் மாறா இளமைபெற வழிபடுகின்ற மக்களைக் காணமுடிகிறது.

சீவகசிந்தாமணி, கந்தபுராணம் முதலியவற்றில் சிலேடையாக வந்திருக்கும் ‘குமரியாடல்’ என்னும் தொடர் கதைப் போக்கிற்குப் பயன்படும் நோக்கில் கையாளப்பட்டுள்ளதே தவிர அத்தொடருக்கு எவ்வித சிறப்பும் அளிக்கப் பெறவில்லை.

‘மூவாமைக் காப்பதோர் மன்னும் மருந்தறிவீர் இல்லையே’ (நா.தி.பி. *3815:93-94*) என்று பக்திக் காலத்தைச் சேர்ந்த திருமங்கையாழ்வாரும் கூறிப்போந்தார். அப்பர், சம்பந்தர் முதலான சமயப்பெரியார் இறைவனை வணங்குவதால் மூப்பினைத் தடுக்கலாம், வீடுபேறடையின் முதுமையின்றி வாழலாம் என்று கூறுதல் மக்கள் இறையுணர்வு கொள்ள வைப்பதற்குக் கையாண்ட உத்தி எனலாம்.

யதார்த்த உலகில் எய்த இயலாதவற்றைக் கற்பனையாகக் கண்டு மனநிறைவு கொள்வது மனித இயற்கை. மனித வாழ்வில் தவிர்க்க இயலாத கூறாகிய முதுமையைப் போக்கி, மூவா

இளமை பெறவேண்டும் என்னும் விழைவின் அடிப்படையில் கருநெல்லி, மூலிகைகள் போன்ற நம்பிக்கைகளைப் பாடுவதைச் சிற்றிலக்கியங்கள் போற்றத் தலைப்பட்டன. அவற்றுள்ளும் குறவஞ்சி இலக்கிய வகையே தலைமை இடத்தை வகிக்கின்றது. சிங்கி மலைவளம் கூறுதல, சிங்கி இருக்குமிடம் கூறுவாருக்குப் பரிசளிப்பதாகச் சிங்கன் கூறுதல் ஆகிய பகுதிகள் குறவஞ்சியில் இடம்பெற்றுள்ளன. சிங்கியைக் காணாது விரகதாபத்தால் வாடும் சிங்கன் சிங்கியை அருமையும் பெருமையும் உடையவளாகப் போற்றுகிறான். அத்தகு பெருமைபெற்ற சிங்கி சென்றிருக்கும் இடத்தைக் கூறுபவருக்கு அரியதொரு பொருளைப் பரிசளிப்பதாகக் கூறுவதும் அரிய பொருள்களுள் ஒன்றாக முதுமையைப் போக்கவல்ல மருந்தினை அளிப்பதாகக் கூறுவதுமாக அமைத்து, மேற் கூறிய நம்பிக்கைகளைப் புகுத்துவதற்குக் குறவஞ்சி இலக்கியக் கட்டமைப்பு வழிவகுத்தது எனலாம். இந் நம்பிக்கைகள் புனைந்துரைகளே என்பதும், அவை நடக்க இயலாதவை என்பதும் அப்பகுதிகளின் முன்னும் பின்னும் அமைந்துள்ள தொடர்களாலும்[3], சிங்கன், சிங்கி கூறும் பிற செய்திகளாலும் புலப்படுகின்றன.

குறிப்புகள்

1) **அப்பர் தேவாரம்** *191:3* ; **சம்பந்தர் தேவாரம்** *122:2*; **நாலாயிர திவ்ய பிரபந்தம்** *2334, 3258, 3766* ; **சுந்தரர் தேவாரம்** *1:4, 18:1, 60:10, 69:11*; **அஷ்டப்பிரபந்தம்** *42, 583, 741*; **திருவருட்பா 5600; கச்சிக்கலம்பகம் 97.**

2) **சம். தேவா.** *123:6*; **நா.தி.பி.** *2877* ; **அஷ்.பிர.** *641* ; **பாசவதைப் பரணி** *662*, **திருவருட்பா 4740, 5435.**

3) மேய வுலகெங்கு மோர்நொடி தனிற்சென்று
விரைவில் வரவொரு குளிகை தருகிறேன் **(சரபேந்திர பூபாலக் குறவஞ்சி** *68:1***)**

காற்றைப் பிடித்துக் கரகத் தடைப்பதுங்
கண்கட்டு வித்தையுங் காட்டித் தருகிறேன்
(மேற்படி, 68:2)

படிம உத்திகள்

தா. நீலகண்டபிள்ளை
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

படிமம் என்பது ஒரு குறியீடு. கருத்துக்கூட்டை, இணைவை குறிக்கும். இலக்கியத்தில் பருப்பொருளால் காட்டப்பட்ட ஒன்று கருத்துத் தொடர்பு காரணமாக, கூடுதலாக அல்லது பிறி தொன்றாக நுண்பொருள் ஒன்றைக் குறிப்பதே படிமமாகும். அஃதாவது பருப்பொருளால் நுண்பொருளை இது காட்ட முயலுகிறது. உவமை போல வருவது. உவமையால் மட்டு மன்றிக் கருத்துத் தொடர்பாலும் ஒன்று மற்றொன்றைக் குறிக்கும். சொல்லப்பட்டதிலிருத்து சொல்லப்படாததை அஃது உணர்த்தும். படிமம் ஒன்றைக் கூற அதனோடு தொடர்புடைய பிறிதொன்றை உணர்த்தும் அணி (trope) போன்றது. இதில் உவமை, உருவகம், உயர்திணையாக்கம், தொடர் உருவகம் போல்வனவற்றின் வாயிலாக ஏதேனும் ஒரு சொல்லில் இருந்து சொல்லப்படாத வேறு சிலவற்றை உணர்த்துவது. அலங்கார மின்றி, நீளமாக ,உள்ளம் கவராதனவாய்த் தோன்றுவனவற்றை எளிமையாய், உயிருள்ள தன்மையாய் சுருக்கமாக, உணர் வழுத்தமாக உள்ளங்கவரும் வண்ணம் சொல்லப் பயன்படுவன படிமங்களாகும். சிலர் மனத்தின் மொழிபெயர்ப்பு படிமம் என்பர்.

படிமத்தின் வகைகள்

1. தனிப் படிமம் (Private symbol)
2. மரபுப் படிமம் (Traditional Symbol)
3. இயல்புப் படிமம் (Natural Symbol)
4. பொதுமைப் படிமம் (Universal Symbol)

எனப் படிமம் பலவகைப்படும்.

தனிப்பட்டவர் மட்டுமே பயன்படுத்துவன் தனிப்படிமம் ஆகும். இக்கால புதுக்கவிதைகளை இதற்கான சான்றாகக் கொள்ளலாம். மரபு வழியாக வருவன மரபுப் படிமம் எனப் படும். இயல்பாக விளங்குவன இயல்புப் படிமமாகும். தனிப் படிமங்களில் மரபு அல்லது இயல்பு படிமத்தின் சாயல் கலந்து அமைகின்றன. உள்ளுறை உவமத்தில் இயல்புப் படிமங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. சேக்கிழார், திருத்தக்கதேவர் போன்றோரைப் படிமப் பெரும்புலவர் என்பர். இயல்புப் படிமங்கள் தமிழில் கணக்கற்றனவாய் காலந்தோறும் வெளிப் படுத்தப்பட்டுள்ளன. உலகு யாவற்றிற்கும் பொதுவான குறியீடுகள் உலகப் பொது படிமங்களாகும். படிமத்தில் குறியீடும், குறிக்கப்படுவதும் என இரண்டு உண்டு.

படிமமும் இருட்சியும் (இருண்மை)

கவிஞனின் உணர்த்துமுறை, அவனது கற்பனையில் படிந்து கிடக்கின்றது. கற்பனையே உவமை, உருவகம் முதலான அணி நலனாக விரிகின்றது. உவம உருவகங்களையே இன்றைய திறனாய்வாளர்கள் படிமம் (Image) என்கின்றனர். இதனுள் உள்ளுறை, இறைச்சி ஆகிய செறிந்த உவமங்களும் அடங்கும். இன்றைய புதுக்கவிதைகளில் செறிந்த இறுக்கமான படிமங் களைப் பார்க்கின்றோம். சில கவிதைகளில் கூடார்த்தம் (Obscurity) இருக்கக் காணுகின்றோம். புதுக் கவிதையில் படிமங்கள் இடம் பெறலாம். ஆனால் இருண்மை ஓரளவே இடம் பெற வேண்டும். இருண்மை அதிகமாக அமைவதால் அது வாசகனை குழப்ப நேரலாம்.

புதுக்கவிதையில் படிமம்

உள்ளுறை, இறைச்சி, ஒட்டணி, உருவகம், உவமை இவற்றின் கூட்டுக் கலப்பே படிமம் எனப்படும். தற்போது படிமம் நிறைந்த கவிதைகளே அதிகமாகக் காணப்படுகின்றன. கவிதையில் கூற வருகின்ற பொருளும் உருவமும் இறுகிச் செறிந்திருக்க வேண்டும். பொருளையும் உருவத்தையும் பிரிக்க முடியாதபடி பிணைத்திருக்க வேண்டும். உள்ளடக்கத்தின் ஆதிக்கம் உருவத்தில் புலப்பட வேண்டும். அதனைக் கண்காட்சி என்பர்.

'பூவில் இதழ்ச் சுவருள்/வண்டு குரலொலிகள்
மோதி மடிகிறது/முத்தத் திரை மறைவில்
பேச்சு புதைகிறது'.

இது தருமு சிவராமின் படிமம் பொதிந்த கவிதையாகும்.

மேல்நாட்டுப் பாதிப்பு

மேல் நாடுகளில் படிம வளர்ச்சி கண்ட புதுக்கவிதை நெறிகளில் முக்கியமானவை; எக்ஸ்பிரஷனிஸம், சிமபாலிஸம், இமேஜிஸம், சர்ரியலிஸம், பங்ஷனலிஸம் ஆகியவை, இவ்வியக்கங்களின் பாதிப்புகள் இன்றையத் தமிழ்க் கவிதைக் கற்பனைகளில் ஆங்காங்கே மின்னுகின்றன.

கூர்மையான நெஞ்சுள் இறங்கும் படிமங்களைக் கொண்டு பானுச்சந்திரன் முதுமையை கற்பனை செய்கின்றார்.

'காலம் பணித்து விழுந்து/கண்களை மறைக்கிறது
கபாலத்தின் கூறையுள்/ஒட்டிலிருந்து
... ... வாரியிறைத்த பழந்தூசு'

இப்படியே முதுமையின் படலம் அடுத்தடுத்துப் படிவதைக் காட்டுகின்றவர் நிறுத்தி திடீரென வேறொரு பக்கத்தையும் காட்டுகின்றார்.

'அந்தியை நோக்குகிறேன்/கதிர்கொள்ளிகள் நடுவே
ஏதோ எரிகிறது/ ஒன்றுமில்லை
பாதிப் பிணம்'

அறிஞர் எஸ்ரா பவுண்ட் சொன்னதுபோல இந்த படிமங்களிலிருந்து; இவற்றின் வழியாகவும்; இவற்றுக்குள்ளேயும் எண்ணங்கள் இடைவிடாது பாய்ந்து கொண்டு இருப்பதை உணரமுடியும். அடிமன ஆழங்களில் நுழைந்து அறியப்படாத உணர்வு விசித்திரங்களை எடுத்து வந்து காட்டுவது 'எக்ஸ்பிரஷனிஸம்'. தன்னைத்தானே தேடித்திரியும் தேட்டையே இங்கு காணலாம். இம்முறையில் அமையும் கற்பனைகள் புரிந்துகொள்வதற்கு .. மிகவும் கடினமானவை. பெரும்பாலும் நேரடிப் பொருள் இருக்காது.

எக்ஸ்பிரஷனிஸத்தின் பின்விளைவானது மிகை யதார்த்த நெறியாக அமைகின்றது. அன்றாட வாழ்க்கை, நிழல்களை உச்சரித்தே நடக்கிறது. நிஜங்களோ அதன் நாக்கினடியில் அவற்றை வெளிக்கொண்டு வரும் முயற்சியில் மனதின் மேல் மட்டத்தில், சுவடு பதிக்காத; ஆழமான அபூர்வ அனுபவங்களை அடைகின்றான் கவிஞன் (அப்துல் ரகுமானின் முடியாட்சி பற்றிய கவிதை).

தற்சார்பும், ஆழமும் எளிதில் விளங்காமையும் உள்ள இத்தகைய உத்திகளுக்கு மாற்றாகத் தோன்றியது **Functionalism** என்ற நெறி. இதன் ஒரு நோக்கு வளர்ச்சிதான் இன்றைய மார்க்ஸியக் கவிதைகள்.

உருவக் குறியீட்டு படிமம்

ந. பிச்சமூர்த்தி முதன் முறையாக உருவக் குறியீட்டுப் படிமங்களைக் கவிதையில் கொலுவேற வைத்தார். ஆழ்ந்து புத்தகம் படித்த அவரது அனுபவத்தை,

> 'திறந்திருக்கும் மாளிகையாய்ப்/பிரிநதிருக்கும் பழம் பெருநூல்
> படிக்கட்டு வரி வழியே/இறங்கத் தொடங்கி
> தவறி விழுந்து/பொருளின் பால்கடலில்
> கண்மூடிய/பூனை மௌனி... ...'

என்று படிமப் போலமிடுகிறார். யுத்தத்தின் பயங்கரத்தைப் பூக்காரி என்னும் கவிதையில்,

> 'ஊரெங்கும் அலிப்புகை
> வானெங்கும் எஃகிறகு'

என சித்திரித்த ந.பி.யிடம் எஃகிறகு என்ற சொற்சேர்க்கை வெகு அற்புதமாக வடிவெடுத்துள்ளது.

புனைவியல் படிமம்

மொழியின் சாத்தியக் கூறுகளை ஆராய்வது புதுக்கவிதை யின் லட்சியம் என்பார் மைக்கேல் ராபர்ட்

'நாணல் முளைத்த|தண்ணீர் கூரை நனைத்த
நதியெல்லாம் மணில்பாய|குளித்துக் கரையேறும்
கல்மலர்கள்......'

என வரும் கல்யாண்ஜியின் கவிதையில் வரும் படிமம் புதுமை யும் அழகுணர்ச்சியும் தருவதாகும். ஆயின் படிமங்கள் எத்தனை அழகு பெற்றிருந்தாலும், உணர்ச்சி சலனம் அவற்றில் இல்லா விட்டால் அவற்றுக்குப்பொருளும் மகத்துவமும் இல்லை. பாரதி தாசனின் நினைவுச் சரட்டிலும், பாரசீக இடைக்கால மரபிலும் தோய்ந்த சில கவிஞர்கள் புனைவியல் படிமங்களை மிகுதியாய் நெகிழவிட்டனர்.

மரபியல் படிமம்

மரபியல் படிமத்தில் ஒரு அழகு வெளிப்பாட்டினைக் காண முடிகின்றது. தமிழவனின்,

'அழுகி நாறும்|அரசியல் குட்டையில்
ஆளும் வர்க்க|ஆக்டோபஸ் நெளிகிறது'

என்ற கவிதை சமுதாய உணர்ச்சியை படம்பிடிக்கிறது. சக்திக் கனலின்—ரோடு ரோலரின் பவனி, புலியின்—ஒரு அப்பளத்தின் மரணம், ஞானக்கூத்தனினி — கொள்ளிடத்து முதலைகள் போன்றன எல்லாம் உருவக நிறைவுக்குச் சில சான்றுகளாகும்.

சொல் மூலமாக சொல்லுக்கு அப்பாற்பட்ட பரிமாணங் களை உருவாக்கும் முயற்சியில் புதுக்கவிதை குறியீட்டுக் கோலமும் (Symbolism) பூணுகின்றது.

புதுக்கவிதை விம்மி விளைவதற்கு நவநவமான சொல்லாக் கங்களில் புதுப்பாய்ச்சல் ஒரு காரணம், கவிஞர் அடியின்

அதிசப்த நெரிசல்'; பாணனின் 'வெந்துயர் முன் மன வேலி'; தமிழன்பனின் 'தண்ணீரால் வெறுக்கப்பட்ட தாகங்கள்'; ரகுமானின் 'உலோகப் பறவை'; ரவீந்திரனின் 'ஊசி மழைப் போர்முனை' இவையெல்லாம் சொல்லாக்க வீச்சுக்குப் பதச் சோறாகக் கொள்ளலாம்.

நிறைவுரை

உவமைக்கும் பொருளுக்கும் உள்ள இடைவெளியை உடைத்து அகற்றி புதிய படிம உருவகங்கள் வரலாயின. தற்கால புதுக்கவிதைகளில் தனிப்படிமங்களே உள்ளன. அவற்றிலும் மரபு அல்லது இயல்பு படிமங்களின் சாயல் கலந்து அமைகின்றன. உள்ளுறை, இறைச்சி, ஒட்டணி, உருவகம் உவமை இவற்றின் கூட்டுக்கலப்பே படிமம் எனப்படும். படிமங்கள் எத்துணை அழகு பெற்றிருப்பினும் உணர்ச்சி வெளிப்பாடு இல்லாவிடில் அவற்றிற்குப் பொருளும் பயனுமில்லை. புதுக்கவிதை சப்தங்களைவிட படிமங்களையே நம்பி உள்ளது.

மதுரைவீரன் கதை - ஓர் அறிமுகம்

ந. நீலமோகன்,

கேரளப் பல்கலைக்கழகம்.

பொதுவாகக் கதைப் பாடல்கள் சமூக நிகழ்ச்சிகளையும், வரலாற்று நிகழ்ச்சிகளையும், புராண நிகழ்ச்சிகளையும் அடிப் படையாகக் கொண்டு எழுந்தவை. சமூகக் கதைப் பாடல்கள் சமுதாயத்தில் உள்ள கலப்பு மணம், பெண்கள் சொத்துரிமை, சாதி அடக்குமுறை, பொருத்தா மணம் போன்றவற்றைச் சித்தரிக்கின்றன. வரலாற்றுக் கதைப் பாடல்கள் வரலாற்று வீரர்களின் வாழ்க்கை முறையையும் புராணக் கதைப் பாடல் கள் புராண நிகழ்ச்சியை அடிப்படையாகவும் கொண்டு விளக்கு கின்றன. இவ்வாய்வுக்கு எடுத்துக் கொண்ட மதுரை வீரன் கதை அக்கால சமுதாய நிகழ்ச்சியினைச் சித்தரிக்கிறது. மதுரை வீரன் தாழ்ந்த குலத்தில் பிறந்தவனாகவும் உயர்ந்த குலத்தில் பிறந்தவனாகவும் கதை வேறுபாடுகள் காணப்படுகின்றன இந்த நிலையை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

மதுரைவீரன் கதை

காசி மன்னனுக்கு மகனாகப் பிறந்த மதுரைவீரன் கழுத் தில் மாலைச் சுற்றிப் பிறந்ததால் தீமை நேரும் எனச் சோதிடர் கூற, அவனைக் காட்டில் போட ஆணையிட்டான் மன்னன். காட்டிற்கு ஆவாரம் பட்டை வெட்டச் சென்ற சக்கிலியன் சின்னானும் அவன் மனைவியும் குழந்தையை எடுத்து வளர்க் கின்றனர். இளைஞனான மதுரைவீரன் பொம்மண மன்னன் மகள் பொம்மயைக் காதலித்துக் கடத்திச் செல்கிறான். அத னால் ஏற்பட்ட போரில் பொம்மணன் இறக்கிறான். பின்னர் வீரன் திருச்சி விஜயரங்க மன்னனிடம் காவல் தலைமைப்

பொறுப்பேற்கிறான். திருமலை நாயக்கர் அழைப்பால் மதுரை சென்று அழகர் மலைக் கள்ளர்களை அழிக்கிறான். அங்கு வெள்ளையம்மாளுடன் வீரனுக்கிருந்த தொடர்பையறிந்த மன்னனால் மாறுகால் மாறுகை வெட்டப்பட்டு இறக்கிறான். இதனை அறிந்த பொம்மியும், வெள்ளையம்மாளும் உடன் கட்டையேறி இறக்கின்றனர். இந்தக் கதையே பதிப்பித்து வெளிவந்த எல்லாக் கதைப் பாடல்களிலும் காணப்படுகின்றன.

மதுரைவீரன் கதை அமைப்பு நிலை

சமூக நிகழ்ச்சியைச் சித்தரிக்கின்ற இக்கதை மதுரைவீரன் கதை, மதுரைவீரய்யன் சிந்து. மதுரை வீரன் அம்மானை, பெரிய எழுத்து மதுரைவீரசுவாமிகதை போன்ற பெயர்களில் வழங்குகின்றது. இக்கதை வாய் மொழியாகவும், ஏட்டுச்சுவடி நிலையிலும் அச்சிடப் பட்ட நூற்கள் நிலையிலும் நமக்குக் கிடைக்கின்றன.

மதுரை வீரன் கதை இடத்திற்கு இடம் சாதிக்குச் சாதி வேறுபடுகின்றது. மதுரை, திருச்சி, சேலம், இராமநாதபுரம், கோவை, சென்னை போன்ற மாவட்டங்களில் மதுரைவீரன்கதை பொழுது போக்கிற்காக வாய்மொழிக் கதையாகவும், தெருக் கூத்தாகவும் வழிப்பாட்டிற்காக வில்லிசை. உடுக்கைப் பாடல் களாகவும் வழங்கி வருதலைக் காணமுடிகிறது. உடுக்கைப் பாட்டை ‘வருத்துப் பாட்டு’ என்றும் கூறுவர். வழிபாட்டின் போது தெய்வம் வருவிக்கப்பாடுதல் வருத்துப் பாட்டு எனப் படும்.

மதுரை வீரன் பிறப்பு வேறுபாடு

சேலம் மாவட்டத்தில் மதுரைவீரன் கதை தெருக்கூத்தாக நடத்தப்பட்டு வருகின்றது. இதில் மதுரைவீரன் காசி மன்னனுக்கு மகனாகப் பிறந்து சக்கிலிய குலத்தில் வளர்ந்ததாக நடிக்கப் படுகின்றது. சேலம் மாவட்டத்தில் மதுரைவீரன் தெருக்கூத்தில் கண்ணம்மா நாடக குழுவினர் புகழ்பெற்று விளங்குகின்றனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் மதுரைவீரன் கதை பெரும் பாலும் வில்லுப் பாடலாகப் பாடப்படுகிறது. வில்லுப் பாட்டுக் கலைஞர்களும் மதுரைவீரன் காசி மன்னனுக்கு மகனாகப் பிறந்து சக்கிலியர் குலத்தில் வளர்க்கப்பட்டான் எனப்பாடி வருகின்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில் மதுரைவீரன் கதையைப் பாடிப் புகழ் பெற்ற விற்கலைஞர், கோவில்பட்டி பி. சின்னப்பா குழுவினர்.

திருச்சியிலும், சென்னையிலும் மதுரைவீரன் கதை உடுக்கைப் பாடலாகப் பாடப்பட்டு வருகின்றது. இங்குள்ள மதுரை வீரன் கோயில்களில் வழிபாட்டின் போது மதுரை வீரன் கதை உடுக்கைப் பாட்டாகப் பாடப்படுகின்றது. உடுக்கைப் பாட்டில் புகழ்பெற்றவர் கரூர். எம். இராதாகிருஷ்ணன் என்பவர். இவர், மதுரைவீரன் காசிராஜனுக்கு மகனாகப் பிறந்து சக்கிலிய குலத்தில் வளர்ந்ததாகக் . குறிப்பிட்டுப் பாடிவருகின்றார்.

கள ஆய்வின் போது தெருக்கூத்து நடிகரான நாமக்கல் எஸ். பழனி மதுரைவீரன் ஆகாய வீரனாகத் தேவலோகத்தில் இருந்தான் என்றும், அவன் முக்தி அடையக் காசிராஜனுக்கு மகனாகப் பிறந்தான் என்றும் கூறுகின்றார்.

மதுரைவீரன் முற்பிறப்பில் தேவலோகத்தில் இருந்ததைக் காட்டுவதாகக் கேரளப் பல்கலைக்கழகச் சுவடி புலத்திலுள்ள மதுரை வீரய்யன் சிந்து என்ற சுவடி அமைகின்றது. இதில் மதுரைவீரன் சிலலோகத்தில் சிவபெருமானுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்த தேவ மகளிரைக் கூட நினைத்தான். இதை அறிந்த சிவன் கோபம் கொண்டு நீ பூமியில் குழந்தை இல்லாது தவம் இருக்கும் காசிராஜனுக்குக் குழந்தையாய் பிறப்பாய் என்று சாபம் இட வீரன் காசிராஜனுக்கு மகனாகப் பிறந்தான் எனக் குறிப்பிடப்படுகின்றது.

மதுரைவீரன் அம்மானை (சென்னைப் பல்கலைக்கழக சுவடிக் காப்பீட்டுத்துறை) என்ற ஏட்டுச் சுவடியில் வீரன் காசி

ராஜனுக்கு மகனாகக் பிறந்து சக்கிலியர் குலத்தில் வளர்ந்த தாகக் குறிப்பிடப்படுகின்றது.

மதுரைவீரன் குலம்

மதுரைவீரன் சக்கிலிய குலத்தில் தோன்றியதாகவும் அரசர் குலத்தில் தோன்றியதாகவும் அறிஞர்களிடையே கருத்து வேறு பாடுகள் நிலவுகின்றன.

மதுரைவீரன் சக்கிலிய குலத்தில் பிறந்ததாக நா. வானமா மலை, அ. ஆறுமுகம், கோ. கேசவன் போன்றோர்கள் குறிப் பிடுகின்றனர்.

அரசர் குலத்தில் பிறந்ததாகச் சிங்காரவேலு முதலியார் தமது அபிதான சிந்தாமணியில் குறிப்பிட்டுள்ளார்.

தேவலோகத்தில் சிவனின் சாபம் பெற்றவர்கள் பூலோகத் தில் தாழ்ந்த குலத்தில் பிறந்ததாகவே புராணக் கதைப் பாடல் கள் குறிப்பிடுகின்றன. சான்றாக வலைவீசியம்மன் கதைப் பாடலில் பார்வதி சிவனின் சாபத்தால் பரதவர் குலத்தில் பிறந் ததைக் கூறலாம்.

சமூகக் கதைப் பாடலான காத்தவராயன் கதையில் காத்தவராயன் கைலாசத்தில் தேவமாதர் மீது ஆசை கொண்ட தால் சிவனால் சபிக்கப்பட்டுப் பூலோகத்தில் பறையர் சாதி யில் பிறந்ததாகக் காட்டப்படுகிறது.

மதுரைவீரய்யன் சிந்துவில், மதுரைவீரன் தேவலோகத்தில் பெண்களிடம் தவறாக நடந்த காரணத்திற்காக சிவனின் சாபம் பெற்றுப் பூலோகத்தில் பிறந்தான். மேற்கண்ட கதைப் பாடல்களை நோக்குமிடத்து மதுரைவீரனும் சிவனின் சாபம் பெற்றுப் பூலோகத்தில் தாழ்ந்த குலத்தில் தான் பிறந்திருக்க வேண்டும் எனக் கருத இடம் அளிக்கிறது.

முத்துப் பட்டன் கதையில் தாழ்ந்த குலத்தில் பிறந்த பொம்மக்கா, திம்மக்காவை உயர்ந்த குலத்தில் உள்ள முத்துப் பட்டன் மணந்ததால் பிற்காலத்தில் உள்ள உயர்ந்த சாதியினர் தன் சாதிக்கு இழிவு வராமல் இருக்க வேண்டிப் பொம்மக்கா, திம்மக்காவும் பிறப்பால் பிராமணர் குலத்தைச் சார்ந்தவர்கள் என்றும், விதிவசத்தால் அவர்கள் தாழ்ந்த குலத்தில் வளர்க்கப் பட்டார்கள் என்றும் கதை புனைந்து விட்டனர். அது சக்கிலிய குலத்தில் பிறந்த மதுரைவீரன் உயர்ந்த சாதியினளான பொம்மியை மணந்ததால் தன் குலத்திற்கு இழிவு என அஞ்சிய உயர்ந்த சாதியினர் மதுரைவீரனைப் பிறப்பால் காசி மன்னனுக்கு மகனாகவும்; அவன் மாலை சுற்றிப் பிறந்ததால் காட்டில் கொண்டு போடப்பட்டதாகவும் அவனைச் சக்கிலியர் எடுத்து வளர்த்ததாகவும் கதையின் முற்பகுதியில் மாற்றம் செய்து விட்டனர் எனக் கருதலாம்.

மேலும் இக்கதையில் இடம்பெறும் காசி மன்னன் என்ற பெயரும் காசி என்ற இடமும் கதையின் களனை வைத்து நோக்குகையில் சரியானவை என்று கூற இயலாது. எனவே கதையில் வரும் காசி என்ற இடமும் காசி மன்னனும் உயர்ந்த சாதியினரின் பிற்காலக் கற்பனையாகவே தோன்றுகின்றது.

உயர்ந்த சாதி மக்களின் ஆளுமைக்குட்பட்டுச் சக்கிலியர் கள் அடங்கி, மதுரைவீரனை உயர்ந்த குலத்தினன் என்றே பாவிக்கின்றனர். இன்னும் விழிப்படையாத சக்கிலிய குலத் தினர் மதுரைவீரனை உயர்ந்த குலத்தினன் என்றே பாவிக் கின்றனர். இன்னும் விழிப்படையாத சக்கிலிய குலத்தினர் மதுரைவீரனைத் தம் குலத்தில் பிறந்தவனாக ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர், தாம் வணங்கும் தெய்வத்தை உயர்வு படுத்து வதற்காக மதுரைவீரனை அரசனின் மகன் என்றோ கடவுளின் மகன் என்றோ கூறிக்கொள்ள முனைகின்றனர். இது சமுதாய கதிப்பூட்டும் நோக்கம் (Social Stratification) சார்ந்தது எனக் கருதலாம்.

முடிவுரை

பதிப்பித்து வெளிவந்துள்ள மதுரைவீரன் அம்மானை மதுரை வீரனை உயர்ந்த குலத்தில் பிறந்தவனாகவே காட்டுகின்றது. மதுரை வீரய்யன் சிந்து என்ற சுவடி மதுரைவீரன் தேவலோகத்தில் இருந்து பின்னர் சிவனின் சாபத்தால் பூலோகத்தில் காசி ராஜனுக்கு மகனாகப் பிறந்ததாகக் காட்டுகின்றது. புராணக் கதைப் பாடல்களிலும் பிற சமூகக் கதைப் பாடல்களிலும் தேவலோகத்தில் சாபம் பெற்றவர்கள் தண்டனையாகப் பூலோகத்தில் தாழ்ந்த குலத்தில் பிறந்து பின்னர் முக்தியடைந்ததாகவே உள்ளது. அவைகளைச் சான்றாக வைத்து நோக்குகையில் மதுரைவீரன் தேவலோகத்தில் இருந்தான் என்பதும், சிவனின் சாபத்தால் பூலோகத்தில் சக்கிலியர் குலத்தில் பிறந்தான் என்பதும் பொருத்தமானதாகத் தெரிகின்றது. எனவே மதுரைவீரன் சக்கிலியர் குலத்தில் பிறந்து உயர்சாதிப் பொம்மியை மணந்து அழகர் மலைக்கள்ளர்களை அழித்துப் பின்னர் வெள்ளையம்மாள் தொடர்பால் கொல்லப் பட்டு தெய்வ நிலையை அடைந்தான் என்பதே இக்கதையின் முந்திய வடிவம் என்று கூறலாம்.

சமயப் பொதுமையில் இராமலிங்கரும், இராமகிருஷ்ணரும்

பி. பகவதி
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, திருநெல்வேலி

முன்னுரை

காலத்தின் தேவையினால் ஆதிமனிதர்கள் வெவ்வேறு விதங்களில் கடவுளை எண்ணினர். காலம் மாற, மாற மனித அறிவு வளர்ந்து. வருகிறது. வேற்றுமைகள் சிறிது சிறிதாக மறைந்து வருகின்றன. இக்கால கட்டத்தில் எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல கடவுள் ஒருவரே என்ற கருத்து அனைவரிடமும் பரவவேண்டும். உலகில் தோன்றிய ஆன்றோர்கள் அனைவருமே இதனை வற்புறுத்தினர். அவ்வான்றோர்கள் வரிசையில் தோன்றிய இராமலிங்கர், இராமகிருஷ்ணர் சமயம், சமயப் பொதுமை பற்றிய இருவருடைய கருத்துக்களையும் இக் கட்டுரையில் காணலாம்.

இராமலிங்கரும், இராமகிருஷ்ணரும்

ஒரு நாட்டிற்கு, நாட்டை ஆளும் அரசர்களினாலோ, நாட்டை ஆட்டிப்படைக்கும் அரசியல்வாதிகளினாலோ, பண வலிமை படைத்தவர்களினாலோ பெருமை ஏற்பட்டுவிடாது. மனிதத் தன்மைக்கு இலக்கணமாகவுள்ள நான், எனது என்ற செருக்கற்ற ஆன்றோர்களும், சான்றோர்களும் தோன்றுவதாலேயே ஒரு நாடு உண்மையிலேயே பெருமை அடைகிறது. இயற்கையில் மனிதனைத் தவிர எல்லா உயிர்ப்பிராணிகளும் தத்தம் நியதிப்படியே ஒழுங்காக வாழ்கின்றன. எனவே தான் மனிதர்களினூடே தோன்றி அவர்களை நல்வழிப்படுத்தும்

பொறுப்பினை ஆன்றோர்கள் ஏற்றுக் கொண்டனர். மனிதனுக்குத் தேவையான அடிப்படைப் பண்புகளை நன்கு வளர்த்துக் காத்துக் கொள்வதோடு. 'தம்முடைய எண்ணத் தாலும், சொல்லாலும், செயலாலும் பிறர்க்கும் எடுத்துக் காட்டாகத் திகழ்பவர்களையே சான்றோர்கள் அல்லது ஆன்றோர்கள்'[1] என்று நூல்கள் குறிப்பிடுகின்றன.

''அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ
டைந்து சால்பு ஊன்றிய தூண்'' - என்று

வள்ளுவரும் சான்றோர்களுக்குரிய அடிப்படைப் பண்புகளைக் கூறுகின்றார். இத்தகைய சான்றோர்கள், ஆன்றோர்கள் வெவ்வேறு இடங்களில் தோன்றி மக்களை நல்வழிப்படுத்தினர். இவர்களில் கி.பி பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாடிய பயிரைக் கண்ட பொழுதெல்லாம் வாடிய இராமலிங்க அடிகளார் தென்னிந்தியாவிலும் தன் துணைவியாரான சாரதா தேவியாரைத் தாயாக வழிபட்ட பரமஹம்ச இராமகிருஷ்ணர் வட இந்தியாவிலும் தோன்றினர் 'உயிர்கள் அனைத்தும் ஒன்றே. எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் எண்ணி வாழாதான் உள்ளத்தில் இறைவன் குடிகொள்ள மாட்டான்'. என்பதையெல்லாம் மறந்துவிட்டு, சமயச் சச்சரவுகளிலே மூழ்கிக்கிடக்கும் மக்களுக்கு இவ்விருவரும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று வற்புறுத்தினர்.

சமயம்

சமயம் என்ற சொல் வாய்ப்பு, சந்தர்ப்பம் என்ற பொருளில் அமைந்துள்ளது. மனிதன் பிறவியிலேயே அறிவு பெற்று, ஆன்மீகத்துறையில் தோய்ந்து வாழவில்லை. காடுகளிலும், குகைகளிலும், விலங்கோடு விலங்காய், புள்ளோடு புள்ளாய் வாழ்ந்து வந்தவன். இயற்கை சூழ்நிலையால் சிறிது சிறிதாக அறிவு பெற்றான். காட்டுமிராண்டிகளான மனிதர்களின் அறியாமையை நீக்கி நாட்டுமக்களாகத் திருத்துவதற்கு அறிஞர்கள் பலவழிகளைக்கையாண்டனர். ''இறைவனைக் காட்டி, அச்சத்தையூட்டி, வாழ்க்கையின் நிலையாமையைச் சுட்டிக்காட்டி, யாக்கையின்

அழிவை உணர்த்தியதோடு இவற்றிற்கெல்லாம் கழுவாய் சமய நெறியில் நிற்பது''[2] என்று மக்களை வழிப்படுத்தினர்.

சமயப்பொதுமை

எல்லாச் சமயங்களும் ஒன்றுதான். உலகில் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு உணவு, உடை, பழக்கவழக்கங்களில் வேறுபாடு காணப்படுவதைப் போல, மனநிலையிலும், பற்றிக் கொள்ளும் கொள்கையிலும் அவரவரது சூழ்நிலைக்கு ஏற்றபடி வேறுபாடுகள் அமைந்திருக்கின்றன. அத்தனை வேறுபாடு களுக்கிடையிலும் மனிதப்பண்பு என்ற ஒருமையுணர்வு தழைக்க வேண்டுமெனில் எல்லோரும் உடன்பிறந்தவர்கள் என்ற எண்ணம் வளரவேண்டும். எல்லோருக்கும் தந்தையாக விளங்கு பவன் இறைவன் ஒருவனே. சமயங்கள் பலவாக இருந்தாலும், அவற்றின் அடிப்படைப் பண்புகள் அனைத்தும் ஒரே தன்மை யுடையன. யார் எந்த முறையில் எப்படி வழிபட்டாலும் அந்த வழிபாடு அந்த ஒரு இறைவனையே போய்ச் சாரும். இதனையே

"எம்பொருள் எம்பொருள் என்றே - சொல்லும்
எல்லாச் சமயத்தும் எல்லார்க்கும் ஒன்றே
செம்பொருள் என்பது பாரீர் - திருச்
சிற்றம் பலத்தே திருநட சோதி''[3] என்று

பாடினார் வள்ளலார். எந்தச் சமயத்தின் வழியாகவும், சமய மார்க்கங்களின் மூலமாகவும் இறைவனை அடையமுடியும் என்பதை, 'ஒரு குளத்துக்கு நான்கு படித்துறைகள். இந்துக்கள் ஒரு துறையில் இறங்கி நீரைப்பருகிவிட்டு அதைத் 'தண்ணீர்' என்கின்றனர். முஸ்லீம்கள் இன்னொரு படித்துறையில் நீரைப் பருகிவிட்டுப் 'பானி' என்கின்றனர். கிருத்துவர்களே அடுத்த படித்துறையிலிருந்து 'வாட்டர்' என்கிறார்கள். மற்றொரு படித்துறையில் இருப்பவன் 'ஆகுவா' என்கிறான். தண்ணீர் என்னவோ ஒன்றுதான். அதுபோல இறைவன் ஒருவனே! அவனுக்கு நாமங்களதான் பல''[4] என்று எடுத்துக்காட்டு மூலம் விளக்குகிறார் பரமஹம்சர்.

வேதங்களுக்கும், ஆகமங்களுக்கும் தோன்றியுள்ள பற்பல உரைகளின் மாறுபட்ட உரைகளாலும். புராணங்களிலும் இதிகாசங்களிலும் உண்மைநெறி வெளிப்படையாகச் சொல்லப் படாமல் மறைபொருளாகக் கூறப்பட்டு வந்தமையாலும் மக்களிடையே சமயவேறுபாடுகளும், மதச் சண்டைகளும் மலிந்தன. இத்னை ஒழிக்க முயன்ற இராமலிங்கர்

''வேதநெறி ஆகமத்தின் நெறிபவுரா ணங்கள்
விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி
உள்ளதனை உள்ளபடி உணரஉணர்த்தினையே!''[5]

என்று இறைவனைப் பாடிப் பரவசமடைகின்றார். இராம கிருஷ்ணரும் எந்த மதமாக இருந்தால் என்ன ? எந்த வழியாக இருந்தால்தான் என்ன ? எல்லோரும் அந்த ஒரே கடவுளைத் தான் அழைக்கின்றனர்.

... இறைவனை வேதம் சச்சிதானந்த பிரம்மம் என்கிறது. புராணங்கள் சச்சிதானந்தக் கிருஷ்ணன் என்கின்றன. தந்திரங் கள் சச்சிதானந்த சிவன் என்கின்றன. எல்லாம் சச்சிதானந்தம தான்''[6]- என்று கூறுவதன் மூலம் வேதங்கள், புராணங்கள் கூறுவதெல்லாம் ஒரே இறைவனைத் தான் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

இறைவன் ஒருவனே என்பதை மறந்துவிட்டு, சமயவாதிகள் தத்தம் சமயமே பெரிது என்று சமயவெறிகொண்டு வீண் சச்சரவில் ஈடுபடுகின்றனர். இதனையே இராமலிங்கர்.

''கூறுகின்ற சமயமெல்லாம் மதங்கள் எல்லாம் பிடித்துக்
கூவுகின்றார் பலனொன்றும் கொண்டறியார்-வீணே
நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றார்,''[7] என்று

கூறுகின்றார். கடவுளின் இரண்டொரு அம்சங்களை மட்டும் அறிந்து கொண்டு, அவர் இப்படியிருக்கிறார், அப்படியில்லை. இவ்வாறுதான் கூறுகிறார் என்று சிலர் வீண்வாதம் செய் கின்றனர். இவர்களின் வீண்பேச்சு, யானையைத் தடவிப்பார்த்த

குருடர்களில் காலைத் தடவிப் பார்த்தவன் அது தூண் போன்றிருக்கிறது என்றும், வயிற்றைத் தடவிப்பார்த்தவன் சுவர் போன்றிருக்கிறது என்றும், காதைத் தடவிப்பார்த்தவன் முறம் போன்றிருக்கிறது என்றும், வாலைத் தடவிப் பார்த்தவன் கயிறு போன்றிருக்கிறது என்றும் வருணிப்பது போல இருக்கும் என்று இராமகிருஷ்ணர் விளக்குகின்றார்.

முடிவுரை

சமயத்தின் பேரால் மக்கள் சண்டையிட்டுக் கொள்வார்கள் என்று கருதாததால் தான், இறைவன் பல சமயங்களைக் காட்டி எவற்றையேனும் ஒன்றைப் பின்பற்றி உய்தால் போதும் என்று வழிகாட்டினார். அதைப் புரிந்து கொள்ளாமல் தமக்குள் உயர்வு, தாழ்வுகளைச் சுட்டிக்கொள்வதற்கும், பெருமை சிறுமைகளைக் காண்பித்துக் கொள்வதற்கும் சமயங்களைப் பயன் படுத்துவது அறிவீனமாகும். இதனையே பாரதியார்,

"பூமியிலே கண்டம் ஐந்து மதங்கள் கோடி!
புத்தமதம், சமணமதம், பார்ஸி மார்க்கம்
சாமியென ஏசுபதம் போற்று மார்க்கம்
ஸநாதனமாம் ஹிந்துமதம், இஸ்லாம் யூதம்
நாமமுயர் சீனத்துத் 'தாவு' மார்க்கம்
நல்ல 'கன்பூசி' மதம், முதலாப் பார்மேல்
யாமறிந்த மதங்கள்பல உளவா மன்றே
யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங் கொன்றே".

இந்தியாவில் இராமலிங்கரையும், இராமகிருஷ்ணரையும் தவிர காலத்தால் முன்னைய, பின்னைய ஆன்றோர்களும், சான்றோர்களும் பலர் தோன்றி சமயப் பொதுமையை வலியுறுத்தியுள்ளனர். சமய சச்சரவுகளற்ற சமுதாயத்தைக் காண விழைந்துள்ளனர்.

அணுகுண்டினால் அமெரிக்காவுக்குப்புகழ் என்றால்
காடுகளினால் ஆப்பிரிக்காவுக்குப் புகழ் என்றால்
ஆன்மீகத்தால் இந்தியாவுக்குப் புகழ் அன்றோ!

எண் விளக்கம்

1) வித்துவான் அரி. ஆ. நடராசன், வள்ளலார் கண்ட வாழ்வு, ப. 76

2) மேலது, ப. 34

3) மேலது, ப. 78

4) மஹேந்திரநாத் குப்தர், ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் (முதற்பகுதி), ப.82

5) வித்துவான் அரி. ஆ.நடராசன், வள்ளலார் கண்ட வாழ்வு, ப. 80

6) மஹேந்திரநாத் குப்தர், ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் (முதற்பகுதி), பக்.505-506

7) வித்துவான் அரி.ஆ.நடராசன், வள்ளலார் கண்ட வாழ்வு, ப. 46

குமரியும் கிழவியும்

எஸ். பத்மநாபன்
நாகர்கோவில்

தென்னெல்லை காத்தாளும் தேவி : குமரி நின்
பொன்னடியைக் கும்பிட்டுப் போற்றுகின்றேன் மன்னுபுகழ்ச்
செந்தமிழ் நாடு ஒன்றாகித் தேவர் நாடொத்து, உலகில்
சந்ததம் வாழ வரம்தா

எனப் பாடுகிறார் நமது கவிமணி. பாரதத் தாயின் பாதச் சிலம்பொலியென முக்கடலும் கூடி முழங்கும் குமரித் துறையிலே, அன்னை பராசக்தி நம்மையெல்லாம் காக்க, கன்னித் தெய்வமாக, குமரியம்மனாக தவக் கோலத்திலே நின்று அருள் புரிகின்றாள். அந்தக் குமரியின் பெயரால் அமைந்தது தான் கன்னியாகுமரி மாவட்டம். இது தமிழகத்தின் தென்கோடியாக அமைந்துள்ளது.

குமரி மாவட்டத்தின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ளது முப்பந்தல். அங்கு

"ஔவைக் கிழவி நம் கிழவி
அமுதின் இனிய சொற்கிழவி,
செவ்வை நெறிகள் பற்பலவும்
தெரியக்காட்டும் பழங்கிழவி"

என்று நாஞ்சில் நாட்டின் தமிழ்மணியாகிய கவிமணியவர்கள் போற்றிப் புகழும் ஔவைக் கிழவி கோயில் கொண்டுள்ளார். இவ்வாறு ஒருபக்கம் குமரியும், மறுபக்கம் கிழவியும் கோயில் கொண்டு மக்களைக் காத்து அருள்புரிவது குமரிமாவட்டத்திற்கே உரிய ஒரு தனிச் சிறப்பாகும்.

கி.பி. முதல் நூற்றாண்டில் தோன்றிய பெரிப்பிளஸ் என்ற நூல் கன்னியாகுமரியைப் பற்றிய சிறு குறிப்பைத் தருகின்றது. ''தங்கள் வாழ்நாளின் இறுதிப் பகுதியை இறைவனோடு கலந்து வாழ்வாக மாற்ற விரும்பும் பலர் குமரித்துறை வந்து நீராடிப் பிரம்மச்சரிய விரதம்பூண்டு தங்கள் வாழ்வினைத் துறவுநிலைக்கு மாற்றி வந்தனர். ஒரு பெண் தெய்வம் அங்கே தங்கிக் கன்னி விரதம் மேற்கொண்டதை அடிப்படையாகக் கொண்டு பெண்களும் இந்த விரதத்தை மேற்கொண்டனர்'' என்று அந்நூல் குறிப்பிடுகிறது. இக் கூற்றிலிருந்து கன்னியாகுமரியில் கன்னித் தெய்வ வழிபாடு தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளது என்ற உண்மையை நாம் அறியலாம்.

தமிழ் மூவேந்தர்களும் வணங்கிய தெய்வம் குமரியம்மன். சேர, சோழ, பாண்டியர்கள் குமரியம்மனை வணங்கி வந்தனர் என்பதை வரலாறு நமக்குத் தெரிவிக்கின்றது. பாண்டியனை ''குமரி சேர்ப்பன்'' என சூடாமணி நிகண்டு கூறுகின்றது. குமரியன்னையே அவர்களது குல தெய்வம் என்பதை ''தென்னவர்தம் குலதெய்வம் தென்குமரி'' என அக்கோயிலில் கிடைத்த கல்வெட்டிலிருந்து அறியலாம். கன்னியாகுமரியை 'பாண்டிநாட்டு உத்தமசோழவள நாட்டு இராஜராஜேஸ்வரம்' என ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. ''இந்நாட்டுக் குமரியான கங்கைகொண்ட சோழபுரம்'' என்பது வேறொரு கல்வெட்டு. இக்கல்வெட்டுத் தொடர்களால் கன்னியாகுமரி சோழரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது என அறிய முடிகிறது. விக்கிரமச் சோழனுலா என்ற நூல் சோழ மன்னனை, 'குமரித்துறைவன்' என அழைக்கின்றது. குமரியம்மன் ஆலயத்து அர்த்த மண்டபத் தூண்களில் ராஜேந்திர சோழன் காலத்திய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கன்னியாகுமரியில் காந்தளூர் சாலையைப் போன்று ''இராஜராஜப் பெருஞ்சாலை'' என்று ஒரு கல்வி நிலையம் இருந்ததாக கல்வெட்டுகள் நமக்குத் தெரிவிக்கின்றன. பதினேழாம் நூற்றாண்டுக்குப் பின்னர் கன்னியாகுமரி சேர வம்சத்து வாரிசான வேனாட்டு மன்னர்களுக்குச் சொந்தமாயிற்று. இவ்வாறு கன்னியாகுமரி மூவேந்தர்கள் கையிலும் மாறி மாறி இருந்து வந்தது என வரலாறு நமக்குத் தெரிவிக்

கின்றது. குமரியம்மனை இவ்வாறு மூவேந்தர்களும் போற்றி வணங்கினர் என்ற உண்மையும் நமக்குத் தெரியவருகிறது.

காந்தியண்ணல் குமரித்துறையிலே நீராடி, 'முக்கடலும் கூடும் இடத்தை இங்கின்றி வேறெங்கும் காணமுடியாது. புனித நீரான குமரித் துறையைச் சூழ்ந்துள்ள கடல் நீரும் குமரியம் மனைப்போல் கன்னிப் பெண்ணாகவே இருக்கிறது. காரணம்? இங்குக் கப்பல் வருவது கிடையாது'' என நகைச்சுவையோடு கூறிச் சென்றார். கன்னித் தெய்வத்திற்காக எழுந்த ஒரே ஆலயம் இந்த குமரியம்மன் ஆலயம் தான். இந்த ஆலயத்தில் சிவசந்நிதி இல்லாதது குறிப்பிடத்தக்கது.

சங்க காலப் புலவர்களுள் தலைசிறந்து நிற்பவர் ஔவை யார். செந்தமிழ்ப் புலவராக மட்டுமின்றி மக்களால் போற்றிப் புகழும் தெய்வங்களுள் ஒருவராக ஔவையார் விளங்குவதை நாஞ்சில் நாட்டிலே மட்டும்தான் காணமுடியும். அங்கேதமிழக் கவிஞரான ஔவையாரை அம்மனாக வணங்குகின்றனர். ஔவையார் வாழ்ந்த காலத்தில் நாஞ்சில் மக்களோடு ஔவை யாருக்கு மிகுந்த தொடர்பு இருந்திருக்க வேண்டும். அந்தத் தொடர்பின் காரணமாக ஔவையார் மறைந்தபிறகு அவரைத் தெய்வமாகக் கருதி அவருக்குக் கோவில் எழுப்பி வழிபட்டிருக்க வேண்டும் குமரி மாவட்டத்தின் கிழககு எல்லையிலே ஔவையார் அம்மன் கோயில் கொண்டு மக்களை காத்து அருள் புரிகின்றார். அக்கோயில் வழியாகச் செல்லும் வாகனங்கள் சிறிது நேரம் கோவிலின் முன்பு நின்ற பின்னரே செல்லும். வாகனத்தில் உள்ள பக்தர்கள் தெய்வ நிலைப்பெற்ற அந்தத் தமிழ் புலவருக்கு காணிக்கை செலுத்தி வணங்குவர். இந்நிகழ்ச்சி இன்றும் நடைபெற்று வருகிறது.

நாஞ்சில் நாட்டிலே ஔவையாருக்கு மூன்று கோயில்கள் உள்ளன. அழகிய பாண்டிபுரத்தை அடுத்துள்ள குறத்தியறை யில் ஒரு குடைவரைக் கோயில் ஔவையாரம்மன் கோயில் என்றழைக்கப்படுகிறது. இங்குள்ள புடைப்புச் சிற்பங்கள் சிதைந்த நிலையிலே காணப்படுகின்றன. இக்கோயிலில் கூழும்

கொழுக்கட்டையும் படைப்பது ஒரு சிறப்பாகும். கூழும் கொழுக்கட்டையும் ஒளவையாருக்கு பிடித்தமான உணவாக இருந்திருக்க வேண்டும். அதனால்தான் கவிமணியவர்கள்

"வெல்லற் கரிய மாந்தரெல்லாம்
வியந்து போற்றும் ஒரு கிழவி
கூழுக்காக கவிபாடும் கூனிக்கிழவி அவளுரையை
வாழும் வாழ்வில் ஒரு நாளும்
மறவோம் மறவோம் மறவோமே"

என்று உரிமையோடு பாடியுள்ளார். முதலியார் வீட்டு ஓலைச் சுவடியும் மேல்கரைக் கோயில் கல்வெட்டும் அழகிய பாண்டி புரத்தை 'அதியன் ஊரான அழகிய பாண்டிபுரம்' எனக்குறிப் பிடுகிறது. ஒளவையாருக்கும் அதிகனுக்கும் உள்ள தொடர்பு குறித்து புறநானூற்றில் பல பாடல்களை நாம் காணலாம். மாங்குடி கீழார் "வளநீர் வாட்டாற்று எழிளியாதனைப்" பாராட்டிப்பாடிய பாடலொன்று புறநானூற்றிலே வருகின்றது. இவ்வரசன் குமரி மாவட்டத்திலுள்ள திருவட்டாறு என்னும் பகுதியை ஆண்டு வந்தவன். எழினி என்ற சொல் தகடூரை ஆண்ட அதியமான் என்ற சேரமன்னர் பரம்பரைக்கு அளிக்கப் பட்ட சிறப்புப் பெயர் என டாக்டர் கே. கே. பிள்ளையவர்கள் குறிப்பிடுகிறார். அதியமான் நெடுமாஞ்சி எழினி என்ற சிறப்புப் பெயரைக் கொண்டு விளங்கினான் என்ற புறநானூறு குறிப்பிடுகின்றது. ஒளவையாருக்கு இங்கு மூன்று கோயில்கள் இருப்பதும், அதியனூர் என்று அழகியபாண்டிபுரத்துக்கு பெயர் அமைந்திருப்பதும், அதியமானுக்கும், நாஞ்சில் நாட்டிற் கும் நெருங்கிய ஒரு தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்று கருத இடமளிக்கிறது. தகடூரை ஆண்டு அதியமான் இங்கே பிறந்திருக்கலாம் அல்லது வாழ்ந்திருக்கலாம் எனக் கொள்ள லாம். பாண்டியர் ஆட்சியின்போது தான் அதியனூர் அழகிய பாண்டிபுரம் என்ற பெயரை பெற்றிருக்கவேண்டும்.

தமிழ் மூதாட்டி ஒளவையார் குமரி மாவட்டத்திலுள்ள ஆரல்வாய்மொழியின் அருகில் ஒரு திருமணத்திற்கு ஏற்பாடு செய்தார் என்றும், அதற்கு மூவேந்தர்களான சேர, சோழ,

பாண்டியர்கள் அழைக்கப்பட்டிருந்தனர் என்றும் அவர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் தனித்தனியே பந்தல்கள் அமைத்தனர் என்றும், அதனால் அவ்விடம் முப்பந்தல் என்று அழைக்கப்படுகிறது என்றும் அவ்வட்டார மக்கள் கூறுகின்றனர். இன்று அங்கே பாழடைந்த நிலையில் மூன்று மண்டபங்களையும், அதன் நடுவே ஒரு சிறு கோயிலையும் நாம் காணலாம். இது ஔவையார் கோயிலாகத்தான் இருந்திருக்க வேண்டும். இங்குள்ள ஔவையாரின் திருவுருவச்சிலை இன்று முப்பந்தல் இசக்கியம்மன் கோயிலில் வைத்து பாதுகாக்கப்படுகிறது.

பாரி மகளிரைத் திருக்கோவலூர் மலையமான் மக்கட்கு மணமுடிக்கக் கருதிச் சேரசோழ பாண்டியரை ஔவையார் வரவழைத்தார் என்பது ஒரு செய்தி. சேரமான் வெண்சோழ் பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப்பெருவழுதி, சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய மூவேந்தரும் ஒருங்கிருக்கக் கண்டு அவர்களை ஔவையார் வாழ்த்தியதால் புறநானூற்றுப் பாடல் ஒன்று கூறுகின்றது. இதனால் தமிழ் மூவேந்தரும் ஔவையாரை பெரிதும் மதித்தனர் என்பது புலனாகிறது. குமரியம்மனை மூவேந்தர்களும் வணங்கியது போல ஔவையாரை தமிழ் வேந்தர் மூவரும் மதித்துப் போற்றினர் என அறிய முடிகிறது.

தாழக்குடியை அடுத்து ஔவையாரம்மன் கோயில் என்ற ஒரு ஊரே உள்ளது. இங்கு ஔவையாரின் திருவுருவச் சிலைக்குத் தினமும் வழிபாடு நடத்துகின்றனர். இந்த இடத்திலே தான் ஔவையார் தமது கடைசிக் காலத்தைக் கழித்திருக்க வேண்டும். சான்றோர் இறந்த இடத்திலே கோயில் எழுப்புவது தமிழர் மரபு அந்த அடிப்படையிலே தான் ஔவையாருக்கு இங்கே கோயில் எழுந்திருக்க வேண்டும். ஔவையார் ஒரு ஆடவனை திருமணம் செய்து கொண்டு இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருந்ததாக செய்தி இல்லை. அதற்கு மாறாக இல்வாழ்க்கையை வெறுத்து, தமிழ்ப்பணியிலும் அருட்பணியிலும் ஈடுபட ஆர்வங்கொண்டு, இறைவனை வேண்டி இளமை

யிலேயே முதுமை பெற்றார் என்பதாக ஒரு கதை வழங்கப் படுகிறது. இதனால் குமரியம்மனைப் போன்று ஔவையாரும் கன்னியாகவே வாழ்ந்தாள் என நாம் அறிய முடிகிறது. தமிழுக்காக தன் சொந்த இன்பத்தைத் துறந்தாள். இலக்கியப் பணிக்கும் நாட்டுப் பணிக்கும் அருட்பணிக்கும் தன் வாழ் நாளை ஈந்தாள். அதனால் தான் ஔவையார் தெய்வமாக மதிக்கப்படுகிறாள்.

நாஞ்சிநாட்டு மக்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஔவை யார் என்று பெயர் சூட்டுகின்றனர். இச்சிறப்பின்ன வேறு எங்குமே நாம் காணமுடியாது. அப்பகுதியில் ஔவை மூதாட்டியை நோன்பிருந்து வணங்குகின்ற வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறது. இதனை ''ஔவை நோன்பு' எனக் கூறுகின்றனர். பெண்கள் மட்டும் பங்குகொண்டு இந்த நோன்பு எடுக்கின்றனர். அந்நாட்களில் ஔவையாரம்மனுக்குக் கூழும், கொழுக்கட்டையும் படைத்து வணங்குவர் ஆண்கள் இந்த நோன்பிலே கலந்து கொள்ளக்கூடாது என்பது நியதி. செவ்வாய்க் கிழமைதான் ஔவையார் வணக்கத்துக்கு சிறந்த நாளாகக் கருதப்படுகிறது. அதிலும் குறிப்பாக ஆடிதிங்களில் வருகின்ற செவ்வாய்க் கிழமைகள் மிகச் சிறப்பானவை. அந் நாட்களில் மக்கள் கூட்டம் கூட்டமாக ஔவையாரம்மன் கோயில் சென்று வழிபாடு நடத்துகின்றனர்.

இவ்வாறு குமரியும், கிழவியும் குமரிமாவட்டத்தில் தெய்வங் களாக நின்று அருள்புரிகின்றனர். குமரியம்மனும், ஔவை யாரம்மனுக்கு கன்னியாகுமரி மாவட்டத்திற்கே உரிய தெய்வங் களாகும். தமிழகத்தில் வேறெங்குமே இவர்களது கோயில் களை நாம் காணமுடியாது.

இலஞ்சம் - ஒரு சமூகவியல் பார்வை

கருவை. பழனிசாமி
முசிறி

அணு ஆயுதப் போரின் கொடுமைக்கும், நிறவெறி, இனக் கலவரம், வன்முறை ஆகியவற்றுக்கும், வறுமை, பூகம்பம், புயல் வெள்ளம் ஆகிய இயற்கைத் தாக்குதல்களுக்கும் எதிராகக் குரல் எழுப்புவது சர்வதேச அரங்குகளில் வழக்கமாகி வரு கிறது. ஆனால், இலஞ்ச ஊழலுக்கு எதிராக இதுவரை சர்வ தேச அரங்குகளில் குரல் எழவில்லை. அதனால், அந்த அளவுக்கு இலஞ்சஊழல் இன்னும் தீவிரமடையவில்லை என்றோ, அதன் தாக்கம் உலக சமுதாயத்தை நெருக்கவில்லை என்றோ கருத லாமா என்று எண்ணிப் பார்க்க இடம் இருக்கிறது. பொதுவாக அது ஒரு சமூகக் கட்டாயம் என்றும், தவிர்க்கவே முடியாத சமூகக் கட்டாயம் என்றும், சமூகத் தீமை என்றும் கருதுவது வழக்கமாகி வருகிறது. அதன் காரணமாக, "நன்மை போல வரக்கூடிய தீமையும் உண்டு; தீமைபோல நிகழக்கூடிய நன்மை யும் உண்டு" என்று தத்துவ முலாம் பூசிக் கொள்வதைத் தள்ளிவிடுவதற்கில்லை.

ஈன்றாள் பசி காண்பானாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை -
இன்றியமையாச் சிறிப்பின ஆயினும்
குன்ற வருப விடல்...

இத்திருக்குறள்களுக்கு உரைகாண முயன்ற பரிமேலழகர் முரண் பாடான சிந்தனைகளையும் இணைத்து காட்டுகிறார்; அதன் மூலம் திருக்குறள் பொருண்மையின் பரிமாணம் சுட்டப்பட் டுள்ளதாகவே கருதலாம். அண்மையில் ஒரு கல்லூரி முதல்வர் ஒரு துணை வேந்தரின் தீவிர நடவடிக்கைகளை மகிழ்ந்து

போற்றிவிட்டு பின்வருமாறு ஆங்கிலத்தில் விமரிசித்தார் Efficiency and corruption go together துணை வேந்தரின் திறமையும், உழைப்பும் பளிச்சிட்டு மின்னும் ஒளியில் 'ஊழல்' இருண்டு கிடக்கிறது. அது மட்டுமல்லாமல், கல்லூரி அலுவலகத்தில் எல்லாமே காலதாமதமாக நடைபெறுகிறதே என்று ஒரு மாணவர்/பேராசிரியர் வருத்தப் பட்டபோது கல்லூரி முதல்வர் பின்வரும் குறிப்புரையை நகைச்சுவையாக வெளியிட்டு தன் திறமையின்மையைத் திரையிட்டு மறைத்துக் கொள்ள முயன்றார் என்றே கருத முடிகிறது;

> நீதித்துறை, கருவூலம், வருவாய்த்துறை, பதிவு அலுவலகம், மருத்துவமனை, மண்டலப் போக்குவரத்து அலுவலகம், வணிகவரி, காவல்துறை--முதலிய இடங்களில் ஊழியர் அலுவல் நேரத்திற்கு

முன்னரே வந்திருப்பதும், நேரம் கழித்து வீட்டிற்குச் செல்வதுமாக இருப்பது எதனால்? தினசரி வருமானம் இல்லாமல் வீட்டிற்குப் போனால் விசாரணைக்கு உள்ளாக வேண்டி வரும். ஆனால், கூடுதலாக உழைப்பதுபோல் பாவிப்பது முறைசாரா வரும்படியைக் கறப்பதற்கு வாய்ப்பான சூழலை எதிர்நோக்கியே கொள்கை அடிப்படையில் வேறுபட்டு எதிர்த்துத் தாக்க முடியாத எதிர்கட்சிகள் ஆளுங்கட்சியின் மதிப்பைக் குறைப்பதற்காகவே குறைகூறிப் பழிக்கப் பயன்படுத்திவரும் மிகக் கூர்மையான ஆயுதம் லஞ்ச ஊழல் புகார் பட்டியல் தயாரித்து வெளியிடுவது. இது அரசியல் கோணத்தில் ஆதாயம் தேடிக் கொள்ள உள்நோக்கமுள்ள ஒரு அணுகுமுறை. இது ஜனநாயகப் போர்வையில் கிடைக்கும் கருத்து சுதந்திரம் ஆகும்.

அரசு அலுவலகங்களில் தொடர்பு கொள்ளும் பொது மக்கள் அலுவலகப் பொறுப்பில் எதிர்பார்க்கும் சில நன்மைகளுக்கும் சலுகைகளுக்கும் பதில் உதவியாகப் பணமோ, பொருளோ வழங்கி மகிழ்வதும், மகிழ்விப்பதும் உண்டு. இத்தகைய பழக்கம் விடுதலைக்குப் பிறகு வேகமாகப் பெருகிவிட்டது. அரசு ஊழியர்களும் இத்தகைய பழக்கத்திற்கு அடிமையாகாமல் தப்பமுடிவதில்லை. வேலைத்திறனில் மேலதிகாரி

களின் எதிர்பார்ப்புக்கு ஈடு கொடுக்கமுடியாமல் மேலதிகாரி களின் சில்லரைத் தேவைகளை நிறைவேற்றித் தம்குறை பாட்டைச் சரிசெய்துக் கொள்வதில் தொடங்கி நாளடைவில் தங்களுடைய சில்லரைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய இணைக்கவணக்கமாக லஞ்சம் வேர் விட்டு வேரூன்றி விட்டது. வேறு ஊர்களுக்கு மாற்றிவிடக்கூடாது என்ற அச்சத் தால் அரும்பியது லஞ்சம்; தன் அலுவலகப் பொறுப்பில் செய்து விட்ட பிழைக்கான தண்டணையிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள மலர்ந்தது லஞ்சம், சௌகரியக் குறைவான தூரத்து ஊர்களுக்கு இடப்பெயர்வு செய்யாதிருக்குமாறு முன்கூட்டியே விழிப்புடன் இருக்க வளர்ந்தது லஞ்சம்; நாளடைவில் தான் விரும்பும் ஊருக்கு இடப்பெயர்வு கோரிப் பெறவும், தானாக வராத பதவி உயர்வினை வலியக் கைப்பற்றுவதற்கும் லஞ்சம் வழிவகுத்துக் கொடுத்தது.

இங்ஙனம், தண்டனை பெறாமல் தப்புவதற்கும், சௌ கரியம் குறையாமல் காத்துக் கொள்ளவும், புதிய மதிப்பைப் பெறவும் செய்த செலவு லஞ்சம். அந்தச் செலவை மீட்பதற்கு, ஈடு செய்து மகிழவும் துணைநிற்பதுதான் பெறும் லஞ்சம் ஆகிறது.

அச்சம் காரணமாகவும், ஆசையின் காரணமாகவும் மேலதி காரிகளுக்குக் கொடுத்த லஞ்சவகையின் தொடர்ச்சியாகத் தன் உடன் பணிபுரியும் ஒருவர் பயணப்படி கோருவதிலும், மருத்துவ விடுப்பு ஊதியம் பெறுவதிலும், வீடும் கட்டுக் கடன், கல்விக்கடன், பண்டிகை முன்பணம், மருத்துவச் செலவினை ஈடுகட்டும் பணப்பட்டியல், விடுமுறைக்கால பயணச் சலுகை கோரிடவும், ஈட்டிய விடுப்பு ஒப்பளிப்புப் பணம் பெறவும், என்று இன்ன பிறவகைகளில் உதவி புரியப் பணம் எதிர் பார்ப்பதும், தருவதும் லஞ்சத்தின் பரிமாணங்களாகும். இத் தகைய லஞ்ச வரவு மாமூலாகி விடுவதனால், லஞ்சம் கொடுக் காதவர்கள் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

இலஞ்சம் பெறுவதும் இல்லை, இலஞ்சம் தருவதும் இல்லை என்று வீராவேசமாக இருந்து வருகிற இலட்சியவாதிகள் கூட

மெல்ல மெல்ல இலஞ்ச வெள்ளப்பெருக்கின் அலை வீச்சில மோதுண்டு எப்போதும் அல்லது அவ்வப்போது என்று சொல்ல முடியாவிட்டாலும் எப்போதாவது இலஞ்சப் பேர்வழியாக மாறிவிடுவதுண்டு. அதன்மூலம் தான் இலட்சியவாதி என்ற பைத்தியக்காரப் பட்டத்தை நழுவவிட்டுக் காரியவாதியாகும் பேறு பெற்றவராகிறார். தனக்காக என்ற வெறி இல்லாவிட்டாலும், பிறருக்காக, குடும்பத்திற்காக, நண்பருக்காக, உறவினருக்காக என்ற திரையில் லஞ்சம் பரிணமிக்கிறது. இது குழந்தை நலனுக்குத்தான் பத்தியமிருக்கும் தாய் உள்ளம் என்றே கருதலாம்.

கொடுப்பவனும் நம்மவன்,
பெறுபவனும் நம்மவன்,
உள்ளவன் தருகிறான்,
இல்லாதவன் பெறுகிறான்.

1. வாடகை
2. வட்டி
3. ஊக்கத்தொகை
4. உதவித்தொகை
5. முன்பணம்
6. ஊதிய உயர்வு
7. வரிகள்
8. கடன் தவணை
9. இரவல் சரக்கு
10. அபராதம்
11. நன்கொடை
12. கள்ளப்பணம்
13. விற்பனைக் கழிவு
14. கடத்தல் சரக்கு
15. மொய்ப்பணம்
16. தட்சணை
17. தலறுதல் வட்டி
18. அன்பளிப்பு
19. பரிசுச்சீட்டு
20. சூது
21. வரதட்சணை
22. பனிக்கொடை
23. ஓய்வூதியம்
24. லாபம்
25. சேமிப்பு

இத்தகைய பொருளியல், சமுதாயவியல், அரசியல் குடும்பக் கோட்பாடுகளின் வெளிச்சத்தில் லஞ்சத்தின் பொருண்மைப் பரிமாணங்களை வரையறை செய்ய இடமுள்ளது. குப்பையும்

உரமாகலாம்; நல்ல விருந்துணவும் நஞ்சாகி உயிருக்குக் கேடா கலாம். கும்பகர்ணன் படைப்பு ஓர் அறத்தைக் காப்பதற்கு வேறொரு நல்லறத்தைக் கைவிட நேர்ந்ததும், கர்ணன் படைப்பு ஓர் அறத்தை வலுவாக்கி மற்றொரு நல்லறத்தை மெலியச் செய்ததும் தர்மசங்கடமான சூழல்கள் சோதிக்கப் பட்டதையே காட்டும் இதிகாசச் செயல்பாடுகள்.

அப்படித்தான் லஞ்ச ஊழல் ஒரு சமுதாயப் புலனாய்வில் நுட்பமான சோதனைக்குள்ளாகிவரும் காலகட்டம் இது. கற்புக்கூட பல்வேறு காலகட்டங்களில் மறுஆய்வுக்குட் படுத்தப் பட்டுப் பல்வேறு பரிமாணங்களில் புத்தொளிப்பெற்று வரு கிறது. மணமுறிவு, மறுமணம், கலப்பு மணம். விதவைத் திருமணம், என்று கற்புப் புதிய புதிய பரிமாணத்தால் விரி வாக்கம் பெற்றுவரும் பொதுக்கோட்பாடு.

ஊழல் என்பது பொதுவாக விரிந்த பொருண்மை உள்ளது; முன அனுமதி பெறாமல் காலதாமதமாக அலுவலகத்திற்குச் செல்வதும் ஊழல்; காலம் தாழ்த்திக் கடமைகளை அரையும், குறையுமாக நிறைவு செய்யாமல் ஒதுக்கிவைப்பதும் ஊழல். நடுவுநிலைமை பிறழ்வதும் ஊழல்; விதி முறைகளை மீறிச் செய்வதும்; விதிமுறைகளைப் பாராமுகமாகத் தட்டிக்கழிப்பதும் திட்டமிட்டே விருப்பு வெறுப்புக்கு இடம் தருவதும் ஊழலின் பரிமாணங்களே ஆகும்; பணம் எதிர்பார்ப்பதன் மூலம், தன் பணிப்பொறுப்பில் உறுதியின்மையால் நெகிழ்வதும், பணம் பெற்றுக் கொண்டு, பணிப் பொறுப்பேற்பதும் லஞ்ச நடவடிக் கைகளாகும். தன் பணி வரம்பிற்குட்பட்ட பொறுப்பில் இத்தகு நடவடிக்கைகளுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ துணை யாவதும் ஊழல்களாகும். சட்ட நடவடிக்கையின் மூலம் லஞ்ச நடவடிக்கைகளைக் கண்காணிப்பதும், தடுப்பதும். தண்டிப்ப தும் ஆக பலவகையில் அதன் தீவிர வெளிப்பாட்டை ஒடுக்கி வர முடிகிறது; இருந்தும் மேலும் விழிப்புத் தேவைப்படுகிறது லஞ்ச ஒழிப்பு முடுக்கிவிடப்படுவதும், தளர்த்தி விடுவதுமாக உள்ள தாராள மாறுகால அணுகுமுறை அதன் எதிர்காலம் குறித்துப் போதிய பன்முகப்பட்ட ஆய்வுத் தேவையை வலியுறுத்துகிறது.

அரசு மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர் நோயாளி ஒருவருக்கு தனிக்கவனம் செலுத்தவும் கூடுதலாக மருத்துவ உதவி புரியவும் தனித்தொகை பெறுவது இலஞ்சம் பெற்றதாகுமா? அந்த மருத்துவருடன் பணியாற்றும் ஊழியர்களும் தம்தம் கடமையைச் செம்மையாகவும், நிறைவாகவும் செய்து உதவும் பொருட்டு தனித்தொகை பெறுவது இலஞ்சம பெற்றதாகுமா? மருத்துவருக்கோ பிற ஊழியர்களுக்கோ பணம் தரவில்லை என்றால் முகம் கோணாமல், முகம் சுளிக்காமல் உதவுவார்களா? விரைவாக மருத்துவப் பலன் கிடைக்காமல் போகுமா?

ஒரு பொது இடத்தில் சிறுகுழப்பம், சிறுகலவரம், விரைந்து ஒரு உணவு விடுதி உரிமையாளரையும், ஊழியர்களையும் காயமுண்டாக்கி அடித்ததோடு பணப்பெட்டியைச் சூறையாடி மேஜை நாற்காலிகளையும் சேதப்படுத்தியதாக ஒரு குழுவினர்மீது வழக்குப் பதிவாகிறது. வழக்கை பலப்படுத்தி நடத்தி மீண்டும் இத்தகைய தாக்குதல் நடத்தாதிருக்கும் வண்ணமும், ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்யவும், பாதிக்கப்பட்டவர் மேலும், மேலும் செலவுக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது குறிப்பாக மருத்துவர் தரும் சான்றிதழை முன்வைத்துத் தான் வழக்கு உறுதிப்பட்டு நட்டத் தொகை ஈட்டுக்கோரிக்கை நிறைவேறும். மருத்துவருக்கு தரக்கூடிய பணத்தின் அளவுக்கு ஏற்ப சான்றிதழ் வன்மை மென்மை பெறுவதாயின் மருத்துவர் பெறும் தொகை லஞ்சம்தானே ? காவல் துறையினருக்கும் கணிசமான தொகைக் கிடைக்கலாம். தாக்கிய குழுவினர் தாராளமாகச் செலவு மேற்கொண்டு மருத்துவரையும், காவல் துறையினரையும் கூடுதலாக கவனிக்கிறார்கள் என்பது இன்றைய நடப்பாயிருக்கிறது. அதன் காரணமாக வழக்கே பொய் வழக்காகித் தள்ளப்படும் அளவிற்கு மெலிவாகிப் போகலாம். மருத்துவர் பெறும் லஞ்சம் உடல் நோய் தீர்ப்பதற்குரியதானால் அது ‘மரியாதை’யாகிறது. மருத்துவர் பெறும் லஞ்சம் நீதியைச் சாகடித்துக் குழிதோண்டிப் புதைப்பதற்கென்றால், அது சமூக அநீதி என்றும் தீராத நோய் வேரூன்றிப் பரவி நிலைக்கப் பயன்படும் ‘நச்சு வாயு’வாகிறது. இத்தகைய லஞ்சப் பரிமாணம்தான் சமுதாயவியல் பார்வையாகிறது.

தமிழரின் அணிகலன்கள்

பாகை அழகிரிசாமி,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

பொதுவாக அணிகலன்கள் பல்வேறு வகையான அமைப்புகளில் காணப்படுகின்றன. பழங்காலத்தில் அணிகலன்களை இருபாலாரும் அணிந்தே வந்துள்ளனர்: ஒரு சில அணிகலன்கள் பால்வேறுபாடுடையவையாக விளங்கின இவை ஒரே அமைப்பில் இருந்தாலும் ஆண் பெண் என்ற இருபாலாருக்கும் தனித்தனியே அமைக்கப்பட்டிருந்தன. அணிகலன்கள் அன்றாட வாழ்க்கைக்குத் தனியாகவும், நாடகம், தெருகூத்து போன்றவற்றில் பங்கு பெறும் பாத்திரங்களுக்கு ஏற்ற முறையிலும் அமைக்கப் பட்டிருந்தன.

அணிகலன்கள் உடல்வாகுக்கு ஏற்ப, உடலை ஒட்டிய வாறும் உடலின் மேடுபள்ளங்களுக்கு ஏற்றவாறு அவை அணியப்படும் பகுதிக்கேற்பவும் அமைக்கப்பட்டிருந்தன. மாலையானது கழுத்திலிருந்து தொங்கும் தன்மை உடையதால் அவற்றை இயல்பாகவே அமைத்துள்ளனர்.

அணிகலன் இலக்கணம்

சவடி, சரப்பளிகளின் வளைவான அமைதிக்கேற்றவாறு மாலையை 'அகட்டி, அணிகளின் வெளிப்புறத்தில் அமையச் செய்து, எஞ்சிய 'நுனிப்பகுதியை ஒடுக்கி, அதன் இயல்பான தொங்கும் கோலத்தில் அமைத்தல் இலக்கணமாம் என்பர். மேலும் அணிகலன்கள் பார்வைக்கு அந்தந்த உறுப்புகளுக்கு. ஏற்றவாறு வளைந்தமைந்து அழகூட்டுவதோடு சுயத்தன்மையையும் உணர்த்துகிறது என்பார்.

அணிகலன் வகைப்பாடு

அணிகலன்கள் உறுப்புகளுக்கு ஏற்பவும் அவை அமைந்த தன்மையையும் கொண்டு பின்வருமாறு வகைப்படுத்துவர்.

தலை அணிகள்.
காதணிகள்.
கழுத்தணிகள்.
மார்பணிகள்.
கை அணிகள்.
கைவிரல் அணிகள்.
இடை அணிகள்.
கால் அணிகள்.

தலை அணிகள்

மனித உடல் உறுப்புகளுக்கும் அவை அணியும் வடிவங்களுக்கும் ஏற்ற முறையில் அணிகலன்கள் அமைக்கப்படுகின்றன. தலையில் அணியப்படும் அணிகலன்கள் ஆண்-பெண் இரு பாலாரின் தன்மைக்கு ஏற்பவும் தலைக்கேசத்திற்கு ஏற்பவும் அழகுடன் அமைக்கப்படுகின்றன. மக்கள், தங்களை அலங்கரித்துக் கொண்டு, தங்களின் இயற்கை அழகுடன் அணிகளையும் அணிந்து கொண்டு, அழகுணர்ச்சியை வெளிப்படுத்திக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் உடையவர்களாவர். எனவே தலை, நெற்றி, காது, கழுத்து, மார்பு, தோள், இடுப்பு, கால், விரல்கள் போன்ற பகுதிகளில் அணிகலன்களை, பாலுணர்வுக்கு ஏற்ப தனித்தனியே அணிந்தனர். அணிகலன்களைச் சூட்டினாலும், தலைக் கோலங்களைப் புனைந்தாலும் உடலின் இயற்கையழகு மறைக்கப்படாமலும், பாதிக்கப்படாமலும் இருத்தல் வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினர்.

முகத்தின் உயர-அகல அளவுகளுக்கு பொலிவூட்டும் வகையில் தலையில் அணிகள் அணிவிக்கப்படுகின்றன. தலை முடியை முறுக்கியும், சுருட்டியும், அள்ளிச் செருகியும் கொண்டையிட்டும் அவற்றில் பூச்சரங்கள், முத்து மாலைகள், மணிமாலைகள், அழகூட்டும் வகையில் அணிகலன்கள் அணியப்

படுகின்றன. தலை அணிகலன்களில் அரசர், அரசியை மக்களி லிருந்து வேறுபடுத்திக் க்காட்ட 'கிரீடம்' பேரரசனையும், 'தம்மில்லம்' என்பது அரசியையும் சிறப்பித்தன. சமூகத்தில் தலை அணிகள் சமயம், மதம் பற்றிய வேறுபாட்டை வெளிப் படுத்தும் வண்ணம் அமைந்திருந்தன.

தலைக் கோல வகைகள்

பல்வேறு அலங்காரத்துடனும் இயற்கை செயற்கை முடி களைச் சேர்த்துத் தலைக்கு அணியாகக் கொண்டு அலங்கரிப்பது 'தலைக்கோலம்' எனப்படும். பொதுவாக 'மௌலி', 'முடி', 'மகுடம்' என அழைக்கப்படுகின்றன. 'மகுடம்' தலைக்கோல வகையில் அமைவதால் தலை அணிகலன்களாகக் கருதப்படுகிறது இவை பல்வேறு வகைப்படினும் சிறப்பான தலை அணிகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

ஜடாமகுடம், ஜடாபாரம், ஜடாமண்டலம், ஜடாபந்தம், விரிசடை, சுடர்முடி, கேசபந்தம், சிரஸ்திரகம், குந்தளம், அளகசூடம், தம்மில்லம் (தமிழம்), கிரீடம் மகுடம், கரண்ட மகுடம், தொய்யகம், பூரப்பாளை, புல்லகம், சூளாமணி ஆகியவைகளாகும்.

நெற்றி அணிகள்

நெற்றியில் அணிவிக்கப்படும் பட்டிகைகளுக்கு பட்டம் என்று பெயர். இது நெற்றியின் மேல் மட்டத்தில் தனித்தோ மகுடங்களோடு இணைத்தோ பட்டையாக அமைக்கப்படும் அணிகலனாகும். இவை தலைக் கோலங்களோடு சேர்ந்து அமைந்திருக்கும்.

காதணிகள்

காதுகளில் அணியப்படும் அணிகள். இவற்றில் குதம்பையும் குழையும் மிகவும் சிறப்பானதாகும். குதம்பை என்பது பெண் கள் தங்கள் காதின் துளையில் நுழைத்து அணியும் பனையோலைச் சுருள்தான் குதம்பை எனப்படுகிறது. பின்னாளில் தங்கம், செம்புகளினாலான ஓலை வடிவ அணி

களையும், பிற அணிகலன்களையும் அணிந்தனர். இதனையே ‘பத்ரகுண்டலம்’ என்பர்.

குழை என்பது குண்டலம் எனப்படும். இது மூன்று வகைகளில் அவற்றின் அமைப்பிற்கு ஏற்ப பெயர் பெறுகின்றன. மகர குண்டலம், சிம்ம குண்டலம், வியாழ குண்டலம் எனப்படும். ‘கடிப்பு’ என்ற வட்ட வடிவமாகவும், தட்டையாகவும், இரத்தின கற்கள் பதிக்கப்பெற்று விளங்கும், இதுவும் ஒருவகை காதணியாகும். மற்றும் ‘தாடங்கள்’ என்ற ஒருவகை தோடு இரத்தினகற்கள் பதிக்கப்பெற்று வட்டவடிவமாக காணப்படுகிறது. இதுவும் காதணி அமைப்பேயாகும். கடுக்கன், தோடு, சவுடி, தண்டட்டி, குணுக்கு, ஒன்னப்பூ, முருகு, பூடி, குருட்டுத தட்டு, வளையம், வாளி என்றும் காதணிகள் அழைக்கப்படுகின்றன.

கழுத்தணிகள்

அணிகலன்களில் முக்கியமானதும், அழகூட்டுவதும், காண்பவரைகவரும் தன்மையுடையதும் கழுத்தணிகளாகும். இவை இருபாலாருக்கும் தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளன. சிறியவர் பெரியவர்களுக்கென்று தனித்தனியாகவும் அமைந்துள்ளன.

பெண்களுக்கு: கண்டிகை, சவடி, சரப்பளி, மணியாரம், முத்தாரம், சங்கிலி, கண்டசரம், அட்டிகை, பதக்கம், உட்கழுத்துச்சங்கிலி, மணிக்கோவை, பவுன்மாலை, மகர கண்டிகை, மண்டைத்தாலி, கருகமணி, வடம், ஆண்களுக்கு; வீரச்சங்கிலி, புலிப்பல்தாலி, சிறுவர், சிறுமியருக்கு: தாயத்து, அன்னப்பொட்டு, குண்டு, சங்கிலி.

கை அணிகள்

கையில் மேற்பகுதியின் நடுவிடத்தில் அணியப்படும் அணியை ‘தோள்வளை’ என்பர். இது மேற்புயத்தின் மையத்தில் கத்தரிபோல் ஒன்றை ஒன்று குறுக்கிட்டுச் செல்லும் முத்துவடம் இதையே வங்கியென்றும் அழைப்பர். இவை அமைந்த அமைப்பிற்கு ஏற்ப மகரபூரி, பத்ரபூரி என்றும் அழைக்கப்படு

கிறது. 'கடக வளை' என்பது முழங்கையில் அணியப்படுபவை, ஆண் பெண் இருபாலாருக்கும் பொதுவானது. கைவளை என்பது மணிக்கட்டுக்கு அருகில் அணியப்படுகிறது. இவற்றை சூடகம், செம்பொற்கைவளை, நவமணிவளை, சங்குவளை, பவளவளை எனவகைப்படுத்துவர். ஆனால் பொதுப்பெயராக 'கடகம்' அல்லது 'வளை' என்றுதான் அழைக்கப்படுகிறது 'பரியகம்' என்பது சூடகத்திலிருந்து சங்கிலி போல் மணிச்சரமாய் அனைத்துவிரல் மோதிரத்துடன் இணைந்திருக்கும், இதனை நாட்டியப் பெண்கள் அணிந்திருப்பார்கள். மேலும் இதனை 'கைச்சரி' என்று அழைப்பர். ஆண்கள் வீரச்சங்கிலி, காப்பு, திருகுகாப்பு, வெண்டயம் முதலியவற்றை வீரத்திற்கு அடையாளமாக அணிவர்.

கைவிரல் அணிகள்

வேலைப்பாடுடன் அமைந்ததும், கலை நுணுக்கம் மிக்கதுமாகிய கைவிரல் அணிகள் பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றன.

இடை அணிகள்

ஆண்-பெண் இடையில் பல அழகிய அணிகலன்கள் சூட்டப்படுகின்றன. இவை இடையழகையும், அரையிலணிந்திருக்கும் ஆடையை இறுகப் பிணைத்தும் கவர்ச்சியாகவும் பல்வேறு தோற்றங்களில் அமைந்திருக்கினறன. இடை அணிகளில் மேகலை, அரைஞான், அரைப்பட்டிகை போன்றவை சிறப்பு வாய்ந்தவையாகத் திகழ்ந்தன. இவை மூன்றையும் அரைஞான் என்றே அழைத்தனர். மேகலையை ஒட்டியாணம் என்பர் இது பெண்களுக்குரிய ஒன்று. அரைப்பட்டிகை ஆண்களுக்குரிய ஒன்று.

கால் அணிகள்

வீரக்கழல், பாடகம் என்று அழைக்கப்படுகிறது வீரத்திற்கு அடையாளமாக வீரர்களின் கெண்டைக்காலில் கட்டப்படும் சிறு மணிகளால் ஆனது இதுவே 'வீரக்கழல்' எனப்படும். தண்டைகளை ஒன்றன் மீது ஒன்றாகச் சேர்த்து அமைத்துதான்

'பாடகம்' என்றும் 'பாதகடகம்' என்றும் கூறுவர். மேலும் பாம்புபோல காலைச் சுற்றி அமைக்கப்படும் அணிக்கு 'புஜங்க கடகம்' என்று பெயர்.

பாத அணிகள்

இவை ஒலியை எழுப்பி பிறரை திசை திருப்பும் தன்மை யுடையதாகும். இவற்றில் சிலம்பு, காற்சதங்கை, காற்சவடி, பாதசாலம், கால்சங்கிலி முதலியவை சிறப்புமிக்கவை.

கால்விரல் அணிகள்

ஒரு பெண் வருவதற்குமுன் அவளின் வருகையை தெரிவிப் பவையாகும். இவ்வணிகளில் மிகவும் சிறப்பானவை மிஞ்சி, பீலி, காலாழி, மகரவாய், தடை. (மெட்டி) முதலியவைகளாகும்.

சிறுமியருக்கு

பாதசரம், தண்டை, கொலுசு, அரைமூடி போன்றவை சிறுமியர் அணிவதாகும்.

சிறுவர்க்கு

அருணாக்கயிறு, நாய்க்காசு, தாயத்து, அன்னப்பொட்டு, குண்டு போன்ற அணிகலன்கள் சிறுவர்க்கு உரியதாகும்.

தமிழரின் அணிகலன்கள் என்னும் இக்கட்டுரை, பழங்கால தமிழர்களின் சமுதாயத்தில் அவர்களிடையே காணப்பட்ட அணிகலன்கள் பற்றிய செய்திகளையும், அவை அமைந்த அமைப்புகளையும்; தமிழரின் கலை நுணுக்கத்தையும், செல்வ வளத்தையும் விளக்க முயன்றுள்ளது.

துணை நூல்கள்

1) கணபதி ஸ்தபதி. வை., சிற்பக்கலை
2) கஸ்தூரி காந்தி, உ., நாட்டார் வாழ்வியலும்-பண்பாடும்.
3) கழகத் தமிழ் அகராதி.

நாட்டுப்புறக் கதைகள் காட்டும் குடும்ப உறவுகள்

மு. பாண்டி
புதுவைப் பல்கலைக்கழகம்.

முன்னுரை

இலக்கியம் தான் தோன்றுங் காலத்திற்கு முற்பட்ட சமுதாயத்தின் நிகழ்ந்தவைகளையும் தான் தோன்றுங் காலத்துச் சமுதாய நிகழ்வுகளையும் தன்னகத்தே பதித்துக் கொண்டு விளங்கும் ஓர் அற்புதச் சாதனம். அதிலும் நாட்டுப்புற இலக்கியங்கள் இந்த வகைகளுள் சிறப்பான ஒன்றாகும். இங்கு மதுரை மாவட்டத் திருப்புவனம் வட்டாரத்தில் சேகரிக்கப்பட்ட நாட்டுப்புறக் கதைகளின், சமுதாய நிகழ்வுகளில் முக்கிய அங்கம் வகிக்கும் குடும்ப உறவுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை இக்கட்டுரை வெளிக்காட்ட முயல்கிறது.

குடும்பம்

குடும்பம், கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என்ற இரண்டு நிலையில் அமைந்துள்ளன. ஒரே இரத்த உறவுடைய (தாய், தந்தை, சகோதர, சகோதரிகள் மற்றும் அவர்களைச் சார்ந்த) பலர் ஒன்றாகச் சேர்ந்து வாழும் குடும்பம் கூட்டுக் குடும்பம் என்றும், கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர்களில் ஒரு பகுதியினரான கணவன்-மனைவி தன்து குழந்தைகளுடன் கூட்டுக் குடும்பத்தினின்றும் பிரிந்து தனியாக வாழும் குடும்பம் தனிக் குடும்பம் என்றும் கூறலாம்.

இவ்விரண்டு குடும்பங்களில், தனிக்குடும்பத்தில் உறவு நிலையில் பெரிய நிகழ்வுகள் ஏதும் நிகழ்ந்ததாகக் கதைகளில்

செய்திகள் காணப்படவில்லை. பல உறவு நிலைகளை ஒட்டு மொத்தமாகக் கொண்ட கூட்டுக் குடும்ப உறவுகளில் ஏற்படும் பிரச்சினைகளே கதைகளில் அதிகம் வெளிப்படுகின்றன. மேலும் பலர் ஒன்றாகச் சேர்ந்து வாழும் கூட்டுக் குடும்பத்தில் பிரச் சினைகள் ஏற்பட்டுக் குடும்பம் சிதைவுறும் நிலையிலேயே தனிக்குடும்பம் உருவாகும் சூழ்நிலை ஏற்படுகிறது.

இக்குடும்பத் தொடர்புகளை இரத்த உறவுடைய (Blood Relation) தொடர்புகள், திருமண உறவுடைய (Marriage Relation) தொடர்புகள் என்று பொது நிலையில் இரண்டாகப் பிரிக்கலாம். சிறப்பு நிலையில் ஆண்களுடன் ஆண்களுக்குள்ள தொடர்பு (Male to Male), பெண்களுடன் பெண்களுக்குள்ள தொடர்பு (Female to Female), ஆண், பெண் இருவருக் கிடையே (Male to Female) உள்ள தொடர்பு என்றும் வகைப் படுத்தலாம்.

ஆண்களுடன் ஆண்களுக்குள்ள தொடர்பு என்ற நிலையில் தந்தை-மகன். அண்ணன், தம்பி போன்றவைகளையும் பெண் களுடன்-பெண்களுக்குள்ள தொடர்பு என்ற நிலையில் தாய்-மகள். மாமியார்-மருமகள், அண்ணி-நாத்தனார். சக்களத்தி, மாற்றாந்தாய் போன்றவைகளும் ஆண்-பெண் உறவு என்னும் நிலையில் கணவன்-மனைவி, சகோதர-சகோதரிகள், மாமனார்-மருமகள், அண்ணி-கொழுந்தன் நிலைகளும்தான் நாட்டுப்புறக் கதைகளில் காணப்படுகின்றன. இவ்வுறவு நிலைகளில் வெளிப் படும் பிரச்சினைகளை வகைப்படுத்திக் கீழே காணலாம்.

ஆண்கள் உறவு நிலை

அண்ணன்-தம்பி

நாட்டுப்புறக் கதைகளில் அண்ணன், தம்பி உறவு பெரும் பான்மை பகைமை உறவாகவே காணப்படுகிறது. இவர்கள் உறவில் பகைமை ஏற்படுவதற்கு அண்ணனே பெரிதும் காரண மாக இருக்கிறான். மூத்தவன் என்பதால் தம்பிக்குச்சேர வேண்டிய சொத்தைத் தான் அபகரித்துக்கொள்ள நினைப்பதும், ஏமாற்றுவதும், தம்பியின் மனைவியை அடைய நினைப்பதும்,

கதைகளில் அதிகம் வெளிப்படுகின்றன. மாறாக தம்பியானவன் அண்ணனின் சொத்தை அபகரிக்க நினைப்பதாகவோ, அண்ணியை அடைய முயற்சிப்பதாகவோ செய்திகள் பெரும் பாலும் காணப்படவில்லை. அண்ணன் மனைவியை தம்பி யானவன் உயர்நிலையில் வைத்து மதிக்கும் போக்கையே நாட்டுப்புறக் கதைகளில் காணமுடிகிறது. தம்பி அண்ணி யுடன் கள்ள உறவு கொண்டதாக வெளிப்படும் ஓரிரு கதை களில் கூட அண்ணியே அவ்வுறவுக்குத் தூண்டுதலாக அமைந் துள்ள நிலை வெளிப்படுகின்றது.

தந்தை-மகன்

நாட்டுப்புறக் கதைகளில் தந்தை, மகன் உறவு நிலையில் சுமுகமான தன்மையே காணப்படுகிறது. தந்தை தனது வயதான காலத்தில், தனக்கு மகன் உணவு கொடுக்காத வேளைகளில் சிறு பிரச்சினைகளை எழுப்புவதாகச் செய்திகள் உள்ளனவே தவிர மற்ற நிலையில் இவர்கள் உறவில் பெரிய பிரச்சினைகள் உள்ளதாகக் கதைகளில் காணப்படவில்லை காரணம் தந்தை தனக்குப் பின் தனது சொத்துக்கள் தன் மகனுக்கே போய்ச்சேர வேண்டும் என்று நினைப்பதால் பிரச் சினைகள் இல்லை எனலாம். ஆனால் தந்தையின் சொத்தினை சமமாகக் கூறு போடுவதில் சகோதரர்களிடையே பிரச்சினைகள் எழுந்திருப்பதை நாம் காணலாம்.

பெண்கள் உறவு நிலை

பெண்கள் உறவு நிலையில் மாமியார்-மருமகள், அண்ணி-நாத்தனார், சகோதரிகள், மாற்றாந்தாய் போன்ற உறவு நிலை களே கதைகளில் வெளிப்படுகின்றன. இதற்குத் திருமண உறவுநிலை அடிப்படையாக அமைந்துள்ளதைக் கொள்ளலாம். இரத்த உறவுடைய பெண்களிடையே காணும் தாய்-மகள், சகோதரிகள் போன்ற உறவுநிலையில் பிரச்சினைகள் இருப்ப தாகக் கதைகளின் வழி செய்திகள் இல்லை. தாய்-மகள் உறவில் தாய், மகளுக்கு நிறைய உதவிகளைச் செய்தலையே கதைகள் காட்டுகின்றன.

மாமியார்-மருமகள்

மாமியார், மருமகள் பிரச்சினைகளைக் கருவாகக் கொண்ட கதைகளே அதிகம் காணப்படுகின்றன. மருமகள் மீது வெறுப்புக் கொண்ட மாமியார், மருமகளுக்குக் கேழ்வரகுக் கூழாக ஊற்றுவதும், அதிகமான வேலைப்பளுவைக் கொடுப்பதும், மருமகள் தனக்குப் பணிந்தே நடக்க வேண்டுமென்று எண்ணுவதும், மருமகள் மாமியாருக்கு வயிற்றுக்குப் போதுமான உணவு கொடுக்காதது, மாமியாருக்குப் பணிந்து நடக்க மறுப்பது, மாமியாரைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவர நினைப்பது போன்ற செய்திகளும் கதைகளில் வெளிப்படுகின்றன.

மேற்கண்ட செய்திகள் வாயிலாக மாமியார், மருமகள் இருவரும் போராட்ட உறவுடையவர்களாக இருப்பதைக் காணலாம். இங்கு திருமண உறவின் காரணமாக குடும்பத்தின் தலைவி என்ற எண்ணத்தில் மருமகள் தனக்குப் பணிந்து நடக்க வேண்டுமென்றும், குடும்ப வருமானம் குறிப்பாக மகனின் வருமானம் தன்வசமே இருக்க வேண்டுமென்றும், குடும்பத்தில் தனது ஆளுமையே அதிகமிருக்க வேண்டுமென்றும் மாமியார் எண்ணுகிறாள். மருமகள் ஆதிக்கமிருந்தால் மகன், தன்மீது காட்டும அன்பு குறைந்து நாளாவட்டத்தில் தன்னை விட்டு நீங்கி விடுவான் என்ற அச்சத்தினாலேயே மருமகள் மீது ஆதிக்கம் செலுத்தி தன் ஆளுகைக்குள் வைத்துக்கொள்ள மாமியார் முயலுகிறாள்.

மருமகளும் தன் மீதும் தன் குடும்பத்தின் மீதும் மாமியார் ஆதிக்கம் செலுத்துவதால் தனக்குள்ள உரிமை பாதிக்கக் கூடும். தன் கணவன் வருமானம் குடும்பத்திற்கே சென்றால் எதிர் காலத்தில் தனது குழந்தைகள் பாதிக்கப்படுவார்கள். ஆகையால் கணவனின் வருமானம் தனக்கும் தனது குழந்தைகளுக்கும் மட்டுமே சேரவேண்டும் என்றும் எண்ணுகிறாள். இவ் வருவாய்ப் பிரச்சினையே கூட்டுக் குடும்பத்தில் சிதைவு ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது. இச்சிதைவே தனிக்குடும்பம் தோன்ற அடிப்படையாகவுள்ளது என்றும் கூறலாம்.

அண்ணி-நாத்தனார்

இவர்கள் உறவும் திருமண உறவை ஒட்டியே ஏற்படு வதால் இவ்வுறவு நிலையிலும் பகை உணர்வே அதிகம் காணப் படுகின்றது இவ்வுறவில் பகை ஏற்படுவதற்குப் பொருளா தாரமே பெரிதும் காரணமாக அமைந்துள்ளதைக் கதைகளில் காணமுடிகிறது. அண்ணியானவள் தன் கணவன் தனது வீட்டி லுள்ள பணத்தையோ பொருளையோ நாத்தனாளுக்குக் கொடுத்து விடுவான் என்று நினைப்பதும், கணவன் தன் சகோதரிகள் மீது அன்பு செலுத்துவதும் இவர்களுக்குப் பிடிப்ப தில்லை. திருமணமாகாத நாத்தனாள் வீட்டில் இருந்தால் அவளின் திருமணத்திற்காக தனது கணவனான அண்ணனின் வருமானத்திலிருந்து செய்யவிருக்கும் செலவுகள், சீர் வரிசைகள் போன்றவற்றை நினைத்து அண்ணியானவள் நாத்தனாள் மீது வெறுப்புக் கொள்கிறாள்.

அண்ணி-நாத்தனார் உறவு நிலையில் அண்ணியின் செயல் களே மோசமான நிலையில் வெளிப்படுகிறது. தன் அண்ணன் மீது கொண்ட பாசம் மற்றும் மரியாதை காரணமாக அண்ணியின் செயல்களை நாத்தனாள் பொறுத்துக் கொள்ளும் தன்மையே காணப்படுகிறது. இப்போக்கையே நல்லதங்காள் கதையிலும் காணலாம்.

மாற்றாந்தாய்-மகள்

மாற்றாந்தாய்-மகள் உறவு நிலையில் மாற்றாந்தாயானவள் மகளைக் கொடுமைப்படுத்துவதாகக் காணப்படுகிறது. இங்கு மகள் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாக் ; கதைகளில் காணப்படவில்லை. இரண்டாவது மனைவி மூத்தவளின் மகளைக் கொடுமைப்படுத்துவது, கணவன் தன் மகள் மீது அவளைப்பெற்ற அம்மா இல்லாத நிலையில் மிகுந்த பாசம் செலுத்துவான். கணவனின் சொத்துக்கள் தனக்குப் பிறந்த குழந்தைகளுக்கே சேரவேண்டும், தன்மீதும், தன் குழந்தைகள் மீதும் செலுத்தும் அன்பு குறைந்துவிடும் என்று நினைப்பதும் மூத்தவள் மகள் திருமணம், வரதட்சணை போன்றவைகளும் இவர்கள் உறவுநிலையில் பிரச்சினைகளை விளைவிக்கின்றன.

இரத்த உறவுடையவர்களான சகோதர சகோதரிகளிடையே ஏற்படும் பிரச்சினைகளுக்குப் பெரிதும் காரணமாக இருப்பது பொருளாதார நிலையே. அண்ணன் தம்பிக்குச் சொத்து கொடுக்க மறுப்பதும் தம்பி தனக்குரிய சொத்துக்களைப் பெற முயற்சிப்பதும், பெண்கள் பிறந்த வீட்டிலிருந்து சீர்வரிசை, பொருட்கள் போன்ற சொத்துக்களைப் பெற்றுச் செல்லப் போராடுவதும் போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம்.

திருமண உறவு என்ற நிலையில் ஒருவர் மீது ஒருவர் கொண்ட பொறாமை, குடும்பத்தில் தனக்கிருக்கும் ஆளுமை, உரிமை, தனக்குரியவர்கள் மீது மட்டுமே அன்பு செலுத்த வேண்டும் என்ற உளவியல் தன்மை போன்றவைகளே இங்கு பிரச்சினைகளுக்குக் காரணமாகக் காணப்படுகின்றன.

கதைகளில் காணலாகும் உறவு நிலைகள் பற்றிய செய்திகளின் வாயிலாக வட்டாரக் கூறுகள், நிகழ்ச்சிக்கான களம் போன்ற நிலைகளில் சில தனித்தன்மைகள் காணப்பட்டாலும் கதையமைப்புகளும் கதை மாந்தர்களிடையே எழும் சிக்கல்களும் எல்லாப் பகுதி நாட்டுப்புறக் கதைகளுக்கும் உரியதாகும்.

முடிவுரை

நாட்டுப்புறக் கதைகளில் காணலாகும் உறவு நிலைகளை ரத்த உறவுடைய உறவுநிலை, திருமண உறவுடைய உறவு நிலை என்ற இரண்டு நிலைகளில் அடக்கலாம்.

கூட்டுக் குடும்ப அமைப்பில் உறவு நிலைகளில் பொருளாதார நிலைகளை அடிப்படையாகக் கொண்டு எழும் பிரச்சினைகள், சண்டை சச்சரவுகள் கூட்டுக் குடும்பச் சிதைவுக்குக் காரணமாக இருக்கின்றன. தனிக்குடும்பங்களாகச் சிதைவுறத் தூண்டுகின்றன.

பெரும்பாலான நாட்டுப்புறக் கதைகள் இத்தகைய குடும்பச் சிதைவுகளுக்கான நிகழ்வுகளை மையமாகக் கொண்டு அமைந்திருப்பதால், கூட்டுக் குடும்ப வாழ்விலிருந்து தனிக்குடும்ப வாழ்க்கை முறைக்குச் சமூகம் நகர்கின்ற காலக்கட்டத்தில் இந்த நாட்டுப்புறக் கதைகள் தோன்றியிருக்கலாம் என ஐயுற வாய்ப்பு இருக்கிறது.

ஆனந்த விகடனின் அறிமுகக் கூறுகள்

பி. பார்வதி
பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்

இதழ்கள் பல வெளிவருகின்ற இக்காலத்தில் 50 ஆண்டுகளைக் கடந்துவிட்ட, பொன்விழா கண்ட ஆனந்தவிகடன் தன் வாசகர்களை இழந்து விடாமல் இருக்க சில உத்திகளை அவ்வப்போது கையாண்டு வருகிறது. இதழ்கள் பொதுவாக; கட்டுரை, கதை, செய்தி, விமர்சனம் ஆகியவற்றைத் தருகின்றன.இதழின் தன்மைக்கு ஏற்ப அவ்விதழில் வரும் கதை, கட்டுரை, செய்தி போன்றவற்றின் எண்ணிக்கை மாறுபடும். எண்ணிக்கையின் அளவிற்கு ஏற்ப வெளியிடும் உத்திகளும் வேறுபடும். 1983 ஆம் ஆண்டு ஆனந்த விகடனும் கதைகளை, கட்டுரைகளை,செய்திகளை ளெளியிடுவதில் பல புதிய கூறுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அக்கூறுகளே இவண் ஆராயப் படுகின்றன.

கதை, கட்டுரை, செய்தி போன்றவற்றை வெளியிடுவதில் ஆனந்தவிகடன் கையாண்டுள்ள புதிய உத்திகள் அறிமுகக் கூறுகளாகக் கருதப்படுகிறது. வாசகர்களுக்கு எவ்வெவ் பகுதிகளை எவ்வாறெல்லாம் அறிமுகம் செய்துள்ளது என்பதே ஆய்வுன் பொருளாகும்.

கதைகள்

நாடும் மக்களும் வளர, வாழ நல்ல கதைகள் வேண்டும். கதைகள் மூலமாக சிறந்த கருத்துக்களைச் செப்பனிட்டுத் தரலாம். வாழ்வை வளப்படுத்தலாம், பண்பாட்டைப் பசுமையாக்கலாம். சமுதாய மதிப்புக்களைக் கணித்துக் கூறலாம். இக்கதைகளே இதழியலில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

கதைகள் இல்லாத பொழுது போக்கு இதழ்களே இல்லை எனலாம். இக்கதைகளை வெளியிடுவதில் ஆனந்தவிகடன் புதிய முறைகளைக் கையாண்டு உள்ளது.

1983 ஆம் ஆண்டு ஆனந்தவிகடன் 'இரட்டைக் கதைகள்' என்ற தலைப்பில் ஓர் அம்சத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது. வெவ்வேறு ஆசிரியர்கள் எழுதிய இரண்டு கதைகளை 'இரட்டைக்கதைகள்' என்ற தலைப்பில் கொடுத்துள்ளது ஒத்த கருவினை இரண்டு கதைகளும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். சான்றாக 13.2.83 வெளியீட்டில் வ. தேனப்பன் எழுதிய 'தவளைத் திருமணம்' 'இரட்டைக் கதை-1' எனவும், இரா. வேதவல்லி எழுதிய 'மனிதன் மாறிவிட்டான்' என்ற 'இரட்டைக் கதை-2' எனவும் வெளிவந்துள்ளன. இரண்டு கதைகளிலும் சாதிமத பேதமற்ற வரதட்சணைக் கொடுமையிலாச் சமத்துவ சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் நோக்கம் வலியுறுத்தப் பட்டுள்ளது. எம்மதமும் சம்மதம், வரதட்சணை ஒழிப்பு என்ற இரண்டினையும் இக்கதைகள் கருவாகக் கொண்டுள்ளன. 'இரட்டைக் கதை' என்ற இப்பகுதி ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் தொடர்ந்து ஏழு வெளியீடுகள் வந்துள்ளது.

'புனைவுகள் வெறும் கருத்துக்களையோ, செய்திகளையோ அல்லாமல் மனிதனுடைய அனுபவங்களையும். உணர்வுகளையும் பிரதிபலிக்கும்' என்ற நவோமிலோன் பாப்சன் கருத்திற்கு (இதழ் காட்டும் மகளிர் நிலை, பக். 25) ஏற்ப ஒரு மருத்துவர் தம் மருத்துவ வாழ்க்கையில் சந்தித்த மனிதர்களை அடிப்படையாகக் கொண்டு கதைகள் எழுதியுள்ளார். இக்கதைகள் 'வாழ்க்கைக் கதை' என்ற தலைப்பில் 1983-ஆம் ஆண்டு ஆனந்தவிகடனில் வெளிவந்துள்ளன. சான்றாக குழந்தைப் பேற்றினால் அழகு கெட்டுவிடும் என எண்ணி குழந்தைப் பெறுவதை வெறுக்கும் பெண்மணி எவ்வாறு மனம் மாறினாள் என்பதை மனோதத்துவ மருத்துவரான குருதாஸ் கதையாக்கியுள்ளார். இக்கதை 13/2 வெளியீட்டில் பிரசுரமாயுள்ளது.

2. கட்டுரை

பெரிய அளவில் கூறப்பட்ட கருத்துக்களைச் சுருக்கிக் கூறும் பொழுது கட்டுரை என்ற சொல்லை சிலம்பு பயன் படுத்துகிறது. ''கருத்துச் செறிவும், தெளிவும், தொடர்ச்சியும் உள்ளதாகவும், ஆசிரியரின் உள்ளப் பாங்கை வெளிப்படுத்தும் வகையிலும் எழுதப்பட்டவை கட்டுரைகள்' எனக் கலைக் களஞ்சியம் (தொகுதி 3 பக். 42) கட்டுரைக்கு விளக்கம் கொடுக்கிறது.

1983-ஆம் ஆண்டு ஆனந்தவிகடன் பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. 'இதோ ஒரு குடும்பம்', அட்டைப்பட விளககக் கட்டுரை (கவர் ஸ்டோரி) திருத்தலப் பெருமை மருத்துவக் கட்டுரைகள் என அவற்றை வகைப்படுத்தலாம். அவற்றுள் விகடன் வெளியிட்டுகள மருத்துவக் கட்டுரைகள் அறிமுகக் கூறாகக் கருதப்படுகிறது.

ஒருவராலோ பலராலோ எழுதப்பட்ட கட்டுரைகள் இதழ் களில் வருவதுண்டு. ஆனால் ஒரு நூலில் உள்ள கட்டுரைகளை வாரவாரம் வெளியிடுதல் என்பது புதுமையாகும். 1983 ஆம் ஆண்டு ஆனந்தவிகடன் இவ்வுத்தியைக் கையாண்டுள்ளது. 'குறைவற்ற செல்வம்' என்ற நூல் பல்வேறு மருத்துவ நிபுணர் களின் கட்டுரைத் தொகுப்பு. நோய் தோன்றுவதற்குரிய காரணங்கள், அவற்றைத் தடுக்கும்முறை, தோன்றினால் முற்று வதற்கு முன்பே அறிந்து கொள்ளும் வழி ஆகியவற்றை இக் கட்டுரைகள் விளக்குகின்றன. மேலும் அந்நோய்கள் தொடர் பான எளிமையான விளக்கங்களும், ஆலோசனைகளும் அறிவுரைகளும் அந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன. 'குறைவற்ற செல்வம்' என்ற நூல் கட்டுரைகளை ஆனந்தவிகடன் 23.1.83—28-8-83 வெளியீடுகளில் தொடர்ந்து வெளியிட்டு உள்ளது. ஒரே நூலில் உள்ள கட்டுரைகளைத் தொடர்ந்து பிரசுரித்ததே ஆனந்தவிகடன் செய்த புதுமை எனலாம். இப் பகுதி மக்களுக்கு பயன்படும் வகையில் அமைந்துள்ளது.

3. செய்திகள்

பழக்கமான இடங்களையும், மனிதர்களையும் பற்றிய

செய்திகளை அறிந்து கொள்வதற்கு பலரும் விரும்புவதுண்டு. அதிலும் பலரின் கவனத்தைத் திருப்பும் செய்திகளைப் பற்றி விரிவாகவும், ஆழமாகவும் தெரிந்து கொள்ள வாசகர்கள் விரும்புவர். எனவே வாசகர் வட்டத்தைப் பெருக்கிக் கொள்ள இதழ்கள் செய்திகளை வெளியிடுகின்றன. இச்செய்திகள் பல இதழ்களில் இடநிரப்பிகளாகவே பயன்படுத்தப்படுகின்றன. ''வாசகர்களுக்கு ஓய்விடம் அளிக்கிறது. நீண்ட தொடர்ச்சியில் இருந்து சிறு மாறுதலைத் தருகிறது. ஒரு வெளியீட்டினை உருவாக்கும் பொழுது ஒரு பக்கம் அல்லது ஒரு பகுதியை நிரப்புவதற்காக வேறுபட்ட அளவுகளில் சிறிய தகவலை ஆசிரியருக்குக் கொடுக்கிறது'' என இடநிரப்பிகளை எல்மோ ஸ்காட் என்ற இதழியலாளர் விளக்குகிறார்.

1983 ஆம் ஆண்டு ஆனந்தவிகடன் செய்திகளை இட நிரப்பிகளாக மட்டும் பயன்படுத்தவில்லை. செய்திகளைத் தொகுத்து ஊர்கள் ஊர்கள், மாதக் கண்ணோட்டம், செய்தித் துணுக்குகள், நகைச்சுவைத்துணுக்குகள், 16 பக்க ஸ்பெஷல் என பல வகைகளில் வெளியிட்டுள்ளது.

3 1 செய்தித் துணுக்கு

இடநிரப்பியாகப் பயன்படும் இச்செய்திகளை 'சின்ன ... சின்ன' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. இப்பகுதியில் இடம்பெறும் செய்திகள் அனைத்திற்கும் புகைப்படங்கள் உண்டு. இப்பகுதியில் இடம்பெறும் செய்திகள் அனைத்தும் மனிதர்களைப் பற்றியதாகவே அமைந்துள்ளன. 22/5 வெளியீட்டில் 100 துணுக்குகளை 16 பக்கங்களுக்குக் கொடுத்துள்ளது. 100 துணுக்குகளுக்கும் படங்கள் தரப்பட்டுள்ளன. ஒரே வெளியீட்டில் 100 துணுக்குகளைப் புகைப்படங்களுடன் தந்துள்ளது ஆனந்தவிகடனின் அறிமுகக்கூறு எனலாம்.

3.2 நகைச்சுவைத் துணுக்குகள்

வாசகர்களுக்கு மகிழ்வூட்டும் நோக்குடன் வெளியிடப் படும் நகைச்சுவைத் துணுக்குகள் சமுதாய நடப்புச் செய்தி களையே பொருள்களாகக் கொண்டுள்ளன. இந்நகைச்சுவைத்

துணுக்குகளை வெளியிடுவதில் புகழ்பெற்றது ஆனந்தவிகடன். 1983 ஆம் ஆண்டு ஆனந்தவிகடன் இந்நகைக்சுவைத் துணுக்குகளை வெளியிடுவதில் பின்பற்றிய புதிய உத்தியை இப்பகுதி விளக்குகிறது.

மூன்றுக்கு மேற்பட்ட நகைச்சுவைத் துணுக்குகளை ஒன்று அல்லது இரண்டு பக்க அளவில் ஆனந்தவிகடன் கொடுத்துள்ளது. இப்பகுதியில் இடம் பெறும் அனைத்துத் துணுக்குகளும் ஒரே செய்தியை அடிப்படையாகக் கொண்டன. 27/11 வெளியீட்டில் வந்துள்ள 'அரசியல் அய்யாவு' என்ற இரண்டு பக்க நகைச்சுவைத் துணுக்குகளை சான்றாகக் கூறலாம். கர்நாடகத்தில் காங்கிரஸ் கட்சியினர் எம். எல். ஏக்களை விலைக்கு வாங்க முயற்சித்தனர். அதனை ஜனதா கட்சியினர் அம்பலப்படுத்தினர். இச்செய்தி மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. இச்செய்தியை அடிப்படையாகக் கொண்டது. 'அரசியல் அய்யாவு' என்ற இரண்டுபக்க நகைச்சுவைத் துணுக்குகள், இதுபோன்ற முக்கியமான செய்திகளை எள்ளி நகையாடும் தன்மையில் அங்கத நடையில் வெளியிட்டு துணுக்குகளைத் தந்துள்ள பாங்கே ஆனந்தவிகடனின் புதிய கூறாகும்.

3.3 ஊர்கள்... ஊர்கள்

பொது மக்கள் கருத்தினை வெளிப்படுத்தும் அறிவுக் களஞ்சியங்களாக இதழ்கள் திகழ்கின்றன. நாட்டு நடப்புகளை மக்களுக்குத் தெரிவிப்பதும் மக்களின் குறைகளை அரசாங்கத்திற்கு எடுத்துரைப்பதும் இதழியலின் முக்கிய தொண்டாகும். மக்களுக்கும் அரசிற்கும் இணைப்புப் பாலமாக இதழ்கள் விளங்குகின்றன.

1983 ஆம் ஆண்டு ஆனந்தவிகடன் 'ஊர்கள் ... ஊர்கள்' என்ற பகுதியை வெளியிட்டுள்ளது. தமிழ் நாட்டின் சில ஊர்களைப் பற்றிய குறைகளையும், நிறைகளையும் இப்பகுதி தெரிவிக்கின்றது. இப்பகுதி செய்தித் தொகுப்பாக அமைந்துள்ளது. சில வெளியீடுகளில் பல ஊர்களைப் பற்றிய செய்திகள் தரப்பட்டுள்ளன. 12/6, 21/8 வெளியீடுகளில்

முறையே 15, 13 ஊர்களைப் பற்றிய செய்திகள் வெளியிடப் பட்டுள்ளன. ஒரே ஊரைப்பற்றிய பல செய்திகளைத் தாங்கி வந்துள்ள வெளியீடுகளும் உண்டு. 3/7 வெளியீடு 'தஞ்சாவூர்... தஞ்சாவூர்' என்ற தலைப்பில் தஞ்சாவூரைப் பற்றிய பல செய்திகளைத் தொகுத்துத் தந்துள்ளது. இச் செய்தித் தொகுப்பு களை வண்ண, கருப்பு வெள்ளைப் புகைப்படங்களுடன் வெளி யிட்டு அச்செய்திகளின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துகிறது, அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் சில ஊர்களில் பழுது பார்க்க வேண்டிய மராமத்த வேலைகளைக் குறிக்கும் செய்திகள் புகைப்படத்துடன் வெளியிடப்பட்டுள்ளன. குறை களை மட்டும் கூறாமல் பார்க்க வேண்டிய சில ஊர்களைப் புகழ்ந்தும் இப்பகுதி பேசுகிறது. பொதுமக்களுக்கும் அரசாங்கத் திற்கும் இடையே ஆனந்தவிகடன் இணைப்புப் பாலமாக விளங்குவதை இப்பகுதி புலப்படுத்துகிறது. "வருங்கால சந்ததி யினருக்கு ஏதாவது உருப்படியான விஷயங்களை பத்திரிகைகள் செய்ய வேண்டும்" என்ற லட்சுமியின் (முற்காலத் தமிழ் இதழ் பக் 10) கருத்தை இப்பகுதி செயல்முறைப் படுத்தியுள்ளது எனலாம்.

3.4 மாதப் பகுதி

செய்திகளையும் நாட்டு நடப்புக்களையும் தெரிவிப்பதே இப்பகுதியின் நோக்கம். ஒவ்வொரு மாதத்திலும் நடைபெற்ற முக்கிய செய்திகள் தேதியுடன் கொடுக்கப்பட்டுள்ளன. உள் நாடு, வெளிநாடு, அரசியல், திரை, விளையாட்டு போன்ற துறை சார்ந்த செய்திகள் தரப்பட்டுள்ளன. சில செய்திகளுக்குப் புகைப்படங்களும் வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதத் தின் முதல் அல்லது இரண்டாவது வெளியீட்டில் இச் செய்தித் தொகுப்பு இடம் பெறுகிறது. இப்பகுதி நான்கு பக்க அள வினைக் கொண்டதாகத் திகழ்கின்றது. இது ஒரு புதிய அறிமுகக் கூறு என்பதை ஆசிரியரே 30/1 வெளியீட்டில் (பக்.29) குறிப்பிட்டுள்ளார். இவ்வறிமுகக் கூறு பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும், நேர்முகத் தேர்வு எழுதுவோர்க் கும், வினாடி-வினா நிகழ்ச்சியில் பங்கு பெறுபவர்களுக்கும் பயன்படும் தன்மையுடையது.

அறிவியல் தமிழ் உரை நடையில் பொருளமைப்பு

ஓ. பாலகிருஷ்ணன்,
பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்

தமிழ்மொழி, இலக்கியச் செய்திகளோடு அறிவியல் செய்திகளையும் வெளியிடும் நிலையில் உள்ளது. இலக்கிய நடைக்கும், அறிவியல் நடைக்கும் வேறுபாடு உண்டு. அறிவியல் செய்திகள் நேரிடையாகச் சொல்லப்படவேண்டும். அதற்குத் துணை நிற்பன தொடர்கள், வாக்கிய அமைப்புகள் ஆகியன. இவை அறிவியலைப் பரப்ப எத்தன்மை கொண்டிருக்க வேண்டும் என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

பொருளமைப்பு

ஒரு மொழியில் உள்ள சொற்கள் எல்லாம் ஏதாவது ஒரு பொருளை உணர்த்தும். பொருள் இல்லாது இருப்பின் அவை அசைநிலை எனப்படும்.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" (தொல். சொல். 155) என்பர் தொல்காப்பியர்.

சொற்கள் ஒன்றாக இணைந்து தொடர் என வழங்கப் படும். சொற்களுக்குப் பொருள் இருப்பதால் தொடருக்கும் பொருள் இருக்கும். சொற்கள் ஒரு தொடரை குறிப்பதுபோல, தொடரும் ஒரு கருத்தை விளக்க வரும்.

தொடர்கள் பொருள் அமைப்புடன் இருக்கவேண்டும். தமிழில் ஒரு தொடரில் சொற்கள் இவ்வாறுதான் அமைய வேண்டும் என்ற விதிமுறை உள்ளது. எழுவாய், செயப்படு பொருள், பயனிலை என்ற அமைப்பு ஒரு வாக்கியத்தில் வர

வேண்டும். அப்பொழுதுதான் அவ்வாக்கியம் உணர்த்த வந்த பொருள் முழுமை அமையும். எனவே ஒரு தொடரில்-வாக்கியத்தில் பொருளமைப்பு இன்றியமையாத ஒன்றாகும்.

சொற்கள் தனித்தும், இணைந்தும் வரும்போது அவை ஒரே பொருளையோ, பல பொருளையோ குறித்துவரும். அவைகளை ஒருபொருள் குறித்த பல சொல், பலபொருள் குறித்த ஒரு சொல் எனப்பிரிப்பர். இதனை ஆங்கிலத்தில் Synonymy என்றும் Homonymy என்றும் அழைப்பர். இவ்வாறு ஒரு மொழியில் ஒரு குறிப்பிட்ட பொருளைக் குறிக்க ஒன்றுக்கும் மேற்பட்ட சொற்கள் இருப்பதும், ஒரு சொல்லைக் கொண்டே பல பொருள்களைக் குறிப்பதும் இயல்பான தன்மையாகும். இத்தன்மை சொல்லுக்கும் பொருளுக்கும் இடையே காணும் நெருங்கிய தொடர்பைப் புலப்படுத்துகிறது.

பலபொருளைக் குறிக்க ஒரு சொல் பயன்பாட்டில் இருப்பது சில சமயம் குழப்பத்தை ஏற்படுத்தும், சொல்லவந்த பொருளை நேரடியாக உணர்த்தாது சொல்வோரால் விளக்கப்படும் பொழுதே பொருள் விளங்கும் நிலை ஏற்படுகிறது. பிறமொழிக் கலப்பால் சொற்கலப்பு ஏற்படலாம். அம்மொழியில் ஒரு பொருளைக் குறிக்க வழங்கும் சொல்லையே வேறொரு மொழியினரும் வழங்க நேரிடலாம். இவ்வாறு கலப்பு ஏற்படுகையில் ஒரு பொருளுக்குப் பல சொற்களும், பல பொருளுக்கு ஒரு சொல்லும் ஏற்பட வாய்ப்பு நிகழ்கிறது. சமுதாயக் கலப்பாலும் இந்நிலை ஏற்படலாம்.

காலப்போக்கில் மாற்றங்கள்

சொற்கள், பிறமொழித் தாக்கத்தால் காலப்போக்கில் அது உணர்த்தும் பொருள் அமைப்பிலும், சொல்லின் உருவத்திலும் மாறி வழங்க வாய்ப்புண்டு. எ. கா. காமம் என்பது முற்காலத்தில் உண்மையான அன்பைக் குறித்தது. ஆனால் இன்று காமம் என்பது தீய நோக்கத்தோடு கூடிய அன்பைக் குறிக்கிறது. 'தண்ணீர்' என்பது குடிக்கும் நல்லநீரைக் குறித்தது. இன்று மதுபானத்தைக் குறிக்கப்பயன்படுகிறது. இவ்வாறு

சொற்கள் பொருளிலும், வடிவிலும் மாற்றங்கள் (புதுப் பொருள், புதுஅமைப்பு) பல அடைந்து வருகின்றன.

சொற்கள் குறிப்பாகப் பொருள் உணர்த்தும் வடிவத்திலும் வழங்கப்படுவதுண்டு. ஒவ்வொரு சமுதாயத்தாரும் தங்கள் குழுவுக்குள் மட்டுமே பயன்படும் வகையில் சொற்களை உருவாக்கி வழங்குவதைக் காணலாம்.

எ. கா.

பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' என்பது, திருடர்கள் சிறைச்சாலையை 'மாமியார் வீடு' என்பது போன்றவை.

சில சொற்கள் சில சமயங்களில் ஒரு பொருளை உணர்த்த வரும். பிற சமயங்களில் வேறு பொருளை உணர்த்தும். பின்பு இரண்டு பொருளும் இணைந்து மூன்றாவது ஒரு பொருளை உணர்த்த வரும். இத்தகைய நிலையையும் சொற்பொருள் அமைப்பில் காணலாம். சொல்லின் பொருள் விரிவடைந்து வேறு பொருளை உணர்த்தவும் பெறும்.

கலைச்சொற்கள் இவ்வாறு அமைதல் கூடாது. அறிவியலில் ஒருசொல் பல பொருள், பலபொருள் ஒரு சொல் என்ற நிலை சிறிதும் ஏற்றதில்லை. பொருள் அமைப்பில் இந்நிலை வேறுபாட்டை ஏற்படுத்தி விடும்.

எ. கா. Oxygen என்பதை 'ஆக்ஸிஜன்' என ஒலிபெயர்த்தும் பிராணவாயு, உயிர்வளி என மொழிபெயர்த்தும் வழங்குதல்.

கலைச் சொற்கள் ஒரு பொருள் குறித்த பல சொல்லாகவோ, பல பொருள் குறித்த ஒரு சொல்லாகவோ அமையக்கூடாது. சொல்ல வந்த பொருளை நேரடியாகச் சொல்லவேண்டும். ஒரு பொருளுக்கு ஒரு கலைச்சொல் சொல்நிலையில் பொருள் அமைப்புடன் கூடிய கலைச் சொற்கள் ஏற்படுத்தவேண்டும்.

தொடரும் பொருளும்

சொற்களால்-சொல்லமைப்புக்களால் ஆனது தொடர் சொற்களின் சேர்க்கையாக மட்டும் வராது ஒரு கருத்தை-ஒரு

பொருளைக் குறித்து நிற்கவேண்டும். அப்பொழுதுதான் அதன் பயன் சமுதாயத்திற்கும் கிட்டும்.

தொடர் அமைப்பு இலக்கணவிதிப்படி அமைந்தால் மொழியின் சீர்மை கெடாது. பொருள் நிறைந்ததாக இருக்கவேண்டும் பொருளமைப்பில் ஐயப்பாட்டை ஏற்படுத்தக்கூடிய தொடர்கள் மொழிக்குப் பயன்தரா. சொற்களைப் பிரித்து எழுதுவதாலும் பொருள் மாறுபடலாம்.

எ.கா. "பல் வேறு வகையான சோதனைகளில் இருந்து எதிர் முழக்க நேரத்திற்கு ஒரு வாய்ப்பாட்டைக் கண்டு பிடித்தார்" என்பதை, "பல்வேறு வகையான சோதனைகளிலிருந்து எதிர்முழக்க நேரத்திற்கு ஒரு வாய்ப்பாட்டைக் கண்டுபிடித்தார்"

என எழுதலாம் என்பர் (இராதா செல்லப்பன், 1985:50). எனவே, தொடரமைப்பில் பயன்படுத்தும் சொற்களைத் தேவையான இடங்களில் தேவை குறித்துப் பிரித்தும், சேர்த்தும் எழுதவேண்டும்.

வாக்கியப் பொருள்

வாக்கிய அமைப்பு பொருள் கூற, வாக்கியத்தைப் பயன்படுத்த எளிதாக இருக்கவேண்டும். மொழிபெயர்ப்பாக வாக்கியம் அமையும்போது அது மூலமொழியின் வாக்கிய அமைப்பினை ஒட்டியதாக இருக்கவேண்டும்.

அறிவியல்செய்திகளை வெளியிடும் வாக்கியம் நீளமானதாக இருக்கக்கூடாது. சொல்லவந்த செய்தியை நேரடியாகச் சொல்லவேண்டும். நீள வாக்கியங்கள் பொருள் தெளிவின்மையைக் காட்டும்.

> "ஜெர்மானிய விஞ்ஞானிகள் தமது மொழியில் மிகக் குறைந்த அளவு நீளமுள்ள வாக்கியங்களையே அமைக்க முயல்கின்றனர்" என்பர் (திருமலை, 1979:102)

வாக்கியங்களுக்கிடையே பொருள் தொடர்பு இருக்கவேண்டும். அப்போதுதான் கருத்து தெளிவாகப் புலப்படும். அதற்

காக இணைப்புச் சொற்களைப் பயன்படுத்தலாம். அளவுக்கு அதிகமான இணைப்புச் சொற்கள் குழப்பத்தை ஏற்படுத்தும். அல்லது சொல்ல வந்த பொருளை தொடர்பு இன்றி வெளிப் படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

தமிழ்மொழி அமைப்பில் எல்லா வாக்கியங்களும் வினை கொண்டு முடிய வேண்டியநிலை இல்லை. பெயர், தெரிநிலை, குறிப்பு வினைகள் பயனிலையாக வரலாம். பெயர்ச்சொல் பயனிலையாக வரும் வாக்கிய அமைப்பில் வினைச்சொல் எதுவும் காணப்படாது. ஆனால் இதற்கு மாறாக ஒரு பொரு ளையும் உணர்த்தாது வரும்.

> 'ஆகும் என்ற வினைச் சொல் ஆங்கிலமொழிநடைக் கிணங்கப் பயன்படுத்தப்படுகிறது' என்பர்
>
> (இராதா செல்லப்பன், 1985:47)

எ கா.

> 'அணுக்கள் வேதிவினையிற் பங்கேற்க வல்லன ஆகும்'

இங்கு ஆகும் என்ற வினைச் சொல் இல்லாமலே வாக்கியம் முற்றுப்பெறும்; பொருள் தரும். ஆகவே இது தேவையில்லாத கூறாகும்.

> 'அறிவியல் உரைநடை வாக்கியங்களில் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களைக் குறிக் காத அமைப்பே சிறப்புடையது'
>
> (இராதா செல்லப்பன், 1985:48)

என்பர். செய்முறைப் பகுதியில் பெரும்பாலும் செயப்பாட்டு வினை வாக்கிய அமைப்பு இருத்தல் வேண்டும்.

> 'செய்முறை சோதனைகளை விளக்கும்போது அவ் வாக்கியத்தில் பால் விகுதியோ மரியாதைப் பன்மையோ இடம்பெறா' என்பர்.
>
> (திருமலை 1979:182)

> 'செய்முறையில் வினையைச் 'செய்யவும்' என்ற வாய்ப் பாட்டில் கூறும் வழக்கம் பொதுவாக நிலைபேற்றை அடைந்துவிட்டது எனலாம்' என்பர்
>
> (இராதா செல்லப்பன் 1985:53)

ஆனால் அறிவியல் பாடநூல்களின் இத்தகைய போக்கைக் காணமுடிவதில்லை. கட்டளை வாக்கிய அமைப்பே பெரிதும் பயன்படுகிறது.

எ. கா.

> 'விடுகுழாயைக் கந்த அமிலத்தால் கழுவு. கந்தக அமிலத் தால் விடுகுழாயைப் பூஜ்ஜியம் வரை நிரப்பு''

கட்டளை வாக்கியங்கள் செயல் விரைவுபடுத்தும் தன்மை யது. பரிசோதனைகள் விரைவாக நடைபெற இவ்வகை அமைப்பு இன்றியமையாததாகிறது.

முடிவுரை

இவ்வாறு அறிவியல் தமிழ் உரைநடையில் கையாளப்படும் சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் ஆகியன வரையறுத்தன வாக இருக்கவேண்டும். அறிவியல் உரைநடையின் தன்மை சொல்ல வந்த கருத்தை நேரடியாகச் சொல்வதாகும். வெற்றுச் சொற்களின் சேர்க்கையோ, வீண் வர்ணனைகளோ இல்லாமல் அமைவதே அறிவியல் உரைநடை ஆகும்.

அறிவியல் தமிழ் உரைநடைத் தொடர்களில் எளியமுறை யில் அமைந்த கலப்பு வாக்கியங்கள் இடம் பெறலாம். இணை யமைப்பு வாக்கியங்களில் தேவையான அளவு வாக்கிய இணைப்புச் சொற்களை அதாவது-2ம், 3, அல்லது, அதாவது, மற்றும் போன்ற சொற்களைப் பயன்படுத்தி அறிவியல் செய்திகள் விளக்கப்படவேண்டும். அதே நேரத்தில் வாக்கியங் களின் நீளம் வரையறுக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும்.

கலைச்சொற்கள் சுருக்கமானதாகவும், குறிக்க வந்த சொல்லை-பொருளை நேரடியாகக் குறிப்பனவாகவும் அமைய வேண்டும். சொற்குழப்பம் கூடாது. ஒரு பொருளுக்கு ஒருகலைச் சொல் என்ற நிலையே அறிவியல் தமிழுக்குச் சிறந்ததாகும்.

இயற்கை வழிபாட்டில் – சந்திரன்

இரா. பாலசுப்பிரமணியன்,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

நோக்கம்

இயற்கையில் இடம்பெறும் கதிரவன், சந்திரன், நெருப்பு, இடி, மின்னல் போன்ற இயற்கைக் கூறுகளைச் சார்ந்தமையும் வழிபாட்டினை இயற்கை வழிபாடெனலாம். அவ்வழிபாட்டில் சந்திரனுக்குரிய இடம் என்ன? காலந்தோறும் இவ்வழிபாடு எவ்வெவ்வகையில் இயங்கி வந்திருக்கிறது? போன்ற ஆய்வியல் நோக்கங்களைக் கொண்டு இப்பகுதி அமைகிறது.

தீ, வளி, வெளி, காற்று, ஆகாயம் போன்றவை ஐம்பெரும் பூதங்கள் எனச்சுட்டப்படுவது மரபாகும். இவைகளுடன் கதிரவன், சந்திரன், இயமன், சுவர்க்கம் இவைகளையும் சேர்த்து அட்டமூர்த்தம் என்று நிகண்டுகள் குறிப்பிடும். இவ் வகையெண்ணங்கள் சமயச்சிந்தனை வளர்ச்சிபெற்ற காலத்தில் தோன்றியவை என்பதை முதலில் கருத்தில் கொள்ளுதல் நலம்.

'ரித' தெய்வங்கள்

''பிரபஞ்ச ஒழுங்குகளை 'ரித' (Rta) என்று கூறுவர். இச் சொல்லிற்கு நேர்பொருள்'பொருள்கள்' 'செல்நெறி' ஆகும். 'ரித' என்றசொல் சமயஒழுக்க, ஒழுங்கு அமைப்புகளையும் தொடக்க காலத்தில் உட்படுத்தியே கருதியிருக்க வேண்டும். ஆதித்ய தெய்வங்களும் அவற்றின் தலைவனாகிய வருணனும் விரிவாகக் கருதப்பெறும் 'ரித' என்றும் செல்நெறியின் ஆர்வம் மிகுந்த காப்புத் தெய்வங்களாக விளங்குகின்றனர்'[1] இதன்படி இந்திரன்,

வருணன், அக்கினி, சூரியன், சந்திரன் போன்ற வேதகாலத் தெய்வங்கள் 'ரித' வகைத் தெய்வங்களாகின்றனர். இத்தெய்வங்கள் பிரபஞ்ச ஒழுக்கத்திற்கு எதிரான செயல்களிலிருந்து மக்களைக் காக்கவல்லன என்பது வேதகாலமக்களின் நம்பிக்கையெனத்தெரிகிறது.

தெய்வங்களின் உயர்வுநிலை

வேதகாலத்தில் பல தெய்வநிலை (Polytheism) இருந்தாலும் கடவுள் ஒருவரே என்ற (Monotheism) சிந்தனையும் இருப்பதாக அறிஞர்கள் எடுத்துக்காட்டுவார்கள். 'யாண்டும் செயற்படுவது ஒரே த், ஒரே கதிரவன், ஒரே வைகறை' என்ற ஒரே கொள்கையிலும் ஒருமைக் கொள்கை ரிக்கு வேதத்தில் (8,58,27) இருப்பதை எடுத்துக்காட்டுவர். மேலும் அவ்வவ் காலத்தில் குறிப்பிட்டத் தெய்வங்களுக்குச் செல்வாக்கு உயர்ந்த நிலையையும் (Henotheism) நம்மால் காணமுடிகிறது. சூரிய வழிபாடு மிக ஓங்கி வளர்ந்த காலத்தில் சௌரமதமாக உயர்ந்ததை இங்குக் குறிப்பிடலாம். ஆனால் சந்திரனுக்கு இது போன்ற உயர்வினைக் காண முடியவில்லை. இதனை மேலும் ஆய்வின் வழி உறுதிப்படுத்த வழியுண்டு.

சோமன்–சந்திரன்

வேதகாலத்திலேயே சந்திரன் இரண்டாம் நிலைத் தெய்வமாகத்தான் இருந்திருக்கிறான் (ரிக் 64, 3, 85,) தர்மனின் மகன் அல்லது கடல்களின் அதிபதியான வருணனின் மகன் எனக் கூறப்படுகிறான். அமிர்தம் எடுப்பதற்காகப் பாற்கடலைக் கடையும்போது வெளிப்பட்டவன். உலகின் பிற புராணங்களில் குறிக்கப்படுவதுபோல சந்திரனும் நீருடனும்-வளமையுடனும் தொடர்புபடுத்திப் பேசப்படுகிறான். அமிர்தத்தைத் தருபவன் அல்லது சோமன் சந்திரனுடன் இணைக்கப்பட்டு விடுகிறான். அக்கினி சூரியனுடன் இணைந்து சூரியாம்சத்தைப் பெறுவது போல சோமன் சந்திரனுடன் சேர்ந்து சந்திராம்சத்தைப் பெறுகிறான்.

சிவனுடன் இணைக்கப்படுதல்

தட்சனின் இருபத்தியேழு புதல்வியர்களை மணந்துகொள்

சிறான். அவர்களில் ரோகிணி என்பவளிடம் மட்டும் மிகுந்த காதல் கொள்வதால் மற்றவர்கள் கோபித்துக் கொண்டு. தட்சனிடம் சென்று முறையிடுகிறார்கள். தட்சனுக்கும்-சந்திரனுக்கும் முரண்பாடு வலுக்கிறது. சந்திரகலையில் தேய்வு அடைவதற்கான சாபம் பெறுகிறான். சகோதரி உறவு உள்ள இலட்சுமி, பார்வதியிடம் கேட்டுக்கொண்டபடி சிவனின் அருள் சந்திரனுக்கு கிடைக்கிறது. சிவனின் தலையில் .பிறையாக இடம்பெறுகிறான்.

இப்புராணக்கதையின் மூலம் சந்திரனின் நிலையை நாம் தெளிவாக உணரலாம். இரண்டாம் நிலைத் தெய்வமாக இருந்தவன், தனிக்கடவுளன் என்ற நிலையிலிருந்து குறுகிச் சிவனுடன் இணைக்கப்பட்டு விடுகிறான். சிவனிடம் இணைந்ததால்தான் அவனுக்குப் பெருமையென்ற நிலையேற்பட்டு விடுகிறது.

தமிழ் இலங்கியங்களில்–சந்திரன்

தமிழ் இலக்கியங்களில் சந்திரனைப்பற்றிய செய்திகள் மூவகையில் இடம்பெறலாம். அவைகளைப் பொதுநிலைச்செய்திகள், வழிபாட்டு நிலைச்செய்திகள், புராணச் செல்வாக்குச் செய்திகள் எனப்பகுத்துக் கூறலாம், அவ்வகையில் பின்னிரண்டு மட்டுமே இங்கு ஆய்விற்குப் பயன்படுவதாக அமையும் எனலாம்.

சந்திரன் திருமாலின் கண்ணாக நற்றினைக்கடவுள் வாழ்த்தில் குறிக்கப்படுகிறான், சிவனிடம் பிறையாக இடம் பெற்றிருப்பதையும் பாடல்கள் குறிக்கின்றன.

"பிறைநுதல் வண்ணம் ஆகின்று அப்பிறை
பதினெண் கணனும் ஏத்தவும் படுமே"

என்று புறநானூற்றுக் கடவுள் வாழ்த்துப்பாடல் அமைகிறது. கணங்கள் வணங்கிய மாதிரி, தேவர்களும் சிவன் தலைமுடி மேலிருக்கும் பிறையை வணங்கியதாகச் சிலப்பதிகாரமும் குறித்து நிற்கிறது.

"குழவித் திங்கள் இமையவர் ஏத்த

அழகொடு முடித்த அருமைத்து ஆயினும்"

(சிலம் 2 : 38 - 40)

பிறையான சந்திரன் சிவனிடம் சேர்ந்த புராணச் செய்தி இங்குத் தாக்கம் பெற்றிருக்கலாம். இங்கும் சிவனைச் சார்ந்து தனித்தன்மையிழந்த நிலையைத் தெளிவாக்கிக்கொள்ளமுடிகிறது. இச் சந்திரனுக்குச் சிலப்பதிகாரக் காலத்தில் கோயில் இருந்திருக் கிறது என்பதற்குக் கனாத்திறமுரைக் காதையிலே (10-13) சான்றும் உள்ளது. சந்திரனின் கோயில் நிலாக் கோட்ட மென்று குறிக்கப்படுகிறது. ஆனால் மற்றைய வழிபாட்டுச் செய்திகள் கிடைக்கவில்லை. பரந்துபட்ட பெருவழக்காகக் கோயில்கள் இல்லாதிருந்திருக்கலாம். ஒருமைத் தெயவச்சிந்தனை வளர்ச்சி பெற்றதும் காரணமாகயிருக்கலாம்.

"ஒள்ளிழை மகளிர் உயர்பிறை

புல்லென் மாலை" (அகம் 239)

என்ற வரிகளில் பிறைவழிபாட்டுச் செய்தியினை உணரலாம். நல்ல கணவர் வாய்க்க வேண்டுமென்பதற்காகக் கன்னியர்கள் வழிபட்டதாக அறிஞர்களும் கூறுகின்றனர்.

சிவன், திருமால் போன்ற பெருந்தெய்வங்களுடன் ஒன்றி விட்ட சந்திரன் வழிபாடு பிற்காலத்தில் நவக்கோள்களுள் இணைந்து வருவதையும் காணலாம். இத்தகு கோள்களுக்கான கோயில்கள் முற்சுட்டிய பெருந்தெய்வங்களைச் சார்ந்தே அமைகின்றன.

நாட்டுப்புறப்பண்பாட்டில்-சந்திரன்

இயற்கை வழிபாட்டின் எச்சங்களை இன்றைய நாட்டுப்புற மக்களின் பண்பாட்டில் காணலாம், கல்வியறிவு பெற்ற நாகரிக மக்களிடம் வேதாந்தங்களும், மெய்பொருள் கருத்துக்களும் வளம்பெற்று ஒருமைத்தெய்வநிலை (Monotheism) இடம்பெறு கிறது. நாட்டுப்புறத்தில் பல கடவுளர்நிலையை இன்றும் காணலாம்.

இப்பிறைவழிபாடு பெண்களிடம் இடம் பெறுகிறது, அமாவாசை முடிந்தபின் பிறைதெரியும் நாளிலிருந்து (மூன்றாம் பிறை அல்லது ஐந்தாம்பிறைத் தொடர்ச்சி) முழுநிலா வரைக்கும் ஏறத்தாழப் பத்து நாட்கள் நோன்பு இருக்கும்முறையை, தமிழண்ணல் தம்முடைய பிறைதொழும் பெண்கள் என்ற நூலில் விரிவாக எடுத்துரைக்கிறார். இந்நோன்பிற்கு 'இராவண்டைப் போடுதல்' என்று பெயர். ஆடலும் பாடலும் இடம் பெற்றதிலிருந்து இந்நோன்பின் பழமையை உணருதல் இயலும்.

இந்நோன்பில் சந்திரன், 'ராவாத்தாள்' என்ற பெயரில் பெண் தெய்வமாக்கப்படுகிறான். காளியம்மன், மாரியம்மன், பிடாரியம்மன் மாதிரிச் சிறுதெய்வ வழிபாட்டு மரபில் 'நிலாவம்மன்' என்றும் கூறப்படுகிறது. கன்னித்தெய்வமாகக் கருதப்படும் 'நிலாவாத்தாள்' மாசிப்பிறையில் அமர்ந்து வான வீதியில் உலா வருவதாக நம்புகிறார்கள்.

வட்ட வட்ட ராவிலேயும்
மாசிப் பிறையிலேயும்
திட்டமுள்ள ராவாத்தாள்
தெருவீதி வாரேளன்று
....

பிறைத் தொடர்பான வழிபாட்டுச் செய்திகள் தாலாட்டுப் பாடலிலும் இடம் பெறுகின்றன.

மாசிப்பிறையோ நீ வைகாசி மாங்கனியோ
தேசப்பிறையோ நீ தெவிட்டாத மாங்கனியோ
எந்தன்குலம் மங்காமல் எதிர்குலத்தார் ஏசாமல்
தங்கமலி பொக்கிஷத்தை தாளாளவந்த
....

மேற்கண்ட பாடலில் மாசிப்பிறையின் அருமை சுட்டப் படுவதைக் காணலாம். மேலும் பிறைக்கும் மழை வளத்திற்கும் தொடர்பு இருப்பதாக நாட்டுப்புற மக்கள் நம்புகின்றார்கள்.

'மாசிப்பிறையை மறக்காமல் பாரு' போன்ற பழமொழிகளும் பிறையின் சிறப்புக்களைக் குறித்து நிற்கின்றன.

முடிவுரை

சந்திரன் தொடர்பான வழிபாடு வேதகாலத்திலேயே இரண்டாம் நிலையில் அமைந்து வருகிறது. நீருடனும், வளமை யுடனும் தொடர்புடையவனாகச் சந்திரன் அமைகின்றான்.

சங்கப்பாடல்களில் புராணச்செல்வாக்கு, வழிபாட்டுச் செய்திகள் மிகுதியாக இல்லை. சிவனின் தலைமுடியில், பிறையாகச் சந்திரன் இடம் பெறுகிறான். திருமாலின் கண்ணாகச் சுட்டப்படுகிறான். ஒருமைத் தெய்வங்களுடன் சந்திரன் இணைந்து வருவதை அறியமுடிகிறது. நல்ல கணவரை வேண்டிப் பெண்கள் பிறையினை வழிபட்டிருக்கின்றனர். சிலப்பதிகாரத்தில் நிலாக்கோட்டம் இருந்திருக்கிறது. ஆனால் கதிரவனை மாதிரிப் பரவலாகப் பிற்காலத்தில் கோட்டங்கள் பெருகவில்லை. ஒருமைத் தெய்வம் பற்றிய சிந்தனைகள் வளரத் தொடங்கிய காலத்தில் நவகோள்களுடன் சேர்க்கப்பட்டு விடு கிறான். தனிக்கடவுளர் நிலை சந்திரனுக்கு மேலும் குறை வாகவே அமைகிறது.

நாட்டுப்புறப் பண்பாட்டில் வரும் சந்திரன் 'நிலாவம்மன்' என்று பெண் தெய்வமாக்கப்படுகிறான். இந்நிலைக்குத் திராவிடப் பண்பாட்டின் தாய்த்தெய்வ வழிபாட்டின் செல் வாக்குக் காரணமாக இருக்கலாம். இங்கும் மழையுடனும், வளமையுடனும் தொடர்பு படுத்தப்படுகிறான். காலத்தைக் கணக்கிட சந்திரனின் வளர்வும் தேய்வும் உதவியாக அமை கின்றது. சந்திர வழிபாட்டில் இருநெறி மரபு அமைவதை ஆய்வின்வழி உணர முடிகிறது, எனினும் வழிபாட்டின் பயன் இரண்டு நெறியிலும் ஒன்றுபோலவே இருக்கிறது.

அடிக்குறிப்பு

1) தரபதசௌத்ரி 'வேதங்கள்', கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருள் வரலாறு (அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1970) ப. 55

பெண்களின் முதல் எதிரி யார்?

வி. சா. பாலசுப்ரமணியன்
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி, தஞ்சாவூர்

இந்தியச் சமுதாயம் நிலத்திற்கும், ஆறுகளுக்கும் கல்விச் செல்வங்களுக்கும், பிறவற்றுக்கும் பெண் தெய்வங்களே அதிபதி என்று போற்றுவதில் வல்லது. ஆனால் அந்த அளவிற்கு இந்தியப் பெண்கள் நடைமுறையில் மதிக்கப்படுகிறார்களா? ஏனைய நாடுகளைவிட இச்சமுதாயத்தில் தலைவிரித்தாடும், ஜாதிமதங்கள், மூட நம்பிக்கைகள், வரதட்சிணைக்கொடுமைகள், கொலைகள், முதலியன பெண்களை எந்த அளவிற்கு பாதிப்புகளுக்கு உள்ளாக்குகின்றன என்பதெல்லாம் மிகவும் கவலை தருவதாகும். ஆண்களின் ஆதிக்கத்திற்கு உதவியாக நிற்பது பரம்பரை பரம்பரையாக இருந்துவரும் எழுதப்படாத சட்டங்களே. திருமணம் என்பது ஓர் இமாலயச் சாதனையாகவுள்ளது. இதனால் பெண்குழந்தைகளை, பெற்றோர் ஒரு பாரமாய் நினைக்கிறார்கள். சமுதாயக்கொடுமைகள் எதிர்க்க இயலாமல், பெண்களை அலட்சியமாய் நினைக்கிறார்கள். பெண்களை ஒரு குறிப்பிட்ட நிலைக்குமேல் படிக்கவைக்க அஞ்சும் பெற்றோர்களே மிகுதி. இப்படி பெற்றோர்கள், ஆண்கள், பெண்கள் எல்லோருமே பெண்களுக்கு எதிரிகளாக இருப்பது எப்படி என்று ஆராயமுற்படுகிறது இக்கட்டுரை.

புலவர்களும், எழுத்தாளர்களும்

இந்திய இலக்கியங்களில், பெண்கள் காமப்பொருளாக, கவர்ச்சிமிக்கவர்களாக கலை என்ற பெயரில் அடி முதல் முடி வரை வர்ணிக்கப்படுகிறார்கள். வேண்டுமானால் காதலின் சுவையில் மிதக்க அவை பயன்படலாம். கற்பு என்ற பெயரில்

அடக்குமுறைக்கும் அவமானத்திற்கும் உரிமையற்ற தன்மைக் கும் புலவர் வழிகோலியிருக்கிறார்கள். அண்மையில்தான் அதுவும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஓரிரு புலவர்களே பெண் ணுரிமைக்குக் குரல் கொடுக்கிறார்கள்.

புதினம், கதை புதுக்கவிதை முதலிய எழுதும் எழுத்தாளர் கள், தங்கள் கதையம்சங்களில் சுவை கூட்ட பெண்களை ஒரு கருவியாக நினைத்து எழுதி வருகிறார்களே தவிர அவர்கள் உரிமைக்கு யாரும் மூச்சுவிடுவதாக இல்லை. சிலர் சமுதாயத் திலுள்ள பெண்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை படம்பிடித்துக் காட்டுவதுடன் சரி. அக்கஷ்டங்களுக்கு விடுதலை கிடைக்க வழிகூறுவதில்லை.

திரைப்படங்களுக்கும் இந்த நிலை பொருந்தும். பெண் களை கவர்ச்சிப் பொருளாகக் காட்டி, வியாபாரம் செய்கிறார் கள். காம விகாரம் நிறைந்த உரையாடல்கள், பாடல்கள் என்று போட்டு இளைஞர் மத்தியிலும் பிறரிடமும் பெண்கள் ஏதோ ஒருபோதைப்பொருள் என்ற அழுத்தமான எண்ணத் தைப் பரப்புகிறார்கள். இதனால் பெண்கள் பலசமுதாயக் குற்றங்களுக்கு ஆளாகிறார்கள். ஏனெனில் திரைப்படம் சமு தாயத்தில் பெரிதும் வரவேற்கப்படுகிறது.

வரதட்சிணை

திருமணம் என்றால் மணமகன் வீட்டார் கும்மாளம் அடிக் கிறார்கள். பையனின் தகுதிக்கு மேலேயே பவுன்நகைகளாக, பணமாக, சீராக பெண்ணின் பெற்றோரிடமிருந்து கொள்ளை அடிக்கிறார்கள். குடிகாரன், சூதாடி, சோம்பேறி போன்ற கையாலாகாதவர்கள் தங்கள் மனைவிகளை மிரட்டி, விரட்டிப் பணம் பெறும் அவலநிலையை என்னென்பது! எத்தனைக் கொடுமைகள் இழைத்தாலும், கட்டின புருஷனுடன்தான் வாழவேண்டும் என்றும் போலியான சமுதாய மரபு - பெண்ணின் பெற்றோர்களை சமாதானப்படுத்துகிறது. விதியே என்று தவணைமுறையில் பணம் கொடுத்து அனுப்பி - தன் பெண் வாழ்கிறாள் என்று வெளியாருக்குக் காட்டிக் கொள் கிறார்கள். இதில் வேடிக்கை வாதம் என்னவெனில் வரதட்

சிணையில் முதல் வரிசையில் இருந்து செயல்படுவது மாமியா ராகிய பெண்தான்.

பெண்குழந்தை என்றாலே கசப்பு

தாய்கூட தானும் ஒரு பெண் என்பதை மறந்து அவர் வயிற்றிலிருக்கும் (பெண்குழந்தை) கருவை அழிக்க உடன்படு கிறாள். சிலர் ஒன்று அதற்குமேல் பெண்பிறந்து விட்டால் அக்குழந்தையைக் கொல்கிறார்கள். நஞ்சூட்டிக்கொல்லும் பரி தாபத்தை நாடு நன்கு அறியும். பெரும்பாலான பெற்றோர்கள் ஜாதிமதமும், வறுமை முதலிய காரணங்களால் திருமணம் என்ற பெயரில் பெண்ணை இன்னொருவனுக்கு அடிமைப் படுத்துகிறார்கள். பெண்குழந்தைகளை திருமணம் செய்து கொடுப்பது முன்னர் குறிப்பிட்டதுபோல அத்தனை எளிதல்ல.

பெண்ணே பெண்ணுக்கு எதிரியாகும் அவலம்

பெண் இன்னொரு பெண்ணை மதிக்க மறுக்கிறாள். அதாவது வெறுப்பவர்கள் மிகுதி. இதற்கு இருவருமே ஒரே பாலைச் சேர்ந்தவர்கள் என்பதால் ஏற்படும் உளவியல் காரண மாகலாம். எனினும் வரதட்சிணையிலும் சரி, பெண்வளர்ப் பிலும் சரி, பெண், இளம்பெண்களுக்கு விளைவிக்கும் கொடுமைக்கு அளவில்லை. பெண்ணை விபசாரியாக்கி வியா பாரம் செய்வோரில் பலர் பெண்களே. விதவைகளை அவமானப்படுத்துவதில் அவர்களே முன்னணி வகிக்கிறார்கள். கலப்பு மணம், காதல்மணத்தை எதிர்த்து ஒரு பெண்ணின் வாழ்வை நிர்மூலமாக்குவதில் முன்னோடியாக இருப்பதும் பெண்களே. கலப்புமணம் செய்துகொண்ட ஆணைவிட பெண்ணையே அவர்கள் அதிகம் தூற்றுகிறார்கள். அவளை மருமகளாக அங்கீகரிக்க மறுக்கிறார்கள். பெற்றோர் பார்த்து ஏற்பாடுசெய்யும் திருமணப் பெண்ணே, யோக்கியதை உள்ளவள் என்றும், தானாக காதலித்து மணம் செய்து கொள்ளும் பெண் தரங்கெட்டவள் என்றும் பரவலாக நம்பும் துர்ப்பாக்கியநிலை படித்த மற்றும் பாமரமக்களிடமும் அதிகம்.

போதிய கல்வி அறிவின்மை

பெண்ணைப் படிக்க வைக்க இந்த இருபதாம் நூற்றாண்டிலும் பல பெற்றோர்கள் தயங்குகிறார்கள். சிறுவயது என்று கூடப் பாராது தன் மகளை தன்வீட்டு வேலைகட்கு உதவியாக வைத்து, மகளின் படிப்பைப் பாழாக்கும் தாய்மார்கள் ஒரு பக்கம், அதிகம் படிக்க வைப்பதால் மாப்பிள்ளை கிடைக்க மாட்டார்கள் அதாவது எம்.ஏ ,பட்டதாரி பெண்ணிற்கு எம்.ஏ., மணமகன் தான் தேவை. படிப்பில் கூட ஆண் ஆதிக்கம் செலுத்துகிறான் தன் மனைவி தன்னைவிட எந்த வகையிலும் உயர்ந்தவளாக இருப்பதை அவன் விரும்புவதில்லை; தன் மனைவி ஒரு கொத்தடிமையாக இருப்பதையே ஆண் எதிர்பார்க்கிறான். இதுவும் பெண்ணின் படிப்பிற்குத் தடையாக இருக்கிறது. ‘நாங்கள் அந்தக்காலத்தில் படித்தோமா’, என்ற பத்தாம்பசலி கொள்கைகொண்ட பெண்கள் தங்கள் பெண் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப மறுக்கிறார்கள். சில பெற்றோர்கள் சிறுபெண் குழந்தைகளைக்கூட கூலிவேலைக்கு அனுப்புவதும் இன்னொரு காரணம். சிற்றூர்களில் ஜாதிக் கட்டுப்பாடு, போக்குவரத்து சரியில்லாமை, காமப்பிசாசுகளின் கிண்டல், கேலி முதலிய காரணங்களால் தடைப்படும் பெண் படிப்புகள் ஏராளம். பெண்களின் படிப்பு எத்தனை முக்கியம் என்பதை எல்லோரும் ஏற்க வேண்டும். செயல்படுத்த வேண்டும்.

பழைய நம்பிக்கைகளும், புதிய பழக்கங்களும்

பெண்களின் துன்பங்கள் பலவற்றுக்கு பழைமைவெறி ஒரு முக்கிய காரணம். நகை அணிதல், காதுமூக்குகளை துளை போட்டுக்கொள்ளுதல், கைம்பெண் வாழ்க்கைப் பற்றிய கொள்கைகள, தாலி என்று ஒன்றை அணிந்து கைம்பெண்களை அவமானப்படுத்துதல் நகையில்லாத பெண்களை எள்ளிநகையாடல் இவற்றிற்கெல்லாம். பழைய நம்பிக்கையே காரணம் கலப்பு மணத்துக்கு எதிர்ப்புகூட இந்த பழைய குருட்டு நம்பிக்கையால்தான் ஏற்படுகிறது. ஜாதிமதங்களால் ஏற்படும் பழைய நம்பிக்கைகள் ஏராளம். இதனால் எளிய உடை அணிதல், நகையின்றி இருத்தல், முதலிய புதிய பழக்கங்கள் வளரவில்லை.

குடும்பச்சுமை

சமையல், துப்புரவு, துணி, பாத்திரங்கள் தூய்மை செய்தல், நீர்கொண்டு வருதல், குழந்தை பராமரிப்பு, கணவனுக்குத் தொண்டு, வயதானவர்களுக்கு உதவுதல் என்றிப்படி ஏராளமான பணிகள் இந்தியப்பெண்களுக்கு உண்டு. ஆடவர் இப் பணிகளைச்செய்வதை பரம்பரையாக வந்துவிட்ட கொள்கைகள் பரிகசிச்கின்றன இதனால் குடும்ப பாரம் முழுதுமே இல்லத்தரசி தலைவியின் தலையில் வீழ்கிறது. இன்றும் சிலர் வேலைக்கும், அதாவது அலுவலக வேலை, சித்தாள்வேலை முதலியனவற்றுக்கும் சென்றுவந்துதான் ஆகவேண்டும் என்ற நிலையிலும் சமையல் முதலிய மேற்கண்ட பணிகளையும் செய்ய வேண்டியுள்ளது. சில இனங்களில் ஆடவர் குடித்தல், சூதாடுதல், என்றிப்படி பொழுதுபோக்க, பெண்களே வேளாண் வேலைகளையும் செய்யவேண்டியுள்ளது. இதனால் பெண் ஓர் இயந்திரமாக எண்ணப்படுகிறாள். அவளுக்கு ஆண்கள் போலவே களைப்பு, முதலியன ஏற்படும் என்பதை யாரும் எண்ணுவது இல்லை. இளமை முதலே 'பெண்' வீட்டு வேலைகளைச் செய்யமட்டுமே பிறந்தவள் என்ற எண்ணம் சமுதாயத்தில் பரப்பப்படுகிறது.

முடிவுரை

பெண் அடங்கமாட்டாள். அவளுக்கு வீரியம் அதிகம் என்று நினைத்த ஒருவன் தந்திரமாய் அவள், காது, மூக்கினைத்துளை போட்டு, அதில் கடுக்கனையும் மூக்குத்தியையும் மாட்டி விட்டான். கைகளுக்கும் கால்களுக்கும் விலங்குபூட்டுவதுபோல், சொலுசு, தண்டை, வளையல் இப்படி பெண்கள்மீது நம்பிக்கையில்லாத காரணத்தால் இன்னொருவன் ஒருமுறையை ஏற்படுத்தி விட்டான். நகை ஆசையாலும், மூடநம்பிக்கை முதலியவற்றாலும் பெண்கள் விடாப்பிடியாக இவற்றைப் பழக்கத்தில் கொண்டு விட்டார்கள். எவ்வடிவத்திலும், நகைகள் முதலியவற்றை வெறுத்து ஒதுக்குவதே பெண் விடுதலைக்கு வேண்டியது. உலகில் பெரும்பாலான பெண்கள் போல இந்தியப் பெண்களும் புடவை அணியும் பழக்கம் விடுத்து தொள, தொளப்பான நீண்ட கால்சட்டை மேல்

சட்டை அணியப் பழகவேண்டும். கூலிவேலை சித்தாள்வேலை களுக்கும் மொபட், மிதிவண்டிகள் ஓட்டல், மற்றும் பேருந்து முதலியவற்றில் எளிமையாகப் பயணம் செய்யவும் இவை ஏற்றவை. மேலும் உணர்வுகளை மிகவும் தூண்டும் இடங் களாகக் கருதப்படும் இடுப்பு முதலியவற்றை மூடுவதே உண்மையான நாகரீகமுள்ள உடைப்பழக்கம். அடுத்து விளை யாட்டுக்களில் இந்திப்பெண்கள் பெருமளவில் கலந்து கொள் வதற்குத் தடையாக இருப்பதும் இப்புடவை உடைப்பழக்கமே. ஒன்றிரண்டிற்கு மேற்பட்ட குழந்தைகள் அவள் சுதந்திரத்துக்குப் பெரிய அளவில் குந்தகம் உண்டாக்கும். ஒவ்வொரு பெண் ணிற்கும் தற்சார்பு ஏற்பட அவளும் பொருளீட்ட வேண்டும். இச்சமுதாயத்தில் புரட்சிகரமானதாகக் கருதப்படும் நிலை வளர மிகுந்த நெஞ்சுரமும், சுயசம்பாத்தியமும் அவசியம் தேவை. எள்ளிநகையாடுவது, அடுத்தவர் வாழ்க்கையை அலசி விமர்சிப்பது ஒழிய வேண்டும்.

இதற்கெல்லாம் மனமாற்றம் தேவை. அந்த மனமாற்றம் தானாக வளர இன்னும் பல நூற்றாண்டு தேவைப்படலாம். விரைவான மனமாற்றம் பெற சமூகசேவை மன்றங்களும், அரசும் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். பிற நாட்டுப் பெண்கள் எங்ஙனம் குடும்பம், தொழிற்சாலை, மற்றும் பொது விடங்களில் பழகுகிறார்கள்; எப்படியெல்லாம் படிப்பு, அறிவியல், விளையாட்டு போன்றவற்றில் முன்னணியில் நிற் கிறார்கள் என்பதையெல்லாம் செய்திப் படங்களாக அடிக்கடி காட்டலாம். தொலைக்காட்சி, நாளிதழ்கள் முதலியவற்றில் படங்களுடன் விளக்கமான கட்டுரைகள் போடலாம். கலப்பு மணம், விதவை மணம், மணமுறிவு செய்து கொண்ட பெண் ணின் மறுமணம் முதலியனவற்றிற்கு சமுதாய வளர்ச்சியில் நல்ல எண்ணங் கொண்ட பெண்கள, ஆண்கள் குழு அமைத்து ஆலோசனைக் கூறுவதும், சிக்கல் வரும்போது உதவுவதும் பெண்களின் நெஞ்சங்களில் நம்பிக்கையை வளர்க்கும். அது போலவே குடும்பவாழ்வின் பெண்களுக்கு மாமியார், மருமகள், மற்றும் ஆண்களால் ஏற்படும் கொடுமைகளை ஆங்காங்கு ஏற் படுத்தப்படும் குழுக்கள் மூலமும், காவல்துறை, சட்டவல்லுநர் மூலமும் தீர்வு காணலாம்.

மகளிரைப் பற்றித் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்

மே. அ. பாலமுருகன்
ஈரோடு கலைக்கல்லூரி

உலகப் பொதுமறை திருக்குறள். திருக்குறள் கூறும் கருத்துகள் அன்றும் உண்மை ; இன்றும் உண்மை ; என்றும் உண்மை. பல இன, மத, நாகரிக மக்களுக்கும் பொதுமையான அறத்தைக் கூறும் நூல் இது. வேறு எந்த நூலுக்கும் பாராட்டு நூல் ஒன்று அமையாதபொழுது திருக்குறளுக்கு மட்டும் திருவள்ளுவமாலை அமைந்தது எண்ணதற்குரியது.

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் குறளின்பால் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். வள்ளுவரும் மகளிரும் என்ற நூலில் 'என் வாழ்க்கையை உருப்படுத்திய-உருப்படுத்தி வருகின்ற நூல் திருக்குறளே ஆகும். என் ஆராய்ச்சி என்று சொல்வதனைவிட என் உள்ளத்துடிப்பின் விளக்கம் என்று இதனைக் கூறிவிடலாம்' என்பர்.

திருவள்ளுவரை எல்லா மதத்தாரும் தம்தம் மதத்தைச் சார்ந்தவராகக் கொண்டாடுவர். திருவள்ளுவர் எல்லா மதக் கருத்துகளையும் அடக்கியும் - பொதுப்படவும் கூறியுள்ளார் கலைக்களஞ்சியத்தில் ''எல்லோரும் ஒப்ப முடிந்த கொள்கைகளையே வற்புறுத்திப் பரப்பவேண்டும் என்றெழுந்த தம் முயற்சியில் தாம் இன்ன மதத்தினர் என்பதைத் தெள்ளத் தெளிய வள்ளுவர் கூறாது செல்வதால் அவர் விரும்பாத ஒரு பட்டத்தை அவருக்குச் சூட்டுவதில் பயனில்லை. தேவர் என்றும் நாயனார் என்றும் திருவள்ளுவரை வழங்குவதாலேயே அவரைச்

சமணர் என்பதற்கு இல்லை. அப்பெயர் சமணரல்லாதாருக்கும் வழங்கக் காண்கிறோம்'' என்று வள்ளுவரை இன்ன சமயத்தினர் என்று சிறைப்படுத்துவது பொருந்தாது என்பர் தெ. பொ. மீ. அவர்கள்.

பெண்களின் நிலை

வள்ளுவரும் மகளிரும் என்ற நூலில் தெ.பொ.மீ., பெண்ணின் சிறப்புகளைப் புகழ்வார். திருக்குறள் உரையாசியர்களுள் பரிமேலழகரைச் சிறந்த உரையாசிரியராகப் பலரும் கருதுவர். எனினும் இவருக்குப் பின்வந்த சான்றோர் சிலர் இவர் உரையை மறுத்தும் பொருள் கூறியுள்ளனர். பரிமேலழகர் அறிவை-உரைச்சிறப்பைப் போற்றும் தெ.பொ.மீ., சிலவிடங்களில் அவர் உரையை மறுத்தும் உள்ளார்.

கா. அப்பாத்துரையாரும் பரிமேலழகர், "திருக்குறளில் காணப்படாத பெண்ணடிமை, பிறப்பு வேறுபாடு, சாதி வருண ஆசிரம மரபுகள், வெறுப்புத்துறவு, கொலை வேள்வி, சிரார்த்தம் முதலிய சடங்குகள் ஆகிய கருத்துக்களை அவர் வலிந்து திருக்குறட் கருத்துகளுடன் பொருத்திக் காட்ட முயல்கின்றார்'' என்பார்.

'தற்கொண்டான்', பிறன்பொருளாள்', 'பிறர்க்குரியாள்', 'கொழுநன் தொழுது எழுவாள்', 'அறிவறிந்த மக்கள்', 'கெட்ட தாய்' ஆகிய தொடர்கள் வழிப்பெண்களைப் பரிமேலழகர் அறிவிலியாக்குவர். தெ பொ.மீ, யோ இத்தொடர்களைக் கொண்டே பெண்கள் உயர்ந்தவர்கள், அறிவிற் சிறந்தவர்கள் என்று மறுத்துரையாடுவார்.

1) திருவள்ளுவர் பரத்தையர் பிரிவு பாடாது புதிய முயற்சியில் மருதம் பாடியுள்ளார்.

2) பிரிவு - ஆயிடைப் பிரிவு, சேயிடைப் பிரிவு என்று இருவகைப்படும். வள்ளுவர் ஆயிடைப் பிரிவு பேசாது சேயிடைப்பிரிவைப் பற்றியே பேசுவர்.

3) புலவி நுணுக்கத்தில் பிற பெண்ணுக்காகப் பிரிதலாகத் தலைவி காண்பதும் பொய்க்கனவு.

4) வள்ளுவர் இல்லறத்தில் துறவு பற்றியும், துறவறத்தில் இல்லறம் பற்றியும் பேசுவர்.

5) திருவள்ளுவர் களவியல் கூறுவதால் ஆணையும், பெண்ணையும் ஒத்தவராகவே கருதுவர்.

6) மக்கட்பேற்றில் ஆண் பெண் இருவரையும் குறிப்பர். மேற்கண்ட கருத்துகள் பெண்மைக்கு உயர்வு தேடத் தெ.பொ. மீ., எடுத்துக் கொண்டவைகளாகும்.

'வாழும் இடமோ சிறை; பெயரோ பேய்; நல்வழிப் படலாம் என்றாலோ நல்லறமாகிய சடங்குகளை இயற்றவும் உரிமையில்லை! எத்துணைக் கொடுமை செய்திருந்தால் இத் தகைய பாழும் பிறவி வரும்' எனப் பெண்களே ஏங்கி நின்று அழுவார்கள். பாழும் பெண்ணைப் பெற்றெடுத்த பின்பு தாய் தந்தையரோ, 'பெண்ணின் கற்பைக் காப்பது எப்படி என முக்காடிட்டு வணங்கி மூலையில் பதுங்கினர்' எனப் பெண் பிறவியின் நிலையைக் கூறி, இதற்குப் பெண்களும் பெற்றோர் களுமே காரணமாய் அமைந்தனர் என்பர்.

இந்நிலை பெண்களுக்கு ஏற்படக் காரணம் பின்வரும் நான்கு தவறான கொள்கைகளே என்பார் தெ.பொ.மீ.

1) பெண்களுக்கு உடல்வலியும் இல்லை, மனவ்லியும் இல்லை. ஆதலால் அவர்களின் கற்பினைக் காக்க வேண்டுமானால் வீட்டில் பூட்டி வைத்தல் வேண்டும்.

2) பெண்கள் தம்மயக்கில் சிக்கியவரை அறவழியில் செலுத்துவதில்லை. ஆதலின் அவர்களோடு கூடி வாழும் இல்லறம் நல்லறமன்று.

3) மனவலிவற்ற பெண்களுக்கு உரிமை வழங்க இயலாது. இவர்களுக்கு எனத் தனியே ஒரு வேலையும் இல்லை.

ஆடவர் சொற்படி நடப்பது அவர்களுக்கும் உலகத்திற்கும் நன்மை பயக்கும்.

4) பெண்கள் தாழ்ந்தவர்கள். இவர்கள் உயர்நிலை அடைவது என்பது முடவன் கொம்புத் தேனை அடைவது போலாம். பெண்பிறவியிலும் இழிவான பிறவி வேறொன்றும் இல்லை.

இந்நான்கு கொள்கைகளையும் மறுத்துப் பெண்களுக்குச் சம உரிமையும், உயர்வும் தந்துள்ளார் திருவள்ளுவர் என்ற கருத்தை வலியுறுத்தவே தெ,பொ.மீ., 'வள்ளுவரும் மகளிரும்' என்ற நூலியற்றினார்.

பேதையர்

பெண்டிர் உணர்ச்சி மிக்கவர். பேதைமை நிறைந்தவர் என்று உலகம் கூறும். இவ்விரண்டு பண்புகளும் தேவையானவை என்பது தெ.பொ.மீ., யின் கருத்து. ஆகவேதான் 'உணர்ச்சி மிக்கமையால் பெண் அறிவிழந்தவர்கள் என்றோ உணர்ச்சியிற் குறைந்த ஆண்கள் அறிவில் சிறந்தவர்கள் என்றோ கொள்ள இயலாது. ஆண்கள் அருள் எழ வேண்டிய இடத்திலும் மருள் எழ நிற்பர், பெண்களோ உணர்ச்சியில் சிறந்தவராய்ப் பேதையர் ஆயினர்' என்பார்.

'பேதைமை' என்பது பெருமை தருவதாகும். அவ்வையாரும் 'பேதைமை என்பது மாதர்க்கு அணிகலன்' என்று கூறுவார். ஆகவே, பேதைமை என்பது இகழத்தக்க பண்பல்ல. புகழத் தக்கதே என்றும், பேதைமை பெண்ணுக்கோர் அணிகலன் ; அவ்வணிகலன் இல்லாப் பெண் பேயாவாள் ; பேதைமைக் குணமே பெண்கள் மெல்லியலார் எனப் பெயர் பெறக் காரணமாகியது' எனப் புகழ்வார்.

கூட்டுப் பொறுப்பு

'பெண்களே உலகினை நடத்துவது என்றால் உலகம் பிறரால் வஞ்சிக்கப்பட்டுக் கொலையுண்டு அழியும். ஆடவர்களே

உலகினை நடத்துவது என்றால் உலகம் அவர்களாலேயே கொலையுண்டு அழியும். பெண்டிரும் ஆடவரும் ஒருங்குகூடி உலகினை நடத்தினால் அறிவும் அன்பும் ஒன்றாக இயைந்து உலகெங்கும் அமுத நிலவெறிக்கும் இன்ப வெள்ளம் பொங்கி வழியும். எனவே ஆடவர்க்கும் பெண்கள் சார்பாவார், பெண்ணுக்கும் ஆடவர் சார்பாவார் என ஆணும் பெண்ணும் இணைந்து சரிநிகர் சமானமாக உலக அரங்கில் பங்கேற்று வாழும் பொழுதே பண்பு நிலைக்கும்' என்று ஆண் பெண் ஒருமையை வற்புறுத்துவார்.

'ஆண் பாலர்க்கும் பெண் பாலர்க்கும் உரிமை உண்டு என்ப தனையும் அவரவர் தனித்தனி நின்று அவ்வுரிமைக்குப் போராடாது அன்புருவாகிப் பிணைந்தபொழுதுதான் உண்மை இன்பம் பிறக்கும் என்பதனையும் வலியுறுத்தவே திருவள்ளுவர் காமத்துப்பாலை ஆணியல் என்றும் பெண்ணியல் என்றும் இருவரியல் என்றும் வேறு பிரித்து ஒன்றாக்கிக் கூறுகிறார்' என்பார் தெ.பொ.மீ. திரு.வி.க. அவர்களும், 'இல்லறத்துக்கு இன்றியமையாதவள் பெண்மகளேயாவள் ஆசிரியர் திரு வள்ளுனார் அவளை 'வாழ்க்கைத் துணைநலம்' என்று கூறு கிறார். அத் துணைநலம் எல்லாவழியிலும் ஆண் மகனோடு ஒத்து உரிமை பெற்றிருத்தல் வேண்டும்' என்பார்.

தனி மனிதக் கோட்பாடும்- இன்றைய படைப்பிலக்கியமும்

பிரேமா ரத்னவேல்
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, சேலம்

'தனிமனிதத்துவம்' (Individualism) என்பது இன்றைய அறிவியல் உலகில் எல்லா சமுதாயத்திலும் ஆதிக்கம் செலுத்தக் கூடிய ஒன்றாக அமைந்துள்ளது. இன்று தமிழ் மொழியில் படைக்கப்படுகின்ற நாவல்கள், குறுநாவல்கள், சிறுகதைகள்' புதுக்கவிதைகள் போன்ற இலக்கிய வகைகள் இத்தகைய தனி மனித ஆதிக்கத்தை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றன. சமுதாயத்தில் வேரூன்றி, இன்றைய இலக்கியங்களின் கருப் பொருளாக ஆட்சி செய்து கொண்டிருக்கும் 'தனிமனித தத்துவத்தை' விளக்கி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்'. எனவே ஓரிரு படைப்பிலக்கியங்களை மட்டுமே இங்குச் சான்றாகக் காணலாம்.

தனிமனிதக் கோட்பாடு-விளக்கம்

சமுதாயத்தின் உரிமைகளை விட, தனிமனிதனின் உரிமை களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் சிந்தனைப் போக்கே 'தனிமனிதவாதம்' என்று சொல்லப்படும். 'சுதந்திரம்' என்பது இவ்வாதத்தின் உயிர் மூச்சாக்கும். சமுதாய மரபுகள், விதி முறைகள் போனற இறுக்கமான தடைகளை உடைந்தெறிந்து விட்டு, சுதந்திர சிந்தனைக்கு முதலிடம் கொடுத்து, கட்டற்ற

அக, புற வடிவத்தைக் கொண்டு மலர்வது இக்கோட்பாடாகும்.

தனிமனிதக் கோட்பாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

தனிமனிதக் கோட்பாடு (Cult of Individual) என்ற சிந்தனை கி. பி. 18ஆம் நூற்றாண்டில் நடந்த தொழில் புரட்சிக்குப் பின் ஐரோப்பாவில் முகிழ்த்து எழுந்த ஒரு இயக்க மாகும். கி.பி 17ஆம் நூற்றாண்டு வரை இருந்த நிலவுடைமைச் சமுதாயத்தில், கவிஞர்கள் முடியுடை மன்னர்கள், குறுநில மன்னர்கள், நிலபிரபுகள் போன்றவர்களின் ஆதரவில் முடங்கிக் கிடந்தனர். எனவே, இக்காலக் கவிதைகள் எல்லாம் புரவலர் களை மகிழ வைக்கும் அரண்மனைக்கவிதைகளாகவும், அப் புரவலர்கள் போற்றும் 'காப்பியம்' போன்ற இலக்கிய வகை களாகவும் அப்புரவலர்களை மகிழ வைக்கும் காமப்பாடல் களாகவும் அமைந்திருந்தன.

கி. பி. 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில் புரட்சி சமுதாயத்தில 'நடுத்தர வர்க்கம்' என்ற ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கியதுஇத்தொழிலாளர்சமுதாயம் இக்காலகட்டத்திற்குப் பிறகு ஆற்றல் மிகு சக்தியாக மாறியது. இவ்வர்க்கம் அறிவு, வலிமை. பொருளாதார நிலைகளில் தன்னிச்சையாகச் சிந்திக் கவும் செயல்படவும் தொடங்கியதுடன் தங்கள் சொந்த சாதனை களின் மீதும் வலுவான நம்பிக்கை கொண்டிருந்தது.

பொருளாதார நிலையில் தற்சார்பு பெற்ற இவ்வர்க்கத்தில் இருந்து தோன்றிய கவிஞர்கள் தங்களுக்கென்று ஒரு கோட் பாட்டை உருவாக்கத் தொடங்கினர். வாசகர்கள் கூட்டமும், நூல் வெளியிட்டாளர்களின் பெருக்கமும், தான் எழுதுவதை யெல்லாம் அச்சிட்டு நூல்களாக மாற்ற முடியும் என்ற நிலையும் உருவாகிய போது, இக்கால கவிஞனுக்குத் தன் படைப் பாற்றல் மீது, ஒரு பெரிய தன்னம்பிக்கை ஏற்பட்டது. அதன் விளைவாக. தாங்கள் எழுதிய படைப்புக்களில் தனிமனித உணர்வுக்கும், இதயத் துடிப்பிற்கும் ஏற்றம் தர ஆரம்பித்தனர். மேலும், தங்கள் படைப்புக்களின் தோற்றம், இயல்பு, செயற் பாடு ஆகியவற்றிற்கு முற்றிலும் மாற்றம் தந்தனர். இவற்றில் சமுதாய அமைப்புக்களை எதிர்த்து, அவற்றோடு முரண்படும்

தனிமனிதர்களை உயர்வாகப் படைத்துக் காட்டினர். தங்களின் உள்ள உணர்வைப் (அக வெளிப்பாட்டை) படைப்பின் மைய மாக அமைத்துக் கொண்டனர். அதாவது, 'நான்' (Ego) என்ற உணர்வுக்குத் தங்கள் படைப்புக்களில் சிறப்பிடம் தந்தனர்.

இவ்வாறு, சமுதாயத்தில் தோன்றி வளர்ந்த தனிமனித வாதம், சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் இலக்கியங்களிலும் பெரு மளவு ஆதிக்கம் செலுத்த தொடங்கியது. தனிமனித உரிமை களை அளவு கடந்து வற்புறுத்தி, பொது நலன்களைப் புறக் கணிக்கும் அளவிற்கு, இக்கோட்பாடு இலக்கியங்களில் செல் வாக்குப் பெறத் தொடங்கியது.

தமிழ்ப் படைப்பிலக்கியங்களில் தனிமனித வாத தொடக்கம்

உலக இலக்கியங்களில் கி. பி. 18ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'தனிமனித வாதம்', தமிழ் இலக்கியங்களில் இடம் பெறத் தொடங்கியது 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான். கி.பி. 19ஆம் நூற்றாண்டின் இறுதி வரை சிற்றிலக்கிய படைப்பிலேயே கருத்து செலுத்திய தமிழ்இலக்கிய கர்த்தாக்கள், ஆங்கில மொழி அறிவைப் பெற்ற பொழுது, மேலை நாட்டா ரின் இலக்கியங்களை அறியத் தொடங்கினர். இதனால், தங்கள் இலக்கியப் போக்குகளில் மாற்றம் செய்ய ஆர்வம் கொண்டனர். பாரதியார்தான் முதன் முதலில் மேல்நாட்டு இலக்கியப் போக்கு களைத் தமிழ் படுத்த வேண்டும் என்ற ஆவலைக் கொண்டார். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் நாவல் இலக்கியம் தோன்றி னாலும், மாயூரம் வேத நாயகம்பிள்ளை 'நாவல்' என்ற இலக்கிய வடிவத்திற்குத் தான் சிறப்பிடம் கொடுத்தாரே ஒழிய கோட்பாட்டுகளைப் பற்றிச் சிந்திக்கவில்லை. பாரதியார், வடிவம், உள்ளடக்கம் என்ற இரண்டு நிலையிலுமே மேல் நாட்டின் போக்கைச் சிந்தித்துத் தமிழ்ப்படுத்த நினைத்தார்.

மேலைநாட்டு இலக்கியங்களின், உள்ளடக்கத்தில் சிறப்பிடம் பெறும் 'தனிமனிதக் கோட்பாட்டைப்' பற்றியும் பாரதியார் சிந்தித்திருக்கின்றார். அத்தனிமனித வாதத்தைத் தமிழில் எடுத்தாளும் போது, சமுதாயத்தைப் பாதிக்காத வகையில்,

சமுதாயத்தோடு முரண்படாத வகையில் தம் படைப்பில் அமைத்துக் கொண்டார். பாரதிக்குப் பின் பாரதிதாசன், தேசிய விநாயகம்பிள்ளை போன்றோர் இதே நோக்கோடு, இக்கோட்பாட்டைப் பயன்படுத்தினர். அதன்பின் 1940 முதல் செல்வாக்குப் பெறத் தொடங்கிய புதுக்கவிதையில் இக்கோட்பாடு புது எழுச்சி பெற்று அழுத்தமான இடமும் வகிக்கத் தொடங்கியது. தான், தன் சுகம் என்ற நிலையில் தம் அடிப்படை குடும்ப உறவுகளையே தள்ளி வைத்துப் பார்க்கும் அளவிற்குச் சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றுவிட்ட தனி மனிதத்துவம் 70க்குப் பின், நாவல், சிறுகதை போன்ற படைப் பிலக்கியங்களிலும் தலைமை இடம் பெறத் தொடங்கியது.

இன்றைய படைப்பிலக்கியங்களில் தனிமனித வாதத்தின் ஆதிக்கம்

திருமதி உஷா சுப்பிரமணயன், 'ஒரு புனித பலி' என்ற நெடுங்கதையில் 'தனிமனித ஆதிக்கம்' பற்றியும், அதன் விளைவு பற்றியும் நன்கு சித்தரித்துள்ளார். இன்றைய மக்களின் மனத்தில் கொடூர ஆட்சி செய்து 'சமுதாயம்' என்ற சொல்லிற்கே அழிவைத் தரும் தனிமனித கோட்பாடு, இவர் படைத்த பாத்திரங்களில் உயிர்பெற்று நடமாடுகின்றன.

சுசிலா, அவள் கணவன் இருவரும் முந்தைய தலைமுறைத் தம்பதிகள். 'திருமணம்' என்ற பந்தத்தில் ஒருவரை ஒருவர் சார்ந்து நிற்பவர்கள் 'வீட்டுக்குள் நுழையும் போதே மனைவி வயிறார உணவு அளிப்பாள் என்று திரும்பும் கணவன். மாதமானால் குடும்ப செலவுக்குக் கொண்டு வருவான் என்று நம்பிக்கையுடனிருக்கும் மனைவி, சந்தோசமோ, துக்கமோ கைகோர்த்து உனக்கு நான், எனக்கு நீ என்று சிரிக்கவும் அழவும் துணை உண்டு என்று தைரியப்படும் மனது. ஆயிரம் கோபங்கள், மன வருத்தங்கள், வித்தியாசங்கள் இருந்தாலும் இந்த சார்பு அளிக்கும் தெம்புக்காகவே தொடரும் இல்லறம்- இதுதான் இத்தம்பதியரின் வாழ்க்கை.

சுசிலா, தன் மகன் திருமணத்திற்குப் பின் அவர்கள் தனிக் குடித்தனம் நடத்தும் டெல்லிக்குச் செல்கிறாள். மகன் சுரேஷ்,

மருமகள் சீதா--'இவர்கள் இல்லற உறவு அவளுக்கு வியப் பூட்டியது.

கணவனுக்கு என்று 'தனிமரியாதை' தந்து, அவனை ஒரு உயர்ந்த ஸ்தானத்தில் நிறுத்தி, தன்னை அடிமையாகப் பாவித் துக் கொள்ளாமல், மருமகள் கீதா, கணவனை நண்பனாகப் பாவித்துப் பழகுவதும், இருவரும் ஒருவரை ஒருவர் 'நீ' நான்' என்று பேசிக்சொள்வதும், வீட்டு வேலைகளை ஒருவருக்கொரு வர் பகிர்ந்து கொள்வதும், அவரவருக்கு விருப்பமானவற்றை சமைத்து சாப்பிட்டுக் கொள்வதும் 'தாம்பத்ய அடிமை' வாழ் விற்கு ஒரு மீட்சியாக இருப்பதாக சுசிலா நினைத்துக்கொள் கிறாள்.

கீதா, தன் கணவனிடம், தான் 'மாருதி கார்' புக் செய்து உள்ளதைப் பற்றி சர்வ சாதாரணமாகச் சொல்வதும், அதை சுரேஷ் பாராட்டியதையும் தன் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கிறாள். ஒரு காது திருகு உடைந்ததைக் கணவனிடம் தயங்கி தயங்கி சொல்லி, அவர் கோபதாபத்திற்குக் காத்திருக் கும் தன் நிலையை நினைத்துப் பார்க்கிறாள். பெண்கள் பொரு ளாதார ரீதியில் கணவனைச் சார்ந்து நில்லாமல் இன்று 'சுதந்திரம்' பெற்று, 'கௌரவம்' அடைந்துவிட்டதாக சுசிலா ஒரு முடிவுக்கு வருகிறார்.

மருமகளிடம் தனக்கென்று ஒரு பேரனையோ, பேத்தியை யோ பெற்றுத் தரும்படி கேட்கும்போது, கீதா தரும் பதில் சுசிலாவை முதன் முதலாக திகைக்க வைக்கின்றது. 'நாங்கள் Dink Couple டபுள் இன்கம், நோ கிட் பேமிலி எங்களைப் போன்ற அப்வேர்ட் மொபைல் எக்ஸீக்யுடிவ் வாழ்க்கையெல் லாம் இந்தக் குழந்தை-குடும்பம் என்ற சின்ன வளையத்தைச் சுற்றி வருவதில்லை' என்று கூறும் கீதா-சுரேஷ் தாம்பத்ய வாழ்க்கைக்கும், 'கணவன் மனைவி இருவருடைய சுயத் தேவை களும், திருப்திகளும் பின் தள்ளப்பட்டு, குடும்ப நலத்திற்கு முக்கியத்துவம் தரும்' தங்கள் தாம்பத்ய வாழ்க்கைக்கும் உள்ள முரண்பாடு சுசிலாவைச் சிந்திக்க வைக்கிறது.

சுரேஷின் நண்பர்களான விவேக், சரிதா வாழ்க்கை சுசிலா வை மேலும் திகைப்பூட்டுகின்றது. 'திருமணம்' என்ற பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளாமலேயே தாம்பத்ய உறவு கொண்டு வாழ்ந்து, ஒரு பிள்ளையையும் பெற்றுக் கொண்டவர்கள், அவர்கள். பின், இருவரும் தங்கள் தொழில் முன்னேற்றம் கருதி பிரிகின்றனர். கிரீன் கார்டு கிடைத்ததால் அமெரிக்காவில் போய் தங்கிட நினைக்கும் விவேக்கும், நல்ல ப்ராக்டீஸை விட முடியாது டில்லியிலேயே தங்க நினைக்கும் சரிதாவும், தாம்பத்யத்தை விடத் தொழிலைப் பெரிதாக மதித்ததால் நிரந்தரமாகப் பிரிய, அங்குக் குழந்தை ஒரு சுமையாகி, சரிதாவே ஏற்றுக் கொண்ட அவலம்-உலகம், அதுவும் பெண் உலகம் மாறி விட்டதைச் சுசிலாவுக்கு உணர்த்தியது. பல ஆண்டுகளாகப் பெண்கள் வேண்டி நிற்கும் பொருளாதார ரீதியான, சமூக ரீதியான சுதந்திரம் கிடைத்து விட்டாலும், அது சமுதாயத்தை பலியாடாக்கிவிட்ட கொடுமையைச் சுசிலா உணருகிறாள்.

பொருளாதார மேம்பாடும், பெண் சுதந்திரமும் தனிமனித முன்னேற்றமாகத் திகழ்ந்தாலும், இரண்டு தனி நபர்களின் கூட்டு உறவான திருமணபந்தம் என்ற சமூக அமைப்பை வீழ்ச்சியுற செய்யும் கொடுமையை மனத்தில் அலசி ஆராய்கிறாள். திருமண உறவின் சுத்த சார்பு தன்மை Exploitation க்கு வழி வகுத்தாலும், அது Emotional Security என்பதைப் புரிந்து கொளகிறாள், சுசிலா என்பதுடன் கதை முடிகின்றது.

இக்கதை, தனி மனிதத்துவத்தின் அதீத ஆட்சி, சமுதாயத்தின் அடிப்படைத் தளமான 'குடும்பம்' என்ற அமைப்பை நாசம் செய்யும் கேட்டை நம் கண்முன் படைத்துக் காட்டுகிறது. கதையின் ஆசிரியர், தாம்பத்யத்தைப் பொறுத்தவரை தனிமனிதத்துவம் தேவையில்லை என்ற முடிவைக் கூறினாலும், நடப்பியலில் இதன் எழுச்சி சமுதாயத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கும் அவலத்தை மறுக்க முடியாது.

புதுக்கவிதையைப் பொறுத்தவரை இக்கோட்பாடு, இன்னும் அழுத்தமாக வேரூன்றி ஆலவிருட்சமாக வளர்ந்த நிலையைக் காணலாம்.

செட்டிக் குறிச்சி சிற்பங்கள்

இராம. புருஷோத்தமன்,
பரங்கிப்பேட்டை

காமராசர் மாவட்டம், அருப்புக் கோட்டை வட்டம், செட்டிக்குறிச்சி சிவன் கோயிலில் பல அழகிய கற்சிலைகள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. செட்டிக்குறிச்சி திருவெட்டீசுவரர் சிவன் கோயிலில் இச்சிற்பங்கள் காணப் படுகின்றன. இங்குள்ள சிற்பங்களில் திருவெட்டீசுவரி, திரு வெட்டீசுவரர், சண்டிகேசுவரர், விநாயகர், சுப்பிரமணியர் வள்ளி, தெய்வானை, பைரவர், தட்சிணாமூர்த்தி, நடராசர், சிவகாமி அம்மன் மாணிக்கவாசகர் ஆகிய சிற்பங்கள் குறிப்பிடத்தக்கன.

இறைவன் - இறைவியர் வடிவங்கள்

திருவெட்டீசுவரர் கோயில் கருவறை நடுவே உருளை வடிவான சிவலிங்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆவுடை யாரைச் சுற்றிலும் விரிந்த தாமரை மலர் அழகு செய்கிறது. ஆவுடையாரின் கோமுகி வடதிசை நோக்கி நீண்டுள்ளது. இலிங்க வடிவம் தொன்மை மிக்கதாக காணப்படுகிறது. சுமார் 65 செ. மீ. உயரமுடைய இவ்வடிவம் ஆதிலிங்கம் என்ற பெயரில் வழிபாட்டிலுள்ளது. திருவெட்டீசுவரர் என தொடக்க காலம் தொட்டு அழைக்கப்பட்டு வருகிறது. இக்கோயில் இறைவியின் திருப்பெயர் திருவெட்டீசுவரி அம்மன். அம்மன் சன்னதியில் நின்ற கோலத்தில் தென்திசை நோக்கி காட்சியளிக்கிறது. நீலோற்பலத்தை வலக்கையில் பிடித்து இடக்கையை தாழ்கையாக கொண்டுள்ளது. பாதசரம், இடைக் கச்சை, மேகலை, மார்க்கச்சை, காப்பு, கைவளை, மோதிரம், தோள்வளை, வாகுமாலை, குண்டலங்கள் கரண்டமகுடம், சிரசக்கரம் ஆகிய அணிகலன்கள் அம்மனின் பாதாதி கேசம்

வரை அழகு செய்கின்றது. இச்சிற்பத்தின் உருவமைதி நிற்கும் நிலை, புன்னகைத்தவழும் முகப்பொலிவு, ஆடை அணிகலன்கள் யாவும் பிற்கால பாண்டியர் காலத்தவையாக உள்ளன. இக்கோயில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தியது. எனவே இவ்விரு வடிவங்களை கி. பி. 13 - ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியைச் சார்ந்ததாகக் கருதலாம்.

கருவறை சிற்பங்கள்

இக்கோயில் பாலாலயத்தில் தட்சிணாமூர்த்தியின் சிற்பம் ஒன்று காணப்படுகிறது. கைலாசமலை மீது வீராசனத்தில் அமர்ந்த கோலத்தில் இவ்வுருவம் காணப்படுகிறது. மேற்கைகள் அக்கமாலையும், அனலையும் பிடித்துள்ளன. கீழ்வலக்கை சின்முத்திரையில் அமைந்துள்ளது. இடக்கை முழங்காலின் முன்புறம் நீண்டுள்ளது. இக்கோயில் கருவறையைச் சுற்றியுள்ள தேவ கோட்ட மாடங்கள் தெய்வச் சிலைகளை வைக்கும் வகையில் அமைக்கப்படவில்லை, எனினும் பிற்காலத்தில் அத்தேவகோட்ட மாடங்களில் அவற்றிற்குரிய தெய்வச் சிலைகளை வைத்து, வழிபட்டிருக்க வேண்டும் என்பதை இவ்வுருவத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வுருவம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

மகா மண்டபச் சிற்பங்கள்

இக்கோயில் மகா மண்டபத்தில் நடராசர், சிவகாமியம்மன் மாணிக்கவாசகர் ஆகியோரின் சிற்பங்கள் உள்ளன.

நடராசர் — சிவகாமி

முயலகன் மீது வலதுகாலை ஊன்றி இடது காலை தூக்கி ஆடும் பெருமானாக நடராசர் காட்டப்பட்டுள்ளார். மேற்கைகள் இரண்டும் உடுக்கையையும், அனலையும் பிடித்துள்ளன. கீழ்க்கைகள் இரண்டும் அபய முத்திரையிலும். வேழ முத்திரையிலும் அமைந்துள்ளன. தலையில் கொக்கிறகு அணி செய்ய, தலையின் பக்கங்களை விரிசடைகள் வனப்பூட்டுகின்றன. மகரக்குழையும் ஓலைக்குழையும் காதுகளை அலங்கரிக்கின்றன. நீண்டபதக்கம் கழுத்தை அணி செய்கிறது. தோள்

மாலை தோளில் வீழ்ந்துள்ளது. முன்கையில் காப்பும் இடையில் தொடைவரை ஆடையும் காலில் பாதசரமும் அணி செய்கின்றன. ஆடுகின்ற பெருமானின் இடது காலின் கீழ் ஆடும் அரவம் காட்டப்பட்டுள்ளது. நடராசரின் இடப்புறம் தாமரை பீடத்தில் நின்ற கோலத்தில் சிவகாமியின் உருவம் காணப்படு கிறது. வலக்கை அல்லி மலரைப்பிடித்து இடக்கை தாழ்கையாக அமைந்துள்ளது. கரண்ட மகுடம், வாகு மாலை, கழுத்தணி, இடைக்கச்சை தோள்வளை, தண்டை ஆகிய அணிகள் சிவகாமியை அழகு செய்கின்றன. இவ்விரு சிற்ப வடிவங்களும் கி.பி 17, 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

மாணிக்கவாசகர்

மாணிக்கவாசகர் தம் வலக்கையை சின்முத்திரையில் கொண்டு இடக்கையில் சுவடியேந்தி நின்ற கோலத்தில் காணப்படுகிறார். நீள் செவிகளில் அணியில்லை. தலையிலும் தோளிலும் ருத்திராட்ச மாலைகள் அணிசெய்கின்றன. கழுத்தில் மெல்லிய ஆரம் அழகு செய்கிறது. மார்பின் மீது புரிநூல் காட்டப்பட்டுள்ளது இச்சிலையும் கி. பி. 17, 18 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

பரிவார ஆலய சிற்பங்கள்

இக்கோயிலுக்குரிய பரிவார தெய்வங்களின் சிற்பங்கள் பலவும் இங்கு காணக்கிடக்கின்றன இச்சிற்பங்களில் சண்டிகேசு வரரின் சிற்பம் தொன்மை மிக்கது.

சண்டிகேசுவரர்

இச்சிற்பம் இக்கோயில் திருச்சுற்றுப் பிரகாரத்தின் வடதிசையிலுள்ள சிற்றாலயத்திற்குரியது. தற்போது பாலால யத்தில் வைக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் உயரமான பீடத்தின் மீது வலதுகாலை தொங்கவிட்டு இடது காலை மடித்து இரண்டு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் செதுக்கப்பட்டுள்ளது சண்டிகேசுவரரின் வலக்கை மழுவைப்பிடித்துள்ளது. இடக்கை தொடைமீது அமைந்துள்ளது. ஜடாமகுடம், வாகுமாலை, கேயூரம், காப்பு, சரப்பளி, புரிநூல், இடைக்கச்சை, கழல், பாதசரம் முதலிய அணிகள் சண்டிகேசுவரரை அலங்கரிக்

கின்றன. இவ்வுருவம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. பிற்காலப் பாண்டியர் காலத்து சிற்பக்கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

விநாயகர்

இக்கோயில் திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் இருந்த விநாயகரது பரிவார ஆலயம் சிதைந்து விடவே அவ்வாலயத்திற் குரிய விநாயகப் பெருமானை சிவன் கோயில் மகாமண்டபத்தில் எடுத்து வைத்துள்ளனர். நான்கு கைகளுடன் காணப்படும் இவ்வுருவம் வலது காலை இடது காலை மடித்துள்ளது. கீழ் வலக்கைமுறிந்த தந்தத்தையும், இடக்கை மோதகத்தையும் கொண்டுள்ளன. ஒடுங்கிய யானை முகமும், இலை வடிவான பரந்த காதும், இடம்புரியாக வளைந்த துதிக்கையும், குட்டை யான கை கால்களும் கொண்டு இவ்வுருவம் காட்சியளிக்கிறது. விநாயகரின் துதிக்கை நீண்டு வளைந்து பெரிய தொந்தியின் மீது வீழ்ந்துள்ளது. இவ்வுருவம் கடைப் பாண்டியர் காலத்திய தாகக் கருதப்படுகிறது. காலம் கி பி. 14, 15 ஆம் நூற்றாண்டு.

சுப்பிரமணியர்

இக்கோயில் பரிவார ஆலயத்திற்குரிய சுப்பிரமணியர் உருவம், மயில் வாகனத்தின் முன்பு நின்ற கோலத்தில் நான்கு கைகளுடன் காட்சி அளிக்கிறது. மேல் வலக்கை சக்திபடையை யும், இடக்கை வஜ்ஜிராயுதத்தையும் பிடித்துள்ளன. கீழ்க்கைகள் இரண்டும் அபய-வரத முத்திரையில் அமைந்துள்ளன. சுப்பிரமணியரைச் சுற்றிலும் கல்லாலான கீர்த்தி முக திருவாட்சி அலங்கரிக்கிறது. சுப்பிரமணியரின் பக்கங்களில் வள்ளி தெய்வானை ஆகிய இரு தேவியரும் காட்டப்பட்டு உள்ளனர். வள்ளியின் கையில் தாமரை மலரும், தெய்வானையின் கையில் அல்லி மலரும் காணப்படுகின்றன. சரண்ட மகுடம், மகர குண்டலம், கழுத்தணிகள், கேயூரம். கைவளை, காப்பு, இடைக் கச்சை, பாதசரம் ஆகிய அணிகலன்கள் தேவியரை அணி செய் கின்றன. வள்ளியின் மார்பில் மட்டும் மார்க்கச்சை உள்ளது. இச்சிற்பங்கள் மூன்றின் உருவ அமைப்பும், ஆடை அணிகலன் களின் வடிவமைப்பும் கொண்டு இதனை கி.பி. 18-ஆம் நூற் றாண்டைச் சார்ந்ததாகக் கருதலாம்.

பைரவர்

இவ்வுருவம் நான்கு கையுடன் நாய் வாகனத்தோடு நின்ற கோலத்தில் செதுக்கப்பட்டுள்ளது. பைரவரின் மேல் வலக்கை உடுக்கை பிடித்துள்ளது, இடக்கை நாகத்தை பிடித்துள்ளது. கீழ் வலக்கையில் திரிசூலமும். இடக்கையில் கபாலமும் காணப் படுகின்றன ஜுவாலை மகுடம் தலையை அலங்கரிக்கின்றது. காதுகளில் பத்ர குண்டலங்கள் அணி செய்கின்றன. இடையை சுற்றிலும் அரைஞாண் ஆடும் அரவமாக, இடையில் இருந்து முழங்காலுக்கு கீழ்வரை நாய் வாகனத்தின் மீது கீழ் இடக்கையை ஊன்றிய வண்ணம் பைரவரின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. பைரவரின் வாகனமான நாய் இடப்புறம் தலையை நீட்டிக் கொண்டு வாலை மேல் நோக்கி தூக்கிக் கொண்டு காத்து நிற்கின்றது. நாயின் கழுத்தில் சதங்கையும் மணிவாரும் கால் களில்காப்பும் அலங்கரிக்கின்றன. பைரவரைச் சுற்றிலும் கல்லா லான திருவாச்சி கீர்த்தி முகப்புடன் வனப்பூட்டுகிறது. இவ் வுருவம் கி.பி.17, 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இவ்வால யத்திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் இருந்த பைரவரின் பரிவார சன்னதிக்கு இது உரியது. தற்பொழுது கோயில் மகா மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் குறிப் பிட்ட சண்டிகேஸ்வரர், விநாயகர், சுப்பிரமணியர், பைரவர் ஆகிய சிற்பங்கள் அனைத்தும் இவ்வாலயத்தில் உள்ள பரிவாரலயத்திற்கு உரியவை.

சைவ அடியார்

இவ்வாலயத்தின் மகா மண்டபத்தில் கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சைவ அடியார் ஒருவரின் உருவம் ஒன்று உள்ளது. இதனை பண்டாரம் என்று இவ்வூரார் அழைக் கின்றனர். இவ்வுருவம் உயர்ந்த பீடத்தின் மீது பணிந்து நின்ற நிலையில் இருகைகளையும் கூப்பி வணங்கிய வண்ணம் வடிக்கப் பட்டுள்ளது. தலையைச்சுற்றிலும்சிறிய உத்திராட்ச மாலையும், காதுகளில் இரட்டை வளையங்களும், கழுத்தில் பெரிய ருத்தி ராட்சை மாலையும் நீண்ட பதக்கமும் மணி மாலையும் அலங் கரிக்கின்றன. மேற்கைகளில் ருத்ராட்சை மணிகள் தோள்

வளையமாக அணி செய்கின்றது. இடது மார்பில் இருந்து ருத் ராட்சை மணிகள் கோர்த்த பூனூல் கீழ் வயிற்றை அடைந்து பின் முதுகில் ஏறிச் செல்கிறது. இடையில் இருந்து முழங்கா லுக்கு கீழ்வரை எளிய ஆடை காட்டப்பட்டுள்ளது. இவ்வூரில் தங்கியிருந்து திருப்பணி செய்த சைவ அடியாராக இவ்வுரு வத்தை கூறுகின்றனர்.

இவ்வாறு செட்டிக்குறிச்சி திருவெட்டீஸ்வரர் கோயிலில் பல அழகிய கற்சிலைகள் காணப்படுகின்றன. இவை பிற்கால பாண்டியர் கால முதல் 18-ஆம் நூற்றாண்டுவரை இடைப்பட்ட காலத்தை சார்ந்தவை. இரண்டாவது பாண்டிய பேரரசுக் காலத்திய சிற்பக் கலையின் தொன்மை சிறப்பினையும், கலைச் சிறப்பினையும் அறிந்து கொள்வதற்கு இச்சிற்பங்கள் துணை செய்கின்றன. அவ்வாறு கி.பி. 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் மதுரையை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்த நாயக்கர் மன்னர் காலத்துச் சிற்பங்களும் இங்கு உள.

தவிர 18-ஆம் நூற்றாண்டிலும் 19-ஆம் நூற்றாண்டிலும் இப்பகுதிவாழ் ஜமீன் குடும்பங்களும் பெரியோர்களும், சைவ அடியார்களும் ஊரார்களும், செய்தளித்துள்ள சிற்பங்களும் இத்தொகுப்பில் அடங்குவன. எனவே கடந்த 700 ஆண்டு களுக்கு மேலாக புகழோடு விளங்கிய செட்டிக்குறிச்சியின் சிறப்பினையும், சிற்பவளத்தினையும் அறிந்து கொள்ள இவை பயன்படுகின்றன.

நாட்டுப்புறப் பாடல்களில் உறவினர்கள் பெறும் இடம்

புஷ்பம்,
அரசு மகளிர் கலைக்கல்லூரி, புதுக்கோட்டை.

நாட்டுப்புறப்பாடல்களை கடவுள் வணக்கப்பாடல்கள், சமூகப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், குடும்பம் பற்றிய பாடல்கள், திருமணப்பாடல்கள், தொழில் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் எனப்பலவாறாக வகைப்படுத்துவர். இவ்வகைப் பாட்டினுள் உறவினர்கள். பற்றிய செய்திகள் அதிகமாக இடம் பெறுவது பெண்கள் இலக்கியம் எனப்போற்றப்படும் தாலாட்டு மற்றும் ஒப்பர்ரிப்பாடல்களில் தான். 'உறவினர்கள்' எனும்பொழுது யாருடைய உறவினர்கள் எந்த உறவினர்கள் எனும் கேள்வி எழலாம். பிறந்த வீட்டையும் புகுந்த வீட்டையும் இணைக்கும் பாலமாகத் திகழும் ஒரு பெண்ணினுடைய உறவினர்களே இங்குச் சுட்டப்படுபவர்கள் நாட்டுப்புறப்பாடல்களில் பிறந்த வீட்டினர் என்ற முறையில் பெரிதும் சகோதரன், தந்தை, தாய், அண்ணி (சகோதரனின் மனைவி) ஆகியோரும் புகுந்த வீட்டினர் என்ற முறையில் பெரிதும் கணவன், மாமனார், மாமியார், நாத்தனார் ஆகியோரும் அமைகின்றனர். இவ்வுறவினர்களை, சகோதரன்-கணவன், தந்தை - மாமனார், தாய் - மாமியார், அண்ணி-நாத்தனார் என்ற முறையில் ஒப்பிட்டுக் காணலாம்.

சகோதரன்

ஒரு பெண்ணின் பிறந்த வீட்டுப்பெருமை தாலாட்டு, ஒப்பாரி ஆகிய இரு பாடல்வகைகளிலும் அதிகமாக இடம் பெறுவதைக் காணலாம். தமிழகத்தில் சேகரிக்கப்பட்டுள்ள அனைத்துத் தாலாட்டுப் பாடல்களிலும் தப்பாமல் இடம்

பெறும் உறவினன் பாடலுக்குரிய பெண்ணின் சகோதரனே. இச்சகோதரன் அப்பெண்ணின் குழந்தைக்குத் தாய் மாமன் என்ற உறவினன் ஆகின்றான். தாலாட்டுப்பாடல்களில் இத்தாய் மாமனின் அழகு, வீரம், அவனது செல்வச் சிறப்பு, தன் சகோதரியின் குழந்தைக்கு அவன் செய்யும் சீர்வரிசை ஆகியவை முறையே பின்வருமாறு இடம் பெற்றுள்ளன. சான்று.

அழகு

''சாஞ்சு கணக்கெழுதும் சந்திரரோ உன்மாமன்''

வீரம்

''வேட்டைக்குப்போராக வீரமுள்ள உன்மாமன்''.

செல்வச்சிறப்பு

''தங்கத்தால் கால் நிறுத்தி தாமரையால் பந்தலிட்டு அதில் பிள்ளை. விளையாடுமென்று அறிக்கை உட்டார் உன் மாமன்''.

சீர்வரிசை

''பால் குடிக்கக் கிண்ணி பழந்திங்க சேனாடு நெய்
குடிக்கக் கிண்ணி நில்ம் பார்க்கக் கண்ணாடி
கொண்டைக்குக் குப்பி கொண்டு வந்தார் தாய் மாமன்''.

எந்த நிலையிலும் வெறுப்புக்கு ஆளாகாத பாத்திரமாக சகோதரன் என்ற உறவுமுறை நாட்டுப்புறப்பாடல்களில் இடம் பெறுகின்றது. தனக்குத் தன் சகோதரன் சீர் செய்யவில்லை யென்றாலும் அதற்கு அவன் காரணமல்ல அவனுக்கு வாழ்க்கைப பட்ட மனைவியே காரணமாவாள் என்று தன் சகோதரனின் மனைவியைக் குற்றஞ்சாட்டுகின்ற போக்கினை ஒப்பாரிப் பாடல்களில் காணலாம். குழந்தையின் தாய் மாமன் என்ற நிலையில் மற்ற உறவினர்களைவிட முதன்மையான இடத்தைப் பெறுபவன் ஒரு பெண்ணின் சகோதரனே. இச்சகோதரன் தனக்கும் தன் குழந்தைக்கும் செய்யும் சீர்வரிசைகளால் புகுந்த வீட்டில் தன் மதிப்பு உயருவதை அறிந்த ஒரு பெண் அவ்வுற வுக்குத் தன் பாடல்களில் முதலிடம் தருவதில் வியப்பொன்று மில்லை.

கணவன்

சகோதரனுக்கு இணையாகத் தாலாட்டில் பேசப்படும் மற்றொரு உறவினன் கணவன். தன்னைக்கொண்டவன் என்ற முறையிலும் குழந்தையின் தந்தை என்ற முறையிலும், மேலும் சமுதாயத்தில் தனக்கு மதிப்பும் மரியாதையும் உண்டாவதற்குக்காரணமாய் அமைந்தவன் என்ற முறையிலும் தன் சகோதரனுக்கு இணையான இடத்தைத் தன் கணவனுக்குத் தருகின்றாள், தாலாட்டுப்பாடல்களில் கணவனது அழகு, அவனது வம்சப்பெருமை, அவனது வீரம், அவன் வாங்கிவந்த பொருட்களின் சிறப்பு ஆகியவை முறையே.

அழகு

"சாய்ந்து கணக்கெழுதுவார் சமத்துள்ள உன் தகப்பன்"

வம்சப்பெருமை

'வாசலிலே வண்ண மரம் உங்களப்பா வம்சமே இராசகுலம்'

வீரம்

'புலிப்பால் உறையூத்தி ஆனைப்பால் காயுதில்ல
உங்களப்பா அதிகாரி வாசலிலே".

பொருள் சிறப்பு

'பால்சங்கு போட்டி பவளவாய் நோவுதின்னு
பொன்சங்கு வாங்க போராக உங்களப்பா'

என இடம் பெற்றுள்ளன. இவ்வாறெல்லாம் தாலாட்டில் சிறப்பித்துப் பாடப்படும் கணவன், தவறு செய்கின்றவிடத்து பழித்துப்பாடப்படும் நிலையையும் நாட்டுப்புறப்பாடல்களில் காணலாம். சான்று:

தனது சமையலை நாள் தோறும் குறைகூறிய கணவனைப் பார்த்து "ஆக்கின சோத்துக்கு உண்ணானம் பேசின இந்தாடா மாமா உன் தாலி" என ஒரு பெண் கோபப்படுவதையும், மற்றொரு பெண் தன்னைக்கொடுமைப் படுத்திய கணவனைப் பற்றி அடுத்தவர்களிடம் 'பேயனுக்கு வாக்கைப்பட்டு பெரும்

கஷ்டத்துக்கு ஆளாச்சே' எனக்கூறி வேதனைப்படுவதையும், இன்னொரு பெண் தன்னைவிட்டு வேறு பெண்ணை மணந்த கணவனைப்பார்த்து, 'என்னை விட்டுவிட்டு இளையதாரம் கட்டினயே போறவழியிலே உன்னப் பூ நாகம் தீண்டாதோ' எனத் திட்டிச் சாபமிடுவதையும் காணலாம். போற்றுதல் தூற்றுதல் ஆகிய இருநிலைகளிலும் கணவன் இடம்பெற்றுள்ள போக்கினை இச்சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. தூற்றுதலுக்கும் உட்படுகின்ற காரணத்தினால் சகோதரனோடு ஒப்பிடும்பொழுது கணவன் அவனுக்கு அடுத்த இடத்தினையே நாட்டுப்புறப்பாடல்களில் பெறுகிறான் எனலாம்

தந்தை

தந்தை பற்றிய செய்திகள் எனும்பொழுது அவரது அழகு, அவரது பெருமை, அவர் அளித்த சீர்வரிசை ஆகியவையே தாலாட்டு, ஒப்பாரி ஆகிய இருவகைப்பாடல்களிலும் பேசப்படுகிறது. 'வாழை இலை பரப்பி வந்தாரைக் கையமர்த்தி வருந்தி விருந்து வைக்கும் மகராசா பேரனோ', எனத் தாலாட்டில் தந்தையின் செல்வச்சிறப்பும் அத்தகைய தந்தையை இழந்த போது 'ஆழ்ந்த நிழலுமில்லை என்னைப்பெத்த அப்பா எங்களை ஆதரிப்பார்யாருமில்லை'. எனத் தந்தையின் இழப்பும் மேலும் 'வளர்த்தவர் இருக்கும்வரை வரிசைப் பொங்கல் சீரு வரும் வளர்த்தவர் காலம்போக வாழ மடலிழந்தேன் வரிசைப் பொங்கல் சீரிழந்தேன்' எனச் சீர்வரிசை இழப்பும் ஒப்பாரிப் பாடல்களில் பேசப்படுகின்றது. சகோதரன், கணவன் என்ற உறவுகள் தாலாட்டு, ஒப்பாரிப் பாடல்களில் இடம் பெற்ற அளவிற்கு இவ்வுறவு முறைபெறவில்லை. இதற்குக் காரணம் சகோதரனுக்குச் சொல்லும் பெருமையெல்லாம் பிறந்த வீட்டுப் பெருமை என்ற முறையில் தந்தையையும் சாரும் என்பதேயாகும். எனவேதான் தனிப்பட்ட முறையில் காணும்பொழுது மற்ற இரு உறவுகளையும்விட இவ்வுறவு குறைவான இடத்தைப் பெற்றுள்ளது.

மாமனார்

தாலாட்டில் ஒரு பெண்ணின் தந்தை பெறும் இடத்தையே மாமனாரும் பெறுகின்றார். தன் கணவன் வீட்டார் பெருமை

என்ற அடிப்படையிலேயே தாலாட்டில் மாமனார் சிறப்பிக்கப் படுகின்றார். 'தங்கவளை ஓடுதில்ல உங்க தாத்தா அதிகாரி வாசலிலே' எனத்தாலாட்டில் இவரது செல்வநிலையும் 'மக்களை ஆதரிச்சீர் மன்னவர்க்கே புத்தி சொன்னீர் மக்களை கடத்தி விட்டு மறந்தோடி ஏன் போனீர்' என ஒப்பாரிப்பாடலில் இவரது இழப்பு ஏற்படுத்திய பாதிப்பும் சுட்டிக்காட்டப்படு கின்றது. நாட்டுப்புறப்பாடல்களில் புகுந்த வீட்டு உறவுகளுள் மருமகளின் வெறுப்புக்கு ஆளாகாத ஒரே ஒரு உறவு இம் மாமனார் உறவு ஒன்றுதான் எனக்கூறலாம்.

தாய்

தந்தைக்கு சொல்லப்படும் செய்திகளே தாயைப்பற்றிப் பாடும்பொழுதும் தாலாட்டு, ஒப்பாரி ஆகிய இருவகைப்பாடல் களிலும் இடம் பெறுகிறது. தாய் வீட்டுச் சீதனம், தாய் வீட்டுப்பெருமை எனச் சொல்லப்படுவதிலிருந்தே 'தாய்' என்ற உறவு நாட்டுப்புறப்பாடல்களில் பெற்றுள்ள இடத்தை உணர லாம்.

மாமியார்

மாமியார் மருமகள் உறவுநிலை எந்த நாட்டிலும் சிறப் பித்துப்பேசப்படுவதில்லை. நாட்டுப்புறப்பாடல்களும் அதற்கு விதிவிலக்கல்ல. இவ்விருவருடைய உறவு நிலையைக் குறித்துச் சொல்லும்பொழுது, 'ஒரு பைக்குள் போடப்பட்ட இரு பூனைக் குட்டிகள்' என்பர். மனோ தத்துவ ரீதியாக இவ்வுறவு முரணுக்குப் பலகாரணங்கள் கூறப்படுகின்றன. மாமியாரை ஏசி மருமகளும், மருமகளை ஏசி மாமியாரும் பாடுகின்ற பாடல் கள் பல இடம் பெற்றுள்ளன. மாமியாரைக் கிண்டலாகவும் வெறுத்தும் பாடியுள்ள போக்கை பின்வரும் சான்றுகள் மூலம் அறியலாம். 'ஆனை அடிபோல அதிரசம் நூறு வச்சேன். அத்தனையும் தின்னானே அந்த உதடிமவன்' என மணமகள் கட்சியினர் கிண்டலாகச் சாடுகின்ற போக்கும் 'நாதேரி முண்ட கிட்ட சின்னப்பட முடியலியே', 'புண்ணியரைப் பெத்தெடுத்த பெருங்குரங்கே தொந்தரவு', 'மாமியார் கொடுமையினால் மஞ்சனில்லாப் பாவியானேன்' என்றெல்லாம் வெறுத்துப்

பாடியுள்ள போக்கும் நாட்டுப்புறப்பாடல்களில் மாமியார் என்ற உறவுமுறை பெற்றுள்ள இடத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

அண்ணி

சகோதரனின் மனைவியானவள் குழந்தைக்கு அத்தை உறவாகின்றாள் இவ்வுறவு தாலாட்டில் 'அத்தை அடித்தாளோ அரளிப்பூச்செண்டாலே' என்றும் 'அம்மான்கள் வாசலுக்கு-நீ அரியெடுக்கப் போனாயின்னு பொட்டி பறித்து . உங்களத்தை புறகரையில் விட்டெறிஞ்சா' என்றும் பேசப்படுகின்றது. தாலாட்டிலும் தன் அண்ணியைக்குறை சொல்லிப் பாடியுள்ள போக்கைத்தான் இச்சான்று காட்டுகின்றது. மேலும் தனக்குப் பிறந்த வீட்டுச்சீர் வராமல் தடுப்பவளும் தன் அண்ணியே எனத்தன் வேதனையை ஒப்பாரிப் பாடல்கள் மூலம் வெளிப் படுத்துவதை கிழ்வ்ரும் சான்றுகளால் அறியலாம். 'வீமனெல்லாம் எம் பிறப்பு-வீமனுக்கு வந்தவளே என்னை விலையா மதிக் காளில்ல' என்றும் 'கருணையண்ணன் பெண்டாட்டி காதத்துக் கொரு கல்லெடுத்து கடக்க விரட்டி விட்டாள்' என்றும் 'பொறந்தடெத்துத் தண்ணியின்று பூந்து குளிக்கப்போனா பெரியண்ணிங்கிறவ பூச்சி விழுந்திச்சு இன்னா' என்றும் கசந்து பாடுவதைக் காணலாம். நாட்டுப்புறப்பாடல்களில் மாமியார் என்ற உறவுமுறை பெறும் அதே இடத்தையே அண்ணி என் கின்ற உறவுமுறையும் பெறுகின்றது எனக் கூறலாம்.

நாத்தனார்

சகோதரனின் மனைவி தன் குழந்தைக்குத் அத்தை உறவு முறையாவதுபோல் கணவனின் சகோதரியும் குழந்தைக்கு அத்தை உறவாகின்றாள். தாலாட்டில் பெரும்பாலும் 'அத்தை' என்ற அளவிலேயே செய்திகள் இடம்பெற்றுள்ள காரணத் தினால் 'அத்தை' என்ற இச்சொல்லாட்சி அண்ணியைக் குறிக் கின்றதா நாத்தனார் என்ற உறவைக் குறிக்கின்றதா என்பதை அறிவது சிறிது கடினமாக உள்ளது. ஆனால் இவ்வுறவு ஒப்பாரிப் பாடல்களில் சற்றுத் தெளிவாகக் காணப்படுகின்றது எனலாம்.

சிற்றிதழ்கள்

பெருமாள் முருகன்
சென்னைப் பல்கலைக்கழகம்.

0. சிற்றிதழ்கள் என்ற சொல்லாட்சி மிகக் குறுகிய கால வழக்கு. பத்திரிகை என்ற சொல்லுக்குப் பதிலாக இதழ் என்ற சொல் வழக்கிற்கு வந்தபின் சிறுபத்திரிகைகள் என்ற வழக்கு சிற்றிதழ்கள் என மாறியது.

0. 1. சிற்றேடுகள், இலக்கியப் பத்திரிகைகள் எனவும் இவற்றை வழங்குவது உண்டு. சிறுபத்திரிகை என்ற தொடர் எந்தக் காலகட்டத்தில் வழக்கிற்கு வந்தது என்பதை அறுதி யிட்டுக் கூற இயலாவிடினும், அத்தொடர் தரும் பொருட் பின்புல அடிப்படையில் பத்திரிகைப் பெருக்கத்திற்குப் பின்னரே வந்திருக்க வேண்டும் எனக் கூற இயலும்.

0. 2. இதழ்களைப் பெரும் பத்திரிகைகள், சிறுபத்திரிகை கள் என இரு பிரிவாகப் பிரித்து, வணிகத்தை நோக்கமாகக் கொண்டு, மிக அதிக அளவு விற்பனையாகும் இதழ்களைப் பெரும்பத்திரிகைகள் என்றும், பிற இதழ்கள் அனைத்தையும் சிறுபத்திரிகைகள் என்றும் வசதிக்காக ஆய்வாளர் குறிப்பர். இப்பகுப்பு பொருத்தமானதன்று.

0. 3. கலை, இலக்கியங்களை வணிகத்திற்குப் பயன்படுத் தும் பெரும் பத்திரிகைகளுக்கு மாறுபட்ட நோக்கில் செயல் படுவன கலை இலக்கிய இதழ்கள். சான்றாக, ஒரு திரைப் படத்தை விமர்சிக்கும்போது வணிக இதழ்கள் மேலோட்டமான கண்ணோட்டத்துடனும், கலை இலக்கிய இதழ்கள் அதன் கலைத் தன்மை, சமூக நோக்கு ஆகியவற்றைப் பற்றிஆழமான கண்ணோட்டத்துடனும் விமர்சிக்கின்றன,

0.4. எனவே, பொருளாதாரம் என்ற நிலையில் மட்டு மல்லாது நோக்கிலும் பெரும்பத்திரிகைகள் எனப்படும் வணிக நோக்கு இதழ்களுக்கு மாறுபட்ட நிலையில் செயல்படும் கலை இலக்கிய இதழ்களையே சிற்றிதழ்கள் என்ற சொல்லாட்சி குறித்தல் வேண்டும். மேலும், கலை இலக்கிய இதழ்களைச் சார்ந்தோரே சிறுபத்திரிகைகள் என்ற வழக்கைப் பயன்படுத்தி னர்; பயன்படுத்துகின்றனர். 'தமிழில் சிறுபத்திரிகைகள்' என்ற 'தீபம்' தொடர் கட்டுரையில் கலை இலக்கிய இதழ் களையே சிறுபத்திரிகைகள் என்று வல்லிக்கண்ணன் குறிப் பிட்டுள்ளார்.

0.5. எனவே, படைப்பிலக்கியத்தை நோக்கமாகக் கொண்டவையும், பிற கலைகளுக்கும் இடமளிப்பவையுமான, வணிக நோக்கமில்லாத கலை இலக்கிய இதழ்களையே சிற் றிதழ்கள் என அழைக்கலாம். இவ்விதழ்கள் பற்றிய பொது நிலை ஆய்வே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1.0. சிற்றிதழ்களின் மூவகை

சிற்றிதழ்களைப் பொதுவாக மூவகையாகப் பிரிக்கலாம். அவை,

1.1. தனிமனிதர் நடத்தும் இதழ்கள்
1.2. குழு நடத்தும் இதழ்கள்
1.3. இயக்கம் நடத்தும் இதழ்கள் என்பன.

1.1. தனிமனிதர் நடத்தும் இதழ்கள்

1.1.1. வணிக நோக்கு இதழ்களோடு ஒத்துப் போகாத- ஒத்துப்போக இயலாத படைப்பாளி தம் படைப்புகளையும், தம் போன்றோர் படைப்புகளையும் வெளியிட ஓர் இதழைத் தொடங்குகின்றார். மேலும் நல்ல இலக்கியத்தைச் சமூகத்திற்கு இனம் காட்ட வேண்டும் என்ற நோக்கிலும் சிலர் முயன்று இதழ்களைத் தொடங்குகின்றனர்.

1.1.2. இத்தகைய இதழ்கள் அத் தனிமனிதரின் பொருளாதார நிலையை அடிப்படையாகக் கொண்டே இயங்கு

கின்றன. அத்தனிமனிதரின் பொருளாதார நிலையில் பாதிப்பு நிகழும்போது அவ்விதழ் நிறுத்தப்பட்டு விடுகின்றது. இதற்குச் சான்றாக, சி.சு. செல்லப்பா அவர்கள் நடத்திய 'எழுத்து' இதழைக் கூறலாம்.

1. 1. 3. சிலர் இதழை நிறுத்தாமல் நடத்தியே தீருவது என்ற குறிக்கோளுடன் பல துன்பங்களுக்கிடையிலும் விடாது நடத்துகின்றனர். அத்தகைய இதழ்களும் அத்தனிமனிதரின் வாழ்வுக்குப் பிறகு நின்றுவிடுகின்றன. நா. பார்த்தசாரதி அவர்கள் நடத்திய 'தீபம்' இதழ் அவருடைய இறப்புக்குப் பின் இரண்டு இதழ்களோடு நின்று போனது.

1.2. குழு நடத்தும் இதழ்கள்

1. 2. 1. கலை, இலக்கிய ஆர்வம் கொண்ட சிலர் ஒரு குழுவாக இணைந்து இதழ்களைத் தொடங்கி நடத்துகின்றனர். இத்தகைய இதழ்களே சிற்றிதழ்களில் பெரும்பாலானவை யாகும். இவ்வகை இதழ்களும் பொருளாதார அடிப்படை இன்மையால் நின்று போகின்றன. 'அன்னம் விடு தூது' இவ் வகையில் நின்றுபோன இதழாகும்.

1.2.2. நடத்தும் குழுவினரிடையே தோன்றும் கருத்து வேறு பாடுகளால் இதழ்கள் நிறுத்தப்படுவதும் உண்டு. 'கசடதபற', 'பிரக்ஞை' போன்ற இதழ்கள் நிறுத்தப்பட்டதற்கு இவ்வகைக் கருத்து வேறுபாடுகளே காரணமாயின.

1.3 இயக்கம் நடத்தும் இதழ்கள்

1.3.1. அரசியல் சார்ந்த - சாராத ஓர் இயக்கம் கலை இலக்கியத்தின் வழி தனது கருத்துகளைப் பரப்பும் பொருட்டு இதழ் தொடங்குகின்றது. இவ்வகை இதழ்கள் கொள்கை பரப்பலை நோக்கமாகக் கொண்டிருப்பினும், கலைத் தன்மையை விடுத்து, இலக்கியத்தை மலிவுபடுத்துவதில்லை. எனவே, இவையும் சிற்றிதழ்களாகக் கருதப்படுகின்றன.

1 3. 2. இயக்கம் நடத்தும் இதழ்கள் பெரும்பாலும் நின்று போவதில்லை. காரணம் அவற்றின் பொருளாதாரம்

விற்பனையைப் பொறுத்து அமைவதில்லை. இயக்கம் அளிக்கும் உதவியைக் கொண்டு அவை தொடர்ந்து நடக்கின்றன. முப்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவரும் 'தாமரை' இவ்வகை இதழுக்குச் சான்றாகும்.

2. 0. கலை, இலக்கியப் பணிகள்

2.1. நடத்துவோர், கொள்கைகள் என்ற நிலைகளில் வேறுபட்டாலும், இவ்வகை இதழ்களின் அடிப்படை நோக்கம் ஒன்றாகவே இருக்கிறது. ஆகவே, விற்பனையில் வணிக நோக்கு இதழ்களைச் சிறிதும் எட்ட இயலாது போனாலும், இலக்கிய வரலாற்றில் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளும் அளவுக்குச் சிறந்த பணிகளைச் செய்கின்றன.

2. 2. சிறுகதைகளில் புதுப்புது சோதனை முயற்சிகளை மேற்கொண்டு, பல வளமான இலக்கியங்களை இவ்விதழ்கள் தமிழுக்கு வழங்கியுள்ளன. தமிழ்ச் சிறுகதை முன்னோடிகளின் படைப்புகளைத் தாங்கிவந்த 'மணிக்கொடி', ஜெயகாந்தன் போன்றோருக்குத் தளம் அமைத்துக் கொடுத்த 'சரஸ்வதி', எழுபதுகளில் உருவான பல எழுத்தாளர்களுக்குக் களமான 'கசடதபற', 'பிரக்ஞை', 'நடை', 'அஃ' போன்ற அனைத்து இதழ்களும் இவ்வகை முயற்சிக்கு இடம் கொடுத்துத் தமிழை வளப்படுத்தி உள்ளன.

2. 3. புதுக்கவிதைக்கு இலக்கிய நிலையைப் பெற்றுத் தந்த பெருமை 'எழுத்து', 'வானம்பாடி' போன்ற இதழ்களையே சாரும். அதேபோன்று நாடக முயற்சிகளுக்குக் களனாக அமைந்து ந. முத்துசாமி, ஜெயந்தன் உள்ளிட்ட நாடக ஆசிரியர்களை இனம் காட்டியதோடு, புதுவகை நாடக ஆக்கங்களை உருவாக்கிய பெருமையும் இச்சிற்றிதழ்களுக்கே உரியன.

2. 4. நவீன ஓவியம், திரைப்படம், நாட்டுப்புறவியல் உட்பட்ட பல கலைத்துறைகளிலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஆழமான விமர்சனக் கட்டுரைகளையும், அறிமுக எழுத்துகளையும் கொடுத்தவை இத்தகைய சிற்றிதழ்களே. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை மொழிபெயர்த்துத் தமிழுக்குக் கொண்டு வந்ததிலும் சிற்றிதழ்களின் பங்கு பெரிதாகும்.

2. 5. இவ்வாறு கலை, இலக்கியப் பணிகள் செய்வதன் வழி இலக்கிய வரலாற்றில் தம்மை நிலை நிறுத்திக் கொள்கின்றன சிற்றிதழ்கள்.

3 0. சிற்றிதழ்களின் தன்மைகள்

3. 1. சிற்றிதழ்கள் விளம்பரப் பற்றின்றி, நோக்கத்தினை முன்னிறுத்திச் செயல்படுகின்றன. மக்களைக் கவரும் அமைப்பு முறைகளை இவை மேற்கொள்வதில்லை; உள்ளடக்கத்திலேயே பெரும் கவனம் செலுத்துகின்றன.

3. 2. இலக்கியத்தில் சோதனை முயற்சிகளை மேற்கொள் வதில் இவ்விதழ்கள் முன்னிற்கின்றன. புதிய எழுத்தாளர் களுக்கு இவ்விதழ்களே களமாக அமைகின்றன. இவ்விதழ்களின் வழித் தெரிய வந்தவர்களையே வணிக நோக்கு இதழ்கள் பின்னர்ப் பயன்படுத்திக் கொள்கின்றன.

3. 3. புதுமை இலக்கியத்திலே இவ்விதழ்களின் கவனம் செல்லுகின்றது. பழைய இலக்கியங்களைக் குறித்த பார்வை வெளிப்பாடுகள் எதுவும் இவ்விதழ்களில் இடம்பெறுவதில்லை.

3. 4. கலைகள் குறித்த அறிமுகமும், அவை குறித்த விமர் சனக் கட்டுரைகளும் இடம் பெறுகின்றன. அரசியல், மிக விரிவான நிலையில் இடம் பெறுவதில்லை. ஆனால், அரசியல் குறித்த வெளிப்பாடுகள் படைப்புகளிலும், கட்டுரைகளிலும் காணப்படுகின்றன.

3. 5. இவ்வகைத் தன்மைகளைப் பெற்றுள்ள சிற்றிதழ்கள் படித்தவுடன் தூக்கி எறிந்துவிடும் தன்மையன அல்ல; போற்றிப் பாதுகாக்க வேண்டியவை.

4. 0. சிற்றிதழ்களின் இன்றைய நிலை

4. 1. முப்பதுகளிலிருந்து சிற்றிதழ்கள் பல சாதனைகளைச் செய்து வருகின்றன. ஒவ்வொரு கால கட்டத்திலும் சில இதழ்கள் புது வேகத்துடனும், சமூக அவலங்களைத் தீர்த்து விடும் நோக்கத்துடனும் புறப்பட்டு வந்திருக்கின்றன.

4. 2. எழுபதுகளைச் சிற்றிதழ்களின் நற்காலமாகக் கருதலாம். அக்கால கட்டத்தில் வெளியான இதழ்கள் படைப்பிலக்கியத் துறை மட்டுமன்றிப் பிற கலைத்துறைகளிலும் தமது சுவடுகளைப் பதித்தன. எழுபதுகளில் துவங்கிய சிறு பத்திரிகைகள் கலாச்சாரத்தின் பிற துறைகளான நவீன ஓவியம், நவீன சினிமா, நாட்டியம், அரசியல் சமூகக் கோட்பாடுகள், பின்னாட்களில் நவீன நாடகம் - இவை பற்றிய விமர்சனங்களையும் முன் வைத்தன.

4. 3. இவ்வாறு பல துறைகளிலும் கால்பதித்த சிற்றிதழ்கள் எண்பதுகளில் குறிப்பிடத்தக்க அளவு வெளிவரவில்லை. புற்றீசல் போலப் பல இதழ்கள் சில சமயம் வெளிவந்த போதும் அவை குறிப்பிடும் தரத்தில் இருக்கவில்லை 'கணையாழி', 'தாமரை' போன்ற இதழ்களுக்குச் சாதித்த சலிப்பு வந்துவிட்டது 84 இல் பத்து இதழ்கள் வெளிவந்த 'அன்னம் விடு தூது' ஓரளவு குறிப்பிடத்தக்கதாகும்.

4. 4 எண்பதுகளில் சிற்றிதழ்கள் வேகம் கொண்டு வெளிவராமைக்குக் காரணம் எழுபதுகளில் ஏற்பட்ட சிற்றிதழ் முயற்சிகள் தோல்வியைச் சந்தித்ததன் பாதிப்பே என்று கூறலாம். ஆனால், அத்தகைய முயற்சிகள் அவசியம் என்று இன்றைய நிலையில் உணரப்பட்டிருக்கிறது ஆகவே, தற்போது சில இதழ்கள் தோன்றியுள்ளன. 'காலச்சுவடு', 'மன ஓசை', 'கனவு', 'முன்றில்', 'நிகழ்' போன்ற இதழ்கள் தற்போது வெளிவருகின்றன. எழுபதுகளில் பல எழுத்தாளர்களைச் சிற்றிதழ்கள் உருவாக்கியதைப் போன்று, இன்றும் நல்ல எழுத்தாளர்களை உருவாக்க இவ்விதழ்கள் முயல வேண்டும்.

5. 0. சில சிக்கல்கள்

இவ்வாறான சிற்றிதழ்கள் நடத்துவதில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்குக் குறிப்பிடலாம்.

இந்திய விடுதலைப் போராட்டம் தமிழ்ப் புனைகதைகளில் அதிகம் இடம்பெறாமைக்குரிய காரணிகள்

ம. மதியழகன்
புதுவைப் பல்கலைக்கழகம்.

இந்தியாவைப் பொறுத்தவரை தேசிய விடுதலைப் போராட்டம் கல்கத்தா, பம்பாய், சென்னை என்ற மூன்றிடங்களை மையங்களாகக் கொண்டு செயற்பட்டது. அவ்வம் மாநிலங்களில் அரவிந்தர், சுபாஷ், திலகர். வ.உ.சி., பாரதி, வ.வே.சு. ஐயர் போன்றவர்கள் தீவிரமாகப் பங்குபற்றிய வரலாறு குறிப்பிடத்தக்கதாகும். எனினும், தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில், புனைகதைகளான நாவல், சிறுகதைகளில் இந்திய விடுதலைப் போராட்டம் பற்றிய செய்திகள் குறைந்த விழுக்காடே இடம்பெற்றுள்ளது. சமுதாய நிகழ்வுகள் இலக்கியங்களில் பிரதிபலிக்கப் படுமென்று சொல்லப் படுகிறது, ஆனால், பேரியக்கமாக நிகழ்ந்த தேசிய விடுதலைப் போராட்டம் ஆங்காங்கே சுட்டிச் செல்லப்படுமளவிற்குத் தான் இடம் பெற்றுள்ளது. தமிழ் நாவல்களில் தேசியத் சிந்தனைகள் சிறுசிறு தகவல்களாகவும் கதைகளோடு ஒட்டாத வெறும் குறிப்புக்களாகவுமே காணப்படுகின்றன. முழு நனவு நிலையோடு கூடிய செயற்பாடாக நாவலாசிரியர்கள் அவற்றைக் கையாண்டனர் என்று சொல்வதற்கில்லை என்ற கருத்து முன் வைக்கப்படுகிறது.

தேசிய விடுதலை வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் முத்திரை பதித்த பாரதி விடுதலைப் போராட்ட நிகழ்வு

களான சிப்பாய்க் கலகம் (1857), வங்கப்பிரிவினை (1905), பஞ்சாப் படுகொலை (1919) போன்றவற்றைத் தம் கவிதையில் சுட்டிக்காட்டாமை வியப்பிற்குரியதாக உள்ளது. தேசிய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு, தலைமறைவாக வெளிநாடுகளில் அலைந்து இறுதியில் புதுச்சேரி அடைந்த வ.வே.சு. ஐயர் தனது சிறுகதைகளில் விடுதலைப் போராட்டம் தொடர்பான கருத்துக்களை முன்வைக்கவில்லை.

நாவல்களில் தேசியக் கருத்துக்களை அதிகம் கையாண்டவர் கல்கி என்ற கருத்துண்டு. விடுதலைக்கு முன்னும் பின்னுமாக அவர் நாவல்களைப் படைத்துள்ளார். விடுதலைக்கு முன் 5 நாவல்களை (கள்வனின் காதலி, தியாக பூமி, மகுடபதி, அபலையின் கண்ணீர், சோலைமலை இளவரசி) அவர் எழுதியுள்ளார். இந்நாவல்களில் கா.சி. வேங்கடரமணியின் 'தேச பக்தன் கந்தன், (1932) போன்ற நாவல் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. கந்தனைப்போன்ற அரசியல் சார்பு கொண்ட கதைமாந்தர்கள் படைக்கப்படவில்லை (Kandan is an exponent of Gandhian politics) இந்நாவல்களில் காந்தியடிகளோடு தொடர்புடைய அரசியல் நிகழ்ச்சிகள் காட்டப்படாமல் காந்திய அருமையின் ஆற்றலை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளாகவே காட்டப்படுகின்றன. விறுவிறுப்பான கதையொன்றினைச் சொல்ல முனைந்த கல்கி, காந்திய அரசியலைப் பின்னணியாகப் பயன்படுத்திக்கொண்டாரேயொழிய, அதற்கு முதன்மையளித்து வெளிப்படுத்தல் அவருடைய நோக்கமன்று என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய விடுதலை இயக்கம் தமிழ்ப் புனைகதைகளில் இடம்பெறுதல் என்பது அரசியல் போராட்டங்களைக் கருவாக கதைப்பின்னல்களாக கொண்டோ அப்போராட்டங்களில் கதைமாந்தர் ஈடுபடுதல் என்ற நிலையிலோ காட்டப்படுவதாகக் கொள்ளப்படுகிறது. அதாவது அகநிலைத்தாக்கம் பெற்றிருப்பது. காந்தியின் அரசியல் போராட்டங்களான ஒத்துழையாமை இயக்கம் (1920), உப்புச்சத்தியக்கிரகம் (1930), வெள்ளையனே வெளியேறு இயக்கம் (1942) போன்றவை இடம்பெறுதல் இங்குக் கொள்ளப்படுகிறது. சமூக சீர்திருத்தக்

கருத்துக்கள் இடம் பெறுதல் இங்கு எடுத்துக்கொள்ளப்பட வில்லை.

உண்மையில் காந்தியுக அரசியல் இயக்கமானது அவர் அமரராகி ஏறத்தாழ இருபதாண்டுகளுக்குப் பின்னரே தமிழ் நாவல்களில் ஓரளவாவது குறிப்பிடத்தக்க பொருளாக எடுத் தாளப்பட்டுள்ளது என்ற கைலாசபதியின் கூற்று மேற்கூறிய கருத்துக்கு அரண்செய்கிறது.

விடுதலை இயக்க நிகழ்வுகள் தமிழ்ப் புனைகதைகளில் இடம்பெறாமை என்பது இந்தியா விடுதலை பெற்றவரை (1947) என்பதை எல்லையாகக்கொண்டு இங்கே ஆராயப் படுகிறது இப்போக்கிற்கான காரணிகளை இலக்கியத்தின் சமூகவியற்பண்பு, விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழக அரசியல் நிலை முதலியவற்றை நோக்கி முடிவு செய்யப்பட வேண்டும்.

இலக்கியத்தின் சமூகவியற் பண்புகள்

ஆங்கிலக் கல்வியின் பயனாகத் தமிழில் நாவல், சிறுகதை என்ற புது வகை இலக்கிய வடிவங்கள் அறிமுகப்படுத்தப் ப்ட்டன, தமிழ் மக்களுக்கு அவை அறிமுகமாகும்போது, புதிய இலக்கிய வகை, புதுவகை உரைநடை, காப்பிய, புராண நிகழ்ச்சிகளுக்கு மாறுபட்ட நடப்பியல் நிகழ்ச்சிகள் போன்ற நிலைகளில் எழுத்தாளர்களுக்குச் சில சிக்கல்களை ஏற்படுத்தியது. இச்சிக்கலுக்கிடையே அரசியல் கருத்துக்களை இடம்பெறச் செய்வதென்பது மேலும் சிக்கலுக்குரியதாகி விடும். அஃதன்றி, தொடக்க கால நாவலாசிரியர்களுக்கு சமுதாய நிகழ்வுகளைக் கூர்ந்து கவனிக்கும் ஆற்றலும் அதனை இலக்கியத்தில் எடுத் தாளுகின்ற திறனும் இருந்திருக்க முடியாது. தமிழில் நாவல் ஒரு திட்டமிட்ட இலக்கிய ரூபமாக அமையவேண்டும் என்ற நோக்கமும் கொள்கையும் நாவல் எழுதுவோரிடையே கடந்த 30,35 ஆண்டுகளுக்குச் சற்று முன்பின்னாகத்தான் தோன்ற ஆரம்பித்தது என்ற கருத்துண்டு. தொடக்க நிலையில், ஆங்கில நாவல்களைப் படித்து, அதுபோன்று தமிழிலும் அறிமுகப் படுத்தவேண்டும் என்ற ஆசை அவ்வெழுத்தாளர்களுக்கு

இருந்ததேயொழிய, அவ்விலக்கியவழி அரசியல் கருத்துக்களை வெளியிடவேண்டும் என்ற தெளிவு நிலை இருக்கவில்லை. அதனால்தான் தொடக்ககால நாவல்களில் சீர்திருத்தக் கருத்துக்கள், சொற்பொழிவு போல ஆசிரியர்களால் எடுத்தாளப் பட்டதேயன்றி கதையோடு ஒட்டிய நிகழ்வாக இல்லாதிருந்தன.

அந்நியரின் வரவு, அதனால் ஏற்பட்ட பண்பாட்டுச் சிக்கல்கள் தான் அப்போதுள்ள சிக்கலாகப் பட்டதேயன்றி, அரசியலோ பிறவோ எவ்விதத்திலும், பாதிப்பை ஏற்படுத்த வில்லை. மேலும், அரசியல் போராட்டம் வெகுஜன இயக்க மாக காந்தியின் தலைமைப் பொறுப்பிற்குப் பிறகே (அதாவது 1920 க்குப் பின்) ஏற்படுகிறது. அதுவரை அரசியல் எதிர்ப் புணர்வு என்பது படித்த ஒரு சிலரிடத்தில் மட்டுமே நிலவியது எனலாம் விடுதலை இயக்கத்தில் அரசியல் விடுதலை, சமூக விடுதலை என்ற இரு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இதில் தொடக்க கால நாவல்கள் சமூக விடுதலை தொடர்பான பெண் கல்வி, சாதிப் பிரிவினை, மதுவிலக்கு, தீண்டாமை நீக்கம் போன்ற சீர்திருத்தக் கருத்துக்களையே கொண்டு இருந்தன.

சமூகத்தின் அடிப்படை நிறுவனங்களில் மாற்றம் ஏற்படும் போது குறிப்பாகக் குடும்பத்தின் கட்டமைப்பில் அல்லது பொருளாதார வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் முரண்பட்ட சமூக மதிப்புக்களைத் தோற்றுவிக்கும்போது அவை இலக்கியங் களில் வெளிப்படுகின்றன என்ற ஜான் ராக்வெல்லின் கூற்று இங்கு ஒப்பிடத்தக்கது.

ஆங்கிலேயரின் ஆட்சி அடிப்படைப் பண்பாடுகளாகக் கருதப்பட்ட மதம், பழக்க வழக்கம் போன்றவற்றில் மாறுதல் களை ஏற்படுத்தியதால் பண்பாட்டைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற உந்துதலே இலக்கிய வெளிப்பாடாகத் தொடக்கத்தில் எழுந்தது எனலாம்.

சமுதாயத்தில் நடக்கும் (பாதிக்கும்) மனித உணர்வுகள் தான் படைப்பாளர்களுக்குப் படைப்புக்கான தூண்டுதலை அளிக்கிறது. வரலாற்று நிகழ்வுகளைவிட அதனடியாய் நிகழும்

மனித உறவுகள், எண்ணங்கள் அவற்றைப் படம் பிடிப்பதே படைப்பாளனின் உந்துதலாக இருக்கமுடியும். 'A Novelist should concern himself with inner matters not with history' என்ற பங்கிம் சந்திரரின் கூற்று மேற்கூரிய கருத்து அரண்செய் கிறது. வங்கப்பிரிவினையும், வட்டமறுப்பு இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் போன்ற அரசியல் போராட்டங் களும் எழுத்தாளர்களை அதிகம் பாதிக்காததோடு குழந்தைத் திருமணம், விதவைக் கண்ணீர், மதுவின் சீரழிவு, தீண்டாமை போன்ற சமூக உணர்வுச் செயல்களே அவர்களுக்குப் படைப்புக் களான மூலங்களையும் கொடுத்தன. எனவேதான், சமூக சீர் திருத்தக் கருத்துக்கள் அதிகம் இடம் பெறவும் அரசியல் நிகழ்ச்சிகள் அதிகம் காட்டப்பெறாமலும் தமிழ் இலக்கியம் திகழ்ந்ததை உணரமுடிகிறது.

இந்நிலை, கன்னடம், மலையாளம் போன்ற தென்னிந்திய மொழிகளிலும் காணப்படுகின்றது. கன்னட புனைகதை இலக்கியத்தில் 1942–க்குப் பிறகே விடுதலை இயக்கக் கருத்துக் கள் வெளிப்பட்டன. 1920,30-களில் ஒரு மலையாள நாவல் கூட தேசியக் கருத்துக்களை தெரிவிக்கவில்லை என்ற அனுஜனின் கூற்று இங்கு நோக்கத்தக்கது.

சிறுகதை இலக்கியத்தை எடுத்துக்கொண்டோமானால் சிறுகதைகளில் நிகழ்ச்சியைவிட நிகழ்ச்சியின் அடியாய்த் தோன்றும் உணர்வுகளே சிறப்பிடம் பெறுகின்றன. சிறுகதை யின் பண்பு விடுதலை இயக்க நிகழ்ச்சிகளைக் காட்டுவதற்கு ஏதுவாக இல்லாமல் மெல்லிய மன உணர்வுகளைச் சித்திரிக்கும் இயல்பினதாக விளங்குகின்றது. எனவே, அரசியல் நிகழ்ச்சிகள் சிறுகதைகளில் இடம் பெறாமை வியப்பிற்குரியதன்று. செம்மை யான சிறுகதை இலக்கியத்திற்கு மணிக்கொடி இயக்கம் வித் திட்டு அதனை வளர்த்தது என்பது இலக்கிய வரலாறு உணர்த் தும் உண்மையாகும். அம்மணிக்கொடி எழுத்தாளர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது இலக்கியப் பரிசோதனைகளே யன்றி, இலக்கியம்வழி அரசியல் கருத்துக்களை மக்களுக்குக் கொடுக்க் வேண்டும் என்ற எண்ணம் இல்லை. கலை கலைக்

காக என்ற தூய இலக்கிய நெறியைப் பின்பற்றுபவர்களாகவும் இலக்கியத்தைப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்துவதை எதிர்ப் பவர்களாகவும் இயங்கினர். இந்நிலையில் விடுதலை இயக்கக் கருத்துக்களை அவர்களால் உருவாக்கப்பட்ட சிறுகதைகளில் எதிர்பார்க்கமுடியாது. மணிக்கொடி எழுத்தாளர்களின் படைப் புக்களை நோக்கும் போது, தமிழகத்தில் விடுதலை இயக்கப் போராட்டம் நடந்ததாகவோ அவ்வியக்கம் வெகுசன இயக்க மாக மாறியதாகவோ, அம்மாற்றங்கள் எழுத்தாளர்களைப் பாதித்ததாகவோ அறியமுடியாது. அரசியல் இயக்கமெல்லாம் இலக்கியத்திற்குப் புறம்பானவை என்று விதிமுறை வைத்துக் கொண்டது போல் நடந்துகொண்டார்கள் மணிக்கொடிக் காரர்கள் என்ற கருத்து இங்கு அரணாக உள்ளது. மேலும் ஆங்கில ஏகாதிபத்தியத்தில் அடக்குமுறைக்குப் பயந்து கொண்டு பலர் இககருத்துக்களை எழுத முன்வரவில்லை. இதனை க.நா. சுப்பிரமணியன் இக்கட்டுரையாளரிடம் பேசும் போது குறிப்பிட்டுள்ளார். மணிக்கொடி எழுத்தாளர்கள் சிலரை நோக்கி பாரதியின் நண்பர் வ.ரா. 'தேசம் ஒன்று இருக்கிறது என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா?' என்று கேட்ட நிகழ்ச்சியும் மணிக்கொடி எழுத்தாளர்களின் மன நிலையை வெளிக்காட்டும் எனலாம்.

தமிழக அரசியல் நிலை

1885 இல் இந்திய தேசியக் காங்கிரஸ் துவக்கப்பட்டது. இருபது ஆண்டுகள்வரை ஆங்கில ஆட்சிக்கு வாழ்த்துத் தெரிவிப்பதும், விண்ணப்பம் செய்வதுமே அதன் செயற் பாடாக இருந்தது. 1906 இல் தாதாபாய் நௌரோஜி 'சுய ராஜ்யம்' என்ற கோஷத்தை முன்வைத்தார். திலகர் போன் றோர் அதனைப் பின்பற்றித் தீவிரவாதிகளாகத் திகழ்ந்தனர். கோகலே போன்றவர்களின் மிதவாதப்போக்கு அவர்களுக்கு உடன்பாடில்லை. இந்நிலையில் பாரதி ஒருவன்தான் கவிதை வழி சுதந்திர வேட்கையை உணர்த்துகின்றான். திலகரைப் பின்பற்றும் தீவிரவாதியாகத் திகழ்கின்றான். தீவிரவாதம் உச்சகட்டத்தை அடையும் நிலையில் முதல் உலகப்போர் 1914ல் தொடங்கியது.

சித்தர் இரு வகை

மா. மதியழகன்,
ஆசியவியல் ஆய்வு நிறுவனம், சென்னை

சித்தர்கள் பற்றிய நம்முடைய புரிதல், சமய வழிபட்ட நம்பிக்கையின் பாற்பட்டதாகவும் வழிவழியாக உருப்பெற்று வரும் செவிவழிச் செய்தியாகவுமே இருந்துவருகிறது. சித்தர் என்றாலே அமானுடத் தன்மை வாய்ந்த, அற்புத உணர்வுதான் நம்மில் பெரும்பாலோர்க்கு மேலிடுகிறது. இன்னும் கொஞ்சம் ஒருபடி மேலே, சித்தர்கள் சாதி, சமய, உருவ வழிபாடு, சடங்காசாரம் முதலிய மூடத் தனங்களைக் கண்டித்தவர்கள் என்ற அளவிற்குப் புரிதல் ஏற்பட்டிருக்கிறது. என்றாலும் இப்புரிதலையும் மீறிய, அவர்களை அற்புதவாணர்களாகக் கருதும் மனோபாவமே நமக்கு மேலிட்டுக்கொண்டிருக்கிறது. நாம் இன்னமும் சித்தர்களைப் பற்றிய பாமரத் தன்மை பொருந்திய புரிதலினின்றும் விடுபடவில்லை என்பதே கசப்பான உண்மை.

இந்தப் பின்னணியில் நம்மில் பெரும்பாலோரும் சித்தர்கள் அனைலவரையும் ஒரே மரபைச் சேர்ந்தவர்களாகக் கருதி வருகின்றனர். ஆனால் உண்மை நிலை அதுவன்று. சித்தர் பாடல்களை ஊன்றிப்படித்தால், அவர்களை இரு மரபு சார்ந்தவர், களாகத்தான் கொள்ள வேண்டி வருகிறது. அது 'ஞான சித்தர் 'காய சித்தர்' என்ற இரு போக்காகும். திருமூலர் சித்தர் போக்கை வெளிப்படையாக இரு மரபு தழுவியது என்று வகைப் படுத்திக் கூறவில்லை என்றாலும், பொதுப்படையாக இவ்விரண்டு மரபுகளையும் கூறிச் சென்றுள்ளார்.

யோகச் சமாதியின் உள்ளே யகலிடம்
யோகச் சமாதியின் உள்ளே யுளரொளி

யோகச் சமாதியின் உள்ளே யுளசத்தி
யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே
— திருமந்திரம், 1490

என்ற பாடல் சுவாசத்தைத் தன்னுள்ளே நிறுத்தி, சித்தியடைதலைக் குறிக்கின்றது. இது 'ஞானசித்தி' அல்லது 'யோகசித்தி' மரபைச் சார்ந்தது. இதே போன்று அவர் உடலின் இன்றியமையாமையை

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே
— திருமந்திரம், 725

என்று குறிப்பிடுகின்றார். திருமூலர் 'யோகசித்தி', 'காயசித்தி' என்ற இரண்டையுமே ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போல், சித்தர் மரபின் இருபெரும் அம்சங்களாகக் கூறிச் சென்றுள்ளார். ஆனால் காலப்போக்கில் இவ்விரு அம்சங்களும் தனித்தனி மரபாகவே வளர்க்கப்பட்டு வந்துள்ளமையை அறிய முடிகிறது.

'பதினெண் சித்தர் ஞானக்கோவை', 'சித்தர் பாடல்கள்' என்ற தலைப்புக்களில் பல பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. இப்பதிப்புக்களில் காணப்படும் சித்தர் பாடல்கள் யாவுமே 'ஞானசித்தி' அல்லது 'யோகசித்தி'யைப் பற்றிக் கூறுவனவே யாகும். பொதுவாக சித்தர் பாடல் என்றாலே அது 'ஞான சித்தி'யைக் கூறுவனவாகவுள்ள 'பதினென் சித்தர் ஞானக் கோவை' யைத்தான் குறிக்கும். இத்தொகுப்பில் அடங்கியுள்ள பாடல்களே சித்தர் இலக்கியமாகவும் கருதப்படுகின்றன.

ஞான அல்லது யோக சித்தி என்பது புறவுலகைப் புறக்கணித்து, அகவுலகை வேண்டுவது. புறவுலகம் நிலையற்றது; புறத்தே காணப்படும் பொருள்களால் மனிதனுக்கு எந்தப் பயனுமில்லை என்பது இவர்கள் கொள்கை. இவர்கள் பஞ்ச

பூதம் என்று சொல்லப்படுவனவற்றுள் காற்றையே முதன்மையாக எடுத்துக் கொண்டுள்ளனர். காற்றிலிருந்துதான் பிற பூதங்களும் உருவாயின என்பது இவர்கள் வாதம். மனிதனுக்கு மூலாதாரமாக இருப்பது காற்றே-சுவாசமே, இதுவே உயிர். சுவாசத்தை வெளியே விடாமல் தன்னுள்ளேயே அடக்கினால் மனிதனுக்கு நரையில்லை. திரையில்லை, மூப்பில்லை, மேனி அழகு பெறும். ஏன் மரணமே இல்லை; மனிதன் பேரின்பத்தில் மூழ்கித் திளைக்கலாம்.

உருத்தரித்த நாடியில் ஒடுங்கு கின்ற வாயுவைக்
கருத்தினால் இருத்தியே கபாலம் ஏற்ற வல்லிரேல்
விருத்தரும் பாலராவர் மேனியும் சிவந்திடும்
அருள்தரித்த நாதர்பாதம் அம்மைபாதம் உண்மையே

என்று சிவவாக்கியரும் வலியுறுத்தியுள்ளார்.

ஞான சித்தர்கள் மோட்சம் அடைவதற்குப் பிராணாயாமம் (பிராணன் - உயிர், சுவாசம், காற்று; ஆயாமம்-காத்தல்) ஒன்றையே மார்க்கமாகக் கூறி, வேறொன்றுமே தேவையில்லை என அறிவுறுத்துகின்றனர். சுருங்கச் சொன்னால் ஞானசித்தி என்பது பிராணாயாமத்தின் மூலம் தன்னில்தான் அடங்கி, வேறெந்த அவத்தைகளுமற்றுப் பேரின்பப் பெருவாழ்வில் திளைத்தலாம். இது செயலற்றுச் சிந்தையொடுங்கிய நிலை. இந்நிலையை அவர்கள் 'தூங்காமல் தூங்குதல்', 'மாளாமல் மாளுதல்' என்றெல்லாம் வருணிக்கின்றனர்.

சித்தர் மரபிலே இரண்டாவது வகையாக விளங்குவது காயசித்தி மரபு. இம்மரபினோரும் முத்தி அடைதலுக்கு வழியாகப் பிராணாயாமத்தையே கையாண்டனர். என்றாலும் புற உலகத்தைப் புறககணித்து, அகநிலையை மட்டும் போதுமென்று கூறவில்லை. இவர்கள் புறப்பொருட்களின் துணையோடேயே அகநிலையை எய்தலாம் என்று குறிப்பிடுகின்றனர். ஞான சித்தர்களைப் போல் உடலை அழித்து உயிரோடு மாத்திரம் முத்தியடைய வேண்டும் என்று கருதியவர்களில்லை. இவர்கள் உடலையும் அழியவிடாமல் மரணமிலாப் பெருவாழ்வு வாழ

முடியும் என நம்பினர்; உடலோடேயே முத்தியடைய வேண்டும் என்று முயன்றனர் இதற்காகஇவர்கள் உடலுக்குமுக்கியத்துவம் அளித்து அதனை பேணும் மார்க்கத்தை விரிவாகக் கூறிச் சென்றுள்ளனர். எனவே இவர்கள் மருத்துவத்தோடு தொடர்புடைய இரசவாதம், சோதிடம், நாடிசாத்திரம், வாணியல் முதலியனவற்றையும் முக்கியத் துறைகளாகக் கொண்டனர். தமிழகத்தில் இவர்களுடைய மருத்துவ முறை இவர்களின் பெயரால் 'சித்த மருத்துவம்' என்றே அழைக்கப்பட்டு வருகின்றது. இவர்கள் செய்தனவாக அச்சேறியும் ஏறாமலும் அய்நூறுக்கும் மேலான நூல்கள் காணப்படுகின்றன.

தமிழகத்தில் மருத்துவ, சோதிட, நாடிசாத்திர நூல்கள் யாவுமே சித்தர் செய்தனவாகக் கருதப்படுவது வழக்கம். ஆனால் இந்நூல்கள் யாவுமே சித்தராக இருந்தோர் செய்தனவல்ல. பிறரால் செய்யப்பட்டு, சித்தர் பெயரில் உலவவிடப் பட்டனவும் உள்ளன. இன்னுமொன்று ஞானப்பாடல் பாடிய சிவவாக்கியர் முதலிய சித்தர் பெயரில் பல மருத்துவ நூல்கள் காணப்படுகின்றன. அவை யாவும் பிறரால் செய்யப்பட்டு, இவர்கள் பெயரில் உலவவிடப்பட்டனவே எனவே சித்தர் மரபு இரண்டு வகைப்பட்டது என்பது தெளிவாகக் கொள்ளப் பட வேண்டியதாகும்.

சித்தர் மரபு இரண்டு வகைப்பட்டது என்ற கருத்து நிலையை (Concept) உருவாக்கிக் கொள்வது எளிது. ஆனால் அவ்விரு வகை மரபுக்குரியார் இன்னார் என ஆள் அடையாளங் காட்டல் அவ்வளவு எளிதன்று. சித்தர்களைப் பட்டியலிட்டுக் கூறும் போக்கில் பெருத்த குழப்பங்கள் காணப்படுகின்றன. சித்தர்களைப் பதினெண்மர் எனக் கூறுவனவாகப் பல பட்டியல்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாகக் காணப்படுகின்றன. வடநாட்டு நாத மரபுக்குரிய சித்தர்களின் பெயர்களும் கூட தமிழ்நாட்டுச் சித்தர் பட்டியலில் காணப்படுகின்றன. அப்பட்டியல்களில் காணப்படும் நபர்கள் எல்லாம் அவ்வக்காலத்தில் அந்தப் பெயர்களில், உண்மையில் வாழ்ந்தவர்கள்தானா அல்லது இடைச்செருகலாக அமைந்தவர்களா

என்பதெல்லாம் ஆய்ந்து கண்டறிய வேண்டியனவாகும். இந் நிலையில் சித்தர்களின் ஞானப்பாடல் தொகுப்புக்களையும் மருத்துவ நூல்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போதுதான் இப் பாகுபாடு தோன்றுகிறது என்பது கருதத்தக்கது.

ஏனைய ஆன்மீகவாதிகளைப் போல சித்தர் என்போரும் ஒரு வகையான ஆன்மீக அருளாளர்களே. அதிலும் சைவ சமயத்தின் ஒரு பிரிவினரே ஆவர். பிராணாயாமத்தின் மூலம் தன்னுள்ளே தானடங்கி, பேரின்பப் பெருவெளியில் மூழ்கித் திளைத்தல் என்ற வகையில் ஓரினத்தாராக-ஒரு கூட்டத்தாராக சித்தர்கள் அமைகின்றனர். மற்றபடி ஒவ்வொரு சித்தரிடமும் அவர்தம் ஆன்மீகத் தேடல் முயற்சியிலும் கருத்து வெளிப் பாட்டு நிலையிலும் தனித்தன்மையைக் காண முடிகிறது. அனைத்துச் சித்தர்களையும் ஒரே வரைவிலக்கணத்துக்குள் அடக்கிக் கூறிவிட முடியாது.

மேலே கூறியவாறு சித்தர்கள் பன்முகப் போக்குடையவர் கள் என்ற கருத்து நிலைக்கு, ஒரு முன்னோட்டமாகவே, சித்தர் களை இரு வகையாகக் கூறும் இக்கட்டுரை அமைகிறது அதோடு சித்தர் என்றாலே, அவர்கள் மருத்துவர்கள்தாம் என்று கருதிவரும் மனோபாவமும் மாறியாக வேண்டியுள்ளது.

அந்தமானில் இதழியல் வளர்ச்சி

ஒப்பிலா மதிவாணன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

அந்தமான் நிக்கோபார் தீவுகளின் தெளிவான வரலாறு கி. பி. 1789-இல் தான் தொடங்குகிறது. இந்திய அரசு, தண்டனைக் கைதிகளை வைப்பதற்காக இத்தீவினைத் தேர்வு செய்தது. 1857-இல் நடைபெற்ற சிப்பாய்க் கலகத்தின்போது மீண்டும் அந்தமானுக்குக் கைதிகள் அனுப்பப்பட்டனர். குற்ற வாளிகளை அடைக்கவும், காலப் போக்கில் அங்கேயே குடியிருக்கச் செய்யவும் ஏற்பாடு ஆகியது[1]. இந்நிலையில், 1857-இன் பிற்பகுதியில்தான் அந்தமான் தீவுகளின் புதிய நாகரிகம் தொடங்குகிறது.

கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களிலிருந்து அத்தீவுகளுக்குக் கப்பல் போக்குவரத்து மட்டுமே இருந்து வந்துள்ளது. வானொலி, தொலைக்காட்சி முதலிய செய்திப்பரவல் சாதனங்கள் இல்லாதகால கட்டத்தை இத்தீவுகளில் வாழ்ந்தவர்கள் உணர்ந்திருந்தனர். தாங்கள் தங்கியிருக்கும் தீவுகளுக்கு வெளியே நடப்பதை அறியமுடியாதவர்களாக வாழ்ந்தனர். அவர்களது வாழ்க்கை வெளிவுலகத் தொடர்பற்று இருந்தது. இச்சூழலில் இதழ்கள் தோற்றம் பெற்றன. இத்தீவுகளில் இதழியல் வளர்ச்சி மெல்ல மெல்ல மலரத்தொடங்கியது.

முதல் செய்தி இதழ்

1925க்கு முன்பு 'Daily Telegrams' என்னும் ஆங்கிலப் பத்திரிக்கை தொடங்கப் பெற்றது. இவ்விதழ் அப்போது அந்தமான் கமிஷனரின் அச்சகத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்தது. இன்று அவ்வச்சகம் அரசு அச்சகமாகச் செயல்பட்டுவரு

கிறது. இவ்விதழ் தொடக்க காலத்தில் இங்கிலாந்து நாட்டுச் செய்திகளையும் இந்திய செய்திகளையும் வெளியிட்டு வந்தது. தீவில் உள்ளவர்கள் இவ்விதழில் தங்கள் கப்பல்பயண அனுபவத்தை எழுதினர் விளையாட்டுச் செய்திகளும் இடம்பெற்றன.

பின்னாளில், இவ்விதழ் 'தி பிரஸ் டெலிகிராம்ஸ்' என்று பெயர் மாற்றம் பெற்றது. கமிஷனரின் செயலர் இதன் ஆசிரியராக பொறுப்பேற்று வந்தார்.

1858-இல் குடியமர்சட்டம் உருவாக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போர் காலத்தில், 1942-முதல் 1945-வரை அந்தமான் தீவுகள் ஜப்பானியரின் கீழ் வந்தது. இவர்கள் காலத்தில் 'டெய்லி டெலிகிராம்' என்னும் இதழின் பெயர் 'அந்தமான் சிம்போன்' என்னும் பெயரில், ஆங்கிலம், உருது ஆகிய மொழிகளில் உருளச்சு செய்யப்பட்டு வெளிவந்தது. இவ்விதழ் ஜப்பான் செய்திகளைப் பறைசாற்றி வந்தது. இதன் ஆசிரியராக இராமகிருஷ்ணா என்பவர் பொறுப்பேற்றிருந்தார். இவர் ஜப்பானியரால் அந்தமான் தீவுகளின் துணை ஆணையராக நியமிக்கப்பட்டவர். இவர் ஒரு தமிழராக இருக்கலாம் என்று கருத இடம் உள்ளது. 1963- வரை 'டெய்லி டெலிகிராம்' என்னும் இவ்வோரிதழ்தான் முதன்மைச் செய்தித்தாளாக இருந்து வந்துள்ளது.

இதழியல் வளர்ச்சி

சுமார் 1500 மைல்களுக்கு யப்பால் எவ்வித வசதியும் இல்லாத நிலையில், தமிழ்ப் பத்திரிக்கைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பது பெருமைக்குரிய செய்தியாகும். 1969-இல் குடியரசு தினத்தன்று 'அந்தமான் முரசு' என்னும் திங்களிதழ் மலர்ந்தது. இதன் வெளியீட்டாளராக வீ.வீரய்யாவும், ஆசிரியராக சுப. சுப்பிரமணியமும் பொறுப்பேற்றனர். இவ்விருவரது பெருமுயற்சியினால் அந்தமான் மண்ணில் ஒரு தமிழ் இதழ் தவழ்ந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தமான் முரசின் நோக்கம்

இவ்விதழின் நோக்கம் சீர்மைக்கும் சிந்தனைக்கும் உரியதாகும். மக்களாட்சி முறையில் மக்களின் குரலாக ஒலிக்கும் வாய்ப்பும் ஆற்றலும் பத்திரிக்கைக்கு உண்டு.

மக்களின் குறைகளை அரசு கட்டிலில் இருப்போர்க்கும் பொதுமன்றத்திற்கும் அறிமுகம் செய்யும் வாய்ப்பு பெற்றது பத்திரிக்கையே. இந்த நல்ல கருவியை அந்தமான் நிகோபார் தீவு மக்களின் நலத்திற்கே பயன்படுத்த நாம் உறுதி பூண்டுள்ளோம். மக்கள் இதயத்தில் ஏற்படும் கருத்தின் அலைகளுக்கு நம் 'அந்தமான் முரசு' அரங்கமாக என்றும் உதவும். நாட்டின் நலன்—மக்கள் நலம் காக்கப்பட நமது ஜனநாயக ஆட்சி அமைப்பில் ஆட்சிக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலம் தேவை. 'நல்ல விதை—பக்குவப்பட்ட நிலம்-வாய்த்த சூழ்நிலை இவை இயற்கையின் அமைப்போடு கூடிய வளர்ச்சிக்குத் துணை புரிவன' என்று அறிஞர் ஒருவர் கூறினார் போல, இங்கு வாழும் மக்களிடையே பக்குவப்பட்ட ஒன்றாக அந்தமான் முரசு ஒலிக்கும் என்பது உறுதி. சீர்தூக்கிக்கண்டு செம்மையாய்ச் செயல்பட நீதி—நேர்மையைத் தவிர 'நாம் யார்க்கும் குடியல்லோம்' என்று உறுதியாக முரசு[2] முழங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விதழ் 19 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சில நேரங்களில் இயக்க ஏடாகவும் பணியாற்றியுள்ளமை சிந்தனைக்குரியது.

தற்கால இதழ்கள்

அந்தமான் இதழ்கள் இலக்கிய வளர்ச்சி மற்றும் தமிழர் உரிமை, தேசிய உணர்வு ஆகிய பணிகளைச் செம்மையாகச் செய்து வருகின்றன. சில ஏடுகள் இயக்கத்திற்காகவும் பணியாற்றி வருகின்றன. தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் இதழ்கள்,

1. அந்தயான் முரசு (1969)
2. தீ பரவட்டும் (1972)
3. அந்தமான் அலை (1983)

4. அந்தமான் எக்ஸ்பிரஸ் (1984)

5. அந்தமான் செய்தி (1985)

6. அந்தமான் குரல் (1986)

7. அந்தமான் இளைஞர் முழக்கம் (1986)

8. தமிழ் காண்டீபம் (1986)

மேற்கண்ட இதழ்கள் வாரம் ஒருமுறை வெளிவந்து கொண்டிருக்கின்றன.

பிறமொழி இதழ்கள்

இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும் மக்கள் இங்குக் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். மக்கள் பன்மொழிச் சூழலில் வாழ்வதால், இதழ்களும் பல மொழிகளில் வெளிவருகின்றன. அவற்றுள் ஆங்கிலம், பெங்காளி, இந்தி முதலிய இதழ்கள் குறிப்பிடத்தக்கன.

ஆங்கில இதழ்கள்

1. Andaman Time
2. The Light of Andaman
3. Andaman Heral
4. Andaman Wave
5. Sun Times
6. People's Cursade
7. Andaman Sentinal

பெங்காளி இதழ்

1. Dwip Dani

இந்தி இதழ்கள்

1. Dwip Katha
2. Dweep Manthan

இதழ்கள் ஒரு பொது மதிப்பீடு

அந்தமான் ஒரு சிறிய நிலப்பரப்புடைய தீவாக இருப்பினும் 20 இதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தொடக்க காலத்தில் மாதம் ஒருமுறை வெளியாகிக் கொண்டிருந்த 'அந்த மான் முரசு' தற்போது வாரம் ஒருமுறை வெளிவரும் இலக்கிய இதழாக மாற்றம் பெற்றுள்ளது. வாரம் ஒரு முறை வெளி வந்து கொண்டிருந்த 'அந்தமான் எக்ஸ்பிரஸ்' மாதம் இருமுறை யாக வெளிவருகிறது. 50,000-க்கும் மேற்பட்ட தமிழர்களுக்கு 8 தமிழிதழ்களும் 80,000க்கும் மேற்பட்டபெங்காளி இனத்திற்காக ஓரிதழ் மட்டுமே வெளிவருகிறது. 50,000க்கும் மேற்பட்ட இந்திமொழி மக்களுக்கு இரு இதழ்கள் வெளிவருகின்றன. இக் கருத்திலிருந்து தமிழிதழ்கள் பிறமொழி இதழ்களைக் காட்டிலும் அதிகம் இடம் பெற்றுள்ளமை தெரிய வருகிறது.

ஆனால், இத்தமிழர்கள் முறையான இலக்கிய வளர்ச்சி யிலோ நாகரீகமான அரசியல் வளர்ச்சியிலோ நாட்டம் செலுத்த வில்லை. இதழ்களில் தனிப்பட்டவர்களின் ஆளுமை யும், செல்வாக்கும் தலை நீட்டுகிறது. தங்களது சொந்த விருப்பு வெறுப்புகளை இதழ்மூலம் வெளிக்காட்டும் போக்கு நிரம்பவும் காணப்படுகின்றன. செய்திகளைக் காட்டிலும் விளம்பரப் பகுதிகள் முதன்மை பெறுகின்றன. இங்கு வாழும் தமிழர்களது தமிழ் உணர்வையும் தமிழ் உணர்ச்சியையும் இலக்கிய வளர்ச்சி செயல்பாடுகளையும் குறை சொல்லுவதற்கில்லை. இருப்பினும், இதழ்கள் சரியானமுறையில் சமுதாயப் பணி யாற்ற வில்லை என்பது ஆய்வாளர் நேரில் கண்டு, கேட்டு உணர்ந்த செய்திகளாகும்.

ஆய்வு முடிவுகள்

தாய் நிலத்தை நோக்கும்போது (Main Land) அந்தமான்

நிகோபார் தீவுகளில் தமிழ் இதழ்களின் வளர்ச்சி பாராட்டுக்குரியதாகும்.

இதழ்கள், கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் முதலிய செய்திகளை வெளியிட்டு இலக்கியப் பணியாற்றி வருகின்றன. இதழ்களின் பார்வை மேலும் உலகளாவிச் செல்லவேண்டியதும் சமுதாயப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியதும் விரும்பத்தக்கதாகும்.

அடிக்குறிப்புகள்

1. தமிழ்க் குடிமகன், மு., அந்தாமானைப்பாருங்கள், ப.32.

2. அந்தமான் முரசு, 15—8—69, ப. 2.

ஒப்பாரிப்பாடல் பாடப்பெறும் சூழலும் நடைமுறைகளும்

அரு. மருததுரை
தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்

முன்னுரை

இத்தமிழ் நிலத்தே ஒப்பாரிப்பாடல்களைத் தங்களுக்கு இழப்பு நேர்ந்தவிடத்தெல்லாம் பாடுகிற வழக்கம் நாட்டுப் புறங்களில் இன்றளவும் வழக்கில் உள்ளது. நான் களப் பணியில் ஈடுபட்டிருந்த போழ்தும் பொதுவாக நோக்கிய விடத்தும் கூட்டுக்குழுவாக இணைந்து வாழும் சமுதாயத்திலும் சிற்றூர்களிலும் ஒப்பாரிப்பாடல்களைக் கற்றுக்கொள்ளும் ஆர்வம் மிக்கூர்ந்திருந்தமையை அறிய முடிந்தது. இவர்கள் தம் இனத்திலுள்ள உறவினர்களின் இல்லங்களில் நிகழும் இறப்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போழ்து சிறுவயதி லிருந்தே ஒப்பாரிப்பாடல்களை உற்று உள்வாங்கியும், பாடிப் பார்த்தும் மனதில் தேக்கி மனனம் செய்து கொள்கின்றனர்.

ஒப்பாரிப்பாடலைப் பாடுவது மரபாகவோவன்றிப் பெருமையாகவோ கொள்ளாமல் அப்பாடல்களிலேயே உள்ளும் புறமும் தோய்ந்து பாடுபவர் தங்கள் தங்கள் மனத்துயருக்குப் பொது வடிகாலைத் தேடிக்கொள்கின்றனர்.குறைந்தது ஐந்தாம் வகுப்புவரையில் படித்தவர்களும் பெரும்பான்மையும் கல்வி யறிவு பெறாதவர்களுமாகிய நாட்டுப்புறமக்கள் நடைமுறை வாழ்க்கைக் கல்வியையும் உலகியலையும் உணர்ந்து தெளிந்த வராவர். தங்களின் தொழிலிலும், குடும்பியல் வாழ்விலும் மிக்க பற்றும் பாசமும் கொண்ட நாட்டுப்புற மாந்தர் எளிதில் அனைவருடனும் அன்பு பாராட்டும் தன்மையாளர்கள். வாடிய

பயிரைக்கண்டு வாடும் நெஞ்சங்களுக்குரிய நாட்டுப்புறமக்கள் எவ்வுயிரையும் தம்முயிராகப்போற்றும் தகைமையாளர்கள். ஆகவேதான், அவர்கள் இன்பத்தைக் காட்டிலும் பிறரின் துன்பத்தில் எளிதில் பங்கேற்கின்றனர். ஒருவரின் இறப்பைக் கேள்விப்பட்டளவிலேயே சென்று உதவும் தன்மை இன்றளவும் தமிழ்நிலத்தே நிலையாக உள்ளது. இதனையொட்டியே, 'வாழ்வைத் தட்டினாலும் சாவைத் தட்டாதே' என்ற பொது மொழி வழக்கில் நிலவுகின்றது. சாவு வீட்டிற்கு யாரையும் அழைப்பதில்லை, சாப்பறை ஒலியைக் கேட்டளவிலேயே மக்கள் தங்களின் அலுவல்களைவிட்டு இறப்பு நிகழ்ந்த இல்லத்திற்குச் சென்று அவர்களின் துன்பத்தில் பங்கு கொள் கின்றனர்.

இன்றும் பல சிற்றூர்களில் ஒருவர் இறந்துவிடின் வெட்டியான் எனப்படுபவர் ஊரில் உள்ளவர்கள் அனை வரிடமும் பணத்தைப் பெற்று அத்தொகையைக் கொண்டு பிணத்தை அடக்கஞ்செய்வார். அப்பொதுபணத்தில் இறுதிச் சடங்குகளாற்றும் வழக்கம தமிழர்கள் பிறருடைய துன்பத்தில் பங்குபெறவேண்டும் என்ற உள்ள உணர்வினை வேட்கையை வெளிப்படுத்துவதாகிறது.

வாழ்வில் ஒவ்வொருவருககும் தங்கள் மாட்டு அன்புடை யவர்கள் இறந்துவிடும்போழ்து அவர்களின் நெஞ்சம் துன்பத் தால் தோய்ந்துவிடுகிறது. கண்கள் நீரைப் பொழிகின்றன. ஒவ்வொருவர் வாழ்விலும் இழப்புக்கள் இல்லாமலில்லை. அந்தத் துன்பத்தைச் சுமந்து வாடும் நெஞ்சங்கள் தங்களின் மன அழுத்தத்தை, மனச்சுமையைச் சற்று இறக்கி வைக்கும் இடங்களாக இழவு வீடுகளைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இறந்தவரின் உறவினர்கள் உறவின் முறையைச் சொல்லி யழும் போழ்தெல்லாம் அதில்கலந்து கொள்ள வந்தவர்களின் மனம் தங்கள் தங்கள் வாழ்வில் தொடர்புடையவர்களின் இழப்போடு சார்த்திக் கொண்டு அதனால் தான்பெற்ற உணர்வுகளையும் பகிர்ந்து கொள்கிறது. அழுகையும் ஒப்பாரி யும் மக்களின் மனச்சுமையை இறக்கிவைக்கவும் மன இறுக்

கத்தைத் தளர்வடையச் செய்யவும் பெருமளவில் மனவியலடிப் படையில் பயன்படுகிறது.

ஒப்பாரியின் தன்மை

ஒவ்வொரு மனிதனும் துயரம் நிறைந்தவனாகவே வாழ் கிறான். ஏதாவது ஒன்றினை இழந்து விடுகிறான். ஆகவே அவனது நெஞ்சத்தில் அழுந்திக்கிடக்கும் துயரங்கள் துயரம் சூழ்ந்த நாடகத்தை, திரைப்படத்தைக் காணும் போழ்தோ பாடல்களைக் கேட்கும் நிலையிலோ அதனுள் ஒன்றி அக்கதை மாந்தனாகவே தான் மாறிவிடுகிறான். தன்னால் ஒப்பாரியைப் பாட முடியாவிட்டாலும் அத்தகைய பாடல்களையாவது ஒவ் வொருவனும் பாடுகிறான். அப்பாடல்களில் தன்னையிழக் கின்றான். இதுவே இழப்புப் பாடல்களின் தன்மையாகும்.

ஒப்பாரிப்பாடல், இழவுப்பாடல், புலம்பற்பாடல், அவலப் பாடல், கையறுநிலைப்பாடல் என்றெல்லாம் அறியப்பெறும் ஒப்பாரிப்பாடல் ஒருவர் இறந்தபோதுதான் பாடவேண்டும் என்ற வரையறையில்லை. மக்களுக்கு இழப்பு எப்போழ் தெல்லாம் நேர்கின்றதோ அப்போழ்தெல்லாம் ஒப்பாரிப்பாடல் பாடப்பெறுகிறது. பெரும்பான்மையும் சாவு நிகழ்ந்த வீட்டில் பாடப்பெறுவதென்பது முதன்மையாக உள்ளது.

ஒருவன் தன்னிரக்கமாகப் பேசும்போதே ஒப்பாரி வைக் காதே எனச் சொல்வது பெருவழக்கமாக நடைமுறை யிலுள்ளது. புலம்பே தனிமை என்பது தொல்காப்பியம். தனிமை யாகிவிட்டோம் என்று புறவயத்திலும் அகவயத்திலும் ஒருவன் எண்ணும்போழ்து அவனின் உள்ளம் ஆதரவற்றுப் போனதாக உணர்கிறது. அவ்வாறு எழும் உணர்ச்சியே கையறுநிலைப் பாடல் எழுவதற்கு அடிப்படைக் காரணமாகிறது. ஒப்பு வைத்து எண்ணமுடியாத அளவிற்கு இழப்பாக ஒன்றை எண்ணும்போழ்து புலம்பல் தோன்றுகின்றது. புலம்பல் வரி யொழுங்கையும் இசையொழுங்கையும் பெற்று ஒப்பாரிப் பாடலாகிறது.

பாடல் பாடப்பெறும் சூழலும் நடைமுறைகளும்

இற்றைநாளில் அரசியல் தலைவர் ஒருவர் இறந்துவிடின் ஊர்தோறும் உள்ள அவரின் ஆதரவாளர்கள் ஆங்காங்கே அன்னாரின் படத்தை அலங்கரித்து வைப்பர். ஊர்ப்புறத்தே சென்று பெண்களை அழைத்துவந்து கூலி கொடுத்து ஒப்பாரிப் பாடலை ஒலிபெருக்கிமுன் பாடச்செய்வர். இப்போக்கு ஊர் தோறும் நிலவியுள்ளது. நேரில் கண்டு உற்று நோக்குதல் வழியாகப் பெறப்பெற்ற செய்தியினை இவண் குறித்தல் இன்றியமையாதது.

பள்ளர், பறையர், சக்கிலியர் ஆகிய பிரிவினைச் சார்ந்தவர்களுக்குக் கூலி கொடுத்து உணவு அளித்து இறந்த தலைவரின் உடல் அடக்கஞ்செய்யும் வரையில் ஒப்பாரியைப் பாடவைக்கின்றனர். அடக்கஞ்செய்யும் நாளன்று படத்தைப் பாடையில் வைத்து இடுகாட்டிற்குக் கொண்டு சென்று புதைத்தோ எரித்தோ இறுதிச்சடங்குகளைச் செய்கின்றனர். பலர் கொள்ளி வைத்ததாகக் கருதிக் கொண்டு முடியை மழித்துக் கொள்வதையும் காணவியன்றது. இது அந்தந்தத் தலைவர்கள் மாட்டு மக்கள் கொள்ளும் ஆர்வமும் பத்திமையும் மிக்கூர்ந்தமையே காரணமாகும். இதில் குறிக்கத்தக்கது என்னவெனில் ஓர் இறப்பு நிகழ்ச்சி இறந்தவரின் படத்தை வைத்து நடத்தப்பெறுகிறது. இங்கு ஒப்பாரி ஒலி இடம்பெறவேண்டும் என்று கருதுகிற மனநிலை கூர்ந்து நோக்கத்தக்கது. இழவு சூழலெனின் அங்கு ஒப்பாரி ஒலி தேவை எனக் கருதும் மாந்தனின் மனநிலை வெளிப்படுகின்றது. எனவே, இன்றளவும் ஒப்பாரிப் பாடல்கள் நிலைத்திருக்க இம்மனநிலையும் ஓர் காரணமாகிறது.

மேற்கண்ட நிகழ்ச்சியில் பாடவந்த பெண்கள் இடையில் பாட்டை நிறுத்தினால் பாடுகிறவரின் துன்ப உணர்வைத் தூண்டிவிடுகின்றனர். காட்டாக இந்தியநாட்டின் முன்னாள் தலைமையமைச்சர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் இறந்தபோது முன்னர்க் குறிப்பிட்டவாறு சூழலை அமைத்து, பெண்களை ஒப்பாரியிட ஏற்பாடு செய்திருந்தனர். அவர்கள் பாடலை நிறுத்தினால் உடனே ஒருவர், 'நம்ம அம்மா மாதிரிம்மா

பாவிங்க சுட்டுட்டாங்க அம்மா, பாடுங்கம்மா, உங்க அம்மா மாதிரி' என்று கூறி பாடுகின்ற பெண்களின் துன்ப உணர்ச்சி மங்காமல் பாதுகாத்து அவரை மேன்மேலும் பாடத்தூண்டு கின்றனர். இச்சூழலையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

சூழல் அமைத்துக் கொடுக்கப்பெறுகிறது. இது ஒருவகை யில் பணத்திற்காகவே என்றாலும் பாடிய பெண்கள் தொழில் முறையில் பாடவந்தவர்களல்லர். அதைத் தொழிலாகவும் கொள்ளாதவர்கள். மேலும் அவர்களை உற்றுநோக்கிய போழ்து அவர்கள் பாடியபோதும் பாடி ஓய்ந்தபோதும் கண் களில் நீர்பெருகி வழிந்திருந்தது. எனவே, ஒப்பாரியைப்பாடும் பொழுது அச்சூழலில் தங்களின் தாய், தந்தை மற்றும் உற்றார் உறவினர்களின் இறப்பை மனதில் கொண்டே ஒப்பாரிப் பாடலைப் பாடுகின்றனர் என்பது தெரியவந்தது.

நாட்டுப்புறங்களில் நிகழும் நாடகங்கள் தெருக்கூத்துக் களில் குறிப்பாகப் பாடல் சேகரிப்புக் களங்களாகத் தேர்வு செய்த பகுதிகளில் மிகுதியாக நடைபெறும் பொன்னர் சங்கர் கூத்து நிகழ்ச்சிகளில் பொன்னர் சங்கர் ஆகியோரின் தங்கை அழுது புலம்பும் ஒப்பாரிப்பாடல்கள் பாடப்பெறும் நேரத்தில் பார்வையாளர்களில் பெண்கள் அழுகின்ற சூழலும் இவண் கருத்தில் கொள்ளத்தக்கது. கூத்தில் பாடப்பெறும் ஒப்பாரிப் பாடல்களின் சில அடிகளைத் தங்களின் ஒப்பாரிப்பாடல் களுடன் இணைத்துக் கொள்கின்றனர். இப்பாடல்களை இறந்தவர் வீடுகளில் பாடுகின்றனரா என்பதை இனிமேல்தான் நோக்கவேண்டும்.

ஒருவரின் இறப்புச்செய்தி காதில் பட்டவுடனேயே சிலர் ஒப்பாரியைத் துவக்கி விடுகின்றனர். வெளியூரில் இறந்து விட் டாலும் செய்தி அறியப்பெற்றவுடனே பெண்கள் ஒப்பாரி வைக்கத் தொடங்கி விடுவர். உடனே அருகில் உள்ள உறவினர் களும் சுற்றுப்புறத்தே வசிக்கும் பெண்களும் கூடி அவருடன் இணைந்து கொள்வர். இது ஒருவகையில் நேரில் அந்த ஊருக்குச் செல்லாமல் தொடர்புடையவர்களின் இழவு விசாரித்த

தாகவும் அமைய வேண்டும் என்ற மரபாகும். பின்னர்க் குறிப்பிட்ட உறவினர் வீட்டில் ஒன்று சேர்ந்து அங்கிருந்து கூட்டமாகப் புறப்பட்டுச் செல்வர். இது இன்றளவும் சிற்றூர் களில் உள்ள வழக்கமாகும்.

இறந்தவரின் இல்லத்தில் கருமாதி எனப்படும் இறுதிக் கடன் அல்லது நீத்தார்கடன் எனும் சடங்கு முடியும் வரையில் நாள்தோறும் அந்தியில் அந்தியமுகை சந்தியில் சந்தியமுகை என்று இரண்டு வேளைகளிலும் ஒப்பாரி வைத்து அழுவர். பாலூற்றும்நாள், எட்டாம்நாள், முப்பதாம்நாள் மற்றும் தீபாவளி, பொங்கல் ஆகிய விழாக்களுக்காக இறந்தவர் களுக்குப் படையலிடும் நாட்களிலும் ஒப்பாரி வைத்து அழுதல் நாட்டுப்புற மரபாகும். இறந்தார் மாட்டுத் தாம் கொண்டிருந்த ஈடுபாட்டை, நினைவை இவ்வொப்பாரிகளின் வாயிலாக அந் நாட்களில் வெளிப்படுத்திக் கொள்வதாகவும் கொள்ளலாம்.

மேலும் வெகு தொலைவிலிருந்து நாட்கள் கழித்து இழவு விசாரிக்க வந்தாலும் அப்போழ்தும் ஒப்பாரி வைத்து அழுவர். சிலரின் உறவினர்கள் மலாயா, சிங்கப்பூர், இலங்கை முதலான வெளிநாடுகளில் வாழ்வர். அங்குள்ளவர் எவரேனும் இறந் தாலோ அல்லது இங்குள்ளவர்கள் எவரேனும் இறந்தாலோ உரியவருக்குச் செய்தி கிடைத்ததும் ஒப்பாரி பாடி அழுகின்ற னர். இறந்தவர் குருதிக்கலப்புடைய உறவு முறையினராயின் முறைப்படி இழவுச் சடங்குகளைக் கடைபிடிப்பர். நீத்தார் கடனிகழ்த்தும் நாளில் அவரவர் ஊர்களிலேயே இல்லத்தைத் தூய்மை செய்து நீத்தார் கடனுக்குரிய சடங்குகளைச் செய்வர். இந்த இறப்பிற்குப்பின் முதன் முறையாகத் தாயகம் திரும்பும் போழ்து இங்குள்ளவர்களுடன் சேர்ந்து ஒப்பாரிச் சொல்லி அழுவர். உறவினர்களும் ஒப்பாரியில் கலந்து கொள்வர். இதை இன்றளவும் திருச்சி மாவட்ட நாட்டுப்புறங்களில் காண வியலும்.

சித்தூர் மாவட்டத் தமிழ்-தெலுங்கு கபிலைப்பாடல்கள்-ஒப்பாய்வு

J. மனுவேல்,
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்.

ஆந்திரபிரதேசத்தில் சித்தூர் மாவட்டம் தமிழகத்தை யொட்டி அமைந்துள்ளது. இம்மாவட்டத்தில் தெலுங்கிற்கு அடுத்ததாகத் தமிழ் பெரும்பான்மையான மக்களால் பேசப் பட்டு வருகின்றது. ஆந்திரத்திலேயே இம்மாவட்டத்தில் தான் பெரும்பாலான தமிழர்கள் வசித்துவருகின்றனர். இம்மக்கள் வயல்வெளிகளில் வேலை செய்யும்போது தமிழ்ப்பாடல்களையும் தெலுங்குப்பாடல்களையும் பாடுகின்றனர். ஆனால் தெலுங்கர் தெலுங்குப்பாடல்களை மட்டுமே தெரிந்து வைத்துள்ளனர். இம்மாவட்டத்தில் ஆற்றுப்பாசனம் கிடையாது. எனவே விவசாயிகள் ஆழ்கிணறுகள் தோண்டி கபிலையின் மூலமாக நீரை வயலுக்குப் பாய்ச்சுவர். கபிலை ஓட்டும்போது இம்மக்கள் தமிழிலும் தெலுங்கிலும் பாடல்களைப் பாடுவர். தெலுங்கில் 'கபிலபாட்டலு' என்பர். இப்பாடல்களைப் பொருள் அமைப் பிலும் இசையமைப்பிலும் ஆய்வுச்செய்வதே இக்கட்டுரையின் தலையாய சிறப்பாகும்.

விவசாயத் தொழிலில் கபிலை மிகவும் ஆபத்தான தொழி லாகும். கபிலைக்கட்டிடம் சரிந்து விழுந்து விட்டால் மாடுகளும், மனிதனும் பிழைப்பது அரிது; 'கபிலை' ஓட்டுவதை ஆண்கள் மட்டுமே செய்வர். கபிலைப் பாடல்களும் ஆண்களால் மட்டுமே பாடப்பெறுகின்றன. மாறாக பெண்களும் இப்பாடல்களைக் கற்று வைத்துள்ளனர். ஓய்வாக இருக்கும் நேரங்களில் பாடி மகிழ்கின்றனர்.

கபிலையின் உபகரணங்கள்

கபிலை அமைக்கப்பல்வேறு பொருட்கள் தேவைப்படு கின்றன. அவைகள் சில மரத்தாலும், சில இரும்பாலும் செய்யப்பட்டிருக்கும். 1. தாங்கிகள் 2. தோரணப்பட்டை 3. காது மணி 4. இருசு 5 உதைக்கம்பு 6. நுகத்தடி 7. வடம் 8. சால் 9. தொண்டம் 10. தொண்டத்துக்கயிறு 11. தோணி 12. புல்லுரசு 13. வண்டி 14. பாரி போன்றவற்றைத் தமிழிலும் 1. குர்ஜலு 2. தோர்னபட்டா 3. செவ்வு புல்லா 4. இர்ச்சி கட்டெ 5 தன்னுகொம்மு 6. காண்டி 7. மோக்கு 8. பானா 9. தொண்டமு 10. தொண்டதாரமு 11. தோணி 12. புல்லூர்ச்சு 13. பண்டி 14. பாரி என்று தெலுங்கிலும் அழைக்கின்றனர். இவ்விரண்டுப் பெயர்களையும் ஒப்பீட்டுப்பார்த்தால் ஒன்றோ டொன்று ஒன்றுபட்டிருப்பதைக் காணலாம்.

கபிலையின் வகைகள்

கபிலையில் மூன்று வகைகள் உள்ளன 1. ஒற்றைக்கபிலை, 2. இரட்டைக் கபிலை 3. சுழலும் கபிலை போன்றவைகளாகும். தெலுங்கில் 1. ஒன்ட்டிகபிலா 2. திருகிடு கபிலா, 3. பரமட்ட கபிலா என்று அழைப்பதுண்டு. இம்மாவட்டத்தில் பெரும் பாலான இடங்களில் ஒற்றைக்கபிலையை மட்டுமே தெலுங் கரும், தமிழர்களும் பயன்படுத்துகின்றனர். அதிகமான நிலம் உள்ளவர்கள், வசதிபடைத்தவர்கள் இரட்டைக்கபிலைப்பயன் படுத்துகின்றனர். குறிப்பாக இம்முறைக்கபிலை தமிழர் களிடம் வழக்கிலில்லை. சுழலும் கபிலை தோட்டக்கால் பயிர்செய்வோர் மட்டுமே பயன்படுத்துகின்றனர். இம்மாவட்டத் தின் வடமேற்கு வட்டங்களான புங்கனூர், பலமனேர், மதன பல்லி, வாயல்பாடு சின்ன குட்டி கல்லு போன்றப்பகுதியில் சுழலும் கபிலை அதிகமாகக் காணப்படுகின்றது.

கபிலை ஓட்டுவது மிகவும் ஆபத்தானத் தொழிலாகும். எனவே கபிலை ஓட்டுவதற்கு ஆரம்பமானதும் இறைவனை வேண்டிக்கொள்வதாகப் பாடலொன்று தமிழில் பாடப்பெறு கின்றது.

பொல்லி பொல்லி எருதுடா- ஓ சாமி
பொகுரு புடிச்ச எருதுடா
சாலி சாலிக்கும் சரவணன் இருந்தா
ஜல கண்டம் தீருமடா

இதே போன்று தெலுங்குப்பாடலொன்றும் இம்மாவட்டத்தில் கிடைத்துள்ளது.

புல்ல கல்லுரா நா சாமி
பாலட்ட பாகுண்டு சாமி
பான பானக்கு ராமுடுன்ட்டே
பாயி கண்டம் தொலுகினேமோ

'புளித்த கள்ளய்யா சாமி; பால்போல் தோற்றமளிக்க குடித்து விட்டேன்; ஒவ்வொரு சாலுக்கும் இராமர் துணையிருந்தால் கிணற்று கண்டம் விலகிப்போகும்' என்பது தெலுங்குப் பாடலுக்குரியப் பொருளாகும்.

தமிழ்ப்பாடலின் பொருளும், தெலுங்குப்பாடலின் பொருளும் ஒன்றாகவே இருக்கின்றன். தமிழ்ப்பாடலில் 'பொல்லி எருதுடா சாமி, கபிலை ஓட்டிப்பழகாத இளங்காளை ஒவ்வொரு சாலுக்கும் சரவணன் துணையிருந்தால் ஆபத்து நேரிடாது' என்று மாடுகளின் மீதுள்ளக்குறையை இறைவனிடம் எடுத்துச் சொல்லி வேண்டுகிறான்; ஆனால் தெலுங்குப்பாடலில், காலையில் கபிலை ஓட்ட சென்று கொண்டிருக்கையில் விற்பதற்காகத் தென்னங்கள்ளை ஒருவர் எதிரே கொண்டுவந்தார். கள்ளைப் பார்த்ததும் பால் போல் பளபளப்பாகத் தோற்றமளித்தது மனம் தாங்காமல் குடித்து விட்டேன்; போதையில் கபிலை ஓட்டிக் கொண்டிருக்கிறேன்; ஒவ்வொரு சாலுக்கும் இராமனே நீங்கள் துணையிருந்தால் ஆபத்து நேரிடாது, என்று தன்னைக் குற்றவாளியாக இறைவனிடம் சொல்லி வேண்டுவதாக உள்ளது பொதுவாக இவ்விரண்டுப்பாடல்களின் நோக்கமும் ஆபத்திலிருந்து இறைவன் காப்பாற்ற வேண்டுமென்பதேயாகும்.

வயல் வெளியில் ஒரு பக்கம் பெண்கள் நாற்று நட்டுக் கொண்டிருக்கின்றனர். அருகாமையில் வாலிபன் ஒருவன் கபிலை ஓட்டிக் கொண்டிருக்கிறான். தன்னுடைய அத்தை மகள் நாற்று நட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்து காதல் மோகம் கொண்டுப் பாடுவதாகப் பாடலொன்று கிடைத்துள்ளது.

அடி மஞ்சா செயங்கு தாரே (ன்)
மாருக்கேத்த ரவக்க தாரே (ன்)
கில்லேடி சேல தாரே (ன்)
என் தங்கமே தில்லாலே
கிட்ட வந்தா குட்டி தாரேன்
பொண்ணே பூ மால

இது போன்ற பொருளுடையத் தெலுங்குப் பாடலொன்றும் இம்மாவட்டத்தில் கிடைத்துள்ளது.

செர்லோனா செருக்கு தோட்டா-ஓபாபா
கூட்ட கிந்த கானிகில்லு
அட்ட மாவிட்டிக்கி மன வரசா
வச்சி மாட்லாடி போவே
பிட்ட கலிகிஸ்தா

'ஏரியில் கரும்புத் தோட்டம் உள்ளது; ஏரிக்கரையின் கீழ் கரும்பு ஆலைக்கருகில் விடு ஒன்று உள்ளது; இன்று நான் மட்டும் அந்த வீட்டில் காவலுக்குப் படுத்திருப்பேன்; இன்றிரவு அந்த வீட்டுக்கு வருவாயேயானால் உன்னைத் தாய்மையடையும் படிச்செய்து விடுவேன்' என்பது தெலுங்குப்பாடலுக்குரியப் பொருளாகும்

தமிழ்ப்பாடலில் ஒரு பெண்ணை அடைவதற்காக 'மஞ்சள் தருவதாகவும், புடவையும், ரவிக்கையும் தருவதாகவும் குறிப் பிடப்பட்டுள்ளது. ஆனால் தெலுங்குப்பாடலில் இடத்தைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டி உரிமையோடு காதலியை அழைப்ப தாகக் குறிப்பிட்டுள்ளது. தமிழ்ப்பாடலில் பெண்களை தங்கமே என்றும் பூமாலை! என்றும் புகழ்ந்துப் பேசப்பட்டுள்ளது. ஆனால் தெலுங்குப்பாடலில் அவ்வாறு புகழ்ந்துப் பேசப்பட வில்லை. ஆணும் பெண்ணும் திருமணத்திற்கு முன் சேர்ந்தால்

 650

அது நுதல் மலர்ந்து அதற்கு அடையாளச் சின்னமாக பெண் பூப்படைந்து சமுதாயத்தில் இழிநிலையை அடைகிறாள் என்பது இப்பாடல்கள் வெளிப்படுத்தும் பொதுவானக் கருத்தாகும். இவ்விரண்டுப்பாடல்களும் இசையில் வேறுபடுவதைக் காணலாம்.

வடபுல இந்தியாவில் இமயமலை இயற்கை எழில் நடம் புரிந்து சிறப்புற்று விளங்குவது போன்று தென்னிந்தியாவிலும் நீலகிரிமலை, திருப்பதிமலை போன்றவை புகழ்பெற்றவைகளாகத் திகழ்கின்றன. இம்மலைகளில் எழில் வண்ண சோலைகளும் நெஞ்சை அள்ளும் சுனைகளும், நீர் வீழ்ச்சிகளும் காணப்படுகின்றன. இம்மலைகள் சுற்றுலா மையங்களாகத் திகழ்கின்றன இம்மலைகளைக் குறித்துப் பலர் பலவிதமாகத் தமது படைப்பிலக்கியங்களில் குறிப்பிட்டுள்ளனர். சித்தூர் மாவட்டத்தில் வாழும் நாட்டுப்புற மக்கள் நீலகிரி மலையை நேரில் சென்று பார்க்காவிடினும் அதன் சிறப்பை நன்கு தெரிந்து வைத்துள்ளனர் என்பதைத் தமிழ்ப்பாடலொன்று வெளிப்படுத்துகின்றது

நீயும் நானும் ஒண்ணு தாண்டி
நீலகிரி காடு தாண்டி - அங்கே
போனாலும் பொயக்க லாண்டி
என் தங்கமே தில்லாலே - அங்கே
பொய்த்து போனா தாங்காதடி குளுரு
பொண்ணேன பூ மால

இது போன்ற பொருளுடைய தெலுங்குப் பாடலொன்றும் இம் மாவட்டத்தில் கிடைத்துள்ளது.

ஜாலாரி பண்ட எக்கி ஓ லம்மி
ஜம்மல மடுகு தாட்டி ஓ லம்மி
திருப்பதிக்கி போயி ஓ லம்மி
திருநாளு சூத்தாமே ஓ லம்மி
திருகி வத்தாமன்டே வாதலேது ஓ லம்மி
உண்டாமன்டே அட்டம் லேது ஓ லம்மி

 651

'ஜாலாரி பாறையையும், ஐம்மவமடுகு என்ற ஊரையும் கடந்து திருப்பதி போவோம், திருநாளைப் பார்ப்போம், திரும்பி வந்தால் வருவோம், நீ சம்மதம் தெரிவித்தால் அங்கேயே பிழைக்கலாம் எனக்கொன்றும் தடையில்லை' என்பது தெலுங்குப் பாடலுக்கு உரியப் பொருளாகும். தமிழ்க் கும்மிப் பாடலில் நீலகிரி மலையைக் குறிப்பிடுவது போல தெலுங்குப் பாடலிலும் திருப்பதி மலையைக் குறிப்பிட்டுள்ளனர். தமிழ்ப் பாடலில் நீலகிரி மலையைப்பற்றிக் குறிப்பிடுகையில் அதனைக் குளிர்ப் பிரதேசமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தெலுங்குப் பாடலில் திருப்பதியைப் பற்றிக் குறிப்பிடுகையில் திருவிழா, உற்சவங்கள் போன்ற நிகழ்ச்சிகளைக் குறிப்பிடப்பட்டுள்ளது. பெற்றோர்களால் அனுமதிக்கப்படாதக் காதலர்கள் வேற்றூர்களுக்குச் சென்று பிழைக்க வகைத் தேடுவதையே இவ்விரண்டுப் பாடல்களும் வெளிப்படுத்தும் பொதுவானக் கருத்தாகும். இப்பாடல்கள் இசையால் தமக்குள் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

ஆய்வுக்களமாக விளங்கும் சித்தூர் மாவட்டத்தில் திருப்பதிமலை, மதனபள்ளி ஹார்ஸ்லி மலை, புத்தூர் கைலாசநாதர் கோனை, ஸ்ரீகாளத்திமலை, தலகோணா போன்ற மலைகள் புகழ்பெற்றவைகளாகத் திகழ்கின்றன. இம்மலைகளில் பல எழில் வண்ணச் சோலைகளும், நீர் வீழ்ச்சிகளும், சுனைகளும் இருந்தாலும் தமிழ்ப்பாடலில் இம்மலைகளைப்பற்றிக் குறிப்புக் காணப்பெறவில்லை. இம்மக்கள் நீலகிரி மலையைத் தங்களதுப் பாடல்களில் குறிப்பிட்டிருப்பதை நோக்கும் போது அவர்களது தமிழ்ப்பற்று வெளிப்படுவதைப் பாடலின் வாயிலாக உணரமுடிகிறது.

இம்மாவட்டத்தில் கபிலைப்பாடல்கள் பரவலாகப் பாடப் பெறுகின்றன. தெலுங்கர் வாழும் பகுதிகளில் இப்பாடல்களை 'ஏலபதாலு' என அழைப்பர். இப்பாடல்களில் காதல் பற்றியக் கருத்துக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. மேலும் இப்பாடல்கள் அன்றையக் காதல் கதைகளைப் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன.

மாந்திரிகம்-தோற்றமும் வளர்ச்சியும்

மாசிலாமணி
புதுவைப் பல்கலைக்கழகம்

மாந்திரிகத்தின் தோற்றம்

இயற்கையின் இயக்க விதிகளைப் புரிந்து கொள்ளவியலாத ஆதிமனிதன், இயற்கையைக் கட்டுப்படுத்தவும் அதனிடமிருந்து சில பயன்களைப் பெற்றுக்கொள்ளவும் உருவாக்கிய ஒன்றே மந்திரமாகும். மந்திரம் எனினும் மாந்திரிகம் எனினும் பொருள் ஒன்றேயாகும். மாந்திரிகம் என்பது பெரும்பாலும் பேய் முதலிய துஷ்ட தெய்வங்களிடம் உள்ள நம்பிக்கையைச் சார்ந்தவையாகவே இருக்கும்.

இடி, மின்னல், புயல், வெள்ளம், விலங்கு, காட்டுத்தீ போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து மனிதன் தன்னைக் காத்துக்கொள்ள எண்ணினான். இதன் விளைவாகத் தோன்றியது போலச் செய்தல் என்பதாகும். நாம் செய்வதைப் பார்த்து இயற்கையினைச் செயற்படவைப்பதே அதன் நோக்கம் ஆகும். தம்மைப் போலவே இயற்கைக்கும் ஆசைகளும் உணர்ச்சிகளும் இருக்கும் என நம்பினர். சூரிய ஒளியில் குதூகலித்துப் புன்முறுவல் செய்வதும் சூறாவளியில் கடுஞ்சினமுற்றுக் கர்ஜிப்பதும் இயற்கை இயங்குவதாக நம்பி அதற்கு உணர்ச்சிநிலையும் உயிர்நிலையும் கற்பித்தனர். இந்தக் கற்பனையில் இருந்துதான் மந்திரம் தோன்றியது எனலாம். நாட்டார் வழக்காற்று இயலில் மந்திரம் செய்வதற்கு அல்லது மந்திரம் தோன்றுவதற்கு போலச் செய்தல் முறையே அடிப்படையானது என்பது மேற்கூறிய கூற்றினின்றும் புலப்படும்.

நடைமுறை வாழ்க்கையில் சில பயன்களைப் பெறுவதற்காகப் புராதன மனிதனால் உருவாக்கப்பட்ட மந்திரம் சமயத்துக்கு முற்பட்டதாகும். அத்துடன் சமயத்துக்கு முற்றிலும் மாறுபட்டதாகும் தொடக்க காலத்தில் மந்திரமானது வெறும் பாவனையை மட்டுமே கொண்டிருந்தது.

எடுத்துக்காட்டாக மழை வேண்டுமானால், மேகங்கள் சேர்வது போலவும், இடி இடிப்பது போலவும், மழை பெய்வது போலவும் பாவித்து ஒரு நடனத்தைக் கற்பனை செய்து நடத்திக் காட்ட வேண்டும். மந்திரத்தில் பிந்திய நிலைகளில் இந்தப் பாவனையைத் தொடர்ந்து மழை பெய்ய வேண்டும். என்பது போன்ற வார்த்தைகள் கூறப்பட்டன.

மந்திரத்தின் வகைகள்

உலகின் பல பகுதிகளிலும் சேகரித்த தகவல்களின் அடிப்படையில் மந்திரம் பின்வரும் இரண்டு கோட்பாடுகளைக் கொண்டுள்ளது என்று பிரேசர் கருதுகிறார்.

1. ஒத்தது ஒத்ததை உருவாக்குகிறது.
2. ஒரு தடவை தொடர்பு கொண்டிருந்தது எப்பொழுதும் தொடர்பு கொண்டிருக்கும்.

இவ்விரு கோட்பாடுகளின் அடிப்படையில் அவர் இரண்டு விதிகளை உருவாக்கினார். முதல் கோட்பாடு ஒத்தவிதி எனப்படும். இதனுடன் தொடர்பு கொண்ட மந்திரமானது ஒத்த மந்திரம் எனப்படும். இரண்டாவது கோட்பாட்டைத் 'தொடர்பு' அல்லது 'தொத்த விதி' என்றழைத்தார். இவ்விதியுடன் தொடர்புடைய மந்திரம் 'தொத்து மந்திரம்' ஆகும்.

செயலும் விளைவும் ஒத்திருப்பது பாவனை மந்திரம் அல்லது ஒத்த மந்திரமாகும். எதிரியைப் போன்றதொரு உருவத்தைச் செய்து தண்டனைக்குள்ளாக்கினால், அத் தண்டனை எதிரியைச்சென்று சேரும் என நம்புவது பாவனை மந்திரமாகும். இம்மந்திரச்சடங்கில் எதிரியைத் தண்டிப்பது போன்ற பாவனை செய்யப்படுகிறது. மேலே கூறிய பாவனை மந்திரத்திற்குக் கொடும்பாவி இழுத்தல் சிறந்த சான்றாகும்.

654

எதிரியைப் போலவே ஓர் உருவம் செய்து அதன் உறுப்புக்களைப் பங்கப்படுத்துவர். உருவத்தின் எந்த உறுப்புக்கு ஊனம் உண்டாகும்படி மாந்திரிகன் மந்திரம் செய்கிறானோ அந்த உறுப்பு நிஜ மனிதனுக்கும் ஊனம் அடையும் என்பது கருத்து. கொடும்பாவி கட்டி இழுக்கும் வழக்கம் இதை அடிப்படையாகக் கொண்டது. தங்களைத் துன்புறுத்தும் கொடுங்கோலர்களான மன்னர்களையும் அதிகாரிகளையும் போல உருவம் செய்து கட்டியிழுத்துக்கொளுத்தி விடும் வழக்கம் முன்பு இருந்தது.

இப்பொழுது மழையில்லாக் காலங்களில் கொடும்பாவி கட்டிஇழுக்கும் வழக்கம் உள்ளது. கொடும்பாவி இருப்பதால் தான் மழை பொழியவில்லை என்றும் கொடும்பாவி அழிந்தால் மழை பொழியும் என்றும் மக்கள் நம்புகின்றனர். எனவே கொடும்பாவி இறந்ததாகவும் அதற்கான சடங்குகளைச் செய்வதாகவும் பாவனை செய்கிறார்கள். கொடும்பாவி இறந்ததற்கான ஒப்பாரிகளும் மாரடிப்பாடல்களும் விளங்குகின்றன. இவற்றைப் பெரும்பாலும் ஆண்களே பாடி வருகின்றனர். மழையை வருவிக்கும் வசியமும் பாவனை மந்திரத்தைச் சார்ந்ததாகும்.

இரு பொருள்களுக்கிடையே உள்ள உறவை எளிதில் அழிக்க முடியாது என்பது மந்திரத்தின் அடிப்படைக் கருத்தாகும் ஒருவனுடைய முடி, நகம் போன்றவற்றிற்கு (உடலோடு ஒட்டிய உடைமைகளுக்கு) பாதிப்பை உண்டாக்கினால், அப்பாதிப்பு அவனுக்குச்சென்று சேருமென்று நம்புவது தொத்து மந்திரத்தின் பாற்படும். ஒரு வீரனின் மாமிசத்தை உண்பதால் அவ்வீரனின் வலிமை முழுவதும் வந்து சேரும் என்பதும், புலிப் பல் தாயத்தை அணிந்து கொண்டால் புலியின் வீரம் முழுவதும் தமக்கு வந்து சேரும் என்று நம்புவதும் தொத்து மந்திரத்தின் அடிப்படையில் வளர்ந்த நம்பிக்கைகளாகும்.

மந்திரத்தின் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அதனைத் தூய மந்திரம், தீய மந்திரம், உற்பத்தி மந்திரம், பாதுகாப்பு மந்திரம், அழிப்பு மந்திரம் எனப்பகுப்பர்.

மந்திரச் சடங்குகளும் மந்திரச் சொற்களும் ஒரு தனி மனிதனின் நலனுக்கோ ஒரு குழு அல்லது சமுதாயம் முழுவதன் நலனுக்கோ பயன்படுத்தப்படுவது தூய மந்திரம் எனப்படும். வேளாண்மை, வேட்டை, யுத்தம், மருத்துவம் ஆகிய துறைகளில் தூய மந்திரம் மிகுதியாகக் காணப்படும். மேலே கூறிய மந்திரத்திற்கு வேளாண்மை ஒரு சான்றாக அமைவதைக் காணலாம்.

ஆணும், பெண்ணும், பயிர்செய்யப்பட்டுள்ள நிலங்களில் புணர்வதால் அந்நிலங்களில் உள்ள பயிரிலும் அது போல இனப்பெருக்கம் நடைபெற்று மகசூலை அதிகம் பெருக்கும் எனவும் நம்பினர். சில விளைநிலங்களில் ஆண்,பெண் புணர்வது போன்றும், ஆண்,பெண் தனியாக நிர்வாணமாக நிற்பது போன்ற காட்சிகளும் காணப்படும்.

"சோளக் காட்டுப் பொம்மையெ
சொந்தப்பெண்ணே பாராயோ
சோளக் காட்டுக்குள்ளே நாமும்
சேர்குசாக ....
சோளமும் வெளஞ்சிடும்
சொந்தமும் வளந்திடும்"

என்னப் போலச் செய்தல் எனும் தூய மந்திரப்பாட்டு தொடர்ந்து கொண்டே செல்லும்.

துஷ்ட ஆவி அல்லது பேயினை ஒரு குறிப்பிட்ட மனிதனுக்கு எதிராக ஏவுதல் (ஏவல்) ஒருவனை நோய்வாய்ப்படும்படி அல்லது உடல் உறுப்பு ஊனமடையும்படிச் செய்தல் ஆகியன தீய மந்திரமாகும்.

ஒரு மனிதனின் காலடி மண்ணை எடுத்து நெருப்பில் போடுவதன் மூலம் அம்மனிதனுக்கு இடையூறு செய்யலாம் என்ற நம்பிக்கை தமிழகத்தில் பரவலாகக் காணப்படும் ஒன்றாகும். ஒருவருடன் தொடர்புடைய பொருள்களுக்கு ஊறு செய்வதன் மூலம் அவருக்கு ஊறு செய்யலாம் என்ற தொத்து மந்திரத்தின் விதி வழிப்பட்ட இது தீய மந்திரத்தின் பாற் பட்டதே.

ஒருவனது நகம் அல்லது தலைமுடியைச் சேகரித்து சில மந்திரச் சொற்களைக் கூறி அதனை அழிப்பதன் வாயிலாக அதற்குரிய மனிதனுக்கு உடற்பிணியையோ மரணத்தையோ ஏற்படுத்தலாம் என்பது தொத்து மந்திரத்தின் அடிப்படையில் எழுந்த தீய மந்திரமாகும்.

ஏவல் என்பது பொல்லாத ஒரு தெய்வத்தைக் கட்டுப் படுத்தி அந்தத் தெய்வத்தின் வாயிலாகக் குறித்த காலக் கெடுவில் குறிப்பிட்ட ஆளைக் கொல்லுவதாகும். இவை தீய மந்திரத்தின் பாற்படும்.

பகைவர்கள் மீது பில்லி சூன்யம் ஏவப்பட்டால் கற்கள் அல்லது அசிங்கமானபொருள் வந்து விழும். பில்லி சூன்யக் காரர்களுக்கு பிணத்தோடு தொடர்பு இருக்கலாம் என நம்பப் படுகிறது. இது தீய மந்திரத்தின் பாற்படும்.

மந்திரவாதிகளின் துணையுடன் ஒருவர் தன்னுடைய எதிரியின் மீது துன்பங்கள் ஏற்படும்படிச் செய்வதைச் 'செய்வினை வைத்தல்' என்பர். இது தீய மநதிரத்தின் பாற்படும்.

செய்வினையின் பிரிவுகளில் ஒன்று வசியமாகும். ஆண், பெண் இணையச் செய்யவும், குடும்பங்களில் ஒற்றுமை வேற்றுமை உண்டாக்கவும் பயன்படுகிறது.

வேட்டையாடுதல், மீன்பிடித்தல், வேளாண்மை போன்ற தொழில்களில் நல்ல பயன்கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் நிகழும் மந்திரச் சடங்குகள், உற்பத்தி மந்திரம் என்ற பிரிவில் அடங்கும். மழைவளம், பயிர்வளம், மக்கட்பேறு வேண்டி நிகழும் செழிப்புச் சடங்குகள் யாவும் உற்பத்தி மந்திரமேயாகும்.

இயற்கை மற்றும் எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள மேற்கொள்ளும் மந்திரம் பாதுகாப்பு மந்திரமாகும்

கண்ணேறு படாமலிருக்க பூசணிக்காய் கட்டுவது, திருஷ்டிப் பொம்மை செய்து வைப்பது, சீனிக்காரம்—மிளகாய் - எலு

மிச்சம் பழம் ஆகிய மூன்றையும் ஒரு கருப்புக் கயிற்றில் கட்டித் தொங்கவிடுவது கரி வியாபாரம் செய்வோர் கதி வியாபாரம் என்று விளம்பரப் பலகையில் எழுதுவது என்பன பாதுகாப்பு மந்திரமாகும்.

புதிய வீடு புகும்போது பூசணிக்காய் ஒன்றை மனித உருவம் செய்து வைப்பர். அவ்வாறு வைக்கப்பட்ட பூசணிக் காய் அழுகினால் கண் திருஷ்டி நீங்கியதாகப் பொருள் கொள்ளப்படும்.

சோளக் கொள்ளையில் சோளத்தை எவரும் கண் திருஷ்டி படாமல் இருப்பதற்கு மனித உடல் செய்த பொம்மை ஒன்றைக் கம்பில் கட்டி வைப்பர். அத்துடன் காகத்திற்கு அது காவலாக வும் காணப்படும்

செய்வினை என்ற பெயரில் எதிரிகளைக் கொல்ல--நோய்-வாய்ப்படுத்த மேற்கொள்ளும் செயல்கள் அழிப்பு மந்திர மாகும். வசிய மந்திரம் நீங்கலாக மீதமுள்ள தீய மந்திரங்கள் அழிப்பு மந்திரமேயாகும். எனவே மாந்திரிகச் சடங்குகள் அன்றாட வாழ்விலும் பயன்படுத்தப்படுகின்றன. சிறப்பு வகை யிலும் பயன்படுத்தப்படுகின்றன- அன்றாட வாழ்வுக்குரிய சடங்குகளை மேற்கொள்வதில் எவ்விதச் சிறப்புப் பயிற்சியும் வேண்டியதில்லை. ஆனால் சிறப்பு நிலைச் சடங்குகளை மேற் கொள்வதற்குப் பயிற்சியும் உத்திகளும் தேவைப்படுகின்றன இத்தகைய பயிற்சியும், திறமையும் பெற்றவர்களே மந்திர வாதிகள் எனப்படுவார். இம்மந்திரவாதிகளிடமிருந்தே சிறப்பு நிலை மாந்திரிகச் சடங்குகள் குறித்த விளக்கங்களைக் கேட்ட றிய இயலும்.

மனம்

மாசிலாமணி
சென்னை

1. உயிர் இயக்கம் தொடங்குவதற்கு உடம்பு வேண்டும் எனவே முதலாக அமைந்த உடலில் ஊறு என்னும் உணர்வு நின்றது. அந்த நிலைமையில் புல், பூண்டு. செடி கொடி, மரம் உள்ளன இவற்றை ஓர் அறிவு உயிர் என்பர். உடலில் சுவை உணர்வு வளர்ந்தது. அதற்காக வாய் தேவைப்பட்ட்து. ஊறு, சுவை உணரப்பெற்று நத்தை, இப்பிசங்கு, கிளிஞ்சல் முதலியன தோன்றின. அடுத்து முகரும் உணர்வு வளர்ந்தது அதற்கு மூக்கு அமைந்தது. அவை பெற்றவை செல், ஈசல், எறும்பு முதலியன. உடலில் ஒலி உணர்விற்காக கண் தேவைப்பட்டது. நண்டு, வண்டு, தும்பி, ஈ. முதலியவை இந்நிலையின. பிறகு உடல் ஒலி உணர்வை பெற செவி அமைந்தது. விலங்குகளும் பறவைகளும் அவ்வாறு தோன்றியவை. இப்போது உயிர் உற்று உண்டு, உயிர்த்து, கண்டு. கேட்டு ஆடியது முன்னேற்றத்தின் காரணமாக உயிர் மனம் என்னும் கருவியைப் பெற முடிந்தது. மனத்தை பெற்ற உயிர் மனிதன்.

2. தமிழ் மனிதன், வடமொழி மனுஷ்யஹா, ஆங்கிலம் மேன், தெலுங்கு, மனுஷ்ஷுலு வார்த்தைகள் ஒருவரையேக் குறிக்கும். ப்ளோட்டோ, மனிதன் ஒரு பகுத்தறிவும் விலங்கு என்றார். மிருகங்கள் இயல்பு உணர்ச்சியினால் வாழ மனித விலங்கோ, நல்லது கெட்டது என்பதனை அறிந்துக்கொண்டு மகிழ்ச்சியாக வாழலாம். மனிதகூட்டமாக வாழ்கிற சமூகச் சார்பான விலங்கும் என்றும், மனிதன் அடிப்படையான இயல்பு உணர்ச்சிகளின் மூட்டை என்றும் குறிக்கின்றனர். விவிலியம் உலகப்படைப்பின் தலையின் மனிதன் என்கிறது.

மனிதன் உடல், உயிர், மனம் உடைய ஜீவன்.

மனித் உடலமைப்பில் எலும்புக் கூடு, உடலை தாங்கும் இவைபணிச்சட்டமாக அமைந்திருக்கிறது. இச்சட்டம் தனித்தனி எலும்புகள் குருத்தெலும்பு, இணைக்கும் தசை, தசை நார்கள் களால் இணைகிறது. இரண்டு அல்லது அதற்கு மேல் எண் ணுள்ள எலும்புகள் இணையும் இடம் கணு இவை கபாலத்தில் அசையா இணைப்பாகவும், மற்றைய இடங்களில் அசையும், இணைப்பாக அமைந்திருக்கிறது. எலும்புகளின் அசைவுகளுக் கும், உறுப்புகளின் அசைவுகளுக்கும் தசைநார்கள் செயல்படு கின்றன. இவை தானாக இயங்கும், சில விருப்பத்திற்கிணங்கச் செயல்படும், மூளை அல்லது முதுகு தண்டினிலிருந்து புறப்படும் நரம்புகளை ஊக்குவித்ததலால் தசை நார்கள் சுறுங்கும்.

உடற்பகுதியை வயிற்று முகடு, இரண்டு அறைகளாக பிரிக்கின்றது. மேல் பகுதி மார்பு, கீழ்ப்பகுதி அடிவயிறும், கண்கள், காதுக்ள், நாக்கு இவை பார்க்க, கேட்க, ருசிக்க உதவு கின்றன. மூக்கில் உள்ள துவாரங்களில் காற்றை உள்ளிழுக்கும் போது உயிர்வளி உள்ளுக்குச் சென்று, கரிமல வாய்யு வெளியே சுவாசத்தோடு தள்ளப்படுகின்றது. இருதயம் அசுத்த இரத்தத். தை புப்புச்சங்களுக்கு அனுப்பி, அங்கிருந்து சுத்தம் செய்யப் பட்ட இரத்தத்தை உடலின் பல்வேறு பாகங்களுக்கு அனுப்பு கின்றது. நாம் உட்கொள்ளும் உணவை வயிறு, சிறுகுடல், பெருங்குடல் வழியாக சீரணிக்கப்பட்டு, மற்றையப்பகுதி கழிவுப்பொருளாக மலமாக வெளிவருகிறது. இரத்தத்திலுள்ள கழிவுப்பொருள்கள் சிறுநீர்ப்பை மூலமாக சிறு நீராக வெளிப் படுகிறது. இந்த அமைப்புக் கொண்டது உடல்.

மனிதனின் உடலில் உயிர் இல்லை என்றால் இயங்குவது கிடையாது. அப்போது உடம்பை பிணம் என்கிறோம். அது அழுகி துர்நாற்றம் எடுத்து ஈ, எறும்பு முதலியவைகள் அதைச் சூழ்ந்துக் கொள்ளும், அதை இடுகாட்டிற்கு எடுத்துச் சென்று பூமியில் புதைத்தோ நெருப்பில் எரித்து சாம்பலாக்கி விடுவர், அப்போது மனிதன் நினைவாகி விடுகின்றான். எது ஒன்று உடலில் இருந்தால் செயல்படுகின்றானோ, அது இல்லாவிட்டால்

அவன் பிணம் ஆகின்றான்னே அதைத்தான் உயிர் என்பர்- உடலைப்பேண வேண்டும் என்பதை திருமூலர்

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்.
உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன்.
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிந்தோம்புகின்றேனே.

என்று கூறுகிறார் திருமந்திரம், 725

எல்லோரிடத்திலும், எப்பொழுதும் செயல்படுகிறது ஒன்று உண்டு. மனிதன் செய்யும் உடற் காரியங்கள் அனைத்தும் முதலில் மனதில் செய்யப்படுகின்றன. மனிதனின் கண்டுப் பிடிப்புக்கள் அனைத்தும் முதலில் மனதிற்குள்தான் தோன்றுகின்றன. இன்ப துன்பங்களுக்கு இருப்பிடம் மனம் வெளிவுலகத்திலிருந்து மெய், வாய், கண், மூக்கு, செவிகளாகிய ஐம்பொறிகளின் வழியாக உட்புகும் ஒலி, ஒளி, சுவை, நாற்றம், ஊறு முதலிய உணர்வை உள்ளுயிர்க்கு அறிவிப்பது மனம். மனம் செயல்பட மூளை தேவை ஆனால் மூளையே மனம் ஆகாது, மூளை கெட்டிருந்தால் மன இயக்கம் சரியாக செயல்பட முடியாது. வீணை கெட்டிருந்தால் கலை ஒலி இசையை சரியாக இயக்க முடியாததுப்போல எனவே எப்படி வீணை இசை ஆகாதோ மூளையும், மனமாகாது, மனம் சடப் பொருளாக இருந்தால் கண்களுக்குப் புலப்படும், நுண்ணிய உடலணுக்கள் போலிருந்தால் பூதக் கண்ணாடி மூலம் பார்க்க முடியும். மனம் ஒரு சூக்கும்ப பொருள். மனம் உடலாகிய சடப்பொருளில் இருந்து அதை இயக்கிச் செயல்பட்டாலும், அது உடல் போன்ற உடல் சம்பந்தப்பட்ட ஸ்தூலப் பொருள் அல்ல. மனத்தின் இயக்கத்தை எண்ணம் என்றும் சொல்லுகிறார்கள். ஒளிக்கதிர்கள் பொருள்களின் மேல்பட்டு கண்களைத்தாக்க நரம்பு வழி அவ்வுரு அலைகள் முன்னர் சென்று தொட்டு மூளையிலிருந்து செயல்படும் மனம் அவ்வுருவின் வடிவாக திரிந்து நிற்கிறது. அப்போது தான் இது இன்னது என்று அறிந்து சொல்கின்றோம். மனம் இயங்காதவர் கண் முன் எந்தப் பொருள் இருந்தாலும், அவர் அதை அறியமாட்டார். மனதை நல்லிசையில் ஈடுபடுத்தி

யிருக்கும் ஒருவர் முன் நண்பன் வந்து நின்றாலும் அவரைக் காண மாட்டான். சட இயக்கங்கள் அனைத்தும் நடந்திருந்தும் மனம் அதை ஏற்று அதுவாக திரிந்து நிற்காமையால் நண்பனின் இருப்பை உணரவில்லை. ஐம்பொறிகள் வழியே வெளியுலகி லிருந்து வரும் ஒளி, ஒலி முதலியவைகளின் வடிவமாக மனம் திரிந்து நிற்பதைத்தான் நினைப்பு அல்லது எண்ணம் என்கின் றோம் மனம் எண்ணங்களின் தொடர்பற்ற, ஒற்றுமை இல்லாத நீரோட்டமாகும்.

இன்றைய அனு உலகத்தில், எத்தனையோ மறைந்திருந்த உண்மைகளின் மேல் படிந்திருந்த திரைகள் சிறிதளவு நீக்கம் பெற்றிருக்கின்றன. ஆனால் நமக்குப் புரியாதது இன்னும் எவ் வளவோ இருக்கின்றன. மனிதனின் வாழ்க்கை உடற்கூற் றோடு அமையப்பெற்றது என்றும், அந்த உடல் சிதையும் போது வாழ்க்கை முடிவடைகிறது என்றுக் கருதுவோரும் உண்டு. உடலோடு சம்பந்தம் இல்லாமல் மனிதனிடம் ஒன்று உண்டு. அது உயிர் அல்ல-மனம் அல்ல. அதுவே உள்ளுயிர் 'நான்' என்றும் சொல்லப்படுவது ஆன்மாவாகும்.

மனிதன் காலால் நடப்பது, கைகளை உயர்த்துவது, கழுத் தைத் திருப்புவது என்னும் செய்கைகள் தானாக நடப்பது இல்லை. நாம் விருப்பப்பட்டால்தான் நடக்கும் ஹத யோகி கள் உள்ளிருக்கும் அவயவங்களை தாங்கள் விருப்பத்திற்கிணங்க கட்டுப்படுத்துகிறார்கள். ஒருவன் கோபம் அடையும்போது ரத்த ஓட்டம் அதிகப்படுகின்றது. வயிறு செயற்பாட்டில் தேக்கம் அடைகிறது இந்த செயல்பாடுகள் ஒருவன் கட்டுப்பாட்டுக்குள் இல்லை இந்த மாறுபாடுகளை தொல்காப்பியர் மெய்ப்பாடு கள் என்றும். அவை எவ்வகை என்கிறார்.

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வேகுளி உலகை
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப

மனவெழுச்சியை உடலின் எந்த உறுப்பும் உணர்வதில்லை. கால் கோபம் அடைவது கிடையாது. கோப உணர்வே மாற்றங்

களுக்குக் காரணமாகின்றன. நாம் வேறு, நம் உடல் வேறு. ஒருவன் தோட்டத்தில் உட்கார்ந்துக் கொண்டு வானொலியில் வரும் இசையைக் கேட்டுக் கொண்டிருக்கின்றான். அவன் கண்கள் செடிகளைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், அவன் உணர்வு இசையின் மேல் சென்றிருக்கிறது. மனிதன் தூங்கும் போதும். அறுவை சிகிச்சைக்காக மயக்கம் கொடுக்கப்படும் போதும், இந்த 'நான்' தன்மை அடங்கியிருக்கின்றது. எனவே உடல் வேறு- உயிர் வேறு-மனம் வேறு-நான் எனப்படும். தன்னறிவிப்பு (Couscurisness) வேறு என்பதைக் காண்கின்றோம். மனிதன் உடல் உயிர். மனம்-தன்னிறைவு பெற்றிருந்தால் தான் முழுமை அடைகின்றான. உடல் உயிர் இதனால் இகத்தில் உழைக்கவும், மனத்தால் வாழ்க்கையை செம்மையாக நடத்தவும் பரம் என்ற ஒன்று இருக்குமேயானால், அதை அறிந்துக் கொள்ள மனம் உடனின்று தன்னறிவு அல்லது ஆன்மா என்பதை அறிந்து அதனால் ஏற்படும் அனுபவம் அடைகிறான் மனம் என்ற சாதனைக் கொண்டு மனிதன் பருப்பொருள் உலகத்தில் விந்தைப் புரிகின்றான். அதையேக் கொண்டு சிலர் ஆன்ம அறிவுப்பெற்று, மனித சமூகத்தினரிடையே சேவை செய்கின்றனர். இத்தகையோர் பொதுவாக நம் பாரத பூமியிலும் சிறப்பாக தமிழ் நாட்டிலும், தோன்றி மனித வர்க்கத்திற்கே வழி காட்டியாக திகழ்ந்துள்ளனர்.

'அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து'

மு. மாணிக்கம்
அருள்மிகு பழனியாண்டவர் கலை பண்பாட்டுக் கல்லூரி
பழனி

காவடிச்சிந்து என்பது அண்ணாமலை ரெட்டியாரால் உருவாக்கப் பெற்ற ஒரு புதுவகைச் சிந்து. இதன் இலக்கணத்தை அவரது காவடிச் சிந்து நூலைக் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும். அண்ணாமலை ரெட்டியாருக்கு முன்பே முருகனுக்குக் காவடி எடுப்பதும், அப்போது முருகன் பெருமையை இசையுடன் பாடிச் செல்வதும் இருந்திருக்க வேண்டும். அருணகிரிநாதரும், இராமலிங்க வள்ளலாரும் முருகன் பெருமையை இனிய சந்தத்தில் பாடியுள்ளனர். நாட்டுப்புற இசை மக்களைக் கவர்ந்திருந்த காலம் 18. 19-ம் நூற்றாண்டுகள். ஏற்கனவே முருக பக்தர்கள் பாடிவந்த சிந்துப்பாடல்களில் உள்ள இசையில் ஈடுபாடு கொண்ட ரெட்டியார் அந்தச்சிந்து மெட்டினைச் செம்மைப்படுத்திப் புதிய உருவங்கொடுத்துப் பாடினார். அதுவே காவடிச்சிந்து என்னும் புதிய சிந்து வகை. இதன் இலக்கணத்தைப் புலவர் குழந்தை கூறுவது கருதத்தக்கது.

'தெள்ளுதமி ழுக்குதவு சீலன்-துதி
செப்பண்ணா மலைக்கனு கூலன்-வளர்
செழியப் புகழ்விளைத்த
கழுகு மலை வளத்தைத்
தேனே-சொல்லு-வேனே'

அண்ணாமலை ரெட்டியார்
காவடிச்சிந்து

'இது முச்சீரிரட்டைக்குப் பின் முடுகும், தனிச்சீர் எடுப்பும் உடையன. 'கிலன் கூலன், தேனே-வேனே' என இயைபுத் தொடை நன்கு அமைந்துள்ளமை காண்க'(1).

அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து நூலில் பலவகை மெட்டுக்கள் உள்ளன. இப்புதுவகை இசையமைப்பை அண்ணா மலை ரெட்டியார் தமது கற்பனையால் திடீரென உருவாக்கிய ஒன்றன்று எனத் தெரிகிறது. 'அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்தில் அருணகிரிநாதர் முதல் இராமலிங்க சுவாமிகள் வரை நிலவிய பெரியார்களைப் பின்பற்றினார் என்று சொல் வது பொருந்தும் (2) என்பார் க. சி. கமலையா. பள்ளு, குற வஞ்சி போன்ற நூல்களின் தாக்கம் அண்ணாமலை ரெட்டி யாரின் நூலில் நிகழ்ந்துள்ளது என்பார் பழ. முத்தப்பன் (3). 'அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்தின் அமைப்பைக் கவனித்தால் இதுவும் நாட்டுப் பாடல்களினின்றும் சற்றே மாறு பட்ட ஒருவகைப் புதுச் சிந்து என்றே சொல்லத் தோன்று கிறது' (4). இன்று மலையாளத்தில் நாட்டுப் பாடல்களைப் பெரும்பாலும் காவடிச்சிந்து மெட்டிலேயே பாடுகிறார்கள் என்றும், காவடிச்சிந்துக்களையும் கிராமத்தார்கள் பெரும் பாலும் நாடோடி மெட்டுகளில்தான் பாடுவார்களே ஒழிய சுத்தமான கர்நாடக ராகங்களில் பாடுவதென்பது எங்கோ இரண்டோரிடங்க்ளில் அபூர்வமாக நடைபெறும் காரியம்தான் என்றும் கு. அழகிர்சாமி கூறுகிறார் (5). இப்பொழுதும் கிராம புறங்களில் முருக பக்தர்கள் பாடும் காவடிச் சிந்துப் பாடல் களைக் கவனித்ததில் அவை சுத்த கர்நாடக ராகங்களில் அமை யாமல் தெம்மாங்கு, ஆனந்தக்களிப்பு போன்ற மெட்டுகளில் அமைந்திருப்பதை அறிய முடிந்தது. காவடிப் பாடல்கள் அல்லது காவடிச் சிந்துகள் என்று முருக பக்தர்கள் பாடுவதில் நாட்டுப்புற இசையான கும்மி, தாலாட்டு, தெம்மாங்கு போன் றவைதான் மிகுதியாக உள்ளன. காவடிச்சிந்து என்று பாடு கின்ற பெரும் பாலான நாட்டுப்புறத்தார்க்கு அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்து தெரியவில்லை. காரணம் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்துகள் மற்ற நாட்டு புறக் காவடிப் பாடல்களான கும்மி, தாலாட்டு, தெம்மாங்கு

ஆனந்தக்களிப்புப் போல அவ்வளவு எளிதாக இல்லையென்பது தான் நாட்டுப் புற இசையின் அடிப்படையில் காவடிச்சிந்து நூலை அண்ணாமலை ரெட்டியார் இயற்றினாலும் தம் சுய திறமையையும் கற்பனையையும் பயன்படுத்திப் புதிய செம்மை யான ஒரு இசை வடிவத்தில் காவடிச் சிந்தைப் பாடியிருப்ப தால் பாமர மக்களுக்கு அப்பாடல்கள் அவ்வளவு எளிதாக இல்லை. டி.எஸ் பார்த்தசாரதி என்பவர் அண்ணாமலை ரெட்டி யாரை இந்திய இசையறிஞர்களுள் ஒருவராகப் பாரட்டுகிறார். அதற்குக் காரணம் ரெட்டியாரின் காவடிச்சிந்தில் கர்நாடக இராகங்களான நாட்டை, நாதநாமக்கிரியை, ஆனந்த பைரவி, கன்னடா, பைரவி, கமாஸ், தேஸ்சிய முகாரி போன்ற ராகங் களைக் குறிப்பிட்டிருப்பதுதான் (6). சிந்து என்னும் இலக்கிய வகை, ஒன்பது வகையான பழைய இசை இலக்கியங்களுள் ஒன்றாகக் கூறுப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் தாம் எழுதிய உரையில் கடலாடு காதைப்பகுதியில் எடுத்துக் கூறம் பஞ்சமரபுப் பாடல் இதனைக் கூறுகிறது. சுத்தம், சாவகம், தமிழென்னும் சாதியோசைகள் மூன்றினுட னும் கிரியைகளுடனும் பொருந்தும் இசைப்பாக்கள் ஒன்பது வகையென்ப, அவை சிந்து, திரிபதை, சவலை, சமபாத விருத் தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவ பாணி, வன்னமென விவை. என்னை?

செப்பரிய சிந்து திரிபதை சீர்ச்சவலை
தப்பொன்று மில்லாச் சமபாதம்-மெய்ப்படியும்
செந்துறை வெண்டுறை தேவபாணி வன்னமென்ப
பைந்தொடியா யின்னிசையின் பா' (7).

அடியார்க்கு நல்லாரின் உரை மேற்கோளில் கந்தன் பாட்டு என்று வருவது முருகனைப் புகழ்ந்து பாடிய சிந்தாகலாம். சங்க இலக்கியத்தில் வேலன் வெறியாட்டு என்று வருவது முரு கனுக்குப் பூசை செய்யும் பூசாரி செம்மறிக்கிடாயை அறுத்துப் பலியிட்டு முருகனுக்குச் செய்யும் பூசையைக் குறிக்கும். வேலன் என்னும் முருக பூசாரி முருகனுக்குப் பூசை செய்யும் போது இசையோடு பாடியிருக்கலாம். அவ்வாறு வேலன் பாடிய சிந்து

கந்தன் பாட்டு என வழங்கியிருக்கலாம். கந்தன் பாட்டு என்ற சிந்து அடியார்க்கு நல்லாருடைய காலத்திற்கு முன்பே வழக்கில் இருந்துள்ளது. அண்ணாமலை ரெட்டியார் முருகனைப் புகழ்ந்து காவடிச் சிந்து பாட அம்மரபும் முன்னோடியாக இருந்திருக்கலாம்.

அண்ணாமலை ரெட்டியார், காவடிச்சிந்து என்னும் ஒரு தனிவகை இசை அமைப்பில் பாடிய 22 பாடல்களைக் கொண்டது காவடிச்சிந்து. கு. அழகிரிசாமி காவடிச்சிந்து நூல் 24 பாடல்கள் கொண்டது என்று தாம் தேடிக் கண்டு பிடித்த 2 பாடல்களையும் சேர்த்துப் பதிப்பித்துள்ளார். பெரும்பாலான பதிப்புக்களில் எல்லாம் 22 பாடல்களே உள்ளன. தொடக்கத்தில் விநாயகர் வணக்கம் உள்ளது அடுத்து முருகன் துதியும், கழுகுமலை நகர் வளமும், வாவி வளமும் உள்ளன. அடுத்து வருகின்ற பாடல்களை நாயக நாயகி பாவத்தில் முருகனைத் தலைவனாகவும் அவன் அருளை நினைத்துத் தவிக்கும் ஜீவான் மாக்களைத் தலைவியாகவும் வைத்து அகப்பொருட்டுறையில் ரெட்டியார் பாடியுள்ளார். சங்க இலக்கியத்தில் கூடல், ஊடல், இருத்தல், இரங்கல், பிரிவு என்று ஐந்து உரிப் பொருளில் அகப்பாடல்கள் இருப்பது போலவே காவடிச் சிந்தில் 'களவியல் முற்றிலும் அழகாகப் பாடி முடிக்கிறார் நமது கவிஞர் முருகனிடம் தமக்குள்ள பக்தியை ஒவ்வொரு சிந்திலும் தெரிவிப்பதுடன் இறுதியில் ஆறுமுகனைக் கண்ணாலே கண்டாலே துன்பங்களெல்லாம் ஓடிப்போகும் என்று உலகிற்கு விளக்குகிறார்.

சென்னிகுள மேவிய வாசன்
இனியதுதி — யனுதினமும்
செய்திடும் அண்ணாமலை தாசன் — பாடும்
சிந்து மீது மிகுந்த காதலுறுஞ்
சிவன்மகன் அம்ச ரோருக
திவ்ய முகங்கள் ஆறுமே
கண்களிற் கண்டால் — துன்பங்களெல்லாம்
காதவழி யோடிப் போகுமே' (8).

ஆங்கிலத்தில் Boidal Mystieism என்று சொல்லப்படும் இறைவனை வழிபடுதற்குரிய முறைகளில் ஒன்றான நாயகி நாயக பாபவ முறையில் கவிதை புனைவது தமிழ்ப்பா உலகில் புதிதன்று. ஆழ்வார்களின் பாடல்களில் உள்ள அகப்பாடல் களுக்கு வியாக்யானம் செய்த உறையாசிரியர்கள் ஆழ்வார் களின் பெயர்களைப் பெண்பாற் பெயர்களாக்கிப் பராங்குச நாயகி (திருமங்கையாழ்வார்), சடகோபநாயகி (நம்மாழ்வார்) குலசேகர நாயகி (குலசேகர ஆழ்வார்) என்று குறிப்பிட்டுள் வார்கள். அதே முறையில் அகப்பொருளில் பாடல்கள் பாடிய சைவ நாயன்மார்கள்கூட ஞானசம்பந்த நாயகி, வாகீசநாயகி (திருநாவுக்கரசர்), சுந்தர நாயகி (ஆருரர்), மாணிக்கவாச நாயகி என்று அழைக்கப்படலாம் (9) என்கிறார் டாக்டர் துரை. ரெங்கசாமி அவர்கள்.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் தம்மைப் பெண்பாலர் போலப் பாவித்துக் கொண்டு இறைவனைக் காதலனாகப் பாவித்து அகப்பொருட்டுறையில் பரமான்மா — ஜீவான்மா உறவைப் பாடியுள்ளனர். உலகில் இறைவன் ஒருவன்தான் ஆண்மகன். மற்ற எல்லா ஜீவான்மாக்களும் பெண்களே என் கிறார் மீராபாய் (10). எனவே கடவுட் காதல் என்பது மானிடக் காதலுக்கும் அப்பாற்பட்டது எனினும் கடவுள் காதலையும் மானிடக் காதலுக்குரிய சொற்களிலேதான் புலவர்கள் பாடு கின்றனர் அப்படிப் பாடினாலும் நாம் அச் சொற்களுக்கு இறையனுபவப் பொருள் கொள்ளுதல் வெண்டும் (11). கண்ணன் கோபிகாஸ்திரிகளுடன் ஆடினான் என்பது கடவுள் ஜீவான்மாவுடன் ஒன்றாகிய நிலையையே விளக்குவதாகும். தாருகாவனத்தில் சிவபெருமான் பிட்சாடனமூர்த்தியாகச்சென்று முனிபத்தினியர்களை மயக்கியதும் இதே முறையில் பக்குவப் பட்ட ஆன்மாக்களான முனிபத்தினியரை இறைவனே விரும்பி தன்னுடன் சேர்த்துக் கொண்டதைத்தான் விளக்குகிறது என் பர். கிறித்துவ சமயத்திலுங்கூட செயின்ட் பெர்னார்டு என்ப வர் இதே முறையில் ஏசு பெருமானாகிய மணமகனை ஆன் மாக்கள் மணந்த நிலையைக் கூறுகிறார்.

இச் சமய மரபைப் பின்பற்றித்தான் அண்ணாமலை ரெட்டியார் தமது காவடிச்சிந்து நூலில் முருகனைத் தலைவனாகவும் பக்தனைத் தலைவியாகவும் வைத்து நாயக நாயகி பாவத்தில் அகப்பொருட்டுறை பொருந்தப் பாடியுள்ளார்.

அடிக்குறிப்புகள்

1) புலவர் குழந்தை, யாப்பதிகாரம், பக். 92.

2) க.சி. கமலையா, 'அண்ணாமலை ரெட்டியார்' தமிழ் இலக்கியக் கொள்கை, 6 ப. 162

3) பழ முத்தப்பன், 'சிந்து' தமிழ் இலக்கியக் கொள்கை, 6 ப 162.

4) மேலது, ப. 16.

5) T.S. Parthasarathy, Music Composers of India, P. 79.

6) சிலப்பதிகாரம்-கடலாடுகாதை, அடியார்க்கு நல்லார், உரை உ. வே. சா. பதிப்பு, ப.188.

7) யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், காவடிச்சிந்து அண்ணாமலை ரெட்டியார், பக். 61, 62.

8) Dr. M. A. Durai Rangasamy, The Religions and philosophy of Tevaram with special reference to Nambi Aruer (Sundarar), Book II P. 1245

9) Ibid., P. 1242.

10) Ibid., P. 1241.

11) Ibid., P. 1239.

தாண்டவம்

மு. அ. மாணிக்கவேலு
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

தமிழிலுள்ள கலைகள் அறுபத்து நான்கு. அவற்றுள் ஒன்றே ஆடற்கலை. அதுவே கூத்து, தாண்டவம், நடனம் முதலான பெயர்களில் அழைக்கப்படுகிறது. ஆடல்வல்லானின் பல நிலைகளைப் புலப்படுத்துவனவே தாண்டவங்கள். அவை ஆனந்த தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், காளிகா தாண்டவம், சங்கார தாண்டவம், சந்தியா தாண்டவம், திரிபுர தாண்டவம் என்பன. இவற்றுள் தாண்டவம் என்ற சொல்லினைக் காண்போம்.

தாண்டவம்: சொல்லும் பொருளும்

தாண்டவம் என்பதற்குப் பலர் பலவிதமான விளக்கங் களைக் கூறியுள்ளனர். 'தட்' என்று நிலத்தைத் தட்டுவது, அடிப்பது என்ற வினைச் சொல்லில் இருந்து வந்தது என்பார் ஒரு சாரார். தண்டு முனிவர் தந்தது என்பது மற்றொரு சாரார் கருத்து. தாண்டவம் என்பது ஒரு வகைப் பாவகையின் பெயர். அந்தப் பாட்டிற்கேற்ப ஆடப்படும் ஆட்டம் தாண்டவம் எனப்படும் என்பது பிறிதொருவர் கூற்று. இக் குறிப்புகளைக் கலைக்களஞ்சியம் கொடுக்கிறது.[1]

சென்னைப் பல்கலைக் கழகத்தமிழ்ப் பேரகராதி தாண்டவம் என்பதற்குத் தாவுகை, செலுத்துகை, கூத்துவகை என்ற பொருள்களைத் தருகிறது.[2] செந்தமிழ் அகராதி தாவுகை, கூத்துவகை என்ற பொருள்களைக் கூறுகிறது.[3] தாவல், கூத்து, செலுத்தல் என்ற பொருள்களைப் பகருகிறது பிங்கல நிகண்டு.[4]

மேற்கண்டவற்றில் இருந்து தாண்டவம் என்பது எந்த் பொருளைக் குறிக்கிறது என்ற எண்ணம் எழுகிறது நாம் ஒரு நாளில் பல தடவைகள் காலைத் தரையில் தட்டுகிறோம். எனவே, நிலத்தைத் தட்டுவதால் மட்டும் அது தாண்டவமாகி விடாது. நண்டு முனிவன் கூறியதால் அது தாண்டவமாகிறது என்பது வட மொழி நூல் கருத்து. ஆகவே, அது தமிழ் மொழிக்குப் பொருந்தாது. தாண்டகம் என்பது பாவினங்களுள் ஒன்று. அதன் பெயரால் ஓர் ஆடலின் பெயரை வழங்குவதும் பொருத்தமற்றது.

ஆடல் வல்லானின் ஒவ்வொரு தாண்டவமும் ஓர் இடத்தில் நிலையாக நின்று ஆடுவதைக் குறிப்பதில்லை; முன்னும், பின்னும் குதித்து-தாவி-தாண்டி ஆடுவதைத்தான் குறிக்கிறது. எனவே, தாண்டவம் என்பதற்குத் தாண்டித் தாண்டி ஆடுவது என்ற பொருள்தான் பொருந்தி வருகிறது.

சொல்லாட்சி

சங்க இலக்கியங்களில் தாண்டவம் என்ற சொல் இடம் பெறவில்லை. திருமூலர்தான் முதன்முதலில் 'தாண்டவமான தனியெழுத்து' என்று தம் நூலில் பயன்படுத்துகிறார்.[5] திரு மூலருக்கு அடுத்து சேக்கிழார்தான், தம் பெரிய புராணத்தில் 'தனிப்பெருந்தாண்டவம் புரிய' என்று குறிப்பிட்டுள்ளார்.[6] சேக்கிழாருக்குப் பின் பலர் தாண்டவம் என்ற சொல்லைத் தம் நூலில் வழங்கியுள்ளனர். எனவே, பன்னிரண்டாம் நூற் றாண்டிற்குப் பின்னர் இச்சொல் பெருவழக்குப் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

தாண்டவத்தின் இயல்புகள்

நிருத்தம், நிருத்தியம், நாட்டியம், தாண்டவம் என்பன ஒன்றுபோல் காணப்பட்டாலும், அவற்றிடையே சிற்சில வேறு பாடுகள் நிலவுகின்றன.

இசைக்கும் தாள இலயத்திற்கும் ஏற்ப ஆடுவது நிருத்தம். இவற்றில் வெறும் ஒலிகளே இடம் பெறும்; பொருள் பொதிந்த சொற்கள் இராது. இந்த தூய ஆட்டத்துடன் முகபாவம்,

கைமுத்திரை போன்ற அபிநயங்கள் சேரும்போது நிருத்தியம் ஆகிறது. நிருத்தியத்துடன் ஏதேனும் ஒரு கதையைச் சேர்த்து ஆடும்போது, அது கூத்து அல்லது நாடகம் எனப்படுகிறது. இதுவே, வடமொழியில் 'நாட்டியம்' என அழைக்கப்படுகிறது.

'வீர கோப ரௌத்திர ரசங்களைக் காட்டும் ஆண்மைத் தன்மைய ஆடல் முறைகளைப் பொதுவாகத் தாண்டவம் என் போம். இதற்கென கையாளப்படும் அடவுக்கோவைகளும, நிலைகளும், முகபாவங்களும் தாண்டவத்துக்கான இயல்பு களைக் கொடுக்கின்றன.'[7]

–எனும் திருமதி கார்த்திகா கணேசரின் கருத்து ஓரளவிற்குத் தான் பொருந்தும்.

ஏனெனில். ஆனந்த தாண்டவத்தின்போது அருள்நிலையே வெளிப்படுகிறது அந்நிலையில் கோபமும் வீரமும் வெளிப் படுவதில்லை. எனவே, தாண்டவம் என்பது கோப நிலையில் கடும் வேகத்துடன் ஆடக்கூடியது; ஆனந்த நிலையில் துள்ளிக் குதிக்கக் கூடியது என இரு நிலைகளைச் சுட்டலாம். இது பெரும்பாலும் ஆண்களாலேயே ஆடப்படுகிறது.

லாஸ்யம் என்பது பெண்கள் ஆடுவது. இது மென்மையாக ஆடக்கூடியது. இதனை பார்வதி தேவி அருளியதாகக் கூறுவர்.

தாண்டவ வகை

வழிபாட்டிற்குரிய நடராசர் திருமேனிகளில் சங்கார தாண்டவம், ஆனந்த தாண்டவம் தவிர மற்ற தாண்டவங்கள் காணப்படவில்லை. காளிகா தாண்டவத்திற்கு மயிலை. சீனி. வேங்கடசாமியும்,[8] தண்டபாணிதேசிகரும்[9] காட்டும் திருமேனி பொருத்தமாகக் காணப்படவில்லை. அத்திருமேனியைச் சதுர தாண்டவம் என்று கூறுவதே பொருந்தும்.

சங்கார தாண்டவம்

காரைக்காலம்மையார் தான் முதன்முதல் சங்கார தாண்ட வத்தைப் பாடியுள்ளார். இது ஊழிக்கூத்து என்றும் வழங்கப்

படுகிறது. ஊழிக்கூத்து என்பது உலகம் அழியும்போது ஆடப் படுவது. இவ்வாடலை இறைவன் சுடுகாட்டில் ஆடியதாகக் காரைக்காலம்மையார் குறிப்பிட்டுள்ளார். இதனை,

'நொந்திக் கிடந்த சுடலை தடவி நுகரும் புழுக்கின்றிச்
சிந்தித் திருத்தங் குறங்குஞ் சிறுபேய் சிரமப்படு காட்டின்
முந்தியமரர் முழவினோசை முறைமை வழுவாமே
யந்தி நிருத்த மனல்கை யேந்தி யழகனாடுமே'[10]

என்ற பாடல் கூறுகிறது. மேற்கண்ட பாடலின் இறுதி அடி, இறைவன் மாலையில் அழித்தல் தொழில் செய்து ஆடுவதைக் குறிப்பிடுகிறது. இத் தாண்டவமே சங்கார தாண்டவம் என்று அழைக்கப்படுகிறது.

அம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் 'அண்டமுற நிமிர்ந்தாடும் எங்கள் அப்பன் இடம் திருவாலங் காடே'[11] என்ற அடி இடம் பெற்றுள்ளது. காளியோடு ஆடிய தால் காலை மேலே தூக்கி ஆடினார் என்ற புராணக்கதை வழக்கில் உள்ளது. இதையொட்டி இத்தாண்டவத்தை ஊர்த் துவத்தாண்டவம் என்று வழங்குகின்றனர். ஆனால், அம்மை யாரின் பாடல்களில் காளியோடு இறைவன் போட்டி இட்டு ஆடிய குறிப்பு இல்லை. சேக்கிழாரும், காரைக்காலம்மையார் புராணத்தில் இப்போட்டியைக் குறிக்காதது இங்கே கருதத் தக்கது. இது மேலும் ஆய்வுக்குரியது.

ஆனந்த தாண்டவம்

ஆனந்த தாண்டவம் என்பது உயிர்களின் ஆணவ இருளைப் போக்கி, அவரவர் பக்குவ நிலைக்கேற்ப வினைகளை நுகரச் செய்து, பேரின்பத்தை அளித்து ஆடுவதாகும். இதனை, உண்மை விளக்கப் பாடல் சுட்டுவதும் இங்கே நோக்கத்தக்கது.[12]

ஐந்தொழில்களையும் ஒருங்கே நிகழ்த்துகின்ற தாண்டவம் ஆனந்த தாண்டவம் என்பதைப் பினவரும் திருமந்திரப் பாடல் புலப்படுத்துகிறது.

'அரன்துடி தோற்றம் அமைப்பில் திதியாம்
அரன்அங்கி தன்னில் அறையில் சங்காரம்
அரனுற்றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி என்றும் அனுக்கிரகந் தானே'[13]

மேலும், திருமூலர் ஆனந்த தாண்டவத்தை 'ஆனந்தக்கூறு' என்றே போற்றுகிறார். இதனை,

'தத்துவம் ஆடச் சதாசிவந் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தன்றே'[14]

என்ற பாடல் குறிப்பிடுகிறது. இத்தகைய ஆனந்த தாண்டவத் திருவுருவங்கள் பெரும்பாலான கோயில்களில் காணப்படுகின்றன. தில்லைத் திருக்கோயிலில் காணப்படும் ஆடல்வல்லானின் அழகில் ஈடுபட்டுத் திளைத்த அப்பர் பெருமான் கீழ்க்கண்ட பாடலைப் பாடியுள்ளார்.

'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயின் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்
மனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'[15]

மேற்கண்ட பாடலின் மூலம் ஆனந்த தாண்டவத்தின் அழகும் அமைப்பும் கண்டாரை மயங்க செய்யும் ஆற்றல் உடையன என்பதை அறியலாம்.

முடிவுரை

இப்படியன் இந்நிறத்தான் இவ்வண்ணத்தான் என்று காட்ட இயலாத இறைவனை ஆடல் வல்லானாக கற்பித்து

அவன் ஆடியவனாகத் தாண்டவங்கள் பற்றிய புராணக் கதைகள் பிற்காலத்தில் பெருகலாயின. இவையாவும் பேரண்டத்தின் இயக்கத்திற்கு மூல காரணமாக உள்ள இறைவன் ஆடலின் மூலம் இயங்கிக் கொண்டே இருக்கிறான் எனும் அரிய தத்துவத்தை வெளிப்படுத்துவனாய் உள்ளன. இறைவனின் இயக்க நிலையை இந்த தாண்டவங்கள் புலப்படுத்துகின்றன.

குறிப்புகள்

1) கலைக் களஞ்சியம், ப.554.
2) Tamil Lexicon, p.1828
3) செந்தமிழ் அகராதி, ப.350
4) பிங்கல நிகண்டு, சூ. 3624
5) திருமந்திரம், பா. 868
6) பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட புராணம், பா.108
7) கார்த்திகா கணேசர், காலந்தோறும் நாட்டியக்கலை, ப.66
8) மயிலை. சீனி.வேங்கடசாமி, இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், ப.34
9) தண்டபாணி தேசிகர், ஆடல்வல்லான், ப.130
10) காரைக்காலம்மையார் திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகம் II பா.7
11) மேற்படி, திருப்பதிகம் I பா 4
12) மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கி அருள் தான் எடுத்து - நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல்
தான் எந்தை யார்பரதம் தான்.
-உண்மை விளக்கம், பா.37
13) திருமூலர் திருமந்திரம், பா.2753.
14) மேற்படி, பா.2743.
15) திருநாவுக்கரசர் தேவாரம், 4:81:4

பதிப்பித்தலும் வெளியிடுதலும்

முனைவர் வே. இரா. மாதவன்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தன் படைப்புகளை அச்சில் பதிப்பித்துக் காட்டுதலும் பிறர் படைப்புகளை அச்சில் பதிப்பித்துக் காட்டுதலும் இன்றைய மொழியாசிரியர், கல்வியாளர்க்கு இன்றியமையாதன வாகின்றன. தான் ஒரு பதிப்பாசிரியன் என்ற பெயரைப் பெற பலரும் விழைவதுடன், புத்தக வெளியீட்டு நிலையிலுள்ளவரும் தம்மை ஒரு 'பதிப்பாளர்' எனக் கூறிக் கொள்வதில் பெருமை யடைகின்றார் பதிப்பு என்பதன் முழு நிலையை உணராதோரும் இப்பெயர் பெற விழையும் இன்றைய நிலையில் இதை ஆராய் வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பதிப்பித்தல்

பதிப்பித்தல் என்பது பதித்தல் ஆகும். தமிழில், பதி→பதிவு →பதிப்பு→பதிப்பித்தல்→பதித்தல் எனவாகும். பதித்தல் என்பது 'அழுத்தல்' (To imprint, impress, stamp, engrave, as in mind, to plunge) என்ற பொருளைத் தரும்.

'பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி (திருவாச. 11, 12) என்பர் மாணிக்கவாசகர். எனவே, எதையும் அழுத்தம் பெறச் செய்தலை அல்லது அழுத்துகையைப் 'பதித்தல்' என்றனர்.

மனிதன் தன் எண்ணங்களை முதலில் மனதில் பதித்தான். அதன்பின்னர், அவற்றைப் பிறருக்கு அறிவிக்கவும், அவற்றை அழியாமலிருக்கச் செய்யவும் 'கல்' போன்ற எழுதுபொருள்களில்

பதித்தான். அவன் எண்ணங்களும் சிந்தனைகளும் வளர வளர, துணி, தோல், ஓலை, பட்டை ஆகியவற்றில் அவற்றைப் பதித்தான் காலம் கனிந்த பின்னர் காகிதத்தில் பதித்தான். அதிலும் விரைவாகப் பதிக்க அச்சுரு கண்டான். அதன் விளைவாய் அளவிலாப் பதிப்புகளை இன்று அமைத்து வருகின்றான்.

எனவே, பதிப்பித்தல் என்பது ஒரு பொதுச்சொல்லாகவே அமைகின்றது தமிழில் கடந்த நூற்றாண்டு வரையில் ஓலையில் பதித்து எழுதி வந்ததைப் பின்வந்தோர் அச்சிலும் பதித்தனர். அவர்கள் அச்சுருவாய் வெளியிட்டதைப் 'பதிப்பு' என்றே அழைத்தனர்.

வெளியிடுதல்

வெளியிடுதல் என்பது வெளிப்படுத்துதல் ஆகும். ஒன்றினைப் பலர் அறியத் தெரிவித்தல் (To reveal, divulge), காட்டுதல் (To show, express), வெளிவரச் செய்தல் (To cause, to issue or come out) ஆகியன வெளிப்படுத்துதல் அல்லது வெளியிடுதல் ஆகும். நூல் வெளியிடுதலும் இதில் அடங்கும்.

எழுத்து வடிவங்களில் காணப்படுகின்ற படைப்புகளை உலகோர்க்கேற்ற வகையில் வெளியிட்டு அறிவித்தல் என்பதே வெளியிடுதல் (Publishing) என்னும் ஒரு பணியாகும். இது பதிப்பித்தலின் பின் நிகழும் பணியாம்.

பதிப்பித்தலும் வெளியிடுதலும்

பதிப்பித்தலைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லாகிய 'edit' என்பது 'e:dit-us' என்னும் இலத்தீன் சொல்லிலிருந்து வந்தது. இதற்கு 'நூல் வெளியிடுதல்' (the publishing of a book) என்ற பொருளையே இலத்தீன்-ஆங்கில அகராதி கூறுகின்றது. (D.D.Simpson, Latin English Dictionary)

ஆயின், நூல் வெளியிடுதலில்பதிப்பித்தல் அடங்குமாயினும் நூல் வெளியிடுதல் என்பதே பதிப்பித்தல் என்பதாகாது. பதிப்பித்தல் என்பதில் பல்வேறு கூறுகளையுடைய பணிகளும், வெளியிடுதல் என்பதில் பல்வேறு கூறுகளையுடைய பணிகளும்

தனித்தனியே செய்யப்பெற வேண்டியுள்ளன. இவ்விரண்டு நிலைகளையும் ஒருவரே ஏற்றும் நடத்த இயலும். ஆயின் அதற்கென அவருக்குத் தனித்திறன்கள் வாய்க்கப் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லையெனின் ஏதேனும் ஒரு நிலையிலேயே அவர் மதிக்கத் தக்கவராவர். இவ்விரண்டையும் செய்வோர் அல்லது முன்னதை மட்டும் செய்வோர் பதிப்பாளர் (பதிப்பாசிரியர்-editor) எனவும், பின்னதை மட்டும் செய்வோர் வெளியீட்டாளர் (Publisher) எனவும் அழைக்கப் பெறுவர்

இந்நிலையைப் பெறுவதில் இன்று சில குழப்பங்கள் உள்ளன சில சமய நிறுவனங்கள் தங்கள் வெயீடுகளுக்கு நிதியுதவி வழங்கியோரையும் 'பதிப்பாளர்' எனக் குறிக்கின்றன. நூல் வெளியிடும் ஒருசில பதிப்பகத்தார் (அச்சகத்தார்) தாம் அமைக்கும் அச்சக உரையைக் கொண்டு தம்மைப் பதிப்பாசிரியர் எனப்பெயரிட்டுக் கொள்வதும்; வேறு சிலர், குறிப்பிட்ட படைப்புகளைப் பிறர் பதிப்பித்துக் கொடுக்க, அதன் மூலம் தான் அறிந்த நூற்பொதி செய்திகளை வெளிக்காட்டிப் பதிப்புரை என ஒன்றை வரைந்து, தம்மைப் பதிப்பாசிரியர் எனக் கூறிக்கொள்ளும் குழப்பங்களும் சிலவிடங்களில் உள்ளன. எனவே, பதிப்பித்தல் என்றால் என்ன? பதிப்பித்தலின்போது செய்ய வேண்டிய பணிகள் என்னென்ன? என்பதைத் தெளிவாக அறிந்தால் மட்டுமே இக் குழப்பங்களை நீக்க இயலும்.

பதிப்பித்தல் (editing) என்பது. ஒரு நூலின் மூல எழுத்தாண்மை வடிவத்திற்கு (பதிப்பு-edition) ஏற்ற முறையில் ஏட்டை உருவாக்குதல் ஆகும். இதனைச் செய்யும் மொழிப் புலமை மிக்க ஓர் ஆசிரியர் பதிப்பாசிரியர் (editor) ஆவர். இப் பதிப்பாசிரியர்களின் பணி அமைப்பினைக் கொண்டு பதிப்பித்தலைப் பல வகைகளாகப் பிரிக்கலாம். பின்வரும் முப்பெரும் பிரிவுகளில் அவற்றை அடக்கியும் காணலாம்.

1. சுவடி பதிப்பித்தல் (Manuscript editing)

பழந்தமிழ் நூல்களான சங்க இலக்கியம், நீதிநூல்கள், காப்பியங்கள், சாத்திரங்கள், கலைநூல்கள், இலக்கணங்கள், மருத்துவம், சோதிடம் போன்ற ஏட்டுச் சுவடிகளை இன்றைய

பயன்பாட்டிற்கேற்ப நூல்களாக்குதல் இதில் அடங்கும். இது மிகவும் சிக்கலானதும், காலங் கடந்த நிலையில் நுணுகி ஆராய்ந்து செய்யப் பெறுவதும் ஆகும்.

2. இதழ்கள் பதிப்பித்தல் (Journal editing)

ஆண்டு, மாத. வார, சிறப்பு இதழ்களைப் பதிப்பித்தலும், கருத்தரங்க மலர்கள், கட்டுரைத் தொகுப்புக்கள் போன்றவையும் இதிலடங்கும். இவை, இக்கால மொழிநடையில் அமைந்த, அண்மைக்கால அல்லது இன்றைய படைப்புகளை வகுத்துத் தொகுத்தமைத்தலும், தேர்ந்து திரட்டியமைத்தலுமே ஆகும்.

3. செய்தித்தாள் பதிப்பித்தல் (News paper editing)

அன்றாட வாழ்க்கையில் மக்களுடன் தொடர்புடைய பல் வேறு செய்திகளை, அவர்களுக்கேற்ற வகையில், அப்போதைக் கப்போது, அமைத்தளிப்பது என்பது இதில் அடங்கும்.

இம்முப்பெரும் பிரிவுகளும் பல்வேறு சிறு உட்பிரிவுகளை உள்ளடக்கியும் அமையும். இவற்றின் பணிகள் பொதுநிலையில் ஒன்றுபட்டிருப்பினும், தனிநிலையில் தனித்தன்மையையும் கொண்டுள்ளன என்பது அவ்வப் பதிப்பு நிலைகளை மேற் கொள்ளும் பொழுதே வெளிப்படும்.

மேற்காணும், இதழ்கள் மற்றும் செய்தித்தாள்கள் போன்ற வற்றைப் பதிப்பித்தலில் மிகுந்த சிக்கல்கள் இருப்பதில்லை. இவற்றைச் செய்வோருக்கு முழு உரிமைகள் வழங்கப் பெறும். அவர்கள் தம் கொள்கைக்கேற்பவும், காலத்திற்கேற்பவும், இடத்திற்கேற்பவும், பொருளுக்கேற்பவும் படைப்புகளை மாற்றியும், புதுக்கியும், வரையறுத்தும், நெறிப்படுத்தியும் அமைத்துக் கொள்ள முடியும். இதனால் படைப்பாளரின் உண்மைப் படைப்புகள் வெளிவராமலும் போகக்கூடும். இவ் வகையில் பெரும்பாலும் திருத்திய அல்லது மாற்றுருவம் பெற்றலையே வெளியிடப்பெறும்.

இந்நிலையில் இவ்வகை ஆசிரியர்களுக்குப் பிறர் படைப்பை வெளிப்படுத்திக் காட்டுதல் என்பதே பெரும்பணியாக அமை

கின்றது. இன்னும் விளக்கமாகச் சொன்னால், பல படைப் பாளர்களின் படைப்புகளைத் தொகுத்து ஒரு வடிவங்கொடுத்து நூலாக வெளியிடுதல் என்பது இவர்தம் பணியாக அமைகின்றது. இது முன்னர் குறிப்பிட்ட 'e:dit-us' என்னும் இலத்தீன் சொல்லுக்குப் பொருத்தமுடையதாகும்.

ஆயின், சுவடி பதிப்பித்தல் என்பது முற்கூறிய பதிப்பித்தல் நிலைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு நிலையாகும். சுவடி களை நூலாக வெளிக்காட்ட விழைவோர்க்கு (சுவடிப் பதிப் பாசிரியர்க்கு) மிகுந்த கட்டுப்பாடுகள் உள்ளன.

குறிப்பிட்ட சுவடியைப் பதிப்பிக்க ஏற்றவுடன், பின்வரும் நெறிகளை அவர் உறுதியாகப் பெற வேண்டியவராகின்றார்.

1) எடுத்துக் கொள்ளப் பெற்ற சுவடிக்குரிய மாற்றுச் சுவடிகளைத் தேடித் தொகுத்தல்.

2) காலம், இடம், மொழிநடை, தனமை இவற்றினைக் கொண்டு அச்சுவடிகளைப் பிரித்தறிதல்.

3) ஒன்றை அடிப்படையாகக் கொண்டு. பிறவற்றைத் துணையாக்குதல்.

4) முறையாகப் படியெடுத்தல்.

5) ஏடு எழுதுவோரால் ஏற்பட்ட பிழைகளைக் களைதல்

6) தெளிந்த பாடங்களை நிறுவுதல்

7) மூலநூலாசிரியரின் கருத்துக்கு எவ்வகையானும் மாறு படாதிருத்தல்

8) பிற பாடங்களை உரிய வகையில் அடிக்குறிப்பில் அளித்தல்

9) வேண்டிய பகுதிகளுக்கு விளக்கமளித்தல்

10) பதிப்புப் பணியின்போது தான் அரிதின் முயன்று கண்ட நூற்பொதி செய்திகளையும், தான் சிறப்பெனக் கொண்டு பகுதிகளையும் தனியே பதிப்புரையில் குறிப் பிட்டுக் காட்டல்

11) அட்டவணைகளை அமைத்தல்

12) அருஞ்சொற்பொருள் தருதல்

என இவ்வாறு பல நெறிகளை ஒவ்வொரு சுவடிப் பதிப்பாசிரியரும் கொள்ள வேண்டியுள்ளனர். இவற்றால் இவர்தம் பணி மிகுந்த கடப்பாடுடையதாகின்றது. இவற்றை இவர் மிகுந்த கண்ணுங்கருத்துமாக இருந்தே நிறைவேற்ற இயலும். தன் விருப்பு, வெறுப்புகளுக்கும் கால இடமாற்றங்களுக்கும் அப்பாற்பட்ட நிலையிலேயே இவர் பணியாற்ற வேண்டும். எனவே, சுவடி பதிப்பித்தலே பிற பதிப்பித்தலினும் சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது.

இங்கு, மூல நூலாசிரியரின் படைப்பிலுள்ளதை, 'உள்ளது உள்ளவாறே வெளிக் கொணர்வது' என்ற நிலையில் 'பதிப்பித்தல்' என்பது மிகவும் பொருளுடையதாகின்றது.

மூல ஏட்டினை நூலாக ஆக்குவது மட்டுமன்றி, மூல ஏட்டாசிரியரின் கருத்தைச் சிதையாது பாதுகாத்து வெளியிடுவதும் இப்பதிப்பித்தலில் குறிப்பிடத் தக்கதாகும். மேலும், To edit means to present anything in a disciplined manner, to arrange, to annotate or otherwise prepare an author's work for publication. (M.L.Chakkaraborti 1975,p.318) என்போரின் கருத்தும் இதற்கு அரண் செய்யும். எனவே, பதிப்பித்தல் என்ற நிலையிலும் வெளியிடுதல் என்ற நிலையிலும் 'சுவடி பதிப்பித்தல்' என்பதே பொருள் பொதிந்ததாகின்றது. மற்றொரு வகையில் நோக்கப் 'பதிப்பித்து வெளியிடுதல்' என்பது சுவடி பதிப்பித்தலையே பெரிதும் குறிப்பதாகின்றது.

மேற்காணும் செய்திகளைத் தொகுத்து நோக்கின் சில சிந்தனைகள் உருவாகலாம்.

1) பதிப்பித்தலில் வெளியிடுதல் அல்லது வெளிப்படுத்துதல் அடக்கமாகும். ஆயின், வெளியிடுதல் மட்டுமே பதிப்பித்தலாகாது.

2) பதிப்பித்தலில் பல நெறிமுறைகள் கடைபிடிக்கப் பெற வேண்டியுள்ளன. இவை பதிப்புக்குப்பதிப்பு மாறுபடக் கூடும்.

ஆனந்த விகடன் - அரசியல் துணுக்குகள்

க. மாரிமுத்து
அ.ப.ஆ.க.ப. கல்லூரி. பழனி.

இலக்கியங்கள் பலவகை அவை காலந்தோறும் உருமாறிக் கொள்பவை ; தனிப்பாடல்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், நாவல்கள், சிறுகதைகள், குறுநாவல்கள், ஒரு பக்கக் கதைகள், நொடிக்கதைகள் எனப் பல்வேறு பெயர் பெற்று வந்துள்ளன. இப்போது துணுக்கு எனப் பெயர் தாங்கி, அனைத்து வார, மாத இதழ்களிலும் ஆக்கிரமிப்புச் செய்து அனைவரையும் ஈர்த்து வரும் ஒரு புதுவகை இலக்கியமாக வளர்ந்து வருகிறது. வேகமாக மாறிவரும் இந்த அவசரமான அணுயுகத்தில் சொல்ல வேண்டிய கருத்தைக் காவியமாய் நாவலாய் நீட்டிக் கொண்டிராமல் சுருக்கமாய் நமக்குத் தெறித் தாற்போல் கூறிக் காலமீதம் செய்யும் 'துணுக்கு இலக்கியம் செல்வாக்குப்பெற்று வருவதில் வியப்பில்லை. நகைச்சுவை யோடு கிண்டல் கேலி - நையாண்டி ஆகியவற்றை அளவுடன் கலந்து சமகாலப்பிரச்சனைகளை இவ்விலக்கியம் பேசுவதால் பலம் பெற்றுத் திகழ்கிறது மட்டுமின்றி ஆளும் வர்க்கத்தைக் கூட அசைத்து ஆத்திரமடைய வைத்தது. சாதாரண மக்களுக்கும் இது சென்றடைகிறது. இவ்விலக்கியம் சலிப்புற்ற மனங்களுக்கு சந்தோஷமும் வறட்டு மனங்களுக்கு வாய்விட்டுச் சிரிக்கும் வாய்ப்பும் கொடுக்கிறது. குமுதம், ஆனந்தவிகடன், குங்குமம், சாவி, தாய், இதயம் பேசுகிறது, கல்கி, தினமணிக் கதிர் போன்ற வார இதழ்கள் துணுக்குகளை அதிகமாக வெளி யிடுகின்றன. இவற்றில் 1988- ஆம் ஆண்டு ஆனந்தவிகடனில் வெளியான அரசியல் துணுக்குகள் மட்டும் இக்கட்டுரைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆனந்த விகடன் நீண்டகாலமாக வெளிவரும் ஒரு வாரப் பத்திரிக்கை. குமுதம் பத்திரிகைக்கு அடுத்து அதிகமான வாசகர் பரப்பைக் கொண்டது. கல்கி, தேவன், கொத்த மங்கலம் சுப்பு, சாவி போன்ற எழுத்தாளர்களை வளர்த்து விட்ட பத்திரிக்கை. ‘‘எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே’’ என்று தன் நோக்கத்தைப் பிரகடனப் படுத்தியே வெளிவந்து கொண்டிருக் கிறது. எனினும் சிரிப்புக்கும் அப்பால் சிந்தனையைத் தூண்டும் வகையில் அரசியல் கருத்துக்களைத் துணுக்குகளாக வெளி யிட்டு வருகிறது. சிரிப்புத் திருடன் சிங்கார வேலு, முழுச் சோம்பேறி முருகேஷ், மிஸ்டர் எக்ஸ், நற நற சிக்கனம் சின்னு போன்ற தலைப்புக்களில் துணுக்குகள் வெளியிடப்படுகின்றன. அரசியல், அலுவலகம், கணவன்-மனைவி உறவு, மாமியார் - மருமகள் சண்டை, திருடர்கள் - தீரம், பிச்சைக்காரர்களின் பணக்காரத்தனம், டி.வி. பற்றிய கேலி - என்ற பிரிவுகளிலே தான் துணுக்குகள் வருகின்றன. அப்படி வரும் துணுக்குகளில் பெரும்பாலும் கணவன்மார்கள் சமையல் செய்கிறார்கள், துணி துவைக்கிறார்கள், ஆபீஸ் ஊழியர்கள் அநியாயமாய் ஆபீஸி லேயே தூங்குகிறார்கள் - பொது அறிவில்லாத நடிகைகள் உளறோ உளறு என்று உளறுகிறார்கள். டி.வி. நார்நாராகக் கிழிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட துணுக்குகளை, ஆனந்த விகடனுக்கு அனுப்புவோர் உ. ராஜாஜி. சாரதி டேச்சு, படுதலம் சுகுமாரன், ஆர்.ஜே.அனுசுபா. எம்.பூங்கோதை. வே சாமி நாதன், கீழை. அ. கதிர்வேல், அம்பை தேவா போன்றோர் பலர் பல்வேறு வகைகளில் எழுதிய துணுக்குகளில் அதிகமாக இடம் பெறுபவை அரசியல் துணுககுகளே ஆகும்.

அரசியல் அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் - என்பதை நமது அரசியல்வாதிகள் அன்றாடம் நிருபித்து வருகிறார்கள். அரசியல் உலகில் அவர்கள் அடிக்கும் கொட்டம் கொஞ்ச நஞ்சமல்ல. அவைகளை எல்லாம் அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன துணுக்குகள். ஆயிரம் பக்கங்களில் விரித்து நாவல் எழுதி - இலட்சக் கணக்கில் செலவழித்துப் படம் பிடித்து அரசியல் வாதிகளைக் கொடுமைக்காரர்களாய்க்

காட்டுவதை, ஆரவார மில்லாமல் ஓரிரு வரிகளில் துணுக்குகள் செய்துவிடுகின்றன. இனி துணுக்குகளின் தன்மையைக் காண்போம்.

வன்முறை

ஒவ்வொரு கட்சியும் போட்டிபோட்டுக் கொண்டு வன்முறையை கட்டவிழ்த்து விடுகின்றன. ஒரு கட்சியின் கட்டுப்பாடு என்ன என்பதையும் அதனை மீறிய ஒரு கட்சித்தொண்டர் பெற்ற தண்டனையையும்

'கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய காரணத்துக்காக
என்னைக் கட்சியை விட்டே நீக்கிட்டாங்க.........!''
''என்ன மீறினீங்க...... ?
போனவருஷம் பூரா ஒரு ரௌடித்தனம் கூட
நான் பண்ணலையாம்!''

– மீனாகுமாரி, ஆனந்தவிகடன், 24. 4. 88, ப 79.

கொலை பாதகம் புரிதல், சுள்ளச் காராயம் காய்ச்சுதல் போன்றவற்றில் நம் அரசியல்வாதிகள் பலே ஆட்கள். அவர்கள் திருடர்களையும், ரௌடிகளையும் நல்லவர்கள் ஆக்கிவிடுவார்கள் போலிருக்கிறது.

'அந்தக் கேடி ரொம்ப நேர்மையானவன்னு எப்படிச்
சொல்றே............ !''

''கடைசிவரை அரசியலுக்கு வராமல் கொலை, கொள்ளை, கற்பழிப்புன்னே இருந்துட்டானே ? !''

– வே.ஜே. அனுசுபா., 25 9.88, ப. 21.

கட்சியின் இலக்கணம்

ஒரு கட்சி மக்கள் நலம் பேணுவதாக இருக்க வேண்டும் என்பதெல்லாம் கனவாகிப் போய்விட்டது. இப்போதைய கட்சிகளின் இலக்கணத்தை ரத்தினச் சுருக்கமாகக் கூறிவிடுகிறார்கள் துணுக்கு எழுத்தாளர்கள்.

''ஒருத்தனா வந்தா திருடன்.........
ஏழெட்டுப் பேரா வந்தா கொள்ளைக்கூட்டம்.........
நாத்துக் கணக்கா வந்தா............
அரசியல் கட்சி?!''

என்ற துணுக்கு எவ்வளவு உண்மையான படப்பிடிப்பாக அமைந்து விட்டது. சமீபத்தில் நம் தமிழகச் சட்டசபை நிகழ்ச்சியின் பின்னணியில் எழுந்த துணுக்கு இதோ,

'தலைவரே, ஒரே தொகுதியில் சீட்டுக் கேட்டு
நாலுபேர் வந்திருக்காங்க'
''அவங்க கையிலே ஒரு மைக்கைக் கொடுத்து
சண்டை போடச் சொல்லுங்க. ஜெயிக்கிற
ஆளுக்கு சீட்டு கொடுத்திடலாம் !''

– எஸ். நடராஜ், 22. 5. 88, ப. 85,

திருடர்கள் கூட ஓரளவுக்குச் சட்டத்துக்குப் பயந்து திருடுகிறார்கள். ஆனால் அரசியல்வாதியோ எதற்கும் பயப்படாமல் திருடுகிறான் என்று கீழை. அ. கதிர்வேல் துணுக்கு இயற்றுவதில் எவ்வளவு எதார்த்தம் நிலவுகிறது.

கட்சியில் பிளவு

நம் நாட்டில் குழந்தைகள் பிறப்புக்குக் கூடக் கட்டுப்பாடுண்டு. ஆனால் கட்சிகள் பிறப்புக்குக் கட்டுப்பாடே கிடையாது. எனவே இவ்வளவு கட்சிகள் பல்கிப் பெருகியுள்ளன. அக்கட்சிகளுக்குள்ளே அநேகம் கோஷ்டிகள் வேறு.

'உங்க கட்சி ரெண்டு கோஷ்டியிலே நீங்க
எந்த கோஷ்டி......... ?'
'எந்த கோஷ்டியிலேயும் சேராதவர்கள்
எல்லாம் சேர்ந்து புதுசா ஒரு கோஷ்டி
அமைச்சிருக்கோம். அந்தக் கோஷ்டியிலே
தான் இருக்கேன் !

ஆர். ஜே. அனுசுபா, 19.6.88, ப. 6.

இது மட்டுமல்ல. கோஷ்டி இருந்தால் தான் அரசே கட்சியை ஏற்றுக் கொள்ளுமாம். எலக்ஷன் கமிஷ்னர் : 'கோஷ்டியே இல்லேங்கிறீங்க......... அப்புறம் எப்படிங்க உங்க கட்சியை நாங்க அரசியல் கட்சியா அங்கீகரிக்கிறது......... ?

-கெ.ரவி. 24. 7. 78. ப. 80.

எவ்வளவு கேலி நிறைந்த துணுக்கு.

விளம்பரம்

விளம்பரத்தை விரும்பாத அரசியல்வாதியே இல்லை. இங்கு ஒரு துணுக்கு புகழ்வது போல் புகழ்ந்து பழித்துச் சிரிக்கிறது.

'தலைவர் ஒரே ஒரு வரவேற்பு வளைவு
போதும்னுட்டார்'
'பரவாயில்லையே !'
ஆனா, 'அதை எல்.ஐ.சி பில்டிங் உயரத்துக்குப்
போடணுங்கிறார்'.

- அம்பை. தேவா., 26.6.88, ப. 69

உள்ளூர் ஓட்டு

அடிக்கடி வெளிநாட்டுக்குப் போய்விட்டு அவ்வப்போது இந்தியாவுக்கு வரும் பிரதமரையும் துணுக்கியலாளர்கள் விட்டு விடவில்லை.

ஆப்பிளிலிருந்து அகமுடையாள் வரை
அயல்நாட்டிலே வாங்கிடுவேன் சுலபமாக
ஆனால்
என்ன கொடுமை.........!
இந்த வோட்டு மட்டும்
உள்நாட்டில் தான் வாங்க வேண்டுமாமே.........!

என்று பிரதமர் கவலை கொள்வதாக அமைகிறது இத்துணுக்கு. தமிழ் நாட்டு வருகையைக் கேலி செய்ய 'தமிழ்நாட்டை வெளி

நாடு என்று எண்ணிவிட்டாரோ பிரதமர்' என்று துணுக்குப் போடுகிறார்கள்.

அரசியலில் நடிகை

அரசியலும் திரைப்படமும் பின்னிப் பிணைந்தவை. தமிழகத்தில் இப்பிணைப்பு அதிகம். தற்போது கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு எக்ஸ்ட்ரா நடிகைகளைக்கூட இழுத்துக் கொண்டு விடுகின்றன. வந்த அதுகளோ அளவுக்கு மீறிப் பேசி வைக்கின்றன.

> "ஒரே ஒரு படத்துல ஒரே ஒரு சின்லே துணை
> நடிகையா நடிச்ச உடனே இவ்வளவு ஆசையா......
> ''என்னவாம் ?''
> தேர்தல்ல நிக்கணுமாம் ?'
> -மேல்மங்கலம் பத்ரா, 31.3 88, ப.40.?

சில நடிகைகள் ஒரு வெற்றிப் படத்தில் நடித்தவுடன் தேர்தலில் நின்று குறைந்தபட்சம் தமிழகத்தின் முதல்வராகவாவது வர வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். என்ன செய்வது அந்த அளவுக்கு நம் அரசியல் தரம் தாழ்ந்துவிட்டது.

இவ்வாறு அரசியல் பற்றிய துணுக்குகள் அரசியல் கீழ் களது பல பக்கங்களைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. நகைச்சுவைக்கு மாத்திரம் முக்கியத்துவம் தந்து வந்த ஆனந்த விகடனைத் தமிழக அரசியல். அரசியல் துணுக்குகளுக்கு முக்கியத்துவம் தரும்படி ஆக்கிவிட்டது. துணுக்குப் படைப்பாளிகளை நன் முறையில் ஊக்குவித்துப் புதுமையான, பயனுள்ள, சுவையான துணுக்கு இலக்கியம் வளரப் பாடுபடு கிறது ஆனந்தவிகடன்.

நாட்டுப்புற விளையாட்டுக்களில் ‘உத்தி பிரித்தல்’

மு. மீனா

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

முன்னுரை

மனிதன் என்று தன்னையும், தன்னைச் சுற்றியுள்ளவர்களையும் உணரத்தலைப்பட்டானோ, அன்றிலிருந்தே விளையாட்டுப் பற்றியும் உணரத் தொடங்கினான் எனலாம். குழுவாக வாழத் தொடங்கியபோது, விளையாட்டும் ஒரு சமுதாய நிறுவனமாக அவனிடம் வளர்ந்து வரத் தொடங்கியது. அவ்விளையாட்டின் முக்கியக்கூறாகிய ‘உத்தி பிரித்தல்’ என்பது பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

நாட்டுப்புற விளையாட்டுக்கள்

பொழுதுபோக்கு, மனமகிழ்ச்சி, உற்சாகம் ஆகியவற்றின் உந்துதல்களின் விளைவாக ஆடப்பெறும் விளையாட்டுக்களை அக விளையாட்டு (Indoor Games). புறவிளையாட்டு (Out-door Games) என்று இருவகையாகப் பிரிக்கலாம். அவற்றில் புற விளையாட்டு என்னும் பிரிவிற்கு, அடிப்படையான கூறாக ‘உத்தி பிரித்தல்’ என்பது அமைந்துள்ளது.

1. குறிப்பிட்ட எண்ணிக்கை உடையவராக

2. ஒரு குழுவினராக

3. இரு குழுவினராக ஆகிய மூன்று நிலைகளில் புறவிளையாட்டுக்கள் நடைபெறுகின்றன. இவற்றில் இரு குழுவினர்

களாக விளையாடும் விளையாட்டுக்களுக்கே 'உத்தி பிரித்தல்' என்பது அடிப்படையான கூறாக அமைந்துள்ளது. இரு குழு வினராக விளையாடும் ஆட்டத்தில் சிறுவர், சிறுமியர், ஆண் கள் (திருமணத்திற்கு முன்) குழுவாக விளையாடுகின்றனர்.

உத்தி பிரித்தல்

'காலையெழுந்தவுடன் படிப்பு — பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு'
-என்று பாரதியார்

பாப்பா பாட்டின் மூலம் ஒரு நாள் வேலையை வகைப்படுத்திய தில் விளையாட்டும் முக்கியமாகிறது. மாலைப்பொழுதானவுட னேயே குழந்தைகளுக்கு உற்சாகம் பெருகிவிடுகிறது. விளை யாட்டுக் குழாம் கூடி, இன்று என்ன விளையாட்டு விளையாட லாம் என்று முடிவு செய்து விடுகின்றனர். பெரும்பாலும் பாட்டுடன் கூடிய இரு குழு விளையாட்டுக்கு அமோக வர வேற்பு கிடைக்கிறது. எனவே, குழந்தைகள் குழுக்களாகப் பிரித்து விளையாடுவதற்கான ஆயத்த நிலையே 'உத்தி பிரித் தல்' என்ற கூறு ஆகும்.

உத்தி என்றால் என்ன?

உத்தி என்பது யுக்தி, தந்திரம், முறை ஆகிய பொருள் பெறுகின்றது. விளையாட்டுக்குழுவினர் எவ்விதப் பாகுபாடு மின்றி இருகுழுவினராகப் பிரிவதற்கு விளையாடுபவர்களிடம் காணப்படுகின்ற தந்திரமான இருகுழுத் தேர்வு நிலையே 'உத்தி என்ற பெயர் பெறுகின்றது

உத்தி பிரியும் முறை

மனிதன் குழுவாக வாழத் தலைப்பட்ட போது, ஏதாவ தொரு வகையில் தங்களை விட மேம்பட்ட ஒருவனைத் தேர்ந் தெடுத்து. தலைவனாக்கி வாழ்ந்து வந்தனர். இந்நிலையிலே தான் தொடக்க காலத்தில் தங்களுக்குரிய தலைவர் தேர்ந்தெடுக் கும் முறை இருந்தது. இதன் பரிணாம வளர்ச்சி நிலையே, குழுவிளையாட்டிற்கு தலைவனை உருவாக்கும் முறையாக வழி

வகுத்துள்ளது. விளையாட முனையும் குழந்தைகள், தங்களிடை யே அறிவு, அழகு, செல்வந்தர் வீட்டுக்குழந்தை என்று ஏதாவ தொரு வகையில் செல்வாக்குப் பெற்ற குழந்தையைத் தலைமை யமாக ஏற்றுக்கொள்கின்றனர். அவ்வாறு விளையாடத் தயா ராகிக் குழுமியிருக்கும் சிறுவர்-சிறுமியரில் இருவர் பொறுப் பேற்று நிற்பர். இவ்விருவருமே பெரிய உத்தி, சின்ன உத்தி என்று பெயர் பெறுவர். மீதமுள்ள சிறுவர்கள் இருவர் இரு வராக இணைந்து தங்களுக்குள் புனைபெயர் வைத்துக்கொண்டு தலைமைப் பொறுப்பேற்று நிற்கும் குழுத்தலைவர்களிடம் பெரிய உத்தி யார்?, சின்ன உத்தி யார்? என்று வினவி நிற்பர் பின்னர் தங்கள் இருவரின் புனைபெயர்களைக் கூறி எது வேண்டும்? என்று கேட்பர். பெரிய உத்தி தனக்குப் பிடித்த மான பெயரைக் கூறவும், அப்பெயருக்குரிய சிறுவர்/சிறுமி அவரிடம், எஞ்சி நிற்கும் மற்றொரு சிறுவர்/சிறுமி அடுத்த வரிடமுமாகப் பிரிவர். பெரிய உத்தி எனப்படுவதே ஆளைத் தேர்ந்தெடுக்க உரிமை பெற்றவர். ஒரு இணைக்குப் பெரிய உத்தியாக இருந்தவர், அடுத்த இணைக்குச் சிறிய உத்தியாகச் செயல்படுவார். இவ்வாறாக அனைவரும் புனைபெயர் ஒன்றைச் சூட்டிக்கொண்டு தலைவர்களின் விருப்பத்திற்கேற்ப இரு குழுவாகப் பிரிந்து கொள்வர். இவ்வாறு இருவராக இணைந்து, தங்களுக்குள் புனைபெயரிடும் முறைக்கு 'உத்தி பிரித்தல்' என்று பெயர். இப்புனை பெயர்கள் அவர்களுக்கு மட்டுமே முதலில் தெரிந்திருக்கும். இவ்வாறு பெயர் சூட்டிக் கொண்டு விளையாடுவதையே தொல்காப்பியர் 'ஆடியற்பெயர்' என்பார். இதன் விளக்கம் பின்னர்க் கூறப்படும்.

உத்தி பிரித்தலின் பயன்

கூடி விளையாடுதல் என்பது குழந்தைகளிடம் ஒற்றுமை யுணர்ச்சியை வளர்க்கும். இரு குழுவினராகப் பிரிந்து விளை யாடும்போது, எவ்வித மனப்பாகுபாடும் காழ்ப்புணர்ச்சியு மின்றிக் குழுவாகப் பிரிதலுக்கு வழிவகுப்பதே இதன் தலையாய பயனாகும்.

காலந்தோறும் ஆடியற்பெயர்கள்

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே மக்கள் தாங்கள் விளையாடும் விளையாட்டுக்களின் போது. தங்களுக்கு வேறு பெயர்களைச் சூட்டிக்கொண்டனர் என்பதை, 'கூடிவரு வழக்கின் ஆடியற்பெயரே' என்னும் நூற்பாத்தொடர் (சொல்: பெயர்: 11) மூலம் அறியலாம்.

இதற்குக் காட்டாக இளம்பூரணர் பட்டிபுத்திரர், சங்கிராமத்தார் எனவும், நச்சினார்க்கினியர் பட்டிபுத்திரர், கங்கைமாத்திரர் எனவும் பெயர்களைக் குறிப்பிடுகின்றனர். சேனாவரையர் விளக்கமாக உத்தி பிரியும் முறையைக் கூறி 'காற்றைக் கலசத்தில் அடைத்தவனொருவன்', 'வானத்தை வில்லாக வளைத்தவன் ஒருவன்', 'ஆற்றுமணலைக் கயிறாகத் திரித்தவனொருவன்' என்று படைப்புப் பெயர்களைச் சுட்டுகின்றார்.[1]

எனவே முதலில் விளையாட முனைந்தவர்கள், குழுத்தலைவர்கள் தங்களை விரும்பித் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற முனைப்புடன் வீரம், வலிமை, திறமை ஆகியவற்றின் வெளிப்படுத்தும் பெயர்களாகத் தங்களுக்கு சூட்டிக்கொண்டனர் என்பது பெறப்படுகிறது.

உரையாசிரியர் காலத்திற்குப் பின்னர் உத்தி பிரித்தலின் போது சூட்டப்படுகின்ற பெயர் குறித்த எவ்விதக்குறிப்பும் தெரியவில்லை. அதற்கடுத்தபடியாக, தொடக்க கால நாவல்களில் முதலில் தோன்றியவற்றுள் ஒன்றாகிய 'பிரேம கலாவத்யம்' எனும் நாவலில் தான் விளையாட்டுக்கள், பற்றிய விளக்கம் காணப்படுகிறது. இந்நாவலில் உத்திபிரியும் முறை பற்றிய முழுமையான விளக்கம் கூறப்பட்டுள்ளது. இந்நாவலில் எள்/கொள்ளு, மண்/கல் என்று சங்கேதப்பெயர்கள் சூட்டிக்கொள்வதாகச் சுட்டப்பட்டுள்ளது.[2] இதிலிருந்து 19 ஆம் நூற்றாண்டின் காலக்கட்டத்தில் விளையாடும்போது சூட்டிக்கொள்கின்ற பெயர்கள் எளிமையான பெயர்களாக அமைந்துள்ளன என்பது தெரியவருகிறது. அத்துடன் ஒரு இணைக்கு வைக்கப்

படும் பெயர்கள் எதுகை, மோனை, பொருள் இயைபு, இணை யான தன்மை வாய்ந்தவை என்ற முறையில் சூட்டிக்கொள்ளப் பட்டுள்ளமை அறியப்படுகிறது.

தற்போது விளையாடும் விளையாட்டுக்களிலும் இத்தன்மை யே காணப்படுகிறது. நகர்ப்புறப் பகுதியைக் காட்டிலும் நாட்டுப்புறப் பகுதியில் வழங்கப்படும் சொற்களை ஆய்ந்தால் அவர்களுக்கு எளிதில் கிடைக்கப் பெறாத பெயர்களையும (பஸ், ரயில், விமானம், ஹெலிகாப்டர்) வேடிக்கைப் பெயர் களையும் (நண்டு/சிண்டு/கோமாளி/பஃலூன்) சூட்டிக்கொள் கின்றனர் என்ற உண்மை புலப்படும்.

'சிறுமியர் மலர்களின் பெயரினையும், சிறுவர் விலங்குகளின் பெயரினையும் வைப்பது மரபாக உள்ளது' என்பர் இரா. பாலசுப்பிரமணியம்.[3] இது பெரும்பாலும் நகர்ப்புறங்களில் விளையாடும் குழந்தைகளிடம் காணப்படுகிறது. பொதுவாக மலர், பழம், காய், உலோகங்கள் ஆகியவற்றின் பெயர்களைச் சிறுமியரும், விலங்குகள் வாகனங்கள் மரங்கள் ஆகியவற்றின் பெயர்களைச் சிறுவர்களும் சூட்டிக் கொள்கின்றனர். இவற்றி லிருந்து சிறுவர்-சிறுமியரின் மன இயல்புகளை நம்மால் எளிதில் உணரமுடிகிறது.

முடிவுரை

1) நாட்டுப்புற இருகுழு விளையாட்டுக்களில் 'உத்தி பிரித் தல்' என்பது அடிப்படையான கூறாக உள்ளது. 2) காய்தல், உவத்தலின்றி இரண்டு பிரிவினராகப் பிரிவதற்குப் பயன்படுத் தப்படும் யுக்தியே உத்தி பிரித்தல் என்ற நிலையில் அமை கின்றது. 3) இம்முறை தொல்காப்பிய காலத்திலிருந்து, தமிழ் மக்களால் பயன்படுத்தப்பட்ட தொன்மையான வடிவமாகும். 4) வலிமை, திறமை, ஆற்றல் ஆகியவற்றை உணர்த்துவதாக முன்னர் ஆடியற்பெயர்களை அமைத்துக் கொண்டனர். 5) தற் போது நடைமுறையிலுள்ள வழக்குப் பெயர்களையே சூட்டிக் கொள்கின்றனர். இணையான ஒலி நயம், பொருள் இயை புடைய பெயர்கள் ஆகியவற்றைச் சூட்டிக் கொள்கின்றனர்.

6) பெண்கள்-மென்மை. இனிமை, அழகு என்ற தன்மையுடைய பெயர்களையும். ஆண்கள்-வன்மை, வலிமை, நகைச்சுவை என்ற தன்மையுடைய பெயர்களையும் இட்டுக் கொள்கின்றனர்.

அடிக்குறிப்பு

1. தொல்காப்பிய உரை (சேனாவரையம்), பக்கம் 119.

2. ஸ்ரீ.வை. குருஸ்வாமி சர்மா, பிரேமகலாவத்யம், வானவில் பிரசுரம், சென்னை, 1980, ப.31.

3. இரா. பாலசுப்பிரமணியம், தமிழர் நாட்டு விளையாட்டுக்கள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980, ப.33.

சிவஞான முனிவரின் பல்பொருள் உவமை

பழ. முத்தப்பன்
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி

சைவ சித்தாந்த உரையாசிரியர்களில் தலைமை சான்றவராய் விளங்குகின்றவர் மாதவச் சிவஞான முனிவர் ஆவார். வடமொழி அறிவும் தென்மொழிப் புலமையும் ஒருசேரக் கொண்ட சிவஞான முனிவர் சைவசமய உலகிற்கு மாருதமாகவும் விளங்குகின்றவர். பிற சமயவாதிகளை மறுக்கும் திறத்தால் தன் நுண்மான் நுழைபுலத்தைப் பறைசாற்றி என்றும் நீங்கா நிலை பெறுகின்றவர்.

தத்துவ உரைகளைத் தொடங்கும்போது - நூலாசிரியர்களைப் போல வணக்கப் பாடல்களைப் பாடித் தொடங்கும் மரபினைச் சிவஞான முனிவர் கையாண்டுள்ளார். சிவஞான போதச் சிற்றுரையிலும் — மாபாடியத்திலும் குருவணக்கப் பாடல் வணக்கப்பாடலாக அமைந்துள்ளது. தனக்கு ஞானாசிரியராக விளங்கியவர் திருவாவடுதுறை ஆதீனத்தின் பதினொராம் பட்டத்து மகா சந்நிதானம் ஸ்ரீபின் வேலப்ப தேசிகர் ஆதலால் — ஞானாசிரியரின் பீடத்திற்குரிய குரு முதல்வராம் அருள்திரு நமச்சிவாய மூர்த்திகளைப் போற்றிப் போதத்தின் உரையைத் தொடங்கியுள்ளார். 'கயிலாய பரம்பரையில்' எனத்தொடங்கும் அக்குருவணக்கமே இன்றும் திருவாவடுதுறை ஆதீனத்தில் குருவணக்கப் பாடலாகப் பாடப்பெற்றுப் போற்றப் பெறுகிறது. போதத்தைப் போலச் சித்தியாரின் சுபக்கப் பகுதிக்கு உரை எழுதத் தொடங்கும்போது அருள்திரு நமச்சிவாய மூர்த்திகள் மீது குருவணக்கம் பாடித் தொடங்குகிறார். போதத்தின் குரு

வணக்கத்தில் நமச்சிவாய மூர்த்திகளின் பெருமைகள் அமைந் துள்ளன. திருக்கயிலாயப் பரம்பரைக்கு — சிவஞானம் தந் திடும் மெய்கண்டாரின் ஞானப்பானுவாக விளங்குகின்றவர் குருநமச்சிவாயர் என அப்பாடலில் பெருமை பேசுகின்றார் சிவஞான முனிவர்.

சிவஞான சித்தியாரின் சுபக்க உரையின் குருவணக்கத்தில் தன் ஞானாசிரியர் மூலமாகக் குருநமச்சிவாயப் பெருமான் தனக்கு அருளிய தண்ணளியாம் அத்துவித நிலையைக் காட்டி யருளிய நல்லருளைப் போற்றிப் புகழுகின்றார். சிவனும் சீவ னும் பொருட் தன்மையால் இரண்டாயினும் வேறு வேறாகப் பிரிக்க முடியாத தன்மை உடையன. இப்பிரிக்க முடியாத நிலையே அத்துவித நிலையாம். இவ் அத்துவித நிலையை உணர்த்திய பெருமான் குருநமச்சிவாயர் என்பதை 'பிரிவரிய அத்துவிதக் கல்வி காட்டித் தண்ணளி வைத்து எனையாண்ட துறைசை நமச்சிவாயக் குரு சரணம்' எனக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

அத்துவித நிலை எப்படிப்பட்ட தன்மையுடையது என் பதைக் காட்ட முனிவர் அப்பாடலில் பதின்மூன்று உவமை களை இடம் பெறச் செய்துள்ளார். எனவே அத்துவித நிலை என்ற ஒரு பொருளுக்குப் பல உவமைகள் பயன்படுத்தப்பட்டுச் சிறந்த உவமையணிப் பாடலாக அப்பாடல் அமைந்துள்ளது.

அத்துவிதக் கலப்பு என்பது ஒன்றாய் நிற்றலா ? வேறாய் நிற்றலா ? வேறாகவும் உடனாகவும் நிற்றலா ? என்றால் ஒன் றாய் — வேறாய் — உடனாய் என மூன்றாய் நிற்பதே அத்து விதமாகும். இவ்வாறு மூன்று நிலையாக நிற்பதால் பயன் என்ன ? சைவ சித்தாந்தக் கொள்கை அப்பயனை நன்கு விளக் கிக் கூறும். அதாவது உயிர்கள் நிலைபெறுவதற்கு இறைவன் ஒன்றாய் நிற்கின்றான். உயிர்கள் பொருள்களை உணர்வதற்கு உணர்த்த வேறாய் நிற்கின்றான். உயிர்கள் தாம் உணர்ந்த வண்ணம் பொருள்களை அனுபவிப்பதற்குச் சுதந்திரம் இன்மை யின் பொருள்களை அனுபவிப்பதற்கு இறைவன் உயிர்களோடு உடனாய் நிற்கின்றான். இதனையே போதமும் குறிப்பிடும்.[1]

எனவே அத்துவித நிலையால் உயிர்களுக்கு நிலைத்தல், உணர்தல், அனுபவித்தல் என்ற முப்பயன்கள் ஏற்படுகின்றன. இப்பயனை இறைவன் தனக்கு ஞானாசிரியராக நின்று தந்தான் என்பதையே முனிவர் குருவணக்கப் பாடலில் உணர்த்தியுள்ளார்.

இவ் அத்துவித நிலையில் இறைவன் உயிரோடு ஒன்றாய் நிற்றற்கு மூன்று உவமைகளும், வேறாய் நிற்றிற்கு மூன்று உவமைகளும், உடனாய் நிற்றற்கு ஏழு உவமைகளும் கூறி முனிவர் பாடலைத் தத்துவமாகத் தந்துள்ளார்.

பண்ணும் ஓசையும் போலவும், சூரியன் ஒளியும் பகற்காலத்துக் காணப்பெறும் மதியின் ஒளியும் போலவும், எள்ளும் அதனுள் இருக்கும் எண்ணெயும் போலவும், தீயும் அதனால் காய்ச்சப்பட்ட இரும்பு போலவும். தண்ணீரும் அதனோடு சேர்ந்த உப்புப் போலவும், விண்ணும் காற்றும் போலவும், உடலும் உயிரும் போலவும், நீரும் அதன் நிழல் போலவும்,நண் பகல் சூரியன் ஒளியும் பளிங்கின் ஒளி போலவும், சூரியன் ஒளியும் பகற்காலத்து விளக்கொளியும் போலவும், பாலும் அதனுடன் சேர்ந்த நீரும் போலவும், கண்ணொளியும் சூரிய ஒளியும் போலவும். ஆன்மாவின் அறிவும் கண்ணொளியும் போலவும், பிரிக்க முடியாத சிவசீவர்களின் அத்துவிதக் கலப்பை அறியும்படி செய்து அடியேனை ஆட்கொண்டருளிய திருவாவடுதுறையின்கண் எழுந்தருளியிருக்கும் நமச்சிவாய தேசிக குருமூர்த்திகளின் திருவடிகளை வணங்குவோம் என்பது பாடலின் பொருளாகும்.

இறைவனும் உயிரும் ஒன்றாய் நிற்றலுக்குப் பண்ணும் ஓசையும் ஒன்றாய் நிற்றலையும். சூரியன் ஒளியில் திகழும் பகற்காலத்து மதிக்கு வேறு ஒளியில்லை என்பதையும், எள்ளுள் எண்ணெய் கலந்து இருத்தலையும் உவமையாகக் காட்டி அத்துவித முதல் நிலையை ஆசிரியர் நினைவூட்டுகிறார். பண் என்பது ஒலியின் பேதமாகும். ஆனால் அதே நேரத்தில் ஒலியெல்லாம் பண் ஆகாது. மேலும் ஒலியின் பேதமாகிய பண் ஒலியைவிட்டுத் தனித்துக் காட்ட முடியாது. எனவே ஒலியு

மன்றாய — ஒலியின் பேதமாகிய பண் ஒலியைவிட்டுத் தனித்து நில்லாதவாறு போல இறைவனாகிய சித்துப் பொருளின் பேத மாகிய உயிர் இறைவனை விட்டுத் தனித்து நிற்காது அவ் வாறாவால் ஒலியின் பேதமே பண் என்பதுபோல — இறைவ னின் பேதமே உயிர் என்று கொள்ளலாமோ என்ற வினா எழும். சூரியன் ஒலியைவிட்டுச் சந்திரனுக்கு வேறு ஒளியில்லை என்றாலும் பொருளாய் சூரியன் வேறு சந்திரன் வேறு. அது போல இறைவனை விட்டு உயிர் தனித்து நிற்காது என்றாலும் - பொருளால் இறைவன் வேறு உயிர் வேறு. அப்படியானால் சூரியனும் சந்திரனும் வேறு வேறு அறியப்படுவது போல இறையும் உயிரும் வேறுவேறு பிரித்தறியப்படுமோ என வினா எழலாம். எவ்ளிருந்து எண்ணெய் பிரிக்கப்பட்டு எள்வேறு எண்ணெய் வேறு என்றறியப் படாதவாறு போல உயிரை விட்டு இறைவனைப் பிரித்தறிய முடியாது என்று இம்மூன்று உவமைகளால் இறைவன் உயிர்களிடத்து ஒன்றாய் நிற்கின்றான் என்பதை நிலை நாட்டுகின்றார் சிவஞான முனிவர்.

எண்ணெய் விட்டு எள் தனித்து நிற்றல் இல்லை என்பது போல இறையைவிட்டு உயிர் தனித்து நிற்றல் இல்லை என்றால் இறைவன் உயிர்களுக்கு எவ்வாறு உணர்த்த இயலும் ? வேறு நின்றால்தானே அறிவிக்க முடியும்: இவ் ஐயத்திற்கு விளக்க மாக அமைவது தீ இரும்பு என்ற உவமை. தீயினால் காய்ச்சப் பட்ட இரும்பு தீயேயாயினும் இரும்பின் வேறாய் தீ நிற்றல் போல உயிரின் வேறாய் நிற்பவன் இறைவன் ஆனான். இரும்பின் வேறானது தீ என்றாலும் இரும்போடு இயைந்த தீ தனித்துக் காணப்படுவதில்லையே. அதுபோல இறைவனை வேறாகக் காணமுடியாது என்றால் — அவன் நீரோடு கூடிய உப்பாக இருப்பான் என்கிறார் முனிவர். அதாவது நீரோடு கூடிய உப்பு நீராக இருப்பினும் — நீரிலிருந்து உப்பு தனித்து நிற்கவும் கூடும். அதுபோல உயிரோடு கூடி இருப்பினும் இறைவன் தனித்தும் நிற்பான். நீரைவிட்டு உப்பு ஏதேனும் ஒரு காலத்தில் பிரிந்திருப்பதுபோல இறையும் உயிரும் பிரிந் திருப்பரோ என்றால் அவ்வாறு இல்லை. விண்ணைவிட்டு காற்று என்றும் பிரிவதில்லை அதுபோல இறைவனை

விட்டு உயிர் தனித்து நிற்பதில்லை என்று முனிவர் விண்ண நிலம் என்ற உவமை மூலம் உணர்த்துகிறார், தீ இரும்பு, பாணி உப்பு, விண்ணநிலம் என்ற இம்மூன்று உவமைகள் மூலம் இறைவன் வேறாய் நிற்றல் உணர்த்தப் பெறுகிறது.

காற்றுக்கு ஆகாயம் இடம் கொடுக்குமே அன்றி — அதனை இயக்குவதில்லை. அதுபோல உயிர்க்கு இறைவன் ஆதாரமாய் நிற்றலேயன்றி உயிரைச் செலுத்துதல் இல்லையோ என்ற வினா எழுகிறது. இதற்கு விடையே உடல் உயிர் உவமை. அதாவது உடல் இருத்தற்கு ஆதாரமாகிய உயிர் உடலை உடன் நின்று செலுத்துவதுபோல இறைவன் ஆதாரமாய் நின்று உயிரைச் செலுத்துகின்றான். உயிரை இறைவன் செலுத்தும் போது கூடியும் பிரிந்தும் நிற்பானோ என்றால் நீரைவிட்டு நிழல் எக்காலத்தும் பிரிவின்றி விரவி நிற்றல்போல உயிர் களிடத்து இறைவன் எக்காலத்தும் பிரிவின்றி நிற்பான். நீருக்கு நிழல் உண்டு என்பதை, 'நீர் நிழல்போல் இல்லா அருவாகி நின்றானை' என்று சிவஞானபோத வெண்பா உணர்த்தும்.[2]

நீரானது நிழலின் உபகாரமின்றிப் பல சுவைகளைப் பற்றி அச்சுவைப் பொருளாய் நிற்றல் போல் உயிர்களும் இறைவனின் உபகாரம் இன்றி விடயங்களைப் பற்றி நிற்குமோ என்றால் — சூரியன் ஒளி பக்கத்திலிருக்கும்போது பளிங்கு வண்ணங் களைப் பெறும் - சூரியன் ஒளி நேராகஇருக்கும் போது பளிங்கு எவ்வண்ணத்தையும் பெறாது. அதுபோலப் பெத்த காலத்து இறைவன் மறைந்து நிற்க உயிர்கள் விடயங்களை அறிந்து — முத்திக் காலத்து இறைவனோடு கலந்து ஒரு விடயமும் அறியா திருக்கும் என்று 'உச்சிப்பளிங்கு' என்ற உவமை மூலம் விளக்கு கிறார். உச்சிக் காலத்தில் பளிங்கு தன் ஒளி மழுங்காததுபோல — முத்திக் காலத்து உயிருக்குத் தற்போதம் கெடுதலில் லையா என்றால் பகல் காலத்து விளக்கின் ஒளி சூரியன் ஒளி யில் அடங்கி நிற்பதுபோல உயிர் தற்போதம் கெட்டு நிற்கும். இதனை விளக்குவது 'பகல் விளக்கு' உவமை. உச்சிக் காலத்தில் விளக்கு செயலற்று இருப்பது போல முத்திக் காலத்து உயிர்க்கு இன்ப அனுபவம் இல்லையா என்றால் பாலின் சுவை அதில்

கலந்த நீருக்கும் இருப்பதுபோல முத்திக் காலத்தில் இறைவன் தன் இன்பம் முழுவதும் உயிருக்கு ஆக்குவான். நீர் பாலோடு கலந்திருக்கும்போது பாலின் சுவையும் — பாலோடு கலவதா போது தன் நிலையாய் நிற்பதுபோலவும் உயிர் இறைவனோடு கூடிய வழி இறைத்தன்மையும் - கூடாத வழி தன் நிலையாயும் நிற்குமோ என்றால் கண்ணொளி பிற ஒளியின் துணையின்றி நிற்காததுபோல இறைவன் இன்றி எக்காலத்தும உயிர் நிற்றல் இல்லை என்பதை 'கண்ணிரவி' என்ற உவமை மூலம் விளக்கு கிறார். கண்ணொளியும் - சூரிய ஒளியும் வேறு வேறாயிற்றே அதுபோல இறையும் உயிரும் வேறு வேறாக நிற்குமோ என் றால், கண் உயிரின்றி பொருளை அறியாது. அதுபோல உயிர் தன் உள்ளீடாய் இறைவன் நிற்பதால்தான் பொருளை அறிகிறது என்று உடலுயிர், நீர் நிழல், உச்சிப்பளிங்கு, பகல்விளக்கு, பால் நீர், கண்ணிரவி, உணர்வொளி என்ற ஏழு உவமைகள் மூலம் இறைவன் உடனாய் நிற்றலை விளக்குகிறார் முனிவர்.

இவ்வாறு சைவ சித்தாந்த அடிப்படைத் தத்துவத்தை 13 உவமைகள் மூலம் ஒரே பாடலில் விளக்கிக் காட்டும் முனிவர் திறம் போற்றி வணங்குதற்குரித்தாம்.

பாடல்

'பண்ணிசைவெம் பரிதிமதி திலதயிலந் தீயிரும்பு பாணி உப்பு
விண்ணநில முடலுயிர்நீர் நிழலுச்சிப் பளிங்குபகல் விளக்குப் பானீர்
கண்ணிரவி யுணர்வொளிபோல் பிரிவரிய அத்துவிதக் கலவி காட்டி
தன்னளிவைத் தெனையாண்ட துறைசைநமச் சிவாய குரு சரணம் போற்றி'

குறிப்பு விளக்கம்

1) அவையே தானே ஆய் - சூத். 2
2) எட்டாம் சூத்திரம் – 2. அதிகரணம். வெ. : 49

கல்வெட்டுக்களில் சிதைவுகள்

க. முத்தையா

புதுவைப் பல்கலைக்கழகம்

கல்வெட்டுக்களில் காணப்படும் சிதைவுகளைப் பற்றியும், அதற்கான காரணங்களைப் பற்றியும் விளக்கும் முயற்சி இக் கட்டுரையில் மேற்கொள்ளப்படுகிறது.

கல்வெட்டுக்களில் சிதைவுகள்

கல்வெட்டுத் தொகுதிகளில், பல கல்வெட்டுக்கள் சிதைந்த நிலையில் உள்ளன என்று குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளன. இத்தகைய சிதைவுகளுக்கு இயற்கையின் உற்பாதங்களே காரணம் என்று மேலோட்டமான விளக்கம் கூறப்பட்டு வந்துள்ளன.

கல்வெட்டுக்களை அவை சிதைந்துள்ள இடம் நோக்கி மூன்று பிரிவுகளாகப் பிரிக்கிறது இக் கட்டுரை.

1) கல்வெட்டுக்களின் முற்பகுதிச் சிதைவுகள்

2) கல்வெட்டுக்களின் இடைப்பகுதிச் சிதைவுகள்

3) கல்வெட்டுக்களின் இறுதிப்பகுதிச் சிதைவுகள்.

பொதுவாக, கல்வெட்டின் அமைப்பினைப் பார்க்கும் பொழுது, முற்பகுதியில் அரசன், இடம் பற்றிய செய்திகளும், இடைப் பகுதியில் அரசனின் ஆணை (தானம், இறையிலி, நிவந்தம்) பற்றிய செய்திகளும் இறுதிப் பகுதியில் வாழ்த்து அல்லது உறுதிமொழி பற்றிய செய்திகளும் இடம் பெறுகின்றன. இத் தகைய சிதைவுகளுக்குச் சில காரணங்களைக் கூறுகிறது இக் கட்டுரை.

முற்பகுதிச் சிதைவிற்குக் காரணங்கள்

கல்வெட்டுக்களின் முற்பகுதி அரசனது பெயரையும் அவனது ஆட்சியாண்டையும் தாங்கியதாக இருக்கிறது. ஒரு அரசனுக்குப் பின்னர் வந்த அரசனுக்கு அந்த அரசனைப் பிடிக்காமல் இருந்திருக்கலாம் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு வேறு அரச மரபினர் ஆட்சிக்கு வந்த பொழுது முந்தைய அரச மரபினரைப் பிடிக்காமல் இருந்திருக்கலாம். கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பட்டுள்ள அரசனை வெறுப்பதற்குப் பல்வேறு காரணங்கள் மக்களுக்கும் பின்னர் வந்த மன்னர்களுக்கும் இருந்திருக்கலாம். எனவே அம் மன்னனுடைய பெயரை அழிக்கும் வண்ணம், கல்வெட்டுக்களின் முற்பகுதியைச் சிதைத்து இருக்கலாம் என்ற யூகம் எழுகிறது.

இந்த யூகத்திற்கு அண்மைக்கால அரசியல் நிகழ்ச்சிகள் இடம் தருகின்றன. மதுரைக்கு அருகில் உள்ள மேலூரில் ஒரு கல்லூரி உண்டு. அது, கருணாநிதி ஆட்சிக் காலத்தில் கட்டப் பட்டது. அவரின் நினைவாக கலைஞர் கருணாநிதி கலைக் கல்லூரி என்று அக் கல்லூரிக்குப பெயர் இடப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு வந்த எம். ஜி. ஆர். அரசு, பெயரை மாற்றி 'அரசினர் கலைக்கல்லூரி' என்று பெயரிட்டது. இதுபோல் பெயர் மாற்றம் செய்யப்பட்டவைகள் பல உண்டு.

இதைப் போலவே மேற்குறித்த கல்வெட்டின் முற்பகுதி சிதைக்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளது. கல்வெட்டில் அரசனின் பெயர் மாற்றம் செய்ய முடியாது என்பதால், அவ்வரசனின் பெயரையும் அவனது ஆட்சியாண்டையும் அழிக்கும் முகமாக, கல்வெட்டின் முற்பகுதி சிதைக்கப்பட்டிருக்கலாம். கல்வெட்டில் முன்னர் பொறித்துள்ள பெயரை அழித்து விட்டு, பின் புதிய பெயரை (வேறு அரசனின் பெயர்) பொறிக்க முடியாததாகையால் அவற்றைச் சிதைத்ததோடு நின்றுவிட்டனர் போலும். இந்த முற்பகுதிச் சிதைவுகள் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள அரசன் இறந்த பிறகோ அல்லது அரசைத் துறந்த பிறகோ ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது.

இடைப்பகுதிச் சிதைவுகளுக்குக் காரணங்கள்

கல்வெட்டுக்களின் இடைப்பகுதி அல்லது மையப்பகுதி அரசனின் ஆணைகளைக கூறுவதாகவோ உணர்ச்சபைகளின் தீர்மானங்களைக் கூறுவதாகவோ தானங்களைப் பற்றிக் கூறு வதாகவோ அமைந்தமையக் கருத்தைத் தாங்கி வரும் பகுதி யாகும்.

அரசனின் ஆணைகள் மாறும் பொழுதும் சபையோரின் புதிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் பொழுதும், முன்னர் பிறப்பித்த ஆணைகளும் தீர்மானங்களும் தற்கால நடைமுறைக் குப் புறம்பானதாக இருந்திருப்பதைக் கண்டு,முன்னர் பொறித்த கல்வெட்டுக்களின் மையப் பகுதியை அழிக்கும் முகமாக அவற் றைச் சிதைத்திருக்க வாய்ப்பிருக்கிறது.

'கோயிலுக்கு வருவாய் குறையும் போது அரசன் இறையி லியாக இருந்த நிலத்திற்கு இறையிட்டு அதனால் வரும் தொகையைக் கோயிலுக்குக் கிடைக்கச் செய்திருக்கிறான். இத் தகவலை திருவெற்றியூரில் இருக்கும் முதலாம் இராசராசனின் ஏழாவது ஆண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது'[1]

மேற்குறித்த செய்தியிலிருந்து அரசனின் ஆணைகள் மாறத் தக்கவை என்பதும், மாறியவைகளைத் தனியாக வேறொரு கல் வெட்டில் பொறித்தனர் என்பதும் பெறப்படுகின்றது. முன்னர் இறையிலியாகக் கொடுககப்பட்டபோது பொறிக்கப்பட்ட கல் வெட்டு, தற்போது இறையிடும் போது பொருத்தமற்றதாகி விடுகிறது. எனவே முன்னர் இறையிலியாகக் கொடுக்கப்பட்ட, கல்வெட்டின் மையப் பகுதியை அழிக்கும் முகமாக, அப் பகுதியைச் சிதைத்திருக்கலாம் என்பது பெறப்படுகின்றது. இக் கருத்தைக் கீழ் வரும் தகவலும் உறுதிப்படுத்துகின்றது.

'கல்லூரிகளில் சிறுபாணாற்றுப் படையை (Part 1) தமிழ்ப் பகுதிக்குப் பாடமாக வைக்கும் பொழுது விறலி பற்றிய அங்க வருணனையை விட்டுவிட்டு அந்தப் பகுதி விடப்பட்டுள்ளது என்பதைக் காட்ட இரண்டு கோடுகள் இட்டு ... ...என்பது போல அமைத்து வெளியிடுவதாகவும், அவ்வாறு இடையில்

சில வரிகளை விட்டு விடுதல் என்பது பாடம் நடத்தும் பொழுது விரசமான உணர்வுகளை ஏற்படுத்தாதவாறு இருப்பதற்காகத் தான்'[2]

இக் கருத்திலிருந்து ஒரு காலத்தில் அங்க வருணனை பற்றிய செய்திகள் விரசமாகக் கொள்ளப்படவில்லை. ஆனால் தற்போது அவ்வாறு கொள்ளப்படுவதனால், விறலியின் அங்க வருணனை நீக்கி அவ்விடத்தில் கோடு இடப்பட்டது. இது போலவே கல்வெட்டின் இடைப்பகுதிச் சிதைவுகள் ஒரு காலத்தில் சரியென ஏற்றுக் கொள்ளப்பட்டு, பின்பு தவறாக இருந்த பொழுது அவற்றை நீக்கும் முகமாக அவைகள் சிதைக்கப்பட்டு இருக்க வாய்ப்பிருக்கிறது.

இத்தகைய சிதைவுகள் அதே மன்னன் காலத்தில் (கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள மன்னன்) நிகழ்த்திருக்கலாம் என்பதற்கு முன்னர் குறிப்பிட்டுள்ள திருவெற்றியூர்க் கல்வெட்டு சான்றாக உள்ளது.

இறுதிப் பகுதிச் சிதைவுகளுக்குக் காரணங்கள்

கல்வெட்டின் இறுதிப் பகுதி வாழ்த்து அல்லது உறுதி மொழி பற்றிய செய்தியாக அமைகிறது. கல்வெட்டில் குறிக்கப் பட்டுள்ள அரசனுக்குப் பின்னர் வந்த மன்னன் முன்னைய அரசன் வழங்கிய தானத்தோடு மேலும் அதிகப் படியானவற்றை வழங்கியுள்ளமையை க.த. திருநாவுக்கரசு தம் நூலில் எடுத்துக் காட்டுகிறார்.

'சைலேந்திர மன்னன் சூளாமணி வர்மதேவன் நாக பட்டினத்தில் அமைந்த சூளாமணி விகாரைக்கு ஆனைமங்கலம் என்ற ஊரை இராசராசன் இறையிலியாகக் கொடுக்கிறான். அவனுக்குப் பிறகு வந்த முதலாம் குலோத்துங்கன் மேலும் பல ஊர்களை அந்த விகாரைக்குத் தானமாக வழங்குகிறான்'[3]

இராசராசன் பொறித்த கல்வெட்டில், ஆனை மங்கலம் மட்டும் இடம் பெற்று இருக்கும். அதற்கு அடுத்து வாழ்த்து

அல்லது உறுதிமொழி என்று இருக்கும். குலோத்துங்கன் காலத்தில் மேலும் பல ஊர்கள் கூடுவதால் முன்னைய கல்வெட்டின் இறுதிப்பகுதியை அழிக்கும் முகமாக சிதைக்கப்பட்டு இருக்க வாய்ப்பிருக்கிறது.

இத்தகைய இறுதிப் பகுதிச் சிதைவுகள் கல்வெடடில் குறிப்பிடப்பட்டுள்ள மன்னனுக்குப் பின் வந்தவர்களின் காலத்தில் நடந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

சிதைவுகள் பற்றி நா. வா. அவர்களின் கருத்து

கல்வெட்டுச் சிதைவுகளுக்கு நா. வானமாமலை மார்க்சிய நோக்கில் புது விளக்கம் தருகிறார்.

,சில சமயங்களில் ஆட்சியின் அநீதியையும், நிலை உடைமையாளர்களின் கொடுமையையும் எதிர்க்க மக்கள் ஆயுதம் தாங்கிப் போராடியுமிருக்கிறார்கள் 'அரசனது ஆணைகளும் சபையாரின் முடிவுகளும் கோவில் சுவர்களில் எழுதி வைக்கப் பட்டிருந்ததால் இம் முடிவுகளை எதிர்ப்பதற்குச் சில சமயங்களில் மக்கள் கோவில் சுவர்களை இடித்துக் கல்வெட்டுக்களை அழித்திருக்கிறார்கள்........ நிலவுடைமையைக் குறிக்கும் கல்வெட்டுக்களும், ஆதாரச் சீட்டுக்களுமே மக்கள் கோபத்துக்கு இலக்காயின என்பது குறிப்பிடத்தக்கது. அவை நம் வாழ்க்கையை அழிக்கும் சின்னங்கள். அவற்றை அழித்து நமது உரிமையை நிலைநாட்டுவோம் என்று உழவர்கள் கிழந்தனர்'[4].

நா. வா. அவர்களின் விளக்கத்தின் மூலம் கல்வெட்டுக்கள் முழுமையும் சிதைக்கப்பட்டதற்கான காரணத்தை அறிய முடிகிறது.

இவ்வாறாக, முதல் மூன்று சிதைவுகள் மன்னர்களாலும், இறுதியில் வரும் முழுமையான சிதைவு மக்களாலும் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதை இக் கட்டுரை வலியுறுத்துகிறது. இவ்வாறாக கல்வெட்டுச் சிதைவுகளுக்கு இடிபாடுகள், இயற்கை உற்பாதங்கள் முதலியன மட்டுமன்றி, வேறு சிலவும் காரணமாக இருக்கக் கூடும் என்பதை இக்கட்டுரை தொட்டுக் காட்டுகிறது.

குறிப்புக்கள்

1. மே. து. ராசுகுமார், கோயில் பொருளாதாரத்தில் அரசின் பங்கு, செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு, பக். 126

2. தகவல் திருமதி டி. சாந்தி, எம்ஃபில் ஆய்வாளர், தமிழியல் துறை, புதுவைப் பல்கலைக்கழகம்.

3. க. த. திருநாவுக்கரசு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, பக். 415

4. நா. வானமாமலை, தமிழர் வரலாறும் பண்பாடும். பக். 28, 29

பாண்டிக் கோவையில் வரலாற்றுக் குறிப்புகள்

சொ. முத்தையா

விசுவ - பாரதி நடுவண் பல்கலைக்கழகம்.
சாந்தி நிகேதன்,

ஒரு நாட்டு வரலாற்றை அறிந்து கொள்வதற்கு அந் நாட்டுக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள். கோயில்கள், சிற்பங் கள், நாணயங்கள் முதலியன உதவிபுரிகின்றன. இவைபோன்றே வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்கு இலக்கியங்களும் துணை நிற்கின்றன எனலாம். செய்குவித்தோன் பெயரால் வழங்கு கின்ற முதல் அரசவைப் பாடலாகிய (Court Poetry) பாண்டிக் கோவையும் வரலாற்றுச் செய்திகளைத் தெரிவிக்கும் இலக்கியங் களுள் ஒன்றாகத் திகழ்கிறது. அதனை ஒரு சிறிது காண்பதே இக்கட்டுரை.

மாறவர்மன் அரிகேசரி கி.பி. 640 முதல் 670 வரை பாண்டி நாட்டில் ஆட்சி புரிந்தவன். செழியன் சேந்தனின் மகன் சமணத்திலிருந்து சைவத்திற்கு திருஞான சம்பந்தரால் திருத்தி யாளப்பட்டவன். மங்கையர்க்கரசியை மனைவியாகவும், குலச் சிறையாரை அமைச்சராகவும் பெற்றவன். இவன், இவன் மனைவி, அமைச்சர் மூவரும் சிவனடியார் அறுபத்து மூவருட் சேர்க்கப் பெற்றுள்ள வரலாற்றைப் பெரியபுராணம் கூறும். சுந்தர பாண்டியன், கூன் பாண்டியன் என்ற பெயர்களால் இவனைத் திருவிளையாடர் புராணம் சுட்டும்.

நெடுமாறனது போர்ச் செய்திகளை — வெற்றிகளை வேள்விக்குடிச் செப்பேடுகள் (1) பாழிப்போர் 2) நெல்வேலிப்

போர் 3) செந்நிலப்போர், 4) சேரரோடு போரிட்டமை 5) சோழரோடு போரிட்டமை 6) பரதவரை அழித்தமை 7) குறு நாட்டவரை அழித்தமை) சுட்டுகின்றன. சங்கரமங்கைப் போரைப் பற்றிச் சின்னமனூர்ச் செப்பேடு குறிப்பிடுகிறது. இப்போர்களைப் பாண்டிக்கோவையும் பாராட்டிச் செல்கிறது.

பாழிப்போர்

பாழி என்றவிடத்துப் பகைவரை வென்றான் இப்பாண்டியன். இதனைப் பாண்டிக்கோவை

'பாவடியானைப் பராங்குசன் பாழிப்பகை தணித்த
தூவடிவேன் மன்னன்' (3)

என்று எடுத்தியம்புகிறது. இது பாண்டியனுடைய முதல் வெற்றியாகும். 13, 58, 92, 105 131. 136. 164, 187, 197, 201, 205, 210, 261, 274, 276, 281, 293, 302, 330, 343, 350 ஆகிய பாடல்களிலும் பாழிப்போர் பற்றிப் பாண்டிக் கோவை பாராட்டிச் செல்கிறது.

நெல்வேலிப்போர்

இறையனார் களவியலுரை (22) இப்போரைப்பற்றிக் குறிப்பிடுகிறது. இவன் செய்த போர்களில் இப்போரே பலராலும் பாராட்டப்படுகிறது. சுந்தரமூர்த்தி நாயனாரும் 'நிறை கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற நின்ற சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்' என்று இவனது நெல்வேலிப் போரைக் குறிப்பார். இப்போரைப் பற்றி

'நிதியின் கிழவன் நிலமகள் கேள்வன் நெல்வேலி ஒன்னார்
கதியின் மலிந்த வெம்மாவும் களிறும் கவர்ந்து
கொண்டான் (61)

என்று பாண்டிக் கோவை குறிப்பிட்டுப் பாராட்டுகிறது. இது தவிர 24, 60, 77, 123, 170, 208, 288 315, ஆகிய பாடல்களிலும் இக்குறிப்பினைக் காணலாம்.

செங்நிலப்போர்

இவ்விடத்தில் நடைபெற்ற போரிலும் மாறவர்மன் அரிகேசரி வெற்றி பெற்றான் என்பதைச்

'செற்றார்படச் செந்நிலத்தை வென்றான் தென்னன்' *(99)* என்று நூல் குறிப்பிடுகிறது, மேலும் *18, 21, 67, 70, 84, 87, 121, 145, 146, 174, 243, 258, 263, 266. 304, 341* ஆகிய பாடல்களும் செந்நிலப் போரைக் குறிக்கின்றன.

சேரரோடு போரிட்டமை

விழிஞமும், சேலூரும் சேர நாட்டிலுள்ள ஊர்களாகும் இங்கும் பகைவரோடு பொருது வாகை சூடினான் நெடுமாறன்

'விழிஞத்து வென்ற தண்முத்த வெண்குடையான்'
(209)

'சேலங்குளர் வயற் சேலூர் எதிர்நின்ற சேரலனை
மாலங் க்டைவித்த மன்னன்' *(16)*

என்ற அடிகளால் அறியலாம். *4, 7, 10, 32, 69, 119, 127, 160, 298, 301, 304, 310, 314* ஆகிய பாடல்கள் விழிஞத்துப் போரையும் *9, 48, 50, 54, 59, 80, 108, 113, 120, 124, 132, 147, 153, 161, 182, 188, 218, 225* ஆகிய பாடல்கள் சேலூர்ப் போரையும் சுட்டுகின்றன.

சோழரோடு போரிட்டமை

வல்லம் என்பது சோழ நாட்டிலுள்ள ஊர்.

'மன்னன் வரோதயன் வல்லத் தொன்னார் கட்கு வான் கொடுத்த
தென்னன் திருமால்' *(125)*

என்ற அடியால் சோழரை வென்றமையினை உணரலாம். *35, 44, 116, 137, 155, 177, 185, 277, 289, 297* ஆகிய பாடல்கள் இதனை உறுதி செய்கின்றன.

சங்கர மங்கைப் போர்

இதனைப் பற்றி சின்னமனூர்ச் செப்பேடு குறிப்பிடுகிறது.

'... வேழப் படை சங்க மங்கை வென்ற மீனவன்' *(94)*

என்று கோவை குறிப்பிடுகிறது. தொண்டை நாட்டிலுள்ள ஊர். எனவே பல்லவர் ஆண்டிருந்த பகுதி என்பது பெறப் படும். *151, 229, 296* ஆகிய பாடல்களும் இதனையே குறிக் கின்றன.

மேலே செப்பேடுகள் குறித்த போர்களைப் பற்றிப் பாண் டிக் கோவையில் குறிக்கப்பட்டிருப்பதைக் கண்டோம். செப் பேடுகளில் குறிக்கப்பெறாத பல போர்களை மாறவர்மன் அரி கேசரியின் வெற்றிகளைக் கோவை நூல் குறிப்பிட்டுச் செல் கிறது. அவையாவன; *1)* **கடையல் போர்** *(10, 22, 23, 26 37, 43, 45, 63, 68, 71, 91, 98, 101, 115, 126, 133, 150, 163, 171, 184, 186, 199, 231,) 2)* **நறையாற்றுப் போர்** *(14 15, 19, 25, 117, 176, 203, 214, 236, 247, 248, 267, 322, 323, 332) 3)* **மணற்றி மங்கைப் போர்** *(28, 42, 46, 202) 4)* **ஆற்றுக் குடிப்போர்** (இப்போரைப் பற்றிக் களவியல் உரை *309* குறிப்பிடும்; (6, 11, 28, 31, 47, 62, 89, 129, 271 279, 282, 308, 320, 333) *5)* (**பூலந்தைப்போர்** 8, 12, 26, 34, 40 41, 51, 56, 65, 78, 86, 93, 107, 111, 118, 122, 128, 130, 157, 159, 165, 166, 168, 179, 190, 193, 230, 327) *6)* **முசிறிப் போர்** *(95) 7)* **கோட்டாற்றுப் போர்** (5, 39, 103, 175, 178, 219; 221, 262, 273, 306, 329,) *8)* **வெண்மாத்துப் போர்** (49, 148, 265) *9)* **நெடுங்களத்துப் போர்** (191, 207, 213, 215, 224, 328) *10)* **களத்தூர்ப் போர்**(90, 130)என்பன. வேள்விக்குடிச் செப்பேடு குறிப்பிடுகிற பரவர் போர் (புறம். *378:1;* மதுரைக் காஞ்சி *143-144*) குறு நாட்டுப் போர் பற்றிய குறிப்புகள் பாண்டிக் கோவையில் சுட்டப் பெறவில்லை எனினும் அவற்றின் சாயல் களாக மேலே குறிப்பிடப்பட்டவை இருக்கக் கூடுமோ என்று ஐயுற வேண்டியுள்ளது.

இவன் அரிகேசரி என்ற பட்டம் புனைந்தவன். இறையனார் களவியலுரையும் (279), வேள்விக்குடிச் செப்பேடும் அரிகேசரி என்ற பட்டத்தைக் குறிப்பிடுகின்றன. இதனைக் கோவை ஆசிரியரும் 32 இடங்களில் ஆண்டுள்ளார்[1]. இவனுக்குப் பல சிறப்புப் பெயர்களும் இருந்திருக்கின்றன[2]

'ஆய்கின்ற தீந்தமிழ் வேந்தன் அரிகேசரி' (30)

என்றும். இன்னும் பிறவிடங்களிலும் (2, 13, 50, 55, 87, 102, 105, 156, 136, 144, 154, 159, 162, 163, 188, 207, 217, 239, 242, 267, 320, 330.) இவனது தமிழ்ப் பற்று குறிக்கப்படுகிறது.

கருணையும் செம்மையும் உடையது. இவன் ஆட்சி. (47, 100, 104, 116, 143, 152, 154, 167, 174, 195, 197, 206, 211, 216, 218, 228, 234, 235, 239, 240, 244, 289, 295, 303, 321, 322, 325, 326, 332, 333, 335, 337, 344)

இரணிய கருப்ப தானமும் துலாபார தானமுமாகப் பல தானங்களைச் செய்தான். அந்தணர்களுக்கும் சக்தியற்றவர்களுக்கும் வேண்டியவாறு வேண்டிய பொருளைக் கொடுத்துப் புகழ் பெற்றான் இவனென வேள்விக்குடிச் செப்பேடு கூறும். இவ் வேநதனின் கொடைச் சிறப்பையும் கோவை (64, 82, 142, 212, 344) சுட்டிக் காட்டுகிறது.

நெடுமாறனின் சிவபக்தியை இறையனார் அகப்பொருள் உரை புகழ்ந்து (256, 279) பாராட்டுகிறது. இவன், சிவனடியார் அறுபத்து மூவருள் ஒருவனாக உள்ளான் என்பதைப் பெரிய புராணம் கூறுகிறது. இப்பாண்டியனின் சிவபக்தியை 236, 286, 305, ஆகிய பாடல்கள் எடுத்தியம்புகின்றன.

இடியின் உருவம் எழுதிய கொடியும் (41, 57, 68, 135, 138, 228, 242, 330) மீன் கொடியும் (35, 196, 254, 343) மீன் இலச்சினையும் (58, 123, 172, 319) வேப்ப மாலையும் (189, 235) பற்றிய குறிப்புகளும் இந்நூலில் உள்ளன.

பாண்டி மண்டலத்தை உயிரெனக் காத்தான் (22, 33, 58) நெடுமாறன் என்பதனையும் கோவை குறிப்பிடுகிறது.

நெடுமாறனின் வீரம், பட்டம், தமிழ்ப் பற்று, செங்கோலாட்சி, கொடைச் சிறப்பு, சிவபக்தி, கொடி, இலச்சினை, மாலை, பாண்டி மண்டலம் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைப் பாண்டிக் கோவையில் காணலாம்.

அடிக்குறிப்புகள்

1), 2) Muthiah, C., Early Tamil Society & Polity as revealed by the Court Poetry, Ph.D, Thesis, Visva-Bharathiled Santiniketan, 1986, pp, Appendix 442.

'மக்கட் பெயர்களின் தோற்றமும் வளர்ச்சியும்'

எம். முத்தையா
விவேகானந்த கல்லூரி.

தொல்காப்பியர் பெயர்கள் பற்றிக் குறிப்பிடும் போது, இயற்பெயர், முறைமைப்பெயர் ஆகியனபற்றியும் சுட்டியுள்ளார் நிலத்திற்குரிய பொதுப்பெயர்கள், தலைமக்கட்பெயர்கள், முறைமைப்பெயர்கள் போன்றவற்றை உடையாசிரியர்களின் குறிப்புக்களால். அறியலாம். ஆனால் பெயர்களின் தோற்றம் பற்றி அறிவதற்கான குறிப்புக்கள் காண கிடைக்கவில்லை. ஒரு பெயரானது, எந்தவொரு அடிச்சொல்லில் (Stem Word) இருந்து உருவாகி இருக்கின்றன என்று காரண காரியங் களைத் தேடும் வேளையில் பெயர்களின் தோற்றமும் வளர்ச்சி யும் பற்றி ஆராய்வது அவசியமாகின்றது.

செய்திப்பரவலும் மொழிக்கொள்கைகளும்

தொடக்க காலத்தில் ஒரு செய்தியினைப் பிறருக்குத் தெரி விக்க 1) ஒலிக்குறி (Sound Symbol) 2) சைகைக்குறி (Gesture Symbol) 3) அடையாளக்குறி (Identification) போன்றன பயன் படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் ஒலிக்குறியே மொழியின் தோற்றத்திற்கு அடிப்படையாய் அமைந்துள்ளது. ஒவ்வொரு நாட்டினருக்கும் ஒலி நிகழ்வை, அந்தந்த நாட்டினரின் வேறு படுத்தி அறியும் பண்பாட்டின் தன்மை பொருளறிதலில் ஒன்றாகி ஒலியறிதலில் வேறுபடுகின்றனர். இதனை மொழியின் தோற்றம் பற்றிய கொள்கைகள் (Bow-Wow Theory, ding-dong Theory, Pooh-Pooh/Theory) வாயிலாக அறியலாம்.

ஒலிப்பயன்பாடு

ஒரு மொழிக்கு ஒலிகள் எவ்வாறு மூலாதாரமாக அமை கின்றனவோ, அது போல மக்களை இனங்காண்பதில் வாய் மூலம் எழுப்பப்படும் ஒலிகளும் பயன்பாடு உடையதாக அமைகின்றன. பிறருடன் ஒருவர் தொடர்பு கொள்ள ஏற்படுத்து கின்ற ஒலிகளைத் 1. தொடர்பு சார்பொலி (Sound with Contact) 2 நேர்பொருளில் எழுப்பும் ஒலி (Sound with Direct Meaning) 3. மறை பொருளில் எழுப்பும் ஒலி (Sound with Indirect Meaning) என மூன்று நிலைகளில் காணலாம்.

1. தொடர்பு சார்பொலி (Sound with Contact)

இருவேறு நபர்களுக்கிடையே தன்னிச்சைச்செயலாகவோ (Conditioned Action) அல்லது அணிச்சைச் செயலாகவோ (Unconditioned Action) இடம் பெறுகின்ற ஒரு தொடர்பு வழிப்பட்டதே தொடர்பு சார்பொலி யெனலாம். இவ்வொலிப்பு முறைப்பயன்பாடானது, ஒருவர் மற்றொருவரிடம் தொடர்பு கொள்கின்ற நிலையில் இடம்பெறுகின்றது என்றாலும், பெயர் தெரிந்த ஒருவரிடமும், பெயர் தெரியாத ஒருவரிடம் பயன் பாட்டு நிலையில் வேறுபடுகின்றது.

ஒருவருடைய பெயர் தெரிந்த நிலையில் பெயரைச்சொல்லி அழைப்பது எளிதாக அமைகின்றது. இன்னுங்கூட பெயரையே ஒலிக்குறி (Whistle Symbol) மூலம் பயன்படுத்துவதைக் காணலாம்.

இதேபோல, ஒருவருடைய பெயர் தெரியாத போது, அவரை அழைக்க வேண்டிய நிலையில் ஏதாவது ஒரு ஒலியை எழுப்பியாக வேண்டிய நிலை உருவாகின்றது. இவ்வாறான அழைப்புச் சூழலில். ஏதோ ஒரு சப்தம் கேட்கின்றது என்று திரும்புவது காரணம் என்றாலும், அந்தவொலியானது நம்மை அழைப்பதற்குத் தான் செய்யப்பட்டது அல்லது இன்னாருடைய ஒலிப்புக்குரல்தான் என்று இருவேறு முறைகளில் இனமறியப் பயன்படுகின்றது.

இவ்வாறாக, ஒரு மனிதனைப் பிறிதொருவன் இனங்கண்டு கொள்ளவும் ஒலிக்குறியீடுகளைப் பயன்படுத்தியிருக்க வேண்டும் இதன் வளர்ச்சி நிலையில் ஏதோ ஒலிக்குறி என்றில்லாமல் ஒலிப்பொருளியல் கொண்டதாக அமைத்திருக்க வேண்டும். இவ்வாறாக, ஒவ்வொரு மனிதர்கட்கும் இன்றைய நாளில் இடப்படுகின்ற இயற்பெயர்கள் போன்று தனித்தனி ஒலிக்குறிகள் பயன்பட்டிருக்கும். பின்னர் இவ்வொலியின் அளவையும் மதிப்பிட்டு, எழுத்துக்கட்குரிய மாத்திரையளவு போன்றும் கடைப்பிடிக்கப்பட்டிருக்கலாம்.

இவ்வாறான தொடர்பு சார்பு நிலைகள் நடந்தோறிய பின்னரே, நேர்பொருள் குறித்தும், மறைபொருள் குறித்தும் ஒலிகள் (2,3) இடம் பெறும். இம்முதல் நிலையே மக்கட் பெயர்கட்காகிய ஒலிக் குறியீடாகும். இவ்வொலி மட்டுமே இங்கு கருத்தில் கொள்ளத்தக்கது.

இனக்குழுவும் ஒலிக்குறியீடும்

புராதன மனித இனக்குழு (Primitive Tribe) விலங்குகளிடமிருந்தும், இயற்கையின் சீற்றங்களிடமிருந்தும் தங்களைக் காத்துக் கொள்ளச் சிறுசிறு நாடோடிக் கூட்டங்களாக (Nomadic Band) வாழ்ந்தனர். ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு தலைவன் இருந்தமையும் அறிய முடிகின்றது.

இந்நிலையில் வெவ்வேறு கூட்டங்கள் என்று இனங்காண, ஒவ்வொரு கூட்டத்தினையும் வேறுபடுத்தியறிய, தனித்தனி ஒலிக்குறியீடுகள் (Primitive Sound Symbol) பயன்பட்டிருக்க வேண்டும். இத்தனித்த ஒலிக்குறியீடுகளே, அக்கூட்டத்தலைவனுக்குப் பெயராக மருவியிருக்கலாம். காலப்போக்கில், இக்கூட்டத்தலைவனின் பெயரானது, அவனைச் சார்ந்துள்ள மக்கட் தொகுதியைக் குறித்தும், அம்மக்களின் பெயர்களுக்கான வேறுபட்ட ஒலிக்குறியோடு இணைந்தும் வளர்ந்திருக்க வேண்டும்.

பள்ளர் மக்களும் கூட்டப்பெர்களும்

மக்கள் கூட்டங்கூட்டமாயும், கூட்டத்திற்குத் தலைவனின் பெயரால் அழைக்கப்பட்டமையையும், மதுரை மாவட்ட நாட்டுப்

புறப் பள்ளர் மக்களிடையே காணமுடிகின்றது. ஒரு குழுவினைச் சேர்ந்த மக்கள் கூட்டமென்றும், வகையறாவென்றும் குறிப்பிடுகின்றனர். அவர்களது கூட்டத்தலைவனின் பெயரினைக் குழந்தைகட்கு இடுவதையும், அவர்களுக்கென்ற தனிப்பட்ட குல தெய்வ வழிபாடு இருப்பதையும், இன்றளவும் காணலாம் கூட்டத் தலைவனே குலதெய்வ மாக்கப்பட்டிருக்கலாம். அது தனிப்பட்ட ஆய்வுக்கு உரியது. இதுபோல வெவ்வேறு இனத்தவர் களிடையேயும் கூட்டம், தலைவர், தலைவர் பெயரைக் குழந்தைகட்கு இடுதல் போன்றவற்றைக் காணலாம்.

'ஒரு நாட்டின் பெயர் மக்களுக்காய் மக்களின் பெயர் மொழிக்காதல் இயல்பு' என்பார் ந.சி.கந்தையா பிள்ளை இது போல ஒரு கூட்டத்தினைக் குறித்த ஒலிக்குறியீடு, அக்கூட்டத் தலைவனுக்காகி, அவனைச் சார்ந்த மக்கட்கும் ஆகியிருக்கலாம்

இப்பெயரிடல் முறையினைத் தொடர்ந்து, இயற்கை, தெய்வம் ஆகியனவற்றின் பெயர்களும் பிற்கால வழக்கில் பிற மக்கட்கு ஆகியிருக்கின்றன தனித்தனி மனிதனுக்கும் ஒரு ஒலிக் குறியீடு என்பது, அவனது, செயற்பாடு, தன்மை, ஒப்புமை, ஈடுபாடு போன்ற காரணங்களால் பிற்காலப் பட்டப்பெயர் களுக்கு வழி வகுத்திருக்கவேண்டும்.

ஒலிக்குறியீடுகளின் முதன்மை நிலை

'இயற்கையாக எழுப்பிய ஒலித்தொகுப்பில் இருந்தே தனித் தனியாகச் சொற்கள் பிரிந்து பிறந்தன' என்று சொல் பிறந்த கதை பற்றி சுந்தர சண்முகனார் கூறுகின்றார். மக்கட்பெயர் களின் தோற்றம் பற்றிய சிந்தனைக்கும் இக்கருத்துப் பொருத்தமுடையது. ஒலிக்குறியீட்டால் ஒருவரை இனங்கண்டு பிடிக்க முடியும் என்பதனை நாட்டுப்புற விளையாட்டுக்களில் ஒன்றான 'சித்தைக்குஞ்சு' நல்ல சான்றாக அமைகின்றது.

இலக்கிய வடிவங்களில் பாடல் வடிவமே காலத்தின் முன்னோடியாகின்றது. இசையோடு கூடிய பாடல்கள் உருவாகின்ற நிலையிலும் ஒலிக்குறிகளே (சந்தம்) முக்கியத்துவம் பெறுகின்றன.

இதுபோல, மந்திரத்தில் ஒலியின் முக்கியத்துவம் அதிகம் இடம் பெறுவது இங்கு கவனத்திற்குரியது. மந்திரங்கள் ஒலிக் குறிப்புக்களுடனே உச்சரிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஒலிக்குறிப் பிற்கும், ஒவ்வொரு விதமான பொருள் இருப்பதாக மந்திர நூல்கள் குறிப்பிடுகின்றன.

மொழி, இலக்கியம் பற்றிய வரலாறுகள் ஒலிக்குறியீட்டி லேயே தொடங்குவதால் அவைகளைச் சார்ந்த இனக்குழுவின் மக்கட் பெயர்களும் ஒலிக்குறியீட்டிலேயே தொடங்கியிருக்க வேண்டும்.

தொடக்க கால மக்கட்பெயர்களில் ஒலிக்குறியீடும், வளர்ச்சி நிலையும்

முதன் முதலில் மக்கட் பெயர்களுக்கான ஒலிக்குறியீடுகள் குறுகிய நிலையிலே அமைந்திருக்க வேண்டும். எழுத்தறிவு தோன்றிய நிலையிலும் இந்நிலையே நீட்டித்திருக்கும் எனலாம். இவ்வாறான நிலையில் ஓரசைச்சொற்களே (ஆய் ... மா, கா, தீ ...) பெயராக அமைந்துள்ளன. இதன் வளர்ச்சியில் பின்னர் ஈரசைச் சொற்களே பெயர்களாக வளர்ச்சி பெற்றுள்ளன என்பதற்கு சங்க இலக்கியங்களில் பெறப்படுகின்றஓரி, காரி, பாரி...போன்ற பெயர்கள் சான்றுகளாகும்.

கால மாற்றத்தில், தொடக்க நிலையில் இருந்த பெயர் வடிவங்களில் இருந்தே, பிற்காலப் பெயர்களுக்கான அடிச் சொற்கள் (Stem Words) உருவாகியிருக்கின்றன. பால் விகுதிகள், இடப்பெயர்கள் உறவுமுறைப் பெயர்கள், இனப்பெயர்கள் ஆகியவற்றைப் பெயர்களில் இணைக்க முற்பட்ட நிலையிலேயே பெயர்களுக்கான அடிச்சொற்கள் என்ற நிலைத்த தன்மையைப் பெறக்காரணமாயிற்று. இவ்வொட்டுக்களின் (Prefix/Suffix) இணைப்பு இல்லாவிடில் அடிச்சொல் என்ற வடிவில் அமை யாது பெயராகவே அமைந்திருக்கும்.

பின்னர், இவ்வடிச்சொற்கள், மக்களோடு தொடர்புடைய அனைத்துத் துறைகளிலிருந்தும் எடுத்தாளப்பட்டுள்ளன. இதுவே பெயர்களில் முதன்மை இனம் காட்டும் குறியீடாக (Primary Identification Symbol-Pids) அமைந்தது. பின்னர் இக்குறியீட்டில்

துணைவகைகளும் தோன்றியுள்ளன. இந்நிலை, மனிதனுக்கு மனிதன் வேறு என்ற நிலையினை உணர்த்திப் பெயரிடும் போக்குகள் மாறி வருகின்றன என்பதையே காட்டுகின்றது.

முடிவுரை

இனம், நாடு, மொழி, இலக்கியம் என ஒவ்வொன்றிருக்கும் வரலாறு எழுதப்படுவதுபோல், மக்கட் பெயர்களின் தோற்றம் குறித்தும் வரலாறு இருப்பதனை உணரமுடிகிறது.

ஒலிக்குறியீடுகள் செய்திப்பரவல் மொழியின் தோற்றம் ஆகியனவற்றிற்குக் காரணகாரியமாய் அமைவது போன்றே மக்கட் பெயர்கட்கும் அடிப்படையாக அமைந்திருக்கிறது.

முதலில் கூட்டங்கூட்டமாக வாழ்ந்த மக்கள் தொகுதிக் காகிய ஒலிக்குறியீடு, அக்கூட்டத்தலைவனுக்காகிப் பின்னர், தனித்தனி மனிதர்களுக்கேற்ற வகையில் மாறுபட்ட அமைப் பைப் பெற்றிருக்கிறது.

ஒலிக்குறியினால் மக்களை இனங்காண முடியும் என்பதனை நாட்டுப்புற விளையாட்டான 'சீத்தைக்குஞ்சு' மூலம் உறுதி செய்யலாம்.

இசைப்பாடல்களில் சந்தம் என்ற ஒலிக்குறியீட்டினையும், மந்திரங்கள் ஒலிக்குறிப்புக்களுடன் உச்சரிப்பு நிலையினையும் முதன்மையாகக் கொண்டுள்ளது போன்றே மக்கட்பெயர்களும் அமைகின்றன.

மக்கள் பெயர்களின் தோற்றம் வளர்ச்சி போன்று, மக்கட் பெயர்வைப்பு முறைகளின் தோற்றம் வளர்ச்சி, மக்கட் பெயர் வைப்பில் சடங்குகளின் தோற்றம் வளர்ச்சி என அறிய வாய்ப் புண்டு. மேலும் இனவாரியாகத் தொகுத்தால் பல உண்மை களைப் பெறலாம்.

தாலாட்டுப் பாடல்களில் - சமுதாய நிலை

இரெ. முத்துமாறன்
வடமதுரை, அண்ணா மாவட்டம்.

மனித வாழ்வின் தொடக்கப் பாடலாகத் தாலாட்டைக் கருத முடிகிறது. ஆதலால்தான் மனித சமுதாயம் தாலாட்டை முதல் படிப்பாகக் கொள்கிறது.

தாலாட்டுப் பாடல் பற்றி அறிஞர் பலர் பல கருத்துக் களைக் குறிப்பிட்டுள்ளனர்.

தாலாட்டு

கலைக் களஞ்சியம் 'நாடோடி இலக்கியம் என்பது கல்வி நிரம்பாத மக்கள் உண்டாக்கியதாகும்' 1) என விளக்குகிறது. மேலும் அது 'தாலாட்டு முதல் ஒப்பாரி வரையிலும் அவை பல்வேறு கருப்பொருளும் சந்தமும் கொண்டவை' எனக் குறிக்கிறது.

நா. வானமாமலை 'பாமரர் படைப்பிலேயே உணர்ச்சி மிக்க பாடல்கள் தாலாட்டும் ஒப்பாரியும்.ஒன்று வாழ்க்கையின் தொடக்கம் பற்றியது, மற்றொன்று முடிவு பற்றியது'என்கிறார்

மு. வரதராசன் 'குழந்தைகளை உறங்க வைப்பதற்கு மட்டுமே தாலாட்டுப் பாட்டு வழங்குவதாயிற்று'' எனக் குறிப்பிடுகிறார்.

ஆறு. அழகப்பன் தாய் ஆழம் காண முடியாத ஓர் அன்புக் கடல், அந்த அன்புக்கடலில் விளைந்த வலம்புரிமுத்தே தாலாட்டு' எனப் புகழ்கிறார்.

தாலாட்டிற்குத் தாளமோ இசைக்கருவிகளோ இன்றியமையாமை அல்ல. எனினும் இதில் இனிய ஓசை அமைந்துள்ளது. ஆதலால்தான் அழுகின்ற குழந்தை தாலாட்டைக் கேட்டவுடன் அழுகையை நிறுத்தித் தூங்கத் தொடங்கி விடுகிறது. தாய் மூலம் தாலாட்டுத் தோன்றியது, எனினும் பிற பெண்டிரும், சிறுபான்மை ஆடவர்களும் பாடுகின்றனர்.

முதல் பாடம்

குழந்தை பிறந்து உலகிற்கு வந்தவுடன் முதல் முதலாகக் கேட்கும் ஓசை தாலாட்டே ஆகும். ஆதலால் தாலாட்டு மனித வாழ்வின் ஆரம்பமாகவும் முதல் பாடமாகவும், கேட்டுச் சிந்திக்கக் கற்றுக் கொள்ளும் கல்வி அறிவாகவும் அமைகிறது.

முதல் கல்வி

ஒலிவடிவம், வரிவடிவம் என்ற இருவகைக்கல்விகளில் முதல் வகைக்கு இதுவே அடிப்படை 'நூற்பா' ஆகும். தாலாட்டைக் கேட்கும் குழந்தை 'கேட்டல்' அறிவை முதலாவதாகப் பெறுகிறது.

ஓசை

தாலாட்டிற்கு அளவும் ஓசையும் பாடுபவர்களின் மனநிலை, சூழ்நிலைகட்கு ஏற்ப அமைகின்றன. இதற்கு இலக்கண, வரையறை இல்லை பாடலின் தொடக்கமும் முடிவும் **'ஆரீ, ராரீ, ராராரோ'** என்னும் ஓசைத் தொடர்களையே கொண்டு உள்ளன.

குழந்தை இன்பம்

தாலாட்டைக் கற்றோரைவிடக் கல்லாதவர்களே மிகுதியும் விரும்பிப் பாடுகின்றனர். கற்றோர் கூச்சம், போலி நாகரிகம் முதலியவற்றால் பாடத் தயங்குகின்றனர். தாலாட்டை நகர்ப் புறத்தார் ஒதுக்க விரும்பினாலும் நாட்டுப் புறத்தார் விட்டு விடுவதாக இல்லை.

தோற்றம்

தாலாட்டு மனித வாழ்வில் அமைதி, இன்பம், மனநிறைவை ஏற்படுத்துகிறது. அதலால் தான் இது மனிதன் தோன்றிய காலம் முதல் நிலைத்து வாழ்ந்து வருகிறது. தாலாட்டு தனி ஒருவரால் ஓரிடத்தில். ஒரு நாளில் தோன்றியது அல்ல. காலங் காலமாகத் தோன்றி இன்றுவரை தொடர்கிறது.

உறக்க மருந்து

தாலாட்டு தாயின் உள்ளத்து உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்தாமல் வெளிப்படுத்தி குழந்தையைத் தூங்க வைக்கிறது. குழந்தைகள் பாட்டின் பொருளை உணர முடியாவிடினும் ஓசையைக் கேட்டு உறங்கி விடுகின்றன, உறங்காவிட்டாலும் அழுகையை நிறுத்திக் கொள்கின்றன.

பிறந்தகப் பெருமை

தாய் தாலாட்டில் தன் குலப் பெருமைகளை உயர்வுபடுத்திக் கூறுகிறாள். அவள் தன் குழந்தை எதிர் காலத்தில் சிறப்பாக வாழ வேண்டுமென்றும், தனக்குப் பல பெருமைகளைத் தேடித் தர வேண்டுமென்றும் பல எதிர்பார்ப்புக்களைத் தாலாட்டில் வெளியிடுகிறாள். அப்பொழுது தாயிடம் ஏற்படும் உணர் வோசைகள்தான் தாலாட்டுப் பாடல்களாகப் பீறிட்டுக் கிளம்பு கின்றன. அண்ணா மாவட்டத் தாலாட்டில் இறைபக்தியும் மாமன் பெருமைகளும், குழந்தை வருணனைகளும், தொட்டி லின் சிறப்புக்களும் மிகுதியாக இடம் பெறுகின்றன. இம் மாவட்டத்தில் தாலாட்டுப் பாடல்களில் தாய் பெரிதும் தன் பிறந்தகத்தின் பெருமைகளையே வெளியிடுகிறாள். புக்கத்தின் பெருமைகள் அரிதாகவே காணப்படுகின்றன.

அண்ணா மாவட்டத் தாலாட்டு

அண்ணா மாவட்டத்தில் மொழியாலும், சாதியாலும், மதத்தாலும் வேறுபட்ட பல இனத்தவர்கள் வாழ்கிறார்கள். இங்கு வாழும் தெலுங்கர் தாலாட்டை 'ஊஞ்சோதி'', 'உய்யால' 'தூரிப்பாட்டு', 'ஜூஜி', 'ஜோஜி' என்றழைக்கின்ற

னர். இங்குவாழும் வடுகர் முதலிய சாதியினர் பாடும் தெலுங்குத் தாலாட்டிற்கும், சக்கிலியர் முதலிய தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் பாடும் தெலுங்குத் தாலாட்டிற்கும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இம்மாவட்டத்தில் ஒக்கலிகக் கவுண்டர், தேவாங்கச் செட்டியார் முதலிய சமூகத்தினர் பாடும் கன்னடத் தாலாட்டுக்கள் 'ஜோகுல', 'ஆட்டாலு' என்று அழைக்கப் படுகின்றன. சௌராஷ்டிரர் தாலாட்டை 'இஞ்சி கீதா' என் கின்றனர். இம்மாவட்டத்தில் வாழும் மலையாள மொழி பேசுகின்றவர்கள் தாலாட்டைத் 'தாராட்டு' என்கின்றனர்.

நில அமைப்பு

அண்ணா மாவட்டம் ஆற்றுப்படுகைகள், காடுகள், தரிசு நிலங்கள். மலைப் பகுதிகள், வறண்ட பாலை நிலங்கள், வனப் பகுதிகள் முதலிய பிரிவுகளைக் கொண்டுள்ளது.

மருதவளம்

இம்மாவட்டத்தின் சிறந்த வயல்கள், தோப்புகள் உள்ளன என்பதை ஒரு பாடல் உணர்த்துகிறது.

'தாய்மாமன் கொல்லையில் என்ன வச்சா தோப்பாகும்'
இஞ்சி வச்சா தோப்பாகும் எலுமிச்சம் செடியாகும்
மஞ்சப் பயிர் ஆகும் மாதுளம் தோப்பாகும்.

சாதி மதப் பிரிவுகள்

இம் மாவட்டத்தில முதலியார், செட்டியார், பார்ப்பணர் முதலியவர்களுக்கென்றே தனித்தனியாய் தெருக்கள் உள்ளன என்பதைப் பாடல்கள் விளக்குகின்றன.

'முதலியார் தெருவில ஏங்கண்ணே நீ, முத்து வந்து விக்குதுன்னு
முத்து வெல கூறுவாக, முதலியார்க்கு ஒங்கமாம
செட்டி தெருவில ஏங்கண்ணே நீ, செண்டு வந்து விக்குதுன்னு
செண்டு வெல கூறுவாக, சீமானே ஒங்க மாமே'

இப்பாட்டில் முதலியார் தெருவும், செட்டியார் தெருவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது சிந்திக்கத்தக்கது.

'மலை ஒதுக்கி பூ எடுத்து எங்கண்ணே, மல்லிகைப்பூ
தொட்டி செய்வோம்
மல்லிகைப் பூ தொட்டியிலே எங்கண்ணே, நீ படுத்
துறங்க வந்த கண்ணோ
செடி ஒதுக்கிப் பூ எடுத்து எங்கண்ணே, செவ்வந்திப்பூ
தொட்டி செய்வோம்
செவ்வந்திப் பூ தொட்டியிலே எங்கண்ணே, நீ
சிரிச்சுறங்க வந்த கண்ணோ
பச்ச தழை முறிச்சு எங்கண்ணுக்கு, பக்கம் ஒரு
பொட்டு வச்சு
பாப்பார வீதியிலே எங்கண்ணே, பந்தாட அனுப்பி
வப்போம்'

என்ற தாலாட்டுப் பாடல் பார்ப்பணர்க்கெனத் தனியாகத் தெரு அமைக்கப்பட்டுள்ளதை விளக்குகிறது.

மேலும் இம்மாவட்டத்தில் ஆசாரி, இடையர், கவுண்டர், கள்ளர், குறவர், சக்கிலியர், பள்ளர். பறையர்.வண்ணார், வளையல் செட்டியார், வன்னியர், வாணிகச் செட்டியார், வெள்ளாளர், வேடர் முதலிய சாதியினர் வாழ்ந்து வருகின்றனர். இம் மாவட்டத்தில் கிறித்துவர், இசுலாமியர் முதலிய மதத்தவரும் இந்துக்களுடன் இணங்கி வாழ்கின்றனர்.

குடும்பம்

அண்ணா மாவட்டத்தில் தனிக்குடும்பம், கூட்டுக் குடும்பம் என இருவகைக் குடும்ப அமைப்புக்கள் உள்ளன.

குழந்தை வேண்டி தவம்

தாய்மார்கள் பிள்ளை வரம் கேட்பது இங்கு பரவலாகக் காணப்படுகிறது. இம்மாவட்ட மக்கள் மதுரை சொக்கலிங்கம், தனுக்கோடி இராமலிங்கம், காஞ்சி காமாட்சி, சங்கரன் கோயில் சங்கரன், விராலிமலை, பழனிமலை முருகன் முதலிய தெய்வங்களை வழிபட்டுப் பிள்ளை வரம் கேட்கின்றனர். சில

பெண்டிர் வெள்ளிக்கிழமைகளில் தலைமுழுகி மிளகை அள்ளித் தின்று பிள்ளை தவம் இருக்கின்றனர் என்பதைப் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

'வெள்ளி மல கடந்து விராலி மல தான் கடந்து
தங்க மல கடந்து உன் பெற்றோர் தவத்துக்குப் போகயில
தவமும் கொடுத்தாரோ ஈசுவரர் தன் பெயரை இட்டாரோ
மக்களில்ல என்னு சொல்லி மனஞ்சடச்சு நிக்கையில
கலக்கத்த தீத்து கண்ணீரை நீ அமத்தி
துன்பத்தைத் தீத்து துணையிருக்க வந்த கண்ணே'.

என்ற பாடல் இம்மாவட்டப் பெண்டிர் மிளகைத்தின்று பிள்ளை வரம் கேட்டனர் என்கிறது. மற்றொரு பாடல்,

'வெள்ளி தல முழுகி வினாயகருக்கு வெகுநாள் தவ மிருந்தேன்
அள்ளி மிளகு தின்னு ஈவரருக்கு அருந்தவசு செய்து வந்தேன்
கன்னி வயத்தில் நீ கண்டெடுத்த ஆணி முத்து'

எனச்சுட்டி, இம்மாவட்ட மகளிர் பிள்ளை வேண்டி அருந்த பசு செய்தனர் எனத் தெளிவுபடுத்துகிறது.

மலடி

இம்மாவட்ட மக்கள் குழந்தை இல்லாப் பெண்டிரை 'மலடி' எனப் பழிக்கின்றனர். ஆதலால் கருவுற்ற ஒரு பெண்ணின் தாய் தன் மகள் மலடியல்ல என்பதைப் பெருமையோடு பாடிக் காட்டுகிறாள்.

'மதுரையில கூடாரம் என் கண்ணுமவ, மல்லியப் பூ ஏவாரம்,
மல்லியப் பூ வாங்க வந்த என் கண்ணுமவ, மலடி யல்லா சூலமானா'

திருமணச் சடங்குகளும் சமுதாய வாழ்க்கையும்

அ. முத்துமுனியம்மாள்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி

முன்னுரை

நம் நாட்டுத் திருமணங்கள் பல்வேறு விதமான சடங்கு முறைகளைக் கொண்டிருக்கின்றன. நாம் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் .சமுதாயத்தைப் பிரதிபலித்துக் காட்டுவன வாக இவை அமைந்திருக்கும். இதனை விளக்குவதற்காக, அண்ணா மாவட்டம் நத்தம் பகுதியில் சில குறிபபிட்ட சாதி யினரின் திருமணச் சடங்கு முறைகள் எடுத்துக் கொள்ளப் பட்டன முற்பட்ட இனத்தவர், பிற்பட்ட இனத்தவர். தாழ்த் தப்பட்ட இனத்தவர் என்று வகைபிரித்துக்கள ஆய்வில் செய் திகள் திரட்டப்பட்டன. இங்கு கூறப்பட்டிருக்கும் முறைகள், இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படுவது. இதே இனத்தவர்கள் வேறு பகுதியில் இருந்து, அங்கு நடத்தப்படும் சடங்கு முறைகள் வேறுபட்டுக் காணலாம்.

பெண்கள் நிலை

முற்பட்ட வகுப்பினரான அய்யர், காசுக்காரச் செட்டியார் என்ற இவ்விரு இனத்தாரில், திருமணச் செலவுகள் அனைத்தும் பெண் வீட்டாரைச் சார்ந்ததாக உள்ளது. நிச்சயதார்த்தம் அல்லது பரிசம் போடுதல் என்னும் நிகழ்ச்சி இவ்விரு இனத்தா ரில், மாப்பிள்ளை வீட்டில் நடைபெறுகிறது. பிற்பட்ட இனத்த வர்களான வெள்ளாளர், போய நாயக்கர் ,தொட்டிய நாயக்கர் தாழ்த்தப்பட்ட வகுப்பினரான பள்ளர், பறையர் ஆகியோர் களில் இந்நிகழ்ச்சி பெண்வீட்டில் நடைபெறுகிறது.

அய்யர், காசுக்காரச் செட்டியார் என்ற இனத்தாரில் 'வர தட்சணை கொடுத்தல்' என்பது ஒரு முக்கிய சடங்காகக் கருதப் படுகிறது. பெண்வீட்டார் எவ்வளவு ஏழ்மை நிலையில் இருந் தாலும் வரதட்சணை கொடுத்தே தீர வேண்டும். ஆனால், வெள்ளாளர், நாயக்கர்கள், பள்ளர் பறையர் போன்ற இனத் தாரில் இந்தச் சடங்கு இல்லை. மாறாக, இவர்கள் இனத்தில் மாப்பிள்ளை வீட்டார்தான், பெண்ணுக்குப் 'பரிசப் பணம்' கொடுக்க வேண்டும்.

மேல் வகுப்பாரிடத்து பணம் கொடுத்துப் பெண்ணையும் கொடுக்கும் வழக்கம் இருக்கிறது. பெண்கள் நிலை தாழ்ந் துள்ளதையே இதுகாட்டுகிறது பணம் கொடுத்து, பெண்ணைத் திருமண செய்து கொண்டு போன பிறஇனத்தவர்களும் இன்று வேகமாக மாறி வருகிறார்கள், முன்னர் உயர்ந்த இனத்தார் அனுபவித்த சலுகைகளை. வசதிகளை, பதவிகளை இன்று அனைத்து இனத்தாரும் பெறுவதால் இந்த வரதட்சணைச் சடங்கு முறையினையும் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண் டார்கள். வரதட்சணை வாங்குவதை இந்த இனத்தவர்கள் இன்று இன்றியமையாத ஒன்றாக ஆக்கி விடுகிறார்கள்.

சடங்குப் பொருட்கள்

போய நாயக்கர், தொட்டிய நாயக்கர், கவ நாயக்கர் என்ற மூன்று இனத்தாரும். பரிசத்தன்று கம்பு மாவு கொண்டு போவதை ஒரு மரபாக மதிக்கின்றார்கள். இவர்கள், தங்கள் உணவிற்குப் புன்செய்ப் பயிரான கம்பையே நம்பி இருந்தவர் கள், மேலும், ஆந்திர நாட்டில் எப்பொழுதும் கம்பு விளைச் சள் அதிகம் அங்கிருந்து வந்தவர்களான இந்நாயக்கர்கள், தங்களின் வாழ்க்கையில், இன்றியமையாத உணவை, ஒரு சடங்குப் பொருளாக்கிப பெருமைப்படுகிறார்கள்.

பரிச விழா நடக்கும் நேரம்

அனைத்து இனத்தவர்களாலும், இப்பரிசவிழா, நல்ல நாள், நேரம் பார்த்தே நடத்தப்படுகிறது. ஆனால் போ்ய நாயக்கர் என்ற சாதியினர் பரிச விழாவை இரவில்தான் நடத்த வேண் டும் என்ற மரபைக் கொண்டுள்ளார்கள். செல்வவளமற்ற இம்

மக்கள் பகல் முழுவதும், உடல் வருந்த வேலை செய்பவர்கள். அதனால் பகலில் வைத்தால், தொழிலில் பாதிப்பும் பண வருவாயில் தடையும் உண்டாகும். இதனால், தங்கள் நடை முறையில் பாதிப்பு உண்டாக்காமல் இரவில் வைத்துக் கொண் டிருக்கிறார்கள்.

பிற இனத்தாரின் பங்கு

வெள்ளாளர் என்ற இனத்தவர்கள், திருமணத்திற்கு மூன்று நாள் முன்னர் 'நாளிடல்' என்னும் சடங்கைச் செய்கிறார்கள். மணமகன், மணமகளுக்கு. அவரவர்கள் வீட்டில் இது நடை பெறும். இச்சடங்கிற்குக், கிராமத்தில் உள்ள வேறு இனத்தவர் களும் (கள்ளர், செட்டியார் போன்றோர்) வருவார்கள். ஒற்றைப் படை எண்ணிக்கையில் (11, 21) மணமகனுக்கு, எண்ணெய், அரப்புத்தூள் ஆகியவற்றைத் தேய்ப்பார்கள் பின்னர் புத்தாடை அணியச் செய்வார்கள். இந்தப் பிற இனத் தவர்களை கட்டாயம் அழைககவேண்டும் என்ற மரபை இங்குக் கடைப் பிடிக்கிறார்கள்.

'வெள்ளாள' இனத்தவர்கள், அரசர் காலத்திருந்தே மக்கள் தொடர்புடைய பணிகளில் இருப்பவர்கள். இதனால் இவர்கள், அனைத்து இனத்தாருடனும் நல்ல உறவு வைத்துக் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் இந்தச் சடங்கு தோன்றி யிருக்கலாம்.

தாலி கட்டும் முறை

அய்யர் இனத்தவர்களில் தாலி கட்டும் போது, பெண்கள் தங்கள் தந்தை மடியில் அமர்ந்திருப்பர். இந்தப் பழக்கம் மற்ற இனங்களில் இல்லை. அய்யர் இனத்தில் பழங்காலந் தொட்டே குழந்தைத் திருமணம் நடத்தும் பழக்கம் உள்ளவர்கள். எனவே சிறு குழந்தைகளை மடியில் வைத்துத் திருமணம் செய்து கொடுப்பது வழக்கமாய் இருந்தது. பின்னர் இந்தத் திருமணம் தடைப்பட்டதால், இதன் தாக்கத்தால் இன்றும், தந்தை மடியில் அமர்ந்து தாலி பெறும் பழக்கம் உள்ளது.

தொழில் முறைச் சடங்குகள்

1) திருமணத்தன்று தொட்டிய நாயக்க இனத்தாரில் வேட்டையாடப் போவதாக ஒரு அம்பை எடுத்துக் கொண்டு, குறிப்பிட்ட தூரம் வரை மணமகன் சென்றுவருவான். மேலும் மழைபெய்து, விதை விதைப்பது போல் பெண்ணும், மாப்பிள்ளையும் சடங்குகள் செய்கிறார்கள். பின்னர் திருமணப் பந்தல்களைக் குதிரை மூலமோ, அல்லது ஒருவர் மேல் ஏறிக் கொண்டோ (மணமகன் மட்டும்) சுற்றி வருகிறார்கள். முன்னர் இவர்கள் மன்னர்களிடம் வீரர்களாய் இருந்தவர்கள். அதைக் குறிக்கவே இந்தச் சடங்கு

2) அய்யர் வாணியச் செட்டியார் என்ற இரு இனத்தாரும் குடை, ஏடு, பிரம்பு போன்றவற்றை தங்கள் சடங்கு முறைகளில் இணைத்துள்ளார்கள். அய்யர் இனத்தாரின் தொழில் வைதீகத் தொழிலாகும். அதனால் வேதம் படிக்கக் காசிக்குச் செல்வதை 'காசி யாத்திரை' என்னும் சடங்கின் மூலம் தெரிவிக்கின்றார்கள். வாணியச் செட்டியார்கள், தேசமெங்கும் சுற்றி வாணிபம் செய்வதைச் சுட்ட பரதேசம் போதல்' என்னும் சடங்கினைச் செய்கின்றார்கள்,

3) பள்ளர், பறையர் ஆகிய இனத்தார், ஏர், கலப்பை, கூடை போன்றவற்றைச் சடங்குகளில் பயன்படுத்துகின்றார்கள். மணமகன் ஏரைத் தோளில் வைத்துக் கொண்டு செல்வான். பின் மணமக்கள் குளக்கரைக்குச் சென்று, அங்கு ஒரு மண்வெட்டியால் மணமகன் மண்ணை அள்ளி ஒரு கூடையில் போட, மணமகள் அந்தக் கூடையைச் சுமந்து சிறிதுதூரம் சென்று கொட்டுவாள். தங்கள் சமுதாய வாழ்க்கையை பிரதிபலிப்பதாக இது அமைந்துள்ளது,

திருமணம் நடத்தும் இடம்

தொட்டிய நாயக்கரினத்தார், ஊரின் நடுவில் பந்தல் அமைத்து, அங்குதான் திருமணங்களை நடத்துகின்றார்கள். முன்னர், அவர்களுக்கென்று பெரிய வீடுகளோ, பரந்த இடமோ

சொந்தமாக இல்லை. இதனால் பொது இடத்தில் திருமணத்தை நடத்த ஆரம்பித்தனர். அந்தச் சமுதாயத்தை இன்று காட்டுவதற்காக இப்பொழுதும் இவ்வாறு நடத்துகிறார்கள்.

திருமணங்களின் இன்றைய நிலமை

ஒரு தலைமுறைக்கு முன்னர் இருந்த, திருமணச் சடங்கு முறைகள், இப்பொழுது இல்லை, நேரத்தின் இன்றியமையாமையை உணர்ந்தும், பொருளாதார வசதியை முன்னிட்டும் இச்சடங்கு முறைகள் குறைக்கப்பட்டன, கலப்புத் திருமணங்களும், சுயமரியாதைத் திருமணங்களும் அதிகரித்து வருவதாலும் இச்சடங்கு முறைகள் மறைந்து வருகின்றன.

முடிவுரை

இத் திருமணச் சடங்குகளின் மூலம் மேல் வகுப்பாரிடத்தில் மாப்பிள்ளை வீட்டாரின் ஆதிக்கம் அதிகமாயிருப்பதை அறித்து கொள்ளலாம். இந்தக் கொடிய மரபு இன்று அனைத்து இனத்தாரிடத்தும் தொற்றிக் கொண்டுவிட்டது, திருமணத்தன்று மணமகளுக்குத் தாலியும், மணமகனுக்கு மிஞ்சியும் அணிவிப்பது வழக்கம்- ஆனால் ஆணாதிக்க சமுதாயம் மிஞ்சியை அகற்றி (திருமணத்தன்றே) விட்டு பெண்கள் மட்டும் காலமெல்லாம் புனிதமாய்த் தங்கள் தாலியைக் காக்க வேண்டும் என்ற மரபை கொண்டு வந்து விட்டது. மக்களின் மன மகிழ்ச்சிக்காகவே அன்று இந்தத் திருமணச் சடங்குகள் நடத்தப்பட்டன. மக்களை வேலைப் பளுவிலிருந்து மீட்டு, பொழுது போக்காய், உற்சாகத்துடன் நடத்தப்பட்டன. இன்று அதன் நோக்கம் அழிந்து விட்டது, பெண்களைப் பெற்றவர்களுக்குப் பெருந்துன்பம் தருவனவாக இன்று மாறிவிட்டன. பெண்களுக்கு அன்புடன் அளிக்கப்பட்ட பொருட்கள் இன்று கட்டாயமாக்கப்பட்டு விட்டன. இவ்வாறு துன்பம் தராத, மக்களுக்கு மகிழ்ச்சியை மட்டும் தரக்கூடிய சடங்கு முறைகளை நாம் அழியாமல் காப்பாற்ற வேண்டும். இவ்வறிவில்லபத சடங்கு முறைகள் அழிந்து விடுவதால் நமக்கு இழப்பு ஒன்றுமில்லை, மக்களின் பண்பாடு இழக்க விடாமல் வைத்திருக்கும் சடங்குகளை நாம் நடத்துவது நம் கடமையாகும்.

குறுநிலத் தலைவர்கள்

க. முத்துவேல்,
தியாகராசர் கல்லூரி, மதுரை

சங்க இலக்கியங்கள் எழுந்த காலம் தமிழ் நாட்டில் முடியாட்சி தோன்றி விட்ட காலமாகும். ஆயினும் 'அரசு' [State] என்ற நிறுவனம் முழுவளர்ச்சி பெறாத காலம். அக் காலத்தில் தனிக் கொடியும், பூவும், நிலைப்படையும் [Standing Army] உடைய வேந்தர்கள் எனப்பட்டவர் மூவரே யாவர். இவர்கள் தங்கள் நிலப்பகுதிகளில் எல்லா இடங்களிலும் நேரடியாக ஆளும் நிலை அன்று இல்லை. எனவே இவர்களின் மேலாதிக்கத்தை ஏற்றும், சில நேரங்களில் எதிர்த்தும் அங்கங்கே குறுநிலத்தலைவர்கள் சிற்றூர் மன்னர்களாயும். தலைவர்களாயும் இருந்தனர்.

சங்க இலக்கியத்திலிருந்து, மூவேந்தர்கள் அல்லாத குறுநிலத் தலைவர்களாகவும், சிற்றூர் மன்னர்களாகவும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்ததாகவும் அறிகின்றோம். இவர்கள் ஆண்ட பகுதிகள் பெரும்பாலும் குன்று சார்ந்த பகுதியாக இருந்தது; அல்லது மிகச்சிறிய நிலப்பகுதிகளில் வாழ்ந்தனர் என்று கருதுகிறார் டாக்டர். கோ. கேசவன்.

ஆயர், இளையர், எயினர், அருவாளர், மழவர், குறும்பர், வெளியர், வில்லாளர், பழையன் ஆகியோர்களைப் புறநானூற்றில் பரவலாகக் காணுகிறோம் ஒழியர், நாகர் ஆகிய வேறு சிலரும் அக்காலத்தில் இருந்ததை பிற இலக்கியங்களால் அறிகிறோம்.

இக்கால இலக்கியங்களில் இந்த மரபினரைப் பற்றிய செய்திகள் இல்லை. எனவே இவர்கள் இனக்குழுச் சமுதாயங்

களின் தலைவர்களாகத் தாங்கள் தங்கள் நிலப்பகுதிகளில் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

கால ஓட்டத்தில் வேறு அரசர்கள் அல்லது வேந்தர்கள் இவர்களை வென்று தன் வயமாக்கிக் கொண்டனர் என்று கருத வேண்டியுள்ளது.

பெரிய வேந்தர்களோடு சார்ந்தும் அவர்களை எதிர்த்தும் போர்க்களத்தில் நின்றிருந்திருக்கின்றனர் கரிகாலன் வெண்ணிப் பறந்தலை என்னுமிடத்தில் மன்னர்களை வென்றதாகப் புறப் பாடல் (66) தெரிவிக்கின்றது. பாண்டியன்நெடுஞ்சேழியன் திதியன், எழினி, இருங்கோவேள், எருமையூரன் உட்படப் பல குறு நிலத் தலைவர்களை வென்று அடக்குகிறான்.

குறுநிலத் தலைவர்களில் அதியமான் மரபினைத் தவிர வேறு யாரும் பெரு வேந்தர்களோடு தொடர்புடைய மரபினர் களாகத் தெரியவில்லை சேர, சோழ, பாண்டியரோடு ஒப்ப வைத்து அசோகரின் கல்வெட்டுகளில் குறிக்கப்படும் 'சதிய புத்திரர்' அதியமான் மரபினரே என்பதை வரலாற்று ஆசிரியர் கள் நிறுவியுள்ளனர் இம்பிமரனர் மட்டுமே சேர வேந்தரோடு தொடர்பு கொண்டிருந்தனர் என்று தெரிகிறது.

இவ்வேந்தர்களில் யாரோ இருவர் அல்லது மூவருமே ஒன்றிணைந்து பாரியினை வஞ்சகத்தால் கொன்ற செய்தி புற நானூறு தரும் அவலச் செய்தியாகும். இவ்வஞ்சகம் எவ்வகை யானது என்பதற்குப் போதிய இலக்கியச் சான்றுகள் இல்லை. ஆயினும், முன்னூறு ஊர்களை உடைய பறம்பு நாட்டை விட்டு நீங்கி பாரியின் மகளிர் இருவரைக் கபிலர் ஏதிலிகளைப் போலத் (அநாதைகள்) தமிழ் நாட்டின் வடபகுதிக்கு அழைத் துச் சென்றது மட்டும் தெரிகின்றது.

குறுநிலத் தலைவர்கள் பொன்னும், பொருளும் மிகுத்துச் சேர்த்து வைத்திருந்தவர்களாகத் தெரியவில்லை, 'சிறிய கட்

பெறினே' என்ற ஔவையாரின் பாடலும், 'இல்லோர் ஒக்கல் தலைவன்' என்ற வருணனையும், அவன் படைக்கலங்கள் கோடும், நுதியும் சிதைந்து கொல்லன் பட்டறையில் கிடக்கும் காட்சியும் இதற்குச் சான்றுகளாகும். ஈர்ந்தையூதர் தோயன் மாறனை

'நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே'

என்று மதுரைக் குமரனார் பாடுகிறார்.

குறுநிலத் தலைவர்களிடத்தில் புலவர்களும், பாணர்களும் சென்று இரக்கின்றனர். இக்குறு நிலத்தலைவர்கள் இவர்களுக்குப் பொன்னும், பொருளும் அள்ளிக் கொடுத்ததாகத் தெரியவில்லை மாறாக, கள்ளும், சோறும், கறியும் கொடுத்ததாகத் தெரிகின்றது.

'வலிய ஆகும் நின்தாள் தோய் தடக்கை
புலவு நாற்றத்தை பைந்தடி
பூ நாற்றத்த புகை கொளீஇ, ஊன்துவை
கறி சோறு உண்டு வருந்து தொழில் அல்லது
பினிது தொழில் அறியா ஆகலின்' [புறம் 14]

ஆலங்குடி வங்கனாரின் புறப்பாடல் 'உனக்கு முயலையாவது சுட்டுத் தருவோம்' என்று சிற்றூர்த் தலைவன் இல்லாத போது அவ ன்தோழன் பாணனிடம் கூறுவதாக அமைந்துள்ளது. இத்தொடர் சிற்றூர்த் தலைவர்களது பொருளாதார நிலையை நன்கு விளக்குகிறது.

முயல்சுட்ட வாயினும் தருகுவேம்; புகுதந்து
ஈங்கு இருந் தீமோ முதுவாய்ப் பாண...

[புறம். 319].

சங்கம் மருவிய காலத்து இலக்கியங்கள் இக்குறு நிலத் தலைவர்களைப் பற்றிக் குறிப்பிட்டு ஏதும் பேசவில்லை.

பக்தி இலக்கிய காலத்தில் அரசுகள்க நிலை பெற்று விட்டபோது இவ்வினக்குழுச் சமூகங்கள் பேரரசுகளின் ஆதிக்கத்தில் பெருமளவு கரைந்துவிட்டன.

'ஆய்' அரசு மட்டும் கி. பி. 8-ஆம் நூற்றாண்டு வரை நீடித்து இருந்ததாகப் பார்த்திப சேகரபுரம் கோ கர்ணன் தடக்கனுடைய செப்பேடுகளால் அறிகிறோம்.

பிற்காலத்தில் மழவராயர்கள் போன்ற ஒருசில பெயர்களை அரசியல் அதிகாரிகளாகக் கல்வெட்டுகளில் அறிய முடிகிறது.

எனினும், குறுநிலத் தலைவர்களைப் பற்றிய ஆய்வு இன்னும் விரிவாகச் செய்யப்பட வேண்டிய ஒன்று.

பரதவத் தொழிற் கலைச் சொற்கள்

ச. முருகானந்தம்
காமராசர் கல்லூரி, தூத்துக்குடி

பரதவர் சமூகம் பற்றிய ஆயவு தற்போது பெருவிருப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவர் தம் நாட்டார் பாடல்கள், தொழிற்கலைச் சொற்கள், பண்பாட்டு மரபுகள், பழக்க வழக்கங்கள் ஆகியன சேகரிக்கப்படுகின்றன. இத்துறையில் மேலாய்வுகள் நிகழ்ந்து வருகின்றன. தமிழ்நாட்டின் தொல்குடிகளுள் ஒரு குடியினர் இவர். மானுடவியல், சமூகவியல் மொழியியல் ஆகிய துறை சார்ந்த ஆய்வுகளுக்கு இச்சமூகம் நல்ல ஓர் ஆய்வுப் பரப்பாகத் திகழ்கிறது.

இக்கட்டுரையாளர் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழக நிதியுதவியுடன் குறுங்கால ஆய்வு மேற்கொண்டு, களப்பணி செய்து 'இராமநாதபுரம்', திருநெல்வேலி மாவட்டக் கடற்கரைப் பரதவர் தொழிற் கலைச் சொற்கள்' திரட்டி, ஆய்வேடு (ஆகஸ்ட் 1983) அளித்துள்ளார். இவரை ஆசிரியராக கொண்ட 'யாழ்ப்பாணக் கரையோரப் பரதவர் தொழிற்கலைச் சொற்கள் — ஓர் அறிமுகம்' எனும் கட்டுரை 'தமிழ்க்கலை' (டிசம்பர் 1982) இதழில் வெளியாயிற்று. மட்டக் களப்பு மாவட்டப் பரதவர் தொழிற்கலைச் சொற்கள் - ஓர் அறிமுகம்' எனும் கட்டுரை, இக்கட்டுரையாசிரியரை ஆசிரியராகக் கொண்டு 'தமிழ்க்கலை' இதழில் (டிசம்பர் 1984) வெளிவந்துள்ளது. 'கன்னியாகுமரி மாவட்டக் கடற்கரைப் பரதவர் தொழிற்கலைப் சொற்கள்' எனும் கட்டுரை இதே ஆசிரியரால் இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற இருபதாவது கருத்தரங்க ஆயவுக்கோவையில் (மே 1988) வெளியானது. மேற்சொன்ன கட்டுரைகளோடு 'செங்கற்பட்டு, சென்னை மாவட்டக் கடற்

கரைப் பரதவர் தோழிற்கலைச் சொற்கள்' 'எனும் இக் கட்டுரையையும்சேர்த்து ஒருங்கு நோக்கினால், இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, செங்கற்பட்டு, சென்னை ஆகிய ஏழு மாவட்டங்களில் உள்ள பரதவர் தொழில், தொழிற்கருவிகள் இன்னபிறவற்றுள் காணலாகிற ஒற்றுமை வேற்றுமைகள் புலனாகும்.

இனி செங்கற்பட்டு, சென்னை மாவட்டக் கடற்கரைப் பரதவர் தொழிற்கலைச் சொற்களை அகர வரிசையில் காண லாம்.

அக்கினிவலை, அணியம், அந்திவலை, அமரம், அமுக்கம், அரைவலை, அல்சா, அல்சாதண்டு, ஆத்ம சோறு, ஆலநதழை, இடம்புரி, இடைவலை, இரம்பிணிவலை, இராமேஸ்வரம், இரு பிறவி, இருப்பால்கட்டை, இருவாவெள்ளம்,இறா, இறால்,இறுக் காவலை, ஈர்க்கை, உல்லம்வலை, எரிகட்டுவலை,ஏந்துகச்சாவலை ஏரா, ஏறுவலை, ஒட்டுக்கயிறு, ஒட்டுமுளி, ஒளினி, ஓடைசேறு, ஓலை ஈக்கை, கசா, கச்சான், கச்சான் ஈரான் காற்று, கச்சான் காற்று, கச்சான் கோடைக்காற்று, கச்சா வலை, கடல் சுரப்பு, கடையா, கட்டுக்கயிறு, கட்டுவலை. கண்ணஞ்சேறு, கன்ணு, கரிசவாடுதண்ணி, கரைவலை, கலங்கல் தண்ணி, கல், கல்சேறு, கவலை வளா, கலத்துழறுமடி, கறுப்பு, கன்னி வலை, காடு கட்டுதல், காவலாளி, காளாக்கயிறு, கீங்காகயிறு, கீழ்த்தண்டு, கிழ்த்தண்டு கயிறு, குச்சுக்கயிறு, குத்துக்கட்டை, குறிப்பாஞ் சோறு, குன்னுவாடைக்காற்று, கூண்டு, கூனி, கெண்டை வலை, கெளிசேறு, கொடுவலை, கொண்டக்காற்று, கொண்டடிக்கட்டை, கொண்டல், கொண்டை வலை, கொண்டு வலை, கொம்பு, கொம்புக்கட்டை, கொம்புஅண்டை, கோடைக்காற்று, கோரைப்பெட்டி, கோல், கோவலை, சாத்தா சிங்கெராவலை, சிறுக்காவலை, சிறுதன்னை, சிறுத்த பாவு, சிறுநி, சீனி, சுத்த, சுத்தக்கயிறு, சுற்றுவலை, செம்படிக்காமடி, செம்மானம்,சேர்ந்த, சொறுதடி, தக்கைக்கயிறு, தக்கைப்பூண்டு, தடவலை, தடைசி, தண்டு, தரை, தலை மரம், தலையா,, தல்வாடு, தளா, தாழை, திமி, துடுப்பு, துண்டுக் கயிறு

துண்டு சோறு, தூண்டில் கயிறு, தூரிவலை, தெண்ணி கரசலா, தெண்ணிதெம்மாஒழினி, தெண்ணிவெள்ளம், தெம்மா வெலங்கு, தெழுவாஞ்சேறு, தெளிவுதண்ணி, தென்னங்கோடை காற்று, தொட்டி வலை, நடுத்தலைக்கட்டை, நடுமடி, ஒருமரம் நண்டு, நண்டு வலை, நெக்குமகுடி, நேர்ஈரான்காற்று, நேர் கோடைக் காற்று, நேல்வெலங்கு, பக்கவாத்துக்கட்டை, பகிரிசேறு, பங்காயள, படி, பட்டி, பண் சேறு, பண்ணாக்கு, பண்ணுகயிறு, பண்பா, பலவை, பல்லக்கு, பறி, பாச்சுவை, பாஞ்சனியம், பாதடி, பார்க்கட்டி, பாறை, புங்கந்தழை' புரைமாறி, பூமுடி, பெரியசேறு, பெரியதன்னி, பெருக்காவலை, பெருத்தபாவு, பெருமாகட்டை, பைண்டவலை, பொறுவாங் சேறு போருக்குத் திரும்புதல், போயா, மகரம், மசி, மணிக்கால் மணிவலை, மண்டவா, மதவலை, மாஞ்சேறு, மால், மால்மடி, மிதப்புவலை, மீன்தடி, முணாமரம், மேங்காகயிறு, மேமறி, மேல்தண்டு, மேல்தண்டு கயிறு, மேல்பலகை, மொண்டு. யானை மீன், லா ஈர்க்கை, வண்டத்தண்ணி, வண்ணிகரசலா, வண்ணி வடாஒழினி, வண்ணிவெள்ளம், வலம்புரி, வறி, வாங்கிசுழல், வாடாவெலங்கு, வாடைக்காற்று, வாறி, வெள்ளாவலை வேப்பந்தழை.

மேற்கண்ட தொழிற்கலைச் சொற்களில் கறுப்பு, சீனி சேர்ந்த, தரை, பார்க்கட்டி, பாறை என்பன கடல் நீருக்கடியில் உள்ள நிலப்பகுதியைக் குறிப்பனவாகும். ஆத்மசேறு, ஓடை சேறு, கண்ணஞ்சேறு, கல்சேறு, குளிப்பாஞ்சேறு, கொயிர் சேறு, கெளிசேறு, துண்டுசேறு, நொழுவாஞ்சேறு, மாஞ்சேறு என்பன கடல் சேற்றின் வகைகளாகும் கச்சான், கச்சான், ஈரான்காற்று, கச்சான் காற்று, கச்சான் கோடைக்காற்று, கொண்டக்காற்று, குன்னுவாடைக்காற்று, தென்னங்கோடைக் காற்று, நேர்கோடைக்காற்று, என்பன காற்றின் வகைகளாகும். ஒளினி, கடல் சுரப்பு, கரிசவாடு தவைணி' கலங்கல், தண்ணி, தவ்வாடு, தெண்ணிதெம்ம ஒளினி தெண்ணி வெள்ளம், தென்னிகரசலா, புரைமாறி, மேமறி, வண்டததண்ணி, வண்ணிவாடா ஏளினி, வண்ணிவெள்ளம், ஆகியன கடலில் உள்ள நீரோட்டங்களின் பெயர்களாகும்.

கண்ணு, கல், கள்ளத்தூறுமடி, கீங்கா கயிறு, சிறுத்தபாவு, சிறுநி செம்படிக்காமடி, நடுமடி, நெக்குமடி, பலவா, பெருத்த பாவு, போயா, மடிமயல், சேங்காகயிறு, மொண்டு ஆகியன வலையின் பகுதிகளாகும். இருப்பாக்கட்டை, கடையா, குத்துக் கட்டை, கொண்டடி கட்டை, கொம்பு அண்டை, தலையாங் நடுத்தழைக்கட்டை, நடுமரம், பக்கவாத்துக்கட்டை, நடுமரம்' பக்கவாத்துக்கட்டை, பெருமாகட்டை என்பன மரததின் பாக' களாகும் காளாக்கயிறு, குச்சுக்கயிறு, கொம்புக் கயிறு, சுத்துக் கயிறு, தக்கைக்கயிறு, துண்டுக்கயிறு, தூண்டில் கயிறுவகை களாகும், மணிக்கட்டை என்பது வலை மிதப்பதற்குப் பயன் படுத்தும் எருக்கந்தண்டின் துண்டமாகும். மணிக்கால் என்பது வலை கடலுள் ஆழ்வதற்குக் கோர்க்கப்படும் சுடப்பட்ட மண் உருண்டையாகும் இரம்பிணிவலை போர்ச்சுகீசியரால் அறிமுகப் படுத்தப்பட்ட கரைவலையாகும். மண்டவா என்பது சுறா, திருக்கை ஆகியனவற்றைப் பிடிக்கைப் பயன்படுத்தும் இரும் பாலான சூலம் போன்ற கருவியாகும். ஈர்க்கை, கட்டுக்கயிறு, கீழ்த்தண்டு, கொம்பு கோல், சுத்தகடையா, சொறுதடி, தண்டு தளா, நடுமரம், பண்ணு கயிறு, பண்பா, பாதடி, பூமுடி, மேல் தண்டு, லாஈர்க்கை என்பன கட்டுமரத்தின் உதிரிப் பாகங்கசைக் குறிக்கும் சொற்களாகும். அணியம், அமரம, அமுக்கம், அல்சா, ஏரா. ஒட்டுமுளி. கசா, சாத்தாரு, சிறுதன்னை, தண்டு, தலை மரம், துடுப்பு, பங்காயம், பண்ணபக்கு, பெரியதன்னை, முனா மரம், மேல்பலகை வாறி என்பன பெரிய படகின் பாகங்களா கும். காடுகட்டுதல் என்பன கடலில் ஒரு குறிப்பிட்ட இடத் தைச் சுட்டிக்காட்டுதலாகும். கடல் அடியில் உள்ள சேறு, பாறை, மணல், மலை போன்ற இடங்களைக்கண்டறிய கடலில் இருந்து கொண்டே கரையில் உள்ள ரோமரம் கோயில், மசூதி மலை போன்ற இடங்களைக் கண்டறிய கடலில் இருந்து கொண்டு தெம்மா வெலங்காகவும், சேர்வெலங்காகவும் வாடா வெலங்காகவும், சேர் வெலங்காகவும் கஊக்கிட்டு அக்குறிப் பிட்ட இடத்தைச் சுட்டுவபு. அக்கிணிவலை, அந்தி வலை, அரைவலை; இடைவலை, இறுக்ஷாவலை, உல்லம்வலை, எரிக் கட்டுவலை, ஏந்துகச்சாவலை, ஏறுவலை, கட்டு வலை, கரை வலை, கவலை வலை, கன்னிவலை, கொடுவலை, கொண்டு

வலை, கொண்டவலை, சிங்கெராவலை, சிறுக்காவலை, சுற்று வலை, தடவலை, தூரிவலை, தொட்டிவலை, நண்டுவலை, பாச்சுவலை, பெருக்காவலை, பைண்டவலை, மணிவலை, மத வலை, மிதப்பு வலை, வெள்ளாள வலை, என்பன வலையின் வகைகளாகும். காவலாளி என்பன வலையின் வகைகளாகும். காவலாளி என்பது கோலா மீனைக்குறிக்கும் தொழிற்களக்குழூஉக்குறிச் சொல்லாகும். செம்மானம் என்பது இக்கோலா மீனின் திரட்சியில் தோன்றும் வண்ணமாகும். ஆலந்தழையும் கத்தாளையும் வேப்பந்லழையும் கோமா மீனைப்பிடிக்கப் பயன் படுத்தும் தழைகளாகும். இத்தழைகளின் பயன்பாடு தொழில் நுணுக்க உத்தியாகும்.

புதுவைப் பகுதி ஒப்பாரிப்பாடல்கள் ஓர் அறிமுகம்

மு. முருகையன்,
புதுவைப் பல்கலைக்கழகம்

நாட்டுப்புற இயல்

வாழையடி வாழையாக வாழ்ந்து வரும் நாட்டுப்புற மக்களின் வாழ்வையும் வாழ்வின் நிலைகளையும் அம் மக்களின் உள்ள உணர்வுகளையும் படம் பிடித்துக் காட்டுவது நாட்டுப் புறஇயல் ஆகும் ஏட்டிலே இல்லாது எழுத்திலே காணாது உள்ளத்தில் ஊறிக்கிடக்கும் உணர்வுகளையும் அளவற்ற எண்ணங்களையும் சாறுபிழிந்து கிராமியப் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களைப் பளிச்சிடச் செய்து இலக்கிய வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

Folk Lore எனும் ஆங்கிலச் சொல்லிற்குத் தமிழில் பண்பாட்டியல், நாட்டார் வழக்காற்றியல், வாய்மொழி இலக்கியம். கிராமப்புறஇலக்கியம், நாடோடிப் பாடல்கள் என்று பல பெயர்கள் உண்டு. இந்நாட்டுப்புற இயல் எவரால் இவ்உலகில் அறிமுகப்படுத்தப்பட்டது என அறியமுடியாது காலங்காலமாக வாய்மொழியளவிலே பரவி வந்துள்ளது நாட்டிலே ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினாலும், சமுதாய மாற்றங்களாலும் பல மறைந்து சிலமட்டும் எச்சங்களாகப் பக்தி, காதல், மங்கல வாழ்த்து, தாலாட்டு, தொழில், சமுதாயம் ஒப்பாரி எனப் பல நிலைகளின் அடிப்படையில் தோன்றி இன்று தனித்த ஒரு துறையாக தலைநிமிர்ந்து ஆய்வு ஆற்றலால் ஆராய்ச்சியாளர் பலரையும் தலைநிமிரச் செய்துள்ளது,

ஒப்பாரிப் பாடல்கள்

நாட்டுப்புறப்பாடல்களை ஆழ்ந்து நோக்கின் அவை பல அரிய உண்மைகளையும் தமிழர்தம் பண்பாட்டு பழக்க வழக்கங் களையும் பளிச்சிட செய்கின்றன. நாட்டுப்புறப் பாடல்களை ஆய்வு செய்யும் ஆராய்ச்சியாளர் பலரும் ஒப்பாரிப் பாடல்களை வரிசைபடுத்தும்போது கடைசியாகவே வைத்தே வகைப்படுத்தி கூறி உள்ளனர்.

பிறப்பிலே தொடங்கும் மனிதவாழ்க்கையானது வாழ்க்கை யின் பல படிநிலைகளைக் கடந்து இறப்பிலே முடிகின்றபோது ஆற்றமுடியாது அளவற்ற பெருந்துன்பத்தினை அளிக்கின்றது அன்பு, பாசம், நட்பு ஆகியவற்றின் பிணைப்பிலே சிக்குண்டு வாழும் மானிட வாழ்க்கையில் இழப்பும், இறப்பும் ஒன்றுக் கொன்று தொடர்பு கொண்டு ஒப்பாரியை ஏற்படுத்தி அதன் மூலமாக மனதிற்கு ஆறுதலை தேடிக் கொள்கின்றது.

ஒப்பாரியைப் பிரித்துக் கூறும் அறிஞர்கள் ஒப்ப+ஆரி என்பதை ஒப்புச்சொல்லி அழுதல் என்று பிரிக்கும் தன்மையால் இதன் சிறப்பு நமக்கு நன்கு புலனாகும். ஒப்பாரிப் பாடல்கள் பெரும்பாலும் இறப்பிலும், இறப்பை ஒட்டி நடக்கின்ற சடங்கு களின் போதும் பாடப்பட்டு வருகின்றன. நம்சமுதாயத்தில் பெண்களின் நிலை பருவம் அடையும் வரை பிறந்தகத்தையும், திருமணம் ஆனபிறகு தன் கணவன் குடும்பத்தையும் சார்ந்து வாழும் நிலையில் தள்ளப்பட்டு உள்ளதால் குடும்பப் பிணைப் பினைச் சார்ந்த அங்கத்தினர்கள் எவர் இறந்தாலும் அவர்களுக் காக அழுது தன்னுடைய ஆற்றாமையை வெளிப்படுத்தவேண்டி உள்ளது. இந்நிலை தொன்மைக்கால மக்களிடம் இருந்தற்கான சான்றுகள் நமக்கு கிடைத்தில ஆயினும் குடும்பம் ஏற்பட்டுத் தனிவுடமைச் சமுதாயம் மேற்கொள்ளப்பட்ட பின்பே இறப்புக் சென்று நடக்கின்ற சடங்குகளும், அப்பொழுது பாடுகின்ற ஒப்பாரியும் தோன்றி இருக்க வேண்டும்.

இவ்வகையான ஒப்பாரிப் பாடல்களை உற்று நோக்கின், இறந்தவர்களின் குடும்ப அங்கத்தினர்களின் சோகத்திலே பங்

கெடுத்துக் கொள்ளும் மற்ற பெண்கள் தங்களுடைய அழுகையின்போது சொந்த வாழ்விலே ஏற்பட்ட இழப்புக்களையும் வாழ்க்கைப் பின்னணிகளின் சோகங்களையும் பாடலாக்கிச் சோகத்தோடு ராகத்தைச் சேர்த்து ஆற்றாமையை வெளிக் கொட்டுகின்றனர்.

இப்பாடல்கள் இறந்தவர்களின் உறவுமுறைக் கேற்ற வகையிலே பாடப்படுபவர்களின் நோக்கத்திற்கேற்ப மாறுபடுகின்றன பெண்களின் தந்தையோ தாயோ அல்லது அண்ணன் தம்பியோ அக்காள், தங்கையோ என தங்களுடன் பிறந்தவர்கள் இறப்பின், பொருள் தன்மையும் மற்ற உறவினர்கள் இறப்பின் இதன் பொருள் தன்மை ஒருவகையாகவும் உள்ளது.

தாய்க்குப் பாடப்படும் பாடல்கள்

தன்னை பெற்று வளர்த்து, சீராட்டி பாலூட்டி வளர்த்த தாய் இறந்தவுடன் அத்துன்பத்தினைத்தாங்கிக் கொள்ள முடியாதவளாய் பெண் ஒருவள் பின்வரும் பாடலில்

அங்கு மாசில்லா பெண்குலமோ
என்ன பெத்தஅம்மா
நாங்க மாசு இல்லா பாத்திரமோ
நீங்க மாசகளஞ்சிங்களோ
என்ன பெத்த அம்மா
என்னை மறக்க துணிஞ்சிங்களோ
ஐய வண்டிவச்ச பச்சகுத்தி
என்ன பெத்த அமம்
நீங்க வாரணம் கொண்டு மைதடவி
எனக்கு வச்ச இடம் அம்மாவ நான்
வைகுந்தம் அனுப்பிவிட்டு
என்ன பெத்த அம்மா
நான் வயிரெரிஞ்சி நிற்கிறனே

தன்னை வளர்த்த பாசத்தாயை பிரிந்த துயரத்தில் தன்னை வளர்த்த முறைகளை கூறு அழுவதைக் காணமுடிகின்றது.

தந்தைக்கும் கணவனுக்கும் பாடப்படும் பாடல்கள்

தமிழ்ச் சமுதாயத்தைப் பொருத்தமட்டில் தாய் பிள்ளைகளைப் பேணிபாதுகாத்து வளர்ப்பினும் அக்குழந்தைகள் வளர்வதற்கும், அவர்களுக்கு திருமணம் செய்து சீர், சிறப்போடு வாழ்க்கையை அமைத்துத் தருவதற்கும் தந்தையே முக்கிய காரணமாக இருக்கிறான். எனவே தந்தையின் இழப்பு என்பதும் திருமணமான பின்பு தன்னுடன் இல்லறம் செய்து அன்பு காட்ட வாழும் கணவன் இழப்பு என்பதும் ஆற்ற முடியாத ஒன்று ஆகும், கணவனை இழந்த பெண்களின் நிலையை

'கணவனை இழந்தோர்க்கு காட்டுவது இல்' எனும் சிலப்பதிகார வரியின் மூலம் நாம் அறியமுடிகின்றது. எனவே தன் தந்தை இறப்பின் போதும், கணவன் இறப்பின் போதும் பாடப்படும் ஒப்பாரிப்பாடல்கள் பல வகைகளில் ஒன்றாகவே காணப்படுகின்றன. ஆனால் சிலபாடல்கள் கணவனுககாகப் பாடப்படும் போது தன்னை அமங்கலியாக விட்டுவிட்டுச் செல்லும் கணவனை திட்டுவதும், தனக்கு திருமணம் முடித்து வைத்த உறவினர்களைத் திட்டுவதும் சடங்கு முறைகள் பிழையாகு நடந்துவிட்டதாலேதான் தனக்கு இவ்வாறு ஏற்பட்டு என்பதும் சில ஒப்பாரிப் பாடல்கள் வாயிலாக நாம் அறியமுடிகின்றன.

கல்லிச் சுவரெனவே - நான்
கரையாதுன நின்னிருந்தேன்
காத்தும் மழையும் வந்து
கரைந்தோடிப் போச்சுதையோ
என்னை பெத்தர்ராசா

என கணவனுக்கும், இதே பாடலை தந்தைக்கு பாடுவதும் வழக்கில் உள்ளன.

ஒப்பாரிப்பாடலில் நம்பிக்கைகள்

ஒப்பாரிப்பாடல்களை ஆராய்ந்து பார்ப்பின் அவற்றிலே பாமரமக்களிடம் இன்றும் வழக்கத்தில் உள்ள கணவன் நம்பிக் கையும், இறப்பிற்கு எமன் காரணம் என்று நம்புகின்ற தன்மை யும் சில பாடல்களால் நாம் அறிய முடிகின்றது. உதாரணமாக

தெற்கே கனவுகண்டேன்
தென்னை மரம் சாயக்கண்டேன்
வடக்கே கனவுகண்டேன்
வாழைமரம் சாயக் கண்டேன் - என்ற வரிகள்

கணவன் நம்பிக்கையை வெளிக்காடடுகின்றன சில பாடல்களில்

உன்னை கண்டுப் பிடிச்சானாம்
பொல்லாத எமனும்-என் ஐயாவுக்கு
கைவிலங்கு போட்டானாம்' எனும்

இப்பாடல் வரிகள் இறப்பிற்கு எமன் காரணம் என்று நம்பு வதையும்,

முழு நிலாக்காயக்குல என்னை பெத்த அம்மா
எனக்கு முகூர்த்தகால் நட்டிங்களா?
எனக்கு முகூத்தக்கால் ஆகலியோ?

எனும் பாடல் சரியில்லாத சடங்குகள் தன் அரை குறை வாழ்க் கைக்கு காரணம் என்பதை மக்கள் நம்புவதாக நமக்கு சுட்டிக் காட்டுகின்றன.

முடிவுகள்

'இவ்வாறு இறப்பை ஒட்டிப் பாடப்படுகின்ற ஒப்பாரி பாடல்களில், குடும்ப பாச உணர்வுகளும் பெண்களுககு சமு தாயத்தில் உள்ள அந்தஸ்தும், கணவனை இழந்த பெண்களுக்கு ஏற்படுகின்ற சிக்கல்கள், கொடுமைகள் எனப்பலவற்றையும்

இவ் ஒப்பாரிபாடல்கள் உணர்த்துவதால் இப்பாடல்களைக் கொண்டே நம் தமிழ்ச்சமுதாயத்தில் பெண்களின் நிலையை எடைபோட முடியும்.

2. ஒப்பாரிப் பாடல்கள் தொழில் நிலையிலே மட்டும் ஆண்கள் பாடுவதும் மற்ற நிலைகளிலே அதிகமாக பெண் களுக்கு மட்டுமே இவை உடமையாக்கப்பட்டதன் காரணமும் என்ன என்று சிந்திக்கும் பொழுது. உளவியல் நோக்கில் ஆண் பெண் இருவருக்கும் ஒரே நிலையான மன இயல்புகள் இருந்தும் ஆற்றாமையால் வரும் ஒப்பாரி பெண்களிடம் மட்டும் ஏன் தோன்றியது. எனின் பண்பாடு, சூழ்நிலை, குடும்ப அந்தஸ்து, போன்றவையும் நம்முன்னோர்கள் ஏற்படுத்திச் சென்ற கற்பு கோட்பாட்டு முறையும்,பெண்களை இழிவாகக் கருதச்செய் யும் சில சடங்கு முறைகளும் என இவற்றால் நசுக்கப்பட்டு வாழும் பெண்கள் தங்கள் உள்ளக் குமுறல்களை இறப்பு நிகழ்கின்ற இடத்திலே சுதந்திரமாக ஒப்பாரியால் வெளிக் காட்டுகின்றனர்,

எனவே ஒப்பாரி பாடல்கள் என்பது பெண்களின் ஒடுக்கி, அடக்கி வைக்கப்பட்ட சமூகக் கொடுமைகளின் வெளிப்பாடு பாசம், அன்பு உறவு என்ற வாயில்களின் வழியாக இறப்பு நிகழ்விலே வெளிப்படுகின்றது என்று கூற வாய்ப்புள்ளது.

திருமூலரும் சத்திய சாயிபாபாவும்

சி. மெய்கண்டான்
திருச்சி

திருமூலர், 'ஐய மாக்கடல் ஆழ்ந்த உயிர்க்கெலாம்/கையில் ஆமலகம் என' ஆண்டவனைக் கண்டு காட்டியவர். இவர் இயற்றிய திருமந்திரம் 2000 ஆண்டுப் பழமை யுடையது என்பர் திருமந்திரத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த டாக்டர் பி.நடராசன் அவர்கள். இது தமிழ்ச் சாத்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் திகழும் பெருமை பெற்றது. இது ஆக மங்களின் பொருளை வகுத்துரைப்பது. ஆகமங்கள் வேதங்கள் போன்ற பழமை யுடையன.

இன்று நம்மிடையே (புட்டபர்த்தியில்) வாழும் சத்திய சாயி பாபா அவர்களும் இறையுண்மை குறித்த கருத்துக்களை, 'ஐயமெல்லாம் போக்கி அங்கை நெல்லி' எனக் காட்டுபவர் ஆவார். பாபா ஏறத்தாழ ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆங்கில நூல்களில் தம் கருத்துக்களைக் கூறிச்செல்கின்றார். இவ் விரு வர்தம் கருத்துக்களையும் ஒப்பிட்டுக் காண்பதே இக்கட்டுரை யின் நோக்க மாகும்.

1. திருமூலர், 'நந்தி மதிபுனை அரனடி நாள்தொறும்/ சிந்தைசெய்து ஆகமம் செப்பலுற்றேனே' என்கின்றார்.

பாபாவும் இந்த உலகில் தாம் அவதரித்தது, 'வேதம் உரைக்கும் அறத்தை நிலைநிறுத்தவே' என்கின்றார். வேதம் கூறும் அறந்தான் என்ன? பாபாவின் கருத்துப்படி 4 வேதங்கள் 4 வினாக்களுக்கு விடையிறுப்பதாக அமைந்துள்ளன. அவை:

1. நான் யார்? 2. நான் எங்கிருந்து வந்தேன்? 3. நான் எங்கே போகப் போகின்றேன்? 4. நான் எவ்வளவு காலம் இங்கே இருக்கப் போகின்றேன்?-என்பனவே.

திருமூலரும் ஆகமத்தை அடிப்படையாகக் கொண்டு தம் நூலை வகுத்தாலும், 'வேதச் சிறப்பு' என்ற தலைப்பில்

'வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்
ஓதத்தகும் அறம்எல்லாம்உள; தர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே' (51)

என வேதத்தின் சிறப்பைத் தம் நூலுள் முதன்மையாகச் சுட்டுவர்.

இதுவன்றியும் வேதம், ஆகமம் இரண்டும் பேத மற்றது என்பதனை,

'வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க்(கு) அபேதமே.' (2397)

என்பர்.

'வேதமும் ஆகமமும் மெய்ப்பொருள் நூல்கள். இவை இறைவனால் அருளப்பெற்றன. வேதம் பொது; ஆகமம் சிறப்பு. இவ் விரண்டும் வெவ்வேறானவை என்பர்; ஆனால், பெரியோர் ஒன்றே என்பர்' என்கின்றார். இதிலிருந்து திருமூலர் தம் புதுமை நோக்கும், பொதுமை நோக்கும், தனி நோக்கும் நன்கு புலனாகின்றது.

2. 'நான் யார்?' என்பதற்கு வேதம் 'you are the child of Immortality' என்று கூறுகின்றது. அதாவது, 'நீ பிறப்பு இறப் பைக்கடந்தவன்|பரம்பொருள்' என்பதாம். இதனையே

'தத்துவமசி' என்று மகாவாக்யம் வேதத்துள் கூறுகின்றது. தத்-அது; த்வம்-நீ; அசி-இருக்கிறாய்.

பாபா, 'What is the basic teaching of the Vedas? It is that to which even economic or social or intellectual group you belong, you are a child of Immortality, Amrthasya Putra! ie,, Devine' என்பர்.

திருமூலரும், 'தத்வமசி' என்பது பற்றி எட்டாந் தந்திரத்தில் 'முப்பதம்' என்ற தலைப்பிலும், 'முச்சூனிய தொந்தத் தசி' என்ற தலைப்பிலும் பரக்கப் பேசுவர்.

பாபாவும் அடிக்கடி 'I am God and you are also God, I know it, but you don't.'- என்பர். இது 'தத்வமசி' அல்லது 'தொந்தத்தசி' (தொம் தத் அசி) என்ற மகா வாக்கியத்தின் அடியொற்றி எழுந்ததுதான்.

பாபாவின் இக் கூற்றுப் போன்றே திருமூலரும் அன்றே
'சீவனெனச் சிவனென்ன வேறில்லை
சீவனார் சிவனாரை யறிகிலர்
சீவனார் சிவனாரை யறிந்தபின்
சீவனார் சிவனாயிட் டிருப்பரே' (2017)

என்று கூறியுள்ளார். இது அத்வைத நெறி.

3 திருமூலரோ, 'பதி பசு பாசம் அனாதி' என முப்பொருள் உண்மையைப் பேசுவர். எனினும், வேதாந்தப் பொருள்படவும் பல இடங்களில் உரைப்பர். இதன் காரணம், வேதாந்தம், சித்தாந்தம் என்பன வேறு வேறாக இருப்பினும் அவற்றுள் ஓர் ஒருமைப்பாட்டினை (வேற்றுமையுள் ஒற்றுமை) காண்பதுதான்.

மேலும், 'சமயங்கள் எல்லாம் ஒரு பொருளையே உணர்த்துகின்றன, வழிதான் வேறு வேறு என்பதனை,

'ஒன்றது பேரூர் வழிஆறு அதற்குள
என்றது போல் இருமுச் சமயமும்

நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்றுகுரைத்தெழு நாயைஒத் தார்களே' (1558)

என்றுரைப்பர்.

இக்கருத்தையே பாபாவும், 'There is essentially only one religion and that is the religion of love. This love flows as a stream through all the religions and this is the essence of all religions. Without recognising the essential stream of love that is contained in all the religions and by paying attention to only the external form and ritual, people have been quarreling with each other about the status of each religion'-என்கின்றார்.

மேலும், 'The six schools of Indian metaphysics (The Sad darsanas) have been offered to us by the great seckers of the past. Little attention is being paid to day to these sacred teachings. Although the spiritual paths indicated by these different Darsanas appear to be different, there goal is common and the ultimate truth proclaimed by them is one and the same'-என்பர்.

4 பிறகளிலேயே மானிடப் பிறவிதான் சிறந்தது. இதன் பயன் பிறப்பறுத்தலே. ஆண்டவனை அடைதலே. இதனைத் திருமூலர். 'பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்/பெறுதற் கரிய பிரானடி பேணார்' (2090) என்றும்,'இக்காயம் நீங்கி இனியொரு காயத்திற்/புக்குப் பிறவாமற் போம்வழி நாடுமின்' என்றும் கூறுவர்.

பாபாவும். 'A person is born, to learn hou not to be born again' என்பர் மேலும். 'Resolve that the Purpose of human birth is to reach the Lord thrpough worshi' -என்பர்

இதற்கான முயற்சியை இளமையிலிருந்தே கடைப்பிடிக்க வேண்டு மென்பதனை, 'Start early; Drive slowly; reach safely This is the way to God'—என்பர் பாபா.

திருமூலரும், 'ஆர்வ மனமும் அளவில் இளமையும்|ஈரமும் நல்லவென்று இன்புறு காலத்து| ...மாதவன் இன்பம் மறந் தொழிந் தார்களே' (2091) என்று 'அளவில் இளமை'க் காலத்தை வீணாக்குவது குறித்துக் கழிவிரக்கப்படுவர்.

5 'மகேசுர பூசை' எது என்பதனைப் 'படமாடக் கோயில்··· (1857). எனத் தொடங்கும் மந்திரத்தில் நன்கு விளக்குவர் திருமூலர்.

பாபாவும், 'The service of man is more voluabbe that what you call 'service to God; God has no need of your service Pleaseman; you please God,' என்கின்றார்.

மேலும், 'The hands that serve are holier than the lips that pray'—என்பர்.

6. உலகிலே பலரும் தவறுகள் (கூடா வொழுக்கம்) செய் வதற்கான காரணம் கூறும்பொழுது

'கண்காணி இல்லென்று கள்ளம்பல செய்வார்
கண்காணி இல்லா இடமில்லை காணுங்கால்
கண்காணி யாகக் கலந்து நின்றானைக்
கண்காணி கண்டார் கள்ளம் ஒழிந்தாரே' (2067)

என்பர் திருமூலர்.

பாபாவும் இதனையே. 'Brahman is present in your own heart and is functioning as a witnessing consciousness allthrough. Toimagine and to deceive ourselves into thinkinh that there is no one seeing us do a bad thing is not correct. Whether anyone sees it or not, the spect of Brahman which has been descrided as one which has thousands of heads and thouwands of eyes is alsays watnching you and good and the bad that you do'—என மொழிவர்.

7. இது போன்ற உண்மைகளையெல்லாம் 'யாருக்கு அறி விக்க வந்தார் என்பதனைத் திருமூலர்,

'அறிவிக்க வேண்டாம் அறிவற் றயர்வோர்க்கும்
அறிவிக்க வேண்டாம் அறிவிற் செறிவோர்க்கும்
அறிவுற்று அறியாமை எய்திநிற் போர்க்கே
அறிவிக்கத் தம்மறி வாரறி வோரே' *(2327)* [1]

என்பர்.

பாபபவும் இதனையே, 'There is no trouble if you are fully knowlged. There is also no trouble if you are complely ignorant, but there is a great troulde if you aerneither know ledgeable not ignorant and yon are in a state of great confusion resulting in your taking always the wrong meanings. In the sacred task which we have committed ourselves......I hope, you will be able to understand'—என மொழிவர்.

இன்னும், 'மனம், உடலின்பயன், உலகத் தோற்றம், தன்னை அறிதல், அஞ்சும் அடக்கல், திருநீறு, குரு, வாய்மை, அறம், அன்பு, இன்னா செய்யாமை, நடுவு நிலைமை'-போன்ற பலவற்றைப் பற்றிய இருவர்தம் கருத்துக்களும் ஒரே தன்மை யன வாகவே உள்ளன.

பிள்ளையார்பட்டி பற்றிய செய்திகள்

மெ. மெய்யப்பன்
தியாகராசர் கல்லூரி, மதுரை.

முன்னுரை

பிள்ளையார்பட்டிப் பிள்ளையாரின் வரலாற்றை முடிந்த வரை ஆய்வுசெய்ய எண்ணியதன் விளைவே இச்சிறு கட்டுரை.

குடைவரைக்கோயில் பற்றிய செய்திகள்

63 நாயன்மார்களுள் ஒருவரான சிறுத்தொண்டர் என்ற சிறப்புப்பெயர் பெற்ற பரஞ்சோதியர், இறைவழிபாட்டின் ஈடுபாடு கொண்ட நரசிம்மவர்ம பல்லவ மன்னரிடம் சேனைத் தலைவராக இருந்தார். கி.பி.642 இல் இவர் இரண்டாம் புலிகேசி என்னும் சாளுக்கிய மன்னனை வாதாபி என்னுமிடத்தில் எதிர்த்து அவனைப் புறங்காட்டச்செய்து ஆங்குள்ள பல வளங்களைக் கொண்டுவரும்-போது, வாதாபிக்கோட்டை விநாயகரையும் பெயர்த்தெடுத்து வந்துத் தன் சொந்த ஊரான திருச்செங்காட்டங்குடியில் உள்ள கணபதீச்சரத்தில் பிரதிட்டை செய்வித்தார். பரஞ்சோதியாரின் புகழ் அறிந்த பல்லவ மன்னன் அவர்க்கு நிதியும் நிலமும் அளித்தான். ‘செம்மை நெறித் திருத்தொண்டு செய்யும்’ படி அவருக்கு அரசுப்பணியிலிருந்து ஓய்வும் கொடுத்தான். இது கணபதிச்சரம் தோன்ற ஏதுவாயிற்று. சம்பந்தப்பெருமானின் இரண்டு பதிகங்களும், அப்பர் பெருமானின் ஒருபதிகமும் இத்தலத்திற்குரியன.

கயமுகாசுரனைக் கொன்ற பழி விலகச் சிவபிரானை விநாயகப் பெருமான் பூசித்தான் என்ற புராணக்கதை இத்

தலத்துக்குரியது (கந்தபுராணம்) (திருவிளையாடற் புராணத்துள்ளும் விநாயகர் சிவனைப் பூசித்த வரலாறு உண்டு).

வாதாபி வெற்றியைக் கண்ட பல்லவ மன்னன் மனத்தில் பிள்ளையார் பற்றிய எண்ணம் உருவாகியிருத்தல் வேண்டும். வாதாபியிலிருந்து கொண்டுவந்த விநாயகரைத் திரும்பச் சாளுக்கியர் எடுத்துச்செல்ல முற்பட்டால் என்ன செய்வது என்ற எண்ணத்தில் விநாயகரைப் பாறையில் செதுக்க முடிவுசெய்திருக்கலாம். அதன் விளைவாகவே பிள்ளையார்பட்டியில் பிள்ளையார் தோன்றியிருக்கலாம் என்று சா. கணேசன் போன்றோர் குறிப்பிடுகின்றனர். மற்றும் தொ.மு. பாஸ்கரத்தொண்டைமான் என்னும் அறிஞர், பிள்ளையார் பட்டியே பழைய திருச்செங்காட்டங்குடி என்பர். இத்தவறான கருத்தை நாம் மனதில் கொள்ளவேண்டுவதில்லை.

இஃது இவ்வாறிருக்கத் தற்பொழுது தொல்பொருள் ஆய்வாளர்களான டாக்டர் K. நாகசாமி, N.S, இராமசாமி ஆகியோர் இப்பிள்ளையார்பட்டிக் குடைவரைக்கோயில் பாண்டியர்கலைப்படைப்பே என்று தாம் எழுதிய 'Ramanathapuram District' என்ற ஆங்கில நூலில் குறிப்பிடுகின்றனர்.

அவர்கள் கூறும் காரணங்கள்

1. குடைவரைக்கோயில் தரையமைப்பு பல்லவர்களது குகைக்கோயில்களின் தரையமைப்போடு ஒத்திருக்கவில்லை.
2. பக்கச்சிலை பல்லவ மன்னன் சிலை இல்லை. அது சங்கர நாராயணர் சிலை.
3. இரண்டு கை.
4. குகையின் உள்ளே அதே பாறையில் சிவன் உருவைச் செதுக்கியிருத்தல்.

மேற்கண்ட இவர்கள் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கது, பக்கச்சிலை பல்லவ மன்னன் சிலை இல்லை என்பதும் அது தெய்வச்சிலை என்பதும் அதன் அருகில் கருடன் சிலையும் வடபக்கம் சண்டிகேசுவரர் சிலையும் உள்ளன என்பதும்

குகைக்கோவிலுள் சென்று உற்றுப்பார்ப்போர்க்கு நனி விளங்கும்.

நரசிம்மவர்மன் காலம் 630-668. கி.பி. 6,7இல் திருச்சிக்குத் தெற்கே பல்லவர்கள் கல்வெட்டுக்கள் இல்லை. பாண்டியர் கல்வெட்டுக்களே காணப்படுகின்றன. முகமண்டபம் கற்றளியைத் தாண்டிக் காணப்படுகிறது (பல்லவர் பணியாக இருப்பின் இது குடைவரை அமைப்பிலேயே இருக்கும்). மாறவர்மன் அவனி சூளாமணி (கி பி.600-625) உத்திரவிடப் பெருந்தாசன் என்பான் கட்டுவித்தான். இக்கோயிலில் காணப்பெறும் கல்வெட்டுக்களே. 'காலிங்கராயன்' என்று ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது. இது பாண்டியர்கள் கொடுக்கும் பட்டமாகும் எனவே இது பாண்டியர்காலப் படைப்பே என்று கொள்ளுவோம்.

நகரத்தார் வருகை

சிந்நயச்செட்டியார் எழுதிய நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு என்ற நூல்மூலம் நகரத்தார் கி. பி 707-இல் இளையாற்றங்குடி வந்து கி.பி.714-இல் முன்னமே இருந்த சிவன் கோயிலை விரிவுசெய்து வழிபட்டனர் என்றும், 13-ஆம் நூற்றாண்டில் மருதங்குடி என்னும் பிள்ளையார்பட்டிக் கிராமத்தை விலைக்கு வாங்கி ராசநாரயணபுரம் என்று மாற்றிவைத்தனர் என்றும் அறிகிறோம். பிள்ளையார்பட்டிக்கோயில் முதலில் சிவ வழிபாட்டிற்கே முதலிடம் கொடுத்துப் பின்னர்தான் பிள்ளையாருக்குப் பெருமை சேர்த்திருக்க வேண்டும். இது தோன்றிய காலத்தில் இது சிவன்கோயில் என்பது, இங்குள்ள எல்லைக்கல்லில், தண்ணீர் வரும் வாய்க்காலருகில் திரிசூலம் பொறிக்கப்பட்டுள்ளமையால் விளங்கும் (திருமால் இருக்குமிடமாயின் ஆழிக்குறியிருக்கும்). நகரத்தார் பெருமக்கள் இயல்பாகவே சைவவழிபாட்டினர். எனவே இங்கு வந்து குடியேறினர் எனலாம்.

'இருநிதியம் சேர்க்கின்ற ஏழ் நகரத்தார்' என்பதால் (திருமுக விலாசம் - பாடுவார் முத்தப்ப செட்டியார்)7 நகரக் கோயில்கள் இப்பகுதியில் உருவாயின, அவை:

1) இளையாற்றங்குடி
2) மாத்தூர்
3) வைரவன்பட்டி
4) நேமம்
5) இலுப்பைக்குடி
6) சூரைக்குடி
7) வேலங்குடி

முதலியன. இதில் இளையாற்றங்குடிப் பிரிவில் இருந்து மேலும் 2 கிளைகள் தோன்றி இரணியூர் என்றும், பிள்ளையார்பட்டி என்றும் உருவாயின.

விநாயகர் விளக்கம்

கி.பி.6-ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே தமிழ்நாட்டில் விநாயக வணக்கம் இருந்திருக்கவேண்டும் கணபதி சிற்பம் முதன்முதலில் கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் முழு உருவம் என்று கலைக்களஞ்சியம் கூறுகிறது (பக்.126,127). மேலும் கணபதியைப் பற்றிய பேச்சு வேதத்திலும், சங்க நூல்களிலும் இல்லை என்று கூறுகிறது.

கணபதியைப் பற்றிய நூல்களாகக் கணபதி உபநிடதம் ஹேரம்ப உபநிடதம். கணேசபுராணம். கணேசகீதை, கணேச தந்திரம், கணேசகல்பம். கணேசசாரசந்திரிகை இன்னும் பல காணப்படுகின்றன. திருமூலரின் ‘ஐந்துகரத்தனை’ என்று தொடங்கும் பாடல் கணபதி பற்றியதே. இவர் கி.பி. 5- ஆம் நூற்றாண்டினர் என்பது பலரும் கொண்ட முடிவு. சிலர் இவர் பிற்காலத்தவர் என்பர். இவருடைய பாடல்களில் கோயில் பணியில் செங்கல் சாந்து மண் பற்றிய செய்திகள் காணப் படுகின்றன. குகை பற்றிய செய்தி இல்லை. மற்றும், அப்பர் பெருமான் இத்திருமந்திரத்தைப் படித்தவர் என்பது,

தன்னிற்றன்னை யறியுந் தலைமகன்
தன்னிற்றன்னை யறியிற்றலைப் படும்

நன்னிற்றன்னை யறிவிலனாயிடில்
தன்னீற்றன்னையுஞ் சார்தற்கரியேன்

என்ற அப்பரது பாடல்,

தன்னிற்றன்னை யறியுந் தலைமகன்
தன்னிற்றன்னை யறியத் தலைப்படும்
தன்னிற்றன்னை சார்கில னாயிடில்
தன்னிற் றன்னையும் சார்தற்கரியவே

என்ற திருமந்திரப்பாடலை ஒத்திருப்பதால் அறியலாம். எனவே நமக்கு இதுவரை கிடைக்கிற சான்றுகளின் மூலம் கி.பி. 5 முதல் தமிழ் நாட்டில் விநாயக வணக்கம் தோன்றியிருக்கலாம். அக் காலத்தில் வாழ்ந்த பாண்டிய மன்னன் பிள்ளையார் வழி பாடு செய்யும் வழக்கத்திற்கு அடிகோலிப் பிள்ளையார்பட்டி யில் இப்பணியைச் செய்திருக்கலாம்.

தலப்பெயர்

இன்று பிள்ளையார்பட்டி என்பது உலகறிந்த பெயராயி னும் இதற்கு முன்பு பல பெயர்கள் இருந்திருக்கின்றன. அவை 1) ஈக்காட்டூர். 2) திருவீங்கைக்குடி. 3) மருதங்குடி. 4) திருவீங்கைச்சரம். 5) இராசநாராயணபுரம் என்பன.

இஃது ஊர்ப்பெயர்கள் மாற்றம் அடைவதனை உணர்த்து கிறது.

பொதுவாகத் தலங்கள் ஊர், ஈச்சரம், துறை, குடி, காடு, பள்ளி, கோயில். புரம், கா, 'வீரட்டம். வாயில், ஆறு, தளி குன்றம். மலை, பாடி, மங்கை, களம், காரோணம், முடி, துருத்தி. பாக்கம், நகர், மாகாளம், மயானம், தானம், நெறி கரை, கடல், பதம், ச்சேரி, காவதம் என்றும், பிறவாறும் இறுதியில் முடிநிறுபெயர்பெறும். இதன்படி பிள்ளையார்பட்டி மூவரால் பாடப்பெற்ற தலமாகக் கருதப்படாவிட்டாலும், அவர்கள் காலத்தில் உருவாகியதால் ஊர் என்ற முடிவின்படி

ஈக்காட்டூர் எனவும், குடின்ற முடிவின்படி மருதங்குடி என்றும், திருவீங்கைக்குடி என்றும், ஈச்சுரம் என்ற முடிவின்படி திருஈங்கைச்சுரம் என்றும் கூறப்படுகிறது. எனவே இதுவும் கி பி 6-இல் இக்கோயில் தோன்றியிருக்கவேண்டும் என்பதனை உணர்த்தும். பட்டி என்பது பிற்கால வழக்கு.

பிள்ளையார் உருவம்

யானைமுக உருவம் (6/287/7), மற்றும் கைவேழம் (6/266 (53)/4) என்று கூறுவதால் கணபதி மனிதக்கைகளையுடைய யானை உருவம் என்றும் தெரிகிறது. யானைமுக உருவக் கற்பனை புராணங்களிலிருந்து வந்திருக்க வேண்டும். இது,

> கைவேழமுகத் தவனைப் படைத்தார் போலும்
> கயாசுரனை யவனாற் கொல்வித்தார் போலும்

என்ற அப்பர்பெருமானின் திருவாக்கால் அறியப்படுகிறது.

இங்குள்ள பெருமானின் சிறப்புக்கள்

1. துதிக்கை வலம் சுழித்ததாக அமைந்திருப்பது.
2. நான்கு கைகள் இல்லாது இரண்டே கைகளிருப்பது.
3. அங்குச பாசங்கள் இல்லாமல் விளங்குவது.
4. வயிறு ஆசனத்தில் படியாமல் கால்கள் மடிந்திருக்க அமர்ந்தருள்வது.
5. இடக்கரத்தை இடையில் வைத்திருப்பது.
6. வலக்கரத்தில் வைத்திருப்பது மோதகம் என்கிறர்கள். டாக்டர் தமிழண்ணல் அது மலர் என்கிறார். நான்கூர்ந்து பார்க்கும்போது அதனுள் ஒரு சிவலிங்கம் இருப்பது போல் உள்ளது.

புதுக் கவிதையில் 'தாலாட்டு'

இரா, மோகன்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

தாலாட்டு

'தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசுதான் தாலாட்டு என்பர் தமிழண்ணல். இத் தாலாட்டு இன்றைய புதுக்கவிதைகளில் இடம்பெற்றிருக்கும் பாங்கினை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குழந்தை - அன்றும் இன்றும்

அன்று குழந்தை என்பது கொள்ளை இன்பம்; இன்று குழந்தை என்பது பெருந்தொல்லை. அன்று குழந்தை வளர்ப்பு என்பது அருங்கலை; இன்று குழந்தை வளர்ப்பு என்பது பெரும் பிரச்சினை. கவிஞர் அப்துல் ரகுமான் கூறுவது போல் 'பிள்ளை வேண்டும் என்று அரசைச் சுற்றி வந்தது அந்தக் காலம்; பிள்ளை வேண்டாம் என்று அரசு சுற்றி வருவது இந்தக் காலம்? காலத்தின் தாக்கம் கவிதையில் பதிவது தவிர்க்க இயலாதது; தடுக்கவும் முடியாதது. ஆரடித்தார். ஏனழுதாய், அடித்தாரைச் சொல்லியழு' என்று கேள்விக்கு 'ஆரும் அடிக்க வில்லை, ஐவிரலும் தீண்டவில்லை, அவனா அழுகின்றான் ஆத்தாள் மடி தேடி, தானா அழுகின்றான் தம்பி துணை வேணுமென்று' என் மறுமொழி தந்தது முன்னைய தாலாட்டு. இன்றைய புதுக்கவிதைத் தாலாட்டோ குழந்தை அழுவதற்கும் சிரிப்பதற்கும் காலத்திற்கு ஏற்ற புதிய காரணங்களைக் கூறு கின்றது.

'யாரும் அடிக்காமல்
நீ ஏன் அழுகின்றாய்?

நீ பிறக்காமலிருக்க
நான் முயன்றேன்
என்ற கடுப்பாலோ ?
காரணமில்லாமல்
நீ ஏன் சிரிக்கின்றாய் ?
எனை ஏமாற்றி
நீ பிறந்து விட்டாய்
என்ற களிப்பாலோ ?'

என்பது கவிஞர் ஷண்முக சுப்பையா 'குழந்தை' என்னும் தலைப்பில் பாடியுள்ள ஒரு கவிதையாகும்.

இது வித்தியாசமான தாலாட்டு

தாலாட்டு என்ற சொற்றொடர் 'தால் + ஆட்டு' எனப் பிரியும். 'தால்' என்றால் நாக்கு. குழந்தையின் அழுகை ஒலியை அடக்கத் தாய் தன் இதழ்களைக் குவித்து, நாவினை ஆட்டிக் குரவையிடுகிறாளே அதற்குத் தாலாட்டுதல் என்று பெயர். அதைத் தொடர்ந்து இசைக்கும் பாடலைத் தாலாட்டு என அழைப்பர் இங்ஙனம் முன்னைய மரபில் குழந்தையைத் தூங்கச் செய்வதற்காகத் தாய் பாடுவதே தாலாட்டு. ஆயின் இன்றைய புதுக்கவிஞர்கள் குழந்தயின் விழிப்புணர்வைப் பாடுபொருளாகக் கொண்டு தாலாட்டினைப் பாடியுள்ளனர். வைரமுத்து படைக்கும் தாய் ஒருத்தி தன் மகனுக்கு வழக்கமான தாலாட்டைப் பாடாமல் - வித்தியாசமான ஒரு தாலாட்டைப் பாடுகிறாள்; 'மொழியின் ஆடம்பரங்கள்' கைது செய்து வைத்த கனாக்கள், நிர்ப்பந்த உறக்கத்திற்கு இட்டுச் செல்லும் ஏற்பாடுகள்' எனப் பழைய தாலாட்டுப் பாடல்களைக் குறை கூறுகிறாள்.

'என் தாலாட்டு
இசை என்னும்
தூக்கு மாத்திரை இல்லாதது.
இது
உறக்கத்தையல்ல
உன்
விழிப்பையே பாடுபொருளாய்க் கொண்டது'

என அவள் தன் புதிய தாலாட்டினை அறிமுகம் செய்கிறாள்; சம்பிரதாயச் சடங்குகளைப் பற்றிக் கவலைப்படாமல் சுதந்திர மாகச் செயல்படு, பெயரை நிலைநாட்டு, போதும் என்ற மனத்தைப்பெறு, கடுமையாக உழை. தெருவுக்கு வந்து வாழ்க் கையை வாசிக்கக் கற்றுக் கொள், துன்பத்திற்குத் துன்பம் தா, எப்போதும் விழிப்பாய் இரு, சமூக உணர்வோடு நட, மானுட நேயம் போற்று என்று ஆளும்வளர்ந்து அறிவும் வளர அறிவுரை கூறுகிறாள்.

இன்றைய புதுக்கவிதைகளில் பிறிதொரு வித்தியாசமான போக்கும் காணப்படுகின்றது. கவிஞர் இரா. வேலுச்சாமியின் கவிதையில் வரும் ஒரு சிறுவன் ‘அன்புள்ள அம்மா’ எனத் தன் அம்மாவை, ‘வரப்போகும் தம்பி பயலுக்குத்தாலாட்டு மட்டும் இனிமேல் பாடிவிடாதே!, என்று வேண்டுகிறான்.

‘உன் தாலாட்டில்
இன்னும் நானே
விழித்து எழுந்திருக்கவில்லை...
அவனாவது
உறங்கி விடாமல்
உலகைப் பார்க்கட்டும்’

என்பது அவன் தன் தாயிடம் கூறும் காரணம்.

கவிஞர் சூரியகாந்தன் ‘அம்மாவுக்கு ஒரு தாலாட்டு’ என்னும் தலைப்பில் பாடியுள்ள கவிதையும் இங்கே நினைவு கூரத் தக்கதாகும்.

ஒரு தூங்காத தாலாட்டு

குழந்தையின் அருமை, தாய் மாமனின் பெருமை, குழந் தையைப் பெற்றெடுப்பதற்குப் பெற்றோர் எடுத்துக் கொண்ட அருந்தவ முயற்சி முதலியன முன்னைய தாலாட்டுப் பாடல்களில் சிறப்பித்துப் பாடப்பெறும். இன்றைய புதுக்கவிதைத் தாலாட்டுக்களில் இவ்விதி முறைகள் — மரபு கள் — மீறப்பட்டிருப்பதைக் காண்கிறோம்; தாலாட்டுப் பாடல்களின் பழைய கருத்தலகுகளைப் புதிய கோணத்தில் சமூக

உணர்வோடு பாடும் போக்கு இன்றைய புதுக்கவிஞர்களிடம் மேலோங்கிக் காணப்படுகின்றது. கவிஞர் புவியரசின் 'ஒரு தூங்காத தாலாட்டு' என்னும் கவிதை இவ்வகையில் சிறப்பாக குறிப்பிடத்தக்கதாகும். கண்ணே ! கண்மணியே ! கறுப்பா நீ கண்ணுறங்கு ! கண்ணுறங்கு , கண்ணுறங்கு, தப்பிப் பொறந் தவனே தரித்திரமே, கண்ணுறங்கு ! ... வேளை வரும் வரைக் கும் வெறும் பயலே கண்ணுறங்கு !' எனக்கவிஞர் குழந்தையை விளிப்பதிலேயே இன்றைய காலச் சூழலைக் குறிப்பாகப் புலப் படுத்தி விடுகிறார். முன்னைய தாலாட்டு தவமிருந்து பெற்ற செல்வமாகக் குழந்தையைப் போற்ற, இன்றைய தாலாட்டோ 'தப்பிப் பொறந்த தரித்திர'மாக நடப்பியல் உணர்வோடு குழந்தையைக் குறித்துப் பாடுகிறது.

புவியரசு படைக்கும் தாய் வேளை - நேரம் - காலம் வரும் வரைக்கும் வாய் மூடிக் கண்ணுறங்குமாறும், உரிய வேளை — நேரம் — காலம் வந்ததும் நெற்றிக் கண்ணைத் திறந்து 'அறிவுரை கூறுகிறாள்.

'கண்விழித்துப் பார்த்தாலோ
காரணங்கள் புரிந்துவிடும்
காரணங்கள் புரிந்தாலோ
கனலாக நெஞ்செரியும்;
நெஞ்செரிய விட்டாலோ
நெற்றிக்கண் திறந்துவிடும்,
நெற்றிக்கண் திறக்க
நேரமின்னும் வரவில்லை;
வந்தால் எழுப்புகிறேன்
வாய்மூடிக் கண்ணுறங்கு,

கண்ணுறங்கு, கண்ணுறங்கு
காலம் வரும் கண்ணுறங்கு !

ரௌத்திரம் பழகு' என்னும், பயங்கொள்ளலாகாது பாப்பா' என்றும் பாடினார் பாரதியார்; காலம் வரும் வரைக்கும் கண் ணுறங்கி, வாய் மூடிக் கிடந்து, காலம் வந்ததும் நெற்றிக் கண்ணைத் திறந்து, நிலைமைக்கான காரணங்களை உணர்ந்து, செயற்படுமாறு பாடுகிறார் புவியரசு.

புதிய தாலாட்டு

தமிழ்ப் பண்பாடு இரண்டாயிரம ஆண்டுப் பழமையுடையது; அதுபோல் தமிழ் வறுமையும் மிகப் பழமை வாய்ந்தது. ஆட்சியில் அமரும் அரசியல்வாதிகளாலும், அவர்கள் தீட்டும் ஐந்தாண்டு திட்டங்களாலும் வறுமை என்பதை மண்மிசை மாய்க்க முடியவில்லை. முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் பாரதமணித்திரு நாட்டில் வறுமை கோலோச்சிக் கொண்டிருக்கிறது வறுமைக் கோட்டிற்குக் கிழிருந்து வாடும் ஒரு தாயின் வாயிலிருந்து பிறக்கும் 'புதிய தாலாட்டு' இதோ

கண்ணே ! கண்ணுறங்கு !
புது ஜனாதிபதி வந்துவிட்டார்,
கண்ணே ! கண்ணுறங்கு !
இனிமேல் இவரை
இண்டியன் நியூஸில் பார்க்கலாம்
வானொலியில் பேச்சைக் கேட்கலாம்
வெளிநாட்டில் பறக்கக் காணலாம்
இருக்கிற பசியை மறந்து
கண்ணே! கண்ணுறங்கு
புது ஜனாதிபதி வந்துவிட்டார்,
கண்ணுறங்கு !

தாய் — குழந்தைக்கு — தூங்குவதற்காகப் பாடுவது என்ற வரிச்சட்டம் இன்றைய புதுக்கவிதைகளில் மாறிவிட்டது. இன்றைய கவிதைகளில் தாய்க்கே தாலாட்டுப் பாடப்பெறுகின்றது. தனக்குத் தலாட்டுப் பாட வேண்டா என்று குழந்தையே வேண்கிறது; தாய் மட்டுமின்றி, தாய்மாமனும் தாலாட்டுப்பாடுகின்றனர். கவிஞர் ஏ. தெ. சுப்பையன் 'வேலையில்லாத பட்டதாரியின் தாலாட்டு' என்ற தலைப்பில் ஒரு கவிதை பாடியுள்ளார். அக் கவிதையில் வரும் தந்தை 'வாழ்க்கைச் சூதாட்டத்தில் தோற்றுப் போனவர்; மனுச்செயது மனுச் செய்தே அலுத்துச் சலித்தவர்; பணத்துக்கே மதிப்பளிக்கும் எந்திர சமுதாயத்தில் பரிதாபமாய் வாழ்ந்து கொண்டிருப்பவர், பழகிய தாலாட்டுப் பாலும் புளித்ததென்று ஒரு புதிய தாலாட்டைத் தாய் வேண்டியதால் பாடுகிறார்,

'எல்லாமே இருந்தும் இல்லாத இந்தியன்போல்
வறுமையிலே நீ பிறந்து வளர்ந்தாய் என்மகளே!
ஆயிரமாய்ச் செலவழித்து நான் வாங்கி வைத்திருக்கும்
காகிதப் பட்டத்தால் கஞ்சிக்கும் வழியில்லை
புட்டிப் பாலுக்கும் நீ போட ஒரு சட்டைக்கும்
வக்கில்லை கடனாக வாங்க ஒரு வழியில்லை
அரிசிக்கும் பருப்புக்கும் உன்தாய் அவதியுற்றாள்
வேலைக்கோ வழியில்லை வீண்பொழுதே நான்
கழித்தேன்'

வேலையின்மையின் அவலத்தை. வறுமையின் கொடுமையை சமுதாயச் சந்தையின் இழிநிலையை உருக்கமாக எடுத்துக் காட்டும் கவிஞர், முடிவில் தன் மகளுக்கு முத்தாய்ப்பான அறிவுரை வழங்கவும் தவறவில்லை.

'கொடுமைகளைச் சகிப்பதற்கே பழகிவிடக் கூடாது
எதிர்த்துப் போராடுவதே இயல்பாகும் என்மகளே!
வறுமையை இயற்கையென்றே கருதிவிடக் கூடாது
மாற்ற உழைப்பதுதான் வாழ்வாகும் என்மகாள;

என்று சமுதாயக் கொடுமைகளைச் சகிப்பதற்கே பழகிவிடாமல், எதிர்த்துப் போராடி முன்னேறுமாறு, இல்லை என்ற சொல்லை இல்லையாக்கப் பாடுபடுமாறு லலியுறுத்துகிறார் கவிஞர்.

எஸ். அறிவுமணி 'அழக்கூடாது மகளே!' என்று கவிதையில் 'சல்லிக்காசும் சம்பளமாய் வாங்காத மாம்னைப் படைத்துள்ளார்; 'சுண்டியெறிந்து விளையாட்டுக் காட்டவும் காசில்லாத' அவல நிலையைப் பாட்டாக்கியுள்ளார். இங்ஙனம் தந்தை, தாய் மாமன் ஆகிய இருவரது சிறப்பினையும் பாடுதல்என்ற முன்னைய தாலாட்டுப் பாடல் மரபு, இன்றைய கவிதைகளில் மீறப் பட்டிருப்பதைக் காணலாம்

உருவகப் பாங்கு

சோஷலிசம், கறுப்புப் பணம் முதலானவற்றைக் குழந்தையாக உருவகித்துத் தாலாட்டுப் பாடும் போக்கும் இன்றைய புதுக்கவிதை உலகில் காணப்படுகின்றது.

'The Shad Dharsanas'

Akula Rajendra Babu,
Madras.

Philosophy-its limit and origin

Philosophy is the integral part of and rational aspect of religion. It is a rational enquiry into the nature of Truth or Absolute Reality. It gives a vivid, clear solutions for the profound, subtle and intricate problems of life. It paves the way to get rid of pain and death and to attain immortality and eternal bliss of Sat Chit Ananda.

Philosophy has its foot and has its own value in the practical needs of every man. When a man is in a reflective state he wants to vivisect and to know more about the troufeeudental matters. There is an indtensive urge within to know more about the secret of death, the secret of immortality, the nature of the sonl, the Creator andthe world. Philosophy gives an helping hand to know more about all these things. The voice are its philosophers. In all ages and climes great thinkers of creative nature and philosophers do appear, elevate and inspire the people.

Questions of relative nate do arise in the mind at one time or another. What is this samsara?

Meditation on the Absolute, one can attain Immortality. Death is the compass or ultimete pointer to transciency of all things and the existence of an ultimate Reality

Philosophy of various schools of thought

A clear conception or understanding of man's inter relation to God is a matter of memomentous importance. The inter relation between man and God and the Universe has been dealt with by philosophers, great thinkers, Acharyas and great religious teachers of the world. The out come has been the coming into xeistence of various school of philosophy.

The difference between philosophy and Intuition

Philosophy will not allow or enter into the reason of bliss but philosophy will take one to its gates. Intuition or realisation is absolutely necessary for entering into that holy land of everlasting joy and inefable glory.

Hindu philosophy is not a guess work but a mere speeultion. It is based on purely mystical spiritual experience or Aparakosha Anubhuti. The greats ages who had direct intutive perception of the Truth are the founders of the different philosophical systems. Almost all schools of philosophy have or are all based on the Sruti or the Vedas, directly. or indirectly Those who losely study the Upanishads, will find that revelations of the Sruti are in harmony with the conclusions of philosophy.

Indian philosophy-The Orthodox and the Hetrodox systems

The 6 (six) systems of Indian philosophy or the Shad Dharsanas are the six orthodox systems of philosophy. There are six ways of looking at the Truth.

They are

1. The Nyaya.
2. The Vaiseshika.
3. The Sakhya.

4. The Yoga.

5. The Purva Mimamsa. and

6. The Uttara Mimamsa or the Vedanta.

The orthodox systems of philosophy believe in the authority of the Vedas. The hetrodox systems of philosophy do not believe in to authoriatative of the Vedas. The six hetrodox systems of philosophy are

1. The Materialistic school of Charvaka,
2. The Jainas system.
3. The school of Presentationists or Vaibhasikas (Buddhistic)
4. Ths school of Rrpresentationists or Sautrantikas Buddhistic).
5. The school of Idealism or Yogacharas (Buddhistic)

and 6. The school of Bithism or the Madhyamtras (Buddhistic).

'THE SHAD DHARSANAS OR THE SIX ORTHODOX CHOOLS'

Out of the Vedas, the Shad Dharsanas or the six othodox sysem have arisen. Darshana means literally sight or vision and is a system of philosophy. Literature of Darsana is pchilosophical. Each Darsana is a way of looking into the Truth, and is a stand point in respect of the Truth.

The principles of Nyaya or the Indian logical system have been systematised by Gautama Rishi. Rishi Kanada is also known by the name Aukulya and Kasyapa composed the Valseshika Sutras. The sankhya system was founded by Kapila Muni. The first and foymost systatises of the eoga

school was Patanjali Maha Rishi on yoga. The Yosa Dasrshana of Patanjali is a celebrated text book and treatise on Raja Yoga, A disciple of Vyasa, Jatmini composed the Sutras of Mimamsa school, which is based on the ritualstic section of the Vedas. Badrayana composed his Vedanta Sutras or Brahma Sutras which expound the teachings of the Upanishads. The different schools of Vedanta have built their philosophy on the foundation of their scras or aphorisms.

The ultimate Reality can reached by different ways and means;

The six schools of thought are like six different approaches One universal aim they have viz. removal of ignorance and its effects of pain and suffering and the attainment of freedom, perfection and immortality and eternal bliss byunion of the individual soul (jivtman) with the supreme soul Paramatman.

The inter.relation between the six systems

The six schools are divided into three groups.

1. The Nyaya and the Vaiseshika.

2. The Sankhya and the Yoga.

and 3. The Mimamsa and the Vedanta.

The Vaiseshika is a supplement of the Sankhya. The Vedanta is an amplification and fulfilment of the Sankhya Study of gramma (vyakarna). Mimimsa, Nyaya and Sankhya is absolutely necessary to understand the Vedanta. The Nyaya sharpens the intellect and enables to grasp the Vedanta. The Nyaya is considered as a pre- requisite for all philosophical enquiry.

The Nyaya and the Vaiseashika will show the analysis of the world of experience. They themselves arrange in a charact erlistic way all the things of the world into certain kinds or categories (padarthas) These explain how God has made all his material world out of molucles. To attain knowledge of God they show the way. The sankhya will provide with deep Knowledge on Hindu psychology. The father of pýchology was Kapila Mumi. The yoga deals with the control of vrittis or thought waves and with meditation. The yog asystem shows the ways to discipline the mind and the senses The yoga will assist and help one to cultivate concentration and one pointedness of mind and enter into the realms of Nirvikylpa samadhi or Superconscious state The Purva Mimasa deals with the Vedas and Uttara Mimamsa with Jnana kanda.

Mimamsa is not a branch of any philosophieal system, It is rather system of Vedic interpretation, Its philosophical discussion amount to a kind of critical commentary on the Brahmanas or ritual portion of the Veda, It interprets the Vedas in the titeral sense, The central problem of Purva Mimamsa in is ritual, Jaimini has systematised the rules of Mimamsa and established their validity in his work, The rules of Mimamsa are very important for the interpretation of the Hindu law,

The Uttara Mimamsa is also and otherwise known as the Vedanta Darsanas. This is the corner stone of Hin duism, The Vedanta philosophy explains in detail the nature of Brahman or the Eternal Being, and shows that individual soul is in essence, identical with the supreme self, It shows the way to remove Avidya or the veil of ignorance and to merge one self in the ocean of bliss or Brah man

The Nyaya calls Avidya ignorancc, Mithya-jnana false knowledge. The Sankhya styles Avidya, as Aviveka, non-discrimination between the real andthe unreal. The Vedanta calls it as Avidya or neiscnce, Each, philosophy aims atthe eradication of Avidya by knowledgeor jnana. One attanins Immortality or internal bliss then.

By al study of Nyaya and Vaiseshika, one learns to utilise his intellect to find out fallacies and to know the material constitution of the worlda By Sankhya, one understands the course or processes of evolution By study and pratise of yoga, oneattains self-restant and obtains mastery over mind and senses. By a study of Vedanta, one reaches the highest ring of the ledder of spirituality of the pinnacle of divine glory, oneness divine glory, oneness with the supreme Being.

Vedanta is the most satisfactory and effective system of philosophy

Not all, but mome of the doetrines of the Nyaya, the Vaiseshika. the Sankhya and the Yoga a opposed to the teachings of the Vedas. Those systems are superficially based on the Vsdas.

All the six schools of philosoppy flourished at the time of Adi Sankaraeharya. There is no other go, except to contradict or refute all the other systems in order to establish his own absolute monism (Kewala Adwaita). Sankhya, Vaisashika etc. are in wane and in name only at present

பாரதமாவிந்தம் நூலாசிரியர் காலம்

த. ராஜேஸ்வரி,
கேரளப் பல்கலைக்கழகம்.

பாரதமாவிந்தர், வியாசபாரதத்தின் இறுதி மூன்று பருவங்களான மௌசல பருவம், மகாப்பிரஸ்தானிக பருவம், சொர்க்காரோகன பருவம் ஆகிய பருவங்களில் உள்ள நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த நூலாகும். இது பாண்டவர்கள் வைகுண்டம் செல்ல மேற்கொண்ட துறக்கப் பயணத்தை விரிவாகக் கூறுகிறது இதை இயற்றியவர் சோமன். இவரது காலம் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இந்நூலாசிரியர் சோமன், வில்லிபுத்தூரருக்குப் பிற்பட்டவர் என்பது அவர் இந்நூலை வில்லிபுத்தூரர் பாடாத கதையை செய்ததாகக் கூறுவதிலிருந்து அறியலாம்.

எ-டு. விருத்த நீள்கவி வில்லிபுத் தூரன்முன்
தெரித்த பாறதஞ் செய்தனன் செய்திலன்
வருத்தமாய் மன்னன் மாவிந்தஞ் சேர்ந்ததை... (15)
...துய்ய வில்லிபுத் தூரன் றொடைக்கவிச்
செய்யல் கண்டபின்'செப்புங் கவிதையே 16)

1. மேலும், வில்லிபுத்தூரர் பாடிய சந்தங்களை ஒட்டிப் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

வில்லிபாரதம்

ஈரிரு தேரினர் மூவகை யானைய ரெண்ணூறு மாமிசை
யோர்

ஓரிரு நாலுடை யையிரு பூமியி லுள்ளப தாதருடன்
பாரிரு நாலுதி சாமுக மும்படை யோடுப ரந்துவரும்
பேரிரு மானவ ரூதினி யின்றிரன் பேசுற லாமளவோ
(துரோ.பதிமூ.7)

பாரத மாவிந்தம்

நீதியு டன்புவி தன்னைநிறுத்திநெ டுங்கலி வந்திடவே
ஆதியி னம்முறை கொண்டுபொல் லாதவ ருஞ்சுரம் வந்தினிய
மாதும டிந்தும னத்துறு தம்பியர் மண்ணிடைத் துஞ்சிடவும்
பேதமி லாதெமை யுன்னிந டந்தபெ ருந்தகை நீயலையோ
(747)

2. வில்லிபுத்தூரரின் சொல்லையும் பொருளையும் பாரத மாவிந்தத்தில் சோமன் பொன்போலப் போற்றியுள்ளதைப் பல இடங்களில் காணலாம்.

1.2 எ-டு. வெந்நிடுதல் **வில்.ஆதி.குரு 67.**வெந்நிட்டான் **(616)**

2.2 **வின்மை வில். துரோ. பன். 90** வின்மை **(519)**

2.3 பொன்னகரி **வில்.ஆதி.குரு.76,** பொன்னகர் **(432)**

2.4 பட்டவர்த்தனரும் மகுடவர்த்தனரும் வந்து **வில். உத். கிரு. 103,** பட்டவர்த்தனர் தம்மொடும் பலமகுடவத்தனர் தம் மொடும் **(80)**

2.5 தாண்டிய வெம்பரி **வில்.துரோ.பன்.15** தாண்டிய பரிதேர் **(638)**

2.6 பிறந்த தின முதலாக **வில்.துரோ'பதிமூ.138** பிறந்தநாள் முதலா **(617)**

2.7 அன்ன காலையில் வில்.ஆதி.குரு.18 அன்ன காலையில்(98) வில்லிபுத்தூரரின் காலம் கி.பி.14ஆம் நூற்றாண்டின் இறுதி ஆகும்

மு. அருணாசலம் 14–ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாறு ப. 24)

3. பதிப்புக்குதவிய சுவடிகள் எழுதப்பட்ட காலம்

இப்பதிப்புக் அடிப்படையாக எடுத்துக் கொண்ட சுவடிகளில் காலத்தால் முந்திய சுவடி (38ց5பி) எழுதப்பட்ட காலம் கி.பி. 1778 ஆகும் சுவடி (எழுதியவரின் இடம் பற்றி கட்டுரை-1 எண் 4.1-இல் பார்க்க)

எனவே, இந்நூலாசிரியர் சோமன் வில்லிபுத்தூரர் காலமாகிய கி பி. 14 ஆம் நூற்றாண்டிற்கும் சுவடி எகுதிய 18-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டக் காலபபகுதியைச் சேர்ந்தவர் என்று உறுதிப்படுத்தலாம்.

நூலாசிரியர் சோமன் எழுதிய நூல் செல்லரித்து விட்டதால் அதன் உரையிலிருந்து நூலை விநாயகன் என்பவர் செப்பமிட்டு அமைத்ததாகப் பாயிரத்தின் இறுதிப்பாடல் கூறுகிறது (21). இந்நூலை விநாயகன் செப்பமிட்டது கி. பி. 14–ஆம் நூற்றாண்டுக்கும், 18-ஆம் நூற்றாண்டுக்கும் இடைப் காலப்பகுதியில் நடந்திருக்க வேண்டும்,

இனி நூலாசிரியர் காலத்தைத் திட்டவட்டமாக வரையறுக்க ஏதேனும் அகச்சான்றுகள் உள்ளதா என்று நோக்கலாம்.

இந்நூலின் அமைந்த சொற்பொருளை ஒத்தவை காணப்படும் பிற நூல்களில் கர்லங்களை ஒத்து நோக்கி இந்நூலின் காலத்தைவரையறுக்க முயலலாம்.

இவ்வாறு நோக்கும் போது அருணகிரியார் பாடலில் வரும் முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்' (திருப்புகழ்-காப்பு)

என்ற பாடலில் வரும் முத்தமிழடைவு என்ற சொல்லை ஒத்து அமைந்த சொற்றொடர் பாரதமாவிந்தத்தில் காணப்படுகிறது, 'முத்தமிழடைவினிற் பொலி கருணை' (11).

இதில் யாரை ஒட்டி யார் எழுதினார் என்பதுதெளி வில்லை. என்றாலும், அருணகிரியாரை ஒட்டி இவ்வரிகள் எழுந்தன என்று கொண்டால் இந்நூல் அருணகிரியார் கால மான 15ஆம் நூற்றரண்டின் பிற்பட்டதாகா வேண்டும்.

செவ்வைச் சூடுவார் பாகவதத்தில் வரும் சொல்லை ஒதது அமைந்த சொற்றொடர்களும் பாரதமாவிந்தத்தில் அமைந் துள்ளன.

வட்டவாயழற் (றிகிரியான் செவ்.2912) வட்டவாய்த்திகிரி (738).

கான்யாறு(செவ் 2878) கானியரறு (263),

வாட்கோரை (செவ்.4323) வாட்கோரை (103)

குழகன் (செவ்.3398) குழகமுத்தமிழ் (10)

கஞ்சன் (செவ். 2648) கஞ்சன் (151),

இதிலும் யாரை அடியொற்றி யார் எழுதினார்கள் என்பது தெளிவில்லை, இருப்பினும் செவ்வைச் சூடுவாரைப் பின்பற்றி இவ்வரிகள் எழுத்தன என்று நாம் கொண்டால் இவர் செவ்வைச் குடுவாரின் சமகாலத்தவர் அல்லது அதற்குப் பிற் பட்டவர் என்று சுருத இடமுண்டு. செவ்வைச் சூடுவரின் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்பார். (மு. அருணாசலம், 16-ஆம் நூற்றாண்டு-1 தமிழ் இலக்கிய வரலாறு. ப.346)

வழியடிமையாப் பிள்ளை மகன் முத்துவயிரவன் பெருமாள் பிள்ளை படிஎடுத்த, பாரதமாவிந்தத்தின் மிகப்பழைய சுவடி (3895 பி) எழுதப்பட்ட ஆண்டு கி.பி.1778. 11413 என்ற சுவடி சிவசுப்பிரமணியனால் படி எடுக்கப்பட்ட ஆண்டு கி.பி. 1839. இரு சுவடிகளும் எழுதப்பட்ட கால வேறுபாடு 61 ஆண்டுகள்

(முதற்சுவடியிலிருந்துதான் இரண்டாவது சுவடி படியெடுக்கப் பட்டதா என்பது ஆராயத் தக்கது).

இதை ஒரு கணக்காகக் கொண்டு பாரதமாவிந்தச் சுவடியின் பழைய முதல்படி எடுத்ததற்குச் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு நூல் செப்பம் செய்யப்பட்டிருக்கக் கூடும் என்று கொண்டால் நூலைச் செப்பம் செய்தகாலம் கி.பி. 1718ஐ ஒட்டி அமைந் திருக்கலாம் எனக் கொள்ளலாம். நூலைச் செப்பம் செய்ததற் கும் 60 ஆண்டுகள் முன்பு நூல் இயற்றப்பட்டதாகக் கொண்டால் நூல் இயற்றப்பட்ட காலம் கி.பி.1651. இந்நூல் 100 ஆண்டுகளாவது மிகவும் செல்வாக்குடன் விளங்கியிருக்க வேண்டும்.

வைகுந்த அம்மானை சுவடிகளுள் மிகப்பழைய சுவடியின் காலம் கி.பி 1804. இந்நூல் பாரதமாவிநதத்தைப் பார்த்து எழுதியிருக்கலாம். தென்பாண்டி நாட்டில் இவ்வம்மானை சுவடிகள் மிகும். எனவே, நூலின் காலம் 16 அல்லது 17ஆம் நூற்றாண்டு எனலாம்.

இவ்வாறு அகச்சான்றுகளைக் கொண்டு செய்யும் கால ஆராய்ச்சியும் முற்ற முடிந்ததாகக் கொள்ள இயலாது. ஏனெனில் இந்நூலை இயற்றிய நூலாசிரியர் சோமனின் சொற் கள் எவை, செப்பம் செய்த விநாயகனின் செப்பங்கள் எவை என்று வேறுபடுத்தி அறிய இயலாததாக இருக்கிறது.

சிலம்பம் அல்லது சிலம்பட்டம் ஒரு பார்வை

ஜே. ரோஸ்லெட்டானிபாய்
கேரளப் பல்கலைக்கழகம்

சிலம்புதல் என்றால் ஒலித்தல் என்று பெயர். குறிப்பிட்ட அளவு கம்பைக் கொண்டு மாறி மாறி அடித்து விளையாடும் ஒருவித விளையாட்டுக்கலையே சிலம்பாட்டம் இதனை நாட்டுப் புறங்களில் அதிகமாகக் காணலாம். சிலம்பம் என்பதற்குப் பொருள் தரும அபிதான சிந்தாமணி (பக். 650) 'தேகப் பயிற்சிக்காகவும் தம் எதிரிகளை வெல்லுதற் பொருட்டும் ஒற்றையிரட்டைக் கொம்புகளாலும் மற்றும் பல கருவிகளா லும் பழகும் பழக்கம்' என்கிறது.

கேரளத்தில் வழங்கும் களரிப்பயிற்று என்னும் கலையும் தமிழகத்தில் காணப்படும் சிலம்பாட்டமும் பல ஒற்றுமைகளைக் கொண்டுள்ளது செவுடு முறையிலும் வாள்வீச்சு போன்ற பல விளையாட்டுகளிலும் ஒற்றுமையைக் காணலாம்.

சிலம்பத்தின் தோற்றம்

சிலம்பத்தின் தோற்றம் பற்றிக் கூறும் சு. சக்திவேல், நடசாரி என்னும் ஓலை பட்டயம் சிலம்பத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி கூறுகிறது என்கிறார். நாட்டுப்புறவியல் ஆய்வுகள் 1983 பக், 117). சிலம்பக்கலை, அரசர்களுக்குப் போரப் பயிற்சிகளுடன் பயிற்றுவிக்கப் பட்டதாகும். அரசர் களின் ஆட்சிக்குப் பின் இக்கலை வழக்கிழந்து விட்டது. மேலும் போர் முறையில் பல புதிய கருவிகள் தோன்றியுள்ளதால் இது விளையாட்டுக் கலையாக நிலைத்துள்ளது. இன்றும்' கந்த

கோடாரி' என்றும் ஒரு விளையாட்டு கருவியின் மூலம் நடத்தப்படும் சிலம்பம் அரசர்களின் போர் முறையைக் காட்டுவதாக உள்ளது.

சிலம்பன் ஆக்கியோன்

சிலம்பம் ஐயன், பாடச்சன் என்பவர்கள் இணைந்து விளையாடியதன் மூலம் தோன்றியது என்கிறனர். கிடைத்த ஓலைச் சுவடிகளில் பெயர் எதுவும் காணப்படவில்லை. நேரடிப் பேட்டியின் மூலம் ஐயனும் மாடச்சனும் என்றும், ஐயனும் கையனும் என்றும வேறுபட்ட செய்தி கிடைத்தது. எனவே ஐயன் எனப்படும் ஐயப்பனின் காலமே சிலம்பம் தோன்றிய காலம் என அறுதியிட்டுக் காணலாம்.

சிலம்பத்தின் வகைகள்

சிலம்பத்திற்குப் பயன்படும் கம்பின் அளவைக் கொண்டு குறுந்தடி சிலம்பம், நெடுந்தடி சிலம்பம், மறவன் அடி சிலம்பம் என்று மூன்று வகையாகக் கூறுவர். ஒவ்வொரு சிலம்பமும் பன்னிரு வகைப்படும். அதனுள் சில உட்பிரிவுகளும் உண்டு. இதனை மொத்தமாக நாட்டுப்புறத்தில் செரமம், செலம்பம் என்னும் பெயர்களில் கூறுவர்.

சிலம்பாடும்களம்

சிலம்பம் ஆடுதற்குரிய களம் இவ்வளவு அளவு இருக்க வேண்டும் என்பது இல்லை. சிறிய இடத்தினுள் நின்று ஆடுவர் விளையாடும் களம் 'இலங்கம்' எனப்படும்.

சிலம்பம் ஆடுபவர்கள்

சிலம்பம் ஆடுபவர்களின் எண்ணிக்கை இரண்டிலிருந்து மூன்று வரை இருக்கும். குருவானவர் சில்ம்ப சாஸ்திரத்தைப் பாட்டாகப் பாட மாண்வர்கள் அதற்கு ஏற்ப கம்பு சுழற்றி, தாளத்திற்கு ஏற்ப காலைபும் தூக்கி வைப்பர். ஒருவர் வீசும் கம்பு தன்மீது படாமல் இருக்க மற்றவன் தன் கையிலுள்ள கம்பினால் தடுக்க வேண்டும். இதற்கு நீண்ட பயிற்சியும் சுறுசுறுப்பும் தேவை. சில இடங்களில் குருவானவர் மாணவர்களுடன் சேர்ந்து விளையாடுவார்.

சிலம்பு கம்பும் அளவும்

சிலம்பத்திற்குப் பிரம்பினலாகிய கம்பை எடுப்பர். குறுந்தடி சிலம்பத்திற்குரிய கம்பு 1 கோல், 2 ஒட்ட, 4 விரல் அளவு இருக்கும். அதாவது ஒரு முழம், 2 சாண், 4 விரல் நீளமாக இருக்க வேண்டும் நெடுந்தடி சிலம்பத்திற்கு,

கை வலங் கச்சே வலத்தே நீட்டி
கை நடுவில் கொண்டையில் நின்றே
கழுத்து பதைப்பு வரையும் பைத்து
எடுப்பாய் கம்பொன்று இனிதாய்த் தானே
இதுவே கம்பின் அளவுச் செறியாம்'

என்று ஓலைச்சுவடி குறிப்பு கூறுகின்றது. மறவன் அடி சிலம்பத்திற்கு ஒரு ஆளின் மூக்களவு நீளமுள்ள கம்பு எடுக்க வேண்டும் இக்கம்பைக் கொண்டு, நெட்டக்கம்படி சிலம்பம் என்றும் கூறுவர். கம்பின் இயல்பைக் கூறுகையில்,

'வடியளவைத் தான் திடமாய் சொல்வேன்
கதிற் போல் நீண்டு முறடில்லாத
கருத்துடன் தாாம வடியெடுப்பாய்

என ஓலைச்சுவடி கூறுகின்றது. ஆரல்வாய் மொழிக்கு அப்பால் தமிழகத்தில் இக்கம்பினை 'பாணா' என்று கூறுகின்றனர். பாணா என்பது நீண்ட கம்பைக் குறிக்கும்.

பன்னிரு சிலம்பத்திற்குரிய கம்பிற்கும் ஒவ்வொரு பெயர் உண்டு. காட்டாக, அடுக்கு மடதவத்தான், உண்டகலம் குத்தி பொவுத்தான், நாயன வெட்டி, உழுதாரக்கம்பு, கொத்துக்கம்பு அறுப்பு வாள், எறிசம்பு. கிளவிகம்பு, என்பவற்றைக் கூறலாம்.

சிலம்பச் செவடு (Step)

செவடு என்பது விளையாடும் போது காலை எடுத்து வைக்கும் முறையைக் கூறுவது. இது ஒவ்வொன்றிற்கும் மாறி மாறி அமையும். இதனை,

ஓதிரம் பிடிச்சி அஞ்சி வாள் வெட்டி
ஓதிரம் பிடிச்சி வாள் வெட்டி ஒயரே
மூனு வாள் செய்து ஓதிரம் பிடிச்சு
உள்ளெடி தோளுக்குர விலாவுக்குத்
தோளுக்குக் கீதா மேதார குத்து
கன்னவாள் ரண்டும் இட்டு ஓதிரம்
பிடிச்சு மொனதலம் மொன்தலகட
தலகடகம் ஓதிரம் பிடிச்சு குத்தி
காலயிட்டு கால்தடுத்து நெந்துமாறி
உள்வாள் யிட்டு கன்னவாள்
ரெண்டுயிட்டு நடத்துவாள் வெட்டி
மாறிக்க.

என ஏழாவது அடவின் விபரம் கூறும் ஓலைச்சுவடி குறிப்பு கூறுகின்றது. இதற்கு ஏற்ப காலை எடுத்து வைப்பர்.

சிலம்பக் கருவியும் இசையும்

சிலம்ப சாஸ்திரம் செய்யுள் வடிவில் அமைந்திருப்பதால் பார்ப்பவர்களின் ரசனைக்கும், விளையாடுபவர்களின் உற்சாகத் திற்காகவும், செவடு சரியாகச் செய்யவும் கருதி இசைக்கருவி பயன்படுத்தப் படுவதுண்டு. இத்ற்கு செண்டை என்னும் வாத்தியக்கருவியை மட்டுமே பயன்படுத்துவர்,

செய்யுள் வடிவ சாஸ்திரத்தை நொண்டிச்சிந்து, ஆனந்த களிப்பு, அன்மார் பூட்டு என்பன போன்ற இசைப்படி பாட லாகப் பாடப்படும். மேலும்.

தித்தை
இந்தத் - தத்தத் - த
இந்தத் - தத்திததி - திதித்தை

என்பவைகளை இடையிடையே குருவும் மாணவர்களும் இணைந்து கூறுவர். தற்போது பாடல்கள் பாடப்படுவது இல்லை. வாத்தியம் மட்டும் பயன்படுத்தப்படுகிறது.

சிலம்பம் பற்றிய நம்பிக்கை

சிலம்பக்கலையை முழுமையாகக் கற்பவர் எண்ணிக்கை குறைவே. எனினும் பன்னிரு சிலம்பத்தையும் கற்று தேர்ந்தவர்களுடன் களரி' என்னும் தேவதை உலவுவதாகவும் அத் தேவதையின் முழுபலமும் அவர்களுக்குக் கூடுதலாகக் கிடைப்பதாகவும் நம்பப் படுகின்றது.

சிலம்பத்தின்பயன்

சிலம்பம விளையாட்டுக்கலையாகக் காணப்படுவதாகையால், இதனை தற்போது கற்பவர் குறைவு இதன் பயன் பற்றிக் கூறும் ஓலைச் சுவடி,

'களிக்கள் தேகத்திற்கும் இனிதே
சந்தோஷத்திற்கும் பணம் சேர்க்க
சொத்துக்களுக்கும் கேட்டிடவும் இனிது
சங்கத்தோர் விநோதிக்கவும் இனிது
தரணியரோடு இணங்கிட இனிது
தரை சஞ்சாரத்துக்கு இனிதினிதே' என்கிறது.

சிலம்பத்தின் தற்போதைய நிலை

நாட்டுப்புற இலக்கியத்தில் சிலம்பக்கலை பற்றி அறிஞர்கள் கூறுகின்றனர். எனினும் இலக்கிய ரீதியான ஆய்வுகள் இதுவரை செய்யப்படவில்லை வர்மத்துடன் தொடர்புடையதால் நாட்டு வைத்தியம் பயிலும் மாணவர்கள் இதனை பயிலுகின்றனர் வைத்தியத்துடன் தொடர்புபடுத்தி வைத்தியத்துறையில் இணைக்கின்றனர். சிலம்பம் உடல் ஆரோக்கியத்துடன் தேகப் பயிற்சிக்குப் பயன்படுவதால் விளையாட்டுத் துறையிர் பயிலுகின்றனர். விளையாட்டுத் சேர்த்துக் கொள்கின்றனர். மேலும் பகைவர்களிடமிருந்து தம்மைக் காப்பாற்ற தப்போதும் பயிலுகின்றனர்.

தற்போது கராத்தே, ஜூடா, கும்கும் போன்ற உடற் பயிற்சி சம்பந்தமான விளைட்டுகள் தோன்றி வளர்ந்திருப்பதால் சிலம்பம் பயிலுவோர் எண்ணிக்கை குறைந்து விட்டது.

எனினும் சில உடற்பாதுகாப்புக் கழகங்கள் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டு, தற்போதும் சிலம்பம் பயிற்றுவிக்கிறது. ஆண்டுக்கொரு முறை போட்டியும் நடத்துகின்றது.

சிலம்ப நிகழ்ச்சிநள் ஆலயங்களின் திருவிழா காலத்திலும், அரசியல் சம்மந்தப்பட்ட கட்சிக் கூட்டங்களிலும் பொழுது போக்கிற்காகவும், நன்கொடைகளுக்காகவும் நடத்தப்படுகின்றது. மேலும் சில கிராமங்களில் ஆசான்மார்களின் திறமைக்காட்ட போட்டிகள் நடத்தப்படுகின்றது.

நிறைவுரை

நலமிழக்கும் இவ்வரிய கலையைப் பயின்றும், ஊக்குவித்தும் வருவோமெனில் சில தலைமுறைக்கேனும் இதனை நிலை நிறுத்தலாம். அதோடு இலக்கியத்துறை சார்ந்த ஆய்வுகளும் இதில் மேற்கொள்ளப்படவேண்டும்.

பின்குறிப்பு

இக்கட்டுரைக்கு மூலாதாரமாக, கட்டுரையாளரால் சேகரிக்கப்பட்ட சிலம்ப சாஸ்திர ஓலைச் சுவடிகளும் பல்வேறு சிலம்ப ஆசான்மார்களிடம (கல்குளம் தாலுகா, குமரி மாவட்டம்) மேற்கொண்ட நேரடிப் பேட்டிகளும் பயன்படுத்தப்பட்டு உள்ளது.

தங்கச்சி மடம் மீனவர்களின் மீன்பிடிகலை

தி. வசந்தாள்,
சென்னை பல்கலைக் கழகம்

எளிய செய்திதானே என்று சிலவற்றை நாம் புறக்கணிக்கும் போது, அரிய செய்திகள் நமக்குக் கிடைக்காமல் போகின்றன. அதன் பயனை உலகம் அறிய முற்படும்போது கலையுலகில் அதற்குய்ப்திய மதிப்பும், வரவேற்பும் கிடைக்கின்றன. இவ் வகையில் ஆய்வுப் பார்வைக்குக் கொண்டுவரப் பட்டது. நாட்டுப்புற வழக்குகள் (Folk lore) அவை நாட்டுப்புற மக்களின் வாழ்வை அறிந்துகொள்ளப் பயன்படும் அறிவுக் களஞ்சியங்கள். அவற்றுள் தங்கச்சிமடம் அருகிலுள்ள மீனவர்கள் வாழ்வில் பயன்படுத்தப்படும் வலையைப் பற்றி விரித்துரைப்பதும் அவர்கள் மீன்பிடிக்கும் தொழிலில் பயன்படுத்தும் கலைச்-சொற்களுக்குப் பொருள் கூறுவது இக்கட்டுரையின் நோக்க-மாகும்.

முதலில் வலைகள் பற்றியும், அதைப் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் கடலில் இறங்கும் நேரம் திரும்பி வரும் நேரம், அவர்கள் கொண்டு செல்லும் சில மீன்பிடி கருவிகள் பற்றியும் சுருக்கமாகக் காண்போம்.

1. சிங்கி வலை/மடக்கு வலை
2. சூடை வலை
3. திருக்கை வலை
4. பருவலை
5. பொடி வலை
6. விரால் வலை

சிங்கி வலை

பாறையில் உள்ள பகுதிகள் விரிக்கப் பயன்படுத்தப்படுவது சிங்கிவலை. இதன் நீளம் 1 கி. மீ/2 கி. மீ அகலம் 1 பாகம். மீன்பிடிக்கப் புறப்படும் நேரம் மாலை 3.30—4.00. இவ்வலை பாறை உள்ள பகுதிகளில் விரிக்கப்படும். எனவே மீனவர்கள் 'தாழ்த்திக் கயிறு' கொண்டு பாறை உள்ள பகுதிகளைக் கண்டுபிடிப்பர். பாறையைக் கண்டறிந்ததும் வலையை அப்பகுதியை அகப்படுத்தி விரித்து, கல்லைக் கட்டித் தாழ்த்தி விடுவர். இரவில் விரித்த வலை, காலையில் இழுக்கப்பட்டு மீன்கள் சேகரிக்கப்படும்.

குடை வலை:

குறிப்புகள் கிடைக்கவில்லை

திருக்கை வலை

திருக்கை மீன்களைப் பிடிக்கப் பயன்படும் வலை திருக்கை வலை. பெரும்பாலும் திருக்கைமீன் மட்டுமே மாட்டும் மீனவர்கள் ஞாயிறு மாலை 3-00 மணிக்குக் கடலுக்குள் இறங்குவர். வலையைச் சுற்றிக்கல்லைக் கட்டி வலையைத் தண்ணீருக்குள் தாழ்த்திவிடுவர். வலை விரித்த இடத்தை அறிந்துகொள்ள அடையாளக் கொடியைக் கட்டி வைப்பர். காலை 5-00 மணியளவில் மீனைச் சேகரிப்பர். இதேபோல் 6 நாள் செய்வர். சனிக்கிழமையன்று கரை சேர்வர். வலையை ஞாயிறன்று செப்பம் செய்து, மீண்டும் ஞாயிறு மாலை கடலில் இறங்குவர்.

பருவலை

பெரிய மீன்களைப் பிடிக்கப்பயன்படும் வலை பருவலை, பருவலையைக் கொண்டு செல்லும் மீனவர்கள் 'முழு வல்லத்தில். செல்வர். மாலை 3-00-4-00 மணியளவில் பயணம் மேற் கொள்வர். மாலை 6-00 மணிக்குக் கடலில் வலை வீசுவர் இரவு 12.00 மணிக்கு வலையை இழுப்பர். கிடைத்த மீன் களைக் கீறி உப்புவைத்துப் பதப்படுத்துவர். மீண்டும் வலையைக் கடலில் விரிப்பர். மீன்கள் வலையில் விழவிழச் சேகரித்து

மீண்டும் வலையைக் கடலில் விரித்து அவற்றைச் சேகரித்து அதிகாலையில் 5-00 மணியளவில் கரையை அடைவார்கள். முதலில் பிடித்த மீன் கருவாடாக்கப்படும். பொழுதுபுலரும் முன்பு அகப்பட்ட மீன்கள் கரைக்கு வந்ததும் ஏலம் விடப் படும்.

பொடி வலை

சிறிய மீன்களைப் பிடிக்கப்பயன்படும் வலை பொடிவலை. வலையின் கண்கள் பொடியாக இருப்பதால் பொடிமீன்கள் பொடி வலையில் அகப்படுத்தப்படும். மீனவர்கள் காலை 2-00 மணிக்குப் புறப்பட்டு 7.30 மணியளவில் கரைக்குத் திரும்பிவிடுவார்கள். இவ்வலையில் பிடிக்கப்படுவது பொடி மீன்கள். எனவே விரைவில் கரைசேர்த்து அவை கெட்டுப் போகும் முன்பு விற்றுவிடுவர். எனவே மீன்பிடிக்கச் செல்லும் நேரம், திரும்பும் நேரம் சுருங்கிய அளவில் உள்ளன.

இரால் வலை:

இரால் (Prawn) எனும் மீன்களைப் பயன்படும்வலை இரால்வலை. 'அரைவல்லம்' அல்லது 'வத்தையில்' காலை 5.00 மணிக்குப் புறப்படுவர். இரால் மீன்கள் வாழும் பகுதி களில் வலையை விரித்து 5 நிமிடத்துக்கு ஒருமுறை வலையை இழுத்து மீன்களைச் சேகரித்துக் கொண்டேயிருப்பார்கள். ஏனெனில் வலையில் விழுந்த இராலை வலையை இழுக்கா- விட்டால் மற்றமீன்கள் பிடித்துத் தின்றுவிடும். இது 4 அல்லது 5 கிலோ கிடைத்தால் போதும். நல்ல விலைக்கும் போகும்.

மீனால் பெயர் பெற்றவை (விரால் வலை ......)

அமைப்பால் பெயர் பெற்றவை (பருவலை, பொடி வலை) என இரண்டு வகைப்படும்.

அனுபவ அறிவால் சிறந்து விளங்கிய மீனவர்கள். மீனின் வடிவந்திற்கேற்ப வலைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

மீனவர்களது வாழ்வில் பயன்படுத்தப்படும் தொழிற்கலைச் சொற்களைக் கொண்டு மாவட்டம் வாரியாகவோ அல்லது

ஊர் வாரியாகவோ மீனவக் கலைச் சொல் அகராதிகள் தயாரிக்கலாம்.

சொற்பொருள் விளக்க அகராதி

அட்டி — வல்லத்தின் பின் பாகம்

அணியம் — வல்லத்தின் முன் பாகம்

அரைவல்லம் — $17\frac{1}{2}$ முழம் நீளமுடைய வல்லம்.

ஈர்சா — வல்லத்தைக் கவிழ்ப்பதைப் போன்ற பெரிய அலை. மார்சாவை விடப் பெரியது. இது படகைத் திசை மாற்றும் அல்லது கவிழ்க்கும்.

கச்சா காற்று — தெற்குப் பக்கம் இருந்து வரும் காற்று சித்திரை வைகாசி, ஆனி, ஆடி மாதங் களில் வீசும்,

கச்சா நீவாடு — நீரோட்டத்தின் பெயர்.

கரைக் காற்று — வடக்குப் பக்கம் இருந்து வருவது ஐப்பசி, கார்த்திகை. மார்கழி, தை மாசி,பங்குனிஆகிய மாதங்களில் வீசும்.

கைமுடிப்பு — கையால் முடிக்கப்படும் வலை.

கொண்டல்காற்று — தென்கிழக்கிலிருந்து வீசும் காற்று, மாசி பங்குனி ஆகிய மாதங்களில் வீசும்.

கோடைக்காற்று — மேற்கிலிருந்து வரும் காற்று.

சரிவுக் காத்து — தென்மேற்கிலிருந்து வரும் காற்று

சுழி — கரைக்கு வரும் அலை கடலுள் மீளும் போதுஏற்படும்சுழற்சி

சிமிளி — ஒரு வகை மீன் தொட்டால் மின்சாரம் பாய்வதைப் போன்று இருக்கும் (சாக்கடிக்கும்)எனவே விளக்கில் மாட்டும் சிமிளிபெயரை வைத்துவிட்டனர் போலும்

செல்லுவிரல் — ஆறும் கடலும் சங்கமிருக்கும் இடத்தில் காணப்படும் ஒரு வகை மீன். இம்மீன்களைப் பிடிப்பவர் வாயில் கொட்டானைக் கவ்விக் கொண்டு. சேற்றைத் துழாவி துழாவிப் பிடிப்பர்

சோளக் கோடைக் காற்று — வட மேற்கிலிருந்து வரும் காற்று

சோள நீவாடு — நீரோட்டத்தின் பெயர்

தங்கல் — தங்கலுக்குப் போதல் என்றும் சொல்வார்கள். வல்லத்தில் கடலுள் சென்று ஒரு வாரம் தங்கி மீன்பிடித்து வருதல். தங்கலில் பிடிக்கப் படும் மீன்கள் கீறி உப்பு வைக்கப்பட்டு வல்லத்திலேயே கருவாடாக்கப் பதப் படுத்தப்படும்.

தாங்கம்பு — துடிப்பு வகைகளுள் ஒன்று பெரிய நீளமான கம்புதாங்கம்பு எனப்படும். ஆழம் குறைவான இடத்தில்ஊன்றி ஊன்றி வத்தையைத் தள்ளிக் கொண்டு போவார்கள். வத்தையில் பயன் படுத்தப்படும்.

தாத்திக்கயிறு — ஆழத்தைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்தும் கயிறு. கடலில் அதைத் தாழ்த்தி ஆழம் அறிவர்.

திட்டு — கடலில் உள்ள சிறுமணல் பரப்பு

தாவு — ஆழம்

துடிப்பு — வத்தை, வல்லம் போன்ற படகுகளில் செல்லும் மீனவர்கள் அவற்றைச் செலுத்தப் பயன்படுத்தப்படும் சாதனம், இது.

1. தாங்கம்பு
2. தொளவை
3. பங்காயம்

என மூவகைப்படும்.

தொளவை[2] — துடிப்பு வகைகளுள் ஒன்று. பருமூங்கிலைஇரண்டாய்ப் பிளந்து செய்யப்பட்டது. இதுவல்லத்தில் பயன்படுத்தப்படும்.

பங்காயம்[3] — துடிப்பு வகைகளுள் ஒன்று. மரப்-பலகையால் துடிப்பு போன்ற வடிவத்தில் செய்யப்பட்டது. வத்தையில் பயன்படுத்தப்படும்.

மார்சா — கடலுள் எழும் உயரமான பெரிய அலை.

முழுவல்லம் — 24 முழம் நீளமுடைய படகு

வல்லம் — மீன்பிடிக்க, மீனவர் பயன்படுத்தும் படகு

வலக்கடியான் — வலையைக் கடிக்கும் அதிக விடமுடைய ஒருவகைப் பாம்பு. வேளாங்கண்ணிக் கடற்கரைப் பகுதியில் காணப்படும்.

விலங்கியலும் (Zoology) இதன் பெயர் வலக்கடியான் என்று சுட்டப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வாடைக் கரைக்காற்று — வடகிழக்குத் திசையிலிருந்து வரும் காற்று வாடைக் காற்று

வாடைக் காற்று — கிழக்கிலிருந்து வரும் காற்று வாடைக் காற்று

விலங்கை—தூரம்

வெள்ளை போடுதல் — மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் கடலில் ஆபத்து ஏற்பட்டால் வெள்ளைத் துணியை எடுத்து ஆட்டுவார்கள். அலை உயரமாய் எழுந்தால் தெரியாது. அச்சமயங் களில்பாய்மரத்தில் வெள்ளைத் துண்டைக் கட்டி-விடுவர், துண்டு இல்லையெனில் வேட்டியைக்கட்டி விடுவர்.

திருமாலின் கிடந்த கோலம்

இரா. வசுமதி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

ஒரு செயலில் ஈடுபடும் பொழுது அதனிடையில் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளை மக்களால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. அந்த நிலையில், அமைதியின்றித் தவிக்கும் மனத்திற்கு இறைவழிபாடு அமைதியைத் தருகிறது. உள்ளத்தில் இருக்கும் இறைவழிபாட்டைச் செயல்களில் காட்டும்பொழுது ஆலய வழிபாடும், விக்கிரக வழிபாடும் தோற்றம் கொள்கின்றன.

ஆலயங்களில் உள்ள தெய்வத் திருமேனிகளில் மூன்றுவகை நிலைகள் உள்ளன. அவை 1) சலம், 2) அசலம் 3) சலாசலம் என்பன. 'சலம்' என்பது அசையும் தன்மை உடையது. 'அசலம்' எனின் அசையாத தன்மை கொள்வது, 'சலாசலம்' என்பது இரண்டு தன்மையும் ஒருங்கே பெற்றது.

அசையாத் தன்மை கொண்ட உருவங்களைத் 'துருவ பேரங்கள்' அல்லது 'மூல விக்கிரகங்கள்' என்பர். இந்த மூலத்தான திருமேனிகள் கல்லினால் ஆனவை. நிலை பேறுடைய தன்மை கொண்டவை. இந்தத் 'துருவபேரங்களில் மூன்று வகையான பாகுபாடுகள் உள்ளன. அவை நின்றான்' (ஸ்தானக) 'இருந்தான்' (ஆசன), 'கிடந்தான்' (சயன) என்பவையாகும். இந்த மூவகைப் பிரிவிலும் திருமாலின் திரு மேனிகள் வைணவக் கோயில்களில் காணப்படுகின்றன. இவற்றுள் 'கிடந்த கோல' வடிவில் அமைந்துள்ள திருமால் பற்றிய செய்திகளை எடுத்தியம்புவது இக்கட்டுரையாகும்.

திருமால் வழிபாடு

திருமால் வழிபாடு தமிழகத்தில் தொன்று தொட்டு இருந்து வருகிறது திருமாலை அல்லது விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவோர் வைணவச் சமயத்தவர், 'விஷ்ணு' என்பதன் பொருள் 'எங்கும் வியாபித்திருப்பவர்' என்பதே.

'மாயோன் மேய காடுறை உலகமும்' என்ற தொல்காப்பியச் சான்றின் வழி மட்டுமல்லாது, சங்க இலக்கியங்கள், சிலம்பு மேகலை போன்ற காப்பியங்களிலும், பின்னர் எழுந்த பக்தி இலக்கியங்களிலும், கல்வெட்டுகள், செப்பேடுகள் போன்றவற்றின் வழியும், திருமால் வழிபாடு இருந்திருத்தலை அறியமுடிகிறது.

திருமால் கோயில்களில் நிற்றல், இருத்தல், கிடத்தல் என்று மூன்று வகைத் திருக்கோல நிலைகள் சிறப்பிடம் பெறுகின்றன. 108 'திவ்ய தேசங்கள்' என அழைக்கப்படும் வைணவத்திருத் தலங்களில் திருமாலின் திருமேனிகள் மேற்கூறிய இந்த மூன்று நிலைகளில்தான் அமைந்திருக்கும். எனினும், கிடந்த கோலத் திருக்கும் நிலை திருமாலுக்கு மட்டுமே உரியதாகும்.

கிடந்த கோலம்

'கிடந்த கோலம்' என்பது திருமால் பாம்பினைப் படுக்கையாகக் கொண்டு உறங்கும் நிலை. வைணவக்கோட்பாட்டிற்கு அடிப்படை வேதங்களாகும். வேதங்களிலும், உபநிடதங்களிலும் உருவ வழிபாடு இடம்பெறவில்லை என்பதை அறிதல் வேண்டும். எனவே, இந்த வேதங்கள் உபநிடதங்கள் கூறாத ஒரு செய்தியைக் கி.மு.4 அல்லது கி.மு.5-ஆம் நூற்றாண்டில் எழுந்த 'பாரதம்' தான் எடுத்தியம்புகிறது. அதாவது தேவர் களும் அசுரர்களும திருப்பாற்கடல் கடைந்த கதையையும் திருமால் கிடந்த கோல வடிவில் உள்ள நிலையையும் கூறு கின்றது. எனவே, திருமாலின் கிடந்த கோல நிலை பாரதம் எழுந்த காலக்கட்டத்தில் தோன்றியிருக்கக் கூடுமென்பது புலனாகிறது.

இறைவன் உறங்கிக் கொண்டிருந்தாலும் அல்லது அறிதுயில் நிலையிலிருந்தாலும் உலகத்து உயிர்களைக் காக்கும் பொருட்டு இயங்கிக்கொண்டிருக்கின்றான் என்பதே இந்தக் கோல நிலையின் தத்துவம். இந்த நிலைக்குப் புத்தர் பெருமானின் பரிநிர்வான நிலையும் ஒரு முன்னோடியாக இருக்கக் கூடுமென்று எண்ண இடமளிக்கிறது.

அமைப்பு

திருமால் ஐந்து தலைகளைக் கொண்ட ஆதிசேஷனைப் படுக்கையாகக்கொண்டு, நான்கு கைகளோடு, உந்தியில் தாமரை மலரின்மீது பிரம்மன் அமர்ந்திருக்கும் உருவம் பொதுவான நிலையாகும். கிடந்தகோல நிலையில் உந்தியில் பிரம்மன் தோன்றுதலைப் பெரும்பாணாற்றுப்படை,

> 'நீனிற உருவின் நெடியோன் கொப்பூழ்
> நான்முகன் ஒருவன் பயந்த நல்லிதழ்
> தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றி'

என எடுத்துரைக்கின்றது. அது மட்டுமன்றிப் பண்டைக்காலத்தில் திருமாலுடைய பள்ளிகொண்ட திருமேனியில் உந்தியில் பிரம்மன் காணப்படுவதில்லை என்றதொரு கருத்தையும் இங்கு ஒப்புநோக்க வேண்டும்!

பரிபாடல்

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான 'பரிபாடல்' திருமாலைப் பற்றி ஆறு பாடல்களில் எடுத்துரைக்கின்றது. அதாவது,

> 'ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை
> தீஉமிழ் திறலொடு முடிமிசை அணவர'

என்று கிடந்தகோல நிலையைப் பரிபாடலும்,

> 'அணங்குடை அருந்தலை ஆயிரம் விரித்த
> கணங்கொள் சுற்றத்து அண்ணலை வணங்கி'

என்று பரிபாடல் திரட்டும் திருமாலின் பள்ளிகொண்ட கோலத்தை விளக்குகின்றன.

சிலம்பு

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், மாங்காட்டுமறையோன் மூலம் திருமாலின் சிறப்பை எடுத்துரைக்கின்றார். மாங்காட்டு மறையோன் கோவலனிடம் திருமாலின் கிடந்த கோலத்தை வருணிக்கின்றான். அதாவது நீலமேகம் பொன்மலை மீது பக்கங்களில் விரிந்து படிந்திருத்தல் போல படம் விரித்த ஆயிரம் தலையமைந்த அனந்த சயனத்தில் பக்தரும் தொழுகின்ற வகையில் பள்ளிகொண்டிருக்கும்.

> 'நீல மேகம் நெடும்பொற் குன்றத்துப்
> பால்விரிந் தகலாது படிந்தது போல
> ஆயிரம் விரித்தெழு தலையுடைய அருந்திறற்
> பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த'

என்ற பகுதி எடுத்துரைக்கிறது.

இவ்வாறு திருமாலின் பள்ளிகொண்ட கோலநிலையை இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

ஸ்ரீரங்கம், திருவனந்தபுரம் ஹம்பி, மைசூரைச் சேர்ந்த ஸ்ரீரங்கப்பட்டணம், கார்கல், ஹலபீடு, பாதாமி, ஐவெஹாளே மகாபலிபுரம் போன்ற இடங்களில் திருமால் கிடந்த கோலத்தில் அமைந்திருக்கும் நிலை காணப்படுகிறது. 108 திவ்விய தேசங்களான வைணவச் திருத்தலங்களில் 27 இடங்களில் திருமாலின் திருமேனி கிடந்தகோல நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த 27 இடங்களிலும் திருவரங்கம், திருவனந்தபுரம், திருக்கடல்மல்லை. திருஎவ்வுள் (திருவள்ளுவர்), திருவெஃகா திருஆதனூர் ஆகிய தலங்கள் தொன்மை வாய்ந்ததும் தமிழ் இலக்கியங்களில் சிறப்பிடம் பெற்றும் விளங்குகின்றன.

திருவரங்கம்

சைவர்களுக்குக் கோயில் எனில், 'சிதம்பரம்' என்பதுபோல வைணவர்களுக்குக் கோயில் 'திருவரங்கம்' ஆகும். இத்தலம், திருச்சிக்கு அருகில் உள்ள ஸ்ரீரங்கம் என்பதாகும், கோயில்

பூலோக வைகுண்டம், போக மண்டபம், என்று சிறப்பிக்கப்படு கிறது இத்தலம் இந்தத் திருத்தலத்தில் திருமால் 'பள்ளிகொண்ட கோலத்தில் காட்சி தருகின்றார், 'அரங்கநாதன்' என்பது இவரின் திருப்பெயர்,நம்பெருமாள். பெரியபெருமாள் என்றும் சிறப்பிக்கப்படுகிறார். இந்தக் கோலத்தின் சிறப்பு இறைவன் துயில்கின்ற நிலையில் இருந்தாலும் செயல்பட்டுக் கொண்டிருக் கிறான் என்பதே.

'விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருஅமர் மார்பன் கிடந்த, வண்ணமும்'

எனச் சிலம்பு காவிரி, கொள்ளிட நதிகளுக்கிடையே திருவரங்கத்தில் திருமால் பள்ளிகொண்டிருக்கும் கிடந்த கோலத்தை வருணிக்கிறது.

'பழங்காலத்தில் திருமாலுடைய விக்கிரகங்களில் பள்ளி கொண்ட விக்கிரகத்தில் உந்தியில் தாமரை காணப்படுவது இல்லை. நின்ற திருக்கோல விக்கிரகத்திற்கு முன்பே கிடந்த திருக்கோல விக்கிரக வழிபாடு ஏற் பட்டிருக்க வேண்டும் என்று திரு.சௌந்தரராசன் கூறு கிறார்'

என்ற கருத்தை நோக்கும்போது இத்திருவரங்கத்தில் உந்தியில் பிரம்மன் இல்லை யாதலால் இத்தலம் பழமை வாய்ந்ததாகும். அது மட்டுமன்றி இதனைச் 'சுவயம் வியக்தத்தலம்' எனவும் அழைப்பர். ஆழ்வார்கள் பதின்மரால் பாடப்பெற்றது இத்தல மாகும்.

ஆழ்வார்களில் ஒருவரான 'தொண்டரடிப்பொடியாழ்வார்' நாலாயிர திவ்விய பிரபந்தத்தில்,

'குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி,
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கி

கடல்நிறக் கடவுள் எந்தை
அரவணைத் துயிலு மாகண் (டு)
உடல் எனக் (கு) உருகு மாலோ
என்செய்கேன்? உலகத் தீரே!

என்று திருவரங்கத்தில் பள்ளிகொண்டுள்ள அரங்கநாதனின் நிலையை மெய்யுருகிப் பாடுகின்றார்.

'பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே!

எனத் திருமாலின் அழகினை உள்ளம் உவந்து பாடுகின்றார் இவர் இறைவனைப் பக்தி பரவசத்தினால் தம்மை மறந்தநிலையில் பாடியுள்ள பாங்கு போற்றத்தக்கதாகும். இவர் மட்டுமன்றி மேலும் பத்து ஆழ்வார்களாலும், ஆசாரியர்களாலும் பாடப்பெற்ற தலம் இத்திருவரங்கமாகும்.

திருமாலின் திருக்கோலங்களில் நிற்றல், இருத்தல் என்ற இரண்டு கோலங்கள் எந்தக் கடவுளர்க்கு இருப்பினும் திருமாலுக்கு மட்டுமே இந்த இரண்டுடன், கிடந்த கோல நிலையும் மூன்றாவதாகச் சேர்கின்றது. இந்த நிலை திருமாலுக்கு மட்டுமே உரிய சிறப்பு நிலையாகும் இதனையே.

'திருமாலின் திருமேனிகளைத் தவிர, பிறதெய்வத்திருமேனிகளில் கிடந்த நிலை இல்லை. இத்திருமேனிகள் நின்ற அல்லது இருந்த நிலையில் உருவாக்கப் பட்டுள்ளன. ஆனால் திருமாலின் திருமேனிகள் மட்டுமே நின்ற, இருந்த, கிடந்த என்ற மூன்று நிலைகளிலும் காணப்பெறுகின்றன.

தொழிற் பாடல்களும் சமூகவியல் ஆய்வும்

சா. வளவன்,

பச்சையப்பன் கல்லூரி, சென்னை,

நாட்டுப்புறவியல் கூறுகளுள் ஒன்று நாட்டுப்புறப்பாடலாகும். நாட்டுப்புறப்பாடல்களை இடம், சாதி, பால், பருவம், தொழில், வகைமை உள்ளீடு, சமயம், நோக்கு. பயன், ஒப்பீடு எனப்பல்வகையிலும் ஆய்வு செய்து வருகின்றனர். தொழிற் பாடல்கள் ஆய்வும், தாலாட்டு, ஒப்பாரிப்பாடல்களின் ஆய்வுமே மிகுதியாகச் செய்யப்பட்டு வருகின்றன. தாலாட்டும் ஒப்பாரியும் பெண்கள் பாடும் பாடல்கள். தொழிற்பாடல்களோ ஆணும், பெண்ணும் பாடுபவை. சமுதாயத்தின் நிலையை நன்குணர்த்துபவை. எனவே தொழிற்பாடல்களைக் சமூகவியல் ஆய்வுக்குத் தேர்ந்து கொள்வது இக்கட்டுரையின் நோக்கமாயிற்று.

மொழி வளர்ச்சியடைவதைப்போன்றே அது பேசப்படும் சமுதாயமும் வளர்ந்து கொண்டிருக்கின்றது. மாறிவரும் சமுதாயத்தை ஆய்வு செய்வதே சமூகவியல் ஆய்வாகும். இங்ஙனம் சமூகவியல் ஆய்வு வளர்ந்து கொண்டிருந்தாலும் ஆய்வு முடிவுகள் ஒன்றுக்கொன்று பொருளுள்ள முறையில் தொடர்பு கொண்டிருக்கவில்லை என்றே ஆய்வாளர் கருதுகின்றனர். இவற்றை அறிவியல் வழியிலான விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் வாயிலாகத் தொடர்பு படுத்தமுடியும். கோட்பாடுகளை உருவாக்கி அவற்றுடன் செயல்முறையை இணைப்பதால் முடிவுகள் ஒத்து விளங்கும்.

சமூகவியல் ஆய்வில் கோட்பாட்டினை நன்கு தெரிந்து கொள்வதால் களஆய்வு துணையல் நம் கருதுகோள்களில் உள்ள உண்மைக் கருத்துக்கள் தோன்றும். இக்கருத்துக்களைத் தொகுப்பதால் பல கோட்பாடுகளிலிருந்து பொதுவான கோட்பாட்டினை உருவாக்குவது எளிதாகும். உருவான பொதுக்கோட்பாட்டினை களஆய்வில் பின்வரும் ஆய்வாளர் பயன்படுத்தினால் முடிவுகள் பொருளுள்ளவையாக மாறும்.

தொழிற்பாடல்களில் காணும் கருத்துக்கள் பல கோட்பாடுகளை உருவாக்குவனவாக உள்ளன. அவற்றுள் முன்மாதிரிக் குழுக்கோட்பாடு பற்றி ஆய்வு செய்யப்பயன்படும் பாடல்களின் விளக்கமாகவே இக்கட்டுரை அமையும். சமூகவியல் ஆய்வில் முன் மாதிரிக்குழுக் கோட்பாட்டினைப்பற்றித் தொழிற்பாடல்களைக் கொண்டு ஆய்வு செய்வதற்கு அறிமுகமாக இக்கட்டுரை அமைகின்றது என மேலும் விளக்கலாம். இக்கோட்பாடு பற்றி ஆய்வுகள் மிகுதியாக நிகழ்த்தப்படவில்லை. தமிழ்நாட்டுப்புறப் பாடல்களைக் கொண்டு இம்முறையில் ஆய்வு செய்யப்படவில்லை என்பதால் முன்னோடியாய் அமையும். இக்கட்டுரையில், ஆய்வு செய்ய வேண்டிய பகுதிகள் பற்றிய விளக்கமே அமைகின்றது.

முன்மாதிரிக் குழுக்கோட்பாடு ஆய்வானது பல்துறைக் கலப்பு ஆய்வு முறைக்கும் ஒரு முகப்படுத்திய ஆய்ந்த ஆய்வு முறைக்கும் மிகவும் ஏற்றதாக உள்ளது. சமூகவியலில் முதலில் ஆய்வைத் தொடங்கியவர்களில் சிலர் சமூகத்தை முழுமையானதாகக் கருதி அதன் பல பகுதிகளுக்கும் நிறுவனங்களுக்கும் இடையில் நிலவும் தொடர்பினை ஆய்வு செய்தனர். சிலர், சமூகத்தின் உள்ளமைப்புக்கள் போன்ற குழுக்கள் அவற்றின் பணிகள் மற்றும் தனிமனிதனின் நடவடிக்கைகள் முதலியவற்றை ஆய்ந்தனர். பரந்த நிலைக்களன் வழி ஆழ்ந்த நுண்ணிய ஆய்வாகவும் மாறிற்று. மீண்டும் பரந்துபட்ட ஆய்வுக் களத்திற்கும் செல்கின்றது. முன் மாதிரிக் குழுகோட்பாட்டு ஆய்விலும் இம்முறைகள் உள்ளமையால் ஆய்வாளர் இந்த ஆய்விற்குத் திரும்புவதும், புதிய ஆய்வாளர் நெறிமுறைகளில் குழப்பம் ஏற்படுத்திக் கொள்ளாமல் ஈடுபடுவதும் எளிதாகும்.

தொழிற்பாடல்களைச் சேகரிக்கின்ற போதே முன்மாதிரிக் குழுக்கோட்பாட்டினை வைத்துக் கள ஆய்வில் ஈடுபட்டால் நாட்டுப்புற மற்றும் பழங்குடியினரிடையே உள்ள மனிதக் குழுக்களையும் தனிமனிதர்களையும் நன்கு புரிந்து கொள்ள முடியும். முன் மாதிரிக்குழுக்களில் இன்றியமையாத கருத்துக் களான முன்மாதிரிக்குழு உயர்வு மதிப்பீடுகள், மற்றவர் களோடு ஒப்பிட்டு உணரும் தன்னிழப்பால் தோன்றும் உணர்ச்சி ஆகிய இவற்றைத் தொடர்பு படுத்திக்கள ஆய்வு செய்யும் போது சமூகத்தில் உயர வேண்டும் என்று எண்ணும் மக்களின் குணத்தன்மைகளை நன்குபுரிந்து கொள்ள முடியும். புரிந்து கொள்வதனால் மாறிவரும் சமுதாயத்தில் மக்களின் சமூகச் சிக்கல்கள் தெற்றெனத் தெரியும். குறிப்பாக அவர்தம் ஏமாற்ற உணர்வுகள், சமூகத்துடன் ஒத்துப்போவதில் அவர் கட்கு சிக்கல்கள் முதலியவற்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். சமூகத்தில் சிக்கலற்ற தன்மை உருவாகப்புதிய கோட்பாடுகளை உருவாக்குவது இதனால் எளிதாகும்.

சமூக அறிவியலாளர்கள், குறிப்பாக சமூகவியல் மற்றும் சமூக உளவியல் ஆய்வாளர்கள், குழுக்கள் மனிதர்களை எவ் வாறு பாதிக்கின்றனர் என்பதனை ஆர்வத்துடன் ஆராய்ந்து வருகின்றனர். குழுக்கள் ஒருவரின் சமூக வாழ்க்கையில் பல விதங்களில் செல்வாக்குடையனவாக உள்ளமையைத் தொழிற் பாடல்கள் காட்டும். ஒரு தனி மனிதரின் சமூக நடவடிக்கை களைக் குழு நடைமுறைப் பழக்கத்தின் மூலம் தான் நிர்ணயிக் கிறது. அதனால் தனி மனிதர் தம் சமூகத்தில் உள்ள குழுக் களின் எதிர் பார்ப்பிற்குத் தகுந்தவாறு நடக்கவேண்டியுள்ளது.

எடுத்துக்காட்டாக, பனையேறி ஒருவர் தன் தொழிலின் கடுமை தெரியாமலிருக்க ஒரு பாடலைப் பாடுகின்றனர். அதில் கற்பனையாகத் தம் காதலியுடன் உரையாடுவதாகப் பாடு கின்றார்.

ஆசை துடிக்குதடி அன்பும் பிறக்குதடி
இன்பமாய் இருந்திடலாம் என் தங்க ரத்தினமே - நாம்
எந்த நாளும் சந்தோசமா என் பொன்னுரத்தினமே'

இவ்வாறு பாடிவிட்டுக் காதலி பாடுவதாகத் தாமே மேலும் தொடர்ந்து,

'மூணு முழம் பூவு வாங்கி முழக்கயிறு கையில் வச்சு
மேளதாளம் கொண்டு வாயேன் என் ஆசை மச்சானே
— எந்தன்
மேனி உனக்குச் சொந்தம் மச்சானே !'

என்று பாடுகின்றார். இங்கு உண்மையாகக் காதலி முன்பு எப்போதோ அவரிடம் கூறியதாகவே வைத்துக் கொண்டாலும் அக்காதலி தன் சமூகத்தில் உள்ள குழுக்களின் எதிர்பார்ப்பிற்குத் தகுந்தவாறு நடக்க வேண்டியிருத்தலால், ஆசையிருந்தும் அவ்வாறு கூறினாள் என்று கருதலாம். காதலி கற்பனையானவளே என ஆய்வில் உறுதிப் படுமானால், கற்பனைக் காதலியைக் கூடத் தம் விருப்பப்படிச் சேர்த்துக் கொள்ள இயலாமல் தடுமாறும் அப்பனையேறியின் நெஞ்சம் சிந்தனைக்குரியது. தம் சமூகக் குழுக்களின் எதிர்பார்ப்பிற்குத் தகுந்தவாறு நாம்நடக்க எப்போதோ ஆயத்தப்படுத்திக் கொண்டிருப்பதும், அதனைக் கனவில்கூட மீற முடியாமல் சிந்தனையிருப்பதுவும் புலனாகின்றன.

இங்ஙனம் தம் குவின் எதிர்பார்ப்பிற்குத் தகுந்தவாறு நடக்க வேண்டியுள்ளவர் மேலும் தமது செயலைச் சூழலுக்குத் தகத்தேர்ந்தெடுக்கவும் செய்வார். அதற்கும் தொழிற்பாடல்களில் சான்று உள்ளது. கொங்குநாட்டுக்காட்டுப் பகுதியில் இலந்தைப் பழம் கிடைக்கும். முள் மரமாக வளர்ந்திருந்தாலும் தின்பதற்கு ஏதுமில்லாத சூழலில் ஓரளவு துவர்ப்புள்ள இப்பழம் கிடைப்பதே அரிதான செயலாகும். சூழலுக்கு ஏற்ற அதனை மகிழ்வுடன் உலுக்குவதும் பொறுக்கித்தின்பதும் தேர்ந்தெடுத்துக்கொள்ளப் படுகின்றன.

'ஏலேலோ தங்கம் ஏலேலோ
ஏர நல்ல காவலிலே
எரிந்தே நல்லா பழுத்திருக்கு
ஏறி நல்லா உலுக்குனாக்கோ
எடுத்து நல்லா தின்னாக்கொ

ஏரி நல்லா உளுக்குமா
என்னுயிரை மாய்க்கமாண்டே
பார்த்து நலலா பொறிக்கித்தின்னு
பசுங்கிளியே வளர்ந்தபுள்ளே'

சூழ்நிலைக்குத் தகுந்தவாறு குழு ஒப்புக் கொள்ளும் செயலைத் தேர்ந்தெத்திருப்பதனைஇப்பாடல் காட்டும். இன்னொரு பாடல் தனிமனிதர் குழு ஏற்கும் மாறுபட்ட இரு செயல்களையும் செய்வதைக் காட்டும்.

'கள்ளுலே பூச்சி கெடந்தா
கலக்கி குடிக்கிறாண்டி
சோத்திலே கல் கெடநதா
சொந்த பொண்டாட்டிய அடிக்கிறாண்டி'

பொது இடத்தில் உடலுக் கூறுநேரக் கூடிய பூச்சியிருந்தாலும் 'கலக்கி மலக்கி' உண்பவன் சொந்த விட்டிலே சோற்றில் கல் கிடந்தால் மனைவியை அடிக்கிற மாறுபட்ட செயலையும் சூழலுக்கு ஏற்பச் செயலும் சூழல் பற்றியே அமைவதை இது நன்கு காட்டும்.

ஒருவர் ஒரு குறிப்பிட்ட செயலையோ அல்லது நடைமுறை வழக்கங்களையோ விரும்புவது பெரும்பாலும் அவர் அவற்றின் மேல் கொண்டுள்ள மனப்பான்மையைப் பொறுத்துள்ளது. ஒருவர் தமக்கு எந்த நடைமுறை தேவை என்று கருதுகின்றா ரோ நல்லதோ கெட்டதோ அதனைப்பின்பற்றுவார். இதற்கும் சான்று உள்ளது.

'அம்மனியக்கா வீட்லெ ஒன்றைப் பாடலாம் சாராயொ
மூடிவெச்சா மொன மொனங்கு அம்மணியக்கா சாராயொ
அடுத்த வீட்லெயும் சடுத்தம் போடுது அம்மணியக்கா சாராயொ
வாங்குறியலெ மலர வாங்குது அம்மணியக்கா சாராயொ
... ...
ரண்டு பெட்டியாங் கருப்பிட்டியா ரண்ரை பாட்லாங் சாராயோ

சாராயம் காய்ச்சுதல், சட்டம் போட்டுத் தடுத்தாலும் பெருகி யுள்ளமைக் காரணம் ஒருவர் ஒரு குறிப்பிட்ட செயலை விரும்புவதனால்தாம் என்பது இப்பாட்டு உணர்த்தும் ஒரு செய்தியாகும். தடையிருந்தாலும், நாட்டுப்புறங்களில் பட்டைபோட்டு கருப்பட்டியைக் கலந்து ஊறவைத்து ஆண்கள் மட்டுமல்லாமல் பெண்களும் சாராயம் விற்கும் நடைமுறை வழக்கம் தொடர்ந்து விரும்பப்படும் நிலையும் புலப்படுகின்றன.

இம்மாதிரியான நடைமுறைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்போது எப்போதும் சில குழுக்களை முன் மாதிரியாக ஒருவர் கொள்வார். அந்த முன் மாதிரிக் குழுக்கள் அவர் அங்கத்தினராக உள்ள சொந்தக் குழுவாக இருக்கலாம். அல்லது பிற குழுக்களாக இருக்கலாம். மேற்கண்ட பாடல்களில் உள்ளவர்கள் அவர்கள் அங்கத்தினர்களாக உள்ள குழுக்களைக் சார்ந்தவர்களே என்பது வெள்ளிடைமலை. ஒருவரின் வாழ்க்கையைப் பாதிக்கும் பல்வகைக் குழுக்களில் முன் மாதிரிக் குழுக்கள் தாம் அவருடைய மனப்பான்மை, உயர் மதிப்பீடுகள் மற்றும் நடவடிக்கைகளை உருவாக்குகின்றன.

நாட்டுப்புறப் பாடல்கள் காலங்காலமாகப் பாடப்பட்டு வருகின்றன. அவற்றில் முன் மாதிரிக்குழு என்றோ இடம் பெற்றிருக்கும். அதனைப் பாடுபவர் பாட்டாக ஆய்வில் சேர்த்துக் கொள்ள இயலுமா என்ற வினா எழக்கூடும். காலங்காலமாய்ப் பாடப்பட்டு வந்தாலும் தம் குழுவைச் சார்ந்தவர் ஏற்றுக்கொண்டிருப்பதனால் அதற்கு ஏற்றுவாறு எதிர்பார்ப்பிற்கு ஏற்பவே நடக்க விரும்புவோர் மனதில் இப்பாடல்கள் தாமாகப் பதிந்துவிடும். அல்லது பதித்துக் கொள்வர். தாம் ஏற்க விழிம்பாத பாடல்கள் மறைந்து விடும்; அல்லது மறந்து விடும்,

ஆனந்தரங்க பிள்ளை காலப் பழக்க வழக்கங்கள்

இரா.வாசுகி
புதுவைப் பல்கலைக்கழகம்

பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் சமுதாயத்தின் தேவைகள் அடிப்படையில் தோன்றியவைகளாகும் தனி மனித பழக்கங்களே காலப் போக்கில் கட்டமைப்புடைய மக்கள் குழுக் களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வழக்கங்களாகவும் மாவுகளாக வும் நிலை பெறுகின்றன.

பழக்கம் என்பது ஒரு கற்கும் இயலாகும். இது தனி மனித னிடம் இயல்பாக வந்தமைந்த நடத்தையை குறிப்பதாகும் பழக்கம் வளர்ச்சிக்கு இன்றியமையாத கூறாகக் கருதப்படு கின்றது. நனவுடன் தொடங்கிய செயல் நாளடைவில் நன வின்றியே நிகழ கூடியதாக ஆகிவிடும் செயலையே பழக்கம் என்பர்.

பழக்கத்தின் தொடர்ந்த நிலையே வழக்கமாகும். வழக்கம் சமூகம் சார்ந்த ஒன்றாகும். ஒரு இனத்தின் ஒரு சிறு பகுதியைச் சார்ந்தோ சிற்சில நாட்டினர் மட்டிலும் அல்லது அவருள் ளும் ஒரு சிறு வகுப்பின்ரோ (அ) தனியான ஆட்கள் மட்டிலு மோ செயல்களை ஒழுங்காக செய்து வருவதை வழக்கம் என்று கூறுகின்றோம்.

வழக்கத்தின் முக்கிய பண்புகளாக ஒரு நிலையான நட வடிக்கை, வழிமுறை சமூகப் பண்பு, சரி தவறு என்ற மதிப்புத் தீர்ப்பு ஆகிய மூன்று காரணிகளைச் சமூகவியலார் (Sociologist) சுட்டுவர்.

பழக்கம் வழக்கம், மரபு என்ற சொற்கள் ஒன்றோடொன்று உறவுடையன. இப்பழக்க வழக்கங்கள் மக்களை பிரஞ்சியர் காலத்தில் குறிப்பாக ஆனந்தரங்கம் பிள்ளையின் காலத்தில் எவ்வாறு ஆட் கொண்டன என்பதை அவரின் நாட்குறிப்பின் மூலம் ஒரு சிலவற்றை அறிய முயலுதலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வாணிகம் செய்யும் பொருட்டு பிரஞ்சுக்காரர்கள் வந்து இடம் பிடிப்பதற்கு முன் புதுச்சேரியில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்தமைக்கான குறிப்புகளை வரலாற்றில் ஐயமற காணமுடியவில்லை. ஆயின் வாழ்ந்திருந்தவர்கள் பெரும்பாலோர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை வரலாறு நமக்கு கோடிட்டு காட்டுகிறது. வேதபுரீசர் கோயில், மணற்குள விநாயகர் கோயில். காளத்தீஸ்வரன் கோயில், பெருமாள் கோயில் முதலிய கோயில்கள் அக்காலத்திலேயே இங்கு இருந்தன.

புதுச்சேரியில் பிரஞ்சு வாணிக நிலையத்தின் முதல் கவர்னராக இருந்த 'பிரான்சுவா மார்த்தேன்' சென்னையில் இருந்து தானப்ப முதலியார் என்னும் கிருத்துவத் தரகரை அழைத்துக் கொண்டு வந்தார். பிரான்சிலிருந்து வந்த வெள்ளையர்களுடன் கிறித்துவ மதத்தைப் பரப்பும் பொருட்டு வெள்ளைக்காரப் பாதிரியார்களும் வந்தனர். ஆனந்தரங்கன் காலத்தில் இந்துமதம் நல்ல நிலையில் இருந்தது. எனினும் ஆட்சியாளர் கிருத்துவர்களாய் இருந்தமையால் கிருத்துவ மதப் பிரசாரமும் மதமாற்றமும் அவ்வப்பொழுது நடந்த வண்ணம் இருந்தன. இந்துக்கள் கிருத்துவர்களிடமும் கிருத்துவர்கள் இந்துக்களிடமும் பழகி வந்ததன் காரணமாக ஒரு சில பழக்க வழக்கங்கள் அந்நாளில் இரு மதத்தினரிடமும் இருந்து வந்துள்ளமை அறிகின்றோம்.

சமய தீட்சை வெறும் பழக்கம் அக்காலத்தில் இருந்திருக் கின்றது. 'பஞ்சமி உத்திராட நட்சத்திரத்திலே தம்பி திருவேங் கடப் பிள்ளை அவர் பெண் ஜாம் காளத்தியம்மாள் அவர்கள அளவுப்பேர் அனைவரும் கூட நம்முடைய அளவுப் பசங்கள்

சிறுக்கிகள் சமஸ்தான பேரும் சாயங்காலம் போய் ஆசாரியாரவர்களைத் தரிசனம் மண்ணிக் கொண்டு இற்றை நாள் காலமே அனைவரும தீஷை வாங்கிக் கொண்டு மறுபடியும் சாயங்காலம் வந்து சேர்ந்தார்கள்'.

கடன் வாங்கியவர்கள் தான் வாங்கிய பணத்தை வாங்க வில்லை என்றால் கோவிலில் கற்பூரம் அணைத்து சத்தியம் பண்ணுவது வழக்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பழக்கம் இந்துக்கள், கிருத்துவர்கள், முஸ்லிம்கள் என அனைவரிடமும் அவரவர் வழிபாட்டு இடங்களில் அல்லது அவர்களின் நம்பிக்கைக்குரிய இடங்களில் கொள்ளப்பட்டிருக்கின்றது. மக்கள் வேடிக்கைப் பார்க்கும் அளவிற்கு அந்நிகழ்ச்சி நடைபெற்று இருக்கின்றது.

'நீ வாங்கினதில்லையென்று வேதபுரியீஸ்வரன் கோயிலில் தீபத்தை நிறுத்தி சத்தியம் பண்ணிக் கொடு (முதல் பக். 301 - 303)

கோயிலுக்குப் போய் வந்தவாசி திரு வேங்கடப்பிள்ளை சத்தியம் பண்ணும்போது சொன்னது நானிவரிடன் மூன்று தரம் போய் இருபத்தொன்பது பணமும் இரண்டு வேளைபடி அரிசியும் கொடுத்து அறிவேனேயில்லாமல் மற்றபடி வராகன் வாங்கினதில்லை என்று தீபத்தை அணைத்தான்'.

'புதன்கிழமை நாள் பதினொருமணி நேரத்திலே ஈசுரன் கோவிலிலே யாரோ இரண்டு பேர் கல் பாசியிலே நரகலைக் கரைத்து வந்து பலிபீடம் சுற்றியிருக்கிற தெய்வங்களின் தலையிலேயும் விட்டு ஈசுரன் சன்னதி சாலக வாசலாலே உள்ளேயும் இறைத்துநந்திகேசுரன்பேரிலேயும்அதையும்உடைத்துப்போட்டு கோவில் இடித்திருக்கிற வழியோடே புறப்பட்டுப்போகிறார்கள் கோவிலிலே பண்ணியிருக்கிற ஆகூசியெல்லாம் பெரிய கிரகஸ்தர்கள் பார்த்து அவர்களும் நாலுபேர் பிராமணரும் புறப்பட்டுப் பிராமண வீதி முதல் சகலவீதிகளிலேயும் போய் வீட்டுக்கு ஈசுவரனுக்கு பூசையில்லை. ஈசுவரன் பேரிலேயும் தேவி பேரிலேயும் ஆணையிருக்கிறது. யாரும் அடுப்பு மூட்டி

சமைக்கத் தேவையில்லை. சாப்பிடவும் தேவையில்லை என்று (முதல் 261-263) கட்டளையிட்டார்கள்' தெய்வ நிந்தனை என்றும் தங்களின் மதத்திற்கு இழுக்கு என்ற நிலைவரும் போதும் ஒழுக்கத்துடன் கூடிய பழக்கத்தை மக்கள் மேற் கொண்டிருந்திருக்கின்றார்கள் பிரச்சனையைப் பற்றி பேச இந்துக்கள் ஒன்று கூடியபொழுது பிரஞ்சு அரசு அவர்களை அழித்துத் துரத்திவிடச் சொல்லி உத்தரவு இட அதனை ஏற்று கிரிவோசி பண்டிதன் என்பவர் இவர்களில் ஒரு செட்டியைக் கன்னத்தில் அடித்து ஓடிப்போக சொல்லி திரும்பவும் அழைக்கப் போனார். அப்பொழுது, கூடியவர்கள் பத்துபேர் குறுக்கே விழுத்து நீர் அடிக்கிறதென்ன? அவரவர் மதத்துக்கு அவரவர் கள் கூடார்களா? எங்கள் கோவிலிலே இப்படியெல்லாம் பண்ண காரியமென்ன இது துரையவர்கள் விசாரிக்க வேணுமென்று நாங்கள் கூடினால் நீர் வந்து அடிக்கிறதென்ன எல்லோரையும் கொன்று போடுங்கள் என்ற வரிகளால் மதத்திற்காக உயிரை யும் கொடுக்க துணிந்த நிலையைக் காண முடிகிறது.

ஒழுக்கம், பண்பாடு என்பது அனைத்து மதத்தவர்களா லும் போற்றப்பட்ட கொள்கை, ஒழுக்கத்திற்கும் பண்பாட் டிற்கும் எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள் பெண்கள். தாங்கள் ஆடை அணிகலன் அணியும் முறையினின்று சிறிது மாறுபட்டாலும் எத்தகைய அவமரியாதையைப் பெற்றார்கள என்பதை பின் வரும் நிகழ்ச்சி தெரிவிக்கின்றது.

'இன்றைய தினம் பறையர் சட்டைக்காரர், வெள்ளைக் காரர், தமிழர் அனைவரும் கூடத்தானேயிருந்து பூசை கேட்கிற விடத்திலே கனகராய முதலியார் உடன்பிறந்தான் குமாரன் ஆசாரப்ப முதலியார் பெண்சாதி அவர்கள் சாதியிலே இட வேண்டிய உவமையெல்லாம் தரித்துக் [கொண்டு]பரிமளாசுகந்த சுகந்தத்துடனே துலாம்பரமாயிருக்கப்பட்ட சல்லாப் புடவை யைக் கட்டிக் கொண்டு சுவாமிக்கு அடுத்தாற் போலேயிருக்கப் பட்ட சிரேஷ்டராயிருக்கிற பாதிரியாரன்டையிலே போய் முட்டிக்காலின் பேரிலேயிருந்து கொண்ட தேகத்தியானமாய்ப் பூசை கேட்கிறவிடத்திலே அந்த சுகந்த பரிமள சுகந்தத்தினு உடைய வாசனை பாதிரியார் மேலே பட்டவுடனே அவர்

பூசை சொல்லுகிறதைவிட்டுவிட்டு மூக்கைப் பிடித்துக் கொண்டு கையிலேயிருக்கிற பரம்பினாலே, கொண்டையிலே குத்தி நீ கலியாணக்காரி அல்லவா நீ தேவடியாளா, உன்னுடைய புருஷனுக்கு வெட்கமில்லையா சரீரம் மார்பு ரோமத்துவாரமெல்லாம் தெரியத்தக்கதாகச் சல்லாப்புடவையைக் கட்டிக்கொண்டு கோயிலுக்கு வருவார்களா? புண்ணியவதி நீ பூசை செய்தது போதும் எழுந்திருந்து வீட்டுக்குப்போ' (முதல் 215) என்று கூறினாராம்,

கிருத்துவர்கள், இந்துக்கள் பழக்கவழக்கங்களை நாட்குறிப்பு தெரிவிப்பது போன்றே முஸ்லீம் பழக்கங்களையும் தெரிவிக்கின்றது.

குரானின் மீது சத்தியம் செய்யும் பழக்கத்தை கொண்டிருந்த முஸ்லிம்கள்பந்தயங்களைத் தங்களுக்குள்வைத்துக் கொள்வதும், வெற்றி அடைபவர்கள் இதனைச் செய்ய வேண்டும், தோல்வி அடைபவர்கள் இதனைச் செய்ய வேண்டும் என்ற வரன்முறைகளையும் தங்களின் வழக்கமாக கொண்டிருந்திருக்கின்றனர்,

'அன்வர்ருதிகானின் மகன்களாகிய மாபூபுகானிம், மமுதல்லிகானும் ஒன்று தங்கள் பிராணன் போகிறது அல்லவென்றால் புதுச்சேரி சாதிக்கிறது. இதற்குநீர் தடைசொன்னால் இந்தட்சணங் கழுத்திலே புடவையைக் கிழித்துப்போட்டுக் கொண்டு பக்கிரியாகி போய் விடுகிறேன்' (மூன்றாம் 280)

என்று தம்முன்னோர்கள் அடைந்தால் வெற்றிஇல்லை எனில் வீரமரணம் என்ற கொள்கையுடன் விளங்கியமையைச் சுட்டுகிறார்கள்.

'நாசர்ஜஸ கலியாணம் பண்ணியிப்போ பதினெட்டு வருஷமாச்சுது அப்போ கலியாணத்தின் போது அம்மான் குடுத்த அங்கி பாகை நடுக்கட்டு வகையறா யென்னென்ன சாமான்களுண்டோ அதுக்களெல்லாம் எடுத்து வைத்து ஆரத்தனம் இழைத்த கல், சொபன்சு, கையிலே கட்டுகிற பொன்சிரெண்டு மிரண்டு பதக்கமும் யிதல்லாமல் சிறோப்பாவோடேயின்றைக்கு

அஞ்சாம் நாள் கொள் கொடுத்து அவரும் சகலசம்பிரத் துடனே வருகிறார்; (ஏழாம் 104-105)

தங்களுக்குள் வாரிசுரிமையில் பிரச்சனை என்றாலும், முசபர்சங்கும் தானும் ஏக சாரீமென்று நாசர்சஸ் மனதிலே கெட்டியாய் விழந்தது அதனால் தான் என்று ஆனந்தரங்கர் எழுதுவதிலிருந்து பழக்கவழக்கங்களை முஸ்லிம்கள் சிறப்பாக மதித்த பாங்கினை அறிகின்றோம்.

புதுவையில் திருமணம், பூப்புநீராடல் முதலிய பல சடங்கு கள் வைதிகமுறைப்படி நடைபெற்றன திருமணத்தில் தனித்த மணமகன் ஊர்வலமோ மணமகள் ஊர்வலமோ நடந்ததாக தெரியவில்லை. அக்காலத்திலிருந்த பெருவணிகர் கேஷசல செட்டியின் பெண்கள் இருவருக்கும் திருமணம் நடந்தபோது பல்லக்கில் மணமக்கள் ஊர்வலம் மிகச் சிறப்பாக நடந்த செய்தியை நாட்குறிப்பினால் அறியமுடிசிறது.

மதுவருந்தும் பக்கமுடைய மக்கள் புதுச்சேரியில் வாழ்ந்தன ரென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை மதுவிலக்குக் கொள்கை ஆனந்தரங்கர் காலத்தில் (1741-பிப்ரவரி27 முதல் தொகுதி) கொண்டு வரப்பட்டது என்பதை அறியமுடிகிறது. தடையை மீறிக் குடிப்பவர்களுக்கும், கள், சாராயம் விற்பவர் களும் கடுமையான தண்டனைகள் வழங்கப்படுமென்பதைத் தமுக்குப் போட்டு அறிவித்தனர்.

எல்லாவற்றையும் மனிதாபிமான இயல் என்ன வென்றால் மதுவிலக்குச் சட்டத்தை மீறி நடப்பவர்களிடமிருந்து வசூலிக்கப் படும் அபராதத் தொகையின் ஒரு பகுதி பிச்சைக்கார நிதி யாகப் பயன்படுத்தப்படும் முதல் (114-115) என்பதேயாகும். பணம் வைத்து சூதாடும் பழக்கமும் புதுவையில் இருந்தது. கவர்னர் துய்ப்ளெக்சு தமக்குச் சேரவேண்டிய பணத்தை ஏன் இன்னும் செலுத்தவில்லையென்று ஆனந்தரங்கரிடம் கண்டிப் பாகக் கேட்ட பொழுது நான் உங்கள் பணத்தை வைத்து சூதாடி விட்டேனா ? என்ன என்று அவர் விடை கூறுகின்றார்.

தமிழ்[redacted]முன்னோடி
சி. வை. தாமோதரம் பிள்ளை

ந. விசாலாட்சி
சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ்க்கல்வி

தமிழ்த் தந்தை எனப் பல்லோராலும் அன்புடன் அழைக்கப் பட்டும், இலங்கை யாழ்ப்பாணத்திலுள்ள சிறுப்பட்டி என்னும் சிற்றூரில் இராவ் பகதூர் சி. வை. தாமோதரம் அவர்கள் (1832 - 1901) பிறந்தார். இவரது பெற்றோர் வைரநாதப் பிள்ளை, பெருந்தேவி ஆவர். பிள்ளையவர்கள் தம் தந்தை யாரிடத்திலேயே கல்வி பயின்றார். வாக்குண்டம், நன்னெறி, மூதுரை, திவாகரம், உரிச்சொல் நிகண்டு, முதலான நூல்களை ஐயந்திரி பறக்கற்றார். பின்னர் சுன்னரகம் முத்துக் குமாரக் கவிராயரிடத்தில் நைடதம், பாரதம். கந்தபுராணம் முதலான இலக்கியப் பயிற்சியும், இலக்கணப் பயிற்சியும் பெற்றுத் தமிழ் வல்லுநராக விளங்கினார். நெல்லிப்பிழை 'அமெரிக்கன் மிஷின் கலா சாலையில்' சிறிது காலம் கல்வி பயின்ற இவர் யாழ்ப் பாணவட்டுக் கோட்டைக், பல்கலைக் கல்லூரியில் (Jaffna Seminary) தம் பன்னிரண்டாம் அகவையிலேயே கணிதம், தத்துவம், வானசாத்திரம் ஆங்கிலம் முதலான பாடங்களில் முதன் மாணாக்கனாகத் திகழ்ந்தார். கறல் விசுவநாதபிள்ளை வித்துவான் கதிரை வேற் பிள்ளை. நெவின்ஸ், சீடி மில்ஸ் முதலானோர் பிள்ளையவர்களுக்கு ஆசிரியராக இருந்துவந்தனர் இருபது வயதிற்குள்ளேயே (1852) கலாசாலையில் கல்வியை முடித்துக் கொண்டார்.

தமிழ்ப்பணி ;

1852-இல் கோப்பாயிலிருந்த போதனா சக்தி வித்தியா சாலையின் ஆசிரியர்களுள் ஒருவராகவும் விளங்கினார். இவர் சமஸ்கிருதத்தில் நல்ல தேர்ச்சி பெற்றவர். சென்னையிலுள்ள 'தினவர்த்தமானி' என்னும் வார இதழுக்குத் துணையாசிரிய ராகவும் பணியாற்றினார். அடுத்து சென்னை மாகாணக் கல் லூரியின் தமிழாசிரியராகவும் பணியாற்றினார். கள்ளிக்கோட் டையிலுள்ள அரசாங்கக் கல்லூரியில் உதவியாசிரியராக பணி யாற்றினார், வருங்காலத்தில் இவரது திறமையைக் கண்டு, அரசாங்க வரவு செலவுக் கணக்குத் துறையிற் Auditor General Office) கணக்காய்வாளர் பதவியும் கிடைத்தன. திறமையின் பயனாய் விசாரணைக் கர்த்தார் பதவியும் முறையே கிடைத் தன. 1871 இல் சட்டம் பயின்றார். 1887 இல் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் நீதிபதியாக நாண்காண்டுகள்பணியாற்றினார் இருந்துள்ளார்.

பதிப்பு நூல்கள்

1852 — நீதிநெறிவிளக்கம்

1881 — வீரசோழியம்

1883 — தணிகைப்புராணம், இறையனார் அகப் பொருள்

1885 — தொல்காப்பியம் - பொருளதிகாரம்.

1887 — கலித்தொகை

1889 — இலக்கணவிளக்கம், சூளாமணி.

1891 — தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

1892 — ,, சொல்லதிகாரம் (நச்சினார்க்கினியர்)

1997 — புறநானூறு, மணிமிடைபவளம், பரி சோதிககப்பட்டது, வெளியிடப்பட

கட்டளைக் கலித்துறை, வசன சூளா
மணி, சைவயகத்துவம், ஆறாம் ஏழாம்
வாசக புத்தகங்கள் நட்சத்திரமாலை,

கலித்தொகைபதிப்பு

கலித்தொகையை முதன் முதலில் பதிப்பிற்கு முன்னர் தாம் பட்ட கஷ்ட அனுபவங்களை மனம் நொந்து பின்வருமாறு எடுத்துரைக்கிறார் தாமோதரனார், கலித்தொகை மூலப்பாடப் பிரதியொன்றினை முதன்முதல் புதுவை நயனப்ப முதலியாரிடமிருந்து பெற்றார், அது தலையும் கடையுமின்றி ஓர் குறைப் பிரதியாகும். மேலும் பெரும்பாலும் எழுத்துக்கள் சிதைந்து ஒரு பாட்டின் ஒருறுப்பாவது முற்றும் வாசிக்க முடியாமற் கிடந்தாற் படிப்பதற்கே வெறுப்புண்டாகி நீக்கிவிட்டார் (பக் 61-62) மேலும் தொல்காப்பியப் பரிசோதனைக்காகத் தேடும் போது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்களுடைய பிரதியொன்று அகப் பட்டது. கலித்தொகையில் அருமையும் அவை உலகத்திறகுப் பயன்படும் என்பதனையும் உணர்ந்து ஸ்ரீ ஆதின மடாதிபகளுக்கு விண்ணப்பஞ் செய்தார். எஞ்சிய மடங்களிலிருந்து பதில் ஏதும் வராத காரணத்தினால் இந்நூலின் ஆண்டினை அவர் குறிப்பிடவில்லை. பின்னர் சுவாமிகள் அனுப்பிய பிரதிகளைக் கொண்டு மூலாபாடத்தைப் பரிசேபதித்து ஓர்அரும்பத அகராதியும், இலக்கண குறிப்புஞ் சேர்த்து அச்சிட வேண்டுமென்பதற்காக யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ சிற்பகைலாசபிள்ளை யவர்களின் உதவியைக் கொண்டு முடித்தார்.

முன்னுரைச் சிறப்பு:-

கலித்தொகையை ஏட்டியிருந்து நூல் வடிவில் உருவாக்கும் போது எத்தகைய இடையூறுகள் ஏற்பட்டன என்பதை சி. வை. தா அவர்கள் தம்நூலின் முன்னுரையில் அழகுற எடுந்துரைப் பதைக் காணலாம்.

'பழைய சுவடிகள் யாவும் நிலமாய் ஒன்றோடு ஒன்றாய் அழிந்து போகின்ற புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதிவைப்

பாரும் இவர். இந்நாள் தவறினால், பின்பு தவம் புரிந்தாலும் ஒரு தரம் அழிந்த தமிழ் நூற்களை மீட்டல் அரிது. காலத்தின் வாய்ப்பட்ட ஏடுகளைப் பின்தேடி எடுப்பினும் கம்பையும் நாராசமும் தான் மீரும்' இவ்வாறு கூறித் தமிழ் மக்களை, தமிழ் ஏடுகளைக் காக்குமாறு பணித்த அவர், தமிழகத்தின் பல இடங்களிலிருந்து பல ஏடுகளை அரிதில் முயன்று பெற்று அச்சிடும் எண்ணத்துடன் பேணி வளர்த்தார் தமக்குக் கிடைத்த ஏடுகளின் நிலையைப்பற்றி அவர் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகின்றார், ஏடு வைக்கும் போது சொஞ்சொரிசிற்து கட்டு அவிழ்க்கும் போது இதழ்முடிகிறது. ஒற்றைபுரட்டும் போது துண்டு துண்டாய் பறக்கிறது. இனி எழுத்துக்களோ என்றால், வாலும் தலையும் இன்றி நாலுபுறமும் பாணக்கலப்பை மறுத்து உழுது கிடக்கின்றது' இக்கூற்றினால் ஏடு இருந்த நிலை பதிப்புத் துன்பமும் புலனாகும்.

சி. வை. தா பதிப்புநெறிகள்

1. பாட்டுக்கள் தோறும், முதலில் அந்தந்தப் பாட்டின் முதற் குறிப்பினை கூறி இஃதின்ன துறையென்று கிளவி கூறிப் பின்னர்ப்பாட்டு வரும் ஆனால் முதலில் பாட்டும் அதன்கீழ் இஃதின்ன் கிளவியெனக் கூறுங கருத்துரையை அச்சிடல்.

2, பாட்டு முழுவதும் ஒருங்கே தொடர்ந்து வராமல் எடுத்துக்கொண்ட வேண்டிய அளவு பிளவுபட்டுப் பின்னம் யின்னமாய்க் கிடந்ததை ஒரு தொடராகச் சேர்த்து ஒவ்வொரு கலிப்பாவையும் முடித்த பின்னர் அவ்வப்பகுதியை முதலும் ஈறுங் காட்டி மீளவும் பகுத்து அப்பகுதியின் உரையைப் பதிப்பித்தல்.

3. விசேட உரைகள் சில உரைக்கு முன்னும் சில உரைக்குப் பின்னும் சில இடைப்பிறவரலாக உரைக்கிடையினும் சிடந்வற்றை வரிசைப் படுத்தி அனைத்தும் பாடமும் இரையுமாகப் பின்னர் வரும்படி சேர்த்தனம்.

4. தரவு, தாழிசை, தனிச்சொற் சுரிதகமென நிகழும் பாட்டுறுப்புக்களில் மூலம் ஒன்றினும் உரை ஒன்றிலுமாகச் சில இடங்களிற் பிறழ்ந்து கிடந்தவற்றை இரண்டும் ஓரிடத்தில் வருமாறு அமைத்தல் ஆசிரியருடைய மொழிநடைகளில் ஒரு எழுத்துக் கூட மாற்றாமை.

5. முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னே போற்போற்றுதல் என்பதற்கிணங்க இந்நூலினை கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் பயில வேண்டுமென்பதற்காசப் பதினோரிடத்திலும் கூறப்பட்ட இழிசொற்களை அறவே ஒழித்து இன்ன இன்ன மொழி இன்னஇன்னப்பாட்டில் இன்ன இன்ன அடியில் உள்ளன என்பதைக் கண்டுணரலாம்.

தமிழில் அறிவியல் கருத்துகள்

விருதை சாந்தா
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,

வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் அறிவியல் பயன்பாடு மிகுந்துள்ளது. அறிவுக்குப் பொருந்தும் வகையில் கருத்துக்களை காரண, காரியங்களோடு சொல்லும் அல்லது செய்யும் முறை அறிவியல் எனப்படும். விஞ்ஞான முறை என்பது விவரங்களைச் சேகரித்தல் அவற்றுள் ஒற்றுமைகாண ஊகித்தல் அந்த ஊகத்தைப் புதிய விவரங்களைக் கொண்டு சோதித்தல் என்னும் படிகளையுடையது. பலமுறை சோதித்துத் திருத்தி முடிவுகாணும் அறிவுத் தொகுதியே விஞ்ஞானம் என்று கலைக்களஞ்சியம் கூறுகிறது. இவ்வறிவியல் கருத்துக்கள் தமிழில் இடம் பெற்றுள்ளத் தன்மையினை இக்கட்டுரை ஆராயகிறது.

தொல்காப்பியத்தில் அறிவியல்

தமிழில் மிகப் பழமையான நூலாகக் கருதப்படுவது தொல்காப்பியம். இவ்விலக்கண நூலில் அறிவியல் சிந்தனைகள் காணப்படுகின்றன. உயிரின் முயற்சியால் எழும் ஒலித்துகள் உரம், கழுத்து, உச்சந்தலை ஆகிய இடங்களில் மோதி, பின், உதடு, நா, பல் முதலியவற்றின் உதவியால் பல்வேறு எழுத்துக்களாக ஒலிக்கின்றன என்றும், ஒலித்துகள் கொள்கை தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது.

அறிவு என்பது உயிர். உடம்பும் உயிரும் வெவ்வேறானாலும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்கமுடியாது. உயிர் அறிவுத் தன்மையும், உடம்பு அறிவிக்கப்படும் தன்மையையும்

கொண்டன என்னும் தொல்காப்பியர் கூற்றும் சிந்திக்கத் தக்கது.

சங்க இலக்கியங்களில் அறிவியல்

கி.பி. 3-ஆம் நூற்றாண்டுக்கு முன் எழுந்த பாடல்களே சங்க இலக்கியங்களாகும். இவை பாட்டும் தொகையும் என்று இருதிறப்படும், பாட்டு என்பது பத்துப்பாட்டு, தொகை என்பது எட்டுத்தொகை. சங்கஇலக்கிய நூல்களில் புறவாழ்க்கை பற்றிப் பேசும் நூல்களில்தான் அறிவியல் கருத்துக்கள் மிகுதி யாகக் காணப்படுகின்றன. எட்டாம் நாள் பிறையை எண் ணாள் திங்கள் என்றும் ஒலி பொருத்திய முழுப்பக்கமும் தெரி யும் திங்கள் உவுவமதி என்றும் புறநானூறு பேசும்.

உவாவந்து கூடும் நன்னாளில் ஞாயிறும் திங்களும் எதிரெ திராக நிற்கும். திங்கள் தோன்றும் போது ஞாயிறு மறையும் என்பதும் இலக்கியச் செய்திகளாகும். விண்மீன் குறித்த செய் திகள் வானத்து மீன் வான்மீன் பன்மீன் வயங்கித் தோன்றுமீன் என்றும் புறநானூற்றில் பேசப்பட்டுள்ளன.

சங்க இலக்கிய உவமைகளில் அறிவியல் சிந்தனை இடம் பெற்றுள்ளது. முன்றில் எனப்படும் அகன்ற இடத்தில் ஆட்டு கிடாய்களும், சிவலைப் பறவைகளும், கலந்து விளையாடும் காட்சி, நான் மீன்களுடன் கோள்மீன்கள் கலந்திருத்தலை ஒத் திருந்தது என்று பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது. சங்க கால மக்கள் வானவியல் சிந்தனையில் தேர்ச்சியுடையவர்களாக இருந்துள்ளமைக்குப் பலசான்றுகள் கிடைக்கின்றன. வெள்ளை நிறமுடைய கோள் வெள்ளி எனப்படும். இவ்வெள்ளி காலை அல்லது மாலையில் வெளிப்படும் இயல்பினதாகும். காலையில் தோன்றும் வெள்ளியை விடிவெள்ளி என்பர். இரவுப் பொழுது விடிவதற்குக் காரணமாகிய இதனை, ‘வெகுறும் மீன்’ என்று பெரும்பாணாற்றுப்படை பேசுகிறது.

அக்காலத்து மக்கள் வான சாஸ்திரங்களில் நிறைந்த தேர்ச் சியுடையவர்களாக விளங்கியுள்ளனர். அறிவியல், வளர்ச்சி காணாத காலத்திலேயே, அம்மக்கள் கொண்டிருந்த ஆராய்ச்சித் திறம் வியக்கும் வண்ணம் உள்ளது. வெண்மீன் வட திசையில்

இல்லாமல் தென்திசையில் சென்றால் மழை குறையும் என்றும் கோள், மீன் திரிவுகளால் நாட்டில் தீயவிளைவுகள் ஏற்படும் என்பதையும் பட்டினப்பாலை, பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய நூல்களின் துணைகொண்டு அறிய முடிகிறது.

ஓசோன் (Ozone) இது பிராண வாயுவில் ஒருவகை. மிகுந்த வெப்பத்தை, தான் பெற்றுக் கொண்டு குறைந்த அளவு வெப்பத்தை உலகுக்கு அனுப்பும் இயல்புடையதாகும். இக்காற்று தூய்மையானதாகவும் மணமுள்ளதாகவும் இருந்தால் உடல் நலம் நன்மை பெறும். பிராணாயாமம் என்ற முறை தோன்றுவதற்கு இக்காற்றே காரணமாகிறது. இச்செய்தியைச் சங்க காலத்தமிழர்கள் தெரிந்து வைத்திருந்தனர் என்பது புறநானூற்றுப் பாடல்வழி தெளிவாகிறது. மேலும் ஐம்பூதங்களின் பண்புகளையும் பயனையும் உணர்ந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு வானில் நிகழும் மாற்றங்களையும் திரிபுகளையும் உணர்ந்து, கோள், மீன், வெள்ளி போன்றவற்றின் செயல்பாடுகளை அறிந்து சங்ககால மக்கள் இயற்கையுடன் துணையோடும் வாழ்க்கை நடத்தி வந்துள்ளனர். அவர்களது அறிவியல் மனப்பான்மைக்கு சங்க இலக்கியங்கள் தக்கச் சான்றாகும்.

திருக்குறளில் அறிவியல்

உலகப் பொதுநூலான திருக்குறளிலும் அறிவியற் சிந்தனை இடம் பெற்றுள்ளது. தலைவி, தலைவனைச் சந்திக்கிறாள்' இச்செய்தி தலைவியை அறிந்த அனைவருக்கும தெரிந்து விட்டது, பெயர் அதிகமானது. இந்த அளவில் ஊர் முழுதும பரவிற்று என்பதைத் 'திங்களைப் பாம்பு கொண்டது போல' என்னும் உவமை வாயிலாக விளக்குகிறார் வள்ளுவர். எனவே திங்கள் மறைவு குறித்த சிந்தனை, வள்ளுவர் காலத்திலேயே இருந்துள்ளமை புலனாகிறது. அக்காலத்தில் கண்ணாடி என்பது பளிங்கு என்று அழைக்கப்பட்டதாகக் கருதலாம். கண்ணாடி தன்மீதும் படும் ஒளிக்கற்றைகளை எதிரொலிக்கும் பண்புடைய

தாகும். ஒளி ஊடுருவல் தன்மையை வள்ளுவர் உரைப்பதன் வழி அறியமுடிகிறது.

காப்பியங்களில் அறிவியல்

புதியன படைக்கும் அக்காலக் கவிஞர்களும் தத்தம் படைப்புகளில இலக்கிய நயம், கற்பனை வளம், சொற்செறிவு உணர்ச்சிக் கூறுகளை உள்ளடக்கிக் காட்டுவதோடு அறிவியல் சார்ந்த உண்மைகளையும் வெளிப்படவோ மறை பொருளாகவோ அமைத்துக் காட்டியிருத்தல் கூடும் என்பதற்கேற்ப காப்பியங்கள், அக்காலச் சூழலுக்கேற்ப அறிவியல் கருத்துக்களுக்கும் இடமளித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

வானவியல் கருத்துகள் பல இடங்களில் இடம்பெற்று வந்துள்ளன. பெரும்பாலும் காப்பியங்கள் மற்றும் சங்கப் பாடல்களில் வானவியல் கருத்துக்களே பேரளவு இடம்பெற்றுள்ளன. கோள்கள் முரண்பட்ட நிலையிலும், உலகின் பிற பகுதிகளில் மழை பொய்த்துவிடினும், குடகு மலையில் மழை சுரந்து, காவிரியில் நீர்பெருக்கு வந்து, புகார் நகரை வளமுடையதாக்கும் என்னும் செய்தி சிலப்பதிகாரத்தில் நிலைத்துள்ளது. மேலும், இளங்கோவடிகள் தம் காப்பியத்தில், ஊசலில் ஒரு பெண்ணை அமரச் செய்து அவ்வூசலை ஆட்டுவதற்கு ஒரு தோழியையும் நிறுத்துகிறார். அத்தோழி தான் இருந்த இடத்தில் நின்றவாறே ஊசலல் அமர்ந்திருக்கும் பெண்ணின் முதுகில் தட்டும்போது, ஊசல் முன்னும் சமகால அளவை எடுத்துக் கொண்டு அசைகிறது. இக்கருத்தமைந்த பாடல் சிலம்பில் இடம்பெற்றுள்ளது இச்செய்தி கலிலியோவின் ஊசற் கொள்கையை நினைவூட்டுவதாகவோ பிரதிபலிப்பதாகவோ அமைகிறது.

மணிமேகலை காப்பியத்தில் உதயகுமாரனையும் மணிமேகலையையும் ஒரு பளிங்குச் சுவர் பிரித்து வைக்கிறது. பளிங்கு (கண்ணாடி) ஒளிக்கு வழிவிட்டு, ஒலியை தடுத்து நிறுத்தும் பண்புடையதாகும். ஆகவே, உதயகுமரன் பேசிய வார்த்தைகள் மணிமேகலைக்குக் கேட்கவில்லை. பளிங்கின் ஒலிப்புகாத் தன்மையை மணிமேகலைப் பாடல் தெளிவுறுத்துகிறது பறவை

கள் காற்றைவிடக் கனமானவை, பறவைகள் பறப்பதையும், இறங்குவலதயும் சிந்தாமணிப் பாடல் உணர்த்துகிறது. பறவைகளின் செயல்பாடுகளும் நவீன விமான கண்டு பிடிப்புக் ஓர் அடிப்படைச் சிந்தனை என்பது குறிப்பிடத்தக்கது.

சித்தாந்த நூல்களில் அறிவியல்

தமிழ் நிலத்திற்குரிய சமயங்களில் சைவமும் வைணவமும் குறிப்பிடத்தக்கன. சமய நூல்களே பக்தி இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன கி.பி.14ஆம் நூற்றாண்டில் சைவ சித்தாந்த நூல்கள் தோற்றம் பெற்றன எனலாம். சைவசமயத்தின் உயிர் நூலாக விளங்குவது சிவஞானபோதமாகும். இந்நூலில் அறிவியல் சிந்தனையோடு கூடிய கருத்துக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

பளிங்கு, தன்னாற் சாரபபட்ட பன்னிறங்களையும் காட்டும் தன்மையது. அதுபோல ஆன்மாவும் இந்திரியங்களினுடைய குணங்களைக் காட்டும் தன்மையது என்பதை மெய்கண்டார் உணர்த்துகிறார் இரும்பினை வலித்துக் கொள்ளும். காந்தம் போல என்றும் உவமை வாயிலாக, அவரவர்கள் வினையின் பயனை உயிர்களின் முதல்வன் நுகர்விக்கிறான் என்று குறிப்பிடுவர். நெருப்போடு சேர்ந்த இரும்பு தன் இயல்பான தன்மையிழந்து நெருப்பாய் மாறுவது போல ஆன்மாவோடு சேர்ந்த இறைவன் அவ்ஆன்மாவை அடக்கி சிவனும் தானாகி நிற்பான் என்று சிவஞானபோதம் எடுத்துக் காட்டுகிறது. இதுபோன்ற பல அறிவியற் சார்ந்த கருத்துக்கள் இந்நூலின்கண் இடம் பெற்றுள்ளன.

ஆய்வு முடிவுகள்

தமிழ் நூல், அறிவியல் கோட்பாடுகளில் இயற்பியல், வானவியல் கருத்துக்களே மிகுதியாக இடம் பெற்றுள்ளன.

பழந்தமிழர்களது அறிவியல் சிந்தனைக்ளில் மிகுதியும் செல்வாக்குப் பெற்றிருப்பது அணுமற்றும் ஐம்பெரும் பூதங்கள் பற்றிய செய்திகளோயாகும்.

பிரமசக்தியம்மன் கதை வில்லுப் பாட்டில் சொல்லாராய்ச்சி

சிவ. விவேகானந்தன்,
கேரளப் பல்கலைக்கழகம்

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட 'பிரமசக்தியம்மன் கதை' இரு பாகங்களால் ஆனது. முதற்பாகம் வலைவீசியம்மன் கதை என்றும் இரண்டாம் பகுதி பிரமசக்தியம்மன் கதை என்றும் வழங்கப்படுகிறது. முதற்பாகத்தில் நிறைவு பெறாத நோக்கம் (சண்டமுண்டனை அழித்தல்) பிரமசக்தியின் உதவியால் நிறைவு பெறுவதால் இரண்டு பாகங்களையும் சேர்த்து 'பிரமசக்தியம்மன் கதை' என்று வழங்குவதே பொருத்தமானது ஆகும்.

கதைச்சுருக்கம்

சிவனும் பார்வதியும் தனிமையில் பேசிக் கொண்டிருந்ததை முருகன் வண்டுருவில் பார்வதியின் கொண்டையினுள் இருந்து கேட்டதால் முருகனைக் கடலில் மகரமீனாகவும் முருகனைக் கொண்டையினுள் மறைந்து வைத்த குற்றத்திற்காகப் பார்வதியை மங்கைப் பதி பரதவர் குலத்தலைவன் அதியரசனின் மகளாகவும் பிறக்கச் சாபமிட்டார் சிவன். குறிப்பிட்ட காலம் வந்தவுடன் கடலில் கிடந்த மீனைப் பிடித்து பார்வதியைமனம் முடித்து கயிலையில் விற்றிருந்தார் அப்போது சிவபார்வதியரைக் காணவந்த தேவர்களிடம் சிவன், கடலில் கிடக்கும் பொன்னரிய மாலையைக் கேட்டார். [தேவர்கள் கடலைக் கடைந்து பொன்னிரிய மாலையைப்பெற்று சிவனுக்குக்கொண்டு செல்லும் வழியில் சண்டமுண்டன் மாலையைப் பறித்து சென்று விட்டான். அவனைக் கொன்று மாலையைமீட்டு வர பார்வதியின் வேண்டுகோளால் சிவன் பிரமசக்தியை வேள்வியிலிருந்து பிறவி செய்தார். பிரமசக்தி தனக்கு ஒரு தம்பி வேண்டுமெனக்

கேட்க, சிவன் தன் வலது கண்ணிலிருந்து பலவேசமுத்துவும் சண்டமுண்டனைக் கொன்று மாலையை பறித்து சிவனிடம் சேர்த்து வரமும் பரிசும் பெற்றனர்.

இக்கதையில் உள்ள வட்டார வழக்குச் சொற்கள், பிற மொழிச் சொற்கள், இன்னோசைச் சொற்கள், இணைச்சொற் கள், ஒலிக்குறிப்புச் சொற்கள், அடுக்குத் தொடர்கள், இரட்டை கிளவி போன்றவற்றை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

வட்டாரவழக்குச் சொற்கள்

ஒரு வட்டத்திற்குள் பயின்று வரும் சொற்களை வட்டார வழக்குச் சொற்கள் எனலாம். 'ஓர் இடத்தார் அல்லது ஓர் இனத்தார், ஒரு கூட்டத்தைச் சார்ந்தனர் அல்லது ஒரு தொழிலைச் சார்ந்தவர் தமக்குள் தடையின்றி விளங்குமாறு இயல்பாகப் பேசி வரும் மொழி கிளை மொழியாகும்' என்பார் டாக்டர்.மு. வரதராசன் (மொழி வரலாறு 1966:159). 'தனி மனிதர் பேச்சில் ஒருவர் பேசும் பேச்சுக்கும் மற்றொருவர் பேசும் பேச்சுக்கும் எப்பொழுதும் சிறு வேறுபாடுகள் இருந்து கொண்டேயிருக்கின்றன. ஒவ்வொரு தனிமனிதரின் பேச்சைத் தனியாகக் குறிப்பிட்டால் இதனை தனிவழக்கு (idolect) என்பர் ஒருவருக்கு மேற்பட்டவர் பேசும் மொழியை பேச்சு வழக்கு (dialect) என்பர். இடத்துக்கு இடம் மக்கள் பேச்சுத் தொடர்பு குறைவதால் மொழியிலும் வேறுபாடு காணப்படு கிறது. அதேப்போலச் சாதிப் பிரிவுகளாலும வாழ்க்கை நிலை யாலும் தனித்துப் பிரிந்து வாழ்வதால் பேச்சு வழக்குகளில் மாறுபாடுகள் காணப்படுகின்றன. கிராமங்களில் பெரிய நகரங் களோடு தொடர்பு கொள்ளாமல் தனித்து வாழ்வதால் கிராம மக்கள் பேச்சில் தனி இயல்பு காணப்படும். ஓரிடத்து கிராம மக்கள் பேச்சிற்கும் வேறிடத்துக் கிராம மக்கள் பேச்சிற்கும் மொழி, ஒலித் திரிபாலும் சொல்லாட்சியாலும் சொல்லுக்குக் கொள்ளப்படும் பொருள் மரபாலும் வாக்கிய அமைப்பாலும் மாறுபடுகிறது. (ரா, சீனிவாசன், மொழியியல், 1978, 216-217)

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பிரமசக்தியம்மன் கதை வில்லுப் பாட்டில் ஆசிரியர் திருநெல்வேலி. வ உ.சி;, கன்னியாகுமரி மாவட்டங்களின் பேச்சுத் தமிழைகையாண்டுள்ளார்.

சான்றாக, வயிறனே (வ வீ.க – 4) கோவித்து (வ.வீ.க.170)
மூழித்து வ.வீ,க.-306 குமறி (பி.ச க.75)
மரியாதி (பி.ச.க - 281) உத்த (பி.ச.க 60)

போன்ற சொற்களைக் காணலாம், இந்த வட்டார வழக்குகளால் அக்காலப் பேச்சு நடையையும் சமுதாய நிலையினையும் அறிய முடிகிறது.

பிறமொழிச் சொற்கள்

தொல்காப்பியர் இயற்சொல், திரிசொல, திசைச்சொல், வடசொல் ஆகிய இவற்றையே செய்யும் சொற்களாகக் குறிப்பிட்டார். ஆனால் இலக்கியத்தில் பிறமொழிச் சொற்களும் கலந்தன. வடமொழி என்பது தமிழ் அல்லாத பிறமொழிச் சொற்களைக் குறித்தன. இவ்வில்லுப் பாட்டில் உரையாடல்கள் பேச்சுத் தமிழிலேயே அமைந்துள்ளன. பேச்சு வழக்கில் பிறமொழிக் கலப்பு இயல்பானதே. இங்கு வடமொழி, மலையாள மொழிச் சொற்களை ஆசிரியர் கையாண்டுள்ளார்.

கந்தரம் (வ வி.க -136) வாசகம் (வ.சீ.க. 210), தோத்திரம் (பி.ப.க.52). நமஸ்கரித்தார் (பி ச.க. 208) போன்றச் சொற்கள இவ்வில்லுப் பாட்டில் பயின்று வந்துள்ள வடமொழிச் சொற்களுக்குச் சான்றாயும் (பறயாதே பி. சக 1137), உடக்கினார் (பி.ச.க. 1149) போன்ற சொற்கள் மலையாள மொழிக்கு சான்றாயும் அமைகின்றன. பேச்சு வழக்கில் பிறமொழிச் சொற்கள் பரவலாகக் கலந்து விட்டமையே இக்கலப்புக்குக் காரணம். பிறமொழிக் கலப்பு பொருள் விளக்கத்திற்குக் துணை செய்கின்றன மேலும், ஆசிரியரின் பன்மொழிப் புலமையும் சுட்டுகிறது.

இன்னோசைச் சொற்கள்

பேச்சுமொழியில் ஒலி நயக் கருதி சில சொற்களை மக்கள் பயன்படுத்துவதுண்டு. இவற்றை இன்னோசைச் சொற்கள் எனலாம்.

சான்றாக, 1. நாதகீதவேத போத மான காதிலாவுதே நனககளாகவே (வ,வீ.க. 928)

2. வங்கார சிங்கார மாம்பட்டுச் சேலைகள் (பி. ச. க. 825)

இணைச் சொற்கள்

இருவேறு சொற்களை ஒலிநயம் கருதி இணைத்து ஒரு தொடராக வழங்குவதுண்டு. இவை இணைச் சொற்கள் எனப்படும். பேச்சு வழக்கில் இயல்பாக வரும் இணைச் சொற்கள் வில்லுப் பாட்டில் வருவதைக் காணமுடிகிறது.

எ.டு. 1) உன்னியே ஒன்றாய் இரண்டாய் மூன்றாய் உயர் நாலைந்தாகி (வ.வீ.க 45)

2) முன்னும் பின்னுமாம் வருகிறபோது (பி. ச. க. 1321)

ஒலிக்குறிப்புச் சொற்கள்

ஒலிக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்துவது ஒரு நடையில் உத்தியாகும் பொதுவாக இவை படிக்கின்றவர்களை நிகழ்ச்சி நடந்த இடத்திற்கே அழைத்துச் செல்கின்றன. சூழலோடு ஒன்ற வைக்கின்றன. படிப்பவர் கதைச் சூழலின் மணத்தை நுகர முடிகின்றது. ஒலிக்குறிப்புச் சொற்களைத் தகுந்த முறையில் பயன் படுத்துவதன் மூலம் ஓர் ஆசிரியரின் காலத்தையும் சூழலையும் தெளிவாகச் சித்தரிக்க முடியும் என்பார் ஜே. நீதிவாணன் (நடையியல் ஆசிரியர் இருவகையாகக் கூறுவார். அவ்வடிப்படையில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பிரம சக்தியம்மன் கதை வில்லுப் பாட்டில் கையாளப்படும் ஒலிக் குறிப்புச் சொற்களைப் பகுத்துக் காணலாம்.

1) ஒரு குறிப்பிட்ட ஒலியைப் புலப்படுத்தும் முறையில் அதே ஒலியைக் கொண்ட சொல்லாக அமைவது ஒரு வகை

எ.டு. திணுக்கு திணுக்கெனவே (வ. வீ. க. 778)
தன்னா தன்னா (வ. வீ. க. 1243)
தரிகிடென தரிகிடென (பி. ச. க. 856)

2) ஒலியானது ஓர் ஒலியைக்குறிக்கும் முறையில் அமையாது ஆனால் வேறு ஏதாவது ஒருநிகழ்ச்சி, அளவு, உணர்ச்சி போன்றவற்றையும் குறிப்பதாக அமையும் என்பது மற்றொரு வகை,

எ.டு. திந்திதிமி தெய்யெனவே (வ. வீ. க. 318)
தரிகிடத் தொந்தோ மொன்றாடி (பி. ச, க. 1235)

இவ்வில்லுப் பாட்டில் இசைக் குறிப்புக்களே காணப்படுவதால் முதல்வகை ஒலிக்குறிப்புச்சொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன,

பொருள் நிலை

பிரமசக்தியம்மன் கதை வில்லுப்பாட்டில் ஆசிரியர் பொருள் நிலையாக அடுக்குத் தொடர்களைப் பயன்படுத்தியுள்ளார்.

எ.டு: 1 வருந்தி வருந்தி (வ.வீ.க.467)
2. பாரு பாரு (பி.ச க 134)

வில்லுப் பாட்டில் ஓசை நயம் மிகுந்து வருவதால் அடுக்குச் சொற்கள் அதிகமாகக் காணப்படுகின்றன எனலாம்.

இரட்டை கிளவி

ஒலி நயத்திற்காகக் கையாளப்படும் மற்றொரு சொல்லடுச்கு இரட்டைக் கிளவி எனப்படும். இரண்டு ஒலிக் குறிப்புச் சொற்கள் இணைந்து வரும் இரட்டைக் கிளவி பேச்சு வழக்கில் மிகுதியாகப் பயில்வதாகும்.

ஒரு சொல்லின் முற்பகுதியைமட்டும் இருமுறை கூறுதல் இரட்டைக் கிளவி என்பார் டாக்டர் மு. வரதராசன் (மொழி

வரலாறு 1966:27) தொல்காப்பியர் கூறும், 'இரட்டைக் கிளவி இரட்டுப் பிரிந்திசையா' (தொல். சொல். 48) என்னும் நூற் பாவிக்கு இளம் பூரணர் இரட்டிச் சொல்லும் சொற்கள், அவ் விரட்டுதலிற் பிரித்துச் சொல்லப்படா என்றவாறு என்பார்.

அடுக்குச் சொற்கள்

ஒரு சொல்லை இருமுறை கூறும் வழக்கம் பேச்சு வழக்கில் மிகுதியாக உள்ளன. இதனை 'அடுக்குத் தொடர்' என்கிறோம் தொல்காப்பியர் இம்முறையை ஒருசொல் அடுக்கு என்பார் ஆதலால் அடுக்குத் தொடர் சொற்பிரிவின் கீழ் பகுக்கப்படு கிறது. பொருளொடு வருவதன்றிப் பொருளின்றியும் சொற்கள் அடுக்கிவரும் என்பது அவர் கருத்து (தொல்.எச். 15) அடுக்குத் தொடராக வருவன எல்லாம் உணர்ச்சியின் பாற்படுவனவே என்பார் டாக்டர் மு.வரதராசன் (மொழி வரலாறு 1966:22) அடுக்குச் சொற்களைத் தொல்காப்பியர்,

> 'இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தலென்
> றவை மூன்றென்ப ஒரு சொல் அடுக்கே'
>
> (தொல். சொல். 405)

என மூன்றாக வகைப்படுத்துவார்.

தொலைகாட்சி விளம்பரங்கள் ஓர் ஆய்வு

இரா. விஜயராணி
யாதவர்கல்லூரி, மதுரை

முன்னுரை:

மக்கள் தங்களுக்குள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள பல ஊடகங்களைப் பயன்படுத்தினர் அந்த ஊடகங்கள் தகவல் தொடர்பு வாயில்கள் என அழைக்கப்படுகின்றன. இவை மொத்தம் ஏழு வகைப்படும். என ஜோசம் எ பி.விட்டோ என்ற மேனாட்டறிஞர் கூறுகின்றார். அவையாவன. 1. வானொலி, 2. செய்தித்தாள்கள், 3, தொலைக்காட்சி, 4, இதழ்கள், 5, திரைப்படம், 6, நூல்கள், 7, பதிவுநாடா முதலிய கருவிகள். தற்போது மேலே குறிப்பிட்டப்பட்டுள்ள ஏழு ஊடகங்களின் மூலமாகவும் விளம்பரங்கள் பொதுமக்களைச்சென்றடைகின்றன ஒரு நாட்டின் சமுகப் பொருளாதாரப் பின்னணிக்கு ஏற்ப இவ் வூடகங்களின் தன்மை மாறுபடலாம்.

நம் நாட்டில் நாளிதழ் சிறந்த விளம்பரச் சாதனமாக இருந்தது. மேலைநாடுகளில்தான் தொலைக்காட்சிப் பெட்டியை விளம்பரச் சாதனமாகப் பயன்படுத்தினர். ஆனால் இப்போது நம் நாடும் தொலைக்காட்சியை மிகச் சக்திவாய்ந்த விளம்பரச் சாதனமாகப் பயன்படுத்தி வருகிறது.

தொலைக்காட்சியில் விளம்பர ஒளிபரப்பு:

அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1936-ஆம் ஆண்டிலும் பிரான்சில் 1938-லும் முதன் முதல் முறையான தொலைக்காட்சி ஒளிபரப்பு (கருப்புவெள்ளை) தொடங்கியது. 1953-ஆம் ஆண்டு

வண்ண ஒளிபரப்பு அமெரிக்காவில் தொடங்கப்பட்டது. இங்கிலாந்தில் 1955 ஆம் ஆண்டும் 1976 இந்தியாவிலும் வணிகநோக்கில் நிகழ்ச்சிகள் தயாரித்தளிக்கப்பட்டன. முதன்முதலாக 1976 ஆம் ஆண்டு தொலைக்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டிலேயே 'தூர்தர்சன்' கேந்திரா' விற்கு ரூ 36 லட்சம் வருமானம் கிடைத்ததாக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

1986-87 - ரூ. 80 கோடி

1987-88 - ரூ. 136 கோடி
(அக்டோபர்)

தொலைக்காட்சிக்கு வருமானம் கிடைத்துள்ளது.

தொலைக்காட்சி நிலையங்களில் ஆகும் அதிகபட்சம் செலவினை விளம்பரங்களின் மூலமாகத்தான் ஈடுசெய்ய வேண்டியுள்ளது. என்வே விளம்பரங்களுக்காக கட்டணம் உயர்த்தப்படும்' அத்துடன் அதிகபட்ச விளம்பரங்களும் ஒளிபரப்பப்படும்' என நடுவண் அரசின் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் அஜித்பாஞ்சா கூறியுள்ளார்.

விளம்பரம் என்றால் என்ன ?

ஒரு குறிப்பிட்ட அரசோ, உற்பத்தியாளரோ, விற்பனையாளரோ தமது கொள்கைகளைப் பரப்புவதற்கோ தம் பொருட்களை விற்பதற்கோ தம் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கோ தாமே பணம் செலவிட்டு எழுத்து, வாய்மொழி, வரைபடம் மூலமாகப் பயன்படுத்தும் சாதனம் தான் விளம்பரம்' என இதழியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். ஆனால் இந்த விதி அனைத்து விளம்பரங்களுக்கும் பொருந்தாது. தொலைக்காட்சி நிலையத்தினர் தாங்களாகவே சில விளம்பரங்களை ஒலிபரப்புகின்றனர். இவை சமூகநலனை மனதிற்கொண்டு எவரிடமும் கட்டணத்தொகை பெறாமல் செய்யப்படும்.

தொலைக்காட்சி விளம்பரதாரர்கள்

தொலைக்காட்சி விளம்பரதாரர்கள் மூன்று வகைப்படுவர்

1) தொலைக்காட்சி நிலையத்தினர்

2) அரசு நிறுவனங்கள் & சமூகசேவை நிறுவனங்கள்

3) தனியார் நிறுவனங்கள்

1. தொலைக்காட்சி நிலையத்தினர்

பொதுமக்களின் நலன் கருதிச் சில நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றனர். அறிவிப்புகள் என்ற பகுதியில் காணாமல் போனவர்கள், வேலைவாய்ப்பு செய்திகள் மற்றும் இரத்ததானம் பற்றிய செய்திகளும், மக்களை நன்னெறிப்படுத்தும் நோக்கில் சாதி மத வேறுபாடின்றி சமயத்தலைவர்கள், அறிஞர்கள் பொன்மொழிகளையும் ஒலிபரப்புகின்றனர். வானொலியில் சேவைச் செய்திகள் போல் இவை செயல்படுத்தப்படுகின்றன,இவற்றிற்கு விளம்பரக் கட்டணம் எதுவும் யாரிடமும் வசூலிக்கப் படுவதில்லை.

(எ-டு) 'நம் செயல்களால்
நாம் உயர்கிறோம்
பிறப்பால் அல்ல' — பகவன் மஹாவீரர்.
நட்பு நம்முடைய மகிழ்ச்சியை அதிகரிக்கிறது
இனபத்தை இரட்டிப்பாக்குகிறது
துன்பத்தை பகிர்ந்துப் கொள்கிறது'
- அடிசன்

வெளிப்பாட்டு உத்தி

நீதிபோதனைக் கருத்துக்களை மக்கள் மனதில் புகுத்த திரும்ப திரும்பக் கூறல் என்ற உத்தி முறையைக் கையாண்டு நாள்தோறும் அறிஞர்களின் பழமொழி தாங்கிய ஏடுகளை ஒலிபரப்புதல்.

அரசு நிறுவனங்கள், சமூக சேவை நிறுவனங்கள்

தேசிய ஒருமைபாட்டுணர்வினை வளர்க்கும் விதத்தில் மத்திய, மாநில அரசுகளால் சில நிகழ்ச்சிகள் ஒளி பரப்பப்படுகின்றன. அரசின் பல்வேறு துறையினரும், சில சமூக சேவை நிறுவனங்களும் இணைந்து பொதுமக்கள் நலன் கருதி மட்டுமே செய்யப்படும் சமூக விளம்பரங்கள் (Social Advertisement) பல தொலைக் காட்சியில் இடம் பெறுகின்றன.

(எ. டு) தேசிய ஒருமைப்பாட்டுணர்வு: 'சுதந்திர ஒளிபரவிடச் செய்வீர்' 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

சமூக விளம்பரங்கள்

1. குடும்பத்துறையினர் வழங்கும் ; தாய்சேய் நலம், குடும்பக்கட்டுப்பாடு, முத்தடுப்பு ஊசி, ரணஜன்னி தடுப்பு, 'குணவதி' (ஆரோக்கியமான குழந்தை) 'தெரிந்தவளா கட்டும்' (உரிய வயதில் திருமணம்) போலியோ தடுப்பு மருந்து.

பொதுமக்கள் கவனத்திற்கு : 'வதந்திகளைப் பரப்பாதீர்' 'போதைப் பொருட்களுக்கு அடிமையாகாதீர்' பிறப்பு இறப்புகளை பதிவு செய்தல், 'ரத்த தானம் செய்தல்' 'தொழுநோய் 'சாதிக்கொடுமை' வரதட்சணைக் கொடுமை, 'வரி ஏய்ப்பு மற்றும் கடத்தல் பற்றி அரசிற்குத் தெரிவித்தல்' போன்றவை இவ்வகையில் அடங்கும்

தமிழக மின்சார வாரியம்

பொதுமக்களுக்குச் சில அறிவுரைகளுடன் கூடிய விளம்பரகளை அவ்வப்போது தொலைகாட்சியின்வாயிலாக அளிக்கிறது

1) கால்நடைகளை மின்சார கம்பத்தில் கட்டாதீர்கள்.

2) வயல்களில் மின்சார வேலி அமைப்பது சட்ட விரோதமானது. பாதுகாப்பற்றது. அந்தக் கம்பிகளை விலங்குகள் மட்டுமல்ல நீங்களும் மிதிக்க நேரிடலாம்.

3) உடைந்த பிளக்குகளைப் பயன்படுத்தாதீர்கள் என்பது போல் பல அறிவிப்புகளைத் தெரிவிக்கின்றன. இதுபோல சாலை விதிகளைப்பற்றி தேசிய நெடுஞ்சாலைப் பிரிவும் தீ விபத்துக்கள் ஏற்படாவண்ணம் தடுத்தல் மற்றும் சமையல் வாயு சிலிண்டர்களை பயன்படுத்தும் முறைப் பற்றி இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவனமும், சுற்றுப்புறத்தை, சுத்தமாக வைத்திருத்தல் பற்றி — சுற்றுப்புறச் சூழல் வாரியமும் விளம்பரம் செய்கின்றன.

சமுக விளம்பரங்களின் வெளிப்பாட்டு உத்தி

இதன் முதல் வேலை மக்களின் அறியாமையைப் போக்குவதுதான். பொதுவாக இந்த விளம்பரங்கள் மூன்று முக்கிய வழிமுறைகளைக் கையாளுகின்றன.

1. இதை நீ செய்யாவிட்டால் என்னவெல்லாம் நடக்கும் தெரியுமா என்று பயமுறுத்தி எதிர்மறையாகச் செயல் திருத்துவது ஒருவகை.

2. இதையெல்லாம் செய்துபார் உனக்கு இந்த நன்மைகள் உண்டாகும் என நேர்முகமாகச் சொல்லி திருத்துவது
3. நாட்டில் இப்படியெல்லாம் நிலைமை இருக்கு தெரிஞ்சுக்கிட்டா சரி' என விஷயத்தைமட்டும் சொல்லிவிழிப் புணர்வை ஏற்படுத்துவது மூன்றாவது வகை.

இரண்டு பெரிய குறைகள்

சமுக விளம்பரங்களைப் பொறுத்த வரை இரண்டு பெரிய குறைகள் இருப்பதாக விளம்பரத்துறை வல்லுநர்கள் கூறுகின்றனர்.

பெரும்பாலான நமது சமுக விளம்பரங்கள் மிகவும் பொதுப்படையாக இருக்கின்றனவாம். அந்த விளம்பரத்தைப் பார்க்கும் ஒரு தனிமனிதன் மேற்கொண்டு என்ன செய்யவேண்டும் என்று அவை சொல்லுவதில்லை. 'இந்த நகரம் நம்முடையது. இதைத் தூய்மையாக வைத்துக் கொள்ளக்கூடாதா? எனப்

பொதுப்படையாக ஒரு விளம்பரம் இருந்தால் அதைப் படிப்ப வரில் பலர் யார் சொன்னா வேண்டாம், தான் நிச்சயம் வச்சிக்க ணும்என்று போய்க் கொண்டிருப்பவர்கள்தான். அதற்குமேலும் கொஞ்சம் இறங்கி வந்து 'ரோட்டில் எச்சில் துப்பாதீர்கள் தொட்டிகளில் போடவும்' என்று ஒவ்வொன்றாக குறிப்பிட்டு சொன்னால்தான் நிறைய பேருக்கு உறைக்கும்.

மற்றொரு குறை, சமூக விளம்பரங்களுக்கு நம் நாட்டில் கொடுக்கப்படும் முக்கியத்துவம் மிகவும் குறைவு என்பதுதான். ஒரு ஆராய்ச்சியின் படி 77% விளம்பரச் செலவுகள் சோப்பு, ஷாம்பு பேஸ்ட் போன்றவற்றுக்குத்தான். சமூக விளம்பரங் களுக்காக 2% தொகை கூட செலவிடப்படுவது இல்லை. விளம்பரத் துறையின் மேதையான ஒசில்வி கூட இந்திய நிலை மையைப் பற்றி சொல்லும்போது 'ஏழ்மையைப் போக்க வேண்டிய அந்த நாட்டில் இன்னும் வாங்கு, இன்னும் வாங்கு' இன்னும் வாங்கு' என்ற ரீதியில் மட்டும் விளம்பரங்கள் செய் வது பரிதாபத்திற்குரியது என்று சொல்லியிருக்கிறார்.

பழமொழி கூறும் உறவுமுறைகள்

கி. விஜயலக்ஷ்மி
இராணி மேரி கல்லூரி, சென்னை

பழமொழி என்பது தொன்மையானது. வாழையடி வாழை யாக வாய்மொழியாக வழங்கப்பட்டு வருவன சொல்லு அளவில் சுருக்கமானது. உண்மையை உணர்த்துவது. பாமரர் மொழியில் அமைந்து எல்லோருக்கும் விளங்கும் வகையில் அமை வன. நம்பிக்கை, சமயம்சமுதாயம் போன்றனவற்றைக் காட்டும் வகையில், நன்னெறியினை நினைவூட்டும் நிலையில் அமை வன. பழமொழியை அனுபவம் என்னும் மரத்தின் கனி என லாம். நீண்ட அனுபவத்தில் பிறந்த குறுகிய வாக்கியங்களே பழமொழியாகும்.

மக்கள் வாழ்வினில் பழமொழி என்று தோன்றியது என அறுதியிட்டுக் கூற இயலவில்லை. தொல்காப்பியர்; முதுசொல், முதுமொழி எனக் குறிப்பிட்டுள்ளார்.

> 'பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே
> அங்கதம் முதுசொல்லோடு அவ்வேழ் நிலத்தும்'
> (தொல். செய். 79)

எனவும்,

> 'ஏது முதலிய முதுமொழி என்ப' (தொல். செய். 165)

எனவும் குறித்துள்ளார்.

> 'நீ அறிந்திலையோ நெடுமொழி அன்றோ'
> (சிலம்பு ஊர்காண் காதை.49)
> 'பண்டே யுரைத்த பழமொழி மெய்யாக் கண்டேன்'
> (பெருங்கதை, 16-37-38)

எனப் பெருங்கதையும்,

'பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனம் தோழி'
(அகம். களிற்றுயானை நிரை. மருதம.66)

என அகநானூறும் பழமொழி பற்றியுரைப்பதைக்காண இயலுகின்றது

பழமொழி, என்னும் சொல் மூதுரை, முதுமை, மொழிமை முன்சொல், பழஞ்சொல் எனும் ஆறு பொருளைத் தருவதாகச் சேந்தன் திவாகரம் கூறுகின்றது. உரை. சுலோகம், மொழிமை, உப்கதை என்னும் சொற்களையும் கூறுவாா உளர். மலையாள நாட்டில் இதனை பழஞ்சொல் என்றும், வழங்குகின்றனர் பல்வேறு வகை பெயரினால் அழைக்கப்பெறினும் இவை சுருங்கச் சொல்லி விளங்க வைக்க ஆற்றல் வாய்ந்தவை. மக்கள் மனத்தில் ஆழமாகப் பதிந்து நற்செயலைத் தூண்டச் செய்வன. பழமையான நம்பிக்கைகளையும், வரலாற்றினையும் மனித உணர்வுகளையும் காட்டும் தன்மை உடையன.

பழமொழி தோன்றுவதன் நோக்கம் கேட்பவர் தம் வாழ்வில் திருந்த வேண்டும். அல்லது உயர்தல் வேண்டும் என்பதே. அளவில் சிறியதாயினும் ஆழம் மிக்கதாய் இருப்பதால், கற்றோரையும் மற்றோரையும் ஒருங்கே ஈர்க்க வல்லன' பழமொழி வாய்மொழி இலக்கியத்தின் பாற்படுவன. பல நூற்றாண்டுகளாக மொழியமைப்பில் மாறாது நிலைத்த வடிவத்துடன் திகழ்வன, பொதுநிலையில் பழமொழி நீதிக்கொள்கையை கூறுவனவாகவும் அறக்கருத்துக்களைத் தெரிவிப்பனவாகவும் அமைகின்றன. அக்கருத்துக்கள் உலக மக்களை நெறிப்படுத்தும் தன்மையில் அமைவனவாகும். இலக்கியங்களை விட பழ பழமொழி சிறந்தனவாகும். இலக்கியங்களே மொழியை மேற்கோளாக எடுத்தாளுகின்றன. பழமொழி பல நிலைகளில் அமைகின்றன.

ஓரிரு சொற்களில் அமைவது (புத்திமான் பலவான். அறப்பேசி உறவாடு, எம்மதமும் சம்மதம்), மூன்று சொற்களால் அமைவன (ஆசை வெட்கம் அறியாது, ஆத்திரக் காரனுக்குப் புத்திமட்டு), நான்கு சொற்களில் வருவன(கொள்

கைக்குப் போனாலும் கூட்டு உதவாது கட்டோடப் போனால் கனத்தோடு வரலாம்) என அமையும் இவையன்றியும் எதுகை மோனைத் தொடரிலும் அமைவது காணலாம். இத்தகைய பழமொழி ஒரு குறிப்பிட்டத் துறைக்கு என்றமையாது எல்லா துறையிலும் அங்கங்களிலும் பழமொழி முன்னிலை வகிக்கின்றன. இவ்வகையில் குடும்ப உறவில் பழமொழி வகிக்கும் இடம் என்ன என்பதைக் காண்போம். உலகம் நிலையில்லாதது போல மனித மனமும் நிலைத்த தன்மை உடையதல்ல. அன்புக்கு அனைத்தும் அடிமை அந்த அன்பினை எந்த விலை கொடுத்தும் வாங்க இயலாது. அவ்வாறு எண்ணுவதும் மடமை. இன்றைய உறவு பெரும்பாலும் கொள்வன கொடுப்பன அடிப்படையில் அமைகின்றன. இவற்றுள் மாற்றம் ஏற்படின் தாம் கொண்ட அன்பிலும் மாற்றம் ஏற்படுகின்றது. இத்தகைய மனித உறவு நிலைத்த உறவு அல்ல. அது தொடர்பான பழமொழி சில வற்றை நோக்கிடுவோம்.

இல்லற வாழ்வு என்பது குடும்ப வாழ்வு. குடும்பம் வாழ்க்கையின் ஒரு பிடிப்பு நிலையை உணர்த்துவது; வாழ்க்கையை செம்மை செய்ய உதவுவது. இதற்கு ஒரு பொறுப்பு நிலை தேவை, அந்த பொறுப்பினை சமுதாய சட்டதிட்டங்கள் தருகின்றன. பொறுப்பு கடமை போன்றனவற்றை மறந்துவிட்ட நிலையில் குடும்ப வாழ்வு சீரழிவதைக் காணமுடிகின்றது. ‘அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது’ என்னும் பழமொழி இதனை நமக்கு வலியுறுத்தும். சமுதாயம் நல்ல முறையில் அமைய அதன் போக்குகள் நெறிப்படுத்தப்படல் வேண்டும் என்னும் உண்மை இதனால் புலனாகின்றது.

பணம் பாதாளம் மட்டும் பாயும், பணம் பந்தியிலே, பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்று பணம் பற்றிய பல உரை உள்ளன. இதனைத் தொடர்புபடுத்தி உறவுமுறைக்குப் பாலம் அமைக்கின்றது ஒரு பழமொழி. ‘கேளாமல் கெட்டது கடன், போகாமல் கெட்டது உறவு’. கடன் கொடுத்தவன், தான் அப்பணத்தைத் திரும்பிப் பெறுவதற்காக சலிப்படையாமல் பலமுறை சென்று கேட்டு வரல் வேண்டும். நாளை நாளை எனத்தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தால் அந்த

பணத்தை இழக்க வேண்டிய நிலை வரலாம். அதுபோலவே நம் உறவினர், நண்பர்களுடன் உள்ள தொடர்பை அடிக்கடி புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.இல்லாவிடில் அந்தத் தொடர்பு இரயில்பயணத் தொடர்பு போல் அமைந்துவிடும். இருக்கும் தொடர்பும் நாளடைவில் அற்றுப்போய்விடும் என்பதைக்காட்டு கின்றது. இது ஒருபுறம் அமைய 'நீரடித்து நீர் விலகுமோ' என்ற பழமொழி நம்மை சற்று சிந்திக்க வைக்கின்றது, இதன் உண் மையை ஒரு திரை இசைப்பாடல்கூட விளக்குகின்றது.

'நீரடித்து நீர் விலகிப் பார்த்ததில்லை பொன்மகளே
நீ பிரிந்து நானுமென்றால் வாழ்க்கையில்லை பூமகளே'

இதன் உண்மை நிலைதான் என்ன? குடும்பத்தில் ஆயிரம் கருத்து வேறுபாடு வரும். ஆனால் எந்த வேறுபாடும் நிரந்தரம் இல்லை என்பதை இப்பழமொழி உறுதி செய்கின்றது. உறவி னால் பிரிவு ஏற்படல் இயல்பு விலகிப் போனால் விரும்பி வரும், விரும்பிப் போனால் விலகிச் செல்லும் தகைமையுடை யதுசுற்றம். அந்த சுற்றத்தாரின் உறவை ஒரு முதுமொழி அறப் பேசி உறவாடும் எனக்கூறுகின்றது. ஒரு காரியம் ஆற்றும்போது அது தொடர்பான பிரச்சனைகளை முதலிலேயே பேசி முடித்து வைத்துக் கொள்ளல் வேண்டும். கொடுக்கல், வாங்கல் நேரங் களில் முதலில் அதன் வழக்காற்றினைப் பேசி முடித்துவிட்டால் பின்னால் அதனால் பிரச்சனைகள் எழ வாய்ப்பில்லாமல் அமையும். அதுவன்றி பின்னர் அதுபற்றி எண்ணலாம் என நினைத்தால் வாக்குவாதங்கள் முற்றி பகைமை வளர்க்கப்பட லாம். அடுத்த வீட்டுக்காரன் உயிர் நண்பனே ஆயினும வேலி அவசியம் என்பதை ஒப்புநோக்கும் வகையில் இவ்வுரை அமைந் துள்ளது. தீய நண்பர் நம் கையில் காசு இருப்பது வரை நம் மைத் தொடர்ந்து வருவர். உறவும் அத்தகையதே. நம் கையில் காசு குறைய குறைய அவர்கள் தொடர்பும் அற்று இற்றுப் போகும் அப்படியாயின் உண்மையான நட்பை, உறவைத் தெளிவது எப்படி என்பதை

'அன்பான நட்பை ஆபத்தில் அறி' என அறிவுறுத்துகின்றது ஒரு மூதுரை.

உறவு பலவிதம். நினைவில் மலர்வன, பார்வையில் பூரிக்க செய்வன; அறிந்து நெகிழ்வன; உணர்ந்து உவப்பன; கொடுத்து நிறைவன; கொண்டு மகிழ்வளி எனப் பலவகைப்படும். இவை அனைத்தும் சிறந்த உறவு என ஒருபுறம் நினைந்து இன்புற்றாலும், மோப்பக் குழையும் அனிச்சம் போன்று மாறுபட நோக்கிய அளவில் திரியும் உறவும் உண்டு. இதுவும் நல்ல உறவின் அடிப்படையே. இவை நேருக்கு நேர் உதவும் அல்லது எதிர்க்கும் பண்புடையதாகும். ஆயின் உள்ளே நீறுபூத்த நெருப்புப் போல இருந்தது வெளியே தாழம் பூவாய் மலரும் உறவினை, 'உள்ளே வயிறெரிய உதடு பழஞ்சொரிய' என்னும் பழமொழி நமக்கு உணர்த்தத் தவறவில்லை. 'செல் விருந்தோம்பி வரு விருந்து பார்க்கும்' இயல்பு விருந்தோம்புவருக்கு இருத்தல் வேண்டும். அழையா விருந்தாய் நாம் வந்து விட்டோமோ என்னும் எண்ணத்தை நம் வீடு தேடிவரும் உறவினர்க்குக் கொடுத்துவிடக் கூடாது.

உறவு என்பது பேதமற்றது. எல்லாம் ஒன்றாய் அமைதல் நல்ல உறவின் அடையாளம். ஆயினும அதிலும் சில விதிமுறைகள் உள்ளன. தாயும்பிள்ளையும் ஆயினும் வாயும்வயிறும் வேறு வேறுஎன்பதை நாம் உலக வழக்கில் தினமும் காணுகின்றோம். எனவே, எத்தகைய உறவாயினும் அவர்கள் கொடுக்காமல் நீயாக எதையும் கொள்ளாதே என்பதை 'உறவாயிந்தாலும் பயிரில் கைவையாதே' என்னும் முதுரை வாயிலாகத் தெளிவாகும்.

மாமூலனார் பாடல்களில் நந்தர் மோரியர் பற்றிய குறிப்புகள்

ஹரி. விஜயலட்சுமி
ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி,
உடுமலைப்பேட்டை

இலக்கியங்கள் தாம் எழுந்த காலத்து இன்றியமையா நிகழ்ச்சிகள் பற்றியும் தம் காலத்திற்கு முன்பு நடந்து மக்கள் மனதில் அழியாத பதிவினை ஏற்படுத்திய நிகழ்ச்சிகள் பற்றியும் சில சொற்களாலும் தொடர்களாலும் குறிப்பாகவும் விளக்கமாகவும் சுட்டிச் செல்லுங்கால் வரலாற்றுப்பதிவுடையன எனப் போற்றப்படுகின்றன. முறையான வரலாறு எழுதப்படாத கால கட்டங்களில் இத்தகைய இலக்கியங்கள் வரலாற்றுச் சான்றுகளாகத் துணை புரிகின்றன.

சங்க இலக்கியங்கள் அகம் புறம் என்ற பகுப்பெல்லைக்குள் அமைந்து, அடிப்படையான உள்ளத்து உணர்வுகளையும் மாபெரும் உலக நீதிகளையும் எடுத்தியம்புகின்றன. பட்டினப் பாலை புறத்திணைச் செய்திகள் மிகுந்தது சில வரிகளால் அகத்திணை நூலாகின்றது. அகத்திணைப்பாடல்களில் புறத்திணைச் செய்திகள் பொருத்தமான முறையில் எடுத்தாளப்படுதலுமுண்டு. மாமூலனார் தாம் பாடிய அகத்திணைப் பாடல்களில் வரலாற்றுக் குறிப்புக்கள் பலவற்றையும் திறம்படக் கையாண்டுள்ளார். தமிழகத்தில் ஆட்சி புரிந்த இருபது அரசர்கள் பற்றிய குறிப்புக்களேயன்றி, வட திசையில் ஆட்சி புரிந்து புகழ்பெற்ற நந்தர், மோரியர் பற்றியும் அவரது பாடல்களில் குறிப்புகள் அமைந்துள்ளன. நந்தர் மோரியர் பற்றிய செய்திகளே இக் கட்டுரைப் பொருளாகின்றன.

'பாலை பாடிய' என்ற அடைமொழிக்கு ஏற்புடையவரே போன்று மாமூலனார் தாம் பாடியுள்ள 30 அகத்திணைப் பாடல்களில் 29 பாடல்களைப் பாலைத் திணைப் பாடல்களாக வே படைத்துள்ளார். பாலைத்திணையின் உரிப்பொருளான பிரிதலும் பிரிதல் நிமித்தமும் சார்ந்த உணர்வுகளின் வெளிப் பாடுகளில் வரலாற்றுத்தொடர்புடைய செய்திகளைப் பொருத்த மாகப் பயன் படுத்தியுள்ளார்.

நந்தர் பற்றி இரண்டு பாடல்களிலும் மோரியர் பற்றி இரு பாடல்களிலும் மாமூலனார் குறிப்பிடுகின்றார். நந்தன், நந்தர் என்று பெயர் சுட்டியமைந்துள்ள பாடல்கள் மாமூலனார் பாடல்கள் மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

'நந்தன் வெறுக்கை யெய்தினும் மற்றவண்
தங்கலர் ... ... ' — அகம். 251

'பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலி குழீஇக் கங்கை
நீர் முதற் கரந்த நிதியங் கொல்லோ ?' — அகம். 265

என்ற இரு பாடல்களில் நந்தர் பற்றிய குறிப்புக்கள் காணப்படு கின்றன. தலைவியின் அன்பைவிட நந்தர்களுடைய செல்வம் பெரிதன்று என்னும் பொருள்பட நந்தர்களுடைய செல்வச் செழிப்பு குறிப்பிடப்படுகின்றது.

முறையான இந்திய வரலாற்றில் முதலில் குறிக்கப்படுபவர் கள் நந்தர்கள் ஏ. கே. நீலகண்ட சாஸ்திரியார் ஸ்ரீநிவாசச்சாரி யார் தொடங்கிய வரலாற்றறிஞர்கள் நந்தர்களுடைய செல்வச் செழிப்பு பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். நவநந்தர்கள் என்றழைக் கப்பட்ட ஒன்பது நந்தர்களின் ஆட்சிக்காலம் நந்தன் என்றழை கப்பட்ட உக்கிரசேனன் காலத்தில் தொடங்குகின்றது. இவன் பல நாடுகளையும் வென்று ஒரு குடைக்கீழ்க் கொணர்ந்தவன் இவனுடைய வெற்றிகளைப் பாராட்டி மக்கள் இவனை இரண் டாம் பரசுராமன் என்றும் அழைத்தனர். நந்தர்கள் மக்களிட மிருந்து பெரும்பணம் வசூலித்து செல்வத்தைக் குவித்தனர். மகாபத்ம நந்தனிடம் 99 கோடிப் பொன் இருந்ததாகக் கதா

சரித சாகரம்' என்ற வடமொழி நூல் குறிப்பிடுகின்றது. இவனுடைய எட்டு மக்களில் கடைசி மகனான தனநந்தனின் ஆட்சி காலத்தில் நந்தர்கள் ஆட்சி வீழ்ந்து மோரிய பேரரசு கால் கொள்ளுவதற்கானப் பல காரணங்களில் தனநந்தனுடைய அற நெறி தவறிய வரி வசூலிப்பு முறைகளும் அளவற்ற பொருளாசையும் ஒரு காரணமாகக் குறிப்பிடப்படுகின்றது என்பன வி. டி. மகாஜன் நந்தர்களைப்பற்றித் தரும் குறிப்புக்களாகும்.

புத்தமதவாதிகளின் கணிப்பில் தனநந்தன் செல்வத்தைப் பதுக்கிவைத்த பேராசையாலேயே தனநந்தன் என்றழைக்கப் பட்டான். கங்கைக்கரையின் ஒரு குகையில் 80 கோடிப் பொன்னைச் சேர்த்து வைத்தான். தோலுக்கும், பல் எகிறுகளுக்கும் கற்களுக்கும்கூட வரிவிதித்து ஏராளமான பொருளைப்புதைத்து வைத்தான் என்று மகாவமிசம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளை ஆர். சி. மஜீம்தார் எடுத்துரைக்கின்றார். மாமூலனார் 'நீர் முதற்கரந்த' என்று குறிப்பிடும் செய்தி இக் குறிப்புடன் ஒத்திருக்கின்றது.

நந்தர்களுடைய இப்பெரும்பொருட்குவியல் பற்றி சீனயாத்திரிகர் ஹுவான் சுவான் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் கேள்வியுற்றிருக்கிறார். பாடலிபுரத்தின் ஐந்து ஸ்தூபங்களையும் ஏழு விலை மதிப்பற்ற பொருள்களால் ஆன நந்தர்களின் ஐந்து புதையல்கள் என்று அவர் குறிப்பிடுகின்றார்.

நந்தர்கள் தெற்கே கலிங்க நாட்டை வென்ற செய்தி ஹதிகும்பா கல்வெட்டுக்களால் உணரப்படுகின்றது. தென்னிந்தியாவின் பெரும்பகுதியையும் நந்தர்கள் வென்றிருந்த காலகட்டத்தில் இச்செல்வச் செழிப்பு பற்றிய செய்தி தமிழகத்திலும் பரவியிருத்தல் வேண்டும். 'பொன்பலிபாடலி' என்று பாடலி' என்று பாடலிபுரத்தின் வளம் மோசிகீரனாராலும் (கு,தொ.85) குறிப்பிடப்படுகின்றது, எனவே தான் மக்களிடையே பரவலாக விதந்து பேசப்பட்டதொரு செய்தியை மாமூலனார் எடுத்

தாண்டிருக்கிறார் என்பது தெளிவாகின்றது. 'முட்டாச் சிறப் பின் பட்டினம் பெறினும் வாரேன் வாழிய நெஞ்சே' என்று தலைவியின் அன்பில் கனிந்து பேசும் பட்டினப்பாலைத் தலை வனின் உணர்வுகளுக்கு 'நந்தன் வெறுக்கை யெய்தினும் மற்றவண் தங்கலர்' என்று பேசும் மாமூலனார் பாடல் தலைவி யின உணர்வுகள் இணையானதென்று உணரமுடிகின்றது.

வின்செண்ட்ஸ்மித், நீலகண்ட சாஸ்திரியார் முதலிய வர லாற்றறிஞர்கள் சங்க காலம் கிறித்தவ ஆண்டின் தொடக்க காலத்தைச் சேர்ந்ததென்று நிறுவுவர் நந்தர்கள் காலம் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்காலம் என்பதும் ஸ்மித்தின் கணிப்பு. இவற்றால் நந்தர்களுடைய 'வெறுக்கை' பற்றிய 400 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் மனதிலும் நாவிலும் பேரிடம் பெறுகின்ற அளவு சிறப்புற்றிருந்த வரலாற்றுச் செய்தியாக இருந்திருக்கிறதென்பது புலனாகின்றது.

நந்தர்களை வீழ்த்தி, மட்டத்திற்கு வந்த மோரியர்கள் பற்றி மாமூலனார் இரண்டு பாடல்களில குறிப்பிடுகின்றார்.

'... ... ... சோசர்
... ...
தெம்முனை ததைத்த ஞான்றை மோகூர்
பணியாமையின் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்...' அகம் 250

'முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த...' -அகம்-281

என்ற பாடல்கள் வழி கோசர்கள் தம் அண்டை நாடுகளை

அடக்க முற்பட்டபோது எதிர்த்து நின்ற மோகூர்ப்பழையனை அடக்க கோசர்களுக்கு மோரியர் உதவி செய்தனர்; வடுகர் முன் வர அவர்களைத் தொடர்ந்து வந்து மோரியர் தமிழகத்தின் மீது படையெடுத்தனர் என்ற செய்திகள் பெறப்படுகின்றன. தென்திசைப்பயணம் மேற்கொண்டபோது தம் தேர்கள் செல்ல மலைகளில் செம்மையான பாதைகள் அமைத்துக் கொண்டனர் என்று மாமூலனார் குறிப்பிடும் செய்தி உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனாராலும் (அகம் 69), கள்ளில் ஆத்திரையனாராலும் (புறம்-175) குறிப்பிடப்பட்டுள்ளது.

வடுகரும் கோசரும் கோரியர்களின் நண்பர்களாயிருந்திருந்தல் வேண்டும் என்பது இப்பாடல் வழி கே. கே. பிள்ளையவர்கள் பெறும் கருத்து. மோரியர்கள் தென்திசை நோக்கிப் படையெடுத்து வந்த செய்தி கல்வெட்டுச் சான்றுகள் வழி உறுதிப்படுகின்றது. தெற்கே மைசூர் வரையிலும் மோரியப்பேரரசு பரந்திருந்ததென்பது அசோகருடைய கல்வெட்டுக்களால் உறுதிபடுகின்றது. வின்செண்ட் ஸ்மித் அவர்கள் மௌரியர்கள் மதுரை, நெல்லை மாவட்ட எல்லைப்பகுதிகள் வரை படையெடுத்து முற்றுகையிட்டிருந்திருக்க வேண்டுமென்று குறிப்பிட்டு மாமூலனார் பாடல்களையும் சான்றாகக் காட்டுகின்றார்.

கி மு. 272க்கு முன் நடைபெற்ற வடதிசை நிகழ்ச்சிகளை மாமூலனார் எடுத்தாளுவதைச் சுட்டிக் காட்டி, செவி வழிச் செய்திகளின் பேராயுட்காலம் நூறாண்டுகளாக அமையலாம். என்று குறிப்பிட்டு மாமூலனாரின் காலம் கி. மு, 150 க்குப் பின்னதாக இருக்கலாமென்று கருதுகின்றார். வின்செண்ட் ஸ்மித், நீலகண்ட சாஸ்திரியார் முதலியவர்களின் கருத்துப்படி நோக்கினால் சங்கப் புலவரான மாமூலனார் காலம் கி. பி. முதல் நூற்றாண்டின் தொடக்க காலமாக அமையும். எவ்வாறு நோக்கினும் வரலாற்றுத் தொடர்புடைய ஏதேனும் செய்திகளைக் குறிப்பிட்டு மாமூலனார் பாடல்கள் இயற்றியுள்ள போக்கிற்கு இரண்டு வலுவான காரணங்களை இனம் காணலாம்.

1. கருத்துத் தெளிவிற்கென சமகாலமக்கள் நன்கு அறிந்திருந்த, பழகிய செய்திகளைப் பயன்படுத்த வேண்டுமென்ற சமுதாய உணர்வு.

2. மாமூலனாரின் ஆழ்ந்த வரலாற்றுணர்வு.

இந்த அடிப்படைகளில் மாமூலனார் தாம் வாழ்ந்த தமிழகத்து அரசர்கள், நாடுகள் பற்றி மட்டுமேயன்றி இந்த கோசர், வடுகர் பற்றியும் வடதிசையில் புகழ்பெற்று தென்னகம் வரை புகழ் பரப்பிய நந்தர், மோரியர் பற்றியும் சிறப்பான செயதிகளைத் தம் பாடல்களில் பதிவு செய்து வைத்துள்ளார் என்று முடிவு செய்ய அவர் பாடல்கள் வழி காட்டுகின்றன.

பாரதிதாசன் கவிதைகளில் நாட்டுப்புறக் கூறுகள்

ச. விஷ்ணுதாசன்
சாத்திப்பட்டு

வழிவழியாக வளப்பம் குன்றா எழிலுடன் இலங்குவது நாட்டுப்புற இலக்கியம் இது என்று தோன்றியது என எண்ணற்கியலாப் பழமையது. பண்டு முதல் இன்று வரையிலான ஏட்டிலக்கியச் செழுமைக்கு இவ்விலக்கியப் பேழையின் இடைத்தொடர்பு காரணம் எனில் மிகையாகாது. இத்தொடர்பினைப் பல அறிஞர்கள் விளக்கியுள்ளனர்.[1] தொல்காப்பியர் காலத்திலிருந்தே நாட்டுப்புற இலக்கியம் ஏட்டிலக்கியத்தில் தனது செல்வாக்கைச் செலுத்தி வந்து உள்ளதை அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். அறிந்தோ அறியாமலோ ஒரு ஆசிரியனால் 'இரவல்' வாங்கப்பட்ட கருத்துக்களால் தூண்டப்பட்டுத்தான் இலக்கிய வளர்ச்சியே ஏற்படுகிறது.[2] என்னும் கருத்திற்கேற்ப நாட்டுப்புற இலக்கியத்தின் இடைத்தொடர்பு பண்டைக்காலத்தில் இருந்து ஏட்டிலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாகி வந்துள்ளது, வருகின்றது. இக்கட்டுரை பாரதிதாசனின் முதல் மூன்று தொகுதிகளை ஆய்வெல்லையாகக் கொண்டு இவற்றுள் காணலாகும் நாட்டுப்புறக் கூறுகளை ஆராய்கின்றது.

நாட்டுப்புறக் கூறுகள்

நாட்டுப்புறப் பாடற் பண்புகளாகப் பிற அறிஞர் கூற்றை ஒப்பு நோக்கி சண்முகசுந்தரம் கீழ்கண்ட நாட்டுப் புறப் பாடற் கூறுகளைக் குறிப்பிடுகின்றார்.[3]

திரும்பத் திரும்ப வருதல், இசைப் பாங்கு, சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறா மரபு, புராண மரபுச் செய்திகள்,

தொன்மை, பழமொழி ஆட்சி, விடுகதைப் பாங்கு, யாப்பு வடிவ ஒற்றுமை. பேச்சு வழக்குச் சொற்கள், நாட்டுப்புற நம்பிக்கைகளும் சடங்குகளும். இவற்றுடன் பேச்சு வழக்கினையும் சேர்த்துக் கொள்ளலாம். இவைகளின் அடிப்படையில் பாரதிதாசன் கவிதைகளில் காணக்கிடைக்கும் திரும்பத் திரும்ப வருதல், வடிவம், பேச்சு வழக்கு ஆகிய பண்புகளைக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது.

திரும்பத் திரும்ப வருதல் (Repitation)

நாட்டுப்புறப் பாடல்களில் சொற்கள், அடைமொழிகள், கருத்துகள் முதலானவை திரும்பத் திரும்ப வரும். இது உலக நாட்டுப்புற இலக்கியங்கள் அனைத்திலும் காணப்படும் பொதுவான பண்பு எனக் குறிப்பிடுவர்.[4]

ஒரே அடியிலோ அடுத்தடுத்த அடியிலோ வந்த சொல்லோ, தொடரோ திரும்பத் திரும்ப வந்தால் அது தொடர்ந்து வரல் (Continious) என்னும், அடிவிட்டு அடுத்த அடியிலோ அல்லது ஒவ்வொரு பத்தியின் இறுதியிலோ வந்தால் விட்டு விட்டு வரல் (un continious) என்றும் இப்பண்பை இரு வகைப்படுத்துவர்.[5]

காட்டை அழிப்பது கூடும் — அலை
கடலையும் தூர்ப்பது கூடும்
மேட்டை அகழ்வது கூடும் — விரி
விண்ணை அளப்பதும் கூடும்
... ...

எனக் 'கூடும்' என்ற தனிச் சொல் அடிதொறும் இறுதியில் திரும்பத் திரும்ப வருகின்றது அந்தாதி அமைப்பில் அடியின் ஈற்றுச் சொல் அடுத்த அடியின் முதலில் அமையப் பின் வரும் பாடல் அமைந்துள்ளது.

விழிதனிலுன தழகே — என்
அழகிலுனது விழியே
தொழுதபிறகுன் தழுவல் — நான்

தழுவிப்பிறகுன் தொழுதல் அந்தான்
... ...— — ... ...

எனும் இப்பாடல்,

"கடலோரத்தில் கப்பல் பார்
கப்பல்லே ஆயாபார்
ஆயா கையிலே தட்டைப்பார்
– ... ... — ... ... – ...

என்னும் நாட்டுப்புறப்பாடல் வடிவத்தை ஒத்து அந்தாதி அமைப்பில் அமைந்துள்ளதைக் காணலாம். இப்பாடல்கள் யாவும் தொடர்ந்து வரல் (Continious) வகையுள் அடங்கும்.

மீள்வது நோக்கம் — இந்த
மேன்மைத் திராவிடர் மீளுவதின்றேல்
மாள்வது நோக்கம் — இதை
– ... – ... ... – ...

இப்பாடலில் 'நோக்கம்' என்ற சொல் ஒரு அடிவிட்டு அடுத்த அடியில் திரும்ப வருகின்றது, இவ்வாறு ஒவ்வொரு பத்தியின் இறுதியிலும் "அப்பா இல்லை எப்படி முடியும்?' "கூவாய்க் கருங்குயிலே'' "போன்ற தொடர்கள் அமையப் பாடல்களும் காணப்படுகின்றன. இவை விட்டு விட்டு வரல் (un Continious) வகையாகும்.

வடிவம்

ஏற்றப்பாட்டின் இசையில் தம் மனதினைப் பரிகொடுத்த கம்பர் அப்பாடல் முழுமையினையும் அறிந்துகொள்ள இரண்டு நாள் செலவிட்டாராம். இவ்வாறு நாட்டுப்புறப் பாடலின் இனிமையான இசையில் தம் மனதைப் பறிகொடுத்த பாவலர் கள் அவ்வடிவத்தை அவ்வாறே ஏற்றுத் தம் கற்பனைத் திறனால் கவிதை புனைந்தனர். தாலாட்டு, கும்மி, பள்ளு போன்ற பல இலக்கியங்கள் தனிவகையாக வளர்ந்து வந்தமைக்குக் காரணம் நாட்டுப்புறப்பாடலில் 'வடிவ' விதையேயாம், பாரதிதாசன் கவிதைகளில் நொண்டிசிந்து, கும்பி, தாலாட்டு, ஏற்றப்பாட்டு முதலிய நாட்டுப்புற வடிவங்கள்

காணப்படுகின்றன. மேலும், மாணிக்க வாசகர் எடுத்தாண்ட நாட்டுப்புறப்பாடல் வடிவமான 'திருத்தெள்ளேனம்' என்ற வடிவத்தை தமது திராவிடர் திருப்பாடல் எனும் கவிதையில் அவ்வாறே புனைந்துள்ளார்.

மேற்கூறிய வடிவங்கள் அனைத்தும் பாரதிதாசன காலத்திற்கு முன்பே ஏட்டு இலக்கியங்களில் எடுத்தாளப்பட்ட வடிவங்கள். எனவே, பாரதிதாசன் நாட்டுப்புறப்பாடல் வடிவத்திலிருந்தே நேரிடையாக எடுத்தாண்டார் என்று கூற இயலாவிடினும் அதன் தாக்கத்திற்கு இவரும் ஆட்பட்டுள்ளார் எனத் துணிய முடிகிறது.

பேச்சு வழக்குச் சொற்கள்

பாரதிதாசன் கவிதைகளில் பேச்சு வழக்குச் சொற்கள் அதிகம் பயிலப்பட்டு வருகின்றன. இச்சொற்கள் அனைத்தும் புதுவையைச் சுற்றியுள்ள வட்டார வழக்குச் சொற்களாகும்.

நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்

குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல் என்னும் குறளுக்கு ஏற்பத் தான் பிறந்த மண்ணில் வழங்கும் பேச்சுச் சொற்கள் தம் கவிதையின் ஊடே புகுந்துள்ளன. அச்சொற்கள் வருமாறு அந்தி, அண்டை, அண்டுதல், இளித்தாள், கட்டலி, ஏகாலி, ஏடா, ஏனம், ஒட்டும் பொடி, கனைத்தல். குந்தி. கும்மாளம், குறடு, கூடம், கூழ், கொல்லை, சடக்கென்று, சாலும் கரகம், சேதி, தடயுடல், திருக்கென்று, தொன்னை, தோலே தோல், படாது (நாடப்படாது), படுவா, பக்கா, பிந்தி, பொதுக்கென, பொத்தல். மட்டாக, மொள்ளுதல், லாவகத்தோடு, தோது, வசம் முதலான சொற்களைப் பயன்படுத்தி உள்ளார்.

பேச்சு வழக்கு

தவிரவும் கிராமப்புற மக்கள் இயல்பாகப் பேசும்பொழுது எவ்வாறு சொற்றொடர்கள் அமையுமோ அவ்வாறே தமது கவிதையில் சொற்றொடர்களை அமைத்துள்ளார்.

கேட்டாலும் சரி விட்டாலும் சரி

இவ்வரியினைக் கிராமத்து மக்கள் அபூர்வமான ஒன்றையோ அல்லது சாதனையையோக்கூறும்போது''கேட்டா கேளு உட்டா வுடு'' என்று ஆரம்பிப்பார்கள். இவ்வரியை ஏறக்குறைய அப் படியே தன் கவிதைகளில் படைத்துள்ளார். இது போன்று "ஹுக்கும்'' என்று ஆரம்பித்தலும், ''நஞ்சையில் நறுக்காய் நாற்பது காணியும்'' எனவும், மனைவியைக் கிராமத்துக் கணவன் அழைத்தல் போல "உன்னைத்தானே'' என்று கூப் பிடுவது போலவும் அமைத்துள்ளார். இதுபோன்று கவிஞர் தமது கவிதையில் பேச்சு வழக்கினை சரளமாகப் பயன்படுத்தி யுள்ளார். பின்வரும் பாடல் இதற்கு நல்ல சான்றாக அமை யும்.

என்னா கெழவா? பொடியனெங்கே? இங்கேவா!
கன்னா பின்னாஇன்னு கத்துறியே என்னாது?
மாடுவுளை மேய்க்கவுடு! மாந்தோப்பில் ஆடவுடு!
காடுவுளே! சுத்தவிடு! கல்விசொல்லித் தாராதே

பிற செய்திகள்

பாரதிதாசன் தனது கவிதைகளில் பயிலும் பாத்திரத்தின் பெயர்கள் அனைத்துமே கிராமத்தில் பெருவழக்காக இருக்கும் பெயர்கள் ஆகும். மண்ணாங்கட்டி, நல்லமுத்து, அன்னாசாமி, குப்பன், சுப்பன், அஞ்சலைப் போன்ற பெயர்களைக் காண முடிகின்றது.

"குள்ள அனுவும் நம் பாதே''
ஆக்கப் பொறுத்தோம் ஆறப் பொறுப்போம்''

போன்ற வரிகள் முறையே 'கள்ளனை நம்பினாலும் நம்பலாம். குள்ளனை நம்பாதே' 'ஆக்கப் பொறுத்தவ ஆற பொறுக்காம லாபோவா' என்ற பழமொழிகளை நினைவூட்டுவனவாக அமைந்துள்ளன.

இறுதியாக இதுவரை ஆராயப்பட்ட கருத்துக்கள் மூலம் திரும்பத் திரும்ப வருதல், வடிவம் ஆகிய நாட்டுப்புறப் பாடல் பண்புகளின் தாக்கத்திற்கு நேரிடையாகவோ, மறைமுக

மாகவோ கவிஞர் ஆட்பட்டுள்ளார். அவர் தமது கவிதைகளில் பயன்படுத்திய பேச்சு வழக்குச் சொற்களும், பேச்சு வழக்கும் தான் பிறந்த மண்ணில் வாழ்ந்த மக்களின் பிரதிபலிப்பாக அமைகின்றன.

அடிக்குறிப்புகள்

1 தமிழண்ணலின் ஒப்பிலக்கிய அறிமுகம் எனும் நூலில் 'வாய்மொழி இலக்கியமும் வரிவடிவ இலக்கியமும்' என்னும் கட்டுரையும், ஆறு. அழகப்பன் எழுதிய நாட்டுப் புறப் பாடல்கள் திறனாய்வு எனும் நூலில் 'தமிழிலக்கியங்களில் நாட்டுப்புறப் பாடல்கள் எனும் கட்டுரையும் விளக்குகின்றன. பக் 141-153, 191-218 தவிரவும் சண்முகசுந்தரத்தின் 'நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு' எனும் நூல் தனி நூலாக வந்துள்ளது.

2. வை. சத்தினாந்தன், ஒப்பிலக்கியம் ஓர் (அறிமுகம்) ப.171

3. சு. சண்முகசுந்தரம், நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு, ப. 179

4. மேலது ப. 182

5. S. Sakthivel, Forklore Literature in India, P.10.

பயன்பட்ட நூல்கள்:

1. ... — — ... பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி

2. ... ... பாரதிதாசன்கவிதைகள் இரண்டாம் தொகுதி. பாரிநிலையம், சென்னை, 1987, ப.ப

3. பாரதிதாசன் [கவிதைகள் மூன்றாம் தொகுதி, பாரி நிலையம், சென்னை, 1987 ஒ.ப.

4. அழகப்பன். ஆறு, நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு, கழகவெளியீடு, சென்னை, நவம்பர், 1973,

5. சச்சிதானந்தன். வை, ஒப்பிலக்கியம் (ஓர் அறிமுகம்) ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டு பிரஸ் சென்னை, 1985.

சாதி ஒழிப்பில் சி. என். அண்ணாதுரையின் பங்கு

ச. வீரபாண்டியன்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சாதி என்பது பிறப்பை அடிப்படையாகக் கொண்ட பாகுபாடு எனலாம். சாதி என்றால் பிரிவு என்பது பொருளாகும். தமிழ்மொழியின் பழைய இலக்கணமான தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலில் சாதி என்ற சொல் பிரிவு என்ற பொருளில் அமைந்துள்ளது. இவ் இலக்கண நூலில் வருணப் பாகுபாடு பற்றிய செய்தியும் உள்ளது. எனினும், இப்பிரிவுகள் பிறப்பின் அடிப்படையில் இல்லாமல் தொழிலின் அடிப்படையில் அமைந்துள்ளன. என்பது கருதத்தக்கது பிறப்படிப்படையிலான பாகுபாடுகள் திருவள்ளுவர் காலத்தில் பரவத் தொடங்கியது எனக் கருதலாம். இதனை, திருவள்ளுவரின் திருக்குறளால் அறியலாம். இத்திருக்குறள் பிறப்படிப்படையிலான சாதி வேற்றுமையை எதிர்ப்பதாக உள்ளது. இதற்கு பின் சித்தர் பாடல்களில் சாதி எதிர்ப்புக் காணப்படுகிறது. இவற்றால் சாதிப்பிரிவுகள் வேரூன்றிய தன்மையும் அதனை எதிர்ப்பதுவும் காலங்காலமாக இருந்து வருவதை அறியலாம். இச்சாதி எதிர்ப்பு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் இப்பிரிவுகளுக்கு காரணமாகவும், வருணாசிரம அடிப்படையில் உயர்ந்தப் பிரிவாக கருதப்படுகின்ற பிராமணர்களின் எதிர்ப்பு இயக்கமாக எழுச்சி பெற்றது.

சி.என். அண்ணாதுரையின் சாதி எதிர்ப்பு

வருணாசிரமதருமம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிகப் பெரிய செல்வாக்கைப் பெற்றது. தமிழகம் முழுவதும் கோலோச்சியது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும்

இந்நிலை நீடித்தது. இந்நிலையில் 1916-ஆம் ஆண்டு பிராமணரல்லாதாரின் தலைமையில் பிராமணியத்தை எதிர்த்து நீதிக்காட்சி தோற்றுவிக்கப்பட்டது. அக் கட்சியின் வருணாசிரம எதிர்ப்புக் கொள்கையால் கவரப்' பெற்ற சி என். அண்ணாதுரை (இதன்பின் 'அண்ணா' என்ற சொல்லால் அறியலாம்) அவ்வியக்கத்தில் சேர்ந்தார். பின்னர் 1938-ஆம் ஆண்டு நீதிக்கட்சி, பெரியாரால் தோற்று விக்கப்பெற்ற சுயமரியாதை இயக்கத்துடன் இணைந்தபொழுது பெரியார் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந் நிலையில் பிராமணீய எதிர்ப்பு வலிமைபெற்றது. அண்ணா பெரியாரின் இயக்கத்தில் எழுச்சியுடன் செயல்பட்டார், நீதிக் கட்சியில் சேர்ந்த காலம் முதல் அவர் முதலமைச்சராக இருந்த திராவிட முன்னேற்றக் கழகக் காலம் வரை அண்ணாவின் சாதி ஆதிக்க எதிர்ப்பு பல்வேறு தன்மைகளிலும் வெளிப் பட்டது. சாதி அமைப்பில் கிளைவிட்டுப் பரவியிருந்த தீண்டாமை, மூடநம்பிக்கை, பெண்ணடிமை, முதலிய பல நிலைகளையும் எதிர்த்த அண்ணா சாதி அமைப்பில் பொது வான ஐந்து கண்ணோட்டங்களில் கண்டார். அவற்றை,

1. இனக் கண்ணோட்டம்
2. மொழிக் கண்ணோட்டம்
3. மதக் கண்ணோட்டம்
4. வர்க்கக் கண்ணோட்டம் மேலும்
5. வருணக் கண்ணோட்டம் எனப் பகுக்கலாம்.

இனக் கண்ணோட்டம்

இனக் கண்ணோட்டத்தில் ஆரியர், திராவிடர் என்ற பாகுபாட்டில் எதிர்த்தார். ஆரியர்கள் பிராமணர்கள் மற்றும் வடநாட்டார் என்ற பொருளிலும், திராவிடர்கள் தமிழ்நாடு பிராமணரல்லாதார் என்ற பொருளிலும் அமைந்த சொற் களாகும். தமிழர்க்கு உரிய தமிழ்நாட்டில் வடநாட்டாராகிய ஆரியர்கள் மேலாதிக்கம் பெறுகின்றனர் என்ற பொருள்பட எதிர்த்தார். இதனை, அண்ணா 1943-ஆம் ஆண்டில் எழுதி யுள்ளார். **ஆரிய மாயை** என்ற நூலால் அறியலாம். இந்நூலில்,

''ஆரியரிடமிருந்து பிரித்து காட்டக்கூடிய அளவு தனித்து வாழ்ந்த திராவிடர்கள் தான் ஆரியர் 'சூத்திரர்' (தாசிமக்கள்) என்று நான்காம் வருணத்தராய் வழங்கினர்..'' என்பர். ஆரியர் பண்பாடு, ஆட்சி, மொழி, நாகரிகம் ஆகிய அனைத்திலும் தமிழரிட மிருந்து வேறுபட்டனர். என்பதையும், தனித்தன்மை வாய்ந்த திராவிடரை 'தாசிமக்கள்' என்ற இழிவுப் பொருளில் 'சூத்திரன்' என ஆரியர் வழங்கினர் என்று அண்ணா கூறுவதால் அறியலாம். இதில் பிராமணர், ரபிாமணரல்லாதார் என்ற வேறுபாட்டை இனக் கண்ணோட்டத்தில் காண்பதை அறியலாம்.

மொழிக் கண்ணோட்டம்

ஒரு நாட்டின் வளர்ச்சியில், பண்பாட்டில், சாலையில் மொழி பின்னிப் பிணைந்துள்ளது எனலாம். மொழிப் பண்பாட்டின் எதிரொலியாக உள்ளது. இந்நிலையில், இன ஆதிக்கம் மொழி ஆதிக்கத்திற்கும் வழி வகுப்பதாகும். அண்ணா சாதிப்பிரிவை இனநோக்கில் கண்டதுபோல், அதனை, மொழி நோக்கிலும் வைத்துக் காண்கிறார். சமஸ்கிருதமொழி ஆரியரான பிராமணர்களுக்கு உரிய தென்றும், அம்மொழியைவிடத் திராவிடரின் மொழியிலான தமிழ் உயர்ந்தது என்றும் கூறியுள்ளதைக் காணலாம். ''பல மொழிகளிலும் இல்லாத ஒரு சிறப்பு தனிச்சிறப்பு தமிழுக் குண்டு. உயர்திணை என்ற பிரிவுக் கொள்கை, தமிழில்தான் உண்டு. திணையென்றால், ஒழுக்கம் ஆகும். திணைக்கு இடம் எனப் பொருள் கூறுபவர்கள் அறிவில்லாதவர்கள். அக வொழுக்கம் புறவொழுக்கம் என்பது, அகத்திணை, புறத் திணை ஆகும் நிற்க, ஆரியம் போன்ற மொழிகளில் பெண்ணைக் குறிக்கவரும் ஒவ்வொரு சொல்லும் ஒரு பாலைக் குறிக்கும். தமிழில் அப்படி இல்லை ஏன்? பொருள் அர்த்தம் பற்றிப் பெயர் வைப்பது தமிழ்முறை'' என்றார். ஆரியர் களுக்கு உரிய வடமொழியை தாழ்த்தியும் தமிழ்மொழியை உயர்த்தியும் கூறுவதால் அவருடைய மொழிக் கண்ணோட்டத்தைக் கொண்டு சாதி ஆதிக்க வெறுப்பைப் புலப்படுத்துவதை அறிய இயலும்.

மதக் கண்ணோட்டம்

தமிழரின் சாதிமுறைக்கு இந்துமதம் அடிப்படை என அண்ணா கருதினார். எனவே, இந்துமத எதிர்ப்பை மேற்கொண்டார். இந்து மதத்தில் உள்ள பல்வேறு தீமைகளை எடுத்துக்கூறி அம்மதத்தைக் கைவிடும்படி பல இடங்களில் அண்ணா வலியுறுத்தியுள்ளார். "தீண்டாதவர் எனக் கூறப் படும் மக்களைத் தப்பித் தவறி தீண்டிவிடுவதும், சில ஊர்களில் அவர்களைக் கண்களால் பார்ப்பதென்பதும், சில சமயங்களில் அவர்களுடைய நிழல்படுவதும், ஒரு தீட்டாகவே தான் பாவிக்கப்பட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது, இத்தகைய விபரீத விளைவுகள் ஏற்படக் காரணம் இந்து மதமெனக் குறிப்பிடும் ஆரிய ஆதிக்கமல்லவா அந்த. ஆரிய ஆதிக்கத்தை ஒழித்துவிட்டுத் தன்மானம் நிலைக்கும்படி ஆக்க வேண்டும்." இதில் ஆரியரான பிராமணர்களே இந்துமதத் திற்கும் அதனால் ஏற்படுப் சாதித் தீமைகளுக்கும் காரண மாவார் என்றும், அவர்களின் சாதி ஆதிக்கம் தகர்க்கப்பட இந்துமதம் அழிக்கப்பட வேண்டும் என்ற பொருளிலும் கூறியுள்ளதைக் காணலாம்.

வருணக் கண்ணோட்டம்

சாதிப்பிரிவை பிறப்படிப்படையான வருணப் பாகு. பாடாகக் கருதலாம். இதனை "வருணாசிரமும் ஆரியமதமும் உறுதியடைய அன்றுவரை உயர்வாக மதிக்கப்பட பாணர், பறையர், குறவர் ஆகியோரது நிலை படிப்படியாகத் தாழ்ந்து வந்ததைக் காணலாம்." என்பதால் அறியலாம். அண்ணாவின் சாதி ஒழிப்புக் கொள்கையில் இவ் வருணாசிரம எதிர்ப்பும் காணப்பட்டது. இதனை, "நமது நாடு உருப்பட வேண்டு மானால் முதலில் ஒழிய வேண்டியது, உடனே ஒழிக்கப்பட வேண்டியது, ஒவ்வொரு துறையிலும் தகர்க்கப்படவேண்டியது ஆரியமத வருணாசிரம ஏகாதிபத்தியம்தான்" என்பர். இதனால் சாதி ஒழிப்பும் வருண ஒழிப்பும் ஒன்றெனஅண்ணா கருதினார் என்பது புலனாகும்.

வர்க்கக் கண்ணோட்டம்

மார்க்சிய கருத்தின்படி வர்க்க மாணவ உடைமையாருக்கும் இல்லாதருக்கும் உள்ள முரண்பாடு ஆகும். ஆனால், திராவிட இயக்கத்தில் தமிழ்நாட்டு நிலையைக் கருத்தில் கொண்டு வர்க்கம் சாதிய அடிப்படையில் நோக்கப்பட்டது. குறிப்பிடத் தக்கது. மேல்சாதிக்காரர்களே உடைமை வர்க்கத்தினராகக் கருதப்பட்டனர். இதனால் உழைத்துண்டு வாழ்ந்த கீழ்ச் சாதியினராகக் கருதப்பட்டோர் பாட்டாளி வர்க்கத்தினராகக் கருதப்பட்டனர். இக்கோட்பாடு அண்ணாவின் வர்க்கம் கோட்பாடாக,அமைந்துள்ளது எனலாம். இதனை, 'பாட்டாளி கள் விடுதலைப் பெறவேண்டும், உரிமைப் பெறவேண்டும் என்ற உணர்வு பெறுவதற்கு முதலில் நாம் யார் கட்டில் சிக்கினோம்; எந்தக் கட்டில் சிக்கினோம்; எது நம்மைக் கட்டில் சிக்கவைத்து; சிக்க வைத்துக் கொண்டும் இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். பிறவி முதலாளியாக உள்ள ஆரியர்களின் ஆதிக்கத்தை அகற்றிவிட்டால், பின்னர் பொருள் படைத்தால் முதலாளியாகிப், பொருள் இழந்தால் தொழிலாளியாகிவிடக்கூடிய கூட்டத்தின் ஆதிக்கத்தை அகற்றக் கூடியதென்பது மிக எளிதாகச் செய்து முடிக்கக் கூடியது ஆகும்.'' என்று கூறுவதால் அறியலாம். வர்க்க வேறுபாடு என்பது அண்ணாவின் கருத்தில் சாதி வேறு பாட்டில் அமைந்துள்ளது என்பது கருதத்தக்கது.

சாதி ஒழிப்பிற்கான அண்ணாவின் கோட்பாடு

சாதி அமைப்பை வருணாசிரமத்தோடும்; மத, இன,மொழி அமைப்போடும், பொருளாதாரத்தோடும் இரண்டறக் கலந்த சமுதாயத் தீமையாகக் கருதினார். எனலாம். இதனால், பல கடவுள், பல சாதிகள் கொண்ட இந்துமதமும், வருணா சிரமம், சாதி முறையை தக்க வைக்கும் பார்ப்பனீய ஆதிக்கமும் முதலில் ஒழிக்கப்பட வேண்டும். என்பது அண்ணாவின் சாதி ஒழிப்புக் கோட்பாடாகும். இவற்றுக்குத் துணை நிற்கும் மொழி அமைப்பு திருத்தப்பட வேண்டும் என்றும், அவர் கருதினார் எனலாம். மேலும் சாதி ஒழிய

அவர் கலப்புமணத்தை ஆதரித்து எழுதி, பேசியதோடு அல்லாமல் கலப்பு மணத்தை நடத்தியும் வைத்தார். கலப்பு மணம் சட்டப்படி செல்லுபடியாகாது என்றிருந்ததை அவர் முதலமைச்சர் (தமிழ்நாடு) ஆனவுடன் சட்டமாக்கி, கலப்பு மணம் புரிவோருக்கு 10,000 ரூபாயும் தங்க மெடலும் அளித்து ஊக்குவித்தார். இதனால், அவர் சாதிகள் ஒழிய வேண்டும் என்பதை விரும்பினார் என்பது புலனாகும்.

சான்றெண் விளக்கம்

1. தமிழ்ப்பேரகராதி, சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், மசீபியல் நூற்பாக்கள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969.
3. திருவள்ளுவர், திருக்குறள்
4. கோவேந்தன் (பதி) சித்தர் பாடல்கள்
5. அண்ணாதுரை சி. என். ஆரியமாயை, பாரி நிலையம், சென்னை, 1985.
6. விடுதலை — தின இதழ்
7. திராவிடநாடு - வாரயிதழ்

வட ஆர்க்காட்டில் மாரியம்மன் திருவிழா

எஸ். வெங்கடேசன்
உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

சமுதாய பண்பாட்டினை பல நிலைகளில் அறிந்து கொள்ளமுடியும். தமிழ்ச் சமுதாய பண்பாட்டினைக் கோயில் திருவிழாக்களின் வழியாகவும் காணமுடியும். இம்முறையில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் மாரியம்மன் கோயில் திருவிழா வழியாக அறியலாகும் தமிழ் சமுதாய பண்பாட்டினைக் காண்பதுதான் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

''விழா என்னும் திறந்தவாசல் வழியேதான்
நம்நாட்டு மக்களை அறிந்து கொள்ளமுடியும்''
(சு. சக்திவேல், 1983:195)

என்ற உலகப் பெரும் கவிஞர் இரவிந்திரநாத் தாகூரின் கூற்று இவ்விடத்தில் நினைக்கத் தக்கதாகும்.

தமிழ்நாட்டில் மாரியம்மன் திருவிழா

கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் மாரியம்மன் தமிழ் நாட்டில் வணங்கப்பெற்று வருகிறாள். தமிழகத்தின் சிற்றூர் களிலும், பேரூர்களிலும் மாரியம்மனை வணங்கி வருகின்றனர் (ச. கணபதிராமன், 1986:25). ஆனால் தமிழ்நாட்டின் வட மாவட்டங்களிலும், தென்மாவட்டங்களிலும் மாரியம்மனை வழிபடுதலிலும் விழா நடத்துவதிலும், கோயில் அமைப்பிலும் வேறுபாடுகள் இருக்கின்றன. நாட்டுப்புறத் தெய்வமாக இருந்த மாரியம்மன் பல்வேறு பெயரில் மெல்ல மெல்ல உயர் நிலை ஆக்கத் தெய்வமாக வளர்ந்து வருகின்ற நிலையினை தற்போது காணமுடிகிறது. தொடக்க காலங்களில் மாரியம்மனை வழிபட்ட முறைக்கும் தற்காலங்களில் வழி

படும் முறைக்கும் நிறைய மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு வருகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் மாரியம்மனுக்குக் கோயில் இருக்கிறது. கோயில் இல்லாத கிராமங்களில் கல்லை நட்டு வழிபடுகின்றனர். மாரி என்னும் சொல் முன்னர் மழையைக் குறித்தது. பின்னர் இச் சொல் மாரியம்மன் என்ற தெய்வத்தையும் குறிக்க வந்தது. தமிழ்மக்கள் மழையினைப் பெண்களோடு தொடர்பு படுத்தியுள்ளதை எண்ணிப்பார்க்க இடமுண்டு (ச. கணபதிராமன் 1986;26) மழையினைக்குறிக்கும் சொல்லான மாரியைப் பெண் தெய்வத்திற்குத் தமிழர்கள் பெயராகக் கொண்டிருப்பதில் நுட்பமான பொருளிருப்பதை உணரலாம். உலகம் செழிக்க மாரி உதவுகிறது போல் வாழ்வு சிறக்க மாரியம்மன் துணைசெய்கிறாள் என்பது அக்கருத்தாகும். இக்கருத்துக்களை மனதில் கொண்டுதான் தமிழகத்து மக்கள் மாரியம்மனை வழிபட்டும் விழாவெடுத்தும் வருகின்றனர்.

வட ஆர்க்காடு மாவட்டம்

வட ஆர்க்காடு மாவட்டம் வடக்கில் ஆந்திர நாட்டின் சித்தூர் மாவட்டத்தையும், கிழக்கில் செங்கற்பட்டு மாவட்டத்தையும், தெற்கில் தென் ஆர்க்காடு மாவட்டத்தை யும், மேற்கில் சேலம் சித்தூர் மாவட்டங்களையும் எல்லை களாகக் கொண்டுள்ளது. மலைகளும், குன்றுகளும் நிறைந்த பகுதிகள் உள்ளன. சேயாறு, பாலாறு ஆகிய முக்கிய ஆறுகள் இம்மாவட்டத்திற்கு வளத்தைக் கொடுக்க உதவுகின்றன. நெல், கேழ்வரகு, சோளம், கம்பு, கருப்பு. வேர்க்கடலை, ஆகிய தானியங்கள் அதிகமாக விளைகின்றன. பல்லவர், சாளுக்கியர். இராட்டிரகூடர் கங்கர், ஒய்சாளர், விஜய நகர அரசர்கள், திப்பு சுல்தான்கள் ஆகிய வம்சத்தினர் இம்மா, வட்டத்தில் ஆட்சி புரிந்தும், சண்டையிட்ட நிகழ்ச்சிகளும் வரலாற்றுச் சிறப்புடையதாக அமைகின்றன. பிராமணர், செட்டிகள். வன்னியர், யாதவர், கம்மவார், கருணிகர், கைக்கோளர், முதலியார், குயவர், செம்படவர், கவரார், சானார், நைனார், நாவிதர், வண்ணார். பறையர், சக்கிலியர், குறவர் போன்ற சாதியினர் இருக்கிறார்கள். தமிழ்

மொழி பேசும் மக்கள் அதிகமாக இருந்தாலும் தெலுங்கு, உருது மொழி பேசுபவர்களும் அதிகமாக இருக்கிறார்கள். உழவுத்தொழில், நெசவு கைத் தொழில்கள், வேட்டையாடுதல், மரமேறுதல் போன்ற தொழில்கள் முக்கிய இடம் வகிக்கின்றன.

நாட்டுப்புற தெய்வக் கோயில் அம்மன் திருவிழாக்கள்

வட ஆர்க்காடு மாவட்டத்தில் நாட்டுப்புற தெய்வங்களின் எண்ணிக்கை ஐம்பதுக்கும் மேலிருக்கும். ஆண் தெய்வங்களை விட பெண் தெய்வங்களே மிகவும் அதிகம். பெண் தெய்வங்களை அம்மன், அம்பாள் என்று வழங்குவர். ஒரு கிராமத்திற்கு ஒரு அமமன் கிராம தேவதையாக கண்டிப்பாக இருக்கும். அங்காள பரமேஸ்வரி, எட்டியம்மன், எல்லையம்மன். ஒர கண்டியம்மன், ஆத கண்டியம்மன், சுங்கையம்மன், துர்கையம்மன். காளி, காளிகர்ம்பாள், காட்டேரி, கன்னிமார் திரௌபதியம்மன், மாரியம்மன், பொன்னியம்மன், பச்சையம்மன், ரேணுகாம்பாள், வேம்புலி அம்மன் ஆகிய பெண் தெய்வங்கள் நாட்டுப்புறத் தெய்வங்களில் முதன்மையான தெய்வங்களாகும். நிலா அம்மன், சென்னம்மா, செல்லியம்மன், கனகாம்பாள் போன்ற பல துணைத் தெய்வங்களும் உள்ளன, ஆண் தெய்வங்களில் முனிஸ்வரன், பெரியாண்டவர், ஐயனாரம்பன், வேடியப்பன் போன்றவை முக்கிய தெய்வங்களாகும். சில அம்மன் கோயில்களில் அம்மனுக்குத் துணையாக வாமுனி, செம்முனி என்ற துணை ஆண் தெய்வங்கள் இருக்கின்றன. புறவடையில் வணங்கும் தெய்வங்களும் உள்ளன. இம்மாவட்டத்தில் தை, மாசி, பங்குனி மாதங்களில் ஒரு சில அம்மனுக்கு விழா நடத்தினாலும் சித்திரை முதல் ஆவணி மாத இறுதி வரை வரும் கோடைக்காலங்களில் தான் மாரியம்மன் போன்ற அம்மனுக்கு விழா நடத்துவார்கள். பெண் தெய்வங்களுக்கு ஒரு நிலையிலும், ஆண் தெய்வங்களுக்கு வேறொரு நிலையிலும், திருவிழா நடத்துவதையும் பார்க்க முடிகின்றது. அம்மன் திருவிழாவின் போது மக்கள் மகிழ்வுடன் இருக்க வேண்டுமென்பதால் கலை நிகழ்ச்சியாக கூத்து நடத்துவது வழக்கம். கூத்துக் கலைஞர்கள் குறிப்பிடும் நாட்களுக்கு ஏற்பவும், மக்களின்

பொருளாதார வசதிக்கேற்பவும், கெட்ட காரியங்களாலும், ஊரில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளுக்கு ஏற்பவும் திரு விழாக்களின் காலம் குறிப்பிட்ட காலத்தில் நடைபெறாமல் நீட்டிக்கப்படுகின்றது. மேல்நிலை, ஆக்கம் பெற்ற தெய்வங் களுக்கு மட்டும் குறிப்பிட்ட நாளில் விழாவினை நடத்து கின்றனர். துர்க்கையம்மன், கங்கையமமன் ஓரகண்டியம்மன், அங்காள பரமேஸ்வரி, காளியம்மன்' கன்னிமார் போன்ற தெய்வங்களுக்கு ஆண்டில் ஒரு நாள் மட்டும் விழா நடத்துவர். துர்க்கையம்மன், கங்கையம்மன், கன்னிமார் போன்ற தெய்வங் கள் செய்யாறு தாலுக்காவில் கம்மவார் சாதியினர் உள்ள கிராமங்களில் தங்களுக்கே சொந்தமான கருதப்படுவதால் கரகம் தூக்குதல், அக்கினிசட்டி எடுத்தல், காப்புக் கட்டி கொள்ளுதல் அந்த சாதியினரே செய்து வருகின்றனர். திரௌபதியம்மனுக்கு வருடத்தில் 10 முதல் 18 நாட்கள் வரைத் தொடர்ந்து விழா எடுப்பார்கள். முனிஸ்வரன். வேடியப்பன், பெரியாண்டவர் போன்ற ஆண் தெய்வங்களுக்கு ஒரு நாள் மட்டுமே விழா நடத்துவர்,

மாரியம்மன் கோயில் விழா

வட ஆர்க்காடு மாவட்டத்தில் மாரியம்மனுக்கு பெரும் பான்மையான ஊர்களில் கோயில் இருக்கும். கோயில் இல்லாத ஊர்களில் கற்சிலையை பீடத்தில் வைத்தும், கல்லை நட்டும் மாரியம்மன் என்ற பெயரில் வழிபடுவர். கோடைக்காலத்தில் தான் மாரியம்மனுக்கு விழா நடத்துகின்றனர். ஊர் மக்கள் கூடி விழா நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டால் தனித்தனியாக விழா நடத்திக் கொள்வர். மாரியம்மன் திருவிழாவை ஜாத்திரை திருவிழா, கூற் ஊற்றுதல் விழா என்று வழங்கு கிறார்கள் (வெ. வசந்தா 17.7. 1988) கோடை காலத்தில் வேனிலின் வெம்மையால் வெப்பநோயும், அம்மைநோயும் மக்களுக்கு மட்டுமல்லாது கால் நடை போன்ற உயிர்களுக் கும் ஏற்படுவதுண்டு. மாரியம்மனுக்கு வருடாந்தோறும் விழா நடத்தாவிட்டால் இந்நோய்கள் தாக்கும் என்ற பயத்தினால் விழா நடத்துகின்றனர். மேலும் கோடை காலத்தில் வேளாண்மை செழித்து அறுவடை முடிந்து உழவர்கள் அனை

வரும் ஒய்வு பெற்றிருப்பர். விழா நடத்துவதற்கு ஏற்ற வகையில் மழை, குளிர், பனி, எதுவுமில்லாத பருவம் மக்கள் விவசாயத்தின் மூலம் கிட்டிய வருவாயில் செழிப்புடனும் மகிழ்ச்சியுடனும் இருப்பார்கள். வேலை காரணமாக குடும்பம் தன் சொந்த ஊரை விட்டு வெகுத் தொலைவில் இருந்தாலும் விழாவின் போது ஊருக்கு வந்து மாரியம்மனை வழிபடும் பழக்கத்தை இம்மாவட்ட மக்கள் கொண்டுள்ளனர்.

விழாக் காலங்கள்

விழாக்காலங்கள் வெள்ளிக் கிழமை தொடங்கி ஞாயிற்றுக் கிழமை விழா முடிவடைவதும், ஞாயிற்றுக் கிழமை தொடங்கி செவ்வாய் கிழமை முடிவடைவதும் செவ்வாய் கிழமை தொடங்கி வியாழக் கிழமை முடிவதுமாக இருக்கின்றன. இறுதி நாட்களான ஞாயிற்றுக் கிழமை, வியாழக் கிழமை அம்மனுக்கு 'பலி' கொடுத்து படையலிட வேண்டும் என்பதற்காகவும் இந்நாட்கள் இறுதி நாட்கள் அம்மனுக்கு உகந்த நாட்களாகவும் அமைகின்றன. வடார்க் காட்டில் பறையர்கள், சக்கிலியர்கள் போன்ற சேரிப் புறத்தில் வாழ் வோர் மாரியம்மனுக்கு ஒரு நாள் மட்டுமே விழா நடத்து கிறார்கள். (மா. கருப்பன், 21—8—1988) ஆடி மாதத்தில் தொடங்கி ஆவணி மாத இறுதிவரை செங்கம் வட்டம் புதுப் பாளையம் அருகே புதூர் என்னும் கிராமத்தில் மாரியம்மனுக்கு வெள்ளிக்கிழமைகளில் வார விழாவாக நடத்துகிறார்கள்.

விழா நிகழ்ச்சிகள்

பெருத்தனக்காரர், சாதிக்கொருவராக விழாக் குழுவிலும் ஊர்ப்பஞ்சாயத்திலும் இடம் பெற்றிருப்பார்கள். இவர்கள் ஒன்று கூடி குறிப்பிட்ட ஒரு தேதியில் விழா நடத்துவது என்று முடிவு செய்வர். விழாவிற்கு கூத்து நடத்துவது முக்கியமாகக் கருதப்பட்டதால் குழுவினர் முடிவு செய்த தேதிக்கு எந்த கூத்து கலைஞர்கள் சம்மதம் தெரிவிக்கிறார்களோ அவர்களை 'அம்போகம்' (முன் பணம் கொடுத்தல்) வைத்து முடிவு செய்து வரச்சொல்லி ஊர்த் தொழிலாளியான வண்ணானை அனுப்புவார்கள். அவனும் விழாக்குழுவினர் முடிவு செய்த

தேதியை விழாக் குழுவினரிடம் அறிவிப்பார். இத்தேதியை குழுவினர் தோட்டி, தலையாரி ஆகிய ஊர்க்காவலரிடம் 'தமுக்கு' மூலம் ஊர்மக்களுக்கும் பறைசாற்றுவர். விழா நடத்துவதற்கான செலவிற்காக 'தண்டல்' மூலம் பணம், தானியம் வசூல் செய்வார்கள். விழா முன் குறிப்பிட்டது போல மூன்று நாட்கள் நடக்கும்.

முடிவுரை

தொகுத்துக் கூறும்போது மாரியம்மன் திருவிழா தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது என்பது தெரிகிறது. வட ஆர்க்காடு மாவட்டம் பல இனசாதி மக்களும் பழங்குடியினரும் ஒருங்கே வாழும் மாவட்டமாகும். அவர்கள் பல்வேறு தொழில் களை செய்து வருகின்றனர். தமிழ்நாட்டில் மற்ற மாவட்டங் களைப் போல வட ஆர்க்காட்டிலும் அம்மன் கோயில்கள் அதிகம் உள்ளன. அம்மனுக்கு விழாக்காலங்களை வரையறுத்துக் கொள்கின்றனர் என்பதும், மாரியம்மன் கோயில் விழாவில் கிழ்சாதியினர் உயர்ந்த சாதியினரின் பங்கும், சமுதாயப் பண்பாடும் இக்கட்டுரையில் தெளிவாகிறது.

குறிப்பு

வட ஆர்க்காட்டில் திருவண்ணாமலை வட்டம், ஆரணி வட்டம், வந்தவாசி வட்டம், செய்யாறு வட்டம், அரக்கோணம் வட்டம் உள்ள ஊர்களில் கள ஆய்வு மேற்கொண்டு உற்று நோக்கல் முறையில் இக்கட்டுரை எழுதப்பட்டது,

துணை நூல் பட்டியல்

1. இராமசாமி, துளசி, 'நெல்லை மாவட்ட நாட்டுப் புறத் தெய்வங்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1985.
2. கணபதிராமன், டாக்டர், ச, திருநெல்வேலி பகுதியில் சிறுதெய்வ வழிபாடு திருமகள் நூலகம், தூத்துக்குடி, 1986
3. சக்திவேல், டாக்டர், சு. நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1983

"கொலைத்தீர்ப்பில் மாற்றம்!"

தே. வேங்கடேசன்
புதுவைப் பல்கலைக்கழகம்

"முதலாவது நீ எழுதப்போகிற விஷயத்தை இங்கிலீஷ் தெரியாத ஒரு தமிழனிடம் வாயினால் சொல்லிக் காட்டு; அவனுக்கு நன்றாக அர்த்தம் விளங்குகிறதா என்று பார்த்துக் கொண்டு பிறகு எழுது. அப்போதுதான் நீ எழுதுகிற எழுத்து தமிழ்நாட்டிற்கு பயன்படும். உனக்கு இஹபர மேஷங்களுக்கு இடமுண்டாகும். இல்லாது போனால் நீயும் சிரமம்பட்டு மற்றவர்களுக்கும் இடமுண்டாகும். இல்லாது போனால் நீயும் சிரமப்பட்டு மற்றவர்களுக்கும் பயனில்லாமல் போகிறது"[1] என்று அறிவுறுத்திய பாரதியின் பாதையை முன்வைத்து, மேற்கண்ட தலைப்பிற்கு உறுதுணையாக, சோழர்காலச் சமுதாயத்தில் கொடுக்கப்பட்ட தண்டனையை இக்காலச் சமுதாயக் கண்ணோட்டத்தில் சீர்தூக்கிப் பார்க்கும் வகையில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகின்றது.

சோழர் காலச் சமுதாயம்

சமூகத்தினை ஏன்றிணைக்கும் அரசியல், சமயம், கலை, இராணுவம், மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் முதலியவை சோழர்காலத்தை "பொற்காலச் சமுதாயம்" என்றெண்ணு மளவிற்குப் பற்றியிருந்தன. அக்கால மன்னர்கள் நடத்திய ஆட்சியை பகேசனின் ஆட்சியாகவே மக்கள் கருதினர். எனவே நீதி பரிபாலனையும் அரசன் பார்வைக்குட்பட்டே நடந்திருக்கின்றது. பல்வகைப்பட்ட சாதிப்பிரிவினைகள் உட்பூசல்கள் இருப்பினும், மக்கள் தங்களது தேவைகளையும், உரிமைகளையும், உறவுகளையும் பாதுகாத்துக் கொள்வதில் முழுக்கவனம் செலுத்த அரசனையே நம்ப வேண்டியிருந்தது. இருப்பினும் ஆங்காங்கே நிலவுடைமைச் சமுதாயம் மேலெழும்

புவதையும் காணமுடிகிறது. எனவேதான் சோழமன்னன், பல்வேறு வகையான அதிகாரிகளை நியமித்து ஊர்கள், நகரங்கள் 'சபைகள்' கோயில்கள் ஆகிய அமைப்புகளை நிர் வாகம் செய்து சட்டம், ஒழுங்குமுறைகள் ஆகியவை நெறிப்பட அமைய வழிவகுத்தான். எனினும், ஆங்காங்கே ஊழல்களும், முறைகேடுகளும் நிகழ்ந்துள்ளன என்பதைக் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது.

குற்றங்கள்:

1)கோயில்களில் செய்த குற்றங்கள், 2) உலக வாழ்க்கையில் பொதுவாக நடந்த குற்றங்கள் என்று இருவகைப்பட்ட நிலையில் சோழர்காலக் குற்றங்களைப் பிரிக்கலாம்.

இத்தகைய குற்றங்களைத்தையும் தொகுத்து நோக்கினால் அவற்றின் பொதுவான தன்மைகளை மூவகையாகப் பிரிக் கிறார், இல. தியாகராசன் எனபவர். அவையாவன:

1) அரசின் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரிவர்கள் கணக்குக் காட்டாமல் இருத்தல்; அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்திப் பிறர் சொத்துக் களைக் கவருதல்; கையூட்டுப் பெறுதல்; அரசுக்கு வரி செலுத்தாமல் நிலங்களை அனுபவித்தல், தம் கட மையைச் செய்யாமல் ஏமாற்றுதல்.
2) கோயில் அலுவலர்கள் கோயில் வழி பாட்டுக் கென வைத்த நிவாதங்களைத் தாமே அனுபவித்தல்.
3) கோயில் சொத்துக்களைத் திருடுதல்; அவற்றை ஒழுக்கக்கேடான காரியங்களுக்குப் பயன்படுத்துதல்[2].

மேற்கண்ட குற்றங்களைப் பெரும்பான்மை அதிகாரி களாக பணிக்கப்பட்டிருந்த அந்தணர்கள், சிவபிராமணர்கள், தேவகன்மிகள் முதலியோர் புரிந்துள்ளனர். இப்படிப்பட்ட குற்றங்களுக்கு கொலைத் தண்டனை உண்டு என்று கல் வெட்டுகளில் காணப்படினும் ஏதாவது ஒரு காரணம் காட்டிக் கொலைத் தண்டனையிலிருந்து விலக்கு அளித்தனர்"[3] என்று டாக்டர் சுவாமிநாதன் குறிப்பிட்டுள்ளார். அதற்குரிய

காரணத்தை ஆராயும் போது, அந்தணர்களை அரசர்களே நிலவுடைமையாளர்களாக உருவாக்கியுள்ளனர் என்றும், அவர்களுக்கு மிக நெருக்கமான அரசியலுறவையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். மேலும், ஆட்சி செலுத்துவதற்குரிய அறிவையும், ஆற்றலையும் அந்தணர்கள் பெற்றிருந்தால் சோழ அரசை இயக்குகின்ற சக்தியாகவே விளங்கினார்கள்.[6]

இயங்குகின்ற பொருளைக் காட்டிலும் அதை இயக்குகின்ற சக்தி ஆற்றல் மிக்கது என்பது சமூகவியலறிஞர்கள் கருத்து. இக்கருத்து முறைக்கேற்ப நடைபெற்று வந்த அரசியலமைப்பின் நீதி முறையில், மனிதசமூகத்தின் அடிப்படைய. பண்பே சீர்குலையும் வண்ணம், தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அத் தீர்ப்பில் கொடுக்கப்பட்ட தண்டனை முறை மனிதநேயத்திற்கு அரண்செய்வதாக அமையவில்லை. நமது மானுட சமுதாயத்தில் ஒற்றுமையுணர்வை, வலுப்படுத்தவே அத்தீர்ப்பு முறை மாற்றப்பட வேண்டியுள்ளது.

என்ற அறிஞரின் கருத்து, நாம் ஒவ்வொருவரும் அடிப் படையில் பின்பற்றப்பட வேண்டிய ஒன்றாகும், அக்கருத் தாவது.

"ஒவ்வொரு மனிதனும் ஏனைய மனிதர்களுடன் கொண்டிருக்கிற

உறவுமுறைகளைத்தான் சமூகம் எனச் சொல்லுகிறோம்" அப்படிப்பட்ட மனித உறவே அறுந்து நிலத்தில் வீழும் வண்ணம் மனித மனத்துள் ஏற்பட்ட வன்மை, குரூரம், புரட்சி முதலியவை எல்லை மீறிய அளவில் 'கொலை' முயற்சிகள் தோன்றுகின்றன. பகையுணர்ச்சி மேலெழும்ப மனிதன் மண்ணுக்கு இரையாகின்றவ; மனிதத்தன்மையே, ஒருவரை ஒருவர் மாய்த்துக்கொள்வதால் அகலபாதாளத்தில் அழுத்தப்படுகின்றது.

இப்படி பகைமுற்றிய தாகத்தால் பகைவனோடு பண் பாளனும் பறி போகின்றான்; அத்தகைய நிலைமையில்

அவனுக்குப் பரிசா அளிப்பது! இதைச் செய்தது சோழர்கால நீதிமுறையை வகுத்த "நியாயத்தார்." எனப்படும் நீதிபதிகள். 'தர்மாசனப் பட்டர்கள்' என்றழைக்கப்படும் இவர்கள், நீதி பரிபாலனமுறையில் எவ்வித மாற்றமுமின்றி நடத்தி வந்தனர். அதாவது. கொலை செய்தவனின் தலையை கொய்யாது, ஒரு விலை நியமித்து தீர்ப்பளித்தல்.

மேற்கண்ட தீர்ப்பிற்கு,

ஆதாரம்

'ஒருவன், வில்லாளிகள் படைத் தலைவனை அடித்துக் கொன்றதன் விளைவாக, 96 ஆடுகளை அருகிலுள்ள கோயிலுக்கு விளக்கெரிக்கக் கொடுக்க வேண்டும்' என்று இரண்டாம் இராசேந்திர சோழனது கல்வெட்டு குறிப்பிடு கின்றது.

இப்படிப் பல கல்வெட்டு, முதலாம் குலோத்துங்கனது ஆட்சிக்காலத்தில், சமூக துரோகி ஒருவனால் இரவு நேரத்தில் அதிகாரியும் அவனது மனைவியும் கொல்லப்பட்டது என்றும், அதற்குரிய தண்டனையாக விளக்கெரிக்கப்பட்டது என்றும் குறிப்பிடுகின்றது.[6]

இப்படிப் பல கல்வெட்டுக்களில் தீர்ப்பு வழங்கப்பட்டிருப் பதைக் காணமுடிகிறது.

உயிரின் முக்கியத்துவத்தை அறிந்த மனிதன், விலங்கு உணர்ச்சியின் உந்துதலினால் அதனை அழிப்பதற்குக் காரண மாக மாறுதலையும் உணர்ந்தவன், அப்படிப்பட்ட கொலை நிகழ்ச்சிக்குக் கொடுத்தத் தீர்ப்பு விளக்கெரித்தல் எனும் போது நம் உணர்ச்சியைத் தூண்டுகிறது. ஒரு ஆடு அறுபது ரூபாய என்று வைத்துக் கொண்டாலும் ஏறத்தாழ ஆறாயிரம் ரூபாய்க்குரிய 96 ஆடுகளை ஒரு கொலையாளியால் கொடுக்க முடியாதா? உயிரையழிக்கத் துணிந்தவனுக்கு இந்த உறை விடத்துப் பொருளை எடுப்பதற்குத் துணிவிருக்காதா? அல்லது அக்காலத்தில் பொருள்திரட்ட வழிதான் தெரியாதா? அல்லது பொன், அணிகலன்கள், பொருள்கள் முதலியவை அவனது கண்ணிலேயே படாதிருந்தனவா?

திருடுபவன் கூட கொலை செய்ய அஞ்சுவான், ஆனால் கொலையாளி அனைத்திலும் கை தேர்ந்தவன். அத்தகைய சமுகத்துரோகியை சாதாரணமாக விளக்கெரிக்க விடுவதா? என்னதான் விளக்கின் அவசியம் தேவை என்றாலும் அதனை எரிக்க வேறு மக்களேயில்லையா?

எண்ணற்ற கல்வெட்டுகள் கூறும் செய்தி, மக்கள் தானமாக அளித்த விளக்குக் கொடை பற்றியே அமைந்துள்ளது.

இந்நிலையில், ஏராளமான கொடைகளை விளக்கேற்றுவதற்காகவே அளிக்க முன்வரும் மக்கள் ஒருபுறமிருக்க, அரசுக்கு வரியாக விளக்கேற்றும் மக்கள் ஒரு புறமிருக்க, தனது நிலம் பொன் மற்றும் அணிகலன்கள், ஆடுகள், மாடுகள் பசுக்கள் ஆகியவற்றை கோவிலுக்கு அர்ப்பணித்து தன்னையும் அதில் அடிமையாக விற்றுக் கொள்கின்ற மக்களும் ஒருபுறமிருக்க, மேற்படி சமுகத்துரோகிகளை இப்பணியை மேற்கொள்ளச் செய்ததன் நோக்கம் என்ன?

1. இத்துரோகிகள் அதிகாரியின் உறவாளிகளாயிருக்கலாம்; நெருக்கமானவர்களாயிருக்கலாம்.

2. அரசுடன் (அரசனுடன்) தொடர்புடையவர்களாயிருக்கலாம். (பலம் மிக்கவர்களாக)

3. மிகுந்த செல்வந்தர்களாயிருப்பின், அதிகாரிகளிடம் 'கையூட்டு' அளித்து மாற்றப்பட்டிருக்கலாம்.

மேற்கண்ட யூகங்கள் இன்றைய சமுதாய உற்றுநோக்கலின் அடிப்படையில் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு நிகழ்த்தப்பட்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

இருபதாம் நூற்றாண்டில் –

இன்றைய வளர்ச்சியில், நீதிமுறையில் பெருத்த மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. யதார்த்தங்களை முழுதும் நம்பியிருந்த காலம் மாறி இன்று அறிவியல் பூர்வமாக உண்மைகள் அரங்கேற்றப்படுகின்றன. என்றாலும், அதிலும் ஒரு சில ஓட்டைகள் தோன்றிக் கொண்டுதானிருக்கின்றன.

தவறு செய்வது மனிதனின் இயல்பை உணர்த்தினாலும் To Err is human) அதற்குரிய தண்டனையைப் பெறுவதில் அவனது தனித்தன்மை வெளிப்படுகிறது.

இன்றும் சமூகத்துரோகிகள் (மிக்கிருப்பதை மகாத்மா, கென்னடி, இந்திராகாந்தி (போன்ற உன்னத தலைவர்களது வரலாற்றின் முடிவுகள் உணர்த்துகின்றன,

முடிவுரை

1. மனிதன், மனிதனுக்கேப் பகையாகும் போது ஏற்படும் முறையற்ற செயலுக்கு முடிவுகாண்பதில் கடுமை வேண்டும். இதில் ஆண்டுகள் மாறினும் ஆக்கப் பூர்வமான ஆற்றல்கள் மாற்றம் பெறக் கூடாது.
2. சூதற்ற, சுரண்டலற்ற, வகுப்பு பேதமற்ற, ஊழலற்ற முலறயான வாழ்விற்கு, நீதிமுறையே பாதை அமைக்க வேண்டும்.
3. சமயம் மற்றும் சாதியுடன் கலக்கின்ற மனப்போக்கினால் குற்றங்கள் மறைக்கப்பட்டு விடக்கூடாது; அவை தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும்.
4. முடியாட்சியில் உள்ள முறைகேடுகட்குக் குடியாட்சி முடிவு கண்டாலும். குடியாட்சியில் உள்ள ஓட்டை கட்கும் இனி ஒரு ஆய்வு வழிவகுக்கும்.

அடிக்குறிப்புகள்

1. சி. சுப்பிரமணிய பாரதியார். பாரதியார் கட்டுரைகள், ப. 207
2. இல. தியாகராசன், "சோழர்காலத்தில் கோயில்கள், சபைகள், சார்ந்தகுற்றங்களும், விசாரணைகளும்" ப.1
3. Dr. A. சுவாமிநாதன், தமிழ்நாட்டு சமுதாய பண்பாட்டு வரலாறு, ப. 203
4. நாக. கணேசன், சோழர்காலத்தில் — நாடும் அந்தணரும். ப. 175
5. S.I.I. 227 of 1904
6. ARE 162 of 1932 3
7. 'தினமலர்' நாளிதழ் (ஜனவரி 6, 1989)

மக்கட் பெயர்களில் இடப்பெயர்களின் தாக்கம்

வீ. வேணுகுமார்
கேரளப் பல்கலைக்கழகம்

முன்னுரை

ஒவ்வொரு இடத்தையும் வேறுபடுத்திக் காட்டுவதற்கு இடப்பெயர்கள் பயன்படுவதைப் போன்று, மனிதனை வேறு படுத்திக் காட்ட உதவுவது மக்கட்பெயர்கள். இடப்பெயர்கள் பல, மக்கட் பெயர்களாகவும், மக்கட் பெயர்கள் பல, இடப் பெயர்களாகவும் வழக்கில் இருப்பதனைக் காணலாம். இக் கட்டுரை மக்கட் பெயர்களில் இடப்பெயர்கள் வழங்கிவரும் தன்மையினையும், தொன்மையினையும், சிறப்பினையும் ஆராய்கின்றது.

பெயரின் தேவையினை ஒவ்வொரு மனிதனும் நன்கு அறிவான். 'பெயர்' என்னும் சொல் பொதுவாக மக்கட் பெயரினைக் குறித்தாலும், இதனைப் பலவகைப் படுத்தலாம். அவற்றுள் சிறப்புற்றுத் திகழ்வது மக்கட்பெயரும் இடப்பெயரும் என்றாலும் மக்கட் பெயர்களே முதலில் தோன்றியிருக்க வேண்டும் எனக் கருதலாம். ஆங்கிலேயர்கள் பெயரின் வகைப் பற்றிக் குறிப்பிடும் போது, பத்துவகைப் பெயர்களைக் குறிப்பிடுகின்றனர். அவைகளாவன; (1) Personal names. (2) Quasi Personal names. (3) Names for things not definitely personified but sufficiently important to be individualized (4) Place names. (5) Names of tribes. (6) Names of institutions and corporations. (7) Titles (names of books and other works) (8) Brand names. (9) Names of events in history. (10) Names of abstractions

not personified. இவற்றுள் முதலிடம் பெற்றுத் திகழ்வது மக்கட் பெயர்களே.

மக்கட் பெயரினைப் பல வகைகளாகப் பிரிக்கலாம். இயற்பெயர், பட்டப் பெயர், செல்லப் பெயர், சிறப்புப் பெயர் புனை பெயர், சுருக்கப் பெயர் என்பன அவற்றுள் சில. இது போன்ற பெயர்கள் உடைய மனிதர்கள் பலரை அன்றாட வாழ்வில் காணலாம். இவ்வகைப் பெயர்களில் இடப்பெயர்கள் பல இடம் பெறுகின்றன.

பழந்தமிழர்ப் பெயர்களில் இடப்பெயர்

இடப்பெயர்கள் பல மக்கட் பெயர்களாக வழக்கில் இருந்தமைக்கு பழந்தமிழர்ப் பெயர்கள் பல நமக்குச் சான்றா கின்றன. 'ஆனால் அப்பெயர்கள் யாவும் இயற்பெயர்களா? சிறப்பு பெயர்களா? பட்டப் பெயர்களா? என்பதனைத் தெளிவாகக் கூறமுடியவில்லை.

தொன்மை வாய்ந்தத் தொல்காப்பியப் பாயிரம் வாயிலாக மூன்று பெயர்கள் தெரியவருகின்றன. அவற்றுள் ஒன்று 'அதங் கோட்டு ஆசான்'. இப்பெயர் அதங்கோடு என்னும் இடத்தைச் சார்ந்த ஒருவனைக் குறிக்கும் பெயராகும். இதிலிருந்து இடப் பெயர்கள் மக்கட்பெயர்களாக வழங்கும் மரபு தொல்காப்பியர் காலந்தொட்டே தொடங்கிவிட்டது என்று உணர முடிகிறது

சங்க இலக்கியங்கள் தந்த புலவர்கள் பெயர்களாக நமக்கு கிடைத்த வற்றுள் ஊரால் பெயர் பெற்ற பெயர்களாக 49 பெயர்கள் உள்ளன. மேலும் ஊர்ப்பெயர்களுடன் தொடர்ந்த வேறு பெயர்கள் கொண்ட புலவர் பெயர்களாக 140 பெயர்கள் உள்ளன. சான்றாக, அரிசில் கிழார், ஆலத்தூர் கிழார், ஆவூர் கிழார், இடைக்காடனார் — அஞ்சில் ஆந்தையார், ஈடுதுறை மாசாத்தனார் போன்ற பெயர்களைச் சுட்டலாம். இப்பெயர் களில் ஊர்ப்பெயர்களுடன் ஆன் அல்லது ஆர் விகுதியும் மற்றும் ஒரு சில பெயர் சொற்களும் இணைக்கப்பட்டிருப் பதைக் காணலாம்.

சங்க காலத்தினை அடுத்து; பல்லவர், சோழர் காலங்களிலும் இவ்வாறு இடப்பெயர்கள் பல மக்கட் பெயர்களாக வழங்கி வந்துள்ளன. சான்றாக, இளையான்குடி மாறநாயனார் காரைக்கால் அம்மையார், உறையூரான் கருவூரன் பனையூர் போன்ற பெயர்களைக் காட்டலாம்.

இன்றைய மக்கட் பெயர்களில் இடப் பெயர்கள்

சங்க காலப் புலவர் பெயர்களில் இடப்பெயர்கள் வழங்கி வந்தமையினைப் போன்று இன்றைய மக்கட் பெயர்களிலும் இடப்பெயர்கள் வழங்கி வருகின்றன. ஆனால் பெயர்களுக்கான காரணம் வேறுபட்டு பலவாக அமைகிறது. சங்க காலப் பெயர்கள் பெரும்பாலும் ஒவ்வொருவரையும் வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே அமைக்கப் பெற்றன. ஆனால் இன்றைய நிலை வேறு.

இயற்பெயர்களில் இடப்பெயர்

ஒருவனுக்கு குழந்தைப் பிராயத்தில் சூட்டப் பெறும் பெயரினை இயற்பெயர் எனலாம். இப்பெயரே அவனுடைய அதிகார பூர்வமான பெயராக அமைகின்றது. இதனை அவனுடைய பெற்றோரோ நெருங்கிய உறவினர்களோ சூட்டுவது வழக்கம். இப்பெயர்களில் இடப் பெயர்கள் பல பயின்று வருகின்றன. கடவுட் பெயர்களை மக்கட் பெயர்களாகச் சூட்டுவவதனைப் போன்று, அக்கடவுள் வீற்றிருக்கும் இடங்களின் பெயர்களையும் தெய்வீகப் பெயர்களாக எண்ணி அதனை குழந்தைகளுக்குச் சூட்டுகின்றனர். சிதம்பரம், காசி, பழனி, குற்றாலம் போன்ற பல பெயர்கள் ஆண், பெண் ஆகிய இரு பாலரிடம் வழக்கில் உள்ளதைக் காணலாம். இவ்வழக்கு பெரும்பாலும் இந்து சமயத்தினரிடையே மட்டுமே உள்ளது. இத்தகைய இடப்பெயர்களுடன் அவ்விடத்தில் கோவில் கொண்டுள்ள இறைவனது பெயரையும் சேர்த்து இயற்பெயராகச் சூட்டும் வழக்கினையும் சிலரிடம் காணலாம். காசி விசுவநாதன், பழனி முருகன் போன்ற பெயர்கள் இவ்வாறு அமைந்தனவாகும்.

இயற்பெயர்களில் முன்னொட்டாக இடப்பெயர்

இடப்பெயர்கள் அவ்வாறே மக்கட் பெயராக இயற்பெயரில் ரீ வருவதைப் போன்று இயற்பெயர்கள் முன்னால் இடப்பெயரை யும் சேர்த்து வழங்கும் மரபும் உள்ளது. இதனையே தொல் காப்பிர்,

> ''ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும்
> யாரும் சார்த்தி அனவ அவை பெறுமே''

என்கிறார். இவ்வழக்கினை நாம் இன்றும் அரசியல் வாதிகள், புலவர்கள் மேடைப் பேச்சாளர்கள். எழுத்தாளர்கள். இசை வல்லுநர்கள், புதுமை விரும்பிகள் போன்றவர்களுள் சிலரி டையே காண முடிகிறது. 'சான்றாக, அன்பில் தர்மலிங்கம், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, குமரி அனந்தன், மதுரை சோமு போன்ற பெயர்களைச் சுட்டலாம், தங்களுடைய பெயர் புதுமையாகவும் கவர்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்ற ஆர்வத்தினாவேலே இவ்வாறு யெயர்களை அமைத்துக் கொள் கின்றனர். சாதாரண மக்கள் இவ்வாறு தங்கள் பெயர்களை அறிமுகப்படுத்திக் கொள்வது இல்லை. இவ்வழக்கினை பெரும்பாலும் இசைக் கலைஞர்களிடமே காண முடிகிறது என்கிறார், சு. சக்திவேல். ஊர்ப் பெயரினைச் சுருக்கி, நாகரிகமாக இயற்பெயர்களின் முன்னர் இட்டுக் கொள்ளும் வழக்கத்தினையும் காண முடிகிறது. மயிலை. சீனி, அவங்கட சாமி, புரசு, பாலகிருஷ்ணன் போன்ற பெயர்கள் இங்குக் குறிப்பிடத் தக்கவை.

பட்டப் பெயர்களில் இடப் பெயர்

ஒருவனுக்கு அவனுடைய தன்மை குணம் சிறப்பு போன்ற ஏதாவது காரண அடிப்படையில் பிறரால் இடப்படும் பெயரி னைப் பட்டப் பெயர் எனலாம். இதனைக் காரணப் பெயர் என்றும் கூறுவர்.

இத்தகைய பெயர்கள் சில நகைச்சுவையினை ஊட்டுவன வாகவும் அமைகின்றன. அகராதிகள் இப்பெயர் பற்றிக் கூறும் போது நிந்தைப் பெயர், மாறுபெயர், விளையாட்டுப் பெயர், பரிகாசப் பெயர் என விளக்கம் தருகின்றன.

இடப்பெயர்களை அடிப்படையாகக் கொண்டும் பல பட்டப் பெயர்கள் அமைகின்றன. சில குறிப்பிட்ட தன்மை யினாலும் செயலினாலும் சிறந்து பெயர் பெற்று விளங்கும் ஊரின் பெயர்கள் அச்செயலையும், தன்மையினையும் கொண்ட பிற. தனிப்பட்ட ஆட்களுக்குப் பெயராக அமைந்து விடுகிறது. சான்றாக, கெட்ட நடத்தை உடைய பல பெண்களைக் கொண்டு விளங்கும் ஊர் பெயர்கள், இத்தன்மையினைக் கொண்ட வேறு பெண்களுக்கு ஆகிவருதனைக் காண முடிகிறது. இது போன்று பல காரணங்களின் அடிப்படையில் பெயர்கள் அமைகின்றன. இவ்வாறு அமையும் பெயர்களுக்கும் அவர்களுடைய சொந்த இடத்திற்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

செல்லப் பெயர்களில் இடப்பெயர்

நெருங்கிய உறவினர்களாலும் நண்பர்களாலும் ஒருவனை அழைப்பதற்காக இடப்படும் பெயரினைச் செல்லப் பெயர் எனலாம். இப்பெயருக்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்ற தேவை இல்லை. செல்லப் பெயர் பற்றி அகராதி குறிப்பிடுகை யில் 'a name given or used to show special affection' என்கிறது. 'இயற்பெயர் இருப்பினும் பாசத்தாலும் அன்பாலும் ஆசையாலும் குழந்தைகளையும் மனைவிமார்களையும் செல்லப் பெயரிட்டு அழைப்பதுண்டு என்கிறார் சக்திவேல்.

செல்லப் பெயர்களாகவும் இடப் பெயர்கள் பல வழக்கில் வருகின்றன. இயற்பெயர்கள் தெளிவாகத் தெரியாத வேளை களில் ஒருவனைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்காகவும் இவ்விடப் பெயர்கள் பயன்படுகின்றன. செல்லப் பெயர்களாக வரும் இடப் பெயர்களில் ஆள் விகுதியும் சேர்த்து வழங்கப்படுகிறது. ஒரு வீட்டில் ஏராளமான உறவினர்கள் இருக்கும்போது அவர் களை வேறுபடுத்திக் காட்டவும், அழைக்கவும் அவர்களுடைய ஊர்ப் பெயர்களையே குறிப்பிடுகின்றனர். இயற்பெயர்களைப் பலர் முன்னிலையில் கூறுதல் சிறப்பன்று என கருதுபவர் களும் இடப்பெயர்களைக் கொண்டு ஆட்களைக் குறிப்பிடு கின்றனர். தலக்குளத்தான் நார்கோவிலான் மார்த்தாண்டத்

தான் இடைக்கோட்டாள் சுசீந்திரத்தான் போன்ற பெயர்களி வழக்கில் உள்ளன. இதுபோன்று ஏறத்தாழ அனைவருக்கும் அவரவர் ஊர்ப் பெயர்களால் பெயர்கள் அமைந்து விடுகின்றன.

இயற்பெயர், செல்லப் பெயர், பட்டப் பெயர் போன்றவற்றில் இடப் பெயர்கள் அதிகமாகப் பயின்று வருவதனைப் போன்று, புனைப் பெயர், சுருக்கப் பெயர் போன்றவற்றில் இடப்பெயர்களைக் காண முடியவில்லை. ஒருசில பெயர்களில் முன்னொட்டாக வழங்கி வந்த இடப்பெயர்கள் சிறப்புற்று கால ஓட்டத்தின் பயனாக, சிறப்புப் பெயராக மாறிவிடுவதுண்டு. நாஞ்சிலார், பண்ருட்டியார், சீர்காழி, சூலமங்கலம் போன்ற பெயர்கள் குறிப்பிடத்தக்கவை. இப்பெயர்கள் தொடக்க காலத்தில் அவர்களுடைய இயற்பெயர்களின் முன்னர் முன்னொட்டாகவே அமைந்திருக்க வேண்டும் என்பது தெளிவு. ஒருசில அரசர்கள் தங்களின் வெற்றிச் சிறப்பாலும் புகழாலும் இடப்பெயர்களை அடிப்படையாகக் கொண்ட சிறப்புப் பெயர்களைப் பெற்றுள்ளதை வரலாறு காட்டுகின்றது. வாதாபி கொண்டான், கடாரம் கொண்டான் போன்ற பெயர்கள் குறிப்பிடத் தக்கவை.

இடபபெயர்கள் பல மக்கட் பெயர்களாகப் பயின்று வருவதைப் போன்று மக்கட் பெயர்களும் பல இடப் பெயர்களாக அமையும் வழக்கு பண்டைய அரசர்கள் காலத்திலிருந்தே தொடங்கி விட்டது. அக்காலத்திய உதயமார்த்தாண்ட சதுர்வேதி மங்கலம் முதல் தற்போதைய அண்ணாநகர். காமராஜ் நகர், கருணாநிதி நகர் போன்ற ஊர் பெயர்கள் இங்கு சுட்டத் தக்கவை. அரசர் மற்றும் தலைவர்களுடைய பெயரையும் புகழையும் சிறப்பிப்பதற்காகவே இப்பெயர்கள் உருவாக்கப் பட்டன என்லாம்.

உமையொருபாகமூர்த்தியும் சமயநெறிக் கலைக்காட்சியும்

செ. வைத்தியலிங்கன்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சைவசித்தாந்தப் பெரு நெறியின்கண் சிவபிரான் கொள்ளும் திருமேனிகள் பலவற்றுள் சிறப்பாக இருபத்தைந்து மகேசுவரத் திருமேனிகள் கூறப்பெறும். அவை போக மூர்த்தி, கோரமூர்த்தி, யோகமூர்த்தி என மூவகைப்படும். அம்மையாரோடு கூடிய இன்பநிலையில் எழுந்தருளும் சந்திரசேகரர், உமா மகேசுவரர், இடபாருடர், உமையொருபாகர் முதலியோர் போகமூர்த்தி வகையுள் அடங்குவர். காமாரி, காலாரி, கங்காளர், வீரபத்திரர் முதலியோர் கோரமூர்த்தி வகையுள் அடங்குவர். சுகாசனர் ஆலமர்செல்வர் முதலியோர் யோக மூர்த்தி வகையுள் அடங்குவர். இம்மை மறுமையின்பங்களையும் உலகப் புகழ்களையும் வழங்கும் போகமூர்த்தியைச் சார்ந்த உமையொருபாகர் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

புராணப்பின்னணி

மிசிர மூர்த்தியாகவும் கூறப்பெறும் உமையொருபாகனைப் பெண்பாலுகந்தான் என்றும், அர்த்தநாரீசுவரர் என்றும் பல படியாக வழங்குவர். உலக உயிர்களின் தோற்றத்திற்கு அடிப்படையாகவுள்ள ஆணும், பெண்ணும் இணைதல் என்னும் பேருண்மையைச் சமய வாயிலாகக் கூற எண்ணிய சமயஞானியர் கண்டதே உமையொரு பாகத்திருமேனியாகும்.

உலகில் மக்களினத்தைத் தோற்றுவிக்கக் கருதிய நான்முகன் பிரசாபதிகள் எனும் ஆணினத்தைத் தோற்றுவித்து, அவ்வாற்றான் மக்களினத்தை ஏற்படுத்தும்படி கட்டளையிட்டான்

அவர்களால் அக்கட்டளையை நிறைவேற்றவியலாமற் போகவே, நான்முகன் சிவனை நோக்கி யிரந்து வழிபட்டு, இனப் பெருக்கம் ஏற்பட அருளுமாறு வேண்டி நின்றான். சிவனும் அருள்பாலிக்கும் நோக்கில் அவனுக்கு உமையொரு பாகனாகக் காட்சியளித்தான். இதன் வாயிலாக, நான்முகன் தன் பிழையை யுணர்ந்து, இனப்பெருக்கத்திற்குப் பெண்களும் மிகத் தேவையானவர்களே என்பதைப் புரிந்து கொண்டான்; படைப்புத் தொழிலும் சிறப்பாக நடைபெறலாயிற்று.

உமையொருபாகத்திருமேனிக்குப் பிறிதொரு புராணப் பின்னணியும் உண்டு, **பிருங்கிமுனிவர்** சிவனிடம் அளவற்ற பத்திபூண்ட அடியவர். சிவன் திருக்கயிலையில் தன்துணைவி உமையம்மையுடன் அமர்ந்திருக்கையில் பிருங்கிமுனிவர் சிவனை மட்டும் நாள்தோறும் வலம் வந்து வழிபட்டுச் செல்லும் நியமமுடையவராக இருந்தார். தன்னை மதியாமல் இவர் சிவனை மட்டும் வழிபடுவதைக் கண்ட உமையம்மை சினங்கொண்டு இவரின் உடலில் தசைகளும் குருதியும் வற்றுமாறு செய்துவிட்டாள். சத்தியின் சாபத்தால் ஓர் எலும்புக்கூடு போலிருந்த முனிவரைக் கண்ட சிவன், மனமிரங்கி, அவருக்கு மூன்றாவது காலை வழங்கியருளினார். இப்பேறு பெற்ற முனிவர் சிவனருளை வியந்து, தம் மூன்று கால்களால் நடனமாடினாராம்! அந்நிலையிலும் தம் வழி பாட்டுப்போக்கில் சிறிதும் பிறழாமல் சிவனை மட்டும் வழிபட்டுவரலானார். மேலுஞ் சினங்கொண்ட உமையம்மை சிவனைக் குறித்து நோன்பியற்றி, வரம் பெற்றுச் சிவனுடைய இடப்பாகத்தைப் பெறலானாள். சிவனும் உமையும் இணைந்த திருமேனி — உமையொரு பாகத்திருமேனி — அமைந்தது. இதனைக் கண்ட பிருங்கிமுனிவர் தம் மனந்தளராமல் சிவனை மட்டும் வழிபடக்கருதி, ஒரு வண்டுருவங்கொண்டு உமை யொரு பாகத்திருமேனியினைத் துளைத்துக்கொண்டு சென்று, சிவனை மட்டும் வணங்கிச் சென்றார்: இம்முனிவரின் பத்தி வைராக்கியத்தைப் பாராட்டிச்சத்தி அவருக்கு அருள்புரிந்தாள் என்பர்.

இலக்கியங்களில் உமையொருபாகர்

பகைவர்களை வதைக்கச் சிவனோ சக்தியோ புறப்படுகையில் சிவனும் சக்தியும் இணைந்து செல்வது சமயமரபன்று. அடியவர்களுக்கு அருள் புரியும் நோக்கில் இருவரும் இடபாரூட மூர்த்தியாகவோ அர்த்தநாரியாகவோ பெரும்பாலும் காட்சியளிப்பது மரபாயிருத்தலைக் காணலாம்.

சீர்காழியில் **திருஞானசம்பந்தருக்குத்** திருத்தோணியப்பர் அருளுகையில் **இடபாரூடராகக்** காட்சியளித்தாரென்பர்; அக் காட்சியில் **உமையொருபாக** மூர்த்தியையும் நினைவுகூரும் வகையில் சம்பந்தப் பெருமான் **'தோடுடைய செவியன்'** — அம்மையப்பன் — என ஆர்வமுடன் அழைத்தலைக் காணலாம் பல இடங்களில் உமையொருபாகரைப் போற்றித் துதிக்கிறார் சம்பந்தர். தமக்குச் சமணர்களால் யாதொரு தீங்கும் நேராவண்ணம் கோளறு பதிகம் பாடுகையில், **வேறு தோளி பங்கன்** எனத் தொடங்கிப் பாடிச் செல்வதை நினைவு கூறலாம்.

அப்பரடிகள் திருவையாற்றில் திருக்கயிலைக் காட்சியைக் காண்கையில் உயிர்கள் ஆணும் பெண்ணும் இணைந்து உலவுவதாகப் பதிகத்தில் குறித்துச் செல்கிறார். எடுத்துக்காட்டாக,

> மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடி
> போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
> யாதும் சுவடு படாமல் ஐயாறடைகின்ற போது
> காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
> கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்

எனவரும் பாசுரங் காண்க.

சுந்தரமூர்த்தியடிகள் 'கருந்தடங்கண்ணி பங்கனை (7,64,8) எனவும் 'மையார் தடங்கண் மங்கை பங்கர் (7.32,5) எனவும் பாடிச் செல்லுதல் காண்க,

திருவெம்பாவை பாடியருளும் மாணிக்கவாசகருக்குத் தாம் நீராடும் தாமரைப் பொய்கையானது அம்மையப்பனாகவும், அதே வேளையில் உமையொருபாகனாகவும் காட்சியளிக்கிறது. அப்பேரின்பப் பெருநிலையில்,

'பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்
(13)

எனப் பாடிச் செல்வது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. மேலும், விண்ணும் மண்ணும் உய்த்திட ஆடும் சிவனது தாண்டவப் பூடகமே உமையம்மையை அவள் தன் இடப்பாகத்தில் கொண்டமையால்தான் எனவும் அவர் உணர்த்துதல் கருத்தக்கது. இதனைத் திருச்சாழல் பதிகத்தில்,

'தென்பால் உகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ' (9)

எனவரும் பாசுரத்தால் அறியலாமே.

காரைக்காலம்மையார் தம் அற்புதத் திருவந்தாதியில்,
'தொம்பினை ஓர் பாகத்துக் கொண்ட குழகன்றன்
அம்பவள மேனி யதுமுன்னம் — செம்பொன்
அணிவகையே சோலும் பொடியணிந்தால் வெள்ளி
மணிவரையே போலும் மறித்து (39)

என்றும்,

'மிக்க முழங்கெரியும் வீங்கிய பொங்கிருளும்
ஒக்க உடனிருந்தால் ஒவ்வாதே- செக்கர் போல்

ஆகத்தான் செஞ்சடையும் ஆங்கவன்றன் பொன்னுருவிற்
பாகத்தாள் பூங்குழலும் பண்பு (58)

என்றும் பலபடியாகப் பரவிச் செல்லுதல் காண்க

பட்டினத்துப் பிள்ளையார் தம் 'திருக்கழுமலமும் மணிக் கோவை'யில்

'திருவளர் பவளப் பெருவரை மணந்த
மரகதவல்லி போல ஒருகூறு
இமையாச் செல்வி பிரியாது விளங்கப்
பாய்திரைப் பரவை மீமிசை முகிழ்த்த
அலைகதிர்ப் பரிதி ஆயிரந் தொகுத்த
வரன்முறை திரியாது மலர்மிசை இருந்தெனக்
கதிர்விடு நின்முகங் காண்டொறும் காண்டொறும் (1-7)

என எழுதிச் செல்கையில் உமையொரு பாகமூர்த்தியின் திருவடிவில் சொக்கித் திருவருளை வியந்து நிற்றலைக் காணலாம்.

கலைநோக்கில் உமையொருபாகத் திருமேனி

திருக்கோயில்களில் அமையும் ஓவியங்களிலும், செப்புச்சிலைகளிலும், கற்சிற்பங்களிலும், கோபுரச் சுதையமைப்பிலும் உமையொருபாகத் திருமேனி இடம் பெறுதலைக் காணலாம் பொதுவாகச் சிவன் அன்பினாற்றலையும், சகதி இன்பத்திருவருளையும் குறிக்கும் எனக்கருதுவது சமயநம்பிக்கை. பாடல் பெற்ற தில்லை திருப்பரங்குன்றம் முதலிய பல சிவத்தலங்களில் காணலாகும் இத்திருமேனியமைப்புக்கள் சிந்தனையைத் தாண்டும் வகையில் உள்ளன.

உமையொரு பாகத்திருமேனி அமைக்கையில் வலப்பாகம் சிவபிரானின் சிறப்புக் கூறுகளையும், இடப்பாகம் உமையம்மையின் சிறப்புக் கூறுகளையும் கொண்டு விளங்கும்.வலப்பக்கம் சிவன் தலையில் சடைமுடியும் பிறைத்திங்களும், வலக்காதில் பாதி வலப்பக்கமாக அல்லது அரவுக்குண்டலமும் காட்சியளிக்கும். சிவனுக்கு நுதல்விழியில் பாதி வலப்பக்கமாக ஆனின் மார்பும் அதனில் திருநீறு சண்ணித்த நிலையும்,

இடுப்பில் புலித்தோலாடையும் விளங்கும்; அரவாலான பூணூல் வலப்பக்க மார்பில் பொலிவுறும். பொதுவாக வலப்பக்கம் முழுவதுமே ஆடவர்க்குரிய அமைப்புடன் வன்மையும், ஓரளவு அச்சமும் தோற்றுவித்தற்குரிய சூழலில் காணப்படும். உமையொருபாகர் வலக்காலைச் சிறிது வளைத்து நின்று கொண்டிருப்பார்.

இடப்பாகம் உமையின் கூறாதலின் தலையில் கரண்ட மகுடமும், நன்றாகச் சிவப்பட்டு ஒரு கயிற்றினால் கட்டப் பட்ட தலைமுடியும் பொலிவுறும், இடப்பக்கச் செவிகளில் 'வாலிகா' எனுங் குண்டலமும், இடப்பக்கநெற்றியில் திலகமும் அமைந்திருக்க, இடக்கண்ணில் மை பூசப்பட்டிருக்கும் இடப் பக்கத்தில் வனப்பாகத் திரண்டுருண்ட நகில் அமைந்திருக்கும்; இடப்பக்கத்தில் பெண்ணணியம் கழுத்தணி முதலியனவும் இடப்பக்க இடையில் வெண்ணிற ஆடையும் திகழும், இடப் பக்கக் கணுக்கால் சிலம்புடனும், பாதம் மருதாணியிட்ட செம்மையுடனும் அமைந்திருக்கும். பெண்ணமைப்புள்ள இடப் பக்க முழுமையும் கருநிறம் அல்லது கிளிப்பச்சை நிறங்கொண் டிலங்கும்; இவ்வாறமைந்த உமையொருபாத்துகக்கருகில், நந்தி காணப்படும் என்பது சமயக்கலைப் பொதுமரபு.

உமையொரு பாகத் திருமேனி நான்கு, மூன்று, அல்லது இரண்டு வகைகளைப் பெற்றுக் காணப்படும். நான்கு கை களுள்ள திருமேனியில் வலக்கைகளுள் ஒன்று மழு அல்லது சூலத்தையும், மற்றொன்று வரத முத்திரை அல்லது அபயமுத் திரையையும் கொண்டிருக்கும் இடபக்கக் கைகளுள் ஒன்று சிறிது வளைந்து சென்று நந்நியின் தலையைத் தொட்டுக் கொண்டிருக்கும். மற்றொரு கை காடகமுத்திரையுடன் நீலோற் பலம் (குவளை) மலரினைப் பெற்றிருக்கும. நான்கு கைகளுடைய உமையொருபாகர் தமிழநாட்டில் மாமல்லபுரம் தருமராசாத் தேர்க்கோயிலில் காணப்படுவது தொன்மையானது. சென்னை அருங்காட்சியகத்தில் காணப்படும் உமைபொருபாகத்திருமேனி நான்கு திருக்கைகளுடன் கலைநேர்த்தியாக அமைந்துள்ளது.

ரசூலின் ஜன கண மனவில் சமுதாயப் பார்வை

எஸ். ஸ்ரீகுமார்
தெ. தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்

புதுக்கவிதை என்ற பெயரில் புல்லுருவிகள் முளைத்துக் கொண்டிருக்கிற இக்காலகட்டத்தில் புதுக்கவிதைக்குப் புதுப் பாதை அமைக்க வந்துள்ளார் ஹெச். ஜி. ரசூல். அன்றாட வாழ்வின் சின்னஞ்சிறு துகள்களில் சாஸ்வதமான சமூக உணர்வுகளை வெளிப்படுத்து பவனே மாபெரும் கலைஞன் என்னும் ஜீவாவின் கூற்றிற்கு உரம் சேர்க்கும் வகையில் 'ஜன கண மன' என்னும் தலைப்பிட்டக் கவிதைத் தொகுப்பைத் தமிழுலகிற்குத் தந்துள்ளார். கவிஞர் உழைக்கும் மக்களின் பல் வேறு உணர்வுகள், வறுமை. பெண்ணினத்தின் சீரழிவு, கல்வியின் சீரழிவு, படித்தும் வேலையின்மை இவற்றை இவரது கவிதைகள் உள்ளடக்கங்களாகக் கொண்டுள்ளன. காலிஸ் தான் கோரிக்கை, அஸ்ஸாம் கலவரம், இலங்கையின் சோகம், ஆப்பிரிக்க மக்களின் துயரம், உலக சமாதானம் ஆகிய சர்வ தேசிய நிகழ்ச்சிகளும் இவரது கவிதைகளில் கருவாக மையம் கொண்டுள்ளதைக் காண முடிகிறது. கருத்துக்களை வெளிப் படுத்த பல இடங்களில் ஹைக்கூ வடிவங்களையும் கவிஞர் துணைக்கு அழைத்துக் கொள்கிறார்.

பெண்கள் துயர்

திருமண வயது வந்தும் வறுமையின் காரணமாகத் திருமணமாகாமல் கனவுகளோடு காலம்தள்ளும் ஏழைப் பெண்களை முறிந்த சிறகுகளோடு பட்டுச் பூச்சிகள், முள்ளில் கிடந்த முகூர்த்த ரோஜாக்கள், கண்ணாடிச் சில்லுகளில்

கிழிந்த முகங்கள் என்று பெயரிட்டு அழைக்கிறார். பெண் களுக்கு ஏற்றம் தரும் வகையில் பெண்கள் ஆண்டு என பறை சாற்றி விழாவெடுக்கும் இந்நாளில் வயிற்றுப் பிழைப்பிற்காகக் கற்பை அடகு வைத்துக் காலந்தள்ளும் பெண்களை 'வீதி முகூர்த்தம்' என்னும் கவிதை மூலம் காட்டிச் செல்கிறார். கல்யாண உறவில் கலக்க ஆசை இருந்தும் அது நிறை வேறாமல் போகும் வகையில் வறுமை வந்து தடுப்பதால் வீதியிலேயே சாந்தி முகூர்த்தத்திற்குச் சம்மதித்து விடு கின்றனர். விலம்பரத்தின் விலாசமின்றியே விலை பேசப்பட்ட அவர்கள் தாங்கள் செய்யும் வேசித்தொழிலிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள காவல்துறையினருக்கு இலவச போன சாய் இருந்து விடவும் வேண்டியுள்ளது. இவர்கள் வறுமைப் பிரதேசத்தின் கலவரப் பகுதிகள், இம்சைப் பிரளயங்களில் மூச்சுத்திணறலில் இறக்கும் அவர்களை அனாதை பிணமெனக் கூறி புதைப்பது கண்டு, விழாக்கள் மட்டும் பெண்ணினத்திற்கு ஏற்றம் தந்து விடுவதில்லை எனக் குமுறும் கவிஞர் ஆக்கரீதி யான செயல்பாடுகளால் மட்டுமே பெண்கள் முன்னேற்ற மடைய முடியும் என நம்பிக்கை கொள்கிறார்.

இந்த உலகில் பெண்ணாகப் பிறந்து, மாடாக உழைத்து உதிர இருக்கும் முதிர்ந்த பெண்களை இலையுதிர்காலம். மூப்படைந்து போன முதல் பகல், ஓடிக்களைத்து நிற்கத் துடிக்கும் கடிகார முள் என்கிறார். அறிவியல் வளர்ந்தும் எழுத்தறிவை வளர்த்துக் கொள்ளாமல் வாழும் அறியா ஜனங்களாகிய அவர்களை 'ஆப்பிள்கள் பறக்கும் அதிசய யுகத் தில் எழுத்துக் கூட்டியும் படிக்கத் தெரியாத கீறல் விழுந்த இசைத் தட்டுகளாகக் கருதுகிறார். அடிபம்பில் தண்ணீர் அடித்து அடையாளம் தெரியாது போன அடிவயிறோடும், வீட்டு வாசலில் கிடக்கும் குப்பைகளைக் கூட்டிப் பெருக்கி கேள்விக்குறியாய் போன கனல் முதுகோடும் காட்சியளிக்கும் பெண்கள் ரத்தப்பாலை ஊட்டி வளர்த்த மகன்கள் எட்டாத தூரத்தில் இருகக எந்தவித உதவியுமின்றி கட்டிலுக்குக் காவலாய் காலம் தள்ளிக் கொண்டிருப்பதைக் கண்டு 'ரத்தப் பால்' கவிதை மூலம் கண்ணீர் வடிக்கிறார்.

பெண்களின் துயரங்களைக் கூறும் கவிஞர் அவை நீங்க வழிமுறைகளையும் கூறியிருப்பாரெனில் கவிதைகள் இன்னும் கூர்மையடைந்திருக்கலாம்.

நடுத்தரவர்க்கத் துயர்

கரங்கள் வளைக்கரங்களாக இல்லாமல் தழும்பேறிய சரங்களாய், ஜோடிக்கம்மலை மாடி வீட்டில் அடகு வைத்து, மங்கலமான தங்கத்தாலியைத் தரகுக்கடையில் அடகுவைத்து, மானத்தை மறைக்க ஒட்டுப் போட்ட சேலையை உடுத்து, உடுத்தப்பட்டுச் சேலைகள் கிடைக்காவிட்டாலும் கைத்தறிச் சேலையாவது கிடைக்காதா? என ஏங்கும் யாதவருவாயில் காலந்தள்ளும் ஒரு அரசாங்க அலுவலரின் மனைவியின் மௌன மனப்புழுக்கத்தைத் 'தேடல்' என்னும் கவிதையில் கவினுறத் தீட்டியுள்ளார்.

தொழிலாளர் மேம்பாடு

மாட மாளிகைகளையும் விண்முட்டி நிற்கும் கோபுரக் கலசங்களையும் உருவாக்கிய சிற்பிகளாம் தொழிலாளிகளை வினை முடிந்தபின் சுவருக்கு வெளியே கழற்றிப் போடப்பட்ட கால் செருப்பாய் சமூகம் ஒதுக்கித் தள்ளுவது கண்டு 'நிமிர்வு' என்னும் கவிதை மூலம் வேதனை கொள்கிறார். கால்வயிற்றிற்குச் சோறில்லாமல் காலிவயிறுகளோடும், பண்டிகை தினங்களில் குழந்தைகளுக்குப் புத்தாடைகள் வாங்கிக் கொடுக்க வழியற்று அன்பு முத்தங்களையே பரிசாக அளித்தும் காலம் தள்ளுகின்றனர், ஜீவித நியாயங்கள் ஜீவனற்றுச் சாகும் பொழுது உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கவில்லையே என்று பொங்கி எழுவதற்குப் பதிலாக அஹிம்சா உபதேசங்களைப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு கோபம் கொள்கிறார். தொழிலாளரின் முதுகில் குதிரை சவாரி செய்ய நினைக்கும் ஆதிக்கவர்க்கங்களுக்கு எதிராக எதிர்ப்புக் குரல் எழுப்பக் கோருகிறார்.

"கருணை விண்ணப்பங்களின்
காதுகளைப் பிடுங்கி
அடுப்பெரிப்போம்!

ஊன்றி நடப்பதற்கல்ல...
காந்தியின் கைத்தடி
இனி நாம்
ஓங்கிப் பிடிப்பதற்கு"

என புரட்சி ஒன்றே தொழிலாளரின் வாழ்வை மேம்பாடு அடையச் செய்யும் என தீர்க்கமாக நம்புகிறார்.

உழவுத் தொழில் புரிவோரும் அவல வாழ்வே வாழ்ந்து வருகின்றனர். அவர்களை நில உரிமைகளின் நிழல் கூடப்படாத நீர் தேடும் வேர்கள், கவளச்சோற்றை வலை விசித் தேடும் வண்ணத்துப் பூச்சிகள், தார் பாய்ச்சப்பட்ட அழுக்கு உடம் பின் வைரச் சுரங்கங்கள், கைகளுள்ள வாய்களுள்ள பண்ணை மாடுகள், மிராசுகளிடம் அடகு வைக்கப்பட்ட எந்திர பொம்மைகள் என்று பெயரிட்டழைக்கிறார்; தங்களது உடலுழைப்பால் மலடாய் கிடக்கும் பூமியைப் பூப்படைய வைக்கும் இவர்களது வாழ்வு வளமடைய அரசியல் ரீதியாக விழிப்புணர்வு கொள்ள வேண்டும் என்பதை 'அரசியல் விழிப்பின் அக்கினி அலைகள் இனி இவர்கள் மூளைப்பிரதேசங் களில் மூண்டெழட்டும' என்கிறார்.

வேலையில்லாப் பட்டதாரிகள்

பழம் பெரும் தேசமான பாரத நாட்டில் பட்டுப் போகாத குடிசைத் தொழிலாக கல்விக்கூடங்கள் மாறி வருவதை ஏளனம் செய்கிறார். பலர் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல் போவதற்கு ஏழமை ஒரு காரணம். ஏழ்மையால் பள்ளிப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்து கொஞ்சம் சம்பாதிக்கும் பிஞ்சு வயசு மகள் கஞ்சிக் கலயத்தைத் தலையில் தூக்கி வைத்து வரும் காட்சி கண்டு துயரம் கொள்ளும் தாயொருத்தியை 'இருட்டில் கிடக்கும் பகல்கள்' கவிதை மூலம் காட்டு கிறார், ;ஏழ்மையை மீறி படித்து வரும் பட்டதாரிகளுக்கு வேலை கிடைத்து வருகிறதா? அதுதான் இல்லை. வாழ்வின் கால் பகுதி ஆயுளைக் கல்விச் சாலைகளில் செலவிட்டு விட்டு வேலையின்றியிருக்கும் பட்டதாரிகளை சோலைவனம் தேடும்

பட்டங்கள் சுமந்த பாலைவன ஒட்டகங்கள். புழுதியில் கிடக்கும் புல்லாங்குழல்கள், சர்வீஸ் கமிஷன்களின் பேனா நண்பர்கள் என்று பெயரிட்டழைக்கிறார். கல்யாணச் சந்தையில் விலை போகாத பட்டதாரிப் பெண்கள் யார் யாரோ படிக்கும் ராத்திரிப் புத்தகங்களாய் மாறிக் கொண்டிருக்கிறார்கள், பட்டதாரிகளை ஏய்த்துப் பிழைக்க நினைக்கும் சுரண்டல் எருமைகளுக்கு எதிராய் 'வேலை கொடு இன்றேல் சோறு போடு' என்று குரல் எழுப்பி கொடி பிடிக்கும் நிலைக்குப் பட்டதாரிகள் ஆளாக்கப்பட்டுவருவதாகக் கவிஞர் கருது கிறார்.

சர்வ தேசியம்

காலிஸ்தான் வேண்டி பிரிவினைவாதம் கூறி துப்பாக்கி நுனிகளில் துதிநாமம் பாடுபவரையும். அசாமியத்தின் எண்ணெய் வயல்களில் தீக்குச்சு உரசும் மண்ணின் மைந்தர் களையும், கூர்க்கா கிளர்ச்சியின் கொலை வெறிக்கு தபேலா வாசிப்பவர்களையும் கடுமையாகச் சாடுவதோடு ஒற்றுமை நரம்புகளில் ஓடிக் கொண்டிருக்கும் இனவாத ரத்தங்களைச் சீரமைத்து ஒற்றுமை உணர்வு கொள்ளக் குரல் எழுப்புகிறார்.

வெள்ளையரின் அடக்குமுறைக்கு ஆளாகியிருக்கும் ஆப்பிரிக்கர்களின் தவிர்க்கமுடியாத நாளைய வெற்றிக்கான விடுதலை

''ஆயுதம் ஏந்திய
கறுப்புக் கரங்களின்
உள்ளங் கைகள்
அது
உதிக்கப் போகும்
விடுதலைச் சூரியனின்
நாளைய கிழக்கு''

என தீர்க்க தரிசனத்தோடு கூறுகிறார்.

உலகம் ஆதிக்க வர்க்கங்களின் கொடூரப் பிடியினின்றும் விடுபட்டு யுத்தமின்றி, சுரண்டலின்றி, சொர்க்க பூமியாக மாற

"உலகெங்கும்
உருவாக்க முயலும்
நாகசாகிகள்
மறுதலிக்கப்படுகிறது
வியர்வை சூரியன்களோடு
சின்ன மழலைகளும்
உயர்த்திப பிடிக்கும்
வெண்புறாக் கொடிகளால்

என வெண்புறாக்களின் வீதி சமைத்து தவிர்க்க அன்றகூவல் விடுக்கிறார்.

ஹெச். ஜி. ரகுவின் முதல் அறுவடை இது. என்றாலும் இந்த அறுவடையில் கிடைத்த நெல்மணிக் கதிர்களோ ஏராளம்.

உள்ளும் புறமும்

ஸ்ரீதரன்
சென்னை

எசாலம் என்ற ஊர் விழுப்புரம் வட்டத்தில், விழுப்புரம் செஞ்சி சாலையில் நேமூர் என்ற ஊரிலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள இராமநாத ஈசுவரர் கோயிலில், தென்கிழக்கு மூலையில், திருப்பணி வேலைக்காகத் தரையை சமம் செய்யும்பொழுது, பூமிக்கடியிலிருந்து பல செப்புத் திருமேனிகளையும், செப்பேடு ஒன்றையும் திருப்பணிக் குழுவினரும் ஊர்மக்களும் கண்டெடுத்தனர். இவை கலைச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் மிக்கவை. இக்கோயிலின்[1] அமைப்பு, கல்வெட்டுகள் செப்பேடு ஆகியவற்றின் சிறப்பினை இக்கட்டுரையில் காணலாம்.

கோயில் அமைப்பு

கோயில் கிழக்கு திசையில் நோக்கி அமைந்துள்ளது, மேலும் கருவறை, அர்த்த மண்டபம், மகாம்மண்டபம் என்ற அமைப்புகளைக் கொண்டு விளங்குகிறது. கருவறையின் நுழைவுவாயில் மகாமண்டபத்தின் இடது பக்கமாக அமைந்துள்ளது. மகாமண்டபத்தில் தெற்கு திசை நோக்கி ?அம்மன் சந்நிதி உள்ளது.கருவறையின் தேவகோட்டங்களில் இடமிருந்து வலமாக வினாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரம்மா. துர்க்கை. ஆகிய தெய்வங்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. விமானம் முழுவதும் கருங்கற்களாலேயே கட்டப்பட்டுள்ளது. விமானத்தின் கழுத்துப் பகுதியில் கிழக்குப் புறத்திலிருந்து இந்திரன், தட்சிணாமூர்த்தி (தெற்கு), திருமால் (மேற்கு). பிரம்மா (வடக்கு) ஆகிய தெய்வங்களின் சிற்பங்களும், விமானத்தில் உள்ள நாசிக்கூடுகளில் நடராஜர் (தெற்கு), சோமாஸ்கந்தர் (கிழக்கு), (மேற்குப் புறம் ஒன்றும் இல்லை),

வடக்கில் பிரம்மா ஆகிய தெய்வ சிற்பங்களும் காணப்படு கின்றன.

கல்வெட்டுக்கள்

இக்கோயிலின் சுவரில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கல்வெட்டுக்களில் இவ்வூர் 'எய்தார்' என்றும், இறைவன் பெயர் 'திருவிராமதேவர்' என்றும் குறிக்கப்படுகிறது, பனையூர் நாட்டு 'தனியூர் ராஜ ராஜ சதுர்வேதி மங்கலம்' என அழைக்கப்பட்ட பகுதியில் எசாலம் பிரம்மதேசம், எண்ணாயிரம் ஆகிய ஊர்கள் அமைந்துள்ளன.

எசாலம் செப்பேடு

செப்பேடு, ஒரு வளையத்தில் 15 செப்புச் தகடுகளுடனும் முத்திரையுடனும் காணப்படுகிறது. முத்திரையின் நடுவில் அமர்ந்த நிலையில் ஒரு புலியும், அருகில் இரண்டு மீன்களும் உள்ளன. கீழே ஒரு வில்லும் அதற்கு அடியில் ஒரு பன்றியும், அவற்றோடு சுவஸ்திகம், தாமரை மலர் போன்ற சின்னங்களும் உள்ளன. சோழர், பாண்டியர், சேரர் களுடைய இலச்சினையான புலி. இரு மீன்கள், வில் இதில் காட்டப்பட்டுள்ளன. பன்றி சாளுக்கியர்களுடைய சின்னம், இவை அனைத்தையும் இராஜேந்திர சோழன் தன்னுடைய ஒரு குடை கீழ் ஆண்டான் என்பதை இம்முத்திரைக் காட்டு கிறது. குடையின் இருமருங்கும் சாமரங்களும், குடையின் மேல் ஒரு சக்கரம் காணப்படுகின்றன. முத்திரையின் விளம்பில் 'பரமகேசரிவர்மனாகிய ராஜேந்திர சோழன் ஆணை இது' என்று கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

முதலாம் இராசேந்திர சோழனின் 23-வது ஆட்சியாண்டில் (கி.பி. 1036) வெளியிடப்பட்ட இச்செப்பேட்டில் மற்ற செப் பேடுகளைப் போலவே முதலில் சமஸ்கிருதப் பகுதியும், அடுத்து தமிழ் மொழிப் பகுதியும் உள்ளன. இராசேந்திர சோழனின் குரு சர்வ சிவப்பண்டிதர் என்பவர் எசாலம் கோயிலைக் கட்டினார் என்பதனையும், அதற்கு இராசேந்திர சோழன் அளித்த நிவந்தம் மற்றும் அரசு ஆணையின் விபரத்தையும் இச்செப்பேடு விரிவாகக் குறிக்கிறது. தஞ்சாவூரில்

இராசராச சோழன் பெரிய கோயிலைக் கட்டியதையும், இராசேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரம் கோயிலைக் கட்டியதையும் இச்செப்பேட்டால் அறிகிறோம்.

செப்பேட்டுடன், விநாயகர், நடன விநாயகர், அம்மன் ஞானசம்பந்தர் அப்பர். பாசுபதமூர்த்தி, சந்திர சேகரர், துர்க்கை, பைரவர், சூரியன், பெருமாள், திருமகள், ஆழ்வார், கல்யான சுந்திரமூர்த்தி, மான், அஸ்திர தேவர் மற்றும் பூஜை பாத்திரங்கள், முக்காலி மணிகள் ஆகியவை கிடைத்துள்ளன.[2]

ஊர் ஆய்வு

ஊரின் தெற்கே லிங்கத்தடி மேடு என்ற இடத்தில், ஏரிக் கரையின்மேல் முதுமக்கட்தாழிகள் புதைந்து காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் அழிந்த நிலையில் காணப்படுகிறது.

மேலும் இங்கு ஒரு நிலத்தில் உழும்போது செங்கற்கள் கிடைத்தாக ஊரார் கூறினர். அங்கு சென்று ஆய்வு செய்த பொழுது கற்கள் கண்டெடுக்கப்பட்டன, அச்செங்கல்லின் அளவு நீள்ம் 36 செ.மீ × அகலம் 17 செ.மீ. ஆகும். இங்கு மிகவும் பிற்காலத்தைச் சேர்ந்த சுடுமண் பொம்மைகளான குதிரையின் தலைப்பகுதிகள், பொம்மைகளின் பகுதிகள், விளக்குகள் ஆகியவை கிடைத்தன. இப்பகுதியில் கிராம தேவதையின் கோயில் இருந்து அழிந்திருக்கவேண்டும் என தோன்றுகிறது.

மேலும் இப்பகுதியிலிருந்து எடுத்து வரப்பட்டு தற்பொழுது இராமநாத ஈசுவரர் கோயிலின் அருகில் காணப்படும் (தலைப்பகுதி இல்லை) திருமால் சிற்பம் கி. பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம். சுடுமன் பொம்மைகள் கிடைக்கும் பகுதிக்கு அருகே சப்த மாதர் சிற்பங்களில் நான்கு சிற்பங்கள் வாய்க்கால் கூரை மேல் புதைந்து காணப்படுகின்றன.

ஈசுவர மானியம் கல்வெட்டு

லிங்கத்தடி மேடு செல்லும் வழியில் 'ஈசுவர மானியம்' என அழைக்கப்படும் நிலத்திற்கு அருகில் சூலக்கல் ஒன்று காணப்படுகிறது. அதில் சூலம் ஒன்றும் அதன் இருபுறமும் கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன.

கல்வெட்டு

1) தேவர்	5) ஸ்ரீகாம
2) போகம்	6) தேவன்
3) அழகன்வைத்	7) செய்கை
4) தபொன்	

'தேவர் போகம் அழகன் வைத்த பொன் ஸ்ரீ காமதேவன் செய்கை''

இக்கல்வெட்டு எழுத்தின் அமைதியைக் கொண்டு பார்த்தால் கி.பி.10,ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்ததாக கருதலாம்.

எனவே மேற்கண்ட வரலாற்றுச் சான்றுகளால், தற்பொழுது இருக்கும் கோயில் தோன்றுமுன்னே, எசாலம் கிராமம் மிகவும் பழமையான வரலாற்று சிறப்புமிக்க கிராமம் என்பதை அறியலாம்,

பிரம்ம தேசம்

இவ்வூர் அருகில் உள்ள பிரம்மதேசம் கோயில் வரலாற்றுச் சிறப்புமிக்கது. பிரம்மதேசம் பாடலீசுவரர் கோயில் முழுவதும் செடிகள், மரங்கள் முளைத்து பாழடைந்துக் காணப்படுகிறது. நுழைவு வாயில் வேலைப்பாடு மிகுந்து காணப்படுகிறது. இதில் நடுவில் விநாயகரும், இரு புறமும் இரு விளக்குகளும், நந்திகளும் செதுக்கப்பட்டுள்ளன. பிரம்ம தேசத்தில் பிரம்மேசுவரர் கோயில் என்ற பெயரில் மற்றொரு கோயிலும் உள்ளது. இவ்வூரில் வாழவந்தி அம்மன் என்ற கிராமக்கோயில் உள்ளது. தேவிதன் எட்டு கரங்களில் வாள், கலப்பை,

கேடயம், குறுவாள், மணிபோன்ற ஆயுதங்களை ஏந்திய நிலையில் இடது காதுகளை மடக்கி வலக்காலைத் தொங்கி விட்ட நிலையில் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறாள். இச்சிற்பம் கி. பி. 12-13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது,

எண்ணாயிரம்

எசாலம் அருகே எண்ணாயிரம் என்னும் ஊர் உள்ளது. ஊரின் தென்கிழக்கே ஓடை பிள்ளையார் கோயில் மேட்டில் லிங்கம் ஒன்று உள்ளது. இது வயல் வெளியில் ஒரு பெரிய மேடையின் மீது காணப்படுகிறது, இப்பகுதியில் இருந்து சிறந்த சிதைந்த கோயில் கற்களை. மயிலுக்கு எடுத்துச் சென்றதாக ஊரார் கூறுவர். பல ஆண்டுகட்கு முன்னர் இப்பகுதியில் கிடைத்த நடராஜர் சிலையையும் மயிலம் எடுத்துச் சென்றதாக செவிவழிச் செய்தி கூறுகிறது.

எண்ணாயிரம் கோயில்

இங்குள்ள அழகிய நரசிங்க பெருமான் கோயில் பழமைச் சிறப்பு வாய்ந்த ஒன்று. இது முக மண்டபம், அர்த்த மண்டபம், கருவறை அனைத்தும் கொண்டுள்ளது. முகமண்டபத்தை தொடர்ந்து வரும் வெளிச்சுற்றுப் பிரகாரமும் திருச்சுற்று மதில்களும் அதிக அளவில் இடிப்பாடுடன் காணப்படுகின்றன. இங்கு கல்வெட்டுக்கள் திருச்சுற்று மதிலின் கீழ்பகுதியில் வெட்டப்பட்டுள்ளது. இங்குள்ள முக மண்டபம் தூண்கள் நிறைந்து காணப்படுகின்றன. இவற்றில் சதுரமான, மற்றும் நீள் உருண்டையான இரண்டு விதமான அமைப்பு கொண்ட தூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இவை காலத்தால் பின்னர் வந்த விஜய நகர மன்னர்கள் இக்கோயிலை செப்பனிடும் பொழுது இல்லாத தூண்களுக்கு புதியதாக தூண்கள் அமைத்தும் சிலஇடங்களில் கல்வெட்டுக்களைத் திருப்பியும் மேல் தளத்திலும் வைத்து கட்டியுள்ளனர். கருவறையில் உள்ள பழமையான அழகிய நரசிங்கப் பெருமாள் வெளிக் கொணரப் பட்டு விஷ்ணு அமர்ந்த நிலையில் ஸ்ரீதேவி, பூதேவியுடன் காட்சி அளிப்பது போல் சிற்பமமைத்து. அதில் சுதை வேலை செய்யப்பட்டுள்ளது.

மேற்பரப்பு ஆய்வு

இவ்வூரைச் சுற்றிலும் பல மேடுகள் காணப்படுகின்றன. அவை 1 அம்பல மேடு, 2 கடப்பனேரி மேடு, 3 லிங்கத்தடி மேடு, 4 காட்டேரி மேடு என்று பெயரிட்டு வழங்கப்படுகிறது

அம்பல மேடு

இம்மேடு ஊரின் கிழக்குப் பகுதியில் அமைந்து உள்ளது. சற்று உயரமாக இருந்தாலும் இதை அடுத்து ஏரி இருப்ப தால் அதனைக்குறிப்பிடும் படியான மேடு போன்ற தோற்றத் தைக்காண இயலவில்லை. இந்த மேட்டில் நந்தி ஒன்றும் சூலக்கல் ஒன்றும் நட்டு வைக்கப்பட்டுள்ளது. நந்தி சுமார் 13—14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்து. இந்த இடத்தில் ஓர் சிவ ஆலயம் அழிந்திருக்கக் கூடும், எனவே அதற்குரிய பட்டயங்களாக அமைந்த கற்களும், செங்கற் துண்டுகளும் காணப்படுகின்றன.

2. கடப்பன் ஏரி (கடம்பன் ஏரி) மேடு

இங்கு லிங்கம் மட்டும் தனித்தநிலையில் ஏரியின் நடுவில் ஓர் சிறிய மேட்டில் அமைந்துள்ளது. குறிப்பாக தடயங்கள் ஏதும் காணப்படவில்லை.

3. லிங்கத்தடி மேடு

இங்கு லிங்கம் முழுமையான அளவு பூமியில் புதைந்த நிலையில் காணப்படுகின்றது. இங்கு நந்தியின் முகம் மட்டும் வெளியில் தெரியும் வண்ணமும் உடல் பகுதி முழுவதும் பூமி யில் மறைந்துள்ளது. சிற்பங்கள் சில சிதைந்து சிதறி காணப், படுகின்றன. இங்கும் ஓர் கோயில் இருந்ததற்கான தடயங்கள் உள்ளன. உடைந்த செங்கற் துண்டுகளும், உயரமான மேடும் ஆய்வுக்குரியது.

ALL INDIA UNIVERSITY TAMIL TEACHERS' ASSOCIATION

ANNAMALAINAGAR - 608 002

LIST OF PUBLICATIONS

1)	Ayvukkovai - 3	1971
2)	Ayvukkovai - 4	1972
3)	Ayvukkovai - 5	1973
4)	Ayvukkovai - 6	1974
5)	Ayvukkovai - 7 (Vol. 1, & 2)	1975
6)	Ayvukkovai - 8 (Vol. 1, & 2)	1976
7)	Ayvukkovai - 9 (Vol. 1, & 2)	1977
8)	Ayvukkovai - 10 (Vol. 1, 2 & 3)	1978
9)	Ayvukkovai - 11 (Vol. 1, 2 & 3)	1979
10)	Ayvukkovai - 12 (Vol 1, 2 & 3)	1980
11)	Ayvukkovai - 13 (Vol. 1, 2 & 3)	1981
12)	Ayvukkovai - 14 (Vol. 1, 2, 3 & 4)	1982
13)	Ayvukkovai - 15 (Vol. 1, 2, 3 & 4)	1983
14)	Ayvukkovai - 16 (Vol. 1, 2, 3 & 4)	1984
15)	Ayvukkovai - 17 (Vol. 1, 2 & 3)	1985
16)	Ayvukkovai - 18 (Vol. 1, 2, 3 & 4)	1986
17)	Ayvukkovai - 19 (Vol. 1, 2, 3 & 4)	1987
18)	Ayvukkovai - 20 (Vol. 1, 2, 3 & 4)	1988
19)	Ayvukkovai - 21 (Vol. 1, 2, 3 & 4)	1989
20)	Ilakkiya Innamutu	1977
21)	Ayvukkovai Nuul Tokuti	1978